தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

தொகுதி ஐந்து

ஆங்கில மூலம்
எட்கர் தர்ஸ்டன்
தமிழாக்கம்
முனைவர் க. ரத்னம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்

தொகுதி ஐந்து

(மரக்காயர் முதல் பள்ளெ வரை)

Castes and Tribes of South India

Vol. - V

(Marakkāyr to Palle)

ஆங்கில மூலம்

அறிஞர் எட்கர் தர்ஸ்டன்

தமிழாக்கம்

முனைவர் க. ரத்னம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-314-9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 254

திருவள்ளுவராண்டு 2034 ஆவணி - செப்டம்பர் 2003

நூல்	:	தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி 5
ஆசிரியர்	:	எட்கர் தர்ஸ்டன்
மொழிபெயர்ப்பு	:	க. ரத்னம்
மொழி	:	தமிழ்
பொருள்	:	மானிடவியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு 2003
பக்கம்	:	viii + 488 = 496
தாள்	:	டி.என்.பி.எல்.மேப்லித்தோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதாக்கட்டு
விலை	:	உரூ. 230-
படிகள்	:	1000
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

மறு அச்சு நவம்பர் 2010

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
துணைவேந்தர்

அணிந்துரை

'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்' என்னும் இந்நூல் மானிடவியல் அறிஞர் எட்கர் தர்ஸ்டன் அவர்கள் எழுதியதின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். தமிழ்ப் பல்கலைக்கழகம் எட்கர் தர்ஸ்டனுடைய இவ்வரிய தொகுதிகளைத் தமிழாக்கம் செய்து வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளமை பெரிதும் வரவேற்கத்தக்கது. இவ்வரிசையில் இந்நூல் ஐந்தாவது தொகுதியாகும்.

1885-இல் சென்னை அருங்காட்சியகத்தின் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட எட்கர் தர்ஸ்டன் இந்தியாவில் பல்வேறு நிலைகளில் பணியாற்றியவர். மானிடவியல், சமூகவியல் முதலிய துறைகளில் பெரிதும் ஈடுபாடுடையவர். சென்னைப் பல்கலைக்கழக நூலகக் குழுவின் தலைவராகவும் விளங்கியவர். சென்னை மெரினா கடற்கரையில் இடம்பெற்றுள்ள நீர் உயிரின அருங்காட்சியகத்தை அமைப்பதற்கு உறுதுணையாக இருந்தவர்.

மானிடவியல் ஆய்வாளர்களால், 'தென்னிந்தியக் குலங்களும், குடிகளும்' என்னும் ஏழு தொகுதிகளும் ஆய்விற்குரிய அடிப்படை நூலாக இன்றும் கருதப்பெறுகிறது. மானுட வாழ்வின் பிறப்பு, இறப்பு, கல்வி, வழிபாட்டுச்சடங்குகள், திருமணம், அரசு ஆட்சியியல் நிலை முதலியவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து அரிய செய்திகளைத் தொகுத்து விளக்கியுள்ளார்.

இத்தகு பெருமைபெற்ற இந்நூலினைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளவர் மூத்த பேராசிரியர் அறிஞர் க. ரத்னம் அவர்கள். பல ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். பறவையின ஆய்வாளராகவும், இலக்கியப் படைப்பாளராகவும், ஆய்வாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கும் பேராசிரியர் க. ரத்னம் அவர்கள் தமிழ் ஆய்வுலகில் பல்வேறு துறைகளில் அரிய முத்திரைகளைப் படைத்தவர்.

பல ஆண்டுகளுக்கு முன்னரேயே தமிழில் மொழிபெயர்க்கப் பெற்ற இத்தொகுதிகள் விரைவில் முழுமையாகக் கிடைக்கப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை ஆவன செய்துவருகின்றது.

முதல் மூன்று தொகுதிகள் 1986, 1987களில் வெளிவந்தன. நான்காம் தொகுதி 1993ஆம் ஆண்டில் வெளிவந்தது. ஐந்தாம் தொகுதி இப்பொழுது வெளிவருகிறது. ஆறு, ஏழு தொகுதிகளும் விரைவில் வெளிவர உள்ளன. இவ்வரிய நூல்தொகுதிகளை மொழிபெயர்த்துத்தந்த பேராசிரியர் க. ரத்னம் அவர்களுக்கு பல்கலைக்கழகத்தின் நன்றி என்றும் உரியது. இவரது அரிய பணியைப் பாராட்டிப் போற்றுவோம்.

மானிடவியல் ஆய்வில் சிறந்துவிளங்கும் இத்தொகுதிகள் தமிழில் வெளிவருவது அடுத்துவரும் தலைமுறையினருக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலினை நல்லமுறையில் வெளியிட்டு உதவும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையினருக்கும் இனிய பாராட்டுதல்கள்.

தஞ்சாவூர்
31-07-2003

இ. சுந்தரமூர்த்தி

மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை

தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டபோது தமிழில் புதிய துறைகளிலான் ஆய்வுகள் நிகழ ஆய்வு உதவித் திட்டம் ஒன்றினைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது. அப்போது மன்னர் சரபோசிக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வந்தேன். நான் என்னுடைய படைப்பிலக்கியப் பணியிலிருந்து வில்கியவனாகப் பறவையியலில் தீவிர ஆர்வம் காட்டி வந்த காலகட்டம் அது. தமிழ்நாட்டுப் பறவைகள் அவற்றின் வாழ்விடங்கள், ஆகியன பற்றி வெளிநாட்டிலிருந்தும் வெளிமாநிலங்களிலிருந்தும் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் பறவைகளைப் பார்ப்பதற்காகவே பலநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வோருக்கும் உதவும் வகையில் தமிழ்நாட்டுப் பறவைகள் பற்றிய கையேடு ஒன்றினைத் தயாரிக்கலாம் எனப் பல்கலைக்கழக ஆய்வுத்திட்டத்தின்கீழ் உதவிகேட்டு விண்ணப்பித்தேன். என்னுடைய அந்த விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அதன் காரணத்தை அறிந்து கொள்ளத் துணைவேந்தர் அவர்களை நேரில் சந்தித்தேன். அப்போது அவர் உங்களுடைய திட்டம் சிறப்பானது ஏனினும் பொறுத்திருந்து செய்யலாம், இப்போதுத் தமிழ் உலகினுக்கு முழுவதுமாகப் பயன்படக்கூடியதாக அதனை விடவும் மிகுந்த பயன்தரக் கூடிய பணி ஒன்று உள்ளது, அதனை மேற்கொள்ளுங்கள் எனக் கூறினார். முடிந்தால் செய்யத் தடையில்லை எனக்கூறிய என்னிடம் தர்ஸ்டனின் தென்னிந்தியக்

குலங்களும் குடிகளும் என்ற ஆங்கில நூலின் 7 தொகுதிகளும் நல்ல ஆங்கில அறிவுபடைத்தவர்களுக்கு மட்டுமே உதவக்கூடியதாக உள்ளன. அனைவருக்கும் பயன்படும் வகையில் அதனைத் தமிழில் மொழியாக்கம் செய்து கொடுப்பீர்களாயின் தமிழ்ப் பல்கலைக்கழகம் அதனை வெளியிடும் என்றார். கோவை மாவட்ட மைய நூலகத்திலும் சரபோசி கல்லூரி நூலகத்திலும் இடம்பெற்றிருந்த அத்தொகுதிகளின் ஒருசில பகுதிகளை ஆர்வம் காரணமாக முன்பே படித்திருந்த நான் அதில் தமிழர் தவிரக் கன்னடியர், மலையாளிகள் ஆகியோர் பற்றிய விவரங்களும் விரிவாக இடம் பெற்றிருப்பதால் அம்மொழி அறிந்த வல்லுநர் குழு ஒன்றினை அமைத்து இப்பணியினை ஒப்படைக்கலாம் என்றேன். குழுக்கள் கூடிப் பணியாற்றுவதில் காலம் மிகச் செல்லும். இது அவசரமாகச் செய்து முடிக்கப்படவேண்டிய பணி. இதற்காக மத்திய அரசின் பழங்குடிகளின் மேம்பாட்டுக்கான துறை நிதிஉதவியும் செய்துள்ளது. உங்கள் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. ஒரு வாரத்தில் இருபது பக்க அளவில் மாதிரி மொழிபெயர்ப்புச் செய்து கொண்டு வந்துவிடுங்கள் என்றார். அவ்வாறே செய்து கொண்டு கொடுத்தபோது இதனைப் பார்த்து, நாளைக்கு என் முடிவைத் தெரிவிக்கின்றேன் என்றார். மறுநாள் சென்றபோது பணியினைத் தொடரலாம் எனக்கூறி முதல் தொகுதி ஆறுமாதத்திற்குள் முடிக்கப்படவேண்டும், உங்கள் மொழிபெயர்ப்பினை இரண்டு படிகள் தட்டச்சுச் செய்து தரவேண்டும் எனவும் கூறி ஒப்புதல் தந்தார்.

முதல் தொகுதி மொழியாக்கப்பணி முடிந்ததும் அதனை விரைந்து அச்சேற்றிவிடவேண்டும் எனப் பதிப்புத்துறைக்கு அனுப்பினார். பதிப்புத்துறை இயக்குநர் வல்லுநர் ஒருவரின் ஒப்புதல் பெற்றே அச்சேற்றுகின்றோம். யாருக்கு இதனை அனுப்பலாம் எனக் கேட்டபோது வல்லுநரிடம் சென்றால் காலம் நீட்டிக்குப் நானே பார்த்துவிட்டேன். செம்மையாக உள்ளது. அச்சிடலாம் என எழுதி முதல் தொகுதி அச்சில் வர அனுமதி வழங்கினார் அடுத்து இரண்டாம் தொகுதியும் வெளிவந்தது.

மூன்றாம் தொகுதி அச்சாகி முடியும்போது முதல் துணைவேந்தர் பதவி விலகிவிட்டார்.

பேராசிரியர் ச.அகத்தியலிங்கம் அடுத்த துணைவேந்தராகப் பொறுப்பில் அமர்ந்தார். அவரிடம் மூன்றாம் தொகுதியின் அச்சுப் பிரதியை மொழிபெயர்ப்பாளர் என்ற முறையில் நேரில்கொண்டு வந்து தந்தேன். ஏழு தொகுதிகளையும் நீங்கள் ஒருவராகவா மொழிபெயர்க்கின்றீர்கள்? எனத் தன் வியப்பை வெளியிட்டார். அப்போது ஏழாம் தொகுதி மொழிபெயர்ப்புப்பணி முடிந்திருந்ததால், ஆம், துணைவேந்தர் விரைவில் முடிக்கும்படி கேட்டுக்கொண்டதால் நானே செய்து முடித்துவிட்டேன் என்றேன்.

அடுத்தடுத்து மூன்று தொகுதிகள் வெளியான பின் எஞ்சிய தொகுதிகள் வெளிவரவில்லை. இதுபற்றி அடுத்தடுத்து வந்த மூன்று துணைவேந்தர்களுக்கு ஒரு நூலின் தொகுதிகள் முழுமையாக ஒருசேர வெளிவந்தால்தான் பயனுடையதாக அமையும் எனக் கடிதம் எழுதி வற்புறுத்தியும் தொகுதிகள் வெளியாகவில்லை.

நீங்கள் கேட்டுக்கொண்டதால் மேற்கொண்ட என் பணி இடையில் முட்டுப்பட்டுவிட்டது என வ.அய்.சு. அவர்களுக்கு என் வருத்தத்தைத் தெரிவித்து எழுதினேன். பதவியிலிருந்து விலகிவிட்ட நான் இனி அதுபற்றி ஏதும் செய்வதற்கில்லை என உடனே பதிலும் எழுதினார்.

இத்தொகுதிகள் தொடர்ந்து வெளிவராத காரணத்தால் ஆய்வாளர்கள் பலர் ஏமாற்றம் உற்றனர். பாண்டிச்சேரியிலிருந்தும், சென்னையிலிருந்தும் நேரில் என்னோடு தொடர்பு கொண்டு என்னிடமிருந்த கையழுத்துப் பிரதியைப் பெற்றுச் சென்று ஆய்வுக்குப் பயன்படுத்தினர். தனியார் பதிப்பக உரிமையாளர் ஒருவர் எஞ்சிய தொகுதிகளை வெளியிட விரும்பி என் கையெழுத்துப் பிரதியைக் கேட்டார். உரிமை தமிழ்

பல்கலைக்கழகத்திற்கு ஆக்கப்பட்டு விட்டதால் அது இயலாது எனக் கூறிவிட்டேன்.

ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு முந்தைய தொகுதிகளில் இடம்பெற்ற உரிய படங்களும் பின்னிணைப்பும் இன்றி நான்காம் தொகுதி வெளிவந்தது எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. அது பற்றிய விவரமோ தகவலோ வெளியீட்டிற்கு முன் தெரிவிக்கப்படவில்லை.

இப்போது 5ஆம் தொகுதியை மொழிபெயர்ப்பாளரின் மேற்பார்வையில் வெளியிடவேண்டும் என்று பல்கலைக்கழகம் என்னிடம் இறுதி மெய்ப்புப் பார்க்கும் பொறுப்பினை இப்போதைய துணைவேந்தர் இ. சுந்தரமூர்த்தி அவர்களின் வழிகாட்டு நெறிப்படி என்னிடம் ஒப்படைத்தது. எஞ்சிய ஆறு, ஏழு ஆகிய தொகுதிகளின் மெய்ப்புப்பார்க்கும் பணியும் தொடர்கிறது.

முட்டுப்பட்டு நின்றுபோன எனது பணியை முற்றுப்பெறச் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ள துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி அவர்களுக்கு நன்றிக் கடப்பாடுடையேன்.

இப்பணியினை மேற்கொண்டபோது வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து நூல் சிறப்பான முறையில் உருவாக உதவும் பதிப்புத்துறையினருக்கும் என் நன்றி உரியது.

19-B, திருச்சி சாலை
சூலூர் 641 402

24.07.2003

முனைவர் க. ரத்னம்

தென்னிந்தியக்
குலங்களும் குடிகளும்

தொகுதி - ஐந்து

மரக்காயர் (Marakkāyr)

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை மரக்காயர் பற்றிப் பின்வருமாறு விவரிக்கின்றது:- ''இந்துக்களும் முசல்மான்களும் கொண்ட உறவின் காரணமாகத் தோன்றியவர்களே தமிழ் பேசும் முசல்மான்களான வணிகத் தொழிலைப் பெரிதும் மேற்கொண்டுள்ள மரக்காயர்கள். இவர்கள் லப்பை (பார்க்க : Labbais) களிலும் பல வகைகளில் வேறானவர்கள். எனினும் இவ்விருபிரிவினரையும் பற்றிய கணக்கெடுப்புத் தொடர்பான புள்ளிவிவரங்கள் கலந்து விட்டதாலோ என்னவோ, மரக்காயர்களின் எண்ணிக்கை இருக்க வேண்டிய எண்ணிக்கையினைவிடக் குறைந்ததாகக் காணப்படுகிறது.'' தென்ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மரக்காயர் பற்றித் திரு பிரான்சிஸ் பின்வருமாறு எழுதுகின்றார்:- ''இலங்கை, மலேயா முதலிய நாடுகளோடு வணிகத்தில் ஈடுபட்டுள்ள பெருவணிகர்கள் மரக்காயர்கள். உள்நாட்டுக் கடற்கரைப் பகுதிகளில் செல்லும் பெரும்பாலான படகுகளுக்கு உரிமையாளர்கள் இவர்கள். பரங்கிப்பேட்டையிலேயே இவர்கள் எண்ணிக்கையில் மிக்கவர்களாக உள்ளனர். படகு எனப் பொருள்படும் மர்கப் என்ற அரபுச் சொல்லிலிருந்து மரக்காயர் என்பது வந்ததாகக் கூறுவர். இந்த வகுப்பார் முதன்முதல் இந்தியக் கடற்கரையில் வந்தேறிய போது (லப்பைகளைப் போன்றே இவர்களும் தங்கள் நாட்டிலிருந்து தண்டனைக்கு அஞ்சி ஓடி வந்தவர்களாவர்) இவர்களை யாரென்றும், எங்கிருந்து வருகின்றீர்கள் என்றும் வழக்கம் போலக் கேட்கப்பட்டதற்குப் பதிலாக இவர்கள் தங்கள் படகுகளைக் காட்டி மர்கப் எனக்கூறியதாகவும், அதன் காரணமாக இந்துக்களால் இவர்கள் மரக்காயர்கள் என அழைக்கப்பட்டதாகவும் ஒரு கதை வழங்குகின்றது. குருதிக் கலப்பில்லாத முசல்மான்கள் தங்களை மரக்காயர்களைவிட உயர்ந்த வகுப்பார் எனக் கருதுகின்றனர். மரக்காயர்கள் தங்களை லப்பைகளை விட உயர்ந்த வகுப்பராகக் கருதுகின்றனர்.....சில மரக்காயர்கள் தற்போது குருதிக்கலப் பில்லாத முசல்மான்களைப் பின்பற்றியவர்களாக இருந்தாலும்

பெரும்பாலானவர்கள் புல்லால் பின்னப்பட்டுச் சாயம் ஏற்றப்பட்ட நீண்டு உயர்ந்த தலைக்குல்லாயினை அணிந்து டர்டன் எனப்படும் கம்பாயத்தை இடையில் உடுத்துகின்றனர். லப்பைகளும் பொதுவாக இவற்றையே அணிகின்றனர். இதனால் அவர்களை மரக்காயர்களிலிருந்து எளிதில் வேறுபடுத்தி அறிய இயலவில்லை. லப்பைகளில் சிலர் இந்துக்களைப் போலத் தலைப்பாகை தரித்து, வேட்டி உடுத்துவதோடு தங்கள் வீட்டுப் பெண்களையும் இந்துக்களைப் போல உடை உடுத்த அனுமதிக் கின்றனர். இதே போன்று லப்பைகளில் சிலர் தங்கள் வீடுகளில் இந்துஸ்தானியைப் பேசி வந்தாலும் பலர் தமிழையே பேசுகின்றனர். குடும்பச் சடங்குகளில் இந்துக்களின் வழிமுறையினைப் பின்பற்று -வதற்குத் தற்சமயம் எதிர்ப்புப் பெருகி வருவதாகத் தெரிகின்றது. ஒரு காலத்தில் இவர்கள் திருமணத்தின் போது மேற்கொண்ட ஊர்வலமும், மேளதாளமும் கைவிடப்பட்டு முசுலீம்களின் எளிய நிக்காஹ் சடங்கே தற்போது இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரக் காண்கிறோம்''

1901 கணக்கெடுப்பில் பரங்கிப்பேட்டையினைச் சேர்ந்தவர் -களாக 13,712 பேர் பதியப்பட்டுள்ளனர். இவர்களுள் 3805 பேர் தங்களை முகமதியர் எனப் பதிந்துள்ளனர். ''ஐரோப்பியர் வாழும் நகரம் எனப் பொருள்படும் பரங்கிப்பேட்டையினை முசல்மான்கள் முகமது பந்தர் என வழங்குகின்றனர். இவர்களுள் பெரும்பாலோருடைய வாழ்க்கை கடலோடு பிணைக்கப்பட்டதாக உள்ளது. பெரும்பாலான மரக்காயர்கள் இலங்கைக்கும் பிறவிடங்களுக்கும் சென்றுவரும் கலங்களுக்கு உரிமை உடையவர்களாகவோ, அக்கலங்களைச் செலுத்துவோராகவோ உள்ளனர். இந்த நகரத்தில் சமாதியில் வைக்கப்பட்டுள்ள முசல்மான் ஞானியருள் மாலுமியார் என்பவரும் ஒருவர். இவர் தாம் வாழ்ந்த காலத்தில் குறிப்பிடத்தக்க சிறப்புக்குரிய கலநாயகராகத் திகழ்ந்திருத்தல் வேண்டும். மாலுமியாக இவர் நிகழ்த்தியனவாகப் பல அற்புதங்களை மிகைப்படுத்திக் கூறுவர். பத்துப் பன்னிரண்டு கலங்களுக்கு உரிமையாளராக இருந்த இவர் ஒரே சமயத்தில் அவை அனைத்திலும் கலநாயகனாகத் தோன்றியுள்ளதாகக் கூறுவர். தற்சமயம் கடல்மேல் செல்பவர்களை ஆபத்திலிருந்து காக்கும் அருளாளராக இவர் கருதப்படுகின்றார். கலத்தில் பயணம் தொடங்குபவர்களும், கடல்மேல் செல்லும் மாலுமிகளும் பாதுகாப்புடன் கலங்களைக் கொண்டு சேர்த்த மாலுமிகளும் இவருடைய தர்க்காவில் வைக்கப்பட்டுள்ள உண்டியலில் காணிக்கை செலுத்துகின்றனர். இத்தொகை அத்தர்க்காவில் விளக்கேற்றி வைக்கவும் வெள்ளை அடிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. இந்நகரில் உள்ள வியப்பினைத்

தரும் மற்றொரு தர்க்கா அரைக்காசு நாச்சியார் தர்க்காவாகும். இந்த அம்மையாரின் தர்க்காவில் எக்காரணம் கொண்டும் உண்டியலில் ஒரு பைசாவிற்கு மேல் காணிக்கை செலுத்தக்கூடாது. அதற்கு மேற்பட்ட அளவினதாகச் செலுத்தப்படும் காணிக்கைகள் உரிய பயனை விளைவிப்பதில்லை. இந்தச் சிறு தொகைக்குச் சர்க்கரையினைப் பெற்று அளிக்க இயலாதாகையால் பக்தர்கள் அந்தத் தொகைக்கு இந்த நாச்சியாரின் சமாதிக்கு வெள்ளையடிக்கச் சுண்ணாம்பினை வாங்கி அளிக்கின்றனர். இதனால் அச்சமாதி அடிக்கடி வெள்ளையடித்தலுக்கு உள்ளாகின்றது. பணக்காரர்கள் செலுத்திய அதிக மதிப்புடைய காணிக்கைகள் உரிய பயனைத் தராது போனபின் அவர்களுக்காக மற்றவர்கள் வரம்புக்கு உட்பட்டதாகக் காணிக்கை செலுத்திப் பயன்பெற்ற கதைகள் பல கூறப்படுகின்றன. இங்குள்ள மசூதி சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றது. இதன் பின்புறம் ஒன்றுக்கு ஒன்று இணையாக நேரே அமையாமல் பிறழ்ந்த போக்குடையனவாக காணப்படும் இரண்டு சமாதிகள் உள்ளன. இச் சமாதிகளைப் பற்றி வழங்கும் கதை வருமாறு :- உறவிஜ் மீர் சாகிப் என்ற ஞானி ஒருவர் இங்கு வாழ்ந்து வந்தார். அவரை விடவும் பக்தியில் சிறந்தவரான சையத் ஷா என்பவர் அவருடைய சீடராக இருந்தார். சையத் ஷா இறந்த பின் உரிய சிறப்புக்களுடன் அடக்கம் செய்யப்பட்டார். அதற்குப் பிறகு நெடுங்காலம் சென்ற பின் மீர் சாகிப்பும் இறந்தார். சீடரான சையத் ஷா தம்மைத் தம் குருவின் காலடியில் அடக்கம் செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டிருந்ததால் மீர் சாகிப்பின் சமாதியினை அவருடைய கால்மாடு அவருடைய சீடரான சையத் ஷாவின் தலைமாட்டினை ஒட்டியிருக்கும்படியாக அமைத்தனர். எனினும் மீர்சாகிப் தம் சீடர் தம்மைக் காட்டிலும் சிறந்த ஞானி என்பதனை உணர்ந்திருந்த காரணத்தால் தம் கால்மாட்டினைத் தம் சீடருக்கு இழிவு ஏற்படாத வகையில் அவருடைய தலைப்பக்கத்திலிருந்து திருப்பி வைத்துக் கொண்டார். இவ்வாறு மாறி அமைந்த இரு சமாதிகளையும் பின்னர் பார்க்க வந்த மக்கள் கண்டு திகைத்தனர்.*

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் சோனகர் மரக்காயரினும் வேறானவர் எனப் பதியப்பட்டிருப்பதோடு, அவர்கள் இந்துக்களின் கலப்பு உறவின் வழிப்பிறந்த முசல்மான்களான வணிகர் எனவும் விளக்கப்பட்டுள்ளது. ''சோனகன் என்ற சொல் சோனக (அரேபிய)த்தைச் சேர்ந்தவன் எனப் பொருள்படும். இதனை இந்துக்கள் லப்பை, மரக்காயர் ஆகிய இரு பிரிவினரையும் குறிக்கப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் தங்கள் வெறுப்புணர்ச்சியினைப்

* தென்ஆர்க்காடு மாவட்ட விவரக்குறிப்பு **Gazatteer of the South Arcot District**

புலப்படுத்த இவ்வாறு அவர்களைக் குறிக்க இதனைப் பயன்படுத்துவதாகவும் கருதலாம்'' எனத் திரு பிரான்சிஸ் தென்ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் குறித்துள்ளார். சோனகன் என்ற சொல்லாட்சி பற்றி ஓரளவு குழப்பம் நிலவுகின்றது. இது கடலில் மீன் பிடிப்பவர்களையும், படகு செலுத்துபவர்களையும் குறிக்கவே பயன்படுத்தப்படுவதாகவும் செல்வவளமுடைய வணிகர்கள் மரக்காயர் என அழைக்கப்படுவதாகவும் எனக்குத் தகவல் தெரிவித்துள்ளனர். லப்பைகள் மரக்காயரிலிருந்து வேறுபாடுடையவர்களாகக் கருதப்படுவதற்கான காரணங்களுள் ஒன்று அவர்கள் உறனபி பிரிவினராகவும் மரக்காயர்கள் ஷாபி பிரிவினராகவும் இருப்பது தான் எனலாம்.

மதம் மாறும் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த இந்துக்களையும் மரக்காயர்கள் தங்கள் சாதியில் சேர்த்துக் கொள்கின்றனர். இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் புழுக்கைகள் என அழைக்கப் படுகின்றனர். இவர்கள் பல தலைமுறைகளுக்கோ செல்வ வளம் பெறும் வரையோ மரக்காயர்களோடு திருமண உறவு கொள்ளுதல் முடியாது.

இவர்களுடைய மணமுறைகள் பலவற்றுள், ஒன்றில் மண நிகழ்ச்சிச் சடங்குகள் நான்கு நாள்கள் வரை நீடிக்கின்றன. இச் சடங்குகளுள் முதல் நாள் நடக்கும் நிகழ்ச்சி 'மெஉறினை' (மணமகளின் விலைக்கான தொகை) இரு சாராரையும் கொண்ட பிரதிநிதிகள் முன் உறுதிப்படுத்தலாகும். அடுத்து காஜி நிக்காச் சடங்கினை நிகழ்த்துவார். நிக்கா குடுபா படிக்கப்பட்டபின் திரைக்குப் பின் நிற்கும் மணமகள் கரங்களைப் பெரியவர்கள் மணமகன் கரங்களோடு இணைத்து வைப்பர். குடுபா படிக்கப்படும் பொழுது மணமகளின் உடன்பிறந்தவள் கறுப்புப்பாசிமணி மாலை ஒன்றினை மணமகள் கழுத்தில் அணிவிப்பாள். அப்போது கூடியுள்ள பெண்கள் அனைவரும் உரத்த குரலில் குலவை இடுவர். அதற்கு மறுநாள் மணமக்கள் பெண்களுக்கு இடையே அமர்ந்திருக்கும் போது மணமகன் தங்கத்தாலான தாலியினை மணமகள் கழுத்தில் அணிவிப்பான். மூன்று அல்லது நான்காம் நாளன்று பாப்பாரக் கோலம் என்ற சடங்கு நிகழும். மணமகள் ஒரு பிராமணப் பெண்ணைப் போல வேடந்தரித்து ஒரு கையில் பித்தளைப் பானையினையும், மற்றொரு கையில் குச்சி ஒன்றையும் ஏந்தியவளாக மணமகனை நெருங்கி அவனை நோகாமல் அடித்து, 'நான் உனக்கு மோரும், தயிரும் தந்தேன் அல்லவா? அதற்கான தொகையினைக் கொடு' எனக்கேட்பாள். மணமகன் அப்பொழுது சில

புளியங்கொட்டைகளைப் பித்தளைப் பாத்திரத்தில் இடுவான். மணமகள் அதனை ஏற்றுக் கொள்ளாதவளாகப் பணம் தரும்படி குச்சியால் அடித்தபடி கேட்பாள். மணமகன் அதன் பின் செப்பு, வெள்ளி, தங்க நாணயங்களை அவள் வைத்திருக்கும் பாத்திரத்திலிட மணமகள் வெற்றி பெற்றவளாக அவளுடைய அறைக்குச் செல்வாள்.

லப்பைகளைப் போலவே மரக்காயர்களும் தமிழை அரபி எழுத்துக்களாலே எழுதுவதோடு அரபித் தமிழ் என வழங்கப்படும் மொழியினையும் பேசுகின்றனர். அம்மொழியிலே குரான் முதலான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (பார்க்க : லப்பை)

மரலு : Maralu (Sand)

மணல் எனப்பொருள்படும் இது குர்ணிகளின் ஒரு கோத்திரம்.

மாரான் அல்லது மாராயன் : Mārān or Mārāyan

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் மாராயன்கள் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டிருப்பதாவது: - ''இவர்கள் மலபாரில் கோயில் பணியாளர்களாகவும் முரசடிப்பவர்களாகவும் உள்ளனர். மலபாரைச் சேர்ந்த வேறு பல சாதியாரைப் போலவே இவர்களும் கிழக்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து மலபாருக்கு வந்து சேர்ந்தவர்களாதல் வேண்டும். கி.பி. 1013-க்கு உரிய தஞ்சாவூர் கல்வெட்டுக்களில் இவர்கள் சாதிப்பெயர் அடிக்கடி இடம்பெறக் காண்கிறோம். அப்பொழுதும் இவர்கள் இன்று இங்கே மேற்கொண்டுள்ள அதே தொழிலை மேற்கொண்டிருந்ததாகவும் சமூகப் படிநிலையில் உயர்ந்ததோர் இடத்தினைப் பெற்றிருந்ததாகவும் தெரிகின்றது. வடக்கு மலபாரின் சில பகுதிகளில் இவர்கள் ஓச்சன் என அழைக்கப்படுகின்றனர்''

''இந்தச் சாதியின் தோற்றம் புதுமையானது. மலபார் மாவட்டத்தில் வட கோடி வட்டமான சிரக்கிலும், அதனை அடுத்துள்ள தென் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்த காசர்கோட்டிலும் மாராயன்கள் நாயர்களுக்கும் பிற உயர்ந்த சாதியாருக்கும் தொழில் செய்யும் அம்பட்டர்களாக உள்ளனர். கோட்டயம், குறும்பரநாடு வட்டங்களில் இவர்கள் அம்பட்டர்களாகவும் முரசு அடிப்போராகவும் இருப்பதோடு நாயர்களின் சாவுச் சடங்குகளில் புரோகிதர்களாகவும் பணியாற்றுகின்றனர். இவ்வாறு சாவுச் சடங்குகளில் பணியாற்றும் இவர்கள் அட்டிக்குரிச்சி மாராயன் என அழைக்கப்படுகின்றனர். தென்பால் உள்ள பகுதிகளில் நாயர்களின்

புரோகிதரான இவர்களை மாராயன் என்ற சாதி பெயரைக் கைவிட்டு அட்டிக்குரிச்சி என்று மட்டும் வழங்கக் காண்கிறோம். இவர்கள் மழித்தல் தொழில் செய்வதை இழிவானதாகக் கருதுகின்றனர். எனினும் சாவுச் சடங்குகளை முடித்த பின் நாயர்களுக்கு முதலில் முகம் மழித்தலை மேற்கொள்ளத் தமக்கு இருக்கும் உரிமையினைப் பாராட்டுவதன் வழி இவர்கள் வடக்குப் பகுதி மாராயன்களின் குலப்பிரிவினைச் சேர்ந்தவர்கள் என்பதை மெய்ப்பிக்கின்றனர். இதற்கு மாறாகக் கோயில்களில் மத்தளம் கொட்டுவோர் தங்களை மாராயன் என்றோ சிறப்பு விகுதியான ஆரினை இணைத்து மாரார் என்றோ அழைத்துக் கொண்டவர்களாகத் தங்களைக் கோயில் பணியாளர் என்று கூறிக் கொள்கின்றனர். மழித்தலைச் செய்யும் வடக்குப் பகுதியினைச் சேர்ந்த மாராயன்களோடு ஒத்தவர்கள் இவர்கள் எனக்கூறுவதை இவர்கள் தங்களை இழிவுபடுத்துவதாகக் கருதுகின்றனர். இவர்கள் தங்களைப் பிராமணர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளவர்களாகக் கருதுவதோடு நாயர்கள் தங்களைத் தொட்டால் தீட்டுக்கு ஆளாவதாகவும் கருதுகின்றனர். மேலும் நாயர்கள் சமைத்த உணவை உண்ணும் ஒருவன் சாதித் தகுதியினையும் இழக்கின்றான். மாராயனுக்கு நான்கு பிழைப்புகள் உள்ளன என்பதனைக் குறிக்கும் ஒரு பழமொழி வழக்கில் உள்ளது.

1. பாணி (இசை முழக்குதல்)
2. கோணி (பாடை கட்டுதல்)
3. நடுமிட்டம் (மழித்தல்)
4. திருமிட்டம் (கோயிலைப் பெருக்குதல்)

''வடக்கு மலபாரில் மேற்கண்ட நான்கு தொழில்களையும் மாராயன்கள் இன்றும் செய்து வருகின்றனர். தென்பகுதியில் இத் தொழில்களை இவர்கள் தங்களுக்குள் பிரித்துக் கொண்டதாகத் தெரிகின்றது. தெற்கே இன்று மாராயன் முரசு முழக்குபவனாகவும் கோயிற் பணியாளனாகவுமே உள்ளான். சாவுச் சடங்குகளை அட்டிக்குரிச்சி மாராயன்கள் மேற்கொண்டுள்ளனர். இவர்களை மாராயன் என்ற சாதிப்பெயரைச் சேர்த்துக் கூறாமல் அட்டிக்குரிச்சி என்று மட்டுமே அழைப்பர். இப்பகுதியில் வேலக்கட்டலவன்களே மழித்தல் தொழிலை மேற்கொண்டுள்ளனர். பலதலைமுறைகளாக இப்பாகுபாடு இருந்து வருவதாகத் தெரிகின்றது. எனினும் நான் இவ்விரு பிரிவினரும் வேறு வேறானவர் எனப்பாகுபடுத்தாமல் அம்பட்டர் என்றே பாகுபடுத்தி உள்ளேன். தென் மலபாரில் மட்டுமே இச் சாதியார் மழித்தல் தொழிலை

அடியோடு கைவிட்டுள்ளனர். இப்பகுதியிலேயே நம்பூதிரிகளின் செல்வாக்கு மேலோங்கி உள்ளது என்பதும் உடன் எண்ணிப்பார்ப்பதற்குரியது. இங்கு மாராயன்கள் கோயில் முரசடிப்பவர்களாக மட்டும் தொழில் மேற்கொண்டவர்களாக அம்பலவாசி என்ற பட்டப்பெயரையும் பெற்றுள்ளனர். காலப்போக்கில் இவர்கள் நம்பூதிரிகளோடு சம்பந்தம் செய்து கொள்ளும் சிறப்பினைக் கூடப் பெற்றுவிட்டனர். சில பகுதிகளில் மாராயன், மாராயர் என்பன இரண்டும் வேறு வேறானவை என்று கூடப் பாகுபடுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. முன்னவர் அம்பட்டரையும் பின்னவர் கோயில் பணியாளர்களையும் குறிப்பதாகக் கொள்ளத் தலைப்பட்டனர். பின்னதில் உள்ள ' ஆர்' சிறப்பு உணர்த்தும் பன்மை விகுதியே ஆகும். கத்தி எடுப்பதைக் கைவிட்டுவிட்ட மாராயன்களின் சிறப்பினைப் புலப்படுத்த வேண்டி, சென்ற காலத்திய நிலைமையினை இக்காலத்திய நிலையோடு ஒன்றுபடுத்தச் செய்யப்படுகின்ற முயற்சியாகவே இதனைக் கொள்ளவேண்டும். சென்னை மாநிலம் முழுவதிலும் நாவிதர்கள் இசைத் தொழிலையும் மேற்கொண்டவர்களாக இருப்பதையும் இங்கு நாம் கருத்தில் கொள்ளவேண்டும். தியர், முக்குவர் போன்ற மலபாரைச் சேர்ந்த பல சாதியினரும் சாவுச் சடங்குகளின்போது நாவிதர்களைத் தங்கள் புரோகிதர்களாக அமர்த்தி வருகின்றனர் என்பதும் கருதத்தக்கது."

1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் திரு. எம். சங்கரமேனன், மாரார் பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றார்:- "சூத்திரர்களான மாரார்கள் நாயர்களோடு வகைப்படுத்தப்பட வேண்டிய சாதியார் எனினும் இவர்கள் கோயில் பணிகளோடு கொண்டிருக்கும் தொடர்பு காரணமாகவும் நாயர்களோடு உடன் உண்ணுதலையும் மணஉறவு கொள்ளுதலையும் தவிர்த்தவர்களாக உள்ளமையாலும் இவர்கள் அம்பலவாசிகளோடு ஒரு சேர வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் கோயில்களில் முரசடிப்பவர்களாகவும் இசைவாணர்களாகவும் பண்டகசாலைக் காப்பாளர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். இவர்களுள் சில பிரிவினர் தீயட்டு நம்பியார்களைப் போலப் பகவதி கோயில்களில் தேவியின் உருவங்களை வரைந்து வைப்பதையும் பாட்டுக்கள் பாடுவதையும் மேற்கொண்டு வருகின்றனர். சில இடங்களில் இவர்களைக் குருப்பு என அழைக்கின்றனர். இவர்களுள் சில உட்பிரிவினர் இவர்களோடு உடன் உண்ணுவதோ மணஉறவு கொள்வதோ இல்லை. கோயிலில் பணி செய்கின்ற காரணத்தால் இவர்கள் நாயர்களைத் தொட நேர்ந்தால் குளிக்கின்றனர். திருமணம்,

(தாலிகட்டு, சம்பந்தம் ஆகிய இரண்டிலும் உடைமை உரிமை பேணுதல், தீட்டுக்காலம் முதலியவற்றில் இவர்கள் நாயர்களைப் போன்ற பழக்க வழக்கங்களையே பின்பற்றுகின்றனர். தென் வட்டங்களில் இளையாடுகள் இவர்களுடைய புரோகிதர்களாகப் பணியாற்றுகின்றனர். வடக்கில் உள்ள வட்டங்களில் இவர்கள் சாதியினைச் சேர்ந்தவர்களே இளையாடுகளுக்குப் பதிலாகச் சாவுச் சடங்குகளை நிகழ்த்துகின்றனர். தென் வட்டங்களில் திருமல்பாடுகள் தாலி கட்டுச் சடங்கினைச் செய்ய, வடபகுதியில் உள்ள வட்டங்களில் இவர்கள் சாதியினைச் சேர்ந்த இணங்களே அச்சடங்கினை நிகழ்த்துகின்றான். இவர்கள் சாதியைச் சேர்ந்தவர்களும் பிராமணர்களும் இவர்கள் சாதிப் பெண்களோடு சம்பந்தம் செய்து கொள்கின்றனர். சாவுச் சடங்குகள் முதலியவற்றுக்குப் பின் தீட்டுப் போக்கும் சடங்குகள் நாயர்களிடையே நிகழ்த்தப்படுவதைப் போலச் சத்தியன்களாலோ நாயர் சாதிப் புரோகிதர்களாலோ நிகழ்த்தப்படுகின்றது.''

திருவாங்கூரைச் சேர்ந்த மாரான்களைப் பற்றிய பின்வரும் விரிவான குறிப்புகளுக்கு நான் திரு என். சுப்ரமணிய அய்யர் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். பலர் நினைப்பதைப் போல மாரான் என்ற சொல்லுக்கும் மரணத்திற்கும் தொடர்பு ஏதுமில்லை. அடித்தல் எனப் பொருள்படும் மர் என்ற தமிழ் வேர்ச்சொல்லிலிருந்து இச்சொல் வந்துள்ளது. பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த சாதியார் இப்பெயரால் அழைக்கப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது. மாரான்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓச்சர் சாதியினை ஒத்தவர்கள். வடக்கு மலபாரைச் சேர்ந்த மாரான்கள் கூடச் சிலபோது இப்பெயரால் அழைக்கப்படுவது உண்டு. திருவாங்கூர் அரசுக்கு உரியதான பழைய வருவாய்த்துறை ஆவணங்களில் மங்கல்யம் என்ற பெயர் இவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. குருப்பு, பணிக்கர் என்ற இச்சாதியார் பயன்படுத்தும் பட்டப் பெயர்கள் பலரும் அறிந்தவை. இவை இரண்டும் குறிப்பிடப்பட்ட பணியினை மேற்கொள்பவர்களுக்கு உரிய பெயர்களாம். இன்று ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் சூத்திரர்கள் பலரும் தங்கள் பெயரோடு இணைத்துக் கொள்ளும் பிள்ளை என்ற பட்டப் பெயரினை இணைத்துக் கொண்டவர்களாகக் குருப்பு, பணிக்கர் என்ற பட்டப் பெயர்களை கைவிட்டு விட்டனர். மாரான்களை இரண்டு பெரும் பிரிவினராகப் பிரிக்கலாம். மற்றச் சாதியாருக்குச் சாவுச்சடங்குகளை நடத்திக் கொடுப்பதில் விருப்பம் இல்லாதவர்களான வட திருவாங்கூரைச் சேர்ந்த தங்களை மாரார் என அழைத்துக் கொள்வோர் ஒரு பிரிவினர் ; தங்கள் பெயரோடு சிறப்புக்குரிய ஆர்

விகுதியினை இணைத்துக் கொள்ளாதவர்களாக மற்றச் சாதியினருக்குச் சாவுச் சடங்குகளை நடத்திக் கொடுக்கும் மாரான்கள் மற்றொரு பிரிவினர். இந்த இரு பிரிவினருக்கும் இடையே உள்ள இவ்வேறுபாடு வடதிருவாங்கூரில் கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆலப்புழைக்குத் தெற்கே உள்ள பகுதியில் இவ்வேறுபாடு அவ்வளவாகப் பழக்கத்தில் பின்பற்றப்படுவதில்லை. தெற்குப் பகுதியில் மக்கள் இச்சாதியாரை ஒரு நூல், இருநூல், செப்பட்டு, குலஞ்சி என நான்கு பிரிவினராக வழங்கி வருகின்றனர். ஒரு நூல் பிரிவினர் தங்களை இரு நூல் பிரிவினரை விட உயர்ந்தவர்களாகக் கருதுகின்றனர். இப்பிரிவினைச் சேர்ந்த பெண்கள் கணவன் இறந்த பின் மறுமணம் செய்து கொள்ளாதவர்களாக ஒரே ஒரு முறை மட்டும் தாலி அணியும் பழக்கம் உடையவர்களாகையால் இவ்வாறு வழங்கப் படுகின்றனர். இவ்வாறு கணவனை இழந்தபின் கைம் பெண்களாகவே காலம் கழிப்பவர்கள் ஒரு பிராமணனுடனோ உயர் சாதியினைச்சேர்ந்த ஒருவனுடனோ வாழ்ந்து வரலாம். ஒரு நூல் என்பது ஒரு கயிறு எனப் பொருள்படுவதாகக் கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ளுதலில்லை என்ற நிலையினை விளக்குவதாகும். இரு நூலார் பிரிவினில் தாலி கட்டுபவன் கணவனாக இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. முதல் கணவன் இறந்தபின் இரண்டாவது ஒருவனை மணக்கத் தடையேதுமில்லை. செப்பட்டும் குலஞ்சியும் ஒரு காலத்தில் வட்டாரத்தைச் சேர்ந்த பிரிவுகளாக இருந்து இப்பொழுது உட்பிரிவுகளாக வளர்ச்சி பெற்றுவிட்டன. இந்த நான்கு பிரிவுகளையும் சேர்ந்த ஆண்கள் ஒன்றாக இருந்து உண்பர். பெண்கள் ஒன்றாக இருந்து உண்பதில்லை. திருவாங்கூரில் சாதிகள் எவ்வளவு வேகமாகக் கிளைக்கின்றன என்பதற்கு மாரான்களுள் முட்டாள் என்ற வட்டாரத்திற்குரிய சாதி தோன்றியுள்ளதைச் சான்றாகக் கூறலாம். கல்குளம் வட்டத்தில் கோயிற் பணிகளின் தேவையினை முன்னிட்டுத் தாழ்ந்த மாரான் பிரிவிலிருந்து உயர்ந்த பிரிவினராக உயர்ந்தவர்கள் முட்டாள்கள். மாரான்கள் மட்டுமே மலபாரில் கோயில்களிலுள்ள ஆசு, பாணி என்ற இரண்டு வாத்தியக் கருவிகளை இசைக்கும் உரிமை பெற்றவர்களாகையால் இவர்கள் ஆசுபாணிகள் என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றனர். தெற்குப் பகுதிகளில் இவர்கள் சிட்டிகன்கள் என அழைக்கப்படுகின்றனர். சைட்டிக என்ற சமஸ்கிருத சொல்லின் சிதைந்த வடிவமாகும் இது. செத்தவர்களைச் சுடுவதற்காக விறகினை அடுக்கும் தொழிலை மேற்கொண்டவர் என்பது இதன் பொருள். வடக்குப் பகுதிகளில் இவர்கள் அஸ்திரிக்குரிச்சிகள்(அஸ்தி-எலும்பு) என அழைக்கப்படுகின்றனர். 'இறந்தவர்களின் உறவினர்களுக்குப்

பிணத்தைச் சுட்டபின் எலும்புகளைப் பொறுக்க உதவுகின்றனர். ஆகையால் இவ்வாறு இவர்கள் அழைக்கப்படுகின்றனர். சில இடங்களில் மாரான்கள் பொதுவன்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பல சாதியாருக்கும் சாவுச் சடங்குகளை நடத்தி வைக்க உதவுவதால் இப் பெயருக்குரியவராயினர்.

சங்கராச்சாரியாரின் காலத்துக்கு முன் பிராமணர்களுடைய கோயில்களில் பறை அடித்தலே மாரான்களுக்குரிய ஒரே தொழிலாக இருந்ததாகக் கூறப்படுகிறது. நம்பூதிரி பிராமணர்கள் சங்கராச்சாரியாருக்கு அவருடைய இறந்த தாயாரை எரிக்க உதவி செய்ய மறுத்த காரணத்தால் வேறு வழியின்றி' அவர் கோயில் பணியாளர்களான இவர்களுள் ஒருவன் உதவியினை நாடிப் பெற்றுத் தம் தாயாரின் பிணத்தை எட்டுக் கூறாக்கி அதனை ஒரு குழியில் இட்டுப் புதைத்தார். நம்பூதிரிகள் தங்கள் சமய உணர்ச்சி புண்படுத்தப் பட்டதாகக் கருதிப் புறக்கணித்த இந்தப் பணியினைக் குறிப்பிட்ட அந்த மாரான் மேற்கொண்டு செய்தமையால் அவனைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சாதியை விட்டு விலக்கி வைத்தனர். இதனால் பெரியவர் அவன் சாதியினைச் சேர்ந்த மற்றவர்களோடு சமாதானம் செய்து கொள்ளும் படியாய் ஆயிற்று. அதன்பின் இச்சாதியினைச் சேர்ந்தவர்கள் தீட்டு நீக்கும் நாளன்று சாதி விலக்கம் செய்யப்பட்டவனையும் உடன் அழைத்து வந்தவர்களாகச் சங்கராச்சாரியாரின் தாயாரின் இறுதிக் கடன்களை உடனிருந்து செய்து நிறைவுறுத்தினர். காலத்தால் செய்த இவர்களுடைய இந்த உதவியினைப் பாராட்டும் வகையில் சங்கரர் நம்பூதிரிகள், அம்பலவாசிகள் ஆகியோருடைய சாவுச் சடங்குகளை நடத்துவதில் மாரான்கள் பங்கு தவிர்க்க இயலாதது என விதித்தார். மாரான் என்பதன் பண்டை வடிவம் வெட்டுதல் எனப்பொருள்படுவதான முரான் ஆகும் எனவும், இது சங்கரரின் அன்னையின் உடலை வெட்டிப் புதைத்தவர்கள் என்பதனைக் குறிக்கும் வகையில் இவர்களுக்கு உரியதாயிருந்தது எனவும் கருத்துத் தெரிவிப்போரும் உளர்.

கோயில்களில் பயன்படுத்தப்படும் ஐந்து இசைக் கருவிகளான பஞ்ச வாத்தியங்களை முழக்குவதே மாரான்களின் பரம்பரைத் தொழில். சங்கு, திமிலை, செண்டு, கைமணி, மத்தளம் என்பனவே இந்தப் பஞ்ச வாத்தியங்கள். இந்துக்களின் கோயில்கள் அனைத்திலும் இன்றியமையாததாகப் பயன்பாட்டில் உள்ள சங்கினைப் பொழுது புலருமுன் இறைவனைப் பள்ளி எழுந்தருளச் செய்யவும், ஊராரைத் துயில் எழுப்பவும் உரக்க முழக்குவர். மீண்டும் கோயிலில் வழிபாட்டுப்

பணிகள் தொடங்கப்படும் போதும் நைவேத்தியத்தினை எடுத்துச் செல்லும் போதும் கோயிலின் வடக்குப் பக்கத்திலிருந்து சங்கு முழக்கப்படும். இதன் காரணமாக மாரான்களுள் பலர் தங்களை 'வடக்குப்புறத்து'எனக் கூறிக்கொள்வர். மாரான்களுள்ளே தகுதி வாய்ந்த பெரியவர்களால் ஆசுவும் பாணியும் முழக்கப்படும். இந்து சமய நூல்களுள் கூறப்பட்டுள்ள சப்த மாதர்களான பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி, ஆகிய தேவதைகளுக்குப் பாணி உடன் இசைத்து வரச் சீபலி படையல் எடுத்துச் சென்று நாள்தோறும் படைப்பர். கோயில்களில் ஆண்டுதோறும் நிகழும் உற்சவப் பலிச் சடங்கின் போதும், கோயில்களில் நாள்தோறும் நிகழும் சீபதப் பலிச் சடங்குகளின் போதும் பாணி கொட்டப்படும். இச் சமயங்களில் ஓதுதற்குரிய பக்திப் பாடல்கள்,இசைத்தற்குரிய இசை ஆகியன பற்றிய சில வழக்கு வழிப்பட்ட மரபுகள் உள்ளன. இந்த மரபுகளை ஆழ்ந்த சமயப் பற்றுடன் அனைவரும் பின்பற்றுவதனை உற்சவப் பலியின் போது அதனைப் படைக்கும் பூசாரியும், விளக்கினை முன்னே எடுத்துச் செல்லும் வாரியாரும், பின்னே செல்லும் இசை இசைக்கும் மாரானும் விரதம் இருந்தவர்களாகப் பிராமணர்களுக்கு உரிய நெறிப்படி இடையில் வேட்டியினை உடுத்து உத்தரியமான மேல்துண்டினைப் பூணூலினைப் போல மார்பில் குறுக்கே அணிந்தவர்களாகச் செல்வதிலிருந்து தெளியலாம். இந்த விதி முறைகளைப் பின்பற்றுவதில் சிறிது வழுவி நடந்தாலும் அத்தகைய குற்றம் இழைப்பவர்கள் அடுத்த உற்சவச் சடங்குக்குள்ளாகப் பெரும் இடருக்கு ஆட்படுவர் என உறுதியாக நம்புகின்றனர்.

திமிலை எனப்படும் இசைக்கருவி தொடர்பாகப் பின்வரும் வழக்கு வரலாறு இவர்களால் கூறப்பட்டு வருகின்றது. ஸ்ரீ பத்மனாபர் கோயிலில் குறுந்தொட்டியாலான ஒரு திமிலை இருந்து வந்தது. அக் கோயிலில் அதனை இசைப்பதற்கென ஒரு மாரான் இருந்தான். அவன் அதனை இசைப்பதில் மிகவும் கைதேர்ந்தவனாக இருந்தான் அதனால் கோயிலில் பாடலினை ஓதும் பூசாரி அவன் இசைக்கும்இசையொடு பொருந்தப் பாட இயலாதவனாகத் தெய்வத்தின் சீற்றத்திற்கு ஆளானான். ஒரு பிராமணச் சிறுவனைப் பூசாரியாக அக் கோயிலில் அமர்த்த முடிவு செய்தனர். திமிலை வாத்தியத்தில் இசைக்கப்படும் இசைக்கு ஏற்ப அவனால் பாடல்களை ஓத இயலவில்லை. பசி கொண்ட தெய்வ ஆவியானது அவனைத் தரையிலிருந்து பத்தடி உயரத்திற்கு மேலே தூக்கியது. இதனைக் கேள்விப்பட்ட அச்சிறுவனின் தந்தை கோயிலுக்கு விரைந்து வந்து தன் விரல்களிலே ஒன்றினை வெட்டி அதிலிருந்து

வழியும் குருதியினை ஆவிக்குப் பலியாகப் படைத்தான். அதன் பின் அச்சிறுவன் விடுவிக்கப்பட்டான். அச்சிறுவனின் வயதான தந்தை பாடல்களை ஓதத் தொடங்கினான். அவன் திமிலை இசைக்கும் மாரானின் தரத்தினைவிடப் பன்மடங்கு ஓதுவதில் வல்லவனாக இருந்தமையால் ஆவிகள் மாரானை உயரத் தூக்கி அவன் குருதியினை உறிஞ்சிக் குடித்தபின் அங்கிருந்து அகன்றன. இந்நிகழ்ச்சியின் போது பயன்படுத்தப்பட்ட திமிலையினை அப்போதிருந்து மாரான்கள் யாரும் பயன்படுத்துவதில்லை.

உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த மாரான்கள் பாணோ, கோணி, திருமுற்றம், நடு முற்றம், வெளிச்சோறு, பூச்சோறு ஆகிய ஆறின் மீதும் உரிமை கொண்டாடுகின்றனர். கோணி என்பது ஏணி எனப்பொருள்படும். இது உயர்சாதி இந்துக்களின் பிணத்தைக் கிடத்த மூங்கிலும் தர்ப்பையும் கொண்டு கட்டப்படுகின்ற பாடையினைக் குறிக்கும். திருமுற்றம் என்பது கோயில் வாசலைப் பெருக்குவதாகும். நடுமுற்றம் என்பது இறந்து போனவர்களுக்குப் பத்தாம் நாள் இறுதிச் சடங்கினை நிகழ்த்த நம்பூதிரியின் வீட்டு வாசலில் இடப்படும் சிறிய பந்தலைக் குறிக்கும். வெளிச்சோறு என்பது மூதாதையரின் ஆவிகளுக்குப் படைக்கப்பட்ட பலிச் சோற்றில் எஞ்சியதைப் பெற்றுக் கொள்ளும் உரிமையினைக் குறிக்கும். பூச்சோறு என்பது கோயிலில் தெய்வங்களுக்குப் படையலின் போது முதலில் நீரோடு பூவினைத் தூவிப் பின்னர் படைக்கப்படும் சோற்றினைக் குறிக்கும்.

மாரான் ஒரு நாளின் பெரும்பகுதியினைக் கோயில் எல்லையிலேயே கழிக்கின்றான். சிலர் இரவு நேரத்தில் கோயிலில் காவல் காக்கின்றனர். நம்பூதிரிகளின் இல்லங்களில் நடைபெறும் பல நிகழ்ச்சிகளிலும் இவன் பங்கு பெறுகிறான். தலை மழித்தல் சடங்கின் போதும், பிரமச்சரியத்தை முடித்து வைக்கும் சமவர்த்தன சடங்கின் போதும் பலிச் சடங்குகளின் போதும் அங்கு மாரானே நாவிதனாகப் பணிபுரிகின்றான். சாவுச் சடங்குகளின் போது ஈம விறகினை அடுக்குவதனையும் எள்ளினை வழங்குவதனையும் இவனே மேற்கொள்ளவேண்டும். சிட்டிக்கான்கள் மழித்தலையும் சாவுச் சடங்கின் போது காத்து நிற்றலையுமே மேற்கொள்வதற்குரியவர்கள். சிட்டிக்கான்கள் கோயில்களில் மத்தளம் அடிக்கும் பணியினை மேற்கொண்டாலும் ஆசு, பாணி ஆகிய இசைக் கருவிகளை இசைக்க அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. குசமாரான் என்ற கலம் வனையும்

சாதியார் வாழ்கின்றனர். இவர்கள் மாரான்களோடு எவ்வகையிலும் தொடர்புடையவர்களல்லாத வேறு சாதியார் ஆவர்.

மாரான் சாதியினைச் சேர்ந்த பல குடும்பத்தினர் தங்களை அம்பலவாசிகள் எனக் கருதுகின்றனர். இவர்கள் அம்பலவாசிகளுள் தாழ்ந்த பிரிவினராகக் கருதப்படுவதோடு இறைச்சி உண்ணுதலையும் மது பருகுவதனையும் தவிர்க்கின்றனர். மாரான்களில் சிலர் பேயோட்டும் பணியில் ஈடுபட்டவராக உள்ளனர். மற்றவர்கள் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நுரையீரல் மிகுதியும் உழைப்புக்கு உள்ளாக வேண்டியுள்ள பணியில் ஈடுபடுபவர்கள் மதுவினைக் குடிப்பது நல்லது என்ற ஓர் எண்ணம் இவர்களிடையே பரவியுள்ளதால் குடிக்கும் தீய பழக்கத்திற்கு இவர்கள் ஆளானவர்களாக உள்ளனர்.

குடும்பச் சடங்குகள், சமூகக் கட்டுப்பாடு, சமய வழிபாடு ஆகியனவற்றில் மாரான்கள் நாயர்களின் நடைமுறையினையே பின்பற்றுகின்றனர். திருமணத்திற்கு முன் நிகழும் ஒரே ஒரு முக்கியச் சடங்கு சோறூட்டும் சடங்காகும். அப்போது குழந்தையினைக் கோயிலுக்கு எடுத்துச் சென்று புனிதப்படுத்தப்பட்ட சோற்றினை ஊட்டுவர். இதற்கு மாறாக நாயர்கள் பொதுவாக இச்சடங்கினைத் தங்கள் வீட்டிலேயே நிகழ்த்துகின்றனர். சாவுத் தீட்டிலிருந்து ஒரு மாரானை விடுவிக்கப் பிராமணன் ஒருவன் புனிதப்படுத்தும் சடங்கினை நிகழ்த்த வேண்டும். நாயர்கள் இவ்வாறு பிராமணனைக் கொண்டு இச்சடங்கினை நிகழ்த்துவதில்லை. திருவாங்கூரில் மாரான்கள் நாயர்களை விடச் சமூகப் படிநிலையில் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இக்கட்டுரையில் சுட்டப்பட்ட ஆசு, பாணி என்ற இசைக் கருவிகள் தொடர்பாக நான் அறிய வந்த செய்திகள் வருமாறு: மலபாரில் மரம், திமிலை, சங்கு, செங்குலம்,செண்டு ஆகிய ஐந்து வாத்தியங்களும் ஒருங்கே இசைக்கப்படுதலே பாணி கொட்டுதல் எனக் கூறப்படுகிறது. ஆசும் மரமும் பாணிக் கொட்டில் இடம் பெறும் வாத்தியங்களின் பெயராகும். புதிய கோயில்களில் தெய்வங்களைக் கடவுள் மங்கலம் செய்தல், உற்சவங்கள், சீவேலித் திருவிழா, திடம்பு எடுத்தல், (கேடயம் போன்ற பலகையில் கோயிலுக்கு உரிய சிறிய விக்கிரகத்தை வைத்துக் கோயிலுக்கு வெளியே எடுத்துச் செல்லுதல்) ஆகியன நிகழ்த்தும்போது பாணிக்கொட்டுக் கொட்டுதல் இன்றியமையாது நிகழ்த்தப்பட வேண்டும்.

மரஆசாரி : Mara-sāri)

மரத்தில் தொழில் செய்யும் மரஆசாரி அல்லது மரப்பணிக்கன் என்னும் இப்பெயர் மலையாளத்தைச் சேர்ந்த கம்மாளர்களின் தொழில் தொடர்பான உட்பிரிவுகளில் ஒன்றாகும்.

மராட்டியர் :Marātha

சென்னை மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் மராட்டியர்கள் வாழ்கின்றார்கள். எனினும் கடைசியாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி பின்கண்ட மாவட்டங்களிலேயே மிகுதியான எண்ணிக்கையராகக் காணப்படுகின்றனர்:

தென் கன்னடம் 31,351
சேலம்..... 7, 314
தஞ்சாவூர்..... 7,156
பெல்லாரி.....6,311

''மராத்தி என்ற சொல் பிராமணரல்லாத பல்வேறு மராத்திய வகுப்பாரைக் குறிக்கும். இவர்கள் படைவீரர்களாகவோ படையெடுத்து வந்த மராத்தியர்களின் படை இருப்புகளில் பணி செய்யும் உதவியாளர்களாகவோ தெற்கே வந்தவர்கள். மராத்தியர்கள் பெரும் அளவினராக உள்ள தென் கன்னட மாவட்டத்தில் பயிர்த் தொழிலாளரான ஆரித்களைப் போல வந்து சேர்ந்தவராதல் வேண்டும். மொத்தம் 65,961 பேர்களாகப் பதிந்துள்ள இவர்களுள் 40,871 பேர்கள் தங்கள் சாதியும் உட்பிரிவும் மராத்தி என்றே பதிந்துள்ளனர். எஞ்சியுள்ளவர்கள் தந்துள்ள உட்பிரிவுகளின் எண்ணிக்கை 305 ஆகும். இவற்றுள் பெரும் பாலானவை வேறு சாதிகளுக்குரிய பெயர்களாகும். இச்சாதிகளுள் சில கலப்பில்லாத திராவிட இனத்திற்கு உரியவை. இந்த உட்பிரிவுகளின் பெயர்கள் தொழில் அடிப்படையில் அமைந்தன ஆதல் வேண்டும். போகம், காண்டல, மங்கல முதலியவற்றை இத்தகைய உட்பிரிவுகளுக்கு உரிய எடுத்துக்காட்டுக்களாகக் கூறலாம்'' என 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தென் கன்னட மாவட்டக் கையேட்டில் திரு. எச். எ. ஸ்டுவர்ட் இது பற்றி மேலும் கூறியுள்ள விவரங்கள் வருமாறு: ''மராத்தியினைச் சாதிப் பெயராகக் கொள்வது குழப்பத்திற்கு இடந்தருவதாக உள்ளது. மராத்தி மொழி பேசும் பல சாதியினரும் தங்கள் சாதியினை மராத்தியெனத் தந்திருக்கக் கூடும். உண்மையான மராத்திச் சாதியார் அவர்கள் தலைமையிடமான கோவாவிலிருந்து வந்து சேர்ந்தவர்களாவர். இச்சாதி புறமணக் கட்டுப்பாடு உடைய பன்னிரண்டு வர்க்கங்களாகப்- பலிகளாகப்- பிரிவு

பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஹொண்டகாரு என்று அழைக்கப்படும் சாதித் தலைவர்களே சாதியாரிடையே ஏற்படும் வழக்குகளைத் தீர்த்து வைக்கின்றனர். இவர்கள் சிருங்கேரி மடத்தினைத் தங்கள் சமயத்திற்குரிய தலைமையிடமாகக் கொண்டுள்ளனர். மகாதேவியே இவர்கள் சிறப்பாக வழிபடும் தெய்வம். கராடிப் பிரிவினைச் சேர்ந்த பிராமணர்களே இவர்களுடைய சடங்குகளில் புரோகிதம் செய்கின்றனர். குழந்தை மணமும் வயது வந்த பின் மணமும் ஆகிய இருவகை மணங்களும் இவர்களிடையே வழக்கில் உள்ளன. தாரே முறையிலான மணச் சடங்குகளை மேற்கொள்கின்றனர். (பார்க்க : பண்டர்) கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ளலாமெனினும் இறந்து போன கணவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களைக் கைம்பெண்கள் மணந்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. இவ்வழக்கம் இறந்து போனவனுடைய மனைவியை அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்த பங்காளிகள்தான் மணந்து கொள்ள உரிமையுடையவர்கள் என்ற (Letivate) மணமுறைக்கு முரணானதாகும். சில பகுதிகளில் கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப்படுவதில்லை. கணவனோ மனைவியோ தங்கள் விருப்பம் போல் மணமுறிவு செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதோடு அவர்கள் மீண்டும் மணம் புரிந்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். மராத்தியர்கள் பயிரிடுவோராகவோ, கூலிகளாகவோ, வேட்டையாடு பவர்களாகவோ தொழில் செய்கின்றனர். மீன், விலங்குகள் ஆகியவற்றின் இறைச்சியினை இவர்கள் உண்கின்றனர். (தூய்மையற்றனவாகக் கருதப்படும் கால்நடைகள் விலங்குகள் ஆகியவற்றின் இறைச்சியினை இவர்கள் உண்பதில்லை) போதையூட்டும் மதுவகைகளையும் பருகுகின்றனர். மராத்தி மொழியினையோ அதன் கிளை மொழியான கொங்கணியினையோ இவர்கள் பேசுகின்றனர். தென் கன்னடத்தைச் சேர்ந்த மராட்டியர் தங்களை ஆரீ என்றும் ஆரீ சத்திரியர் என்றும் அழைத்துக் கொள்கின்றனர்.

வடஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு ஸ்டுவர்ட் பதிந்துள்ள விவரங்கள் வருமாறு: ''மராட்டியர் என்ற சொல் தெற்கே வந்து குடியேறிய மராட்டிய சூத்திரச் சாதியாரைக் குறிப்பதாகும். இவர்கள் ராவ் என்பதனைத் தங்களுடைய சாதியைக் குறிக்கும் பட்டப்பெயராக இணைத்துக் கொள்வர். இவர்கள் ஒவ்வொருவரும் எந்தச் சூத்திர சாதிப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் என்பதனைக் கண்டு கொள்ளுதல் இயலாததாகும். தங்கள் சொந்த நாட்டை விட்டு வெளியேறி வந்தவர்களாக உள்ள காரணத்தைப் பயன்படுத்திக் கொண்டு இவர்கள்

அனைவருமே தங்களைச் சத்திரியர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்வர். இதனை மற்ற சாதிக்குரியவர்கள் கேலிக்குரியதாகக் கருதுவர். தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளாகவே மண உறவு கொள்வதில் இவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுவர். சாதியில் வேற்றவர்கள் கலப்பு நிகழ்வதைத் தடுக்கவே இதனை மேற்கொள்கின்றனர். இவர்கள் தாய் மொழி மராத்தியாயினும் தமிழ் அல்லது தெலுங்கு ஆகியவற்றையும் இவர்கள் பேசுகின்றனர். இவர்களுள் பலர் தையற்காரர்களாக உள்ளனர்*. மற்றவர்கள் போர்ப்படை, காவல் துறை, ஏவலர் பணி ஆகியனவற்றில் சேர்ந்து கொள்கின்றனர். சிலர் பயிர்த்தொழிலிலும் வணிகத்திலும் ஈடுபட்டுள்ளனர்.''

மராட்டியர்கள் பெருமளவில் காணப்படும் மாவட்டங்களின் கையேடுகளிலும் விவரக் குறிப்புகளிலும் இவர்களுடைய வரலாறு பற்றிய விவரங்கள் தரப்பட்டிருக்கக் காணலாம்.

தஞ்சாவூரை ஆண்ட கடைசி மராட்டிய மன்னரான மகாராசா சிவாஜி கி.பி.1855 இல் உயிர் நீத்தார். அரசு முறையிலான இவருடைய சாவுச்சடங்கு சிறப்பாக நடைபெற்றதை நேரில் கண்ட ஒருவர் பதிந்துள்ள விவரம் வருமாறு: ''விலையுயர்ந்த அணிகள் பூட்டப்பட்ட இவருடைய உடலைத் தந்தப் பல்லக்கில் வைத்து இரவில் தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டுள்ள அரச வீதிகள் வழியே மக்கள் அழுது புலம்ப எடுத்துச் சென்றனர். இவருக்கு நெருங்கிய உறவினனான பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவன் சிதையினை மும்முறை வலம் வந்தபின் மூன்றாவது சுற்றின் இறுதியில் தண்ணீருள்ள பானை ஒன்றினைத் தரையில் மோதி உடைத்தான். அதன்பின் அச்சிறுவன் சிதைக்குத் தீ மூட்டினான். சிதையில் தீப்பற்றி எரியத் தொடங்கிய போது நாடே ஓலமிட்டு அழுதது. '' எனத் திரு எம். ஜெ. வால்ஹவுஸ் குறித்துள்ளார்.[⊛] சிவாஜி இறந்த பின் அவருக்குச் சந்ததியில்லாத காரணத்தால் தஞ்சாவூர் அரசு, வணிகக் கழக ஆட்சி உறுப்பினரின் பொறுப்பில் வந்தது. அவருடைய தனி உடைமைகளுக்கு மாவட்ட ஆட்சியர் பொறுப்பேற்றார். முன்பே மணந்து கொண்டிருந்த மூன்று மனைவியரோடு கூடச் சிவாஜி தான் இறப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகப் பதினேழு பெண்களை ஒரே சமயத்தில் மணந்து கொண்டிருந்தார். அந்த அரசியருள் மூவர் தஞ்சாவூரில் வாழ்ந்தவர்களாக 1907இல் கூட உயிரோடு இருந்தனர்.

*ரங்காரியர் மராட்டிய சாயம் தோய்ப்போரும் தையல்காரரும் ஆவர்.

[⊛] Ind. Ant., VII, 1878.

1886இல் அரசப்பிரதிநிதி தஞ்சாவூருக்கு வருகை தந்த போது அரசியரோடு பேச அவர் திரைக்கு உள்ளே அந்தப்புரத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்தச் சந்திப்புப் பற்றி டப்போரினைச் சேர்ந்த மார்சியொனெஸ் பதிந்துள்ள குறிப்பு வருமாறு:[⊛] "அந்தப் பெண்கள் இவருடைய வருகையினை எதிர்பார்க்கவில்லையாகையால் அதற்காகச் சிறப்பாக உடுத்துக் கொள்ளாதவர்களாக இருந்ததோடு தக்க முறையில் சில வார்த்தைகள் கூறவும் அறியாதவர்களாக இருந்தனர். எனினும் ஏதோ உளறியபடி ஊதா விரிப்பு ஒன்று போடப்பட்டிருந்த நாற்காலியினைச் சுட்டிக்காட்டினர். டப்போரின் தன்னை அதில் அமரும்படி கூறுவதாக நினைத்து அதனை நோக்கித் திரும்பிய போது அது அசைந்தாடக் கண்டார். அதனுள் சிறிய நாயொன்று இருக்கக்கூடும் என அவர் நினைத்தார். இரண்டு பெண்கள் அந்த ஊதாத் துணியினை விலக்கிய போது நாற்காலியின் பின்பக்கத்தில் பாதியளவிற்கே உயரமுடையவளான வயதான பெண்மணியான பட்டத்து அரசி அதில் அமர்ந்திருக்கக் கண்டார். நல்ல காலமாக நான் அவள் மீது அமர்ந்து அவளை நசுக்கி விட இருந்தது உரிய சமயத்தில் தவிர்க்கப்பட்டதென அரசப் பிரதிநிதி பின்னர் கூறினார்."

1880 இல் திரு. எ.சி பர்னெஸ் தஞ்சாவூர் அரண்மனையில் உள்ள வடமொழி கையெழுத்துச் சுவடிகளைத் தொகுத்து வகைப்படுத்தப்பட்ட பட்டியல் ஒன்றினை வெளியிட்டார். அந்த வெளியீட்டின் முன்னுரையில் அவர் கூறியுள்ளதாவது: "இந்த நூலகத்தினைச் செல்ஸ்விக் ஹோல்ஸ்டெனின் இளவரசரான மதிப்பிற்குரிய நொயர் கோமகனாரே ஐரோப்பியக் கல்வியாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அதனைப் பற்றிய விவரங்கள் அவரால் பேராசிரியர் கோல்ட்ஸ்டக்கருக்குத் தெரிவிக்கப்பட்டன. சென்னை மாநிலத்தின் ஆளுநரான லார்ட் நேபியரும், எட்டரிக்கும் அதனைப் பற்றி ஆய்வு மேற்கொள்ள மாற்றுப்பணிப் பொறுப்பில் 1871இல் என்னை அமர்த்தும் வரை இந்த நூலகத்தின் முழுச் சிறப்பும் வெளிப் படுத்தப்படாமலேயே இருந்தது. இங்குள்ள சுவடிகள் முந்நூறு ஆண்டுகாலமாக, முதலில் நாயக்க மன்னர்களாலும் 1675க்குப் பின்னர் மராட்டிய அரசர்களாலும் தொகுத்து வைக்கப்பட்டனவாகும். இவற்றுள் சில ஓலைச் சுவடிகள் காலத்தால் முற்பட்டவை எனினும் பெரும்பாலானவை சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் தொகுக்கப்பட்டனவாம். நாகரியில் எழுதப்பட்ட சுவடிகள் அனைத்தும் மராட்டியர் காலத்தவை. இவற்றுள் பல சரபோசி மன்னரால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் காசி மாநகரில் இருந்து பெறப்பட்டனவாம்.

[⊛] Our Viceregal Life in India, 1884 - 88.

தஞ்சாவூர் அரண்மனையில் உள்ள மராட்டிய அரசவை மன்றத்தில் எல்லா மராட்டிய மன்னர்களின் படங்களும் வைக்கப்பட்டுள்ளன. இவை கலைநயம் குறைந்தவை. சாண்ட்ரெ செதுக்கிய சரபோசி மன்னரின் சிலையும் அங்குள்ளது. இந்த அரண்மனையினைச் சேர்ந்த, அளவில் சிறிய, ஆனால் மதிப்பில் உயர்ந்த படைக்கருவிகள் சென்னை அருங்காட்சியகத்தின் மதிப்பு மிக்க காட்சிப் பொருள்களாக உள்ளன. தஞ்சை அரண்மனையைச் சேர்ந்த படைக் கலங்கள் பற்றித் திரு வால்ஹவுஸ் பின்வருமாறு கூறுகின்றார்.* ''அந்தப் படைக்கலக் கொட்டில் பல திறப்பட்ட பழைய படைக்கலங்களின் குவியல்களைச் சங்கீத மகாலின் தரையெங்கும் குவித்து வைக்கப்பட்டதாக இருந்தது. அதனிடத்து நெடுங்காலமாகப் பல டன் எடையுள்ள அப்படைக்கலங்கள் தாறுமாறாகக் குவிக்கப்பட்டுத் துருவேறியனவாகக் கிடந்தன. நீண்டனவும் வளைந்தனவும், ரம்பமுடை யனவுமான நூற்றுக்கணக்கானவை அவற்றுள் இருந்தன. அவற்றுள் பல செதுக்கு வேலைப்பாடு உடையனவாகவும், போர் மற்றும் வேட்டைக் காட்சிகளைத் தங்கத்தில் வார்த்து அமைக்கப்பட்டனவுமாம். அகன்ற வெட்டுவாயையுடைய வாள்கள் பல கன்னடம் அல்லது மராத்தியில் பொறிக்கப்பட்ட நீண்ட பட்டயங்களைக் கொண்டிலங்கின. அவற்றுள் சில திமிங்கலத்தின் எலும்பு போல அதிர்ந்தாடும் வகையில் கலவை செய்து உறுதியாக்கப்பட்டவை. பித்தளையாலும் உருக்காலும் ஆன பலதிறத்தவரின் கையுறையோடு கூடிய விரிவான வேலைப்பாடுகள் கொண்ட வாள்பிடிகள் பல அங்கே இருந்தன. இரண்டு கைப்பிடிகள் அமைக்கப்பட்ட உறுதி வாய்ந்த முதுகுப் பக்கத்தையுடைய கொலையாளிகளின் நீண்ட வாள்களும் அவற்றிடையே இருந்தன. குத்துவாள்கள், கத்திகள், உடைவாள்கள் ஆகியன பலவாகவும் கற்பனை செய்து பார்க்க இயலாத பல வடிவினவாகவும், இரண்டு மற்றும் மூன்று கத்திகளைக் கொண்டனவாகவும் இருந்தன. சிலவற்றின் கைப்பிடிகளுள் கைத் துப்பாக்கி மற்றும் புதைகத்திகள் மறைவாக அமைக்கப் பட்டிருந்தன. குத்துவாள்கள் பலவும் பல்வேறு திறப்பட்ட கைப்பிடி அமைப்புடையனவாக இடைக்கால ஐரோப்பியரின் உலோகத் தொழில் திறனுக்கு ஈடுகொடுப்பனவாக இருந்தன. நீண்ட, மெல்லிய வெட்டுவாயினை உடைய கத்திகள் தந்தத்திலும் எலும்பிலும் அழகிய வேலைப்பாடுகளை உடைய கைப்பிடிகளை உடையனவாக மிகுதியாக இருந்தன. இக் கைப்பிடிகள் கிளித் தலைகள் போன்ற பறவைகளின் தலைகள் அமைப்புடையனவாகவோ, கால்களையும் இறக்கைகளையும்

*முந்து நூல்கள் (Loc. lit)

உள்ளடக்கிய பறவைகளின் முழு உருவங்களாகவோ, பூதங்களின் உருவங்களாகவோ அமைந்திருந்தன. இவற்றைப் பயன்படுத்துவதில் சிக்கல்கள் மிகுதி. சிலர் இவை பழங்கள் நறுக்கவே பயன்படுத்தப்பட்டதாகக் கூறினர். மற்றவர்கள் நஞ்சு தோய்க்கப்பட்ட இவை பெண்கள் வாழும் அந்தப் புரங்களின் கூரைகளிலும் மதிற் சுவர்களிலும் உடைந்த கண்ணாடிச் சில்களுக்கும் கம்பி முனைகளுக்கும் பதிலாகப் பதித்து வைத்துப் பயன்படுத்தப்பட்டன எனக் கூறினர். கிறித்துவ சமயத்திற்குரிய எழுத்துக்களும் அடையாளங்களும் பொறிக்கப்பட்ட ஐரோப்பாவினைச் சேர்ந்த பழங்காலத்திய கத்திகள், இந்துக்களின் தெய்வ உருவங்களும் சமயச் சின்னங்களும் தாங்கிய கைப்பிடிகள் பொருத்தப்பட்டனவாக மிகுதியாக வியத்தகு வகையில் அவற்றிடையே காணக்கிடக்கின்றன. திரு. சிங்ச்லியர் தந்துள்ள தக்காணப் படைக் கலங்கள் பற்றிய அரியதொரு பட்டியலில்⊙ போர்ச்சுகீசு எனப் பொருள்படும்படியானதாகப் பறங்கிகள் என அழைக்கப்படும் போர்ச்சுக்கலிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அல்லது போர்ச்சுக்கீயர் வாளினை ஒத்தனவாக அமைக்கப்பட்ட நீண்ட கூரிய முனையினை உடைய கத்திகள் அவற்றிடையே மிகுதியாகக் காணப்படுவதாகக் குறித்துள்ளார். உருக்காலான கைப்பிடியோடு கூடிய அழகிய குட்டார் யாவரும் அறிந்ததான அண்டெரிய பெரரா (Andrea Ferara) பெயர் பொறிக்கப்பட்டதாக உள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பு தெற்கு மராட்டியப்பகுதியில் ஒரு பெயர் போன கள்ளச் சாராயக் கடத்தல்காரனைப் பிடித்த போது அவனுடைய வாள் அண்டெரிய பெரரா என்பதாகக் கண்டறியப்பட்டது. கிராண்ட் டப்ஃ அவர்களும் மொடோவ்ஸ் டெய்லர் அவர்களும் சிவாஜி மன்னரின் விருப்பத்திற்குரிய பவானி என்ற பெயருடைய வாள் ஒரு ஜெனொவா வாளாகும் *எனக்குறித்து உள்ளதாகச் சிங்க்லியர் (Sinclair) மேலும் குறித்துள்ளார்....இப்படைக்கலங்கள் அனைத்தும் இறுதியில் திருச்சிராப்பள்ளியில் உள்ள படைக்கலக் கொட்டிலுக்கு கொண்டு சேர்க்கப்பட்டன. படை அதிகாரிகள் குழு ஒன்று கூடிப் பல திறத்தனவான இப்படைக்கலங்களைப் புதிய தற்காலப் போர் முறையில் பயன்படுத்த இயலாது எனக் கூறிய பின் அவை அனைத்தும் உடைக்கப்பட்டுப் பழைய இரும்பாக விற்றுவிட ஆணையிடப்பட்டது. 1863-இல் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.

⊙ இந்தியத் தொல்லியல், II, 1874. (Ind. Ant., II, 1874).

* சென்னை அருங்காட்சியகத்திலுள்ள வாள்கள் பலவற்றின் ஜெனொவா என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

பெல்லாரி மாவட்ட விவரக் குறிப்பில் பின்வரும் விவரம் பதியப்பட்டது. ''1790-இல் ஆளுநர் தலைவரான காரன்வாலிஸ் பிரபு திப்புவினை வழிக்குக் கொண்டுவர மராட்டியரோடும் நிசாமுடனும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் திப்புவிடமிருந்து கிடைக்கும் நிலப் பகுதியினைத் தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதென உடன்பாடு செய்து கொண்டனர். பெல்லாரி, ராயதுர்க்கம், உறரபணஉறள்ளி ஆகிய பாளையங்கள் உள்ளிட்ட சில பாளையக்காரர்கள் தங்கள் மாவட்டங்களைத் தாங்களே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். '1792-இல் திப்பு பணிந்தவனாக அந்த ஆண்டின் உடன்படிக்கையின் அடிப்படையில் தன் நாட்டுப் பகுதியில் ஒரு பாதியினை அவனுக்கு எதிரான கூட்டாளிகளுக்கு விட்டுத் தந்தான்.* சாண்டூர் மராட்டியர்களுக்கு ஒதுக்கப்பட்டது. பெல்லாரியின் ஒரு பகுதி நிசாமிற்கு உரியதாயிற்று.'' குன்றுகள் நிறைந்த சாண்டூரின் இன்றைய அரசனான ராஜா வெங்கடராவ் சாகேப் இந்து ராவ் கோர்ப்படே சேனாபதி மாமலிகட் மடா இன்னமும் வயதுவராத சிறுபிள்ளையாக உள்ளார். அந்த அரசின் கீழ்வாழும் பதினொன்றாயிரம் குடிமக்களுள் ஆயிரவர் பல சாதிகளையும் சேர்ந்த மராட்டியர் ஆவர். '' இவர்களுள் மூன்று குடும்பத்தினர் பிராமணர்கள். இவர்கள் சித்தோஜிராவ், ஜரமலி பாளையக் காரர்களிடமிருந்து இந்தப் பாளையத்தை வென்ற போது அவரோடு கூட உடன் வந்தவர்கள். இடையே இரு சிறு காலப்பகுதிகள் தவிர சித்தோஜிராவின் வழிவந்தவர்களே இந்த அரசினை ஆண்டு வந்துள்ளனர். மராட்டியர்களான பிறர், காசகி, கும்பி, லேகாவலி என்ற மூன்று பிரிவினுள் அடங்குவர். காசகி பிரிவினுள் எட்டுக் குடும்பத்தினர் மட்டுமே உள்ளனர். இவர்களே இந்த அரசின் பெருமக்கள். இவர்களுள் சிலர் மராட்டியப் பகுதியிலிருந்து சிவராவ் அவர்களோடும் பிற ஆட்சியாளர்களோடும் உடன் வந்தவர்கள். இவர்கள் அரசவையில் அமரவும், பொது நிகழ்ச்சிகளில் அரசரோடு உடனிருக்கவும் உரிமை பெற்றிருப்பதோடு அரசக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களோடு உடன் உண்ணவும் மண உறவு கொள்ளவும் உரிமை பெற்றவர்கள். சத்திரியர்களுக்குரிய பூணூலினை அணிந்திருப்பதோடு பிராமணர் களுக்குரிய கோத்திரங்களைத் தங்கள் குலப் பெயராகவும் இவர்கள் கொண்டுள்ளனர். பிராமணர்களைப் புரோகிதர்களாக அமர்த்திக்

* கன்னிமாரா பொது நூலகத்தில் உள்ள காரன்வாலிஸ் சிலையின் கீழ் செதுக்கப்பட்டுள்ள சித்திரம் காரன்வாலிஸ், திப்புவின் இரண்டு பிள்ளைகளையும் பிணையாகப் பெறுவதைக் காட்டுகின்றது.

கொண்டு பிராமணர்கள் மேற்கொள்ளும் பல சடங்குகளையும் மேற்கொண்டு செய்கின்றனர். இறந்தவர்களை எரிக்கும் இவர்கள் கைம்பெண்களின் மறுமணத்தை அனுமதிப்பதில்லை. பெண்கள் முகத்திரை அணிகின்றனர். எனினும் மதுவகைகள் அருந்தவும் புகைக்கவும் இறைச்சியினை - பசுவின் இறைச்சி நீங்கலாக- உண்ணவும் இவர்களிடையே எத்தகைய தடையும் இல்லை. அரச குடும்பத் தவர்களின் குல தெய்வமான மார்தாண்ட மணிமல்லாரியே இவர்களுக்கும் குல தெய்வம். அரசரின் அரண்மனையில் உள்ள அத் தெய்வத்தின் கோயிலில் இவர்கள் அதனை வழிபடுகின்றனர். பூனாவிற்கு அருகே உள்ள ஜெஜூரியில் உள்ள அத் தெய்வத்தின் கோயிலுக்கும் புனிதப் பயணம் மேற்கொள்வர். (மொனியர் வில்லியம்ஸ் ஒரு குறிப்பில், '' காண்டெபா ராவ் பூனாவிலிருந்து முப்பது மைலில் உள்ள ஜெஜூரியில் வாழ்ந்த ஒரு பெரிய மனிதர். இவர் ஆற்றல் வாய்ந்த ஒரு மன்னராகவோ பழங்குடி இனத்தவர்களின் தலைவராகவோ இருந்திருப்பதோடு கூடப் பிராமணர்களுக்கும் உதவியவராக இருந்திருக்கக் கூடும். இன்று இவரைச் சிவனின் பல அவதாரங்களில் ஒன்றான மல்லாரி அவதாரத்தில் தோன்றியவராகக் கருதுகின்றனர். அந்த மலைப் பகுதியில் மக்களைத் துன்புறுத்த வந்த மல்லாசுரன் என்ற அசுரனை அழிக்கக் சிவன் இந்த அவதாரம் எடுத்ததாகக் கதை வழங்குகின்றது. அப்பொழுது பார்வதியும் காண்டெபாவின் மனைவியாக அவதரித்தாள். மராட்டிய மாநிலத்தில் தாழ்ந்த சாதியினைச் சேர்ந்தவர்களிடையே இவருடைய வழிபாடு சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது. ஜெஜூரியில் உள்ள குன்றில் உள்ள முக்கியமான கோயிலில் ஆடுகளை அத் தெய்வத்திற்குப் பலியிடுவதோடு கூடும் சிறுமியரைத் தெய்வத்திற்காக நேர்ந்து விடும் கெட்ட வழக்கமும் நிலவுகின்றது. குதிரை மேல் தன் மனைவியுடன் நாய் பின் தொடர வரும் உருவத்தில் காண்டோபரைச் சிலபோது வழிபாட்டுக்குரிய உருவமாக அமைத்துக் கொள்கின்றனர். (சங்கரர் வாழ்ந்த காலத்தில் மல்லாரியினை நாய்களின் தலைவனாக வழிபட்ட ஒரு பிரிவினரும் இருந்துள்ளனர் எனக் கூறியுள்ளார்*.) காசகிகளிடையே திருமணத்தின் போது வீரபூசை எனப்படும் வீரர் வழிபாடு நடத்தும் புதுமையானதொரு வழக்கமும் உள்ளது. இச்சடங்கு தொடங்குமுன் ஆண்கள், இரண்டு குழுவினராகப் பிரிந்து இரு குழுவினரும் ஒவ்வொரு தலைவரின் கீழ் நரிஉறல்லா ஆற்றினை நோக்கிப் போலியாகத் தங்களுக்குள் சண்டையிட்டபடி செல்வர். ஆற்றினை அடைந்த பின்

* பிராமணியமும் இந்து சமயமும் Brahmanism and Hinduism

வீரரான மார்த்தாண்டன் அவதாரமாகச் சிவனை அங்கு அமைத்து வழிபட்டு அவன் அருளைப் பெறுவர். கங்கா தேவியினையும் அங்கு வழிபடுவர். அதன் பின் மீண்டும் போலித்தன்மை மேலும் மிகுதியாகப் புலனாகும்படி சண்டையிட்டபடியே திரும்புவர். மராட்டியர்களின் இரண்டாம் பிரிவினரான கும்பிகளில் பெரும்பாலோர் பயிர்த்தொழிலை மேற்கொண்டவர்களே. இவர்களுள் சிலர் முதல் பிரிவினரின் ஏவலர்களாக உள்ளனர். இவர்கள் காசகிகளோடு மணஉறவு கொள்வதோ உடன் உண்பதோ இயலாது. பந்தியில் இவர்கள் தனி வரிசையாகவே அமர்த்தப்படுகின்றனர். இவர்கள் பிரிவினைச் சேர்ந்த பெண்கள் முகத்திரை அணிவதில்லை. எனினும் இவர்கள் பிராமணர்கள் கோத்திரப் பெயர்களைக் கொண்டிருப்பதோடு பிராமணப் புரோகிதர்களையும் அமர்த்திக் கொள்கின்றனர். சிலர் அரசரின் பெயரான கோர்படே என்ற பெயரைத் தரித்துக் கொள்கின்றனர். அரசரின் வீட்டு வேலைப் பணியாளர்களாக இருப்பதாலேயே இவர்கள் அப்பெயரைத் தரிக்கின்றனர். மூன்றாம் பிரிவினரான லேகாவலியினர் பிற மராட்டியரின் முறையற்ற தொடர்பின் வழிப் பிறந்தவர்கள். இவர்களுள் பலர் அரசரின் அரண்மனையில் ஏவலர்களாக உள்ளனர். இங்கு இவர்கள் மணிமக்களு எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் தங்களைக் கோர்படேக்கள் என அழைத்துக் கொள்வதோடு தாங்கள் அரசரின் கோத்திரத்தைச் (கனிஷ்க கோத்திரம்) சேர்ந்தவர்கள் எனவும் கூறிக் கொள்கின்றனர். எனவே இவர்கள் தங்களுக்குள் மண உறவு செய்து கொள்ள இயலாது. இந்தப் பிரிவினைச் சேர்ந்த பெண்களும் முகத்திரை அணிவதில்லை.''*

மராட்டியர்களின் தலையின் அமைப்பினைப் பின்வரும் அட்டவணை தெளிவுறுத்தும். கன்னடியர்களைப் போல இவர்கள் செங்குத்தான பக்கமுடைய அல்லது சற்றே குறுகிய அமைப்புடைய மண்டை ஓட்டினைப் பெற்றுள்ளனர்.

		தலை நீள அகலங்களுக்கு இடையேயான விகித எண் சராசரி	விகித எண்ணிக்கை மேலளவு
கன்னடியர்	50 உறாலையர்	79.1	87.4
மராட்டியர்	30 ரங்காரியர்	79.8	92.2
கன்னடியர்	50 வக்கலிகள்	81.7	93.8
மராட்டியர்	30 சுக சாலேயர்	81.8	88.2
மராட்டியர்	30 சுகூசாலேயர்	82.2	84.4

* பெல்லாரி மாவட்ட விவரக் குறிப்புGazeteer of the Bellary District.

மறவர் : Maravar

''மறவர்கள் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றனர். இம் மாவட்டங்களில் கன்னியா குமரியிலிருந்து இராமநாதபுரம் சமீன் எல்லைவரை உள்ள பகுதிகளில் இவர்கள் வாழ்கின்றனர். இராமநாதபுரம் சமீனும், அளவில் பெரியதான சிவகங்கைச்சமீனும் இந்தச் சாதியினைச் சேர்ந்தவர்களுக்கே உரிமையுடையதாயுள்ளன. தென்னகத்தில் சென்று முதலில் குடியேறிய திராவிடப் பழங்குடிகளுள் மறவரும் ஒருவராதல் வேண்டும். கள்ளரைப் போலவே இவர்களும் பிராமண நெறியின் தாக்கத்திற்கு உள்ளாகாதவர்களாக இருந்துள்ளனர். இராவணனுக்கு எதிரான போரில் இவர்கள் இராமனுக்குச் செய்த உதவியினைத் தெய்வமான இராமன் ''மறவேன்'' எனக் கூறிப் பாராட்டிய போதிலிருந்து இவர்கள் பெயர் மறவர் என வழங்கி வருவதாக இவர்களிடையே ஒரு வழக்கு உள்ளது. இவர்கள் மேற்கொண்டுள்ள அயலாரைக் கொல்லுதல், கொள்ளையடித்தல் ஆகிய தொழில்களோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது இச்சொல் கொலை, ஆற்றல், வீரம் எனப் பொருள்படும் மறம் என்ற சொல்லின் அடியாகப் பிறந்திருத்தல் கூடும் என்பதே பொருத்தமுடையதாகப்படுகின்றது. முன்பு இவர்கள் போர் ஆற்றலுக்குப் பெயர்போன வீரமிக்க இனத்தவர்களாக இருந்துள்ளனர். ஒரு சமயம் பாண்டிய நாட்டின் அரசுரிமையைக் கூடப் பெற்றிருந்தவர்களாக இவர்கள் இருந்துள்ளனர். பின்னர் இவர்களது படைப்பிரிவு, திருமலை நாயக்கனுக்குப் பேருதவி புரிந்துள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இவர்கள் ஆங்கிலேயருக்கு மிகுந்த தொல்லைகள் விளைவித்துள்ளனர். எனினும் தற்போது இவர்கள் மற்றச் சாதியினைச் சேர்ந்த பயிரிடுவோரைப் போல மாறிவிட்டிருப்பினும் மற்றவர்களை விட அஞ்சாமையும் சட்டத்தைப் புறக்கணிக்கும் பண்பும் உடையவர்களாகவே உள்ளனர். இவர்களுள் பலர் அகமுடையான், கள்ளன் என்பன தங்கள் சாதியின் உட்பிரிவு எனப் பதிந்துள்ளனர். மறவன் என்பது கள்ளன் சாதியின் உட்பிரிவுகளுள் ஒன்றாகவும் பதியப்பட்டுள்ளது.''கள்ளர், மறவர், அகமுடையார் ஆகிய சாதியார் தங்களுக்குள் மிக நெருங்கிய தொடர்புடையவர்கள் என்பதில் ஐயத்திற்கு இடமேதுமில்லை'' எனத் திரு எச். எ. ஸ்டுவர்ட் 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளார். இத்தொடர்பு பற்றிய விவரங்கள் கள்ளர் என்ற தலைப்பிலான கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பான பின்வரும் வழக்கு வரலாற்றுக் கதையினை இங்கு நான் எடுத்துக் காட்டுகிறேன். ''முன்னொரு காலத்தில் கௌதம முனிவர் வேறு பணித்

தொடர்பாகத் தம் குடிலை விட்டு வெளியேறிச் சென்றிருந்தார். இதனைத் தமக்கு நல்ல வாய்ப்பாகக் கருதிய தேவேந்திரன் அவர் தம் மனைவியினைக் கற்பிழக்கச் செய்தான். இதன் காரணமாக அவள் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். கௌதமர் திரும்பி வந்த போது அம் மூவருள் ஒருவன் கதவிற்குப் பின் மறைந்து கொண்டான். இவ்வாறு அவன் ஒரு கள்ளனைப் போல மறைந்து கொண்டமையால் அவன் அப்போதிருந்து கள்ளன் என அழைக்கப்பட்டான். மற்றொருவன் மரத்தில் ஏறிக் கொண்டதால் மறவன் எனப்பட்டான். மூன்றாமவன் அஞ்சாது நின்ற காரணத்தால் உள்ளத்தில் பெருமிதம் உடையன் என்ற பொருள்பட அகமுடையான் என வழங்கப்பட்டான். இப்பெயர் பின்னர் அகம்படியன் எனச் சிதைந்து விட்டது.''*

''சிலர் மறவன் என்ற சொல் பாலம் எனப் பொருள்படும் மறன் என்பதிலிருந்து வந்ததெனக் கூறுவர். மறவன் தெய்வத்தினைப் பற்றி அச்சம் அற்றவனாகவும் இரக்கம் அற்றவனாகவும் உயிர்களைக் கொல்வதால் இப்பெயர் பெற்றவனாதல் கூடும்.''@

இராமனுக்குப் படகு செலுத்திய குகனுடைய மரபில் வந்தவர்கள் என மறவர் கூறிக்கொள்கின்றனர். கதை வழக்குப்படி இராமன் குகனிடம் குறிப்பிட்ட ஒரு நாளில் திரும்பி வருவதாகக் கூறியிருந்தான். அவ்வாறு இராமன் வராமையால் விழுந்து உயிர் துறக்கக் குகன் நெருப்பினை மூட்டினான். அனுமான் இராமன் விரைவில் திரும்புவான் எனக்கூறி அவனை உயிர் துறவாமல் காப்பாற்றினான். இச்செய்தியினைக் கேள்விப்பட்ட இராமன் குகனுடைய துணிவினையும் அஞ்சா மையினையும் பாராட்டும் வகையில் அவனை மறவன் என அழைத்தான். மற்றொரு கதை வழக்குப்படி அகல்யாவின் அழகில் மோகங்கொண்ட இந்திரன் ஒரு காக்கையின் உருவில் அவள் கணவரான கௌதமர் தங்கியுள்ள குடிசையருகே சென்று அமர்ந்து உரக்கக்கத்தினான். பொழுது புலரப் போகின்றது எனக் கருதிய கௌதமர் குளிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்றவுடன் இந்திரன் கௌதமரைப் போல உருவந்தாங்கி அக்குடிசையில் நுழைந்து தன் காம இச்சையைத் தீர்த்துக் கொண்டான். கௌதமர் ஆற்றை அடைந்த போது பொழுது புலர்வதற்கான அறிகுறிகள் எதனையும் காணாமையால் கலக்கமுற்றவராகத் தம் ஞானப் பார்வையால் தாம் ஏமாற்றப்பட்டுள்ளதை உணர்ந்து தன் குடிசைக்குத் திரும்பி இந்திரனுக்கும் அப்பாவியான அகல்யாவிற்கும் சாபமிட்டார். இந்திரன்

* Madras Review, 1899

@ F. Fawcett. Jour., Anthrop. Inst. XXXIII, 1903

அவன் உடல் முழுவதும் ஆயிரம் பெண்குறிகள் தோன்றும் படியாகச் சபிக்கப்பட்டான். அகல்யா கல்லாகும்படி சாபம் பெற்றாள். தன் தவறுக்கு இந்திரன் வருந்தி மன்னிப்பு வேண்டியபோது மற்றவர்களுக்கு அவன் உடம்பில் உள்ள குறிகள் கண்கள் போலத் தெரியும்படியாகச் சாபவிமோசனம் அருளியதோடு அகல்யாவிற்கு இராமன் காலடிபட்டு மிதிபடுங்கால் கல்லுருவம் நீங்கப் பெறுவாள் எனவும் சாப விமோசனம் அருளினார். இந்திரனுடைய இந்தச் செயல் காரணமாகப் பிறந்த ஒரு பிள்ளை மறைவிடத்தில் வைக்கப்பட்ட காரணத்தால் அவன் வழிவந்தவர்கள் மறவர் எனப்பட்டனர். *

மறவர்கள் தலைவன் இராமநாதபுரம் அரசரான சேதுபதியாவார். ''சேதுபதியின் பரம்பரையான இராமநாதபுரம் மறவர் குலத்தவர்கள் தங்கள்குலம் மிகத் தொன்மையானதெனக் கூறிக் கொள்கின்றனர். மக்களிடையே வழங்கும் வழக்கு வரலாற்றுப்படி இக்குலத்தவர் இராமபிரான் காலத்திலேயே வாழ்ந்தவர்களாவர். இலங்கையை வெற்றிகொண்டு திரும்பிய இராமன் இலங்கையினைத் தலை நிலப்பகுதியோடு இணைக்கும் பாலத்தைப் பாதுகாத்துவர எழுவரை நியமித்தான்....இக் குடும்பம் கி. மு. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டளவில் தோன்றியதாதல் வேண்டும் எனக் கூறுவாரும் உளர். இவர்கள் மகாவம்சத்தை ஆதாரமாகக் கொண்டு இவ்வாறு கூறுகின்றனர். கி.பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டளவில் ஏழு படைத் தலைவர்கள் தலைமையில் மும்முறை தமிழர்கள் இலங்கை மீது படையெடுத்தனர் என மகாவம்சம் கூறுகின்றது. தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான இந்த தொடர்புகள் பற்றிப் பாண்டியர் ஆவணங்கள் எதுவும் கூறவில்லை. இப்படையெடுப்போடு சேர, சோழ பாண்டியர்கள் தொடர்புடையவர்களாக இருந்தார்கள் என்பதற்கான சான்றுகளும் இல்லையாதலால் இலங்கையை அடுத்திருந்த நிலப்பகுதியில் வாழ்ந்த நிலவெறி கொண்ட படைத் தலைவர்களே இதனை மேற்கொண்டவர்களாதல் வேண்டும் எனக் கொள்ளலாம்.... இக்குடும்பம் கி.பி பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டினில் தலையெடுத்தது ஆதல் வேண்டும் எனக் கூறுவோரும் உளர். இருவேறு கருத்துக்கள் இதுபற்றிக் கூறப்படுகின்றன. சோழ மன்னனான இராசராசன் கி.பி. 1059 வாக்கில் இலங்கையை வெற்றிகொண்டபின், தன் நம்பிக்கைக்குரியவர்களும் தான் பாண்டியரை வெல்ல உதவிய வர்களுமான இளவரசர்களைத் தன் படை ஈழத்திற்குச் செல்லும்

* F. Fawcett, Loc. Cit.

வழியாகவும் படை வீரர்களுக்குப் பண்டங்கள் சென்று சேரும் வழியாகவும் உள்ள தலைநிலப்பகுதியின் காவலர்களாக அமர்த்தினான் என்பது ஒரு கருத்தாகும். சிங்களவர் ஆவணங்களின் அடிப்படையிலான மற்றொரு கூற்றுப்படி பராக்கிரமபாகுவின் படைத்தலைவனான லங்கபுரனே இக்குலத்தின் முதல்வனாவான். மகாவம்சத்தில் விவரிக் கப்பட்டுள்ள ஒரு வரலாற்றின்படி அவன் பாண்டிய நாட்டை வென்று அடிமைப்படுத்திய பின் கொஞ்ச காலம் இராமேசுவரத்தில் தங்கி இருந்தவனாக அங்கு ஒரு கோயிலைக் கட்டினான். அவன் அத்தீவில் சிங்களவர்கள் வெளியிட்டு வந்த காசுகளை ஒத்ததான காகபணம் எனப்படும் நாணயங்களையும் வெளியிட்டான். இக் கருத்துக்களில் நாம் எதனைச் சரியானதென ஏற்றுக் கொண்டாலும் சேதுபதிகள் குலம் பதினொன்று அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது என்பதற்கு அது ஆதாரமாகும். முனைவர் பர்கெஸ் அவர்கள் தொகுத்த கல்வெட்டுகளிலிருந்து திரு ராபெர்ட் செவெல்* எடுத்துக் காட்டுகளில் கி.பி. 1414 ஆம் ஆண்டிலும், மீண்டும் கி.பி. 1489ஆம் ஆண்டிலும், மறுபடியும் கி.பி. 1500 ஆம் ஆண்டிலும், மீண்டும் இறுதியாகக் கி.பி. 1540ஆம் ஆண்டிலும் சேதுபதி இளவரசர்கள் இறையிலாக் கொடைகள் வழங்கியுள்ளமையைக் குறிப்பிட்டுள்ளார். இவை 1604 ஆம் ஆண்டில் முத்து கிருஷ்ணப்ப நாயக்கன் சேதுபதிகள் நாட்டில் நிலைமை சரியில்லாததை உணர்ந்து பழைய குடும்ப மரபினைச் சேர்ந்த சடையக்க தேவர் உடையார் சேதுபதியினை மீண்டும் சேதுபதியாக அமர்த்தியதற்கு முந்தைய இரண்டு தலை முறைகள் வரையானதொரு தொடர்ச்சியினைப் புலப்படுத்துவனவாக உள்ளன. சேதுபதிகள் வெளியிட்ட நாணயங்கள் முற்காலத்தவை பிற்காலத்தவை என இருவகைப்பட்டனவாக உள்ளன. முற்காலத்திய நாணயங்கள் அளவில் பெரியனவாகவும் நயம்பட வார்க்கப்பட்டனவாகவும் உள்ளன. இவை அளவிலும் தோற்றத்திலும் நன்கு அறிமுகமானவையான சிங்களவர் நாணயங்களைப்பெரிதும் ஒத்தவை. " இந்த நாணயங்கள் பராக்கிரமபாகுவின் படைத்தலைவனான லங்கபுரனால் வெளியிடப்பட்டவையெனச் சுட்டப்பட்டுள்ளதுஎனரஹிஸ் டேவிட்ஸ் குறித்துள்ளார்.® பிற்காலத்திய நாணயங்கள் அமைப்பிலும் அக்கத்திலும் நயமற்றனவாக உள்ளன. அவற்றின் ஒரு பக்கம் மட்டும் தமிழில் சேதுபதி என்ற முத்திரைச் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. மற்றொரு பக்கம் பலவகை உருவங்களைப் பெற்றனவாக உள்ளன' என் மறைத்திரு. ஜெ.இ.டிரசி சேதுபதிகள் குலத்தின் தோற்றம் பற்றிக்

* Sketch of the Dynasties of South India.

® Rhys Davids - Nusismata Orient. Ancient coins and Measures of ceylon.

கூறியுள்ளார்.[0]

பழங்காலத்தைச் சேர்ந்த புலவர் ஒருவர், [@] ''தறுகண்ணும் செயலாண்மையும் மிக்க மறவர்களைப் பற்றிக் குறித்துள்ளார். கலைமானின் முறுக்கேறிய கொம்புகளை ஒத்த தாடியும், வல்விரைந்து ஒலிக்கும் நாண்கள் பூட்டிய விற்களையும், அதிரும் இருபக்க முரசங்களையும் உடைய இவர்கள் அரசனின் படையினைக் கூடப் புறங்காட்டி ஓடச் செய்யும் ஆண்மை மிக்க மறவர்கள்.'' மறவர்களைப் பற்றி மேலும் ''வலிமை சான்ற கால்களும் உறுதி வாய்ந்த உடலும், புலியினை ஒத்த பார்வையும் கொண்டு முறுக்கேறிய தாழ்ந்த தலைமுடியினையும் உடைய குருதி வெறிகொண்ட தோலால் பிணைக்கப்பட்ட வில்லேந்திய மறவர் எப்பொதும் பாதுகாப்பற்ற ஆறு செல் வம்பலர் மீது அம்பெய்து அவர்களிடம் கொள்ளும் பொருள் ஏதும் இல்லையாயினும் அவர்கள் உடல் துள்ளி மடிவதைக் கண்டு மகிழக் காத்திருப்பர்.''[+] எனக் கூறப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டக் கையேட்டில்[*] மறவர்களைப் பற்றிய ஒரு குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: ''பாளையக்காரர்களுள் பெரும்பாலோர் இந்தச் சாதியினைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்களுள் சிலர் கப்பங்கட்டும் வட்டாரத் தலைவர்கள். சென்ற நூற்றாண்டிலும் இந்த (பத்தொன்பதாம்) நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆங்கிலேயர்களோடு திருநெல்வேலியின் உரிமைக்காக இந்தப் பாளையக்காரர்களும் வட்டாரத் தலைவர்களுமே வாதிட்டு முரண் கொண்டிருந்தவர்கள். அஞ்சாமையும், செயலாண்மையும், துணிவும்,சூழ்ச்சியும், ஏறுமாறான போக்கும் கொண்ட மறவர்களுக்கு இந்தப் பாளையக்காரர்களும் வட்டாரத் தலைவர்களும் தலைமை தாங்கி நடத்தி வந்தனர். அமைதியாகப் பயிர்த்தொழிலில் ஈடுபட்டு வந்த வேறு சிலருக்குக் கலவரமும் போராட்டமும் மிகுந்த சமயத்தில் அதிகாரம் பெற்ற, அமைதிகாக்கும் நடுவண் ஆட்சி இல்லாத காலக்கட்டத்தில் பாதுகாப்புத் தரும் காவலர்களாக இந்த வீர மிக்க மறவர்கள் விளங்கினர். இதன் அடிப்படையிலேயே, தேசக் காவல், ஸ்தலக் காவல் என்ற கொள்ளையரிடமிருந்து ஊர்களையும் திருட்டிலிருந்து மக்களையும் பயிர் நிலத்தையும் பாதுகாக்கும் அமைப்புகள் தோன்றின. வட்டாரத் தலைவர்கள் தம் கோட்டையைச் சுற்றியுள்ள ஊரார்களை ஆயுதம் ஏந்திய கொள்ளையரிடமிருந்து

[0] Madras Journ. Lit. Science 1890

[@] கலித்தொகை

[+] Kanakasabhai Pillai The Tamil, Eighteen Hundred Years age, 1904.

[*] Manual of the Tirunelvelly District, 1879.

காப்பாற்ற ஒரு குறிப்பிட்ட தொகையினைப் பெற்று வந்தனர். மறவர்கள் செல்வர்களான உழவர்களின் கீழ் பயிர்த்தொழில் செய்யும் கூலிகளாகவோ, குத்தகைதாரர்களாகவோ பணியாற்றி அதற்கு ஈடாக விளைச்சலில் ஒரு பகுதியினைப் பெற்று வந்தனர். இப்பொழுது இந்தச் சாதியாருள் பெரும்பாலோர் முதலில் நிலவுடைமைக் குரிமையுடையவர்களாக இருந்த நிலக்கிழார்களிடமிருந்து நிலத்தை விலைக்குப் பெற்றுப் பயிரிடும் ராயத்துவாரி நில உரிமை பெற்றவர்களாகப் பயிரிட்டு வருகின்றனர்''.

மறவர்கள் பொதுவாகப் பயிர்த்தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் இவர்களுள் சிலர் மாநிலத்திலேயே பெயர்போன கால்நடைத் திருடர்களாக உள்ளனர். கால்நடைகளை கவர்ந்து செல்ல இவர்கள் மதுரை வட்டாரத்தில் புதுமையானதொரு வழியினைக் கையாளுகின்றனர். இரவில் எருதுகளைத் திருடுபவன் அவற்றை ஆறேழு மைல் தூரம் வேகமாக ஓட்டிச் சென்று அங்குக் காத்திருக்கும் கூட்டாளியிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பி வந்து தன்னை யாரும் சந்தேகிக்க இயலாதபடி தன் வீட்டில் தங்கிவிடுகின்றான். அவன் கூட்டாளியும் இவனைப் போலவே அவற்றைக் குறிப்பிட்ட தொலைவு ஓட்டிச் சென்று வேறு ஒருவனிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பிவிடுவான். இவ்வாறாக மூன்றாவது நான்காவது கூட்டாளிகளும் அந்த எருதுகளை இரவு முழுக்கக் கடத்தியபடி இருப்பர். மறுநாள் அவற்றை ஓய்வெடுக்கும்படியாக மறைவான ஓரிடத்தில் கட்டிப்போடுவர். அதன்பின் அவற்றை மெதுவாக மதுரைக்கு வடக்கே உள்ள மலைகளுக்கு அப்பால் ஓட்டிச் செல்வர். அவற்றை அடையாளம் கண்டுகொள்ளாதபடி அங்குக் கொம்புகளை அறுப்பதோடு அடையாள முத்திரையையும் மாற்றுவர். பின்னர் மதுரை நகரில் நடைபெறும் சித்திரைத் திருவிழாக் கால்நடைச் சந்தையில் அவற்றை விற்பர். 1899ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் தேதியிடப்பட்ட அரசு ஆணை எண் 535-இல் கண்டுள்ள குறிப்பின்படி 1891-ஆம் ஆண்டுக்கான மக்கள் கணக்கெடுப்பில் திருநெல்வேலி மாவட்டத்தில் மறவர்கள் 10 விழுக்காட்டினராக உள்ளனர் எனினும் முந்தைய ஐந்து ஆண்டுகளில் நிகழ்ந்த வழிப்பறிக் கொள்ளைகளில் 70 விழுக்காட்டினை இவர்களே நிகழ்த்தியுள்ளனர் எனத் தெரியவருகின்றது. அந்த மாவட்டத்தில் அண்மையில் (1899) நிகழ்ந்த சாணருக்கு எதிரான கிளர்ச்சியில் இவர்கள் தீவிரமான பங்கேற்றுள்ளனர்'' எனத் திரு பிரான்சிஸ் 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறியுள்ளார். (பார்க்க : சாணார்).

திருநெல்வேலி மாவட்டத்தில் கிராமத்துக் காவலர்கள் பொறுப்பு முழுவதனையும் மறவர்களே வகிக்கின்றனர். அம்மாவட்டத்தில் திருடர்களும் கொள்ளையரும் மறவர்களே. பெரும்பாலும் ஒருவனே திருடனாகவும் காவல்காரனாகவும் செயல்பட்டக் காணலாம். காவல் முறையினை ஏற்படுத்திய பாளையக்காரர்களின் கீழ் பணியாற்றி இவர்கள் முன்னோர்கள் பெற்றிருந்த அதிகாரங்களில் ஒரு சிறிதளவே இன்றைய மறவர்கள் பெற்றுள்ளனர் எனினும் நல்ல உடல் வலிமையும் துணிவும் கொண்டவர்களாகக் கொள்ளையரும் திருடரும் காவலரும் துப்புத் துலக்குவோருமாகச் செயல்படும் இவர்கள் மாவட்டத்தில் எண்ணிக்கையில் பெரும்பான்மையோராக உள்ள இம்மறவர்கள் இப்பகுதில் மிகுந்த செல்வாக்கு உடையவர்களாகவே உள்ளனர் எனத் திரு முல்லலி கூறியுள்ளார்.*

1903ஆம் ஆண்டு சென்னை மாநிலக் காவல் துறை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: 'திருநெல்வேலியினைச் சேர்ந்த மறவர்களுள் பெரும்பான்மையோர் இயல்பிலேயும் பழக்கத்தின் காரணமாகவும் குற்றம் புரிவதில் நாட்டம் உடையவர்களாக உள்ளனர். திரு. லாங்டென் தொன்றுதொட்டு வந்ததான இந்தப் பழக்கத்தை மாற்ற முற்பட்டார். இந்த முயற்சியில் அவர் மறவர்களையே காவலர்களுக்குத் துப்புத் துலக்குவதில் உதவியாளர்களாக அமர்த்திக் கொண்டார். பொய்ச் சான்றுகளும் பொய் வழக்குகளும் இதன் காரணமாக மிகலாயின. இதனால் காவல்துறை மறவர்களுக்குக் கடன்பட்டதாக வேறு ஆகிவிட்டது. இதனால் துப்புத்தரும் மறவன் ஒருவன் குற்றத்தை மற்றவன் மேல் சுமத்துவான் என்பதிலும் ஐயமில்லை. இந்த முறை கைவிடப்பட்டபின் காவல் நிலைய அலுவலர்கள் துப்பு கூறுபவர்களின் உதவி இல்லாத காரணத்தால் தக்க மாற்று ஏற்பாடுகள் செய்யும்வரை குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் திணறவே செய்தனர். அவர்களால் வெற்றிகரமாகச் செயல்பட இயலவில்லை. காவலர்கள் மறவர்களின் தயவை நம்பி இருப்பதைக் காட்டிலும் இது போலக் குற்றங்களைத் துப்பு துலக்க இயலாமல் போய்விடுவது பெருந்தீங்கானது என்று கூறுவதற்கில்லை.'' துப்புக் கூலி, துப்பு ஆட்கள் பற்றிய பிற தகவல்கள் கள்ளர் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

---

* சென்னை மாநிலக் குற்ற வகுப்பார் பற்றிய குறிப்புகள்
Notes on Criminal Classes of the Madras Presidency.

திருநெல்வேலியினைச் சேர்ந்த மறவர்களைப் பற்றிய குறிப்பு ஒன்றிலிருந்து[*] பின்வரும் சுவையான தகவல்கள் திரட்டித் தரப்படுகின்றன: '' ஒரு திருடனைப் பிடிக்க இன்னொரு திருடனை அமர்த்துதல் என்ற கொள்கையின் அடிப்படையில் திருட்டில் ஈடுபடாமல் இருப்பதற்காகவும் திருடப்பட்டவை மீட்கப்படுவதற்காகவும் மறவர்களுக்குக் காவல் கூலி என்ற பெயரால் பொருள் வழங்கப்படுகின்றது. (குடிகாவலுக்காகத் தொகையினைப் பெற்றுக் கொண்டிருந்தும் திருட்டில் இழந்த பொருளை மீட்டுத்தரவில்லை எனக் கூறி முன்சீப் கோர்ட்டில் வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவருகின்றது.) உண்மையைச் சொல்லப்போனால் பெரிய அளவிலான திருட்டு எதுவும் காவல்காரர்களுக்குத் தெரியாமலும் அவர்கள் உள்ளில்லாமலும் உதவி செய்யாமலும் நடக்க இயலாது எனலாம். நகரங்களுக்குப் புறத்தே நாட்டுப்புறங்களில் வாழ்பவர்கள் முழுதும் மறவர்களின் தயவை நம்பியே வாழ வேண்டியவர்களாக உள்ளனர். வீடுகள் எனப் பெருமைப்படக் கூறப்படும் மண் குடிசைகளில் வாழும் ஒவ்வொருவரும் மறவர்களுக்கு ஆண்டுக்கு அரைப்பணம்- ஓரணா-எட்டுக்காசு- தரவேண்டும். கால்நடைகள் வைத்திருப்பவர்கள் (பெரும்பாலானவர் கால்நடைகள் வைத்திருப் பவர்களே) ஆண்டுக்கு ஒரு பணம் தரக் கடமைப்பட்டவர்கள். அறுவடைக்குக் காத்திருக்கும் பயிரினை ஒருவனுடைய எதிரிகள் அவனுடைய விளைநிலத்தில் புகுந்து அறுத்துச் சென்று விடுகின்றதான ஒரு பழக்கம் தென்னிந்தியாவில் நடைமுறையில் உள்ளது. தனது எதிராளிக்குத் தன் எதிர்ப்பினைக் காட்டவும், அவனை வழிக்குக் கொண்டு வந்து தகராறில் ஒரு நியாயமான அல்லது மாறான ஏதாவது ஒரு உடன்பாட்டினை எட்டவும் இந்த வழியினை மேற்கொள்கின்றனர். ஒருவன் ஒரு பொருளைத் தனது உடைமையாகப் பாவித்து வருவது சட்டத்தை அவன் பங்கில் கொண்டு நிறுத்த உதவுவதாகும். அடிக்கடி இத்தகைய அத்துமீறல்கள் நிகழ வாய்ப்புகள் உள்ளதால் காவல்காரர்களின் உதவி இன்றியமையாததாகின்றது. பெறும் கூலிக்கு நன்றி பாராட்டும் கடமையுணர்வுடையவர்கள் மறவர்கள். சில சமயங்களில் யார் அதிகம் கூலி தருகின்றார்களோ அவர்கள் சார்பாகவும் செயல்படுவர். ஓர் ஊரில் நூறு மறவர்கள் இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் பத்துக் குழுக்களாகத் தங்களைப் பிரித்து வைத்துக் கொண்டவர்களாக ஒவ்வொரு பிரிவும் ஊரில் ஒரு குறிப்பிட்ட பகுதியில்

[*] Tirunelvelly, being an account of the district, the people and the missions. Mission Field, 1897.

காவல் பொறுப்பினை மேற்கொள்ளும். அப்பகுதி எல்லையில் வாழும் ஊரார் அவர்களுக்கு உரிய காவல் கூலியினைத் தருவர். ஒரு திருட்டு நிகழுமாயின் திருடப்பட்ட பொருளின் மதிப்புப் பத்து உரூபாய்க்கு மேற்படாததாக இருந்தால் அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் பத்து பேரும் தலைக்கு ஒரு ரூபாய் போட்டுத் திருட்டுக் கொடுத்தவருக்கு ஈட்டுத் தொகையாக வழங்குவர். திருட்டுப் போன பொருளின் மதிப்பு பத்து ரூபாய்க்கு மேற்பட்டதாக இருப்பின் பத்துப் பிரிவுகளையும் சேர்ந்த நூறு மறவர்களும் திருட்டுப் பொருளுக்கான ஈட்டுத்தொகையினைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டு தருவர். இதனை இவர்கள் இவ்வாறு ஈடுசெய்ய இவர்களுக்கு எப்படிக் கட்டுபடி ஆகின்றது என்பது நமக்குப் புரியாமலில்லை. இந்தக் குடிகாவல் முறையினை ஒரு முடிவிற்குக் கொண்டுவரச் சென்ற பல ஆண்டுகளாகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மறவர்கள் பெரும்பான்மையினராக வாழும் ஊரான நாங்குனேரி தீயிட்டுக் கொளுத் தப்பட்டது. காவல் துறையினர் பல ஆண்டுகளாக அவர்களைத் தேடித்திரிந்தனர். பலர் அடிக்கடி தண்டனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். மாவட்டத்தில் வாழும் 150,000 மறவர்களுள் 10,000 பேர் திருட்டையே தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களுள் 4000 பேர் தண்டனைக்குள்ளானவர்களாக வாழ்ந்து வருகின்றனர். இத் தொழிலை மேற்கொண்டுள்ள இவர்களை நல்வழிப்படுத்த ஏதேனும் வழி காணுதல் இயலுமா என்பதும் சிந்திக்கப்பட்டது. இவர்கள் பார்க்கும் காவல்காரர்கள் பணியினை அரசு அங்கீகரிக்க வேண்டும் எனவும், இவர்கள் கீழ்நிலை சார்ந்த பணியாளர்களாகப் பட்டியல்படுத்தப்பட்டுத் தற்போது தலையாரிகளாகவும், வெட்டியான்களாகவும் பணிபுரிபவர்களை ஒப்ப நடத்தப்படவேண்டும் எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன .....மறவர்கள் வாழும் ஊர்கள் பிற சாதியார் வாழும் ஊர்களை அடுத்தடுத்து உள்ளன. சிறுவர்களாகவும், சிறுமிகளாகவும் இருக்கும் சமயத்தில் அனைத்துச் சாதியினரும் ஒன்றாகக் கலந்து பழகியவர்களாக வளருகின்றனர். இதன் காரணமாக இவர்களிடையே ஓர் ஒட்டுறவும் பரிவுணர்வும் காணப்படுகின்றன. இதனால் யாரும் அச்சங் கொண்டவர்களாகவும் காணப்படவில்லை. நினைவுக்கு எட்டாத காலந்தொட்டு இவர்களுக்கு மாமூலாக ஒரு தொகை கொடுப்பது வழக்கமாக இருந்து வருகின்றது. இது சட்டத்திற்கு முரணானதாயினும் இந்தியாவில் வழக்கத்தைப் பின்பற்றுவதிலே அனைவரும் விருப்பமுடையவர்கள். இவ்வாறு ஆண்டுக்கொரு முறை கொடுக்கப்படும் சிறுதொகையினை யாரும் பெருஞ்சுமையாகக் கருதுவதில்லை. இவ்வாறு கொடுப்பதால் தங்கள் பொருளுக்குப்

பாதுகாப்பாக அது அமைகின்றதென இவர்கள் நம்புகின்றனர். மறவர்கள் திருடுவதில்லையாயினும் திருட்டில் ஈடுபட்டவர்களாக அலைந்து திரியும் (குளுவர், குறவர், கம்பளத்தார் போன்றோர்) பிற சாதியார்கள் இருக்கவே செய்கின்றனர். நாகரிகமற்றவர்களாக நாட்டுப் புறத்தில் திரியும் இவர்கள் திருட்டில் மறவர்களுக்கு நிகரானவர்களே. காவல் காரர்களான இந்த மறவர்கள் தீவட்டிக் கொள்ளைக்காரர்களாகவும் வழிப்பறிக்கொள்ளைக் கூட்டத்தினராகவும் மாறும் போது இவர்களைப் பிற நாடுகளில் காணப்படும் கொள்ளையரில் எவ்வகையிலும் மேம்பட்டவர்களாகக் கருத முடியாது. இச்செயலில் ஈடுபடும் இவர்கள் எத்தகைய கருணைக்கும் உரியவர்களாகார். கொள்ளையடித்தலே மறவர்களின் பரம்பரைத் தொழில் என்றாலும் இவர்களுள் பல்லாயிரவர் நேர்மையானவர்களாக உழைத்து வாழ்க்கை நடத்தியவர்களாகக் குடிகாவல் முறையோடு எத்தகைய தொடர்பும் வைத்துக் கொள்ளாது வாழ்ந்து வருகின்றனர். குறிப்பிடத்தக்க இந்தியக் கிறித்தவர்களுள் இச் சாதியினைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் சிலர் உள்ளனர். இதற்குக் காரணம் இவர்கள் எச்செயலில் ஈடுபட்டாலும் அதில் முழுமனதுடன் ஈடுபட்டு நிறைவேற்றுவதுதான். கொலைகாரர்களாகவும், கொள்ளை யராகவும் செயல்படும் போது அஞ்சாது அதில் ஈடுபாடு கொள்வதைப் போலவே நேர்மையான வாழ்க்கையை மேற்கொள்ளும் போதும் முழுக்க முழுக்க நேர்மையாளர்களாக இருந்து விடுவதான அவர்கள் அத்தகைய நேர்மையாளர்களாக இருக்கக் காரணமாகின்றது.'' ஒரு மறவன் அந்நியன் ஒருவனுடைய வீட்டில் உணவு உண்ண நேர்ந்தால் உண்ணத் தொடங்கு முன் சிறிது மண்ணினை எடுத்து சோற்றில் போட்டுக் கொள்வான் என எனக்குத் தகவல் தெரிவித்துள்ளனர். தனக்கு உணவு அளிக்கும் குடும்பத்தினருக்கு எத்தகைய தீங்கும் செய்யாது நன்றி பாராட்டும் கடப்பாட்டிலிருந்து அவ்வாறு மண்ணினை இட்டுக் கொள்வது அவனுக்கு விடுதலை தருகின்றது என்கின்றனர்.

மெக்கன்சி கையெழுத்துச் சுவடிகளிலிருந்தான மறவர் சாதிக் குலப்பிரிவு* என்ற தலைப்பிலான கட்டுரையில் கூறப்பட்டுள்ள செய்திகள் வருமாறு: - ''செம்பு நாட்டார், அகட்டகர், ஒரு நாட்டார், உப்புகட்டி, குறிச்சிகட்டு என்பன போலப் பெயர்கள் கொண்ட ஏழு உட்பிரிவுகள் மறவர்கள் சாதியில் உள்ளன. இந்த உட்பிரிவினருள் செம்பு நாட்டு மறவர்களே பெரும்பான்மையினர்.'' 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் மறவரின் முக்கியமான உட்பிரிவுகளாகப் பதியப்பட்டுள்ளவை வருமாறு: அகமுடையான், கள்ளன், காரணன்,

* Madras Journ Lit. Science IV, 1836

கொண்டை கட்டி, கொட்டாணி, செம்பநாட்டான், வன்னிக்குட்டி, செம்பு நாட்டார் உட்பிரிவிலுள் பின்வரும் குலப் பிரிவுகள் (கிளைகள்) இடம் பெற்றுள்ளன.

மரிக்கா	தணிச்சா
பிச்சா	கருபுத்ர
தொண்டமான்	கட்ரா
சீத்ரம	

கொண்டையங்கட்டி மறவர்களின் உட்பிரிவுகள் பற்றித் திரு எப். பாவ்வெட் எழுதியுள்ளதாவது:* "இவர்கள் ஆறு உட்பிரிவுகளாக அல்லது மரங்களாகப் பிரிவுபட்டுள்ளனர். மரம் அல்லது கொது ஒவ்வொன்றும் மேலும் மூன்று கிளைகளாகப் பிரிவுபட்டுள்ளது. இப்பிரிவுகளைக் குலங்கள் என நான் கொள்கின்றேன். ஒரு மரத்தினை அல்லது கொதுவினைச் சேர்ந்த கிளையினர் தங்களுக்குள் மண உறவு ஏதும் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. ஓர் ஆணோ, பெண்ணோ தன் சொந்த மரத்தினைவிட்டு வேறொரு மரத்தினைச் சேர்ந்த கிளையினரோடு தான் மணஉறவு கொள்ளலாம். அவ்வாறு மணஉறவு கொள்வதற்குரிய கிளை அவர்களுடைய தாயாரின் கிளையாக இருக்கலாமேயன்றித் தந்தையின் கிளையாகக் இருக்கக்கூடாது. ஒரே மரம் அல்லது கொதுவினைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் மணஉறவு மேற்கொள்வதும் அனுமதிக்கப்படுவதில்லை. இது தொடர்பாகச் சில கட்டுப்பாடுகள் உள்ளன. உதாரணமாக வெற்றிலைக் கொடிக் கிளையினைச் சேர்ந்த ஒருவன் தென்னங் கிளையினைச் சேர்ந்த ஒருத்தியினை மணக்கலாமேயன்றிக் கமுக்கம் பிரிவினையோ ஈச்சம் பிரிவினையோ சேர்ந்தவர்களை மணத்தல் கூடாது. இத்தகைய கட்டுப்பாடுகள் அனைத்தும் பற்றி நான் உறுதியாக எதுவும் கூறுவதற்கில்லையெனினும் ஒரு மரப் பிரிவினைச் சேர்ந்தவன் பிற எல்லா மரப் பிரிவினரோடு எத்தகைய வரையறையுமின்றி உறவு கொள்ளுதல் இயலாது என்பதனை மட்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

* Jour.Anthrop Inst. XXXIII, 1903

மறவர்களைப் பற்றிய பாடல்களைக் கொண்டதான நம்பத் தகுந்த ஒரு நூலில் மறவர்களின் மரங்கள் (கொதுவுகள்), கிளைகள் பற்றிக் கூறப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:

மரம்	கொதுவு	கிளைகள்
மிளகு	மிளகுக்கொடி	வீரமுடிதாங்கினான் சேதர் சேமந்தர்
வெற்றிலை	வெற்றிலைக்கொடி	அகத்தியர் மறுவீடு அழகிய பாண்டியன்
தென்னை	தென்னை	வாணியன் வேட்டுவன் நடைவேந்தர்
கமுகு	கமுகு	கேள்நம்பி ஆம்புத்ரன் கௌதமன்
ஈச்சம்	ஈச்சம்	சடைச்சி சங்கரன் பிச்சிப்பிள்ளை
பனை	பனை	அகிலி லோகமூர்த்தி ஜம்புவர்

''இந்தக் கிளைகளின், பெயர்களின் பொருள்கள் அனைத்தையும் நான் கண்டு கூற இயலாதவனாக உள்ளேன் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அகத்தியர், கௌதமர் ஆகியவர்கள் பழங்காலத்து முனிவர்கள் என்பது அனைவரும் அறிந்த செய்தியாகும். வீரமுடிதாங்கினான் என்பது மன்னனின் முடியினை உடன்கொண்டு செல்பவன் எனத் தெரிகின்றது. அழகிய பாண்டியன் என்பது மதுரையைச் சேர்ந்த பண்டைப்பாண்டியரில் ஒருவனாதல் வேண்டும். அகிலி கௌதமரின் மனைவியாகிய அகலிகையைக் குறிப்பதாகலாம். லோக மூர்த்தி உலகத்தவனையும் ஜம்புவர் என்பது கரடி முகத்தோடு

குரங்குகளின் அரசனாக நெடுங்காலத்திற்கு முன் வாழ்ந்தவனையும் குறிப்பதாகலாம். பிராமணர்களிடையேயும் தென்னிந்தியாவைச் சேர்ந்த பிற சாதியினரிடையேயும் ஒருத்திக்குரிய கணவனாக வரிக்கத் தக்கவன் அவருடைய அன்னையின் உடன் பிறந்தவனோ அல்லது உடன் பிறந்தவன் மகனோ ஆவான். ஆனால் கொண்டையங்கட்டி மறவர்கள் இந்தப் பொது விதியினைப் பின்பற்றுவதில்லை. இவர்கள் பிரிவினைச் சேர்ந்த ஒருத்தியின் தாயோடு உடன்பிறந்தவன் அவள் கிளையினைச் சேர்ந்தவனாகக் கருதப்படுவதால் அவனை மணந்து கொள்வது இயலாது. எனினும் உடன் பிறந்தவர்களான ஆணும் பெண்ணும் ஒரே கிளையினைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களுடைய குழந்தைகள் வேறு வேறு கிளையினைச் சேர்ந்தவர்களாகையால் அவர்கள் இயலுமானால் தங்களுக்குள் மணஉறவு கொள்ளலாம்,கொள்ள வேண்டுவது கடமையும் ஆகும். ஒருத்தியோடு உடன் பிறந்தவனுடைய குழந்தைகள் அவனுடைய மனைவியினுடைய கிளையைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவதே இவ்வாறு அவர்கள் வேறு வேறு கிளையினராகக் கருதப்படுவதற்குரிய காரணமாகும். ஒருவன் தந்தையின் கிளையினைச் சேர்ந்தவளை மணக்கும்படியாக அடிக்கடி நேர்ந்து விடுவதோடு கூட அவ்வாறு மணஉறவு கொள்ள வாய்ப்பு இருப்பின் அதனை மேற்கொள்வது கடமையாகவும் வற்புறுத்தப்படுகின்றது. எனினும் உடன்பிறந்த சகோதரர்களின் குழந்தைகள் வேறு வேறு கிளையினராயினும் அவர்கள் தங்களுக்குள் மணஉறவு கொள்ள அனுமதிக்கப் படுவதில்லை. உடன்பிறந்த சகோதரர்கள் இருவர் ஒரே கிளையில் மணம் செய்து கொள்ளுதல் கூடாது என்பதே இதற்குக் காரணமாகும். மணஉறவில் முதற்கட்டமாக இவர்கள் மேற்கொள்ளும் நடைமுறை மணமகன் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் மணமகளாதற்குரியவள் இல்லம் சென்று மணமகளின் உடல்வாகின் பொருத்தத்தினை கண்டறிதலாகும். மணமகள் அகன்ற பாதங்களுடைய வளாகவோ கெண்டைக்கால் பருத்தவளாகவோ கழுத்தின் தோலில் இரண்டு மடிப்புகளுக்கு மேலிருப்பவளாகவோ இருத்தல் கூடாது. நெற்றிப் பொட்டின் மயிர்க்கற்றை குறுக்கு வாக்கில் வளர்ந்திருக்க வேண்டுவது மிக மிக இன்றியமையாத கூறாகும்.'' நெற்றியின் மேல் பாம்பின் தலையினை ஒத்ததாகச் சுழி அமைந்திருத்தல் தீங்கு தரும் அறிகுறியாகக் கருதப்படுகின்றது.

மறவர்கள் மேற்கொள்ளும் மணம் தொடர்பான மற்றுமொரு நடைமுறைப்படி மணமகன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உறவினர்களுடன் மணமகள் இல்லத்திற்குப் பனையோலையாலான பெட்டிக் கூடையில் பின்வருவனவற்றைக் கொண்டு செல்வர்:

5 கட்டு வெற்றிலை	7 கருப்பட்டி
21 படி அரிசி	21 மஞ்சள் துண்டு
7 தேங்காய்	மலர்கள், சந்தனம் முதலியன
70 வாழைப்பழம்	

மணமகள் வீட்டில் கூடியுள்ளவர்கள் இவற்றைத் தொட்டு வாழ்த்தியபின் இவற்றை மணமகளின் தந்தையிடம் தருவர். மண நாளன்று (அது இந்த நிகழ்ச்சியினை அடுத்த நான்காம் நாள் அமையும்) அதிகாலையில் குலதெய்வத்திற்குப் பொங்கலிட்டுப் படைப்பர். அதன்பின் மணமகனைப் பல்லக்கில் வைத்து மணமகள் இல்லத்திற்குத் தூக்கிச் செல்வர். அவனுக்கு மணமகளின் தந்தையோ உடன்பிறந்தவனோ வெற்றிலை வழங்குவான். தாலி கட்டும் நேரம் நெருங்கும் வரை மணமகள் வீட்டினுள்ளேயே இருப்பாள். அந்த நேரம் நெருங்கியதும் அவளுடைய தாய்மாமன் அவள் கண்களைக் கையால் மூடியபடி அவளை மணமகன் இருக்கும் இடத்திற்குத் தூக்கி வருவான். நான்கு பெண்கள் மணமக்களைச் சுற்றி வளைத்து நின்றவர்களாகத் தேங்காய் மூடிகளும் பணியாரமும் உள்ள தட்டினை மும்முறை தங்களுக்குள் கைமாற்றித் தருவர். பின்னர் மணமக்கள் அத் தட்டினுள் துப்புவர். அப்போது பெண்கள் உரக்கக் குலவையிடுவர். மணமக்களின் தாய்மாமன்மார் மணமக்கள் கைகளை இணைத்து வைக்கக் கூடியுள்ளவர்களின் உடன்பாட்டினைப் பெற்றபின் மணமகனுடன் பிறந்தவள் மணமகள் கழுத்தில் தாலி அணிவிப்பாள். கறுப்புப்பட்டு நூலில் கோக்கப்பட்ட வளையமே தாலியாகக் கட்டப்படுகின்றது. திருமணத்திற்குப் பின் பட்டு நூலாலான அத் தாலிக்குப் பதிலாகப் பொன்னாலான பாசிமணிகள் கோக்கப்பட்ட நூலினை அணிவர். திருமணச் சடங்கிற்காகவெனப் பட்டு நூல் தர்லியினை இரவலாகப் பெற்று அப்போதைக்கு அணிவிக்கும் வழக்கமும் உள்ளது. தாலி கட்டி முடித்தவுடன் மணமக்களை வாழ்த்துவர். சிலவிடங்களில் வெற்றிலையினைப் பாலில் தொட்டு மணமக்களின் முழங்கால், தோள், தலை ஆகியவற்றைத் தொட்டு, 'மணமக்கள் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி மூங்கில் போல் கிளை கிளைத்து வாழ்க ''என வாழ்த்தும் வழக்கமும் உள்ளது. அறுகம்புல்லினைப் பற்றி அதர்வண வேதம் கூறுவதாவது:'' தூறு வேர்களையும் நூறு கணுக்களையும் கொண்டதான உயிருக்கு நீராக விளங்கும் இந்தப் புல் என்னுடைய நூறு பாவங்களையும் போக்குவதோடு இந்த உலகில் நான் நூறாண்டுகள் வாழ உதவட்டும்.''

இவர்கள் மணச் சடங்குகளிடையே உள்ள வேறுபட்ட சில வழக்குகள் பற்றியும் பாவ்செட் கூறியுள்ளார். ''அத்தகைய ஒரு

வழக்கின்படி பிராமணப் புரோகிதர் மணமகன் உடன்பிறந்தவளிடம் தாலியைத் தர அவள் அதனை மணமகனிடம் தருவான். அவன் அத் தாலியில் ஒரு முடிச்சிட்டு அவளிடம் தர அவள் மேலும் இரண்டு முடிச்சுக்களை இட்டு அதனை மணமகள் கழுத்தில் அணிவிப்பாள். அதன்பின் மணமக்கள் உட்கார்ந்திருக்கும்போதே மணமக்களின் வலக்கரங்களின் சிறுவிரல்களைக் கொக்கியிடச் செய்து ஒரு பட்டு நூலால் இணைத்துக் கட்டுவர். அதன்பின் மணமக்கள் எழுந்து மணவறையினை மும்முறை வலம் வருவர். பின்னர் அவர்கள் வீட்டினுள் சென்று அமர்வர். அப்போது மணமகன் மணமகளின் தந்தையிடமிருந்து அன்பளிப்புக்களைப் பெறுவான். பின்னர் அவர்கள் விரல்களைக் கட்டியிருந்த கட்டு அவிழ்க்கப்படும். மணச்சடங்கின்போது மணமகன் மஞ்சள் நீரில் தோய்க்கப்பட்ட நூலினைத் தன் வலது மணிக்கட்டில் அணிந்தவனாக இருப்பான். இது காப்பு எனப்படும்.''

முன்பு மேலே எடுத்துக்காட்டப்பட்ட கையெழுத்துச் சுவடியில்* கூறப்பட்டுள்ளதாவது: ''மாவட்டத்தின் ஆட்சி உரிமை பெற்றுள்ள செல்வர்களாயினும் அல்லது சாதாரண ஏழை எளியவர்களாயினும் திருமணச் சடங்குகள் அனைத்தையும் முழுவதுமாக நடத்துவதில் ஏதேனும் இடையூறுகள் இருக்குமானால் சாதி வழக்கப்படியும் புனித நூல்களில் கூறியுள்ள படியும் தாலியை மட்டும் அனுப்பி வைத்து மணமகளைக் கணவன் வீட்டிற்கு அழைத்துக் கொள்ளும் ஒரு வழக்கம் உள்ளது. அதன்பின்னர் கணவன் மனைவி இரண்டு, மூன்று குழந்தைகளைக் கூட இதற்கிடையே பெற்றுக் கொண்டிருக்கலாம். வெற்றிலை, பாக்கு வைத்து உறவினர்களை அழைப்பான்- மணப் பந்தலிட்டு மணமக்களாக கூடியுள்ள உறவினர்கள் முன்னிலையில் திருமணச் சடங்குகளாக எஞ்சியுள்ள சடங்குகளை நடத்திக் குறை மணத்தினை நிறைவு செய்வான். உரிய எல்லாச் சடங்குகளும் முடிந்த பின் தெருக்களில் ஊர்வலமாகச் சென்று பிள்ளையார் கோயிலில் தேங்காய் உடைத்து வழிபாடு செய்வர். குறை மணத்தினை நிறைவு செய்யும் இந்நிகழ்ச்சி அவரவர் பொருள் வசதிக்கேற்ப ஒரு நாள் முதல் நான்கு நாள்வரை நீட்டிக்கப்படும். இத்தகைய திருமணத்தில் முதலில் கட்டப்பட்ட தாலி கட்டுத் தாலி எனப் பெயர் பெறும். அடுத்துப் பின்னர் நடக்கும் சடங்குகள் பழைய குறை முடிக்கும் மணச்சடங்கு எனப்படும். கட்டுத்தாலிச் சடங்குக்குப் பின் இரண்டாவதான எஞ்சிய குறை முடிக் கும் சடங்கு நடத்தப் படவில்லையாயின் அத்தகையோர் உறவின்

* சென்னை இலக்கிய அறிவியல் இதழ் தொகுதி 4. 1836
Madras Journ. Lit. Science, IV 1836.

வழிப்பிறந்த குழந்தைகள் மறவர்களிடையே முறையாகப் பிறந்தவர்களாக மதிக்கப்படுதல் இல்லை. கட்டுத் தாலிச் சடங்கிற்குப் பிறகு இரண்டாவது சடங்கு நடத்தப்படுமுன் ஒருத்தியின் கணவன் இறந்து போக நேர்ந்தால் இறந்தவன் உடலையும் அவன் மனைவியையும் ஒரே மணையில் அமர்த்திச் சாதி வழக்கப்படி குறை மணச் சடங்குகளை நடத்தி நிறைவு செய்வர். அதன் பின்னரே கட்டுத் தாலி அகற்றப்பட்டு அவள் வேறொருவனை மறுமணம் செய்து கொள்வதற்குரிய கைம்பெண் என்ற உரிமையினைப் பெற முடியும்.'' ஒரு நாட்டு மறவர் பற்றி மேலும் கூறப்பட்டுள்ள செய்திகள் வருமாறு:[⊛] ''மணமகனுடைய மூத்த அல்லது உடன்பிறந்தவள் சங்கு உடன் முழங்கி வர மணமகள் இல்லம் சென்று மணமகள் கழுத்தில் தாலியினைக் கட்டி மறுநாள் காலையில் மணமகளை மணமகன் இல்லத்திற்கு அழைத்து வருவாள். சிறிது காலம் சில போது மூன்று அல்லது நான்கு ஆண்டு -கள் சென்ற பின் மணமகள் கருவுற்ற நான்கு அல்லது ஐந்தாம் மாதத்தில் மணமக்களின் உறவினர் ஒன்றுகூடி கட்டுத் தாலி மணத்தில் குறையாக உள்ள சடங்குகளை நிகழ்த்தி நிறைவு செய்வர். அப்பொழுது கணவன் மனைவி இருவரும் கூடியுள்ளவர்கள் முன்னிலையில் மணையில் அமர்ந்திருக்கப் பிராமணப் புரோகிதர் ஓமத் தீ வளர்த்துச் சடங்குகளை நிறைவு செய்தபின் உறவினர்கள் சேஷ அரிசியினை (நீர் சேர்க்காது இடிக்கப்பட்ட அரிசி) மணமக்கள் மீது தூவி வாழ்த்துவர். பின்னர் கூடி யுள்ள உறவினர்களுக்கு விருந்திடுவர். உறவினர்கள் மணமக்களை வாழ்த்தி ஒரு பணம் முதல் ஒரு பகொடா வரையான அன்பளிப்புக்களை வழங்குவர். இத்துடன் மணச் சடங்குகள் முடிவுறும். இவ்வாறு மணச் சடங்குகளை நடத்தி முடிக்கப் பொருள் வசதி இல்லாத சில சமயங்க ளில் இரண்டு மூன்று குழந்தைகள் பிறக்கும் வரை கூட இதனை ஒத்தி வைப்பர். முதல் கணவன் இறந்து விடுவானாயின் மற்றொரு முறை மணம் செய்து கொள்வது இவர்களிடையே உள்ள வழக்கம். கட்டுத் தாலிச் சடங்கு முடிந்த பின் ஒருவன் தனக்கு மனைவியாக வந்தவள் பிடிக்கவில்லையாயின் அவள் தன்னுடன் கொண்டு வந்த கால்நடைகள், வட்டில், பித்தளை டம்ளர், அணிமணிகள் ஆகியவற்றையும் மற்றவற்றை யும் தந்து அவளை அவளுடைய பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைத்து விடலாம். அப்பொழுது அவள் கழுத்தில் உள்ள தாலி அறுக்கப்பட்டு அகற்றப்படும். இதே போன்று ஒருத்திக்குத் தன் கணவனைப் பிடிக்க வில்லையாயின் அவன் கொடுத்த பரிசத் தொகையினையும் திரும்ப அவ னிடம் சேர்ப்பித்துவிட்டுத் தன் தாய் வீட்டிலிருந்து தன்னுடன் கொண்டு

[⊛] Madras Journal Lit. Science, IV 1836

வந்தவற்றை உடன் எடுத்துக்கொண்டு பிறந்த வீட்டுக்குப்போய் தன் விருப்பம் போல மறுபடியும் மணம் புரிந்து கொள்ளலாம்.

1891 சென்னைக் கணக்கெடுப்பு அறிக்கையில் பதியப்பட் -டுள்ள தகவல் வருமாறு:- ''திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மறவர் சாதிச் சமீன்தார்களிடையே வழக்கில் உள்ளதான தனித்ததொரு பழக்கத்தை அம் மாவட்டப் பதிவாளர் குறிப்பிட்டுள்ளார். மணமகனுக்குப் பதிலாக மணமகன் அனுப்பும் தடியினை மணப்பந்தலில் வைத்து மணச் சடங்குகளை நிகழ்த்துவதே அவ்வழக்காகும். மணமகன் சார்பில் மணமகன் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தாலி கட்டுவார். இத்துடன் ம ணச் சடங்குகள் நிறைவுறும். செம்பு நாட்டு உட்பிரிவினரைத் தவிர மற் றவர்களிடையே கைம்பெண்கள் மறுமணம் எத்தகைய தடையுமின்றி அனுமதிக்கப்படுகிறது.'' '' ஒரு கைம்பெண் இறந்து விட்ட தன் கணவ னுடைய மூத்த உடன்பிறந்தவனை மணந்து கொள்ளலாம். ஆனால் இளைய உடன்பிறந்தவனை மணக்க அனுமதிக்கப்படுவதில்லை. அவ னை மணக்க அவள் விரும்பவில்லையாயின் வேறு யாரேனும் ஒருவ னை மணந்து கொள்ளலாம்'' எனத் திரு பாவ்செட் கூறுகின்றார்.

ஒரு சிறுமி பூப்படைந்தவுடன் அச் செய்தியினை வண்ணான் சென்று தெரிவிப்பான். பதினாறாம் நாள் அவள் ஒதுங்கி இருக்கும் இடத் திலிருந்து வெளிப்பட்டுக் குளித்து வீட்டில் புகுந்து கொள்ளலாம். அப் பொழுது வாசற்படியில் அவளுடைய வருங்காலக் கணவனின் உடன் பிறந்தவள் வெற்றிலை, பழம்,தேங்காய், பிட்டு, நீர்ச்சொம்பு , எழுத்தாணி குத்தப்பட்ட அரிசியோடு கூடிய படி ஆகியவற்றினை அவள் முன் ஆரத்தி சுற்றிக் கண்ணேறு கழித்து வரவேற்பாள். படி அரிசியில் செருகப்பட்ட எழுத்தாணியினை அவளுடைய கொழுந்தி வெளியே பிடுங்கி அதனால் அவள் வீட்டினுள் நுழையும் போது அவளை அடிப்பாள். பூப்படைந்த பெண்ணின் தாய் மாமன் செலவில் விருந்து நடக்கும். இதற்காக அவன் ஒரு வெள்ளாட்டினைக் கொண்டு வந்து வீட்டு முன் கம்பம் ஒன்றில் கட்டிப் போட்டிருப்பான்.

மறவர்கள் இறந்தவர்கள் உடலை எரித்தல், புதைத்தல் ஆகிய இருவகை வழக்குகளையும் மேற்கொள்கின்றனர். இராமநாதபுரத்தைச் சேர்ந்த செம்புநாட்டு மறவர்கள் அகமுடையாரைத் தங்கள் வேலைக்காரர் களாகக் கருதுகின்றனர். பிணத்தைக் குளிப்பாட்டுவதற்கான தண்ணீரை அகமுடையாரே கொண்டுவர வேண்டும். சுடுகாட்டுக்குத் தீச்சட்டியினை இறந்தவன் மகனுக்குப் பதிலாக இவர்களே தூக்கிச்செல்கின்றனர். பிணத் தைப் பாடையிலோ, பல்லக்கிலோவைத்து எடுத்துச் செல்வர். ஆண்டியே

புதைகுழியினைத் தோண்டுவான். பள்ளனோ பறையனோ இதனைச் செய்வதில்லை. உப்பு, செங்கல்,பொடி, விபூதி ஆகியவற்றைப் புதைகுழியில் கீழே பரப்பி அதன்மீது பிணத்தை உட்கார்ந்த நிலையில் வைத்துப் புதைப்பர். கல், செங்கல் கட்டிடங்கள் கட்டும் தொழிலை மேற்கொண்டவர்களான இராமநாதபுரத்தைச் சேர்ந்த கொண்டையம் கோட்டை மறவர்கள் இறந்தவர்கள் உடலை எரிக்கின்றனர். சுடுகாட்டுக்குப் பிணத்தை எடுத்துச் செல்பவர்களுக்கு நடப்பதற்காகத் தரையில் மாற்றுவிரிப்பர். இரண்டாம் நாள் அல்லது மூன்றாம் நாள் பிணத்தை எரித்த சாம்பலைக் கொண்டோ புதைகுழியின் மீதுள்ள மண்ணைக் கொண்டோ லிங்கம் அமைப்பர். இந்த லிங்கத்திற்கும் இறந்தவர்கள் ஆவிக்கும், காகங்களுக்கும் அப்போது பலிச்சோறு படைப்பர். பதினாறாம் நாள் பிணத்தைப் புதைத்த இடத்திலோ எரித்த இடத்திலோ நவதானிய விதைகள் தூவப்படும். பண்டாரம் அவ்விடத்தில் ஐந்து பித்தளைக் கலசங்களை வைத்து வழிபாடு செய்வான். இறந்தவனுக்குக் கொள்ளியிட்ட அவன் மகன் மாவிளக்கேற்றி அதனைத் தலையில் சுமந்தவனாகப் பிள்ளையார் கோயிலுக்குச் செல்வான். அவன் பிள்ளையாரை நெருங்கியவுடன் இடையே உள்ள திரை நீக்கப்பட்டு வழிபாட்டினை நிகழ்த்துவர். பின்னர் அவன் தெய்வத்திற்கு முதுகினைக் காட்டாமல் பின்னோக்கி நடந்து வெளியேறுவான். மாவிளக்கின் மாவு கூடியுள்ளவர்களிடையே வழங்கப்படும். இறந்தவரின் மக்களுக்கு அப்போது புதிய துணிகள் வழங்கப்படும். கொண்டையம்கோட்டை மறவர்களின் சாவுச் சடங்குகள் பற்றித் திரு பாவ்செட் தந்துள்ள விவரங்கள் வருமாறு:- ''பிணத்தின் பாதங்களில் செருப்புக்களை அணிவித்துக் கட்டிப் பிணத்தைச் சாய்ந்து உட்கார்ந்த நிலையில் வைத்துக் கால்கள் முன்னோக்கி இருக்கச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வர்.பிணத்தின் வாயில் கொஞ்சம் அரிசி இடப்படும். பிணத்தின் மார்பருகே வைக்கப்பட்டுள்ள செப்பில் உறவினர்கள் காசினை இடுவர். கர்மக் கர்த்தா நீர் நிறைந்த பானையைச் சுமந்து பிணத்தை மும்முறை வலம் வருவான். அப்பானையில் இரண்டு அல்லது மூன்று துளைகள் இடப்படும். கொஞ்சம் தண்ணீரைப் பிணத்தின் மீது சிந்தும்படியாக விட்டபின் தெற்குப் பார்த்தபடி இருக்கும் பிணத்தின் தலைமாட்டில் அப்பானையைப் போட்டு உடைப்பான். இங்கு நடக்கும் சடங்கில் பிராமணன் பங்கு பெறுவதில்லை. அங்கிருந்து செல்லும் முன் அவன் தலை முழுவதுமாக மழிக்கப்படும். நாவிதன் செப்பில் இருக்கும் காசுகளை எடுத்துக் கொண்டபின் ஈம விறகில் தீ மூட்டுவான். வீட்டுக்குத் திரும்பிய கர்மக் கர்த்தா எரியும் விளக்கின் முன் விழுந்து வணங்குவான். இஞ்சி, நாட்டுச் சர்க்கரை, பயறு, கொஞ்சம் தானியம் ஆகியன இட்டுக் காய்ச்சப்பட்ட கஞ்சியினைத் தவிர அவன்

வேறு உணவு ஏதும் உட்கொள்வதில்லை. மறு நாள் பிணத்தை எரித்த இடத்திற்குச் செல்லும் அவன் பின்னர் புனித ஆறுகளில் கொண்டு விடுவதற்காகக் கூடையில் எரிந்த எலும்புகளைப் பொறுக்கிக் கொள்வான். பதினொன்றாம் அல்லது பன்னிரண்டாம் நாள் உடைக்கப் பட்ட இரண்டு புதிய மண்பானைகளில் உறவினர்கள் அழுது புலம்பிய படி இருக்கக் கொஞ்சம் தானியத்தை விதைப்பர். பதினாறாம் நாள் முளைவிட்டிருக்கும் அத் தானியங்களைப் பிடுங்கித் தண்ணீரில் இடுவர். அப்பொழுதும் சுற்றிலும் கூடியுள்ள உறவினர்கள் அழுவர். அதன் பின் உறவினர்கள் குளித்து விருந்துண்பர். பின்னர் கர்மக் கர்த்தாவினை ஒரு வெள்ளைத் துணியின்மீது அமரச்செய்து அவனுடைய மாமனாரும் பிற உறவினரும் புதிய வேட்டி துண்டுகளையும் பணத் தையும் அன்பளிப்பாகத் தருவர். பதினேழாம்நாள் புண்யகவசனம் எனப் படும் தீட்டு நீக்கும் சடங்கினைப் பிராமணப் புரோகிதர் நடத்தி வைப்பார். கர்மக் கர்த்தா எண்ணெய் தேய்த்துத் தலை முழுவான். ஈமவிறகிற்காக அரச மரத்தின் விறகு ஒரு போதும் பயன் படுத்தப்படுவதி ல்லை"

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நிகழும் சாவுச் சடங்குகள் தொடர்பாகத் திரு. எப். ஆர். ஹெமிங்வே கூறுவது வருமாறு:- "பிணத்தை அப்புறப்படுத்தும் முன் கொள்ளியிட இருப்பவனும் அவன் மனைவியும், அம்பட்டன் பலவகைத் தானியங்களையும் கலந்து பிசைந்துள்ள இரண்டு சாணி உருண்டைகளை எடுத்து வீட்டின் சுவரில் அப்பிவைப்பர். எட்டாம் நாள் இவற்றை எடுத்துத் தண்ணீரில் இடுவர். இச் சடங்கு பட்டங்கட்டறது எனக் கூறப்படும். இறந்தவனுடைய நிலபுலங்களின் உரிமை யாருக்கு உரியது என்பதனைப் புலப்படுத்தும் சடங்காகும் இது. பிணத்தை வீட்டை வீட்டு வெளியே எடுத்து வரும் சமயத்தில் வாணம் விடப்படும். ஆறாம் நாள் நாவல் மர இலைக் கொத்துக்களைக் கொண்டு ஒரு பந்தல் அமைத்து அதில் இறந்து போன குடும்பத்தைச் சேர்ந்த முன்னோரின் நினைவாகப் படையலிடுவர். அப்பந்தல் எட்டாம்நாள் அகற்றப்படும். கொள்ளியிட்டவன் தலையில் உருமாலை கட்டியவனாக நடனம் ஆடுவான். அப்போது கருமாந்திரச் சடங்குகள் ஏதும் நிகழ்த்தப்படுதல் இல்லை. சில சமயங்களில் பதினாறாம் நாள் பிராமணப் புரோகிதனை அழைத்துக் கருமாந்திரம் செய்வதும் உண்டு. இச்சடங்குகள் முடிந்து வீட்டுக்குத் திரும்பும் உறவினர்கள் வீட்டு வாசலில் பானையில் கரைத்து வைக்கப்பட்டுள்ள சாணி நீரில் தங்கள் கால் பெருவிரல்களை நனைத்தபின் வீட்டினுள் நுழைவர். இறுதியாக வருபவன் அப்பானையில் உள்ள சாணித் தண்ணீரை கவிழ்த்தவனாக வருவான்."

கொண்டையம்கோட்டை மறவர்கள் சிலர் பழைய கருமாந்திரம் என்ற சடங்கினை நிகழ்த்துகின்றனர். இயற்கையாக நோய் நொடி வந்து ஒருவன் இறவாது வேறு வகையில் இறந்து போனால் சில மாதங்களுக்குப் பின் அவன் மண்டை ஓட்டினைத் தோண்டி எடுத்து ஊருருகே வெட்ட வெளியில் பந்தலிட்டு அதன் கீழ் அதனை வைப்பர். அனைவரும் தாராளமாகக் கள்ளினைக் குடித்து அந்த மண்டை ஓட்டினைச் சுற்றி நடனம் ஆடுவர். மூன்று நாள்கள் இவ்வாறு ஆடிக் களித்த பின் இறுதிச் சாவுச் சடங்குகளை நிகழ்த்துவர்.

மறவர் மேற்கொள்ளும் ஏறுதழுவுதல் எனப்படும் சல்லிக்கட்டு பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு* நான் திரு ஜெ.எச். நெல்சனுக்குக் கடப்பாடுடையேன். ''சல்லிக்கட்டு அஞ்சாமையும் கட்டுப்பாட்டு உணர்வும் மிக்க மக்களுக்கு உரியதொரு ஆட்டம் ஆகும். இது ஆபத்தானது என்ற எண்ணம் காரணமாக மாவட்ட ஆட்சியர் (குற்றவியல் நடுவர்) சிலர் இதனைத் தடைசெய்ய முற்படுவது வருந்தத்தக்க ஒன்றாகும். சல்லிக்கட்டு நிகழ்த்தப்படும் முறை வருமாறு: - ஆண்டின் குறிப்பிட்ட ஒரு நாளில் மக்கள் - பெரும்பாலும் ஆண்கள்- காலை நேரத்தில் பரந்த மைதானத்திலோ நீரற்ற ஆற்றுப் படுகையிலோ ஏரியினுள்ளோ திரளுவர். இவர்களுள் பலர் உழும் எருதுகளை உடன் ஓட்டிச் செல்லக் காணலாம். அவற்றின் மெருகேறிய உடலும் குறும்பான பார்வையும் இந்தப் பெரிய நிகழ்ச்சிக்காக அவை சென்ற சில நாள்களாகச் சிறப்பாக ஊட்டத்தீனி தின்று வந்துள்ளன என்பதனை மெய்ப்பிப்பனவாகும். இந்தக் காளைகளின் உரிமையாளர் அவற்றின் வலிமையும் வேகமும் பற்றிப் புகழ்ந்து அவை மற்ற எல்லாவற்றையும் போட்டியில் விஞ்சக் கூடியவை எனக் கூறி வருவார். விரைவில் அவற்றுள் சிறந்த காளை ஒன்று நிகழ்ச்சியின் தொடக்கமாகக் காளை பிடிக்கும் களத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் கொம்பில் புதியதொரு வேட்டி - சில சமயம் தொகையும் முடிச்சிடப்பட்டு - அதனைப் பிடித்து வெற்றி கொள்பவருக்கு உரிய பரிசாகச் சுற்றப்பட்டிருக்கும். அதன்பின் அதனை அதன் உரிமையாளர் களத்தில் கூடியுள்ளவர்களான புதிய பார்வையாளர்களின் பலத்த ஆரவாரத் தினிடையே ஓட்டிச் சென்று விரட்டி விடுவார். இத்தகைய சூழலில் பழகி அறியாத அக்காளை தன்னைப் பிடிக்க வருபவர்கள் செய்யும் சேட்டைகளைக் கண்டு தலையைத் தாழ்த்தியபடி வேகமாகக் கூட்டத்தினிடையே பாயும். கூட்டத்தினர் அதற்கு வழிவிட்டபடி

* மதுரை மாவட்டக் கையேடு Manual of the Madurai District.

இரண்டு பக்கமும் சிதறி ஓடுவர். அது ஓடும் மக்களின் வேகத்தை விட மிகுந்த வேகத்தில் ஓடுவதால் ஓடும் எதிரிகளுள் யாரேனும் ஒருவரை நெருங்கி அவனைத் தரையில் தள்ளிப் புரட்டப் பார்க்கும். இச்சமயம் அவ்வாறு காளையின் குறிக்கு ஆளானவன் தரையில் மணல் மீது விழுந்து கட்டைப் போலக் கிடப்பான். அக்காளை அவனைக் கொம்பால் குத்திக் கிழிப்பதற்குப் பதிலாக அவனைத் தாண்டிக் குதித்து மற்றொருவனைத் துரத்திச் செல்லும். இரண்டாவது ஆளும் முதலாமவனைப் போலத் தரையில் விழுந்துவிட அக்காளை அவனையும் தாண்டிக் குதித்து வேறொருவனைத் துரத்தும். இவ்வாறு பலமுறை தாக்க முற்பட்டபின் அக்காளை திடலில் கூடியிருப்பவர்களி டமிருந்து தப்பி வழியில் எதிர்ப்படுபவர்களையெல்லாம் இது போலத் தாக்கியபடி அதன் ஊரைச் சென்று சேரும் அல்லது அதனைப் பிடிக்க முற்பட்ட வீரர்களுள் வலிமை வாய்ந்தவர்களால் பிடித்து அடக்கப்பட்டுவிடும். இக்காளைகள் தங்கள் முன் தரையில் வீழ்ந்தவர்களாக அசையாது கிடப்பவர்களை முட்டி மோதுவதோ குத்திக் கிழிப்பதோ செய்யாதிருப்பது உண்மையில் வியப்புக்குரிய ஒன்றே. சில சமயங்களில் இவ்வாறு காளை வருவதைப் பாராது அதுபற்றி ஏதும் அறியாது நின்றபடி இருப்பவர்கள் எதிர்பாராது தாக்குதலுக்கு உள்ளாகிவிடுவதும் உண்டு. முதலில் இரண்டு மூன்று காளைகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தனியே திடலில் விட்டபின் அடுத்து இரண்டு மூன்று காளைகளை ஒன்றாகத் திடலில் புகவிடுவர். சில சமயங்களில் ஆறு காளைகள் கூட ஒன்றாக விடப்படும். இது போன்ற சமயங்களில் திடலில் பெரும் பரபரப்பு நிகழும். கூட்டத்தினர் தாக்குதலிலிருந்து தப்ப அடித்துப் பிடித்தவர்களாக அங்கும் இங்குமாக ஓடுவர். திடலில் கூச்சலும் சப்தமும் சிரிப்புமாக எங்கும் எதிரொலிக்கும். குத்திக் குருதி வடியச் செய்வதே தங்கள் குறிக்கோள் எனக் கொண்டன போலக் காளைகள் திடலில் தறிகெட்டு எல்லாத்திசைகளிலும் பாயும். இவ்வாறு காலையிலிருந்து நாள் முழுதும் இருநூறு அல்லது முந்நூறு காளைகள் அடுத்தடுத்துத் திடலில் விடப்படும். மாலையில் எல்லாம் முடிந்து வீடு திரும்பும் வேளையில் சிலருக்கு இதனால் ஏற்பட்ட சிறு காயங்களையும் சிராய்ப்புகளையும் அவர்கள் மிகுந்த மகிழ்வோடும் அஞ்சாமையும் ஆற்றலும் வேண்டப்படுவதான இத்தகைய வீர விளையாட்டுகளில் இது போல நிகழ்வது இயல்பே என்ற பாவனையோடும் பொறுத்துக் கொள்வர். காளைகளின் கொம்புகளில் சுற்றப்பட்டிருக்கும் துண்டுகளுக்காகவும் அவற்றில் முடியப்பட்டிருக்கும் காசுக்காகவும் அக்காளைகளை அடக்க முற்படும் வீரர்களைத் தவிர மற்ற பார்வையாளர்களுக்கு இதனால் எத்தகைய சீரழிவும் ஏற்படுவதில்லை. நான் ஒரே ஒரு முறை இந்த

விளையாட்டை (பாதுகாப்பான இடத்திலிருந்தபடி) கண்டுகளித் துள்ளேன். அப்போழுது என் மகிழ்ச்சியினைக் கெடுக்கும்படியாக எத்தகைய விபத்தும் நடக்கவில்லை. ஒருவன் பிட்டத்தில் மட்டும் சிறு காயம் ஏற்பட்டது. ஆனால் அக்காயத்தோடு நடக்க முடிந்ததாகையால் அவன் அவனுடைய நண்பர்களைப் போலவே மகிழ்ச்சியுற்றவனாகவே சென்றான்.''

மதுரை மாவட்ட விவரக் குறிப்பில் சல்லிக்கட்டுப் பற்றி மேலும் பின்வரும் விவரங்கள் தரப்பட்டுள்ளன:- ''சல்லிக்கட்டு என்ற சொல்லின் நேர் பொருள் அணிகளைக் கட்டுதல் என்பதாகும். தமுக்கு அடித்துச் சந்தை கூடும் இடங்களில் குறிப்பிட்டதொரு நாளில் சல்லிக்கட்டு நடைபெறும் என அறிவிப்பர். அன்று கொம்பில் வேட்டியும் துண்டும் சுற்றப்பட்டுள்ள காளைகள் பலவற்றை ஒன்றன் பின் ஒன்றாக அடுத்தடுத்துப் பட்டியிலிருந்து திறந்து விடுவர். தமுக்கு அடிக்கும் ஒலிக்கும் மக்கள் ஆரவாரத்திற்கும் இடையே இருபுறமும் அணிவகுத்து நிற்பவர்களுக்கும் தொடர்ந்து நீளவாக்கில் வேலி போல இரு வரிசையாக நிறுத்தப்பட்டுள்ள கட்டை வண்டிகளுக்கும் நடுவே அவை முதலில் களத்தை நோக்கி ஓடி வந்து பின்னர் நாலாத் திசைகளிலும் பாய்ந்து செல்லும். அவ்வாறு பாய்ந்து ஓடும் காளைகளின் கொம்பில் சுற்றப்பட்டுள்ள துண்டினைப் பற்றிப் பறிப்பதே இந்த விளையாட்டில் வெற்றி பெறுவதாகக் கருதப்படும். விரைந்து ஓடும் திறமையும் சட்டெனச் செயலாற்றும் திறமையும் உடையவர்களே இதில் வெற்றி பெறுவர். அப்போதைக்கு அவர்கள் அனைவராலும் பாராட்டப்படுவர். செயல்திறன் வேகம் குறைந்தவர்கள் காயமும் சிராய்ப்பும் பட நேரிடும். அவ்வப்போது காளைகள் வேடிக்கை பார்க்கும் கூட்டத்தாரிடையே பாய்ந்து அவர்களை அஞ்சி ஓடுமாறு செய்வதும் உண்டு. இந்த விளையாட்டுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சமயங்களில் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒருவன் தன் அறியாமையால் வேண்டுமென்றே விபத்துக்கு உள்ளானால் அன்றி இதில் வேறு வகையில் விபத்துக்கள் நிகழ வாய்ப்பு அதிகம் இல்லையாகையால் தற்போது அதிகாரிகள் கால்பந்தாட்டம், தடை தாண்டும் குதிரைப் பந்தயம், நிரிவேட்டை ஆகியவற்றைவிட எவ்வகையிலும் ஆபத்து விளைவிக்காத இதனை ஏன் தடை செய்ய வேண்டும் எனச் சிந்தித்து வருகின்றனர். உடல் ஆற்றல் வாய்ந்த சமூகத்தவர்கள் சிறப்பாகக் கள்ளர் (பார்க்க: தனிக்கட்டுரை) இந்த வீர விளையாட்டில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். பல கிராமங்களில் சல்லிக்கட்டுக்கென்றே தனியே காளைகளை வளர்த்து வருகின்றனர். கள்ளர் வாழும் பகுதியான திருமங்கலத்திலே சிறந்த

சல்லிக்கட்டு விளையாட்டினைக் காணலாம். மேலூரிலும் மதுரை வட்டத்திலும் நடக்கும் சல்லிக் கட்டுகள் அதற்கு அடுத்தபடியாகக் கூறத்தக்கவை.''

''மறவர்களும் கள்ளர்களும் மான் வேட்டையாடும் போது பூமாராங்குகளையும்(வளைதடிகள்)பயன்படுத்துகின்றனர். சென்னை அருங்காட்சியகத்தில் தஞ்சாவூர் படைக்கலக் கொட்டிலிலிருந்து கொண்டு வந்து வைக்கப்பட்டுள்ள மூன்று பூமாராங்குகள் உள்ளன. இவற்றுள் இரண்டு தந்தத்தாலும் ஒன்று மரத்தாலும் ஆனவை. புதுக்கோட்டை அரசரின் படைக்கலங்களில் மரத்தாலான பூமாராங்கு எப்பொழுதும் இடம் பெற்றிருக்கும். இவற்றைத் தமிழில் வளைதடி எனக் கூறுகின்றனர்'' என முனைவர் ஓப்பெர்ட்* கூறியுள்ளார். மதுரை மாவட்டத்தில் பூமாராங்கினைப் பயன்படுத்தும் வழக்கம் பற்றியதான பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு. ஆர். புரூஸ் பூட் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். ''மதுரைப் பகுதியில் மக்களிடையே பெருவழக்கினதாக உள்ள ஒரு படைக்கருவி ஆஸ்திரேலியப் பழங்குடிகள் பயன்படுத்தும் பூமாராங்கினை ஒத்ததான வளைதடியாகும். சிவகங்கையிலிருந்து கிடைக்கப்பெற்ற மறவர்களுடைய இப்படைக் கருவிகள் இரண்டு என்னிடம் உள்ளன. அவற்றுள் பெரியது வெளிப்பக்க விளிம்பினை ஒட்டியதாக 24 $^{1}/_{8}$ அங்குல நீளமும் வளைந்த இரு முனைகளுக்கும் இடையே உள்ள தூரம் 17 $^{5}/_{8}$ அங்குல மும் கொண்டதாக உள்ளது. கையால் பிடிக்கும் இடத்தில் குமிழ் வடிவிலான கைப்பிடி $2^{1}/_{4}$ அங்குல நீளமும் $1^{1}/_{4}$ அங்குலப் பருமனும் உடையதாயுள்ளது. அதன் மெலிந்த பகுதி கைப்பிடியினை அடுத்த பகுதியாகும். அப்பகுதி $^{11}/_{16}$ அங்குலக் குறுக்களவும் 1 $^{1}/_{8}$ அங்குலப் பருமனும் கொண்டது. அப்பகுதியி லிருந்து மறுமுனையை நோக்கிப் போகப் போக அதனுடைய பருமன் அதிகரித்தபடி செல்கின்றது. அதன் மறுமுனை $2^{3}/_{8}$ அங்குலக் குறுக்களவு கொண்டதாயுள்ளது. முனை வெட்டப்பட்ட மறுமுனையிலிருந்து நான்கு அல்லது ஐந்து அங்குலம் முன்னதான பகுதியே இக்கருவியின் பருமனான பகுதியாகும். என்னிடம் உள்ள இரண்டாவது வளைதடி மேலே விளக்கப்பட்டதைக் காட்டிலும் அளவில் சற்றே சிறியது. இது சற்றே வளைவும் குறைந்ததாகவே உள்ளது.இவை இரண்டுமே நல்ல உறுதியான மரத்தாலானவை. மேலே பூசப்பட்டள்ள மெருகு எண்ணெயின் கீழ் அவற்றின் செம்பழுப்பு நிறம் புலப்படவே செய்கின்றது. இவை புளிய மரத்தின் வேரினால் ஆனவை

* சென்னை இலக்கிய அறிவியல் இதழ். Madras Journ Lit. Science. XXV.

எனக் கூறப்படுகின்றது. செதுக்கு வேலை பரும்போக்கு உடையதாகவே உள்ளது. 1883இல் சிவகங்கை அருகே இக்கருவிகள் பயன்படுத்தப்படுதலை நேரில் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. காலை நேரத்தில் சிறியதும் பெரியதுமான குழுவினராக ஆண்களும் வளர்ந்த சிறுவர்களும் சில நாய்களுடன் முயல் வேட்டைக்குப் போய்க்கொண்டிருந்தனர். முட்காடாக இருந்த நிலப்பகுதியில் அக்குழுக்கள் தட்டுத்தடுமாறியே செல்ல வேண்டியதாயிற்று. அப்பாவி முயல் ஒன்று அவர்கள் செல்லும் வழியில் வெளிப்பட்டவுடன் பல வளைதடிகள் ஒரே சமயத்தில் அதன் மீது பாய்ந்து சென்றன. அவற்றின் வேகத்திலும் குறிதப்பாத போக்கிலும் அந்த முயல் அடிபடாது தப்புதல் என்பது அரிது. இவ்வாறு பல முயல்கள் விரைந்து வீழ்த்தப்பட்டதை நான் கண்டேன். வேட்டைக்காரர்களிடம் நான் விசாரித்தபோது ஓர் ஆண்டின் குறிப்பிட்ட ஒரு நாளில் உடல் நலமும் வலுவும் வாய்க்கப் பெற்ற மறவர் சாதி ஆண்கள் அனைவரும் இத்தகைய முயல் வேட்டையில் ஈடுபடவேண்டும் என்பது சமயச் சார்புடைய ஒரு கடமையாகும் எனக் கூறினர். வளைதடி எறிவதில் கைதேர்ந்த ஒரு மறவனால் எறிந்த வளை தடியினை மீண்டும் தன்னிடமே வந்து சேரும்படியாக எறிய முடியுமா என்பதனை என்னால் கண்டறிய முடிய வில்லை. நான் நேரில் பார்த்த அளவில் எறியப்பட்ட வளைதடி எதுவும் திரும்பி வரும் போக்கு உடையதாகத் தெரியவில்லை. ஒரு பொருளை நேரே அடித்து வீழ்த்த இந்த வளைதடிகள் மிக வசதியான கருவிகள் எனலாம்.

சைவர்களுக்குரிய சின்னங்களைத் தரிக்கும் மறவர்கள் பல சிறு தெய்வங்களையும் வழிபடுகின்றனர். காளி, கருப்பன், முத்துக்கருப்பன், பெரியகருப்பன், மதுரை வீரன், அய்யனார், முனுசாமி ஆகியன இவர்கள் வழிபடும் சிறு தெய்வங்களுள் அடங்குவர்.

"மறவர் சாதிப் பெண்கள் குழந்தைகளாக இருக்கும் போது காது மடல்கள் குத்தப்பட்டு விரிவுடையன ஆகும்படியாக நெகிழ்விக் கப்படுவதால் பெண்கள் நீண்டு தொங்கும் காது மடல்களை உடையவர்களாக உள்ளனர். திரு (தற்போது சர்) எப்.எ.நிக்கல்சன் சில ஆண்டுகளுக்கு முன்பு இராமநாதபுரத்தில் தங்கியிருந்த போது மறவர் வீட்டுச் சிறுமிகளான இளவரசிகள் தன் வீட்டுத் தோட்டத்தில் வந்து விளையாடும் வழக்கம் உண்டு என்றும் அவர்கள் ஓட்டப்பந்தயத்தில் ஈடுபடும் போது கனமான காதணிகளோடு கூடிய மெல்லிய நீண்ட தங்கள் காது மடல்கள் அறுந்து விடாமல் இருக்கக் காதுகளைப்

பிடித்தபடி ஓடும் பழக்கமுடையவர்கள் என்றும் என்னிடம் கூறினார்.

சொக்கம்பட்டி சமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்த மறவர் சாதி இளைஞன் ஒருவனே கிறித்தவ சமயம் தழுவாதவர்களான மறவருள் முதன்முதல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் 1902 ஆம் ஆண்டு பி.ஏ. பட்டத் தேர்வில் வெற்றி பெற்றவன் எனப்பதியப்பட்டுள்ளது.

மறவர்கள் பொதுவாகச் சூடிக் கொள்ளும் பட்டப்பெயர் தேவன் என்பதாகும். சிலர் தலைவன், சேர்வைக்காரன், கரையான்,ராயர்வம்சம் போன்ற பட்டப் பெயர்களையும் தரிக்கின்றனர்.

மாராயன்: Mārāyan

மாரான் என்பதற்கான மற்றுமொரு பெயர்

மாரி: Māri

மாரி அல்லது மாரிமனுசரு என்பது ஹொலையரின் உட்பிரிவில் ஒன்று.

மாரியன்: Māriyan

கோலாயன்களின் உட்பிரிவுகளுள் ஒன்று எனக் கூறப்படுகிறது.

மார்கண்டேய: Mārkandēya

பத்ம சாலேக்கள் மற்றும் சேணியர் சாதிக்குரியதாக உள்ள கோத்திரப் பெயர் என்றும் தீர்க்காயுசு உடையவராகக் கருதப்படும் மார்க்கண்டேய முனிவரின் பெயரால் அமைந்த கோத்திரப் பெயர் என்றும் கூறுவர். தேவாங்கர் சிலரும் சாலாபுக்கள் சிலரும் இவரைத் தங்கள் குல முதல்வர் எனக் கூறிக்கொள்வர்.

மர்ரி: Marri (*ficus bengalensis*)

மாலர், முத்ராசர் ஆகிய சாதிக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலத்தின் பெயர். மர்ரி குண்டம் (ஆல மரத்தின் அருகே உள்ள குட்டை) ஏனாதியரின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம் ஒன்றுக்குரிய பெயர். மர்ரி என்பதன் பொருள் ஆல் என்பதாகும்.

மருமக்கள்தாயம்: Marmakkathāyam

பெண்கள் தாய உரிமை வழிச் செல்வதற்கான சட்டத்தின் மலையாளப் பெயர்.

மார்வாரி: Marvari

மார்வரைச் சேர்ந்தவன் எனப்பொருள்படும் நிலப்பகுதி சார்ந்த பெயர். கணக்கெடுப்பின்போது மார்வாரி என்பது சமணர் சாதி எனப் பதியப்பட்டுள்ளது. சமணர்களான மார்வாரிகள் இவ்வாறு பதிந்துள்ளனர். மார்வாரிகள் துணிவோடு செயலாற்றும் வணிகர்கள். தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் தங்கி வாழும் இவர்கள் சென்னை நகரில் வட்டிக்கடை நடத்தி வருகின்றனர்.

மாசாதிகர்: Māsādika

நாதவ பண்டர்களுக்குரிய மற்றுமொரு பெயர்.

மாசில : Māsila (masi-dirt)

தேவாங்கர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலத்தின் பெயர். மாசு அழுக்கு எனப் பொருள்படும்.

மஸ்தான்: Māsthan

முகமதியருக்குரிய அருளாளர் எனப் பொருள்படும் பட்டப்பெயர். கணக்கெடுப்பின் போது பட்டப்பெயராகப் பதியப்பட்டுள்ளது.

மாஸ்திகர்: Mastiga

கோல்லர், மாலர், மாதிகர் ஆகிய சாதியாரிடமிருந்து இரந்தும் அவர்களைப் புகழ்ந்து பாடியும் வாழும் சாதியார் மாஸ்திகர் என மறைத்திரு ஜெ. கெயின்* கூறியுள்ளார். இவர்கள் மால மாஸ்திகள் எனவும் கூறப்படுவர் என எனக்குத் தெரிய வந்துள்ளது. இவர்கள் மாலர்களின் முறையற்ற உறவின் வழிப்பிறந்தவர்களாகப் பெரும்பாலும் அவர்களிடையே இரந்து வாழ்ந்து வருவதால் இவ்வாறு கருதப்படுகின்றனர். இரத்தலை மேற்கொள்ளும் போது இவர்கள் உடலைப் பலவாறு முறுக்கி வளைத்துப் பலவகை வித்தைகளைக் காட்டுவர்.

மடம்: Matam (Monastery or religious institution)

தேவாங்கர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலத்தின் பெயர். சமயத் துறை சார்ந்த மடம் எனப் பொருள்படுவது.

மாதங்க: Mātanga

மாதங்கன் அல்லது மாதங்கி என்பது மாதிகருக்கான மற்றுமொரு

* இந்தியத் தொல்லியல் VIII 1879. (Ind. Ant. VIII,1879)

பெயராகும். மாதிகர் சிலபோது தங்களை மாதங்கி மக்கள் எனத் தங்கள் வழிபாட்டுக்குரிய தெய்வத்தின் பெயரால் அழைத்துக் கொள்வர். மாதங்கி என்பது நேர்ந்து விடப்படும் பரத்தையரைக் குறிக்கும் பெயருமாகும். இப்பரத்தையர் மாதிகர் சமூகத்தவரால் மதிக்கப் படுகின்றனர்.

மடவன் : Matavan

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பில் நாயர்களின் உட்பிரிவான புலிக்கப்பணிக்கர்களுக்குரிய பெயராகப் பதியப் பட்டுள்ளது.

மச்சய : Matsya (fish)

தோம்பர்களின் ஒரு குலம்.

மட்டியர் : Mattiya

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் மட்டியர் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளதாவது:- "மத்திய மாநிலங்களிலிருந்து வந்து விசாகப்பட்டினத்தில் தங்கிப் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் இவர்கள். ஒரு குறிப்பின்படி இவர் கோண்ட்களின் உட்பிரிவினர் எனத் தெரிகின்றது. இவர்களுள் சிலர் பூணூல் அணிகின்றனர். இவர்கள் தங்கி வாழும் மல்கணகிரியினுக்குரிய அரசரே இவர்களுக்குப் பூணூல் அணிந்து கொள்ளும் இந்த உரிமையினைத் தந்துள்ளார். ரோணர்களோடு உடன் உண்ணும் இவர்கள் பொரொசர்களோடு ஒன்றாக இருந்து குடிப்பர். எனினும் தங்கள் சாதியினைச் சேர்ந்தவர்களோடு மட்டுமே ஒன்றாக இருந்து புகைப்பர். மட்டியர் என்ற பெயர் சேற்றில் பணிபுரிபவர்கள் எனப் பொருள்படும். மட்டி- (சேறு). கஞ்சம் மாவட்டத்தில் இவர்கள் மண்வேலையில் ஈடுபட்டவர்களாகவும் கூலிகளாகவும் இருப்பதாகத் தெரிகின்றது. 1871 கணக்கெடுப்பு அறிக்கையில், "மட்டியர் அனைவரும் கோய்களையும் பொரொசர்களையும் விட உயர்ந்தவர்கள். இவர்கள் மண்ணிலிருந்து தோன்றியவர்கள் எனக் கூறிக்கொள்வதோடு மண்ணில் ஒரு துளையினைக் காட்டி அதிலிருந்து தங்கள் குல முதல்வன் தோன்றினான் என்றும் கூறுவர். ஓரிய மொழி பேசும் இவர்கள் தங்கள் நிலத்தில் நல்ல முறையில் பயிர்த்தொழில் செய்கின்றனர்" எனக் கூறப்பட்டுள்ளது.

பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு சி. உறயவதன ராவிற்குக் கடப்பாடுடையேன். இச்சாதி பாக்(புலி), நாக் (நாகம்), சேலி

(வெள்ளாடு),கொச்சிமொ (ஆமை) எனக்குறைந்தது நான்கு குலப்பிரிவுகளாகவாவது பிரிவுபட்டுள்ளது எனலாம். ஒருவன் தன் தந்தை வழி அத்தை மகளை மணக்க உரிமை கொண்டாடலாம். சிறுமியர் பூப்படைந்த பின்னரே மணம் செய்விக்கப்படுகின்றனர். மணஉறவு பற்றிப் பேச வரும் போது மணமகன், பெண்ணின் பெற்றோருக்கு ஒரு பானை மதுவினை அன்பளிப்பாக வழங்குவான். அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டால் மேலும் மது, அரிசி, ஓர் இணை வேட்டி ஆகியன அடுத்து அன்பளிப்பாக அவர்களுக்கு வழங்கப்படும். அன்பளிப்பாகத் தரப்படும் மதுவகை பெண்ணின் ஊராரிடையே வழங்கப்படும். அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டால் அது அவர்கள் அந்த மணஉறவுக்கு அவர்கள் உடன்பாட்டினைத் தெரிவித்ததாகக் கொள்ளப்படும். தோம்புகள் இன்னிசை முழக்கி வர மணப்பெண்ணை ஊர்வலமாக மணமகன் ஊருக்கு அழைத்துச் செல்வர். மணமகன் வீட்டின் முன் ஒரு பந்தல் அமைக்கப்பட்டிருக்கும். மறுநாள் காலையில் மணமக்கள் அப்பந்தலில் வந்து அமர்வர். தாசரி அவர்கள் கரங்களை இணைத்து வைக்க அவர்கள் மஞ்சள் நீரில் குளித்துப் புத்தாடை புனைவர். மணமகன் மணமகளை வீட்டினுள் அழைத்துச் செல்வான். ஒருவரை ஒருவர் பிரியாதவர்களாகவும் ஒருவரோடு ஒருவர் நன்கு பழகும்படியும் அவர்களுக்கு உறவினர்கள் அறிவுரை கூறுவர். அதனை அடுத்து விருந்து நடைபெறும். அன்று இரவினை ஆடிப்பாடிக் கழிப்பர். மறுநாள் மணமகள் பெற்றோருக்கு ஓர் இணை பசுக்களையோ எருதுகளையோ ஜொல்ல டொங்கா எனப்படும் அன்பளிப்பாக வழங்கி அனுப்பி வைப்பர். கைம்பெண்கள் மறுமணத்தை இவர்கள் அனுமதிக்கின்றனர். இறந்து போனவனின் மனைவியினை அவனுடைய தம்பி மணந்து கொள்வது வழக்கம். இவர்கள் மணமுறிவினை அனுமதிக்கின்றனர். மணமுறிவு செய்து விலக்கி வைக்கப்படும் ஒருத்திக்கு இழப்பீடாக ஒரு புதுச் சேலையும் ஓர் எருதினையும் அவளுடைய கணவன் வழங்குவான். மணமுறிவு செய்து கொண்டவள் மீண்டும் மறுமணம் செய்து கொள்ளலாம்.

மட்டியர் மற்றும் பிற ஒரிய சாதியரிடையே கொராஜுவ்வி (மருமகனை வீட்டோடு வைத்துக் கொள்ளுதல்) என்ற வழக்கம் உள்ளது. இவ்வழக்கப்படி மணமகளைத் தேடித்திரியும் பொருள் வசதியற்ற ஒருவன் தன் வருங்கால மாமனாரோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டவனாக அவருக்காக ஒரு குறிப்பிட்ட காலம்வரை உழைத்து வருவான். அக்காலக்கெடு முடிந்ததும் அவர் அவனுக்கு மணம் செய்வித்துத் தனிக் குடித்தனம் வைத்துத் தருவார். புதுமண

வாழ்க்கையைத் தொடங்க மணமக்களுக்குப் பெண்ணின் தந்தை வேண்டியவற்றை அன்பளிப்பாகத் தருவார்.

இறந்தவர்களை இவர்கள் எரிக்கின்றனர். பிணத்தை எரித்த இடத்தில் அதற்கு அடையாளமாக ஒரு மூங்கில் கழியினை நட்டு அதில் இறந்தவனுடைய கந்தல் ஆடை ஒன்றைக் கட்டி வைப்பர். அங்கு அவன் கடைசியாக நோயுற்றிருந்த போது பயன்படுத்திய பானைகள் உடைக்கப்படும். எட்டு நாள் அளவுக்குச் சாவுத் தீட்டினை மேற்கொள்ளும் இவர்கள் ஒன்பதாம் நாள் சாம்பலில் தண்ணீர் ஊற்றிக் கலந்து அப்புறப்படுத்திய பின் அங்குப் பாலினைத் தெளிப்பர். அந்தச் சாம்பலினைச் சதுரமாக மூன்றடி ஆழமுள்ள குழி வெட்டி அதில் புதைப்பதும் உண்டு. அதன் மீது சிறு குடிசை அமைப்பர். செயப்பூர் பல்கிங்கிரி சாலையினை ஒட்டிப் பங்காம் ஆற்றின் கரையில் இவ்வாறு அமைக்கப்பட்ட சமாதிக் குடிசைகளைக் காணலாம். மட்டியர், பிறந்த கிழமையின் பெயரையே தங்களுக்குப்பெயராகக் கொள்கின்றனர்.

மாவிலான் : Māvilān

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் மாவிலான்கள் வேட்டையாடியும் பச்சிலைகள் சேகரித்தும் வாழ்க்கை நடத்திவரும் சிறு எண்ணிக்கையினரான பழங்குடிகள் எனக் கூறப்பட்டுள்ளது. மக்கள் தாய உரிமை பேணும் இவர்கள் கொச்சையான துளு மொழியினைப் பேசுகின்றனர். துளுமார் (துளு நாட்டவர்), சிங்கத்தான்(சிங்கம் போன்ற நெஞ்சுறுதி உடையவன்) என்பன இவர்களின் உட்பிரிவுகளாகப் பதியப்பட்டுள்ளனர். ''இச்சாதியின் பெயர் மாவிலவு என்ற மூலிகையின் பெயரை ஒட்டி அமைந்ததாகக் கருதப்படுகிறது. இச்சாதியினர் கன்னடியர் ஆகையால் இதன் காரணத்தைத் துளு அல்லது கன்னட மொழியின் அடிப்படையிலேயே காண முயற்சி செய்யவேண்டும் என நான் கருதுகின்றேன். இவர்கள் மலபார் மாவட்டத்தில் சிரக்கல் வட்டத்தில் மட்டுமே காணப்படுகின்றனர். தற்போது இவர்கள் கூடை முடைதலைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். தந்தையிடமிருந்து மகனுக்குச் சொத்துரிமை செல்வதே வழக்கம் எனினும் சிலரிடையே மகள் வழிச் சொத்துரிமை பேணும் வழக்கமும் உள்ளது'' எனத் திரு எச். எ. ஸ்டுவர்ட் கூறியுள்ளார். ''துளுமாவிலான், எட மாவிலான் என இருபிரிவினராக உள்ள இவர்களிடையே முப்பது இல்லப் பிரிவுகள் உள்ளன. இவர்கள் யானைப் பாகர்களாக அமர்த்தப்பட்டிருப்பதோடு தேன் முதலிய காடுபடு பொருள்களைச் சேகரிப்பதையும் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்கள் சாதித்தலைவன் சிங்கம் எனவும் குடிசைகள்

மாபுர எனவும் வழங்கப்படும் '' என மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மயலோடிலு : Mayalōtilu (rascal)

மயலோடிலு அல்லது மஞ்சிலோடிலு என்பது மலைகோயிகள், கோதாவரி ஆற்றை ஒட்டி வாழும் கோயிகளை அழைக்கும் பெயராகும் என மறைத்திரு ஜெ. கெயின் கூறியுள்ளார். கயவன் என்பது இதன் பொருள்.

மயன் : Mayan

கம்மாளருக்குரிய மற்றுமொரு பெயராகச் சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பதியப்பட்டுள்ளது. கம்சாலி பொற்கொல்லர் தங்களை மயன் சந்ததியினர் எனக் கூறிக்கொள்வர்.

மேத, மேதர, மேதரலு, மேதரகாரன் : Mēda, Mēdara, Mēdaralu or Mēdarakaran

மேதரர் தெலுங்கு, கன்னட, ஒரிய, தமிழ் மாவட்டங்களில் மூங்கிலைக் கொண்டு சல்லடை, கூடை, ஏணி, பாய், விசிறி,பெட்டி, குடை, தட்டி ஆகியன செய்யும் தொழிலை மேற்கொண்டிருப்பவர்கள். குப்பைக் கூடை, கிறித்துவக் குழந்தைகளை அடக்கம் செய்வதற்கான சவப் பட்டி, கிளிக்கூண்டு, புறாக்கூடு ஆகியனவற்றைச் செய்யவும் இவர்கள் அவ்வப்போது வாய்ப்புப் பெறுவதுண்டு. முன்பு இவர்கள் சிப்பாய்களுக்கான தொப்பிகளை மூங்கிலால் செய்து வந்தனர். இருட்டான இரவு நேரத்திலேயே இவர்கள் காட்டில் சென்று மூங்கில்களை வெட்டுவர். மற்றச் சமயங்களில் வெட்டினால் அவை பழுதுபட்டுப் போகும் என நம்புகின்றனர். கொரச்சர்களைப் போல ஈச்சம் இலைகளைக் கொண்டு இவர்கள் பொருள்கள் செய்வதில்லை.

தாங்கள் இந்திரனுக்குரிய மகேந்திர மலையிலிருந்து வந்தவர்கள் என இவர்கள் கருதுகின்றனர். பின்வரும் வழக்கு வரலாறு இவர்களிடையே வழங்கி வருகின்றது. சிவனுடைய மாமனாரான தக்ஷுடு (தக்கன்) தன் மருமகனை, தான் செய்யவுள்ள ஒரு யாகத்திற்கு அழைப்பதற்காகச் சென்றான். அப்பொழுது சிவன் தியானத்திலிருந்தான். இதனால் தக்கன் கரங்கூப்பிச் செலுத்திய வணக்கத்தைக் காணாதவனாகச் சிவன் இருந்து விட்டான். சினமுற்ற தக்கன் சிவனையோ அவன் மனைவியையோ அழைக்கவோ மதிக்கவோ

வேண்டாம் எனத் தன்னைச் சேர்ந்தவர்களிடம் கூறிவிட்டான். தன் கணவனின் கட்டளையை மீறியவளாகப் பார்வதி தன் மகனான கணேசனுடன் அந்த வேள்விக்குச் சென்றாள். எனினும் அங்கு அவளை யாரும் மதித்தார்கள் இல்லை. இதனால் அவள் கண்ணீர் சிந்தி அழப் பூமி பிளந்து அவளை விழுங்கிவிட்டது. மீண்டும் அவள் உறிமவதியாக இமய மலையின் மகளாகப் பிறக்கச் சிவன் அவளுக்கு அவள் யாரென்பதை உணர்த்தி அவளை மணந்து கொண்டான். அவளுடைய கேள்விகளுக்கு விடையிறுக்கும் முகமாகச் சிவன் அவளிடம், அவள் ஒரு நோன்பினை மேற்கொண்டு ஒரு முறத்தில் பிராமணர்களுக்குப் புட்டினைத் தானமாகக் கொடுத்தமையால் அவள் தன்னை மீண்டும் பிரிய நேராது எனக் கூறினான். அதன்படி அவள் பொன்னால் ஒரு முறம்செய்து அதில் பிட்டினையிட்டுத் தர அதனால் அவள் விரும்பிய பயன் கிட்டவில்லை. இதற்குக் காரணம் அந்த முறம் மூங்கிலாலான முறங்களைப் போலப் பின்னலிட்டு அமைக்கப்படாததேயாம் எனச் சிவன் கூறினான். சிவன் தன் பாம்பு ஒன்றினை எடுத்து அதை மூங்கிலாக மாற்றினான். கணபதியிடமும் மற்றவர்களிடம் தன் திரிசூலத்தையும் கதையினையும் தந்து அதனைப் பிளந்து பார்வதியின் விரதத்தை நிறைவேற்ற உதவும் முறத்தினைப் பின்னும்படிக் கூற அவர்கள் அது போலவே பின்னி உதவினர். கணபதியும் பூத கணங்களும் மகேந்திர மலையிலேயே தங்கியவர்களாகக் கந்தர்வப் பெண்களை மணந்து கொண்டு பிள்ளைகளைப் பெற்றனர். இறுதியாகச் சிவன் அவர்களைத் திரும்ப வரும்படி பணித்தபோது அவர்களால் தங்கள் மனைவியரையும் குழந்தைகளையும் உடன் அழைத்துச் செல்ல இயலவில்லை. அவர்கள் தங்கள் மனைவி மக்களிடம் மூங்கிலால் கூடைகளைப் பின்னிப் பிழைப்பு நடத்தும்படி கூறிச் சென்றனர். இதனாலேயே இவர்கள் மகேந்திரலு அல்லது மேதரலு என அழைக்கப்படுகின்றனர். வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ள மற்றொரு வழக்கு வரலாறு வருமாறு:- ஒரு சமயம் பார்வதி கௌரி நோன்பினை மேற்கொள்ள விரும்பினாள். அதற்காக ஒரு முறத்தினைப் எப்படிப் பெறுவதென்று அவளுக்குத் தெரியவில்லை. அவள் சிவனிடம் அதனைத் தயாரிக்கும் ஒருவனைப் படைக்கும்படி கூறினாள். சிவன் தன் வாகனமான விருட்சபனிடம் அத்தகைய ஒருவனை உண்டாக்கித் தரும்படி கூறினான். அதே போன்று விருட்சபனும் ஒருவனைப் படைத்துத் தர அவனிடம் பார்வதியின் விருப்பத்தைக் கூறி மேதரரின் முன்னோனான அவன் சிவனுடைய கழுத்திலிருந்து ஒரு பாம்பினை எடுத்து மலைப்பகுதிக்குச் சென்று அதன் தலையினைத் தரையில் ஊன்றி வைத்தான். அவ்வளவில் அங்கு

ஒரு மூங்கில் தோன்றி வளர்ந்தது. பாம்பினை மீண்டும் சிவனிடம் சேர்த்துவிட்ட அவன் அந்த மூங்கிலினைப் பிளந்து முறத்தினை முடைந்தான். பாம்பினை ஒத்த மூங்கிலின் வேரினை இக்கதைக்கு ஆதாரமாகக் கூறுவர்.

பிறசாதியினரிடையே உள்ளதைப் போலவே வைதுரைக்கும் பாங்கமைந்த பெயர்களைக் குழந்தைகளுக்கு இடும் பழக்கம் இவர்களிடையே உள்ளது. எடுத்துக்காட்டாக முதல் குழந்தை இறந்தபின் பிறக்கும் ஒரு குழந்தையினைப் பெண்டய்ய (சாணிக் குவியல்) என்று அழைப்பதனைக் கூறலாம். இத்தகைய குழந்தை சாணிக் குவியல் என்பதனைக் குறிக்கும் அடையாளமாக அது பிறந்தவுடன் அதனை உண்ணும் ஓர் இலையில் கிடத்துவர். தவ்ய்ய (தவிட்டுக்கு வாங்கப்பட்டவன்), பக்கீரு (பிச்சைக்காரன்) என்பன இவ்வகையில் அமைந்த வேறு பெயர்களாம். ஓர் ஆண் குழந்தை தொடர்ந்து சில மாதங்கள் நோய்வாய்ப்பட்டதாக இருப்பின் தெய்வம் ஏறப்பட்ட ஒருத்தி அங்கம்மா தேவி அதனை ஆட்கொண்டிருப்பதாகக் கூறுவாள். உடனே அக்குழந்தைக்கு அத் தெய்வத்தின் பெயரை வைப்பர்.

மேதரருக்கு உரிய கோத்திரங்களும் புறமணக்கட்டுப்பாடு உடைய குலங்களும் வருமாறு:

அ. கோத்திரங்கள்

அனுமந்த (அனுமார்)பொம்படை (ஒரு வகைமீன்)
புலி
தாகெநீலு(குடிநீர்)
அவிச (அகத்தி)
ரேல (அத்தி)
சேசாசி (பாம்பு?)
விநாயக
காசி (காசி நகரம்)
மொதுக (பலாசு மரம்)
கொவில்ல (கோகிலம் அல்லது குயில்)

ஆ. புறமணக்கட்டுபாடு உடைய குலங்கள்

பில்லி(பூனை)
பர்வதம் (மலை)
புற்று (கரையான் புற்று)
கொண்ட (குன்று)
சவ்வாதி (புனுகுப்பூனை)
நந்திகட்டு (எருதின் பெயர்)
கண்டிக்கட்டு (பருப்பு ரசம்)
கொத்தகுண்ட (புதுப்பானை)
பூரெட்டி (ஒரு பறவை)
கல்லூரி (கல் ஊர்)
நவ்வுல்லு (எள்)
சனகபப்பு (கடலைப்பருப்பு)
தசண்ட (வரி)
நீலம் (நீல நிறம்)
சிரிகிரி (ஒரு மலை)
கணிகிரி (ஒரு மலை)
போத்து (ஆண்)
நாகினிடு (நாகம்)
கொல (கதிரின் குலை)

ஒருவன் தன் தாய் மாமன் மகளை மணந்து கொள்வதே இவர்களிடையே பெருவழக்காக உள்ளது. எனினும் அத்தை மகளை மணக்கும் வழக்கமும் ஓரளவு இவர்களிடையே காணப்படுகிறது. இறந்து போன மனைவியின் தங்கையினை மணந்து கொள்ளுதலைச் சிறப்பாக இவர்கள் மேற்கொள்கின்றனர். இதே போன்று மனைவி நோய்வாய்ப்பட்டாலும் அவளுடன் பிறந்தவள் ஒருத்தியை மணந்துகொள்ளும் வழக்கம் இவர்களிடையே பொதுவாகக் காணப்படுகிறது.

விசாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த மேதரரைப் பற்றிய ஒரு குறிப்பில் திரு. சி. உறயவதன ராவ் கூறியிருப்பது வருமாறு:- பெண்கள் பூப்படைந்த பின்போ பூப்படையும் முன்போ மணம் செய்விக்கப் படுகின்றனர். மணச் சடங்குகளை ஒரு பிராமணனே நடத்தி வைக்கின்றான். கைம்பெண்கள் மீண்டும் ஒரே ஒரு முறை மட்டும் மறுமணம்செய்து கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். சத்தமானம் எனப்படும் தாலியினை அவ்வாறு மறுமணம் செய்கின்றவளுக்குப் புதிய கணவன், கூடலர் சாதியார் செய்வதைப் போல ஓர் உரலின் அருகே அமர்ந்து அவளுக்குக் கட்டுவான்.

மேதரர் அனைவரும் சைவர்களாகவே முன்பு இருந்து வந்தனர். இன்று பலர் வைணவம் சார்ந்தவர்களாக உள்ளனர். வைணவர்களாக உள்ளவர்கள் சிவனையும் கூட வழிபடுகின்றனர். ஒவ்வொரு குடும்பத்தவரும் சிறப்பாக ஒருவரையோ அல்லது சிலரையோ வழிபடும் வழக்கத்தையும் மேற்கொண்டுள்ளனர். திருமணம் ஆகும் முன்பே இறந்து போகும் சிறுவர்கள் வீராளு என்ற பெயரால் இவ்வாறு வழிபடப்படுகின்றனர். அத்தகைய வழிபாட்டுக்குரியவர்களின் உருவத்தை வெள்ளியால் செய்து ஒரு மூங்கில் பெட்டியில் வைத்திருப்பர். குடும்பத்தில் திருமணம் போன்ற சிறப்பான நிகழ்ச்சிகள் நடைபெறும் போது அதனை வெளியே எடுத்துப் பாலும் அரிசிக்கஞ்சியும் படைத்து வழிபடுவர். திருமணம் ஆகும் முன்பே இறந்து விட்ட கன்னியரைப் போலவே கணவனுக்கு முன்னர் இறக்கும் மனைவியரையும் பேராண்டலு என்பர்; பழங்கள், அரிசி, மஞ்சள், தேங்காய் முதலியன படைத்து அவர்களையும் வழிபடுகின்றனர்.

சைவர்களுள் சிலர் இறந்தவர்களை உட்கார்ந்த நிலையில் புதைக்கின்றனர். மற்றவர்கள் எரிக்கின்றனர். வைணவர்கள் அனைவரும் இறந்தவர்களை எரித்து அச்சாம்பலைச் சைவர்களைப்

போலவே ஆற்றில் விடுகின்றனர். பிணத்தை எரிக்கும் இடத்தில் நினைவுச் சின்னமாகக் கல் நடுவதோ மேடை அமைப்பதோ இல்லை. வசதி படைத்தவர்கள் மட்டும் அவ்விடத்தில் துளசி மாடம் அமைத்துத் துளசிச்செடியினை அதில் நட்டு வைக்கின்றனர். விசாகப்பட்டின மாவட்டத்தில் சாவுத் தீட்டினை மூன்று நாள் அளவு மேற்கொள்கின்றனர். அச் சமயம் அவர்கள் சாதிக்குரிய தொழிலை மேற்கொள்வதில்லை. மூன்றாம் நாள் ஒரு கோழியினைக் கொன்று சோறு சமைப்பர். அதனைப் பிணத்தை எரித்த இடத்திற்கு எடுத்துச் சென்று ஒரு பகுதியினை அவ்விடத்தில் தூவிய பின் எஞ்சியதை உண்பர்.

தாயத்துக்கள் தீய ஆவிகளை அண்ட ஒட்டாது விரட்டும் என இவர்கள் நம்புகின்றனர். மெல்லிய தங்கக் தகட்டில் பொறிக்கப்பட்ட அனுமனின் உருவமும் மந்திர வாசகமும் கூடிய தாயத்தினைக் கழுத்தில் அணிகின்றனர். கிரகணம் பிடிக்கும் நாளன்று எருக்கம் வேரினை எடுத்துத் தங்கத் தகட்டில் பொதிந்து அத்தாயத்தைப் பெண்கள் கழுத்திலும் ஆண்கள் இடுப்பு அல்லது கைகளிலும் அணிகின்றனர். பிற சாதியினரைப் போலவே இச் சாதியுள்ளும் சிலர் நெற்றி, மார்பு, முதுகு, கழுத்து ஆகிய உடல் உறுப்புக்களில் சூடிட்ட புண்ணின் தழும்பினைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். குழந்தைகளாக இருக்கும்போது வரும் வலிப்புகள் புகையிலையின் சுருட்டுப் புகை நிறைந்த காற்றோட்டமில்லாத அறைகளில் உள்ள தூய்மையற்ற காற்றைச் சுவாசிப்பதால் வருவதாகக் கருதப்படுகின்றன.

இந்தப் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்கள் செய்த வீர தீரச் செய்திகளைப் பற்றிப் பல வழக்கு வரலாற்றுக் கதைகள் வழங்கி வருகின்றன. ஒரு பானை சோற்றைக் கொண்டு மேதர சென்னய்ய என்பவன் சில ஆயிரம் பேர்களுக்கு உணவளித்ததாகக் கூறுகின்றனர். அவனுடைய பேரனான மேதர தொட்டய்ய கூடை முடைகின்றவனாயிருந்தும் நாளும் மும்முறை குளிக்கும் பழக்கத்தை மேற்கொண்டவனாக இருந்தான். தொழுநோயால் பீடிக்கப்பட்ட பிராமணன் ஒருவன் தன் கன்றுக்குட்டி காணாது போன போது அதனைத் தேடிச் சென்று மேதர தொட்டய்யன் குளித்த நீரானது தேங்கி நிற்கும் சாக்கடையில் விழுந்ததால் தன் தொழுநோய் நீங்கப்பெற்றான். மேதர கேத்தய்யன் என்பவனும் அவன் மனைவியும் மிகுந்த ஏழ்மையில் மூழ்கியிருப்பினும் தர்மம் செய்து வந்தபடி இருந்தனர். அவனைச் சோதிக்க ஈசுவரன் அவன் வெட்டும் மூங்கில்களினுள் மிகுதியும் தங்கத் தானிய மணிகள் இருக்கும்படி செய்தார். அவன் அந்த மூங்கில்களைப்

புழுக்களும் பூச்சிகளும் நிறைந்ததாகக் கருதி ஒதுக்கிவிட்டான். அதனருகே ஒரு புற்றின்மேல் மூங்கில் வளர்ந்திருக்கக் கண்டு புற்றிடத்தில் வளர்ந்த மூங்கிலில் பூச்சி புழுக்கள் இருக்க மாட்டா என நினைத்து அதனை வெட்டினான். அப்பொழுது அப்புற்றினுள் தவம் செய்தவராக இருந்த ஒரு முனிவரின் தலையினை வெட்டும் படியாயிற்று. தான் புரிந்த தவற்றினை உணர்ந்த அவன் ''சிவ சிவா'' எனக்கூறவும் பல மைல் தூரத்திற்கு அப்பாலிருந்த அவன் மனைவியின் காதில் அச்சொற்கள் விழவும் அவனுக்கு ஏதோ தொல்லை வந்துள்ளதென உணர்ந்த அவள் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தாள். அவன் அவளிடம் தன்னுடைய அந்தப் பாவத்திற்கு எப்படிக் கழுவாய் தேடிக்கொள்வது எனக் கேட்டான். அதற்கு அவள் ''நீங்கள் உயிரைப் போக்கிவிட்டீர்கள், அதற்கு ஈடாக ஓர் உயிரைத் தரவேண்டும் '' எனக் கூறினாள். அப்பொழுது அவன் தற்கொலை செய்து கொள்ள முற்பட்ட போது அவன் மனைவி அவன் கையிலிருந்த கத்தியைப் பறித்துத் தன்னையே குத்திக்கொள்ள முற்பட்டாள். அப்போது ஈசுவரன் அவர்கள் முன்தோன்றி அந்த முனிவரை உயிர் பெற்று எழும்படி செய்ததோடு மேதர கேத்தய்யனுக்கும் அவன் மனைவிக்கும் வீடு பேற்றினை அருளினார்.

வேறு பல சாதியார்களைப் போலவே இவர்களும் புதிதாக வீடு கட்டத் தொடங்கும் போது ஸ்தம்பன முகூர்த்தம் எனப்படும் கம்பம் நடும் சடங்கினை நடத்துவதோடு புதுவீட்டில் குடிபுகும் முன் தீப ஆராதனைச் சடங்கினையும் செய்கின்றனர். ஒவ்வொரு குடியிருப்பிலும் குலபெத்த எனப்படும் பரம்பரைச் சாதித்தலைவன் உள்ளான். இவனுள் வழக்கமான அதிகாரங்களோடு தண்டம் விதிக்கும் அதிகாரம், சாதி விலக்கம செய்யும் அதிகாரம், நடத்தை தவறிப் புறத்தில் உறவு கொள்பவர்களுக்குத் தண்டனை தரும் அதிகாரம், தாழ்ந்த சாதியாரோடு உண்பவர்களுக்குத் தண்டனை தரும் அதிகாரம் ஆகியனவற்றைப் பெற்றுள்ளான். சாதிவிலக்கம் பெறுபவன் தொழில் செய்யத் தேவையான மூங்கிலைப் பெற இயலாததாலும் சாதியாரோடு உண்ண அனுமதிக்கப்படாததாலும் சாதிவிலக்கம் கடுமையான தண்டனையாகவே கருதப்படுகிறது. கிருஷ்ணா, கோதாவரி மாவட்டங்களில் உள்ளூர்ப் பஞ்சாயத்து சபையினரால் தீர்க்க இயலாத சிக்கலான வழக்குகளை மகுலிப்பட்டினத்திலுள்ள சாதித் தலைவனிடம் கொண்டு போய்த் தீர்த்துக் கொள்வர். அவன் தற்போது நாட்டு வைத்தியனாக இருந்து வருகின்றான். குற்றம் இழைத்தவர்களைக் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கும் வழக்கம் இவர்களிடையே

இல்லை. ''பத்துப்பேர் உள்ள இடத்தில் தெய்வம் இருக்கும். அதன் முன்னிலையில் நான் உண்மையைச் சொல்கின்றேன்'' என்று இவர்கள் சபைகளில் வழக்கமாகச் சத்தியம் செய்வர்.

''ஒரு சிறுமி பூப்படைந்தால் ஓர் அறையில் புதிதாக வெட்டப்பட்ட ஐந்து பனையோலைகளின் மேல் அவள் அமர வேண்டும்.'' மஞ்சள் நீரில் குளிக்கும் அவள் உப்பினைச் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. குழந்தை பிறக்கும் போது தலைக்குப் பதிலாகக் கால் முதலில் வெளிப்படுமானால் அக்குழந்தையின் தாய்மாமன் சாந்திச் சடங்கு நடந்து முடியும் வரை அக் குழந்தையின் அழுகுரலைக் கேட்கக் கூடாது. இச் சாந்திச் சடங்கில் ஒரு பிராமணன் சில மந்திரங்களைச் சொல்ல ஒரு தட்டில் வைக்கப்பட்டுள்ள எண்ணெயில் தெரியும் அக்குழந்தையின் முகத்தின் நிழலை அதன் தாய் மாமன் பார்ப்பான். கைம்பெண்கள் மறுமணத்தை இவர்கள் அனுமதிக்கின்றனர். தாலி, கண்ணாடி வளையல்கள், காலில் இரண்டாம் விரலில் மெட்டி ஆகியன இல்லாதிருத்தலைக் கொண்டு ஒருத்தியைக் கைம்பெண் என அடையாளம் கண்டுகொள்ளலாம்.

மேதரர் தாங்கள் கோமட்டி, வெலமர் ஆகிய சாதியாரைவிடத் தாழ்ந்த சாதியாரோடு உடன் உண்பதில்லை எனக் கூறுகின்றனர். சிலர் இவர்கள் சாதானிகரோடும் உண்பர் எனக் கூறுகின்றனர்.

குடகு நாட்டில் மேதரர் குடைகள் செய்து வாழ்க்கை நடத்தி வருகின்றனர். குடகில் நடக்கும் திருவிழாவில் முரசு கொட்டும் உரிமையும் இவர்களுடையதேயாம். குடகில் அறுவடைச் சமயத்தில் தங்கள் பகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு குடும்பத்தாரிடமிருந்தும் இவர்கள் பன்னிரண்டு முழ நீளமுள்ள கயிற்றில் அறுத்த நெற்பயிரில் எவ்வளவு வைத்துக் கட்டிக் கொள்ள முடியுமோ அவ்வளவு வைத்துக் கட்டித் தூக்கிச் செல்லும் உரிமை பெற்றுள்ளனர். குடகுப்பகுதி மக்களைப் போல இவர்கள் உடை அணிந்தாலும் அவை தரமானவையாக இருப்பதில்லை.*

வைஎறட் பாதிரியார் இவர்களைப் பற்றி பதிந்துள்ள* தகவல்கள் வருமாறு:- ''மெர்க்காரா வட்டத்தில் உள்ள இப்பன

* ஜி. ரிச்சேர் - குடகு மாவட்டக் கையேடு (G. Ritchcer, Manual of Coorg.)

* சென்னை அருங்காட்சியக மடல் V. 3, 1907. (Madras Museum.Bull, V, 3 1907.)

வொலவடெயிலிம், உறலெரி நாட்டில் உள்ள கடிகெரையிலும் ஊரார் கோணா எனப்படும் எருமைக் கடாவினைப் பலியிடுகின்றனர். அதனைக் கோயிலுக்கு அருகே உள்ள மரங்கள் அடர்ந்த தோப்பில் ஒரு மரத்தில் கட்டிப் போட்டுப் பலியிடுகின்றனர். மேதரன் ஒருவன் பெரிய கத்தியால் அதன் தலையை வெட்டிக் கொல்கிறான். அப்பொழுது குடகைச் சேர்ந்த யாரும் அவ்விடத்தில் இருப்பதில்லை. பலி எருமைக் கடாவின் குருதியினை மரத்தின் அடியே உள்ள ஒரு கல்லின் மீது ஊற்றுகின்றனர். எருமையின் ஊனினை மேதரர் உண்கின்றனர்.''

1901 கணக்கெடுப்பில் கௌரிக என்பது மேதரரின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. இவர்களுள் வசதி படைத்தோர் தங்களைப் பலிசர் எனக் கூறிக் கொள்வதோடு செட்டி என்ற பட்டப் பெயரையும் தங்கள்பெயரோடு சேர்த்துக் கொள்கின்றனர். கொது குலத் தவரான மூங்கில் பிளாச்சில் பணிபுரிபவர்கள் தங்கள் ஒட்டே (ஒரிய) மேதரர் எனக் கூறிக் கொள்கின்றனர்.[1]

மேடை : Mēda

மேட்டுக்கரை எனப் பொருள்படும் இது பத்ம சாலேக்களின் புறமணக்கூடுப்பாடு உடைய ஒரு குலமாகும்.

மெடம் : Medam (fight)

தேவாங்கரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். சண்டை எனப் பொருள்படுவது.

மெக்தர் : Mehtar

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சில மெக்தர்கள் தங்களை மத்திய மாகாணங்களைச் சேர்ந்த துப்புரவுத் தொழிலாளராகப் பதிந்து கொண்டுள்ளனர். இந்தப் பெயரைப் பற்றி யேலும் பர்னலும் கூறியுள்ளதாவது:-[2] ''இந்தப் பெயர் வங்காளத்தில் இவ்வகுப்பாரான வீட்டு வேலைக்காரர்களைக் குறிக்க வழக்கில் உள்ளது. பார்சி கலப்புச் சொல்லான மிகடர் (லத்தீன் மேஜர்) பெரிய மனிதர், இளவரசர் போன்றவர்களையும் தனித்து ஒதுங்கிவிட்டவர்களான வகுப்பாரையும் குறிக்க வழங்கப்பட்டது. இப்பெயர் விதிக்கு ஆட்பட்

[1] இக்கட்டுரையில் சில பகுதிகளுக்கு நான் திரு ஜெ.டி. சாமுவேல் அவர்களின் குறிப்பு ஒன்றுக்குக்கடப்பாடுடையேன்.

[2] Hobson - Jobson

டவர், தனித்து விடப்பட்டவர் என்ற அதன் பொருட்பேற்றினை முழுவதுமாகத் தற்போதைய வழக்கில் இழந்து விட்டது. இப்பொழுது இது துப்புரவுத் தொழிலாளரைத் தவிர வேறு யாரையும் குறிப்பதில்லை. இவர்களின் மனைவியர் மட்ரணி எனப்படுவர். மெக்தர் இருவர் ஒருவரை ஒருவர் மகராஜ் எனக் கூறி அழைத்துக் கொள்வதை அடிக்கடி கேட்கலாம்.''

மெய்க்காவல் : Meikāval (body-guard of the god)

பண்டாரங்களுக்கான ஒரு பெயர். தெய்வங்களின் காவலர் எனப் பொருள்படுவது.

மேகல : Mēkala (goats)

போயர்,செஞ்சு, கோல்லர், கம்மர், காபு, தோகடர், ஏனாதியர் ஆகிய சாதியாரின் புறமணக்கட்டுப்பாடுடைய குலத்தின் பெயர். ஏனாதியரிடையே நெரிகி மேகலா (ஒருவகை வெள்ளாடு) என்ற குலப்பிரிவும் உள்ளது. மேகல என்பது வெள்ளாட்டினைக் குறிக்கும்.

மேக்ரி : Mēkhri

நவாய்ட் முகமதியரின் ஓர் உட்பிரிவாகும்.

மேலாச்சேரி : Mēlāchchēri

இலக்கத் தீவில் வாழும் முகமதிய வகுப்பார் (பார்க்க:மாப்பிள்ளா)

மேளத்தவ : Mēladava

தென்கன்னடத்தின் நாட்டிய மகளிரைக் குறிக்கும் பெயர்.

மேளக்காரன்: Mēlakkāran

மேளக்காரன் பற்றித் தஞ்சாவூர் மாவட்ட விவரக் குறிப்பில் திரு. எப்.ஆர் ஹெமிங்வே பின்வருமாறு எழுதுகின்றார். ''இப்பெயர் இசைவாணர் எனப் பொருள்படும். தஞ்சாவூரைப் பொருத்தமட்டில் இப்பெயர் இரு வேறு சாதிகளாக உள்ள தமிழ் மேளக்காரர்களையும், தெலுங்கு மேளக் காரர்களையும் (இவர்கள் அம்பட்டர்களான இசைவாணர்கள்) குறிப்பதாகும். இவ்விரு பிரிவினரும் ஒருவர் வீட்டில் ஒருவர் உண்பதில்லை. அதே சமயத்தில் மற்றவர்கள் இல்லத்தில் உண்பது பற்றி இவர்கள் ஒரே மாதிரியான கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றனர். வேளாளன் வீட்டின் தனியே ஓர் அறையிலிருந்து உண்பதாகக் கூறும் இவர்கள் கள்ளர்கள் இல்லத்திலும் உண்பதாகக்

கூறுகின்றனர். எனினும் பிராமணர் அல்லாதவர்களுள் தாழ்ந்த சாதியாரைத் தவிர மற்றவர்கள் இவர்களோடு உடன் உண்கின்றனரா என்பது ஐயத்திற்கு இடமானதே. மற்றப் பழக்க வழக்கங்களில் இவ்விரு சாதியாரும் வேறுபட்டவர்களாகவே உள்ளனர். முன்னவர்கள் தமிழ் பேசுகின்றனர். பெரும்பாலான பழக்க வழக்கங்களில் இவர்கள் வேளாளரையும் பிற உயர்ந்த தமிழ்ச் சாதியாரையும் பின்பற்றி வருகின்றனர். பின்னவர் தெலுங்கு பேசுகின்றனர். பழக்க வழக்கங்களில் இவர்கள் தெலுங்குப் பிராமணர்களைப் பின்பற்றுகின்றனர். இரு பிரிவினரும் இசைவாணர்களே. தெலுங்கர் இசை மட்டும் வாசிக்கின்றனர். கிளாரினெட் அல்லது நாகசுரம், குழல், தவில், கைத்தாளம் ஆகியன கொண்ட இவர்கள் இசைக்குழு பெரிய மேளம் எனப்படும். இவர்களுக்கு நாட்டிய மகளிரின் இசையான நட்டுவாங்கத்தோடு எத்தகைய தொடர்பும் இல்லை. தமிழ் மேளக்காரர் மாநிலத்தில் உள்ள நாட்டிய மகளிர் அனைவருக்கும் நட்டுவாங்கம் வாசிப்பவர்களாகச் செயல்படுகின்றனர். நாட்டிய மகளிரான இவர்களின் பெண் மகளிர் அனைவரும் தங்கள் தாயாரின் தொழிலினையே மேற்கொள்கின்றனர். இச்சாதியினைச் சேர்ந்த ஆண்பாலாரின் பெண் குழந்தைகள் பெரும்பாலும் நாட்டியத்தொழிலில் ஈடுபடுவதில்லை. அப்பெண்கள் இச்சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு மணம் செய்விக்கப்படுகின்றனர். தமிழ் மேளக்காரர்கள் பெரிய மேளம் நட்டுவாங்கம் ஆகிய இரு இசைகளையும் மேற்கொண்டு நிகழ்த்துகின்றனர். நாட்டிய இசையான நட்டுவாங்கத்தோடு ஆண்களும் பெண்களுமாக இணைந்து குழலும் கைத்தாளமும் உடன் இசைக்கப்பாடுவர். இதனை இசைப்பவர்கள் நட்டுவனார் எனப்படுவர். இவர்களே பெண்களுக்கு நடனம் கற்றுத் தருபவர்கள். திருமணங்களின் போது பெரிய மேளம் இன்றியமையாது தேவைப்படும். நட்டு வாங்கத்தோடு கூடிய நடன நிகழ்ச்சியினை வசதி படைத்தவர்கள் மட்டுமே நடத்துவர். இப்பொழுதெல்லாம் இசைக் கலைகளில் தேர்ந்தவர்கள் நாட்டிய மகளிரோடு தொடர்பேதும் அற்றவர்களாக விலகியே இருந்து வருகின்றனர். தெலுங்கர், தமிழரான இரு பிரிவு மேளக்காரர்களும் தங்கள் தங்கள் பிரிவினைப் பற்றி மிக உயர்வாகவே மதித்து வருகின்றனர். தமிழ் மேளக்காரர்கள் தங்களைக் கள்ளர், வேளாளர், அகமுடையார் எனக் கூறிக் கொள்வதோடு தாங்கள் இந்தத் தொழிலை மேற்கொள்ள நேர்ந்தது எதிர்பாராது நிகழ்ந்ததென்பர்'' நாட்டுக்கோட்டைச் செட்டிகளின் கோயில்களில் பணியாற்றும் வைராவி மேளக்காரர் சாதியினைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும் என்பது விதி.

மெல்லிகள்ளு: Mellikallu

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் 76 பேர் தங்களை மெல்லிகள்ளு அல்லது மல்லிகள் என்ற பெயரில் பதிந்துள்ளனர். ''இவர்கள் விசாகப்பட்டினம் முகவர் பகுதியினைச் சேர்ந்த வீரவில்லி வட்டத்தில் உள்ள பெதகோட்ட என்ற ஊரினைச் சேர்ந்த மலைப் பகுதிகளில் பயிர்த்தொழிலில் ஈடுபட்டிருப்போர். இவர்கள் தங்களை ஒரு தனிச் சாதியாகக் கருதுகின்றனர். இவர்களைத் தொட்டால் தீட்டாகும். தங்களுக்கெனத் தனியே புரோகிதரைக் கொண்டுள்ள இவர்கள் பன்றி இறைச்சியினை உண்கின்றனரேயன்றி மாட்டிறைச்சியினை உண்பதில்லை.

மேல்நாடு: Mēlnādu

மேல்நாடு, அல்லது மேல் நாட்டார் என்பது மேற்குப் பகுதியில் உள்ள நாட்டைச் சேர்ந்தவர்கள் எனப் பொருள்படும். கள்ளர், சாணர் சாதிக்குரியதான வட்டார அடிப்படையில் அமைந்த பெயராகும் இது.

மேலுசக்கரை: Mēlu Sakkare

இது மேற்குப் பக்கத்துச் சர்க்கரை எனப் பொருள்படும். மைசூரினைச் சேர்ந்த உப்பரர் தங்களை இவ்வாறு சிறப்பித்துக் கூறிக்கொள்வர். வங்கக் கடலைத் தோண்டியவராகத் தொன்மம் கூறும் சகரர் மரபில் வந்தவர் தாங்கள் என இவர்கள் கூறிக் கொள்கின்றனர். சில உப்பரர்கள் தங்கள் பெயர் பற்றித் தாங்கள் உப்புக் காய்ச்சும் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும் அது சர்க்கரையை விட இன்றியமையாது வேண்டப்படுவதால் உயர்ந்த சர்க்கரை என்ற பொருளில் தாங்கள் மேல் சர்க்கரை என வழங்கப்படுவதாகவும் கூறுவர்.

மேமன்: Mēman

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பின் போது பம்பாயைச் சேர்ந்த வணிகர்களான முகமதிய வகுப்பாரான இவர்கள் முந்நூறு பேருக்கு மேலே தங்களை மேமன் எனப் பதிந்து கொண்டுள்ளனர். பம்பாய் மாநில விவரக் குறிப்பில் கட்சினைச் சேர்ந்த மேமன்கள் கராச்சி, பம்பாய், மலபார் கடற்கரை, ஐதராபாத், சென்னை, கல்கத்தா, ஜான்சிபார் ஆகிய இடங்களில் வணிகத்தில் வளம் பெற்று வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

மெனசு: Mēnasu (pepper or Chilles)

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலமாகவும் குர்ணிகளின் கோத்திரம் ஒன்றின் பெயராகவும் இது உள்ளது. மிளகு அல்லது மிளகாய் எனப் பொருள்படும்.

மேனாக்கி: Mēnōkki (Overseer)

மேனாக்கி அல்லது மேனோக்கி என்பது திருவாங்கூர் கொச்சி கணக்கெடுப்பில் நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. இவர்கள் கோயில்களில் கணக்குப்பிள்ளைகளாகப் பணிபுரிபவர்கள். மேற்பார்வை இடுபவர் என்பது இதன் பொருளாகும்.

மேனோன்: Mēnōn

''மேனோன் என்பது சாமுத்திரியால் முதலில் தன் முகவர்களுக்கும் எழுத்தர்களுக்கும் வழங்கப்பட்ட பட்டமாக இருந்து இன்று நாயர் சாதியினைச் சேர்ந்த அனைவராலும் பயன் படுத்தப்படுவதாக வழக்கில் உள்ளது. மலபாரில் ஊர்க் கணக்கன் மேனோன் என அழைக்கப்படுகின்றான்'' எனத் திரு விக்ரம் கூறியுள்ளார்.* 1901 திருவாங்கூர் கணக்கெடுப்பு அறிக்கையில், ''மேனான் என்பது மேலானவன் எனப் பொருள்படும். மேலவன் என்பதன் மரூஉவாகும் எனக்கூறப்பட்டுள்ளது. இப்பட்டத்தைக் கொச்சி அரசர் பல குடும்பத்தவர்களுக்கு வழங்கியுள்ளார். தெற்கில் பிள்ளை என வழங்கும் பட்டத்திற்கு இது சமமானதாகும். ஒருவனுக்கு மேனோன் எனப் பட்டம் தரப்பட்டவுடன் அவன் கணக்கனாகப் பொறுப்பு வகிக்கும் தகுதி படைத்தவன் என்பதன் அடையாளமாக அவனிடம் பனை ஓலையும் இரும்பு எழுத்தாணியும் தரப்படும். இன்றும் ஆங்கிலேயரின் ஆளுகைக்கு உட்பட்ட மலபாரில் அம்சம் எனப்படும் கிராமம் ஒவ்வொன்றுக்கும் உரியவனான கணக்கன் மேனோன் என்றே அழைக்கப்படுகின்றான்'' எனக் கூறப்பட்டுள்ளது. திரு. எப். பாவ்செட் எழுதுவதாவது:-@ ''சாமுத்திரியோடு உறவுடைய குலத்தவர்களுள் தகுதி உடையவர்களுக்கு அவர்களைச் சிறப்பிக்க அவர்கள் தங்கள் பெயரோடு இணைத்துக் கொள்ள மேனோன் என்ற பட்டத்தைச் சாமுத்திரி வழங்கினான். இப்பட்டம் பரம்பரையாகச் சூடிக் கொள்ள உரிமை உடையதெனினும் இன்று இப்பட்டத்தைத் தரித்துள்ள பலர் அதற்குத் தகுதியுடையவர்கள் அல்லர் என்பதனை நினைவில் கொள்ள

* மலபார் சட்டங்களும் வழக்குகளும், (Malabar law and custom - Wigram))

@ சென்னை அருங்காட்சியக மடல், III, 3, 1901. (Madras Museum Bull. III 3, 1901.

வேண்டும். உண்மையில் பார்க்குமிடத்துச் சாமோரினாலோ வேறு தகுதியுடைய தலைவர்களாலோ ஒருவருக்குத் தரப்பட்டு அவருடைய பெண்வழிச் சந்ததியினர் தரித்து வருவதற்குரிய பட்டம் இது எனக் கூற வேண்டும். எனக்குத் தெரிந்த ஒருவருக்கு 1895இல் கரிம்புழா தலைவரால் மேனோன் என்ற பட்டம் வழங்கப்பட்டது. பெரும் எண்ணிக்கையில் கூடியுள்ளவர் முன்னிலையில் அவர், 'இன்றிலிருந்து நான் கிருஷ்ணன் நாயருக்குக் கிருஷ்ண மேனோன்' என்ற பட்டத்தை வழங்குகின்றேன்.' என மும்முறை கூறினார். இன்று நாயர்களுள் 'அகத்துசார்ன' பிரிவினைச் சேர்ந்தவர்கள் நீங்கலாக மற்ற அனைவராலும் இப்பட்டம் தரித்துக்கொள்ளப்படுகிறது. ஆங்கிலேயர் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் பட்ட வகுப்பில் பயிலும் கிருஷ்ண மேனோன், ராமன் மேனோன், ராமுண்ணி மேனோன் என்ற பெயரை உடையவர்கள் திரு மேனோன் என்று மட்டுமே அழைக்கப்படுகின்றனர். இதே போன்று மராட்டிய மாணவர்கள் அவர்களுடைய பட்டப் பெயரால் திரு ராவ் என அழைக்கப்படுகின்றனர்.

மேர: Mēra

ஹொலையர்களின் ஓர் உட்பிரிவு

மெரியா: Meria

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் இருபத்தைந்து பேர் தங்களை மெரிய அல்லது மெரகாய எனப் பதிந்துள்ளனர். இவர்கள் மனித உயிர்பலிக்காக என வளர்க்கப்பட்டுப் பின்னர் அரசு அலுவலர்களால் சென்ற நூற்றாண்டின் இடைப்பட்ட பகுதியில் மீட்கப்பட்டவர்களின் சந்ததியினர்.

மேஸ்டர்: Mēsta

தென்கன்னடத்தைச் சேர்ந்த சப்தேகாரர் (தச்சர்கள் சூடிக்கொள்ளும் பெயர்)

மேஸ்திரி: Mēstri

செம்மான்கள் மற்றும் பிற தமிழ் வகுப்பாருக்கான பட்டப்பெயர். பாணான் சாதித் தையல்காரர்களும் மேஸ்திரிகள் என அழைக்கப்படுகின்றனர். மேஸ்திரி அல்லது மாய்ஸ்தி என்ற சொல்லினைப் பற்றி யேலும் பர்னலும் பின்வருமாறு எழுதுகின்றனர்.* ''இச்சொல் போர்த்துக்கீசியச் சொல்லான மெட்ஸ்ரே என்பதன் சிதைந்த

*Hobson- Jobson.

வடிவமாக இந்திய மொழிகள் பலவற்றுள்ளும் வழக்கில் இருப்பதோடு ஆங்கிலோ இந்திய மொழிச் சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனுடைய சரியான பொருள் தலைமைப் பணியாளன் என்பதாகும். மேற்கு இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் வீட்டில் சமையல்காரர்களாக இருப்பவர்களையும் தையல்காரர்களாக இருப்பவர்களையும் குறிக்க இச் சொல் பொதுவாகப் பயன்படுத்தப் படுகின்றது.

மெட்டுக் கம்சாளி: Mettu Kamsāli

ஒஜலி கொல்லன்களுக்கான மற்றுமொரு பெயர். மெட்டு என்பது செருப்பு அல்லது காலணியினைக் குறிக்கும்.

மகால்லொ: Mhallo

கொங்கணி நாவிதர்களுக்கான ஒரு பெயர்.

மிடாதல: Midathala (locust)

போயர், மாதிகன்களுக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயர். வெட்டுக்கிளி என்பது இதன் பொருள்.

மித்தல அல்லது மெத்தல : Middalor or Meddapa (storeyed house)

பத்ம சாலேக்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

மிடிச்சி : Midichi (locust)

குர்ணிகளின் ஒரு கோத்திரம், வெட்டுக்கிளி எனப் பொருள்படுவது.

மீலா: Mīla

மீலாக்கள் கஞ்சம், விசாகப்பட்டினம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர் சாதியார். இவர்களைப் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு சி. ஹயவதன ராவிற்குக் கடப்பாடுடையேன். மீலவாண்டுலு எனப் பொதுவாக இவர்கள் அழைக்கப்படுகின்றனர். மீனவர் என்பது இதன் பொருளாகும். கடலில் ஓடத்தில் ஏறி மீன்பிடிக்கச் செல்வதால் இவர்கள் ஓடவாண்டுலு எனவும் அழைக்கப்படுகின்றனர். நல்ல வளமான வாழ்க்கை அமைந்தவுடன் இவர்கள் தங்களை ஓடப் பலிசர் என மேம்படுத்திக் கூறிக் கொள்கின்றனர். இச் சாதியினுள் புறமணக் கட்டுப்பாடு உடைய பல குலப்பிரிவுகள் உள்ளன. தோணி, தோட்டம் என்பன அத்தகைய குலங்களின் பெயர்களுள் சிலவாம். ஒருவன் தன்

தாய்மாமன் மகளை மணந்து கொண்டேயாக வேண்டிய மீநரிகம் என்ற வழக்கம் இவர்களிடையே உள்ளது. ஒருவன் தன் அத்தை மகளையும் மணக்கலாம். பெண்கள் பெரும்பாலும் பூப்படைந்த பின்னரே மணம் செய்விக்கப்படுகின்றனர். 'வோலி' எனப்படும் பரிசப் பணத்திற்குப் பதிலாக இவர்கள் பொன் நகைகளாகத் தருகின்றார்கள். திருமணத்தின் போது மணமகள் இல்லம் செல்லும் ஆறு ஆண்களும் ஆறு பெண்களும் மணமகள் இல்லத்தில் சிறப்பாக விருந்திட்டு உபசரிக்கப்படுவர். பின்னர் அவர்கள் மணமகளை மணமகன் இல்லத்திற்கு அழைத்துச் செல்வர். மணமகன் வீட்டு வாசலில் மணைப் பலகை இட்டு அதில் மணமக்கள் அமர்வர். அவர்கள் முதலில் குளித்துப் புத்தாடை புனைவர். அவர்கள் உடுத்தியிருந்த பழைய உடைகள் நாவிதனுக்கு வழங்கப்படும். மீண்டும் அவர்கள் மணைப் பலகையில் அமரச் சாதித் தலைவனான எசமான் தாலியினை எடுத்துக் கூடியுள்ளவர்களிடையே அனுப்பி வைப்பான். அதன்பின் மணமகன் மணமகளின் கழுத்தில் அத் தாலியினை அணிவிப்பான். கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு கிராமத்திற்கும் எசமான் என்ற தலைவன் உள்ளான். மணச் சடங்கினை நடத்தி வைப்பதோடு ஊர்ச் சபைக் கூட்டங்களைத் தலைமை தாங்கி நடத்தவும் தண்டத் தொகை விதித்து வசூலிக்கவும் உரிமையுடையவன், போலம்மா இவர்கள் சாதிக்குரிய தெய்வம். அவளுக்கு உயிர்களைப் பலியிடுவதோடு ஆண்டுதோறும் திருவிழாவும் கொண்டாடுகின்றனர். அதற்கான செலவுகள் வரி விதித்தும் நன்கொடைகள் திரட்டியும் செய்யப்படுகின்றன. இறந்தவர்களை எரிக்கும் இவர்களுடைய சாவுச் சடங்கில் சதானி ஒருவன் சாவுச் சடங்குகளை நடத்தி வைக்கின்றான். சாவுத் தீட்டு மேற்கொள்ளப்படுவதில்லை. பன்னிரண்டாம் நாள் பெத்த ரோசு (பெரிய நாள்) சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. அண்ணா, அய்யா என்பன சாதிக்குரிய பட்டப்பெயர்களாகும்.

மிளகு: Milaku (Pepper; *piper nigram)*

கொண்டையங்கோட்டை மறவர்களின் ஒரு கொது (குலம்)

மிலிகான்: Milikhān

இலக்கத் தீவுகளைச் சேர்ந்த முகமதியர்களான இவர்கள் கடலில் கலஞ் செலுத்துவோரும் கலங்களில் பணிபுரிவோருமாவார் (பார்க்க : மாப்பிள்ளா)

மீனளவாரு : Minalavāru (fish people)

பேடர் எனப்படும் போயர் சாதியினைச் சேர்ந்த புறமணக்கட்டுப்பாடு உடைய குலத்தவர். தெலுங்கு நாட்டில் குடியேறி மீன்பிடித்தலைத் தொழிலாக மேற்கொண்டுள்ள பள்ளியர் மீன்பள்ளி என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர்.

மிஞ்சி: Minchu (metal toe-ring)

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்

மினி: Mini (Leāther rope)

குர்ணிகளின் ஒரு கோத்திரம். தோலாலான கயிறு என்பது பொருள்.

மீன்பிடி: Minpidi (fish catching)

பாணன்களின் ஓர் உட்பிரிவு

மிரபகாய: Mirapakāya (*capsicum frutescens*)

போயர்களின் புறமணக் கட்டுப்பாடுடைய ஒரு குலம். மிளகாய் எனப் பொருள்படுவது.

மிரிகணி: Mirigani

தோம்புகளின் ஓர் உட்பிரிவு

மிரியாள: Miriyala (pepper)

பலிசர்களின் புறமணக் கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

மீர் சிகரி: Mir Shikari

குருவிக்காரன் என்பதற்கான மற்றுமொரு பெயர்

மீசாளர்: Mīsāla (whiskers)

போயரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். மீசை என்பதனடியாகப் பிறந்த பெயர்.

மீசை: Mīse(moustache)

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடு உடை ய ஒரு குலம்.

மொச்சி: Mochi

பார்க்க : முச்சி (See : Mucchi)

மோடிக்காரன் : Mōdikāran

வித்தை காட்டுவதில் ஈடுபடும் நோக்கன்களான இரவலருக்கு இப்பெயர் சில போது உரியதாகின்றது. இருவரிடையே மாயவித்தை நடத்துவதில் யார் கெட்டிக்காரர்கள் என்பதனைச் சோதிக்கப் பயன்படும் வித்தையே மோடி வித்தை. இதில் பணத்தை மறைப்பதே முக்கியமான செயலாக மேற்கொள்ளப்படுகின்றது.

மோதுகர்: Mōduga (*Butea frondosa*)

மேதரரின் ஒரு கோத்திரம்

மொகேர்: Mogēr

தென் கன்னடத்தைச் சேர்ந்த துளு பேசும் மீனவர்கள் மொகேர். இவர்களுள் பெரும்பாலோர் மகள் வழிச் சொத்துரிமை பேணும் அளிய சந்தான முறையினைப் பின்பற்றுபவர்கள். மாவட்டத்தில் வடக்குப் பகுதியில் வாழும் சிலர் கன்னடம் பேசினாலும் மகன் வழி உடைமை உரிமை பேணும் வழக்கினை மேற்கொண்டுள்ளனர்.

மொகேர் பெரும் அளவில் கடலில் மீன் பிடிப்பவர்களாகவும் அரசுக்குச் சொந்தமான மீன் பதப்படுத்தும் பண்ணைகளில் பணியாளர்களாகவும் உள்ளனர். மங்களூரில் உள்ள இந்தப்பண்ணைகளில் ஒன்றுக்கு நான் நேரில் சென்றிருந்த போது பண்ணை அலுவலகத்தில் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ரம்ப மீனின் ரம்பம் என் கவனத்தைக் கவர்ந்தது. அது பற்றிக் கேட்ட போது பண்ணையில் மற்றவர்களைப் பயமுறுத்த உதவும் ஒரு கருவியாக அது இருந்து வருகின்றது எனக் கூறினர். மீன் பிடிக்கும் உரிமத்தினை மாப்பிள்ளாக்களும் மொகேர்களுமே பெற்றுள்ளனர். மொகேர் சிலர் ஆசி வலை எனப்படும் தட்டு வலையினைப் பயன்படுத்துகின்றனர். இதனைப் பயன்படுத்துபவர்கள் மீன்களை வலையினுள் விரட்டப் படகின் பக்கங்களைத் தட்டுவர். இம்முறைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் இவ்வாறு குச்சிகளால் தட்டப்படுவதால் ஏற்படும் சப்தம் 'மக்கெரெல்' மற்றும் 'சர்டினெ' மீன்களின் குழுக்களை அச்சுறுத்தித் தூர விலகி ஓடும்படிச் செய்து விடுகின்றது என என்னிடம் கூறினர். இந்தத் தட்டு வலைகளைப் பயன்படுத்துவதற்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் சில ஆண்டுகளுக்கு முன்பு இவ் வலைகளைத் துண்டு துண்டாக வெட்டிக் கடலில் எறிந்தனர். இதன் காரணமாக மூண்ட கைக்கலப்பில் பங்குபெற்ற பத்தொன்பது பேருக்கு ஐம்பது ரூபாய் தண்டத்தொகையும் மூன்று மாதங்கள் சிறைத் தண்டனையும்

விதிக்கப்பட்டன. நான் மீன் பண்ணையினை மேற்பார்வையிடச் சென்றது தொடர்பாக என்னிடம் பின்வரும் சுருக்கமானதொரு அறிக்கையினைத் தந்தனர். ''உடுப்பி நகரத்தில் வாழும் மொகேர்கள் அந்த நகரத்தில் பணியாற்றும் வருவாய் மற்றும் குற்றவியல் அரசுத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு நாள்தோறும் காலையில் ஒரு கயிற்றில் நிறைய மீன்களைக் கோத்துக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இந்த வழக்கத்தை இருபது ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தி வைத்தவர் ஓர் உள்ளூர் வட்ட ஆட்சியர். அந்த நாள்களில் வட்ட ஆட்சியர்களே குற்றவியல் நடுவருக்கான அதிகாரங்களையும் பெற்றிருந்தனர். செல்வர்களும் ஏழைகளும் ஒருங்கே நடுநடுங்கியவர்களாக அவர் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும்படியாக ஆணையிடும் அதிகாரம் படைத்த கொடுங்கோலர்களாக அவர்கள் இருந்தனர். குற்றவியல் நடுவர் என்ற பொறுப்பிலிருந்து தாசில்தார் விடுவிக்கப்பட்டவுடன் , சட்டத்திற்கு உட்பட்டுக் கட்டுத் திட்டங்களுடன் நடந்து கொள்பவர்களுக்கு அவர் செத்த பாம்பிற்குச் சமமானவராகவே தோன்றினார். எனினும்அந்தப் பழைய மீன் கொடுக்கும் வழக்கம் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வந்தது. பதினான்காம் லூயியினுடைய அரசவையைச் சேர்ந்த பெருமக்களைப் போல நன்கு உண்டு கொழுத்த வசதி படைத்த அலுவலர்களின் காலை உணவிற்காக ஏழை மீனவர்கள் இரவு முழுவதும் தொல்லைக்கு உள்ளானவர்களாக மீன் பிடித்து வழக்கப்படி தர வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானவராக உள்ளனர்''. மலபாரைச்சேர்ந்த கண்ணனூரில் நடைமுறையில் உள்ள ஒரு விசித்திரமான வழக்கத்தைப் பற்றியும் இங்குக் கூறலாம் எனக் கருதுகின்றேன். 1873 இல் முனைவர் பிரான்சிஸ் டே* இது பற்றி எழுதியுள்ளதாவது: ''கண்ணனூர் அரசரின் பூனைக்கு மீன்பிடி தொழிலின் ஒரு துறையினைச் சேர்ந்த மீன் பிடிப்பவர்கள் மீது மிகுந்த செல்வாக்கு இருப்பதாகத் தெரிகின்றது. முன்பு ஒவ்வொரு படகிலிருந்தும் பசாமின் என அரசரின் பூனைக்காக ஒரு மீனினை எடுத்துக் கொள்ளும் வழக்கம் இருந்தது. மீன் பிடி படகுகளின் எண்ணிக்கைக்குத் தக்கபடி அரண்மனையில் பூனைகளின் எண்ணிக்கை பெருகாத காரணத்தால் மீனோடு கரைக்குத் திரும்பும் ஒவ்வொரு படகுக்காரனிடமிருந்தும் ஒரு மீனுக்குப் பதிலாக இரண்டு காசுகள் வசூலிக்கும் வழக்கமாக அது மாறியது. இதனோடு கூட அரசர் ஒவ்வொரு படகுக்கும் வரியாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2-4-0 விதித்து

* இந்தியாவில் கடல் மீன்பிடி தொழில். (Sea Fisheries in India.)

வந்தார். சுறா மீன்களின் துடுப்புக்களில் சரிபாதியினையும் அரசருடைய பூனைக்கான மீன் வசூலிக்கும் உரிமையினை ஏலம் எடுத்தவர்கள் கைப்பற்றி வந்தனர்.''

மொகேர் பற்றிப் புச்சனன்[@] பின்வருமாறு எழுதுகின்றார்:- ''மொகயர் எனப்படும் இம் மீனவர்கள் துளு சாதியார். இவர்கள் மலையாளத்தைச் சேர்ந்த முக்குவன்களோடு படகு வலிப்போர், மீன்பிடிப்போர், சுமை தூக்குவோர்,பல்லக்குச் சுமப்போர் எனப் பல்வேறு பணிகளிலும் ஈடுபட்டுள்ளவர்களாக உள்ளனர். கலப்பில்லாத சூத்திரச் சாதியாராகத் தங்களைப் பற்றி உயர்வாகக் கருதும் இவர்கள் ஹலேபைக்குகளை விடச் சாதியில் உயர்ந்தவர்களாகக் கூறிக் கொள்ளினும் பண்டார்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்பதனை ஒப்புக் கொ[illegible]கின்றனர்.'' மொகேர் சிலர் தங்கள் பரம்பரைத்தொழிலான மீன்பிடித்தலைக் கைவிட்டுப் பயிர்த்தொழில், செக்காட்டுதல், இசைக்கருவிகள் இசைத்தல் ஆகிய தொழில்களை மேற் கொண்டுள்ளனர். எண்ணெய் ஆட்டுவோர் தங்களைக் காண்கர் எனவும் இசைக் கருவிகள் இசைப்போர் சப்பலிகர் எனவும், பல்லக்குச் சுமப்போர் போவிகள் எனவும் தங்களை அழைத்துக் கொள்கின்றனர். இவை அனைத்தும் தொழில் தொடர்பான பெயர்களே. மைசூரிலிருந்து பட்டூர் வட்டத்தில் வந்து குடியேறியுள்ளவர்களான பெஸ்தர்கள் சிலரும் தங்களைப் போவிகள் எனக் கூறிக் கொள்கின்றனர். போவி என்ற சொல் போயி (சுமப்பவன்) என்ற தெலுங்குச் சொல்லிலிருந்து வந்த வடிவாகும்.

கொரகரும், ஹொலையரும் அணிந்து கொள்கின்ற தலைக்குல்லாயினை மொகேர்கள் கமுகின் ஓலை மட்டையிலிருந்து தயாரிக்கின்றனர்.

மீன் பிடிக்கும் மொகேர்களின் குடியிருப்புகள் பட்டனங்கள் என அழைக்கப்படுகின்றன. ஒடொரொட்டுப் பட்டனம், மணம்பாடிப் பட்டனம் என்பன போல இவற்றின் பெயர்கள் அமையும். இதன் காரணமாக மொகேர் என்ற சாதிப்பெயருக்குப் பதிலாக பட்டதைவ என்ற பெயராலும் சில போது இவர்கள் அழைக்கப்படுகின்றனர். சென்னை நகரைச் சேர்ந்த தமிழ் மீனவர்களும் இதே போன்று கடற்கரை சார்ந்த பட்டினங்களில் வாழ்வதால் பட்டனவன் என அழைக்கப்படுகின்றனர்.

[@] சென்னையிலிருந்து மைசூர், கன்னடம், மலபார் வழியான பயணம், 1807. (Journey from Madras through Mysore, Canara and Malabar. 1807.)

பிற துளு சாதியாரைப் போலவே மொகேர் பூதங்களை வழிபடுகின்றனர். இந்த மீனவர் சாதிக்கு உரிய முக்கியமான பூதம் பொப்பரைய என்பதாகும். இதனைச் சிறப்பிக்க அவ்வப்போது கோலத்திருவிழாவினை ஏற்பாடு செய்கின்றனர். ஒவ்வொரு குடியிருப்பிற்கு அல்லது சில குடியிருப்புகள் சேர்ந்த குழுவிற்கும் எனத் தனியே பொப்பரையாவின் பூதஸ்தானம் உள்ளது. மட்டி என்ற ஊரினைச் சேர்ந்தவர்களான வதிராச சுவாமியால் பிராமணர்கள் என்ற தகுதிக்கு உயர்த்தப்பட்டவர்களான மொகேர்களுக்கும் கூட மட்டி கிராமத்தில் பொப்பரையா பூதஸ்தானம் உள்ளது. மீன் பிடிக்கும் தொழிலைக் கைவிட்டவர்களாக உள்நாட்டில் வசிக்கும் மொகேர்கள் பஞ்சுருளி, பைகத்தி என்ற பூதங்களை வழிபடுகின்றனர். பாகூருக்கு அருகே உள்ள பன்னெகுடுருவில் இச்சாதிக்குரிய மங்கலப்பூசாரி எனப்படும் தலைமைப் பூசாரி வாழ்கின்றான். ஒவ்வொரு குடும்பமும் பன்னெகுடுருவில் ஒவ்வொரு குடும்பமும் பன்னெகுடுருவில் உள்ள அம்மனொரு எனப்படும் மாஸ்தியம்மாவின் கோயில் நடைமுறைச் செலவுகளுக்காக மங்கலப் பூசாரிக்கு ஆண்டுக்கு எட்டணா வரியாகச் செலுத்தவேண்டும். மாஸ்தியம்மா பெரியம்மைக் குரிய தெய்வமான மாரியே ஆவாள் எனச் சிலர் கூறுகின்றனர். சிலர் அது ஆண்களை மயக்கித் தன் வழிப்படுத்தும் மோகினிப் பிசாசு என்கின்றனர்.

ஒவ்வொரு குடியிருப்பிலும் குறைந்தது இரண்டு குரிகாரர்களாவது இருக்கவேண்டும் என்பது விதி. சில குடியிருப்புகளில் நான்கு குரிகாரர்கள் இருப்பர். தங்கள் பதவிக்கு அறிகுறியாக, குரிகாரர்கள் இடக்கை மணிக்கட்டில் பொன்னாலான கங்கணம் ஒன்றினை அணிந்திருப்பர். குறிப்பிட்ட ஒரு பணியினைப் பாராட்டிச் சாதியினைச் சேர்ந்தவர்கள் அன்பளிப்பாக வழங்கிய மற்றுமொரு கங்கணத்தையும் சிலர் அணிந்திருப்பர். இந்தச் சாதித்தலைமைப் பதவி பரம்பரையாக அளிய சந்தான மரபுரிமைப்படி (பெண்கள் வழியில்) பெறுவதற்கு உரியது.

துளு சாதியினைச் சேர்ந்த நாவிதரான கெலசியர் மொகேர்களுக்கு மழிக்கும் பணி செய்வதில்லை. இவர்களுக்குத் தனியே மேலண்டவம் எனப்படும் நாவிதர் உள்ளனர். இவர்கள் மொகேர் பிடித்து வரும் மீன்களில் ஒரு குறிப்பிட்ட பங்கினைப் பெறுவதற்கு உரியவர்கள். சிலவிடங்களில் கொங்கணி நாவிதர்களான மகொல்லர் எத்தடையும் கூறாது மொகேர்களுக்கு மழித்தல் செய்வர். மகொல்லர் இல்லாத சில

இடங்களில் பில்லவர்களின் நாவிதர்கள் இவர்களுக்கு உதவுவர்.

பிற துளு சாதியார்களிடையே உள்ளது போலவே மொகேர்களிடையேயும் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பிரிவுகளான பலிகள் உள்ளன. அவற்றுக்கான பெயர்கள் சில வருமாறு:

ஆனெ (யானை)	ஹொன்ன (வேங்கை மரம்)
பலி (ஒரு வகைமீன்)	ஷெட்ட (ஒரு வகை மீன்)
தேவ (தெய்வம்)	தொலன (நரி)
தயவ (ஆமை)	

துளு சாதியாரின் திருமணங்களை ஒப்பவே இவர்களுடைய மணச் சடங்குகளும் நிகழ்கின்றன. நிச்சயதார்த்தச் சடங்கு நிகழ்த்தப்பட்டு மணமகளுக்குரிய விலையான பரிசத்தொகை சிர்தொச்சி என்ற பெயரால் ஆறு ரூபாயிலிருந்து எட்டு ரூபாய்வரை வழங்கப்படுகின்றது. மணச் சடங்குகள் இரண்டு நாட்கள் நீடிக்கும். முதல் நாளன்று மணமகளை ஒரு மணைப் பலகையிலோ கட்டிலிலோ அமர்த்தி ஐந்து பெண்கள் அவள் தலை மீது அரிசியினைத் தூவிச் செல்வர். அவள் வீட்டிலோ, வேறு இடத்திலோ அவர்கள் தங்க ஏற்பாடு செய்வர். மறுநாள் மணமக்கள் அருகருகே அமர்ந்திருக்க இணைக்கப்பட்ட அவர்கள் கரங்களின் மீது மணமகளின் தந்தையோ குரிகாரனோ தாரே நீர் ஊற்றுவர். அவர்கள் அருகே அரிசியினைக் குவித்து அதன்மீது வெற்றிலை பாக்கோடு தேங்காயினையும் வைத்தல் வழக்கம். தாரே நீரினை (தண்ணீரும் பாலும் கலந்தது இது) அத் தேங்காயின் மீது மும்முறை ஊற்றுவர். பின்னர் கூடியுள்ள அனைவரும் மணமக்கள்மீது அரிசியினைத் தூவி வாழ்த்துவதோடு பணமும் அன்பளிப்பாக வழங்குவர். குரிகாரரிடம் மணமுறிவு பற்றிய செய்தியினைத் தெரிவித்த பின் மணமுறிவினை மேற்கொள்ளலாம். உடுப்பி வட்டத்தில் தன் மனைவியினை மணமுறிவு செய்ய விரும்பும் ஒருவன் இரண்டு மூன்று பேருடன் குறிப்பிட்ட ஒரு மரத்திடம் சென்று அதன் அடிமரத்தைக் கோடாரியால் மூன்று வெட்டு வெட்டுவான். இதனைப் பரஹகொடு என்பர். இவ்வழக்கம் மற்றச் சாதியாராலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. மெர்கேரியர் சிறுவர்களுக்குப் பதிலாகச் சிறுமியரையே பெரும்பாலும் தத்து எடுத்துக் கொள்கின்றனர். இவ்வாறு தத்தெடுத்துக் கொள்ளப்படும் சிறுமியர் தத்தெடுத்துக் கொள்பவர்களின் குலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற கட்டாயமேதும் இல்லை.

ஒரு குழந்தை பிறந்த ஏழாம்நாள் வண்ணாத்தி (மதிவலி) அதன் இடுப்பில் அரைஞாண் கயிற்றினைக் கட்டுவதோடு அதற்குப் பெயரும் சூட்டுவாள். கொஞ்ச காலம் சென்ற பின் இந்தப் பெயருக்குப்பதிலாக வேறொரு பெயரினைச் சூட்டுவர்.

இறந்தவர்களைப் புதைக்கவோ எரிக்கவோ செய்வர். பிணம் எரிக்கப்படுமாயின் அதன் சாம்பலை மூன்றாம் நாளன்றோ ஐந்தாம் நாளன்றோ ஆற்றிலோ குளத்திலோ விடுவர். இறுதிச் சாவுச் சடங்கு (பொஜ்ஜா) ஏழாம், ஒன்பதாம், பதினொன்றாம் அல்லது பதின்மூன்றாம் நாள் பில்லவர்கள் சாவுச் சடங்கினை ஒத்ததாக நிகழ்த்தப்படும். பிற துளு சாதியாரைப் போலச் சில மொகேர்களும் நாற்பதாம் நாள் இறந்தவர்களுக்காக வழிபாட்டுச் சடங்கினை நடத்துகின்றனர்.

மொகேர்களுக்காகப் பொதுவான பட்டப்பெயர் மரக்காலேரு என்பதாம். சாதித்தலைவன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் குரிகாரன் பட்டப் பெயரைப் புனைவர். கொண்டப்பூர் வட்டத்தில் மரக்காலேரு என்ற பட்டத்திற்குப் பதிலாக நாய்க்கர் என்ற பட்டத்தை விரும்பி வைத்துக் கொள்கின்றனர்.

பின்வரும் அட்டவணையில் காட்டியுள்ளபடி மொகேர்களின் மண்டை அளவின் விகித எண் துளுவர்களான பண்டர், பில்லவர் ஆகியோரின் மண்டை அளவின் விகித எண்ணினை விடச் சற்றே குறைந்ததாக உள்ளது.

	சராசரி	மேல் அளவு	கீழ் அளவு	விகித எண் 80உம் அதற்கு மேலும் இருந்த தடவைகள்
50 பில்லவர்	80.1	91.3	71.0	28
40 பண்டர்	78.0	91.2	70.8	13
40 மொகேர்கள்	77.1	84.9	71.8	9

மொகிலி: Mogili (*Pandanus fascicularis*)

காபுகள், யெருக்கலர் சாதிகளுக்குரிய புற மணக்கட்டுப்பாடு உடைய குலம். தாழை எனப் பொருள்படுவது.

மொகொதொ: Mogotho

கௌடொக்களின் ஓர் உட்பிரிவு. இப்பிரிவினைச் சேர்ந்தவர் கோழிக்கறி தின்பதால் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

மொகிரொ: Mohiro (peacock)

பொந்தாரியர், கௌடொ சாதிக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலம் . மயில் எனப் பொருள்படுவது.

மோட்சம்: Moksham (heaven)

தேவாங்கர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

மொக்டெச்சொர் : Moktessor or Mukhtesar

பார்க்க: ஸ்தானிகர் (See: Stanika)

மொல : Mola (hare)

கங்கதிகார ஹொலையர், கங்கதிர்கார வக்கலிகர் சாதிகளுக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலம். முயல் என்பது இதன் பொருள்.

மொலய தேவன் : Molaya Dēvan

கள்ளர், நோக்கன் சாதியாருக்குரிய ஒரு பட்டப்பெயர்.

மோலிகொ : Mōliko

தொழுவர், கொந்தரர் சாதிக்குரிய பட்டப்பெயர்

மொனதின்னி : Monathinni

பூமியில் உள்ள புழுபூச்சிகளைத் தின்பவர்கள் எனப் பொருள்படும். வலையர் சாதியின் உட்பிரிவு.

மொண்டி : Mondi

பின்வரும் குறிப்புக்கு நான் திரு சி. ஹயவதனராவிற்கு கடப்பாடுடையேன். மொண்டி, லண்ட, கல்லடிசித்தன் (பார்க்க: தனிக்கட்டுரை) கல்லடிமங்கம் ஆகியன அனைத்தும் ஒரே வகுப்பாரான இரவலருக்குரிய வேறுவேறு பெயர்களாம். இவற்றுள் முதல் இரண்டு பெயர்களுக்கு உரியவர்கள் தொல்லை தரும் இரவலர்கள். கடைசியில் உள்ள இரண்டு பெயர்களுக்கு உரியவர்கள் தங்களைத் தாங்களே கல்லால் அடித்து வருத்திக்கொள்பவர்கள். மொண்டிகள் தமிழ் பேசுபவர்கள். தெலுங்கு பேசும் பந்தர்களை ஒத்தவர்கள். பந்த என்பது பிடிவாதமும் தந்திரமும் மிக்கவனைக் குறிக்கும் (பந்த என்பது சில சமயங்களில் கல் எனப் பொருள்படும். இந்த இரவலர்கள் சிலபோது தங்களுடன் கல்லினைக் கொண்டு சென்றவர்களாகப் பிச்சை ஏதும் இடவில்லையாயின் அக்கல்லால் தங்கள் மண்டையினை உடைத்துக்

கொள்ளப்போவதாக அச்சுறுத்துவர்) நன்கு வளர்ந்தவர்களாகவும் உடல் வலிமை வாய்ந்தவர்களாகவும் காணப்படும் இவர்கள் கிட்டத்தட்ட பிறந்த மேனியராகவே திரிவர். வலது மணிக்கட்டில் ஒலிக்கும் சலங்கையினைக் கட்டிக்கொண்டுள்ள இவர்கள் தலைமுடி சிக்குடையதாக நீண்டு தொங்கும். கையில் ஒரு கத்தியினை ஏந்தியபடி இடத்தோளில் ஒரு கல்லினையும் இவர்கள் சுமந்து திரிவர். இரத்தலை மேற்கொண்டு வரும்போது இவர்கள் தங்கள் தொடையில் கத்தியால் கீறிக் கொள்வர். தரையில் மல்லாந்து படுத்து மார்பில் கல்லால் அடித்துக் கொள்வர்; வாந்தி எடுப்பர்; புழுதியிலும் சேற்றிலும் புரள்வர்; தங்களுக்கு ஏதும் தராதவர்கள் மீது புழுதியினை வாரித்தூற்றுவர். மொண்டிகள் எனப்படும் பந்தர் பற்றியதான குறிப்பில் வடஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு. எச். ஏ. ஸ்டுவர்ட் இந்த இரவலர்களைப் பற்றிக் கூறியுள்ளதாவது:- '' இவர்கள் தங்களை எந்தச் சமயத்துறையோடும் தொடர்புடையவர்களாகக் கூறிக்கொள்வதில்லை. இவர்கள் சூத்திரர் எனக் கருதப்படுகின்றனர். எனினும் மிகக் கருத்த நிறமும் அருவருப்பூட்டும் அழுக்கான தோற்றமும் வெறுக்கத்தக்க பழக்கவழக்கங்களும் கொண்டுள்ளமையால் அதனை நம்புதல் கடினமானதேயாகும். நல்ல காலமாக இவர்கள் எண்ணிக்கையில் ஒரு சிலராக உள்ளனர். பாடியபடி அல்லது உளறியபடி திரியும் இவர்கள் கூறும் வார்த்தைகளைப் புரிந்து கொள்ளுதல் இயலாது. கேட்கும் காசையோ அல்லது பொருளையோ கொடுக்கவில்லையாயின் வன்முறையிலும் ஈடுபடுவர். இவர்கள் பயன்படுத்தும் கருவிகள் கத்திகளும் எச்சங்கள் முதலிய குப்பைக் கூளங்களுமாகும். கத்தியால் தங்களையே காயப்படுத்திக் கொள்ளும் இவர்கள் குப்பைக்கூளம் முதலிய கழிவுகளைத் தங்களுக்கு ஏதும் தராதவர்களுடைய வீட்டினுள்ளும் கடையினுள்ளும் வாரித் தூற்றுவர். விரும்பியபோது வாந்தி எடுக்கும் ஆற்றல் கைவரப்பட்டுள்ள இவர்கள் அதனைக்கண்டு மற்றவர்கள் அருவருப்புற்று வேண்டுவதைத் தந்து அனுப்பத் தூண்டும் ஒரு கருவியாக அதனைப் பயன்படுத்துவர். சில சமயங்கள் தெருவில் படுத்துக்கொண்டு முகம் முழுதும் புழுதியை வாரிப் போட்டுக் கொள்வர். அப்பொழுது கண்கள் திறந்திருப்பதோடு அப்புழுதியினிடையே மூச்சும் இழுத்து விடுவர். இம் முறைகளில் ஏதாவதொன்றைக் கையாண்டு எப்படியும் இவர்கள் தாங்கள் பெறவேண்டும் என நினைப்பதைப் பெற்றே தீர்வர்.'' சிறுவர்கள் விரும்பும்போது வாந்தி எடுக்கப் பழக்கப்படுத்தப்படுகின்றனர். மிகுந்த அளவு வெந்நீரையும் சூடான கஞ்சியையும் குடிக்கவும், மீண்டும் அதனை வாந்தி எடுத்து வெளியேற்றவும் அவர்களைப் பழக்குகின்றனர். முதலில் விரல்களை நாவடியில் இட்டு அழுத்தி வாந்தியை

வரவழைக்கப் பழகுகின்றனர். தொடர்ந்து பழகுவதால் இதில் இவர்கள் நன்கு தேர்ச்சி பெறுகின்றனர். இரக்கப் புறப்படும் முன் எதையாவது குடித்துவிட்டுப் புறப்படும் இவர்கள் தங்கள் தொழிலான இரத்தலின்போது அதனை வாந்தி எடுப்பர்.

இந்த இரவலர் வகுப்பாரைப் பற்றிப் பல பழமொழிகள் வழங்கி வருகின்றன. கல்லடிச் சித்தன் போன காடு மேடல்லாம் தவிடுபொடி என்பது அவற்றுள் ஒன்று. மற்றொரு பழமொழி கல்லடி மங்கன் எந்த வழி போனாலும் அவனுக்காக ஒரு படி கூலம் அளந்து போட்டாக வேண்டும் என அறிவுறுத்துகின்றது. இல்லையானால் அவன் தன் வெறுக்கத்தக்க செயல்களால் தெருவைப் பாழ்ப்படுத்தி விடுவான். மொண்டி அடிக்கடி உளறியபடி செல்லும் பாட்டு பின்வருமாறு செல்லும்:-

அம்மா, அம்மா ஓ! பாட்டியம்மா,
என்னைப் பெம்ம பாட்டியம்மா,
எனக்கான படியை அளந்து போடு.

இவர்களின் மூதாதையான ஆட்டிடையனைக் கொள்ளையர்கள் காட்டில் கட்டி, கால்கள் இரண்டையும் வெட்டிப் போட்டு விட்டனர். அந்த நாட்டு அரசன் அவன் மீது கொண்ட இரக்கம் காரணமாக அவனுக்கும் அவன் சந்ததியினருக்கும் சிறுதொகையோ கொஞ்சம் தானியமோ அனைவரும் தரவேண்டும் என ஆணையிட்டான் என இவர்கள் இரத்தலை மேற்கொண்டதற்கான காரணம் கூறப்படுகிறது.

இந்தச் சாதியினர் பல குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவினரும் குறிப்பிட்ட ஒரு வட்டாரத்திலேயே இரத்தலை மேற்கொண்டு வருகின்றனர். வணிகர்கள் பணமாகவும் பயிரிடுவோர் தானியமாகவும் ஆண்டுக்கு ஒருமுறை இவர்களுக்குக் கொடுத்துவர வேண்டும். ஒவ்வொரு குழுவினுக்கும் என ஒரு சாதித்தலைவன் உள்ளான். அவன் பெரியவர்கள் உதவியுடன் கணவன், மனைவியர், மற்றும் சாதியார் வழக்கினைத் தீர்த்து வைப்பான்.

பெண்கள் பூப்படைந்த பின்னரே மணம் செய்விக்கப் படுகின்றனர். வடஆர்க்காடு மாவட்டத்தில் ஒருவன் தன் தாய் மாமன் மகளை மணக்கும் வழக்கமும் மதுரை மாவட்டத்தில் ஒருவன் தன் அத்தை மகளை மணக்க உரிமை கொண்டாடும் வழக்கமும் உள்ளது. இவர்கள் சாதி மிகத் தாழ்ந்ததாகக் கருதப்படுவதால் பிராமணர்கள்

இவர்களின் மணச்சடங்குகளை நடத்தி வைக்க முன் வருவதில்லை. மணமுறிவினை விரும்பிய வண்ணம் பெறலாம். உயர்சாதியாரோடு பெண்கள் மேற்கொள்ளும் நடத்தை தவறியதான உறவு, சாதிக்குள்ளாக மேற்கொள்ளும் நடத்தை தவறியதான உடல் உறவினை விட எளிதாக மன்னிக்கப்படுகின்றது.

மொண்டொலு : Mondolo

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சமீன்தார்களால் கிராமத்தலைவர்களுக்குத் தரப்படும் பட்டம் எனப் பதியப்பட்டுள்ளது. இது பல ஒரிய சாதியாருக்கு உரிய பட்டப் பெயராகவும் உள்ளது.

மொற பூவ்வ : Mora Buvva

மாதிகர் சாதியின் ஓர் உட்பிரிவு. இவர்கள் தங்கள் திருமணத்தின் போது முறத்தில் தெய்வத்திற்குச் சோறு படைப்பர்.

மொரசு : Morasu

பரமகல் ஆவணங்களில்* பின்வரும் வழக்கு வரலாறு மொரசு வேளாளர்கள் பற்றித் தரப்பட்டுள்ளது. "காஞ்சிபுரம் அரசிற்கு உட்பட்டது பாலூர் என்ற கிராமம். அவ்வூர்த் தலைவன் மொரசு வேளாளர் வாழ்ந்து வந்த வட்டாரத்தை ஆண்டு வந்தான். மொரசு வேளாளர்களுள் ஒருவன் மகள் நல்ல அழகியாக இருந்தாள். அவள் மீது காதல்கொண்ட அந்த வட்டாரத்தலைவன் அவளுடைய பெற்றோரிடம் அவளைத் தனக்கு மணம் செய்து தருமாறு வற்புறுத்தினான். அவர்கள் அவன் வேறு சாதியினைச் சேர்ந்தவன் என்பதனைக் காரணமாகக் காட்டி அவன் விருப்பத்திற்கு உடன்பட மறுத்தனர். இதனால் சினமுற்றுக் காம வயப்பட்ட அந்த வட்டாரத் தலைவன் வன்முறையில் தன் காமத்திற்கு உரியவளை எப்படியும் அடைவது என முடிவு செய்தான். அவனது இந்த முடிவு அந்தப் பெண்ணின் பெற்றோர் காதுக்கு எட்டியது. அவர்கள் சாதியினைச் சேர்ந்த மற்றவர்களுடன் கூடி இது பற்றி ஆராய்ந்தனர். அவர்கள் அப்போதைக்கு அந்தத் தலைவனுடைய விருப்பத்திற்கு இணங்குவது போலப் போக்குக்காட்டிப் பின்னர் அனைவரும் நாட்டை விட்டு ஓடத் தக்க சமயம் வாய்க்கும் போது ஓடிவிடவேண்டும் என முடிவு செய்தனர். அதன்படி அவர்கள் தங்கள் உடன்பாட்டை அந்த

---

* பிரிவு 3, தங்கி உறையும் மக்கள், அரசு அச்சகம், சென்னை, 1907
(Section III, Inhabitants, Government Press, Madras 1907.)

அரசனுக்குத் தெரிவித்ததோடு மணத்திற்கான நாளையும் முடிவு செய்து மணச்சடங்குகளை நிகழ்த்தத் தங்கள் வீட்டின் முன் பந்தலும் இட்டனர். உரிய நாளில் ஆர்வமும் காதலும் மேலோங்கி இருந்தவனான அந்தத் தலைவன் மணமகளுக்கான அணிமணிகள், ஆடைகள், விருந்தினரை வரவேற்று உபசரிப்பதற்கான உணவுப் பொருட்கள், இனிப்பு வகைகள் ஆகியவற்றை ஊர்வலமாக ஆடம்பரத்துடன் மணமகள் இல்லத்திற்கு அனுப்பி வைத்தான். மணமகளின் பெற்றோர், சாதியினைச் சேர்ந்த மற்றவர்களோடு கூடிப் பேசி ஊரைவிட்டு ஓடுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தவர்களாக அந்தத்தலைவன் அனுப்பி வைத்த அணிமணிகளையும் ஆடைகளையும் ஒரு நாய்க்கு அணிவித்து, அதனைப் பந்தலின் நடுவே உள்ள கம்பத்தில் கட்டிப்போட்டு இனிப்பு வகைகளையெல்லாம் அதன் முன் இட்டுவிட்டு, பெண்ணை அழைத்துக் கொண்டு ஊரை விட்டு ஓட்டம் பிடித்தனர். இச்செய்தி விரைவில் அத்தலைவன் காதுகளுக்கு எட்டியது. தன்னை அவர்கள் ஏமாற்றிய விதத்தை நினைத்து ஆத்திரமுற்ற அவன் தன் படையினரோடு சினங்கொண்டு இரையின் மீது பாயும் சிங்கம் போல அவர்களைப் பின் தொடர்ந்தான். தப்பி ஓடியவர்கள் இறுதியில் துங்கபத்திரா ஆற்றங்கரையினை வந்து அடைந்தனர். ஆறோ கரைகளைத் தொட்டபடி பெருக்கெடுத்து ஓடியபடி இருந்தது. கொடியவனான பகைவனோ துரத்தியவனாக நெருங்கிக் கொண்டிருந்தான். என்ன செய்வது என்று தெரியாது திகைத்த அவர்கள் தெய்வமான விட்டுணுவினை நோக்கி, '' ஓ ! வெங்கடரமணா, அனுமான் பெரிய கடலைக் கடக்க உதவியதைப் போலப் பாதுகாப்பாக நாங்கள் இந்த ஆற்றினைக் கடக்க நீ உதவுவாயானால் நாங்கள் உன்னையும் உன் அடியவனான அனுமனையும் எங்கள் குல தெய்வமாகக்கொண்டு வழிபடுவோம்'' என வேண்டிக் கொண்டனர். இவர்களுடைய இந்த வேண்டுதலில் மனம் மகிழ்ந்தவரான விட்டுணு ஆணையிட ஆறு உடனே இரண்டாகப் பிளந்து வழிவிட அதன் வழியே அவர்கள் ஆற்றின் அக்கரையினைச் சென்று சேர்ந்தவுடன் ஆறு மறுபடியும் இணைந்து வழக்கம போல் ஓடலாயிற்று. அவர்களைத் தொடர்ந்து வந்த எதிரிகள் ஆற்றினைக் கடக்க இயலாதவர்களாகத் திரும்பினர். இவ்வாறு ஆற்றைக் கடந்து சென்ற பிரிவினர் துங்கபத்திராவின் கரையில் குடியேறிவர்களாகக் காலப் போக்கில் தற்போதைய மைசூரின் கிழக்குப் பகுதியாக அமைந்துள்ள அன்று மொரசு என்ற பெயரால் வழங்கி வந்த நாட்டுப் பகுதியில் தங்கியவர்களாகப் பெருகிப் பல்கியதால் மொரசு என்ற குடிப்பெயருக்கு உரியவராயினர்.''

ஆப்பிரிக்காவில் உள்ளதைப் போலவும், அமெரிக்க இந்தியர், ஆஸ்திரேலியப் பழங்குடிகள், பசிபிக் தீவுக் கூட்டங்களில் வாழும் பழங்குடிகள் ஆகியோரிடையே உள்ளதைப் போலவும் தென்னிந்தியாவில் கைகளில் விரல்கள் சிலவற்றை வெட்டிக் கொண்டு செயற்கையாக உடற்குறையினை ஏற்படுத்திக் கொள்ளும் பழக்கம் உள்ளது. 1815 இல் இது பற்றி எழுதிய* ஹேமில்டன் புச்சனன் கூறுவதாவது: ''மைசூரில் உள்ள நகரமான தெயொன்ஹள்ளி எனப்படும் தெயொநெல்லாவில் மொரச ஒக்கலிய சாதியார்தம் ஓர் உட்பிரிவினர் உள்ளனர். அச்சாதியினைச் சேர்ந்த பெண்கள் அனைவரும் தங்கள் மூத்த மகளுக்குத் திருமண நிச்சயதார்த்தத்திற்காகக் காது குத்தும் சடங்கை நிகழ்த்துவதற்கு முன்னர் தங்கள் வலக் கையில் மூன்றாம் நான்காம் விரல்களின் கடைசிக் கணுக்களை வெட்டிக் கொள்ள வேண்டும் என்ற வழக்கம் உள்ளது. ஊரைச் சேர்ந்த கொல்லனே இவ்வாறு விரல்கள் நறுக்கும் சடங்கினை விரல்களை ஒரு கட்டை மேல் வைத்து உளியால் நறுக்கி நிகழ்த்துவிக்கின்றான். நிச்சயதார்த்தம் செய்யப்படுவதற்கு உரிய சிறுமிக்கு அம்மா இல்லையாயின் மணமகனின் தாயால் இது போல விரல்களை வெட்டும் சடங்குக்கு முன்னமேயே உள்ளாகாதவளாக இருந்தால் அவள் அத்தகைய சடங்கினைத் தனக்கு மருமகளாக வரஇருப்பவளுக்கு வேண்டி மேற்கொள்ளக் கடமைப்பட்டவளாவாள். இதே சடங்கினைப் பற்றி அப்பெதுபைஸ் எழுதுவதாவது.⊙''மைசூரைச் சேர்ந்த மொரசு ஒக்கலிய மக்களுள் மணமகளின் அன்னை உயிருடனில்லையாயின் மணமகனின் அன்னையோ, மணமகளின் தாயாருக்கு நெருங்கிய உறவினர்களோ இந்தக் கொடிய சடங்கிற்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும். இது பற்றிய அடிக்குறிப்பில் நூலினைப் பதிப்பதித்த ஆசிரியர் இப்பழக்கம் தற்போது பின்பற்றப்படு வதில்லை என்றும் அதற்குப் பதிலாகப் அந்த இரண்டு விரல்களையும் பயன்படுத்த இயலாதபடி கட்டி விடுகின்றனர் எனவும் கூறியுள்ளார். 1891 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு அறிக்கையில் இத்தகைய சடங்கிற் கு உள்ளானவர்களைப் பெரும்பாலும் கடப்பை, வடஆர்க்காடு, சேலம், மாவட்டங்களைச் சேர்ந்த மொரசுகளிடையே காணலாம் எனக் கூறப்பட்டுள்ளது. ''இவர்களிடையே விரலை ஈந்த காபுக்கள் என்ற உட்பிரிவினர் உள்ளனர். இந்தச் சடங்குத் தொடர்பாக ஒரு குடும்பத்தில் பேரக்குழந்தை - பிறக்குமானால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த தாத்தாவாக ஆனவருடைய மூத்த மகனின் மனைவி தனது

* கிழக்கிந்தியா பற்றிய விவரக் குறிப்பு (East India Gazetteer)

⊙ இந்துக்களின் பழக்க வழக்கங்களும் சடங்குகளும் பதிப்பு 1897.
(Hindu Manners, Customs and Ceremonies, Ed. 1897.)

வலக்கையின் மூன்றாம் நான்காம் விரல்களின் கடைசி இரண்டு கணுக்களையும் பைரவர் கோயிலில் வெட்டிக் கொள்ளவேண்டும் என்ற விசித்திரமான வழக்கம் உள்ளது.'' சேலம் மாவட்டக் கையேட்டில் (1883 ஆம் ஆண்டில்) இது தொடர்பாக மேலும் கூறப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: ''ஒரு குடும்பத்தில் பேரக்குழந்தை பிறக்குமானால் தாத்தாவாக ஆனவருடைய மூத்த மகன் தன் மனைவியோடுகூடக் கோயிலுக்குச் சென்று அக்குழந்தையின் காதினைக் குத்தும் சடங்கினை நிகழ்த்துவதோடு அவனுடைய மனைவியும் அவள் கையின் மூன்றாம் நான்காம் விரல்களின் கடைசி இரண்டு கணுக்களையும் வெட்டிக்கொள்ள வேண்டும் என்ற பழக்கம் இந்த மாவட்டத்தில் உள்ளது. அவ்வாறு சடங்குக்கு உள்ளாகின்றவன் தாத்தாவாக ஆகின்றவருடைய குழந்தையைப் பெற்றெடுத்தவனான மூத்த மகனாகத் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. எது எப்படியாயினும் குடும்பத்தைச் சேர்ந்த மூத்த மருமகளே தன் விரலை வெட்டிக் கொள்ளக் கடமைப்பட்டவள். அந்தக் குடும்பத்தில் மறுபடியும் அடுத்தடுத்துக் குழந்தைகள் பிறக்கும் போது தாத்தாவாக ஆகின்றவருடைய மற்ற மகன்களின் மனைவியர் ஒருவரை அடுத்து ஒருவர் தங்கள் விரல்களை வெட்டிக்கொள்ளும் சடங்கிற்கு உள்ளாவர். ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்ளும்போதும் இத்தகைய சடங்கினை மேற்கொள்வர்.''

இந்த வழக்கின் தோற்றம் பற்றி வில்க்ஸ் விவரித்துள்ளதின்* சுருக்கம் வருமாறு: ''பெரியதொரு ஆபத்தில் அகப்பட்டவனான சிவபெருமான் தன்னைத் துரத்தி வரும் ஒரு அசுரனிடமிருந்து தப்ப வேண்டி ஆமணக்கும் சோளமும் வளர்ந்திருந்த கொல்லையில் அவன் கண்ணில் படாதபடி ஒளிந்திருந்தபின் லிங்க தொண்டை புதரில் சென்று ஒளிந்து கொண்டான். அப்பொழுது மொரச வக்கலிகனான பயிர்த் தொழிலாளன் ஒருவன் தன் வலக்கைச் சிறு விரலால் சிவபெருமான் ஒளிந்திருக்கும் இடத்தை அந்த அசுரனுக்குச் சுட்டிக் காட்டினான். விட்டுணு பல வண்ணங்களில் உடை தரித்த ஓர் அழகிய மங்கையின் உருவந்தாங்கி வந்து அந்த அசுரனைத் தன் அழகால் மயக்கி அவனைத் தன் மீது காம பரவசனாகும்படி செய்து சிவபெருமானுக்கு வர இருந்த ஆபத்திலிருந்து அவரைக் காப்பாற்ற வேண்டியதாயிற்று. சிவனை அடியோடு மறந்தவனான அந்த அசுரன் தன் தலையில் தானே கைவத்தவனாக எரிந்து சாம்பலாயினான். தான் ஒளிந்திருந்த இடத்திலிருந்து வெளிப்பட்ட சிவபெருமான் அந்தப்பயிர்த்தொழிலாளி

* மைசூரின் வரலாறு (History of Mysore)

குற்றம் புரியப் பயன்படுத்திய அவன் விரலை இழக்க வேண்டும் என ஆணையிட்டார். அப்பொழுது அந்தப் பயிர்த் தொழிலாளிக்குச் சோறு கொண்டு வந்த அவனுடைய மனைவி இந்த அச்சம் தரும் தண்டனையைக் கேட்டுச் சிவனுடைய காலில் விழுந்து அவ்வாறு அவன் விரலை இழப்பானாகில் அது பயிர்த்தொழில் வேலைகள் நடைபெறும் சமயமாதலால் தங்கள் குடும்பம் தொல்லைக்கு உள்ளாகும் எனவும் அவனுடைய ஒரு விரலுக்குப் பதிலாகத் தன்னுடைய இரண்டு விரல்களை ஏற்றுக்கொள்ளும்படியும் முறையிட்டுக்கொண்டாள். அவள் தன் கணவனிடம்கொண்டுள்ள உண்மையான பதிபக்தியினைக் கண்ட சிவபெருமான் அவள் வேண்டுகோளுக்கு உடன்பட்டதோடு வருங்காலத்தில் அவளுடைய சந்ததியினைச் சேர்ந்த பெண்களும் தன் கோயிலில் இந்த உடன்படிக்கையின் அடையாளமாகவும் சிவனிடம் மட்டுமே தாங்கள் கொண்டுள்ள பக்தியினை வெளிப்படுத்தவும் இரண்டு விரல்களை வெட்டித் தர வேண்டும் எனவும் ஆணையிட்டார். மைசூரைச் சேர்ந்த மொரசுவக்கலிகர்கள் இந்தச்சடங்கினை மேற்கொள்ளும் முறை பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு. வி.என்.நரசிம்ம அய்யங்காரின் கட்டுரைக்குக் கடப்பாடுடையேன்: ''இவர்களைப் பெரும்போக்காகப் பின்வரும் மூன்று பிரிவினராகப் பிரிக்கலாம். 1. பெண்கள் விரலைக் காணிக்கை தரும் பிரிவினர். 2. விரலுக்குப் பதிலாக மோதிரம் போல் முறுக்கப்பட்ட சிறிய தங்கக் கம்பியினை விரலில் சுற்றிக்கொண்டு தச்சனைக் கொண்டு அந்தக் கம்பியினை வெட்டிப் படைப்பவர்கள். 3. இந்தச்சடங்கினை மேற்கொள்ளாதவர்கள். சடங்கினை மேற்கொள்பவர்கள் அதனை நடத்தும் முறை கிட்டத்தட்டப் பின்வருமாறு அமையும். சித்திரை மாதத்து அமாவாசையினை ஒட்டிக் கிராமத்தைச் சேர்ந்த சோதிடர் இதற்காக ஒரு நாளினைத் தேர்ந்தெடுப்பர். தன் விரலைப் பலியிட உள்ள பெண் சிவனுக்கு வழிபாடியற்றிச் சில சடங்குகளைச் செய்தபின் நாளும் ஒருமுறை மட்டும் உணவு கொண்டவளாக விரதம் இருந்து வருவாள். விரலை வெட்டுவதற்கு மூன்று நாட்கள் முன்னர்த் தொடங்கி அவள் சோறு முதலியவற்றைத் தவிர்த்துப் பால், பழம், சர்க்கரை முதலியவற்றை மட்டுமே உண்டு வருவாள். குறிப்பிட்ட நாளில் ஒரு வண்டியினைக் கொண்டு வருவர். வெள்ளையும் காவியும் ஆகிய வண்ணங்களில் கோடுகள் தீட்டப்பட்டிருப்பதோடு கொடிகள், மலர் மாலைகள் முதலியவற்றால் அது ஒரு தேர் போல் அலங்கரிக்கப்படும். விரலைப் வெட்டிப் பலி தரும் பெண் எத்தனைக் குழந்தைகளைப் பெற்றெடுத்து உள்ளாளோ அத்தனை ஆடுகள் அல்லது பன்றிகளை அந்த வண்டியின் முன் பலியிட்ட பின் இன்னிசை முழங்க எருதுகள் பூட்டி

அதனை ஓட்டிச் செல்வர். விரலை வெட்டித்தரும் பெண்ணும் அவள் கணவனும் தங்கள் தலையில் வெள்ளிக் காசுகள் உள்ளே இடப்பட்ட புதிய பானைகளில் தண்ணீரைச் சுமந்தவர்களாக நண்பர்களும் உறவினர்களும் உடன்வர அந்த வண்டியின் பின் செல்வர். ஊரைச் சேர்ந்த வண்ணான் வெளுத்த துணியினை அந்த ஊர்வலத்தின் முன் மாற்றாக விரித்தபடி செல்வான். ஊர் எல்லையில் அமைக்கப்பட்ட பந்தலின் முன் அந்த ஊர்வலம் நிற்கும். அந்தப் பந்தலில் சிவனைக் குறிக்கும் வகையில் மூன்று கற்களை அமைத்திருப்பர். அங்கே மலர், பழம், தேங்காய், தீப தூபம் ஆகியன படைத்து வழிபாடு நிகழ்த்துவதோடு சில சமயங்களில் ஆடு அல்லது பன்றிகளையும் பலியிடுவர். அந்தத் தெய்வ உருவத்தின் முன் ஒரு மரக்கட்டை வைக்கப்படும். விரலைப்பலி தருபவள் தன் வலக்கையின் விரல்களைப் பரப்பியவளாக அதன் மீது வைப்பாள். ஒருவன் அவள் கையினை அழுத்திப் பிடித்துக்கொள்வான். உள்ளூர்த் தச்சன் அவளுடைய மோதிர விரல் சிறுவிரல் ஆகியவற்றின் கடைசிக் கணுவின் மீது உளியினை வைத்து ஒரே வெட்டில் அவற்றை வெட்டி வீழ்த்துவான். வெட்டப்பட்ட விரல் துண்டங்கள் கரையான் புற்றினுள் இடப்படும். வெட்டப்பட்ட விரல்களைச் சுற்றி பழந்துணி கொண்டு கட்டுப்போட்டு அவ்விரல்களைக் கொதிக்கும் நல்லெண்ணெய் உள்ள வடச்சட்டியில் முக்கி எடுப்பர். வெட்டப்பட்டுள்ள விரல்களின் முனையில் காலப்போக்கில் நல்ல தோல் வளரும். பார்ப்பதற்கு அது பிறவியிலேயே ஏற்பட்ட குறைபோலத் தோற்றம் தரும். விரல்களை வெட்டும் தச்சனுக்கு ஒரு விரலுக்கு நான்கணா எட்டு பைசா வீதம் கட்டணமும் அன்பளிப்பாக வேறு சில பொருட்களும் தரப்பட வேண்டும். இந்தத் துன்பம் மிக்க கொடிய சடங்கிற்குத் தன்னை உட்படுத்திக்கொள்பவள் சிறு முணுமுணுப்பைக் கூட வெளிப்படுத்துவதில்லை. இதனை மேற்கொள்ளாது புறக்கணித்தாலோ விரல் போதிய அளவு துண்டிக்கப்படாமல் அதில் மீண்டும் நகம் வளர்ந்தாலோ அது அவள் குடும்பத்திற்கு அழிவினையும் தொல்லையினையும் கொண்டு வரும் என நம்புகின்றனர். விரல் துண்டிக்கப்பட்ட தாய்மார்கள் தங்கள் வெட்டுப்பட்ட விரல்களைப் பரவசம் உற்றவர்களாகப் பெருமையோடு தங்கள் தியாகத்தைப் புலப்படுத்தும்வகையில் மற்றவர்களிடம் காட்டிக் கொள்வர். சடங்கின் முடிவில் விரலைப் பலி தந்தவளுக்குப் புதிய சேலை மலர் முதலியவற்றை உறவினர்களும் நண்பர்களும் அன்பளிப்பாக வழங்குவதோடு விருந்தும் தருவர். அவளுடைய குழந்தைகளை உயர்ந்த இருக்கைகளில் அமர்த்தி அன்பளிப்புகள் வழங்கிய பின் அவர்களின் காதுகளைக் குத்துவர். இந்த விரல் பலி

தரும் சடங்கினை நிகழ்த்தாமல் ஒருத்தியின் குழந்தைகளின் காது குத்தும்சடங்கை நிகழ்த்துதல் தெய்வத்திற்குத் தீங்கிழைப்பதாகக் கருதப்படுகிறது.'' மைசூரினைச் சேர்ந்த பயிர்த்தொழில் செய்பவர்களான வக்கலிகரின் பெருலு கொடு உட்பிரிவைச் சேர்ந்த சாதியார் இவ்வாறு விரலை வெட்டிப் பலிதரும் சடங்கு தொடர்பான முழு விவரங்களைத் தந்துள்ள திரு எப். பாவ்செட், மைசூர் காவல் துறை ஆணையர் இருபது ஆண்டுகளுக்கு முன் இதற்குத் தடைவிதிக்கும்வரை அச்சாதியார் இச் சடங்கினைச் செய்யும் வழக்கினை மேற்கொண்டிருந்ததாகக் கூறியுள்ளார். ''இன்று சிலர் தங்கம் அல்லது வெள்ளியாலான தகட்டினை விரல்களோடு மாவினைப் பிசைந்து இணைத்துக்கொண்ட பின் அவற்றை வெட்டியோ, பிடுங்கியோ அகற்றுகின்றனர். மற்றும் சிலர் விரல் முனைகளில் பூவினைச் சுற்றிக் கட்டிக் கொண்ட பின் அதனை வெட்டி வீழ்த்துகின்றனர். சிலர் இச் சடங்கினை நடத்தும் வகையில் உளியைப் பெயரளவிற்கு விரல் மீது வைத்து எடுப்பர். மற்றபடி சடங்குத் தொடர்பாக நிகழ்த்தப்படும் எல்லா நிகழ்ச்சிகளும் வழக்கம் போலவே மேற்கொள்ளப்படுகின்றன.'' மேலே கூறப்பட்ட அலங்கரிக்கப்பட்ட வண்டியினை இச் சடங்கின் போது ஊர்வலத்தில் முன்னே ஓட்டிச் செல்லப்படுவது ஒரு சமீன்தாரின் செயலோடு தொடர்புடைய வழக்கு வரலாறு ஆகும் எனத் திரு பாவ்செட் கூறுகின்றார். ஒரு சமீன்தார் இச்சாதியினைச் சேர்ந்த ஏழு சகோதரர்களுடைய பெண்களைத் தன் குடும்பத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்களுக்கு மணம் செய்து வைக்கும்படி வற்புறுத்தினார். அந்தச் சமீன்தாரிடமிருந்து தப்பிச்செல்ல வண்டிகள் பயன்படுத்தப் பட்டமையால் அந்த நிகழ்ச்சியின் நினைவாக வண்டித் தேவரு என வண்டிகள் இச் சடங்கின் போது சிறப்பிக்கப்படுகின்றன. வண்டியில் தப்பி ஓடியவர்கள் தங்கள் காதணிகளை ஆற்றில் இட்டவர்களாக ஆற்றினைக் கடந்து செல்ல அவர்களைத் துரத்திச் சென்ற சமீன்தார் ஆற்றில் மூழ்கி இறந்தார். இவ்வாறு காதணிகளை ஆற்றில் வீசித் தப்பியதை முன்னிட்டுக் காது குத்தும் சடங்கின் போது வண்டி சிறப்பிக் கப்படுகின்றது. பெரிய குடும்பத்தில் வாழ்க்கைப்படுவதை விடத் தங்களுடைய குடும்ப மானத்தைக் காப்பதனையே சிறப்புடையதாகக் கருதியதனை நினைவு கூர்வதற்காகவே இச் சாதியினைச் சேர்ந்த பெண்கள் விரலினை வெட்டிப் பலி தருகின்றனர்.

''விரலை வெட்டிப் பலி தருவதற்குத் தடை விதிக்கப்பட்ட பின் பெண்கள் தங்கள் விரலில் தங்கத்தாலோ வெள்ளியாலோ ஆன சுரையினைச் செருகிக் கொண்டு பின்னர் அவற்றைப் பிடுங்கி விரல் பலிக்குப் பதிலாக இட்டு வருகின்றனர்'' எனத் திரு எல். ரைஸ் மைசூர்

பற்றிய ஒரு குறிப்பில் கூறியுள்ளார்.

மொரசு காபுலு பிரிவினைச் சேர்ந்த பெண்கள் புதிதாக அறுவடையான தானியத்தை சூரியனை வழிபடாமல் பயன்படுத்துவதோ அதனைச் சமைப்பதோ செய்வதில்லை. இவர்கள் தீட்டு நீங்கப் புனிதப்படுத்தும் சடங்கின் போது குளித்த பின் கம்பளியால் உடலைப் போர்த்த படி தரையில் விழுந்து வணங்குவதோடு தலையின் மீது கரங்கூப்பிச் சூரியனை வணங்குவர். வழக்கமாகச் செய்யப்படும் தேங்காய் உடைத்தல்· முதலியனவும் நிகழ்த்தப்படும். முன்பு நடத்தையில் கட்டுப்பாடின்றி வாழ்ந்தவர்களாக இருந்து வந்த இச் சாதிப்பெண்கள் தங்கள் குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும்படி சூரியனிடம் வேண்டி வந்தனர் எனவும் கூறப்படுகிறது.

மொரசு என்பது ஹொலையர், மாலர், ஒட்டே சாதிகளின் உட்பிரிவாகவும் பதியப்பட்டுள்ளது. மொரசு பறையன் என்ற பெயர் கன்னட நாட்டுப் பகுதியிலிருந்து தமிழ்நாட்டுக்குக் குடிபெயர்ந்து வந்த பறையர்களைக் குறிப்பதாகும். இச்சாதியினைச் சேர்ந்த பெண்கள் கள்ளர் சாதிப் பெண்களைப் போலக் குதிரை வால் மயிரால் திரிக்கப்பட்ட கயிற்றினைக் கழுத்தில் அணிகின்றனர்.

மொடாடி: Motāti

காபுகளின் ஓர் உட்பிரிவு

மொயிலி: Moyili

''மொயிலியர் அல்லது மொய்லியர் தென் கன்னடத்தில் கோயிலைச் சார்ந்து வாழும் பெண்களின் சந்ததியினர் என்பதனை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். இப்படியாக இவர்களுடைய எண்ணிக்கை இன்றும் பெருகியபடி உள்ளது. இவர்களுடைய கடமைகள் ஸ்தானிகர்கள் கடமைகளை ஒத்தன'' எனத் தென் கன்னட மாவட்டக் கையேட்டில் திரு எச். எ. ஸ்டுவர்ட் கூறியுள்ளார். 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கோலகர் (பரத்தையர் பிள்ளைகள்) மொய்லியர்களோடு சேர்த்துப் பதியப்பட்டுள்ளனர். மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இந்தச் சொல் பிராமணர்களுக்கு மலெருகர் (கோயில் பணியாளர்)வழிப் பிறந்த குழந்தைகளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புச்சனன், மொயிலர்

பற்றித் தந்துள்ள விவரம்* வருமாறு:- ''துளுவர் கோயில்களில் உள்ள தனிப்பட்ட வழக்கின் காரணமாக மொயிலர் என்ற சாதி தோன்றியுள்ளது. பிராமணர், சத்திரியர், வைசியர் சூத்திரர் ஆகிய நான்கு சாதிகளுள் எந்த ஒரு சாதியைச் சேர்ந்தவளாயினும் அவளுக்குத் தன் கணவனோடு வாழப் பிடிக்கவில்லையாயின் கோயிலுக்குச் சென்று அங்குத் தெய்வத்திற்குப் படைக்கப்பட்ட சோற்றை வாங்கி உண்பாள். அதன்பின் அவள் அதிகாரிகள் முன் அழைத்துச் செல்லப்படுவாள். அவர்கள் அவளுடைய சாதியைச் சேர்ந்தவர்களைக் கூப்பிட்டு வைத்து அவளுடைய குறையைப் பற்றிக் கேட்டறிவர். அவள் பிராமணர் பிரிவைச் சேர்ந்தவளாயின் அவள் கோயில் எல்லையில் தங்கி வாழ விரும்புகின்றாளா அல்லது வெளியே தங்கி வாழ விரும்புகின்றாளா எனக் கேட்பர். அவள் கோயில் எல்லைக்குள்ளாகத் தங்கி வாழ விருப்பம் தெரிவித்தால் அவளுக்கு நாள்தோறும் குறிப்பிட்ட அளவிற்கு அரிசியும் ஆண்டுக்கு ஒரு சேலையும் தர ஏற்பாடு செய்வர். அவள் கோயிலைப் பெருக்கித் தூய்மைப் படுத்துவதோடு கவரிமான் மயிராலான விசிறியால் கோயில் சிலைகளுக்கு வெண்சாமரம் வீசுவதோடு பிராமணர்களோடு மட்டும் உடலுறவு கொண்டவளாக வாழ்ந்து வரவேண்டும். அவளுக்கு வழக்கமாகத் தரப்படும் பொருள்களோடு கூட மேலும் கொஞ்சம் கைக்காசு தரும் ஓர் அலுவலருக்கு அவள் வைப்பாக இருந்து வருவாள். அவள் வேறு ஒருவனோடு உறவு கொள்வாளாகில் அவளை அவன் சாட்டையால் அடித்துத் தண்டிப்பான். இத்தகைய பெண்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகள் மொய்லியர் எனப்படுவர். எனினும் இவர்கள் ஸ்தானிகர் எனக் கூறிக்கொள்வதோடு பூணூலும் அணிந்து கொள்கின்றனர். இவர்களுள் பலரும் கோயில் பணிக்காக அமர்த்தப்படுகின்றனர். கோயிலைச் சார்ந்த பகுதிகளைப் பெருக்கித் தூய்மை செய்தல், சாணித் தண்ணீர் தெளித்தல், ஊர்வலத்தில் சின்னங்களைச் சுமந்து செல்லுதல் போன்ற கீழான பணிகளை இவர்கள் மேற்கொள்கின்றனர்.''

மொயிலியர் தேவாதிகள் எனவும் அழைக்கப் படுகின்றனர். இவர்களை மலெரு (மலையவரு)களோடு குழப்பிக் கொள்ளுதல் கூடாது. இரு பிரிவினரும் கோயில் பணி செய்பவர்களே எனினும் மலெரு பிரிவினைச் சார்ந்த பெண்கள் பெரும்பாலும் பரத்தையராக உள்ளனர். மொயிலியர் பிரிவினர் அப்படிப்பட்டவர்களாக இல்லை. மலெரு பிரிவினர் தென் கன்னடத்தில் உள்ள கோயில்களைச் சேர்ந்த நாட்டிய மகளிராவர். கொங்கணி, சிவாலி முதலிய பிராமணப் பிரிவைச்

* முந்து நூல்

சேர்ந்த நடத்தை கெட்ட பெண்களின் எண்ணிக்கையின் காரணமாக இவர்கள் தொகை பெருகியதாக உள்ளது.

மொயிலியர் பண்டர்களின் பழக்கவழக்கங்களை மேற்கொண்ட வர்களாக உள்ளனர். பண்டர், பில்லவர் ஆகியோரிடையே உள்ள பலிப் (குலம்) பிரிவுகள் இவர்களிடையேயும் உள்ளன.

முச்சி: Mucchi

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் முச்சியர் அல்லது மோசியர் வண்ணம் பூசுவதிலும் தோலில் பணி செய்வதிலும் ஈடுபட்டுள்ள மராட்டியச் சாதியார் எனக் கூறப்பட்டுள்ளது. மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளவை வருமாறு:- ''தோலில் தொழில் செய்யும் சாதியாரோடு எண்ணிக்கையில் மிகக் குறைந்தவர்களான செருப்பும் சேணமும் தயாரிக்கும் மோசியரையும் சேர்த்துக் கொள்ளலாம். இவர்கள் அவுரங்கசீப்பின் படைத்தலைவனான காசீம் கானுடன் மைசூரில் வந்து குடியேறியவர்கள். இவர்கள் தங்களைச் சத்திரியர் எனவும் ராசபுத்திரர் எனவும் கூறிக்கொண்டாலும் அதனை மற்றவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. செருப்பும் சேணமும் தயாரிக்கும் தொழிலை மேற்கொண்டுள்ள இவர்கள் சமய நெறி சைவமாகும். '' முச்சியர் தோல் பதனிடுபவர்கள் அல்லர். தோல் தொழிலாளரான இவர்கள் உயர்வான தோல் தொழிலில் மட்டுமே ஈடுபடுகின்றனர். ஒரு சிலர் அடிபுதை அரணம் தைத்தல் போன்றவற்றில் ஈடுபட்டாலும் செருப்பு தைக்கும் அளவுக்குத் தாழ்ந்து விடுதல் இல்லை. இவர்களுள் பலர் அரசு அலுவலகங்களில கடைநிலை ஊழியர்களாக உள்ளனர். நாடு முழுவதும் கிட்டத்தட்ட எல்லா அலுவலகங்களிலும் ஒரு முச்சி இருப்பான். எழுது பொருள்களைப் பெறுதல், மை தயாரித்தல், காகித உறைகள் செய்தல் ஆகிய பயனுள்ள பணிகளை இவன் அந்த அலுவலகங்களில் மேற்கொள்வான். இப்பணிகளில் ஈடுபட்டுள் ளவர்களாகத் தங்களை முச்சியர் எனக் கூறிக் கொள்பவர்களுள் பலர் உண்மையில் முச்சியர் சாதியினைச் சேர்ந்தவர்கள் அல்லர். முச்சியருள் மிகச் சிலரே சென்னை நகருக்குத் தெற்கே குடியேறி உள்ளனர். பெரும்பாலானவர்கள் கஞ்சம் மாவட்டத்திலும் ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்களிலுமே காணப்படுகின்றனர். ''எனத் திரு. எ. சாட்டெர்டன் கூறுகின்றார்.* ''பென்சில் சீவுதல், மைப்பொடியிலிருந்து மை தயாரித்தல், மைப் பாட்டில்களைத் தூய்மை செய்தல், ஏடுகளை ஒட்டுதல், உறைகள் ஒட்டுதல், தாளில் படிவங்களுக்கான கோடிடுதல், அஞ்சல் தலை

ஒட்டுதல், அஞ்சல்களை அனுப்ப உதவுதல்'' ஆகியன முச்சியரின் பணிகளாக மேலும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. பீரங்கிப் பிரிவின் மேற்பார்வை ஆணையரின் அலுவலகத்தில் தலைமை முச்சியாகவும் மைப் பொடி வழங்கும் ஒப்பந்தக்காரர்களாகவும் உள்ள ஜி.டி. அய்யாபிள்ளை, சென்னையில் 1878-இல் வெளியிட்டுள்ளதான முச்சிகளின் கையேட்டில் கூறப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: ''மறைத்திரு ஜெ.பி. ரொட்டெலர் (Rev. J.P. Rottler) தன்னுடைய தமிழ் ஆங்கில அகராதியில் முச்சி என்ற சொல் தகரப்பெட்டி தயாரிப்பவரையும் எழுதுபொருள், வண்ணம் ஆகியன தயாரிப்பவரையும் குறிக்கும் எனக் கூறியுள்ளார். முச்சியின் பணிகளாக அவர் தொகுத்துக் கூறியுள்ளன வருமாறு:-

1. கறுப்பு, சிவப்பு, நீல மைகள் தயாரித்தல். எழுதத் தேவையான பிற வண்ண மைகளும் தயாரித்தல்.
2. எழுதுகோல்களைச் செப்பம் செய்தல், கோடிடுதல், உறைகள் செய்தல், துணியில் வரைபடங்களையும் திட்ட நகல்களையும் ஒட்டுதல், மெழுகுத் துணி, தாள் முதலியவற்றில் பொதி கட்டுதல், உறைகளில் அரக்கு முத்திரையிடுதல், கட்டுக்கள், பெட்டிகள் ஆகியவற்றைப் பிரித்தும் திறந்தும் வைத்தல்.
3. பெட்டிகளின் பொறுப்பினை ஏற்றல், அன்றாடப் பயன்பாட்டிற்கு எழுது பொருள்களை வழங்குதல். சிறு பொருட்களை வழங்குதல்
4. அச்சுப் படிவங்களைக் கோப்பில் சேர்த்தல் மற்றும் புத்தகங் - களைக் கட்டிடம் கட்டுதல்.

1906 ஆம் ஆண்டு செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து வெளியாகும் விவரக் குறிப்பில் காவல்துறை உதவிக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மாதம் 8 ரூபாய் ஊதியத்தில் பணிபுரியச் சென்னைப் பல்கலைக்கழக மெட்ரிகுலேசன் தேர்வில் வெற்றி பெற்றவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக விளம்பரம் வெளியாகி உள்ளது.

புத்தகங்களைக் கட்டிடம் கட்டுதல், தோலில் பணி செய்தல், சேணங்கள், பெட்டிகள் ஆகியன தயாரித்தல், சாயம் பூசுதல், பொம்மைகள் செய்தல், எழுதுகோல்கள் செய்தல் ஆகியனவே முச்சியர் பணிகள் என மாவட்டக் கையேடுகளில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. தற்போது (1909இல்) சென்னையில் உள்ள துணி வணிகர்கள் முச்சியரை

* தோல் பதனிடுதல் தோல்தொழில் பற்றிய தனி வரைவு, சென்னை,1904.
(A Monograph of Tanning and working in Leather, Madras, 1904)

அமர்த்தித் துணியில் அச்சிடுவதற்கு உரிய புதிய வரைவுகளைத் தயாரித்து அவற்றைச் செப்புத் தகடுகளில் செதுக்கி வண்ண வரைவுகளை அச்சிடுவதற்கான உருளைகளைத் தயாரிக்க ஐரோப்பாவிற்கு அனுப்பி வருகின்றனர். பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணிவகைகள் தென்னிந்தியாவில் கடைவீதிகளில் குவிந்து கிடக்கும். இன்று நாம் பின்னோக்கிப் பார்ப்போமானால் ஒரு காலத்தில் வண்ண அச்சுகள் பதிக்கப்பட்ட துணிகள் இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்துள்ளன என்பது நமக்கு வியப்பூட்டலாம்.

முச்சி என்ற சொல் எவ்வகையிலும் தங்களுக்குள் தொடர்பேதும் இல்லாத இரு வேறு பிரிவினரைக் குறிக்க வழங்கப்பட்டு வருகின்றது. மைசூரிலும் ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்களிலும் இது மராத்தி பேசும் தோலில் பணிபுரிபவர்களைக் குறிக்கிறது. அத்துடன் ராசு வண்ணம் பூசுவதிலும் பொம்மைகள் முதலியன செய்வதிலும் ஈடுபட்டுள்ள ஜீனிகாரர் எனப்படும் சித்திரகாரர் ஆகிய தெலுங்கு பேசுகின்றவரைக் குறிக்கின்றதேயன்றி தெலுங்கு பேசும் தோல் தொழிலாளரைக் குறிப்பதில்லை. (பார்க்க: ராச் செவர்)

முச்செரிக்காலர்: Mucherikala

தெலுங்கு நாட்டைச் சேர்ந்த திருட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள வகுப்பாருக்கான மற்றுமொரு பெயர் எனத் திரு எப். எஸ். முல்லாலே பதிந்துள்ளார்.*

முதலி: Mudali

முதலி என்ற பட்டப் பெயரைத் தேவதாசிகள், கைக்கோளர், வேளாளர் ஆகியவர்களுக்குப் பிறந்தவர்கள் தரித்துக் கொள்கின்றனர். வட மாவட்டங்களைச் சேர்ந்த வேளாளர் முதலி என்ற பட்டத்தையும் தென் மாவட்டங்களைச் சேர்ந்த வேளாளர் பிள்ளை என்ற பட்டத்தையும் தரிக்கின்றனர். முதலி என்ற பட்டப் பெயர் நெசவாளருக்கும் உரியதாக உள்ளதால் வேளாளர் சிலர் இதனைப் பயன்படுத்துவதனை மரியாதைக் குரியது அல்லாதது எனக் கருதுவதாக வட ஆர்க்காடு மாவட்டக் கையேடு தெரிவிக்கின்றது. சமணர், கபடர், ஒச்சன், பள்ளி, வன்னியன், பணிசவன் ஆகிய சாதிகளுக்குரியவர்களும் பட்டப்பெயராக முதலி எனச் சிறப்பித்துக் கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர்.

* சென்னை மாநிலத்தைச் சேர்ந்த குற்ற வகுப்பார் பற்றிய குறிப்புகள்
(Notes on Criminal Classes of the Madras Presidency)

முடவாண்டி: Mudavandi

"முடவாண்டிகள் வேளாளரான கவுண்டர்களின் சந்ததியினரான இரவலர் வகுப்பார். நினைவுக்கு எட்டாத காலந்தொட்டு வேளாளர் சாதியில் ஊனமோ உறுப்புக் குறைவோ உள்ள குழந்தைகளை எடுத்து வளர்க்கும் தனியுரிமை உடையவர்களாக இவர்கள் உள்ளமையே இதனை வலியுறுத்துவதாகும். முடவாண்டி இத்தகைய குறையுடைய ஒரு குழந்தையின் முகத்தில் காறி உமிழ்ந்து விடுவானாயின் அக் குழந்தையினை அதன் பெற்றோர்கள் தாங்கள் விரும்பாவிடினும் கூட அவனுக்கு உரிமையாக்கக் கடமைப்பட்டவர்கள். அப்பொழுதிலிருந்து அக்குழந்தை முடவாண்டி வகுப்பைச் சேர்ந்த குழந்தையாகக் கருதப்படுவதோடு அது அந்தப் பிரிவினைச் சேர்ந்தவர்களுக்குள்ளாகவே மண உறவும் செய்து கொள்ளும். சென்ற நாற்பது ஐம்பது ஆண்டுகளாக இவ் வழக்கம் பின்பற்றப்படுவதில்லை. குழந்தைகளைக் கடத்தியதாகக் குற்றம் சாட்டப்படின் அது கொடிய குற்றமாகக் கருதப்படும். இப்பிரிவினர் ஈரோட்டிற்கு அருகே உள்ள மொடவாண்டி சத்தியமங்கலத்தில் வாழ்ந்து வருகின்றனர். 1887-இல் முடவாண்டிகளின் சாதித்தலைவன் கச்சையும் பட்டையும் அணிந்த ஏவலன் ஒருவனைத் தாங்கள் இரத்தலை மேற்கொள்ளும் பயணத்தின் போது அமர்த்திக் கொள்ள அனுமதி வேண்டி விண்ணப்பித்தான். சோம்பேறிகளுக்கு இப்பொழுதெல்லாம் யாரும் ஏதும் கொடுக்க முன்வராததே இதற்குக் காரணமாகலாம். இவர்கள் குடியானவர் களிடமிருந்து குறியாடுகளையும் தானியத்தையும் பெற உரிமை இருப்பதாகக் கூறிக்கொள்வர்" எனக் கோயமுத்தூர் மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது.

முடவாண்டிகள் பற்றிய ஒரு குறிப்பில் திரு எப். ஆர் ஹெமிங்வே கூறியுள்ளது வருமாறு:- கொங்கு வேளாளர் சாதியில் குருடாகவோ முடமாகவோ பிறக்கும் குழந்தைகள் அவர்கள் பெற்றோர்களால் முடவாண்டிகளாக்கத் தரப்பட்டு விடுகின்றன. அத்தகைய குழந்தைகளின் பெற்றோர்கள் இவ்வாறு குழந்தைகளை அளிக்க முன்வரத் தயங்குவார்களாயின் முடவாண்டிகள் அக்குழந்தைகளின் தலையில் ஒரு சிவப்பு நாடாவைக் கட்டி விடுவர். அதன்பின் அத்தகைய குழந்தைகளின் பெற்றோர் மறுப்பேதும் கூற இயலாது. குழந்தை முடமாக இருப்பின் அதன் பெற்றோர் அது ஏறிச் செல்ல ஓர் எருதினையும் குழந்தை குருடாக இருப்பின் அதற்கு ஒரு குச்சியினையும் தருதல் வேண்டும்.

சேலம் மாவட்டத்திலுள்ள ஆண்டிப்பாளையத்தில் கொங்கு வேளாளர் சாதியில் உடல் குறையுடையவர்களாகப் பிறக்கும் குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ளும் முடவாண்டிகள் எனப்படும் வகுப்பார் வாழ்ந்து வருவதாக 1902-இல் வருவாய்த் துறை அதிகாரி ஒருவர் எழுதியுள்ளார். ஆண்டிகள் பிச்சை எடுத்தலைத் தொழிலாகக் கொண்டவர்கள். கொங்கு வேளாளர் வாழும் பகுதிகளில் திரியும் இவர்கள் குருடாகவோ முடமாகவோ உள்ள ஒரு குழந்தையினைக் கண்டவுடன் அதன் மீது பாய்ந்து தங்கள் ஊருக்குத் தூக்கிச் செல்வர். தங்கள் குழந்தைகளைப் பிரிய நேரிடும் பெற்றோர் அந்தக் குழந்தைகளின் வேண்டுகோளுக்கிணங்க கொஞ்சம் ரூபாயினைத் தவறாது தந்து அனுப்புவர். சில சமயங்களில் இத் தொகை நூறு ரூபாய் அளவினதாக இருப்பதும் உண்டு. உடற்குறை உடையவர்கள் என்றும் தகுதியில் தாழ்வதில்லை. ஆண்டிகளின் தத்துப் பிள்ளைகளாக ஆகும் இவர்கள் அவர்களுடைய உடைமைகளில் பாதிப் பங்கினையும் பெரும்பாலும் பெற்று வருகின்றனர். ஆண்டிகளிடையே மணஉறவு கொள்ளும் இவர்கள் நன்கு பேணப்படுகின்றனர். இவ்வாறு உடற்குறை உடையவர்களுக்குத் தாங்கள் ஆற்றும் பணிக்காக முடவாண்டிகள் ஒவ்வொரு கொங்கு வேளாளர் குடியிடமிருந்து ஆண்டுக்கு நான்கணாவினைப் பெற்று வருகின்றனர். இவ்வாறு சேரும்தொகை மட்டும் ரூ. 6400 ஆக வளர்கின்றது. இதனை நாற்பத்தொரு கூறாக்கி நாற்பத்தொன்றாவது பங்கினைத் திருச்செங்கோட்டில் உள்ள கோயிலுக்குத் தருகின்றனர். வேளாளர் யாரும் தாங்கள் ஆண்டுதோறும் தருவதற்குரிய தொகையினைத் தர மறுத்தல் இயலாது. அவ்வாறு மறுப்பவர்கள் சாதி விலக்குத் தொல்லைக்கு உள்ளாவர். உடற்குறை உடைய குழந்தையைத் தன்னிடம் ஒப்படைக்கும் வரை முடவாண்டி வேளாளர் வீட்டை விட்டுச்செல்ல மாட்டான். வட்ட ஆட்சியர் ஒருவர் ஆண்டிகளுக்கு ஏன் வருமான வரி விதிக்கக்கூடாது எனச் சிந்தித்தவராக ஆண்டிகள் அனைவருக்கும் கூட்டாக ஒரு தொகையினை வரியாக விதித்தார். ஆண்டிகள் மேல் முறையீடு செய்து கொண்டதன் பேரில் அவ்வரி விலக்கப்பட்டு விட்டது.

முடி: Mudi (knot)

மாலர்களின் புறமணக் கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

முடிய: Mudia

வறுத்த அரிசியினைக் கொண்டு தயாரிக்கப்படும் முடி என்பதன் அடியாகப் பிறந்த பெயர். சூதிடியர் சாதியின் ஓர் உட்பிரிவுக்கான பெயர்.

முதுவர்: Muduvar

''கோயமுத்தூர், மதுரை, மலபார், திருவாங்கூர் ஆகியவற்றைச் சேர்ந்த மலைப்பகுதிகளில் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள பழங்குடியினர் முதுவர் அல்லது முதுகர் எனப்படுவோர். ஏல மலைகளைச் சார்ந்து வாழும் முதுவரைப் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு அய்ல்மெர் எப். மார்ட்டின் (Aylmer F. Martin) அவர்களுக்குக் கடப்பாடுடையேன்.

(Muduvar) முடுவர் என ஆங்கிலத்தில் எழுதப்படும் இப் பழங்குடிகளின் பெயர் தமிழில் முதுவர், முத்துவர் முத்துவனாள் என்றெல்லாம் உச்சரிக்கப்படுகின்றது. வெளியார் சிலபோது இப் பழங்குடிகளைத் தகப்பன்மார்கள் என அழைக்கின்றனர். (தகப்பன்மார்கள் என்ற பட்டப்பெயர் தாழ்ந்த சாதியார் தங்கள் எசமானர்களை அழைக்கப் பயன்படுத்துவதாகும்) சில மலையாளச் சொற்கள் கலந்துள்ள தமிழோடு நெருங்கிய உறவுடைய ஒரு கிளை மொழியினையே முதுவர் பேசுகின்றனர். இந்து சமயத்தைச் சேர்ந்த தெய்வங்கள், வீரர்கள் ஆகியோர் பெயர்களை ஆண்கள் தரித்துக் கொள்வதோடு கஞ்சன் கறுப்புக் குஞ்சு, குஞ்சயன், கார்மேகம் என்பன போன்ற தனித்த பெயர்களும் பொது வழக்கினவாக உள்ளன. பெண்கள் பெண் தெய்வங்கள், வீர மகளிர் ஆகியோர் பெயர்களைத் தரிக்கின்றனர். கருப்பாயி, குப்பி, பேய்ச்சி என்பன பெண்களுக்கான பெரு வழக்கினவான பெயர்களாம். இரட்டையரான ஆண்கள் ராமன், லெட்சுமணன் எனவும், பெண்கள் ராமாயி, லட்சுமி எனவும் பெயர் வைக்கப்படுகின்றனர். இரட்டையர் ஆணும் பெண்ணுமாக மாறிப் பிறந்தால் லட்சுமணன் ராமாயி என்றோ லட்சுமி, ராமன் என்றோ பெயரிடப்படுகின்றனர்.

முதுவர் தாங்கள் மலைப்பகுதிக்குரியவர்களான பழங்குடிகள் என்பதனை ஏற்றுக்கொள்வதில்லை. பரம்பரையாக வழக்கில் இருந்து வரும் செய்திப்படி இவர்களின் பூர்வீகம் மதுரையாகும். சில தொல்லைகள் காரணமாகவோ, பாண்டிய மன்னன் போரில் ஈடுபட்டவனாக இருந்த ஒரு சமயத்திலோ இவர்கள் மலைப்பகுதிக்கு ஓடிவர வேண்டியதாயிற்று. அவ்வாறு ஓடிவரும்போது போடிநாயக்கனூரில் இருந்த போது கருவுற்றிருந்த பெண்களை (அல்லது சிலர் கூறுவது போலக் கருவுற்ற ஒருத்தியினை) இவர்கள் அங்கேயே விட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. அவர்கள் இறுதியில் தாங்கள் பெற்றெடுத்த குழந்தையோடு நீலகிரிக்குச் சென்று சேர்ந்தனர்.

முன்னால் சென்றவர்களான பெரும்பான்மையர் வட திருவாங்கூரைச் சேர்ந்த மேட்டு மலைத் தொடரில் சென்று தங்கினர். நீலகிரியினைச் சென்று சேர்ந்த எந்தக் குடியினைச் சேர்ந்தவர்கள் என அறிந்து கொள்ள இயலாத அப் பழங்குடியினருக்கும் முதுவருக்கும் இடையே பகை உள்ளதாகக் கருதப்படுகின்றது. நீலகிரியினைச் சேர்ந்தவர்கள் எப்போதாவது போடி நாயக்கனூர் பகுதிக்கு வருவர். அங்கு எதிர்பாராது அவர்கள் முதுவர்களைச் சந்திக்க நேரும் போது இவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதில்லை. உள்ளுணர்வின் துணையால் ஒருவர் மற்றவரை யாரெனப் புரிந்து கொண்டாலும் அவர்களிடையே எத்தகைய பேச்சும் நிகழ்வதில்லை. மேட்டு மலைத் தொடருக்குச் சென்று சேர்ந்தவர்கள் தங்கள் குழந்தைகளை முதுகில் கட்டிச் சுமந்தவர்களாக மலையில் உயர ஏறினர். இதனாலேயே முதுகில் சுமக்கும் மக்கள் என்ற பொருளில் இவர்கள் முதுவர் (முதுகர்) எனப்பட்டனர். மற்றொரு கதை வழக்குப்படி இவர்கள் மதுரையை விட்டுப் புறப்பட்டபோது மீனாட்சி தெய்வத்தின் சிலையினை முதுகில் சுமந்தவர்களாக அதனை நேரியமங்கலத்திற்குக் கொண்டு சேர்த்ததாகக் கூறுவர். ''மலைவாழ் பழங்குடிகளுள் முதுவர் தகுதியில் உயர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். முதலில் வேளாளராக இருந்த இவர்கள் மதுரையினைச் சேர்ந்த இளவரசர்களோடு துணையாகத் திருவாங்கூர் மலைப்பகுதிகளில் வந்து தங்கிவிட்டவர்கள் என்ற வழக்கு வரலாறு நிலவுகின்றது.'' எனத் திரு பி. ஈ. கொன்னர்* கூறியுள்ளார். மதுரையிலிருந்து குடிபெயர்ந்து வந்த காலம் எது என்பதனை அந்தப் பழங்குடியினைச் சேர்ந்தவர்களால் கூட ஊகம் செய்ய இயலவில்லை. பாண்டிய அரசர்கள் தெற்கு நோக்கி வந்த போது இது நிகழ்ந்ததாகலாம். பதினான்காம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்கள் போடி நாயக்கனூரைக் கைப்பற்றியபோது இது நிகழ்ந்தது எனக் கொள்வது மேலும் பொருத்தமுடையதாகலாம். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் படையெடுத்து வந்த முகமதியர்களால் மலைப் பகுதிகளுக்குத் துரத்தப்பட்டவர்கள் முதுவர் என்ற ஒரு கருத்தும் கூறப்படுகின்றது. இரு வகைத்தான இவர்கள் உடல்வாகினையும் இவர்கள் பேசும் மொழியினையும் கலப்படமான இவர்களுடைய பழக்க வழக்கங் களையும் வைத்துப் பார்க்கும்போது இவர்கள் மலைப் பகுதிகளில் வந்து சேர்ந்தபோது அங்குக் குறைந்த எண்ணிக்கையில் வேறு பழங்குடிகள் வாழ்ந்து வந்திருக்கவேண்டும் எனவும் காலப்போக்கில் இவர்கள் அவர்களோடு மணஉறவு கொண்டவர்களாக ஆன பின்

* சென்னை இலக்கிய அறிவியல் இதழ். I 1833,
(Madras Journ. Lit. science I 1833)

அவர்கள் மேற்குப் பகுதி சார்ந்த பழங்குடிகளோடு உறவுடையவர்களாக ஆகிவிடப் புதிதாக வந்தவர்கள் கிழக்குப் பகுதியினைச் சார்ந்தவர்களோடு தொடர்புடையவர்களாக ஆகியிருத்தல் வேண்டும் எனவும் நான் ஒருவாறு ஊகிக்கின்றேன்.

இப்பழங்குடியினர் ஏல மலைகளின் வடக்கு, மேற்குப் பகுதிகளிலும், கண்ணன் தேவன் மலை எனப்படும் திருவாங்கூரைச் சேர்ந்த மேட்டு மலைப் (High range) பகுதியிலும், ஆனை மலையில் ஓர் ஊரிலும் கூடத் தங்கி வாழ்கின்றனர். அவ்வப்போது இடம் பெயர்ந்து குடியமரும் இவர்கள் இப்பொழுது முன்போல் அடிக்கடி இடம் பெயர்தலில்லை. மலைத் தோட்டம் போடுவோர் இவர்களைச் சுற்றி வளைத்தவர்களாக இருப்பதே இதற்குக் காரணம் எனலாம். இவர் தம் தற்போதைய தலைமை இடம் மேட்டு மலைப்பகுதியின் மேற்குச் சரிவில் உள்ளது எனலாம். மேல்வாகென் எனப்படும் இவர்கள் சாதித்தலைவன் மேட்டு மலையின் மேற்குச் சரிவில் 2000 அடி உயரத்தில் உள்ள ஓர் ஊரில் வாழ்கின்றான். அச் சரிவில் 6000 அடி உயரம் வரை குடியிருப்புக்கள் உள்ளன. பெரும்பாலான குடியிருப்புக்கள் கடல் மட்டத்திலிருந்து 4000 அடி உயரத்திலேயே அமைந்துள்ளன. நிலத்தில் ஓரிடத்தில் பயிர் அறுவடை முடிவடைந்த பின்னும் மற்றோர் இடத்தில் பயிரிடுகை தொடங்குவதற்கு முன்னும் உள்ள இடைப்பட்ட காலத்திலேயே இவர்கள் குடிபெயர்ந்து புதிய குடியிருப்புக்களை அமைத்துக் கொள்கின்றனர். நவம்பர் மாத வாக்கில் பழைய குடியிருப்புக்களை விட்டுப் புறப்படும் இவர்கள் பிப்பிரவரியில் புதிய குடியிருப்புக்களை அமைத்துக் கொள்கின்றனர். மேட்டு மலையில் உள்ள சமவெளியின் காட்டில் கிடைக்கும் குச்சிகள், புல் ஆகியவற்றைக் கொண்டு சிறிய நீண்ட சதுர அமைப்புடைய தட்டையான கூடையோடு கூடிய அழகிய தோற்றந்தரும் குடிசைகளை இவர்கள் அமைத்துக் கொள்கின்றனர். மேற்குச் சரிவில் வாழ்பவர்கள் வீடு கட்டிக்கொள்ள உதவும் பொருட்கள் தரமானவையாக இருந்துங்கூட வீடுகள் பரும்போக்கு உடையனவாக அமைந்துள்ளன. அப்பகுதியில் புல் வெளிகள் இல்லையாதலால் ஈட எனப்படும் மூங்கிலின் கழிகளையும் இலைகளையும் கொண்டே குடிசைகளை அமைத்துக் கொள்கின்றனர். வீட்டின் பின் பகுதியில் சுவர் அமைக்காது அங்குக் கூரையானது மலைச் சரிவினைத் தொடும்படியாகத் தாழ்ந்து தரையொடு பட்டதாக இருக்கும். மற்ற மூன்று பக்கச் சுவர்களும் ஈட மூங்கிலைப் பிளந்து பின்னப்பட்டு முரட்டுப் பாயினைக் கொண்டு அமைக்கப்பட்டனவாக இருக்கும்.

மற்றவர்களைத் தங்கள் சாதியில் சேர இவர்கள் அனுமதிப்பதில்லை என்பது பொது விதியாயினும் 1877இல் ஏற்பட்ட பஞ்சத்தின் போது கைவிடப்பட்டவர்களாகப் பட்டினியால் வருந்திய நெசவாளர் சாதியினைச் சேர்ந்த ஒரு சிறுவனையும் சிறுமியினையும் இவர்கள் தங்களவர்களாக ஏற்றுக்கொண்டதோடு அவர்கள் வளர்ந்த பின் சாதிக்குரிய எல்லா உரிமைகளும் அவர்களுக்கும் வழங்கப்பட்டன என்பதனை நான் அறிவேன். அதன் பின் தொட்டிய நாயக்கர் சாதியைச் சேர்ந்த குழந்தை ஒன்றும் அதைப் போலவே இவர்களால் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதோடு முதுவனாகவே வளர்ந்து பெரியவனாகிவிட்ட அவன் ஒரு முதுவர் சாதிப்பெண்ணையும் மணந்து கொண்டுள்ளான். இதே போல இவர்கள் சாதியினை ஒத்த அல்லது சாதியினும் உயர்ந்தவர்களைத் தங்களோடு சேர்த்துக் கொள்ள முன்வரினும் பறையர்களையும் தாழ்ந்த சாதியினைச் சேர்ந்தவர்களையும் சேர்த்துக் கொள்ள முன்வருவது இல்லை. சில ஆண்டுகளுக்கு முன் திரு ஓ. எச்பென்ஸ்லே நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றில் முதுவர் வேளாளர் சாதியினைச் சேர்ந்தவர்களைத் தங்கள் சமூகத்தில் சேர்ந்து கொள்ள அனுமதிக்கின்றனர் என்றும் அத்தகையவர்களை முதுவர்கள் என்ற தகுதிக்குடையவர்களாக ஏற்றுக் கொள்ளும் முன் ஒரு குறிப்பிட்ட காலக்கெடு இடைவெளி விடப்படுகின்றது என்றும் கூறியுள்ளார்.

சமூகத்தில் ஏதேனும் பூசல் மூளுமானால் ஊரவர்கள் அனைவரும் பஞ்சாயத்தாகக் கூடி அவ் வழக்கினைத் தீர்த்து வைப்பர். ஊராருள் மூத்தவனோ மிகுந்த செல்வாக்கு உள்ளவனோ அந்தப் பஞ்சாயத்துகுத் தலைமை தாங்குவான். வழக்குக்களை அரிதாகவே சாதித் தலைவனான மூப்பனிடம் எடுத்துச் செல்வர். மூப்பன், மேல் வாகென் ஆகிய பொறுப்புக்கள் இரண்டும் பரம்பரை உரிமையுடையன. இவை மருமக்கள் தாய உரிமை உடைமைப்படி மூத்த சகோதரியின் மூத்த மகனுக்கு உரியனவாகும். பஞ்சாயத்தாரின் ஆணைகளையோ சாதித்தலைவன் ஆணைகளையோ நடைமுறைப்படுத்தவெனத் தனியான வழிவகைகள் எவையும் இல்லை. குற்றம் இழைப்பவனைச் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கும் பழக்கம் உள்ளதெனினும் நெருக்கடியான நிலையில் இதனை நடைமுறைப்படுத்த இயலாது போய்விடுகின்றது. வழக்குக்களைப் பஞ்சாயத்தார் சமரசம் செய்து வைத்தல் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் அதனை விரும்பும் போதே மேற்கொள்ளப்படுகின்றது. உடலுறவு கொள்ளாதவர்கள் தங்களிடையே உடலுறவு கொள்வார்களாயின் அந்த இணையினைக் காட்டில் சென்று தங்கும்படி தண்டிப்பர். அவ்வாறு தண்டனை பெற்றவர்கள் விரும்பியபடி

ஊருக்குள் வந்து போகத் தொடங்குவார்களாயின் அவர்களைப் பற்றி விசாரிக்கவும் சபையினர் கூடுவர். இருவரிடையேயான வழக்கில் யார் தோற்றவராகத் தீர்ப்பு அளிக்கப்படுகின்றார்களோ அவர்கள் ஒரு கன்றையோ, பசுவையோ, எருதினையோ அல்லது கொஞ்சம் தானியத்தையோ அபராதமாகச் செலுத்த வேண்டும் எனத் தீர்ப்பு வழங்குவர். குற்றம் சாட்டுபவர் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் இவ்விருவரையும் சார்ந்தோர் ஆகிய அனைவரும் எத்தகைய தடையுமின்றிச் சத்தியம் செய்ய முன்வருவர். ஒருத்தி தான் கடவுள் சத்தியமாகச் சொல்வது பொய்யாக இருக்குமானால் தானோ தனது குழந்தையோ இத்தனை நாட்களுக்குள்ளாக இறக்கக் கடவது எனக் கூறிச் சத்தியம் செய்வாள். அவ்வாறு சத்தியம் செய்கையில் ராமர் கோடு எனப்படும் தரையில் கீறப்பட்டுள்ள கோட்டினை மிதித்தபடி நடப்பர். 'கூறுவது பொய்யானால் எத்தனை நாட்களில் இறக்கக் கடவோம்' எனச் சத்தியம் செய்கின்றார்களோ அத்தனைக் கோடுகள் தரையில் கீறப்பட்டிருக்கும் அக்கோடுகளின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லையாயினும் அவை மூன்று, ஐந்து, ஏழு என ஒற்றைப் படையில் அமைவதே வழக்கம் அளவுக்கு அதிகமாக கோடுகள் இடுதல் வழக்கின் மதிப்பைக் குறைக்க குழப்ப மேற்கொள்ளப்படும் முயற்சியாகக் கருதப்படும்.

இவர்களிடையே நல்ல நிமித்தங்கள் இருப்பதாகத் தெரியவில்லையாயினும் கெட்ட நிமித்தங்கள் மிகுதியாக உள்ளன. சாம்பர் மான் கனைப்பதும், குடியிருப்புகளை மாற்றிக் கொள்ளப் புறப்படும்போது மலைக்குருவி குறுக்கே வருவதும் தீய நிமித்தங்களுக்குச் சான்றுகளாகும். தெய்வ வாக்கு, மந்தி வித்தை, மாந்திரீகம், பில்லி சூன்யம் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்துள்ள இவர்கள் கண்ணேறு படுவதைப் பற்றி மிகக் கருத்தாக இருப்பர். மந்திரம், மாந்திரீகம் ஆகியவற்றினை இவர்கள் மேற்கொண்டு பழகுவதில்லை. ஒரு சமயம் நானே கண்ணேறுபடுவதற்குக் காரணமாக இருந்ததாக இவர்கள் கருதினர். முதுவர்கள் அடுத்து வரும் ஆண்டில் பயிரிடுவதற்குரிய நிலத்தைப் பங்கிட்டு ஒதுக்கீடு செய்யும் பொறுப்பு என்னுடையதாக இருந்தது. இதற்காக நான் முதுவர் சிலருடன் அவர்கள் வெட்டித் திருத்த விரும்பும் காட்டுப் பகுதியினைச் சுற்றிப் பார்த்தேன். என்னுடைய நண்பனான கஞ்சன் என்பவன் சிங்கோனாத் தோட்டத்திற்கு அருகே புதர்க்காடாக இருந்த சிறு நிலப்பகுதியினைத் தனக்கு ஒதுக்குமாறு கேட்டான். அப்பகுதி கீழ்நெட்டிக் குடிக்கும் மேல் நெட்டிக் குடிக்கும் இடைப்பட்டதாக இருந்தது. முக்கிய சாலை அதனை

அடுத்துச் சென்று கொண்டிருந்தது. இவ்வாறு சாலை ஓரத்தில் உள்ள நிலத்தை ஒதுக்குதல் வழக்கம் இல்லை என்றும் தோட்டத்தில் பணிபுரியும் கூலிகள் அந்த நிலத்தில் விளைவதைத் திருடிச் செல்லும் வாய்ப்பு உள்ளதென்றும் இதனால் அவனுக்குத் தொல்லை வருமானால் பின்னர் பழியை என்மீது சுமத்தக் கூடாதெனவும் நான் அவனிடம் கூறினேன். அதனை அடுத்து நான் இந்தியாவை விட்டு வெளியேறியவனாக மூன்று மாதங்களுக்குப் பிறகு திரும்பி வந்தேன். அப்பொழுது பெரியம்மை அந்த ஊரினைக் கொள்ளை நோய்க்கு ஆளாக்கி அங்கு வாழ்ந்த நாற்பது பேர்களில் கஞ்சன் உட்பட முப்பத்தே ழு பேர்களின் உயிரைப் பலி கொண்டுவிட்டிருந்தது. இது எனக்கு மிகுந்த வருத்தத்தை தந்ததெனினும் முன்பு குறிப்பிட்ட அப்பொழுது யாரும் உரிமை கொண்டாடாது இருந்த புதர்க்காட்டை அழித்து நான் சிங்கோனா பயிரிட்டேன். முதுவர் கிராமங்கள் அனைத்தும் பெரியம்மையால் பாதிக்கப்பட்டுப் பெரிய அழிவினை ஏற்படுத்தியிருந்ததால் அவர்கள் மிகவும் அஞ்சியவர்களாக இருந்தது எனக்கு வியப்பினைத் தரவில்லை. எனினும் நான் அவர்களைக் காண நேரும்போதெல்லாம் அவர்கள் அப்பால் ஓடத் தொடங்கினர். எப்படியோ ஒருவனை ஒரு சமயம் துரத்திப் பிடித்துத் தடுத்து நிறுத்தி எல்லோரும் ஏன் இப்படி ஓடுகின்றார்கள் என்பதற்கான காரணத்தைக் கேட்டேன். அதற்கு அவன் தங்கள் இனத்தவர்களுக்குப் பெருந்துன்பம் வந்ததற்குக் காரணம் நான் கஞ்சனிடம் தொல்லைக்கு ஆளாக வேண்டி வரும் எனக் கூறியதுதானென்றும் அவ்வாறு கூறியபின் நான் மூன்று மாதங்கள் மறைந்திருந்தவனாக மாந்திரீகம் செய்த பின் அந்த நிலத்தை நானே என் உடைமையாக்கிக் கொள்ள மீண்டும் வந்திருப்பதாகவும் கூறினான். இது நடந்து ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. தற்சமயம் என்னிடம் அவர்கள் மீண்டும் மெல்ல மெல்ல நம்பிக்கை வைக்கத் தொடங்கியுள்ளனர்.

பயணம் புறப்பட முதுவர் சில கிழமைகள் ஏற்றவை என வைத்துக் கொண்டுள்ளனர்.

திங்கட்கிழமை	-	பொழுது புலரும் முன் புறப்படுவர்
செவ்வாய்க்கிழமை	-	முற்பகலில் புறப்படுவர்
புதன்கிழமை	-	காலை 7 மணிக்கு முன் புறப்படுவர்
வியாழக்கிழமை	-	காலை உணவு உண்டபின் புறப்படுவர்
வெள்ளிக்கிழமை	-	கெட்ட நாளாகையால் பயணம் மேற்கொள்ளார்
சனி, ஞாயிறுகளில்	-	சூரியன் உதித்தவுடன் புறப்படுவர்.

சிறுவர்கள் மணப்பருவம் அடைந்தவுடன் அவர்களுடைய பெற்றோர் ஊராருக்கு விருந்து தருவர். சிறுமியர் பூப்படைந்தாலும் இதே போன்று விருந்து தருவதோடு அவளை வீட்டுக்கு விலக்காகும் பெண்கள் சென்று தங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள குடிசையிலே தங்கியிருக்கச் செய்வர். தீட்டுக்காலம் முடிந்ததும் அவள் தலைக்குக் குளித்துத் தன் ஆடைகளைத் துவைத்துத் திரும்புவாள். ஊரைச் சேர்ந்த வீட்டுக்கு விலக்காகும் பெண்கள் அனைவருமே இப் பழக்கத்தை மேற்கொள்வர். பூப்படையும் சிறுமியரைப் பிரித்து ஒதுக்குதல் ஏதும் நிகழ்வதில்லை. அவள் சிறுமியருக்கான உடைகளை நீக்கிப் பெண்களுக்கான உடைகளை உடுத்துவாள். பிள்ளைப்பேறு சமயத்தில் ஊரைச் சேர்ந்த திருமணமான பெண்கள் உதவியாளர்களாக இருப்பர். இரட்டைக் குழந்தைகள் அதிருஷ்டம் தருவன என நம்புகின்றனர். புலி, பசு, குரங்கு ஆகியவற்றின் தோற்றம் கொண்ட அஞ்சத்தக்க உருவோடு சில சமயங்களில் குழந்தைகள் பிறப்பதாகக் கூறப்படுகிறது. அத்தகைய குழந்தையைப் பெற்றெடுப்பவள் இறந்து போதலே பொதுவாக நிகழ்வது. அவள் அவ்வாறு இறக்கவில்லையாயின் அத்தகைய குழந்தையை அவளே தின்றுவிடுவாள் எனக் கூறப்படுகிறது. அத்தகைய அஞ்சத்தக்க தோற்றமுடைய குழந்தைகள் எப்படியும் கொல்லப்படுவர். குழந்தைப் பேறு வாய்க்கப் பெறாதவர்கள் உணவு மருத்துவ முறையினை மேற்கொள்வர். இம் முறையில் ஆண்கள் கருங்குரங்கின் இறைச் சியினை மிகுதியாக உண்பர். பெண்களுக்குப் பலவகைப் பச்சிலை களும் நாட்டு மருந்துப் பொருட்களும் சேர்ந்த மருந்தினை தருவர்.

ஒருவன் தன் உடன்பிறந்தவன், உடன்பிறந்தவள் ஆகியோருடைய மகளை மணக்கின்ற பழக்கமில்லை. தன் மாமன் மகளை மணந்து கொள்ளும் பழக்கம் உடைய இவர்கள் இரண்டு மூன்று மனைவியரை மணந்து கொள்கின்றனர். அம் மனைவியர் சகோதரிகளாக இருக்க வேண்டும் என்பதில்லை. மேட்டு நிலத்தில் உள்ள முதுவரிடையே பல மனைவியரை மணத்தலும் பல கணவரை மணத்தலும் அனுமதிக்கப்படுகின்றன. முதலில் கூறிய பழக்கம் பெருவழக்கினதாக இருக்கப் பின்னது அரிய வழக்காகவே உள்ளது. பின்னர் கூறிய வழக்கின்படி உடன்பிறந்தவர்களோ பங்காளிகளோ பலர் பொதுவாக ஒருத்தியை மனைவியாகக் கொண்டிருத்தல் அனுமதிக்கப் படுவதில்லை. பல மனைவியரை ஒருவன் மணப்பானாயின் முதலில் மணம் செய்து கொண்டவளே குடும்பத் தலைவியாவாள். மற்ற மனைவியர் அவள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அவர்களுக்கு வேறு தனி உரிமைகள் எவையும் இல்லை. இவர்கள்

ஒற்றுமையாக இருப்பின் ஒன்றாக ஒரே வீட்டில் வாழ்வர். இல்லையேல் குடும்பத்தில் அமைதி நிலவ வேண்டி ஒவ்வொருத்தியும் தனி வீட்டில் குடி வைக்கப்படுவர். பெரும் சண்டைக்காரிகளாக அமைந்துவிடின் ஒருத்தி ஓர் ஊரிலும் மற்றவள் வேறோர் ஊரிலுமாகக் குடி வைக்கப்படுவர். ஒருவன் ஓர் ஊரில் பல மனைவியரை மணந்தவனாக இருக்கும் அதே வேளையில் வேறொரு ஊரில் உள்ள ஒருத்தியின் பல கணவர்களுள் ஒருவனாக இருத்தலும் உண்டு. முதுவருள் பெரும்பான்மையோர் வாழும் ஏல மலைகளின் மேற்குச் சரிவில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை உடையவர்களாக வாழ்ந்து வரும் முதுவர் பல மனைவியர் மணம், பல கணவர் மணம் ஆகியவற்றை ஏற்றுக் கொள்வதில் லையாயினும் மேட்டு மலைப்பகுதியில் வாழும் தங்கள் இனத்தவர் அவற்றை மேற்கொள்கின்றனர் எனக் கேலியும் வெறுப்பும் கலந்த உணர்வோடு கூறுவர்.

ஒருவன் நண்பர்களே அவனுக்காக மண ஏற்பாடுகளைச் செய்கின்றனர். மணமகனின் தாய் மாமனோ அவன் பங்காளிகளோ, பெண்ணின் பெற்றோரிடம் வழக்கமாக பெண் கேட்டுச் செல்வதுண்டு, பெண்ணின் பெற்றோர் உடன்பாட்டினைப் பெற்ற பின் மற்ற தூரத்து உறவினர்கள் உடன்பாட்டினையும் பெறுதல் வேண்டும். அனைவரும் அந்த மணஉறவுக்கு உடன்படின் ஒரு நாளினைக் குறித்து மணமக்களைச் சில நாள்கள் மகிழ்ந்தவர்களாகத் தனித்து வாழ ஒரு குகைக்கு அனுப்பி வைப்பர். அங்கிருந்து திரும்பிய பின் அவர்கள் தாங்கள் தொடர்ந்து கணவன் மனைவியராக வாழ விரும்புகின்றனரா இல்லையா எனத் தெரிவிப்பர். அவர்கள் அவ்வாறு வாழ உடன்படின் மணமகன், ஊரார் அறிய மணமகளுக்குத் தோடு, வளையல், சேலை, சீப்பு ஆகியன தந்து அவளைத் தன் குடிசைக்கு அழைத்துச் செல்வான். சீப்பு, ஈடா மூங்கிலைப் பிளந்து பெயரளவில் சீப்பு போல் செய்யப்பட்டதாயினும் இச் சடங்கில் அது முக்கியமான பொருளாகக் கருதப்படுகிறது. குகையில் வாழ்ந்த நாள்களைப் பற்றி அவர்கள் இருவருக்கும் மனநிறைவு ஏற்படவில்லையாயின் அந்த மணத்தைத் தள்ளி வைத்து விடுவதோடு அவர்கள் இருவரும் வேறு தக்க துணையினைத் தேடிக்கொள்ளும் உரிமையினையும் பெறுகின்றனர். நிச்சயதார்த்தம் என்ற சடங்கு தனியே நடத்தப்படுவதில்லை. தங்கள் குழந்தைகளுக்கு மணம் நிகழ்த்தி வைக்க இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பேசி முடிவெடுத்தாலும் கூட அது அவர்களைக் கட்டுப்படுத்தும் உடன்படிக்கையாகாது. முன்பெல்லாம் தாலி கட்டுவது

மணச் சடங்கின் ஒரு பகுதியாக இருந்து வந்ததெனினும் அவ்வாறு மணமகளாக ஆக்கப்பட்டவர்கள் இறந்து போக நேர்ந்ததால் அப்பழக்கம் கைவிடப்பட்டு விட்டது. கைம்பெண்கள் மறுமணம் அனுமதிக்கப் படுகின்றது. எனினும் கைம்பெண்ணாக ஆகிவிட்ட ஒருத்தி இறந்து போன அவளுடைய கணவனின் உடன் பிறந்தவள் பிள்ளைகளுக்கு மனைவியாக ஆகலாமேயன்றி அவளுடைய கணவனின் உடன்பிறந்தவர்களுக்கு மனைவியாக ஆக எக்காரணம்கொண்டும் அனுமதிக்கப்படுவதில்லை. அவள் தன் கணவன் உடன்பிறந்தவர் களைத் தவிர வேறு யாரை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம் என்பதே பின்பற்றப்பட்டு வருகின்ற வழக்கம். தன்னுடன் பிறந்த இளையவன் தன் மனைவியின் வீட்டுக்குச் செல்லக்கூடாது என்பதும் அவளைப் பார்க்கக் கூடாது என்பதும் இவர்களிடையே உள்ள வழக்கம். இந்தத் தடை உடன்பிறந்த மூத்தவன் மனைவி தொடர்பாகப் பின்பற்றப்படுவதில்லையாயினும் அவளோடு உடல்உறவு கொள்வது தகாத முறையிலான உறவாகவே கருதப்படுகின்றது. கைம்பெண்களின் மறுமணத்தின் போதும் முதல் மணத்தின் போது நிகழ்த்தப்படுகின்ற சடங்குகள் அனைத்தும் நிகழ்த்தப்படுகின்றன. அவளுடைய முதல் கணவன் இறந்த போது அகற்றப்பட்ட காதணிகளும் வளையல்களும் மீண்டும் அணிவிக்கப் படுகின்றன. கைம்பெண்களுக்கெனத் தனித்த உடைகள் எவையும் இல்லை. அணிகளின்றி மூளியாக இருப்பது கொண்டே அவர்களை அடையாளம் கண்டுகொள்ளலாம். ஆணும் பெண்ணும் ஊரைவிட்டு ஓடுதல் இவர்களிடையே நிகழவே செய்கின்றது. உரியவர்களின் அனுமதியின்றி இவ்வாறு ஓடுபவர்கள் காட்டிலும் குகையிலும் தங்கியவர்களாக அவ்வப்போது ஊர்ப்பக்கம் வந்து தங்களிடம் அனுதாபம் கொண்டவர்களிடமிருந்து தானியங்கள் பெற்றுச் செல்வர். இவர்கள் செயலால் ஊரார் கொண்டுள்ள சினம் ஆறியபின் ஊருக்குத் திரும்பவும் வந்து கணவன் மனைவியராக வாழத்தொடங்குவர். 1901 திருவாங்கூர் கணக்கெடுப்பு அறிக்கையில் ஒரு திருமண ஏற்பாடு பேசி முடிக்கப்பட்ட பின் மணமகன் மணமகளை அவள் தண்ணீர் எடுக்கவோ விறகு சேகரிக்கவோ வீட்டை விட்டு வரும்போது வலுவில் அவள் வீட்டாரிடமிருந்து கடத்திச் சென்று சில நாள்களோ சில வாரங்களோ காட்டில் ஒரு ஒதுக்குபுறமான இடத்தில் அவளோடு வாழ்ந்த பின் திரும்ப அழைத்து வருவான் எனவும், உறவினர்கள் அவர்களைத் தேடிச் சென்று அழைத்து வருதல் உண்டெனவும் கூறப்பட்டுள்ளது. ஒருவன் விருப்பம் போல் தன் மனைவியினை மணமுறிவு செய்துகொள்ள வழக்கு இடம் தருகின்றதெனினும் தவறான நடத்தை மற்றும் ஒத்துப்போகாத இயல்பு

ஆகிய தக்க காரணங்களுக்காக அன்றி மணமுறிவு செய்து கொள்ளுதலை நாகரிகமான போக்காக இவர்கள் மதிப்பதில்லை. வேறு சிறு குற்றங்களுக்காக ஒருவன் ஒருத்தியை மணமுறிவு செய்து கொள்ள விரும்பினால் அவன் அவளைத் தன் நண்பனின் மனைவியாக்கி விடலாம். ஒருத்தி தன் கணவனை மணமுறிவு செய்து கொள்ள நடைமுறை வழக்கு அனுமதிப்பதில்லை. எனினும் அவள் அவனோடு பிணக்குக் கொண்டவளாகத் தொல்லைகள் தந்து அவனே அவளை வேறொருவன் தலையில் கட்டிவிட முன்வரும்படியாக நடந்து கொள்ளலாம். மணமுறிவு செய்யப்பட்ட மனைவியர் மறுமணம் செய்து கொள்ளும் உரிமை உடையவர்களாவர்.

இப்பழங்குடியினத்தவர் மேற்குக் கடற்கரைப் பகுதிக்குரிய மருமக்கள் தாய உடைமை உரிமை முறையினைச் சிறிய மாற்றத்துடன் மேற்கொள்கின்றனர். ஒருவன் உடைமைகள், மூத்த அல்லது இளைய சகோதரியின் மகனுக்கு உரியதாகும். அரிவாள், போர்வை, சில கால்நடைகள் ஆகியன அண்ணன் மகன் அல்லது தம்பி மகனுக்குச் சென்று சேரும். இவற்றைப் பாகப் பிரிவினை செய்து கொள்ளும்வழக்கம் இல்லை.

இந்து சமயத்தைப் பின்பற்றும் இவர்கள் வழிபடும் சிறப்பான தெய்வங்கள் பனலியாண்டவரும் (பழனியாண்டவர் என்பதன் சிதைந்த வழக்கு), கடவுளுமாவர். கடவளு மதுரை மாநகரில் தன் கணவனான சொக்கருடன் வாழும் மீனாட்சியாவாள். சாந்தியாட்டுப் பகவதியினையும், நேரிய மங்கலம் சாஸ்தாவினையும் கூட இவர்கள் வழிபடுவதாகக் கூறப்படுகின்றது. சூரியன் நலம் அருளும் தேவனாகக் கருதப்படுகின்றான். தீங்கு செய்யும் தெய்வங்கள் பலவாக உள்ளன. அவற்றைச் சினம் தணிவிக்க வழிபாடு நிகழ்த்துதல் வேண்டும். இதற்காக மிகுதியாகப் பொருள் செலவிட வேண்டும் என்பதில்லை. அவை தங்கி உறைவதாகக் கருதப்படும் இடங்களைக் கடந்து செல்லும்போது பணிவும் அடக்கமும் காட்டியவர்களாகச் செல்வது போதுமானது. இத் தெய்வங்கள் கறுப்பு என வழங்கப்படுகின்றன. இவற்றுள் நயமரு மலையில் வாழும் நயமரு குறிப்பிடத்தக்கவர். அம்மலையினைச் சுற்றியுள்ள காடுகளில் அவர் மற்றவர்களுக்குத் தீங்கிழைத்தவராக உலவுவார். தற்போது அக்காடுகள் தேயிலைத் தோட்டங்களாக மாறிவிட்டமையால் நயமரு மலையுச்சியில் உள்ள புதர்க்காட்டைத் தங்கள் புகலிடமாகக் கொண்டு விட்டார் . குகைகள் சிலவற்றைக் கோயிலாகப் பாவித்து அவற்றுள் ஈட்டிகள், ஓரிரு

சூலங்கள், செப்புக் காசுகள் ஆகியனவற்றை இட்டிருப்பர். அக் குகைகளைப் புனித இடமாகக் கருதவும், நல்ல அதிர்ஷ்டம், உடல்நலம், நல்ல விளைவுகள் ஆகியனவற்றை வேண்டியும் அவை அக்குகைகளுள் வைக்கப்படுகின்றன. இத்தகைய குகைகள் மனித நடமாட்டம் அற்ற தனித்த பகுதிகளிலேயே உள்ளன. தைப் பொங்கலே இவர்கள் சிறப்பாகக் கொண்டாடும் திருவிழாவாகும். அன்று இவர்கள் ஊருக்கு வருபவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் அனைவருக்கும் உணவளிப்பர். சனவரியின் இடைப்பகுதியில் வரும் இத்திருவிழா விருந்துண்டு மகிழ்வதற்குரியதாகும்.

இவர்கள் சமயச் சடங்குகளை நிகழ்த்த வேறு சாதியினைச் சேர்ந்த பூசாரிகளை அமர்த்துவதில்லை. மந்த மதிபடைத்த அல்லது இயல்புக்கு மாறான போக்குடைய முதுவர்களே சாமியார்களாகப் பாவிக்கப்படுகின்றனர். ஒருவன் தலைநோய் அல்லது காய்ச்சலிலிருந்து விடுபட வேண்டுமானால் சாமியாரிடம் 'அவர் அதனைப் போக்க வழி செய்தால் நான்கணா வழங்கப்படும்' என்று கூறுவர். அவர் அற்புதங்களை நிகழ்த்தவோ மற்றவர்கள் முன்னிலையில் ஆர்ப்பாட்டமான சடங்குகளை நிகழ்த்தவோ வேண்டுமென யாரும் எதிர்பார்ப்பதில்லை. சூரியனையும் சந்திரனையும் தங்கள் சகோதரர்களாகப் பாவித்து அவர்களோடு பேசி உரையாடியபடியும் அமைதியாகப் புரியாத மொழியில் உயிர்களிடத்தும் கெஞ்சி விண்ணப்பித்தபடியும் இருப்பவர்களே வழக்கமாகக் காணப்படும் சாமியார்கள். துறவு மேற்கொண்டவர்களாக இவர்கள் வாழ்க்கை நடத்தினால் மிகுந்த போற்றுதலுக்கு உரியவர்களாக இருப்பர். பிற நற்பண்புகளை மேற்கொண்டிருப்பதோடு பாலை மட்டுமே உணவாகக் கொள்பவர்கள் மிகுந்த போற்றுதலைப் பெறுகின்றனர். அத்தகையவர்கள் நூறாண்டுகளுக்கு ஒரு முறையோ இரு முறையோ மட்டுமே பிறப்பர்.

இறந்தவர்களை மல்லாக்காகத் தென் வடலாகக் கிடத்திப் புதைப்பர். அத்தகைய குழியின் மேல் ஆறு அடிக்கு இரண்டு அடியில் சிறு கொட்டகை அமைக்கப்படும். இருபது அல்லது முப்பது பவுண்டு கனமுள்ள கற்களைத் தலைப்பக்கம் ஒன்றாகவும் கால்பக்கம் ஒன்றாகவும் அமைப்பர். கொட்டகை வீழ்ந்து பட்ட பின்பு அல்லது காட்டில் நெருப்பிடும்போது எரிந்து பட்ட பின்பு இவை புதைகுழி இருக்கும் இடத்தை அடையாளம் கண்டுகொள்ள உதவும். ஆண்களைப் புதைப்பதற்கான புதைகுழிகள் இடுப்பளவு ஆழம் உடையனவாகவும்

பெண்களைப் புதைப்பதற்கான புதைகுழிகள் மார்பு அளவு ஆழம் உடையனவாகவும் தோண்டப்படும். பெண்களின் பிணங்கள் தரையை ஒட்டிய நிலையில் புதைக்கப்பட்டால் மற்ற பெண்கள் தாங்கள் இறக்கும்போது பூமியினை ஒட்டிக் கிடத்தப்படக் கூடும் என அஞ்சுவர்: எனவே தான் பெண்களைப் புதைப்பதற்கான குழிகள் ஆழமுடையனவாகத் தோண்டப்படுகின்றன. தென் வடலாகக் கிடத்தப்படும் தங்களுக்கு யாரும் எத்தீங்கும் இழைக்க முடியாது என்ற உள்ள உறுதி உடையவர்களாக ஆண்கள் விளங்குவதால் அவர்கள் புதைகுழி மிக ஆழமாகத் தோண்டப்படுவதில்லை. விபத்திலோ கொலை போன்ற கொடுஞ்செயலுக்கு ஆட்பட்டோ இறப்பவர்களின் ஆவி பேயாக, அவர்களைப் பற்றிய நினைவு மக்கள் மனத்திலிருந்தும் அடுத்த சந்ததியினர் மனத்திலிருந்தும் அடியோடு மறையும் வரை உலவும் என நம்புகின்றனர். இத்தகைய பேய்களின் சினம் நீக்க வழிபாடு ஏதும் நிகழ்த்தப்படுவதில்லை. முடிந்தவரை அத்தகைய பேய்கள் உலவும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்ப்பர். பிற காட்டினத்தவர்களைப் போலவே முதுவரும் புலியோ சிறுத்தையோ அடித்து வீழ்த்தும் இரை தென் வடலாக உடல் கிடக்கும்படியாக விழுமானால் அவை அந்த விலங்கினை உண்ணா என நம்புகின்றனர். அந்த இரையினைத் தின்ன அவை திரும்ப வருவதும் இல்லை அவ்வாறு தென் வடலாக விழுந்து கிடக்கும் விலங்கினைப் புலியோ சிறுத்தையோ மீண்டும் தின்னவரும்; அவற்றைச் சுட்டு வீழ்த்தலாம் எனக்காத்துக் கிடப்பது வீண் முயற்சியே என்வும் நம்புகின்றனர்.

குல மரபுச் சின்னங்களாக இவர்கள் எதனையும் பேணுவதில்லையாயினும் புலியினைப் பெரும்பாலும் நரி என்ற சொல்லாலேயே வழங்குகின்றனர்.

நெருப்புப்பெட்டி பொதுவாக வழக்கில் வந்து விட்ட இன்றும் கூட இவர்கள் சிக்கிமுக்கிக்கல், எஃகுத் துண்டு ஆகியவற்றின் உதவியாலேயே தீ உண்டாக்குகின்றனர். உலர்ந்த பருத்திப் பஞ்சினை (பெரும்பாலும் இது அழுக்கு நிறைந்ததாக இருக்கும்) சிக்கிமுக்கிக் கல்லின் மீது வைத்து எஃகுத் துண்டினால் அதன் முனையில் தட்டுவர். இதனால் உண்டாகும் தீப்பொறி பஞ்சில் நெருப்பைப் பற்ற வைக்கும். அதனை உலர்ந்த சருகு, புல் ஆகியவற்றினிடையே இட்டுக் கவனமாக ஊதித் தீக்கொழுந்தாக எரியச் செய்வர். தீக்கடைதல் முறையிலும் முதுவர் நெருப்பு உண்டாக்க அறிவர் என்றாலும் தற்பொழுது இவர்கள் மிக அரிதாகவே இம்முறையினைப் பேணுகின்றனர். உள் பக்கம் நன்கு

உலர்ந்து மக்கிப் போய்விட்ட நிலையில் உள்ள ஒரு குறிப்பிட்ட மரத்தின் மரக்கட்டையினைத் தேர்ந்தெடுப்பர். அதன் வெளிப்பக்கம் உறுதி குலையாது திண்மையுடையதாய் இருத்தல்வேண்டும். ஏற்றதொரு பகுதியில் இந்தக் கட்டையின் மேற்பகுதியினைக் குடைந்து உள்ளே உள்ள மக்கிய சோற்றினைப் பெரும்பகுதி அப்புறப்படுத்திய பின் கெட்டியான கூரிய ஒரு மரத்தை அக்குழிவில் பொருத்தி வேகமாகச் சுழற்றுவர். அப்பொழுது உட்புறத்துள்ள எஞ்சிய மரத்தூளில் நெருப்பு உண்டாகும். அதனைச் சிக்கிமுக்கிக்கல்லிலிருந்து உண்டான நெருப்பை வைத்தது போலவே உலர்ந்த சருகுகளிடையே வைத்து நெருப்பு கொழுந்து விட்டு எரியும்படி செய்வர்.

ஆண்கள் லங்கோடு எனப்படும் வேட்டியினை உடுத்துவதோடு தலைப்பாகை அணிந்தவர்களாக ஒரு கம்பளி அல்லது போர்வையை உடன்கொண்டு செல்வர். மழை பெய்யும் பொழுது மேலே போர்த்துக் கொள்ளப் போர்வையினைப் பயன்படுத்துவர். (1901 திருவாங்கூர் கணக்கெடுப்பு அறிக்கையில் முதுவர் பழங்குடி ஆண்கள் சமவெளியினைச் சேர்ந்த மறவரைப் போல உடை உடுத்துகின்றனர். பெரிய தலைப்பாகை பெரும்பாலும் இவர்கள் உடையின் இன்றியமையாத ஒரு பகுதியாக அமைகின்றது. முதுவர்களின் தலைவன் வாக்க எனப்படுகின்றான். அவனுடைய அனுமதியின்றி யாரும் தலைப்பாகை அணிதல் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது.) முதுவன் ஒருவன் குடைபிடித்தவனாக வந்ததை நான் பார்த்துள்ளேன். இன்று மலைத் தோட்ட முதலாளிகளின் பழைய கால்சட்டை, கோட்டு, குதிரைச் சவாரிக்கான குறுங்கால்சட்டை, பகட்டுச் சட்டை ஆகியனவற்றை அணிந்தவர்களாகத் திகழ்கின்றனர். பொன்னாலானது எனக் கருதப்படும்- சில சமயங்களில் உண்மையிலேயே பொன்னாலான பலவண்ணக் கண்ணாடித் துண்டுகள் பதிக்கப்பட்ட கடுக்கன்களை ஆண்கள் அணிகின்றனர். தங்கள் கைகால் விரல்களில் வெள்ளி அல்லது பித்தளையாலான மோதிரங்களை அணிகின்றனர். சிலபோது இரு கைகளிலும் பெரிய கடகம் அணியும் இவர்கள் ஒரு காலில் மட்டும் கழல் புனைவர். பெண்கள் மிகவும் விரும்பி அணிவன பாசிமணி மாலைகளே. வெள்ளை, நீலம் ஆகிய வண்ணங்களிலான பாசிகளை இவர்கள் மிகுதியும் தேர்ந்தெடுக்கின்றனர். காதணிகள், கைகால் விரல் மோதிரங்கள், கைகளில் கண்ணாடி வளையல்கள், கால்களில் சிலம்பு ஆகியனவும் பெண்கள் அணியும் பிற அணிகளாகும். இவர்கள் அணியும் உலோக அணிகளின் அமைப்பு, சமவெளிப் பகுதியில் வாழும் பெண்கள் அணியும் அணிகளின் அமைப்பை ஒத்தனவே. சேலையை

இடுப்பைச் சுற்றி அணிந்து இடையில் செருகியவர்களாக மேலே இழுத்துப் போர்த்தி அதன் இருமுனைகளையும் சேர்த்து வலத்தோளின்மேல் முடிச்சாக இட்டுக்கொள்வர். திருமணமாகாத பெண்கள் திருமணம் ஆனவர்களைப்போல மிகுதியான அணிகளை அணிந்து கொள்வதில்லை. கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ளும் வரை அணிகளைத் துறந்தவர்களாக இருப்பர். அப்பொழுது அவர்களை மணமாகாத அவர்களுடைய சகோதரிகளிடமிருந்து வேறுபடுத்தி அறிந்து கொள்ளுதல் இயலாது. பச்சை குத்திக் கொள்ளும் வழக்கம் இவர்களிடையே இல்லை. சிலபோது கையில் மந்திரித்த வாசகங்கள் அடங்கிய குழல்கள் கோக்கப்பட்ட தடித்த நூலினைக் கட்டியிருப்பர். நோய், கண்ணேறு ஆகியவற்றிலிருந்து இது தங்களைக் காக்கும் என நம்புகின்றனர். இவை பற்றிய முழு விவரங்களைச் சாதியினைச் சேர்ந்த பெரியவர்களும் விவரம் தெரிந்த ஞானிகளுமே அறிந்தவராவர்.

தாங்கள் முதலில் பயிர்த்தொழிலில் ஈடுபட்டவர்களாக வாழ்ந்து வந்ததாகவும் மலைப்பகுதிகளுக்கு வந்து குடியேறிய பின்பே சுற்றுச் சூழலும் அனுபவத்தில் ஏற்பட்ட மாற்றமும் தங்களை வேட்டைக்காரர்களாகவும் கண்ணி வைப்போராகவும் மாற்றி விட்டன என்றும் முதுவர் கூறுகின்றனர். இப்பொழுது இவர்கள் செப்புக்காடு எனப்படும் குறும்புதர்க்காட்டினை வெட்டி வீழ்த்தித் தீயிட்டுக் கொளுத்தியபின் அது நல்ல மழைபெறும் பகுதியாயின் மலை நெல்லையும், மற்ற இடங்களில் ராகியினையும் பயிரிடுகின்றனர். களை பிடுங்குவதும், பயிரைப் பேணுவதும் ஆகிய பணிகளைப் பெண்கள் மேற்கொண்டவர்களாக இருக்கப் பயிரைக் காவல்காக்கும் பணியினை ஆண்கள் மேற்கொள்கின்றனர். இவர்கள் பிடிக்கும் எல்லா விலங்குகளையும் வேட்டை விலங்குகள் என்றே கொள்கின்றனர். எனினும், அவற்றுள் சிலவற்றை நாம் புழு, பூச்சி இனத்தைச் சார்ந்தவை என்றே கூறுவோம். எலி, அணில், காடை, காட்டுக்கோழி, முள்ளம்பன்றி, சருகுமான், மீன் ஆகியனவற்றை அகப்படுத்துகின்றனர். ஊதுகுழலை -யும் முட்கோலையும் (blowpipe and dart) பயன்படுத்தி இவர்கள் சிறுபறவைகளையும் வேட்டையாடுகின்றனர். இவர்கள் பயன்படுத்தும் கண்ணிகள் பலதிறத்தன; எனினும் அவற்றுள் மூன்று குறிப்பிடத் -தக்கன. அவற்றுள் ஒன்று பெரிய வில்போலத் தோற்றம்தரும். அதனைச் செங்குத்தாகத் தரையில் நட்டு வைப்பர். கூரிய முனையை உடைய முக்கோண வடிவான மூங்கிலோடு அது ஒரு சுருக்கினால் இணைக்கப்பட்டிருக்கும். அதனைச் சார்ந்த பகுதிகள் இயற்கையாக

அடைபட்டன போல அடைக்கப்பட்டுவிடுவதால் அவ் வழியாக வரும் சிறு விலங்குகள் அப்பாவித்தனமாக அதனுள் வேறுவழியின்றி நுழையும் போது சுருக்கு நழுவ, விற்பொறியினிடையே அகப்பட்டுக் கொள்ளும். மற்றொரு கண்ணி வளைத்துக் கட்டப்பட்ட விளார் ஆகும். அதிலிருந்து சுருக்கு வைக்கப்பட்ட ஒரு கயிற்று வளையம் தொங்கும். பார்த்தால் தரைபோலத் தோன்றும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள இது ஒரு சிறு மேடையாகும். அதன் மீது ஏறும் காட்டுக் கோழிகளின் கால்கள் அச் சுருக்கில் அகப்பட்டுக் கொள்ள அது தன்னை விடுவித்து கொள்ளச் செய்யும் ஆர்ப்பாட்டத்தில் வளைத்துக் கட்டப்பட்ட விளார் நிமிர்ந்து கொள்ள அக்கோழி அந்தரத்தில் தொங்கும். மூன்றாவது வகைக் கண்ணியும் இத்தகைய அமைப்புடையதாயினும் உறுதியான பெரிய கண்ணியாகும். இதனை நெடுங்கிடையாக வேலிகளில் அமைப்பர். இது முள்ளம்பன்றியினைப் பிடிக்க அமைக்கப்படுவது. இதன் வழியாக அது நுழைந்து செல்லும் போது சுருக்கு நழுவி மரக்கொம்பு நிமிர்ந்துவிட முள்ளம்பன்றி அந்தரத்தில் தொங்கும். வரையாட்டினைப் பிடிப்பதில் முதுவர் கைதேர்ந்தவர்கள். சுருக்கோடு கூடிய கண்ணி அமைக்கப்பட்டுள்ள பாதைகள் வழியே அவற்றைத் துரத்தி அவற்றின் கழுத்து, சுருக்கில் மாட்டிக் கொள்ளும்படி செய்வர். அழகாகப் பின்னப்பட்ட வலைகளைக் கொண்டும் தூண்டிலிட்டும் இவர்கள் மீன் பிடிப்பர். மேட்டு நிலத்திற்குக் கீழே உள்ள பெரிய ஆறுகளில் இரவில் வலையிட்டு மீன்பிடிக்கும் நுட்பத்தையும் இவர்கள் தெரிந்துள்ளனர். துப்பாக்கி கொண்டு சாம்பர், இரலை, கலைமான், கீரிப்பிள்ளை, குரங்கு, மலையணில், மலைக்கீரி ஆகியவற்றைச் சுட்டு வீழ்த்துவர். குறி தவறாது சுடும் திறன்மிக்க முதுவர் தாங்களே தயாரித்துக் கெட்டித்த துப்பாக்கி மருந்தைப் பயன்படுத்தும்போது மிகக் கவனமாக இருப்பர். வேட்டை விலங்குகளைச் சில கசதூரம் இருக்கும்படியாக நெருங்கிய பிறகே பழைய அமைப்பை உடைய தங்கள் துப்பாக்கியினை இவர்கள் பயன்படுத்துகின்றனர்; அது புதிய அமைப்புடைய துப்பாக்கியில் நவீனமான குண்டுகளையிட்டுச் சுடுவதனை ஒத்த பயனை விளைவிக்கிறது. ஒரு முறை இரு ஆங்கிலேய மலைத்தோட்ட முதலாளிகள் இரண்டு முதுவர்களுடன் காட்டெருமை வேட்டைக்குப் புறப்பட்டனர். துப்பாக்கியினைச் சுமந்து சென்ற முதுவருள் ஒருவன் இடறிய போது அவன் தூக்கிச் சென்ற துப்பாக்கி வெடித்து ஆங்கிலேயருள் ஒருவன் அவ்விடத்திலேயே இறந்துவிட்டான். உடனே அந்த இரண்டு முதுவரும் ஓட்டம் பிடிக்க தொடங்கினர். மற்றொரு ஆங்கிலேயன் அவர்களை நோக்கி அவர்கள் திரும்ப வராவிட்டால் சுட்டுவிடப் போவதாக அச்சுறுத்த இறுதியில் அவர்கள் அவனிடம்

திரும்பினர். இக்குற்றம் பற்றி விசாரித்த திரு பென்ஸ்லே அம் முதுவர்கள் தங்களுக்கு மரண தண்டனை வழங்கப்படாதது குறித்து மிகுந்த வியப்பில் ஆழ்ந்தனர் எனக் கூறியுள்ளார்.

பயிர்த்தொழிலில் ஈடுபடும் முதுவர்கள் அது பற்றி அதிகம் கருத்துச் செலுத்துவதில்லை. பயிரைப் பாழ்படுத்த வரும் காகங்களையும் பேய்களையும் விரட்ட இவர்கள் சோளக் கொல்லைப் பொம்மைகளை அமைப்பதில்லை. சாம்பர், கலைமான், பன்றி ஆகியவை விளை நிலங்களில் புகாமல் காக்கப் பலவகைக் கருவிகளைப் பயன்படுத்து கின்றனர். இவற்றுள் எதுவும் தொடர்ந்து பயன் விளைவிப்பதில்லை. முதுவர் திறமையுடன் கையாளும் ஒரே கருவி அரிவாள்தான். அதனை எப்பொழுதும் பிரியாதவனாக அவன் இருக்கக் காணலாம். அதனைக் கொண்டு ஒரு வீடு கட்டுவதிலிருந்து எலியின் தோலை உரிப்பது வரையான எல்லாப் பணிகளையும் அவன் செய்து முடிப்பான். தன் துப்பாக்கியில் ஈயத் தகட்டினைத் துண்டுகளாக்கித் திணிக்கவும் கூட இதே அரிவாளைத் தான் இவன் பயன்படுத்துகின்றான்.

முதுவருள் பெரும்பாலோர் ராகி, மலைநெல் ஆகியனவற்றையும் தாங்களே பயிரிடும் காய்கறிகளையும் வேட்டையாடும் இறைச் சியினையும் உணவாகக் கொண்டு வாழ்கின்றனர். கருங்குரங்கின் இறைச்சியினை மற்ற எல்லாவற்றிலும் சிறந்ததாகக் கருதும் இவர்கள் அதனை உண்பதில் மிகுந்த விருப்பம் உடையவர்கள் . நோயால் மிகவும் மெலிந்தவனான ஒரு முதுவன் இறந்த நிலையில் உள்ள ஒரு குரங்கினைப் பற்றி அதன் கழுத்தினைக் கடித்துக் குருதியினைக் குடித்ததனை நான் நேரில் கண்டுள்ளேன். மாடு, நாய், நரி, பாம்பு ஆகியவற்றின் இறைச்சியினை இவர்கள் உண்பதில்லையாயினும் பலவகை ஓணான்கள், எலிகள், மான் இனங்கள், மீன், கோழி, கருடனும் கழுகும் ஒழிந்த பறவைகள் ஆகிய அனைத்தையும் சமைத்து உண்கின்றனர். மேட்டு மலையினையும் அதன் கிழக்குச் சரிவினையும் சார்ந்தவர்களாக வாழும் முதுவர்கள் பன்றியினை எந்த வகையிலும் உணவாகப் பயன்படுத்துவதில்லை. மேற்குச் சரிவில் வாழும் முதுவர் காட்டுப் பன்றியின் இறைச்சியில் மிகுந்த விருப்பம் கொண்டவர்கள். இதனால் மற்ற பிரிவினர் இவர்களைத் தாழ்ந்தவர்களாக மதிக்கின்றனர். இவர்கள் இவ்வாறு பன்றியின் இறைச்சியினை உண்ணும் பழக்கத்தை மேற்கொண்டதற்குக் காரணம் இவர்கள் வாழும் காட்டின் நடுப்பகுதியில் சாம்பர் முதலிய மான் இனங்கள் இல்லாமையேயாகும் என நான் நினைக்கின்றேன். போதை தரும் எல்லா வகை மதுவிலும் முதுவர்

விருப்பங்கொண்டவர்கள். மேற்கு மலைச் சரிவில் வளரும் ஒருவகைக் காட்டுப் பனையிலிருந்து கள்ளினை இறக்கி அதனை நொதிக்க வைத்து இவர்கள் தாராளமாகப் பருகுகின்றனர். இந்த மரங்கள் வளரும் பகுதியில் வாழும் முதுவர் இனத்தவர் சிலர் இந்த மரங்கள் பூக்கும் பருவகாலம் முழுவதும் எப்பொழுதும் குடி மயக்கத்தில் ஆழ்ந்தவர்களாகவே இருப்பர். இந்த மதுவினை இவர்கள் திப்பிலிக் கள் என்கின்றனர். இந்தப் பனை வகை மரக் குட்டுல் *(Caryota wrens)* மரத்தை ஒத்ததாக உள்ளது. மேற்குச் சரிவினில் வாழும் முதுவர் மேற்குக் கடற்கரைப்பகுதியிலிருந்து கிடைக்கும் அபினிக்கு அடிமையா -கியுள்ளனர். முதுவர் வேறு எந்தச் சாதியினரும் தங்களோடு ஒன்றாக இருந்து உண்ணவோ, குடிக்கவோ, புகைக்கவோ தகுதி வாய்ந்தவர்கள் அல்லர் எனக் கூறுகின்றனர். முன்னொரு காலத்தில் தாங்கள் இந்த உரிமையினை வேளாளருக்கு வழங்கியிருந்ததாகவும் இதனால் அச் சாதியினைச் சேர்ந்த பலர் விருந்தினராக வரத்தொடங்கியமையால் அனைவருக்கும் உபசாரம் செய்ய இயலாது போனதால் இப்பொழுது தாங்கள் வேறு யாருடனும் சேர்ந்து உண்பதில்லை எனவும் ஊர்ப்பக்கமாக வரும் புதியவர்களுக்குச் சமைக்காத உணவுப் பண்டங்களையே கொடுக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருப்பதாகவும் கூறுகின்றனர்.

முதுவர்களிடையே வழங்கும் பழமொழி, பாட்டு, நாட்டார் கதை ஆகிய எதனையும் நான் எப்போதும் கேட்டதில்லை. அவர்கள் இந்த மலைக்கு வந்து சேர்ந்தது பற்றியான கதையொன்று மட்டுமே அவர்களிடையே வழக்கில் உள்ளது. இவர்களிடையே வழங்குவதான மற்றுமொரு கதையினை இவர்கள் நம்பிக்கை எனலாமே அன்றிக் கதை எனக் கொள்ள இயலாது. அதன்படி பள்ளிவாசல் என்ற இடத்திற்குக் கீழேயுள்ள ஒரு மூங்கில் பூப்பூக்குமானால் திருவாங்கூர் மகாராசாவின் பிள்ளைகளில் ஒருவன் புலிமனுசனாக மாறி மக்களைத் தின்னத் தொடங்குவான் என நம்புகின்றனர். பில்லிசூன்யம் வைப்பதன் காரணமாக ஆண்கள் புலிமனுசராக மாறுகின்றனர் என நம்பும் இவர்கள் அது பற்றிய கதைகளை அடிக்கடி கூறுவர். ''திங்கட்கிழமை நல்லாத் திங்கலாம்'' என இவர்கள் பழமொழி போல வழங்குவதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் போது அதன் சொற்களிடையேயான இயைபு பொருளற்றதாகி விடுகின்றது.

ஈட மூங்கிலைப் பிளந்து கட்டிய சட்டத்தின் மேல் குரங்கின்

தோலினைப் போர்த்துக் கட்டி முதுவர்கள் அதனைக் கொட்டி முழக்கியபடி பொழுதினைப்போக்குவர்.

இந்தப் பழங்குடிகள் முன்பெல்லாம் வெளியாரைக் கண்டால் அஞ்சி ஒதுங்கியவர்களாக வாழ்ந்து வந்தவர்களே. சென்ற முப்பது ஆண்டுகளாகத்தான் வெளியுலகத்தோடு தொடர்பு கொண்டவர்களாக இவர்கள் வாழ்கின்றனர். வயதான பெரியவர்கள் கோயமுத்தூர் பகுதியிலிருந்து மலையேறி வரும் கொள்ளைக் கூட்டத்தார் முதுவர் குடியிருப்புக்களை நெருப்புக்கு இரையாக்கியபின் கிடைக்கும் கால்நடைகள், கோழிகள் ஆகியவற்றைக் கொண்டு சென்ற நாள்களை இன்றும் நினைவு கூர்கின்றனர். இன்றும் இவர்களுள் சிலர் அத்தகைய நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட அச்சம் உள்ளத்தை விட்டு அகலாத காரணத்தால் ஐரோப்பியர்களோடு பேசக் கூடத் துணிவில்லாதவர்களாக உள்ளனர். இத்தகைய அச்ச உணர்வு பெண்கள் மனத்தில் ஆழப் பதிந்துள்ளது. எதிர்பாராத அயலாரை எதிர்ப்பட நேரும் போது அவர்களுடைய இந்த அச்ச உணர்வு இயல்பாகத் தலை தூக்க ஒரு காடைக் குஞ்சினைப் போல எங்கேனும் சென்று ஒளிந்து கொள்வர். இவர்களுள் சிலர் படிக்கக் கற்றுக்கொள்ள அவ்வப்போது விரும்பினாலும் அந்த முயற்சி பயன் விளைவித்ததா என எனக்குத் தெரியாது.

வியப்பூட்டும் பல அற்புதங்களைத் தற்போது முதுவர் கண்டு வருகின்றனர். இயந்திரங்களை இயக்க மின்சாரம் உற்பத்தி செய்யும் நீர் மின்நிலையம், இவர்கள் நாட்டெல்லையில் ஓடும் மின்சார ரயில், தொலைபேசி ஆகியன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. முதியவனான முதுவன் ஒருவன் அந்த இனத்தவருள் ஐந்து மைல் தொலைவில் உள்ளவரோடு முதன் முதல் பேசிப் பார்த்த பெருமைக்குரியவன் எனத் தன்னைப் பற்றி மற்றவர்களிடையே தம்பட்டம் அடித்துக் கொள்வான்.

இரண்டு வேறுபட்ட உடல்வாகினை இவர்கள் பெற்றுள்ளனர் என நான் கூறினேன். இந்த இருவர்களுக்கு இடையே ஏற்பட்ட கலப்பால் மூன்றாவதான உடல்வாகு கொண்ட ஒரு திறத்தவரும் தோன்றி உள்ளனர். முதல் வகையினர் கழுகு மூக்கொத்த நீண்ட மூக்கும் மெல்லிய உதடுகளும் கொண்டவர்கள். பெரும்பாலான ஆண்கள் இந்த வகையினைச் சேர்ந்தவர்களே. இரண்டாவது வகையினர் பருத்த சப்பட்டையான மூக்கும், தடித்த உதடும் கொண்டவர்கள். பெண்களுள் பெரும்பாலோர் இவ்வகையினரே. ஆண்களோடு ஒப்பிடும் போது இவர்கள் முக அழகு குறைந்தவர்களே. இரண்டாவது வகை சார்ந்த

ஆண்களை நான் காண நேர்ந்ததில்லை. இந்த இரண்டு வகைக்கும் இடைப்பட்டவர்களான ஆண்களே பொதுவாகக் காணப்படுகின்றனர். ஏல மலைகளிடையே குள்ள உருவினரான பழங்குடிகள் இன்னமும் வாழ்தல் கூடும். இவர்களைப் பற்றிய விவரங்கள் ஏதும் தெரியவில்லை. காலஞ்சென்ற திரு ஜெ. டி. மன்றோ அவர்களைப் பற்றிச் சிறிது தகவல் திரட்டியுள்ளார். திரு. எ. டபிள்யூ. டர்னர் மானின் பச்சை இறைச்சி -யினைத் தின்று கொண்டிருந்த குள்ளன் ஒருவனைக் காணும் நல்வாய்ப்பினைப் பெற்றிருந்தார். அந்தக் குள்ளனோடு கைகளின் மூலம் பேச முயன்ற அவர் தன்னுடைய அந்தச் சந்திப்பைப் பற்றி வயதான முதுவர் பழங்குடி வேட்டைக்காரனான சீரங்கனிடம் கூறியபோது அதனைக் கவனமாகக் கேட்ட அவன், ' நீங்கள் அவனைச் சுடவில்லையா?' எனக் கேட்டானாம். இந்தக் கேள்வி அமைதியும் அடக்கமும் கொண்டவர்களான முதுவரின் உள்ளப் பாங்குப் பற்றிய புதியதொரு பக்கத்தைக் காட்டுவதாக உள்ளது.

முதுவர் ஆழ்ந்த அன்பு பாராட்டும் பண்பினர் என்பதை நானறிவேன். கஞ்சன் சிறுபிள்ளையான தன் மகனிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தான். அவன் இரலை மான்களை தான் காயப்படுத்திய பின் தன் மகன் அவற்றைக் கொல்வதற்கு ஏற்றபடி வேட்டைத் திட்டங்களை வகுத்து அவனை வேட்டையில் பழக்கினான்.

''கோயமுத்தூர் மாவட்டத்தின் தென்பகுதியில் இருளர், முதுவர், காடர் ஆகியோர் தேனடைகளைத் திரட்டுகின்றனர். இது மிகவும் ஆபத்தான தொழில். முதுவர் கையில் தீப்பந்தத்தை ஏந்தியவர்களாகப் தோளில் பல மூங்கில் குழாய்களைத் தொங்கவிட்டபடி கயிற்றிலோ, கொடிகளிலோ தேனடைகள் உள்ள இடத்தினை நோக்கிப் பாறை முகட்டிலிருந்து கீழே இறங்குவர். தீப்பந்தத்தைக் கண்டு அஞ்சி தேனீக்கள் அகலும். அதன் பின்னர் அவர்கள் தேனடைகளை மூங்கில் குழாய்களில் நிரப்பியவர்களாக மீண்டும் பாறையின் உச்சிக்கு ஏறி வருவர். ''*

மூகி: Mūgi (dumb)

கோல்லர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலத்தின் பெயர். ஊமை எனப் பொருள்படுவது.

---

* வேளாண்மை விவரத் தொகுதிகள், கல்கத்தா, எண். 7, 1904
(Agricult : Ledger series, Calcutta, No.7. 1904)

மூக: Mūka

கொண்ட ராசுக்களின் ஓர் உட்பிரிவு

மூக தொர: Mūga Dora

1891, 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கைகளில் மூக என்பது முறையே கொண்ட தொரயரின் உட்பிரிவு எனவும் கொண்ட தொரயருக்கான மற்றுமொரு பெயர் எனவும் பதியப்பட்டுள்ளது. விசாகப்பட்டினத்தில் மூக தொரையர் தகுதியில் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றார்கள் எனவும், கொண்ட தொரையர் பிரிவின் சாதித் தலைவர்களாக உள்ளவர்களுள் பலரும் மூக தொரையர் பிரிவினைச் சேர்ந்தவர்களே எனவும் எனக்குத் தெரியவந்துள்ளது. பின்வரும் குறிப்புகளைத் தந்து உதவிய திரு சி. ஹயவதன ராவ் மூக தொர கொண்டதொர சாதியினும் வேறுபட்ட தனித்ததொரு சாதி எனக் கருதுவதாகத் தெரிகின்றது. நாகரிக வளர்ச்சி பெறாத மலைவாழ் பழங்குடிகளாக நெடுங்காலமாக இருந்து வந்த இவர்கள், அண்மைக் காலமாகச் சமவெளியில் வாழும் மக்களின் செல்வாக்கிற்கு ஆட்பட்டவர்களாக உள்ளனர். தெலுங்கு பேசும் இவர்கள் பெயர்களும் தூய தெலுங்குப் பெயர்களாகவே உள்ளன. அண்ணா, அய்யா, என்பவற்றோடு தொர என்பதையும் பட்டப் பெயராகத் தரிக்கின்றனர். பத்மபுரத்தில் உள்ள வண்டாரி தொர என்பவரைத் தங்கள் சாதித் தலைமைக்குரியவராக இவர்கள் கருதுகின்றனர்.

பயிர்த்தொழிலில் ஈடுபட்டவர்களாக உள்ள மூக தொரயர் சிறு வணிகத்திலும் சுறுசுறுப்பாக ஈடுபடுகின்றனர். நெல் அறுவடையாகும் பருவங்களில் பொதி எருதுகளின் மீது சுமை ஏற்றியபடி இவர்கள் நாடெங்கும் வணிகத்தின் பொருட்டுச் செல்வர். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பழனி மலையில் வாழும் குன்னுவர்களைப் போல இவர்களும் தங்கள் நிலத்தில் உள்ள பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் போது அதனோடு எருவினைக் கரைத்து விடுகின்றனர்.

சூரியனை வழிபடும் கோரவம்சம், நாகத்தை வழிபடும் நாக வம்சம் என இரு பிரிவுகளாக இவர்கள் உள்ளனர். மேலும் வேம்பு (Melia Azedirachta) சிக்குடி (அவரை: Dolichos Lablab) விளங்காய் (Feronica Elephantum) காகர (பாகல்: Momordica Charantia)ஆகிய புறமணக்கட்டுப்பாடு உடைய இண்டிபேரு (குலப்பெயர்) களையும் கொண்டவர்களாக உள்ளனர்.

சிறுமியர் பூப்படையும் முன்போ பூப்படைந்த பின்போ மணம் செய்விக்கப்படுகின்றனர். மீநரிகம் எனப்படும் தாய் மாமன் மகளை மணக்க உரிமை கொண்டாடும் வழக்கம் இவர்களிடையே உள்ளது. நல்ல நாள் ஒன்றில் மணமகனாதற்குரியவன் குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர்கள் ஒரு சேவல் அல்லது ஆடு, மணமகளின் அன்னைக்கு ஒரு சேலை, அரிசி, சாராயம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு மணமகள் இல்லம் செல்வர். இந்த அன்பளிப்புக்கள் பெரும்பாலும் பெண் வீட்டாரால் ஏற்றுக் கொள்ளப்படும். அதன்பின் தெலுங்குச் சாதியார் நிகழ்த்தும் பசுபு (மஞ்சள்) சடங்கினை நடத்துவர். குறிப்பிட்டதொரு நாளில் மணமகன் வீட்டார் மணமகள் இல்லத்திற்குச் சென்று மணமகளை மணமகன் வீட்டிற்கு ஊர்வலமாக அழைத்து வருவர். மறு நாள் அதிகாலையில் மணமக்கள் மணப்பந்தலில் வந்து அமர்வர். மணப்பந்தலின் நடுக்கால்கள் இரண்டும் நேரேடி (நாவல்: *Eugenia Jambolana*) ரெல்லி (கொன்றை: *Cassiafistula*) மரக்கம்பங்களால் ஆனவையாக இருக்கும். மணச்சடங்கை நடத்தும் தாய்மாமன்கள் மணமக்கள் சிறுவிரல்களை இணைத்து வைப்பர். மஞ்சள் சேர்ந்த விளக்கெண்ணெய் பூசிய பின் மணமக்கள் குளிப்பர். அதன்பின் அவர்களுக்கு அவர்கள் மாமனார்கள் புதிய ஆடைகளை வழங்குவர். வீட்டின் தரையில் கொஞ்சம் அரிசி கொட்டப்படும். மணமக்கள் இதனை மும்முறை அளப்பர். அவர்கள் ஆடையின் முனைகள் சேர்த்து முடிச்சிடப்படும். அதன்பின் ஆற்றங்கரைக்கு ஊர்வலமாகச் சென்று சேர்வர். அங்கு மணமகள் மணமகனுக்குப் பல்துலக்கும் குச்சியினை மும்முறை கொண்டு தருவாள். பின்னர் அதே போன்று மணமகன் மணமகளுக்குப் பல்குச்சியினை உடைத்துத் தருவான். பின் அவர்கள் ஒன்றாக அமர்ந்து பல் துலக்குவர். ஆற்றில் குளித்து முடித்த பின் மீண்டும் அவர்கள் உடைகளின் முனைகளை இணைத்து முடிவர். முன்பே அளிக்கப்பட்ட அரிசியினை ஆற்றிலிருந்து கொண்டு வரப்பட்ட நீரில் மணமகள் சமைத்த பின், மணமக்கள் அதனை உண்பர். அதன் பின்னும் அடுத்த இரண்டு நாள்களும் சாதியைச் சேர்ந்தவர்களுக்கு விருந்தளிப்பர். மதுவும் தாராளமாக வழங்கப்படும். பின் ஒரு முதியவரின் துணையோடு மணமக்கள் மணமகள் இல்லம் சென்று அங்கு மூன்று முதல் ஐந்து நாள்கள் வரை தங்கி இருப்பர். மணமகள் பருவம் அடைந்தவளாயிருப்பின் பின்னர் அவள் கணவன் இல்லம் செல்வாள்.

ஒரு சிறுமி பூப்படைந்தால் அவளைத் தனித்ததொரு அறையில் தரையில் முக்கோண அமைப்பில் நடப்பட்டு மூன்று சுற்றுக்கள் நூல்

சுற்றப்பட்டுள்ள மூன்று அம்புகளுக்கு இடையேயான பகுதியில் உட்கார்ந்திருக்கும்படியாக விடுவர். மேலே கூரையிலிருந்து கல்லோடு கூடிய தொட்டில் அவ்விடத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும். இறுதி நாளன்று அவள் ஓடைக்குச் குளிக்கச் செல்லும் வழியில் ஒரு நாவல் மரக் கிளையினை நட்டு அதற்கு நீரூற்றி வைத்திருப்பர். அச்சிறுமி அந்த இடத்தைக் கடந்து செல்லும்போது அக் கிளையினைப் பிடுங்கித் தன்னோடு ஓடைக்கு எடுத்துச் சென்று ஓடையில் அதனை வீசியபின் குளிப்பாள்.

இறந்தவர்களை எரிக்கும் இவர்கள் சாவுத் தீட்டினை மூன்று நாள்கள் மேற்கொள்கின்றனர். அப்போது சாதிக்குரிய தொழிலினை இவர்கள் செய்வதில்லை. நான்காம் நாள் 'பசுபு முட்டுகோவதம்' எனப்படும் மஞ்சளைத் தொடும் சடங்கினை நிகழ்த்துகின்றனர். இறந்தவரின் உறவினர்கள் பிணத்தை எரித்த இடத்திற்குச் சென்று சாம்பலைத் திரட்டுவதோடு சாணி, நாவல், புளி ஆகியன கலந்துள்ள நீரினை அவ்விடத்தில் தெளிப்பர். சோறு சமைத்துக் காகத்திற்கு மூன்று கையளவு சோறிடுவர். பின்னர் தீட்டு நீக்கும் சடங்கினை நிகழ்த்துகின்றனர். இச்சடங்கு சமவெளியில் வாழும் சாதியாரின் சின்ன ரோசு (சிறு நாள்) சடங்கினை ஒத்தது. வசதி படைத்தவர்கள் பன்னிரண்டாம் நாளன்றோ அதன் பின்னரோ பெத்த ரோசு (பெரிய நாள்) சடங்கினை நிகழ்த்துவர். இறந்தவரின் உறவினர்கள் அதன் பின் பிணத்தை எரித்த இடத்தில் ஒரு வாழையினை நடுவதோடு மஞ்சள், விளக்கெண்ணெய், காசு ஆகியனவற்றைத் தங்கள் வசதிக்குத் தக்கபடி அவ்விடத்தில் இடுவர். அக் காசுகளைத் திரட்டி விருந்துக்குத் தேவையானவற்றை வாங்கப் பயன்படுத்துவர்.

முக்கர : Mukkara (nose or ear ornament)

போயரின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். மூக்குத்தி எனப்பொருள்படுவது.

முக்குவன் : Mukkuvan

முக்குவன்கள் மலபார் கடற்கரையினைச் சேர்ந்த மீனவர்கள். இவர்களைப் பற்றிப் புச்சனன்* பின்வருமாறு எழுதியுள்ளார். "முக்குவன் அல்லது முக்குவர் எனப்பன்மையில் சுட்டப்படும் இவர்கள் மலையாளக் கடற்கரையினைச் சார்ந்து வாழும் பழங்குடிகள். உள்நாட்டுப்

* மைசூர், கன்னடம், மலபார் வழியான பயணம்.

(Journey through Mysore, Canara and Malabar, 1807)

பகுதிகளுக்கு இவர்கள் அரிதாகவே செல்லக் காணலாம். மலையாளப் பகுதிகளைத் தாண்டி இவர்கள் ஒருபோதும் சென்றதில்லை. மீன்பிடித்தலையே குலத் தொழிலாகக் கொண்டுள்ள இவர்கள் தாழ்ந்த சாதியினருக்கும் சாதி எதனையும் சேராதவர்களுக்கும் பல்லக்குச் சுமப்பவர்களாகப் பணிபுரிகின்றனர். படகு வலிக்கும் பணியினையும் இவர்கள் மேற்கொள்கின்றனர். எனினும் கடலில் படகு வலித்தவர்களாக மங்களூருக்கு அப்பால் செல்வதில்லை. சில பகுதிகளில் இவர்கள் தென்னை வளர்க்கின்றனர். மலபார் தென்பகுதிகளில் இவர்களில் பெரும்பாலோர் முசல்மான்களாக மதம் மாறிவிட்டிருந்தாலும் தங்களுடைய வழக்கமான தொழில்களையே மேற்கொண்டவர்களாக உள்ளனர். சார்ந்த சமயநெறிக்குப் புறம்பாக நடந்து கொள்ளும் இவர்களை வடபகுதியினைச் சார்ந்தவர்கள் மதித்து நடத்துவதில்லை. இவர்கள் தங்களைச் சூத்திரர்களாகப் பாவித்துக் கொள்வதில்லை. தியர் தங்களை விடச் சாதியில் உயர்ந்தவர்கள் என்பதனை இவர்கள் எத்தகைய முணுமுணுப்பும் இன்றி ஒப்புக் கொள்கின்றனர். இவர்களுக்குப் பரம்பரை உரிமையாகச் சாதித் தலைமை ஏற்பவன் அரையன் எனப்படுவான். சாதி விதிகளுக்கு முரணாக நடப்பவர்களுக்குத் தண்டம் விதித்தும் சாதி விலக்கம் செய்தும் தண்டிக்கும் உரிமை பெற்றவன் அரையன். பத்ரகாளியே இச்சாதியாருக்கு உரிய குல தெய்வம். இத் தெய்வத்தின் உருவமாக ஒரு மரக்கட்டையினை நட்டு வைத்து அதன் மீது கூரை அமைத்து அதனைத் தெய்வத்தின் கோயிலாகக் கருதி வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் நான்கு முறை முக்குவன்கள் இந்தக் கோயிலில் கூடி நடப்பட்டுள்ள தெய்வத்திற்குச் சேவலினைப் பலியிடுவதோடு பழங்களையும் படைப்பர். சாதியினைச் சேர்ந்த ஒருவனே அப்போது பூசாரியாகப் பணிபுரிவான். பிராமணர்கள் வழிபாடு நிகழ்த்தும் பெரிய தெய்வங்கள் உறையும் கோயில்களுள் நுழைய இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அக் கோயில்களில் தூரமாக நின்றே வழிபடும் இவர்கள் தங்கள் படையல்களைத் தூய்மையான கரங்களை உடையவர்களான உயர்சாதியினரிடம் ஒப்படைப்பர்.''

காப்டன் உறாமில்டன் முக்குவர் பற்றிப் பதிந்துள்ளது வருமாறு:*
''முக்குவர் இல்லங்கள் பலவற்றுள்ளும் சில வெட்டுக் குறிகளோடு கூடிய சதுரமான அமைப்புடைய மரக்கட்டைகள் தரையில் நடப்பட்டிருக்கும். தரைக்கு மேலே இரண்டடி உயரம் நிற்கும் இந்த மரக்கட்டைகளின் மேல் பனையோலைகளையோ தென்னை

* கிழக்கிந்தியா பற்றிய புதிய விவரங்கள், 1744.
(A new account of the East Indies 1744)

யோலைகளையோ கொண்டு கூரை வேய்ந்திருப்பர். இவையே அவர்கள் குடும்பத்திற்குரிய குல தெய்வங்கள் உறையும் கோயில்களாம்.''

மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் (1908) முக்குவர்களைப் பற்றித் தரப்பட்டுள்ள விவரம் வருமாறு: ''தவறானதான வழக்கு வரலாற்றின் காரணமாக இலங்கையிலிருந்து வந்து குடியேறிய சாதியார் எனக் கருதப்படுவர்கள் முக்குவர்கள். மலபாரின் வடக்குப் பகுதியில் மருமக்கள் தாயத்தையும் தெற்குப் பகுதியில் மக்கள் தாயத்தையும் இவர்கள் பின்பற்றுகின்றனர். சுண்ணாம்பு தயாரித்தலையும் மஞ்சள் சுமந்து செல்வதையும் (முன்னும் பின்னும் இருவர் தாங்கும் கழியில் தொங்கும் தூரியில் பயணிகளை அமர்த்தித் தூக்கிச் செல்வதே மஞ்சள் சுமத்தல்) கூட இவர்கள் தங்கள் பரம்பரைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். மாவட்டத்தின் தென்கோடிப் பகுதியில் இவர்களை அரையன்* எனக் கூறுவர். மற்றப் பகுதிகளில் அரையன் என்பது இச்சாதியின் தலைவர்களுக்குரிய பட்டப்பெயராகும். கண்ணனூருக்கு வடக்கே முகவர் அல்லது முகயர் என அழைக்கப்படும் மீனவர் வாழ்கின்றனர். இவர்கள் தென் கன்னடத்தைச் சேர்ந்த முகயர் சாதியினராதல் கூடும். முகயர்கள் ஆற்றில் மீன் பிடிப்பவர்கள் எனவும் முக்குவர்கள் கடலில் மீன்படிப்பவர்கள் எனவும் இவர்களைப் பற்றிய மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது. ஆனால் இந்த வேறுபாடு நடைமுறையில் உண்மையில் இருப்புதாகத் தெரியவில்லை. தியயருக்கும் கைத்தொழில் புரியும் பிற வகுப்பாருக்கும் அடுத்த தாழ்ந்த நிலையில் உள்ளவர் முக்குவர். இச் சாதியினைச் சேர்ந்த சிலர் அண்மையில் துணைக் குற்றவியல் நடுவர்களாகவும் துணைப் பதிவாளர்களாகவும் பதவியில் அமர்ந்திருப்பது இச்சாதிக்குப் பெருமை சேர்ப்பதாகும். பலர் இச்சாதியிலிருந்தும் முகமதிய சமயத்தைத் தழுவியுள்ளனர். வடக்கு மலபாரில் முக்குவர் பொன் இல்லம், செம்பு இல்லம், கார் இல்லம், காசு இல்லம் என்ற பெயருடைய புறமணக் கட்டுப்பாடு உடைய இல்லங்களாகப் பிரிவுபட்டுள்ளனர். இதன் காரணமாக இவர்கள் நான்கு இல்லக்காரர் என அழைக்கப்படுகின்றனர். தென் மலபாரில் வாழும் முக்குவர்களும் அரையர்களும் மேற்கண்ட நான்கு இல்லங்களுள் பின் மூன்று இல்லங்களை மட்டுமே பெற்றுள்ளனர். இதனால் இவர்கள் மூன்றில்லக்காரர் என அழைக்கப்படுகின்றனர். காவுதியர் எனப்படும் ஒரு பிரிவும் உள்ளது. இப் பிரிவினர் மற்றவர்களுக்கு நாவிதர்களாகப் பணிபுரிகின்றனர்.

* முக்குவன்கள் அரையன்களிலிருந்தும் முற்றிலும் வேறுபட்ட சாதியினர் ஆவர் என எனக்குத் தகவல் தந்துள்ளனர்.

சிலபோது இவர்களைப் பணிமகன் எனவும் வழங்குவர். நான்கு இல்லக்காரர் மூன்று இல்லக்காரரையும் காவுதியன்களையும் விட உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் பின்னவர் களிடமிருந்து பலவகை மரியாதைகளை எதிர்பார்ப்பர். பிற நாவிதர் சாதியாரைப் போலவே காவுதியன்கள் தீட்டு நீக்கும் சடங்கை நடத்தும் உரிமை பெற்றவர்களாவர். இச் சடங்கின் போது தீட்டினை நீக்கக் தெளிக்கப்படுவது கடல் நீராகும் என்பதனைக் குறிப்பிட்டாக வேண்டும். சாதியைச் சேர்ந்த பழைய அமைப்புக்கள் முக்குவர்களிடையே இன்று வரை தொடர்ந்து இருந்து வருகின்றன. இவற்றைப் பிற சாதியாருடைய அமைப்புக்களோடு ஒப்புமையுடையன எனலாம். அரையன் அல்லது காரணவன்கள் எனப்படும் தலைவர்களைக் கொண்ட ராச்சியத்தைக் கடவன் அல்லது கடக்கோடிகளை உறுப்பினர்களாகக் கொண்ட அவைகளை இவர்கள் பெற்றுள்ளனர். இத் தலைவர்கள் சாதியாரி -டையேயான பூசல்களைத் தீர்த்து வைப்பதோடு மணமுறிவு வழக்குக்களையும் கேட்டுத் தீர்ப்பு வழங்குவர். கடவன்களைப் போலவே அரையன்களும் பரம்பரையாகப் பதவி உரிமை பெறுவதற்குரியவர்கள். இப்பரம்பரை உரிமை அவ்வப்பகுதிகளுக்கு உரிய அரசர்களால் வண்ணக் குடை, கைத்தடி, பட்டிகை ஆகிய பதவிக்குரிய அடையாளச் சின்னங்களோடு இவர்களுடைய முன்னோர்களுக்கு வழங்கப்பட்ட -னவாகும். அரையன் தங்கள் எல்லையில் பிடிக்கப்படும் கடல் பன்றிகளின் தலைகளுக்கு உரிமையுடையவனாவான். மேலும் ஒரு சிறுமி பூப்படையும்போதும் ஒருத்திக்கு மணம் செய்விக்கும்போதும் புகையிலையும் வெற்றிலைப் பாக்கும் பெறும் உரிமையும் அரையன்களுக்கு உண்டு. திருமணங்களை முறையானவையாக்க இவர்களுடைய உடன் பாட்டினைப் பெறுதல் வேண்டும். அயிட்டன் அல்லது ஆட்டன் எனப்படும் வருவதுரைப்பவர்களும் முக்குவர் -களிடையே உள்ளனர். ஓர் அரையன் இறப்பானாகில் அவனை அடுத்து அவனுடைய அனந்தரவர்களிடையேயிருந்து ஒருவனை அப் பதவிக்குத் தங்களுடைய தெய்வ அருளேறும் தன்மையால் கண்டு கூறுபவர்கள் இந்த அயிட்டன்களே. கடவன் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் -களிடையேயிருந்து மாணக்கர் அல்லது பாணக்கர் எனப்படும் கோயிலில் பூசை செய்வதற்குரிய பூசாரிகளைத் தேர்ந்தெடுப்பவர்களும் இந்த அயிட்டன்களே.

''மீன்பிடித்தலே முக்குவர்களின் பரம்பரைத் தொழில். இவர்கள் மீன் பிடி படகு பீப்பலா *(Artocarpus hirsuta)* அல்லது மாமரத்தினால் அமைக்கப்பட்டுப் பாய் விரிப்புப் பொருத்தப்பட்டதாக ரூ 200 முதல்

ரூ 500 வரையான மதிப்புடையதாக இருக்கும். இதன் அமைப்பிற்கு ஏற்ப 5 முதல் 8 பேர் வரை அதில் பணிபுரிவர். $^{3}/_{8}$ அங்குலக் கண்ணிகளையுடைய, சர்டைன் போன்ற சிறுமீன்களைப் பிடிக்கப் பயன்படும் வலைகளிலிருந்து சுறா மீன்களைப் பிடிக்கப் பயன்படும் அங்குலக் கண்ணிகளைக் கொண்ட பெரிய வலைகள் வரை பல வகையான அளவுகளையும் வடிவங்களையும் கொண்டனவாக இவர்களுடைய வலைகள் இருக்கும். அனைத்துத் துணைக் கருவிகளோடும் கூடிய பெரிய படகர படகு ரூ 1000 விலை பெறும். வலைகள் பொதுவாக நார்க்கயிற்றினாலே ஆனவையாக இருக்கும். மிகச் சிறு கண்ணிகளோடு கூடிய வலைகளுக்கு மட்டுமே நூலாலான வலைகளைப் பயன்படுத்துவர். படகில் இவர்கள் உப்பினை எடுத்துச் செல்வதில்லை. இவர்கள் தொழில்படுவது வெப்ப மிகுந்த பகுதியாகையால் பிடிக்கப்படும் மீன்கள் விரைவில் கெட்டுப் போகக் கூடும். ஆகையால் படகுகள் ஓரளவு கரையை விட்டு நெடுந்தொலைவு செல்லாதனவாகவே செயல்பட வேண்டியதாகின்றது. எனினும் சில சமயங்களில் படகுகள் பத்து முதல் இருபது மைல்கள் தொலைதூரங் கூடக் கடலில் செல்கின்றன. சுறா, கொற, பூனை மீன் ஆகியவற்றால் துரத்தப்பட்டு வரும் சர்டை ன் மீன்களின் தொகுதிகள் சில சமயங்கள் மிகுதியாக முக்குவர்கள் வலைகளில் அகப்படும். கானாங்கெளுத்தி மீன்களை இவர்கள் பெருமளவில் பிடிக்கின்றனர். 'செயிர்' அயிரை வெள்ள மற்றும் கருப்பு 'பொம்பெரட்டு,' இறால், வெள்ளைத் தட்டை ஆகிய மீன் வகைகளும் இவர்களுக்குக் கிடைக்கின்றன. மீனவர் ஊர்களில் படகுகள் கரை சேர்வது ஆரவாரம் மிகுந்த நிகழ்ச்சியாகும். பலர் தாமே முன்வந்து படகுகளைக் கரையில் இழுக்க உதவுவர். ஒவ்வொரு படகைச் சுற்றிலும் கூட்டங் கூடியவர்களாகப் பிடிபட்ட மீன்களைக் கண்டுகளிப்பதோடு விலைகளைப் பற்றிய பேரமும் நிகழ்த்துவர். விரைவில் கரையில் குவிக்கப்பட்ட மீன்கள் விற்பனை செய்யப்பட்டுவிடும். கூலியாட்கள் கூடைகளில் தலைச்சுமையாக மீன்களைச் சுமந்தவர்களாக ஓட்டமும் நடையுமாக உள்நாட்டின் பல பகுதிகளுக்கும் செல்வர். ஆள் மாற்றி மாற்றித் தலைச்சுமையானது படகரா, தலைச்சேரி ஆகிய பகுதிகளிலிருந்து வயநாடு வரை சென்று சேரும். விற்பனையாகாத மீன்கள் முழுதும் உப்புத் துறையினரின் கண்காணிப்பின் கீழ் கொட்டகைகளுக்குக் கொண்டு சென்று உப்பிட்டுப் பதப்படுத்தப்படும். தூத்துக்குடியிலிருந்து கொண்டு வரப்பட்ட உப்பு இதற்காக மணு ஒன்று பத்தணா விலையில் இவர்களுக்கு வழங்கப்படுகிறது. மீனவர்களே சில சமயங்களில் பதப்படுத்துபவர்களாகவும் செயல்படுகின்றனர். எனினும் பெரும்பாலும்

மீன் பிடிப்பவர்களும் பதப்படுத்துபவர்களும் வேறு வேறானவர்களே. முன்னவர் பின்னவரிடம் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மாமூலாகக் குறிப்பிட்ட ஒருவரிடம் தரும் பழக்கத்தை மேற் கொண்டுள்ளனர். மீன் பிடிப்பவர்கள் மீன் அகப்படாத நாள்களிலும் புயல் வீசும் தென் மேற்குப் பருவ மழையின் போதும் பதப்படுத்துபவர்களிடமிருந்து பொருள் உதவி பெற்றே நாள்களை ஓட்ட வேண்டியதாகின்றது. உப்பிட்ட மீன்கள் படகுகள் வழியாக இலங்கைக்கும் புகைவண்டிகளில் கோயமுத்தூர், சேலம் முதலிய ஊர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. சர்டைன் மீனே மிகுந்த மதிப்பு வாய்ந்தது. குடும்பத்தைக் காப்பது என்ற பொருள்படக் 'குடும்பம் புலர்த்தி' என இது அழைக்கப்படுகின்றது. மிகுதியாக மீன் கிடைக்கும் ஆண்டுகளில் ஒரு காசுக்கு 200 சர்டைன் வரை வாங்கலாம். வெயிலில் உலர்த்தப்பட்ட பின் இவை காப்பித் தோட்டங்களுக்கும் தென்னந்தோப்புகளுக்கும் சிறந்த எருவாகப் பயன்படுகின்றன. இலங்கை, மலேயா, சீனா, சப்பான் போன்ற நாடுகளுக்குக் கூட இவை ஏற்றுமதியாகின்றன. நீரிலிட்டு வேகவைத்தால் தரமான மீன் எண்ணெயையும் இது தருகின்றது. இந்த மீன் எண்ணெய் ஐரோப்பாவிற் கும் பிற இந்திய நகரங்களுக்கும் ஏற்றுமதியாகின்றது. உப்பிடப் பட்ட சுறா மிகுந்த சுவையுடையது. சுறா மீனின் துடுப்பு பம்பாய் வழியாகச் சீனாவிற்கு மிகுதியாக ஏற்றுமதியாகின்றது. கொற மீன், பூனை மீன் ஆகியனவற்றின் காற்றுப் பையினை உலர்த்திய பின் பசைக் கூழ் தயாரிக்கச் சீனாவிற்கும் ஐரோப்பாவிற்கும் ஏற்றுமதி செய்கின்றனர்.''* தென் இந்தியாவில் மீன்பிடி தொடர்பான தொழில் வளர்ச்சிக்காக அண்மையில் நிறுவப்பட்டுள்ள மீன்வளக் குழுமம் எத்தகைய மாற்றங்களை நிகழ்த்த உள்ளது என்பதனை போகப் போகவே கண்டறியலாம்.

முக்குவர்கள் மீன்பிடி கரைகளிலும் மீன் பதப்படுத்தும் சாலைகளிலும் மாப்பிள்ளாக்களுடன் ஒன்றாகப் பணிபுரிவதோடு அவர்களுடன் இருந்து உண்ணவும் செய்கின்றனர். முன்பெல்லாம் மாப்பிள்ளாக்கள் முக்குவன் சாதிப் பெண்களோடு தொடர்பு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டதாகவும் இத்தகைய உறவுகளின் வழி வெள்ளிக் கிழமையன்று பிறக்கும் ஆண் குழந்தைகள் மாப்பிள்ளா வகுப்பாரிடம் ஒப்படைக்கப்பட்டு விடும் என்றும் கூறப்படுகிறது. ''முக்குவன்கள் இசுலாம் சமயத்திற்கு மதம் மாறுவது பெரு வழக்காக

* மேற்குக் கடற்கரையில் மீன்பிடி, மீன் பதப்படுத்தும்தொழில் பற்றிய பிற விவரங்களுக்குத் தர்ஸ்டனின் சென்னை அருங்காட்சியக மடல், தொகுதி 3, பகுதி 2, 1900 ஐப் பார்க்கவும்.

உள்ளது. இவ்வாறு மதம் மாறுபவர்கள் புதிய இசுலாம்* எனப்படுகின்றனர். புதிய இசுலாமைச் சேர்ந்த அனைவருமே மீனவர்களே. வடக்கு எல்லைப் பகுதியில் உள்ள வட்டங்களில் வீட்டுக்கு விலக்காகும் முக்குவர் பெண்கள் தங்கள் வீடுகளில் தங்குதல் கூடாது எனவும் அப்போது மாப்பிள்ளாக்களின் இல்லங்களுக்குச் சென்றுவிட வேண்டும் என்ற வழக்கு இருப்பதாகவும் கூறப்படுவது இந்த இரு வகுப்பாரும் நெருக்கமான உறவுடையவர்கள் என்பதனைத் தெளிவுப்படுத்துவதாகும்'' என 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தாணூரைச் சேர்ந்த மீனவர்களுள் பெரும்பாலோர் புதிய இசுலாமைச் சேர்ந்தவர்களாகையால் வெள்ளிக்கிழமையன்று அவர்கள் கடல்மேல் செல்வதில்லை.

அண்மையில் (1908) கிடைத்த ஒரு தகவலின்படி தாணூரைச் சேர்ந்த முக்குவர்களும் புசிலாமியர்களும் தங்கள் வருமானத்தில் ஏற்பட்டுள்ள நல்ல முன்னேற்றம் காரணமாக ஆடம்பரமாக உடைகள் அணிந்தும் கடிகாரச் சங்கிலி, அராபியச் செருப்பு ஆகியன புனைந்தும் திரிவதாகத் தெரிகின்றது. இத்தகைய ஆடம்பர போக்கினை மாப்பிள்ளாக்கள் விரும்பாதவர்களாக முக்கடி எனப்படும் முக்குவர் ஊர்ப்பகுதிக்குச் சுமார் அறுபது செறுமான்களை அனுப்பித் தகர டின்களைக் கொண்டு டமாரம் அடிக்கச் செய்து மாப்பிள்ளாக்களின் கடைவீதியினுள் சட்டையும் நாகரிக அடிபுதை அரணமுமாக நுழையும் முக்குவர் அல்லது புசிலாமியர் உயிரிழக்க வேண்டி வரும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்ட சில நாட்களுக்குப் பின் இரண்டு முக்குவர்களும் ஒரு முக்குவத்தியும் மாப்பிள்ளாக்கள் பலர் காணூர் கடைவீதியில் தங்களை வழிமறித்து அடித்துத் துன்புறுத்தியதோடு அப்பெண்ணின் தங்க அணிகளையும் பறித்துக் கொண்டனர் என்று திரூர் துணைக் குற்றவியல் நடுவரிடம் குற்றச்சாட்டுக் கொடுத்துள்ளனர். தாணூரில் மட்டுமே இத்தகைய கசப்பு உணர்வு நிலவுகின்றது. புசிலாமியர்களும் மாப்பிள்ளாக்களும் பிறவிடங்களில் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

அரையன், மரக்கான் என்ற இரண்டு பட்டப்பெயர்களை முக்குவர்கள் தரித்துக் கொள்கின்றனர். இவற்றுள் அரையன் சாதித் தலைவனுக்கும் அவன் குடும்பத்தவர்களுக்கும் மட்டுமே உரியது. மரக்கான் முக்குவர் வகுப்பாருக்கு உரியது. பத்ரகாளியே இச் சாதியாரின் குல தெய்வம் எனக் கூறப்படுகிறது. முக்குவர்களுக் கெனத்

* தற்போது இவர்கள் புகலர் எனப்படுகின்றனர்.

தனியே கோயில்கள் உள்ளன. அவற்றில் யோகி குருக்கள் வழிபாடு நிகழ்த்துவார் அல்லது யோகி குருக்களால் பயிற்சி தரப்பட்ட காரணவன்கள் வழிபாடு நிகழ்த்துவர் எனக் கூறப்படுகிறது.

தலைச்சேரியில் காசில்லம், பொன்இல்லம் ஆகிய இரு பிரிவினருக்குமெனத் தனித்தனியே அரையன்கள் உள்ளனர். இச்சாதித் தலைவர்களுக்கு உதவியாக மாணக்கன் என்ற சாதிப் பணியாளனும் உள்ளான். ''இச்சாதியாரிடையேயான பூசல்களைத் தீர்த்து வைக்கும் ஆயத்தான் எனப்படும் பரம்பரைச் சாதித் தலைவன் உள்ளான். சிறு குற்றங்கள் புரிபவர்களை இவன் சாதியாரின் கோயிலில விளக்கேற்றத் தேவையான குறிப்பிட்ட அளவு எண்ணெய் தர வேண்டும் எனப் பணிப்பான்''. எனத் தென் கன்னட மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது. தெய்வவாக்கு உரைக்கும் வெளிச்சப்பாடுகள் முக்குவர் சாதித் தெய்வங்கள் ஏறப்பட்டவர்களாக வருவதுரைப்பர். ஆயத்தென் என இவர்கள் அழைக்கப்படுவர். இது ஆயுதத்தான் என்பதன் சுருக்கமாதல் வேண்டும். இது படைக்கலம் ஏந்துபவன் எனப் பொருள்படும். வெளிப்பாடு நல்வாக்கு உரைக்கும்போது கோயில் தெய்வத்திற்கு உரிய வாளினைத் தாங்கியவனாக இருப்பானாகையால் இவ்வாறு அழைக்கப்படுகின்றான்.

பிற மலையாளச் சாதியாரைப் போல முக்குவர் சாதிச் சிறுமியரும் பூப்படையும் முன் பந்தல் கீழிருக்கல் என்ற தாலிக்கட்டுச் சடங்கினை ஒத்ததொரு சடங்கினை நடத்திக் கொள்ளுதல் வேண்டும். இச்சடங்கினை நடத்த அரையனுடைய உடன்பாடு இன்றியமையாதது. சடங்குக்கு முதல் நாள் இரவு அச்சிறுமிக்கு அரைத்த மஞ்சளும் எண்ணெயும் பூசுவர். மறுநாள் அதிகாலையில் அவளை அழைத்து வந்து வீட்டின் வாசலில் நான்கு மூங்கில்கள் நட்டு அமைக்கப்பட்டுள்ள பந்தலின் கீழ் அமரச் செய்து அவளுடைய குலத்தைச் சேராத சிறுமியர்களைக் கொண்டு நீரூற்றச் செய்து குளிக்கச் செய்வர். குளித்த பின் அவள் வீட்டின் வாசலில் நிற்பாள். காவுதியச்சி (நாசுவித்தி) அறுகம்புல்லில் கடல் நீரினைத் தொட்டு அவள் மேல் தெளிப்பாள். அவள் மீது ஒரு துணி போர்த்தப்பட்டு வீட்டினுள் அழைத்துச் செல்லப்படுவாள். நாசுவித்தி தனக்கு உரிய கட்டணமாக ஒரு தேங்காய், கொஞ்சம் அரிசி, மிளகு முதலிய பிற பொருட்களைப் பெற்றுச் செல்வாள். அச்சிறுமியின் வருங்காலக் கணவனின் உடன்பிறந்தவள் அப்படி ஒருவன் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பின் -அவளுடைய கழுத்தில் தாலி அணிவிப்பாள். அவ்வாறு கணவன் ஏற்பாடு செய்யப்

படாதிருப்பின் அச்சிறுமியின் குலத்தைச் சேராத ஒருத்தி அவ்வாறு தாலி அணிவிப்பாள். இச்சடங்கு முடியும் வரை விரதம் இருக்க வேண்டியவளான அச்சிறுமி அதன்பின் ஏழு நாட்கள் வீட்டின் உள்ளாகவே இருந்து வர வேண்டும். இச்சடங்கின் போது ஒவ்வொரு குடும்பமும் இரண்டு வெள்ளிகளை அவளுக்கு அன்பளிப்பாக வழங்கும். அரையன் இரண்டு வெள்ளியும் ஒரு கட்டு வெற்றிலை, பாக்கு, புகையிலை ஆகியனவற்றையும் தனக்குரிய கட்டணமாகப் பெற்றுச் செல்வான்.

சிறுமியர் பருவம் அடைந்தபின் கோடி உடுத்தல், வீட்டில் கூடல் என்ற இரண்டு மணமுறைகளுள் ஏதாவது ஒன்றின் வழி மணம் செய்விக்கப்படுகின்றனர். முன்னர் கூறிய மணமுறை வளம் படைத்த குடும்பத்தவர்கள் மேற்கொள்வது. அது இரண்டு நாள்வரை நீடிக்கும். முதல் நாளன்று மணமகன் தன் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் மணமகள் இல்லம் சென்று அவர்களுக்கு இனிப்பு, வெற்றிலை பாக்கு முதலியன வழங்கிய பின் திரும்புவான். அன்று பிற்பகல் மீண்டும் இன்னிசை முழங்க ஊர்வலமாக மணமகன், மணமகள் இல்லம் அடைவான். மணமகள் வீட்டு வாசலில் அவர்கள் வந்து நிற்கும் போது ஒருவன் பதினொரு அரையன்கள் பெயரை உரக்கக் கூறி அழைப்பான். அங்கு வந்துள்ள அரையர்கள் உடம்பின் மேல் ஆடையில்லாதவர்களாகத் துண்டினை இடையில் சுற்றிக் கொண்டு முன்னால் வந்து நிற்பர். அந்த அரையன்களுக்கோ அவர்கள் சார்பில் வந்து நிற்பவர்களுக்கோ வெற்றிலை பாக்கு வழங்கப்பட்டபின் ஊர்த்தலைவனான ராச்சியகாரனுக்கும் வெற்றிலை பாக்கு வழங்கப்படும். அதன்பின் மணமகனை மணமக்களின் குலத்தைச் சேர்ந்த இருவர் அழைத்துச் சென்று மணமகள் இருக்கும் அறையில் விடுவர். மணமகன் ஒன்பது பேரோடு ஒரே வரிசையில் அல்லது ஒரே அறையில் அமர்ந்து உணவு கொள்வான். இரண்டாம் நாள் மணமகள் பந்தலுக்கு அழைத்து வரப்படுவாள். மணமக்கள் சார்பில் இருவரை ஏற்பாடு செய்வர். மணமகன் சார்பிலானவர் மணமகள் சார்பிலானவருக்கு முப்பத்தொன்பது வெள்ளிகளை வழங்குவார். மணமகன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு இனிப்பு நீர் வழங்கப்படும். கோடியுடுக்கல் முறைப்படி மணம் செய்து கொண்ட ஒருத்தி மணமகளிடம் அவள் அந்த மணமகனை மணக்க விரும்புகின்றாளா எனக் கேட்டுத் தெரிந்து கொண்டபின் கூடியுள்ளவர்கள் அனுமதியினைப் பெற்று அவள் இடுப்பில் ஒரு சேலையினைச் சுற்றி விடுவாள். சிலர் அப்போது இருபத்தொரு தங்கக் காசுகள் கோத்த காசு மாலையினை மணமகளுக்கு

அணிவிப்பர். அன்றிரவு மணமக்கள் மணமகன் இல்லத்திற்குப் புறப்பட்டுச் செல்வர். தென் கன்னட மாவட்டத்தில் இச்சடங்கு மூன்று நாள்கள் வரை நீட்டிப்பதோடு மேற்கூறிய நடைமுறைகளிலிருந்தும் ஓரளவு வேறுபடுகின்றது. மணமகன் மணமக்கள் குலத்தைச் சேராத ஒருவன் மாப்பிள்ளைத் தோழனாக (சங்காயி அல்லது மூணான் எனப்புடுவான்) உடன்வர மணமகள் இல்லத்திற்கு ஊர்வலமாகச் செல்வான். ஏற்றி வைக்கப்பட்ட விளக்குத் தட்டில் வைக்கப்பட்ட வெற்றிலை பாக்கு, மலர்கள் ஆகியன வைக்கப்பட்டுள்ள ஓர் அறையில் மணமகள் அமர்ந்திருப்பாள். சங்காயி சிறிது தொகை முடியப்பட்டுள்ள ஒரு சேலையினை எடுத்து அந்த அறையில் கட்டப்பட்டுள்ள தூக்கில் போடுவான். மூன்றாம் நாள் மணமகள் இந்தச் சேலையினை அணிந்தவளாக மணப்பந்தலில் அமர்ந்து அன்பளிப்புக்களைப் பெறுவாள்.

வீட்டில் கூடல் மணச் சடங்கு ஒரே நாளில் முடிவடையும். மணமகள் இல்லத்திற்கு வரும் மணமகனை மணமக்கள் குலங்களைச் சேர்ந்த இருவர் மணமகள் இருக்கும் அறைக்கு அழைத்துச் சென்று விடுவர். மணமக்கள் ஏழு நாள்கள் வரை மணமகள் இல்லத்திலேயே தங்கியிருப்பர். அதன்பின் மணமகள் மணமகனோடு சென்று அவன் வீட்டில் வாழ வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வெச்சிருக்கல் என்ற மற்றுமொரு வகை உறவு முறையும் இவர்களிடையே காணப்படுகின்றது. இத்தகைய உறவுக்குப் பெற்றோர், அரையன் ஆகியோர் அனுமதியினைப் பெறுதல் வேண்டும். ''முக்குவர்களிடையே விதாரம் மணம் என்ற ஒருவகை மணம் உள்ளது. இதற்காக எத்தகைய சடங்கும் நிகழ்த்தப்படுவதில்லை. விதாரம் முறையில் உறவு கொள்பவளைக் கணவன் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வதில்லை. அவள் குடும்பம் சீதனம் ஏதும் கொடுப்பதும் இல்லை. விதாரம் சடங்கினை எப்பொழுது வேண்டுமாயினும் திருமணத்திற்குரிய உரிய சடங்குகளை நிகழ்த்தி முழுமையாக்கலாம். இந்தச் சடங்கு நிகழ்த்தப்பட வில்லையாயினும் தென் மலபாரில் விதாரம் உறவு முறையில் ஒருத்திக்குப் பிறந்த குழந்தைகள் அவளுடைய கணவன் உடைமைகளுக்கு உரிமை கொண்டாடலாம். இதற்கு முன்னேற்பாடாக அவளுடைய கணவன் அவள் குழந்தை பெற்றெடுத்த சமயத்தில் முக்கப்பணம் எனப்படும் மூன்று பணம் அளவு தொகையினை அவளுக்கு வழங்கியிருக்க வேண்டும். பூப்படைந்த பின் மணம் செய்விக்கப்படும் சிறுமிகள் கொஞ்ச காலத்திற்கு விதாரம் மனைவி என்ற நிலையில் வாழ்ந்த பின் முறையான கல்யாணச் சடங்குகள்

நிகழ்த்தப்பட்டு முறையான மனைவி என்ற நிலைக்கு உயர்த்தப்படுவர்'' என மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஒரு தொகையினை அபராதமாகச் செலுத்தி எளிதாக மணமுறிவினைப் பெறலாம். அவ்வாறு செலுத்தப்படும் தொகையினைக் கணவன், மனைவி, கோயில், அரையன்கள், அறச்செயல்கள் ஆகியவர்களுக்கு எனப் பங்கிட்டு வழங்குவர்.

கருவுற்ற ஒருத்தி ஐந்தாம் அல்லது ஏழாம் மாதத்தின் போது புளிகுடி அல்லது நெய்குடி என்னும் சடங்கிற்கு உட்படுவாள். உள்ளே உள்ள தண்ணீர் முழுவதுமாக வற்றிய தேங்காய் ஒன்றினை நெருப்பில் வாட்டி அதிலிருந்து எண்ணை பிழிந்து ஐந்து அல்லது ஏழு பெண்கள் அந்த எண்ணெயினைக் கருவுற்றவள் நாவிலும் வயிற்றிலும் தடவுவர். இச்சடங்கு நிகழ்ச்சி நடைபெறும்போது ஒரு நாசுவத்தி உடன் இருப்பாள். ஒருத்தி பிள்ளை பெறும் வரை அவளுடைய கணவன் முகம் மழித்துக் கொள்ளாது தாடி வளர்ப்பான். குழந்தை பிறந்த மூன்றாம் நாள் அவன் முகம் மழித்துக் கொள்வான். அதற்காக அவன் அமரும் இடத்தில் ஒரு தேங்காய் வெற்றிலை பாக்கு ஆகியன வைக்கப்படும். குழந்தைக்குத் தந்தையானவனுடைய குலத்தைச் சேர்ந்த ஒருவன் அத்தேங்காயினைச் சிதறு காயாக உடைப்பான். அன்று முக்குவர் வீட்டினுள் நாசுவத்தி தண்ணீர் தெளித்துத் தீட்டினைப் போக்குவாள். அன்றே ஒரு நாவிதன் கோயிலிலும் நீர் தெளித்துத் தீட்டுப் போக்குவான்.

இறந்தவர்களைப் புதைப்பதே இவர்கள் வழக்கம். சாவு நிகழ்ந்தவுடன் இறந்தவனுடைய மனைவி இருபத்தெட்டு கெசம் வெள்ளைத் துணியினை வாங்குவாள். பிணத்தின் கைவிரலில் ஒரு தங்க மோதிரம் அணிவிக்கப்படும். அதனைப் பின்னர் இறந்தவனுடைய மனைவிக்கோ அவளுடைய உறவினர்களுக்கோ வழங்குவர். பின்னர் அவர்கள் அதனை இறந்து போனவனுடைய உறவினர்களிடம் சேர்ப்பிக்க வேண்டும். பிணத்தை நன்னீரில் குளிப்பாட்டி அலங்கரித்துப் பாடையில் கிடத்துவர். தலையில் ஒரு துணியினை இட்டவளாக இறந்தவனுடைய மனைவி பிணத்தை நெருங்கித் தன் தாலியினை அறுத்துப் பிணத்தருகே வைப்பாள். கோடி உடுக்கல் சடங்கின் வழி திருமணம் நடத்திக் கொண்டவர்களின் தாலி அறுத்தலைச் சில சமயங்களில் நாசுவத்தி மேற்கொள்வதும் உண்டு. சில இடங்களில் பாடையினை நாசுவனே தன் பொறுப்பில் வைத்திருந்து தேவை ஏற்படும் சமயங்களில் அதனைக் கொண்டு வந்து

தருவான். அவ்வாறு பாடையினை நாவிதன் வைத்திருப்பானாயின் அதனைக் கொண்டு வரும்போதே பிணத்தை அலங்கரிப்பதற்கான சந்தனம், மலர்மாலைகள் ஆகியவற்றையும் கொண்டு வந்து இறந்தவனுடைய மகனிடம் தருவான். கடவர் குடும்பங்களைச் சேர்ந்த நான்கைந்து பெண்கள் அழுவதற்காக அமர்த்தப்படுவர். பிணம் சுடுகாட்டுக்குத் தூக்கிச் செல்லப்பட்டு அங்கு நாவிதன் அதனைச் சுற்றியுள்ள துணியிலிருந்து ஒரு துண்டினைக் கிழித்து இறந்தவனுடைய மகனிடம் தருவான். பிணத்தைத் தூக்கி வந்தவர்கள் எண்ணெய் வைத்துக் கொண்டவர்களாகக் கடலில் குளித்து வந்து ஈரத்துணியுடன் பிணத்தை மும்முறை சுற்றி வந்து அதன் மூக்கில் சிறு தங்கத் துண்டு, அரிசி, பூ ஆகியனவற்றை இடுவர். உறவினர்கள் பிணத்தின் மேல் நீருற்றிய பின் பிணம் குழியில் இறக்கப்படும். இறந்தவரின் மகனும் பிணத்தைத் தூக்கி வந்தவர்களும் மீண்டும் ஒரு முறை கடலில குளித்து வந்து புதைகுழியினை மும்முறை சுற்றுவர். அப்போது இறந்தவரின் மகன் ஒரு சட்டியில் தண்ணீரைச் சுமந்து செல்வான். மூன்றாம் சுற்று முடிந்தவுடன் அவன் அதனை உடையும்படியாகக் கீழே வீசி எறிவான். அவர்கள் வீட்டிற்குத் திரும்பியதும் ஒரு நாசுவத்தி அவர்களை எதிர்கொண்டு அவர்கள் மீது அரிசியும் நீரும் தெளிப்பாள். சாவுத் தீட்டினை இவர்கள் ஏழு நாள் மேற்கொள்கின்றனர். அப்போது இறந்தவரின் மகன் உப்பும் புளியும் உணவில் சேர்த்துக் கொள்ளமாட்டான். எட்டாம் நாளன்று இறுதிச் சாவுச் சடங்குகள் நிகழ்த்தப்படும். சிலர் இதனைப் பதினான்காம் நாளன்று நிகழ்த்துவர். அப்போது பதினொரு சிறுவர்கள் கடலில் குளித்துக் கடற்கரையில் உணவு படைப்பர். பின்னர் அவர்கள் இறந்தவர்களின் இல்லத்திற்குத் திரும்பித் தலையில் விளக்குகளைச் சுமந்தவர்களாக ஏழு அல்லது ஒன்பது குவியல்களாகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் பச்சரிசி அல்லது நெல் குவியல்களைச் சுற்றி வந்தபின் அந்த விளக்குகளை அக் குவியல்களின் மேல் வைப்பர். இறந்தவரின் மூத்த மகன் ஆறு மாதங்கள் அல்லது ஓராண்டுக்கு முடிவளர்த்தவனாக இருந்த பின் ஒரு நல்ல நாளில் தலை மழித்துக் கொள்வான். அவன் மழித்துக் கொண்ட தலைமுடி, பழங்கள், அரிசி ஆகியவற்றை ஒரு சிறு சட்டியில் வைத்து அதனைக் கடலில் எறிவான். அவன் குளித்து வந்தபின் வீட்டின் தரையில் அரிசியினை ஒரு மனிதனின் உருவம் போலப் பரப்பி அதன் மீது பச்சை நிறத்திலான ஒரு துணியினை இடுவர். அந்த உருவத்தின் ஒரு பக்கம் படியொன்றினுள் ஒரு விளக்கினை ஏற்றி வைப்பர். நெல்லையோ அரிசியையோ ஏழு அல்லது ஒன்பது குவியல்களாக இட்டு அவற்றின் மீது விளக்குகளை ஏற்றி வைப்பர். இறந்தவரின் மகன்

அவற்றை மும்முறை சுற்றி வருவான். அப்பொழுது வடக்கு,தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய நான்கு திசைகளிலும் அரிசி வாரி இறைக்கப்படும். இத்துடன் அச்சடங்கு முடிவுறும்.

முலகாய்: Mulaka *(Solanum Xanthocarpum)*

பலிசர்களின் ஒரு குலம். இது கண்டங்கத்திரிக்கு உரிய பெயராகும். இறந்த பிராமணனின் பிணத்தின் கால்பெருவிரலில் இதன் பழம் கட்டப்படுகின்றது.

மூளி: Mūli

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லர்களுக்கும் விசாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த கல்கொத்தர்களுக்கும் உரிய பெயராகப் பதியப்பட்டுள்ளது. லொகாரரின் ஓர் உட்பிரிவு இது எனக் கூறப்படுகிறது. மூளி என்பது சவரர்களின் தொழில் தொடர்பான ஓர் உட்பிரிவுக்கும் பெயராக உள்ளது.

மூளிக் குறவன்: MūliKurava

திருவாங்கூரைச் சேர்ந்த குறவர்களுக்குரிய பெயர்.

முள்ளங்கி : Mullangi (radish)

கோமட்டிகளின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

முள்ளு : Mullu

குர்ணிகளின் ஒரு கோத்திரம். குறும்பர்களின் ஓர் உட்பிரிவின் பெயராகவும் இது வழங்குகின்றது.

முல்தானி: Multāni

பஞ்சாப்பில் உள்ள முல்தான் பகுதியினைச் சேர்ந்தவர் என்பதனைக் குறிக்கும் வட்டாரப் பெயர். 1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பெரிய நகரங்களில் வந்து குடியேறி வட்டிக்கடை நடத்தும் வணிகர்கள் என இவர்கள் கூறப்பட்டுள்ளனர்.

முண்டாளர்: Mundāla

ஹொலையர்களின் ஓர் உட்பிரிவு

முண்டொப் போத்து: Mundapōthu

முண்டொ என்பது தலையையும் பொத்து என்பது மறைத்தலையும் குறிக்கும் சொற்களாகும். கஞ்சம் மாவட்டத்திலும் சகன்னாதர் கோயில் உள்ள பூரி நகரின் தெருக்களிலும் திரியும் இரவலர்கள் இவர்கள். தங்கள் தலையினை மணலிலோ புழுதியிலோ புதைத்துக் கொண்டு உடம்பினை மட்டும் காட்டியவர்களாகப் பார்ப்பவர்களின் இரக்க உணர்வினைத் தூண்டி ஏதேனும் பெற முயல்வர். இவர்கள் பொதுவாகத் தெலுங்கையே பேசுகின்றனர்.

முங்கரு: Mungaru (Woman's Skirt)

காபுகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். பெண்கள் அணியும் பாவாடைக்கான பெயர்.

முனி: Muni

பார்க்க : ராவுலொ (See : Ravulo)

மூன்றில்லக்காரர்: Mūnrillakkāra (people of the three illams)

மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள முக்குவன்களின் ஒரு பிரிவு

முந்நூத்திக் கும்பு: Mūnnuti Gumpu

''பலிசர்களின் முறையற்ற உறவின் வழிப் பிறந்தவர்களையும் நாட்டிய மகளிரின் ஆண் குழந்தைகளையும் கொண்ட ஒரு கலப்புச் சாதி'' என இதனைப் பற்றிக் கர்நூல் மாவட்டக் கையேட்டில் பதியப்பட்டுள்ளது. இது ஒரு குறிப்பிட்ட சாதிப் பெயரன்று. முறையற்ற உறவின் வழிப் பிறந்தவர்களை இழிவுப்படுத்துவதற்கான பெயர்.

முந்நூற்றான்: Munnūttān (men of the three hundred)

கணக்கெடுப்பின்போது வேலன் என்பதற்கு உரிய வேறு பெயராகவும் பாணன்சாதியின் உட்பிரிவாகவும் பதியப்பட்டுள்ளது. பாணரிடையே ஐந்நூற்றான் என்ற உட்பிரிவு உள்ளது. மலபார் மாவட்ட விவரக்குறிப்பில் முந்நூற்றான் என்பது வேலன்களோடு நெருங்கிய உறவுடையவர்களாகக் காணப்படும் மண்ணான்களின் ஒரு பிரிவாகவும் குறிக்கப்பட்டுள்ளது. திருவாங்கூரில் வந்து தங்கிவிட்ட கும்பகோணம் வேளாளருக்கு உரிய பெயராக முந்நூற்றில்லக்கார் என்பது வழங்குகின்றது.

மூப்பன்: Mūppan

''சாதி, தொழில் ஆகியவற்றுக்குத் தலைமை தாங்கும் வயதில் பெரியவரைக் குறிக்கும் பெயர். உழவர்கள், ஆட்டிடையர்கள் போன்றோரின் சாதித் தலைவர்களையும் இது குறிக்கும். வயதில் முதியவன் என்பதே இதன் நேர்பொருள். மூப்படைவது என்பது முதுமையுறுதலையும் மூப்பு என்பது முதன்மை நிலையினையும் குறிக்கும்'' எனவும் இச்சொல்லைப் பற்றி விளக்கம் கூறப்பட்டுள்ளது. அண்மையில் நடந்த கணக்கெடுப்பில் அலவன், அம்பலக்காரன், குடுமி, பள்ளன், பறையன் ஆகிய சாதியைச் சேர்ந்தவர்களுக்கும், திருவாங்கூரைச் சேர்ந்த தண்டன், சேனைக்குடையான், சாலியன், சாணன், சுடர்மான், வலையன் ஆகிய சாதியைச் சேர்ந்தவர்களுக்கும் உரிய பட்டப்பெயராகப் பதியப்பட்டுள்ளது. மேலும் இது திருவாங்கூரைச் சேர்ந்த கொங்கண சூத்திரரின் ஒரு பிரிவாகவும் பதியப்பட்டுள்ளது.

மலபாரில் வயநாட்டில் நான் பயணம் மேற்கொண்டிருந்த போது மலைத் தோட்டங்களில் கூலிகளாக வேலை பார்த்து வந்த ஒரு குழுவினரைச் சந்தித்தேன். அவர்கள் தங்களை மூப்பன் என அழைத்துக் கொண்டனர். இவர்களிடையே சாதாரண அமைப்புடைய விரல் ரேகைப் பதிவுகள் அடிக்கடி ஒரே அமைப்புடையனவாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மூப்பில் : Mūppil (chief)

தலைவன் எனப்பொருள்படும் இது நாயர்களின் ஓர் உட்பிரிவு

முரிகிநாடு : Murikināḍu

முரிகி நாடு அல்லது முரிகி நாடி என்பது தெலுங்குப் பிராமணர்களுக்கும் பிற தெலுங்கு வகுப்பாருக்கும் உரிய பிரிவுகளுக்கான வட்டாரப் பெயராகும். தெலுங்குப் பிராமணர், கம்சாலர், மாலர், மங்கலர், ராசு, தசாகலர் ஆகிய சாதியாரின் வட்டாரப் பெயராக இது உள்ளது.

முரிய: Muria

அவல் தயாரிப்பதிலும் பயிரிடுவதிலும் ஈடுபட்டுள்ள கஞ்சத்தைச் சேர்ந்த வகுப்பார்.

மூன்று பலயனோரு : Mūnru Balayanoru (three bangle people)

கப்பிலியன்கள் சாதியின் ஓர் உட்பிரிவு. மூன்று வளையல்காரர் என்பது இதன் பொருள்.

முசாலியர் : Musaliar

முகமதியரான பூசாரி வகுப்பாருக்குரியதாகத் தமிழ் நாட்டில் வழங்குவதான தொழில் தொடர்பான பெயர்.

மூசாரி: Mūsāri

பித்தளை மற்றும் செம்பில் பணிபுரியும் மலையாளத்தைச் சேர்ந்த கம்மாளர்களின் உட்பிரிவுக்கான பெயர். மூசாரிலு என்பது இதற்குச் சமமான தெலுங்குப் பெயராகும்.

மூசிக: Mūshika (rat)

நகராலு சாதியாரின் ஒரு கோத்திரம். மூசிகர் யானை முகத்தவனான விநாயகரின் வாகனமாகும்.

முசித்திக: Mushtiga

கோல்லர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலத்தின்பெயர். இவர்கள் எட்டி (முசித்திக) மரத்தினைப் பயன்படுத்துவதில்லை. ஜெட்டி சாதிக்குரிய மற்றுமொரு பெயராகவும் இது உள்ளது.

முஸ்தி கோல்லர்: Mushti Golla

கலப்பு சாதியாரான இரவலர். முஸ்தி என்பது பிச்சை எனப் பொருள்படும்.

மூசாடு: Mūssad

திருவாங்கூரைச் சேர்ந்த மூசாடு அல்லது மூத்தது பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு என். சுப்ரமணிய அய்யருக்குக் கடப்பாடுடையேன். திருவாங்கூரிலும் கொச்சியிலும் மூத்தது அல்லது மூசாடர் என அழைக்கப்படும் இவர்கள் வடக்கு மலபாரில் பொதுவாள (அல்லது பொடுவாள்) அல்லது அகப் பொதுவாள் என அழைக்கப்படுகின்றனர். மூத்தது என்பது பொதுவாக வயதில் மூத்தவர்களைக் குறிக்கப் பயன்படும் சொல்லாயினும் இங்கு அது ஒரு சாதியினைக் குறிக்கின்றது. எளயாடர் எனப்படும் இளையது என்பது எப்படி பிராமணர்களை விடச் சற்றே தாழ்ந்த ஓர் உட்பிரிவு என்பதனைக் குறிக்கின்றதோ அப்படியே மூத்தது என்பது அம்பலவாசிகளை விடச்

சற்றே உயர்ந்தவர்கள் என்பதனைக் குறிக்கும் பொருட்பேறு உடையதாகும். பொதுவாள் என்பது எல்லோருக்கும் பொதுவானவன் எனப்பொருள் தருவது. இங்கே அது ஒரு குழுவினரின் சார்பாளன் எனப் பொருள்படும். நம்பூதிரிகள் இல்லாத சமயங்களில் அவருடைய சார்பில் மூத்தது கோயில் காரியங்களை மேற்பார்வையிடும் உரிமை பெறுவதால் பொதுவாள் என்ற பெயருக்கு இவர்கள் உரியவர்கள் ஆகின்றனர். அகப் பொதுவாளின் பணிகள் கோயில் எல்லைக்குள்ளாகவே எப்பொழுதும் நிகழும். புறப்பொதுவாளின் பணிகள் கோயிலுக்குப் புறத்தே நிகழ்வதற்குரியன. இச் சாதியினைச் சேர்ந்தவர்கள் தங்களைச் சைவ பிராமணர் என்றோ சிவதுவிஜ் என்றோ கூறிக்கொள்வதையே விரும்புகின்றனர். இவர்களுள் சில குடும்பத்தினர் நம்பி, நம்பியார் போன்ற சிறப்புப்பட்டங்களைத் தரித்துக் கொள்கின்றனர். இவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் மனையம்மாமார் எனப்படுகின்றனர். மனை என்பது பிராமணன் வீட்டைக் குறிக்கும். மூத்ததுகளிடையே குலப்பிரிவுகளோ உட்பிரிவுகளோ இல்லை.

மூத்ததுகளின் தோற்றம் பற்றியும் மலபார் சமுதாயத்தில் அவர்களுக்கான இடம் பற்றியும் அண்மைக் காலமாக மிகுதியான சர்ச்சைகள் நிகழ்ந்தபடி உள்ளன. கேரளத்துச் சாதிகளைப் பற்றிச் சங்கராச்சாரியார் எழுதியதாகக் கூறப்படும் பழமையான வடமொழி நூலான சாதிநிர்ணயம் என்ற நூலில் நான்கு பிரிவினரான அம்பலவாசிகளான தந்திரி, பாரதபட்டரகர், அக்ரிம, சிலேக்கியவாக்கு என்போர் முறையே கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகியவற்றில் சாதியில் தாழ்ந்தவர்களாக ஆனதாகக் கூறுகின்றது. துவாபரயுகத்தில் பிராமணர் என்ற தகுதியில் தாழ்ந்தவரான அக்ரிமர் மூத்ததாக ஆகிக் கோயிலின் வாசற்படிகளைத் தூய்மைப்படுத்தும் பணியினைக் கேரளத்தில் மேற்கொண்டனர் என்றும் அதே நூல் கூறும். மலபாரின் வரலாறும் வழக்கங்களும் பற்றியதான கேரள மகாத்மியத்தின் படி சிவனை வழிபடும் பிராமணர்கள் மலபாரின் மற்றப் பிராமணர்களை விடத் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களுள் ஒருவன் நம்பூதிரி போல் நடித்து ஒரு நம்பூதிரியின் மகளை மணந்து கொண்டான். அந்த மணம் விதிப்படி நிறைவடையும் முன் அவனைப் பற்றிய உண்மை தெரிய வந்ததால் அம் மணமக்கள் சாதியில் தாழ்ந்தவர்களாகச் சமூகத்தில் ஒரு தனி வகுப்பாராக வைக்கப்படுகின்றனர். இந்த வழக்கினைக் கேரளத்தவரான மூத்தது பிரிவினரின் இன்றைய நிலைக்குக் காரணமாகக் கூறமுடியாது. மனுவின் காலத்திலேயே இந்தியா முழுவதும் குறிப்பிட்டதொரு உருவ

வழிபாட்டினை மேற்கொள்பவர்கள் மதிப்பிழந்தவர்களாகவே கருதப்பட்டுள்ளனர். பிராமணர்கள் சிவன் கோவிலில் வழிபாட்டினை மேற்கொள்வதில்லை. அவ்வாறு வழிபாட்டில் ஈடுபடுவது ஆன்மீக நெறிக்கு முரண்பட்டதாக நெறி திறம்பிய ஒழுக்கமாகத் தெய்வக் கோபத்திற்கு ஆட்படுத்தும் எனக் கருதினர். இதே காரணத்திற்காக வைணவக் கோயில்களைச் சார்ந்தவர்களான கிழக்குக் கடற்கரையைச் சார்ந்த நம்பியன்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இளையாடுகளும் மூத்ததுகளும் மலபாரில் நெடுங்காலமாக நய்யுனர் எனக் கூறப்படுகின்றனர். பிராமணர்களை விடச் சாதியில் சிறிதே தாழ்ந்தவர் என்பது இதன் பொருள். பிராமணர்களுக்கும் அம்பல வாசிகளுக்கும் இடைப்பட்டதான சாதியினர் என்ற பொருளில் அவாந்தரர் எனவும் இவர்கள் வழங்கப்படுகின்றனர். காலப்போக்கில் சிவ, வைணவக் கோயிலில் பூசாரிகளாகப் பிராமணர்கள் தொழிலை மேற்கொள்வதற்கான தடைவிலக்கப்பட்டு அத் தொழிலை மேற்கொண்டனர். இதனால் மூத்ததுகள் அதனினும் தாழ்ந்ததான அடுத்த நிலையில் உள்ள கோயில்களையும் சிலைகளையும் பாதுகாத்தலை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. சுசீந்திரம் மகாத்மியத்தில் பரசுராமர் பதினொரு பிராமணர்களைச் சிவனுக்குப் படைக்கும் அமுதினை உண்டு அதற்கு ஈடாகத் திருவிழாக்களின்போது தெய்வ உருவங்களைக் கோயிலைச் சுற்றித் தூக்கிச் செல்லும் பணியினை மேற்கொள்ளும் படியாகப் பணித்ததாகக் கூறப்பட்டுள்ளது. வைக்கம் தலபுராணத்தில் சிவதுவிஜியத்தவரான மூன்று குடும்பத்தினரைப் பரசுராமர் கிழக்குப் பகுதி சார்ந்த மாவட்டங்களிலிருந்து கொண்டு வந்து அக்கோயிலின் பணிக்காகக் குடியமர்த்தியதாகக் கூறப்பட்டுள்ளது. இந்தத் தலபுராணங்களின் தொன்மையையும் உண்மையையும் பற்றிப் பலர் ஐயுறவு கொண்டிருப்பினும் மூத்ததுகள் பிராமணர்களாகத் தோற்றம்கொண்டது பற்றி இவை கூறும் கருத்துக்களை மூத்ததுகளின் பழக்க வழக்கங்கள் அரண் செய்து மெய்ப்பிக்கின்றன. கேரளத்தைச் சேர்ந்த பெருமாள் ஒருவர் கொடுங்கோளூரில் உள்ள திருவஞ்சைக் களத்தில் தோற்றுவித்த சிவன் கோயிலுக்குச் சிதம்பரத்திலிருந்து சிவதுவிஜியர் குழு ஒன்றினை அழைத்து வந்து குடியமர்த்தியதாகவும் நம்பப்படுகின்றது. இன்று வரை அவர்கள் ஒழுக்கநெறி தவறாதவர்களாகத் தங்கள் பணியினை மேற்கொண்டவர்களாக உள்ளனர்.

மூத்ததுகளின் வீடுகள் இல்லங்கள் எனவும் மாடங்கள் எனவும் வழங்கப்படுகின்றன. இல்லம் என்ற பெயர் நம்பூதிரிகளின் வீட்டினைக் குறிப்பதாகும். இவர்கள் வீடுகள் இவர்கள் பணிபுரியும் சிறப்புடைய

கோயில்களை அடுத்துக் கட்டப்பட்டிருக்கும். இச்சாதியினைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் நம்பூதிரி பிராமணர்களைப் போலவே உடை உடுக்கின்றனர். வீட்டை விட்டு வெளியே புறப்படும் போது உடம்பை முழுக்க மறைத்து உடையணிய வேண்டும் என்ற விதி மனையம்மா மாருக்கும் உரியது. சிறுமியர் திருமணத்திற்கு முன் மோதிரமும் குழல் என்ற கழுத்தணியும் அணிவர். திருவிழாக்களின்போது பலக்கா என்ற மோதிரத்தை அணிவர். காதணியான சுட்டுவும் பொழுதுத் தாலியும் மணமான பின்னரே அணியப்படுகின்றன. பொழுதுத் தாலி ஒருத்தியை விதவையரினும் கன்னியரினும் வேறுபடுத்திக் காட்டுவதாகும். கைம்பெண்கள் சுட்டுவைத் தவிர வேறு அணிகள் எவற்றையும் அணிய அனுமதிக்கப்படுவதில்லை. உண்பதிலும் பருகுவதிலும் மூத்ததுகள் நம்பூதிரிகளின் பழக்க வழக்கங்களையே பின்பற்றுகின்றனர்.

மூத்ததுகள் தெய்வ உருவங்களின் காவலர்களாக விளங்குவதோடு அவற்றை ஊர்வலத்திலும் தூக்கிச் செல்வர். கோயிலின் கருவறை வாசற்படியினைக் கழுவித் தூய்மைப்படுத்தும் பணியும் இவர்களுடையதே. கோயிலில் தெய்வத்திற்குப் படைக்கப் படும் நைவேத்தியத்துடன் வேறு பல ஊதியங்களையும் இவர்கள் பெறுகின்றனர். இவர்கள் தங்கள் தகுதியில் தாழ்ந்ததற்கான காரணங்களுள் ஒன்று இது போலத் தெய்வத்திற்குப் படைக்கப்பட்ட உணவினை இவர்கள் பெற்று உண்பதுமாகும் என்பர். பிராமணர்கள் இவ்வாறு பெற்று உண்பதனை மேற்கொள்வதில்லை. வடமொழியில் நன்கு பயிற்சி பெற்றவர்களான மூத்ததுகள் சோதிடம், மருத்துவம், மாந்திரீகம் ஆகியவற்றிலும் தேர்ந்தவர்களாக உள்ளனர். மூத்ததுகளின் சமூகக் கட்டுப்பாட்டுக்கும் நடைமுறைகளுக்கும் நம்பூதிரிகளே காவலர்களாக உள்ளனர். நடத்தை தவறிய பெண்கள் என்ற சந்தேகத்திற்கு உள்ளானவர்களை நம்பூதிரிப் பெண்களை விசாரிப்பது போலவே விசாரித்துத் தீர்ப்பு வழங்குபவர்கள் நம்பூதிரிகளே. நம்பூதிரிப் புரோகிதர்கள் அகப்படாத போது வேதங்களைக் கற்றவர்களான மூத்ததுகள் புரோகிதம் செய்ய அமர்த்தப்படுகின்றனர். புண்யகம், தீட்டு நீக்கும் சடங்கு ஆகியவற்றை நிகழ்த்தும் உரிமை நம்பூதிரிகளுக்கு மட்டுமே உண்டு.

நம்பூதிரிகளைப் போல மூத்ததுகளின் குடும்பத்திலும் மூத்தவன் மட்டுமே மணம் செய்து கொள்ளும் வழக்கம் கண்டிப்புடன் பின்பற்றப்படுகின்றது. மற்றவர்கள் அம்பலவாசி வகுப்புகளைச் சேர்ந்த பெண்களுடன் அவ்வப்போது தொடர்பு மட்டும் ஏற்படுத்திக்

கொள்ளலாம். பிராமணர்களைப் போலவே இவர்களும் பல புறமணக்கட்டுப்பாடு உடைய குலங்கள் அல்லது கோத்திரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். பெண்கள் பூப்படையும் முன்போ பூப்படைந்த பின்போ மணம் செய்விக்கப்படுகின்றனர். பல மனைவியரை உடையதாயிருத்தல் வழக்கில் உள்ளதெனினும் ஒருவன் நான்கு மனைவியருக்கு மேல் மணத்தல் இல்லை. கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. தங்கள் திருமணச் சடங்குகளை மூத்ததுகள், நம்பூதிரிகள் திருமணச் சடங்குகளை ஒத்ததாகவே நடத்துகின்றனர். எனினும் சிறுசிறு வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. அசவல்யன, பயுத்தாயன ஆகிய இரண்டு சூத்திரங்களையும் இவர்கள் பின்பற்றுகின்றனர். முன்னதைப் பின்பற்றுபவர்கள் இருக் வேதப்பிரிவிற்கும் பின்னதைப் பின்பற்றுபவர்கள் யசுர் வேதப் பிரிவிற்கும் உரியவர்கள். முன்னவர்கள் பின்னவர்கள் மேற்கொள்ளும் பஞ்சமெகனி, தசமெகனி போன்ற பல சடங்குகளைக் கைவிட்டவர்களாக உள்ளனர். வட்டாரப் பிரிவும் இவர்களிடையே வழக்கில் உள்ளது. வடமலபாரைச் சேர்ந்த மூத்தது குடும்பச் சிறுமியர் தென் மலபாரைச் சேர்ந்த குடும்பங்களில் மருமகளாக வாழ்க்கைப்படுதல் இயலாது. எனினும் தென்மலபாரைச் சேர்ந்த மூத்தது குடும்பப் பெண்கள் வட மலபாரில் உள்ள குடும்பங்களில் வாழ்க்கைப்படலாம்.

நம்பூதிரிகள் மேற்கொள்ளும் அனைத்துச் சமயச் சடங்குகளையும் மூத்ததுகளும் மேற்கொள்கின்றனர். குடும்பத்தில் மூத்த குழந்தை தந்தை வழிப்பாட்டன் பெயரைப் பெறுவான். இரண்டாவது குழந்தை தாய்வழிப் பாட்டன் பெயரைப் பெறும். மூன்றாவது குழந்தை தந்தையின் பெயரைப் பெறும். ஏழு வயது முதல் பதினொரு வயதுக்குள்ளாக உபநயனம் சடங்கினை நிகழ்த்துவர். காயத்ரி மந்திரத்தை நாளும் மும்முறை, பத்துமுறை மட்டும் ஓதுகின்றனர். சாவுச் சடங்குகளில் சிட்டிகன் (சாட்டிக ஈமச்சிதை என்பதனோடு தொடர்புடையவன் என்பதன் சிதைந்த வடிவம்) எனப்படும் மாரான் உதவிகளை இவர்கள் பெறுவர். சாவுத்தீட்டினைப் பத்து நாள்கள் மட்டுமே இவர்கள் மேற்கொள்கின்றனர்.

மூத்ததுகள் எல்லா அம்பலவாசிப் பிரிவினருக்கும் மேலானவர்களாகவும், உயர்ந்தவர்கள் என ஏற்றுக் கொள்ளப்பட்ட பிராமணர், சத்திரியர்களுக்குக் கீழானவர்களாகவும் வைத்து எண்ணப்படுகின்றனர். கேரளாவின் எப்பகுதியில் உள்ள பிராமணர்கள்

மற்றும் சத்திரியர்களோடும் இவர்கள் உடன் உண்ண அனுமதிக்கப்படுவதில்லை. இவ்வகையில் இவர்கள் எளையாடுகளை ஒத்தவர்களாகவே உள்ளனர். இளையதுகளான எளையாடுகள் தங்களுக்கெனத் தனிச் சமூகப் படிநிலையினை ஏற்படுத்திக் கொண்டவர்களாகப் பிராமணர்களின் தலையீட்டினின்றும் தனித்துத் தங்கள் சமூக வாழ்க்கையினை அமைத்துக் கொண்டுள்ளனர். மூத்ததுகளோ எல்லாவற்றுக்கும் பிராமணர்களின் உதவியினையும் வழிகாட்டலையும் எதிர்பார்க்கின்றனர். மூத்ததுகள் கோயிலின் நாளம்பல எல்லையில் தங்கள் உணவினைக் கொள்ளும் உரிமை பெற்றுள்ளனர். அம்பலவாசிகளுக்கு இத்தகைய உரிமைகள் இல்லை. சுசீந்திரம் கோயிலில் மூலவருக்குப் பூசை செய்யும் நம்பூதிரி வழிபடுபவர்களுக்குப் பிரசாதம் வழங்கும் உரிமையற்றவராவார். கோயிலில் உள்ள சிறு தெய்வங்களுக்குப் பூசை செய்யும் மூத்ததுகளே அவ்வாறு பிரசாதம் வழங்கும் உரிமையினைப் பெற்றுள்ளனர். கோயிலின் கருவறைப் படிகள், மண்டபம், மடப்பள்ளி, சோற்றுப்புரை, பலிபீடம், கோயிலின் உள்வெளிப் பிரகாரங்கள் ஆகியனவற்றைத் தூய்மை செய்து கழுவும் பொறுப்பு அக்கோயிலினைச் சார்ந்த மூத்ததுகளினுடையதேயாம். அம்பலவாசிகள் அனைவரும் எத்தகைய தடையுமின்றி மூத்ததுகளிட மிருந்து உணவு பெற்று உண்பர்.

''மலையாளத்தில் கருத்துடையதொரு பழமொழி வழக்கில் உள்ளது. அதன்படி மூத்ததுகள் அம்பலவாசிகளைவிட உயர்ந்தவர் களெனவும் இளையதுகள் பிராமணர்களைவிடத் தாழ்ந்தவர்கள் எனவும் கொள்ளப்படுகின்றனர். மூத்ததுகள் சமூகப் படிநிலையில் எத்தகைய இடத்திற்கு உரியவர் என்பதில் மிகுந்த கருத்து வேறுபாடு நிலவுகின்றது. சிலர் இவர்களைத் தகுதியில் தாழ்ந்துவிட்ட பிராமணர்கள் எனவும் மற்றும் சிலர் இவர்களைத் தகுதியில் உயர்ந்து விட்ட அம்பலவாசிகள் எனவும் கருதுகின்றனர். கற்றறிந்த வைதீகர்களின் கருத்துப்படி மூத்ததுகள் தகுதியில் இழிந்த பிராமணர்கள் என்றே கொள்ளப்பட வேண்டியவர்களாவர். இவர்கள் சிவனுடைய படைக்கலங்களை உடலில் பச்சை குத்திக் கொண்டதாலும் சிவனுக்குப் படைக்கப்பட்ட உணவினை உண்டதாலும் தகுதியில் தாழ்ந்துவிட்டவர்களாகக் கருதப்படுகின்றனர்'' என 1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றி மேலும் கூறப்பட்டுள்ளது.

மலபார் சாதிகளைப் பற்றி ஆய்வு நடத்திய ஒருவர் எனக்குப்

பின்வருமாறு எழுதித் தெரிவித்துள்ளார்: மூசு, மூசாட், மூத்தது என்று பெயர்களைப் பல்வேறு மாதிரியாக எழுதுகின்றனர். சிலர் இவற்றிடையே வேறுபாடுகள் உள்ளன எனக் கூறுவர். எனினும் எத்தகைய வேறுபாடுகளும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கீழே குறிக்கப்பட்டுள்ள வகுப்பார் அனைவருமே மேற்கூறப்பட்டுள்ள பெயர்களுள் ஏதாவது ஒன்றினால் அழைக்கப்படுகின்றனர் எனினும் மூசாடு என்பதே பெருவழக்கினதாக உள்ளது. இவர்களிடையே பல பிரிவுகள் உள்ளன. அவை வருமாறு:-

1. **பிராமணர் அல்லது பிராமணரைச் சார்ந்தவர்:**

அ) அஷ்ட வைத்தியன்மார்: எட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த வைத்தியர் எனப் பொருள்படும் இவ்வகுப்பார் சாதி மாத்திரக்காரர் (பெயரளவில் சாதியைச் சேர்ந்தவர்கள்) எனப்படுகின்றனர். நம்பூதிரிகளான இவர்கள் அறுவைச் சிகிச்சைப் பணியினை மேற்கொள்ளும் போது குருதியினைக் கொட்டும் கட்டாயத்திற்கு உள்ளானதால் சாதியில் இழிந்தவராயினர். இவர்களுள் பலரும் மூசாடு என்றே அழைக்கப்படுகின்றனர். ஒருவர் மட்டும் நம்பி எனப்பெயர் பெற்றுள்ளார்.

ஆ) ஊரிலே பரிஷ்ட மூசாடு:- பரசுராமரிடமிருந்து நிலத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக அவர் சத்திரியரைக் கொன்ற பாவத்தையும் ஏற்றுக்கொண்டவர்கள். இதனால் இவர்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இப்பிரிவினர் ஒரு குழுவாகச் சப்த அல்லது சப்தகிரஸ்டன் எனப் பெயர் பெறுவர். ஊர்க் கூட்ட மூசாடுகள் என்பது இவர்களுக்கான பெயரின் பொருளாம்.

2. **அம்பலவாசி:**

இ) மூசாடு அல்லது மூத்தது: அகப்பொதுவாள் என்பவர்களோடு ஒன்றாக வைத்து எண்ணத்தக்க இவர்கள் வடமலபாரைச் சேர்ந்த புறப் பொதுவாள்களிலும் வேறுபட்டவர்கள். ஒரு சிவதுவஜினுக்குத் தூய பிராமணப் பெண்ணின் வழிப்பிறந்தவர்கள் இவர்கள். மற்றொரு வழக்குப்படி சிவனுக்குப் படைக்கப்பட்ட சோற்றினை உண்டதால் இவர்கள் சாதியில் இழிந்ததாகக் கூறப்படுகிறது. சிவனுக்குப் படைக்கப்பட்டதை உண்பது கேரளத்திற்கு உரிய அனாச்சாரங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இவர்களுக்கெனக் கோயில்களில் பல கடமைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. தடம்பு என்ற உட்குழிவினையும் புரையையும் உடைய கேடயத்தை ஒத்த தட்டில் கோயிற் சிலையினை

வைத்து ஊர்வலமாகக் கொண்டுச் செல்வது இவர்களுடைய கடமைகளுள் ஒன்றாகும். இவர்கள் பூணூல் அணிகின்றனர்.

ஈ) கறுக மூசாடு: கறுகம் (அறுகம்) புல்லைச் (Cynodon Dactylon) சடங்குகளின் போது பயன்படுத்துவதால் இவர்கள் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். சமூகத்தில் இவர்கள் நிலை பற்றிக் கருத்து வேறுபாடு நிலவுகின்றது. இவர்கள் பூணூல் அணிகின்றனர். (வடக்கு மலபாரைச் சேர்ந்த கறுக நம்பூதிரிகளோடு ஒப்பிடுக) இவர்கள் சூத்திரர்களின் சிரார்த்தத்தின் போது சோறு சமைப்பவர்கள்.

உ)திருவாலயத்து (கோவில்) மூசாடு : பூணூல் அணியும் இவர்கள் பத்ரகாளி கோயிலில் மட்டும் பூசை செய்பவர்கள். அப்பூசையின்போது பலியிடுதலும் மது படைத்தலும் உண்டெனக் கூறப்படுகிறது. பிற இடங்களில் அடிகள் அல்லது பிடாரன் எனக் கூறப்படுபவர்களோடு இவர்கள் ஒத்தவர்கள். அடிகள் சற்றே சாதியில் உயர்ந்தவர்கள் என்பதோடு அவர்கள் மதுவினைப் பருகுவதில்லையென்றும் நான் கருதுகின்றேன். பிடாரன்கள் இரு பிரிவினராக உள்ளனர். அவற்றுள் கீழ்ப் பிரிவினர் பூணூல் அணிவதில்லை என்பதோடு பூசையினையும் மேற்கொள்வதில்லை. கோயில்களில் பூசைக்கான காரியங்களுக்கு உதவியாகச் செயல்களைச் செய்வர்.

மலபாரில் கோயிலண்டை என்ற ஊரின் அருகேயிருக்கும் பிடாரி கோயிலில் பகவதியைச் சிறப்பிக்க மேற்கொள்ளப்படும் ஆண்டுத் திருவிழா பற்றித் திரு எப். பாவ்செட் தெரிவிப்பதாவது*:- ஆடுகளைப் பலியிடு முன் அவற்றின் முன் மூசாடு பூசாரிகள் ஒரு மணி நேரம்வரை மந்திரம் ஓதுகின்றனர். பின்னர், தலைமைப் பூசாரி இறைச்சி வெட்டும் கத்தியினை ஒத்த வாளால் ஆட்டினை வெட்டுவதோடு பல சேவல்களையும் பலியாகத் தருகின்றான். மூசாடுகள் பலியாட்டின் இறைச்சியில் கொஞ்சத்தையும் ஓரிரு சேவல்களையும் அரிசியோடு இட்டுச் சமைக்கின்றனர். இவ்வாறு சமைக்கப்பட்ட சோற்றினைக் கோயிலுக்கு வடக்குப் பக்கமாக உள்ள தோப்புக்கு எடுத்துச் செல்லும் மூசாடுகள் அங்கு மந்திரங்களை மீண்டும் ஓதுகின்றனர்.

மூசு கம்ம: Mūsu Kamma

பலிசரின் மூசு கம்மல் உட்பிரிவினர் அணியும் தனித்த காதணிக்கான பெயர். சேலம் மாவட்டத்தில் முசுகு என்பது இச்சாதியின் உட்பெயராகப் பதியப்பட்டுள்ளது.

* சென்னை அருங்காட்சியக மடல், III. 3, 1901.
(Madras Museum Bull., III, 3, 1901)

முதல் பட்டுக்காரர் : Mutalpattūkar

திருவாங்கூரைச் சேர்ந்த தண்டன்களுக்குரிய மற்றுமொரு பெயர். தச்சர்களுக்கு உதவ அழைக்கப்படும்பொழுது அதற்கான உதவித்தொகை பெறுபவர்கள் என்பதனை இப்பெயர் குறிக்கும்.

முத்ராச : Mutrācha

அச்சிடப்பட்ட ஆவணங்களில் முத்ராச என்ற இப்பெயர் முத்தராச, முத்திராசுலு, முத்தரசன், முத்ராட்ச எனப் பல வடிவங்களை உடையதாகக் காணப்படுகின்றது. தெலுங்கு நாட்டில் இச்சாதி இப் பெயர்களுள் ஒன்றாலும் தமிழ்நாட்டில் முத்திரையன் அல்லது பாளையக்காரன் எனவும் வழங்குகின்றது.

முத்ராசக்கள் பற்றித் திரு எச். எ. ஸ்டுவர்ட் 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பின்வருமாறு எழுதுகின்றார்: ''கிருட்டிணா, நெல்லூர், கடப்பை, வடஆர்க்காடு மாவட்டங்களில் எண்ணிக்கையில் மிகுந்தவர்களைக் கொண்டுள்ள தெலுங்குச் சாதி இது. விசய நகர மன்னர்கள் தங்கள்நாட்டு எல்லைகளைப் பாதுகாக்க முத்ராசக்களைப் பணியில் அமர்த்தியதோடு அவர்களுக்குப் பாளேகார் என்ற பட்டமும் தந்து சிறப்பித்தனர். (ஒப்பிடுக: பாளையக்காரர்). முத்ராச என்ற சொல் முது (பழைய) ராச (அரசன்) என்ற திராவிட மொழி வேர்ச் சொற்களின் அடியாகப் பிறந்ததாகும். தெலுங்கு நாட்டின் ஒரு பகுதிக்கு அரசர் எனப் பொருள்படும் முடுராச என்ற சொற்களிலிருந்து இச்சொல் வந்ததாகக் கொள்பவர்களும் உளர்.'' இவர்களைப் பற்றி வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் திரு ஸ்டுவர்ட் மேலும் பின்வருமாறு எழுதுகின்றார்:- ''சந்திரகிரி வட்டத்தில எண்ணிக்கையில் மிகுந்தவர்களாகக் காணப்படும் இவர்கள் மாவட்டம் முழுதும் தலையாரி, காவல்காரன் என்ற பொறுப்பினில் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இதனாலேயே இச்சாதி தலையாரி சாதி எனவும் படுகிறது. இவர்கள் தங்களைப் பாளேகாரர் எனவும் சந்திரகிரி தொனராலு எனவும் பெருமையாகக் கூறிக்கொள்வர். சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பாளையங்கள் பலவும் இச்சாதியாரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்ததே இவர்கள் தங்களை இவ்வாறு அழைத்துக் கொள்ளக் காரணமாகும். விசய நகர அரசர்கள் காலத்தில் இவர்கள் இப்பகுதியில் காவல்காரர்களாக வந்து சேர்ந்தவர்களாதல் வேண்டும். இச்சாதியினை மற்றவர்கள் தாழ்ந்தவர்களாகவே கருதுகின்றனர். இச் சாதியைச் சேர்ந்தவர்களுள் பெரும்பாலோர் ஏழைகளாகவே உள்ளனர். தலையாரிப் பணியிலிருந்து விலகிப் பயிர்த்தொழிலில் ஈடுபட்டவர்களாக இருப்பினும் இவர்கள்

வாழ்க்கை வளமானதாக இல்லை. இவர்கள் மற்றப் பல சாதியார் இல்லங்களிலும் தடையேதுமின்றி உணவு கொள்வர். சந்திரகிரியில் இவர்கள் மிக அரிதாகவே திருமணம் செய்து கொள்கின்றனர். மாறாகத் தங்கள் சாதியைச் சேர்ந்த பெண்களோடு தொடர்பு வைத்துக் கொள்கின்றனர். அது பெரும்பாலும் நிலைத்ததாக இருக்கும். இத்தகைய உறவுகள் மணச்சடங்கின் ஒப்புதல் பெற்றன அல்லவாயினும் இவற்றின் வழிப்பிறக்கும் குழந்தைகள் முறையாகப் பிறந்தனவாகவே கருதப்படுகின்றன."

முத்ராசக்கள் வேட்டைக்காரர், மீனவர்,பணியாளர், பல்லக்குச் சுமப்போர், ஊர்க்காவற்காரர் என்ற பல பணிகளை மேற்கொள்பவர்கள் என நெல்லூர் மாவட்டக் கையேட்டில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. கணக்கெடுப்பின் பதிவின்போது முத்ராசக்கள், ஊராளி சாதியின் ஓர் உட்பிரிவாகவும் அம்பலக்காரரின் பட்டப்பெயராகவும் பதியப் பட்டுள்ளது. முத்ராச என்பதன் தமிழ் வடிவமான முத்திரியன் என்பது அம்பலக்காரரின் உட்பிரிவு எனவும் பட்டப்பெயர் எனவும் பதியப்பட்டுள்ளது. (பார்க்க: அம்பலக்காரன்) மேலும் தொலகாரி என்பது முத்ராசக்களின் ஓர் உட்பிரிவு எனவும் பதியப்பட்டுள்ளது. தொலகாரர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு எண்ணிக்கையிலான வகுப்பார். முன்பு இவர்கள் பாளையக்காரர்களைப் போல வேட்டையாடித் திரிந்தவர்களாவர். முத்ராசக்களில் பெரும்பாலானவர்கள் பயிர்த் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கர்நூல் மாவட்டத்தில் உள்ள பாணியம் என்ற ஊரில் சிலர் ஈசல்களைப் பிடித்து வெயிலில் உலர்த்தி உணவுக்காகப் பானைகளில் பத்திரப்படுத்திக் கொண்டிருந்ததனை நான் கண்டேன். இந்தப் பூச்சிகளைக் கவர இவர்கள் தனித்ததொரு பொடியினைப் பயன்படுத்துவதாகவும் இப் பூச்சியினைப் பிடிப்பதில் இவர்கள் கை தேர்ந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது.

சில பகுதிகளில் முத்ராசர், கோல்லர் ஆகிய இரு சாதியாரின் இடையேயான உறவுகள் உட்பூசல்கள் மிகுந்தனவாக உள்ளன. இவ்விரு சாதியாரும் இடங்கைப் பிரிவினரே. மாதிகர் சாதியில் மணம் நிகழும் போதெல்லாம் முத்ராசக்களுக்கு மரியாதை தெரிவிக்க வெற்றிலை பாக்கு வைக்கும் பழக்கம் உள்ளது.

முத்ராசக்கள் சிலர் வட்டாரத் தலைவர்களாக இருந்திருப்பதைக் கொண்டு இவர்கள் தங்களைச் சத்திரியர் எனக் கூறிக்கொள்வதோடு மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ள யயாதியின் வழியில் வந்தவர்கள் எனவும்

கூறிக் கொள்கின்றனர். ஒரு கதை வழக்கின் படி அசுரர்களின் குருவாக சுக்கிராச்சாரியரின் மகளான தேவயானை தைத்திய அரசன் மகளான சர்மனிஷ்டையோடு கிணற்றுக்குச் சென்றாள். அவர்களிடையே சண்டை மூள சர்மனிஷ்டை தேவயானையினை ஒரு பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டு வந்து விட்டாள். அக்கிணற்றிலிருந்தும் அவளை யயாதி காப்பாற்றினான். சுக்கிராச்சாரியார் தைத்திய அரசனிடம் யயாதியின் மனைவிக்குத் தன் மகளைப் பணிப்பெண்ணாக ஆக்கிவிட்டதாகக் குறை கூறினார். இதனை அடுத்து யயாதி சரமனிஷ்டையின் அழகில் மயங்கியவனாக அவளோடு உறவு கொள்ள அவள் முறையற்ற அந்த உறவின் வழி ஒரு மகனையும் பெற்றெடுத்தாள். இது பற்றி அறிந்த சுக்கிராச்சாரியார் யயாதி மூப்படையக்கடவது எனச்சாபமிட்டார். யயாதி இந்தச் சாபத்தினை ஏற்றுக்கொள்ளும்படி தன் பிள்ளைகளிடம் வேண்டினான். அவனுக்கு முறையற்ற உறவின் வழிப்பிறந்த புருவினைத் தவிர மற்றவர்கள் இதற்கு உடன்படவில்லை. இதனால் சினமுற்ற அவன் தன் மக்களைக் கிராதகர்கள் நிறைந்த பாலை நிலத்தினையே ஆள வேண்டியவர்களாகுக எனச் சபித்தான். அவர்களுள் ஒருவனான துர்வாச என்ற பெயரை உடையவன் அங்கம்மா தேவியின் அருளைப் பெற்றவன். இதனால் கோபங்கொண்ட அவள் தன் பூந்தோட்டத்தைத் தவிர மற்றவையெல்லாம் அழிந்து போகவேண்டும் எனச் சபித்தாள். வழிபாட்டுக்கு மலர்கள் தேவைப்பட்டதால் அங்கம்மாவின் பூந்தோட்டத்திலிருந்து மலர்களைத் திருடிய குற்றம் செய்தவர்களை அவள் பிடித்ததோடு அதற்குத் தண்டனையாக அவர்களைக் கழுவில் ஏறி உயிர் துறக்கும்படி கூறினாள். அவர்களுள் ஒருவனுக்கு ஏழு பிள்ளைகள் இருந்தனர். அப்பிள்ளைகளுள் ஒருவனுக்குப் பிறந்த ரவிதேவிராசு என்ற குழந்தையினைப் பிறந்தவுடன் கிணற்றினுள் இட்டனர். பாதாள உலகத்தவர்களான நாக கன்னிகையர் அதனைக் காப்பாற்றி வளர்த்து வந்தனர். ஒரு சமயம் அங்கம்மா நாகலோகத்தில் வலம் வரும் போது ஒரு குழந்தை அழும் குரலினைக் கேட்டு அதனை அழைத்து வரும்படி தன் வாகனமான நரியினை அனுப்பினாள். எனினும் அக் குழந்தை அந்த நரி தன்னைக் கொண்டு செல்ல அனுமதிக்கவில்லை. எனவே அங்கம்மாவே நேரில் சென்று அக்குழந்தையினைத் தூக்கிச் சென்றாள். அவள் பாதுகாப்பில் வளர்ந்து பெரியவனான அவனுக்கு கர்ணம் ராசு, கங்கை ராசு, பூபதி ராசு என்ற மூன்று பிள்ளைகள் பிறந்தனர். அவர்களின் வழி வந்தவர்களே முத்ராசுக்களாவர். அங்கம்மா அக் குழந்தையினைத் தன் பொறுப்பில் காப்பாற்றி வளர்த்தமைக்கு நன்றி பாராட்டும் வகையில் இச் சாதியார் அவளைத் தங்கள் குல தெய்வமாகக் கொண்டாடி வருகின்றனர்.

முத்ராசக்களிடையே, 'முத்ராசக்கள் முத்துப் போலச் சிறந்தவர்கள்தான் ஆனாலும் அச் சாதியினர் மீன்பிடிக்கத் தொடங்கியவுடன் அச்சாதி தகுதியில் தாழ்ந்து விட்டது' எனப் பொருள்படும்படியாக ஒரு பழமொழி வழக்கில் உள்ளது. முத்ராசக்கள் சத்திரியர்களாகக் கருதப்படுவதால் பூணூல் அணிந்து வந்தனரென்றும் இவர்களுள் சிலர் வேட்டைக்குச் சென்று திரும்பும்போது ஒரு குட்டை அருகே தங்கியபோது அதில் மிகுதியாக மீன்கள் இருப்பதைக் கண்டு அவற்றைப்பிடிக்க ஆவல் கொண்டவர்களாகத் தங்கள் பூணூலையே தூண்டில் கயிறாகப் போட்டு மீன்பிடிக்கத் தொடங்கி விட்டனர் எனவும் அவ்வாறு அவர்கள் மீன்பிடிப்பதில் ஈடுபட்டிருந்ததைச் சில பிராமணர்கள் பார்க்க நேரிட்டதால் முத்ராசர் சாதி தன் தகுதியில் தாழ்ந்தது எனவும் ஒரு வழக்கு வரலாறு தெரிவிக்கின்றது.

தெலுங்கு நாட்டில் பலிகிரி,ஒரு கண்டி என்ற இரு பிரிவுகள் முத்ராசரிடையே உள்ளதாகக் கொள்கின்றனர். இவர்கள் மேலும் பல புறமணக்கட்டுப்பாடு உடைய குலத்தவர்களாகப் பிரிவுபட்டுள்ளனர். அக் குலங்களுக்கான இல்லப் பெயர்களுள் சில வருமாறு:-

ஆவுலு (பசு)	கட்டாரி (குத்துவாள்)
அரிகல (ஊர்வலத்தில் கொண்டு செல்வதற்கான கலம்)	மர்ரி (ஆல்)
புசி (குப்பை)	நக்க (நரி)
எல்ல (எல்லை)	புலி (புலி)
குவ்வல (புறாக்கள்)	தலையாரி (காவற்காரன்)
இண்டல (வீடு)	தோட்ட (தோட்டம்)
ஈக (ஈ)	உய்யல (ஊஞ்சல்)
கொப்புல (சடைமுடி)	துமு (இரும்பாலான அளக்கும் படி)

ஒரு சிறுமி முதன் முதல் பூப்படையும் போது வழக்கமான வட்டிலில் உண்ண அனுமதிக்கப்படுவதில்லை. தனியே இருத்தப்படும் அவளுக்கு ஒரு மண்சட்டியில் சோறு இடுவர். இறுதியில் அவள் அதனை எறிந்து விடுவாள். ஒருத்தி பூப்படைந்தவுடன் மற்றொரு சிறுமி அவள் தலைமுடியினைக் கொப்புவாகக் கொண்டையிட்டு விடுவாள்.

மகப்பேறு தொடர்பான தீட்டுப் பத்தாவது நாளோடு முடிவுறும். ஒருத்தி பெற்ற குழந்தை இறந்துவிடுமாயின்- அதுவும் அது அவளுடைய முதல் குழந்தையாக இருப்பின், தீட்டுக்காலம் பத்து

நாள்களுக்குக் குறைந்ததாகவே மேற்கொள்ளப்படும். ஒருத்தியின் முதல் மகப்பேற்றினுக்கு அடுத்த மகப்பேறுகளின் போது தீட்டுக்காலம் ஏழு அல்லது ஒன்பது நாள் அளவினதாகக் குறையும். அவள் தீட்டு நீக்கக் குளிக்கும் நாளன்று அவளைப் பார்க்க வரும் ஒவ்வொருத்தியும் ஒரு பானை வெந்நீர் கொண்டு வந்து அவள் தலையில் ஊற்றுவர்.

மூட்டான்: Mūttal (substitute)

பதில் ஆள் எனப் பொருள்படும் இது மாரான் சாதியின் ஓர் உட்பிரிவு.

மூத்தான் : Mūttān

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் மூத்தான்கள் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளதாவது:- ''மூத்தான்கள் மலபாரில் வணிகத்தில் ஈடுபட்டுள்ள சாதியார். இவர்களுள் கல்வி கற்ற பிரிவினர் தங்கள் சாதிக்கு உரியதைவிட உயர்ந்ததொரு நிலையை உடையவர் எனக் கூறுவர். அண்மையில் இவர்கள் தங்களை மேலும் உயர்த்திக் கொண்டவர்களாகக் கணக்கெடுப்பு அட்டவணைகளில் சிலர் தங்களை வைசியர் எனப் பதிந்து கொண்டிருப்பதோடு கூட வைசியருக்கு உரிய குப்தா என்ற பட்டப்பெயரையும் தங்கள் பெயரோடு இணைத்துக் கொண்டுள்ளனர். எனினும் இவர்கள் பூணூல் அணிவதையோ வேதநெறிப்படியான சடங்குகளை மேற்கொள்வதையோ செய்வதில்லை. இவர்கள் மீது முட்டினால் அதனைத் தீட்டாகக் கருதுவர் நாயர்கள்.''

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் மூத்தான்,தரகன் என்ற இணைந்த தலைப்பின் கீழ் இவ்விரு சாதிகளையும் பற்றிப் பதியப்பட்டுள்ளதாவது:- ''இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்தவையான சாதிகள். எனினும் தரகன் சாதியார் மூத்தான்களோடு தங்களுக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறிக் கொள்வதை இழிவாகக் கருதுகின்றனர். தரகன் என்பதற்குத் தரகு பிடிப்பவன் என்பதே நேர் பொருள். இவர்கள் முதலில் பாலக்காட்டில் இரும்பு முதலிய பொருள்கள் விற்கும் கடை வைத்திருந்தவர்கள் என முனைவர் குண்டர்ட் கூறுவார். மூத்தான் என்பது வயதான மூத்தவன் எனப் பொருள்படும். தரகன்கள் மூத்தான் என்பதனைத் தங்கள் சாதியின் உட்பிரிவாகவும் மூத்தான்கள் தரகன் என்பதனைத் தங்கள் சாதியின் உட்பிரிவாகவும் பதிந்துள்ளனர். இவ்விரு சாதிகளுமே நாயர் சாதியின் உட்பிரிவுகளாகப் பதியப்பட்டுள்ளன. எங்கள் கணக்கெடுப்பு

அட்டவணைகளில் தங்கள் சாதியினைத் தரகன் எனப் பதிந்து கொண்டுள்ளவருள் ஒருவன் கிருஷ்ண மூத்தான் எனத் தன் பெயரைப் பதிந்துகொண்டிருக்க லட்சுமி செட்டிச்சியார் என அவன் மனைவி தன் பெயரைப் பதிந்து கொண்டுள்ளாள். மூத்தான் ஒருவன் காலப்போக்கில் தரகன் ஆகிப் பின்னர் நாயராக ஆவான். இவ்விரு சாதியாரும் நாயர்களின் பழக்க வழக்கங்களையே பெரிதும் மேற்கொண்டவர்களாக உள்ளனர். எனினும் அவை ஆங்காங்கே சிறு வேறுபாடுடையனவாக மேற்கொள்ளப்படும். இந்தச் சாதிகளைச் சேர்ந்தவர்கள் சாதி விவகாரங்களைப் பற்றிக் கேட்கும் போது தாங்கள் எல்லா வகையிலும் நாயர்களை ஒத்தவர்கள் என்பதைத் தவிர வேறு ஏதும் கூற மறுப்பதால் உண்மை நிலை என்ன என்பதனை என்னால் அறிந்து கொள்ள இயலவில்லை. நாயர்களுக்கும் இவர்களுக்கும் உள்ள வேறுபாடுகளில் ஒன்று இவர்கள் தாலிகட்டுக் கல்யாணங்களில் பிராமணி ஒருத்தி பாடுவதில்லை என்பதாகும். மணச்சடங்குகளை நடத்த நாயர்களைப் போல் மாராயன், அட்டிகுரிசி, இளயாடு ஆகியவர்களுள் ஒருவரை அமர்த்தாமல் இவர்கள் தங்கள் சாதியினைச் சேர்ந்த சோரட்டோன் என்பவனையே மணச் சடங்கினை நடத்த அமர்த்துகின்றனர். நாயர்களுக்கு அட்டிகுரிசி உதவுவதைப் போல இவர்களுடைய சாவுச் சடங்குகளை நடத்தி வைக்கவும் தீட்டினைப் போக்கிப் புனிதப்படுத்தவும் உதவுபவன் சோரட்டோனே ஆவான். இவர்கள் காளி கோயிலில் வழிபடுவதில் மிகுந்த விருப்பம் உடையவர்கள். இச் சோரட்டோன்களே அக்காளி கோவில்களிலும் பூசாரிகளாக உள்ளனர். மூத்தான், தரகன் சாதியார் பாலக்காடு, வள்ளுவநாடு வட்டங்களில் மட்டுமே வாழ்கின்றனர்.''

மலபாருக்கு உரியவர்கள் அல்லாத வெளியே இருந்து வந்தவர்களான சாதியினரைப் பற்றி மலபார் விவரக் குறிப்பில் காணப்படும் ஒரு குறிப்பு வருமாறு:- ''மூத்தான்கள் தமிழர்கள் மிகுதியான எண்ணிக்கையினராகக் கலந்துள்ள பாலக்காடு, வள்ளுவநாடு பகுதிகளிலேயே காணப்படுகின்றனர். இப்பொழுது இவர்கள் தங்களை வைசியர் என உயர்த்திக் கூறிக் கொள்வதோடு சிலர் வைசியருக்குரிய பட்டப் பெயரான குப்தா என்பதனையும் தரித்துக் கொள்கின்றனர். மற்றும் சிலர் எழுத்தச்சன் என்ற பட்டத்தைத் தரித்துக் கொள்கின்றனர். பாலக்காட்டினைச் சேர்ந்த சிலர் மன்னாடியர் என்ற தரகர்கள் தரிக்கும் பட்டத்தையும் தரிக்கின்றனர். மூத்தான்கள் மக்கள் தாய முறையினையே பேணுகின்றனர். முறைமைக்கு உரியதல்லாத சம்பந்தம் தொடர்புகளையும் இவர்கள் ஏற்படுத்திக் கொள்வதில்லை. இவர்கள்

குடும்பப் பெண்கள் கிழக்கத்தியாருக்குரிய வழக்கான செட்டிச்சியார் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பத்து நாள் அளவே தீட்டினை மேற்கொள்வதால் அதன் படி சாதியில் உயர்ந்தவர் களாகின்றனர். இவற்றுக்கெல்லாம் முரண்பட்டவர்களாக இவர்கள் இறைச்சியினை உண்பதோடு மதுவும் பருகுகின்றனர். இவர்களுடைய தீட்டுப் போக்கும் சடங்கைச் சோரட்டவன் (தெளிப்பவன் என்பது இதன் நேர்பொருள்)களே நடத்துகின்றனர். இவர்கள் குளங்கரை நாயர்களை ஒத்தவர்களேயன்றி அட்டிகுரிசி நாயர்களை ஒத்தவர்களாக இல்லை. நம்பூதிரி, அம்பலவாசி, நாயர் ஆகியோரைப் போலக் குளங்கரை நாயர்களும் அட்டிகுரிசி நாயர்களும் தங்களிடையே வேறுபாடு கொண்டவர்களே. பாலக்காட்டைச் சேர்ந்த பிரிவினருக்கும் வள்ளுவ நாட்டைச் சேர்ந்த பிரிவினருக்கும் இடையே மிகுந்த பூசல் நிலவுகின்றது. நாயர் சாதியோடு அண்மையில் கிட்டத்தட்ட இணைக்கப்பட்டுவிட்டதான மற்றொரு சாதி பாலக்காட்டிலும் வள்ளுவ நாட்டிலும் காணப்படும் தரகன் சாதியாகும். தரகன் என்பதன் நேர் பொருள் தரகு பிடிப்பவன் என்பதாகும். அங்காடிபுரத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழும் தரகர்கள் திருவாங்கூரிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் என்றும் கொல்லத்தைச் சேர்ந்த உயர்சாதி நாயர்களான எட்டு வீட்டில் பிள்ளைமார் சந்ததியினர் என்றும் கூறிக் கொள்கின்றனர். இவர்கள் கிரியட்டில் பிரிவுப் பெண்களை மணக்கலாம். இவர்கள் சாதிப் பெண்களோடு சாமந்தன் ராசா எப்போதாவது சம்பந்தம் வைத்துக் கொள்வதும் உண்டு. பாலக்காட்டைச் சேர்ந்த தரகன்கள் இதற்கு மாறாகத் தங்கள் சாதிக்குள்ளாகவே மணம் செய்து கொள்வதற்குரியவர்கள்."

முத்தாசாரி : Muttāsāri

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கம்மாளர்களை அழைப்பதற்குரிய பெயராக இது பதியப்பட்டுள்ளது.

முத்திரையன் : Muttiriyan

பார்க்க : முத்ராசா

முத்யாளர் : Mutyālā (pearl)

முத்து வணிகம் செய்யும் பலிசர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம் ஒன்றுக்கும் உட்பிரிவு ஒன்றுக்கும் உரிய பெயர். அம்பலக்காரர் தங்களைப் பரமசிவனுடைய வியர்வைத் துளி முத்து ஒன்றிலிருந்து பிறந்தவர்கள் எனக் கூறிக்கொள்வர்.

முவ்வாரி : Muvvāri

''எம்பிராந்திரி பிராமணர்களின் கீழ் வீட்டுப் பணியாளர்களாக உள்ள வடக்கு மலபாரைச் சேர்ந்த சாதியார். இவர்கள் பழக்க வழக்கங்கள் நாயர்கள் பழக்க வழக்கங்களை ஒத்தவை. இளயாடர்களும் மாராயன்களும் இவர்களுக்குப் புரோகிதம் செய்வதில்லை'' என 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மையாசர் : Myāsar

புல்வெளி அல்லது காடு எனப் பொருள்படும் இது பேடர், போயர் சாதியின் இரு பிரிவுகளான ஊரு, மையாச என்பதில் ஒன்றுக்குரிய பெயராகும். மையாச பேடரிடையே சுன்னத்துச் செய்து கொள்ளும் வழக்கம் உள்ளது. ஹைதர் அலியின் படையில் பணியாற்றிய காலத்தில் இவர்கள் மேற்கொண்ட வழக்கமாகும் இது.

நாடான் : Nādān

நாடு அல்லது ஊரை ஆள்பவன் எனவும் நாட்டுப் புறத்தில் வாழ்பவன் எனவும் பொருள்படும் இது சாணான்களுக்குரிய ஒரு பட்டப் பெயராகும். சாணான்கள் தங்களை நாடான் என அழைத்துக் கொள்வதையே விரும்புகின்றனர்.

நாடவர் : Nādava

''தென் கன்னடத்தைச் சேர்ந்த கன்னடம் பேசும் பயிர்த் தொழிலாளர் சாதி இது. நாடவர் தங்களுக்குள் நான்கு உட்பிரிவுகள் இருப்பதாகப் பதிந்துள்ளனர். அவற்றுள் ஒன்று பண்ட். எஞ்சிய மூன்றனுள் இரண்டு பண்டர்களின் உட்பிரிவுகள். இப்பிரிவுகளுள் குறிப்பிடத்தக்கது மசாடி என்பதாகும். 33,212 பேர் தங்களை நாடவர் உட்பிரிவினைச் சேர்ந்தவர்கள் எனவும் பதிந்து கொண்டுள்ளனர். இச்சாதியினைப் பற்றி எனக்குத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் இவர்கள் பண்டர் சாதியுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் எனத் தெரிகின்றது. பண்டர் சாதியின் ஓர் உட்பிரிவு நாடவர் என்பதாகும்'' என 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் திரு. எச். எ. ஸ்டுவர்ட் கூறியுள்ளார். நாடவ அல்லது நாடவரு என்பது நாட்டுப் புறத்தைச் சேர்ந்தவன் எனப் பொருள்படுவதாகும். இது பண்டர்களின் உட்பிரிவு ஒன்றுக்கு உரிய பெயராகும்.

நாகர் : Nāga (Cobra: Naiatripudians)

'நாக், நாக, நாகச, நாகேசுவர என்பன கஞ்சம் விசாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த பல சாதியாரின் குலப் பெயராகவும் கோத்திரப் பெயராகவும் உள்ளன. அய்யரகுலு, பொந்தாரி, பமியர், பொட்டாதர், தோம்பர், கடபர், கொண்ட தொரையன், மேதரர், மூக தொரையர், நகராலு, ஓமனைட்டொ, பொராச, ரோணர், சாமந்தியர் ஆகிய சாதிகளின் குலப்பெயராகவோ கோத்திரப் பெயராகவோ இவை உள்ளன. ஒடிய சாதியினைச் சேர்ந்த நாகபொன்சொ குலத்தைச் சேர்ந்தவர்கள் தங்களை நாகமுனியின் சந்ததியினர் எனக் கூறிக்கொள்கின்றனர். குர்ணி, தொரையர் சாதிகளின் கோத்திர, குலப்பெயராகவும் நாக என்பது உள்ளது. தொரையர் தங்கள் திருமணங்களின் போது பாம்புப் புற்றினை வழிபடுவர். காசுல காபு, கொப்பல வெலமர் சாதிகளின் உட்பிரிவாகவும் இது உள்ளது. நாகவடம் (நாகபடம்) பள்ளியர் சாதியின் உட்பிரிவு ஒன்றுக்கு உரிய பெயர். இவர்கள் படமெடுத்த நாகத்தின் தலையினை ஒத்த நாகவடம் என்ற அணியினைத் தொங்கும் காது மடல்களில் அணிகின்றனர். வீர முஷ்டிகளிடையே நாகமல்லிகா (*Rhinacanthus communis*) என்ற ஒரு குலப்பிரிவு உள்ளது. இச் செடியின் வேர் பாம்பின் நஞ்சினை முறிக்கும் ஆற்றல் உடையது எனக் கூறுகின்றனர். தென்னிந்தியத் தோட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட (*Couroupita guianensis*) நாகலிங்கப் பூ மரம் நாகத்தின் படத்தையும் அதன் கீழ் அமைந்துள்ள லிங்க அமைப்புடைய சூலகத்தினையும் கருத்தில் கொண்டு இப்பெயரால் வழங்கப்படுகின்றது.

நாகலி : Nāgali (Plough)

கலப்பை எனப் பொருள்படும் இது காபுகளின் புறமணக்கட்டுப்பாடுடைய குலத்தின் பெயர்.

நாகலிக : Nāgalika (of the plough)

பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள லிங்காயதர்களுக்கான ஒரு பெயர். கலப்பையைச் சார்ந்தவர் என்பது பொருள்.

நகராளு : Nagarālu

நகராளு என்பது விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு சாதி. இது பற்றி 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பதியப்பட்டுள்ளதாவது:- "நகராளு என்பது நகரத்தில் வாழ்பவர்களைக் குறிக்கும். இச் சாதியார் முதலில் காபுகளின் ஒரு பிரிவினராக இருந்து பின்னர் நகர வாழ்க்கையை மேற்கொண்டு

பழைய குலத்திலிருந்து பிரிந்து விட்டவராகலாம். இவர்கள் மருத்துவமே தங்கள் பரம்பரைத்தொழில் எனக் கூறுகின்றனர். பெரும்பாலோர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் ஒரு சிலர் இன்றும் மருத்துவராகவும் மருந்தாளராகவும் இருந்து வருகின்றனர்.''.

பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு ஹயவதன ராவிற்குக் கடப்பாடுடையேன். புஸ்ஸீ (Bussy) -யின் நண்பரான விஜயராம்ராஜ் இச் சாதியினைச் சேர்ந்த முக்கியமான உறுப்பினர் சிலருக்கு நிலக் கொடையினை வழங்கியுள்ளார். அவ்வாறு நிலம் பெற்றவர்களின் சந்ததியினரைப் பல வட்டாரங்களில் காணலாம். இச்சாதி மூன்று உட்பிரிவுகள் அல்லது கோத்திரங்களைக் கொண்டுள்ளது. நாகேசுவரர், கூர்மேசுவரர், மூசிகர் என்பனவே அக்குலங்களுக்கான பெயர்கள். மூசிகம் விநாயகரின் வாகனமாகும். இப்பிரிவுகள் மேலும் பல இல்லப் பெயர்களாக அல்லது புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பெயர்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சம்பத்து, சக்ரவர்த்தி, மஜ்ஜி என்பன அக்குலப் பெயர்களுள் சிலவாம்.

ஒருவன் தன் தாய்மாமன் மகளை மணந்து கொள்வது கட்டாயமாகும் என்ற மேநரிக வழக்கு இவர்களால் மேற்கொள்ளப் படுகிறது. சிறுமியர் பூப்படையும் முன்பே மணம் செய்விக்கப் படுகின்றனர். பிராமணனே மணச் சடங்குகளை நடத்தி வைப்பான். கைம்பெண்கள், மணமுறிவு பெற்றவர்கள் ஆகியோர் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை.

இறந்தவர்களை எரிக்கும் இவர்கள் சின்ன, பெத்தரோசுச் சாவுச் சடங்குகளை ஒரு பிராமணனைக் கொண்டு நடத்துகின்றனர்.

இவர்களுள் சிலர் மருத்துவர்களாகவும் மருந்தாளர்களாகவும் பெயர் பெற்றுள்ளனர். பாத்ரளு என்பது இச்சாதிக்குரிய பட்டப் பெயராகும். அன்பளிப்பினைப் பெறும் பாத்திரமாதற்குரியவர் என்பது இதன் பொருள்.

நகரத்தார்: Nagartha

நகரத்தார், நகரத்தர், நகரகுலம் என்பன 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் செட்டிகளின் உட்பிரிவாகப் பதியப் பட்டுள்ளது. 1891 கணக்கெடுப்பு அறிக்கையில் நகரத்தார் பற்றிப் பதியப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- ''நகரத்தார் காஞ்சிபுரத்தைச்

சேர்ந்தவர்கள். அந்த நகரத்தில் இந்தச் சாதியினைச் சேர்ந்த ஆயிரம் குடும்பத்தினர் முன்பு வாழ்ந்து வந்தனர். நகரம் என்ற இவர்கள் பெயர் இவர்களுடைய தொடக்கக் கால வாழ்விடத்தைக் குறிப்பதாகும். பூணூல் அணியும் இவர்கள் சிவனையும் விட்டுணுவையும் வழிபடு -கின்றனர். மது, மாமிசம் ஆகியவற்றை இவர்கள் பயன்படுத்துவதில்லை. தங்களை உண்மையான வைசியர்கள் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் திருமணம், சாவு ஆகியவற்றின் சடங்குகளைப் பிராமணர்கள் நெறியினைப் பின்பற்றியவர்களாகச் செய்கின்றனர். இந்த உட்பிரிவினருக்கெனத் தனியே நாட்டிய மகளிரும் பணியாளரும் உள்ளனர். இவர்கள் திருமண நிகழ்ச்சியின் போது அவர்கள் நாட்டியமாடுதலையும் குற்றவேல் பணிகளையும் மேற்கொள்வர். இச் சாதிக்குரிய பணியாளன் சாதிப்பிள்ளை எனப்படுவான்.''

1891, 1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கைகளில் மைசூர் மாநிலத்தில் குடியேறியுள்ள நகரத்தார் பற்றிய தகவல்களாக நான் தொகுத்தவை வருமாறு:- ''இவ்வட்டார வழக்குப்படி நகரத்தார் காணீகரோடு தொடர்புடையவராகக் கருதப்படுகின்றனர். இவ்விரு சாதியாரும் ஒன்றாகப் பெங்களூரில் வந்து குடியேறிய போது மல்லராஜ் அர்ஸ் என்பவர் இச்சாதிகளைச் சேர்ந்த பெரிய புள்ளிகளைச் சாதித் தலைவர்களாக்கி அவர்களுக்கு வீட்டு வரி கட்டுவதிலிருந்தும் விலக்களித்தான். இவ்விரு சாதியினுள்ளும் ஒரே பெயரையுடைய சில கோத்திரங்கள் உள்ளன. எனினும்இவர்கள் ஒன்றாக உடன் உண்பதோ தங்களுக்குள் மணஉறவு கொள்வதோ இல்லை. இவ்விரு சாதியினரும் தங்களைத் தர்ம சிவாச்சாரிய வைசியர் எனக் கூறிக்கொள்கின்றனர். இவர்களிடையே ஏற்படும் பூசல்கள் வருந்தத்தக்க வன்முறையில் முடிவதும் உண்டு. நகரத்தார் நகரங்களிலும் வணிக மையங்களிலுமே பெரும்பாலும் தங்கி வாழ்கின்றனர். இவர்களுள் சிலர் சிவனையும் சிலர் விட்டுணுவையும் வழிபடுகின்றனர். நாமதாரிகளான வைணவப் பிரிவு நகரத்தார் மற்றச் சாதியாரைப் போல இறந்தவர்களைப் பாடையிலோ விமானத்திலோ வைத்துத் தூக்கிச் செல்லாமல் ஒரு போர்வையில் பிணத்தைச் சுருட்டி எடுத்துச் செல்கின்றனர். இவர்கள் பிணத்தை எரிக்கின்றனர். மற்றப் பிரிவினர் புதைக்கின்றனர். சிறுமியர் பூப்படையும் முன்பே மணம் செய்விக்கப்படுகின்றனர். கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. பல மனைவியரை மணத்தலை அனுமதிக்கும் இவர்கள், நடத்தை தவறிய மனைவியரை மட்டுமே மணமுறிவு செய்து கொள்ள அனுமதிக்கின்றனர்''. ''சிவாச்சாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் நாமதாரி

பிரிவைச் சேர்ந்தவர்களை மணந்து கொண்ட நிகழ்ச்சிகள் சில உள்ளன. இத்தகைய மண உறவுகள் நிகழும் போது மணமகள் நாவினை லிங்கத்தைக் கொண்டு சுடுவர். அதன்பின் அவள் தன் பெற்றோர் குடும்பத்தையும் வைணவ சமயத்தையும் துறந்தவளாக வாழ்தல் வேண்டும். சிவாச்சாரி பிரிவைச் சேர்ந்த நகரத்தார் நாமதாரிபிரிவைச் சேர்ந்தவர்களுக்குப் பெண் கொடுப்பதில்லை எனக் கூறப்படுகிறது'' எனத் திரு ரைஸ் இவர்களைப் பற்றி மைசூர், குடகு விவரக் குறிப்பில் குறித்துள்ளார். காசியபர், சந்திரமௌலீசுவரர் சோழேந்திரர் என்பன நகரத்தார் கோத்திரங்களாகப் பதியப்பட்டுள்ளன.

நாகசேரெணி : Nāgā Sreni

நாகர் தெருவில் வாழ்வோர் எனப் பொருள்படும் புதுமையான பெயர். பத்ரமேல நாட்டிய மகளிர் சாதிக்கு உரிய பெயராக இது வழங்குகின்றது.

நாகவாசுலு : Nagavāsulu

விசாகப்பட்டினம் கையேட்டில் நாகவாசுலு பற்றித் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு: - '' இவர்கள் விசாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த பயிர்த்தொழிலாளர். இச்சாதியினைச் சேர்ந்த மணமாகாத பெண்கள் பரத்தையராகவும் விருந்துகளில் நாட்டியம் ஆடுபவர் களாகவும் தொழில் மேற்கொண்டு பொருளீட்டுகின்றனர். இச் சாதியினைச் சேர்ந்த சிலர் நடத்தை தவறிய வாழ்க்கையை மேற்கொண்டதால் சாதியினை விட்டு விலக்கி வைக்கப்பட்டுள்ளனர்.'' 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில், நாகவாசமு என்பதன் பொருள் நாட்டிய மகளிரின் குழு என்பதாகும். இத்தகைய மகளிருக்குப் பிறக்கும் பிள்ளைகள் தங்களை நாகவாசமுலு எனக் கூறிக்கொள்கின்றனர். எனினும் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் இச்சாதியில் பெரும்பாலோர் பயிர்த்தொழிலாளராக ஒழுக்கமுடைய வாழ்க்கையை மேற்கொண்டவர்களாக இருந்து வருகின்றனர்.'' எனக் கூறப்பட்டுள்ளது. ''நாகவாசுலு சாதியினைச் சேர்ந்த பலரும் பயிர்த் தொழிலிலேயே ஈடுபட்டுள்ளனர். இச் சாதியினைச் சேர்ந்த பெண்கள் சிலர் பரத்தையராக உள்ளனராகையால் மற்றச் சாதியாரும் இச் சாதியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இச் சாதிக்குரிய பட்டப் பெயர் நாயுடு'' என 1901 கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நாகெல்லு : Nāgellu (plough)

போயர்களின் புற மணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலத்தின் பெயர். கலப்பை எனப் பொருள்படுவது.

நக்ன : Nagna (naked)

பிறந்த மேனியராகத் திரியும் துறவிகளுக்கான பெயர்.

நாயுடு : Nāidu

நய்டு அல்லது நாயுடு என்பது தெலுங்கு சாதியாரான பலிசர், பெஸ்தர், போயர், ஏகரி, கவரர், கோல்லர், காளியங்கி, காபு, முத்ராசர், வெலமர் ஆகியோருக்கான பட்டப்பெயராகப் பதியப்பட்டுள்ளது. இப்பட்டம் தரித்த தெலுங்கரைப் பற்றிக் குறிப்பிடும் போது தமிழர் நாயுடு என்பதற்குப் பதிலாக நாய்க்கன் அல்லது நாய்க்கர் எனக் குறிப்பிடுவர்.

நாய்க் : Nāik

நாய்க் (தலைவன் என்ற பொருளிலான நாயகன்) என்ற சொல்லினைத் தென்னிந்தியாவைப் பற்றி எழுதிய பண்டைய எழுத்தாளர்கள் பல்வேறு பொருள்களில் பயன்படுத்தியுள்ளனர் என யேலும் பர்னலும்* குறித்துள்ளனர். அவற்றுள் சில வருமாறு:-

அ) இந்திய இனத்தவனான படைத் தலைவன் என்ற பொருளில் ஆன வழக்கு- Barretto, Rel du Prov de malabar

ஆ) தக்காணத்தில் இந்துக்களைச் சிறப்பிக்க வழங்கும் பட்டப்பெயர். ''தக்காணத்தைச் சேர்ந்த அரசர்கள் ஒருவன் சிறப்பாக ஆற்றிய பணிக்காக அவனுக்குப் பாராட்டுச் செய்யும் போது அவனுக்கு நாய்க்கன் என்ற பட்டத்தைத் தருதல் வழக்கம்''. - Linchoten

இ) விசயநகர அரசர்களுக்கும் மதுரையை ஆள்பவர்களுக்கும் உரிய பொதுவான பெயர் - Thevenot

நாய்க், நாய்கன், நாய்க்கர், நாயக், நாயக்கன் என்பன அண்மைக்காலக் கணக்கெடுப்புக்களில் கீழ்க்கண்ட பல்வேறு மொழிபேசும் மக்களாலும் தங்களுக்குரிய பட்டப் பெயர்களாகப் பதியப்பட்டுள்ளன.

தமிழ்	-	பள்ளி, இருளர், வேடன்
தெலுங்கு	-	பலிசர், போயர், ஏகாரி, கோல்லர், கவரை

* Hobson - Jobson

		முத்திரையன், ஒட்டர், தொட்டியன், உப்பிலியன்
கன்னடம்	-	பேடர், செப்தெகாரர், சாரொடி, கன்னடியன், செர்வெக்காரர், சீவ்வியர், தொரையர், காட்டினப் பழங்குடிகளான வயநாட்டைச் சேர்ந்த தேன் குறும்பரும்அப்பகுதியில் நாய்க்கர் என அழைக்கப்படுகின்றனர்.
துளு	-	தென்கன்னடத்தின் சில பகுதிகளில் மொகேர் தங்கள் வழக்கமான பட்டப் பெயரான மரகாலேரு என்பதற்குப் பதிலாக இப்பட்டப் பெயரைத் தரிக்கின்றனர். சில பண்டர்களும் இப்பட்டத்தைத் தரிக் கின்றனர்.

லம்பாடியர் எனப்படும் பஞ்சாரிகளின் சாதித்தலைவனும் நாய்க் எனப்படுகின்றான் நாய்க்கர் என்பது சில பிராமணக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கான பரம்பரைப் பட்டப் பெயராகவும் உள்ளது. தேசஸ்த பிராமணன் ஒருவன் நய்னா நாய்க்கர் என அழைக்கப்படுவதை நான் கேட்டுள்ளேன்.

நாய்க், நாய்கொ, நாயகொ என்பன பல ஒரிய வகுப்பாருக்கு உரிய பட்டப் பெயர்களாக உள்ளன. அலிய, அருவ, பகட, கொளடோ, சாடபு, ஒடிய, பெண்டிய, ரோண, தேலி ஆகிய சாதியார் இப்பட்டங்களைப் புனைகின்றனர். ''ஒரிய கொரொணாவான ஊர்த் தலைவன் தன்னைப் நகரத் தலைவன் என்ற பொருளில் பொடோநாய்கோ என அழைத்துக் கொள்கின்றான். '' எனத் திரு எஸ். படி. ரைஸ் கூறுகின்றார்.

நாயர் அல்லது நய்யர் என்ற பெயரும் நாயக், நாயுடு என்ற பெயர்களைப் போலப் படைத்தலைவன் என்பதனைக் குறிப்பதாகும்.* இது தொடர்பாகத் திரு லூவிஸ் மூர் எழுதுவதாவது:♦ ''திரு செவெல் விசயநகரப் பேரரசைப் பற்றிய தம்முடைய சுவையான நூலில்☉ பக்கத்திற்குப் பக்கம் விசயநகரத்திற்கும் மேற்குக் கடற்கரைக்கும் உள்ள தொடர்பு பற்றிக் கூறியுள்ளார். கர்னல் தாமஸ் மன்றோ (பின்னர் சர்) 1802 -இல் ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த

* விக்கிரம், மலபார் சட்டங்களும் வழக்கங்களும் (Wigram, Malabar law and Custom)

♦ முந்து நூல், மூன்றாம் பதிப்பு, 1905.

☉ A Forgotton Empire, Vijayanagar

பாளையக்காரர்களைப் பற்றிய அறிக்கையில் விசயநகர அரசின் கீழ்ப் பணிபுரிந்த படைத்தலைவர்களின் பரம்பரையில் வந்த பாளையக் காரர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்களை நைகுயெ அல்லது நாயர் என்ற இரு பெயர்களைச் சுட்டியே குறிப்பிட்டுள்ளார்.''♦

'' சென்னை நகரில் தொடக்கத்தில் காவல்துறை பணிகள் பெத்த நாய்க் எனப்படும் பெருந்தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அவர்கள் சில ஏவலர்களைத் தங்கள் கீழ் அமர்த்திக் கொண்டு திருட்டுப் போன பொருட்கள் அனைத்தையும் மீட்டுத்தரக் கடமைப் பட்டவர்கள்.'' எனத் திரு டல்பாய்ஸ் வீலெர் (Tolboys wheeler)^{0} குறித்துள்ளார்.

தென் கன்னட மாவட்டத்தில் கோயிலில் நாட்டியமாடும் மகளிர் நாய்க் என்பதன் பெண்பாலான நாய்க்கினி என்ற பெயரை உடையவர்களாக உள்ளனர்.

நையினார்: Nainār

பார்க்க : நாயினார் - (Nayinar)

நகாசு : Nakash

சில இடங்களில் ராச்சேவார் எனப்படும் சித்திரக்காரர் செய்கின்ற நுட்பமான கலைப்படைப்புத் தொழிலைக் குறிக்கப் பயன்படும் சொல்.

நக்கல: Nakkala

நக்கல அல்லது நக்க என்பது நரியினைக் குறிக்கும். இது போயர், கூடலர், கோல்லர், முத்தரசர் ஆகிய சாதியாருக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பெயராக வழங்குகின்றது. நரி அங்கம்மாவின் வாகனமாகும். இத் தேவதை முத்ராசாக்களின் குல தெய்வமாவாள். போலியாக நரிக்கொம்பு தயாரிக்கும் குருவிக் காரன்களுக்கு உரிய பெயராகவும் இது வழங்குகின்றது.

நாழி : Nali (bambootube)

குருபர் சாதிக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலத்தின் பெயர். மூங்கிலாலான குழல் எனப் பொருள்படுவது.

நாலில்லக்காரர் : Nālillakkar

நான்கு இல்லங்களாகப் பிரிவுபட்டுள்ள முக்குவர்கள் பிரிவுக்குரிய பெயர்.

♦ Fifth Report of the committee on the affairs of the East India company, Reprint, Higginbotham, Madras

^{0} College History of India, 1888.

நல்கெ : Nalke

நல்கெ அல்லது நலகேயவர் பற்றித் திரு எச். எ ஸ்டுவர்ட் தென்கன்னட மாவட்டக் கையேட்டில் கூறியுள்ளதாவது: ''இச்சாதியார் பாய், கூடை, குடை ஆகிய பின்னும் தொழிலை மேற்கொண்டவர்கள். துளு மக்களின் வழிபாட்டில் சிறப்பான இடம் வசிக்கும் பேயாட்டக்காரர்களாகவும் இவர்கள் பணிபுரிகின்றனர். துளுவர்களுக் குரிய வழக்கமான புறமணக்கட்டுப்பாடுடைய பலிப் பிரிவுகள் இவர்களிடையேயும் உள்ளன. இவர்கள் பொதுவாக ஹொலையர் களாகவோ பறையர்களாகவோ கருதப்படுகின்றனர். கன்னடத்தில் இவர்கள் பாணாரர் என அழைக்கப்படுகின்றனர்.''

திரு ஸ்டுவர்ட் மேலும் இவர்களைப் பற்றி அக் கையேட்டில் கூறியுள்ளதாவது:- '' கன்னட மாவட்டத்தில் ஒவ்வொரு ஊரிலும் பூதஸ்தானம் எனப்படும் பூதத் தெய்வங்களுக்கான கோயில்கள் உள்ளன. இக்கோயில்களில் பில்லவர் சாதியினைச் சேர்ந்தவர்கள் பூசாரிகளாக உள்ளனர். தங்கள் வாழ்நாளில் தாம் வாழும் வட்டாரத்தவர்களிடம் நல்லவர்கள் என்றோ கெட்டவர்கள் என்றோ பெயர் பெற்றவர்கள் எதிர்பாராதோ விபத்திலோ இறந்து விட நேர்ந்தால் அவர்களுடைய தீங்கிழைக்கும் ஆவியினைத் திருப்திப்படுத்த வழிபாடு நடத்த இப்பகுதியெங்கும் ஆங்காங்கே பல கோயில்கள் உள்ளன. இக்கோயில்களோடு கூடக் காடுகளைக் காக்கும் பூதங்கள், வெட்ட வெளியான கரம்புகளைக் காக்கும் பூதங்கள், ஊர் எல்லைகளைக் காக்கும் பூதங்கள், வீட்டின் மீது கல்லெறிவது போன்ற தீங்குகளை இழைப்பதையே தொழிலாகக் கொண்ட பூதங்கள் எனப் பல பூதங்கள் உள்ளன. இவற்றுள் ஊரெல்லைகளைக் காக்கும் பூதங்கள் மட்டுமே பயனுள்ள நல்ல செயலினை மறைமுகமாகச் செய்கின்றனவாகத் தெரிய வருகின்றது. மற்றவை நோயினையும் தொல்லையினையும் விளைவித்து மக்களை அஞ்சி நடுங்கச் செய்வனவாம். அவற்றிலிருந்து மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள அவற்றிற்குப் பலிகளிட்டு வழிபாடு நிகழ்த்த வேண்டும். கோழிகளையே பெரும்பாலும் பலியாக இடுகின்றனர். குடும்பங்களுக்குரியனவாகவும் தனியே பூதங்கள் உள்ளன. பிராமணரல்லாதார் இல்லங்களில் தனித்ததொரு அறையோ, வீட்டின் ஒரு மூலையோ பூதக் கொட்டகை எனப் பூதத்திற்காக ஒதுக்கப்படும். பூதஸ்தானங்கள் 4 அல்லது 5 கெச நீளமும் 2 அல்லது 3 கெச அகலமும் கொண்ட ஒரு புறம் கதவமைக்கப்பட்டு முன்பக்கம் இரண்டு கம்பங்கள் நட்டுச் சாய்வான கூரை போடப்பட்ட எளிய அமைப்புடைய கட்டிடங்களாகும். மேற்கூரை ஓலைகளால்

வேயப்பட்டிருக்கும். சுவர்களில் சன்னல்கள் இரா. அவற்றின் முன் நான்கு T வடிவிலான தூண்கள் நிறுத்தப்பட்டிருக்கும். சடங்குகளின் போது அவற்றின் மீது மலரிட்டுத் தேங்காய் உடைத்து வைத்து வழிபாடு நிகழ்த்துவர். முக்கியமான பூதங்களின் கோயில்கள் அளவில் பெரிய கட்டிடங்களைக் கொண்டனவாக இருக்கும். பூதஸ்தானங்களுள் பித்தளையால் பரும் போக்காகச் செய்யப்பட்ட பலவகை உருவங்கள் இடம்பெற்றிருக்கும். மனிதர், பன்றி, புலி, கோழி போன்றவற்றின் உருவங்களாக அவை இருக்கும். சடங்கு நிகழ்ச்சிகளின் போது அந்த உருவங்கள் வெளியே கொண்டு வந்து வைக்கப்பட்டு வழிபாடு நிகழ்த்தப்படும்.* வெண்கலத்தாலான சிறிய கிண்ணத்தினைப் பூதங்களின் முன் வைத்து அவற்றில் அவ்வப்போது தண்ணீர் ஊற்றுவர். சிறப்பான வழிபாடு நிகழ்த்தும் சமயங்களில் மலர்களையும் விளக்குகளையும் பூதங்களின் முன் படைப்பர். பெரிய பூதஸ்தானங் -களில் பூதங்களின் அருகே ஒரு வாள் வைக்கப்பட்டிருக்கும். பூதஸ்தான பூசாரிகள் தெய்வம் ஏறி உடல் நடுங்கியவர்களாக வழிபாட்டிற்காகக் கூடியிருக்கும் மக்களின் முன் நிற்கும் சமயங்களில் அந்த வாளினைக் கையில் எடுத்துக் கொள்வர். ⊛ ஒரு மணி அல்லது சேகண்டி எல்லாப் பூதஸ்தானங்களிலும் இடம் பெற்றிருக்கும். கோயில்களோடு தொடர்புடைய பூதங்களுக்குக் கோயில்களுள் தனித்ததொரு இடம் குடி என்ற பெயரால் ஒதுக்கப்பட்டிருக்கும் பைதெர்லுவுக்கு உரிய பூதஸ்தானம் கருடி எனப்படும்.

பூதங்களில் பெயர்கள் கணக்கற்றனவாம். அவற்றுள் மிகவும் அஞ்சப்படும் பூதம் கள்குடி. பண்டார்களும் பில்லவர்களும் வழிபடுகின்ற வேறு இரு பூதங்கள் கோடி பைத்ய, சென்னைய பைத்ய என்பனவாம். இவைகளுக்குப் பில்லவர்களே பூசாரிகளாகப் பணிபுரிவர். இவை இரண்டும் உயர்ந்த பில்லவ வீரர்களின் ஆவிகளாம். குசும்ப காஞ்செ எனப்படும் பண்டார் சாதியைச் சேர்ந்த பெயர் போன ஒருவன் ஆவியும் இவ்வகைப் பூதங்களைச் சேர்ந்தனவாம். பொட மணிட்டாய, முண்டலடாய என்பன பெயர் போன பிற பூதங்களுள் குறிப்பிடத் தக் கனவாம். ஹக்கோலு, பிர ஹமோலு என்பன காடுகளுக்குரிய பூதங்களாம். ஹாலையர் தங்களுக்கென் உரிய தனித்ததொரு பூதத்தை வழிபட்டு வருகின்றனர். இதனை மற்றச் சாதியார் வழிபடுவதில்லை. கும்பெர்லு என்ற பெயருடைய இந்தப் பூதம் குர்பெர்லு கெட்ய என்ற

* M.J. Walhouse,. Journ. Anthrop. Inst., V, 1876

⊛ Devil Worship of the Tuluvas, Ind. Ant, XXIII, 1894

இடத்தில் உறைவதாகக் கருதுகின்றனர். ஒரு கல் அல்லது பலகையினைத் தரையில் நட்டோ அல்லது சுவரில் பொருத்தியோ அதற்கு ஒரு பூதத்தின் பெயரைக் கொடுத்து வழிபடும் வழக்கம் பெருவழக்கமாக உள்ளது. மகிசண்டாய (எருமை), ஜாராண்டாய (குதிரை), பஞ்சுருளி (பன்றி), பைடெர்லு (அரக்கன்) ஆகியவற்றின் உருவங்கள் கொண்ட பூதங்களும் உள்ளன.

"கோல, பண்டி, நேம, அகெலு தம்பில எனத் தென் கன்னடத்தில் பூத வழிபாடு நான்கு வகைப்பட்டதாக நடைபெறுகின்றது. கோல எனப்படும் பேயாட்டம் பூதங்கள் உறைவதாகக் கருதப்படும் ஊர்களில் உள்ள பூதஸ்தானங்களில் நிகழ்த்தப்படுகிறது. அத்தகைய ஊர்களையும் அவற்றை அடுத்துள்ள ஊர்களிலும் வாழும் சூத்திரர்கள் ஸ்தானங்களை நெருங்கிக் கூடி நின்றவர்களாக ஊர்ப் பொதுவில் நிகழும் கோல ஆட்டத்தைக் காண்பர். அத்தகைய ஆட்டங்களுக்கான செலவினை ஆட்டம் நிகழும் ஊரினைச் சேர்ந்த சூத்திரர் குடும்பத்தினர் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வர். பண்டி என்பது கோல ஆட்டம் நடத்துவதோடு கூடப் பெரும்போக்காகச் செய்யப்பட்ட ஒரு வண்டியினையும் இழுப்பதாகும். அந்த வண்டியில் பூதத்தின் பிரதிநிதியாகப் பொம்பட பூசாரி அமர்ந்திருப்பான். நேம என்பது பூதங்களுக்காகத் தனிப் பட்டவர்கள் விரும்பி வீடுகளில் நிகழ்த்தும் வழிபாடாகும். வசதி படைத்த பில்லவர், பண்டர் குடும்பத்தினர் பத்து, பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை நேமச் சடங்கினைக் கொண்டாடுவர். நேமச் சடங்கினை நடத்த ரூ.600 முதல் ரூ. 700 வரை செலவாகும். அதனைச் சடங்கு நடத்தும் வீட்டினைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஏற்றுக்கொள்வார். நேமச் சடங்கின் போது பூதங்களைக் குறிக்கும் உருவங்களைப் பூதஸ்தானங்களிலிருந்து சடங்கு நடத்துபவர்கள் வீட்டிற்குக் கொண்டு வந்து சடங்கு முடியும் வரை அங்கே வைத்திருப்பர். அகெலு தம்பில என்பது பைதெர்லுகளுக்காக நிகழ்த்தப்படும் வழிபாடாகும். இதனைப் பில்லவர்கள் மட்டுமே ஆண்டுதோறும் நிகழ்த்துகின்றனர். கோல, பண்டி ,நேம ஆகியன பைதெர்லு உட்பட எல்லாப் பூதங்களுக்கும் உரியனவாகும். அகெலு தம்பில பைதெர்லுவுக்கு மட்டும் உரிய சடங்காகும்.

திரு லவிய் (Lavie) யின் கையெழுத்துப் பிரதியாக உள்ள கன்னட நாட்டு வரலாற்றில் கன்னடத்துப் பூத ஆட்டக்காரர்களையும் பேயோட்டுபவர்களையும் பற்றித் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- "அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய கைப்பிடியினை உடைய கூரிய

வாயோடு கூடிய உருக்காலான வெட்டுவாயினை உடைய வாளினை எடுத்தவர்களாக ஆடுதல் இவர்களுடைய கடனாகும். அவர்கள் இதனை எல்லாப் பக்கங்களிலும் வீசி ஆட்டியபடி குதித்தும் ஆடியும் அச்சம் தரத்தக்க வகையில் நடுங்கியும் பூதாட்டம் ஆடுவர். தலை முடியினை விரித்துப் போட்டவர்களாகச் சிவந்த கண்களோடு காட்சி தரும் இவர்கள் இதற்காகவே போதையூட்டும் மதுவகைகளையும் மருந்துகளையும் அருந்துவார்களோவென நான் கருதுகின்றேன்..... பேய் பிடித்தவர்கள் எவராயினும் இவர்கள் அவர்கள் மேல் ஏறியுள்ள பேயினை ஓட்டுதலில் ஈடுபட்டு ஆட்டுவிப்பர். பேயோட்டுபவன் ஒருவன் தன் சக்தியைக் காட்டியவனாகப் பேயோட்டிக் கொண்டிருந்த ஒரு வீட்டை நான் கடந்து சென்றபடி இருந்தேன். அவன் முனகியும் கீறிச்சிட்டும் முணுமுணுத்தும் தாழ்ந்த குரலில் ஏதேதோ கூறிக் கொண்டிருந்தான். அதன் பின் அவன் குரலை உயர்த்தி விரைவாகத் தணிந்த குரலில் உடல் முழுதும் நடுங்கியவனாக உடலை முன்னும் பின்னும் சாய்த்தபடி சில மந்திரங்களை முணுமுணுத்தான். ''பூத ஆட்ட நிகழ்ச்சி எப்பொழுதும் இரவு நேரத்திலேயே ஒன்பது மணிக்குத் தொடங்கி நிகழும். பூசாரி முதலில் பூத வாளினையும் மணியினையும் கைகளில் ஏந்தியவனாகப் பூதத்தின் முகபாவத்தையும் சாடைகளையும் தான் மேற்கொண்டவனாகச் சுற்றிச் சுற்றி ஆடுவான். அவன் முழுதும் ஆவேசம் ஏறப் பெற்றவனாக ஆடுவதற்குத் தகுதி பெற்றவனல்லன். பொம்பாடன் அல்லது நல்கெயனெ அவ்வாறு ஆவேசம் உற்று ஆடுவதற்கு உரியர். பில்லவ பூசாரி இவ்வாறு அரைமணிநேரம் ஆடி முடித்த பின் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த பொம்பாடன் அல்லது நல்கெயன் முன்வந்து ஆடத்தொடங்குவான். இடையில் ஒரு கோவணம் தவிர வேறு உடை ஏதும் அணியாதவனான அவன் முகத்தில் காவிக் கல்லால் வண்ணம் தீட்டிக் கொண்டிருப்பான். தென்னையோலைகளாலான ஒரு தலை மகுடத்தையும் உலோகத்தாலான முகமூடியையும் அவன் அணிந்திருப்பான். மேலும் கீழும் சற்று நேரம் உலாவிய பின் அவன் வெறி கொண்டவனாகத் தப்பட்டையின் முழக்கத்திற்கும், பார்வையாளரின் உரத்த அலறலோடு கூடிய ஓலத்திற்கும் ஏற்ப ஆடத் தொடங்குவான். இறுதியில் தன் ஆட்டத்தை முடித்துக் கொள்ளும் அவன் கூடியுள்ள ஒவ்வொருவரையும் அவர்களுடைய தகுதி வரிசையைக் கூறி வாழ்த்துவான். செல்வம் படைத்தவனான பண்டன் ஒருவனை வாழ்த்தும் போது அந்தப் பண்டனின் பட்டப் பெயர்களுள் ஒன்றினை விட்டு விடுவானாகில் அதற்குரிய தண்டனையை அவன் பெற வேண்டிவரும். மக்களிடையே தீர்க்கப்படாமல் இருக்கும் பூசல் ஏதேனும் இருக்குமானால் அதனைப் பூதாட்டக்காரனிடம் கூறுவர். அது

பற்றி அவன் வழங்கும் முடிவு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும். இச் சமயத்திலோ இதற்குச் சற்று முன்போ பூதத்திற்கு உணவு படைப்பர். பொம்பாடனுக்கு அரிசியும் சோறும் படைப்பர். இந்தப் பூத ஆட்ட விழா பல இரவுகள் தொடர்ந்து நிகழும். பூத ஆட்டக்காரன் அவனுடைய வெறிகொண்டதான உழைப்பிற்குக் கூலியாக எட்டு ரூபாய்களைப் பெறுவான் என முனைவர் பர்னல் கூறுகின்றார்.

நல்கெ, பரவ, பொம்பட என்ற தென் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்த பூத ஆட்டக்காரர்களுள் நல்கெயரே சாதியில் தாழ்ந்தவர் எனத் தெரிகின்றது. கொரகருங்கூட நல்கெயரையும் பரவரையும் தங்களைவிடத் தாழ்ந்தவர்களாகக் கருதுகின்றனர். பரவன் ஒருவன் கொரகனை எதிர்ப்படுவானாகில் அவன் தலைக்கு மேல் கைகளைக் கூப்பி வணங்க வேண்டும் என்பது விதி. எனினும் இன்று இதனை அவர்கள் மேற்கொள்வதாகத் தெரியவில்லை. நல்கெயர் அளிய சந்தானத் தாய உரிமை முறையினை மேற்கொள்ளும் சாதியாரிடையே வாழ்ந்தாலும் தந்தையின் உடைமைகள் மகனுக்கே உரியனவாகச் செல்லும் மக்கள் வழி உடைமை உரிமை முறையினையே பேணுகின்றனர். இச்சாதியில் பல பலிப் பரிவுகள் உள்ளன. இவை பண்டர், பில்லவர், ஆகிய சாதியாரிடமிருந்து கடனாகப் பெற்றனவாதல் வேண்டும். சலன்னய, பங்கெரன்னய்ய, குண்டரன்னய்ய, உப்பென்னய்ய என்பவைகளை அவற்றுக்குரிய் எடுத்துக்காட்டுக்களாகக் கூறலாம். நல்கெயருக்குக் குரிகாரன் என்ற சாதித்தலைவன் உள்ளான். சாதித் தொடர்பான பூசல்களையும் விவகாரங்களையும் இவன் தீர்த்து வைப்பதோடு திருமணம், சாவு முதலான சடங்குகளின் போதும் புரோகிதனாகச் செயல்படுகின்றான்.

சிறுமியர் பூப்படைந்த பின்னரே மணம் செய்விக்கப்படுகின்றனர். ஒருத்தி எத்தனை முறை வேண்டுமாயினும் மணம் செய்து கொள்ளலாம். மணச்சடங்கு ஒரு நாள் அளவினதேயாம். மணமக்கள் மணைப்பலகையில் அமர்ந்த பின் குரிகாரன் அவர்கள் தலை மீது மஞ்சளில் தோய்த்த அரிசியைத் தூவுவதோடு பாசிமணிகள் கோக்கப்பட்ட மஞ்சள் நூல்கயிற்றினையும் அவர்கள் கழுத்தில் கட்டுவான். பின்னர் கூடியுள்ளவர்கள் அவர்கள் மீது அரிசியினைத் தூவுவர். குரிகாரனோ மணமக்களின் பெற்றோரோ அவர்கள் கரங்களை இணைத்து வைத்து அவற்றின் மீது தாரை நீர் வார்ப்பர்.

இறந்தவர் பிணங்கள் எரிக்கவோ புதைக்கவோ

செய்யப்படுகின்றன. பிணத்தைப் புதைக்கவோ எரிக்கவோ செய்த பிறகு கன்னடச் சாதியாரைப் போலவே இவர்களும் அந்த இடத்தில் ஒரு மேடை அமைப்பர். அதனைச் சுற்றித் தரையில் நான்கு கம்பங்களை நிறுத்தி அவ்விடத்தில் சிறிய தேர் போலத் தோற்றம் தரும்படி அலங்கரிப்பர் (ஒப்பிடுக: பில்லவர்) உத்தரகிரியை எனப்படும் இறுதிச் சடங்கு ஐந்தாம் நாளோ ஏழாம் நாளோ நடத்தப்படுகின்றது. அன்று சமைத்த சோற்றினைத் தூபே அருகிலோ இறந்தவன் உயிர்நீத்த இடத்திலோ படைப்பர். இதனை அடுத்து விருந்து நிகழும். இந்தச் சடங்கு குறிப்பிட்ட நாளில் முறைப்படி நடத்தப்படாது போய்விடுமாயின் மீண்டும் அதனை நடத்தும் போது பண்டர் அல்லது பில்லவரிடமிருந்து அனுமதி பெற்ற பின்னரே இதனை நடத்த முடியும்.

தென்கன்னடத்தைச் சேர்ந்த அனைத்துச் சாதியினரும் பூதங்களிடம் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். குடும்பத்தில் ஏதேனும் விபத்தோ தீங்கோ நிகழுமாயின் பூதங்களுக்கு வழிபாடு நிகழ்த்தியாக வேண்டும். பூதங்களின் வழிபாடானது மூத்தோர், பேய் ஆகியவற்றின் கூட்டுக் கலவையான வழிபாடாகும். பூத வழிபாட்டு நெறியில் பிரமரெ முக்கியமான வழிபடு தெய்வமாகும். மற்றப் பூதங்கள் இதற்குக் கீழ்ப்பட்டனவே. பிரம்ம தாந்திரீகர்களின் செல்வாக்குக் காரணமாகப் பிரம்மெபரு என்பது பிரமனின் மற்றொரு பெயராகக் கருதப்படுகிறது. பிற பூதங்கள் சிவனுடைய கணங்களாகப் பாவிக்கப்படுகின்றன. பூதப் பாடல்கள் பலவற்றுள்ளும் பிராமணியத்தின் செல்வாக்கின் தாக்கம் இருப்பதைத் தெளிவாகப் பிரித்து அறிய முடியும். பூதங்கள் அனைத்துமே ஏதாவது ஒரு வகையில் சிவனோடும் பார்வதியோடும் தொடர்புடையனவாக உள்ளன.

மக்கள் பூதங்களுக்கு வழிபாடு நிகழ்த்த விரும்பும் போதெல்லாம் நல்கெயன் அல்லது பரவன் ஒருவனை அமர்த்துவர். சில இடங்களில் நல்கெயர் எல்லாப் பூதங்களின் வேடங்களையும் மேற்கொள்ளும் உரிமை உடையவர்கள். பரவர் வாழும் இடங்களில் நல்கெயர், பைதெர்குலு, கொடமணித்தய, ராக்தேஸ்வரி ஆகிய வேடங்களைப் போட்டுக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. பூதங்களின் சினத்தைத் தணிவிக்கும் சடங்கு கோல, நேம, நெமலு, அகெலு, தம்பில என்ற முறைகளில் நிகழ்த்தப்படும். இவற்றுள் கோல என்பது குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே நிகழ்த்தப்படுவதற்குரிய சடங்கு. இதில் பல சாதியாரும் பங்கு கொள்வர். இது ஒரு பூதஸ்தானத்தின் அருகிலேயே நிகழ்த்தப்படும். நேம சடங்கினை ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

தங்கள் இல்லத்தில் நடத்துவர். அகெலு தம்பில பில்லவர்களால் அவர்க ளுடைய வீடுகளில் நிகழ்த்தப்படுவது. கோல சடங்கு பைதெர்குலு தவிரப் பிற பூதங்களைச் சினம் தணிவிப்பதற்காக நடத்தப்படுவது. இந்தச் சடங்கிற்காக முக்டேசர் எனப்படும் சாதித்தலைவன் ஒரு பிராமணன் உதவியினைக் கொண்டு இச்சடங்கை நடத்துவதற்குரிய நல்ல நாள் ஒன்றினை முடிவு செய்வான். தெய்வத்திற்கான அணிகள், படையலுக்காக நேர்ந்து விடப்பட்டவை ஆகியன முக்டேசன் பொறுப்பில் இருக்கும். கோல நாளன்று மக்கள் பூதஸ்தானத்திலிருந்து முக்டேசன் வீட்டிற்கு ஊர்வலமாகச் சென்று அணிகளையும் நேர்ச்சிப் பொருள்களையும் கோயிலுக்கு எடுத்து வருவர். அவை ஒரு கட்டிலின் மேல் ஒழுங்கு படுத்தி வைக்கப்படும். பில்லவ பூசாரி ஒருவன் ஒரு கட்டிலின் மேல் ஏழு வாழையிலைகளை வரிசையாக இட்டு அவற்றில் அரிசியினைக் குவித்து வைப்பான். ஒவ்வொரு குவியலின் மீதும் முக்கியமான பூதங்களுக்கெனத் தனியே தேங்காய் வைக்கப்படும். சிறு பூதங்களுக்கெனத் தனியே மூன்று அல்லது ஐந்து இலைகளில் கட்டில்களின் மேலோ தரையிலோ பூதங்களின் தகுதிக்கேற்பப் படைக்கப்படும். முக்கிய பூதத்திற்கான கட்டில் அருகே ஏழு தலைகளை உடைய பந்தம் எரிந்தபடி இருத்தல் வேண்டும். பூசாரி பூதஸ்தானத்தின் கோயிலின் வாசலில் ஒரு முக்காலியின் மீது சமைத்த சோற்றைக் குவித்து வைப்பான். அதன் மீது வாழைப்பழத் துண்டங்களை இடுவர். அவ்றறைச் சுற்றி வாழைத்தண்டின் பட்டைகளையிட்டு அவற்றில் பல்வேறு உருவங்களை உடையனவாக நறுக்கப்பட்டுள்ள தென்னங்குருத்தின் ஓலைகளைக் குத்தி வைப்பர். உலோகப்பட்டையால் ஆன இடுப்புக் கச்சையும் மற்ற அணிகளையும் அணிந்துள்ள பூசாரி பூதங்களுக்குப் பூசை செய்தபின் அப்பால் செல்வான். அதன்பின் நல்கெயர் அல்லது பரவர் பூதங்களைப் போல வேடந்தரித்தவர்களாக அங்குத் தோன்றித் தங்களுக்குரிய தலை அணியினையும் கால் சிலம்பினையும் பூண்டு கொள்ள அனுமதி வேண்டுவர். பின்னர் அவர்கள் ஆடியவர்களாக வழிபாடு நிகழ்த்தப்படுகின்ற பூதங்களோடு தொடர்புடைய பாடல்களைப் பாடுவர். ஆடிப்பாடும் இவர்கள் களைத்தவர்களாக ஒரு புறம் ஒதுங்கிய பின் பூதஸ்தானத்தின் பூசாரி முன் வந்து கூடியிருப்பவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறுவான்:- ''கூடியுள்ள பெரியோர்களே! உங்களுடைய அனுமதி பெற்று உங்களனைவரையும் வணங்குகின்றேன். கூடியுள்ள பிராமணர்களே! நான் உங்களை வணங்குகின்றேன். புரோகிதனே! உனக்கு எனது வணக்கம்.'' இவ்வாறு அவன் அங்குக் கூடியுள்ள பெரிய மனிதர்கள் அனைவரின் பெயரையும் தனித்தனியே கூறி வணங்குவான்.

அவ்வாறு அவன் கூறி முடிந்ததும் பூத ஆட்டக்காரர்களும் அவனைப் போலவே அனைவருக்கும் வணக்கம் கூறுவர். அத்தோடு பூத ஆட்ட நிகழ்ச்சி முடிவுறும்.

பிரமெரு, கொடமணிட்ய, குக்கிடைய, ஜுமதி, சரளு ஜுமதி, பஞ்ச ஜுமடி ராக்தேஸ்வரி, பஞ்சுருளி, குப்பெ பஞ்சுருளி, ரத்த பஞ்சுருளி, உருண்டரய்யா,உறாசதேவ அல்லது ஹொச பூத, தேவ நஜிரி, கள்குட்டான், உக்க திரி, குளிகெ, பொப்பரிய நிச்ச துக்கல்ய்ய, மகிஷண்டய, வர்தெ, சாமுண்டி, பைதெருகுலு, ஒக்குபல்லாள, ஓதிடய என்பன பூதங்களுள் குறிப்பிடத்தக்கன. ஜுமதி தான் பெரியம் மைக்குரிய தெய்வமான மாரி எனச் சிலர் கருதுகின்றனர். உக்கடிரி, கல்லுர்டி என்பன இரண்டு மட்டுமே பெண்பாற் பூதங்கள். பூதங்கள் பல்வேறு சாதிகளைச் சேர்ந்தனவாகக் கருதப்படுகின்றன. ஒக்குபல்லாள, தேவநஜிரி ஆகியன சமணர் சாதியைச் சேர்ந்தவை. கொடமணிட்ய, குக்கிடைய இரண்டும் பண்டர் சாதியைச் சேர்ந்தவை. கள்குட்டான் கொல்லர் சாதியைச் சேர்ந்தது. பொப்பரிய மாப்பிள்ளா சாதியைச் சேர்ந்தது. நிச்ச, கொரகர் சாதியைச் சேர்ந்தது.

சிவனுக்குரியதாக அமைக்கப்பட்டுள்ள கோயில்களுள் சிலவற்றில் தாந்தீரிகர்கள் தீபாவளி, சங்கராந்தி போன்ற நாள்களில் சிறப்பான வழிபாட்டின்போது பல்வேறு பூதங்களுக்கும் உணவு முதலியன படைப்பர். உடுப்பியில் பல்வேறு மடங்களைச் சேர்ந்தவர் களான சந்நியாசிகள் பஞ்சுருளி, சரள ஜுமதி, சாமுண்டி ஆகிய பூதங்களுக்குக் கோல நடத்தப் பணம் தருகின்றமையால் இவர்களும் பூதங்களின் மேல் நம்பிக்கையுடையவர்கள் என்றே கொள்ள வேண்டிய தாகின்றது.

தென் கன்னடத்தில் உள்ள ஹரியாத்கப்பில் பூத ஆட்டம் நடத்தும் நல்கெயர் என் முன் பூத ஆட்டம் ஆடிக்காட்டினர். ஆட்டக்காரர்கள் மணிகள் உரசுவதால் உடலில் காயப்படாதிருக்க கமுகின் மடலை முழங்காலைச் சுற்றி அணிந்தனர்.

பூத ஆட்டக்காரர்கள் பாடும்பாடல்கள் பலவாக இருப்பதோடு இடத்திற்கு இடம் வேறுபடவும் செய்கின்றன. பூதங்களைப் பற்றி வழங்கும் கதைகளின் முழு விவரங்கள் திரு. எ.சி. பர்னெல்* அவர்களால் தரப்பட்டுள்ளன.

* துளு மக்களின் பூத வழிபாடு. (Devil Worship of the Tulwas, Ind. Ant., XXIII, XXIV, XXV, XXVI, 1894-7)

துளு நாட்டினைச் சேர்ந்த பூத ஆட்டக் காரர்களுக்குரிய அவர்கள் ஆண்டுத் திருவிழாவின்போது கூறும் கதைகளின் தொகுதி நூலாக 1866-இல் மங்களூர் பசெல் அச்சகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

நல்ல : Nalla (black)

கொப்பல வெலமரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலத்தின் பெயர். கருப்பு நிறம் என்பது இதன் பொருள்.

நல்லூர் : Nallur

நல்லூர், நாறுவீடன் ஆகிய இரண்டும் 1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் உட்பிரிவுகளாகப் பதியப்பட்டுள்ளன.

நாமதாரி : Namadāri

வைணவர்களுக்குரிய சமயச் சின்னமாக நாமம் தரித்தவர் களுக்கான பெயர். இதற்குச் சமமான நாமல என்பது போயர் சாதிக்குரிய புறமணக்கட்டுப்பாடுடைய குலம் ஒன்றின் பெயராக உள்ளது.

நம்பிடி : Nambidi

அம்பலவாசிகளைச் சேர்ந்த ஓர் உட்பிரிவினர். 1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில்' இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:- ''நம்பிடிகளுள் பூணூல் அணிபவர், பூணூல் அணியாதவர் என இரண்டு பிரிவினர் உள்ளனர். முன்னவர்கள் புரோகிதம் செய்யத் தம்மவர்களையே அமர்த்திக் கொள்கின்றனர். பின்னவர்களின் புனிதச் சடங்குகளை இளையாடுகள் நடத்துகின்றனர். இவர்கள் சடங்குகள் சத்திரியர்கள் சடங்குகளை ஒத்தவை. இவர்கள் பண்புக்கு ஒவ்வாத முறையில் சத்திரியர்களுக்கான இந்தத் தகுதியினைப் பெற்றனர் என வழக்கு வரலாறு தெரிவிக்கின்றது. இதனால் இவர்கள் சூத்திரர்களால் தம்பிரான்கள், மூப்பின்று, காரனவபாட் (மருமக்கள் தாயவழிப்பட்ட குடும்பத் தலைவன்) என அழைக்கப்படுகின்றனர். பன்னிரண்டு நாள்கள் தீட்டினை இவர்கள் மேற்கொள்வதோடு மருமக்கள் வழி உடைமை உரிமையும் பேணுதலையும் மேற்கொள்கின்றனர். இவர்கள் வீட்டுப் பெண்கள் மாண்டளு என அழைக்கப்படுகின்றனர். ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்ட மலபாரில் உள்ளதான கக்காட்டில் உள்ள காரனாட் நம்பிடியே இவர்களின் தலைவன்.'' 1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நம்பிடிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது: ''அய்யுனிக்கூர் நம்பிடி (ஐந்து குடும்பத்தைச்

சேர்ந்த நம்பிடிகள்) களே வரலாற்று வழிப்பட்ட வகையிலும் சமூகப்படி நிலையிலும் முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றார்கள். இக் குடும்பத்தின் மூத்த ஆண்மகன் காரணவபாட் என்ற சிறப்புப்பட்டம் தரித்தற்குரியவன். கொச்சி அரசர்களிடமிருந்து தனித்த உரிமைகளைப் பெற்று அனுபவிக்கும் உரிமை பெற்றவன் இவன். இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு காலத்தில் கொச்சி அரசரின் படையில் சிறப்பிடம் வகித்ததே இவ்வாறு உரிமைகளைப் பெறக் காரணமாகும். இவர்கள் நம்பூதிரிகளாக இருந்தவர்கள் என்ற வழக்கும் வழங்கி வருகின்றது. கேரளத்தைச் சேர்ந்த பெருமாள் ஒருவர் தங்களுக்குத் தொல்லை விளைவித்ததால் பிராமணர்கள் அவரை அரச பதவியிலிருந்து அகற்றுவதென முடிவு செய்தனர். அவரைக் குத்திக் கொன்றவர்கள் அதனைத் திட்டமிட்ட பிராமணர்கள் கூடியிருந்த இடத்திற்குத் திரும்பி வந்த போது அப்பிராமணர்கள் அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்றுத் தங்களிடையே சரிசமமாக அமர்த்திக் கொண்டனர். வந்து அமர்ந்த அவர்கள் பிராமணர்களோடு சரிசமமாக அமர்ந்து விட்ட குற்றத்தை உணர்ந்தவர்களாகத் தாங்களாகவே அங்கிருந்து எழுந்து 'நாம் படிமேல்' எனக் கூறி அந்த அறையின் வாசற்படியில் சென்று அமர்ந்ததாகவும் நம்பிடி என்ற பிரிவின் தோற்றத்திற்கான காரணம்இதுவே என்றும் வழக்கு வரலாறு நிலவுகின்றது. அவ்வாறு சென்று அமர்ந்தவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் பிராமணர்கள் என்ற தங்கள் சமூகத் தகுதியினை இழந்தவர்களாக இடைப்பட்ட சாதியாராக ஒரு சில தனியுரிமைகளை மட்டும் அனுபவித்தற்குரியவர்களாக இருந்து வருகின்றனர். பூணூல் அணியும் இவர்கள் காயத்ரி சொல்கின்றனர். இவர்கள் திருமணச் சடங்குகளில் நம்பூத்ரி பிராமணர்கள் புரோகிதம் செய்கின்றனர். சாவு, பிறப்பு ஆகியவற்றின் தீட்டு நீக்கும் சடங்குகளிலும் நம்பூத்ரிகளே புரோகிதம் பார்க்கின்றனர். இத் தீட்டுகள் பத்து நாள் அளவின. மருமக்கள் தாய உடமை உரிமையினை மேற்கொள்ளும் இவர்கள் மணச் சடங்கில் தாலியினை இவர்கள் சாதியினைச் சேர்ந்த ஆண்களே அணிவிக்கின்றனர். நம்பூத்ரிகளும் இவர்கள் சாதியினைச் சேர்ந்த ஆண்களும் நம்பிடிப் பிரிவுப்பெண்களோடு சம்பந்தம் வைத்துக் கொள்கின்றனர். நம்பிடிகள் நாயர் சாதிப் பெண்களோடு உறவு வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். பொது விருந்துகளில் இவர்கள் நம்பூத்ரிகளோடு உடனிருந்து உண்ண அனுமதிக்கப்படுவதில்லை. இவர்கள் சாதியினைச் சேர்ந்த பெண்கள் மனொள்பாட்கள் என அழைக்கப்படுகின்றனர்."

நம்பியாசான்: Nambiyāsan

அம்பலவாசிகளின் ஒரு பிரிவு 1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள் -ளதாவது:- ''நம்பி நம்பியார் என அழைக்கப்படும் நம்பியாசான் களுக்குத் தற்போது கோயிற்பணிகள் எவையும் உரியனவாயில்லை. இந்தியப் போர் முறைகளுக்கு ஏற்றவாறு போர் வீரர்களுக்குப் பயிற்சி தரும் களரிகளை இவர்கள் நடத்தி வருகின்றனர். போர் வீரர்களாக நாயர்களின் குருமார்களாக இவர்கள் உள்ளனர். ஒரு காலத்தில் இவர்கள் கோயில்களில் மாலை கட்டும் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரியவருகின்றது. கொச்சியிலும் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட மலபாரிலும் நம்பியாசான்கள் பலர் இன்றும் அப்பணியினை மேற்கொண்டவர்களாக உள்ளனர்.'' 1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நம்பியார் என்பது குழப்பத்தை ஏற்படுத்துவதான பட்டப் பெயரென்றும் அது ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்பாருக்கு உரியதென்றும் கூறப்பட்டுள்ளது. நாயர்கள் சிலரும் அப்பட்டம் தரித்தவர்களாக உள்ளனர். சில இடங்களில் மூத்தாடுகள் இளையாடுகள் ஆகியோரும் நம்பியார் என அழைக்கப்படுகின்றனர். சாக்கியரின் சாக்கியக்கூத்தின் போது சாக்கிய நம்பியார் தனித்ததான அமைப்பினை உடைய முழவினை முழக்குவார். அவர்களுடைய வீட்டுப் பெண்களான நங்கையர் அப்போது தாளமிடுவர். சாக்கியக் கூத்து நடக்கும் மேடைகளில் நங்கையர்களே புராணப் பாத்திரங்களின் வேடம் தாங்கி ஒருவகையான ஊமைக் கூத்தினை நிகழ்த்துவதும் உண்டு.

நம்பியாதிரி: Nambiyātiri (a person worthy of worship)

இளையாடர்க்குரிய மற்றுமொரு பெயர்.

நம்பூதிரி பிராமணர்: Nambūtiri Brahman

நம்பூதிரி என்பதன் பெயர்க்காரணம் பலவகையாகக் கூறப்படுகிறது. அவற்றுள் நம்பு (தூய்மையான அல்லது நம்புதற்குரிய) என்ற சொல்லும் திரி (ஒளி) என்ற சொல்லும் இணைந்து நம்பூதிரி என வழங்குகின்றது என்ற விளக்கமே பலரும் மறுப்பேதும் கூறாமல் ஏற்றுக் கொள்வதற்குரிய விளக்கமாகும். திரி என்பது மலபாரைச்சேர்ந்த நாயர்களை விடத் தகுதியில் மேம்பட்ட பிராமணர்களுக்குரிய சிறப்பைக் குறிக்கும் பின்னிணைப்பாகும். மலபாரைச் சேர்ந்த, ஆன்மீகத் துறையில் ஈடுபாடுடைய, சமூகத்தின் மேட்டுக் குடிவாசிகளான இவர்கள் பரசுராமனுக்குரியதான பூமியில் பரம்பரை நிலவுடைமை -யாளர்களாகத் திகழ்வதோடு எல்லோராலும் மிகுந்த மரியாதைக் குரியவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

நம்பூதிரி ஒருவனிடம் அவர்களுடைய தோற்றம் பற்றிக் கேட்ட போது கேரள உற்பத்தியைப் பார்க்கும்படி கூறினான். மலபாரைப் பொறுத்தவரை நம்பூத்ரிகளும் அவர்களுடைய சாதி அமைப்பும் கிராமங்களில் கூறியுள்ள பரசுராமனுடைய வரலாற்றோடு தொடர்புடையனவாகும். விட்டுணுவின் அவதாரமான பரசுராமன் சினங்கொண்டவனாகத் தன் தாயினை வெட்டிக் கொன்றான். அவன் அப்பாவத்தைப் போக்கிக் கொள்ள இருபத்தொரு தலைமுறை சத்திரிய குலத்தவர்களை வேரறுக்க வேண்டுமென முனிவர்கள் அவனுக்கு அறிவுரை கூறினர். அவன் அவர்கள் அறிவுரைப்படி சத்திரியர்களைக் கொன்று அவர்கள் ஆண்ட நிலத்தை முனிவர்களுக்கு வழங்கினான். தங்களுக்கெனப் பங்கு எதனையும் பெறாதவர்களான பிராமணர்கள் மனக் கசப்புற்றவர்களாகப் பரசுராமனை நாட்டைவிட்டு வெளியேற்றினர். சில விரதச் செயல்களை மேற்கொண்டவனான அவன் கடல் அரசனான வருணனிடமிருந்து தனக்குரியதாகக் கொஞ்சம் நிலப்பகுதியினைப் பெறக் கடவுளர்களால் வரம் அருளப் பெற்றான். அக்காலத்தில் மலபார் நிலப்பகுதி இருக்கவில்லை. கன்னியாகுமரி முனையிலிருந்து கடலில் தன் கோடரியை எவ்வளவு தொலைவு வீசி எறிய முடியுமோ அந்த எல்லைவரை நிலமாகப் பெறுவதற்குரியவன் என்பதே தெய்வங்கள் அவனுக்கு அருளிய வரம். தென் கன்னட மாவட்டத்தில் உள்ள கோகர்ணம் வரை சென்று விழுமாறு அவன் தன் கோடரியினை வீசி எறிந்தான். உடனே கன்னியாகுமரிக்கும் கோகர்ணத்திற்கும் இடைப்பட்ட கடற்பகுதி நிலப்பகுதியாக எழுந்தது. மேற்கு மலைத் தொடரினைச் சார்ந்தனவாகக் கடலிடைப்பட்டனவாக நீளவாக்கில் அமைந்து திருவாங்கூர், கொச்சி, மலபார், தென் கன்னடத்தின் ஒரு பகுதி ஆகியனவாக இன்று உள்ள பகுதியே அவ்வாறு தோன்றிய நிலப்பகுதியாகும். இப்பகுதிக்குப் பரசுராமன் தந்த பெயர் கர்ம பூமி என்பதாகும். இப்பெயர் மனிதன் செயல்களின் விளைவுகளைப் பொறுத்தே அவர்கள் வாழ்வு அமைவது எனவும் பொருள் தருவதாகும். பஞ்சமில்லாத மிகுதியான மழையைப் பெறும் பூமியாகவும் இது திகழ்ந்தது. எனினும் அங்கு அவன் தனித்தே இருந்தான். தன் தனிமையைப் போக்க அவன் கிருட்டிணா ஆற்றங்கரையிலிருந்து சில பிராமணர்களை அழைத்து வந்தான். பாம்புகளால் அச்சுறுத்தப்பட்ட அவர்கள் அங்கு நெடுங்காலம் தொடர்ந்து தங்கினார்களில்லை. அதன்பின் அவன் வடக்கே இருந்து சில பிராமணர்களை அழைத்து வந்ததோடு அவர்களும் முன்னவர்களைப் போல ஓடிப் போகாமல் இருக்க வேண்டி அவர்களுக்கென்று சில விதிமுறைகளை வகுத்து அவர்களை அறுபத்தி நான்கு கிராமங்களில் குடியமர்த்தினான். அவன்

அவர்களை மருமக்கள் தாய உடமை உரிமை முறையினைப் பின்பற்றுமாறு கூறினான். எனினும் பய்யனூரைச் சேர்ந்த நம்பூதிரிகள் சிலர் மட்டுமே அவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தனர். பிராமணர்கள் இந்தப் பகுதியின் ஆட்சியில் மிகுந்த கண்டிப்புடைய வர்களாக நடந்து கொண்டமையால் அப்பகுதியில் வந்து சேர்ந்திருந்த மக்கள் தங்களுக்கு ஏற்றதொரு அரசினைத் தேர்ந்தெடுப்பது என முடிவு செய்தனர். தங்களுக்கிடையே ஒருவனைத் தேர்ந்தெடுக்க இயலாத அவர்கள் கேய (சேர) பெருமாளைத் தேர்ந்தெடுத்து அரசனாக்கினர். அதன் பின் மலபார் கேரளம் என அவன் பெயரால் அழைக்கப்படுவதாயிற்று. இந்தக் கதையின் அடிப்படையில் உள்ள உண்மை மேற்கு மலைத்தொடருக்கும் கடலுக்கும் இடையேயுள்ள செம்மண் நிலப்பகுதியானது பிற்பட்ட காலத்தில் தோன்றியதாகும் என்ற மண்ணூலார் கருத்தை வற்புறுத்துவதாக உளது. இப்பகுதி கடலில் இருந்து பிற நிலப்பகுதிகள் தோன்றிய பின் அண்மைக் காலத்தில் வெளிப்பட்டது என்பதிலும் நம்பூதிரிகள் வடக்கே இருந்து வந்து அங்குக் குடியயேறினர் என்பதிலும் ஐயமேதுமில்லை. சேர அரசின் தலைநகரம் மேற்குக் கடற்கரையில் திருவாங்கூர் மாநிலத்தில் கொடுங்கோளூருக்கு அருகே இன்று திருவஞ்சிக்குளம் என வழங்கப்படும் ஊராதல் கூடும். இன்றும் அங்கு ஒரு சிவன் கோயில் காணப்படுவதோடு அதன் தென்மேற்கு கால் மைல்தொலைவில் பழைய அரண்மனையின் அடித்தளங்கள் காணப்படுகின்றன. மலபாரில் மிகுதியாக மழை பெய்கின்றது. மலைப் பகுதிகளில் ஆண்டுக்கு 300 அங்குலமாக உள்ள அது, கடற்கரையில் ஆண்டுக்கு 150 அங்குல அளவினைச் சார்ந்ததாக அமையும்.

''வீட்டை விட்டு வெளியே புறப்படும்போது நம்பூதிரி பெண்கள் அனைவரும் தங்களுடன் ஒரு குடையினை எடுத்துச் செல்ல வேண்டும் எனப் பரசுராமனால் விதிக்கபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு குடையை எடுத்துச் செல்வது ஆண்கள் பார்வையிலிருந்து தங்களை மறைத்துக் கொள்வதற்காகவேயாம். அத்துடன் விரிசாரி எனப்படும் நாயர் சாதிப் பெண் ஒருத்தியும் இவர்கள் செல்லும்போது முன் செல்ல வேண்டும். கழுத்திலிருந்து பாதம் வரை உடம்பை ஒரு துணியால் மறைத்துக் கொண்டு செல்லும் இவர்கள் நகைகள் ஏதும் அணிந்து செல்லக் கூடாது என்பதும் பரசுராமர் விதித்துள்ள விதியாம். எனவே இப்பெண்கள் வெளியே செல்லும் சமயங்களில் நாயர் சாதிப்

பெண் துணையாக உடன் அழைத்துச் செல்வதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.''*

பன்னியூர் பிராமணர்கள் வேதங்களுக்கு உரியவர்கள் அல்லர் என ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பது தொடர்பான கதையினைக் கேரளோற்பத்தி தெரிவிக்கிறது. தொடக்கத்தில் நம்பூதிரிகளிடையே வராக அவதாரத்திலான விட்டுணுவை வழிபடும் வைணவர்கள், சைவர்கள் என இரு சமயப் பிரிவினர் இருந்தனர். முன்னவர் பன்னியூரிலும் பின்னவர் சொவூரிலும் தங்கி வாழ்ந்தனர். சைவர்களாக இருந்த பிரிவினர் கை ஓங்கியதால் வைணவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த தொடங்கியவர்களாக அவர்களை வேதத்திற்கு உரியவர்கள் அல்லரென்று விலக்கி வைத்துவிட்டனர். இதனால் இப்பொழுது பன்னியூரைச் சேர்ந்த நம்பூத்ரிகளுக்கு வேதங்களை ஒதுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்தத் தடையினைப் பன்னியூரைச் சேர்ந்த நம்பூத்ரிகள் கடைப்பிடிப்பதில்லையெனவும் அவர்கள் வேதங்கள் தொடர்பான எல்லாச் சடங்குகளையும் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

''கேரள மகாத்மியத்தில் கூறியுள்ளபடி பரசுராமன் தான் புதிதாகக் கடலிலிருந்து மீட்ட நிலத்தில் குடியமர்த்தப் பிராமணர்களை அழைத்த போது அதிஷேத்திரத்திலிருந்து வந்தவர்களே நம்பூத்ரிகள். அவ்வாறு வந்து சேர்ந்தவர்கள் மீண்டும் அப்பகுதியினை விட்டு வெளியேறி விடாமல் இருக்க நாரதர் தனக்குக் கூறிய அறிவுரைப்படி பரசுராமன் அவர்களுடைய நடையுடை பாவனை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் பெருத்த மாற்றங்களைச் செய்தான். நர்மதை, கிருட்டிணா, காவேரி ஆற்றங்கரைகளிலிருந்து மலபாருக்குப் பிராமணர்கள் வந்து சேர்ந்துள்ளனர். தங்கள் முன்னோர்கள் கிழக்குக் கடற்கரையினைச் சேர்ந்த எந்த ஊரிலிருந்து வந்தவர்கள் என்பதனையும் ஸ்மார்த்தர்களின் உட்பிரிவுகளான வடமர், பிரகத்சரணம், அஷ்டாச்சரம், சங்கேதி முதலியவற்றுள் தாங்கள் எப்பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர் என்பதனையும் நம்பூத்ரிகள் சிலரே கூற நான் கேட்டுள்ளேன். இன்றுங்கூட நம்பூத்ரி சந்நியாசி தன் காலை உணவினை உண்ணும் போது மேற்கொள்ளும் சடங்கில் கிழக்குக் கடற்கரையினைச் சேர்ந்த வடதேசத்து வடமன் ஒருவன் அச்சந்நியாசியின் கைகளில் நீரூற்ற வேண்டுமென்ற விதி

* என். சுப்ரமணிய அய்யர், மலபார் க்வார்ட்.ரெவியூ VII 1, 1908.
(N. Subramaniya Aiyar, Malabar Quart. Review, VII, I 1908)

கடைப்பிடிக்கப்படுகின்றது. இடைக்காலத்திய வாணிப மையங்களில் ஒன்றாக விளங்கிய கத்தியவாரில் உள்ள புரோசிலிருந்தும் நம்பூதிரி பிராமணர்கள் முன்காலத்தில் வரவழைக்கப்பட்டனர் எனக் கூறப்பட்டுள்ளது. பரசுராமன் சத்திரியர்களை வென்ற பின் தனது அவபிரிடஸ்நானத்தை (இறுதிக்குளியல்) மேற்கொண்ட பழமையான நகரமான பிரிகுகச்சாதான் இன்று பரோச் என வழங்குகின்றது. அங்கு இன்று பார்கவ பிராமணர்கள் என அழைக்கப்படும் ஒரு பிரிவினர் வாழ்ந்து வருகின்றனர். இக் குலத்தவர்களின் மூதாதையான பரசுராமன் கையில் படைக்கலம் ஏந்தும் தொழிலை மேற்கொண்டதனாலேயே இன்று இவர்கள் சமூகப்படிநிலையில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். எப்பொழுது நம்பூதிரிகள் மலபாரில் முதன்முதல் வந்து குடியமர்ந்தனர் என்பதனைக் கூற இயலாது. அவர்கள் திரேதா யுகத்தில் வந்திருத்தல் வேண்டுமென மரபு வழியினர் வழக்குக் கூறுகின்றது. எட்டாம் நூற்றாண்டினதாக மணிக்கிராமம் சிரியன் கிறித்தவப் பட்டயத்தில் சொவ்வூர், பன்னியூர் கிராமங்களைப் பற்றிய குறிப்புள்ளது. யூதர்களின் பட்டயத்தில் அத்தகைய குறிப்புக் காணப்படவில்லை. இந்தத் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் நம்பூதிரிகளின் வருகை ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட தாகலாம் எனக் கொள்ள இடமுள்ளது. தாலமி, பெரிபுளூஸ் ஆகியோர் குறிப்புகள் முதலாம் நூற்றாண்டிலேயே பிராமணர்கள் குடியிருப்புகள் மலபாரில் இருந்ததாகத் தெரிவிக்கின்றது. மேற்குச் சாளுக்கிய மன்னர்களின் எழுச்சியோடு கூடப் பிராமணர்கள் குடும்பங்களின் குடியேற்றமும் பெருமளவினதாகப் பெருகி அதற்கு முன்பே மலபாரில் குடியேறியவர்களாக வாழ்ந்த நம்பூத்திரிகளோடு இரண்டறக் கலந்திருக்கலாம். இந்த நம்பூதிரிகள் அனைவரும் இரு பிரிவினராகப் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

(அ) வைணவர்களான பன்னியூர் கிராமத்தார். பன்றியினைத் தங்கள் அரசுச் சின்னமாகக் கொண்ட சாளுக்கிய மரபைச் சேர்ந்த வைணவ சமயம் சார்ந்த அரசர்களின் ஆதரவைப் பெற்றவர்கள் இவர்கள்.

(ஆ) சொவ்வூர் கிராமத்தாரான சைவர்கள், சாளுக்கியரை அடுத்து மேலோங்கிய சேர,சோழ, பாண்டிய மன்னர்களின் சமயநெறியான சைவ நெறியினை விரும்பி மேற்கொண்டவர்கள். இவர்களுள் அறுபத்து நான்கு கிராமங்கள் அடங்கியுள்ளன. எனினும் பல கிராமங்கள் குடும்ப அளவினவே. இவற்றுள் பத்துக் கிராமங்களுக்கு மேற்படாதன இன்றைய திருவாங்கூரைச் சேர்ந்தனவாக உள்ளன.

இக்கிராமங்கள் தன்னாட்சி உரிமை பெற்றன. இவற்றின் ஆளுகைக்கென அமைந்த நான்கு தலைமையிடங்கள் கொடுங்கோளூரில் அமைந்துள்ளன. இவற்றை அடுத்த பகுதியிலிருந்து சேலம், கோயமுத்தூர் மாவட்டங்களை உள்ளிட்ட சேர நாட்டு அரசினை ஆளும் அரசர் எனப்படும் பெருமாள் பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சிக்கு உரியவராக ஓர் இடைக்கால ஏற்பாடாக இவர்களால் அமர்த்தப்பட்டுப் பின்னர் அரசராக உறுதி செய்யப்பட்டவராவார். இவ்வாறு அரச குலத்தவராக ஆக்கப்பட்டு ஆட்சியுரிமை பெற்றவர், தங்கள் பரம்பரையான வாழ்விடத்திலிருந்து பிரிந்து வர நேர்ந்து விட்ட காரணத்தால் தனித்தவர்களாயினர். இதனால் இவர்கள் தாங்கள் தங்கி வாழும் பகுதியில் உள்ள உயர்சாதியாரான நம்பூதிரிகளுக்குத் தங்கள் குலத்தைச் சேர்ந்த பெண்களை மணம் முடித்து தந்தவர்களாக வேண்டியதாயிற்று. ஆண்கள் சூத்திர சாதிப் பெண்களோடு உறவு கொள்வாராயினர். இதனாலேயே உடைமைகள் பெண்வழித்தாய உரிமை வழிச் செல்லும் கட்டாயத்திற்கு உள்ளாயினர். கேரளத்தின் சில பகுதிகள் தொடர்ந்து பிராமணர்களின் ஆளுகைக்கு உட்பட்டனவாக இருந்தன. எட்டப்பள்ளி தலைவர் அத்த கையவர்களுள் இன்று முக்கியமானவராக உள்ளார் எனத் திரு என். சுப்ரமணிய அய்யர் கூறியுள்ளார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஹாமில்டன், ''நம்பூதிரிகள் சமயம், அரசு ஆகிய இரு துறைகளிலும் மேலாண்மையுடையவர்களாக விளங்குவதோடு சிலர் சமயத் தலைவர்களாகவும், ஆட்சித்தலைவர்களாகவும் ஒருங்கே செயல்படுகின்றனர்'' எனக் கூறியுள்ளார்.* சென்னை மாநிலத்தைச் சேர்ந்த பிற பகுதிகளில் வாழும் பிராமணர்கள் அரசின் கீழ் மேற்கொள்வதற்குரிய தகுதி வாய்ந்த பணிகள் அனைத்தையும் மேற்கொள்வதோடு கூட வணிகம் முதலான இலாபம் தரும் தொழில்களிலும் ஈடுபடுவதைப் போல உலகியல் நடப்புகளில் ஈடுபாடில்லாதவர்களாக கிரே(Grey) கூறியதையொப்ப ' உலகின் அன்றாட அற்பப் போராட்டங்களில்' தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாதவர்களாக உயர்ந்ததான புனித வாழ்க்கை நெறிப்பட்டவர்களாகவே நம்பூத்ரிகள் தொடர்ந்து இருந்து வருகின்றனர். இவர்களுள் பலரும் நிலக்கிழார்கள். மலபாரின் பெரும் பகுதி சிறப்பாக வள்ளுவநாட்டு வட்டம்- நம்பூத்ரிகளின் உடைமையாகவே உள்ளது. நிலக்கிழார்களாக மேலாண்மை பெற்றுள்ள இவர்களின் பண்புகள் தனித்து ஒதுங்கியவர்களாக ,இருப்பதும் எளிய வாழ்க்கை நெறியுடன் வாழ்வதும் ஆகும். நம்பூதிரிகளில் ஓரிருவர் எப்பொது

* கிழக்கிந்தியா பற்றியதான புதிய விவரங்கள், 1744.
(A new account of the East Indies, 1744.)

தேனும் காசிக்குப் புனிதப் பயணம் மேற்கொள்வதுண்டு. ஆங்கிலேயர்க ளின் செல்வாக்கின் தாக்கத்திற்கு உள்ளாகாத இவர்களின் அப்பாவித்த னம் அனைவரும் அறிந்த ஒன்றே.[1] மற்ற எல்லாச் சாதியினரையும் இனத்தவர்களையும் தாக்கத்து உள்ளாக்கிய ஆங்கிலேயர்களுடைய செல் வாக்கானது நம்பூதிரிகளை மட்டும் தாக்கத்திற்கு உள்ளாக்காததால் ஆங் கிலேயர்கள் இந்தியாவில் நுழைவதற்கு முன் இருந்ததான அதே நிலை யில் இவர்களை விட்டுள்ளது. இவர்களுடைய உடல் அளவுகள் மெய்ப் பிப்பதனை உறுதிப்படுத்துவது போல உள்ளன. தென்னிந்தியாவில் உள்ளவர்களுள் உண்மையில் ஆரிய இனக் கூறுகளைக் கொண்டுள்ள -வர்கள் நம்பூதிரிகளே. உடல் கூறுகளில் மட்டுமன்றிப் பழக்க வழக்கங் களிலும் சமயச் சடங்குகளைப் பின்பற்றுவதிலும் ஆரிய நெறியோடு தாமே விரும்பினாலும் கைவிட இயலாத அளவிற்கு இவர்கள் இரண்டறப் பிணைக்கப்பட்டுள்ளனர். '' மிகக் கீழான சாதியாருக்கு அடுத்தபடியாக மற்ற எந்தச் சாதியாரை விடவும் நம்பூதிரிகளே மேற்கத்திய நாகரிகத்தின் எவ்வகைத் தாக்கத்திற்கும் உள்ளாகாதவர்களாக உள்ளனர். ஒரே ஒரு நம் பூத்ரி மட்டும் அரசுப்பணியில் எழுத்தர் பணியினை ஏற்றுள்ளதாகத் தெரிகின்றது. சிலர் ஊர் அதிகாரிகளாகப் பொறுப்பு வகிக்கின்றனர். இச்சாதியினைச் சேர்ந்த ஒருவர் ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று வைத்திருப்பதோடு கூடப் பஞ்சாலை ஒன்றிலும் பங்குதாரராக உள்ளார். சிலர் தற்போது சைக்கிள் அன்பர்களாகியுள்ளனர். ஒருவர் ஒளிப்படம் எடுப்பதில் ஆர்வங்காட்டி வருகின்றார். இவையெல்லாம் விதிவிலக்குகளா க அமைந்தனவே. குறிப்பிட்டுச் சுட்டும் அளவிற்குச் சிறப்புக்குரிய விதிவிலக்குகளாக மற்றவர்கள் இவற்றைக் கருதார் எனினும், இச்சாதியார் பழைய பழக்க வழக்கங்களில் கொண்டுள்ள ஈடுபாட்டினைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது முதன்முதலாக மலபார் கையேட்டினை எழுதி யவருக்கு வியப்பூட்டும் வகையில் இவை சுட்டிக் குறிப்பிடத் தக்கனவா கப் பட்டிருத்தல் வேண்டும்.'' என மலபார் மாவட்ட விவரக் குறிப்பு கூறுகின்றது.

நம்பூதிரிகளின் தொழில் தொடர்பாகத் திரு சுப்ரமணிய அய்யர் எழுதுவதாவது:- ''மிகுதியும் வருமானம் தருவதாக இருந்தாலன்றி இவர் கள் கோயிற்பணிகளை மேற்கொள்வதில்லை. பிழைப்புக்காகக் கல்வி புகட்டுவதைக் கீழ்மையானதாகக் கொள்வர். பிராமணர்களுக்கு மனு விதித்துள்ளதான ' பணியாளராக இராதீர்' என்ற விதி மலபாரிலே கண்டிப் புடன் கடைப்பிடிக்கப்படுகின்றது. பயணிகளின் குறிப்புகளிலிருந்து

[1] நம்பூதிரிகள் ஐரோப்பியர்களுக்கு வால் உண்டு என்று நம்புகின்றனர் ; ர்பதற்கான வழக்கு உள்ளது.

கிடைக்கும் விவரங்களை வைத்துப் பார்க்கையில் போர்க்காலங்களில் அரசர்களிடையே நம்பூதிரிகள் தூதுவர்களாகப் பணியாற்றியுள்ளனர் எனக் கொள்ள இடமுள்ளது. பர்பொசா கூறுவதாவது, ' ஒரு நாட்டிலிருந்து மற்றொருநாட்டிற்குச் சாலை வழியே செய்திகள், பணம், வணிகம் பண்டங்கள் ஆகியனவற்றைக் கொண்டு செல்பவர்கள் இவர்கள். பிராம ணர்களான இவர்களை அரசர்கள் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொண் டிருக்கும் காலங்களில் கூட யாரும் இன்னல்களுக்கு உள்ளாக்குவ தில்லை. இப் பிராமணர்கள் நன்கு கற்றவர்கள்... இவர்கள் சுவடிகளைப் பெற்றிருப்பதோடு கலைகள் பலவற்றிலும் தேர்ந்தவர்களாக இருப்பதால் அரசர்கள் இவர்களை மதித்துச் சிறப்பிக்கின்றனர். கேரளத்தில் உள்ள நிலம் அனைத்திற்கும் நெடுங்காலமான உடைமை உரிமை பெற்றவர்களாக இருப்பதால் நம்பூத்ரிகள் பயிர்த்தொழிலையே தங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளனர். இத் தொழிலுக்கு ஏற்ற அடிப்படை வசதிகள் மிக நலமுற அமைந்திருப்பினும் மாறிவரும் சூழ லுக்கு ஏற்பத் தங்கள் வாழ்க்கையினை மாற்றி அமைத்துக் கொள்ளும் திறனின்மையால் இவர்கள் தங்கள் வாழ்க்கையில் வளம் பெற்றவர்களாக முன்னேறுவதற்கு இயலாதவர்களாக உள்ளனர். காலத்துக்கொவ்வாத பண்ணை மேலாண்மை முறையானது நம்பூத்ரிகளை வழக்காடுவதில் நாட்டங்கொண்ட சாதியாராக ஆக்கி விட்டது. சாதாரண நிலையில் உள்ள ஒருவனுக்கு ஒரு பெண்ணை மணம் செய்து தரக் கூடப் பெருந் தொகை செலவு செய்ய வேண்டியிருப்பது குடும்பங்களின் சீரழிவிற்குக் காரணமானதாக அமைந்து விடுகின்றது. குடும்பத்தைச் சேர்ந்த, முறையாக மணம்புரிந்து கொள்ளாத ஆண்கள் (இளையோர்) குடும்பத் தின் பொது நலனில் அக்கறை காட்டுவது வரவரக்குறைந்து வருகின்றது. குடும்பங்களில் வயது முதிர்ந்த பெண்களின் எண்ணிக்கை பெருகியபடி உள்ளது. இக் காரணங்களால் சராசரி நம்பூத்ரி ஆண் பெண் இருபாலாரும் பெரும் இன்னலுக்கு உள்ளானவர்களாக உள்ளனர். இப் போதைய நிலையில் மலபாரை சேர்ந்த இந்து சமயம் சார்ந்த அரசர்கள் தங்கள் விருந்தோம்பல் பண்பினைக் கைவிடாதவர்களாகக் காத்து வருவ தாலேயே சாதாரண நிலையிலுள்ள நம்பூதிரியினால் தன் உயிரை உடலோடு ஒட்ட வைத்தவனாக வாழ்க்கை நடத்த முடிகின்றது. கடவு ளிடத்து நம்பிக்கையும், அவன் அனைவருக்கும் வழிகாட்டுவான் என்ற உறுதியில் பிடிப்பும், விருந்தினரை உபசரிக்கும் பண்பாடும், உண்மை யில் தீவிர நாட்டமும், விதி முறைகளில் வழுவாது சடங்குகளை இயற்று தலும், பெருந்தன்மையான நடத்தையும் நம்பூத்ரிகளின் அடிப்படைப் பண்புகள் எனலாம். விதிப்படி அனைத்தும் நிகழ்ந்தே தீரும் என்பதில் இவர்கள் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கை எத்தகைய பெரிய இடுக்

: கண்கள் வந்துற்ற போதும் அவற்றைத் தாங்கிக் கொள்ளும் மனவலிமை யினை இவர்களுக்குத் தருகின்றது. தனது பரம்பரை வீடு நெருப்புப் பிடித்து எரிகின்றது எனவும், தனது ஒரே மகன் பாழுங்கிணற்றில் தவறி விழுந்து விட்டான் எனவும், மகப்பேற்றின்போது மனைவி இறந்து விட் டாள் எனவும் செய்தி கேள்விப்பட்ட நம்பூதிரி பரபரப்படையாதவனாகத் தன் வேலைக்காரனிடம்வெற்றிலைச் செல்லத்தை எடுத்து வா எனக் கூறிய நம்பூதிரி சாதியானைப் பற்றிய கதையினைப் பலரும் ரசித்துக் கூறுவதுண்டு. மாலையில் குளிப்பதும் காலை, நண்பகல், மாலை ஆகிய முப்போதும் வழிபாடு நிகழ்த்துவதும் இவர்களால் கண்டிப்புடன் கடைப்பி டிக்கப்படுகின்றன. இவர்கள் தங்கள் ஆன்மீக ஆற்றலைக் கொண்டு விளைவித்துள்ள அற்புதங்களுக்குச் சான்றாக வெம்பணாட்டு ஏரியின் இடையே உள்ள 'பாதிரா' மணல் எனப்படும் மணல் திட்டைக் கூறுவர். தரண நல்லூர் நம்பூதிரி பாடு திருவனந்தபுரத்திற்குப் பயணம் மேற் கொண்டிருந்த போது மாலைக் கடன்களைக் கழித்துச் சந்தி செய்தற் குரிய நேரம் நெருங்கிவிட்ட காரணத்தால் அவர் அந்த ஏரியினிடையே தன் மந்திர ஆற்றலால் அம் மணல் திட்டை வரவழைத்தார் எனக் கூறு வர். பிற உயிர்களிடத்து நம்பூத்ரிகள் குழந்தை மனம் படைத்த அருளு டையோராக நடந்து கொள்வர். மற்றவர்களை வஞ்சிக்கும் மனப்பான் மையற்றவர்களாகவே இவர்கள் மனிதரிடத்துப் பழகும் பண்பு குறிப்பிடத் தக்கது. கடுஞ்சொல் கூறுதல் என்பது நம்பூத்ரிகள் அறியாத ஒன்று. இவர்கள் கூறும் சொற்களுள் மிகக் கடுமையானது ஒருவன் தன்னைப் பழித்த பழிச் சொல்லைப் பழித்தவனே நூறு முறை ஏற்பானாக எனக் கூறுவதேயாகும். இன்று நம்பூத்ரிகள் மேற்கூறிய அனைத்துப் பண்புக ளும் வாய்க்கப்பெற்ற பழைய தூய்மையும் அடக்கமும் நிறைந்தவர்களாக உள்ளனர் எனக் கூற இயலாது. எனினும் பொதுவில் நமபூத்ரிகள் பழமை பாராட்டுவர்கள்; அனைவரும் போற்றும் சிறந்த பண்பினர் எனலாம். அவர்களின் இன்றைய பொருளாதார நிலை நம்பிக்கை ஊட்டக்கூடியதா க இல்லை. கேரளத்தின் பரம்பரை உடைமையாளர்களாக இருப்பதோடு மலபாரின் பெரும் பகுதியினைச் சன்மமாகப் பெற்றுள்ளனர் என்பது உண்மைதான். மாறிவரும் சூழலுக்கு ஏற்பப் புதியன புகுதற்கு இடங் கொடாத பிடிவாதம் அவர்களுடைய சீரழிவிற்கு வழிவகுத்தபடி உள்ளது. எளியவராய் இருத்தலாலும் காரியத்தில் கருத்தின்மையாலும் இவர்கள் வஞ்சிப்பவர்களுக்கும் ஏமாற்றுக்காரர்களுக்கும் ஆளாகிவிட்டனர் எனலாம். பெரும் புறக்கணிப்புக்கும், கடனுக்கும் உள்ளாகாத நிலையில் உள்ள பண்ணையினை இன்று மலபார் பிராமணர்களிடையே அதிலும் திருவாங்கூரில் காண்பது அரிதிலும் அரிதாகும்.'' திருவாங்கூரைச் சேர்ந்த அரசு ஆவணம் ஒன்று நம்பூத்ரிகளின் வழக்கமான

நடைமுறைகள் பற்றிக் கொண்டுள்ள கருத்துப்பற்றிக் கூறுவதாவது :- ''தன்னைப் புனிதமானவன் என இவன் நினைக்கின்றான். இவன் கூறுவன ஆணைகளேயாம். இவன் நடப்பதோ ஊர்வலத்திற் கொப்பானது. இவன் உண்பது அமிழ்தம். மனிதருள்ளே தன்னை யாரினும் புனிதமானவன் எனக் கருதும் இவன் தன்னை இந்த உலகத்தில் தெய்வத்தின் பிரதிநிதியாகக் கருதுகின்றான்.'' கர்க்காலில் சங்கராச்சாரியாரினால் ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கோயிலில் உள்ள பூசாரியும், சென்னைக்கு எட்டு மைல் வடக்கே திருவொற்றியூரில் உள்ள கோயில் பூசாரியும் நம்பூத்ரிப் பிரிவினைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது விதி. சங்கரர் பிறந்த இடம் திருவாங்கூரில் காலடி என்ற சிறிய கிராமம் ஆகும். ''நிகழ்ச்சிகள் நிறைந்த தன் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் தன் தாயாருக்கான இறுதிக் கடன்களை ஆற்றச் சங்கரர் தான் பிறந்த ஊருக்கு வர நேர்ந்தது. எவரும் அவருக்கு அப்போது உதவ முன்வரவில்லை. வேறுவழி ஏதும் இல்லாத காரணத்தாலும் உறவினர்களின் உதவியினைப் பெற இயலாததாலும் முறைப்படியாகப் பிணத்தை எரிக்கும் ஈமச் சடங்கினைக் கைவிட்டு வீட்டுத் தோட்டத்தில் ஒரு குழிவெட்டி அங்குத் தன் தாயின் உடலை அடக்கம் செய்தார். பெரியாற்றின் கரையில் அத்தோட்டத்தில் மதிற்சுவர்களிடையே அடர்ந்து வளர்ந்துள்ள மரங்களின் நடுவே மேலே கட்டிடம் அமைக்கப்பெற்ற அப்புதைக்குழியினை இன்றும் காணலாம்.'' எனத் திரு சுப்ரமணிய அய்யர் கூறுகின்றார்.

ஒவ்வொரு நம்பூதிரியும் வாழ்நாள் முழுதும் வேதங்களைக் கற்றபடியிருத்தல் வேண்டும் என்பதே பொதுவான கோட்பாடாகும். சமய நூல்களைப் படிக்க நாள்தோறும் அரைமணி நேரம் மட்டுமே செலவழிப்பதாகச் சிலர் ஒப்புக் கொள்கின்றனர். சிலர் இதற்காகச் சில மணி நேரங்களைச் செலவிடுகின்றனர். ஒவ்வொரு நம்பூதிரியும் ஏழு வயது முதல் பதினைந்தாம் வயது வரை கல்வியிலேயே முழு நாட்டம் செலுத்துகின்றான். ஓதுதலுக்குரிய இந்த எட்டாண்டுக் காலக் கட்டத்தில் வேறு எந்தப் பிரச்சினையும் அவன் வாழ்வில் குறுக்கிட அனுமதிக்கப்படுவதில்லை. வேத காலக் கல்வி பயிலும் இந்தக் காலக் கட்டத்தில் சூழ்நிலையின் கட்டாயத்தின் காரணமாகக் கல்வி தடைப்படுமேல் மீண்டும் இந்தக் கல்வியினை முதலிலிருந்து தொடங்கிப் பயின்றாக வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நம்பூதிரிச் சிறுவனை அவனுடைய தந்தையின் இல்லத்தில் நடைபெற்ற ஒரு கொள்ளை தொடர்பாக விசாரிக்க வேண்டி வந்தது. இந்த வழக்கில் அவன் தொடர்பு கொண்டவனாகச் சாட்சியம் வழக்கு மன்றத்தில்

அளிக்க வேண்டியதாகுமேல் அவன் தன்னுடைய வேதப் பயிற்சியினை மீண்டும் முதலிலிருந்து தொடங்க வேண்டிவரும் என்பதால் அவனை விசாரணைக்கு உட்படுத்தாமல் விட்டு விட்டனர். மற்றப் பிராமணப் பிரிவினரை விட நம்பூதிரிகளே வடமொழியில் மிகுந்த பயிற்சி உடையவர்கள். இவர்கள் ஆழ்ந்த வடமொழிப் புலமை பெறாதவர் களாயினும் வடமொழியில் வரையப்பட்டு வழி வழியாகத் தரப்பட்டு வரும் விதிகளால் மிகுதியும் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்துபவர்கள் இவர்களே.

முன்பு குறிப்பிட்டதைப் போல நம்பூதிரிகளுள் பெரும்பாலோர் நிலவுடைமையாளர்களாகவோ பண்ணையார்களாகவோ உள்ளனர். கோயிலில் பூசாரியாகப் பணியாற்றுபவர்களும் இவர்களிடையே உள்ளனர். செல்வர்கள் தங்களுக்கெனத் தனியே கோயில்களைப் பெற்றிருப்பதோடு அவற்றுக்காகப் பெருந்தொகையினையும் செலவிடுகின்றனர். மலபார் பகுதியெங்கும் பட்டர் பிராமணர்கள் அங்கும் இங்குமாய் அலைந்து திரிந்தவர்களாக, செல்வர்களான நம்பூத்ரிகளின் இல்லங்களிலும் கோயிலகங்களிலும் கோயில்களிலும் அன்னம் அளிக்கப்பட்டு உண்பிக்கப்படுவதைக் காணலாம். திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப்படாமலேயே வருகை தரும் இவர்கள் அங்குச் சிறுதொகையினைத் தட்சணையாகப் பெறுவர். எனினும் நம்பூத்ரிகள் அழைப்புப் பெறாமல் எங்கும் செல்லும் வழக்கம் இல்லை. நான் நேரில் கண்டறிந்தபடி பிராமணர்கள் தட்சணையாகப் பெறும் தொகைகளின் அளவுகள் வருமாறு:- நம்பூத்ரிக்கு எட்டணா எக்பிராந்திரிக்கு ஆறணா; பட்டர் பிராமணனுக்கு நான்கணா. நம்பூத்ரிகள் சிலபோது வட்டிக்கடை நடத்துவதும் உண்டு.

நம்பூதிரி, நம்பூதிரிபாடு என்ற இரு பிரிவுகளுள்ளும் பின்னவர்களே கண்டிப்புக்குப் பெயர் போனவர்களாக முன்னவர்களை விடத் தகுதியில் உயர்ந்து விளங்குகின்றனர். பாடு என்பதன் பொருள் அதிகாரம், ஆணை என்பதாகும். நம்பூத்ரிகள் அனைவரும் 'பாடு' என்ற இந்தச் சிறப்பு அடையினாலேயே விளித்து அழைக்கப்படுகின்றனர். ஆகையால் நம்பூத்ரிகளை இவ்வாறு பாகுபடுத்துவது முழுதும் சரியான பாகுபாடு எனக் கூறுவதற்கில்லை. இவ்விரு பிரிவினருக்கிடையே மண உறவுகள் நிகழத் தடையேதுமில்லை. உண்மையில் ஆத்யன், அசயன் என்ற பிரிவுகளே இவர்களிடையேயான உட்பிரிவுகள் எனலாம். ஆத்யன் பிரிவினரே தகுதியில் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இப்பிரிவினைச் சேர்ந்தவர்கள் பூசாரிகளாய் இருக்கும் வழக்கம் இல்லை.

கோயிலுக்குரியதான புரோகிதராதற்குரிய தகுதி உரிமைக்கும் மேம்பட்டவன் எனத் தன்னைக் கருதுகின்றான். தனிப்பட்ட ஒவ்வொருவரும் செய்து முடித்த யாகங்களுக்கு ஏற்ப அமைந்த உட்பிரிவுகளும் இவர்களிடையே உள்ளன. சோமயாஜி, அக்னி, ஊறாத்ரி, அதிட்டிரி என்பன போல அப்பிரிவுகள் அமையும். ஒருவன் இந்த மூன்று நிலைகளுள் முதல் நிலையினை அடைந்த பின் சில சடங்குகளைச் செய்து கொண்டவனாக அதிட்டிரிபாடு என்ற உயர்நிலையை அடைதல் கூடும். இந்தச் சடங்குகளை நன்கு கற்றறிந்த நம்பூத்ரி வைதிகர்கள் மூவர் முன்னின்று நடத்தி வைத்தல் வேண்டும். சதுர அமைப்பிலான ஒரு குழி தோண்டப்படும். இரண்டு அரசங்கட்டைகளுக்கு இடையே பஞ்சினை வைத்துக் கடைந்து நெருப்பினை உண்டாக்குவர். இந்த நெருப்பு அவுபாசன என அழைக்கப்படும். ஒருவன் மணம் முடித்துக் கொண்ட பின்னரே இச் சடங்கினை மேற்கொள்ளலாம். யாகங்களைச் செய்வதற்கு உரிமையுடைய சில கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் யாகங்கள் இயற்றி மேற்கூறிய மூன்று தனிப்பட்ட நிலைகளை அடைந்த பின்னரே இச் சடங்குகளைச் செய்து கொள்வதற்கு உரியவராகின்றனர். செய்யும் தொழில் அடிப்படையிலும் இவர்களிடையே பிரிவுகள் உள்ளன 1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இது தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது வருமாறு:- ''ஆத்யன்கள் வேதங்களையும் சாத்திரங்களையும் கற்பதில் ஈடுபட்டவர்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் பரான்னத்தை (மற்றவனுக்கு உரிய உணவு) உண்ணுதலும் மற்றவர்கள் ஈமச் சடங்குகளில் பங்கு பெற்றவர்களாகத் தட்சணை பெறுதலும் கூடா என விதிகள் உள்ளன. அத்உறன பலிச் சடங்கைச் செய்தவர்கள் அதிடிரிகள் எனவும், சில யாகங்களைச் செய்தவர்களே சோமயாஜிகள் அல்லது சோமத்திரிகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். திருமணம் முடித்துக் கொண்டவர்களே இத்தகைய வேள்விகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இத்தகைய வேள்விகளை இயற்றுவதில் இவர்களுக்கு நாயர்களின் உதவி இன்றியமையாது தேவைப்படும். பட்டாத்ரிகள் சாத்திரங்களைக் கற்றுப் போதிப்பதற்கு உரியவர்கள். ஓர்த்திகர் வேதங்களைக் கற்றுத் தருவதோடு குடும்பங்களுக்கான புரோகிதர்களாகவும் இருத்தற்குரியவர். வாத்தியார்கள் வேதங்களைக் கற்றுத்தருவதோடு தங்களிடம் பயிலும் மாணவர்களின் நடத்தையினையும் கண்காணிப்பதற்குரியர். சாதி விதிகளில் கட்டுக் கோப்பினை எச்செயல் மீறுகின்றது; எச் செயல் மீறவில்லை என்பன போன்ற ஐயப்பாடுகள் எழும்போது அவற்றைத் தீர்த்து வைக்கும் அதிகாரம் பெற்றவர்கள் வைதிகர்கள். கழுவாய் தேடிக் கொள்வதற்கான

சடங்குகளைப் பற்றி அறிவுறுத்தும் உரிமையினையும் இவர்களே பெற்றுள்ளனர். ஸ்மார்தா பழக்கவழக்கங்கள் தொடர்பான விதிகளை விளக்கும் ஸ்மிருதிகளையும் பிற சாத்திரங்களையும் சாதிப் பஞ்சாயத்துக்களில் தலைமை தாங்கி வழக்குகளைக் கேட்டுத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான தகுதி பெறும் நோக்கோடும் கற்றுத் தேர்வதற்குரியவர்கள். அரசரின் ஆணைப்படி நம்பூதிரிகளின் இடையே உள்ளதான நடத்தை தவறிய ஒழுக்கம் தொடர்பாக விசாரித்து அறியும் உரிமை பெற்றவர்களும் இவர்களே. கொச்சி, திருவாங்கூர் அரசர்கள் தங்கள் நாட்டு எல்லையில் நிகழ்த்தப்பட்ட நம்பூத்ரிகளின் குற்றச் செயல்களைப் பற்றி விசாரணை செய்வதற்குரிய அவையினைக் கூட்ட ஆணை வழங்குவர். மலபார் பகுதியில் நிகழும் இத்தகைய குற்றங்களை விசாரிக்க கள்ளிக்கோட்டை ' சாமோரினு'ம் பிற அரசர்களும் சபைகளைக் கூட்ட ஆணை வழங்கும் வழக்கமும் உள்ளது. தாந்திரிகள் கோயில்களில் உயர்ந்த நிலையில் பூசாரிகளாக உள்ளனர். பேயோட்டும் பணியினையும் இவர்கள் மேற்கொள்வர். இவர்களிடையேயும் ஆத்யன்கள் என்ற வகுப்பார் உள்ளனர். பரசுராமனிடமிருந்து படைக்கலங்களைப் பெற்றவர்களாகப் போர்த்தொழிலை மேற்கொண்ட காரணத்தால் சஸ்ட்ரங்கதர் தகுதியில் தாழ்ந்த பிராமணர்களாகவே கருதப்படுகின்றனர். வேதங்களை ஓத இவர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. எனினும் முதல் முறை என்ற வழக்கப்படி ஒரு முறை வேதங்களை ஓதவோ ஓதுவதைக் கேட்கவோ இவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். தங்கள் காலத்தையும் உழைப்பையும் போர் தொடர்பான பணிகளில் ஈடுபடுத்தும் இவர்களுக்கு வேதங்களைக் கற்றுக் கொள்ளப் போதுமான நேரமில்லாதிருந்தது போலும். மூசாடுகள் எனப்படும் வைத்தியர்கள் மருத்துவ நூல்களைக் கற்று மருத்துவராகத் தொழில் புரியக் கடமைப்பட்டவர்கள். மருத்துவத் தொழிலை மேற்கொள்பவர்கள் அறுவை மருத்துவத்தின் போது நோயாளிகளின் குருதியினைச் சிந்த நேரிடுவதால் இவர்களும் ஓரளவு தகுதியில் தாழ்ந்த பிராமணர்களாகவே கருதப்படுகின்றனர். இவர்களும் வேதங்களுக்கு முதல்முறை மட்டுமே உரியர். இப்பிரிவில் அஷ்டவைத்தியர் என்ற பெயரால் எட்டுக் குடும்பங்கள் உள்ளன. கிராமணியர் என்ற பிரிவினர் பரசுராமன் கட்டளைப்படி பிராமணர்களுடைய கிராமங்களைப் பாதுகாக்கும் மிகுந்த பொறுப்பு வாய்ந்த பணியினை மேற்கொண்டவர்கள். சத்திரியர்களுக்கு உரியதான இப்பணியினை மேற்கொண்டதால் இரட்சபுருஷர் எனப் பெயர் பெற்ற இவர்களும் தகுதியில் தாழ்ந்தவர்களாகவே கருதப்படுகின்றனர். ஓரில் பரிஷ மூசாடுகள் பரசுராமனிடமிருந்து சத்திரியர்களை இருபத்தொரு

தலைமுறை வேரறுத்த பாவத்தைக் தங்களுடையதாக ஏற்றுக் கொண்டவர்கள். இதற்கு ஈடாகப் பெருமளவு நிலத்தினை இவர்கள் பரசுராமனிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்றுள்ளனர். இதனால் இவர்களும் தகுதியில் தாழ்ந்தவர்களாகவே கருதப்படுகின்றனர். இவர்கள் வேதங்களை ஒரு முறை கூடப் படிக்க அனுமதிக்கப்படுவதில்லை.

திரு சுப்ரமணிய அய்யர் நம்பூதிரிகளிடையே ஐந்து உட்பிரிவுகள் இருப்பதாகக் கூறி அவற்றைப் பற்றிய விவரங்களைப் பின்வருமாறு தருகின்றார்:-

1. **தம்புராக்கள்:** இது சம்ராட் என்ற வடமொழிப் பெயரின் சிதைந்த வடிவமாகலாம். உலகியல் நடைமுறை, சமயநெறி ஆகியவற்றில் இவர்கள் பெற்றுள்ள தனித்த உரிமைகளை இப்பெயர் சுட்டுவதாகலாம். தென் மலபாரைச் சேர்ந்த கழப்பேஞ்சேரி, அழவஞ்சேரி ஆகிய இரண்டு தம்புராக்கள் குடும்பங்களுள் அழவஞ்சேரிக் குடும்பமே இன்று உள்ளது. சமயத்துறையில் ஆட்சியுரிமை பெற்றவர்கள் என்ற முறையில் இவர்கள் பின்வரும் தனிச் சலுகைகள் பெற உரிமையுடையவர்கள்.

1. சபைகளில் அனைவரினும் உயர்ந்த இருக்கை பெறுதல்-பத்ராசனம்
2. வேத விளக்கங்கள் தரும் உரிமை - பிரஹ்மவர்ஷச
3. பிராமணர்களுக்குத் தலைமைதாங்கல் - பிராம சம்ராக்யம்
4. அனைவராலும் மதிக்கப்படுதல் - சர்வமண்யம்.

ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை அழவஞ்சேரி தம்புராக்களைத் திருவாங்கூர் அரசர் அழைத்துப் பெரும் சிறப்புச் செய்தபின் சாஷ்டாங்கமாக அவர்கள் காலில் விழுந்து வணங்கி வழிபாடு செய்யும் வழக்கம் உள்ளது. இன்றும் மலபாரில் சம்ராட்கள் அருளாளர்களாகவே மதித்துப் போற்றப்படுகின்றனர். இவர்கள் மற்றப்பிரிவு, நம்பூதிரிகளை விட உயர்ந்தவர்களாகக் கருதப்படினும் ஆத்யர் பிரிவினரோடும் இணைந்த அகமணக்கட்டுப்பாடு உடைய வகுப்பாராக எண்ணப்படு கின்றனர்.

2. **ஆத்யர்:** எட்டுக் குடும்பத்தவர்களாக உள்ள இவர்கள் அஷ்டாத்யர் என்றழைக்கப்படுகின்றனர். கிருட்டிணா நதிக் கரையில் வாழ்ந்த பிராமண முனிவர் ஒருவரின் எட்டுப் பிள்ளைகளின் வழிவந்தவர்கள் இவர்கள் என்ற ஒரு வழக்கு உள்ளது. இவர்கள் குல முன்னோர்கள் தேடி வைத்துள்ள பூர்வ புண்ணியம் பல

தலைமுறையினருக்குப் பயன் தரத்தக்க அளவில் மிகுதியாக இருப்பதால் வாழ்வின் இறுதி இரண்டு தர்மங்களாகப் பிராமணர்கள் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய யாகம், வானப் பிரஸ்தம் ஆகிய இரண்டு ஒழுக்கங்களைக் கூட இவர்கள் மேற்கொள்ள வேண்டியதில்லை என்பர். எனினும் சமயநெறி தொடர்பான விதிகளை இவர்கள் கண்டிப்புடனேயே பின்பற்றியவர்களாக எப்பொழுது இந்து சமய நூல்களைப் பக்தி சிரத்தையுடன் ஓதி வருகின்றனர். தாந்திரிகர், ஆத்யர் ஆகிய இரு பிரிவினரும் கோயில் நடைமுறைகளை மேற்பார்த்தலைத் தங்கள் சிறப்புப் பணியாகக் கொண்டுள்ளனர். கோயில் பூசாரிகளைப் பணிபுரியும் பிராமணர்களின் குருக்களாக இவர்கள் கோயில் சடங்குகள் தொடர்பான அனைத்திலும் இறுதி முடிவு கூறும் உரிமை பெற்றவர்கள்.

3. **விசிஷ்டர்:** அக்னிஹோத்ரியர், பட்டாத்திரியர் என்ற இரண்டு பிரிவினர்களாக இவர்கள் உள்ளனர். சடங்குகளை இயற்றுபவர்களான அக்னிஹோத்ரிகளிடையே பின்வரும் மூன்று பிரிவுகள் உள்ளன.

அ. அக்கிட்டிரியர் - அக்னிசயநயாகம் நடத்தியவர்கள்
ஆ. அதிட்டிரியர் - அக்னியத்தைச் சடங்கு செய்தவர்கள்
இ. சோமாத்ரியர். - சில சோம வேள்வி புரிந்தோர்

பட்டாத்திரியர் மெய்ஞ்ஞானிகள். தொடக்க காலச் சாதிக் கட்டுப்பாடுகளின் நடைமுறையின் நியாயத்தை மெய்ப்பிப்பதைப் போல இவர்களுக்கு அக்னிஹோத்ரிகளின் உரிமைகளில் தலையிடுதல் கூடாது என்ற தடை விதிக்கப்பட்டுள்ளது. தர்க்கம், வேதாந்தம், வியாகரணம், மீமாம்சை பாட்டம், பிராபாக்ரம் ஆகிய நம்பூத்ரிகளுக்குரிய ஆறு நெறிகளையும் கற்றலைத் தங்கள் கடமையாக இவர்கள் மேற்கொள்கின்றனர். பாட்டம் என்ற சமயம் தொடர்பான நெறியின் அடிப்படையிலேயே இவர்கள் பிரிவின் பெயர் அமைந்துள்ளது. மலபாரில் சமய நெறி போதிப்பவர்களுள் முதன்மையானவர்களாக விளங்கும் இவர்களைப் பின்பற்றி ஒழுகும் சீடர்கள் எண்ணிக்கையில் பலராவர். கொச்சியில் உள்ள திருச்சூரிலும்,ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்ட மலபாரில் உள்ள திருநவையிலும் உள்ள இரண்டு வேத பாட சாலைகளின் வாத்தியார்களும் இவர்களின் சீடர்களுள் அடங்கியவராவர். சாதி விதிகளை வகுப்பதோடு அவற்றிற்கு விளக்கம் தரும் உரிமை பெற்றவர்களான ஆறு வைதிகர்களைத் தங்களிடையே கொண்டுள்ள இவர்களே மலபாரின் பிராமண சமூகத்தின் ஒழுக்க நடைமுறைகளைக் கட்டிக்காப்பவர்கள்.

4. **சாமான்யர்:** நம்பூதிரிகளின் உட்பிரிவினருள் இறுதியில் வைத்து எண்ணப்படுபவர்கள். வேதங்களை ஓதுதல் ஒன்றே இவர்கள் கடமை. மந்திரவாதம், கோயில் சடங்குகள் ஆகியவற்றை மேற் கொள்வதோடு அவதாரங்கள் தொடர்பான புனிதக் கதைகளை எடுத்துரைப்பதையும், சோதிடம் கூறுதலையும் இவர்கள் தங்களுக்கு உரிய தொழில்களாக மேற்கொள்கின்றனர்.

5. **சாதிமாத்திரர்:** மலபாரைச் சேர்ந்த அஷ்ட வைத்தியர் எனப்படும் முன்னணி வைத்தியர் குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் மொழியினைப் பயன்படுத்துவதில் ஏற்பட்ட குழப்பம் காரணமான தவறால் இவர்கள் பெயரளவில் நம்பூதிரிகள் எனப்படுகின்றனர். இப்பிரிவு நம்பூத்ரிகள் யட்ரகளிக்காரர் எனப்படுகின்றனர். இது சஸ்திரகளிக்கார் என்பதன் சிதைந்த வடிவாகும். தங்கள் குல முதல்வனிடமிருந்து படைக்கலப் பயிற்சியினைத் தொழிலாகப் பெற்ற பிராமணர்கள் இவர்கள் என நம்பப்படுகின்றது. பரசுராமனிடமிருந்து நேர்முகமாக நிலப்பகுதிகளைப் பெற்றவர்கள் கிராமணி நம்பூத்ரி அல்லது கிராமணி ஆத்யர் எனப்படுகின்றனர். இவர்கள் கடிமடரர் எனப்படுவர். தாங்கள் பெற்ற நிலப் பகுதியின் மீது எல்லா வகையான ஆட்சியுரிமையினையும் இவர்கள் பெற்றுள்ளனர். மருத்துவர்களாகவும், படைவீரர்களாகவும், நிலவுடைமை ஆட்சியாளர்களாகவும் விளங்கும் இவர்களுக்கு அப்பணிகள் காரணமாக வேதங்களை ஓத நேரமில்லை எனக் கூறப்படுகிறது. இவர்கள் முதல் முறை எனப்படும் வகையில் ஒரே ஒரு முறை மட்டும் வேதம் ஓதுதலை மேற்கொள்கின்றனர். காலப்போக்கில் சமய உணர்வு கொண்ட மக்கள் இதனைக் கருத்தில் கொண்டவர்களாக, நாட்டுப் பணிக்காக எனப் பரசுராமனால் சிறப்புப் பணிக்காக ஒதுக்கப்பட்ட இவர்களை நம்பூதிரி வகுப்பாருள்ளே கடைநிலையர் என ஒதுக்கிவிட்டனர். இதன் காரணமாக இவர்கள் வேதம் ஓதும் பணியில் ஈடுபடத் தகுதியற்றவர்கள் என்ற தடைக்கு உள்ளாக நேர்ந்தது எனலாம்.

பரசுராமனின் தெய்வீகத் தன்மையினை ஐயுற்றவர்களாக ஒப்ப மறுத்த நம்பூதிரிகள் பாபகிரஸ்டர். ஓரில் பரிஷ மூசுக்களும் பரசுராமனிடமிருந்து நிலத்தைப் அன்பளிப்பாக பெற்றவர்களே. நம்பிடியர், பன்னியூர் கிராமக்காரர், தாய்வழி உடைமை உரிமை பேணுவதன் காரணமாக அம்முவன் என அழைக்கப்படும் பய்யனூர் கிராமக்காரர் ஆகியோர் நம்பூதிரிகளின் பிற பிரிவினராவர்."

1901 கொக்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பதியப்பட்டுள்ளதாவது:- ''சமயம் தொடர்பான சடங்குகளை நடத்தவும் சமூக உறவுகள் தொடர்பான பிறவற்றிற்கும் எனச் சில பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ள சில தனி உரிமைகளே நம்பூதிரி பிராமணர்களிடையேயான உட்பிரிவின் அமைப்புக்கும் அவற்றி டையேயான ஏற்றத்தாழ்வுகளுக்கும் அடிப்படையாக விளங்குகின்றன. இதற்கான அடிப்படையாக எளிதில் நினைவில் கொள்வதற்கான நினைவூட்டு வாசகங்களாக அந்தத் தனி உரிமைகளைக் கீழ்க்கண்டவாறு இரு பிரிவுகளாக அமைத்துக் கொள்ளலாம்.

அ

1. ஏடு : (இது ஓலைச் சுவடி எனப் பொருள்படுவது. வேதங் களையும் சாத்திரங்களையும் ஓதுவதற்கும் ஓதுவித்தற்கும் உரிமை பெற்ற பிரிவு.
2. பிச்சை : (குடும்பங்களுக்கான புரோகிதர்களாக இரத்தலை மேற்கொண்டவர்) குடும்பப் புரோகிதர்களாகச் செயல்பட உரிமை பெற்றவர்கள்.
3. ஓது : (வேதங்கள்) வேதங்களைப் படிக்க உரிமை பெற்றவர்கள்.
4. அடுக்களை : (சமையலறை) பிராமணப் பிரிவினர் அனை வருக்கும் சமைக்கும் உரிமை பெற்றவர்கள்.
5. கடவு: (குளிக்கும் துறை அல்லது இடம்) மற்றப் பிராம ணர்கள் குளிக்கும் இடத்தில் குளிக்க உரிமை பெற்றவர் கள் அல்லது சமயச் சடங்குகள் மேற்கொண்டுள்ளவர்க ளைக் குளித்த பின் தொட்டாலும் தீட்டுக்கு உள்ளாக்காத வர்கள்.

ஆ.

1. ஆடு: புனிதச் சடங்குகளை நடத்தும் உரிமை பெற்றவர்கள்.
2. பிச்சை : (இரத்தல்) சந்நியாசியாகச் செல்லும் உரிமை பெற்ற வர்கள்.
3. சந்தி: (கோயிலில் குருக்களாக உள்ளோர்) கோயில்களில் குருக்களாகப் பணியாற்றும் உரிமை பெற்றோர்.
4. அரங்கு: (மேடை) நம்பூதிரிகளின் சஸ்டரங்கத்தில் பங்கு பெற்று நடிக்கும் உரிமை பெற்றோர்.
5. பந்தி: (உண்ணும் பந்தி) மற்றப் பிராமணர்களோடு ஒரே பந்தி யில் அமர்ந்து உண்ணும் உரிமை பெற்றோர்.

அ- பிரிவில் எண் 1-க்குரிய உரிமையினைப் பெற்றவர்கள் அ,

ஆ-பிரிவுகளில் உள்ள எல்லா உரிமைகளையும் பெறுதற்குரிய உரிமையினைப் பெற்றவர்கள். அ பிரிவில் எண் 2க்குரிய உரிமையினைப் பெற்றவர்கள், அ, ஆ பிரிவுகளுள் எண் 2 -முதலான எல்லா உரிமைகளையும் பெறுதற்குரியவர். அ- பிரிவில் எண் 3-க்குரிய உரிமையினைப் பெற்றவர்கள் அதே போன்று அ, ஆ - பிரிவுகளில் 3 இலிருந்தான எல்லா உரிமைகளையும் பெறுதற்குரியர். இது போன்றே மற்றப் பிரிவினரும் உரிமை பெறுவர். ஆ-பிரிவில் எண் 1-க்குரிய உரிமையினைப் பெற்றவர்கள் அ- பிரிவில் எண் 1-க்கு உரிய உரிமை தவிரப் பிற உரிமைகளைப் பெற உரியவர்கள். அதே போன்று ஆ- பிரிவில் எண் 2-க்குரிய உரிமைக்குரியவர்கள் அப்பிரிவில் 2-க்கும் கீழேயுள்ள பிற உரிமைகளுக்கும் அ-பிரிவில் எண் 3க்கும் அதற்கும் கீழேயுள்ள உரிமைகளுக்கும் உரியவர்கள். இந்த முறைப்படி மற்றப் பிரிவினர் உரிமைகளையும் முறையே அறிந்து தெளியலாம்."

மலபாரில் உயர்ந்த சாதியாரிடையே ஒருவன் உடலில் மயிர் மிகுதியும் பெற்றிருக்கின்றான் எனக் கூறுவது அவனை இழிவுபடுத்துவதாகும். எனினும் முகமதியர்கள் நீங்கலாகப் பிற சாதியாருள் நம்பூதிரிகளே உடலில் மயிர் மிகுதியும் பெற்றவர்களாக உள்ளனர். இளைஞனான நம்பூதிரி பளபளக்கும் சுருண்ட முடியினைத் தலையில் அடர்த்தியாகப் பெற்றிருப்பான். உச்சந்தலையிலிருந்து நெற்றிக்குச் சற்றே பின்னிடம் வரையான தலைப்பகுதியில் நீள்வட்ட வடிவத்திலான பகுதியில் இவர்கள் தலைமுடியினை வளர விடுகின்றனர். மலபாரில் இம்முறையே நாகரிகமாகப் பேணப்படுகிறது. அப்பகுதியில் அவ்வாறு வளரும் மயிரினை முடிச்சாக இட்டு முன் நெற்றியிலோ தலையின் பக்கத்திலோ விருப்பம் போல் தொங்க விடுவர். அம் முடிச்சினை ஒரு போதும் தலையின் பின்பக்கம் போட்டுக் கொள்வதில்லை. தலையின் எஞ்சிய பகுதியினையும் முகத்தையும் மழித்துக் கொள்வர். தலையில் முடிவளர்க்கும் பகுதியினைத் தவிர உடலின் எஞ்சிய பகுதிகள்- முதுகு நீங்கலாக- அவ்வப் போது மழித்துக் கொள்ளப்படும். கர்கடகம், கன்னி, கும்பம், தனு ஆகிய மாதங்களில் முடிந்த அளவு மழித்தலைத் தவிர்ப்பர். மழித்தலுக்கு நம்பூதிரி ஒரு நல்ல நாளைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். தலைக்குப் பொதுவாக இவர்கள் நல்லெண்ணெயினை தடவுகின்றனர். மனைவி கருவுற்று இருக்கும் போது நம்பூத்ரி அம்பட்டனிடம் செல்லாதவனாக முடி வளர்ப்பான். நான்கு மனைவியரை மணந்து கொண்டிருக்கும் ஒருவன் மழித்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படாதபடி அவன் மனைவியருள் எவரேனும் ஒருத்தி கருவுற்றவளாக இருந்தபடி இருப்பதால் அவன் சில சமயங்களில் நீண்ட தாடியுடையவனாகின்றான். நம்பூதிரிகளுக்கும்

அவர்களோடு ஒட்டுறவுடைய சாதியினருக்கும் பிற தாழ்ந்த சாதியினருக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு. நம்பூதிரிகள் கன்னக் கதுப்பில் அடர்ந்து வளர்ந்த மயிர்க்கற்றையினை உடையவர்களாக இருக்க மற்றவர்கள் அதனைப் பெறாதவர்களாக இருக்கக் காணலாம். மேலும் நம்பூதிரிகள் மார்பில் அடர்ந்து வளர்ந்த முடியுடையவர்களாக இருப்பர். கைகால்களில் உள்ள முடி வளர்ச்சியும் இத்தகைய பாங்குடையதே. நான் நேரில் கண்டாய்ந்த நம்பூதிரி ஒருவன் மார்பு எலும்புகள் உள்ள பகுதி தவிர உடம்பின் பிற பகுதிகள் அனைத்திலும் மயிர் உடையவனாக இருந்தான்.

மலபாரில் தற்பொழுது உள்ளவர்களான இனத்தவர்களின் ஒரு கிளையினராகவே நீலகிரியில் வாழும் தோடர்கள் இருத்தல் கூடும் என்ற கருதுகோள் தொடர்பாக முனைவர் டபிள்யூ எச். ஆர். ரிவர்ஸ் பின் வருமாறு எழுதுகின்றார்.* ''மலபாரில் உள்ள சாதியினர் அல்லது பழங்குடிகள் அனைவருள்ளும் தோடர்களுடைய வழக்குகளை ஒத்ததான எண்ணிக்கையில் மிகுந்த வழக்குகளைப் பெற்றிருப்பவர்கள் நம்பூதிரிகளே. திரு பாவ்செட் மலபாரில் உள்ள அனைத்து இனத்தவருள்ளும் நம்பூதிரிகளே மயிர் அடர்ந்தவர்கள் எனக் கூறியுள்ளதும் கருதுவதற்குரியதே. அவர் தான் நேரில் கண்டு ஆய்ந்த ஒரு நம்பூதிரி தோடன் போன்றிருந்தான் என்கிறார்.''

திரு. சுப்பிரமணிய அய்யர் குறித்திருப்பதாவது:- ''நம்பூதிரிகள் விரல் நகங்களை வளர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். சில சமயங்களில் ஓர் அடி நீளத்திற்கு மேலாக வளரும் அவை பல காரியங்களுக்குப் பயன்படுகின்றன. மற்றத் துறையில் உள்ளதைப் போலவே உடையணிவதிலும் நம்பூதிரிகள் பழைய மரபையே பேணுகின்றனர். இவர்கள் உள்ளூரில் நெய்யப்படும் துணிகளையே வாங்குகின்றனர். இந்தியாவின் கைத்தொழில் வளம் வெளிநாட்டுப் பொருள்களின் இறக்குமதியின் காரணமாக நசிந்து வருகின்றது எனக் கூக்குரலிடுபவர்கள் கேரளப் பிராமணர்களுடைய இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைக்காக அவர்களை வாழ்த்தலாம். ஆண்,பெண் இருபாலாரும் பட்டாடைகளையோ, சாயம் ஏற்றப்பட்ட துணிகளையோ அணிவதில்லை. இவர்கள் ஆடை தரிக்கும்முறை தனித்த இயல்புடையது. ஆண்கள் தட்டுக்கட்டு முறையில் வேட்டி உடுத்துவர். சமயச் சடங்குகளில் ஈடுபடாத நேரங்களில் நாயர்கள் போலவே

* தோடர், 1906. (The Thodas, 1906.)

உடுக்கும் இவர்கள் சமயச் சடங்குகளின் போது வேட்டியின் ஒரு பகுதியினைத் தொடைகளுக்கிடையே செலுத்தி ஒரு முனையினைப் பின்னால் சொருகிய பின் மற்றொரு முனையினைப் பல மடிப்புகள் கொண்டதாக முன்பக்கம் செருகிக் கொள்வர். மரத்தாலான செருப்புகளை அணியும் இவர்கள் தோலான செருப்புக்களைத் தொடுவதில்லை. நம்பூத்ரிப் பெண்கள் இரண்டு விதமாகச் சேலை அணிகின்றனர். ஆத்யன் பிரிவுப் பெண்கள் 'ஒக்கும் கொலுட்டும் வச்சுடுக்கை' என்ற முறையில் சேலை அணிவர். மற்றவர்கள் 'நொங்ரிங்குடுக்க' என்ற முறையில் சேலை அணிவர். சாயம் தோய்க்காத சேலைகளையே நம்பூத்ரிப் பெண்கள் அன்றாடம் பயன்படுத்துகின்றனர். ஒரு யக்ஞும் நடக்கும் போது பிராமணப்பெண்கள் அனைவரும் மற்றச் சடங்குகளின் போது போலவே புதிதாகப் புகுத்தப்பட்ட உடைகளைக் கைவிட்டுப் பழைய முறையிலான சாயம் தோய்க்காத உடைகளையே அணிவர். விரல்களின் மோதிரங்களும் அரை ஞாணில் இணைக்கப்பட்டதான எளசு என்ற அணியும் தவிர வேறு அணிகளை நம்பூத்ரிகள் அணிவதில்லை. காது குத்தப்பெற்றிருப்பினும் அக்னிஹோத்ரிப் பிரிவினைத் தவிர மற்றையவர்கள் காதில் கடுக்கண் அணியும் வழக்கமில்லை. அக்னிஹோத்ரிகள் குண்டலம் எனப்படும் நீளவாக்கிலான கடுக்கனை அணிகின்றனர். நம்பூத்ரிப் பெண்களின் அணிகள் பலவகையில் தனித்தன்மை வாய்ந்தவை. மிகுந்த செல்வ வளம் படைத்தவர்கள் கூடப் பொன்னாலான வளையல்களை அணிய அனுமதிக்கப்படுவதில்லை. உட்துளையினை உடைய பித்தளை வளையல்கள் அல்லது வெண்கல வளையல்களையே சாதாரணப் பிரிவு நம்பூதிரிப் பெண்கள் அணிகின்றனர். ஆத்யன் பிரிவுப் பெண்கள் வெள்ளியிலான வளையல்கள் அணிவர். காதில், சுட்டு என்ற தோடும் செறு தாலி எனப்படும் தனித்த வகையிலான கழுத்துச் சங்கிலி யினையும் பெண்கள் அணிகளாம். ஆத்யன் பிரிவுப் பெண்கள் காசுமாலை, புத்தாலி, கழுத்தில்ல என்ன கழுத்தணிகளோடு பொன்மணிகளாலான மூன்று மாலைகளையும் அணிகின்றனர். நாயர் பெண்களைப் போல நம்பூதிரிப் பெண்கள் மூக்குக் குத்திக் கொள்வதோ மூக்குத்தி அணிவதோ வழக்கமில்லை. நம்பூத்ரிப் பெண்கள் (கணவனை இழந்தவர்கள்) தாலியினைக் களைய வேண்டும் என்பதனைத் தவிர வேறு அணிகள் அணிவதற்கான கட்டுப்பாடுகள் எவையும் இல்லை. பச்சைக் குத்திக் கொள்ளும் வழக்கமும் இவர்களிடையே இல்லை. குளித்தபின் இவர்கள் நெற்றியில் சந்தனக் கலவையால் மூன்று கோடுகள் தீட்டிக் கொள்வர். ஆத்யப் பிரிவுப்பெண்களின் இவ்வாறு தீட்டிக்கொள்ளும் கோடுகள்

அம்புலிக்குறியாக (பிறை போல் வளைந்தனவாக) இருக்கும். நெற்றியில் குங்குமத்தையோ செஞ்சாந்தினையோ இவர்கள் ஒரு போதும் அணிவதில்லை. முகத்திற்கு மஞ்சள் பூசிக் கொள்ளும் வழக்கமும் இவர்களிடையே இல்லை. மலபாரைச் சேர்ந்த பிராமணர்கள் திருவிழாக் கொண்டாட்ட காலங்களில் மஞ்சளைப் பயன்படுத்துவதாகத் திரு பாவ்டெ் கூறியுள்ளார். திருவாங்கூர் பகுதியில் இது வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் காதுவரை சென்று நீண்டிருக்கும் படியாக கண்களுக்கு மை தீட்டிக் கொள்கின்றனர்.''

சில நம்பூதிரி ஆண்களின் அணிகளையும் அவர்கள் உடம்பில் தரித்திருந்த அடையாளங்களையும் திரு பாவ்செட் பதிந்துள்ளார். அவை வருமாறு:-

1. இடக்கையில் : முதல் விரலில் பெரிய பச்சைக்கல் பதித்த பொன் மோதிரம் ; மூன்றாம் விரலில் நான்கு மோதிரங்கள் ; சிறு விரலில் ஆனைவராகன் நாணயம் பொதியப்பட்ட மோதிரம்; இது அதிர்ஷ்டத்தைத் தரும் என நம்புகின்றனர். மோதிரங்களில் போலி ஆனைவராகன் நாணயங்களைப் பெரும்பாலும் பொதிந்து விடுகின்றனர். உண்மையான நாணயம் பதிக்கப்பட்ட மோதிரமே அதிர்ஷ்டம் தரக்கூடியது. வலக்கையில் : மூன்றாம் விரலில் இரண்டு மோதிரங்களும் ஒரு பவித்திரமும். பவித்திரம் ஆங்கிலேயர்களின் மணச் சடங்கு மோதிரத்தை ஒத்த பருமனுடையது. 8 என்ற எண்ணின் அமைப்புடைய இதன் இரு பக்கங்களிலும் புள்ளிகளாலான வடிவமைப்பு இருக்கும். எஞ்சிய பகுதிவேலைப்பாடு ஏதும் அற்றதாக இருக்கும். இது பொன்னாலானது. ஒவ்வொரு நம்பூதிரியும் சில சடங்குகளின் போது பவித்திரம் அணிந்திருக்க வேண்டியது கட்டாயமானது. ஆகையால் பொன்னாலான பவித்திரம் பெற்றிராதவர்கள் தர்ப்பைப்புல்லாலான பவித்திரம் அணிந்திருப்பர். தர்ப்பைப் புல்லாலான மோதிரம் அணிவதே சமய நெறிப்பட்டது என்பதனை அவர்கள் வற்புறுத்திக் கூறவில்லையாயினும் அதுவே உண்மையாகும் என நான் கருதுகின்றேன்.

2. பொன்னாலான சுரையினைக் கயிற்றில் கோத்து இடையில் கட்டியிருந்தனர். இதனுள் வெள்ளித் தகட்டில் பொறிக்கப்பட்ட இயந்திரம் அடங்கி இருக்கும். குளிர் காலத்தில் உடல் மிகுந்த சூடுடையதாக உணரும் இவன் அது தீய ஆவிகளின் தாக்கத்தின் விளைவாகலாம் என்ற எண்ணத்தால் மூன்றாண்டுகளாக இதனை அணிந்தபடியுள்ளான்.

3. பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஓர் அங்குல அகலமுடைய மான்தோல் பட்டிகையினை இடத் தோளின் மீது அணிந்துள்ளான். அதன் இரு முனைகளும் மான்தோல் கொண்டே இணைத்து முடிச்சிடப்பட்டுள்ளன. அவன் ஏழாண்டினனாக இருக்கும் போது அணிவிக்கப்பட்ட இதனை அவன் வேதங்களைக் கற்று முடியும் வரை பதினைந்தாம் ஆண்டினனாக ஆகும் வரை அணிந்திருப்பான். மோதிரம் எனப்படும் வளையம் ஒன்று அவன் கழுத்தில் கயிற்றில் கட்டப்பட்டு முன்பக்கம் தொங்கியபடி இருக்கும். அவன் ஆறு மாதக் குழந்தையாக இருந்த போது அவனுக்குப் பெயர் சூட்டிய சமயத்தில் அணிவிக்கப்பட்ட அதனை அவன் தனக்குப் பதினைந்து ஆண்டுகள் ஆகும் வரை அணிந்திருப்பான். அவனுக்குக் காதுகள் குத்தப்பட்டிருந்தன. அவன் இரண்டு தாயத்துக்களை அணிந்திருப்பான். அவை ஒவ்வொன்றோடும் சில சக்கரங்களும் (திருவாங்கூர் வெள்ளிக் காசுகள்) மந்திரம் பொறிக்கப்பட்ட ஒரு தங்கத் தகடும் இணைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றில் உள்ள ஒரு மந்திரம் ஒரு மாப்பிள்ளாவாலும் மற்றொன்றில் உள்ள மந்திரம் நம்பூத்ரியாலும் தயாரிக்கப்பட்டவை.

4. மஞ்சள் வண்ண வட்டத்தினிடையே கரும்புள்ளியோடு கூடிய பொட்டு நெற்றியின் நடுவில் திகழ்ந்தது. நெற்றியில் மூன்று படுகிடைக் கோடுகள் இடம் பெற்றிருந்தன. ஒவ்வொரு கரத்திலும் சிறு கோடும் மார்பில் ஒரு கோடும் இடம் பெற்றிருந்தன.

5. புருவங்களிடையே சிறிய கரும்புள்ளியும் அதன் அருகே இரண்டு மஞ்சள் வண்ணக் கிடைகோடுகளும் மார்பிலும் அத்தகைய கிடைகோடுகளுக்கிடையே கரும்புள்ளியோடு கூடிய அடையாளம்.

6. நெற்றியில் செம்புள்ளியும் வெள்ளைக் கோடுகளும், மார்புக் கூட்டின் நடு எலும்பின் மீதும் ஒவ்வொரு கையிலும் தோள்பட்டையின் முன்னும் சிவப்புக் கீற்று.

7. நெற்றிப் பொட்டின் நடுவில் சிவப்பிடப்பட்ட ஓர் அங்குல நீளமுள்ள நீள் வட்ட வடிவமான வெண்பழுப்பு நிறக்கோடு.

நெற்றியிலும் மார்பிலும் இடப்படும் கோடுகளைச் சந்தனக் குழம்பாலேயே இடுகின்றனர். பொன் தகட்டினில் பதிக்கப்பட்ட உருத்திராட்சத்தையும் சிலபோது இவர்கள் அணிகின்றனர்.

ஆண்கள் தங்கள் இடத் தோளில் அணியும் முப்புரி நூலாலான பூணூல் நாட்டுப் பருத்தி நூலால் திரிக்கப்பட்டது. தென்னிந்தியாவில் வாழும் மற்றப் பிராமணர்களைப் போல இவர்கள் அடிக்கடி பூணூலைத் திருமணத்திற்குப் பிறகு மாற்றிக் கொள்வதில்லை. இதனை ஒரு நல்ல நாளில் எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம். தென்னிந்தியாவில் மலபாருக்குப் புறத்தே வாழும் பிராமணர்கள் ஆண்டிற்கு ஒருமுறை ஒரு குறிப்பிட்ட நாளில் தங்கள் பூணூலை மாற்றிக் கொள்கின்றனர்.

நம்பூத்ரிகள் குடியிருக்கும் இல்லங்கள் பற்றித் திரு. சுப்பிரமணி அய்யர் பின்வருமாறு எழுதுகின்றார். ''நம்பூத்ரி ஒருவனது வீடு சுற்றுச் சுவர்களுக்கிடையே தனித்ததாக அமைந்திருக்கும். ஒவ்வொரு இல்லத்திற்கும் தனித்தான ஒரு பெயர் உண்டு. அதில் வாழ்கின்றவர்கள் அப்பெயராலேயே அழைக்கப்படுவர். அந்தக் குடும்பத்தினருக்கான இல்லப் பெயராக அது விளங்கும். மனை எனப்படும் அந்த இல்லப் பெயரையே பிராமணர்கள் பயன்படுத்துவர். சூத்திரர்களும் பிற சாதியாரும் அந்தப் பெயராலேயே மரியாதையோடு அந்த இல்லத்தில் வாழ்பவர்களை வழங்குவர். சில போது இரண்டு சொற்கள் இணைந்து இடமன இல்லம் என்பது போல வழங்கும். சுற்றுச் சுவருக்கு இடைப்பட்ட வீட்டைச் சுற்றியுள்ள இடத்தில் புளி, மா, பலா போன்ற மரங்கள் நிழல் செய்தனவாக வளர்ந்தோங்கி நிற்கும். சுற்றுச் சுவருக்கு இடைப்பட்ட பகுதி பரந்து படடதாகும். மலபாரில் வேறு எந்தச் சாதியாருடைய இல்லமும் நம்பூதிரிகளின் இல்லங்களைப் போன்று அழகிய பரந்துபட்ட தோட்டங்களைக் கொண்டனவாக இரா. பல வகை வாழை மரங்களையும் கிழங்கு, அவரை வகைகளையும் அவற்றிற்குரிய பருவங்களில் பயிரிடுவர். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு குளம் இடம் பெற்றிருத்தல் இன்றியமையாதது. பெரும்பாலான இல்லங்களில் இரண்டு அல்லது மூன்று குளங்கள் கூட அமைந்திருக்கும். அவற்றுள் அளவில் பெரியதனைக் குளிக்கவும் மற்றவற்றை குடிநீருக்காகவும் சமையல் காரியங்களுக்காகவும் பயன்படுத்துவர். வீட்டருகே குறிப்பிடத்தக்க சிறப்பிற்குரிய கோயில் இருக்குமானால் அதனோடு இணைந்த குளத்தில் சென்று குளித்தலையே நம்பூத்ரிகள் விரும்புவர். எனினும் தன்னுடைய வீட்டோடு இணைந்து தனக்குரியதாக இருக்கும் குளத்திலேயே அவன் வழக்கமாகக் குளிப்பான். குளிப்பதற்குக் கிணற்றினை இவர்கள் ஒருபோதும் பயன்படுத்துவதில்லை. முடிந்த அளவு வெந்நீரில் குளிப்பதை இவர்கள் தவிர்க்கின்றனர். தேங்கியிருக்கும் நீரில் மூழ்கிக் குளிப்பதே புனிதப்படுத்தும்

சிறப்பினைத் தருவது எனக் கருதுகின்றனர். வீட்டின் வடமேற்கு மூலையில் 'சர்பக்காவு' எனப்படும் பாம்புப் புற்று அமைந்திருக்கும். மலபாரைச் சேர்ந்த அனைத்து இல்லங்களிலும் இது இடம் பெறுவது இன்றியமையாததாகும். காவு என்பது செயற்கையாக அமைக்கப்பட்ட காடாகும். அல்லது ஒரு காலத்தில் மலபாரில் எங்கும் பரந்து பட்டிருந்த காட்டிடத்தின் அழிக்கப்படாத ஒரு பகுதியும் ஆகலாம். இவ்வாறு அமைந்த காவுவின் நடுவே கருங்கல்லால் செதுக்கப்பட்ட நாகலிங்கம் இடம் பெற்றிருக்கும். அவ்வாறு அமைக்கப்பட்ட நாகலிங்கத்தின் உயிர்பெற்ற பிரதிநிதிகளைப் போல அந்த இல்லங்களில் நாகங்கள் திரிந்தனவாக இருக்கும். சுற்றுச் சுவரின் நடுவில் மனை எனப்படும் இல்லம் அமைந்திருக்கும். பெரும்பாலும் இது மிகுந்த பொருட்செலவில் கட்டப்பட்டதாக அமைந்திருக்கும். அண்மைக் காலம் வரை இத்தகைய இல்லங்கள், ஓட்டு வீடுகளைத் தாக்கும் கோடை வெப்பத்தின் தாக்குதலுக்குக் காப்பாக மேலே கூரை வேயப்பட்ட அமைப்புடையனவாக இருந்தன. இந்த இல்லங்கள் சதுரமான வடிவமைப்புடையவை. எல்லாப் பக்கங்களிலும் பல அறைகளைப் பெற்றனவாக நடுவில் முற்றங்களை உடையனவாக இவை அமைந்திருக்கும் முன் வாசலின் கிழக்கு அல்லது மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள சாதாரண அறைகளைப் போல இரண்டு மடங்கு பரப்பளவு கொண்டதான அறையே வரவேற்பு அறையாகும். குடும்பத்தைச் சேர்ந்த திருமணம் ஆகாத உறுப்பினர்கள் இதனையே தங்கள் உறைவிடமாகக் கொள்வர். வீட்டின் மற்றப் பகுதிகளில் அயலார் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. வரவேற்பு அறைக்கு நேர் எதிர்ப்பக்கமாக முற்றத்திற்கு அப்பால் அறப்பரா எனப்படும் பெரிய மரப்பலகைகளிட்டுக் கட்டப்பட்ட அறை அமைந்திருக்கும். குடும்பத்தினரின் மதிப்பு வாய்ந்த பொருள்கள் அனைத்தும் அந்த அறையிலேயே பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். இந்த அறையின் இரண்டு பக்கங்களிலும் அமைந்திருக்கும் இரண்டு அறைகளில் ஒன்று குடும்பத்திற்குத் தேவையான பொருள்கள் போட்டு வைக்கும் கிடங்காகவும் மற்றொன்று படுக்கையறையாகவும் இருக்கும். வரவேற்பு அறையினை ஒட்டி அமைந்திருக்கும் சமையலறை நல்ல பரப்பளவு கொண்டது. கிழக்குப் பார்த்தபடி இருக்கும் வீட்டின் முன்வாசலினை ஒட்டிச் சதுரமான அகன்ற பரப்பளவுடைய திண்ணை இருக்கும். இதனை வந்தடைவதற்கான படிகள் கருங்கல்லால் அமைக்கப்பட்டிருக்கும். இந்தப் படிகள் வீட்டு வேலைக்காரர்கள் இரவில் தங்கிக் காவல்காக்கும் வாசலறையில் கொண்டுவிடும். இத்தகைய வீடுகள் மரத்தால் கட்டப்பட்டனவாகப் பரந்து பட்ட

அமைப்புடையனவாகும். இவை பழமையான அமைப்பினவாயினும் இவற்றுக்கே உரித்தான தனிப் பொலிவினைப் பெற்றிலங்குவன. வீட்டின் வடகிழக்கு மூலையில் உள்ள மாட்டுத் தொழுவத்தில் பசுக்களும் எருதுகளும் நிறைந்திருக்கும். நம்பூத்ரியின் வீட்டில் மேசை நாற்காலிகள் போன்ற தட்டுமுட்டுப் பொருள்கள் ஒரு சிலவே; மரப்பலகைகளாலும் தென்னை நாராலும் அமைக்கப்பட்ட கட்டில்கள் பல இருக்கக் காணலாம். பலா மரப்பலகைகளால் இணைக்கப்பட்ட ஆமை வடிவலான கூர்மாசனமே நம்பூத்ரிகள் விரும்பி அமரும் இருக்கை. வட்ட வடிவமானவையும் நீள்வட்ட வடிவமானவையும் ஆகப் பல மனைகளும் இவர்கள் இல்லங்களில் கிடக்கக் காணலாம். அவற்றில் அமர்ந்தே இவர்கள் உணவு கொள்வர். வீட்டிற்கு வரும் பிராமணர்களான விருந்தினரையும் அவற்றில் அமருமாறு வற்புறுத்துவர். நான் சங்கராச்சாரியாரின் ஊரான காலடிக்குச் சென்ற சமயம் ஒரு பிராமணன் இல்லத்திற்குச் சென்றேன். எனக்காக ஓர் இருக்கையைத் தேடித் தொல்லைப்பட வேண்டாம் என நான் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர்கள் பிராமணன் ஒருவனுடைய பிட்டம் ஒரு வீட்டின் தரையில் படுமானால் அது அந்த வீட்டிற்குத் தீங்கினைக் கொண்டு சேர்க்கும் எனப் பதிலிறுத்தனர். சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு மேற்கூரையோடு சேர்த்துத் தொங்கவிடப்பட்டிருக்கும் ஊஞ்சல்களைப் பிராமணர் இல்லங்களில் - அதிலும் சிறப்பாகப் படுக்கை அறையில் எங்கும் காணலாம். வழிபாட்டின் போது அமர்வதற்குரிய புள்ளிமான் தோல்களும் இவர்கள் பயன்படுத்தும் இருக்கைகளாம்."

நம்பூதிரிகள் தந்தையின் உடைமைகளை மகனுக்கு உரியதாகும் மக்கள் தாய முறையே பேணுகின்றனர். எனினும் இது முற்றுமாகப் பிற பிரிவினர் மேற்கொள்ளும் மக்கள் தாய முறையினை ஒத்தது எனக் கூற முடியாது. இவர்கள் தாய உரிமை முறை தென் இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதி சார்ந்த பிராமணர்களின் தாய உரிமை முறையினை ஒத்ததாகவும் இல்லை. அந்தப் பிராமணர்களிடையே குடும்பத்தைச் சேர்ந்த ஆண்மகன் ஒருவன் விரும்பும்பொழுது குடும்பச் சொத்தை அவர்கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ளும் வழக்கும் உள்ளது. நம்பூதிரிகளின் குடும்ப அமைப்பானது குடும்பச் சொத்துக்களைப் பங்கிட்டுக் கொள்ள இயலாததான மருமக்கள் வழிப்பட்டதான நாயர்களுடைய குடும்ப அமைப்பிற்கும் மக்கள் வழிச் சொத்துக்களைப் பங்கிட்டுக்கொள்ளும் கிழக்குக் கடற்கரைப் பகுதி சார்ந்தவர்களுடைய குடும்ப அமைப்பிற்கும் இடைப்பட்டதானதொரு அமைப்பு உடையது

எனத் திரு சுப்பிரமணிய அய்யர் விளக்குகின்றார். நம்பூதிரிகளிடையே குடும்பத்தில் மூத்தவனாக உள்ளவனே காரணவனாகக் குடும்பத்தின் சொத்துக்கள் அனைத்தையும் மேற்பார்க்கும் உரிமை பெற்றவனாவான். குடும்பத்தின் இளைய உறுப்பினர்கள் தங்கள் வாழ்க்கை நடத்தத் தேவையானவற்றுக்கு மேல் எதனையும் பெற உரிமையற்றவர்கள். குடும்பத்தில் வேறு ஆண்கள் இல்லையாயின் ஒரு பெண் கூடக் குடும்பத்தின் தலைமையினை ஏற்று நடத்தும் உரிமை பெறலாம். குடும்பத்தின் மூத்த ஆண்பிள்ளையே மணம் செய்து கொள்ளுகின்றான். நம்பூதிரிகளிடையே நடைமுறையில் உள்ளதும் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான விதிமுறைகள் மனு விதித்துள்ள கட்டளைகளுக்கு இணங்கப் பின்வருமாறு அமைந்துள்ளன எனலாம்:-

'' ஒருவன் முதல் மகனைப் பெற்றெடுத்தவனாகத் தந்தை என்ற தகுதியைப் பெற்றவுடன் மூத்தோருக்கு அவன் ஆற்ற வேண்டிய கடன்களிலிருந்து விடுபட்டவனாகின்றான். அந்தப் பிள்ளையே அவனுடைய உரிமைகள் அனைத்தையும் பெறுதற்குரியவன்.

'' தனக்குரியனவான கடமைகளை இவனுக்குப் பின்னர் பொறுப்பேற்கும்படி சுமத்தும்படியாகப் பிறந்த பிள்ளையே விதிப்படி முறையாகப் பிறந்தவனாகக் கருதப்படுதற்குரியவன். மற்றவர்கள் அனைவரும் இவனுடைய காம இச்சையின் விளைவுகள்.

''ஒரு தந்தை தன் மகனைப் பேணுவதனைப் போலக் குடும்பத்தில் மூத்தவன் தன் இளைய சகோதரர்களைப் பேணுதல் வேண்டும். அந்த இளையோரும் முறைப்படி தங்கள் மூத்த சகோதரனைத் தந்தையாகவே பாவித்து நடக்கக் கடமைப்பட்டவர்கள்.''

நம்பூதிரி ஒருவனின் மூத்த மகன் இறக்க நேர்ந்தால் அவனுக்கு இளையவன் மணந்து கொள்வான். இவ்விதி இப்படியாக மற்றப் பிள்ளைகளுக்குரியதாகவும் நீட்டிக்கப்படும். பெண்கள் தங்கள் கணவன் குடும்பத்துடன் சென்று தங்கி வாழ்வர். அவர்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளும் அக்குடும்பத்திற்குரியனவே. குடும்பத்தின் இளையவன் ஒருவன் தன் சொந்த முயற்சியால் தேடிய உடைமைகள் அவன் தான் வாழ்ந்த காலத்திலேயே வேறுவகையாக உரிமைச் சாசனம் செய்யாதிருப்பானாகில் அது தர்வாதைச் * சேர்ந்து விடும். இந்த

* தரவாது அல்லது தரவத்து:- மருமக்கள் தாய வழிச் சொத்துரிமை பேணும் குடும்பத்தில் ஒரு பெண் மூதாதையின் வழிப்பட்ட பெண்களின் சந்ததியினர்.

வழக்கத்தை மாற்றுவதற்காகச் சட்டங்கள் ஏதும் நம்மால் இயற்றப்படவில்லை. தரவானது ஒரு குடும்ப அமைப்பாகும் குடும்பத்தின் மூத்த ஆண்மகன் அதன் நிர்வாக உரிமைக்குரியவன். எனவே அவனுடைய மகன் அதன் நிர்வாக உரிமையினை வாரிசாகப் பெற வாய்ப்பில்லாதும் போகலாம். குடும்பத்தின் உடைமைகள் பங்கிடப்பட்டுச்சீரழிந்து போக இந்த ஏற்பாட்டில் வாய்ப்பில்லையாதலால் இதனைச் சிறந்த ஏற்பாடு என்றே கொள்ளலாம். செல்வத்தைப் பெருக்குவது ஒன்றையே குறிக்கோளாக இந்த அமைப்பு கொண்டிருப்பதால் குடும்பத்தில் மூத்தவனுக்கு மட்டும் மணம் புரிந்து கொண்டு குழந்தைகளை பெறும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. பங்கிட்டுப் பிரித்தல் கூடாது என்பதே அடிப்படைக் கோட்பாடு. நம்பூதிரி ஒருவன் குடும்பம் கால்வழி அற்றுப் போதல் அரிது. நம்பூதிரி ஒருவனின் உடைமைகள் கால்வழியற்றுப் போன காரணத்தால் அரசுடைமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதனை உறுதிப் படுத்தக்கூடிய சான்றுகள் இல்லை. சில சமயங்களில் சில குடும்பங்களில் சந்ததியினரை உண்டாக்குவதற்கான ஆண்கள் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அப்போது சர்வஸ்தனம் மணம் நிகழ்த்தப்படுகின்றது. இம் மணத்தில் வேறு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் அக் குடும்பத்தினனாகச் சேர்க்கப்பட்டு அக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு மணம் செய்து வைக்கப்படுகிறான். அவள் இந்துச் சட்டப்படி சொத்துரிமைக்காக அமர்த்தப்பட்ட பெண் வாரிசாக இருந்து தனக்குத் தன் கணவன் வழிப்பிறக்கும் குழந்தைகளிடம் குடும்பச் சொத்தை ஒப்படைக்கின்றாள். அவ்வாறு அக் குடும்பத்தில் சேர்க்கப்பட்டு அவளுக்கு மணம்செய்விக்கப்பட்ட கணவன் அக்குடும்பத்தைச் சேர்ந்தவனாக ஆகிவிட்டமையால் அவன் அக்குடும்பத்தின் மூதாதையருக்குச் சிரார்த்தம் செய்யும் உரிமையினையும் பெறுகின்றான். இந்தப் பொது விதிகளுக்கு விலக்காக வட மலபாரைச் சேர்ந்த பய்யனூரில் வாழும் பதினேழு குடும்பத் தவர்களும் மருமக்கள் வழித் தாய உரிமை பேணும்முறையினை கடைப்பிடிக்கின்றனர். இதனை வெறுப்புக்குரியதாகக் கருதும் பிற நம்பூதிரிகள் இவர்களோடு மண உறவு கொள்வதோ உடன் உண்ணுவதோ இல்லை. இவர்கள் உடம்பில் சத்திரிய இரத்தக்கலப்பு இருப்பதால் இவர்கள் சாதிக் கலப்புக்கு உள்ளானவர்களாகக் கருதப்படுகின்றனர்.

நம்பூதிரிகளிடை தத்து எடுத்துக் கொள்ளுதல் பத்துக் கையால் தத்து, சஞ்சமத தத்து, குடிவாழிச்ச தத்து என மூன்று வகைப்படும் எனக்

கூறும் திரு சுப்பிரமணிய அய்யர் அவற்றைப் பற்றிக் கூறுவதாவது:- ''இவற்றுள் முதலாவதே மரபு வழிப்பட்ட தத்தெடுத்தலாகும். பத்துகை என்பது இச் சடங்கில் பங்கு பெறும் தத்துப்பிள்ளையினைத் தரும் பெற்றோர், பெறும்பெற்றோர், தத்தெடுக்கப் படுவோன் ஆகிய ஐவரும் சடங்கில் பங்கு பெறுதலைக் குறிப்பதாகும். தத்துக் கொடுக்கும் குடும்பத்தவரின் கோத்திரமும் சூத்திரமும் பெறும் குடும்பத்தவரின் கோத்திரமும் சூத்திரமும் ஒன்றாக இருக்க வேண்டும். தத்துக் கொடுக்கப்படும் பிள்ளையின் உபநயனத்தை அவன் பெற்றோர் முன்பே நிகழ்த்தி முடித்திருக்க வேண்டும். இந்தத் தத்தினைக் குடும்பத்தைச் சேர்ந்த சபிண்டர் அல்லது சமானோதகரான இரத்தக் கலப்புடைய உறவினரின் அனுமதியின்றித் தருதல் இயலாது. இரண்டாவது வகைத் தத்தில் தத்துக் கொடுக்கப்பட்டவன் தன்னைப் பெற்றெடுத்த பெற்றோருக்குச் செய்ய வேண்டிய சிரார்த்தச் சடங்குகளைச் செய்யும் கடமையிலிருந்து விடுபடுகின்றான். இது சங்கராச்சாரியார் விதித்துள்ள விதிகளின் மரபு வழிப்பட்ட விதிகளுக்கு முரண்பட்டதாகையால் இதனைப் பின்பற்றுவோர் சிலரே. மூன்றாவதான தத்து முறை இரண்டாவது முறையினும் மரபு வழியினின்றும் விலகியது. அது கணவனை இழந்த கைம்பெண் ஒருத்தி குடும்பம் தழைப்பதற்காக ஒருவனைத் தத்து எடுத்துக் கொள்வது.''

நம்பூதிரிகள் மது மாமிசங்களைத் தொடுவதில்லை. அரிசிச் சோறும் கறி வகைகளுமே இவர்கள் வழக்கமாக உண்ணும் உணவாகும். உப்பேறி பலவகைக் காய்கறிகளை நறுக்கி நெய்யிட்டுத் தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணையில் உப்பு, வெல்லம், ஆகியன உடனிட்டு வதக்குவதாகும். பலாப்பழத்துடன் வேறு சில கறிகளைச் சேர்த்துச் சமைப்பது அவியல். இனிப்புப் பலகாரங்களையும் இவர்கள் சிலபோது உண்கின்றனர். கோதுமை, அரிசி ஆகியவற்றின் புட்டும், அரிசியினைப் பால், சர்க்கரை, ஏலம் முதலியன சேர்த்துக் காய்ச்சும் பாயசமும் சுவையுணவு வகைகளாம். ஒவ்வொரு வேளை உணவின் போதும் பப்படம் சேர்த்துக் கொள்ளப்படும். நம்பூதிரி உணவு கொள்ளும் முன் குளித்துத் தெய்வத்தை வணங்க வேண்டும் என்பது விதி. உண்ண உட்காருமுன் வீட்டு அடுப்பில் கொஞ்சம் சோற்றை யிடுவதோடு காக்கைகளுக்கும் சோறிடுவான். சோறு வாழையிலை யிலோ வெண்கல வட்டிலிலோ பரிமாறப்படும். தன்னோடு வேறொரு நம்பூதிரி உணவு கொள்ளும் போது வேறு ஆண்களோ குழந்தைகளோ தான் உணவு பரிமாறுவர். ஆண்களும் பெண்களும் தனித்தனியே உண்பதே இவர்கள் வழக்கம். ஒருவன் உண்டு எழுமுன் அவன்

மனைவி உணவு பரிமாறப்பட்ட இலையினையோ வட்டிலினையோ தொடுதல் வேண்டும். இதற்கான காரணம் வருமாறு:- ஒருவன் உண்ணாது விட்ட மிச்சம் எச்சில் எனப்படும். அதனை யாரும் உண்ணுதல் கூடாது என்பது விதி. உண்டு முடித்து எழுவதற்குச் சற்று முன் நம்பூதிரி இலையையோ வட்டிலையோ தன் இடக் கையால் தொடுவான். அப்பொழுது அவன் மனைவி அதனை வலக்கையால் தொடுவாள். இதனால் எஞ்சிய உணவு எச்சிலென்ற நிலையிலிருந்து மாறி அவன் மனைவி உண்ணக் கூடியதாகின்றது. சாத்திரங்கள் இல்லறத்தானாகிய நம்பூதிரி நாளும் நடுப்பகலில் ஒரே ஒரு வேளை மட்டுமே சோறு உண்ணலாம் என விதித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அவன் மாலையில் சோறு உண்ணல் கூடாது என்பது விதி. எனினும் அது பெரும்பாவம் அன்று ஆகையால் அவன் மாலையில் சோறு உண்ணவே செய்கின்றான். மாலையில் பழங்களையே அவன் உண்ணுதல் வேண்டும். பெண்களும் குழந்தைகளும் நாளும் இரண்டு அல்லது மூன்று முறை உண்பர். கைம்பெண் சந்நியாசியினைப்போல வாழ வேண்டும் என் விதிக்கப்பட்டிருப்பதால் அவள் நாளும் ஒரு முறையே உணவு கொள்கின்றாள். கிழக்குக் கரையைச் சேர்ந்த பிராமணனான பட்டர் அல்லது எம்பிராந்திரி சமைத்த உணவினை நம்பூதிரி உண்ணுவான். தென் மலபாரைச் சேர்ந்த பல உறுப்பினர் களைக் கொண்ட பெரிய குடும்பங்களில் பட்டர்களே பெரும்பாலும் சமையல்காரர்களாக உள்ளனர். நம்பூதிரிப் பெண்கள் சாதி ஒழுக்கங்களைக் கண்டிப்புடன் பின்பற்றுகின்றவர்கள். தங்கள் சாதியினும் தாழ்ந்த சாதியினைச் சேர்ந்த பட்டர் பிராமணர் போன்றோர் சமைத்த உணவினை அவர்கள் கையாலுங்கூடத் தொடமாட்டார்கள். டீ, காபி, முதலான பானங்களையும் இவர்கள் பருகுவதில்லை. சாத்திரங்கள் அவற்றை அனுமதிப்பதில்லையெனினும் சில நம்பூத்ரிகள் அவற்றை மறைவாகக் குடிக்கும் பழக்கம்உடையவர்களாக உள்ளனர். விரதம் மேற்கொண்டிருப்பவர்கள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, வட்டிலில் உண்பது ஆகியவற்றைத் தவிர்ப்பதோடு சில உணவு வகைகளையும் விலக்கி வைக்கின்றனர். சுரைக்காய், பனம் பழம், பனை வெல்லம் ஆகியனவற்றை நம்பூத்ரி ஒரு போதும் உண்பதில்லை. கர்க்கடக மாதத்தில் தர்பூசணியை உண்பதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தர்பூசணி உடல் நலத்திற்கு உகந்தது. ஆயுளை நீடிக்கும் என்பதாலேயே இதனைப் பயன்படுத்துகின்றனர்.

இவர்கள் உணவிற்காக ஒரு சிறு புழு, பூச்சி கூட உயிர் விடுவதில்லை. பருப்பும், பழமும், கீரையுமே இவர்களுக்குத் தேவை,

என்று கமொயென்ஸ் (Camoens) எழுதயிருப்பதைப் போல* நம்பூதிரிகள் எளிய உணவு, வகைகளே உண்பதாகத் திரு சுப்பிரமணிய அய்யர் கூறுகின்றார்.

''நெய் இவர்களுக்குப் பெருமளவில் தேவைப்படுவதில்லை. நல்லெண்ணெயினைச் சமையல் கட்டுள் நுழைய இவர்கள் அனுமதிப் பதில்லை. பாலினைக் கஞ்சியோடு சேர்த்துப் பிரதமன் எனக் குடிக்கின் றனரேயன்றித் தனித்துக் குடிப்பதில்லை. புழுங்கரிசி மாவில் தேங்காய்த் துருவலைக் கலந்து தயாரிக்கப்படும் கொழுக்கட்டையினை இவர்கள் விரும்பி உண்கின்றனர். இதனைப் பரசுராமன் பலகாரம் என்பர். இது முதன் முதல் பரசுராமனால் ஏற்படுத்தப்பட்ட சிற்றுண்டி வகையாகும். நடுப்பகலில் துணையான கறிவகைகளோடு அரிசிக் கஞ்சினையே நம்பூதிரி விரும்பிக் குடிக்கின்றான். குளிர் பானங்களை அபூர்வமாகவே குடிக்கின்றனர். குடிக்கும் நீரில் கொத்துமல்லி, சீரகம் முதலானவற்றை இட்டுக் காய்ச்சி அதனையே இனிய பானமாக்கி விடுகின்றனர்.'' குதிரையைப் புனித விலங்காகக் கருதும் இவர்கள் அதனை வளர்ப்பதில்லை. பசு, எருமை, நாய், பூனை ஆகிய விலங்குகளை வீட்டில் வளர்க்கின்றனர். கிளிகளை வளர்த்து அவற்றிற்கு வடமொழிச் சுலோகங்களைச் சொல்லப் பயிற்றுவிப்பதாகவும் கூறுகின்றனர்.

தென் மலபாரிலுள்ள சேல நம்பூத்ரிகளிடையே சில குடும்பங்கள் மந்திரம், பில்லிசூன்யம் ஆகியனவற்றைத் தொழிலாக மேற்கொண்டுள்ளன. இவர்கள் கலவரம் மிகுந்ததான திப்புவின் ஆட்சிக் காலத்தில் வலுக்கட்டாயமாக முகமதியர்களாக மதம் மாற்றப்பட்டவர்கள். இவர்கள் உடனே திரும்பவும் தங்கள் மதத்தினை மீண்டும் வந்து சேர்ந்து விட்டனர். எனினும் இந்த இழுக்குக் காரணமாக இவர்கள் நம்பூத்ரிகள் ஆகார் என்றே கருதுகின்றனர்.

எந்தச் சாதியினைச் சேர்ந்த மக்களாயினும் அவர்களிடமிருந்து மந்திரம், பில்லிசூன்யம் தொடர்பான உண்மையான தகவல்களைக் கேட்டுப் பெறுவது மிகமிகக் கடினமானதாகும். அதிலும் நம்பூத்ரிகளிடமிருந்து இவை தொடர்பாக எதனையும் அறிந்து கொள்ளுதல் அறவே இயலாது. இவர்களிடம் மந்திரம் தொடர்பான நூல்கள் உள்ளன எனினும் அதனைக் காட்டவோ அதில்

* The Lusiad

⊛ சேல என்பது மலபாரைச் சேர்ந்த மாப்பிள்ளா முகமதியர் அணியும் வேட்டி. சேல நாயர் என்ற பிரிவினரும் உளர். இச் சொல் சுன்னத்துச் சடங்கு எனப் பொருள் படுவது என்பர்.

உள்ளவைகளை விளக்கவோ முன்வர மாட்டார்கள். ஹர மேக்கல என்பது இவர்கள் அடிக்கடி மேற்கொள்ளும் பில்லிசூன்யச் சடங்காகும். மந்திரவாதி பின்வரும் முயற்சிகளில் ஈடுபடுவான் எனக் கூறப்படுகிறது.

1. அழித்தல் (மரணம்)
2. மற்றவர்கள் மனத்தை வசப்படுத்தல் (வசிகரணம்)
3. பேயோட்டும் மந்திரம் (உச்சாடனம்)
4. உணர்வறச் செய்தல் (ஸ்தம்பனம்)
5. நண்பர்களைப் பிரித்தல் (வித்வேசனம்)
6. காதலில் பிணைத்தல் (மோகனம்)

இவற்றுள் முதலாவதற்கான மந்திரப் பிரயோகத்தைப் பின்வருமாறு நிகழ்த்துவர். அழிப்பதற்குரிய எதிரியின் உருவத்தை ஒரு தகட்டில் (தங்கத் தகடே இதற்கு ஏற்றது) வரைந்து அதன் மீது சில மறைபொருளான வரைவுகளையும் வரைவர். அதன்பின் அதனை வைத்து அந்த உருவத்தில் உள்ளவருக்கு உடலில் காயமோ மரணமோ குறிப்பிட்ட ஒரு நேரத்தில் நிகழ வேண்டும் என மந்திர உச்சாடனம் செய்வர். அந்தச் சிறிய தகட்டை மற்றொரு தகடு அல்லது இலையில் பொதிந்து (இதுவும் தங்கத்தாலானதாக இருப்பது சிறந்த பயன் தரும்) அவ்வாறு தீங்கடைய வேண்டியவர் நடமாடும் பாதையில் புதைத்து விடுவர். அவன் அந்த வழியாகச் செல்ல நேரில் அந்த மந்திரம் அவன் மீது தாக்கம் செலுத்திக் குறிப்பிட்ட நேரத்தில் அவனைத் தீங்கிற்கு உள்ளாக்கும். உலோகத் தகட்டுக்குப் பதிலாகச் சில போது உயிரோடு உள்ள தவளை அல்லது ஓணானை ஒரு தேங்காய்ச் சிரட்டையிலிட்டு அதன் கண்களிலும் வயிற்றிலும் ஆணியினைச் செலுத்திப் புதைப்பர். அவ்வாறு புதைக்கப்பட்ட பிராணியின் உயிரும் மந்திரம் யார் மீது ஏவி விடப்படுகிறதோ அவருடைய உயிரும் ஒரு சேரப் போகும் என நம்புகின்றனர். வசிகரணம், வித்வேசனம், மோகனம் ஆகிய மாந்திரிகங்கள் செய்ய மந்திரித்த வெற்றிலை அல்லது காய்கறிகளை மாந்திரிகத்திற்கு உள்ளாக்கப்படுவர்களை எவ்வாறேனும் தின்னச்செய்வர். பேய் பிடிக்கப்பட்டவர்களைப் பின்வருமாறு அத்தீங்கினின்றும் நீக்குவர். இளம்பெண் ஒருத்தி நரம்புத் தளர்ச்சியால் உள்ளக் கோளாறுக்கு ஆளாகித் தீய ஆவிகளாலோ விருப்பம் நிறைவேறாதவர்களாக இறந்து போன முன்னோர்களின் ஆவியாலோ பீடிக்கப்பட்டிருப்பாளானால் உடுக்கைகளை அடித்தும் சங்குகளை முழக்கியும் வேறுபலவித அஞ்சத்தக்க ஒலிகளை உண்டாக்கியும் அவளுடைய நரம்புத் தளர்ச்சியினை மேலும் மிகுதியாகுமாறு செய்வர்.

அவ்வாறு தளர்ச்சிக்கு ஆளானவள் உரிய பக்குவ நேரத்தை அடைந்தவுடன் அவள் மீது தண்ணீரைத் தெளித்து அவளைத் தரையில் தீய ஆவிகளின் ஆட்சித்தெய்வமான துர்க்கையின் உருவத்தை நடுவில் அமைத்து வரையப்பட்டுள்ள இயந்திர வரைவுகளின் மீது அரிசியினை தூவுமாறு செய்வர். பின்னர் தீய ஆவியின் போலி உருவம் ஒன்று ஒரு செப்புப் பாத்திரலிடப்பட்டுப் புதைக்கப்படும். சில மந்திரங்களின் உதவியால் அனுமான் அல்லது காளியினை வழிபட்டு அத் தெய்வங்களின் உதவியினைப் பெற்று மறைபொருளான நெறியினைக் கடைப்பிடித்தவர்களாகப் புதைக்கப்பட்டுள்ள புதையல்கள் இருக்கும் இடத்தைக் கண்டறிவர். மகப்பேற்றின்போது உயிர் துறந்த ஒருத்தியின் உடல் எலும்பும் கறுப்புப் பூனையின் தோலும் மந்திர வாதிகளுக்குப் பயன்படுவன எனக் கூறுகின்றனர்.

தென் மலபாரைச்சேர்ந்த நல்ல குடும்பங்களுக்குரிய இரண்டு நம்பூதிரிகள் சிறந்த மந்திரவாதிகளாகவும் மலபாரில் அனைவரும் நன்கு அறிந்த குறும்பு செய்யும் தீய ஆவியான குட்டிச்சாத்தானைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்தவர்களாகவும் உள்ளனர். வீடுகளுக்குத் தீயிடுவதும், கால்நடைகளுக்குத் தீங்கு புரிவதும் மக்களைக் இழிவுறுத்துவதுமான தொல்லைகளைக் குட்டிச்சாத்தான் தரும். குட்டிச்சாத்தான் பற்றித் திரு சுப்பிரமணிய அய்யர் பின்வருமாறு எழுதுகின்றார்:- ''மலபார் பகுதிக்குரிய பேய்களுள் மிகவும் குறும்பு செய்யும் குட்டிப் பேய் இது. சிறு சங்கடங்களைத் தருவதோடு வசைமொழிகளைப் பேசவும் செய்யும். இது இரவினைப் போலக் கறுத்த நிறமுடையதாக நன்கு வளர்ந்த பன்னிரண்டு வயதுச் சிறுவனின் உருவ அளவினை ஒத்ததாக இருக்கும். சிலர் தாங்கள் அதனை நேரில் எதிரே வரப் பார்த்ததாகக் கூறுகின்றனர். இது தலையில் முன் குடுமியினை உடையதாக இருக்கும் என்கின்றனர். இது செய்யும் தீங்குகள் வருணனைக்கு அப்பாற்பட்டனவாக இருக்கும். சில நம்பூத்ரிகள் இவற்றை ஏவுகணையாகத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டவர்களாகத் தங்கள் விருப்பம் போல் மற்றவர்கள் மேல் ஏவி விடுவர். இவை ஏரியலி (arie) னைப் போல தங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் எசமானர்களுக்கு அடங்கிய வையாகச் சிறு பணிகளைச் செய்பவை. இவற்றால் துன்புறுத்தப் படுவோர் தாங்க இயலாத அளவு தொல்லைகளுக்கு உள்ளாவர். அவர்களுடைய உடை நெருப்புப் பற்றி எரியும்; உணவு மலமாக மாறி விடும்; பருகும் பானம் சிறுநீராகிவிடும்; சுற்றிலும் கற்கள் மழை பொழிவது போல விழும்; எனினும் அவை அவர்கள் உடல் மீது விழா;

படுக்கை முட்கள் நிரம்பியனவாக மாறும்; அவர்கள் பைத்தியம் பிடித்தவர்கள் போலாவர். இவ்வாறாக இவை இரவும் பகலும் தங்கள் தாக்குதலுக்கு உள்ளானவர்களுக்குத் தொல்லை தந்தபடி இருக்கும். இவ்வளவு மனம் வருந்தும்படியான குறும்புகள் நிகழ்த்தப்படினும் இதனால் பாதிக்கப்பட்டவர் எத்தகைய பெருந்தீங்கிற்கும் உள்ளாக மாட்டார். குட்டிச்சாத்தான் மனக் கலக்கத்தை உண்டாக்கிக் கதிகலங்க அடிப்பானேயன்றிப் பெருந்தீங்கு விளையும் படியாக எதனையும் செய்யான். செங்கணச் சேரியினைச் சேர்ந்த புகழ் பெற்ற பிராமணன் ஒருவன் நூற்றுக்கும் மேலான இத்தகைய சாத்தான்களைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதாகக் கூறுகின்றனர். வீட்டு உபயோகப் பொருட்களையும் மதிப்பு மிக்க நகைகளையும் வீட்டில் சாத்தான் காவலில் விட்டுச் செல்லலாம். திருடன் அவற்றைத் தொடத் துணியான். மற்றவர்கள் கண்ணுக்குப் புலனாகாத இந்தக் காவலன் தன் எசமானின் பொருள்களைக் கவனமாகக் காத்தபடி இருப்பான். எந்தப்பொருள்கள் வழியாக வேண்டுமாயினும் இவை நுழைந்து செல்லும் ஆற்றல் வாய்ந்தவை. இந்தப் பணிகளுக்கு ஈடாகச் சாத்தான் உணவைத் தவிர வேறு எதனையும் எதிர்பார்ப்பதில்லை. இவற்றுக்கு மிகுதியாக உண்ணத் தர வேண்டும். பட்டினி போட்டால் அவை தங்கள் கைவரிசையைத் தங்கள் எசமான் மீதே காட்டத் தொடங்கிவிடும். சாதாரணமாக இவற்றைக் கவனித்துக் கொண்டால் இவை தங்கள் எசமானர்களுக்கு அவர்கள் விருப்பம் போல் ஊழியம் புரியும். சாத்தான்கள் இயல்பாகவே தீங்கு புரிவதில் ஆர்வம் உடையவை. குட்டிச் சாத்தானை வைத்து ஆள்பவர்கள் அவற்றின் மீது தடையேது மற்ற அதிகாரம் செலுத்தும் உரிமை பெற்றவர்களாயினும் இவற்றைப் பயன்படுத்தித் தீச்செயல்களை நிகழ்த்துபவர்கள் மீதே இறுதியில் அந்தத் தீமைகள் வந்து சேர அவர்கள் சந்ததியற்றவர்களாகவோ அஞ்சத்தக்க வகையில் மனநோய்க்கும் உடல் துன்பத்திற்கும் ஆட்பட்டவர்களாக இறப்பர் எனக் கூறப்படுகிறது பேயினை வசப்படுத்தும் ஆற்றல் பெற்ற மந்திரவாதிகள் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பாலா மீதும் அவற்றை ஏவி மக்களுக்குத் தொல்லை தருவர். ஆண்களை விடப்பெண்களே எளிதில் இவர்கள் ஏவலுக்கு வசப்படுகின்றனர். பருவம்அடைவதில் தாமதம், மலட்டுத்தன்மை, இறந்து பிறக்கும் குழந்தைகளைப் பெறுதல் ஆகியன பொதுவாகப் பேய் பிடித்திருக்கும் பெண்களுக்கு வரும் இன்னல்களாம். இத்தகைய பேய்கள் தாங்கள் ஏறியுள்ள உடலை விட்டுச் செல்ல மறுக்கும். பேயோட்டுபவன் அவை தங்கி வாழத் தன் வீட்டில் இடம் தருவதாகவும் நாளும் படையலிட ஏற்பாடு செய்வதாகவும் உறுதி கூறிய பின்னரே அவை பிடித்துள்ளவரை விட்டு

விலக உடன்படும். பேயினால் பிடிக்கப்பட்டவர்கள் இதற்கு உடன்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானவர்களான பேயினை ஓட்டும் நம்பூத்ரி மந்திரவாதி பேய்க்குத் தந்த வாக்குறுதியினை நிறைவேற்ற அவனுக்குப் பணமும் நிலமும் கொடுத்து உதவுவர்''.

நம்பூத்ரி ஒருவன் எந்த முறையிலும் சத்தியம் செய்யவோ சூள் கூறவோ அனுமதிக்கப்படுவதில்லை. தான் சொல்வது உண்மை என்பதன் அடையாளமாக அவன் வலக்கை பெருவிரலுக்கும் சுட்டு விரலுக்கும் இடையே தன் பூணூலைப் பிடித்தவனாகத் தான் இன்னான் என்றும் தான் சொல்வது உண்மை என்றும் காயத்ரி மந்திரத்தைச் செபித்தவனாக உரைப்பான். தான் சொல்வதற்குச் சாட்சியாகப் பூமா தேவியை அவன் அழைத்து, தான் உரைப்பது பொய்யாக இருப்பின் தனனைத் தள்ளும்படி கேட்பான். எல்லாம் வல்ல கடவுள் சாட்சியாக என அவன் சத்தியம் செய்வதில்லை. சொத்துரிமை தொடர்பான வழக்கு மன்றங்களில் ஒரு சிக்கலைத் தீர்க்க நம்பூதிரிகள் ஒரு கோயிலின் முன் சென்று சத்தியம் செய்வது உண்டெனினும் அதனை மரபு வழிப்பட்ட ஒழுக்கத்திற்கு முரணானது என்றே கருதுகின்றனர்.

விரதம் மேற்கொள்வது பற்றி முன்பே சில செய்திகள் கூறப்பட்டுள்ளன. குழந்தைப் பேறு வேண்டுவோர் 'பயசகவனம் ' என்னும் விரதத்தை மேற்கொள்வர். ஹோமம் வளர்த்து முழு முதற் கடவுளுக்குப் பலி தருவர். ஒரு குழந்தைக்கு நீண்ட ஆயுளை வேண்டி அதன் பிறந்த நாளன்று ஆயுள் ஹோமம் செய்வர். இங்கு நம்பூதிரிகளுக்கும் அவர்களுக்குள்ளேயே தாழ்ந்த பிரிவினராக உள்ளவர்களுக்கும் இடையேயான ஒரு வேறுபாட்டை அனைவரும் தெரிந்து கொள்வது நல்லது. நம்பூதிரி மேற்கொள்ளும் விரதம் தன் விருப்பத்தை நிறை வேற்ற இறைவனை நோக்கி அருள் செய்யுமாறு வேண்டுவதாக அமையும். இம்முறை பற்றித் தாழ்ந்த பிரிவினர் ஏதும் அறியாதவர்களாகத் தங்கள் விருப்பம் முழுவதுமாக நிறைவேறும் வரை ஏதும உதவார். மிருத்யுஞ்சம் என்பதான மரணத்தினை வெற்றிகொள்வதான ஹோமம் ஒரு விரதமாக மேற்கொள்ளப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பாவத்தைப் போக்கவும் ஹோமம் நடத்துகின்றனர். அதன் முடிவில் பிராமணர்களுக்குத் தார ளமாகத் தானம் வழங்குவர். ருத்ராபிசேகம் என்ற விரதத்தை நிறைவேற் றுபவர்கள் புனிதப்படுத் தப்பட்ட நீரால் சிவனைக் குளிப்பாட்டுவர். ஒருவனுக்கு நிகழவுள்ள துரதிருஷ்டத்தினைப் போக்க இது நடத்தப் படுகின்றது. திங்கட் கிழமையே இதனை நடத்துவதற்குரிய நாள். அன்றே சிவன் பார்வதியுடன் கைலாயத்தில் மகிழ்ந்திருப்பதாக நம்புகின்றனர்.

மனைவி கருவுற்றிருக்கும் போது தலை, முகம், உடல் ஆகியவற்றின் மீது சவரக் கத்தி படாதபடி மயிரை வளர விடும் நம்பூதிரிகளின் பழக்கம் பற்றி முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. தனக்கு ஆண் சந்ததி இல்லாத நம்பூதிரி தன் மனைவி இறந்த பின் ஓராண்டு காலம் வரை இதே போன்று மயிரை வளர விடுவான். ஆண் சந்ததி இருக்குமாயின் இறந்து போன தாயாருக்குச் செய்ய வேண்டிய சிரார்த்த சடங்குகளின் பொறுப்பு மகனுடையதாகிவிடுவதால் அவன் அது போல மயிரை வளர விடுவான். மனைவி கருவுற்றிருப்பதன் காரணமாகவோ சிரார்த்த சடங்கு தொடர்பாகவோ விரதம் மேற்கொண்டிருப்பதாலோ ஒருவன் மயிரை வளர விட்டிருக்கும் காலம் தீட்சா காலம் எனப்படும். தீட்சையின் போது பிரமச்சரியத்தின்போது விலக்குவது போல் முருங்கைக்காய், பால், மிளகாய், பருப்பு, பப்படம் முதலிய உணவுப் பொருள்களை விலக்க வேண்டும்.

''குளிப்பது இந்துக்கள் மேற்கொள்ளும் சமயக் கடமைகளுள் முக்கியமானதாகும். பிராமணர்களுக்கு இது மேலும் முக்கிய மானதாகின்றது. குளிக்க ஏதேனும் காரணம் அகப்படுமா என நம்பூதிரிகள் எதிர்பார்த்தபடி காத்திருபபர். நம்பூதிரிகள் நாளும் இருமுறை குளிப்பர். இதற்கு மேல் அடிக்கடி குளிப்பவர்களும் இருக்கின்றனர். கிழக்குக் கடற்கரையில் சூரியன் உதிப்பதற்கு முன் குளிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. சூரியன் உதித்த பின் குளிப்பது சமயச் சடங்கொடு படாததாகின்றது. குளிப்பது தனியிடமாயினும் பொது இடமாயினும் அப்போது கோவணம் தவிர இடையில் வேறு ஆடை இருத்தல் கூடாது என்பர். இது சூத்திரக்காரர்களால் விதிக்கப்பட்டுள்ள ஆடையின்றிக் குளிக்காதே என்ற கட்டளைக்கு முரண்பட்டதாகும். குளிப்பது தொடர்பாக ஏற்படும் புனிதம் பற்றிய ஆழ்ந்த நுண் உணர்வுகள் ஒரு வியாதி போல ஒருவனைப் பிடித்துக் கொள்ள அவன் தண்ணீர்ப் பிசாசுக்கு அடிமைப்பட்டவனாகி விடுகின்றான். உடல்நலக் குறைவால் மிகுந்த இயலாமைக்கு ஆட்பட்டவனாகி ஆகிவிட்டாலன்றி ஒரு நம்பூதிரி நாளும் ஒரு முறையேனும் குளிக்காமல் இருக்க மாட்டான்''. எனத் திரு சுப்பிரமணிய அய்யர் எழுதுகின்றார். குளித்து முடிக்கும் முன் குளிக்கத் தொடங்கும் போது உடுத்தியிருந்த ஆடையினை வேறு ஓர் ஆடை அணிந்தவர்களாகத் தண்ணீரில் முறுக்கிப் பிழிவர். இந்தப் பழக்கம் காரணமாகப் பெருவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடைப்பட்ட தோல் பகுதி காய்ப்புக் காய்த்ததாகிவிடும். அவ்வாறு முறுக்கிப் பிழியும் போது துணியினை அப்பகுதிகளுக்கிடையே வைத்துப் பிடிக்கின்றனர். வடமலபாரில் நான்

நேரில் ஆய்ந்த ஒவ்வொரு நம்பூத்ரியின் கைகளிலும் இந்தக் காய்ப்பு இடம் பெற்றிருக்கக் கண்டேன்.

நம்பூதிரிகள் இந்து சமயச் சீர்த்திருத்தக்காரரான சங்கராச்சாரியார் வகுத்து வைத்துள்ள அறுபத்து நான்கு அனாச்சாரங்களில் கருத்துடையவர்களாக உள்ளனர். அந்த அனாச்சாரங்கள் வருமாறு:

1. குச்சிகளால் பல்துலக்கல்
2. ஆடை உடுத்தபடி குளித்தல்
3. உடுத்துள்ள ஆடையால் உடலைத் தேய்த்தல்
4. சூரியன் உதிக்குமுன் குளித்தல்
5. குளிக்காமல் சமைத்தல்
6. இரவில் எடுத்து வைத்த தண்ணீரைக் குடித்தல்
7. குளிக்கும்போது குறிப்பிட்ட ஒன்றையே பார்த்தல்
8. ஒரு சடங்கில் எஞ்சிய நீரை வேறு ஒரு காரியத்துக்குப் பயன்படுத்துதல்
9. ஒரு சூத்திரனைத் தொட்டபின் குளியாதிருத்தல்
10. சண்டாளனை நெருங்க நேர்ந்தால் குளியாதிருத்தல்
11. தீட்டுப்பட்ட குளம், கிணறுகளைத் தொட்டால் குளியாதிருத்தல்
12. விளக்கு மாற்றால் பெருக்கிய இடத்தில் நீர்தெளிக்குமுன் நடத்தல்
13. விபூதி தரியாதிருத்தல்.
14. மந்திரங்களை மற்றவர்களைக் கொண்டு ஓதச் செய்தல்
15. பழைய சோறு முதலியவற்றை உண்டல்
16. குழந்தைகள் மிச்சம் வைத்ததனை உண்டல்
17. சிவனுக்குப் படைத்ததை உண்டல்
18. கைகளால் சோறு பரிமாறுதல்.
19. பலிக்கு எருமை நெய்யினை இடுதல்.
20. சாவுச் சடங்குக்கு எருமைப் பாலும் நெய்யும் பயன்படுத்தல்
21. வாயில் நிறைய சோற்றைத் திணித்தல்
22. தீட்டின் போது வெற்றிலை போடுதல்
23. பிரம்மாச்சரிய கருமங்கள் முடியுமுன் நாயர் பெண்களோடு கூடுதல்
24. பிரம்மச்சாரி குருதட்சணை தராதிருத்தல்
25. சாலையில் நடந்தபடி வேதம் படித்தல்
26. கன்னிகைகளைப் பொருள் பெற்றுக் கொண்டு மணம் செய்து தருதல்.

27. விருப்பங்கள் நிறைவேற வேண்டி விரதம் இருத்தல்
28. மாதவிலக்கான பெண்களைத் தொட நேர்ந்த பெண்கள் குளியாதிருத்தல். (மாதவிலக்கான பெண்களைத் தொட நேரும் பெண்கள் குளித்தால் போதுமானது. ஆண்கள் பூணூலை மாற்றுவதோடு புனிதப்படுத்தும் சடங்கினை யும் மேற்கொள்ள வேண்டும். மலபாரைச் சேராத பிராம ணர்கள் பெண்கள் மாதவிலக்கின் போது ஒதுங்கி உட்கார்ந்திருக்க வேண்டும் என்று வைத்திருக்கும் விதி இவர்களால் கடைப்பிடிக்கப்படுவதில்லை.)
29. பிராமணர்கள் நூல் நூற்றல்.
30. பிராமணர்கள் தங்கள் உடைமைகளைத் தாங்களே துவைத்தல்
31. சத்திரியர் லிங்க வழிபாடு செய்தல்.
32. சூத்திரர்களிடமிருந்து சாவுச் சடங்கின் போது பிராமணர்கள் தானம் பெறுதல்.
33. தந்தை, தாய், பாட்டன், பாட்டி ஆகியோர் ஆண்டுச் சிரார்த்தச் சடங்கு செய்யாதிருத்தல்.
34. அமாவாசையின் போது சிரார்த்தப் பலியினை இறந்து போன மூதாதையர் ஆவிகளுக்காகத் தராதிருத்தல்
35. சாவு நிகழ்ந்த நாள் தொடங்கி எண்ணி ஆண்டு முடிவில் சாவுச் சடங்கை நிகழ்த்தாதிருத்தல்.
36. சாவுக்கான ஆண்டுச் சிரார்த்தம் முடியும் வரை தீட்சையில் இல்லாதிருத்தல்.
37. நட்சத்திரப்படி சிரார்த்தம் நடத்தாது திதிப்படி நடத்துதல்
38. தத்துப்பிள்ளை தன்னைப் பெற்றெடுத்த பெற்றோருக்குச் சிரார்த்தம் செய்யாதிருத்தல் (மலபாரைச் சேர்ந்த பிராமணர்களின் தத்துப்பிள்ளை தன்னைத் தத்தெடுத்தவர்களுக்கு மட்டுமே சிரார்த்தம் செய்வான். பெற்றெடுத்தவர்களுக்குச் செய்வதில்லை)
39. குழந்தை பிறந்த தீட்டு நீங்கு முன் சாவுச் சிரார்த்தம் நடத்துதல்
40. பிணத்தை ஒருவன் வீட்டு எல்லைக்கு வெளியே கொண்டு போய் எரித்தல்.
41. சந்நியாசிகள் பெண்களை நோக்குதல்
42. சந்நியாசிகள் உலக இன்பங்களை அனுபவித்தல்
43. சந்நியாசிகள் இறந்த பின் சிரார்த்தம் செய்தல்
44. பிராமணப் பெண்கள் தங்கள் கணவரைத் தவிர வேறு

ஆடவரைப் பார்த்தல்

45. பிராமணப் பெண்கள் வேலைக்காரியின் துணையின்றித் தனியே வெளிச்செல்லல்.
46. வெள்ளைத் துணிகளைத் தவிர வேறு வண்ணத் துணி உடுத்தல்
47. மூக்கினைக் குத்திக் கொள்ளுதல்
48. மது பருகுபவர்களைச் சாதி விலக்குச் செய்யாதிருத்தல்
49. அயல்புணர்ச்சியில் ஈடுபடும் பிராமணர்களைச் சாதிவிலக்குச் செய்யாதிருத்தல்
50. தீய ஆவிகளை வழிபடுதல். (அவ்வாறு வழிபடுவோர் கோயில்களில் மூதாதையர் வழிபாட்டினை நிகழ்த்துதல் கூடாது.)
51. சூத்திரரும் பிறரும் சிலைகளைத் தொடுதல்
52. ஒரு தெய்வத்திற்குப் படைத்ததை இன்னொரு தெய்வத்திற்குப் படைத்தல்
53. ஹோமப் பலி தராது திருமணச் சடங்கு முதலியவற்றை நிகழ்த்துதல்.
54. பிராமணர்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்திக் கொள்ளுதல்
55. பிராமணர்கள் ஒருவருக்கொருவர் வணக்கம் செய்தல்
56. பசுக்களைப் பலியிடல்
57. சிலர் சிவனுக்கும் சிலர் விட்டுணுவிற்கும் சமயச் சடங்குகளை நிகழ்த்தியவர்களாக ஒருவருக்கொருவர் இடையூறு நிகழ்த்துதல்.
58. பிராமணர்கள் ஒரு பூணூலுக்கு மேல் அணிதல்.
59. மூத்தவனைத் தவிர மற்றவர்கள் மணம் புரிந்து கொள்ளுதல்
60. இறந்தவருக்கான சடங்கில் படைக்கும் சோற்றுக்கு பச்சையரிசியினைப் பயன்படுத்துதல்.
61. சத்திரியர்களும் பிற சாதியினரும் தங்கள் தந்தையோடு பிறந்தவர்களுக்குச் சடங்கு நடத்தாதிருத்தல்
62. சத்திரியர்களிடையே பரம்பரை உரிமை தந்தையுடன் உடன் பிறந்தாருக்கு அல்லாமல் மற்றவர்களுக்குச் செல்லும் முறை
63. உடன்கட்டை ஏறுதல் (மலபாரைச் சேராத கைம் பெண்களைப் போலத் தலையை மழித்துக் கொள்ளுதல்)

மேற்கண்ட அனாச்சாரங்கள் தொடர்பாகத் திரு சுப்பிரமணிய அய்யர் எழுதுவதாவது: பிற பிரிவினரிலிருந்து நம்பூத்திரிகள் பல்வேறு

பழக்க வழக்கங்களில் வேறுபட்டவர்களாக உள்ளனர். இவர்கள் பழக்க வழக்கங்கள் கேரள ஆசாரங்கள் எனத் தனித்தன்மை வாய்ந்தனவாம். இவற்றுள் சில மற்றவர்களுக்கு அனாச்சாரங்களாகத் தோன்றலாம். கருத்தோடு அவற்றை ஆராயும் போது அவை சிறப்புக்குரிய ஆசாரங்கள் என்பது புலனாகும். இவர்கள் பழக்க வழக்கங்கள் அனாச்சாரங்களாகத் தோன்றுவதற்குக் காரணம் மற்ற இடங்களில் அவை ஆசாரங்களாக மேற்கொள்ளப்படாமைதாம்.

மேற்கூறிய அறுபத்து நான்கு அனாச்சாரங்களுள் அறுபது மலபாரைச் சேர்ந்தவர்களுக்கே உரியனவாம். அவற்றை பின்வருமாறு ஆறு பெரும்பிரிவுகளுள் அடக்கலாம்.

1. உடல் தூய்மை தொடர்பானவை - குளிப்பது பற்றியன.

2. உண்ணும் உணவு தொடர்பானவை - உணவைச் சமைப்பதும் உண்பதும் தொடர்பான விதிகள், சமய நெறியினை ஒப்பப் பேணப்படுகின்றன. உணவு ஏதும் கொள்ளாமல் பட்டினியாக விரதம் மேற்கொள்ளும் வழக்கம் மலபாரில் இல்லை.

3. தெய்வங்கள் மூதாதைகள் தொடர்பான வழிபாடு மூதாதையரின் சிரார்த்தச் சடங்குகளைக் கிழக்குக் கடற்கரையினைச் சேர்ந்தவர் சந்திரனின் ஸ்திதி (திதி)யைக் கணக்கிட்டு நடத்துகின்றனர்.. பிறப்புத் தீட்டினைத் தீவிரமாகப் பாவிக்கும் இவர்கள் அச் சமயத்தில் சாவுச்சடங்குகளைக் கூடத் தள்ளி வைப்பர். தன் தந்தைக்குச் சாவுச் சடங்குகளை நிகழ்த்தவுள்ள ஒருவன் பிறப்புத் தீட்டுக்குள்ளானவனாக இருப்பானாகில் அந்தப் பணிக்கு அருகதை அற்றவனாவான். தத்துப் பிள்ளையாக எடுத்துக் கொள்ளப்பட்டவன் இந்தியாவின் பிற பகுதிகளில் இருப்பதைப் போல அவனைப் பெற்றெடுத்த பெற்றோரின் சிரார்த்தச் சடங்குகளைச் செய்வதினின்றும் விடுபட்டவனாகான். சிவ, விட்டுணு, வழிபாட்டினைச் செய்யும் பிரிவினரிடையேயான சமயப்பூசல் மற்றப்பகுதிகளில் காணப்படுவது போல இவர்களிடையே இல்லை. உட்பிரிவுகளிடையேயான பூசலற்ற இந்து சமயம் ஒன்றினை வகுத்து அமைக்க வேண்டுமென்பதனையே சங்கராச்சாரியார் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். எத்தகைய சமூகத் தகுதி வேறுபாடும் பாராட்டாது அனைவரும் முப்புரியாலான ஒரே பூணூல் அணிவது நம்பூத்ரிகள் வழக்கம். கிழக்குக் கடற்கரையினருள் திருமணம் ஆனவர்கள் இரண்டு, மூன்று பூணூல்களை அணிகின்றனர். விளக்குமாற்றால் பெருக்கிய பின் நீர் தெளித்துத் தூய்மைப்படுத்துதல் இவர்களால் இன்றியமையாததாக மேற்கொள்ளப்படுகிறது. கிழக்குக்

கடற்கரையாரைப் போல அனைவருக்கும் பொதுவான சுடுகாட்டில் பிணத்தை எரிப்பதைப் போல எரிக்காமல் தனி உடைமையாக உள்ள இடங்களில் பிணத்தை எரித்தலை இவர்கள் மேற்கொள்கின்றனர்.

4. சமூகக் கட்டுப்பாடுகள்- அயல் புணர்ச்சியில் ஈடுபடு பவர்களைத் தள்ளி வைத்துத் தண்டித்துக் கற்புடையவர்களாக நடத்தலைக் கண்டிப்புடன் வற்புறுத்தினர். பெரியவர்களை முறையாகக் கும்பிடுதல், நமஸ்காரம் கூறுதல், தரையில் விழுந்து வணங்கி ஆசி பெறுதல் ஆகியன கூட வரையறைக்குட்பட்டனவாக இருந்தன. இந்த வழக்கம் மலபாரில் வாழ்பவர்களுக்கும் இந்தியாவின பிற பகுதிகளில் வாழ்பவர்களுக்கும் இடையேயான முக்கியமானதொரு வேறுபாடாகும். இது உயிர்கள் அனைத்திலும் உறைவது ஒரே ஆன்மா என்ற குறிப்பிட்ட பிரிவினருக்குரியதான கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த நடைமுறை ஆதல் கூடும்.

5. ஆச்சிரமங்கள்: பிராமணர்கள் பிரமச்சரிய ஆச்சிரமத்தை முறையாகக் குருவிற்குத் தட்சணை முதலியன செலுத்தி முடித்துக் கொள்ள வேண்டும் என்ற சிறப்பான விதியுள்ளது. ஆசுரம் என்ற மணமகளை விலை கொடுத்துப் பெறுகின்ற மணமுறை தடை செய்யப்பட்டுள்ளது. நம்பூத்ரிகளிடையே இன்றைய சமூகச் சூழ்நிலையில் இத்தடை பொருளற்றதாகின்றது. ஏழையரான பெண்களின் பெற்றோருக்கு இதற்கு மாறான, பெண்களுக்கு வரதட்சணை தரப்பட்டு மணம் செய்வித்தலான குடும்பங்களைப் பேரழிவிற்கு உள்ளாக்கும் பழக்கத்திற்குத் தடைவிதிக்கப்படுமானால் அது பெரும் உதவியாக இருக்ககூடும். மலபாரின் சிறப்புச் சட்ட விதிகளின்படி ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் மூத்தவனே மணம் செய்து கொள்ள உரிமையுடையவன். சந்நியாச ஆச்சிரமம் பற்றிய விதிகளைக் கேரளத்தைச் சேர்ந்த மனு ஏற்பாடு செய்துள்ளார். ஒரு சந்நியாசியின் கண்கள் ஒரு பெண்ணின் மீது ஒரு விநாடி நேரம் கூட நிலைத்திருத்தல் கூடாது. ஒரு பாதுகாப்பு நடைமுறையாக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த விதி மற்றப் பகுதிகளில் இல்லை. மற்றப் பகுதிகளில் மனிதனின் ஆசைகள் அடங்கி விடும்படியாக முறையாகப் பிற ஆச்சிரமங்களில் இருந்து பின்னரே சந்நியாச ஆச்சிரமத்தில் நுழைவதால் இந்தக் கட்டுப்பாடு வற்புறுத்தப்படுவதில்லை. பிற பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதைப் போல இறந்து போன சந்நியாசிகளுக்கு ஆராதனைச் சிரார்த்தச் சடங்கு இங்கு நடத்தப்படுவதில்லை. சந்நியாசியின் ஆன்மா கர்மத்திலிருந்து முழுதும்

விடுதலை பெற்றதாக ஆகிவிடுவதால் சாதாரணக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஜீவன்களுக்கு அதன் சந்ததியினர் அதன் ஈடேற்றத்தின் பொருட்டு நடத்தப்பட வேண்டிய கருமங்களைச் சந்நியாசிகளின் பொருட்டு நடத்துதல் வேண்டியதில்லை.

6. பெண்களின் நடத்தை பற்றிய விதிமுறைகள்:- பெண்கள் தங்கள் கணவர்களைத் தவிர மற்றவர்களின் முகத்தைப் பார்த்தலோ, துணையின்றித் தனியே வெளியே செல்லுதலோ கூடாது. எப்பொழுதும் வெள்ளைத் துணியினையே அணியவேண்டிய இவர்கள் மூக்குத்தி போட்டுக் கொள்வதற்காக மூக்குக் குத்திக் கொள்ளக்கூடாது என்ற விதியும் உள்ளது. இறந்த கணவனோடு சிதையில் நம்பூத்ரி விதவைகள் உடன்கட்டை ஏறுதல் புனிதக் கடமையாகக் கூறப்படவில்லை. தன்னுடைய ஆன்மாவின் விமோசனத்தை அவள் சந்நியாசி ஒருவரை அடைந்து தேடிக் கொள்ள வேண்டும் என்பதே அவளுக்கான அறிவுரையாகும்.

உலகியல் நடப்புகளுக்காக ஆண்டினை, மேற்குக் கடற்கரையினைச் சேர்ந்த பகுதியினரை இறுதியாக ஆண்ட மன்னர் 825-இல் அரேபியாவிற்குச் சென்றதிலிருந்து மலபார் கொல்லம் ஆண்டு எனக் கணக்கிடுகின்றனர். மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்பன கொல்லம் ஆண்டுக்கு உரிய மாதங்களின் பெயர்களாம். சமயம் தொடர்பான சடங்குகளைச் சந்திரன் நிலையின் அடிப்படையிலான மாதங்களைக் கொண்ட சாலிவாகன சகாப்தத்தினை ஆதாரமாகக் கொண்டு கணக்கிடுவர். அநதக் கணக்கின்படி ஆண்டுகளுக்கு உரிய மாதங்களாகச் சித்திரா, வைசாக, ஜேஷ்ட, ஆஷாட, சிராவண, பாத்ரபத, ஆஸ்வீஜ, கார்த்திக, மர்கசீர்ச, புஷ்ய, மாக, பல்குன என்பன பெயராகக் கொள்ளப்படுகின்றன. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அதிக மாதம் என ஒரு மாதத்தை இந்த ஆண்டோடு சேர்ப்பர்.

நம்பூதிரிகள் கொண்டாடும் திருவிழாக்கள் வருமாறு:-

1. சிவராத்திரி : மாக மாதத்தின் இறுதி நாளன்று சிவனை வழிபடும்விழா. இரவில் தூங்காது விரதமிருந்து சிவனுக்குப் பூசை செய்வர்.

2. உபாகர்ம : பிராயச்சித்தத்தின் வழி ஓர் ஆண்டின் பாவங்களை நீக்கிய பின் புதிதாகப் பூணூல் அணிந்து கொள்வதற்குரிய

நாள். பிராயச் சித்தச் சடங்கின்போது பசுவின் பால், தயிர், நெய், கோமயம், சாணம் ஆகிய ஐந்து புனிதப் பொருள்களின் கலவையினை உட்கொள்ள வேண்டும். சிராவண மாதத்தின் பதினைந்தாம் நாளன்று இச்சடங்கு நிகழ்த்தப்படும்.

3. நாக பஞ்சமி : சிராவண மாதத்தின் பஞ்சமி தினத்தில் பாம்புத் தெய்வத்தினை வழிபட்டுப் பாலால் குளிப்பாட்டும் நாள். இது தென்னிந்தியாவெங்கும் மேற்கொள்ளப்படுவது.

4. கோகுலாஷ்டமி : கிருஷ்ணன் பிறந்த நாளினை இரவில் தூங்காது விரதமிருந்து கொண்டாடுவர். சிராவண மாதத்தின் தேய்பிறை அஷ்டமியின்று இரவில் இவ்விழா கொண்டாடப்படும்.

5. நவராத்திரி: ஆஸ்வீஜ மாதத்தின் முதல் ஒன்பது நாள்கள் துர்க்கையின் வழிபாட்டுக்கென உரியவை.

6. தீபாவளி : நரகாசுரனைக் கிருஷ்ணன் வதைத்த நாளின் நினைவாக வட மலபாரில் சிறப்பாகப் பேணப்படும் விழா. ஆஸ்வீஜ மாதத்தின் இறுதி நாளன்று அனைவரும் எண்ணெய்க் குளியல் எடுப்பர்.

7. அஷ்டகலம்: குடும்பத்தைச் சேர்ந்த மூதாதையர்களுக்கு வழிபாடு நிகழ்த்திப் பிண்டமும் தர்ப்பணமும் கொடுக்கும் நாள். மார்க சீர்ச (தனுர்) மாதத்தின் அமாவாசையன்று இது நிகழ்த்தப்படும்.

8. விநாயக சதுர்த்தி : கல்விக்குத் தெய்வமான யானை முகனை வழிபடுதற்குரிய நாள். பாத்ரபதத்தின் நான்காம் நாளன்று சடங்கின் முடிவில் விநாயகம் உருவத்தைக் கிணற்றில் விடுவர்.

9. பூரம் : காதல் கடவுளான மன்மதனைக் களிமண்ணால் உருவமைத்து வைத்து மணமாகாத கன்னியர் மலர்களையிட்டுத் தொடர்ந்து ஏழு நாள்கள் வழிபடுவர். இறுதியில் அந்த உருவினை ஒரு சிறுதொகையோடு கூட ஒரு பிராமணனிடம் தருவர். அவன் அதனைக் கிணற்றில் விடுவான். இந்த வழிபாட்டில் காமன் உருவத்தினை அலங்கரித்த மலர்களைக் கன்னியர் ஒரு பலா மரத்தின் அடியில் இடுவர். மற்றப் பிராமணர்களிடையே இருப்பதைப் போல மணமாகுமுன் சிறுமியர் பூப்படைய நேரின் அதனை நம்பூத்ரிகள் இழிவாகக் கருதுவதில்லை. இந்த விழா மீன மாதத்தில் நடைபெறுகின்றது.

10. ஓணம்: செல்வர், எளியர் ஆகிய அனைவரும் மகிழ்ச்சியோடு கொண்டாடும் மலபாருக்குரிய பெருந்திருவிழா இது. மற்றவர்களுக்குத் தங்கள் நல்லெண்ணத்தைக் காட்டும் பருவமாகும்

இது. இந்த நாளுக்கு என்று தனித்த விளையாட்டுகள் உள்ளன. உறவினர்களுக்கும் தங்களைச் சார்ந்து இருப்பவர்களுக்கும் மஞ்சள் ஆடையினை வழங்குவர். மாபலிச் சக்ரவர்த்தி தன் நாட்டு மக்கள் மகிழ்வுடன் இருக்கின்றனரா என்பதனைக் காணவரும் நாளாக இது கருதப்படுகின்றது.

11. திருவாதிரை: பெண்கள் சிவனைச் சிறப்பிக்கத் தூங்காது விரதமிருந்து பூசை நிகழ்த்துவர். இது தனுர் மாதத்தில் நிகழும்.

12. விசு: சூரிய வருடத்தின் முதல் நாள். மலபாரில் இது மிக முக்கியமான திருவிழா நாளாகக் கருதப்படுகின்றது. தங்களின் எசமானர்களுக்கு இந்நாளில் அன்பளிப்புக்களை வழங்குவர். இந்த நாளன்று நம்பூத்ரி தான் புனிதமானதொரு பொருளை விழித்தவுடன் காணவேண்டும் எனக் கருதுகின்றான். அன்று தான் முதலில் காணும் பொருள் மங்கலமானதா அல்லது அமங்கலமானதா என்பதனைக் கொண்டு அந்த ஆண்டிற்குரிய அவனுடைய வருங்காலத்தை அவன் கணித்தறிவான்.

பின்வரும் திருவிழாக்களைத் திரு சுப்பிரமணிய அய்யர் குறித்துள்ளார்:

1. திரிக்கட்ட அல்லது ஜேஷ்ட நட்சத்திரம்: இது சிங்க மாதத்தில் நிகழ்வது. அன்று குடும்பத்தைச் சேர்ந்த திருமணமான ஆண்கள், பெண்கள் அனைவரும் சூரியன் உதிக்கும் முன் சமைத்து அதனை உண்பர். இந்த உணவு முந்தின நாள் சமைக்கப்பட்டதன்று எனினும் திரிக்கப்பட்ட பழையது என்றே இதனை வழங்குவர். சங்கரர் விதித்துள்ள விதிக்கு மாறாகச் சூரியன் உதிக்கும் முன் சமைக்கப்படும் உணவினை உண்ணும் வழக்கத்தின் அடிப்படைக் காரணம் புரியவில்லை.

2. மகம் அல்லது மக நட்சத்திரம்: கன்னி மாதத்தில் நிகழ்த்தப்படும் சடங்கு இது. இந்த நாளில் வீட்டில் உள்ள பசுக்களைச் சந்தனம் பூசிச் சிறப்பித்து மலர்களால் அலங்கரிப்பதோடு கூட அவற்றிற்குத் தின்னப் பலவகை இனிப்புகளையும் தருவர். வீட்டில் உள்ள பெண்கள் பத்து அல்லது பன்னிரண்டு நெல்மணிகளை எடுத்து அவற்றுக்கு எண்ணெய் பூசியபின் மஞ்சள் நீரில் குளிப்பாட்டி அவற்றை வீட்டின் பொருள்கள் வைக்கும் அறையில் பத்திரப்படுத்துவர். வீட்டில் மகம் நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள் இருப்பார்களானால் இந்தச் சடங்குகளை மேற்கொண்டு நடத்தும் பொறுப்பு அவர்களுடையதாகும். இது உண்மையில் தானியங்களை மிகுதியும் பெறவேண்டி மேற் கொள்ளப்படும் உலகியல் நோக்கிலான அறுவடைத் திருநாளாகும்.

3. துலாம் மாத முழுக்கு: மணமாகாத கன்னியர் இந்த மாதத்தில் நாள் தோறும் அதிகாலையில் நான்கு மணிக்குக் குளித்து விநாயகரை வழிபடுவர்.

4. கௌரி பூசை: விருச்சிக மாதத்தில் ஏதாவது ஒரு திங்கட்கிழமையில் இந்தப் பூசையினை நடத்துவர். இதனை 'அம்மியும் விளக்கும் தொடுக' என அழைப்பர். வீட்டில் உள்ள மணமான பெண்கள் அம்மியையும் குழவியையும் கழுவி ஒரு பித்தளைக் கண்ணாடியினை அம்மி அருகே வைப்பர். அதன்பின் அவர்கள் நலமான சிறந்த இல்வாழ்க்கையினைச் சிவனோடு நடத்தி வரும் கௌரியின் வழிபாட்டினை நிகழ்த்துவர்.

5. திருவாதிரை அல்லது ஆருத்ரா நட்சத்திரம்: தனுர்மாதத்தில் நோன்பு நிகழ்த்தப்படும். மக்கள் அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்தவர்களாக விழா கொண்டாடும் நாள் இது. இந் நாளுக்கு ஏழு நாள் முன்பு வீட்டில் உள்ள அனைவரும் அதிகாலையில் குளித்துச் சிவனை வழிபடுவர். இக்குளியல் மிகுந்த பனிமிகுந்த குளிர்ந்த காலை நேரத்தில் மேற்கொள்வதால் இது துடுத்துக்குளி-நடுங்கியபடியே குளித்தல் என வழங்கப்படுகிறது. திருவாதிரைக்கு முந்திய நாள் கடைவீதியில் வழங்கப்படும் எட்டங்நடி எனப்படும் எட்டுப்பொருள்கள் உண்ணப்படும். இவ்வாறு உண்ணுதலை மற்ற எந்த நாளிலும் இவர்கள் மேற்கொள்வதில்லை. திருவாதிரை அன்று சிவனை வழிபட்டவர்களாக அவ்வாறு வழிபாடு நிகழ்த்துபவர்கள் ஒரு போது மட்டுமே உண்பர். இரவு முழுவதும் கணவனும் மனைவியும் கர்மங்களுக்கும் பந்தங்களுக்கும் சாட்சியாக எரியும் நெருப்பின் முன் அமர்ந்திருப்பர். இதனாலேயே அக்னி சாட்சி என்ற வழக்கும் ஏற்பட்டது. அதன்பின் அவர்கள் நூறுக்கும் குறையாத அளவினதாக ஒரு கட்டு வெற்றிலையினை மெல்லுவர். இது 'கட்டு வெற்றிலை தின்னுத' எனப்படும். மணமானவர்கள் அன்றி மற்றவர்கள் வெற்றிலை போடுதல் கூடாதாகையால் இந்த விழா கணவன் மனைவியரிடையேயான அன்பினை உறுதிப்படுத்துவதாகக் கொள்ளப்படும்.

6. கர்க்கடக மாதத்திய அமாவாசை: இந்நாளன்று மாலையில் பலவகை இனிப்பு வகைகளைத் தயாரித்துக் குடும்பத்தினர் அதனை உண்ணும் முன் அவற்றில் கொஞ்சம் கொஞ்சம் விநாயகரின் வாகனமான எலிகளுக்கு உணவாக விநாயகருக்குத் திருப்தி ஏற்படுத்தும் வகையில் மேன் மாடத்தில் வைப்பர்.

ஒரு காரியத்தைத் தொடங்கும் போது வாய்ப்பாட்டு, வாத்ய இசை

ஆகியவற்றைக் கேட்பதோ விலைமகள், நாட்டிய மகள், கன்னி, சிவிகை, யானை, குதிரை, காளை அல்லது கன்று ஈன்ற பசு, தயிர், சிவப்பு நிறப் பச்சரிசி, கரும்பு, தண்ணீர்க்குடம், மலர்கள், பழங்கள், தேன், இரட்டைப் பிராமணர் ஆகியன எதிரில் வரக் காண்பதோ எடுத்த அந்தக் காரியம் இனிதே முடியும் என்பதற்கான நல்ல சகுனங்களாகும் என நம்பூதிரிகள் கருதுகின்றனர். காலையில் எழுந்தவுடன் ஒரு குடும்பி கெட்ட சகுனங்களைக் காண்பானாயின் அது அவனுக்கு அன்று முழுவதும் தொல்லைகளைத் தரும் என நம்புகின்றனர். இடப்பக்கமாகக் காணப்படும் காகம், வலப்பக்கமாகக் காணப்படும் கருடன், பாம்பு, பூனை, நரி, முயல், வெறும்பானை, புகையும் நெருப்பு, விறகுக்கட்டு, விதவை, ஒரு கண் குருடானவன், பெரிய மூக்குடையவன் ஆகியன கெட்ட சகுனங்களாகக் கொள்ளப்படும். பயணம் புறப்படும் நம்பூத்ரி மேற்கூறியவற்றுள் ஏதேனும் ஒன்றினைக் காண்பானாயின் வீட்டிற்குத் திரும்பிவிடுவான். அவ்வாறு திரும்பியவன் வீட்டின் கிழக்குப் பக்கத்துச் சுவரில் ஒரு பல்லியினைப் பார்ப்பானாயின் அவன் மீண்டும் தன் பயணத்தைத் தொடங்குவான். ஒரு முறை தும்முவது அன்றைக்கான நல்ல சகுனமாகும்; இரட்டைத் தும்மல் கெட்ட சகுனம். ஒருவன் கொட்டாவி விடும் போது கெட்ட ஆவிகள் வாயினுள் நுழைந்து விடும் என்பதால் அத்தகைய ஆபத்தைத் தடுக்கக் கொட்டாவி விடும் போதும் கொட்டாவி விட்டு முடியும் வரையிலும் விரல்களைச் சொடுக்கி நெட்டை முறித்தபடி இருப்பர்; அல்லது கையினை வாயின் முன் வைத்து வாயை மூடிக்கொள்வர். இந்த எண்ணமும் கொட்டாவி விடும் போது நெட்டை முறித்தலும் நம்பூத்ரிகளுக்கு மட்டும் உரிய வழக்கமன்று.

கடல் கடந்து செல்வதனை அடாத கொடும்பாவமாக நம்பூதிரிகள் கருதுகின்றனர். இதுவரை நம்பூத்ரி எவரும் இங்கிலாந்து சென்றதில்லை.

நாயர் சாதியினர் ஆறு அடிக்குள்ளாகவும், அம்பட்டர் பன்னிரண்டு அடிக்குள்ளாகவும் தியர் முப்பத்தாறு அடிக்குள்ளாகவும் மலயன்கள் அறுபத்து நான்கு அடிக்குள்ளாகவும் புலையர் தொண்ணூற்றாறு அடிக்குள்ளாகவும் நம்பூதிரிகளை நெருங்கி விடுவார்களானால் நம்பூதிரி கள் தீட்டுக்கு உள்ளாவர். தென்னிந்தியாவில் மலபாரே பழைய மரபுகளில் மிகுதியும் ஊறிப்போயிருக்கும் பகுதியாகும். உயர்ந்த சாதியினைச் சேர்ந்தவன் தெருவில் போகும் போது அவ்வப்போது உரக்கக் கத்தியபடி செல்வான். தாழ்ந்த சாதியினைச் சேர்ந்தவர்கள் தன்னைத் தீட்டுக்குள்ளாக் காதவர்களாக ஒதுங்கி நின்று வழிவிட

வேண்டும் என்பதற்காகவே இவன் இவ்வாறு கத்தியபடி செல்கிறான். அதே போன்று தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்களும் தீட்டுக்கு ஆட்படுத்தும் தனது வருகையினை மற்றவர்கள் அறியவும் கத்தியபடியே தெருவில் செல்வான். உயர்ந்த சாதியைச் சேர்ந்தவன் குரல் காதில் விழுந்தவுடன் அவன் பாதையிலிருந்து ஒதுங்குவான். மலபாரில் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் சாலையில் செல்லாமல் சாலையை ஒட்டியவர்களாக ஒதுங்கி நடந்தபடி இருப்பதை ஆங்காங்கே காணலாம். அவர்கள் பாதையோடு நடக்க விரும்பமாட்டார்கள். இதற்கு அவர்களை மற்றவர்கள் பாதையை விட்டு விலகிச் செல்ல வேண்டும் என வற்புறுத்துவது காரணமாகாது. நாயர்களையும், நம்பூத்ரிகளையும் போலவே இவர்களும் வழக்கத்திற்கு ஆட்பட்டவர்களாகவே இவ்வாறு செயல்படுகின்றனர். எனினும் இத்தகைய வழக்கங்களும் தற்போது மாறி வருகின்றன.

நம்பூதிரிகள் திருமணம் தொடர்பாக மூன்று முக்கிய விதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. மணமக்கள் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் கூடாது. தந்தை வழியிலும் தாய்வழியிலும் அவர்கள் எவ்வகையிலும் உறவினர்களாக இருத்தல் கூடாது. மணமகன் குடும்பத்தில் மூத்தவனாக இருத்தல் வேண்டும். கம்ஷ, காசியப, பரத்வாஜ, வத்சய,கௌண்டின்ய, அத்ரி, தட்ரி ஆகிய ஏழு கோத்திரங்களே முதலில் இவர்களிடையே இருந்ததாகக் கூறுவர். பிற கோத்திரங்கள் இவற்றிலிருந்து கிளைத்தனவே. நான்காவது தலைமுறைக்குப் பின் இருவரிடையேயான உறவின் தொடர்பு அறுந்து விடுவதாகக் கூறுவர். இதனைச் சிலர் மறுப்பர். மணமகளுக்கான வரதட்சணை பெருந்தொகையாகவே இருக்கும். மணமகள் திருமணத் திற்குப் பின் தன் கோத்திரத்தைத் துறந்தவளாகத் தன் கணவன் கோத்திரத்தைச் சேர்ந்தவளாக ஆகிவிடுகின்றாள். பெண்கள் எத்தகைய பழிப்புக்கும் ஆட்படாமல் மணமாகாதவர்களாக இருக்கலாம். மலபாருக்குப் புறத்தே உள்ள பெண்கள் இவ்வாறு மணமாகாதவர்களாக இருப்பார்காளாயின் மிகுந்த பழிப்புக்கு உள்ளாவர் என்பதனைச் சொல்ல வேண்டியதில்லை. மணமாகாதவர்களாக இறக்கும் நம்பூத்ரி சிறுமியரும் பெண்களும் திருமணத்தின் சாயல் ஏதும் அவர்கள் மீது படாதபடி இவ்வுலகத்தை விட்டுச் சென்றுவிட அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் இறக்கும்போது மணம் தொடர்பான சில சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. தாலி கட்டப்படுகிறது. இதே போன்று மணமாகாது இறக்கும் தோடர் சிறுமிகள் மணச்சடங்கு நிகழ்த்தப்பட்ட பின்பே புதைக்கப்படுகின்றனர். மற்றப் பிராமணப் பிரிவினரிடையே

வழக்காக உள்ளதான குழந்தை மணம் நம்பூதிரிப் பிராமணரிடையே வழக்கில் இல்லை. ''நம்பூதிரிகளிடையே குழந்தை மணம் வழக்கில்லை என உறுதியாகக் கூறுவதற்கில்லை. சிறுமியர் பூப்படையும் முன் மணம் செய்விக்கப்படுகின்றனர். ஓரிரு திருமணங்கள் குழந்தை மணங்களாக நடைபெற்றுள்ளன.'' என நீதிபதி கே. நாராயண மாரார் கூறியுள்ளார்*. ஒரு சிறுமி பத்துவயதினை அடையும்போது அவளுடைய தந்தை அவளுக்கு ஏற்ற கணவனைத் தேடத் தொடங்குகின்றார். மணமகன் சொத்துக்களுக்கே திருமண உறவில் சிறப்பான இடம் தருவர். அந்த மணஉறவால் குடும்பத்துக்கு விளையப் போகும் நன்மைகளைப் பற்றி நன்கு சிந்திப்பர். மலையாளிகளிடையே பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற இளைஞன் ணச் சந்தையில் நல்ல வாய்ப்புக்களை எதிர்ப்பார்க்கலாம். நம்பூதிரிகள் இதனை மணமகனுக்கு உரிய சிறந்த தகுதியாகக் கருதுவதில்லை. பெண்ணின் தந்தை, ஒருவனை ஏற்ற மணமகன் என முடிவு செய்தபின் அவனுடைய சாதகத்தைப் பெற்று வாத்தியாரிடம் சென்று தன் மகளுடைய சாதகத்துடன் பொருந்துகின்றதா எனப் பார்ப்பான். வாத்தியார் சாதகமான பதில் உரைப்பாரானால் மணமகனின் தந்தையினை ஒரு நல்ல நாளில் வீட்டுக்கு அழைத்துச் சில நண்பர்களை உடன் வைத்துக்கொண்டு ஆக வேண்டியவற்றைப் பேசி முடிப்பர். எல்லோருடைய முன்னிலையிலும் வாத்தியார் மணம் செய்து கொள்ள உள்ளவர்களின் சாதகப் பொருத்தத்தினை விளக்கிக் கூறுவர். மணமகளுக்குத் தரப்படும் வரதட்சணை பற்றிப் பின்னர்ப் பேசி முடிவு எடுப்பர். இது பற்றி இரு பக்கத்துத் தந்தையரும் பல நாள்கள் முன்பிருந்தே தொடர்ந்து பேச்சு நடத்தியிருப்பர். இது பற்றி ஒரு முடிவு கண்டபின் வாத்தியார் பஞ்சாங்கம் பார்த்து மணம் நடைபெறுவதற்கான நல்ல நாளை முடிவு செய்வார். அதன்பின் கூடியுள்ள அனைவரும் விருந்துண்பர். தன் மகளுக்கு ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக வரதட்சணை தருவதை ஒரு நம்பூதிரி தனக்கு மிகுந்த இழிவினைத் தருவதாகக் கருதுவான். இயன்றவரை அவன் இத்தொகையினை விட மிக அதிகமாகவே தர முயற்சிப்பான். மணம் தொடர்பான சடங்குகள் ஓராண்டு அளவு நடைபெறுவதற்கு உரியன எனினும் நடைமுறையில் அவை பத்து நாள்களுக்குள் முடிக்கப்படுகின்றன. மணமகளுடைய இல்லத்தைச் சேர்ந்த குழுவினர் மணமகன் இல்லத்தவர்களை மணத்திற்கு அழைத்து வரச் செல்லும் சடங்குடன் மணச் சடங்குகள் தொடங்கும். மணமகன் இல்லத்தில் வாத்தியாருக்கு எட்டுப் பணத்தினை* அன்பளிப்பாகத் தருவர். அங்கிருந்து மணமகள்

* மலபார் க்வார்டர்லி ரெவ்யூ, 1,1, 1902. (Malabar Quart, Review , 1, 1902)

இல்லத்திற்கு அனைவரும் மீண்டும் திரும்புவது ஆரவாரம் மிகுந்த ஊர்வல நிகழ்ச்சியாகும். அதில் மணமகன் தன் நண்பர்களோடு வருவான். ஓலைக்குடை பிடித்த நாயர் பெண்கள் பலர் உடன் வருவர். உடன்வரும் பல நாயர்களுள் சிலர் கத்தி சுழற்றி வாட்போர் விளையாட்டு நிகழ்த்தியவர்களாக வருவர். சாத்திரங்களைக் கற்றுணர்ந்த நமபூதிரிகளும் அந்த ஊர்வலத்தில் இடம் பெற்றிருப்பர். அந்த ஊர்வலத்தில் முக்கியமானவையான மணமகன் தீய ஆவிகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வல மணிக்கட்டில் நூலாலான கங்கணம் அணிந்திருப்பதோடு மணம் செய்து கொள்ளத் தகுந்த தகுதி வாய்க்கப் பெற்றவன் என்பதனைப் புலப்படுத்தும் வகையில் பதினாறு கணுக்களைக்கொண்ட மூங்கில் கழி, நல்ல அதிர்ஷ்டம் தருவதான கண்ணாடி, தீய ஆவிகளிடமிருந்து மணமகளைக் காப்பதற்கான அம்பு, நான்கு சேலைகள், ஒரு தாலி ஆகியனவற்றையும் தாங்கி வருவான். மணமகள் இல்லத்தின் வாசலில் நம்பூத்ரிப் பெண்களைப் போல உடையணிந்த சில நாயர் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்து மணமகனை வரவேற்க இயலாதவர்களாக உள்ள நம்பூத்ரிப் பெண்களின் சார்பில் ஊர்வலத்தில் வருபவர்களை வரவேற்பர். அப்பெண்கள் மணமகனுக்கு விளக்கினை ஆரத்தியாகச் சுற்றுவதோடு, வாழைப்பழம், வெற்றிலை, தேங்காய் முதலிய எட்டுப் பொருள்கள் அடங்கிய அஷ்டமங்கலம் என்ற தட்டையும் சுற்றுவர். அன்றே மணமகள் இல்லத்தின் முற்றத்தில் அவுபாசன எனப்படும்புனித நெருப்பு மூட்டப்படும். சதுரமான ஒரு குழி தோண்டி பலா மற்றும் அரசு மரக்கட்டைகளைக் கொண்டு நெருப்பு மூட்டுவர். சில மறைபொருளான சடங்குகளை நிகழ்த்தி இந்த நெருப்பினைப் புனிதம் உடையதாக்குவர். இந்த நெருப்பினை மண நிகழ்ச்சிகள் முடியும் வரை பேணிக் காப்பதோடு அதன் முன் மணம் செய்து கொள்பவர்களான கணவன் மனைவியர் இறக்கும் வரை பின்வரும் வழிகளில் ஏதாவது ஒரு வழியில் அதனை அணையாது காத்துவருவர்.

1. அந்த நெருப்பருகே அதிலிருந்து ஏற்றப்பட்ட விளக்கினை என்றும் அணையாதபடி ஏற்றி வைத்துக் காத்தல்.

2. அந்த நெருப்பில் பலாசக் கட்டை அல்லது தர்ப்பையினையிட்டுத் தணல் உண்டாக்கி அதனை ஒரு பக்கமாகக் காத்துப் பேணி வருவர்.

---

* எல்லாச் சடங்குகளிலும் மற்றும் கிராமப்புறத்தவர்கள் தரும் கூலித் தொடர்பானவைகளில் பணம் எனக் குறிக்கப்படுவது பழைய காலத்திற்குரிய பணம் என்ற நாணயத்தை குறிக்குமே அன்றித் தற்போது வழக்கில் உள்ள நாணயத்தை அது குறிக்காது.

அவுபாசன அக்னி தேவைப்படும்போது அந்தக் கனலைக் கொண்டு பலா, அரசுக் கட்டைகளைச் சில குறிப்பிட்ட மந்திரங்களைக் கூறிப் பற்ற வைத்துக் கொள்வர்.

மணமகனின் உடலை (மணமகள் முதலில் இறப்பாளாகில் அவள் உடலுங்கூட என நான் நினைக்கிறேன்) அவன் இறக்கும்போது திருமணச் சடங்கின் முதல் நாளன்று ஏற்றப்படும் இந்த அவுபாசன அக்கினியிலிருந்து ஏற்றப்படும் நெருப்பினைக் கொண்டே சிதைக்குத் தீ மூட்டப்பட வேண்டும் என்பது விதி. அவுபாசன அக்கினியே திருமணத்திற்குச் சாட்சியாக இருப்பதாகும். இறந்து போன மூதாதையரையும் சிறு தெய்வங்களையும் வழிபட வீட்டு முற்றத்தில் நந்தி முகச் சடங்கு நிகழ்த்தப்படும். ஒரு பானையில் புனிதப் படுத்தப்பட்ட தண்ணீர், ஒரு சந்தனக் கட்டை,தங்கத் துண்டு ஒன்று, மலர்கள், பச்சரிசி, பழங்கள் ஆகியன வழக்கமாக வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்படும் பொருள்களே இந்த வழிபாட்டிலும் படைக்கப்படும். தமிழ், தெலுங்குப் பகுதிகளில் கலசம் என வழங்கப்படும் இதனை இவர்கள் கலாசு எனத் தெய்வம் ஏற்றப்பட்டதாக வழிபடுகின்றனர். மோனியர் வில்லியம்ஸ் தந்துள்ள விளக்கப்படி* கலச வழிபாடு நிகழ்த்தப்படும் முறை வருமாறு:- ''ஓ! கலசமே! தண்ணீர் உள்ள பாத்திரமான உன் வாய்ப்பகுதியில் விட்டுணும் கழுத்துப் பகுதியில் ருத்திரனும் அடிப்பகுதியில் பிரமனும் நடுப்பகுதியில் சக்தி தேவதைகளும் தங்கி உள்ளனர். ஓ! கங்கா, யமுனா, கோதாவரி, சரஸ்வதி, நர்மதா சிந்து, காவேரி, ஆகிய நதிகளே இந்தக் கலசத்தில் வந்து எழுந்தருளுங்கள்.'' முன் கூறப்பட்ட நந்தி முகச் சடங்கின் ஒரு பகுதி புன்யாகவசனமாகும். இதில் மணமகன் வாத்தியார் கூறும் சில மந்திரங்களை அவரோடு கூடச் சொன்னவனாகக் கலசத்தில் உள்ள நீரைத் தெளித்தபடி இருப்பான். வீட்டு முற்றத்தில் இச்சடங்குகள் நடந்து கொண்டிருக்கும் அதே சமயம் வீட்டினுள் மணமகளுக்கும் இச் சடங்குகளை அவள் முன்னிலையில் அவளுடைய தந்தை நிகழ்த்தி வைப்பார். இச் சடங்குகளின் முடிவில் மணமகள் கழுத்தில் தாலி கட்டப்படும். அதன்பின் மணமகன் கொண்டு வந்த வேட்டிகளில் இரண்டு வீட்டினுள்ளே அனுப்பி வைக்கப்படும். அவற்றை மணமகள் தொட்டபின் அவை மீண்டும் வெளியே கொண்டு வரப்படும். அவற்றை மணமகன் அணிந்து கொள்வான். எஞ்சியுள்ள இரண்டு சேலைகளை அவன் தொட்டுத்தர அவற்றை வீட்டின் உள்ளே அனுப்பி வைப்பர். மணமகள் அவற்றை உடுப்பாள். அடுத்து விருந்து நிகழும். மணமகனும்

* பிராமணீயமும் இந்து சமயமும் (Brahmanism and Hinduism)

மணமகளும் தங்கள் விருந்து உணவினைத் தனித்தனி அறைகளிலேயே உண்பர். இதன் பின்னரே முறையான மணச்சடங்கு தொடங்கும். மணமகள் தந்தை, மணமகன் பாதங்களை அலம்பிய பின் நாயர் சாதிப் பெண் ஒருத்தி அவன் முகத்தின் முன் ஆரத்தி சுற்றியபின் அவனை மண மண்டபத்திற்கு அழைத்துச் செல்வாள். இதில் நான்கு கால்கள் நிறுத்தப்பட்டு மேற்பட்டி அமைக்கப்பட்ட மணமேடை இடம் பெற்றிருக்கும். மண மண்டபத்தின் தூண்களும் மேல் விதானமும் சிவப்புத் துணியால் போர்த்தப்பட்டிருக்கும். (சிவப்பு நிறம் மங்கலமானதாகக் கருதப்படுவது.) அங்கு மாவிலைத் தோரணங்கள் கட்டப்பட்டிருக்கும். மண்டபத்தின் ஒரு பக்கம் ஒரு திரை தொங்கும். குடும்பத்தைச் சேர்ந்த நம்பூதிரிப் பெண்கள் அதன் பின்புறம் நின்றவர்களாக அதில் உள்ள துளைகள் வழியாக மண நிகழ்ச்சிகளைக் காண்பர். மணமகனைப் பின்தொடர்ந்தவளாக மணமகள் வர அவர்கள் மணமண்டபத்திற்கு அழைத்து வரப்படுவர். மணமகளை மற்றவர்கள் காண இயலாதபடி பெரிய ஓலைக்குடை அவள் முகத்தை மறைத்திருக்கும். மணமகன் கரத்தைத் தொடாதபடி அவள் அவன் கையில் ஒரு மாலையினைத் தரவேண்டும். அவன் அந்த மாலையினை அணிந்து கொள்வான். வேத மந்திரங்களின் முழக்கத்திடையே அவர்கள் எதிர் எதிரே நிறுத்தப்படுவர். இதனை முகதரிசனம் என அழைப்பர். மணமகன் மணமகளை உடன் அழைத்தவனாகப் புனித நெருப்பையும் நீருள்ள கலசத்தையும் மந்திரங்களைக் கூறியபடி மும்முறை சுற்றி வருவான். அந்த மந்திரங்களை மோனியர் வில்லியம்ஸ் பின்வருமாறு மொழியாக்கம் செய்துள்ளார்*. ''நான் ஆண்மகன், நீ பெண் மகள். வா! நாம் இருவரும் மணம் புரிந்து சந்ததியினைப் பெற்றேடுப்போம். அன்பால் பிணைக்கப்பட்டவர்களாக மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டவர்களாக நாம் நூறாண்டுகள் வாழ்வோம்[0] ஒவ்வொரு சுற்றிலும் இறுதியிலும் மணமகன் மணமகள் பாதங்களை ஒரு அம்மியின்மீது எடுத்து வைப்பான். அப்போது, ''இந்தக் கல்லின் மீது ஏறி நிற்பாயாக, இந்தக் கல்லைப் போல் உறுதியானவளாக இருப்பாயாக.''[இ] எனக் கூறுவான். பின்னர் சுப வேளை நெருங்கிவிட்டதாகக் கருதும் சமயத்தில் மணமகளையும் அவளுக்கு உரிய வரதட்சணையையும் மணமகனிடம் ஒப்படைத்துவிட்டதற்கான அடையாளமாக மணமகன் கரங்களில் நீர் வார்க்கப்படும். அப்போது திரையின் பின்பக்கம் நிற்கும் நம்பூதிரிப் பெண்களும் மண்டபத்தில் கூடியுள்ள நாயர் பெண்களும் வைவது போல கீறீச்சிட்டுக் கத்துவர். இச் சடங்கில் பயன்படுத்தப்படும் அக்னி,

* 0 இ முந்து நூல்

அவுபாசன அக்கினியிலிருந்து கொண்டு வந்து கொளுத்தப்பட்டதாகும். மணமகளின் கரங்களைப் பற்றியவனாக மணமகன் அவளை ஏழடி நடத்திச் செல்வான். முதலடி உடல் வலிமைக்கு, இரண்டாவது அடி மனத்திட்பத்திற்கு, மூன்றாவது அடி செல்வத்திற்கு, நான்காவது அடி சுக வாழ்விற்கு, ஐந்தாவது அடி மகப்பேறினுக்கு, ஆறாவது அடி பருவங்கள் துணை நிற்க, ஏழாவது அடி நட்புக்கு எனக்கூறி ஒவ்வொரு அடியினையும் எடுத்து வைக்கும் படி கூறி அழைத்துச் செல்வான். அவன் அவளைத் தன்னிடம் அன்புடையவளாக நடந்து கொண்டு பல பிள்ளைகளைப் பெற்றெடுப்பவளாக நூறாண்டுகள் வாழும் படி வேண்டுவான். இச்சடங்கு சப்தபதி எனப்படும் ஏழு அடி எடுத்து வைத்தலாகும். அதன்பின் ஹோமம் வளர்ப்பர். இச்சமயத்தில் பயன்படுத்தப்படும் நெருப்பே மணமகன் இறக்கும்போது அவன் சிதையில் உடலுக்குத் தீயிடப் பயன்படுத்தப்படுவதாகும். அடுத்து விருந்து நிகழும். அது முடிந்த பின் மணமகள் தந்தை அவளைத் தன் மடியில் அமரச் செய்து மருமகனிடம் அவளை நன்கு நடத்தும்படி கேட்டுக் கொண்டு முறைப்படி அவளை அவனிடம் ஒப்படைப்பார். அவ்வாறே நடந்து கொள்வதாகக் கூறி அவன் அவளைக் கரம்பிடித்து ஏற்றுக்கொள்வான். அதன் பின் அனைவரும் மணமகன் இல்லத்திற்கு ஊர்வலமாகச் செல்வர். மணமகளை ஒரு சிவிகையில் தூக்கிச் செல்வர். மணமகன் புனித நெருப்பை ஏந்தியவனாக நடந்து செல்வான். இவ்வாறாக முதல்நாள் நிகழ்ச்சிகள் முடிவுறும். இதன்பின் மூன்று நாட்களுக்கு மணமக்கள் ஒருவரை ஒருவர் காணாதவர்களாக இருப்பர் என நினைக்கின்றேன். அப்போது மணமகளுக்குக் குடும்பக் கடமைகளைக் கற்றுத் தருவர். இச் சமயங்களில் ஹோமம் வளர்த்தல் மட்டுமே நிகழும். இச் சடங்கினை மணமக்கள் உணவு கொள்ளும் முன் செய்து முடிப்பர். நான்காம் நாள் நிகழ்த்தப்படும் சடங்கில் மணமகள் ஒரு மல்லிகைப் பதியத்தை நடுவாள். இது தன் கணவனுடைய கடமைகளில் தான் துணை நிற்கப் போவதனை உறுதிப்படுத்தும் வகையில் அதன் அறிகுறியாக அவள் மேற்கொள்ளும் செயலாகும். அன்றிரவு வாத்தியார் மணமக்களை மணவறைக்கு அழைத்துச் செல்வார். படுக்கை கோரைப் பாயாகத் தான் இருக்கும். அல்லது நாட்டுச் சமுக்காளமாக இருக்கும். இப் படுக்கையின் மீது ஒரு வெள்ளைத் துணியினை விரித்திருப்பர். படுக்கையின் விளிம்பில் வளத்தின் அறிகுறியாக நெல்லையும் அரிசியையும் கொண்டு சிறிய வரப்பு அமைப்பினைச் செய்திருப்பர். வாத்தியார் அவ்வறையிலிருந்து வெளியேறிய பின் மணமகன் கதவைத் தாளிட்டுக் கொள்வான்.* அறைக்கு வெளியே வாத்தியார் புனித நூல்களிலிருந்து பொருத்தமான

பகுதிகளை ஒத மணமகன் அவற்றைத் திரும்பச் சொல்வான். ஐந்தாம் நாள் மணமக்கள் ஒருவருக்கொருவர் எண்ணெய் பூசி விடுவர். மணமகன் மணமகளுக்குக் கூந்தலை வாரி விடுவான். குளிப்பதன் முன் அவர்கள் ஒரு துணியினைப் பயன்படுத்திக் குட்டையில் இருக்கும் மாநட் கணி எனப்படும் மீனினைப் பிடிப்பர். இதனை அவர்கள் மேற்கொண்டிருக்கும்போது பிரம்மச்சாரி ஒருவன் மணமகனிடம் ''நீ ஒரு பசுவையும் ஒரு மகனையும் பார்க்கின்றாயா?'' எனக் கேட்பான். துணியில் அகப்பட்ட மீன்களைச் சுட்டிக் காட்டியவனாக மணமகன் ''ஆமாம், இதோ! அவை'' எனப் பதிலிறுப்பான். மீன்கள் இனப் பெருக்கத்திற்கான கருவுறுதலின் குறியீடாகக் கொள்ளப்படுவதால் இது மகப் பேறு வாய்ப்பதைக் குறிப்பதாக அமையும். பின்னர் ஹோமம் வளர்க்கப்படும். இரவில் மணமகன் மணமகளுக்குப் பூச்சூட்டி அவளைக் கண்ணாடியினைப் பார்க்கும் படி கூறி அச்சமயத்திற்கேற்ற மந்திரங்களைக் கூறுவான். ஆறாம் நாள் முதல் பத்தாம் நாள் வரை சடங்கு எனக் குறிப்பிடத்தக்க தகுதிக்குரியன ஏதும் நிகழ்த்தப்படுவதில்லையாகையால் பத்தாம் நாள் நிகழ்ச்சிகளை ஆறாம் நாளே நடத்தி மணச் சடங்குகளை ஆறாம் நாளன்றே ஒரு முடிவுக்குக் கொண்டு வருவர். பித்ருக்களைத் திருப்திப்படுத்தச் சில பிராமணர்களுக்கு உணவளிப்பர். மணமக்கள் ஒரு பலா மரத்தினை அடைந்து அதன் அடியில் கொஞ்சம் அரிசி, தயிர், நெய் ஆகியனவற்றைத் தர்ப்பைப் புல்லில் படைப்பதோடு மலர்களையும் சந்தனப் பொடியையும் கூட அதற்கு அணிவிப்பர். கங்கணம், மூங்கில் கழி, அம்பு, கண்ணாடி ஆகியனவற்றை வாத்தியாரிடம் ஒப்படைப்பதோடு மணநிகழ்ச்சி முடிவுறும்.

சர் டபிள்யூ: டபிள்யூ. ஹண்டர்[@] நம்பூத்ரிகள் மீனவ முன்னோர்களின் வழிவந்த தாழ்ந்த குடிமரபினர் எனக் கூறுகின்றார். திருமணச் சடங்குகளில் முக்கியமான ஒன்று மீன்பிடிக்கும் சிறு சடங்கு பொருளற்றதாகப் பழமையின் ஒரு கூறினைப் பாதுகாத்து வைப்பது போலத் தோன்றலாம். இந்தச் சடங்கின் உட்பொருள் பற்றிய விளக்கம் காண்பதில் நாம் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடக்கூடாது. தென் கன்னடத்தைச் சேர்ந்த சிவாலி பிராமணர்களிடையே மணச் சடங்கில் பயன்படுத்தப்படும் பாயினை ஊர்வலமாகக் குளத்திற்கு எடுத்துச் செல்லும் பழக்கம் உள்ளது. அங்கு மணமகனும் மணமகளும்

* மலபார் கையேட்டில் திரு லோகன் வாத்தியார் கதவை மூடிப் பூட்டுவார் என எழுதியுள்ளதற்கு நம்பூதிரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

@ ஒரிசா, கிராமப்புற வங்காளம் பற்றிய ஆண்டுத் தொகுப்புகள்.(Orissa, Annals of Rural Bengal)

மீன் பிடிப்பதாகப் பாவனை செய்வதோடு. தங்கள் விரல்களை இணைத்துக் கொண்டவர்களாக நெற்றியினைத் தொட்டுக் கொள்வர். ''துளு நாடு பற்றிய பழமையான குறிப்புகள் அனைத்தும் கேரளம், (மலபார், கன்னட மாவட்டங்கள்) துளுவம், ஹைய்க ஆகிய பகுதிகளைத் தன் கோடரியை மேற்குத் தொடர்ச்சி மலையின் சிகரத்தின் மீதிருந்து தன்னால் இயன்ற அளவு நெடுந்தொலைவு கடலில் வீசி எறிந்து பரசுராமன் கடலிலிருந்து மீட்டான் எனக் கூறுகின்றன. துளுவர்களிடையேயான வழக்கு வரலாற்றின்படி அசிஷேத் திரத்திலிருந்து அவ்வப்பொழுது வந்து குடியேறிய பிராமணர்களோடு சச்சரவு ஏற்பட்ட பின் பரசுராமன் சில மீனவர்களின் வலையினைப் பிரித்துப் பிராமணர்களுக்குரிய பூணூலாக்கி அதனை அந்த மீனவர்களுக்கு முறைப்படி அணிவித்து அவர்களைப் பிராமணர்களாக்கினான். அதன் பின் தவம் செய்ய மலைப்பகுதிகளுக்குப் புறப்பட்ட பரசுராமன் அவர்களிடம் ஏதேனும் இன்னல் ஏற்படின் அவர்கள் தன்னை அழைத்தால் தான் அவர்கள் உதவிக்கு வருவதாக உறுதி கூறிச் சென்றான். அவர்களுக்கு எத்தகைய இன்னல்களும் ஏற்படவில்லையாயினும் சிறிது காலம் சென்றபின் பரசுராமன் தங்களைத் தொடர்ந்து நினைவில் வைத்துள்ளானா என்பதனை அறிந்து கொள்ள ஆர்வம் உடையவர்களாக அவர்கள் அவனை அழைத்தனர். வாக்களித்தபடி திரும்பி வந்த அவன், தன்னை அவ்வாறு கேவலப்படுத்திய அவர்களைப் பழையபடியே சூத்திரர்களாகுமாறு சபித்துத் தண்டித்தான்'' எனத் தென் கன்னட மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது.

நம்பூதிரிகளின் மணச் சடங்குகள் தொடர்பான மேலும் விரிவான விளக்கங்கள் மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் தரப்பட்டுள்ளன. அதனை இங்கு எடுத்துக்காட்டுவது பயனுடையதாகும். ''நம்பூத்ரிகள் மணத்தில் மணமக்களின் சாதகப் பொருத்தம் பார்ப்பதும் வரதட்சணைத் தொகையினை முடிவு செய்வதுமே முதலில் முடிவு செய்யப்பட வேண்டியவை. இவை பற்றிய திருப்தியான வகையில் முடிவு காண்பார்களேயானால் சோதிடரோடு கலந்து பேசி மணத்திற்கு உரிய நாளினை முடிவு செய்வர். அன்று மணமகன் தன் வீட்டிலிருந்து மணமகள் இல்லத்திற்கும் புறப்படும் முன் நண்பர்களோடும் உறவினர்களோடும் அயனி ஊண் எனப்படும் விருந்தினை உண்பான். மணமகள் இல்லத்திலும் அன்று இதே போன்றதொரு விருந்து நிகழும். விருந்துக்குப் பின் தன் இல்லத்தை விட்டுப் புறப்படும் மணமகன் எல்லா நல்ல காரியங்களுக்கும் புறப்படும் போது வழக்கமாக மேற்கொள்வதான வலக்காலை எடுத்து வைத்துப் புறப்படுவான்.

அப்பொழுது நலத்தினைத் தருவதான சில மங்கல சூத்திரங்களை அவன் முணு முணுத்தவனாக இருப்பான். அவன் வாசலைக் கடக்கும் போது எட்டு மங்கலம் பொருள்களைத் தட்டில் ஏந்தியவர்களாக மகளிர் அவனை எதிர்ப்படுவர். கிரந்தம், துவைத்த துணி, செப்பு, கொஞ்சம் அரிசி, வால் கண்ணாடி (கைப்பிடியோடு கூடிய கண்ணாடி), குங்குமம், சாந்து (சந்தனம், கர்ப்பூரம், கத்தூரி, குங்குமம் ஆகியவற்றின் கலவை), மாசி (ஒருவகைக் கண்மை) ஆகியனவே இந்த எட்டு மங்கலப் பொருள்கள். மணமகன் இல்லத்திற்கு ஊர்வலமாகச் செல்லும் மணமகன் முன் வாள்களையும் மெருகு எண்ணெய் பூசப்பட்ட கேடயங்களையும் தாங்கியவர்களாக ஆரவாரமாகச் சத்தமிட்டபடி மணமகனின் அகம்படியரான நாயர்களும் மணமகனின் நண்பர்களும் உறவினர் களுமான நம்பூத்ரிகளும் செல்வர். நம்பூதிரிகளுள் ஒருவன் ஏற்றிய விளக்கினை ஏந்தியவனாகச் செல்வான். மணமகள் இல்லத்தின் வாசலில் அந்தரஜனங்கள் (நம்பூதிரி பெண்கள்) போல உடை தரித்த நாயர் பெண்கள் அஷ்ட மங்கலமும் விளக்குகளும் ஏந்தியவர்களாக மணமக்களை வரவேற்பர். மணமகன் வீட்டின் உள் முற்றத்தில் (நடுமிட்டம்) நுழைந்து கிழக்குப் பார்த்தவனாகத் தன் இருக்கையில் அமர்வான். மணமகளின் தந்தை அவனுக்கு எதிரில் வந்து அமர்ந்து அவனுடைய வலக்கையினைப் பற்றியவராகக் குறித்து வந்து தன்னுடைய மகளை மணந்து கொள்ள வேண்டுமென்று முறைப்படி கேட்டுக்கொள்வார். அதனை ஏற்றுக் கொண்டவனாக மணமகன் குளித்துப் புத்தாடைகளைப் புனைந்து தர்ப்பையாலான மோதிரம் அணிந்து பூமகத்தினை அடுத்துள்ள புறத்தலம் என அழைக்கப்படும் அறையில் வந்து அமர்வான். அங்கு அவன் தன் குல தெய்வங்களுக்குச் சில பணங்களைக் காணிக்கையாகச் செலுத்துவான். அடுத்துக் கணபதி பூசையினைச் செய்து முடித்தவனாக நான்கைந்து நம்பூதிரிகளுக்குச் சில பணங்களை வெற்றிலை- பாக்கில் வைத்துத் தானமாகக் கொடுப்பான். இது ஆசிரம பிஸ்தேச பிராயச்சித்தம் என வழங்கப்படுகின்றது. அவன் பிரமச்சாரியாக இருந்த காலத்தில் செய்த பாவங்களைப் போக்கிக் கொள்வதற்கான பிராயச் சித்தமாகும். இதே போன்ற தானங்களை ஏதேனும் ஒரு கோத்திரத்தைச் சேர்ந்த இரணடு நம்பூதிரிகளுக்கு அவர்களை விசுவதேவக்களாகப் பாவித்து வழங்குவான். அடுத்து வேறு கோத்திரங்களைச் சேர்ந்த இரண்டு நம்பூத்ரிகளைப் பித்ருக்களாகப் பாவித்து அவர்களுக்கும் தானம் வழங்குவான். இறுதியாக வழங்கப்பட்ட தானம் நாந்திமுகம் என அழைக்கப்படும். இதற்கிடையே வீட்டினுள் மணமகளுக்கு ஒரு பழைய துணியினை முகத்திரையாக இட்டு அவளை வடக்கிணி அறைக்கு

அவள் கையில் வால் கண்ணாடியைத் தந்து அழைத்துச் செல்வர். அவன் தந்தை தன் கால்களை அலம்பிய பின் ஒரு தர்ப்பை மோதிரத்தை அணிந்தவராக வந்து கணபதி பூசையை முடித்தபின் வெளியே மணமகன் நிகழ்த்தும் அச் சடங்குகளை மணமகளும் நிகழ்த்தும் படி செய்து வைப்பார். இறுதியில் மணமகள் மீது அவள் தந்தையும் நான்கு நம்பூதிரிகளும் புனித நீர் தெளிப்பர். அடுத்துத் தாலியினைப் புனித நீருள்ள ஒரு பித்தளைப் பாத்திரத்தில் வைத்து எடுத்து வருவர். அதனை நாள்தோறும் வழிபாடு நிகழ்த்தும் குடும்பத் தெய்வத்தின் அருகில் வைத்து வழிபட்ட பின் கணபதிக்கும் பூசை நிகழ்த்திய பின் மணமகனை வீட்டினுள் வரும்படி அழைப்பர். அவ்வாறு வீட்டினுள் நுழையும் முன் தன்னைத் தூய்மை செய்தவனாகப் புனித விபூதியான சமயச் சின்னம் தரித்துக் கால்களை அலம்பிக் கொண்டு தன் மீது நான்கு நம்பூத்ரிகள் புனித நீர் தெளித்த பின் (இவ்வாறு புனித நீர் தெளித்தல் எல்லாச் சடங்குகளிலும் நிகழ்த்தப்படும் ஒன்று) முன்னே ஒரு நம்பூத்ரி ஏற்றிய விளக்கைத் தாங்கிச் செல்ல நடுமிட்டத்தில் நுழைவான். வீட்டுக் கூடத்தின் நடுவில் ஒரு பீடத்தில் வந்து அவன் அமர்ந்த பின் மணமகளின் தந்தை அவனுக்கு வணக்கம் செலுத்தி மணமகன் தன்னோடு கொண்டு வந்த நான்கு இரட்டை வேட்டிகளை (கச்சா) அவனிடம் தருவார். அவை மணமகளிடம் எடுத்துச் செல்லப்படும். அவள் அவற்றுள் இரண்டினை அணிந்து கொண்டு இரண்டினை மணமகன் அணிய அனுப்பி வைப்பாள். அதன்பின் மணமகன் கிழக்கிணியினை அடைந்து அங்கு வேள்விப் பலிக்கான ஹோமக் குண்டத்தை அமைப்பான். அங்குத் தன் முன் உள்ள இடத்தினை முதலில் பசுஞ்சாணியால் மெழுகிச் சகலம் எனப்படும் பலாக் (*Artocarpus integrifolia*) குச்சியால் அவ்விடத்தின் மேற்குப் பக்கத்தில் ஒரு கோடு வரைவான். அந்தக் கோட்டினை நேர் கோணத்தில் தொடும்படியாக மேலும் ஐந்து கோடுகளை வரைவான்.

அவன் பலாக் குச்சிகளை ஹோமம் நிகழ்த்துவதற்குரிய இடத்தில் வைத்து அவற்றை மணமகள் இல்லத்திலுள்ள அடுப்பிலிருந்து கொண்டு வரப்பட்ட நெருப்பைக் கொண்டு பற்ற வைத்து எரிய வைப்பான். அந் நெருப்பில் பலாசு அல்லது சாமதச் (*Butea frondosa*) சுள்ளிகளை இடுவான். இந்த நெருப்பினையே அவுபாசன நெருப்பு என அழைப்பர். இதுவே மணச் சடங்கிற்குச் சாட்சியாக விளங்குவதாகக் கருதப்படுவது. மணமக்கள் இறக்கும் போது இந்த நெருப்பிலிருந்தான தீயினைக் கொண்டே சிதையின் தீ மூட்டப்படவேண்டும். ஆகையால் இதனை அதுவரை அணையாமல்

காத்தல் வேண்டும். * பிரதி எனப்படும் மூன்று பலாசக் குச்சிகளையும் உத்மம் எனப்படும் பதினெட்டுப் பலாசுக் குச்சிகளையும் ஒரே தர்ப்பைக் கயிற்றால் கட்டி ஹோம குண்டத்திற்கு வடக்குப் பக்கத்தில் இரண்டு பலா மரக் கட்டையின் மீது வைப்பான். ஹோம குண்டத்தின் நான்கு பக்கங்களிலும் நான்கு தர்ப்பைப் புல் கொண்டு வந்து வைக்கப்படும். ஒரு வெண்கலப் பாத்திரம், நீர் நிறைந்த மண் சட்டி, அம்மியும் குழவியும், மலர் எனப்படும் பொரியோடு கூடிய முறம், பலியில் நெய்யூற்றும் பலாசுக் கரண்டி இடப்பட்ட செப்பு நெய்க்கிண்ணம் ஆகியனவும் ஹோம குண்டத்தின் அருகே வைக்கப்படும். இதற்கிடையே வடக்கிணியில் மணமகளின் தந்தை அவளுக்குத் தாலியினை அணிவித்த பின் அவள் தாயர் அவளிடம் ஒரு துளசி மாலையினைத் தருவாள். ஆயிரத் திரி எனப்படும் விளக்கினை ஒரு நம்பூதிரி ஏந்தியவனாக முன்னே செல்ல அவளைக் கிழக்கிணிக்கு அழைத்துச் சென்று மணமகன் எதிரே ஹோம குண்டத்தின் வடக்கு அல்லது வடகிழக்குப் பக்கத்தில் நிறுத்துவர். இது முகதரிசனம் எனப்படும். அவள் தன்னிடம் உள்ள மாலையினை மணமகனிடம் தருவாள். நீண்டதான மணச் சடங்கின் நடுநாயகமாக உள்ள உதக பூர்வ கன்னியக தானம் எனப்படும் மணமகளை நீர்வார்த்து அளிக்கும் சடங்கு நிகழும். மணமகளும் அவள் தந்தையும் மேறகுப் பார்த்தபடி நிற்பர். மணமகன் அவர்கள் எதிரே நிற்பான். மூவரும் தங்கள் வலக்கரத்தை நீட்டுவர். மணமகள் கரத்தின் மேலாக அவள் தந்தையின் கரமும் கீழாக மணமகன் கரமும் இருக்கும். ஓதிகனான சடங்கினை நடத்துவிக்கும் நம்பூதிரி மணமகள் தந்தையின் கரத்தில் நீருற்றுவான். அவன் அதனைப் பெற்றுத் தன் மகளின் கரத்தில் ஊற்றிய பின், அவள் கரத்தைப் பற்றி, அவள் அதனை மணமகன் கரத்தில் ஊற்றும் படி செய்வான். பின்னர் வரதட்சணைத் தொகை மணமகளிடம் தரப்படும். அவள் அதனை மணமகனிடம் தருவாள். அடுத்து அவள் மணமகனுக்கும் ஹோம குண்டத்திற்கும் இடையே நடந்து சென்று ஆமணப் பலகை (ஆமை வடிவிலான மணைப்பலகை)யில் ஹோம குண்டத்தின் கிழக்குப் பக்கத்தில் அமர்வாள். மணமகன் அவளுக்கு இடப்பக்கமாக மற்றொரு மணைப்பலகையில் அமர்வான். அவன் ஒரு பலாசச் சுள்ளியும் தர்ப்பைக் கயிறும் நீங்கலாக அனைத்து உத்மம் சுள்ளிகளையும் ஹோமத் தீயிலிட்டு அக்ரமாக நெய்யினையூற்றி அவற்றை எரிப்பான். அடுத்துப் பாணிக்கிரகணச் சடங்கு நிகழும்.

* இந்த நெருப்பிலிருந்து ஏற்றப்பட்ட ஒரு விளக்கைத் தொடர்ந்து எரியும்படியாக வைத்திருந்தோ ஒரு பலாசு அல்லது தர்ப்பைக் குச்சியிலிட்டுச் சூடாக்கி அதனைப் பத்திரமாகப் பேணிப்பாதுகாத்தோ இந்த நெருப்பு அந்நாள்வரை பேணப்படும்.

மணமகன் தன் இருக்கையிலிருந்து எழுந்து வலப்பக்கமாகத் திரும்பி மணமகளைப் பார்த்தபடி நிற்பான். அவள் தன் கையில் கண்ணாடியைப் பிடித்தவளாக உட்கார்ந்திருப்பாள். அவள் வலக்கையினை உள்ளங்கை மேல் நோக்கியபடி இருக்கும்படியாக நீட்டி விரலை மடக்கிக் கொள்வாள். மணமகன் அவளுடைய கையினைப் பற்றியபடி மீண்டும் அமர்வான். மணமகளுடைய சகோதரன் ஒருவன் அவர்கள் முன்வந்து மணமகளுடைய கையில் உள்ள கண்ணாடியை வாங்கி ஒரு பலகையில் வைத்து அதில் அவளை அவளுடைய உருவத்தைப் பார்க்கும்படி செய்வான். பின்னர் மணமகன் இணைந்தனவாக உள்ள அவள் கரத்தில் கொஞ்சம் நெய்யினை ஊற்றுவான். அதில் அவளுடைய சகோதரன் முறத்திலிருந்து கொஞ்சம் நெல்லை எடுத்து இடுவான். பின் மணமகன் அந்த நெல்லை ஹோம நெருப்பில் விழும்படி தள்ளிவிடுவான். இது லஜ்ஹோமம் எனப்படும். இதன் முடிவில் மணமக்கள் ஹோமத் தீயினைப் பிரதட்சணமாகச் சுற்றி வருவர். அப்போது நீருளள னையினையும் சேர்ந்து சுற்றுவார். அம்மியினையும் விசிறியினையும் சுற்றுவதில்லை. அடுத்து மணமக்கள் ஒருவரோடு ஒருவர் ஒத்து நடப்பதற்கு உதவுவதான முக்கியமான சடங்கான அஸ்மோரோகணச் சடங்கு நிகழ்த்தப்படும். மணமகன் மணமகளுடைய பாதங்களை ஒவ்வொன்றாக எடுத்து அம்மி மீது வைத்து அவள் பாதங்களையும் அம்மியையும் ஒரு சேரப் பற்றிக் கொள்வான். லஜ்ஹோமம், பிரதட்சணம், அஸ்மாரோகணம் ஆகிய மூன்று சடங்குகளும் ஒவ்வொன்றும் மும்முறை நடத்தப்பட வேண்டும். பின்னர் சப்தபதி எனப்படும் ஏழடி வைக்கும் சடங்கு நிகழும். மணமகன் தன் துணைவியை வடகிழக்குத் திசையில் அவள் வலப்பாதத்தை வலக் கையால் பற்றி ஏழடி தூரம் நடத்திச் செல்வான். அதன்பின் அவர்கள் ஹோம நெருப்புக்கும் அம்மிக்கல்லுக்கும் இடையே நடந்து சென்று மண்பானைக்கு மேற்குப் பக்கத்தில் கிழக்குப் பார்த்து அமர்வர். மணமகள் மணமகனுக்குப் பின் அமர்வாள். மணமகன் வித்தைக்காரனைப் போல் தன்னைத் தாழ்த்திக் கொள்வதற்குத் தயங்காதவனாகத் தன் தலை உச்சியினால் தனக்குப் பின்னால் அமர்ந்திருக்கும் மணமகள் தலையைத் தொடும்படியாகப் பின்னோக்கிச் சாய்வான். மணமகள் அவனுக்கு அச்செயலில் உதவுவது போல முன்னோக்கிக் குனிவாள். அதன்பின் மணமகன் மண்சட்டியிலுள்ள நீரைத் தன்மீது தெளித்துக் கொண்டு மணமகள் மீதும் தெளிப்பான். பின்னர் அவர்கள் ஹோம குண்டத்திற்கு மேற்குப்பக்கம் உள்ள தங்கள் இருக்கையில் வந்து அமர்ந்து வடக்குத் திசையில் துருவ நட்சத்திரத்தையும் சப்தரிஷி மண்டலத்தையும் அருந்ததியினையும்

பார்ப்பதாகப் பாவனை செய்வர். மணமகன் மணமகளுக்கு அவற்றைக் காட்டுவதோடு தன் கணவனுக்கு நீண்ட ஆயுளை வேண்டி உச்சரிப்பதற்குரிய சிறு மந்திரங்களையும் அவனுக்குச் சொல்லித் தருவான். பின்னர் மணமகன் புனித நெருப்பில் நெய்வார்த்து முதலில் சிஸ்டகரல் ஹோமம் என்ற பலிச் சடங்கையும் அடுத்து தர்மிக் ஹோமம் எனப்படும் பலிச் சடங்கையும் நிகழ்த்துவான். அடுத்து அவன் நெருப்பில் பரிதீக்களையும் எஞ்சியுள்ள உத்மங்கள், தர்ப்பை, நெய், ஆகியனவற்றையும் இடுவான். பின்னர் அனைவரும் மணமகன் இல்லம்நோக்கிப் பயணம் மேற்கொள்வர். மணமகன், மணமகள் இல்லத்தில் அவுபாசன அக்கினியினை உண்டாக்கப் பயன்படுத்திய சமதக்கிளையினைத் தன்னோடு உடன் எடுத்துக் கொண்டு செல்வான். மணமகன் இல்லத்தை அடைந்தவுடன் மணமகள் இல்லத்தில் அமைத்தது போலவே ஓம குண்டத்தை அமைப்பர். சமித்துக் கட்டையில் நெருப்பினை உண்டாக்கி, தர்ப்பை, நெய் ஆகியனவற்றை இட்டு எரிப்பர். மணமக்கள் அதன் பின் சில மணித்துளிகளைத் தனியே ஓர் அறையில் கழிப்பர். மணமகள் தரையில் விரிக்கப்பட்ட ஒரு புதுத்துணி மீது போடப்பட்ட தோலில்படுத்திருப்பாள். மணமகன் ஓர் ஆமணப் பலகையில் அமர்ந்திருப்பான். அன்று மாலை புனித நெருப்பில் சமித்து இடப்படும் சடங்கும் புழுங்கல் அரிசி இடப்படும் வைஸ்யதேவ ஹோமமும் நிகழ்த்தப்படும். இரண்டாவது ஹோமம் எனப்படும். இதனை நிகழ்த்த மண நாளன்று நேரம் போதவில்லையானால் இதனை மறுநாளன்று பிற்பகல் நடத்திக் கொள்ளலாம். இந்த ஹோமம் பத்து மாதங்களுக்கு நாள்தோறும் நடத்துவதற்குரியது. இந்த ஹோமம் நடத்தப்படும் முதல் மூன்று நாள்களும் (மணநாளும் அதனை அடுத்த இரண்டு நாள்களும்) துக்கம் அனுசரிப்பதற்குரிய தீட்சா நாள்களாகும். இந்த நாள்களில் உடைகளை மாற்றிக் கொள்ளும் வழக்கம் இல்லை. நான்காம் நாள் மணமக்கள் எண்ணெய்க் குளியல் எடுத்த பின் தீட்சா முடிவுக்கு வருவதாகக் கருதப்படும். அன்று வழக்கமான ஹோமத்திற்குப் பிறகு கணபதி பூசை செய்தபின் ஒரு நல்ல நேரத்தில் மணவறைக்கு அழைத்துச்செல்வர். அவள் கணவன் இரண்டு மல்லிகை மாலைகளை உடன் எடுத்துக்கொண்டு அவளைத் தொடர்ந்து செல்வான். அந்த மாலைகளுள் ஒன்றினை அந்த அறையில் தென்கிழக்கு மூலையில் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் விளக்குக்குப் போட்டபின் மற்றொன்றைத் தன் மனைவியின் கழுத்தில் அணிவிப்பான். அதன் பின் அவன் அவளுடைய உடம்பின் மேற்பகுதிக்குச் சாந்து எனப்படும் எண்ணெய்ப் பசையினைப் பூசி விடுவான். உடம்பின் கீழ்ப்பகுதியில் சாந்தினை அவளே பூசிக்கொள்வாள்.

அதன் பின் அவர்கள் குளித்து உடைமாற்றிக் கொள்வர். பின் ஒருவர் அருகே ஒருவர் அமர்வர். மணமகள் ஒரு குடையின் பின்தன்னை மறைத்துக் கொள்வாள். அவள் கணவன் அவளுக்குப்பருக நீர் தருவான். சில சடங்குகளுக்குப் பின் அவர்கள் ஒரே வாழையிலையில் உணவுகொள்வர். அன்றிரவிலிருந்து தான் அவர்கள் உடலுறவு கொள்ளத் தொடங்குவர். வாத்தியார் அவர்களை மணவறைக்கு அழைத்துச் செல்வார். மணமக்கள் முதல் நாள் வெள்ளைத் துணி விரிக்கப்பட்ட பாய் அல்லது நாட்டுச் சமுக்காளத் திலேயே உறங்குவர். வளத்தினைப் பெருக்குவதற்கு உரியதாகக் கொஞ்சம் நெல்லும்அரியும் அவற்றின் ஓரத்தில் கரைபோலக் கட்டி வைக்கப்பட்டிருக்கும். ஸ்தாலிபகம் எனப்படும் ஹோமமே இறுதிச் சடங்கு. இரண்டாவது ஹோமத்திற்குப் பின்வரும் பௌர்ணமிக்கு அடுத்த நாள் இது நிகழ்த்தப்படும். சூரியன் மறையும் போதோ அதற்கு முன்பாகவோ சந்திரன் முழு சந்திரனாகி முக்கால் நாழிகை நேரம் சென்றிருக்குமேல் பௌர்ணமி அன்றே இதனை நடத்திக் கொள்ளலாம்.

நம்பூதிரிகள் ஒரு தார மணத்தில் உறுதியாக நிற்பவர்கள் அல்லர் என்பது முன்பே கூறப்பட்டது. ஓர் ஆண் நான்கு மனைவியர் வரை மணந்து கொள்ளலாம் எனச் சிலர் கூறுகின்றனர். அவ்வாறு நான்கு மனைவியரை மணக்கும் போதும் மேலே விவரித்துள்ள படியாக அனைத்துச் சடங்குகளையும் நிகழ்த்தியேயாக வேண்டும். ஒருவன் நாயர் பெண்களுடன் கொள்ளும் உறவிற்கு வரையறை ஏதுமில்லை.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மலபாரின் நிலை எவ்வாறு இருந்தது என எழுதும் ஹெமில்டன் கூறுவதாவது: ''சாமோரின் மனம் புரிந்து கொள்ளும் போது மணமகளோடு ஒரு நம்பூதிரி அல்லது தலைமைப் பூசாரி உடலுறவு கொண்ட பிறகே அவர் உடலுறவு கொள்வார். அவர்கள் விரும்பினால் மூன்று நாள்வரை கூடச் சாமோரினின் மணமகளோடு உடல் உறவு கொள்ள அனுமதிக்கப்படுவர். தான் வணங்கும் தெய்வத்தின் அருளைப் பெற்றதாகத் தன் மனைவியின் கருவில் முதலில் தங்கும் கரு அமைய வேண்டும் என்பதே இதற்கான காரணமாகும். அரசவையினைச் சேர்ந்த பெரிய மனிதர்களுள் சிலரும் பூசாரிகளுக்குத் தங்கள் அரசரைப் போலவே இத்தகைய உரிமைகளை வழங்குவர். சாதாரண மக்கள் இத்தகைய மரியாதையினைத் தராதவர்களாகத் தாங்களே அப்பணியினை மேற்கொள்கின்றனர்.

மணத்திற்குப் பின் நடைபெறும் சடங்குகள் பெண்கள் கருவுற்றிருக்கும் போதும் மகப்பேற்றிற்குப் பின்னும் நடத்தப்படும். சடங்குகளுள் பின்வருவன குறிப்பிடத்தக்கவை:

1. கர்ப்பாதானம் : மணம் முடித்தவுடன் நிகழ்த்தப்படும் ஒரு சடங்கு. இதற்கு ஹோமம் வளர்ப்பர். கணவன் மனைவியின் மூக்கில் சிலவகைப் புல்களின் சாற்றினைப் பிழிவான்.

2. கர்ப்பரட்சணைச் சடங்கு: கருவில் இருக்கும் குழந்தைக்கு எத்தகைய தீங்கும் நிகழாது காக்கின்றது. இதனை முக்கியமான சடங்காகக் கருதுவதில்லை. எனவே இது நிகழ்த்தப்பட வேண்டுமென்ற கட்டாயமில்லை.

3. பும்சவனம்: கருவுற்ற மூன்றாம் மாதம் ஆண் குழந்தை பிறக்க வேண்டி நிகழ்த்தப்படுவது. இந்துக்கள் பெண் சந்ததியினரை விட ஆண் சந்ததியினரையே விரும்புகின்றனர் என்பதனை மீண்டும் விளக்கிக் கூற வேண்டியதில்லை. புத் என்ற நரகத்திலிருந்து ஒருவனைக் காப்பவன் புத்திரன். எல்லாச் சமய நூல்களும் ஒருவன் ஒரு மகனைப் பெற்றுக் கொள்ளுதல் இன்றியமையாதது என வற்புறுத்துகின்றன. ஓர் ஆண்மகன் பிறக்கும் வரை நம்பூத்ரி ஒருவன் எத்தனை மனைவியரை வேண்டுமானாலும் அடுத்தடுத்து மணந்து கொள்ளலாம். சர்வஸ்வதானம் முறையிலான மணத்தின் வழி ஒருவன் ஒரு மகனைத் தத்தெடுத்துக் கொள்ளலாம். பும்சவனச் சடங்கு நிகழ்வுற்ற நாளன்று தன் கணவன் ஒரு தானிய மணியினை உண்ணத்தரும் வரை ஒருத்தி உண்ணாது விரதம் இருப்பாள். இது ஆணின் பிறப்பு உறுப்பின் குறியீடாகக் கொள்ளப்படுகிறது.

4. சீமந்தொன்னயனம்: பிறக்கவுள்ள குழந்தையின் நலத்திற் காக கருவுற்ற ஆறு அல்லது எட்டாம் மாதம் நிகழ்த்தப்படும் சடங்கு. இச் சடங்கில் தேவதைகளுக்கு ஹோமம் வளர்த்துப் பலியிடுவதோடு கூடக் கணவன் தன் மனைவியின் தலைமுடியினை முள்ளம்பன்றியின் முள் ஒன்றினைக் கொண்டோ மூன்று தர்ப்பைப் புல்களைக் கொண்டோ வேத மந்திரங்களைக் கூறியபடி களைவான்.

5. ஜாதகர்மம்: இது பிறப்புச் சடங்கிற்கு உரிய பெயர். குழந் தையின் தந்தை இதனை நிகழ்த்துவான். ஒரு தங்கக் கரண்டி அல்லது குச்சியினைக் கொண்டு குழந்தையின் வாயில் தேனினைத் தடவுவான். இது நல்ல அதிர்ஷ்டத்தைத் தருவதாக நம்பப்படுகிறது. அதன் பின் வேத மந்திரங்களைக் கூறிய படி அந்தக் கரண்டியாலோ குச்சியாலோ குழந்தையின் தோளினைத் தொடுவர்.

6. மேதா ஜனனம்: புத்தி கூர்மை வளர்வதற்காக அரிதாகவே மேற்கொள்ளப்படும் சடங்கு.

7. ஆயுசு : வாழ்நாளினை நீட்டிப்பதற்காக அடுத்துச் செய்யப் படும் சடங்கு. குழந்தை ஆணாயின் இரட்டைப்படை அசைகளையுடை யதாகவும் பெண்ணாயின் ஒற்றைப்படை அசைகளை உடையதாகவும் அமையும் பிறர் அறியாத ஒரு பெயரினை தந்தை அதற்கு இடுவான்.

8. நாம கர்ணம்: குழந்தை பிறந்த பத்தாம் நாள் இச் சடங்கின் போது பெயர் சூட்டுவர். குழந்தைக்கு இடப்படும் பெயர் வாழ்நாள் முழு தும் அதன் வாழ்வின் நிகழ்வுகளுக்குக் காரணமாக அமைவ்தால் இது ஒரு முக்கியமான சமயச் சடங்காகக் கருதப்படுகின்றது. வாத்தியாரின் உதவியோடு பெற்றோர் ஹோமம் வளர்த்து இச்சடங்கின் போது பலியிடுவர்.

9. அன்னப் பிராசனம் : இயற்கையான தாய்ப்பாலினும் வேறான உணவினை முதன் முதல் குழந்தைக்குக் கொடுக்கும் சடங்கு. குழந்தை பிறந்த ஆறாம் மாதம் இது நிகழ்த்தப்படும். அப்போது குழந் தையினை அதன் தந்தை நண்பர்களிடமும் உறவினர்களிடமும் தூக்கிச் சென்று கொடுப்பார். குழந்தையின் வாயில் தந்தை நெய்ச் சோற்றினை ஊட்டும் போது அங்கு வந்திருக்கும் வாத்தியார் வேத மந்திரங்கள் சிலவற்றை ஓதுவார்.

10. சௌரம் : நம்பூதிரிகள் பாணியில் குழந்தையின் தலை முடியினை முதன் முதல் மழிக்கும் சடங்கு.

11. கர்ணவேத: குழந்தைக்குக் காது குத்தும் சடங்கு.

ஆஸ்வீஜ மாதத்தில் பத்தாம் நாளான விசயதசமி அன்று ஐந்து வயதான ஆண் குழந்தைக்கு அதன் தந்தை நெடுங்கணக்கினை முதன் முதல் சொல்லித்தரும் சடங்கினை மேற்கொள்வார்.

மேலே கூறப்பட்ட சடங்குகளுள் சில தொடர்பாக மலபார் மாவட்டக் கையேட்டில் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- ''ஒருத்தி கருவுறுதல் தொடர்பான பும்சவனம் சடங்கு ஆண்பிள்ளையினைப் பெற வேண்டி நிகழ்த்தப்படுவது. அதில் கருத்தரித்திருப்பவளுடைய கணவன் ஆண் உறுப்புக்களைக் குறிப்பதான ஒரு பார்லியினையும் இரண்டு அவரை விதைகளையும் மனைவியின் கையில் தந்து அதன் மீது கொஞ்சம் தயிரை விட அவள் அதனை விழுங்குவாள். அத்துடன் அவளது வல நாசியில் அறுகம்புல்லின் சாற்றினைக் கொஞ்சம் விடுவான். சீமந்தம் நான்காம் மாதத்தில் வழக்கமாக நிகழ்த்தப்படும். அச் சடங்கில் கணவன் மனைவியின் மயிர்க் கற்றையின் ஒரு

பகுதியினை அத்தி (*Ficu glomerata*) யின் சிறு கொத்து,மூன்று புள்ளிகளை உடைய முள்ளம்பன்றியின் முள், மூன்று தர்ப்பைப் புல் ஆகியவற்றைச் சேர்த்துக் கட்டிய கட்டினைக் கொண்டு பின்பக்கமிருந்து முன்பக்கமாக நான்கு முறை நீவுவான். அதன்பின் வீணை இசையோடு கூட மந்திரங்கள் ஓதப்படும். குழந்தை பிறந்த பின் நிகழ்த்தப்படும் முதல் சடங்கு ஜாத கர்மமாகும். தங்கத்தூள் கொஞ்சத்தைத் தேனோடும் நெய்யோடும் கலந்து அதில் கொஞ்சத்தைக் குழந்தையின் தந்தை தங்கத்தகடு ஒன்றால் எடுத்துக் குழந்தையின் உதட்டில் ஒரு முறை மந்திரத்தைக் கூறியபடியும் மற்றொரு முறை மௌனமாகவும் தடவுவார். அதன் பின் அவர் அந்தத் தங்கத் தகட்டைக் கழுவிவிட்டு அதனால் குழந்தையின் காதுகள், தோள்கள், தலை ஆகியனவற்றைத் தொட்டபின் அதனைத் தானமாக வழங்கி விட்டு நந்திமுகச் சடங்கை நிகழ்த்துவார். குழந்தைக்குப் பெயர் சூட்டும் நாமகர்ணச் சடங்கு குழந்தை பிறந்த பன்னிரண்டாம் நாளில் நிகழ்த்தப்படும். அப்போது குழந்தையின் தந்தை அதன் இடுப்பில் ஓர் அரை ஞாண் கயிற்றைக் கட்டி அதன் உடம்பில் விபூதியினைப் பூசுவார். அதன் பின் வழக்கமான தானங்களை இயற்றிய பின் குழந்தையின் வலக் காதில் குழந்தை ஆணாயின், 'தேவதட்டா சர்ம்மாசி' என்ற சொற்களையும் பெண்ணாயின் 'நீலி தாசி' என்ற சொற்களையும் ஓதிக் குழந்தைக்கு உரிய பெயரை மும்முறை உரக்கச் சொல்வார். அதன்பின் தாயிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டவனாக மீண்டும் மும்முறை அதன் பெயரைக் கூறிக் குழந்தையினைத் தாயிடம் தர அவளும் அதற்குரிய பெயரை மும்முறை கூறுவாள். தானம் வழங்குவதோடும் நாந்திமுகச் சடங்குடனும் பெயர் சூட்டும் நிகழ்ச்சி முடிவுறும். நான்காம் மாதம் குழந்தையைச் சடங்குகளுடன் அதன் தந்தை முதன் முதல் வீட்டை விட்டு வெளியே எடுத்துச் சென்று ஒரு தென்னை மரத்தை மும்முறை வலம் வருவான்.

சாவு நிகழ்வதற்குச் சிறிது முன்பே நம்பூதிரி ஒருவனின் சாவுச் சடங்கு தொடங்கிவிடுகின்றது. சாவு நிகழ்வது உறுதியானது என்று முடிவு செய்யப்பட்டவுடன் தைத்திரீய உபநிடத்திலிருந்து சில வரிகள் இறக்க உள்ளவனுடைய காதில் ஓதப்படும். இவை கர்ண மந்திரம் எனக் கூறப்படும். தர்ப்பாசனம் எனப்படும் தர்ப்பைப் புல்லாலான படுக்கையினை வீட்டு எல்லைக்கு வெளியே வசதியான ஓரிடத்தில் அமைத்துச் சாக உள்ளவனை அதன் மேல் கிடத்துவர். உயிர் பிரிந்தபின் உடலைக் குளிப்பாட்டி, புதியதொரு வெள்ளைத் துணியால் போர்த்துவர். அதன்பின் பாடையினை நெருங்கிய உறவினர் நால்வர் வீட்டு எல்லையில் பிணத்தை எரிப்பதற்குரிய இடத்திற்குத் தூக்கிச் செல்வர்.

ஒரு சில சந்தனக் கட்டைகளைக் கொண்ட சிதை விறகு அடுக்கின் மீது பிணம் கிடத்தப்படும். இதனை இறந்தவன் மக்களோ உடன்பிறந்தவர்களோ செய்வர். அத்தகைய உறவினர்கள் இல்லாதபோது தூரத்து உறவினர்களோ நண்பர்களோ மேற்கொள்வர். சிதையினை நம்பூத்ரிகள் தான் அடுக்க வேண்டும் என்பதில்லை. நம்பூத்ரிகளின் ஒவ்வொரு செயலையும் விதிக்கும் புனிதச் சமய நூல்களில் கூறியுள்ளபடி ஆண் பெண் உறவினர்களும் நண்பர்களும் பாடையினைத் தொடர்ந்து சுடுகாடு வரை செல்ல வேண்டும். எனினும் பெண்கள் அவ்வாறு பிணத்தோடு செல்வதில்லை. பாடையினைச் சிதையில் வைத்த பின் பிணத்தை மூடியுள்ள துணியினை அகற்றுவர். குருதி உறவுடைய உறவினர்கள் பிணத்தின் முகத்தில் அரிசியினைத் தூவுவர். வாத்தியார் மந்திரங்களைச் சொல்லியபடி இருக்கப் பிணத்தின் உடம்பில் உள்ள நவத்துவாரங்களிலும் சிறுத் தங்கத் தகடுகள் சொருகப்படும். இவ்வாறு இடப்படும் தங்கம் யக்ஞத்தின் ஒரு பகுதியாகத் தரப்படுகின்றதேயன்றி இறந்து போனவரின் புரியாத பயணத்திற்குத் துணையாக உதவும் பொருட்டுத் தரப்படுவதில்லை. பிணத்தைச் சிதையில் வைத்தவுடன் ஹோமத் தீ மூட்டப்படும். அதிலிருந்து நெருப்பினை எடுத்து இறந்தவனுடைய மார்பின் மீது இடுவர். சாவுச் சடங்கினை மேற்கொள்பவன் ஒரு மண் பானையினைச் சுமந்தபடி சிதையினை மும்முறை சுற்றி வருவான். சடங்கு செய்விக்கும் புரோகிதன் ஒரு கத்தியால் அதில் துளையிட்டு அதிலிருந்து வழியும் நீரினை மற்றொரு பானையில் பிடிப்பான். அந்த நீரினைச் சிதையின் மேல் ஊற்றும் அவன் அப்பானையினை வீசி எறிந்து உடைப்பான். சடங்கின் இப்பகுதி இறந்தவன் கங்கையின் புனித நீரில் நீராடியதைக் குறிக்கும். ஹோமத்தில் மூட்டப்பட்ட அக்கினி அவனுடைய அச்செயலுக்குச் சாட்சியாகும். வேதங்களில் கூறப்பட்டிருக்கும் சடங்குகள் அனைத்திற்கும் சாட்சியாக இருப்பவன் அக்கினியே. உடலை எரித்தபின் கூடியுள்ளவர்கள் சென்று குளிப்பர். உடலைவிட்டுப் பிரிந்த ஆன்மா சூட்சுமசரீரத்தில் நுழைந்ததாக அதனுடைய பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப சொர்க்கத்திற்கோ நரகத்திற்கோ செல்லும். அது சென்று சேருவதற்குரிய இடத்தை அடையுமுன் சில சடங்குகளை நிகழ்த்த வேண்டும். இறந்தவனுடைய உடற்குறையினையும் மாற்றங்களையும் உண்டாக்குவதான தனஞ்சய வாயுவிலிருந்து பிரீதா எனப்படும் ஆவியானது விடுபட்டுச் செல்லும் வகையில் சாவினை அடுத்த பத்து நாள்களுக்கும் பலிதருவது இவற்றுள் முக்கியமானதாகும். ஒவ்வொரு நாள் பலியுணவும் பிரிதாவின் உடம்பின் ஒவ்வொரு பகுதியினை வளரச்செய்து பத்தாம் நாள் உடலின்

முழு வளர்ச்சியினை அடையும் படியாகச் செய்யும். சாவின் மூன்றாம் நாள் இறந்தவரின் சாம்பல் ஒரு பானையில் சேகரிக்கப்பட்டுப் பிணத்தை எரித்த இடத்திலோ அதன் அருகிலோ புதைக்கப்படும். இதனை ஏகோத்தீட்சா என்பர். பதினொன்றாம் நாள் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் தீட்டு நீக்கும் சடங்கினைச் செய்து கொள்வர். பஞ்சகவ்வியத்தை அருந்துவதோடு பூணூலையும் மாற்றிக் கொள்வதே தீட்டு நீக்கச் செய்யப் பயன்படும் சடங்காகும். அதன்பின் அவர்கள் இறந்து போனவருக்கும் அவருடைய மூதாதையர் மூவருக்கும் சிரார்த்தத்தில் பிண்ட பலி தருவர். பிராமணர்களுக்கு உணவிட்டு, துணி, பணம் ஆகியன தானமாக வழங்கப்படும். அடுத்து வரும் பன்னிரண்டு மாதங்களிலும் இறந்த ஆன்மாவிற்கு மாதத்திற்கு ஒன்றாகச் சிரார்த்தச் சடங்குகள் நடத்திப் பிண்டச் சோறும் நீரும் தருவர். பன்னிரண்டாவது சிரார்த்தம் சபிண்டிகரணம் எனப்படும். அது இறந்தவரைக் குடும்பத்தின் மூதாதையரின் நிலைக்கு உயர்த்தும். இதன் பின் ஆண்டுச் சிரார்த்தங்களே செய்யப்படும். இதனைச் சந்திர மாதத்தின் அடிப்படையில் கணக்கிட்டு நிகழ்த்துவதோடு மூன்று பிராமணர்களுக்கு உணவளித்துத் துணியும் பணமும் தானமாகத் தருவர்.

நம்பூதிரிகளின் சாவுச் சடங்குகள் பற்றித் திரு சுப்பிரமணிய அய்யர் எழுதுவது வருமாறு:- ''சாவுக்குப் பின் குடும்பத்தோடு குருதி உறவுடையார்கள் குளித்து ஈரத் துணியோடு வந்து பிணத்தின் தலைமாட்டில் ஒன்றும் கால் மாட்டில் ஒன்றுமாக இரண்டு வாழைப்பட்டைகளை இடுவர். பிணத்தின் முகமும் தலையும் சிறிதே மழிக்கப்படும். மஞ்சளும் மயிலாஞ்சியு (ஒருவகைச் சிவப்புச் செடி)ம் கலக்கப்பட்ட நீரில் பிணத்தைக் குளிப்பாட்டுவர். வைணவச் சின்னமான கோபி சந்தனத்தைச் செங்குத்தாகத் தீட்டுவதோடு சந்தனக் கலவையினைக் கொண்டும் உடம்பின் பல பகுதிகளிலும் கோடுகள் இழுப்பர். பிணத்திற்கு மலர்களும் மாலைகளும் அணிவிக்கப்படும். பின் ர்ப் பிணத்தைப் புதிய காடாத்துணியால் போர்த்துத் தர்ப்பைப் புல்ல லக் கொண்டு அதனை நழுவி விடாதபடி கட்டுவர். பிணத்தைத் தீட்டுக்கு உட்படாத பிரிவினைச் சேர்ந்த நம்பூதிரிகள் தூக்கிச் சென்று சிதையில் கிடத்துவர். இறந்தவரின் மூத்த மகன் தலையினையும் இளையவன் காலினையும் தாங்கியபடி வருவர். பிணத்தை எரித்தற்குரிய குழியினை வீட்டு எல்லையின் தென்கிழக்கு மூலையில் தோண்டுவர். ஒரு மாமரம் வெட்டி வீழ்த்தப்பட்டுச் சிதைக்குரிய விறகாகப் பிளந்து அடுக்கப்படும். இந்தச் சடங்குகள் அனைத்திலும் இறந்தவரின் மூத்த மகனே கர்மம் இயற்றும் கர்த்தா ஆவான். அவன்

சடங்குகளில் ஈடுபட்டிருக்கும் போது மற்றப் பிள்ளைகள் அவனைத் தொட்டபடி நிற்பர். பிணம் முக்கால் வாசி எரிந்து சாம்பலானவுடன் சடங்கு நிகழ்த்துபவனும் அவன் சகோதரர்களும் குளித்து விட்டு அந்தக் குளத்திலோ ஆற்றிலோ இருந்து மண்ணினை எடுத்து அதனைக் கொண்டு இறந்தவரின் உருவைச் சமைப்பர். சாவுச் சடங்குகள் அனைத்திலும் மாரானின் உதவி இன்றியமையாதது. பலிக்குரிய எள்ளினையும் தர்ப்பையினையும் அச்சாதியினைச் சேர்ந்த ஒருவனே தன் கைகளால் சடங்கு நடத்துபவனிடம் தரவேண்டும் என்பது விதி. சஞ்சயனம் எனப்படும் இறந்து போனவரின் எஞ்சிய எலும்புகளைச் சேகரித்தல் நான்காம் நாள் நிகழும். பதினொன்றாம் நாள் தீட்டிலிருந்து விடுபடுகின்றனர். அதன்பின் நாள்தோறும் செய்யப்படும் சிரார்த்தம் தொடங்கும். தீட்சா எனப்படும் சிறப்புக் கடைப்பிடி ஆறுவாரங்கள் வரை நீட்டிக்கும். இது ஓராண்டு வரை நீட்டிப்பதும் உண்டு. பன்னிரண்டாம் நாள் இறந்தவர் ஆன்மா மூதாதையர்களோடு சென்று சேரும் சபிண்ட கரண சிரார்த்தம் நடத்தப்படும். இதன் பின் இறந்தவர் மூதாதையரின் ஆவி உலகினைச் சென்று சேர்வார். அதன் பின் மாசிகம் எனப்படும் மாதாந்திரச் சிரார்த்தமும் அஷ்ட சிரார்த்தம் எனப்படும் எட்டு சிரார்த்தங்களும் நிகழ்த்தப்படும். ஆப்திக எனப்படும் முதலாண்டு இறுதியிலான சிரார்த்தம் முக்கியதொரு சடங்காகும். இதனை மலபாரில் மாசம் என அழைப்பர். இதற்காகத் தாராளமாகப் பொருள் செலவிடுவது வழக்கம்.''

சாவுச் சடங்குகள் தொடர்பான மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் மேலும் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- ''சாவு நெருங்கி விட்டது என முடிவு செய்யப்பட்டவுடன் சாகக் கிடப்பவனை அவுபாசன அக்கினியுள்ள அடுப்புக்கு மேற்குப் பக்கமாகத் தூக்கிச் சென்று கிடத்துவர். மணல் மீது தர்ப்பையினைப் பரப்பி அதன் மீது தலை வடக்கு நோக்கி இருக்கும்படியாக அவனைக் கிடத்திக் காதில் ஓது மந்திரத்தை முணுமுணுப்பர். உயிர் பிரிந்த பின் உடலைக் குளிப்பாட்டி வாழையிலையால் மூடுவர். துக்கம் கொண்டாடுபவர்கள் தட்டுக்கட்டாக வேட்டி உடுத்தி ஒரு புதிய துணியினைக் குறுக்கே சேஷமாகத் துண்டுகளாக்கி அதனை அவர்கள் தங்கள் இடுப்பில் சுற்றிக் கொள்வர். பிணத்திற்குப் பின்னர் ஒரு கோவணம் அணிவிக்கப்படும். மீதோணிக்கொடியின் வேரையும் துளசி மலர்களையும் அரைத்துப் பிணத்தின் நெற்றியில் பூசுவர். குடுமியினை அவிழ்த்து விட்டுப் பூணூலை மார்பில் தொங்கும் படியாக மாலை போல இடுவர். உடம்பினை மூங்கிலாலான ஒரு பாடையில் வைத்துக் கட்டிப்

புதிய துணி ஒன்றால் போர்த்து நெருங்கிய உறவினர்களான நால்வர் இல்லத்தின் எல்லையில் அமைந்துள்ள சுடுகாட்டுக்குத் தூக்கிச் செல்வர். சிதைக்கு வடமேற்குப்பகுதியில் ஒரு குழி தோண்டி அதில் நீரினை விட்டு அதனைச் சமித்து, தர்ப்பை ஆகியவற்றால் எடுத்துப் பிணத்தின் மீது தெளிப்பர். பின்னர் தலை தெற்குப் பார்த்தபடி இருக்கும்படியாகப் பிணத்தைச் சிதையில் வைத்து நெருப்பு மூட்டுவர். பாடை தூர எறியப்படும். நெய்யும் தர்ப்பையும் கொண்டு இறந்தவரைக் குறிக்கும் வகையில் மந்திரங்களைக் கூறியபடி ஹோமம் நடத்துவர். அடுத்துக் கும்பப் பிரதட்சணம் என்னும் சடங்கு நிகழ்த்தப்படும். மூத்தவன் மண்சட்டியில் நீரைத் தோளில் சுமந்தபடி முன்னே செல்லத் துக்கங்கொண்டாடுபவர்கள் சிதையினை மும்முறை சுற்றிவருவர். பானையின் அடியில் உள்ள ஒரு துளையின் வழியே பானையில் உள்ள தண்ணீர் வழியும் படியாக முதல் சுற்றின் போது ஒரு துளையும் இரண்டாவது சுற்றின்போது இரண்டாவது துளையும் மூன்றாவது சுற்றின் போது மூன்றாவது துளையும் அதில் இடப்படும். துக்கங்கொண்டாடு பவர்கள் அந்தத் தண்ணீரைப் பிடித்துச் சிதையின் மீது தெளிப்பர். மூன்றாம் சுற்று முடிந்தவுடன் பானை சிதையின் மீது வீசி எறியப்படும். எல்லோரும் அவ்விடத்தைவிட்டுப் புறப்படுவர். மூத்த மகன் அனைவருக்கும் பின்னால் திரும்பிப் பாராதவனாக வருவான். முகம் மழித்துக் குளித்த பின் பலிச் சடங்கினைச் செய்யும் உரிமையுள்ள உறவினர்கள் ஒரு தர்ப்பையை இறந்தவரின் ஆவியாகக் கருதி அதற்குத் தண்ணீர் வார்த்து உதககிரியை என்னும் சடங்கினை நிகழ்த்தி அதன் முடிவில் இரும்பு, கருங்கல், பசுஞ்சாணம், நெல், தங்கம் ஆகியவற்றை மும்முறை தொட்டபின் சேஷ வேட்டியினை அப்பால் எறிந்தவர்களாக முன் வைத்த மாற்று உடையினைப் பெற்று உடுப்பர். அதன் பின் நடுமிட்டத்திற்குத் திரும்பி ஒரு தர்ப்பைப் புல்லை வைத்து அதற்குச் சோற்றுருண்டைகளைப் பலியாகத் தருவர். இந்த இரண்டு சடங்குகளும் பத்து நாள்களுக்கு நாளும் இருமுறை நிகழ்த்தப்பட வேண்டும். சாவு நிகழ்ந்த நான்காம் நாள் செவ்வாய் அல்லது வெள்ளிக் கிழமையாக அமையாது இருக்குமானால் அன்று சஞ்சயனம் எனப்படும் எலும்புகளைப் பொறுக்கும் சடங்கு நிகழ்த்தப்படும். இறந்தவரின் மூத்த மகன் ஒரு பாக்கு மட்டையில் பாலினை எடுத்தவனாகச் சிதை மூட்டப்பட்ட இடத்திற்குச் சென்று தர்ப்பை சேர்த்துக் கட்டப்பட்ட சமித்துக் குச்சிகளால் பாலினை எடுத்துச் சிதை மீது தெளிப்பான். மூன்று பாக்கு மட்டைகள் சிதைக்கு மேற்குப் பக்கத்தில் கால், இடுப்பு, தலைப்பகுதிகளிலிருந்து எலும்புகளை எடுத்து அவற்றிற்கு நேரே வைக்கப்பட்டுள்ள பாக்கு மட்டைகளில் வைக்கப்படும். அதன் பின்

அவற்றைப் பாலில் அலம்பி ஒரு மண்பானையிலிட்டு அவற்றின்மீது தர்ப்பையும் இடப்பெறும். அந்தப் பானையினை ஒரு துணியால் மூடி எடுத்துச் சென்று ஒரு தென்னை மரத்தின் அடியில் குழிதோண்டி அதில் பானையினை வைத்தபின் துணியினை அகற்றி விட்டுச் சேற்றால் குழியினை மூடுவர். சிதை எரிந்த இடத்திற்கருகே ஒரு குழி தோண்டி வாழைக்கன்று ஒன்றினை நடுவர். பதினொன்றாம்நாள் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் குளித்துத் தீட்டுப் போக்கியவர்களாக நீரும் சோறும் பலியாகத் தருவர். இதுவே முதல் சிரார்த்தமாகக் கொள்ளப்பட்டு அடுத்து வரும் ஆண்டுகளிலும் அந்த நாளில் சிரார்த்தம் நிகழ்த்தப்படும்.''

''பெண்கள் இறந்தால் செய்யப்படும் சாவுச் சடங்குகளும் இது போன்றவையே. இறக்கும் போது கருவுற்றவர்களாக இருக்கும் பெண்களின் உடலை இடிக்கப்பட்ட தர்ப்பை, பசுஞ்சாணம், கோமயம், சாம்பல், தங்கம் ஆகியன கொண்டு முதலில் ஏழு முறை தீட்டு நீக்கத் தூய்மைப்படுத்துவர். கொப்பூழுக்கு நான்கு அங்குலம் கீழாக வயிற்றினை அறுத்துக் கருப்பையில் உள்ள குழந்தை உயிருடன் இருக்கக் கண்டால் அதனை எடுத்து வளர்ப்பர். குழந்தை இறந்திருப்பின் ஒரு துண்டு தங்கம் கொஞ்சம் நெய் ஆகியவற்றோடு அதனைக் கருப்பையிலேயே வைத்திடுவர். பிறந்த பத்து நாள்களுக்குள்ளாக இறக்கும் குழந்தைகளுக்குச் சாவுச் சடங்குகள் விரிவாக நடத்தப்படுதலில்லை; மற்ற அனைவரும் எரிக்கப்படுவர்.''*

சாதி விதிகளுக்கு முரணாக ஒரு நம்பூத்ரி குற்றம் இழைத்துள்ளான் எனக் கருதப்படும்போதும் ஒரு கிராமத்தில் சாதிச் சச்சரவு நிகழும்போது அது பற்றி மலபார் பகுதியில் சாமோரினிடம் முறையிட்டுக் கொள்ளுவதே மரபாகும். அவர் அந்தக் கிராமத்தின் மீது அதிகாரம் செலுத்தும் உரிமையுடைய ஸ்மார்த்தரிடம் அது பற்றி முறையாக விசாரித்து அறியும் படி ஆணையிடுவார். சிறு குற்றங்களுக்குத் தவம், விரதம், தெய்வ பூசை ஆகியன நிகழ்த்தும்படி தண்டனை வழங்கப்படும். பெருங்குற்றம் இழைத்தவர்கள் சாதி விலக்கத்திற்கு உள்ளாவர். ஸ்மார்த்தரின் தீர்ப்பினை எதிர்த்து யாரும் வழக்காட இயலாது. நம்பூத்ரி பெண் ஒருத்தி தாழ்ந்த சாதியான் ஒருவனோடு தவறான நடத்தையில் ஈடுபடுவதே சாதிக்கு எதிரான குற்றங்களுள் மிகக் கடுமையானதாகக் கருதப்படுவது.

* திருமணம் சாவு தொடர்பான சடங்குகள் பற்றி மலபார் விவரக் குறிப்பிலிருந்து எடுத்துக் காட்டப்பட்டுள்ள விவரங்கள் கிரந்தவரியில் விவரக்குறிப்பில் உள்ளனவாம்.

அயல்புணர்ச்சி பற்றிய வழக்குகளை விசாரித்து அறியும் முறையினைத் திரு சுப்பிரமணிய அய்யர் பின்வருமாறு விளக்கியுள்ளார்:- ''இத்தகைய வழக்கு ஸ்மார்த்தரால் நடத்தப்படுவதால் ஸ்மார்த்த விசாரம்என அழைக்கப்படுகிறது. நம்பூத்ரி பெண் ஒருத்தியின் நடத்தையில் ஐயுறவு ஏற்படுமாயின் அவள் சமூகத்தாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்படுகின்றாள். தனிப்பட்ட முறையில் அவளிடம் வைத்திருக்கும் அன்போ பொதுவாக நிலவும் கருத்தோ இதில் குறுக்கிட இடமில்லை. இந்த மறைவான விசாரணையின் போது அதற்கு உள்ளாகும் பெண்ணின் தாயாரோ உடன்பிறந்தவனோ உடன் இருக்கலாம். ஆனால் அவர்கள் அதற்கு அழைக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. இத்தகைய பொது விசாரணைக்கான விதிமுறைகளின்படி பெருந்தொகையினைச் செலுத்தியாக வேண்டும். குற்றம் புரிந்தவளாகக் கருதப்படுபவளை உடனடியாக அந்த வீட்டு எல்லையில் உள்ள தனிக் கொட்டகையில் கொண்டு சேர்ப்பர். இது வீட்டின் நான்கு எல்லைகளுக்கும் புறத்தே அமைந்திருப்பதால் அஞ்சாம் புற என அழைக்கப்படும். இதற்காக என்று புதிதாகத் தென்னோலையால் கொட்டகை அமைக்கப்பட்டால் அது பச்சோலைப்புற எனப்படும். இதில் தங்கி இருக்கும் குற்றம் இழைத்தவளை அவளுடைய கணவன், அவன் தந்தை, அவன் தந்தையின் உடன்பிறந்தோர், அவள் தந்தை, தந்தையின் தாய்வழிப் பாட்டன், அவருடைய பிள்ளைகள் ஆகியோர் மட்டுமே பார்க்கலாமேயன்றி மற்றவர்கள் பார்த்தல் கூடாது. இவர்களுக்குப் புறம்பான வேறு யாரேனும் அவளைப் பார்க்க நேர்ந்தால் அதுவே அவள் மீது சுமத்தப்பட்ட பழியினை உறுதிப்படுத்துவதாக ஆகி ஸ்மார்த்த விசாரம் முடிந்து விட்டதாகக் கருதப்படும். ஸ்மார்த்த விசாரத்தைத் தொடங்க ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் அரசரின் அனுமதியினைப் பெற்றாக வேண்டும். முதலில் தாசி விசாரம் எனப்படும் அடிப்படை விசாரணை நடத்திய பின் இது பற்றிய விவரம் அரசருக்குத் தெரிவிக்கப்படும். இந்த அடிப்படை விசாரணையில் அதற்கு உள்ளாகும் பெண்ணின் ஆண் உறவினர்கள் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த பிராமணர்களுடன் கூடி அந்தப் பெண்ணின் நாயர் சாதி வேலைக்காரியான பெண்ணை முதலில் விசாரிப்பர். இத்தகைய விசாரணைக்குத் திருவாங்கூர் அரசரிடம் அனுமதி வேண்டி விண்ணப்பித்துக் கொள்ளும்போது அறுபத்து நான்கு பணம் அல்லது ஒன்பது ரூபாயினையும் உடன் செலுத்த வேண்டும். இத்தொகை ஸ்ரீ பத்மனாப சுவாமியின் கருவூலத்தில் கணக்கில் சேர்ப்பிக்கப்படும். திருவாங்கூர் அரசர் அத்தெய்வத்தின் பிரதிநிதியாக இருந்து ஆள்வதாகக் கருதப்படுவதாலேயே இத்தொகை கோயில் கருவூலத்தில்

சேர்ப்பிக்கப்படுகின்றது. அதன் பின் மகாராசா ஒரு ஸ்மார்த்தர் (நீதிபதி) இரண்டு மீமாம்சர் , ஒரு அகக் கோயிம்மர், ஒரு புறக்கோயிம்மர் ஆகியோரை வழக்கை விசாரிக்க அமர்த்துவார். ஸ்மார்த்தரின் பதவி பரம்பரை உரிமையுடையது. இதற்கான பரம்பரையில் கால்வழி அற்றுப் போனால் ஊர்ச்சபையினர் கூடி அந்த இடத்திற்கு மற்றொருவரை நியமிப்பர். மீமாம்சகர் சட்டங்களில் வல்ல நம்பூதிரிகளாவர். இவர்களுடைய பதவி பெரும்பாலும் பரம்பரை உரிமை உடையதாய் இருப்பதில்லை. ஸ்மார்த்தாவிற்கு விசாரணையில் உதவுவதற்காகவே இவர்கள் அமர்த்தப்படுகின்றனர். அகக் கோயிம்மர் விசாரணையின் போது ஒழுங்கை நிலைநாட்டுபவர். இது பரம்பரை உரிமை உடைய பதவியாகும். புறக்கோயிம்மர் அரசருக்குப் பதிலாக வழக்கில் பங்கு பெறுவர். முன்பெல்லாம்- மார்த்தாண்ட வர்மன் காலம் வரை கூட - ஆட்சி புரியும் அரசரே விசாரணையின் போது நேரில் வந்திருந்து ஒழுங்கை..... அனுப்பி வைக்கின்றார். பெரும்பாலும் அந்த வட்டத்தைச் சேர்ந்த குற்றவியல் நடுவரே இவ்வாறு அரசரின் பிரதிநிதியாக இடம்பெறுவார். அவரும் இதில் பங்குபெற இயலாதவராக இருப்பின் ஊர் அலுவலரிடம் அப்பொறுப்பை ஒப்படைப்பார். வழக்கை விசாரிப்பதற்கான அரசரின் ஆணை (நீட்டு) ஸ்மார்த்தாவிற்குக் கிடைக்கப் பெற்றவுடன் வழக்குத் தொடுக்கப் பட்டவளின் உறவினர்கள் அவருக்கு ஒரு சிறு தொகையினைத் தட்சணையாகச் செலுத்துவர். மீமாம்சகரை அமர்த்திக் கொள்ளும் உரிமையும் ஸ்மார்த்தாவிற்கு உண்டு. திருவாங்கூர் பகுதியில் வைதிகர்கள் யாரும் வாழ்வதில்லையாதலாலும் வைதிகர்கள் யாரும் அழைக்கப்படுவதில்லையாதலாலும் ஸ்மார்த்தாவின் அதிகாரமே செல்லுபடியாகின்றது. வைதிகர்கள் நிலையாகத் தங்கி வாழும் மலபார் பகுதியில் வழக்குகளில் பங்கு பெறும் உரிமையுள்ள ஆறு வைதிகர்களில் ஒருவர் ஸ்மார்த்தாவுடன் விசாரணை நடைபெறும் இடத்திற்குச் செல்வார். வைதிகரின் மேற்பார்வையில் அவர் சார்பில் வழக்கை நடத்தும் உரிமை மட்டுமே ஸ்மார்த்தாவிற்கு உண்டு. விசாரணை மன்றம் ஊரருகே உள்ள கோயிலில் செயல்படுவதே வழக்கம். குற்றத்திற்குள்ளானவள் அஞ்சாம்புறத்தில் இருக்க அவளுடைய பணிப்பெண் அதன் வாசலில் நிற்பாள். வழக்கில் தீர்ப்புக் கூறும் வரை குற்றத்திற்கு உள்ளானவளுடைய கோஷா உரிமை மதிக்கப்பட வேண்டும். ஆகையால் எல்லாக் கேள்விகளும் அவளுடைய பணிப்பெண்ணிடமே கேட்கப்படும். குற்றப் பத்திரிக்கை தாக்கீது செய்வது போன்ற நடைமுறை ஏதும் பின்பற்றப்படுவதில்லை. குற்றம் சுமத்தப்பட்டவளே தன் மீது குற்றம் சுமத்தப்பட்டதான

சூழ்நிலைகளை எடுத்துக் கூறுவாள். இதன் பொருட்டு ஸ்மார்த்தா இது வரை நடந்தன எதனையும் அறியாதவரைப் போல அந்தக் குடிசையில் நுழைய வருவது போலப் பாவனை செய்வார். பணிப்பெண் அவரை அவ்வாறு புகவிடாது தடுத்துத் தன்னுடைய எசமானி அதனுள் இருப்பதாகக் கூறுவாள். இதனைக் கேட்ட ஸ்மார்த்தா வியப்பினை வெளிக் காட்டியவராக அவளுடைய எசமானி அந்தப்புரத்தில் இராமல் அங்கு வந்திருப்பதேன் எனக் கேட்பார். இந்தக் கேள்வியினை முதலாவதாகக் கொண்டு விசாரணை தொடங்குவதாகக் கருதப்படும். மறுநாள் காலை பதினொரு மணியளவில் ஸ்மார்த்தாவும் வழக்கு விசாரணையில் அவருக்கு உதவுபவர்களும் அந்தத் தனித்த குடிசையின் அருகே சென்று நின்றவர்களாகப் பணிப் பெண்ணை அழைத்து முறையான விசாரணையைத் தொடங்குவர். அன்று பிற்பகல் ஐந்துமணி அளவில் ஸ்மார்த்தா அகக் கோயிம்மர் முன்னிலையில் அன்று நடைபெற்ற விசாரணையில் கிடைத்த தகவல்களை மீமாம்சகருக்குக் கூறி மறுநாள் கேட்கப்பட வேண்டிய கேள்விகளைப் பற்றி அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டறிவர். விசாரணை பெரும்பாலும் சில மாதங்கள் தொடர்ந்து நிகழும். அது பல ஆண்டுகள் வரை நீடிப்பதும் உண்டு. விசாரணைக் குழுவினருக்கான செலவு முழுவதனையும் குற்றம் சுமத்தப்பட்டவளுடைய குடும்பத்தவரே ஏற்றுக் கொள்ள வேண்டிவருவதால் இது செலவு மிகுதியும் ஏற்படுத்தக் கூடிய நடைமுறையாக அமைந்துவிடுகிறது. குற்றத்துக்கு உள்ளானவளான சாதனம் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டுவிடுவாளானால் இத்தகைய தொல்லைகள் நிகழ இடமில்லை. ஒவ்வொரு நாளும் ஸ்மார்த்தா 'இன்னும் ஏதேனும் உண்டா?' என்ற கேள்வியினை இதற்காகக் கேட்பது வழக்கம். விசாரணையின் முடிவில் உறுப்பினர்கள் ஊர்க்கோயிலில் மீண்டும் கூடுவர். குற்றம் சுமத்தப்பட்டவளுடைய பாதுகாவலன் கூடியுள்ள பிராமணர்கள் முன்வந்து வழக்கமான மரியாதையினைத் தெரிவிப்பான். ஸ்மார்த்தா அவனிடம் வழக்குப் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறுவதோடு தன் தீர்ப்பையும் வெளியிடுவார். குற்றத்திற்குள்ளானவள் குற்றம் புரியவில்லை எனத் தீர்ப்பு வழங்கப்படுமானால் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு அவளை மீண்டும் குடும்பத்தில் ஒருத்தியாக ஏற்றுக் கொள்வதோடு தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தி நடத்தையில் ஒழுக்கம் உடையவள் என்பதனை நிரூபிக்கத் தனக்கு ஏற்பட்ட பொருள் செலவினையும் தொல்லைகளையும் பற்றிய கவலையினை விட்டொழிப்பர். எதிர்பார்த்த நல்ல முடிவு கூறப்படவில்லையாயின் பிராமணர்கள் அனைவரும் கோயிலை விட்டு வெளியில் வந்து மீண்டும் கூடுவர். அப்பொழுது

நம்பூதிரி வகுப்பைச் சேராத பிராமணன் ஒருவன்- நம்பூதிரிகள் தங்கள் பிரிவினரைத் தாங்களே குற்றத்திற்கு உள்ளாக்க விரும்பு வதில்லை-எழுந்து நின்று தடித்த குரலில் குற்றத்தைப் பற்றிய விவரத்தை எடுத்துச் சொல்வதோடு ஸ்மார்த்தாவின் தீர்ப்பையும் கூறுவான். குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டவளுடைய பாதுகாவலனான ஸ்மார்த்தா அவளைப் புறக் கோயிம்மரிடம் ஒப்படைத்த பின் அங்கிருந்து சென்று குளித்து முடித்தவனாக அவளுக்குச் செய்ய வேண்டிய சாவுச் சடங்குகள் அனைத்தையும் செய்து முடிப்பான். அப்போதிருந்து சமூக, குடும்ப உறவுகளைப் பொறுத்த வரை அவள் இறந்து போனவளாகவே கருப்படுவாள். தன்னை இந்தக் குற்றத்திற்கு உட்படுத்தியவர்களாகக் குற்றத்துக்கு உள்ளானவளால் கூறப்பட்டவர்கள் தாங்கள் ஒழுக்கம் உடையவர்கள் என்பதனை நிரூபிக்க தவறுவார்களானால் அவர்களும் சாதி ஒலக்கத்திற்கு உள்ளாவர்.''

மலபாரில் அண்மையில் நடைபெற்ற அயல்புணர்ச்சி(தவறான நடத்தை) தொடர்பான வழக்கின் போது புறக்கோயிம்மார் கையில் வாள்களை ஏந்தியவர்களாக ஒழுங்கினைக் காத்தனர். வழக்கு நடைபெற்ற எல்லா நாள்களின் போதும் கோயில் ஈசுவர பூசை நடத்தப்பட்டதோடு குற்றம் சுமத்தப்பட்டவள் உண்மை கூற வேண்டும் என்பதற்காக அவளுக்குப் பஞ்சகவ்வியமும் (பசுதரும் ஐந்து பொருள்கள்) தரப்பட்டுள்ளது.

'' சில வழக்குகளின் போது குற்றத்திற்கு உள்ளானவள் ஏதும் அறியாத அப்பாவிகளைத் தன்னோடு தகாத உறவில் ஈடுபட்டவர்களாக மாட்டிவிட்டு விடுதல் உண்டு. அவ்வாறு மாட்டிக்கொண்டவர்கள் தாங்கள் அப்பாவிகள் என்பதனை நிரூபிக்க கொதிக்கும் எண்ணெய்யில் கைவிடும் கடும் சோதனைக்கோ தராசில் அமரும் கடும் சோதனைக்கோ ஆட்படுத்திக் கொள்ள வேண்டும். இவற்றுள் முன்னர்க் கூறப்பட்ட நடைமுறையான காலையிலிருந்து நண்பகல் வரை கொதித்தபடி இருக்கும் நெய்யில் கைவிட்டு வெண்கலத்தாலான ஒரு பொருளை எடுக்கும் கடுஞ்சோதனையினை அரசரின் அனுமதி பெற்றே நடத்த முடியும். அச் சோதனைக்கு ஆட்படுவர் கையினை உடனே துணியினைக் கொண்டு கட்டுவர். மூன்றாம் நாள் கட்டினை அவிழ்த்துப் பார்க்கும் போது கை எத்தகைய தீங்குக்கும் உள்ளாகாது இருக்கக் கண்டால் அவரை அப்பாவி என ஒப்புக் கொள்வர். மற்றொரு கடும் சோதனை முறையில் குற்றத்திற்கு ஆளானவன் தராசின் இரண்டு தட்டுகளில் ஒன்றில் குறிப்பிட்ட காலம் அமர்ந்திருக்க வேண்டும்.

அப்பொழுது தராசு மேலே போகின்றதா அல்லது கீழே போகின்றதா என்பதனைப் பொறுத்து அவர் குற்றவாளியா இல்லையா என்பதனை முடிவு செய்வர். இத்தகைய முறைகள் தற்போது வழக்கில் இல்லை.'' என அயல் புணர்ச்சி தொடர்பான வழக்குகளில் ஏற்படும் விபரீதங்கள் குறித்து எனக்குத் தகவல் தெரிவித்தனர். முன்பெல்லாம் கொதிக்கும் நெய்யில் கைவிடுவதான கடும்சோதனை திருவாங்கூரில் உள்ள சுசீந்திரம் கோயிலில் நிகழ்த்தப்பட்டு வந்தது. கௌதம முனிவரின் மனைவியாகிய அகலிகையோடு தகாத ஒழுக்கத்தில் ஈடுபட்டவனான இந்திரன் இக்கோயிலில் இத்தகைய கடும்சோதனைக்கு உட்படுத்தப்பட்டதால் இக்கோயில் இப்பெயர் பெற்றது.

சென்னை உயர்நீதி மன்றத்தின் முன் வந்ததான ஒரு வழக்குத் தொடர்பாகப் பதியப்பட்டுள்ளவை வருமாறு:* ''குற்றம் இழைத்தவள் எனச் சந்தேகிக்கப்பட்ட ஒரு பெண்ணின் நடத்தை தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டது. அவள் வாதி தன்னோடு முறையற்ற உடலுறவில் ஈடுபட்டதாக வாக்கு மூலம் தந்தாள். இதன் அடிப்படையில் அவர்கள் இருவரும் சாதி விலக்கத்திற்கு உள்ளாயினர். குற்றம் சுமத்தப்படாதவனான வாதிக்கு அவளைக் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புத் தரப்படவில்லை என்பதோடு தன்னுடைய கட்சியினை அவன் எடுத்துக் கூறித் தான் குற்றம் அற்றவன் என்பதனை நிரூபித்துக் கொள்ளவும் வாய்ப்புத் தரப்படவில்லை. உயர்நீதி மன்றம் வாதியினைச் சாதிவிலக்கம் செய்தது சட்டப்படி செல்லாது எனத் தீர்ப்பளித்தது. எதிர் வழக்காடிகள் அவனைச் சாதிவிலக்கம் செய்தது நல்ல எண்ணத்தோடு செய்யப்பட்டதன்று; ஆகையால் அவர்களிடம் இருந்து நஷ்ட ஈடு பெறவும் வாதி உரிமையுடையவன் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தகாத ஒழுக்கத்தில் ஈடுபட்டவள் என்ற குற்றத்திற்கு உள்ளாகின்றவளுக்கு நேர்கின்ற இடர்ப்பாடுகளைப் போக்கச் சிரக்கல் அரசர் ஓர் ஏற்பாட்டினைச் செய்துள்ளார். தல்லி பரம்ப என்ற தியனுக்கு சிரக்கலின் முந்தைய அரசர் தன்னோடு வந்து வாழ விரும்பும் சாதி விலக்கத்திற்குள்ளான பெண்களை அவன் ஏற்றுப் பாதுகாக்கப் வேண்டும் என்ற உடன்பாட்டின்படி அவனுக்குப் பெரும் நிலப் பரப்பினை வரியிலி நிலமாகவிட்டிருந்தார். மன்னனார் என்ற பட்டப் பெயருக்கு உரிய இவனுக்குச் சில தனி உரிமைகளும் தகுதிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஒழுக்கக்கேடு தொடர்பான வழக்கு விசாரணை நடக்கும் போது அது பற்றிய தகவல் மன்னனாருக்குத் தெரிவிக்கப்படும்.

* இந்திய சட்ட அறிக்கைகள், சென்னைத் தொகுப்புகள், XII, 1889.
(Ind. Law Reports, Madras Series, XII, 1889.)

அவனிடமிருந்து ஆணை பெற்ற முகவர்கள் அத்தகைய பெண்களை அழைத்துச் செல்ல வந்து காத்திருப்பர். முன்பெல்லாம் அவர்கள் அத்தகைய பெண்களை அழைத்துச் சென்று அவனுடைய இல்லத்திற்குச் செல்லும் பாதை இரண்டாகப் பிரியும் இடத்தில் அவர்களை விட்டு விட்டுச் சென்று விடுவர். அப்பாதைகளில் ஒன்று அவனுடைய வீட்டின் கிழக்குப் பக்க வாசலினையும் மற்றொன்று வடக்குப் பக்க வாசலினையும் சென்று சேரும். அங்கு விடப்படும் ஒருத்தி கிழக்கு வாசல் வழியாக அவனுடைய வீட்டினுள் நுழைந்தால் அவள் அவனுடைய மனைவியாவாள்; வடக்கு வாசல் வழியாக அவனுடைய வீட்டினுள் நுழைந்தால் அவள் அவனுடைய உடன்பிறந்தவளாக ஏற்றுக்கொள்ளப்படுவாள். இந்த விதிமுறைகள் தற்போது கண்டிப்புடன் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை.

''வேறு வேறு வேதங்களைப் பின்பற்றுபவர்களாக நம்பூதிரிகள் பல வேறு சூத்திரங்கள், கோத்திரங்கள், குலங்கள் எனப் பிரிவுப்பட்டுள்ளனர். ஆஸ்வலயான, பகுதானய, ஆபஸ்தம்ப, கௌசிக என்பன சூத்திரங்களுள் குறிப்பிடத்தக்கவை. காசியப, பார்க்கவ, பரத்வாச, வசிஸ்ட, கௌசிக என்ப கோத்திரங்களுள் குறிப்பிடத்தக்கவை. சிங்கனூர், பஞ்சால் கிராமங்களைச் சேர்ந்த சிலர் சாம வேதிகளான உள்ளனர். அவர்களுள் பெரும்பான்மையோர் ரிக் வேதிகளுமாவார். ரிக் வேதிகளான பிராமணர்கள் திருச்சூர் யோக, திருநவை யோக என்ற இரண்டு தனித்த யோகங்களைச் (அமைப்புகளை) சேர்ந்தவர்களாகப் பிரிவுபட்டுள்ளனர். சங்கராச் சாரியாரின் புகழ் பெற்ற சீடர்களுள் மூவர் நம்பூத்ரிகளாவர். அவர்கள் சங்கராச்சாரியரிடமே நேரிடையாகச் சந்நியாசம் பெற்றுக் கொண்டவர்கள். அவர்கள் மூவரும் தெற்கு மடம், நடுவிலே மடம், வடக்கே மடம் என்ற மூன்று மடங்களைத் தொடங்கினர். வடக்கே அமைந்த மடத்திற்கு உரிய பரம்பரையினர் இல்லாது போனதால் அந்த மடத்தின் சொத்துக் கொச்சி அரசருக்கு உரியதாயிற்று. இந்த மடத்திற்குரிய நிதியினைக் கொண்டு திருச்சூரில் மாணவர்கள் தங்கிப் படிக்கும் வேதபாடசாலை ஒன்று அமைக்கப்பட்டது. காலப்போக்கில் சில ஊர்களைச் சேர்ந்தவர் இந்தப் பள்ளியில் தங்கிப் படிக்கும் தனி உரிமை பெற்றவர்களாகத் தனித்த யோகத்தர் (கூட்டத்தர்) ஆயினர். அச்சமயம் திருச்சூர் பிராமணீயக் கல்வியின் மையமாக விளங்கியது. பின்னர் கொச்சி அரசரோடு கள்ளிக்கோட்டை சாமோரின் உறவு சீர் கெட்ட போது கொச்சி அரசர் தன் நாட்டு எல்லையில் வாழும் நம்பூத்ரிகளுக்காக மற்றொரு யோகத்தை அமைத்தார். அங்கே ரிக் வேதிகளான பிராமணர்களுக்கு இரண்டு யோகங்கள் உள்ளன. இந்தப்

பள்ளிகள் பல நூற்றாண்டுகளாக மிகுந்த கவனத்துடன் சமயக் கல்வி புகட்டி வருகின்றன. இந்தப் பள்ளிகளுக்கு உரிய ஆசிரியர்கள் சங்கைவத், ஏர்க் இல்லங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த இரண்டு யோகங்களுடனும் இரண்டு வாத்தியார்களுடன் ஆறு வைதிகர்களும் இணைக்கப்பட்டுள்ளனர். இந்த அமைப்பினோடு ஆறு ஸ்மார்த்தர்களும் இணைக்கப்பட்டுள்ளனர். வாத்தியார்கள் சமயக் கல்வி அளிக்கும் பணியினை மட்டும் மேற்கொள்கின்றனர். சமூகத்தவர்களுக்கு நீதி வழங்கும்பொறுப்பேதுமில்லை. வைதிகர்களும் ஸ்மார்த்தாக்களும் ஸ்மிருதிகளை நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள். நம்பூத்ரிகளின் சமூகத் தொடர்பான விதி முறைகளை வகுக்கும் அதிகாரம் முழுவதும் இவர்களிடமே குவிந்தனவாக உள்ளன" எனத் திரு சுப்ரமணிய அய்யர் நம்பூத்ரிகளைப் பற்றிக் கூறியுள்ளார்.

திரு பாவ்செட் அவர்களால் உடல் அளவுகள் எடுக்கப்பட்ட நம்பூதிரிகளின் பெயர்கள் வருமாறு:

நீலகண்டன்	பவசர்மன்
பரமேசுவரன்	நந்தி
ராமன்	குபேரன்
ஹரிஜயந்தன்	மாதவன்
சந்திரசேகரன்	அனந்தன்
வாசுதேவன்	நம்பியாதன்
கிரேணி	சன்னன்
தாமோதரன்	சிவதாசன்
கிருஷ்ணன்	சங்கரன்
மகேஸ்வரன்	

நம்பூதிரிகளின் பெயர்கள் தொடர்பாகத் திரு சுப்பிரமணிய அய்யர் பின்வருமாறு எழுதுகின்றார்:- " மற்றத் தென்னிந்திய பிராமண சமூகத்தவர்களிடம் தற்பொழுது வழக்கிலில்லாத நம்பூத்ரிகளுக்குரியதான பெயர்களைப் பட்டியல் படுத்தினால் சுவையுடையதாக இருக்குமெனக் கருதுகின்றேன். அவை வருமாறு:-

விஷ்ணு	கடம்பன்
கயந்தன	சித்ரன்
தேவதத்தா	கருவேடன்
கிராடன்	பவதாசன்
பிரபாகரன்	ஸ்ரீகுமரன்
தாத்தரேயன்	

''சிவ பெருமானுடைய மூன்றாவது பிள்ளையான சாஸ்தாவினுடைய பெயர்களான ஹரிஹரபுத்ரன் என்பதும் பூதநாதன் என்பதும் இவர்களிடையே வழக்குடையதாக இல்லாதிருத்தல் குறிப்பிடத்தக்கது. கணபதி என்ற பெயரும் இவர்களிடையே பெரு வழக்கினதாக இல்லை. ஸ்ரீதேவி, சாவித்ரி என்பனவே பெண்களுக்கான பெருவழக்கினவான பெயர்கள். இவற்றோடுகூடப் பழைய மரபு வழிப்படாத ஆண் பெண்களுக்குரியனவான சில பெயர்களும் உள்ளன. அவற்றுள் சில வேடிக்கையான அமைப்புடையன. அவற்றுள் குறிப்பிடத்தக்கன வருமாறு:-

ஆண்களுக்குரியன:-	பெண்களுக்குரியன:-
நம்பியட்டன்	நங்கைய
இட்டியட்டன்	நங்னகெலி
உழுத்திரன்	பப்பி
துப்பன்	இட்டிச்சேரி
நம்பொட்ட	உண்ணிம
	சிருத்

''மேலே தரப்பட்டுள்ள பட்டியலில் சில பெயர்களைத் தெய்வங்களோடும் புராணப் பாத்திரங்களோடும் தொடர்பு படுத்திக் காணலாம். சான்றாக உழுத்திரன் என்பது சுப்பிரமணியன் என்பதனுடைய பிராகிருத வடிவமாகும். சிருத் என்பது சீதை என்பதனுடையதும் உண்ணிம என்பது பார்வதியின் பெயரான உமை என்பதன் சிதைந்த வடிவங்களாம். நம்பூதிரிகள் ஒருவருக்கொருவர் நம்பூதிரி என்ற பட்டப் பெயரைத் தந்து அழைத்துக் கொள்ள மனம் ஒப்பார். உதாரணமாகத் தமரச்சேரி நம்பூதிரி முல்லப்பள்ளி நம்பூதிரியனை 'முல்லப்பள்ளி' என அவருடைய இல்லப் பெயரால் மட்டுமே அழைப்பார். எட்டு ஆத்யர் இல்லங்களில் ஒன்றைச் சேர்ந்த ஆத்யராக அல்லது தந்திரி ஆத்யராக இருப்பாரானால் அவர்களுடைய பெயரோடு நம்பூத்ரி என்ற பட்டப் பெயரும் சேர்த்துக் கூறப்படும். ஒரு வீட்டில் இரண்டு நம்பூத்ரிகள் இருப்பார்களானால் அவர்களுள் ஒருவன் தந்தையாகவும் மற்றொருவன் மகனாகவும் இருப்பின் அவர்கள் கடிதம் எழுதும் போதெல்லாம் தந்தை, அச்சன் நம்பூத்ரி என்பதனையும் மகன், மகன் நம்பூத்ரி என்பதனையும் தன் பெயரோடு இணைத்துக் கொள்வர். மலபாரில் வெண்மணி அச்சன் நம்பூத்ரி, வெண்மணி மகன் நம்பூத்ரி என்ற இரண்டு கவிஞர்கள் வாழ்ந்துள்ளனர். வெண்மணி என்பது அவர்கள் குடும்பப் பெயர். ஆவணங்களிலும் முக்கியமான குறிப்புக்களிலுமே நம்பூத்ரிகளின் இயற்பெயர் பதியப்பட்டிருக்கக் காணலாம்.''

ஒருவரையொருவர் விளித்து அழைத்துக் கொள்ளும்போது நம்பூதிரிகள் தங்கள் இல்லப் பெயர்கள் அல்லது குலப் பெயர்களைக் கூறி அழைத்துக் கொள்வர். நம்பூத்ரி ஒருவன் ஒரு நாயரோடோ வேறொரு சாதிக்காரனுடனோ பேசும் பொழுது அவர்களிடையே நடைபெறும் உரையாடலில் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கும் படியான வழக்கின் அடிப்படையில் நம்பூத்ரி ஒவ்வொரு வார்த்தையிலும் தன் சாதியின் உயர்வின் முத்திரையினைப் பதிப்பான். நாயர் ஒருவன் நம்பூதிரியிடம் பேசும் பொழுது தன்னைக் காலடிமை எனக் கூறிக் கொள்வான். தன்னுடைய அரிசியினைக் குறுனை என்றும் ரூபாயினைச் செப்புக் காசு என்றும் வீட்டினைச் சாணக்குழி என்றும் கூறிக்கொள்ள வேண்டிய அவன் நம்பூத்ரியினுடைய அரிசியினைப் பச்சரிசி எனவும் செப்புக் காசை ரூபாய் எனவும் வீட்டை இல்லம் அல்லது மனையெனவும் கூறக் கடமைப்பட்டவன். நாயர் தன்னுடைய துணியைக் கிழிசல் அல்லது சிலந்திக் கூடு என்று தான் கூறிக் கொள்ள வேண்டும். நம்பூத்ரியினுடைய துணியோ வெள்ளாடை எனக் கூறப்படும். தான் குளிப்பதைத் தண்ணீரில் விழுந்து புரளுதல் எனக் கூறும் நாயர் நம்பூத்ரியின் குளியலை நீராடுதல் எனக் கூறக் கடமைப்பட்டவன். தான் உண்பதையும் குடிப்பதையும் உணவு எடுப்பதாகவோ கழுநீர் தண்ணீர் குடிப்பதாகவோ கூறும் நாயர் நம்பூத்ரி அமிர்தம் பருகிவிட்டாரா எனக் கேட்கக் கடமைப்பட்டவன். தான் தூங்குவதைக் கட்டையைக் கிடத்துவதாகக் கூறும் நாயர் நம்பூத்ரியின் தூக்கத்தைக் கண் மூடுதல் என்றோ ராசா ஓய்வெடுத்தல் என்றோ கூறக் கடமைப்பட்டவன். தன் சாவினைக் காட்டிற்குப் போய் விழுதல் எனக் கூறும் நாயர் நம்பூதிரியின் சாவினை நெருப்பில் புகுதல் எனக் கூறக் கடமைப்பட்டவன். நம்பூதிரியின் முகம் மழிக்கப்படுவதில்லை மாறாக அம்பட்டனால் அவன் மயிர் வெட்டப்படுகிறது நம்பூதிரியின் கோபத்தை ஏனோ திருப்தியில்லை என்று கூற வேண்டும். நாயர் பல் துலக்குவது போல நம்பூதிரி பல் துலக்குவதில்லை; மாறாக அவன் தன் உயர்ந்த முத்துக்களைக் சுத்தம் செய்வான். அவன் சிரிப்பதில்லை ; வாய் முத்துக்களைக் காட்டுவான்.

நம்பூதிரிகளின் ஓய்வு நேரப் பொழுதுபோக்குகளையும் கேளிக்கைகளையும் பற்றித் திரு சுப்பிரமணிய அய்யர் பின்வருமாறு எழுதுகின்றார்:- ''வேதங்களையோ புராணங்களையோ ஓதிய பின் இருக்கும் ஓய்வு நேரத்தில் நம்பூதிரி சதுரங்க ஆட்டத்தில் பொழுது போக்குவான். இந்த ஆட்டத்தில் பங்கு பெறும் இருவரும் சமமான

திறமையானவர்களாக இருந்து பங்கு பெறும் போது ஓர் ஆட்டம், ஐந்து, ஆறு, ஏழு நாள்கள் வரை கூட நீடிக்கும். நம்பூதிரிகளின் மற்றொரு பொழுது போக்கு யத்ரகளியாகும். இது போர்க்கருவிகளோடு தொடர்புடைய சாஸ்தரங்களி என்பதன் திரிந்த வடிவமாகும். பரசுராமனின் பிராமணப் படைக்குழுவினராயிருந்தவர்களின் பிரதிநிதிகளான நம்பூதிரிகளின் பிரிவினரால் பேணிக்காத்து வரப்படுகின்ற ஓர் இயக்கப்பாடாகும் இது. திருவாங்கூர் அரண்மனையில் யத்ரகளியாட்டம் நிகழ்த்தப்படும் போது மகாராசாவின் அரண்மனை வாசலில் இந்த ஆட்டக்காரர்கள் அரச மரியாதைகளுடன் வரவேற்கப்பட வேண்டிய சிறப்புக்குரியவர்கள். இவர்களின் உடையும் பாடல்களும் தனித்த இயல்புடையன. இதனை நடத்தும் போது திருக்காரியூரில் பேயோட்டுதலையும் வாள் வீசுதலையும் இணைத்து வழக்கமாகச் சிவனையும் பார்வதியையும் போற்றி வாழ்த்தி ஆடும் ஆட்டத்தினை ஒத்ததாகக் காட்சி தரும் எனலாம். முன்னாளில் பிராமணர்களே கேரளத்தை ஆண்டதாகப் பொதுவாக நம்பப்படுகின்றது. தங்களுக்கென வேறு பிரிவினைச் சேர்ந்த அரசனை ஏற்பாடு செய்து கொள்வது என முடிவு செய்த அவர்கள் அட்டக்காட்டு நம்பூதிரியும் வேறு சில பிராமணர்களும் அடுத்துள்ள சேர நாட்டிற்குச் சென்று ஓர் அரசரை அழைத்து வரவேண்டும் என முடிவு செய்யப்பட்டது. அன்று மலபாரையும் கோயமுத்தூரையும் இணைப்பதான ஒரே கணவாய் நெருமங்கலம் கணவாய் என வழங்கப்பட்டது. அரசரை அழைத்துவரச் சென்ற நம்பூதிரிகள் அக்கணவாய் வழியே சேரநாட்டில் தாங்கள் ஏற்பாடு செய்து கொண்ட அரசரை அழைத்துக் கொண்டு திரும்பும் போது பக்கத்து மலைகளில் விசித்திரமானதொரு ஒளி புலப்பட்டது. செங்கனகம நாட்டுக் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிராமண இளைஞர்கள் அந்த ஒளியின் மூலம் என்ன என்பதனை அறிந்து கொள்ள அதனை நோக்கிச் சென்றனர். அவ்வாறு சென்ற அவர்கள் அது சிவபெருமான் மனைவியான ஸ்ரீபகவதி என்பதனைக் கண்டு மிக வியப்புற்றனர். ஸ்ரீ பகவதி அவர்களுக்குத் திருக்காரியூர் வழியாகப் பெருமாளின் தலைநகரான கொடுங்கநல்லூருக்குச் செல்லும்படியாக ஆணையிட்டார். பகவதியினை நேரில் கண்டதால் வர இருக்கும் பல நற்பேறுகளைக் கருத்தில் கொண்டவனாக அந்த அரசன் அம்மலைகளுக்கு நெருமங்கலம் எனப் பெயரிட்டதோடு அதனைச் சுற்றியுள்ள நிலம் அனைத்தையும் தெய்வமான பார்வதியை நேரில் காணக்கொடுத்து வைத்த செங்கனகம நாட்டைச் சேர்ந்த பிராமணர்களுக்கு வரியிலியாகக் கொடுத்துவிட்டான். அவர்கள் திருக்காரியூர் கோயிலினுள் சென்ற போது சேரப் பெருமாள் என குரல்

கேட்டது. பரசுராமன் வாழ்ந்து வருவதாக நம்பப்படும் அந்த நகரத்துள் பெருமாள் யாரும் நுழையக்கூடாது என்பதே இதன் பொருளாகும். இந்தக் கட்டளையை மலபாரைச் சேர்ந்த சத்திரியர் அனைவரும் ஏற்று இன்றளவும் இந்த நகரில் நுழையாதவர்களாகவே இருந்து வருகின்றனர். ஒரு வழக்கு வரலாற்றின்படி இந்த இடத்தில் ஆறாவது பெருமாளாக இருந்தவர் பௌத்த சமயத்தின்பால் (பௌத்த சமயத்திடமோ இசுலாமிய சமயத்திடமோ என்பதனை உறுதிபட நாம் கூற இயலாது) மிகுந்த ஆர்வம் காட்டுகின்றவராகப் பிராமணர்களை அழைத்து அவர்களிடம் பௌத்த சமயம் உயர்ந்ததா அவர்களுடைய சமயம் உயர்ந்ததா என்பதனைப் பற்றியதொரு முடிவு காணச் சமய வாதப்போர் நிகழ்த்த வேண்டும் எனக் கூறினார். இந்த வாதில் வெற்றி பெற வேண்டிப் பிராமணர்கள் உள்ளூர் சிவன் கோயிலில் உள்ள சிவபெருமானுக்கு வழிபாடு நிகழ்த்தினர். அப்பொழுது ஒரு கங்கம சந்நியாசி அவர்கள் முன் தோன்றி அவர்களுக்கு நான்கு வரிகளில் அமைந்த நாலுபதம் என்ற சுலோகத்தைச் சொல்லித் தந்தார். நம்பூதிரிகள் அது சாமவேதத்தின் சுருக்கம் எனக் கூறுவர். அந்தக் கோயிலினுள்ளிருந்து ஸ்ரீராமர் காலத்திலிருந்து தொடர்ந்து எரிந்து வருவதாகக் கூறப்படும் ஒரு விளக்கினை எடுத்துக் கொண்டு கோயில் குளத்தின் மேற்குக் கரையில் அமைக்கப்பட்டிருக்கும் அறையில் வைத்துப் பக்திப் பாடல்களைப் பாடிச் சிவனை வழிபடுமாறு கூறினார். அவர்கள் இவ்வாறு நாற்பத்தொரு நாள் தொடர்ந்து வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது மயூரபட்டன் தலைமையில் கிழக்குக் கடற்கரையிலிருந்து ஆறு பிராமணர்கள் நம்பூதிரிகளின் உதவிக்கு வந்து சேர்ந்தனர். இந்தப் பிராமணர்களின் உதவியோடு நம்பூதிரிகள் பௌத்தர்களோடான தங்கள் வாதத்தை நீட்டித்தபடி இருந்தனர். வாதத்தினை ஒரு முடிவுக்குக் கொண்டு வர விரும்பிய பெருமாள் ஒரு சோதனையினை வைக்க முடிவு செய்தார். அவன் ஒரு பானையில் பாம்பினை மூடி வைத்தவனாக வாதில் ஈடுபட்டவர்களை அதனுள் இருப்பது என்னவென்று கூறும் படி கேட்டான். பௌத்தர்கள் பாம்பு உள்ளது என்ற சரியான விடையினை முதலில் கூறினர். அடுத்துப் பிராமணர்கள் அதனுள் தாமரை மலர் இருப்பதாகக் கூறினர். இதனால் பௌத்தர்களிடம் அன்பு கொண்டவனான பெருமாள் பானையினைத் திறந்து பார்த்து அதனுள் பாம்புக்குப் பதிலாகத் தாமரை மலர் இருப்பதைக் கண்டு வியப்புற்றான். பௌத்தர்கள் வாதில் தங்களுக்குத் தோல்வியென உணர்ந்தனர். அப்போதிலிருந்து நம்பூதிரிகள் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள விரும்பும் போதெல்லாம் நாலுபதம் பக்தி பாடலை இசைக்கும் வழக்கத்தை மேற்கொண்டு வருகின்றனர். திருக்காரியூரிலும்

சிவபெருமானைப் பிராமணர்கள் வழிபடும்போது பல்வேறு ஆவிகளும் தேவதைகளும் பார்வதியினைத் தங்களுடைய விடுகதைகளாலும் விகடப் பேச்சுக்களாலும் மகிழ்வித்துக் கொண்டிருந்தன என்றும் அப்போது ஆகாயத்திலிருந்து எழுந்த ஓர் அசரீரி அப்போதிருந்து சிவனுடைய வழிபாட்டில் அத்தகைய விடுகதைகளும் விகடப் பேச்சுகளும் இடம் பெற வேண்டுமென ஆணையிட்டதாகவும் கூறப்படுகின்றது.

''இத்தகைய சமயத் தொடர்புடைய சமூக நிகழ்ச்சிகளைப் பதினெட்டுச் சங்கங்கள் நிகழ்த்தி வருகின்றன. இந்தச் சங்கங்களின் முக்கியமான தலைமையினை மேற்கொண்டிருப்பவன் வேதங்களில் வல்ல ஒத்து நம்பூதிரி எனப்படும் வாக்யவிருத்தி ஆவான். பரீட்சக்காரன் என்பவன் யத்ரகளியாட்டத்திற்குப் பொறுப்பு வகிக்கும் குருவும் ஆவான். இந்தப்போர் விளையாட்டில் ஈடுபட்டுள்ள நம்பூதிரிகள் பத்ரகாளி, சாஸ்தா, சுப்ரமணியர் ஆகிய தெய்வங்களையே தங்கள் குடும்பத்திற்குரிய வழிபடு தெய்வங்களாகக் கொண்டுள்ளனர். யத்ரகளி நிகழவுள்ள அன்று மாலையில் இந்தப் பிராமணர்கள் விளக்கைக் சூழக் கூடியிருந்தவர்களாக நாலுபதம் பக்திப் பாடல்களையும் தங்கள் குடும்பத் தெய்வங்களைப் போற்றுவனவான பாடல்களையும் சிறப்பாகத் திருக்காரியூரில் கோயில் கொண்டுள்ளவனான சிவனைச் சிறப்பிக்கும் பாடல்களையும் பாடுவர். நிகழ்ச்சி நடைபெறும் நாளன்று இரவு விருந்தில் கலந்து கொள்ளும் இவர்கள் கரிஸ்லோக எனப்படும் பாடல்கள் சிலவற்றைப் பாடுவர். அதன்பின் அவர்கள் மெல்ல நகரும் ஊர்வலமாக ஆடுகளத்தை நோக்கிச் செல்வர். அப்போது வள்ளப்பாட்டின் அடியளவில் அமைந்த பாடல்களைப் பாடியவர்களாகப் பூணூலினைக் கழுத்தில் அபிவிதி முறையில் தொங்கவிட்டபடி நடப்பர். அரங்கின் நடு இடத்தில் ஏற்றப்பட்ட விளக்கு ஒன்று வைக்கப்பட்டிருக்கும். நெல் நிறைந்த பர (அளக்கும் படி) ஒன்றும் தேங்காய்க் குலைகளும் வாழைப்பழங்களும் பலவகை மலர்களும் அதனருகே இடம் பெற்றிருக்கும். அப்பிராமணர்கள் விளக்கைச் சுற்றி வட்டமாக அமர்ந்து முதலில் கணபதியினைப் போற்றிப் பாடியபின் சிவனைப் போற்றிப் பாடுவர். இதன் பின் பலவகை ஊமை நாடகக் காட்சிகள் நிகழ்த்தப்படும். அடுத்து அவர்கள் தங்களுடைய வாள்வீச்சுத் திறமையினை வெளிப்படுத்துவர். தங்களை வைத்து ஆட்டம் நடத்துபவரின் முன் எரியும் தீப்பந்தத்தைச் சுழற்றி அவர்களைப் பிடித்துள்ள தீய ஆவிகளை ஓட்டும் சடங்கினை முதலில் நிகழ்த்துவர். நிகழ்ச்சியின் இறுதியில் பகவதியினை வாழ்த்தி எல்லா வகை

நலங்களையும் தரும்படி வேண்டுவர். இந்த நிகழ்ச்சியினைத் தொடர்ந்து யத்ரகளி நம்பூத்ரிகள் பலவகைக் களிப்பூட்டும் நிகழ்ச்சிகளையும் நடத்துவர். பிரிட்டிசாரின் ஆளுகையின் கீழுள்ள மலபாரில் இந்த யத்ரகளி இயக்கம் சமய நெறியோடு பின்னிப் பிணைந்ததாக மக்களிடையே செல்வாக்கோடு விளங்கி வருகின்றது. புதிய இந்தியாவின் சீர்திருத்த நெறியினைப் மேற்கொண்டவர்களாகப் பரீட்சா களங்களை ஏற்படுத்தியுள்ளவர்களின் எழுச்சியால் பழைய மரபிலான இவற்றை ஒதுக்கித் தள்ளி விடுதல் என்பது நிகழ வாய்ப்பில்லை என்றே கொள்ளலாம்.

மலபாரின் தேசிய நாடகமான கதகளியில் நம்பூதிரிகள் மிகுந்த ஆர்வம் காட்டி இதனைப் போற்றி வருகின்றனர். நம்பூதிரிகள் பெரும்பாலோர் கதகளிப் பாடல்களையும் ஆட்டக் கதைகளையும் நன்கு புரிந்து கொண்டவர்களாக உள்ளனர். நிகழ்ச்சியில் பங்கு பெறுகின்றவர்கள் சிறு தவறு செய்தால் கூட அதனைக் கடுமையாக விமர்சிப்பர். மலபாரில் கதகளி முந்நூறு ஆண்டுத் தொன்மை யுடையதாக நடைபெற்று வருகின்றது. கொட்டாரக்கரை இல்லத்தைச் சேர்ந்த பழைய ஆட்சியாளர்களால் அது முதன் முதல் மலபாரில் அறிமுகப்படுத்தப் பட்டதாகக் கூறுவர். இராமாயணக் கதையே கதகளி ஆட்டக்கருவாகத் தொடக்கத்தில் இருந்து வந்த காரணத்தால் இதனை இராமன் ஆட்டம் எனவும் வழங்குகின்றனர். கதகளியில் ஓர் ஆட்டம் இரவில் எட்டு முதல் பத்து மணி நேரங்கூட நடக்கும். சத்திரியர், அசுரர், ராக்கதர், கிராடியர், குரங்குகள், பறவைகள் முதலியனவற்றுக்கெனத் தனித்தனியே பொருத்தமான ஒப்பனைகள் உள்ளன. ஆட்டம் ஊமை நாடகமாகவே நடைபெறும். மேடையில் எந்தப் பாத்திரமும் பேச அனுமதிக்கப் படுவதில்லை. பாடல்களைப் பாடுபவர்களான பாகவதர்களே இசைப்பர். நடிகர்கள் நடிப்பதைத் தவிர வேறு எதிலும் ஈடுபடார். நம்பூதிரிகள் தொன்மையான இந்த ஆட்டத்தை மிக ரசிப்பதோடு இதன் வளர்ச்சிக்குப் பெருமளவில் உதவியும் செய்கின்றனர்.

'' சமயத்தோடு எவ்வகையிலும் தொடர்பில்லாத வேறு பல பொழுது போக்குகளிலும் இவர்கள் ஈடுபடுகின்றனர். ஏழு நாய்களும் சிறுத்தையும், பதினைந்து நாய்களும் சிறுத்தையும், இருபது நாய்களும் சிறுத்தையும் எனப்படும் புலிக்கரம் அவற்றுள் குறிப்பிடத் தக்கவை. இந்த ஆட்டங்களில் நாய்களைப் பக்கத்திற்கு இரண்டிரண்டாகச் சிறுத்தையைச் சுற்றி அமைக்க வேண்டும். தரையில் கோடிட்டு

நாய்களுக்கும் சிறுத்தைகளுக்கும் உரியனவாக வேறு வேறு அளவிலான கற்களைப் பயன்படுத்துவர்.

''ஏழாம் மட்டுக்களி என்ற பொழுதுபோக்கினைக் கேரளத்தைச் சேர்ந்த ஏழாம் நம்பூதிரி கிராமத்தவர்கள் அறிமுகப்படுத்தியதால் அது அப்பெயர் பெற்றது. யத்ரகளிக்குரியதான சமயத் தொடர்பான நிகழ்ச்சிகள் ஏதுமின்றி நடத்தப்படும் சுருங்கிய வடிவிலான பலர் கூடிப் பொழுது போக்குவதற்காக ஆடப்படும் யத்ரகளி இது. இதில் பங்கு பெறுபவர்கள் அனைவரும் பிராமணர்களாக இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இந்த ஆட்டத்தில் பங்கு பெறுபவர்கள் விரதம் இருப்பதோ சமயக் கட்டுப்பாட்டுக்கு உரிய நடத்தையை மேற்கொள்வதோ கட்டாயமில்லை. யத்ரகளி ஆட்டத்தினைப் போலவே விளக்கைச் சுற்றி அமர்ந்து சிவபெருமான் பெருமைகளைப் புகழ்ந்து பாடுவர். அவ்வாறு பாடி வரும் போது அதில் பொழுதுபோக்கு விளையாட்டிற்குரிய பகுதி வரும். இரு குழுவினரின் நினைவாற்றல், சமயத்திற்குத் தக்கவாறு செயற்படுதல் ஆகியனவற்றில் யார் சிறந்தவர்களாக உள்ளனர் என்பது இந்தப் பொழுதுபோக்கில் குறிப்பிடத்தக்க வகையில் கண்டுணரப்படும். பங்கு பெறுபவர்களுள் ஒருவரான கல்லூரி நாயர் என்பவரே இந்தப் பொழுது போக்குப் போட்டியின் நடுவராக இருப்பார். இருவர் ஒருவரை ஒருவர் கேள்விகள் கேட்டுக் கொண்டு அதற்கு விடையும் இறுப்பர். மூன்றாவதாக ஒருவர் அவர்கள் விடையில் உள்ள தவறுகளைச் சுட்டிக் காட்டுவர். வேறு இருவர் நடுவரின் ஆணையினை நடத்துவிக்கும் முகவராயிருந்து அவரிடும் ஆணைகளை நிறைவேற்றுவர். அதன் பின் ஆட்டத்தின் போக்கில் நகைச்சுவைக் காட்சிகள் புகுத்தப்படும். இட்டிக் கந்தப்பன் நாயர், பரக்கல், முத்தி, பட்டர் போன்ற பாத்திரங்கள் மேடையில் தோன்றிக் கூடியுள்ளவர்களை மகிழ்விப்பர்.''

நம்பூதிரிகள் வேதத்தைப் பின்பற்றும் பிராமணர்கள். வேதங்களே அவர்களுடைய சமயநூல்கள். நம்பூதிரிகளைச் சைவர்கள் என்று கூறுவதே பொருத்தமானது. எனினும் அவர்கள் விட்டுணுவை ஒதுக்குவதில்லை. தென்னிந்தியாவினைச் சேர்ந்த சாதாரண வைணவ பிராமணன் ஒருவனுக்குத் தான் செல்லும் வழியில் உள்ள சிவன் கோயிலைப் பற்றிய எத்தகைய சிந்தனையும் இராது. அக்கோயிலின் திருவிழாக்களில் அவன் பங்கு பெறுவதோ ஆர்வங்காட்டுவதோ இல்லை. நம்பூத்ரிகளுக்குச் சிவனே பெருந்தெய்வம். எனினும் விட்டுணு, கிருஷ்ணன், நரசிம்மர், ஸ்ரீராகவன், கணபதி, சுப்பிரமணியர்,

பகவதி முதலிய தெய்வங்களுக்குரிய கோயில்களையும் இவர்கள் உடையவர்களாக உள்ளனர். சிவனும் விட்டுணுவும் இணைந்து அமைந்த தெய்வங்களான சாஸ்தா, சங்கரநாராயணன் போன்ற தெய்வங்களுக்கான கோயில்களும் உள்ளன. லிங்க உருவினையே இவர்கள் வழக்கமாக வழிபடுகின்றனர்.

மற்றப் பிராமணர்களைப் போலவே உலகின் எட்டுத் திசைகளான வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு,மேற்கு, வடமேற்கு ஆகிய எட்டுத் திசைகளையும் அஷ்டதிக்குப் பாலகர்கள் தங்கள் வாகனங்களில் அமர்ந்தவர்களாகக் காத்துவருவதாக நம்பூதிரிகளும் நம்புகின்றனர். இந்திரன் மேல் உலகத்தையும் இயமன் கீழ் உலகத்தையும் ஆள்கின்றனர். சூரியன் சூரியமூர்த்தி என்ற தெய்வமானான். இவர்கள் அனைவரும் இவர்களுடைய மனைவிமாருடன் வழிபடப்படுகின்றனர். நம்பூதிரிகள் தீய ஆவிகள் உள்ளன என நம்பினாலும் அவற்றை வழிபடுவதில்லை

அண்மைக் காலத்தில் நம்பூதிரிகள் வேதாந்த நெறியின்பால் மிகுந்த ஈடுபாடு காட்டி வருகின்றனர். இந்த உலகில் ஒரே ஒரு ஆத்மா தான் உண்மையானதென்றும் அதற்குப் புறமான அனைத்தும் மாயை என்பதனையும் வற்புறுத்தும் வேதாந்தக் கோட்பாடு ' ஏகம் ஏவ அத வித்டீயம்' என்ற மூன்று வார்த்தைகளுள் அடக்கிக் கூறப்பட்டுள்ளது. (இரண்டாவது ஒன்று இல்லாததாக உள்ள ஒன்றே உள்ளது)

நம்பூதிரிகள் தங்களை ஆரிய பிராமணர்கள் என அழைத்துக் கொள்கின்றனர். வடநாட்டிலிருந்து மலபாருக்கு இவர்கள் குடிபெயர்ந்து வந்ததாகக் கூறப்படும் வழக்கு வரலாறு உண்மையானது என்பதில் ஐயமில்லை. தென்னிந்தியாவில் காணப்படும் வேத நெறிப்பட்ட பிராமணியங்களுள் இவர்களுடையதே தூய்மையானதாகும்.

நம்பூதிரிகளின் சமயக் கோட்பாடுகள் பற்றிய முழு விவரங்களை இந்த நூலில் தருதல் இயலாது. நம்பூதிரி ஒருவனுடைய வாழ்க்கை தியாகங்கள் பலவற்றை அடுத்தடுத்து மேற்கொள்வதற்குரியது. இறுதியாக அவன் தன் உடலைச் சிதையில் எரித்துப் பலியிட்டுக் கொள்கிறான். ஆண் சந்ததி இல்லாதபோது நம்பூதிரி புத்ரகாமேஷ்டிதி அல்லது கர்ம விபாக பிரயஸ்சித்த யாகங்கள் செய்தோ பலிகளைக் கொடுத்தோ மகனைப் பெறும் பேறு அடைகின்றான். உடல் நலம் கெடும்போது மிருத்யுஞ்சய சாந்தியக்ளும் செய்து நோய் நீங்கப்

பெறுகின்றான். ஆத்ம விடுதலையை முன்னிட்டு அவன் அஜயக்ளும் செய்கின்றான். நம்பூதிரிகள் விலங்குகளின் இறைச்சியினை உண்ணத் தடையுள்ளதெனினும் இந்த யக்ஞத்தில் பலியிடப்பட்டபோது எஞ்சியிருக்கும் ஆட்டின் இறைச்சியினைப் புனிதச் சடங்கின் ஒரு பகுதியாக கூடியுள்ள நம்பூதிரிகள் அனைவரும் உண்கின்றனர். இவர்கள் இறைச்சி உண்பது இந்த ஒரு சமயத்தில் மட்டுமே. வழிபாட்டின் போது இவர்கள் பலமுறை விழுந்து நமஸ்காரம் செய்வர். சிலர் இதனை நாளும் நூறு முறை கூடச் செய்கின்றனர். மற்றவர்கள் அவ்வாறு செய்வதில்லை. இது நல்ல உடற்பயிற்சியாக அமைந்து கைகால்களைப் பலப்படுத்துகின்றது.

கருவுறுதல் தொடர்பாகவும் குழந்தைகளுக்கு நடத்தப்படும் சடங்குகள் தொடர்பாகவும் முன்பே கூறப்பட்டுள்ளது. உபநயனம், சமாவர்தனம், உபாகர்மம் என்ற மூன்று முக்கியமான சடங்குகளும் நிகழ்த்தப்படுகின்றன. இவை தொடர்பாகத் திரு சுப்பிரமணிய அய்யர் எழுதியுள்ளவை வருமாறு:- ''உபநயனம் ஒருவனைப் பிராமணன் ஆக்கும் சடங்காகும். அடிக்கடி மேற்கோளாகக் காட்டப்படும் சுலோகம் ஒன்று இந்த உலகத்தில் பிராமணன் தான் இயற்றும் கருமங்களின் அடிப்படையிலேயே பிராமணனாகக் கருதப்படுகின்றான் என்ற கருத்து அமைந்ததாகும். உபநயனம் என்ற சொல் ஒருவனைக் கடவுளிடம் செலுத்திச் செல்லும் சடங்கு. அதாவது குருவின் உதவியோடு பரம்பொருளை அறிதல் என்பதாகும். ஒரு சிறுவன் ஏழு, எட்டு அல்லது ஒன்பது வயதினனாக இருக்கும் போது இச் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. நான்கு ஆச்சிரமங்களையும் மேற்கொள்ள உரியவர்களான ஆண்களுக்கு மட்டுமே இச்சடங்கு உரியது என மேற்போக்காகப் பார்க்கும் போது புலனாகும். பண்டைக் காலத்தில் பெண்களும் இச் சடங்கினை மேற்கொண்டதாகத் தெரிகின்றது. பெண்கள் மணந்துகொண்டே ஆக வேண்டும் என்ற கட்டாயத்திற்கு உள்ளாகாமல் இச் சடங்கிற்குப் பின் உடனே சந்நியாசத்தையும் மேற்கொள்ளலாம். சீதை யக்ஞோபவிதமான புனித நூலினை அணிந்தவளாக இருந்தாள் எனக் கூறப்படுகிறது. பிராமணன் பிராமணனாகப் பிறப்பதில்லை. கர்மங்களால் அவன் பிராமணன் ஆக்கப்படுகின்றான். இதனை வேறு விதமாகச் சொன்னால் பிராமணச் சிறுவன் ஒருவன் பிறக்கும் போது சூத்திரனே. உரிய கர்மங்களைச் செய்து கொள்வதால் மட்டும் அன்றி ஆத்ம ஞானத்தை அடையும் நோக்கோடு கட்டுப்பாடான வாழ்க்கை முறைகளையும் மேற்கொள்ளும் போதே அவன் இரு பிறப்பாளன் ஆகின்றான். உபநயன என்ற சொல்

அருகே எனப் பொருள்படும் உப என்ற சொல்லும் இட்டுச் செல்லுதல் எனப்பொருள்படும் நயன என்ற சொல்லும் இணைந்து பிறந்ததாகும். ஓர் இளைஞன் பிரம்மஞானத்தை நோக்கியே அழைத்துச் செல்லப்படுகின்றான் என இதற்குச் சிலர் விளக்கம் தருவர். மற்றவர்கள் குருவிடம் இட்டுச் செல்லப்படுதல் என இதற்குச் விளக்கம் தருவர். எழுத்தச்சன் நாயர் அம்பலவாசி, மலையாளம் கற்றுத்தந்த குருமார்களுள் ஒருவருக்குத் தட்சணை தருவதோடு ஒரு நம்பூதிரியின் உபநயனச் சடங்கு தொடங்கும். சிறுவன் பலியிடுவதற்கான நெருப்பின் மேற்குப் பக்கத்தில் கிழக்குப் பார்த்தவனாக நிற்பான். அவன் தந்தை அவனருகில் அதே போன்று கிழக்குப் பார்த்தவராக நிற்பார். சிறுவனின் தலைமீது உத்தரீயம் எனப்படும் இரண்டாவது வேட்டி இடப்பெறும். கிருஷ்ண திருகம் எனப்படும் மறிமானின் தோலாலான கச்சை இணைக்கப் பெற்ற பூணூல் அவன் வலத் தோளில் அணிவிக்கப்படும். அப்போது அவன் கண்களை மூடியவனாகப் பணிவு தோன்ற நிற்பான். பூணூலும் மான் தோல் கச்சையும் இச் சிறுவனுடைய கண்களுக்குப் புலனாகாதபடி துணியால் போர்த்தப்பட்டிருக்கும். அதன் பின் அவனை வெளியே அழைத்துச் சென்று புதிய பிரமச்சாரிக்குச் சூரியனைக் காட்டி அவனைத் தன்னுடைய கதிர்களால் நிறைக்கும்படி வாழ்த்தி வழிபடுவர். தன்னுடைய குருவினை வணங்கி வாழ்த்தியபின் அவன் தனக்குச் காயத்ரி மந்திரத்தை உபதேசிக்குமாறு வேண்டுவான். சில அடிப்படைச் சடங்குகளை நிகழ்த்தி முடித்தபின் அவனுடைய குரு அவன் வலக்காதில் புனித மந்திரமான ஓம் என்பதனைக் கூறிக் காயத்ரியினை ஒன்பது முறை கூறுவார். அதன் பின் அவன் பிரமச்சரிய ஆசிரமத்தின் போது கடைப்பிடிக்க வேண்டிய சில ஒழுக்க நெறிகளையும் அவனுக்கு அறிவுறுத்துவார். ''நீ வேதங்களை ஓதத் தகுதியுடையவனாக ஆகி விட்டாய். நீ புக உள்ள ஆசிரமத்திற்குரிய எல்லாக் கடமைகளையும் தவறாது செய்வாயாக. பகலில் ஒரு போதும் உறங்காதே. உன் ஆத்ம குருவிடம் உன்னை ஒப்படைத்தவனாக வேதங்களை ஓதுவாயாக எனக் குருவானவர் அச் சிறுவனுக்கு அறிவுரை கூறுவார். இந்தக் கட்டளைகள் சமஸ்கிருதத்தில் கூறப்பட்டாலும் அவற்றுக்கான விளக்கம் அச்சிறுவன் புரிந்து கொள்ள வேண்டி மலையாளத்திலும் அளிக்கப்படும். கிழக்குக் கடற்கரையினைச் சேர்ந்த பிராமணர்கள் இது போலத் தமிழில் விளக்கம் தருவதில்லை. இந்த அறிவுரைகளைக் கூறியபடி குருவானவர் அரசங் *(Ficus religiosa)* குச்சியாலான ஒரு தண்டினை அவனிடம் தருவார். அதன்பின் அச் சிறுவன் அங்குக் கூடியுளள தன் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் வணக்கம் செலுத்துவான். பிட்சா பாத்திரம் எனப்படும் ஒரு பித்தளைப் பாத்திரம் அதன் பின் அவனிடம்

தரப்படும். பிரமச்சரியத்தின் போது அவன் வீடு வீடாகச் சென்று தன் அன்றாட உணவினைப் பிச்சை எடுத்து வருவான். ஒரு கையில் அப்பாத்திரத்தையும் மற்றொரு கையில் தண்டினையும் ஏந்தியவனாக அவன் முதலில் தன் வீட்டின் அடுப்படிக்குச் சென்று தன் தாயாருக்கு உரிய வணக்கத்தை முறையாகச் செலுத்தியவனாகப் 'பிச்சாரம் பவதிப்ததாடு' எனக் கூறுவான். எனக்கு ஏதேனும் பிச்சையிட உங்களுக்கு விருப்பமா என்பதே இதன் பொருள். அவனுடைய தாயார் ஐந்து அல்லது ஏழு பிடி அரிசியினை அவன் பிச்சைப் பாத்திரத்தில் இடுவாள். கூடியுள்ள பெரியோர்களிடமிருந்தும் இது போலப் பிச்சை பெற்ற பின் அவன் அப்பாத்திரத்தை தன் முதல் குருவான தந்தையிடம் 'பினக்சமாமிதம்' (இதுவே நான் ஏற்று வந்த பிச்சை) எனக் கூறியவனாகத் தருவான். அவன் தந்தை ' எல்லாம் நலமாகட்டும்' என அவனை வாழ்த்துவார். காயத்ரி ஜபத்திற்குப் பின் சமிததானச் சடங்கு நிகழ்த்தப்படும். இது கிரகஸ்தர்களின் அவுபாசனச் சடங்கினை ஒத்ததான பிரமச்சாரிகளுக்குரிய அக்கினியினை வழிபடும் சடங்காகும். இந்த வழிபாட்டினை அவர்கள் நாளும் இரண்டு முறை நிகழ்த்த வேண்டும். இரவில் மற்றொரு ஹோமம் நிகழ்த்திய பின் பூணூலையும் அதனோடு இணைக்கப்பட்டுள்ள மான் தோலையும் போர்த்துள்ள துணி அகற்றப்பட்டு முதன்முதல் அச்சிறுவன் பிச்சை உணவினை எழுந்து ஏற்கத் தொடங்குவான். தோலாலான கச்சையோடு பிரமச்சாரி தர்ப்பைப் புல்லால் முறுக்கப்பட்ட மேகலையினையும் அணிவான் எனப் பர்போசா பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதியிருப்பது நம்பூதிரி இளைஞனைப் பற்றி என்பதில் ஐயமேதுமில்லை. ''இவர்களுக்கு வயது ஏழு ஆனதும் இவர்கள் கழுத்தில் இரண்டு விரற்கடை அகலமுள்ள தோலாலான பட்டையினை அணிந்து கொள்கின்றனர். இது 'சொஸ்ன மெர்கன்' என அவர்கள் அழைக்கும் விலங்கின் தோலாகும். அவர்கள் ஏழாண்டுகள் வெற்றிலை போடுதல் கூடாது எனத் தடை விதிக்கப்படுகின்றார்கள். இந்த ஏழாண்டுகளும் அவன் தன் பட்டையினைக் கழுத்திலிட்டுக் கைகளின் கீழே தொங்கவிட்டவனாக இருப்பான். அவனுக்கு வயது பதினான்கு ஆகும்போது அவன் பிராமணனாக ஆக்கப்படுகின்றான். அப்போது அவன் கழுத்தைச் சுற்றிக் கிடக்கும் தோல் பட்டை அகற்றப்படும். அதன்பின் அவன் மூன்று பிரிகளையுடைய நூலினைத் தான் பிராமணன் என்பதற்கு அடையாளமாகத் தன் வாழ்நாள் முழுவதும் அணிந்திருப்பான்.'' நூற்றாண்டுகளுக்கு முன்பு கண்டிப்புடன் பின்பற்றப்பட்டு வந்த அந்த விதிகள் இன்றும் கடைப் பிடிக்கப்படுகின்றன. குறைந்தது, ஐந்து ஆண்டுக்கால அளவுக்கு நீட்டிக்கும் பிரமச்சரியத்தை ஒவ்வொரு

நம்பூத்ரி சிறுவனும் மேற்கொள்கின்றனர். இந்தச் சமயத்தில் அவன் சந்தனக் கலவை, நறுமண பூச்சு, மலர்கள் ஆகியனவற்றைப் பயன்படுத்துதல் கூடாது. பகலில் அவன் தூங்குதல் கூடாது. வழக்கமான முறையில் அவன் இடையாடையினையும் அணிந்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. காலில் செருப்பணிதலோ குடைபிடித்துக் கொள்வதோ கூடக் கூடாது. இவ்வாறு பிரமச்சரிய விரதத்தை மேற்கொண்டவன் அதனை முடித்து மாணவன் என்ற நிலையைத் தாண்டுவது சமாவர்த்தன எனப்படும். அன்று காலையில் சில சமயச் சடங்குகளைச் செய்து முடித்த பின் உபநயனச் சடங்கிற்குப் பின் முதன் முறையாக அந்தப் பிரமச்சாரி முகம் மழித்துக் கொள்வான். தான் அணிந்துள்ள தோல் பட்டையினையும் மேகலையையும் கழற்றியவனாக அவன் குளித்துச் சந்தனக் கீற்றுத் தீட்டிக் கொண்டு மல்லிகை மலர்களைச் சூடி, செருப்பு அணிந்து குடை பிடித்தவனாக முத்து மாலை தரித்துத் தலைப்பாகை கட்டிக் கொண்டு சில சடங்குகளை நிகழ்த்துவதோடு சமாவர்த்தனச் சடங்கு முடிவுறும். இவ்வாறு கிரகஸ்தத்தில் நுழைகின்ற இவனை இதனை அடுத்த மூன்று நாள்களும் தீட்டுக்குள்ளானவனாகக் கருதுவது வழக்கம். பழைய பிரமச்சரிய ஆசிரமம் இறந்து புதிய கிரகஸ்த ஆசிரமம் பிறப்பதால் இவன் இவ்வாறு தீட்டுக்கு உள்ளானவனாகக் கருதப்படுகின்றான். உபாகருமச் சடங்கில் வேத மந்திரங்களைக் குருவாக இருப்பவர் ஓதுவதனைச் சீடன் உடன் சொல்லாமல் கேட்டவனாக மட்டுமே இருப்பான்.''

இறுதியாக நம்பூத்ரிகளின் நம்பிக்கைகள் குறித்து ஒரு சிறிது கூறலாம் என நினைக்கிறேன். உயிரும் உணர்ச்சியும் உள்ளனவும் அவை அற்றனவும் ஆகிய உலகத்திலுள்ள அனைத்திலுமே பரம்பொருள் ஊடுருவியவராக நிறைந்துள்ளார். விலங்குகள், மரங்கள்,செடிகொடிகள், மலர்கள் ஆகியன உயிருடையன; ஆகையால் போற்றுதற்குரியனவாகின்றன. சூரியன், சந்திரன், விண்மீன்கள் ஆகியன அவற்றினுள் பொதிந்திருக்கும் இயற்கையான பண்புகளான ஆற்றலுக்கும் சில தேவதைகளோடு அவை கொண்டுள்ள தொடர்புக்குமாகப் போற்றப்படுகின்றன. தெய்வம் மனிதனாகவோ பறவையாகவோ விலங்காகவோ மரமாகவோ அது விரும்பும் உருவத்தை விரும்பிய போது எடுக்கலாம். தெய்வம் எந்தெந்த உருவங்களை எல்லாம் எடுத்துள்ளதோ அவை அனைத்தும் புனிதமானவை. சில விலங்குகளைத் தெய்வங்கள் வாகனமாகப் பயன்படுத்துவதால் அவை புனிதமானவை. பசுக்கள், பாம்புகள், குதிரைகள் ஆகியன வழிபடப்படுகின்றன. அனைத்துள்ளும் பசுவே

மிகப் புனிதமான விலங்கு. பாற்கடலைக் கடைந்த போது அதிலிருந்து வெளிப்பட்ட பதினான்கு பயனுடைய பொருள்களுள் தெய்வங்கள் விரும்பிய அனைத்தையும் தருகின்ற காமதேனுவும் ஒன்று எனப் புராணங்கள் கூறுகின்றன. எனவே காமதேனு விரும்பியவர்களுக்கு விரும்பியதைத் தரக்கூடியது. பசுவின் ஒவ்வொரு மயிரும் புனிதமானது; அதன் மூத்திரம் புண்ணியதீர்த்தம் ; அதன் சாணம் அனைத்தையும் புனிதப்படுத்தும் ஒன்று. செல்வங்களுக்கு அதிபதியான குபேரனுடைய விருப்பத்திற்கு உரியதாக இருப்பது குதிரை. உச்சைஸ்ரவர்கள் எனப்படும் நீண்ட காதுகளை உடைய குதிரைகளின் மூதாதையர்களும் பாற்கடலைக் கடைந்த போது வெளிப்பட்டவர்களே அசுவமேதம் எனப்படும் குதிரையினைப் பலியிடுதலே பலிகளுள் எல்லாம் சிறந்தது. அத்தகைய நூறு பலி வேள்விகளைச் செய்வது, அவ்வாறு செய்பவருக்கு இந்திரனைப் பதவியிலிருந்து இறக்கும் வலிமையைக் கூடத் தரும். பாம்புகள் காசியபர், சத்ரு ஆகிய முனிவர்களின் சந்ததிகளாகப் பயனுடையனவாகத் தோன்றியவை. பாம்புகளின் அரசனான ஆதிசேடன் மகாவிட்டுணு பள்ளிகொள்ளும் படுக்கையாகவும் அவருக்கு நிழல் செய்யும் மேற்கட்டியாகவும் இருப்பதோடு தன் ஆயிரம் தலைகளாலும் இந்த உலகத்தைத் தாங்கியபடி உள்ளான். பாம்புகளிடம் செலுத்தப்படும் தனிப்பட்ட அபிமானம் அவற்றால் நிகழக்கூடிய தீங்கினை எண்ணிச் செய்யப்படும் வழிபாட்டுப் பாங்கில் அமைந்ததாகலாம்.

செடிகளுள் துளசியே அனைத்திலும் புனிதமானதாகப் போற்றப்படுகின்றது. விட்டுணு, இலட்சுமி ஆகிய இருவரின் ஆற்றல்களையும் அது தன்னுள் கொண்டிலங்குவதாகக் கருதப்படுகிறது. சில கதை வழக்குகளின் படி அது சீதை, ருக்மணி ஆகியோரின் உருமாற்றமாகக் கருதப்படுகின்றது. அன்றாடம் துளசிக்குச் செய்வதற் குரியதான வழிபாட்டுப் பாடலை மோனியர் வில்லியம்ஸ் பின்வருமாறு கருதுகின்றார். ''எல்லாப் புண்ணியத் தலங்களின் மகிமையினைத் தன் வேரிலும் எல்லாத் தெய்வங்களையும் தன் தண்டிலும், எல்லா வேதங்களையும் தன் இலை தழைகளிலும் அடக்கிக் கொண்டுள்ள துளசியினை நான்போற்றுகின்றேன்.'' உடும்பர (*Ficus glomerata*) மரமும் புனிதமானதே. இந்த மரத்தின் அடியில் அமர்ந்தே மும்மூர்த்திகளின் மறு அவதாரமான தத்தாத்ரேயர் துறவிக்குரியதான தன் கடமைகளை நிகழ்த்தினர். இந்த மரத்தில் ஒன்றேனும் தங்களுடைய வீட்டு எல்லையில் இருக்க வேண்டியது இன்றியமையாதது என நம்பூதிரிகள் கூறுவர். அவ்வாறு இல்லாவிடினும் அவர்கள் அது

இருப்பதாகக் கற்பனை செய்து கொள்வர். தென்னிந்தியா முழுவதிலும் (*Aegle Marmelos*) வில்வம் சிவனுக்குரிய புனித மரமாகக் கருதப்படுகின்றது. நம்பூதிரிகள் இதனை மிகப் புனிதமானதாகக் கருதுகின்றனர். இதன் இலைகள் சிவனுடைய முக்குணங்களான சத்வம், ராசசம், தாமசம் ஆகியனவற்றைக் குறிப்பதாகக் கூறுவர். இதன் இலைகள் அவனுடைய மூன்று கண்களையும் திரிசூலத்தையும் குறிப்பதாகவும் கொள்வர். நம்பூத்ரிகள் சிவனை வழிபட இதன் இலைகளைப் பயன்படுத்துகின்றனர். இதனுடைய ஓர் இலையினைக் கொண்டு சிவனை அர்ச்சிப்பது மூன்று பிறவிகளில் ஒருவன் செய்த பாவங்கள் அனைத்தையும் போக்கக் கூடியது. தர்ப்பைப் புல் (*Eragrostis cynosuroides*) மிகப்புனிதமானது. சடங்குகள் பலவற்றிலும் இது பயன்படுத்தப்படுகின்றது. பாற்கடலைக் கடைந்த போது தர்ப்பையின் இலைகளிலிருந்து வழிந்த அமிர்தத்தைப் பாம்புகள் பேராசை கொண்டனவாக நக்க முற்பட்டமையால் அவற்றின் நாக்கு பிளவு பட்டுவிட்டதாகக் கூறுவர். அரசு (*Ficus Religiosa*) மரமும் நம்பூதிரிகளுக்கு மிகப் புனிதமான ஒன்றே. படைப்புக் கடவுளான பிரமனின் உயிராற்றல் இதனுள் பொதிந்திருப்பதாக நம்புகின்றனர்.

சூரிய தேவன் ஒளியையும் வெப்பத்தையும் தருகின்றான். அவனுடைய சக்தியினை நம்பியே உலகத்தில் தாவரங்கள் உயிர் வாழ்கின்றன. எனவே நம்பூதிரி நாளும் சூரியனை வழிபடுகின்றான். சூரியனும் சந்திரனும் நவக்கிரகங்கள் ஒன்பதினைச் சேர்ந்தவர்களாகையாலும் நம்பூதிரி அவற்றை வழிபடுகின்றான். சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி, ராகு, கேது என்பனவே அந்த ஒன்பது நவக்கிரகங்கள். இவை மனிதனுடைய தலைவிதியினை நிருணயிப் பனவாதலால் வழிபாட்டுக்கு உரியனவாகின்றன. இறுதியில் அமைந்துள்ள மூன்று கிரகங்களும் தீய பலன்களைத் தருவனவாகையால் அவற்றை வழிபடுதல் இன்றியமையாதது.

நாமதேவ்: (Nāmdēv)

ரங்காரிகளுடைய மற்றுமொரு பெயர்.

நாஞ்சிக் குறவர்: (Nānchi Kuruvā)

திருவாங்கூரில் உள்ள நாஞ்சில் நாட்டில் தங்கி வாழும் குறவர்களுக்குரிய பெயர்.

நாஞ்சில்நாட்டு வேளாளர்: (Nānchnād Vēllālā)

18,000 அளவிலான எண்ணிக்கையினரான நாஞ்சில் நாட்டு வேளாளர் திருவாங்கூர் முழுவதும் ஆங்காங்கே காணப்படுகின்றனர். எனினும் தொவளம், அகஸ்தீசுவரம் ஆகிய வட்டங்களைக் கொண்டதான நாஞ்சில் நாட்டிலேயே பெரும்பாலோர் வாழ்கின்றனர். தமிழ்நாட்டு வேளாளர்களின் பழக்க வழக்கங்களில் இன்று இவர்கள் பெரிதும் வேறுபட்டவர்களாக உள்ளதால் இவர்கள் திருவாங்கூர் - கொச்சியைச் சேர்ந்த தனிச் சாதியாராகக் கருதப்படுகின்றனர். திருவாங்கூரைச் சேர்ந்த பிற சூத்திர சாதியாரைப் போலவே இவர்களும் பிள்ளை என்ற பட்டப் பெயரைத் தங்கள் பெயரோடு இணைத்துக் கொள்கின்றனர். கணக்கு என்ற பெயரும் அந்தப் பட்டப் பெயரின் முன்னே பெரும்பாலும் அமைவதுண்டு.

கி.பி. 824-ஆம் ஆண்டிற்குரிய சிரியன் கிறித்தவர்களிடம் உள்ள செப்புப் பட்டயங்களிலிருந்து தச்சர் குடும்பம் ஒன்றும் வேளாளர் குடும்பங்கள் நான்கும் கடற்கரையில் செடிகொடிகள் வளர்க்கும் பொறுப்பினை ஏற்றன என அறிகிறோம். இதிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டளவிலேயே மேற்குக் கடற்கரையில் வேளாளர் வந்து குடியமர்ந்து விட்டனர் எனப் புலனாகின்றது. நாஞ்சில் நாட்டு வேளாளர் தங்களோடு ஒத்த பாண்டிய நாட்டு வேளாளரினும் வேறானவர் அல்லர். இடைக்காலத்தில் மேலே குறிப்பிட்ட வட்டங்களில் பாண்டியர் ஆட்சி செலுத்திய போது அவர்கள் அங்கு வந்து சேர்ந்தவர்களாதல் வேண்டும். ஒரு சமயம் திருவாங்கூர் மகாராசாவிற்கும் பாண்டிய நாட்டு ஆட்சியாளருக்கும் இடையே நாஞ்சில் நாட்டு ஆட்சி உரிமை தொடர்பான பூசல் மூண்டபோது அந்த வட்டாரத்தைச் சேர்ந்த முன்னணி வேளாளர்கள் கூட்டமாகத் திருவாங்கூராரிடம் சென்று அந்த அரசிடம் தாங்கள் பற்றுக் கொண்டவர்கள் என்பதனைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர். படிப்படியாக அவர்கள் தங்களுக்குரிய தமிழ்நாட்டினைச் சேர்ந்த வேளாளர்கள் பின்பற்றும் சொத்துரிமை முறையினைக் கூடக் கைவிட்டவர்களாகக் கேரளத்திற்குரியனவான புதிய வழக்கங்களை மேற்கொண்டனர். நாஞ்சில் நாட்டுக்கு உரியவர்களான இவர்கள் எல்லாப் பகுதிகளிலும் சென்று வாழத் தொடங்கினர். இவர்களுள் பெரும்பாலோர் கல்வியும் கணக்கு அறிவும் பெற்ற தகுதி வாய்ந்தவர்களாக இருந்தமையால் அரசின் வருவாய்த்துறையிலும் போர்ப்படைப் பிரிவிலும் கணக்கர்களாக அமர்த்தப்பட்டனர். திருவெல்லாவில் உள்ள குட்டம் பேரூரில் தங்கி வாழும் மக்கள் தாயத்தைப் பின்பற்றும் தமிழ் வேளாளர்களினும் இவர்கள் வேறானவர்கள்.

பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு. என் சுப்பிரமணிய அய்யருக்குக் கடப்பாடுடையேன். தமிழ்நாட்டு வேளாளர்களைப் போலவே நாஞ்சில் நாட்டு வேளாளர்களிடையேயும் சைவர், அசைவர் என்ற இரு பிரிவுகள் உள்ளன. இப்பிரிவினருள் முன்னவர் இறைச்சி, மீன் ஆகியனவற்றை உண்பதில்லை. பின்னவர்களுக்கு அத்தகைய கட்டுப்பாடு ஏதும் இல்லை. அசைவர்கள் சைவர்களுடைய வீட்டில் உண்பர். சைவர்கள் அசைவர்களுடைய வீட்டுக்குச் சென்றால் தங்கள் உணவைத் தாங்களே சமைத்துக் கொள்வர். சைவர்கள் அசைவர்களுடைய வீட்டில் பெண் கொண்டாலும் மணம் முடிந்தவுடன் குருக்களைக் கொண்டு அவளுக்கு பக்திப் பாடல்களைக் கற்றுத் தருவதோடு அவள் தன்னுடைய பிறந்த வீட்டு உறவினர்களோடு உணவு கொள்ளத் தடை விதிப்பர். இந்தப் பழக்கம் தெற்கத்திய பகுதியில் மட்டுமே காணப்படுகின்றது. தெற்கத்திய வேளாளர்கள் தெருக்கள் அமைப்பில் வீடு கட்டிக் கொண்டு வாழ வடக்கத்தியார் நாயர்களைப் போல தனித்தனவாக அமைந்த இல்லங்களில் வாழ்கின்றனர். உடையிலும் அணிமணிகள் புனைவதிலும் கூட வட திருவாங்கூரில் வாழும் நாஞ்சில் நாட்டு வேளாளர்கள் தென் திருவாங்கூரைச் சேர்ந்தவர்களிலும் வேறுபட்டவர்களாக நாயர்களுடைய பழக்கங்களை ஒத்த பழக்கங்களை மேற்கொண்டுள்ளனர். தெற்கத்தியார் மரபு வழிப்பட்டவர்களாகப் பழைய வழக்கங்களைக் கைவிடாது பின்பற்றுபவர்கள்.

சிக்கனம், தொழில் முயற்சி, கணக்கில் புலமை ஆகிய நாஞ்சில் நாட்டு வேளாளர்களின் பண்புகள் அனைவரும் அறிந்தனவே. பல குடும்பத்தினர் வேளாளர் என்ற குடிப்பெயரைக் கைவிட்டவராக நாஞ்சி நாட்டு நாயர் என்பதனைத் தங்கள் சாதிப் பெயராகக் கொண்டுவிட்டனர்.

இவர்கள் பேச்சில் மலையாளச் சொற்களும் தொடர்களும் கலந்திருக்கும். மாடன் இசக்கி (யட்சி) இனன் ஆகியனவே இவர்கள் வழிபடும் குடும்பத் தெய்வங்கள். அண்மைக் காலம் வரை ஒவ்வொரு குடும்பத்திலும் இவை வழிபடப்பட்டு வந்துள்ளன. வில்லடிச்சான் பாட்டு என்பதே இவர்களிடையே வழக்கில் உள்ள வழிபாட்டுப் பாடல். பொற்கொல்லர், எண்ணெய் வணிகர் சாதிகளைச் சேர்ந்தவர்கள் நாஞ்சில் நாட்டு வேளாளர் சடங்குகளில் இதனைப் பாடுவர். இப்பாடல்கள் சிறு தேவதைகளின் தோற்றம் பற்றியும் அவை பல கோயில்களிலும் வைக்கப்பட்ட சூழ்நிலைகள் பற்றியும் விளக்குவன. அம்மன் கொடை என்ற தாய்த் தெய்வத்திருவிழாவே இவர்களுடைய முக்கியமான சமய

விழாவாகும். தைப் பொங்கல், தீபாவளி, திருக்கார்த்திகை, ஓணம், விசு ஆகிய விழாக்களையும் இவர்கள் கொண்டாடுகின்றனர். மூதாதையர்களின் ஆண்டுச் சிரார்த்தத்தை நடத்தும் இவர்கள் தமிழ் வேளாளர்களுக்கு உரியதான இறந்து போன பெண் மூதாதையர்களை வழிபடுவதான பத்துக்கைச் சடங்கினையும் நிகழ்த்துகின்றனர். சித்திரை மாதத்தில் அமாவாசையின் போது எமனுடைய கணக்கனான சித்ரகுப்தனின் (இந்திய புளூட்டோ) கதையினைப் பக்தி சிரத்தையுடன் ஓதுவர்.

நாஞ்சில் நாட்டு வேளாளர் பயிர்த் தொழிலையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருப்பவர்கள். இவர்களுக்கெனக் காரியஸ்தன், முதல்படி, பிள்ளை என்ற பதவிக்குரியவர்களைக் கொண்ட ஊர் அமைப்புகள் உள்ளன. சில விழாக்களின்போது அனைவரும் ஊர்ப் பொது நிதிக்காகப் பணம் செலுத்த வேண்டும். கும்பகோணத்தைச் சேர்ந்த உமையொருபாகன் மடத்தின் அதிபரே இவர்களுடைய குரு ஆவார். வட திருவாங்கூர் வேளாளர்கள் பானந்திட்டை குருக்களைத் தங்கள் குல குருவாகக் கொள்கின்றனர். கிழக்குக் கடற்கரையினைச் சேர்ந்த பிராமணர்களாலேயே இவர்களுடைய பலிச் சடங்குகள், திருமணச் சடங்குகள் ஆகியன பெரும்பாலும் நடத்தி வைக்கப்படுகின்றன.

சிறுமியர் பூப்படைந்த பின் மணம் செய்வித்தலே வழக்கம். எனினும் குழந்தை மணங்களும் இல்லாமலில்லை. தாய்மாமன் மகளையும் அத்தை மகளையும் மணப்பதற்கு ஒருவன் உரிமைகொண்டாடலாம். மணமகனுக்கு மலபாருக்குரிய உடைகளான ஒரு முண்டுவும் நெரியதும் அன்பளிப்பாக வழங்கப்படும். பெரும்பாலும் அவற்றுடன் எழுத்தாணியும் கத்தியும் தரப்படுவதுண்டு. இவை வேளாளர் திருவாங்கூரைச் சேர்ந்த கணக்கர் சாதியினர் என்பதற்கான அடையாளமாகத் தரப்படுபவையாம். இப்பணியினை மேற்கொள்ள மதுரை, திருநெல்வேலிப் பகுதிகளிலிருந்து பல குடும்பத்தினர் வரவழைத்துக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். திருமண விழாவில் மணமக்கள் பல்லக்கில் வீதி ஊர்வலமாகச் செல்வது இன்றியமையாது நடத்தப்பட வேண்டிய ஒன்றாம். நாஞ்சில் நாட்டு வேளாளர் பதமங்கலம் பிரிவிலிருந்து கீழான வகுப்பாராக உள்ள நாயர் பெண்களுடன் தற்காலிகமாகத் தொடர்பு வைத்துக் கொள்கின்றனர். கணவன் விடுமுறி எனப்படும் விடுதலைப்பத்திரம் எழுதித்தர முன்வரும்போது மணமுறிவு அனுமதிக்கப்படுகின்றது. அதன்பின்

அவள் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த அல்லது பாண்டி நாட்டு வேளாளருடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளலாம்.

இவர்கள் மக்கள் தாய முறையும் மருமக்கள்தாயமுறையும் கலந்ததான ஒரு கூட்டுக்கலவை முறையில் சொத்துரிமை பேணுகின்றனர். ஒருவனுடைய பிள்ளைகள் அவன் சுய சம்பாத்தியத்தில் நான்கிலொரு பங்கிற்கு மேற்படாமலும் அவனுக்கு மக்கள் தாய முறையில் கிடைத்த பரம்பரைச் சொத்தில் நான்கிலொரு பங்கிற்கு மேற்படாமலும் பெறுவதற்கு உரியர். இது உகந்தமா எனப் பெயர் பெறும் அவர்கள் இதனை உரிமையாகப் பெறாமல் பெற்றவனுடைய பரிவு காரணமாகப் பெறுவதால் இது 'உகந்துதம உவந்து தருவது எனப் பெயர் பெறுகின்றது. மணமுறிவு செய்து கொள்ளும் ஒருவன் தன் மனைவிக்கும் அவள் குழந்தைகளுக்கும் 'உகந்துதம' தரப்பட வேண்டும் என்பது விதி. இல்லையாயின் அவர்கள் போக்கற்றவர்களாகி விடுதல் கூடும். கணவனுக்கு எனத் தனி உடைமை ஏதும் இல்லையாயின் இவ்வாறு மணமுறிவு செய்யப்படுபவள் குடும்பச் சொத்தில் பத்தில் ஒரு பங்கு மட்டுமே பெற உரிமை உடையவள். இம் முறையில் ஒருத்தி நான்கில் ஒரு பங்கிற்கு மேலான உடைமையினைப் பெற வேண்டுமாயின் அதற்கு மருமக்கள் தாய வழியில் உடைமை உரிமையுடையவர்களின் அனுமதி பெற்றாக வேண்டும். ஒருவன் சந்ததியின்றி இறப்பானாயின் வயதான அல்லது வேறு மண உறவுகள் வைத்துக் கொள்ள விரும்பாத அவனுடைய மனைவி அவன் சொத்துக்களிலிருந்து பிழைப்பு நடத்த உரிய உதவி பெற உரிமை உடையவள் ஆவாள். மக்கட்பேறு வாய்க்கப் பெறாது மணமுறிவு செய்யப்பட்டவரும் கூட இதே போன்று அவளுடைய கணவனிடமிருந்து பிழைப்பு நடத்த உரிய உதவி பெற உரிமையுடையவளாவாள். இவ்வாறு அவள் பெற உரிமையுடைய உடைமைகள் 'நங்குதம' எனப்படும். நங்கைக்கு உரியன என்பது இதன் பொருள். கணவன் இறக்கும் சமயம் அவனோடு அவனுக்கு உதவியாக வாழாதவளான கைம்பெண் 'நங்குதம' பெற உரிமையற்றவளாவாள். ஒரு கைம்பெண் சம்பந்தம் வைத்துக் கொள்ளும்போது அவள் தன்னுடைய இரண்டாவது கணவனிடமிருந்து எடுப்பு எனப்படும் ஆவணம் பெறுவாள். இது அவன் இறந்தாலோ, அவளை விலக்கி வைத்தாலோ அவள் பெறுவதற்குரிய ஈட்டுத்தொகை தொடர்பான ஆவணமாகும். ஒருத்தி தன்னுடைய முதல் கணவனிடமிருந்து 'உகந்தம' உடைமை பெற்றிருந்தால் அவள் எடுப்பு ஆவணம் பெறுதல் இயலாது.

பெயர் சூட்டும் சடங்கு ஒருவனுடைய குழந்தைப் பருவத்தில் நிகழும். ஆண்களுக்கான சிவன், விட்டுணு, குத்தாலிங்கம், சுப்ரமணியன், பொன்னம்பலம் ஆகிய பெயர்களும் பெண்களுக்கான சிவகாமி, காந்திமதி போன்ற பெயர்களும் நாயர்களிடையே வழக்கில் இல்லாத பெயர்களாகும். சிறுவர்களுக்கு மூன்று வயது முடியும் முன் மொட்டை அடிக்கும் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. ஒருவனுக்கு இறுதிச் சடங்குகள் நிகழ்த்தும் உரிமை அவன் மகனையே சேர்ந்ததாகும். அதனை மகன் மேற்கொள்ள வாய்ப்பு இல்லையேல் உடன் பிறந்தவன் பிள்ளைகள் நிகழ்த்துவர். தீட்டு பதினாறு நாள்களுக்கு மேற்கொள்ளப் படுகிறது. கர்த்தா தலையை முழுக்க மழித்துக் கொள்வதோடு தீட்டுக் காலம் முழுவதும் அல்லது பதினாறாம் நாள் மட்டுமாவது பூணூல் அணிந்தவனாக இருத்தல் வேண்டும். அன்று இறந்து போனவருக்குச் சோறு, தண்ணீர், எள் ஆகியன பலியாகத் தரப்பட வேண்டும். மகளுடைய மகன் இறக்கும் போது தாய் தீட்டுக்குரியவளாகின்றாளே அன்றித் தந்தை தீட்டு மேற்கொள்வதில்லை.

திருவாங்கூரினைச் சேர்ந்த தேவதாசிச் சாதி ஆண்கள் தங்களை நாஞ்சில் நாட்டு வேளாளர் எனக் கூறிக் கொள்கின்றனர்.

நந்திக்கட்டு: Nandikattu (bull's mouth)

மேதரரின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

நந்திமண்டலம்: Nandimandalam

ராசுக்களின் ஓர் உட்பிரிவு

நங்கா: Nangā (naked)

பொரசர்களின் ஓர் உட்பிரிவு. பிறந்த மேனியாக எனப்பொருள் படுவது.

நங்குடி வேளாளர்: Nangudi Vellāla

நங்குடி வேளாளர் என அழைக்கப்படும் சவலைப் பிள்ளைகள் திருநெல்வேலி மாவட்டத்தில் பல ஊர்களில் தங்கி வாழ்கின்றனர். மற்ற வேளாளரினும் இவர்கள் பல கூறுகளில் வேறுபட்டவர்களாக உள்ளனர். தங்களைக் கோட்டை வேளாளர் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் தற்பொழுது கோட்டையில் வாழும் பழக்கத்தைக் கைவிட்டு விட்டதாகக் கூறுகின்றனர். நங்குடி வேளாளர் பிரிவினைச் சேர்ந்த பெண்கள் கோட்டை வேளாளர் வாழும் ஸ்ரீ வைகுண்டம் கோட்டைக்குள் நுழைய

அனுமதிக்கப்படுவதில்லை. சென்ற சில ஆண்டுகளாக இவ்விரு பிரிவினரும் தங்களுக்குள் மணஉறவு செய்துகொள்கின்றனர் எனக் கூறப்படுகிறது. நங்குடியினரிடையே புறமணக்கட்டுப்பாடு உடைய குலப் பிரிவுகள் உள்ளன. அவை மூதாதையரின் பெயரிலும் குல தெய்வங்களின் பெயரினும் அமைந்துள்ளன. மறவர்களின் குலங்களைப் போல இவை பெண்கள் வழிப்பட்டனவாகத் தலைமுறை தலைமுறையாகச் செல்பவை. பரம்பரைச் சாதித் தலைவன் பட்டத்துப் பிள்ளை என அழைக்கப்படுவான். முன்பெல்லாம் இவனுடைய கட்டளையை மீறும் சாதியார் குடுமியில் அழுகிய தேங்காய்க் குரும்பையைக் கட்டித் தெருவில் ஓடவிடுவர். ஒருவன் அவன் பின்னால் முதுகில் புளியம் மிலாறினால் அவனை வெளுத்தபடி செல்வான்.

ஒருத்திக்கு மணம் முடிக்கும் முன் அவள் தாய்மாமன், தாய்மாமன் மனைவி ஆகியோருடைய உடன்பாட்டினைப் பெறுதல் வேண்டும். அவளுடைய அத்தை மண நாளன்று தாலியினைத் தொட்டு வாழ்த்துவதன் மூலம் தன் உடன்பாட்டினைத் தெரிவிப்பாள். அவள் மாமன், தாலி கட்டி முடியும் வரை ஆயிரப்பத்தி என்ற விளக்கைத் தாங்கியவனாக நிற்பான். கால்படி அரிசியினை ஒரு துணியில் கட்டி முடிச்சிட்டு அந்த முடிச்சில் திரியினையிட்டு அதில் நெய்யூற்றி இந்த விளக்கினை எரிய விடுவர்.

சாதியில் எவரேனும் இறக்க நேர்ந்தால் அந்தத் தகவலை அம்பட்டனே மற்றவர்களுக்குத் தெரிவிப்பான். பிணத்தை எடுக்கும் முன் நெருங்கிய உறவினர்களும் ஒவ்வொரு நங்குடி கிராமத்திலிருந்து இருவரும் வந்து சேர்வர். இச் சமயத்தில் வருகை தராது இருப்பது சாவு நிகழ்ந்த குடும்பத்தவர்களை அவமானத்திற்கு உள்ளாக்கியதாகக் கருதப்படும். சாவு நிகழ்ந்த மறுநாள் அரைக்கீரை சமைத்தல் வேண்டும்.

ஒருவன் தன் பெண்களுக்குக் கொஞ்சம் உடைமையினைத் தரவேண்டும் என்பதும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு வீடு தருதல் வேண்டும் என்பதும் உடைமை உரிமை பேணுவதில் இவர்கள் கடைப்பிடிக்கும் குறிப்பிடத்தக்க பழக்கமாகும். கணவன்மார் தங்கள் மனைவிமார் வீட்டிலேயே தங்கி வாழவேண்டும். ஒருத்தி தன் தந்தை வழிப் பெரும் உடைமைகளின் உரிமைகள் இறுதியில் அவளுடைய பெண்களின் உரிமை உடைமைகளாகும். அவளுடைய பிள்ளைகளுக்கு அந்த உடைமையில் உரிமையேதுமில்லை. பிள்ளைகள் தந்தை யினுடைய உடைமைகளை வழக்கம் போலப் பெறுவர்.

கொண்டைகட்டி வேளாளரைப் போலவே நங்குடியரும் பாண்டிய மன்னருக்கு முடிசூட்டி வைக்கும் உரிமை தங்கள் குடிக்கு உரியது எனக் கூறுகின்றனர். கொற்கை என்ற ஊரில் கன்னிமார் சொன்ன (சுவை) என்ற குளம் உள்ளது. தேவ மகளிர் குளிப்பதால் அது அப்பெயர் பெற்றது. அக்கினி மகா முனிவர் அங்குத் தவம்செய்து கொண்டிருந்த சமயம் அர மகளிர் மூவர் அங்குக் குளிக்க வந்தனர். அந்த முனிவர் அவர்கள் மீது காதல் கொண்டதால் அம் மூவருக்கும் மூன்று பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் பிற்காலத்தில் அரசர்களாக வரக்கூடும் எனக் கூறி அந்த முனிவர் அக் குழந்தைகளை வளர்க்கும்படி கொற்கையைச் சேர்ந்த வேளாளர்களைக் கேட்டுக் கொண்டார். அக் குழந்தைகளே சேர, சோழ, பாண்டிய மன்னராயினர் எனக் கதை வழங்குகின்றது.

நானூறு : Nānuru (four hundred)

மாதிகர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

நந்துனிக்குருப்பு: Nantunikkuruppu

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் உட்பிரிவான வாத்தி என்பதற்கான மற்றுமொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது.

நனுகொண்ட : Nanukondu

லிங்காயத காபுகளின் ஓர் உட்பிரிவு. கர்நூல் மாவட்டத்தில் உள்ள நனுகொண்ட என்ற ஊரின் பெயரில் அமைந்தது.

நரவித்யவாரு : Naravidyavāru

ஜங்கம்கள் சாதியினைச் சேர்ந்த விப்ரவினோதிகள் என்போர் உள்ளனர். சாதாரண மக்களின் முன் வித்தைகள் செய்து காட்டும்போது இவர்கள் தங்களை நரவித்யவாரு என்றும் பிராமணர்கள் முன்னிலையில் வித்தை காட்டும் போது விப்ரவினோதிகள் எனவும் தங்களைக் கூறிக் கொள்வர். நரவித்யவாரு என்பது நரலு மெச்சிசெ வித்தை செய்யுவாரு என்பதன் சுருக்கம் எனவும் மக்கள் பாராட்டைப் பெற்ற வித்தைக்காரர் என்பது இதன் பொருள் என்றும் கூறுவர். மூன்று அல்லது நான்கு மரத்தாலான அல்லது கல்லாலான பந்துகளை மேலே வீசி அவை கீழே விழாதவாறு கைகளாலும் மார்பினாலும் தாங்கி வீசி வித்தை காட்டுவது இவர்கள் காட்டும் வித்தைகளுள் குறிப்பிடத்தக்கது.

நரியங்கள் : Nariangal (nari : jackal)

வல்லம்பர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். நரிக் குலத்தவர் என்பது பொருள்.

நாரிகேள : Nārikēla

பலிசர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

நரரொலு : Nārollu (fibre)

பெதகண்டி காபுகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

நாற்பது கட்சி : Narpatu Katchi (forty - house section)

வள்ளுவன்களின் ஓர் உட்பிரிவு

நஸ்ராணி மாப்பிள்ளா : Nasrani Māppilla

மலபாரில் கிறித்தவர்களைக் குறிக்க வழங்கும் பெயர்.

நாசுவன் : Nāsuvan

நாசுவன், நாசிவன் என்பன தூய்மையற்றவன் என்ற பொருள் தருவன. தொட்டால் தீட்டு உண்டாக்குபவன்; மூக்கிலிருந்தும் தோன்றியவன் என்ற பொருள்களைத் தரும் இச்சொல் தமிழ் அம்பட்டன்களைக் குறிக்க வழங்கும் சொல்லாகும். இதற்குச் சமமான நாசியன் என்பது தெலுங்கு அம்பட்டர்களையும் நாவிதன் என்பது நாயர்களுக்கும் உயர்ந்த சாதியார்களுக்கும் தொழில் செய்யும் மலையாளி அம்பட்டன்களையும் குறிக்கும் பெயர்களாம். தமிழ்நாட்டுப் பறையன்கள், வேட்டுவன்கள் ஆகியோருடைய தொழில் தொடர்பான பெயராகவும் இது வழங்குகின்றது.

நடமுக்கி : Natamukki

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

நத்தாலு : Naththalu (snails)

மாலர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

நற்றமிழுடையான் : Natramiludaiyān

கணக்கெடுப்பின் போது நத்தமான்கள் சிலர் தங்களைப் பதிந்து

கொண்டுள்ள பெயர். இப்பெயர் நல்ல தமிழுக்கு உறைவிடமாக விளங்குபவர்கள் என்ற பொருள் தருவது.

நாட்டான் : Nāttān

1901 கணக்கெடுப்பின்போது கிட்டத்தட்ட 12,000 பேர் தங்களை நாட்டான்கள் எனப் பதிந்து கொண்டுள்ளனர். கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர் இது பற்றிக் கூறியுள்ளதாவது:- ''நாட்டுப்புற மக்கள் எனப் பொருள் தருவதான இதனைச் சிலர் தங்கள் சாதிப் பெயராகக் கூறியுள்ளனர். வேளாளர் சிலர் இதனைத் தங்கள் உட்பிரிவின் பெயராகப் பதிந்துள்ளனர். இதனைத் தங்கள் சாதிப் பெயராகப் பதிந்துள்ளவர்களில் பெரும்பாலோர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பயிர்த்தொழிலை மேற் கொண்டுள்ளவர்கள் ஆவர். இவர்களுள் சிலர் அகமுடையான்களின் பட்டப்பெயரான சேர்வை என்பதனைத் தங்கள் பட்டப் பெயராகப் பதிந்துள்ளனர்.'' (பார்க்க: சேர்வை,சேர்வைக்காரன்) நாட்டான் என்பது தமிழ்ச் செம்படவன்,மீனவர் சாதியான பட்டனவன்,வல்லம்பர் ஆகிய சாதிகளுக்குரிய பட்டப் பெயராகவும் இடம் பெற்றுள்ளது. தமிழ் நாட்டின் சில பகுதிகள் நாடுகள் என்ற பெயர் கொண்ட வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் வாழும் சில குறிப்பிட்ட சாதியார் நாட்டான் அல்லது நாட்டார் என்ற பெயரால் வழங்கப்படுகின்றனர். உதாரணமாக மதுரை மாவட்டத்தில் உள்ள சிவகங்கைச் சமீன்தாரி பகுதியில் உள்ள பளையநாடு என்ற பகுதியில் வல்லம்பரும் கள்ளரும் நாட்டார் எனப் பெயர் பெறுவதைக் கூறலாம். குறிப்பிட்டநாடுகளில் வாழும் பல சாதிகளையும் சேர்ந்த பழங்குடிகள் பற்றிய நடைமுறைகளை அந்த நாடுகளுக்கு உரிய நாட்டார்களே மேற்பார்ப்பர்.

நாட்டாடி : Nāttāti (the name of a village)

சாணாரின் ஓர் உட்பிரிவு

நாட்டு : Nāttu (sons of the soil)

கள்ளர், கொச்சியைச் சேர்ந்த மலயர் ஆகிய சாதிகளின் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

நட்டுக்கட்டாத நாயன்மார் : Nattukattāda Nāyanmār

கைகோளரோடு இணைக்கப்பட்டுள்ள இரவலர் வகுப்பார். (பார்க்க: கைகோளர் பற்றிய தனிக்கட்டுரை)

நாட்டுக்கோட்டைச் செட்டிகள் : Nāttukōttai Cetti

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாட்டுக் கோட்டைச் செட்டிகள் பற்றித் திரு பிரான்சிஸ் எழுதியுள்ளது வருமாறு:- ''செட்டிகள் அனைவருள்ளும் தனித்த, குறிப்பிடத்தக்கப் பழக்க வழக்கங்களை உடையவர்கள், மதுரை மாவட்டத்தில் உள்ள சிவகங்கை, இராமநாதபுரம் சமீன்களைச் சேர்ந்த திருப்பத்தூர், தேவகோட்டை வட்டங்களில் வாழும் நாட்டுக்கோட்டைச் செட்டிகளாவர். தென்னிந்தியாவில் உள்ள வணிகச் சாதியாருள் இவர்களே முற்போக்கு எண்ணம் கொண்டவர்களாகப் பர்மா, மலேயா, இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சென்று வணிகம் புரிகின்றனர். (சைகோன், மொரிசியஸ், தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்குங்கூடச் சென்றுள்ளனர்) சிலருக்கு லண்டனிலும் ஐரோப்பாவிலும் கூட முகவர்கள் உள்ளனர். தந்தை உயிரோடு இருக்கும் வரை நாட்டுக் கோட்டைச் செட்டிகள் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒரே குடும்பமாக இருந்து வருவர். இந்தப் பழக்கம் காரணமாகவே மதுரை மாவட்டத்தில்* இச் சாதியாருக்கு உரியனவாகப் பெரிய பெரிய இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. திருமணமான பிள்ளைகளுக்கு எனச் சில அறைகளை ஒதுக்கி விடுவர். அவர்களுக்குத் தேவைப்படும் ஓர் ஆண்டிற்கான அரிசி முதலிய பொருள்களையும் திட்டமாகக் கணக்கிட்டு உதவுவர். தந்தை இறந்தவுடன் இந்துக்களின் வழக்கத்திற்கு மாறாக மூத்தவன் குடும்பத்திற்கான வீட்டின் உரிமையைப் பெறுவான். இளையவன் தாயினுடைய நகைகளையும் கட்டில்களையும் பெறுவான். பிற உடைமைகள் உடன்பிறந்தவர்களிடையே சமமாகப் பங்கிட்டுக் கொள்ளப்படும். ஓர் ஆண் குழந்தை பிறந்தவுடன் ஒரு குறிப்பிட்ட தொகையினை அதன் பெயரில் வைப்பாக ஒதுக்கி வைப்பர். உரிய காலம் வந்தவுடன் அந்தத் தொகைக்குரியதாகச் சேர்ந்த வட்டி அச்சிறுவனின் கல்விக்காகச் செலவிடப்படும். போதுமான அளவு அவன் வணிக நுட்பங்களைக் கற்றுக்கொண்டவுடன் சாதியினைச் சேர்ந்த வேறு சிலரிடம் அவன் முகவராகப் பணியில் அமர்வான். அவனிடம் பனையோலையில் ஒரு கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்ட பின் லட்சம் ரூபாயினை அவனிடம் கொடுத்து வணிகம் புரிய அல்லது முதலீடு செய்யப் பர்மாவிற்கோ சிங்கப்பூருக்கோ அனுப்பி வைப்பர். இந்தத் தொகைக்குக் கிடைக்கும் லாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினையும் தன் சம்பளத்திலிருந்து மிச்சம் செய்யப்படும் தொகையினையும் மூலதனமாக அவன் தன் சொந்த வணிகத்தில்

* இந்த நூல் எழுதப்பட்ட காலத்தில் இராமநாதபுரம் மதுரை மாவட்டங்கள் ஒரே மாவட்டமாக - மதுரை மாவட்டமாக இருந்தது.

போட்டு முதலீடு செய்வான். அவன் மனைவி கூடைகள் பின்னியும் கயிறு திரித்தும் கொஞ்சம் பொருளீட்டிக் குடும்பச் செலவுகளைச் சரிக்கட்டுவாள். இவர்கள் சாதிப் பெண்கள் ஆண்களைப் போலவே சிக்கனமாகக் குடும்பம் நடத்தத் தெரிந்தவர்கள். தாராளமாக வழங்கு வதையும் தெய்வபக்தியையும் பண்பாகக் கொண்டவர்கள் இச்சாதியார். சில குடும்பங்களில் லாபமாகப்பெறும் ஒவ்வொரு ரூபாயிலும் ஒரு காசினைச் சமயப் பணி, அறச்செயல்கள் போன்றவற்றுக்காக ஒதுக்கி வைக்கின்றனர். நஷ்டத்திற்கு உள்ளான தங்கள் சாதியினைச் சேர்ந்தவனைத் தொல்லையிலிருந்து மீட்பதற்கான வேண்டுகோள் அறிக்கைகளுக்கு உடனே உதவித்தொகை தர முன்வருவர். சைவ சமயநெறியில் இவர்கள் ஆழ்ந்த பற்றுடையவர்கள். சிலர் தங்கள் சமயப் பற்றை வெளிப்படுத்த உருத்திராட்சக் காயினைத் தங்கக் கவசத்தில் பதித்துக் கழுத்தில் அணிவர். அண்மைக் காலத்தில் சென்னை மாநிலத்தில் உள்ள சிவன் கோயில்களின் பொருட்டு இவர்கள் பெருந்தொகையினைச் செலவிட்டுள்ளனர். சிதம்பரம்* மதுரை, திருவண்ணாமலை ஆகிய கோயில்கள் அவ்வாறு ஆதரவு பெற்ற கோயில்களுள் குறிப்பிடத்தக்கவை. கோயில்களில் இவர்கள் மேற்கொண்டுள்ள பணிகள் தற்காலக் கலைப் பாணியில் அமைந்திருப்பது வருந்துதற்குரியது. நல்ல வழிகாட்டு நெறியினைப் பெற்று இதற்கான பெருந்தொகையினை இவர்கள் செலவழித் திருப்பார்களாயின் இந்தக் குறை நேராது தவிர்த்திருக்கலாம். மதுரைக் கோயிலில் உள்ள கல்யாண மகால் தரம் குறைந்த மெருகு சாயம் பூசப்பட்ட மர வேலைப்பாடமைந்தது. முகம் பார்க்கும் கண்ணாடிகளும் வண்ண ரசகுண்டுகளும் அதனை அழகு செய்கின்றன. திருவண்ணா மலையிலும் இதே அமைப்பில்தான் பணிகள் நிகழ்ந்துள்ளன. அங்குக் கோயிலின் வெளிச் சுற்றில் ஆங்காங்கே நிற்கும் வேலைப்பாடமைந்த கருங்கல் தூண்கள் இதனைத் தென்னிந்தியாவிலேயே சிறந்த மண்டபம் எனக் கருதும்படியான சிறப்புக்குள்ளாக்குகின்றன. இவர்கள் பெற்றுள்ள செல்வ வளமும் மேற்கொண்டுள்ள வட்டித் தொழிலும் காரணமாக இவர்களைத் தென்னிந்தியாவின் யூதர்கள் எனக் கூறுகின்றனர். இவர்களுடைய அறச்செயல்களையும் அன்பான நடத்தையினையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இவர்கள் இத்தகைய மதிப்பீட்டிற்கும் மேலான தகுதிக்கும் உடையவர்கள் எனத்துணியலாம்."

ஒருத்தி இறக்கும் பொழுது அவளுடைய உடைமைகள் (நகை நட்டுகள், பாத்திரங்கள், முதலீடுகள் முதலியன) அவளுடைய

* செட்டி சிதம்பரம் என்ற பழமொழி அனைவரும் அறிந்த ஒன்று.

பெண்களுக்கு உரியனவாகும் என எனக்குத் தெரிவித்துள்ளனர். மற்ற இந்து சாதிகளுள் வழக்கில் இருப்பதைப் போலக் குடும்பத்தின் மூத்தப் பிள்ளை தந்தையின் அன்றாட உபயோகப் பொருள்களை வைத்துக்கொள்வதோடு மற்றச் சகோதரர்களின் உடன்பாடு பெற்று வீட்டினையும் தனக்குரியதாக வைத்துக் கொள்ளலாம். எனினும் அதற்குரிய மதிப்புக்கான தொகை பிற உடைமைகளில் அவன் பெறும் பங்கிலிருந்து கழித்துக் கொள்ளப்படும்.

மதுரை மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:- ''நாட்டுக் கோட்டைச் செட்டிகளின் பேராசைக் குணம் அனைவரும் அறிந்த ஒன்று. அது பற்றிப் பல சுவையான கதைகள் வழங்குகின்றன. எவ்வளவு செல்வ வளம் உடையவர்களாயினும் இவர்கள் கருமித்தனமாகவே வாழ்க்கை நடத்துவர். கடன்காரனுக்கு எக்காரணம் கொண்டும் கொஞ்சமும் கருணைகாட்டாது அவன் உடைமைகள் அனைத்தையும் கடனுக்காகப் பறிமுதல் செய்வர். இவ்வாறு கொள்ளையிடுதலுக்குப் பரிகாரமாக அவ்வப்போது பெருந்தொகையினை அறச்செயல்களுக்காகச் செலவிடுவர். எத்தகைய குற்றங் குறைகளை உடையவர்களாயினும் இவர்கள் மிகச் சிறந்த வணிகர்கள். அண்மைக்காலம் வரையிலும் இவர்கள் நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உரியவர்களாக இருந்துள்ளனர். இன்றும் நாட்டுக்கோட்டைச் செட்டி நாணயம் மிகுந்தவனாகவே உள்ளான். தங்களை உயர்ந்த சாதியினைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து இந்த மாவட்டத்திற்கு அங்குத் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையின் காரணமாகக் குடிபெயர்ந்ததாகக் கூறுகின்றனர். இந்தக் கதையினை உண்மை என மற்றச் செட்டிச் சாதியினர் ஏற்றுக்கொள்வதில்லை. இவர்களை இழிவுப்படுத்தும் வகையில் அவர்கள் ஒரு முகமதியனுக்கும் கள்ளர் சாதிப் பெண்ணுக்கும் முறைகேடாகப் பிறந்தவனின் வழிவந்தவர்கள் எனக் கூறுவர். நாட்டுக் கோட்டை என்பது சிவகங்கைக்கு அருகே உள்ள சிறிய ஊரான நாட்டரசன் கோட்டை என்பதன் சிதைந்த வடிவம் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு இச் சாதிப் பெயர் அமைந்ததா என்பது ஐயத்திற்குரியதே.'' நாட்டுப்புறங்களில் உள்ள கோட்டை என்பதிலிருந்து இப்பெயர் வந்தது எனக் கூறும் வழக்கும் உள்ளது.

''வணிக நிறுவன அமைப்பு, கூட்டுறவு வணிகச் செயல்முறை ஆகியவற்றில் நாட்டுக்கோட்டைச் செட்டிகள் ஐரோப்பிய வணிகரை

ஒத்தவராகச் சிறப்புற்றனர் எனலாம். இவர்களுள் ஒரு சிலரே ஆங்கிலேயர் தரும் கல்வி கற்றுள்ளனர். இன்று அரசினர் பள்ளிகளில் தரப்படும் கல்வி, தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு எவ்விதத்திலும் பயனுடையதாக இல்லை எனக் கருதும் இவர்கள் அது வெறும் ஏட்டுக் கல்வியே என்றும் நடைமுறைக்கு உதவாது என்றும் குறை கூறுவர். எளிய முறையில் கண்டிப்புடன் இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தரும் பயிற்சியும் எவ்வளவு செல்வ வளம் மிகுந்த குடும்பத்தவனாயினும் அவன் வணிக நிறுவனங்களில் உதவியாளனாகப் பெறும் கடினமான நீண்ட காலப் பயிற்சியும் தங்கள் தொழிலில் இவர்களைத் திறமையுடன் விளங்கச் செய்வதோடு எதனையும் முறையாக மேற்கொள்ளும் பழக்கத்தையும் ஏற்படுத்தித் தந்துள்ளது." எனக் கூறப்படுகிறது.

நாட்டுக்கோட்டைச் செட்டிகளைப் பற்றித் திரு. பி. ஆர். சுந்தர அய்யர் பின்வருமாறு எழுதுகின்றார்:- * "ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியின் தலையாய குறிக்கோள் முடிந்த அளவு மிகுந்த பொருளீட்ட வேண்டும் என்பது தான். கடு வட்டி வாங்குவதை அவன் பாவமாகக் கருதுவதில்லை. பத்துப் பன்னிரண்டு வயதுச் சிறுவனாக இருக்கும் போதிலிருந்தே அவன் தொழிலில் ஈடுபட்டுக் கணக்கு எழுதுவதில் பயிற்சி பெறுவதோடு கடையில் தன் தந்தைக்கு உதவியாளனாகவும் செயற்படுகின்றான். அவனுக்குத் திருமணம் ஆனவுடன் அவன் தந்தை அவனைத் தனிக்குடித்தனம் வைத்து விடுகின்றான். பெரும்பாலும் இது அவன் பெற்றோர் வாழும் வீட்டின் ஒரு பகுதியாக இருக்கும். இது அவனுக்குச் சொந்தக் காலில் நிற்கும் நம்பிக்கையினைத் தருவதோடு முடிந்த அளவு பொருள் சேர்க்க வேண்டும்என்ற உள்ள ஊக்கத்திற்கும் வழி செய்கின்றது. குடும்பச் சொத்திலிருந்து வரும் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட தொகை அவனுக்கு நடைமுறைச் செலவுகளுக்காகத் தரப்படுகின்றது. அவன் அதற்கு மேல் செலவு செய்வானாயின் அது அவன் கணக்கில் பற்று எழுதப்படும். இதனால் அனைவரும் தங்கள் சேமிப்பினை அதிகரிக்க வேண்டும் என்பதிலேயே கருத்தாக இருப்பர். பெண்களும் கூடப் பல வழிகளில் பொருள் ஈட்ட முற்படுகின்றனர். சேமிக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிக வட்டிக்கு விடப்படும். ஒரு குழந்தை பிறக்கும் போது 12 சதவீத கூட்டு வட்டிக்கு விடப்படும். ஒரு ரூபாய் அவனுக்கு நூறு வயதாகும்போது லட்சம் ரூபாயாகும் எனப் பொதுப்படக் கூறப்படுகின்றது. நாட்டுக் கோட்டைச் செட்டியின் பழக்க வழக்கங்கள்

* மலபார் காலாண்டுரெவியூ. 1905. (Malabar Quart. Review. 1905.)

எளிமையானவை; பெருஞ்செல்வனாக இருப்பினும் அவன் படாடோபமின்றி எளிய வாழ்க்கையினையே மேற்கொள்கின்றான். செட்டிகளின் பொருட்சிக்கனம் பற்றிக் கூறும் போது வீட்டுக்கு வரும் உறவினர்களுக்கு முதல் வேளை உணவு மட்டுமே கணக்கில் எழுதாமல் தருவர் என்றும் மேலும் அவர்கள் தங்கினால் அதனைச் சத்தமின்றி அவர்கள் கணக்கில் எழுதிவிடுவர் என்றும் கூறப்படுகின்றது.''.

நாட்டுக்கோட்டைச் செட்டிகள் கம்மாளர், வலையர், கள்ளர், வல்லம்பர் ஆகியோரைத் தங்கள் சமையல்காரராக அமர்த்துவதாகக் கூறப்படுகின்றது.[1] இவர்கள் இந்துக்களின் கோயில்களுள் கருவறையின் வாசற்படிவரை செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். கோயில் திருப்பணிகளுக்காகப் பெருந்தொகையினைத் தந்திருப்பதனாலும் அற நிறுவனங்களை நிறுவி நடத்தி வருவதாலும் இவர்களுக்கு இத்தகைய தனி உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ''இவர்கள் தங்கள் இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை மகமை என்ற பெயரில் அறச் செயல்களுக்கென ஒதுக்கி வைக்கின்றனர். இத்தொகையில் ஒரு பகுதி வடமொழிப் பள்ளிகள் நடத்தத் தரப்படுகின்றதெனினும் அதில் பெரும்பங்கு தென்னிந்தியக் கோயில்களைப் பழுது பார்க்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது. பாடல் பெற்ற ஸ்தலங்கள் எனப்படுபவை இவர்கள் தனிக் கவனத்திற்குரியனவாக உள்ளன. இவை மாணிக்கவாசகர், அப்பர், திருஞானசம்பந்தர் ஆகிய சமய குரவர்களான அருட்கவிஞர்களால் பாடிச் சிறப்பிக்கப்பெற்றவை.'' என மதுரை மாவட்ட விவரக் குறிப்புத் தெரிவிக்கின்றது. ''தென்னிந்தியாவில் அறச் செயல்களை மிகுதியாகச் செய்பவர்கள் செட்டிகளே. அறச் செயலுக்காக இவர்கள் பெருந்தொகை செலவிடுகின்றனர் என்பதில் ஐயமில்லை. தங்கள் இலாபத்தில் ஒரு பங்கினை இவர்கள் அறச் செயல்களுக்காக ஒதுக்கி வைக்கின்றனர். இவர்கள் எங்கே குடியேறினாலும் அப்பகுதிகளில் அறச் செயல்கள் மேற்கொள்வதற்காகத் தங்களுக்குள்ளாகவே வரிவிதித்துக்கொள்வர். இவ்வாறு திரட்டப்படும் தொகை கோயில் காரியங்களுக்காகச் செலவிடப்படும். இலங்கை, பர்மா, சிங்கப்பூர் முதலான புதிய பகுதிகளில் குடியேறிய இவர்கள் புதிய கோயில்களைப் - பெரும்பாலும் சுப்பிரமணியர் கோயில்களைக் கட்டியுள்ளனர். இந்தியாவில் கோயில் திருவிழாக்கள் பலவும் நடைபெறக் கட்டளைகள் ஏற்படுத்தியுள்ளதோடு கோயில்களைப் பழுது பார்த்துப் புதுப்பிக்கும் திருப்பணிக்காக அண்மைக் காலத்தில் இவர்கள்

[1] சி. ஹயவதன ராவ், இந்தியன் ரெவியூ , VIII, 8, 1907.
(C. Hayavadana Rao, Indian REview, VIII, 8, 1907)

பெருந்தொகை செலவிட்டுள்ளனர். சென்ற முப்பது ஆண்டுகளில் இதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை மட்டும் ரூபாய் ஒரு கோடி அளவினதாகும் என்றால் அது வியப்பளிப்பதாகாது. சைவர்களான இவர்கள் விட்டுணு கோயில் பணிகளில் அவ்வளவாக ஆர்வம் காட்டுவதில்லை. சிவன் கோயில்களுள்ளும் சைவ நாயன்மார்களும் அடியவர்களும் போற்றிப் பாடியுள்ள சிறப்புடைய கோயில்களுக்கே இவர்கள் பொருளுதவி செய்கின்றனர். வசதியான சத்திரங்களைக் கட்டி வைத்தல், அன்னதானம் செய்ய ஏற்பாடு செய்தல், வேத பாடசாலைகள் மற்றும் அண்மைக் காலத்தில் சாத்திரங்களைக் கற்றுத்தரும் பள்ளிகளை நிறுவுதல் போன்ற அறச் செயல்களுக்கும் பெருந்தொகையினைச் செலவு செய்துள்ளனர். குருக்களுக்கான பள்ளிகளையும் இவர்கள் அமைத்துள்ளனர். இந்து சமய நெறிப்பட்ட எல்லா அறச் செயல்களும் இவர்களுடைய ஆதரவைப் பெறுகின்றன எனக் கூறலாம்.

மதுரை மாவட்ட விவரக்குறிப்பில் பதிந்துள்ளவாறு : 'மதுரையில் உள்ள கோயிலின் கோபுரங்கள் அண்மையில் பெரும் பொருள் செலவில் நாட்டுக்கோட்டைச் செட்டிகளால் பழுது பார்க்கப்பட்டுள்ளன. வடக்குவாசல் கோபுரம் செங்கல் மற்றும் கல்லாலான அமைப்பினை மட்டும் உடையதாக இருந்தமையால் மொட்டைக் கோபுரம் என அழைக்கப்பட்டது. முடிக்கப்படாமல் இருக்கும் கட்டிடப் பணியினை முடிப்பது ஒருவனுக்குத் துரதிருஷ்டத்தைக் கொண்டு வந்து சேர்க்கும் என்ற மூட நம்பிக்கையைப் பற்றிக் கவலைப் படாதவராகத் துணிவோடு ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியார் அதற்குக் காரைப் பூச்சுச் செய்து முடித்தார்.'

''அண்மையில் சிதம்பரத்தில் உள்ள கோயிலினை நாட்டுக் கோட்டைச் செட்டிகள் பழுதுபார்க்கும் திருப்பணி செய்துள்ளனர். இதற்காகவும் இது போன்ற பணிகளுக்கும் இவர்கள் தங்களிடம் கடன் வாங்குபவர்களிடம் நூறு ரூபாய்க்கு நான்கணா எனப் பிடித்தம் செய்து அத் தொகையினைக் கொண்டு ஒரு நிதி அமைத்துள்ளனர். இந்தத் தொகையினை முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியினைக் கொண்டு இது போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்'' எனத் தென் ஆர்க்காடு மாவட்டக் கையேடு தெரிவிக்கின்றது.

1906-ஆம்ஆண்டில் கரூரில் உள்ள ஸ்ரீ பசுபதீசுவர சுவாமி கோயில் குடமுழுக்கு விழா பெரும்பொருட் செலவில் செய்து முடிக்கப்பட்டது. அந்தப் பழைய கோயிலை நாட்டுக்கோட்டைச்

செட்டிகள் முழுவதுமாகப் புதுப்பித்துள்ளனர். குடமுழுக்கு விழாவிற்காக ஐம்பதாயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கானவர் களுக்கு அன்னதானம் செய்யப்பட்டதோடு வைதிக பிராமணர்களுக்குப் பொருளும் தானமாக வழங்கப்பட்டது. இதே ஆண்டு சென்னையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் ஒரு 'பிஞ்சிரபோல்' (விலங்குகளுக்கான மருந்தகம்) தொடங்கவேண்டும் என்றும் அதற்காக இந்து சமூகத்தவர்களிடம் அதிலும் சிறப்பாக நாட்டுக் கோட்டைச் செட்டிகள், குஜராத்திகள், வணிக சமூகத்தவர் ஆகியோரிடமிருந்து நிதி திரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

திருச்சிராப்பள்ளிக்கு அருகே உள்ள புகழ் பெற்ற கோயிலான திருவானைக்காவில் மிக அண்மைக்காலத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டிகள் பல இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தி முடித்துள்ளனர்.

பரம்பரை வழக்கப்படி நாட்டுக்கோட்டைச் செட்டி வட்டிக்குப் பணம் கொடுத்தே பிழைப்பு நடத்துகின்றான். தங்கள் சாதியைத் தவிர வேறு சாதியினைச் சேர்ந்தவர்களின் கீழ் இவர்கள் வேலைக்கு அமர்வதில்லை. சொந்தப் பொறுப்பில் வணிகம் செய்ய வாய்ப்பில்லா தவர்கள் மற்றவர்களுடைய முகவர்களாகவோ உதவியாளர்களாகவோ இருப்பர். உதவியாளன் ஒருவனின் மூன்றாண்டுகளுக்கான ஊதியம் கணக்கிடப்பட்டு அதில் ஒரு பகுதி அவன் ஒரு மாதம் பணியினைப் பார்த்து முடித்தவுடன் அவனுக்கு வழங்கப்படும். அவன் உணவு, உறையுள் ஆகியனவற்றுக்கான செலவினையும் அவனைப் பணிக்கு அமர்த்தியிருப்பவரே ஏற்றுக் கொள்வார். அவன் பணிபுரியும் வணிக அமைப்பில் லாபத்தில் ஒரு சிறு சதவீதமும் அவனுக்கு வழங்கப்படும். முகவர் பொறுப்புக்கான வாய்ப்புக் கிட்டிய ஒருவன் ஒரு நல்ல நாளில் புறப்பட்டு விநாயகர் கோயிலுக்குச் சென்று வணங்கிய பின் விநாயகரும் நடேசரும் உள்ள மடத்திற்குச் (சமயக்கூடம்) சென்று கீழே விழுந்து வணங்கிய பின் தான் செல்ல வேண்டிய வழியில் செல்வான். கெட்ட சகுனம் எதிர்ப்படுமானால் பயணத்தைத் தொடராது திரும்புவான். நெடுந்தொலைவில் உள்ள ஊருக்குச் சென்று முகவர் பொறுப்பு ஏற்க வேண்டியிருப்பின் இது போலக் கெட்ட சகுனம் எதிர்வந்தால் அந்தப் பொறுப்பினைக் கைவிடுவான். ஆண்டு தோறும் கணக்குப் பார்ப்பது தொல்லை தருவது; ஆகையால் நாட்டுக் கோட்டைச் செட்டிகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையே கணக்கு வழக்கினைச் சரிபார்க்கும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். நெடுந்தொலைவிலுள்ள

பல்வேறிடங்களில் வணிகம் செய்வதாலேயே இவர்கள் இந்த முறையினைப் பின்பற்ற வேண்டியதாகின்றது. ''இவர்கள் வெளிநாட்டு வணிகம்,சாதியைச் சேர்ந்த முகவர்களால் நடத்தப்படுகின்றது. அந்த வணிக நிலையங்கள் அமைந்த ஊர்களில் தூரத்திற்கேற்ப ஊதிய விகிதமும், இலாபத்தில் குறிப்பிட்ட ஒரு சதவீதமும் முகவர்கள் பெறுவர். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பி வரும் அவர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள வணிக நிலையத்தின் வளர்ச்சி பற்றி நேரில் எடுத்துரைப்பர்'' என மதுரை மாவட்டக் கையேடு கூறுகின்றது. மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை புதுக்கணக்கினை ஒரு நல்ல நாளில் தொடங்குவர். அது புதுக்கணக்கு நாள் என வழங்கப்படுவதோடு விடுமுறை நாளாகவும் கொள்ளப்படும். அன்று எந்தப்பணியும் மேற்கொள்ளாது வாடிக்கையாளர்களை அழைத்துப் பழங்கள், இனிப்புக்கள் முதலியனவற்றை வழங்குவர்.

நாட்டுக்கோட்டை முகவர் முறை பற்றித் திரு ஹயவதன ராவ் தெரிவித்துள்ளன வருமாறு:* ''நடுத்தரமான வாழ்க்கை வசதிகள் பெற்றவர்கள் வணிக நிலையங்களின் தொலை தூரத்திலுள்ள ஊர்களுக்கு முகவர்களாகச் செல்வர். இந்த நிலையங்களின் தலைமையிடம் மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய இடங்களில் அமைந்திருக்கும். முகவர்களுக்குத் தரப்படும் ஊதியம் அவர்கள் பணியாற்றும் இடத்தின் தூரத்திற்கு ஏற்ப அமையும். மதுரையில் பணியாற்றும் ஒருவன் ரூபாய் நூறு ஊதியம் பெறுவானாயின் அவனே பர்மாவில் சென்று பணியேற்பானாகில் மூன்று மடங்கும் நேட்டாலில் சென்று பணி ஏற்பானாயின் ஆறு மடங்கும் ஊதியம் பெறுவதற்கு உரியவன். முகவர் திறமையுடையவராகவும் சுறுசுறுப்புடையவராகவும் இருந்தால் அவன் லாபத்திலும் ஒரு சதவீதம் பெறுவான். அவனுடைய பணிக்காலம் மூன்றாண்டுகளுக்கு என வரையறுக்கப்பட்டிருக்கும். அவனுடைய பணிக்காலம் முடிய ஆறு மாதம் இருக்கும் போது அடுத்த முகவர் அவ்விடத்திற்கு அனுப்பப்படுவான். அவன் பணியிலிருக்கும் முகவரோடு ஆறு மாத காலத்திற்கு இணைந்து பணியாற்றுவதோடு அந்த வட்டாரத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள முற்படுவான். பணிக்காலம் முடிந்ததும் முகவர் நேரே தலைமை நிலையத்திற்குத் திரும்பிக் கணக்கு வழக்குக்களைத் தந்த பின் தன் சொந்த ஊருக்குச் செல்வான். இத்துடன் அந்த வணிக நிலையத்தோடான அவனுடைய தொடர்பு ஒரு முடிவுக்கு வரும். மூன்று ஆண்டு உழைப்பின் பயனை ஓய்வாக அனுபவித்து முடித்த பின் அவன் மீண்டும் பழைய வணிக

* இந்தியன் ரெவியூ. VIII.8, 1907.(Indian Review, VIII.8 1907)

நிலையத்தில் கீழோ வேறொரு நிலையத்திலோ பணியேற்க முற்படுவான். பழைய நிலையத்தின் இலாபத்தில் ஒரு சதவீதத்தினை அவன் பெற்றிருப்பானாயின் தொடர்ந்து அந்த நிலையத்தின் சார்பில் பணியாற்ற அவன் கடமைப்பட்டவன். அந்த வணிக நிலையம் அவனை ஏற்றுக் கொள்ள மறுக்குமானால் அவன் வேறு நிலையங்களை நாடிச் செல்வான்.'' நாட்டுக் கோட்டையைச் சேர்ந்த பெண்கள் தங்கள் கணவர்கள் பணியாற்றும் தொலைவான இடங்களுக்கு அவர்களோடு செல்லும் வழக்கம் இல்லை. ''நீண்ட இடைவெளிக்குப் பின் கணவன்மார்கள் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பித் தங்கள் மனைவிமாரோடு மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்கக் கடமைப்பட்டவர்கள்''

நாட்டுக்கோட்டைச் செட்டிகளுடைய இல்லங்கள் போதுமான வசதிகளைக் கொண்டனவாக இடம் அகன்றனவாகப் பெரும்பாலும் ஒரே மாதிரியான பொது வடிவமைப்பில் கட்டப்பட்டனவாக இருக்கும். முன்வாசல் நீள்வட்டமான முற்றத்தில் கொண்டு விடும். அதனைச் சுற்றிலும் திண்ணை அமைப்பு இரண்டு பக்கங்களிலும் வரிசையான அறைகளைக் கொண்டனவாக இருக்கும். முற்றத்தின் மறுகோடியில் வீட்டின் பின்கட்டுக்களுக்குச் செல்லும் வாசல் அமைந்திருக்கும். புதிய அமைப்பிலான வீடுகள் உயரமான முன்மாடங்களோடு ஒரு மாடியினையும் கொண்டனவாக உள்ளன. மணமான பிள்ளைகள் வீட்டின் தனிப்பகுதிகளில் தனிக்குடித்தனம் நடத்துவர். கணவன் மனைவியர் இணை ஒவ்வொன்றும் வீட்டுத் தலைவரிடமிருந்து ஆண்டுக்கு இருபது ரூபாயும் பதினைந்து கலம் நெல்லும் வாழ்க்கை நடத்த உதவியாகப் பெறுவர். பிள்ளைகள் இதற்கு மேலும் விருப்பம் போல் செலவழித்துக் கொள்ளலாம். அட[illegible] செய்வார்களாயின் அதிகப்படியான செலவு அவர்கள் கணக்கில் [illegible]எழுதப்படும். அந்தத் தொகை சொத்தினைப் பாகம் பிரிக்கும் [illegible] உரிய வட்டியுடன் அவர்கள் கணக்கில் பிடித்தம் செய்யப்படும்.

''ஒரே வீட்டில் குடியிருந்தாலும் மணமானவர்கள் தனித்தனியே தங்கள் உணவைச் சமைத்து உண்ண வேண்டும் என்ற குறிப்பிடத்தக்க வழக்கம் இவர்களிடையே உள்ளது. கணவனை இழந்த கைம் பெண்களுங்கூட இந்த வழக்கப்படியே தனிச் சமையல் செய்து கொள்ள வேண்டும். மணமாகாத குடும்ப உறுப்பினர்கள் பெற்றோரோடு மணமாகும் வரை இருப்பர். குடும்பத்தில் தனியே சமைத்துக் கொள்பவர்களுக்கு ஓர் ஆண்டிற்கான அரிசி முதலிய பண்டங்களை

முதலிலேயே வழங்கிவிடுவர். இந்த வழக்கமே இந்தச் சாதியாருடைய இல்லங்கள் பெரும்பரப்பளவு உடையனவாக அமையக் காரணமாயிற்று எனலாம். '' எனத் திரு ஹயவதன ராவ் குறிப்பிடுகின்றார்.

நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் தோற்றம் பற்றிப் பின்வரும் கதை கூறப்படுகின்றது. பழங்காலத்தில் சந்திர குலத்தவரான வைசியர்கள் சம்புத்தீவில் (இந்தியாவில்) உள்ள சாந்தையபுரி என்ற நகரத்தில் வாழ்ந்து வந்தனர். அரிய மணிகளை வணிகம் செய்து வந்த இவர்கள் நாள்தோறும் மரகத விநாயகர் கோயிலுக்குச் சென்று வழிபாடு நிகழ்த்தி வந்தனர். விபூதி பூசி, உருத்திராட்சம் தரித்துப் பழுத்த சிவப் பழங்களான இவர்கள், மற்றவர்கள் போற்றும்படியாக வாழ்க்கை நடத்தி வந்தனர். ஓர் அரசன் இவர்களை மிகுந்த கொடுமைக்கு உள்ளாக்கிய காரணத்தால் இவர்கள் அந்த நகரத்தை விட்டு வெளியேறிக் கலியுகம் 204-ஆம் ஆண்டில் தொண்டை மண்டலத்தில் உள்ள காஞ்சிபுரத்தில் வந்து குடியேறினர். காஞ்சிபுரத்தை ஆண்ட மன்னன் இவர்கள் தன் நாட்டில் தங்கி வாழ இடம் தந்ததோடு நிலம், கோயில் , மடம் ஆகியவற்றையும் இவர்களுக்குக் கொடுத்தான். அங்கு நெடுங்காலம் தங்கி வாழ்ந்த இவர்கள் கடுமையான வரியும் தண்டத்தொகையும் விதிக்கப்பட்ட காரணத்தால் கலியுகாதி 2312-இல் அந்த நாட்டைவிட்டு வெளியேறிச் சோழநாட்டில் சென்று குடியேறினர். இவர்கள் நடத்தையில் மிக மகிழ்ந்தவனான சோழ மன்னர் முடிசூட்டு விழாவில் சோழ மன்னர்கள் தலையில் முடிகவிக்கும் உரிமையினை இவர்களுக்கு வழங்கினான். அச்சமயம் காவிரிப்பூம்பட்டினம் மிகுந்த புகழ்பெற்ற நகரமாயிருந்தது. அந்த நகரத்தின் வடக்கு வீதியில் வேறுநாடுகளிலிருந்து வந்து சேர்ந்த வைசியர் தங்கி வாழ்ந்து வந்தனர். அவர்களை வெளியேற்ற விரும்பாத சோழ மன்னன் புதிதாக வந்த இவர்களைக் கிழக்கு, மேற்கு, தெற்கு வீதிகளில் குடியமர்த்தினான். இவர்களுக்கு மரியாதை காட்டும் வகையில் அவன் சிங்கத்தின் உருவம் உள்ள கொடியினையும் வீட்டின் முகடுகளில் தங்கக் கலசங்களையும் பயன்படுத்த அனுமதித்தான். மன்னன் தூண்டுதலால் இவர்கள் அனைவரும் பதஞ்சலி க்ஷேத்திரத்தைச் (சிதம்பரம்) சேர்ந்த ஈசான்ய சிவாச்சாரியரின் சீடர்களாயினர். கலியுகாதி 3775-ஆம் ஆண்டளவில் பூவந்திச் சோழ மன்னன் வைசியர் சாதிப் பெண்களுள் பலரைச் சிறையிட்டான். இதனால் எட்டாயிரம் வைசிய குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் அத்தனை பேரும் தங்கள் குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பைத் தங்கள் சமய குருவான ஆத்மானந்தாச்சாரியரிடம் ஒப்படைத்தவர்களாகத் தற்கொலை செய்து கொண்டனர். அவர் மேற்குத்

தெருவினரான ஆறு வழியினைச் சேர்ந்த 600 குழந்தைகள், கிழக்குத் தெருவினைச் சேர்ந்த ஏழு வழி'பினைச் சேர்ந்த 502 குழந்தைகள், தெற்குத் தெருவினைச் சேர்ந்த நான்கு வழியினைச் சேர்ந்த 400 குழந்தைகள் என மொத்தம்1,502 குழந்தைகளைக் காப்பாற்றி வந்தார். பின்னர்ப் பூவந்திச் சோழன் நோய்வாய்ப்பட்டவனாகத் தான் இனி உயிர் பிழைக்கமுடியாது எனப் புரிந்து கொண்டு வைசியர் சிறுவர்களை அழைத்துத் தன் மகன் ராசபூசன் சோழன் முடிசூட்டுவிழாவினை நடத்தி உதவும்படி வேண்டினான். அவர்கள் தாங்கள் பிரமச்சாரிகளாக இருப்பதால் அவனுடைய அந்த வேண்டுகோளை நிறைவேற்ற இயலாது எனக் கூறினர். எனவே அந்த மன்னன் அவர்களுக்கு வேளாளர் சாதிப் பெண்களை மணம் முடித்து வைத்தான். மேற்குத் தெருவினைச் சேர்ந்தவர்கள் கார்காத்தார்ப் பிரிவைச் சேர்ந்த பெண்களையும் கிழக்குத் தெருவினைச் சேர்ந்தவர்கள் சோழியர்ப்பிரிவைச் சேர்ந்த பெண்களையும் தெற்குத் தெருவினைச் சேர்ந்தவர்கள் காணியாளர்ப்பிரிவைச் சேர்ந்த பெண்களையும் மணந்து கொண்டனர். இந்த மூன்று பிரிவினரும் முறையே திருவாரூர், கும்பகோணம், வாஞ்சியம் ஆகிய மடங்களைச் சேர்ந்த சீடர்களாயினர். கலியுகாதி 3790-இல் வைசியர் சாதிப் பெண்களுக்கும் வேளாளர் சாதியினையே சேர்ந்தவர்களாகத் தொடர்ந்து இருந்து வந்த பெண்களுக்கும் இடையே யார் முதலில் விபூதி பெற்றுக்கொள்வது என்பது தொடர்பாகப் பூசல் மூண்டது. வைசியர் சாதிப் பெண்கள் இதனால் புதியதொரு குருவின் சீடர்களாக வேண்டியதாயிற்று. கலியுகாதி 3808-அளவில் சுந்தர பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் சோழ மன்னனிடம் வைசியர் சிலரைத் தன் நாட்டுக்கு வந்து குடியேற அனுப்பி வைக்கும்படி வேண்டுகோள் விடுத்தான். இதன் காரணமாகக் கூட்டமாகச் சோழ நாட்டிலிருந்து புறப்பட்ட இவர்கள் ஹஸ்த நட்சத்திரங்கூடிய வெள்ளிக்கிழமையில் ஓங்காரக்குடி என்ற ஊரை அடைந்தனர். வைகைக்கு வடக்கும் பிரான்மலைக்குக் கிழக்கும் வெள்ளாற்றுக்குத் தெற்கிலுமாக உள்ள நிலப்பகுதியில் குடியமர அப்போது இவர்கள் அனுமதிக்கப்பட்டனர். கிழக்குத் தெருவிலிருந்து வந்தவர்கள் இளையாத்தாங்குடியிலும் மேற்குத் தெருவிலிருந்து வந்தவர்கள் அரியூரிலும் தெற்குத் தெருவிலிருந்து வந்தவர்கள் சுந்தரபட்டினத்திலும் குடியமர்ந்தனர். இவ்வாறு செட்டிகள் மூன்று அகமணக்கட்டுப்பாடு உடைய குலப்பிரிவுகளுக்கு உள்ளாயினர். இவர்களுள் இளையாத்தாங்குடி, சுந்தரப்பட்டினம் ஆகிய ஊர்களில் தங்கியவர்களை இன்று மதுரை மாவட்டத்தில் காணலாம். அரியூரைச் சேர்ந்தவர்கள் தங்கள் ஊர் பாழ்பட்ட காரணத்தால் மேற்குக் கடற்கரைப் பகுதிக்குக் குடி பெயர்ந்தனர். இளையாத்தாங்குடிப் பிரிவைச்

சேர்ந்தவர்கள் நாட்டுக் கோட்டையினர் ஆயினர். இவர்கள் தங்கள் வழிபாட்டுக்கென ஒரே ஒரு கோயில் மட்டும் இருப்பதில் திருப்தி யுறாதவர்களாக மேலும் சில கோயில்களைத் தங்களுக்குத் தரும்படி மன்னனிடம் வேண்டினர். அவ்வாறே மாத்தூர், வைரவன்பட்டி, இரணியூர், பிள்ளையார்பட்டி, நேமம், இலுப்பைக்குடி, சூரைக்குடி, வேலங்குடி ஆகிய ஊர்களில் பல்வேறு பிரிவினருக்குத் தனித்தனியே கோயில்கள் கட்டித் தரப்பட்டன. இன்று நாட்டுக் கோட்டைச் செட்டிகள் பின்வரும் புறமணக்கட்டுப்பாடு உடைய குலப்பிரிவுகளைக் (கோயில் களை) கொண்டவர்களாக உள்ளனர்:-

1. இளையாத்தாங்குடிக் கோயிலார்:-
   - ஒக்கூருடையார்
   - பட்டனச்சாமியார்
   - பெருமருதூருடையார்
   - கழனி வாசக்குடியார்
   - கிண்கிணிக்குடியார்
   - பேரசெந்துருடையார்
   - சிறுசேத்தூருடையார்

2. மாத்தூர்க் கோயிலார்
   - உறையூர்
   - அரும்பாகூர்
   - மணலூர் மண்ணூர்
   - கண்ணூரர்
   - கருப்பூர்
   - குளத்தூர்

3. வைரவன் கோயில்
   - சிறுகளத்தூர்
   - கழனிவாசல்
   - மருதேந்திரபுரம்

4. இரணியூர் கோயில்
5. பிள்ளையார்பட்டி
6. நேமம்கோயில்
7. இலுப்பைக்குடி கோயில்
8. சூரைக்குடி கோயில்
9. வேலாங்குடிகோயில்

நாட்டுக்கோட்டைச் செட்டிகள் குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்ளும் போது அவர்கள் எந்தக் கோயிலைச் சேர்ந்தவர்களோ அந்தக் கோயிலைச் சேர்ந்த குழந்தைகளையே தத்து எடுத்துக் கொள்ள வேண்டும். தத்து எடுக்கப்படடவன் மஞ்சள் நீர் புத்திரன் எனப்படுகின்றான். தத்து எடுத்துக் கொள்ளும் சடங்கின்போது தத்து எடுக்கப்படும் சிறுவன் மஞ்சள் நீரினைக் குடிக்க வேண்டும்.* இப்பிரிவினருக்குரிய கோயில் அமைந்துள்ள ஊருக்கு வரும் அந்த கோயிலைச் சேர்ந்த வெளியூர்க் காரர்களுக்குக் கோயிலை மேற்பார்ப்பவன் உணவளிக்கக் கடமைப்பட்டவன். அவ்வாறு வரும் வெளியூரார் வேறு கோயில் பிரிவைச் சேர்ந்தவர்களாயின் அவர்களிடம் அதற்குரிய தொகையை வசூலிப்பான்.

நாட்டுக் கோட்டைச் செட்டிகளின் தோற்றம் பற்றிய மற்றொரு கதை வழக்குக் கூறுவதாவது: '' ஒரு காலத்தில் சிறப்புற்றிருந்த துறைமுகமான காவிரிப்பூம்பட்டினததை ஆண்ட சோழ மன்னருடைய அரசவையில் நாட்டுக்கோட்டைச் செட்டிகள் வணிகர்களாக இருந்தனர். அந்த நகரத்தை ஆண்ட மன்னருள் ஒருவன் இவர்களைக் கொடுமைக்கு உள்ளாக்கியதால் இவர்கள் கூட்டமாக அங்கிருந்து வெளியேறி முதலில் சிவகங்கைக்கு மூன்று மைல்கள் வடகிழக்கே உள்ள நாட்டரசன் கோட்டையில் குடியமர்ந்தனர்.''

மற்றச் சாதியார் நாட்டுக் கோட்டைச் செட்டிகள் சாணன் ஒருவனும் முகமதியன் ஒருவனும் உப்புக் குறத்தி ஒருத்தியோடு கொண்ட உறவின் காரணமாகப் பிறந்தவர்கள் எனக் கூறுவர். இதற்கு ஆதாரமாக இவர்களுடைய பழக்கவழக்கங்களில் உள்ள தனித்த தன்மைகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டுவர். நாட்டுக் கோட்டைச் செட்டிப் பிரிவு ஆண்கள் முகமதியர்களைப் போலத் தலையை முழுக்க மழித்துக் கொள்கின்றனர் என்பது அதில் ஒன்று. ஆண்களும் பெண்களும் வயதான சாணர்களைப் போலக் காதுமடல்களின் துளைகளைப் பெரிதாக்கிக்கொள்கின்றனர் என்பது மற்றொன்று, சிறுமிகள் குறத்திகளைப் போலச் சங்குமணிமாலைகளை அணிவதாகவும் கூறுவர். பெண்கள் குறத்திகளைப் போலக் கூடை முடைதலில் ஆர்வம் உடையவர்களாக இருப்பதையும் எடுத்துக்காட்டுவர். சிலபோது இச்சாதியார் உப்பு மாறிச் செட்டிகள் எனவும் அழைக்கப்படுவதாகக் கூறுவர். இந்த வாதங்களையும் அவற்றுக்கான ஆதாரங்களையும்

* இந்தியச் சட்ட அறிக்கைகள், சென்னை வரிசைகள், XXIX 1906.
(Indian Law Reports, Madras Series, XXIX. 1906.)

கடுமையாக எதிர்க்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிகள் தங்களுக்கு உப்புமாறிச் செட்டிகள் எனப் பெயர் வந்ததற்கான காரணமாக ஒரு காலத்தில் மிகுந்த ஏழ்மை நிலையில் இருந்த தங்கள் முன்னோர்கள் பிழைப்புக்காக வேண்டி உப்பு விற்று வந்ததுதான் எனக் கூறுவர்.

சாதியினைப் பாதிக்கும் விவகாரங்களைப் பற்றிப் பேசித் தீர்க்க நாட்டுக்கோட்டைச் செட்டிகள் பஞ்சாயத்து முறையினையே மேற்கொள்கின்றனர். இது தொடர்பாகத் திரு சுந்தர அய்யர் எழுதுவது வருமாறு:- ''வழக்கு மன்றங்களை நாடாமலேயே அண்மைக் காலம் வரை இவர்கள் தங்கள் வழக்குகளைத் தீர்த்துக் கொண்டுள்ளனர். சாதியைச் சேர்ந்த பெரியவர்கள் அது போலச்செய்வதனை உடன்படுவதில்லை. வழக்குக்குள்ளானவர்களிடையேயான கருத்து வேறுபாடுகளை முடிந்த அளவு அவர்கள் பஞ்சாயத்துச் செய்து குறைக்கின்றனர். தங்களுடைய முடிவுக்குக் கட்டுப்படுவதாக வழக்குக்கு உள்ளாகியுள்ள இருசாராரிடமும் தீர்க்கப்படாதிருக்கும் பிரச்சினைகளில் பின்னர் உடன்பாடு கண்டு பதியப் போதுமான காலி இடம் விட்டுக் கையொப்பம் பெறுவர். அதன் பின் பஞ்சாயத்தார் அந்தப் பிரச்சனை பற்றிய தங்கள் முடிவினை அந்தக் காலியிடத்தில் பதிவர். இவ்வாறு ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் வழக்கும் வரவரக் குறைந்து வருவதோடு தற்போது அடிக்கடி வழக்கு மன்றங்களை நாடிச் செல்லும் பழக்கமும் ஏற்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொண்டேயாக வேண்டியுள்ளது.'' நாட்டுக்கோட்டைச் செட்டிகளிடையே மடத்துவாசல் மறியல், கோயில் வாசல் மறியல் என்ற முறை மட்டுமே நடைமுறையில் உள்ளது. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு மேலாள், ஓர் உதவியாளன், வைராவி என்ற ஒரு பணியாளன் ஆகியோர் இருப்பர். வைராவி மேளக்காரன் சாதியைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும். வழக்கில் தீங்கிழைப்புக்கு உள்ளானவர் தன்னுடைய குற்றச்சாட்டைக் கோயில் மேலாளிடம் தெரிவிப்பான். அவன் கோயிலைச் சேர்ந்த பெரிய மனிதர்களுக்கு அதனைத்தெரிவிப்பான். குற்றம் சுமத்தியவரும் குற்றம் சுமத்தப்பட்டவனும் கோயிலுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுவர். வழக்குத்தொடர்பான சாட்சியங்களைக் கோயில் மேலாள் பதிவான். குற்றம் சுமத்தப்பட்டவன் கோயில் பஞ்சாயத்தார் முன் வரத் தவறினால் வைராவியினை அவன் வீட்டிற்கு அனுப்பி அங்கிருந்து அவன் உடைமையான சில பொருள்களை அடவாக எடுத்துவரச் செய்வர். அண்மையில் நடந்த ஒரு வழக்கில் பணக்காரனான ஒரு நாட்டுக் கோட்டைச் செட்டி விதவையான தன் சகோதரன் மனைவிக்கு ஒரு

சிறுவனைத் தத்து எடுத்துக் கொள்ள உடன்பாடு தருவதாக வாக்களித்திருந்தும் அதன்படி அனுமதிக்க முன் வராததால் அவள் கோயிலாரிடம் முறையிட்டுக் கொண்டாள். அவளுடைய கணவனின் உடன்பிறந்தவன் பஞ்சாயத்துக் கூட்டத்திற்கு வராததால் கோயிலார் வைராவியினை அவனுடைய வீட்டுக்கு அனுப்பி அவன் இல்லாதபோது அடவு எடுத்துவரச் செய்தனர். இதனைத் தனக்கு நேர்ந்த பெரிய இழிவாகக் கருதிய அச்செல்வர் வழக்கு மன்றத்தை நாடிச் செல்லப் போவதாகப் பேச்சு அடிபடுகின்றது. மணஉறவு தொடர்பான உடன்படிக்கைகள், பணம் கொடுக்கல் வாங்கல் பற்றிய தகராறு, குடும்பச்சச்சரவுகள் போன்றன கோயிலவையினரிடம் பஞ்சாயத்துக்குக் கொண்டு வரப்படும். பஞ்சாயத்தார் தங்கள் தீர்ப்பினை எழுத்து மூலமாக வழங்காமல் வாய்வழியாகவே வழங்குவர். கோயில் அவையினர் தீர்ப்புக்குக் கட்டுப்பட மறுப்பவர்களுக்கு அவர்கள் குடும்பத்தில் நடைபெறும் திருமணத்திற்குக் கோயிலிலிருந்து மாலை அனுப்ப மாட்டார்கள். கோயில் மாலை வரப் பெறாமல் ஒரு திருமணம் நடைபெற இயலாது.

''இவர்கள் கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் காரியக் காரன்கள் என்ற மேலாண்மைக் காரர்கள் உள்ளனர். ஊரைச் சேர்ந்த பெரியவர்களே அப் பொறுப்புக்கு உரியவர்களை அமர்த்துவர். இந்த காரியக்காரர்களே பஞ்சாயத்தாராகச் செயல்பட்டு எல்லா வழக்குகளையும் தீர்த்து வைப்பவர்கள். இவர்களால் நல்ல முறையில் தீர்த்து வைக்க இயலாது போகும் வழக்குகளை அரசினர் வழக்கு மன்றத்திற்குக் கொண்டு செல்வர். வழக்கு மன்றத்திற்கு முதலில் கொண்டு போகப்பட்டு விட்ட வழக்குகளைக் கேட்க இவர்கள் உடன்படுவதில்லை. திருமணத்தின் போது கோயிலிலிருந்து மாலைகள் அனுப்ப மறுப்பதன் வழியாகவும் சாதி விலக்கம் செய்யத் தங்களுக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியும் இவர்கள் தங்கள் தீர்ப்புக்களை வழக்காடுபவர்கள் ஏற்றுக் கொள்ளும்படியாகச் செய்வர்'' எனத் திரு ஹயவதன ராவ் குறித்துள்ளார்.

திருமணத்திற்கு முன் நாட்டுக்கோட்டைச் செட்டி இளைஞர்கள் அனைவரும் சூப்பிடி (சூர்ப்பிடுதல் - சுற்றியாட்டுதல்) என்ற சடங்கினை நடத்துதல் வேண்டும். கார்த்திகைத் திருநாளன்று அவன் குதிரை மீது ஏறிப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்வான். அங்கு வழிபாடு நிகழ்த்திய பின் ஒரு பையில் போடப்பட்டுள்ள தணலை நீண்ட கயிற்றோடு பிணைத்துக் கட்டித் தன் தலைக்கு மேலே சுழற்றுவான். கோயிலுக்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள சொக்கப் பானையினை அவன்

கொளுத்திய பின் அதன் சாம்பலை அவன் நெற்றியில் பூசுவர். அவன் வீட்டிற்குத் திரும்பும்போது வழியில் உள்ள நாட்டுக் கோட்டைச் செட்டிகளின் வீட்டு வாசல்களிலும் அவன் வீட்டுக்குத் திரும்பியபின் அவன் வீட்டு வாசலிலும் அரிசிமாவிளக்கால் அவனுக்கு ஆரத்தி எடுப்பர். இதே போன்று சிறுமியரும் தங்கள் திருமணத்திற்கு முன் திருவாதிரை என்ற சடங்கினை நிகழ்த்துதல் வேண்டும். ஆருத்ரா தரிசனத்தன்று அவளைக் குளிக்கச் செய்து அலங்கரிப்பர். அது வரை அணிந்து வந்த கண்ணாடிப் பாசிமணி மாலைக்குப் பதிலாகத் தங்கமணிகளாலான கழுத்துச் சங்கிலி அணிவிக்கப்படுவாள். கையில் ஒரு வெள்ளிக் கிண்ணத்தை ஏந்தியவளாக அத்தகைய சடங்குகளைத் தன்னைப் போலவே நிகழ்த்தும் பெண்களின் வீடுகளுக்குச் சென்று பின்வருமாறு குரல் கொடுப்பாள்:-

ஆடிவந்த எனக்கு அவரைக்காய் படையுங்க!
பாடிவந்த எனக்குப் படரவரை படையுங்க!
சொல்லி வந்த எனக்குச் சுரைக்காய் படையுங்க!

அந்த வீட்டார் சமைத்து வைத்திருக்கும் பலவகைக் காய்கறிகளையும் அவளுடைய கிண்ணத்தில் இடுவர். அன்று மணமான பெண்கள் வீட்டில் தோசை வார்த்து அதில் இரும்பு மயிர்க்கோதியால் துளையிட்டு அதனையும் மேற்கண்டவாறு பாடிவரும் பெண்களுக்கு இடுவர். இத்தகைய பொருள்களைப் பாடிச் செல்லும் ஒருத்தி பெறவில்லையானால் அதனைத் தனக்கு நேர்ந்த பெரிய இழிவாகக் கருதுவாள்.

நாட்டுக் கோட்டைச் செட்டி ஒவ்வொருவனுக்கும் தன் அத்தை மகளைப் கைப்பிடிக்கும் உரிமை உள்ளது. இந்த உரிமை காரணமாக நடக்கும் பொருந்தா மணங்களில் உத்தேசமாகத் தந்தை எனப்படுபவன் குழந்தையாக இருப்பான்.* பெண்ணுக்குரிய தாலிக்கான தங்கம் தரும் சடங்கோடு மண நிகழ்ச்சிகள் தொடங்கும். ஒரு நல்ல நாளில் மணமகன் வீட்டார் ஒரு தங்கப் பவுனைப் பொற்கொல்லனிடம் தருவர். அவன் அதனை மெல்லிய தகடாகத் தட்டுவான். அவனுக்கு வெற்றிலை முதலியன வழங்குவர். திருமணச் சடங்கின் முதல் நாளன்று மணமகன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு விருந்து தருவர். பெண் மூதாதையர்கள் வழிபாடு நிகழ்த்தப்படும். மறுநாள் சீரெடுத்தல் என்ற சடங்கு (வரதட்சணை வழங்கல்) நிகழும். அன்பளிப்பாகத் தரப்படும் மதிப்புமிக்க இப்பொருள்களைப் பரப்பி வைத்துப் பட்டியல் படுத்துவர்.

* சி ஹயவதனராவ்- முந்துநூல்

அரிசி,நெய்,பருப்பு, பழங்கள் போன்ற கெட்டுப் போகக் கூடிய பொருள்களை விற்று விடுவர். மணமகள் வீட்டார் தரும் இந்த அன்பளிப்புக்கள் மணமகன்வீட்டிற்கு எடுத்துச் செல்லப்படும். இதனைக் கொண்டு செல்பவர்களுக்கு வெற்றிலை, பட்டு விசிறி, செண்ட் பாட்டில், பட்டுக் கைக்குட்டை, சாக்லெட்பாட்டில், பிஸ்கட் டின், பித்தளைப் பாத்திரம் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்குவர். மூன்றாம் நாள் மணமக்கள் சேர்ந்துள்ள பிரிவுக்குரிய கோயிலிலிருந்து மாலைகள் வந்து சேரும். மணமகள் குடும்பத்தார் மணமகன் இல்லத்திற்கு ஒரு தட்டில் பட்டுக் கைக்குட்டை, வேட்டி , ஒரு வெள்ளிக்கிண்ணத்தில் ஐம்பது ரூபாய் வெற்றிலை ஆகியனவற்றை வைத்து எடுத்துச் செல்வர். இவற்றை மணமகனுக்கு வழங்குவர். இச்சடங்கு மாப்பிள்ளை அறியப்போதல் எனப்படும். அடுத்து நாள் குறித்தல் சடங்கு நடைபெறும். மணமகன் வீட்டார் தங்களுடன் துப்பட்டியில் கட்டிய இரண்டு தேங்காய், வெற்றிலை, மஞ்சள், முதலியவற்றை எடுத்துக்கொண்டு மணமகள் இல்லம் செல்வர். மணமகளைக் குளிக்கச் செய்து அலங்கரிப்பர். பின்னர்ப் புறங்கழித்தல் என்ற சடங்கு நிகழும். மணமகள் தன்னுடைய பாட்டியின் அருகே நிற்க பிராமணப் புரோகிதர் வேப்பிலைக் கொத்தால் பெண்ணின் தோள், தலை, முழங்கால் ஆகியனவற்றைத் தொட்டபின் அவற்றை வீசி எறிவார். அவள் கழுத்தில் அணிந்திருக்கும் கண்ணாடிப் பாசிமணி மாலை அகற்றப்படும். உப்பெடுத்தல் சடங்கில் மணமகன் வீட்டார் ஒரு கூடையில் உப்பு, நவதானியச் சிப்பம், மண ஒப்பந்தம் எழுதுவதற்கான பனையோலை ஆகியனவற்றை மணமகள் இல்லத்திற்கு எடுத்துச் செல்வர். பிராமணப் புரோகிதர் புனித நெருப்பை மூட்டி ஹோமம் வளர்ப்பார். பல பிள்ளைகளைப் பெற்ற, மணமகள் கோயிலைச் சேராதவரான பெரியவர் ஒருவரும் மணமகன் உடன்பிறந்தவளும் மணமகள் கழுத்தில் தாலி அணிவிப்பர். இதன் தாலிக் கயிறு ஏழு அங்குல நீளமும் தாலி நான்கு அங்குல அகலமும் பதினேழு முதல் இருபத்தி மூன்று வரையான பொன் அணிகளையும் கொண்டதாக மிகுந்த மதிப்பு வாய்ந்ததாக இருக்கும். இவற்றில் உள்ள கூரிய முனைகள் பெண்கள் குழந்தைகளை வைத்திருக்கும் போது எதிர்பாராது குழந்தைகளின் கண்களில் குத்தி விபத்துக்களைத் தோற்றுவிக்கின்றன. அன்றாடம் அணிந்துகொள்ள இந்தப் பெருந்தாலிக்குப் பதிலாகச் சிறுதாலியைச் செய்து கொள்வர். தாலி கட்டி முடித்தவுடன் திருமண ஒப்பந்தம் (இசகுடி மானம்) எழுதப்படும். மணமகனுக்கு ஒன்றும் மணமகளுக்கு ஒன்றுமாக இரண்டு ஓலைகள் எழுதப்படும். அவ்வாறு எழுதப்படும் ஒப்பந்தங்களின் மாதிரி வருமாறு:-

''ஒக்கூருடையான் அருணாசலம் செட்டியின் மகன் சுப்ரமணியத்திற்கும் அரும்பாக்கூருடையான் கே. நடேசசெட்டியின் மகள் வள்ளியம்மைக்கும்.....தேதியன்று நடைபெற்ற திருமணம் தொடர்பாக இது எழுதப்பட்டது. இவர்கள் இருவரும் முன்பு இளையாத்தாங்குடியினைச் சேர்ந்த .....ஊரில் வாழ்ந்தவர்கள். பெண்ணுக்குத்தரப்பட்ட நகைகள் .....சவரனாகும். மணமகனுக்குத்தரப்பட்ட வரதட்சணை.....ரூபாய்களாம். பெண் வேலைக்காரிக்குச் சிரட்டுசுக்கரமாகத் தரப்பட்ட தொகை.....அன்பளிப்பாகத் தரப்பட்ட நகைகள்..... இசைக்குடிமானம்.....ஆகிய என்னால் எழுதப்பட்டது. ஒப்பம் இராமநாதன் செட்டி.''

மணமகன் குதிரையில் ஏறிப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று வழிபாடு நிகழ்த்துவான். அதன் பின் தெருக்கள் வழியாக மணமகள் இல்லத்துக்கு ஊர்வலமாகச் செல்வான். அவன் உடன்பிறந்தவள் ஒரு கலத்தில் பாலினை எடுத்துக் கொண்டு அவனுடன் செல்வாள். கூலி ஒருவன் ஒரு சிப்பம் விதை நெல்லினைச் சுமந்தவனாக உடன் செல்வான். செட்டிகளின் வீட்டு வாசல்களில் மணமகளை நிறுத்தி ஆரத்தி எடுப்பர். மணமகள் வீட்டுவாசலில் மணமகள் அவனை எதிர்கொள்வாள். மணமகள் உடன்பிறந்தவள் அவர்களை ஒருவர் மேல் ஒருவர் விழும்படியாகத் தள்ளி விடுவாள். இதனால் இச்சடங்கு மாப்பிள்ளைக்கு இடித்துக்காட்டல் எனப்படும். அதன்பின் மணமக்கள் வீட்டினுள் உள்ள ஒரு மேடைக்கு அழைத்துச் செல்லப்படுவர். புரோகிதர் பருத்தி நூலாலான கங்கணத்தை அவர்களுக்கு அணிவிப்பர். பெண்களின் சங்கு முழக்கத்தினிடையே அவர்கள் தேங்காயும் மாலையும் மாற்றிக் கொள்வர். மணமகளின் தாயார் மணமக்களுக்கு மஞ்சள், விபூதி, சந்தனம் முதலியன பூசுவாள். நான்காம் நாள் வெற்றிலைச் சுருள் ரூபாய் என்ற தொகை தாய்மாமன்மாராலும் செட்டிகளாலும் மணமக்களுக்கு வழங்கப்படும். இரண்டு ரூபாயும் வெற்றிலையும் வைக்கப்பட்ட ஒரு வெள்ளிப் பாத்திரத்தை மணமகனுக்கு அவன் மாமனார் வழங்குவார். மணமகன் தன் தோளில் வள்ளுவைப்பை எனப்படும் நீண்டதொரு பையினைத் தொங்க விட்டவனாகத் தனக்குத் தரப்படும் வெற்றிலை முதலியவற்றை அதனுள் போட்டுக் கொள்வான். மணச் சடங்கின் இறுதி நாளன்று மணமக்களின் கங்கணம், கால் மெட்டி ஆகியன அகற்றப்பட்ட பின் மணமக்கள் ஒன்றாக உணவுகொள்வர்.

கருவுற்று இருக்கும் ஒருத்திக்கு மருந்திடல், தீர்த்தங்குடித்தல் ஆகிய இரு சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. மருந்திடல் கருவுற்ற ஐந்தாம் மாதம் நிகழும். ஒரு நல்ல நாளில் கருவுற்றிருப்பவளின் கணவனுடன் பிறந்தவள் பெண்கள் சங்கு முழக்கத்திற்கு இடையே ஐந்து செடிகளின் இலைச் சாற்றைக் குடிக்கத் தருவாள். ஏழாம் மாதம் அவளுக்குக் கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்ட தீர்த்தத்தைக் குடிக்கத் தருவர். தலைச்சன் பிள்ளையாகப் பிறப்பது ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அதற்குப் புதுமை என்ற சடங்கினை நிகழ்த்தி வைப்பர். அவர்களுக்கு இரண்டாண்டுகள் ஆகும் போது பிராமணப் புரோகிதர் குறித்துத் தரும் ஒரு நல்ல நாளில் அக்குழந்தையின் தாய்மாமன் அதன் கழுத்தில் பவளம், கண்ணாடிப் பாசிமணிகள் ஆகிய கொண்ட கயிற்றைக் கட்டுவான். செல்வ வளம் படைத்தவர்கள் முத்து முதலிய அரிய மணிகளையும் அதனோடு இணைப்பர். மேலும் பல அணிகளால் குழந்தையினை அலங்கரித்து நீள் வட்ட வடிவமான ஒரு மரத்தொட்டிலில் கிடத்துவர். அதனைக் குழந்தையின் தாயாரும் அத்தையும் தாங்கியபடி இருப்பர். அவர்கள் அந்தக் குழந்தையினைத் தூக்கியவர்களாக மூன்று தரம் சுற்றிச்செல்வர். அதன் பின் குழந்தையின் அத்தை அதனை எடுத்தவளாகக் கூடியுள்ளவர்களிடம் சென்று காட்டி அவர்களின் வாழ்த்தைப் பெறுவாள். நண்பர்களும் உறவினர்களும் குழந்தைக்கு ஒரு தொகையினை அன்பளிப்பாக வழங்குவர். தாய்மாமன்மார் அப்போது மற்றவர்களைக் காட்டிலும் மிகுதியான தொகையினை வழங்க வேண்டும். இரண்டாம் நாள் அந்தக் குழந்தை ஆணாயின் அதன் தலை மழிக்கப்படும். அப்போதிருந்து வாழ்நாள் முழுதும் அவன் தலையை முழுதும் மழித்துக் கொண்டவனாக இருப்பான். ''சோழ நாட்டிலுள்ள காவிரிப் பூம்பட்டினத்து அரசன் இச் சாதியினைச் சேர்ந்தவர்களைக் கொடுமைப்படுத்திய போது இவர்கள் அவன் நாட்டை விட்டு வெளியேறும் வரை தலை மழித்துக் கொள்வதில்லை என்ற விரதம் மேற்கொண்டவர்களாக இருந்தனர். பின்னர்ப்புதிய இடத்தில் வந்து குடியமர்ந்த பின் தங்கள் பழைய விரதத்தை நினைவு கூர்ந்தவர்களாக அனைவரும் தலையினை முழுவதுமாக மழித்துக் கொண்டனர் என ஒரு கதை வழங்கி வருகின்றது.''*

நாட்டுக் கோட்டைச் செட்டிகளிடையே சாவுநேருமானால் சாதிக்கு உரிய தண்டக்காரன் அச்செய்தியினை அனைவருக்கும்

* சி. ஹயவதன ராவ் - முந்துநூல்

தெரிவிப்பான். துக்கம் கேட்க வருபவர்களைக் கை நீட்டிக் கொண்டு வரவேற்பர். பிணத்தின் தலையை மழித்துப்பின் குளிப்பாட்டி அலங்கரிப்பர். சாவு நிகழ்ந்த வீட்டுக்கு முன் நான்கு பூவரசங் (*Therperia populnea*) கொம்புகளை நட்டு மேற்கூரையாக நாவல் மர(*Eugenia Jambolana*)க் கொத்துக்களையிட்டுப் பந்தல் அமைப்பர். இந்தப் பந்தலின் கீழ் பிணம் கிடத்தப்படும். கூடியுள்ளவர்கள் அதனை மும்முறை சுற்றி வருவர். பிணத்தை எரிக்கச் சுடுகாட்டிற்குத் தூக்கிச் செல்ல ஏற்பாடு நிகழும். அதே சமயம் இறந்து போனவரின் மகள்களும் உடன்பிறந்தவள்களும் நெல் குற்றுவர். பிணத்தைச் சுடுகாடுக்குக் கொண்டு செல்லும் போது இறந்தவரின் மகன் நெருப்புச் சட்டியினைத் தூக்கிச் செல்வான். இறந்து போனது சிறுவனாகவோ சிறுமியாகவோ இருப்பின் பிணத்தை எரித்து வந்தபின் பந்தலை அகற்றுவர். அவ்வாறு இல்லாதிருப்பின் நான்கு நாள்களுக்கு உள்ளாக வரும் செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய நாள்களில் ஒன்றில் பந்தல் அகற்றப்படும். நாட்டுக்கோட்டைச் செட்டிகள் பந்தல் என்ற சொல்லினைச் சாவு வீட்டிற்கு முன் இடுவதைக் குறிக்க மட்டுமே பயன்படுத்துகின்றனர். திருமண வீட்டின் முன் இடப்படுவது காவணம் அல்லது கொட்டகை எனப்படும். சாதாரணமாக வீட்டின் முன் இடும் கொட்டகையைக் கூட இவர்கள் பந்தல் என அழைப்பதில்லை. பந்தல் என்ற சொல் சாவுச் சடங்கோடு தொடர்புடையதாக இருப்பதே இதற்குக் காரணம். பிணத்தை எரித்த மறுநாள் அம்பட்டன் பெரிய எலும்புகளின் துண்டங்களைப் பொறுக்கி இறந்து போனவரின் மகன் கையில் தர அவன் அதனை ஒரு மண் சட்டியில் இடுவான். பண்டாரம் இறந்து போனவருக்குப் பழம், சோறு முதலியன படைப்பான். எட்டு நாள்கள் சென்ற பின், சாவு நிகழ்ந்த பின் அதுவரை விலக்கி வைக்கப்பட்டிருந்த இறைச்சியோடு கூட உறவினர்களுக்கு விருந்து வைப்பர். அத்துடன் தீட்டு முடிவுக்கு வரும். எனினும் முப்பது நாள்கள் வரை கோயிலினுள் நுழைய மாட்டார்கள். சாவு நிகழ்ந்த பதினாறாம் நாளன்று கருமாந்திரம் நிகழ்த்துவர். அப்போது பிராமணர்களுக்குப் பணம், இராமாயணம், மகாபாரதம், பெரியபுராணம் போன்ற சமய நூல்கள், மரக்கரண்டிகள் முதலியவற்றைத் தாராளமாகத் தானம் செய்வர்.

நாட்டுக் கோட்டைச் செட்டிகளுக்கும் சமய உபதேசம்செய்து வைப்பதற்கான மூன்று மடங்கள் உள்ளன. பதனக்குடி, கீழா ஆகிய ஊர்களில் உள்ள மடங்களில் ஆண்களுக்கும் தூலாவூரில் உள்ள மடத்தில் பெண்களுக்கும் உபதேசம்செய்து வைப்பர். இவர்கள் அதிலும் குறிப்பாகப் பெண்கள் சைவர்கள். அய்யனார், முனீசுவரன்,

கறுப்பன்ஆகிய தெய்வங்களையும் பெண்கள் வழிபடுவர். நாட்டரசன் கோட்டையில் உள்ள செல்லத்தம்மன், கண்ணுடையம்மன் ஆகிய கிராம தேவதைகளையும் இவர்கள் வழிபடுகின்றனர். நாட்டுக் கோட்டையைச் சேர்ந்த ஆண்கள் காதுமடல்களைச் நீளும்படி செய்து கொள்கின்றனர். அதில் அணிகள் எவையும்அணிவதில்லை. இடுப்பைச் சுற்றிப் பலரும் தங்க அரைஞாண் அணிவர். வைரக்கற்கள் பதித்த மோதிரங்களை விரல்களில் அணிவர். செல்வவளம் மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் கூட விலை குறைந்த துணிகளாலான ரவிக்கை அணிவதோடு பாத்திர பண்டங்கள் கழுவும் வீட்டு வேலை போன்ற அனைத்தையும் அவர்களே பார்த்துக் கொள்வர். பொதுவாகக் கூடை முடைதலைப் பெண்கள் மேற்கொள்கின்றனர். சில இல்லங்களில் நூல் நூற்பதற்கான ராட்டைகள் உள்ளன.

தென்னிந்தியாவைச் சேர்ந்த மற்ற வணிகச் சாதியார்களைப் போலவே நாட்டுக்கோட்டைச் செட்டிகளும் வணிகத்திற்கான தனிக்குறியீட்டு மொழிகளைக் கொண்டுள்ளனர். அது இடத்திற்கு இடம் வேறுபடும். சென்னை நகரில் அணா, ரூபா, பத்துரூபா ஆகிய மூன்றுக்கும் இவர்கள் தனித்தனிப் பட்டியல் வைத்துள்ளனர். இவை சில தொடர்களின் அடிப்படையில் அமைந்தவை. அணாவுக்கான குறியீட்டுப் பட்டியல் நாட்டுக்கோட்டைச் செட்டிகள் வழிபடும் கோயிலான மதுரையில் உள்ள தேவியான 'திரிபுர சுந்தரி' என்ற சொல்லின் எழுத்துக்களைத் தலைகீழாக வைத்து அமைக்கப்பட்டுள்ளது. அந்தச் சொல்லில் உள்ள எழுத்துக்களுக்கான தொகை வருமாறு.

ரி	-	1/2அணா	-	ர	-	3 அணா
த	-	3/4 அணா	-	பு	-	4 அணா
ந்	-	1 அணா	-	ரி	-	8 அணா
சு	-	2 அணா	-	தி	-	12 அணா

ரூபாயினைக் குறிப்பதற்கான பட்டியல் ' வேதகிரிஈசுவரர் துணை' என அமையும். சென்னைக்கு அருகே உள்ள திருக்கழுக்குன்றத்தில் உள்ள தெய்வத்தின் பெயரால் அமைந்தது இது.

வே	-	1 ரூபாய்	சு	-	6 ரூபாய்
த	-	2 ரூபாய்	வ	-	7 ரூபாய்
கி	-	3 ரூபாய்	ர	-	8 ரூபாய்
ரி	-	4 ரூபாய்	ர்	-	9 ரூபாய்
ஈ	-	5 ரூபாய்	து	-	10 ரூபாய்
			ணை	-	11 ரூபாய்

நூறு ரூபாயினைக் குறிப்பதற்கான பட்டியல் 'திருக்கழுக்குன்றம்' என்ற பெயரைக் கொண்டு அமைந்தது.

தி	-	10 ரூபாய்	க்	-	60 ரூபாய்
ரு	-	20 ரூபாய்	கு	-	70 ரூபாய்
க்	-	30 ரூபாய்	ன்	-	80 ரூபாய்
க	-	40 ரூபாய்	ற	-	90 ரூபாய்
ழு	-	50 ரூபாய்	ம்	-	100ரூபாய்

அணாவை வணக்கம் எனவும் ரூபாயை வெள்ளை எனவும் இவர்கள் சில போது குழூஉக்குறியாக வழங்குவர்.

நாட்டுப்பட்டன்: Nāttupattan

அம்பலவாசிகளுள் ஒரு பிரிவினர் (பார்க்க : உண்ணி)

நாட்டுச்சாம்பன்: Nāttusamban

சாம்பன் என்பது சிவனுக்குரிய ஒரு பெயர். பறையருக்குரிய பட்டப்பெயராகவும் இது உள்ளது. நாட்டுச்சாம்பன், நாட்டுப்புறப் பறையன் எனப் பொருள்படும்.

நட்டுவன்: Nattuvan

"நட்டுவன் நாட்டியம் கற்றுத்தரும் ஆசிரியரைக் குறிக்கும் பெயர். இது நாட்டியக்காரிகளின் சாதியைச் சேர்ந்த நாட்டியம் கற்றுத் தரும் ஆசிரியர்களைக் குறிக்கும்" என 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது. நாட்டிய நிகழ்ச்சிகளில் தேவதாசிகள் ஆடும்போது நட்டுவனார்கள் முழவு, குழல், கிளாரினெட், கைத்தாளம் முதலியனவற்றைப் பின்னணி இசையாக வாசிப்பர். கைகோளன் சிறுமி ஒருத்தியைத் தேவதாசியாக நேர்ந்துவிடும் சடங்கில் நாட்டிய ஆசிரியரான நட்டுவனார் அச்சிறுமியின் பின்னால் அமர்ந்து இசைக்கேற்ப அவள் கால்களை மேலும் கீழும் ஆட்டிவைப்பார். தமிழ்ப்பகுதிகளில் தேவதாசிகளுக்கு நாட்டியம் கற்றுத் தரும் தச்சர் சிலரும் தங்களை நட்டுவனார் எனக் கூறிக்கொள்கின்றனர்.

நடுவிலே : Natuvili (middle)

திருவாங்கூரில் பறையன்களுக்குரிய ஓர் உட்பிரிவு

நவகோடி: Navakōdi (nine cores)

ஒன்பது கோடி எனப் பொருள்படும் இது தேசூர் ரெட்டிகளின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்.

நவலிபிட்ட: Navlipitta (peacock)

மயில் எனப்பொருள்படும் இது சாடபு சாதியின் ஒரு குலம்.

நவாயட்: Navāyat

நவாயட் அல்லது நவாயெட் எனப்படுபவர்கள் பற்றி 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தொகுத்துக் கூறப் பட்டுள்ளதாவது:- இவர்கள் வடகன்னடத்தில் உள்ள பட்கலில் வந்து குடியமர்ந்த முசல்மான் இனத்தவர்களாதல் கூடும். மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் இவர்கள் பட்கலி எனப்படுகின்றனர். இந்தப் பெயரின் தோற்றம் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. குரேசி, மேக்கரி, சைத, சீயர்,மொககிர் என்ற ஐந்து உட்பிரிவினர் இச்சாதியுள் உள்ளனர். முசல்மான்களிடையே தங்களை உயர்ந்தவர்களாகக் கூறிக்கொள்ளும் இவர்கள் பிற பிரிவினரோடு மண உறவு கொள்வதில்லை.''

கர்னல் வில்க்ஸ் சாதுட் சமவின் அடிப்படையிலும் இச்சாதியாரோடு உரையாடித் தெரிந்து கொண்டதன் அடிப்படையிலும் இச் சாதியினைப் பற்றிப் பின்வரும் விவரங்களைத் தந்துள்ளார்:* 'நெவயெட் என்பது புதிதாக வந்து சேர்ந்தவர் எனப் பொருள்படும். இது இந்துஸ்தானி மராத்திச் சொற்களின் சிதைந்த வடிவமாகக் கருதப்படுகிறது. ஹஜிரி சகாப்தத்தின் முதல் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் - கிறித்தவ சகாப்தத்தின் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் - கலீப் அப்த் - அல - மெலிக் - பின் - மெர்வானின் பகுதியினை ஆண்ட ஈராக்கின் ஆளுநரான ஹெஜாஜ் பின் யூசபின் தீங்கிழைக்கும் கெட்ட குணம் காரணமாக முசலமான்களாலேயே கொடுங்கோலாட்சி புரியும் அரக்கன் எனத் தூற்றப்பட்டான். இவன் இழைத்த கொடுமைகளைத் தாங்காது ஹாசம் குலத்தைச் சேர்ந்த செல்வவளம் மிக்கவர்கள் சிலர் தங்கள் சொந்த நாட்டை விட்டு வெளியேறுவது என முடிவு செய்தனர். அலியின் சமாதியருகே அமைந்து யூப்ரெடிஸ்க்கு மேற்கே உள்ள நகரங்களுள் புகழ் பெற்றதான கூஃப் நகரத்தில் வாழ்ந்தவர்களின் நல்லெண்ணத்தோடு கூடிய உதவியுடன் அக் குலத்தினர் தங்கள் குடும்பத்தினர், சுற்றத்தார், சார்ந்து வாழ்வோர், உடைமைகள் ஆகியவற்றோடு அவர்கள் கடற்பயணத்திற்காகப் பாரசீக வளைகுடாவில் தயாராகக் காத்திருந்த கலங்களில் ஏறிப் புறப்பட்டனர். இக் கலங்களில் சில இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் உள்ள கொங்கணில் வந்து சேர்ந்தன. மற்றவை

* தென்னிந்தியா பற்றிய வரலாற்றுக் குறிப்புகள், 1810
(Historical Sketchssof the South India, 1810.)

கிழக்காகப் பயணம் மேற்கொண்டனவாகக் கன்னியாகுமரியினை அடைந்தன. கொங்கணில் இறங்கியவர்கள் நெவயெட்டுகள். கன்னியாகுமரிப் பகுதியில் வந்து சேர்ந்தவர்கள் லப்பைகள். லப்பைகள் தாங்களும் நெவயெட்டுகளும் ஒரே குலத்தவர்கள் எனவும் உள்ளூர் வாசிகளுடன் மணஉறவு கொண்டதால் தங்கள் தோலின் நிறம் கறுப்பாக மாறிவிட்டது எனவும் கூறுவர். எனினும், நெவயெட்டுகள் லப்பைகள் தங்கள் வீட்டு வேலைக்காரர்களின் சந்ததியினர் என்பதனை அடித்துக் கூறுவர். பல பிரிவினராக உள்ள லப்பைகளிடையே உடல் வாகிலும்அமைப்பிலும் அபிசீனியாவைச் சேர்ந்த மக்களின் கூறுகள் தெளிவாக இடம் பெற்றிருக்கக் காணலாம். மேற்குக் கடற்கரை சார்ந்த நெவயெட்டுகள் இந்தியர்களோடு மணஉறவு கொள்வதைத் தவிர்த்தவர்களாகத் தங்கள் இனத்தூய்மையினைக் காத்து வருகின்றனர். தக்காணத்தில் முசல்மான்களின் அரசமரபுகள் வேரூன்றிய பின்னுங்கூட இவர் தகுதியில் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களோடும் மணஉறவைத் தவிர்த்து வந்துள்ளனர். இன்றுங்கூடச் சில நெவயெட்டுக்களின் தோல் நிறம் ஐரோப்பியர்களின் நிறத்தை ஒத்ததாக அழகுடையதாகக் காணப்படுகிறது. இவர்கள் ஒருவருக்கொருவர் ஒரே குலத்தவர்களாக இணைந்து குல உணர்வோடு வாழ்கின்றமையால் மற்றவர்களால் மதிக்கப்படுகின்றனர். போர் ஆற்றல், கல்வித்திறன், பண்பட்ட நடத்தை ஆகியவற்றுக்காக இவர்கள் தக்காணத்து முகமதியர்களின் அரசவையில் நன்மதிப்புப் பெற்று விளங்குகின்றனர்.

நாவடியன்: Nāvatiyan

வெலிக் கட்டளவன்களுக்கான மற்றுமொருபெயர்.

நாயாடி: Nāyādi

மலபார் கையேட்டில் நாயாடிகளைப் பற்றிப் பின்வருமாறு தொகுத்துக் கூறப்பட்டுள்ளது:- "இந்துக்களுள் மிகத் தாழ்ந்த சாதியாரான நாயினை உண்பவர்களான நாயாடிகள் பற்றி எதுவும் உறுதியாகத் தெரியவில்லை. பிச்சை கேட்டு, நடப்பவர்கள், வண்டியில் பயணம் செய்வோர், படகில் செல்வோர் ஆகியோரைச் சற்றுத் தொலைவில் பின்னால் தொடர்ந்து வந்தவர்களாக நச்சரிப்பர். இவர்களுக்கு ஏதேனும் தருவதாயிருந்தால் அதனைத்தரையில் வைத்து விட வேண்டும். அவ்வாறு தருபவர்கள் அதனை வைத்துவிட்டு அப்பால் சென்ற பிறகே இவர்கள் மருட்சி கொண்டவர்களாக வந்து அதனை எடுத்துக்கொள்வர்."

நான் நேரில் சோரனூரில் ஆராய்ந்து அளவெடுத்த நாயாடிகள் அந்த ஊரிலிருந்து மூன்று மைல் தொலைவிலேயே வாழ்ந்து வந்தாலும் இவர்களுக்குரியதாகக் தொன்று தொட்டு இருந்து வரும் தீட்டுப்படுத்துபவர்கள் என்ற நிலை காரணமாக ஊரை அடுத்து ஆற்றின் குறுக்கே அமைந்திருக்கும் நீண்ட பாலத்தின் வழியே வராமல் பல மைல்கள் நடந்து சுற்றுப்பாதை வழியாகவே வந்து சேர்ந்தனர். இறுதியாக இவர்கள் நான் தங்கியிருந்த பங்களாவின் மதில் சுவரை ஏறிக் குதித்துத் தாண்டி வரவேண்டியதாயிற்று. ஒரு நாற்காலியில் எப்படி முறையாக அமர்வது என்பதனை அறியாத முதன் முதல் 'கிரானியோ மீட்டரில்' தலையளவு எடுப்பதற்குள்ளானவன் எடோன் (Eton) பள்ளியில் பிரம்படி பெறச்செல்லும் மாணவர்களைப் போல நடுங்கியபடி கூனிக் குறுகியவனாக அமர்ந்திருந்தான். அளவெடுக்கும் பணி முடிந்ததும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகிய அனைவரும் புல்வெளியில் திருப்தியான விருந்து உண்ண அமர்ந்தனர். அதன்பின் வீட்டுக்குப் புறப்படும் போது அவர்கள் ஒரு சேரக் கீறிச்சுக் குரலில் என்னை வாழ்த்தினர் எனினும் அது அவர்களுடைய வழக்கமான ஊளையிடத் தொடங்கும் நரியின் குரலினை ஒத்ததாக இருக்கவில்லை. இங்கு நான் மேற்கொண்ட இனஇயல் ஆய்வுத் தொடர்பாக நான் விடுத்த தனிச் செய்தி, செய்தித்தாள்களில் பின்வருமாறு இடம் பெற்றதை எடுத்துக்காட்டலாம் என நினைக்கின்றேன். ''மாலையில் அந்தப் பெருந்தகை அவர்களுக்குக் கஞ்சியும் கறியும் தாராளமாக வழங்கியபின் செப்புக் காசுகள், கள், சாராயம் ஆகியனவும் வழங்கினார். இதனால் மிக மகிழ்ந்தவர்களான அந்த ஏழைகள் மிகவும் திருப்தியுற்றவர்களாகப் புறப்பட்ட போது கொச்சி மாநில எல்லையிலிருந்து ஆற்றுக்கு அப்பால் உள்ள பிரிட்டீசாரின் பகுதிக்குப் பத்திரமாகக் கொண்டு சேர்க்கப்பட்டனர்.'' கொச்சியிலும் மலபாரிலும் சாலைகளில் செல்வோர் சாலை ஓரத்தில் ஓரிரண்டு செப்புக் காசுகள் கிடக்கும் கந்தல் துணி விரித்து வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதே சமயம் சுமார் நூறு கெச தூரத்திலிருந்து பலர் ஒரே சீராகப் பெருங்குரலெடுத்துத் தலைவிரி கோலமாகப் பேய்களை ஒப்ப இடையில் அழுக்குக் கோவணங்களைக் கட்டியவர்களாக நின்று புலம்பியபடி இருக்கக் காணலாம். அந்தக் கந்தலில் கிடக்கும் காசுகள் வழிப்போக்கர்கள் பிச்சையாக இட்டவை. அந்தக் குரலுக்கு உரியவர்கள் நாயாடிகள். கொல்லத்தூர் அருகே நாயாடிப் பாறை என்ற ஒரு பெருங்கல் இருப்பதாக என்னிடம் தெரிவித்தனர். நாயாடி ஒருவனுக்குப் பிச்சையிடாத காரணத்தால் கல்லாக மாறிவிட்டவன் உருவம் அது என நம்பப்படுகிறது.

வேட்டைக்காரன் எனப்பொருள்படும் நாயட்டுக்காரன் என்பதற்குச் சமமானது நாயாடி என்ற சொல். நாயாடிகள் பரம்பரையாக வேட்டையில் ஈடுபட்டு வருவதோடு குறிதவறாது சுடும் திறமையும் வாய்க்கப் பெற்றவர்கள். நாயர்களும் பிற உயர்சாதியினரும் வேட்டை மற்றும் துப்பாக்கியால் சுட்டு வேட்டையாடச் செல்லும் பயணங்களின் போது இவர்களை உடன் அழைத்துச் செல்லும் பழக்கத்தை முன்பு மேற்கொண்டவர்களாக இருந்தனர். சிறந்த வில் வீரர்களாகவும் விளங்கும் இவர்கள் மான், பன்றி, முயல் முதலியவற்றை வேட்டையாடித் தின்னும் பழக்கம் உடையவர்கள். இந்த விலங்குகள் தற்பொழுது கிடைப்பதில்லை. காடுகள் பாதுகாக்கப்பட்டவை என அரசு அறிவித்து விட்டதும் தனிப்பட்டவர்களுடைய காட்டில் உள்ள மரங்கள் விறகுக்கும், வீடு கட்டுவதற்கும், இருப்புப்பாதைக்கும் என வெட்டப்பட்டு விட்டதால் அக்காடுகள் அழிந்து விட்டதே தற்பொழுது விலங்குகள் இல்லாது போனதற்கான காரணமாகும். நீர்நாய் என அழைக்கப்படும் மலையருவிகளில் வாழும் விலங்குகளைத் தின்பதால் இவர்கள் நாயாடிகள் எனப் பெயர் பெற்றனர் என்ற ஒரு கருத்தும் கூறப்படுகிறது.

நாயாடி ஒருவன் முந்நூறு அடிக்குள்ளாக நெருங்குவானாகில் ஒரு பிராமணன் தீட்டுக்குள்ளாவான். அத் தீட்டினைப் போக்கிக் கொள்ள அப்பிராமணன் குளிப்பதோடு தன் பூணூலையும் மாற்றிக் கொண்டாக வேண்டும். சமூகப் படிநிலையில் மிகத் தாழ்ந்தவர்களாக உள்ள இவர்கள் அதன் காரணமாகப் பெருந்தொல்லைகளுக்கு உள்ளாகின்றனர்.

மலைச் சிகரங்களில் தனிப்பட்டனவாக அமைந்திருக்கும் குடிசைகளிலேயே நாயாடிகள் வாழ்கின்றனர். ஒரு குட்டை அல்லது அருவி அருகேயுள்ள ஒரு சோலையினையே இவர்கள் குடியிருக்கத் தேர்ந்தெடுக்கின்றனர். சில குடும்பங்கள் பண்ணையார்களின் நிலத்தில் குடிசை போட்டுக் கொண்டு இரவில் வரும் காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்களைக் காத்து வருகின்றன. சில போது நெல் வயல்களிலும் வாழைத் தோட்டங்களிலும் உழவும், விதைக்கவும், களை பிடுங்கவும், அறுவடை செய்யவும் இவர்கள் அமர்த்தப்படுகின்றனர். பிரிட்டீசாரின் பேரரசினைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் அண்மையில் வாழை (**Musa**) ஆகாயத்தில் தொங்கும் வேர்களை உடையதாக உள்ளது என எழுதியிருப்பதை நான் கண்டித்தேயாக வேண்டும். அவர் ஆல (***Ficus beng alensis***) மரத்தை நினைத்து அத்தகைய தவறினைச் செய்திருக்கலாம்.

இந்தச் சாதியினைச் சேர்ந்த ஆண்கள் நாயாடிகள் எனவும் பெண்கள் நாயாடிச்சிகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். சிறுவர்கள் மொளையன்கள் எனவும் சிறுமியர் மணிச்சிகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். மக்கள் தாய உரிமை உடைமை இவர்கள் வழக்கில் கொண்டுள்ளனர்.

தென்னோலைப் படல் சுவர்களோடு கூடிய கொட்டகையும் சில மண்பாண்டங்களும் ஒரு கோடரியுமே நாயாடியர் உடைமைகளாம். இவர்கள் எப்போதாவது தேன், தேன் மெழுகு, மட்டிப்பால் மரத்திலிருந்து (*Ailanthus malabarica*) கோயில்களிலும் அறைகளிலும் நறும்புகை ஊட்டப் பயன்படுத்தும் மட்டிப்பசை ஆகியனவற்றைச் சேகரிக்கின்றனர். தேனையும் மெழுகையும் கள்ளுக்குப் பண்டமாற்றுச் செய்யும் இவர்கள் பசையினைச் செப்புக்காசுகளுக்கு விற்று அதைக் கொண்டு உப்பு, மிளகாய், கருவாடு, புகையிலை, மதுவகைகள் போன்ற பொருள்களை வாங்கிக் கொள்கின்றனர். மலபார் செடியிலிருந்தும் கய்யூழ் (*Bauhinia*) மரப்பட்டையிலிருந்தும் முரட்டுக் கயிற்றினை இவர்கள் தயாரிக்கின்றனர். இந்த மரப்பட்டையினை முதலில் தண்ணீரில் ஊற வைத்துப் பின் வெயிலில் உலர்த்தி நாராக்கிக் கயிறு திரிக்கின்றனர். சைப்ரஸி (*Cyperus*) லிருந்து பறவைகளைச் சுருக்கு வைத்துப் பிடிக்கும் கயிறு மற்றும் பாய்களும் தயாரிக்கின்றனர்.

தன் குடியிருப்புக்கு அருகில் உள்ள நம்பூதிரி இல்லம் ஒவ்வொன்றுக்கும் எட்டுக் கெசம் நீளமுள்ள நான்கு கயிறுகளும் நாயர் வீடுகள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு கயிறுகளும் விசு, ஓணம் பண்டிகைகளின் போது கொடுக்க நாயாடி கடமைப்பட்டவன். இதற்கு ஈடாக இவன் குறிப்பிட்ட அளவு நெல்லினைப் பெறுவான். இக் கயிறுகள் கால்நடைகளைக் கட்டவும் கிணற்றிலிருந்து நீர் இறைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. புத்திக் கூர்மையுள்ள அந் நாளைய ஆட்சித் தலைவர்கள் ஒவ்வொரு நாயாடிக்கும் எனக் குறிப்பிட்ட தேசத்தினை (வட்டாரத்தின் ஒரு பகுதி) ஒதுக்கி அதில் அவனுக்குரியதான சில தனி உரிமைகளையும் ஏற்படுத்தியுள்ளனர். அவனுக்குரிய உரிமைகளாவன:- பிறந்த நாள்விழா, சிரார்த்தம், திருவிழா நாள்கள் ஆகியவற்றின்போது நாயாடி தனக்குரிய பங்கான சோற்றையும் கறியையும் ஒரு பழைய துணியில் முடிச்சிட்டுக் கட்டி அளிக்கப் பெறுதல். அவனுக்கு உரிமையுடைய வட்டாரத்தில் ஒருவன் நோயுறுவானாயின் எள், கடுகு, மஞ்சள், தேங்காய் ஆகியனவற்றை நான்கு முனைகளிலும் முடியப்பட்ட நாட்டுக் கம்பளி ஒன்றினை நோயாளியின் தலையினை மும்முறை சுற்றி

ஒரு பனையோலைக் குடை, ஒரு தடி, ஒரு வெள்ளரிக்காய் ஆகியவற்றோடும் தரப்பெறும் உரிமை. இது கால தானம் எனப்படும். இறப்புக்குரிய தெய்வமான எமனின் தீய தாக்குதலிலிருந்து தப்ப அவனுக்குப் படைக்கப்படும் பலிப்பொருள்களாக இவை கருதப்படுகின்றன. நாயாடி இதனைப் பெற்றுக் கொண்டு இதனைத் தந்தவன் நீண்ட ஆயுளுடன் வளமாக வாழ வேண்டும் என வாழ்த்தி வழிபாடு நிகழ்த்துவான். இவற்றை அவன் தன் குடும்பத் தெய்வத்தின் முன் வைத்து நோயுற்றவன் வாழ்வு காக்கப்படவேண்டும் என வேண்டுவதோடு அந்த நோய் தன்னை வந்து பீடிக்கக்கூடாது எனவும் வேண்டிக்கொள்வான்.

செறுமான்களைப் போல நாயாடிகளும் மதுப்பழக்கம் உடையவர்கள் என்றாலும் நாள் கூலிக்கு அன்றாடம் உழைக்கும் செறுமான்களைப் போல இவர்கள் கள்ளுக்குச் செலவழிக்கப் போதுமான வசதியுடையவர்களாக இல்லை. தோட்டங்களில் தொல்லை கொடுக்கும் குரங்குகளைச் சுட்டு வீழ்த்தும் மேல் சாதியார் அவற்றின் இறைச்சியினை நாயாடிகளுக்கு உண்ணத் தருவர். எலி, கீரி, பன்றி, மான்,கிளி, கோகிலம், புறா, காடை, கோழி, குருட்டுக் கொக்கு, முயல், ஆமை, பல்லி, முதலை, மீன் ஆகிய அனைத்தையும் இவர்கள் உண்பர். நாய், பூனை, பாம்பு, தலை நண்டு, சங்குமீன், மாட்டிறைச்சி ஆகியவற்றை இவர்கள் உண்பதில்லை. காட்டு வள்ளிக்கிழங்கு (*Dioscorea*) சாணத்தும்பைக் (*Colocasis*) கிழங்கு ஆகியனவற்றை உண்பர். பெரும்பண்டாளிக் (*Litsoea sabifera*) குச்சிகளைக் கடைந்து இவர்கள் நெருப்பு உண்டாக்குகின்றனர். சிறு குச்சியில் உள்ள குழியில் தோடர்களைப் போல் இவர்கள் கரிப் பொடியினைப் போடுவதில்லை. கடைவதால் பழந்துணியினில் சூடான மரக் கட்டைத் தூள் பற்றி எரியுமாறு செய்கின்றனர்.

கருவுற்றிருக்கும் ஒருத்தி ஆறாம் மாதத்தில் குரங்கு அல்லது மலை அணிலின் இறைச்சியினைத் உண்ண வேண்டும் என ஏக்கம் உறுவாள். ஏழாம் மாதத்தில் அவளைத் தொல்லைப்படுத்தும் பேய்களை ஓட்ட ஒரு சடங்கு நிகழ்த்துகின்றனர். இச் சடங்கு 'ஓழன்று கழியுக' எனப்படும். தீய ஆவிகள் செய்யும் தொல்லைகளாலேயே கருச்சிதைவு ஏற்படுகின்றது என இவர்கள் நம்புகின்றனர். இத் தீங்கினை விலக்க இவர்கள் கழுத்தில் மந்திரித்த ஒரு கயிற்றினைக் கட்டிக் கொள்வதோடு மலைகளில் வாழும் தெய்வங்களையும் மூதாதையர்களின் ஆவிகளையும் உதவி செய்யுமாறு வேண்டி வழிபடுவர். மகப்பேற்றுக்காகத் தனிக்

குடிசையிட்டு அதில் பிள்ளை பெற உள்ளவளை இருத்துவர். பேறு கால வலிவந்த ஒருத்தியின் கணவன் தன் வயிற்றில் எண்ணெயினைப் பூசிக்கொண்டவனாகத் தெய்வங்களிடம் நல்லபடியாகத் தன் மனைவி பெற்றுப் பிழைக்க வேண்டும் என வேண்டிக் கொள்வான். பழங்குடி மக்களிடையே மனைவியின் பேறுகாலத்தில் கணவனுக்கு வரும் போலி வலியினை ஒத்தது இது எனலாம். தன் மனைவி குழந்தை பெற்றவுடன் ''பிள்ளையை வெளியே அனுப்பியதற்காகக்'' கடவுளுக்கு நன்றி கூறுவான். பிள்ளையைப் பெற்றவள் பத்து நாட்களுக்குத் தீட்டுக்கு உரியவளாகக் கருதப்படுவாள். அச்சமயத்தில் அவள் கணவன் அவள் முன்வருவதைத் தவிர்ப்பான். குழந்தையின் உடலில் குறைகள் ஏதேனும் இருக்குமானால் அது கெட்ட ஆவிகளின் செல்வாக்கால் நிகழ்ந்தவை எனக் கருதுவர். இருபத்தெட்டாம் நாள் குழந்தைக்குப் பெயரிடும் சடங்கினை நிகழ்த்துவர். தலைப் பிள்ளைக்குத் தந்தை வழிப்பாடான பெயரை இடுவர். ஐந்து ஆண்டு ஆகும் போது குழந்தைக்குக் காது குத்துவர். அதனை அக் குழந்தையின் தாய்மாமன் நடத்தி வைப்பான். பித்தளைக் கம்பியே காதணியாக அணிவிக்கப்படுகிறது. பெண்கள் தங்கள் காதுத் துளைகளில் சிறு மரக்கட்டைத் துண்டினை அணிவர். நாயாடிச்சிகள் செறுமான் சாதிப் பெண்களைப் போல வளையல்கள் அணிவதில்லை. அதற்குப் பதிலாகக் கழுத்தில் பாசிமணிகளாலான மாலைகள் பலவற்றை மார்பு வரை தொங்கும் படியாக அணிகின்றனர்.

சிறுமி ஒருத்தி பூப்படைந்தவுடன் நாயாடிச்சி ஒருத்தி அவளைக் குட்டைக்கு அழைத்துச் சென்று குளிக்கச் செய்வாள். வாழையிலைத் துண்டுகள் பலவைத்துக் கட்டப்பட்ட கட்டு ஒன்றினை மூன்று அல்லது நான்கு தரம் அவளைச் சுற்றி எடுத்துச் செல்வர். அவள் பாத்திர பண்டங்களைத் தொடாது இருப்பதோடுகூடத் தலை உடல் ஆகியவற்றையும் கையால் சொறிந்து கொள்ளாது ஒரு குச்சியைக் கொண்டே சொறிந்து கொள்ள வேண்டும்.

இவர்களுடைய புதுமையான திருமண முறை பற்றித் திரு. டி.கே. கோபால் பணிக்கர் பின்வருமாறு எழுதுகின்றார்.* 'ஹொல்லி' மற்றும் பிற இலை தழைகளைக் கொண்டு பெரியதொரு குடிசை அமைக்கப்பட்டு அதனுள் மணமகள் கொண்டு சேர்க்கப்படுவாள். ஊரைச் சேர்ந்த இளைஞர்கள், பெண்கள் அனைவரும் அந்தக் குடிசையினைச் சூழ்ந்து

* மலபாரும் அங்கு வாழ்வோரும் (Malabar and its folk)

வட்டமாக நிற்பர். அந்தப் பெண்ணின் தந்தை அல்லது நெருங்கிய ஆண் உறவினர் ஒருவன் கூட்டத்தைவிட்டுச் சற்றுத்தள்ளி, கைகளில் தப்பட்டை ஒன்றைத் தாங்கியபடி அமர்ந்திருப்பான். அப்பொழுது அவர்கள் இசை பாடத் தொடங்குவர். அந்தப் பெண்ணின் தந்தை பின்வருமாறு பாடத் தொடங்குவான்:

"என் இனியமகளே அந்தக் கோலை எடுத்துக் கொள்.
என் அன்பிற்குரியவளே அந்தக் கோலை எடுத்துக்கொள்.
நீ விரும்பிய கணவனை நீ தேர்ந்தெடுத்துவிட்டாயல்லவா?
உனக்குரியவன் உன் விதிப்படி வாய்த்துவிட்டான்."

"மணம் செய்து கொள்ளத் தகுதியுடைய இளைஞர்கள் அனைவரும் தங்கள் கையில் ஒரு கோல் ஏந்தியவர்களாக மணமகள் தங்கியுள்ள அந்தக் குடிசையைச் சுற்றி நடனமாடத் தொடங்குவர். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் இவ்வாறு நடனமாடிய பின் அந்த இளைஞர்கள் தங்கள் கையில் உள்ள கோலினை அந்தக் குடிசையினுள் இலை தழைகள் வழியே நுழைப்பர். குடிசையுள் இருப்பவள் அந்தக் கோல்களில் ஒன்றினைப் பிடித்துக் கோள்ளவேண்டும். அவள் யாருடைய கோலைப் பிடித்துக் கொண்டிருக்கிறாளோ அவனே அவளுக்கு உரிய கணவனாவான். இந்தச் சடங்கிற்குப் பின் விருந்து நடைபெறும். அதன் பின் அவர்களுக்கு மணம் முடிந்ததாக அறிவிப்பர்.

திரு. எப் . பாவ்செட் காட்டிய ஓர் ஒளிப்படத்தில் கழுத்தில் நாயாடி ஒருவன் தான் இன்னமும் மணத்தளையில் அகப்படவில்லை என்பதற்கு அடையாளமாகத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கும் மோதிரத்தோடு காட்சி தந்தான். விரைவில் அவன் அந்த மோதிரத்தை இழக்க வேண்டியதாயிற்று. ஒரு ரூபாய் அன்பளிப்பாகத் தந்து அவன் ஒருத்தியைத் தனக்குரிய துணைவியாக ஏற்பாடு செய்து இரண்டு நாள்களுக்குள்ளாக அவளைத் திருமணமும் செய்து கொண்டான்.

தவறான நடத்தையில் ஈடுபடுவது அருவருப்புக்குரிய செயலாகக் கருதப்படுகிறது. அத்தகைய குற்றம் புரிபவர்கள் காட்டு விலங்குகள், பேய்கள் ஆகியவற்றின் தாக்குதலுக்கு உள்ளாவர் என நம்புகின்றனர். மணமுறிவுக்கு உள்ளான ஒருத்தியின் மகனுக்கோ மகளுக்கோ திருமணம் நடைபெறும்போது அன்பாக அழைக்கப்பட்டால் அவள் அதில் பங்கு கொள்வாள். அவள் தன் பழைய கணவனை முகத்துக்கு நேரே பார்க்காதவளாக அன்றிரவே தன் குடிசைக்குத் திரும்பி விடுவாள்.

ஒருவன் சாகக் கிடக்கும்போது அவ்விடத்தில் வந்து கூடுபவர்களுக்கு அரிசிக் கஞ்சி வழங்குவர். அதனை வயிறாரக் குடித்த அவர்கள் நோயில் கிடக்கும் அவனுடைய கதி என்னவாகும் எனத் தெய்வம் ஏறியவர்களாகக் கூறுவர். குடித்த அந்தக் கஞ்சியின் சுவை பிணத்தின் சுவையுடையதாக மாறுகிறதா அல்லது மாறாது அப்படியே உள்ளதா என்பதனைக் கொண்டு அவன் சாவானா பிழைப்பானா என அவர்கள் தங்கள் முன்னுணர்வால் அவனுக்கு நிகழ உள்ளதை முன்கூட்டியே உரைப்பர்.* நாயாடிகள் இறப்பவர்களை எரிக்கவோ புதைக்கவோ செய்வர். புதைகுழியில் கற்களைப் பல அடுக்குகள் பாவிப் பிணத்தைப் புதைத்தபின் புதைகுழியின் மேல் நடுவில் ஒன்றும் இரண்டு பக்கமும் ஒவ்வொன்றாக இரண்டும் ஆக மூன்று பெரிய கற்களை வைப்பர். பிணத்தை எரித்தால் எலும்புகளைப் பொறுக்கி ஒரு கலயத்தில் இட்டு இறந்தவன் வாழ்ந்த குடிசையருகே வைப்பர். பத்து நாள்கள் தீட்டு மேற்கொள்வர். அப்போது எணங்கன்(பிணத்தின் வழி உறவாக அமைந்தவன்) அவர்களுக்காக உணவு சமைப்பான். பத்தாம் நாள் இறந்தவனுடைய பிள்ளைகள் உறவினர்களோடும் அருகே உள்ள ஓடைக்குச் சென்று அதன் கரையில் இறந்தவன் எலும்புகளைப் புதைப்பர். பின் அவன் பிள்ளைகள் குளித்து முடித்து இறந்தவன் ஆவி பேய்களின் அச்சுறுத்தலுக்கு ஆளாகாதபடி சொர்க்கத்தைச் சென்று சேரப் பலி தருவர் குளித்த பின் மணலை மேடையாகக் குவித்து அதன்மீது ஒரு வாழையிலையையிட்டு அதில் கொஞ்சம் அரிசி, தர்ப்பை ஆகியனவற்றை வைப்பர். அதன்மீது பன்னிரண்டு முறை நீர் தெளிக்கப்படும். இறந்தவன் பிள்ளை தரையில் விழுந்து அதனை வணங்குவான். பின்னர் வீட்டுக்குத் திரும்பும் அவர்கள் மீது பசுஞ்சாண நீரினை உறவினர்கள் தெளிப்பதோடு குடிசையினையும் சாணநீரால் மெழுகுவர். இவ்வாறு அவர்கள் தீட்டு நீக்கப்படுகின்றது. ஒருவன் இறந்தபின் ஏழாம் மாதத்தில் பிணத்தைப் புதைத்த குழியினை மீண்டும் தோண்டி எலும்புகளைப் பத்திரமாகப் பொறுக்கிப் புதைகுழியில் ஒரு மூலையில் குவித்து அதன் மீது குச்சிகளை இட்டு நெருப்பு மூட்டி எரிப்பர் என மற்றொரு விவரப்படி தெரிய வருகின்றது. இவ்வாறு ஓரளவு எரிக்கப்பட்ட எலும்புகளை மூத்தமகன் ஒரு புதிய கலயத்தில் குடிசைக்கு எடுத்துச் சென்று குடிசை அருகே உள்ள ஒரு மரத்தில் கட்டித் தொங்கவிடுவான். இச் சடங்கை முடித்த பின் அவன் குளித்து வந்தபின் அடியந்திரத்(கருமாந்திரம்) திற்கு உரிய நாள் முடிவு செய்யப்பெறும். அன்று மூத்த மகன் எலும்புள்ள அந்தப் பானையினைக்

* மலபாரும் அங்கு வாழ்வோரும் (Malabar and its folk)

கொண்டு சென்று ஓர் ஓடைக்கரையில் புதைத்து அதனருகே மணலைக் குவிப்பான். அக்குவியலின் மீது அவன் பங்காளிகள் அனைவரும் மும்முறை நீர் தெளித்துக் கீழே விழுந்து வணங்கிச் செல்வர். நல்ல சாப்பாட்டுடன் சடங்கு முடிவுறும். சிறிது காலத்திற்கு முன்பு குறி தவறாது சுடுவதில் திறமை பெற்றவனான ஒரு நாயாடி இறந்து விட்டான். அவன் மகன் துப்பாக்கி உரிமம் வைத்திருக்கும் ஒருவரிடமிருந்து ஒரு பிடி துப்பாக்கி வெடி மருந்து வாங்கி வந்து அவனைப் புதைத்த இடத்தருகே இறந்தவன் ஆத்மா திருப்தியுற வேண்டி அந்த வெடிமருந்தை வைத்து அதில் நெருப்பிட்டான்.

மல்லன், மலைவாழி, பறைக்குட்டி என்பன நாயாடிகள் வழிபடும் தெய்வங்கள். அவற்றுக்குக் கள், அரிசி, குரங்கின் இறைச்சி ஆகியனவற்றை இவர்கள் படைக்கின்றனர். பறைக்குட்டியே இவர்களுக்கு வேட்டைக்கு உதவுவதோடு வேட்டை விலங்குகள் கிடைக்கவும் காட்டு விலங்குகளின் தாக்குத்லிலிருந்து தப்பவும் உதவும் தெய்வம். தங்கள் வேட்டையின் போது விலங்குகள் அகப்படவில் லையாயின் இவர்கள் அத்தெய்வத்தைத் தூற்றுவர்.

நாயாடிகள் தங்கள் மூதாதையரை வழிபடும் பழக்கத்தையும் மேற்கொண்டுள்ளனர். இறந்து போனவர்களின் நினைவாக உருவங்களை வைத்து அவற்றிற்குக் கள்ளும் சோறும் ஓணம், விசு முதலிய திருவிழாக்களின் போது படைப்பர். ஒரு மாமரத்தின் அடியில் அமைந்த பறம்பில் (தோட்டம்) அந்த மாமரத்தைச் சுற்றி நாற்பத்து நான்கு கற்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்று பலிக்கல்லாகும் இது கோயில்களின் உள் சுற்றில் அமைக்கப்பட்டுள்ள பலிபீடத்தை ஒத்தது. அளவில் சிறியனவான மற்றக் கற்கள் எல்லைக் கற்களை ஒத்தனவாக இருந்தன. அவை இறந்து போன நாற்பத்து நான்கு நாயாடிகளைக் குறிப்பனவாக அமைக்கப்பட்டவை. மேற்கூறிய நாள்களில் சடங்கு நிகழ்த்தும்போது மறியினையோ கோழியினையோ அறுத்து அக் கற்களின் மீது பலியிடப்பட்டவற்றின் குருதியினைத் தெளிப்பர். அதன் பின் மூதாதையரின் ஆவிகள் தங்களைப் பாம்புகளிடமிருந்தும் காட்டு விலங்குகளிடமிருந்தும் காக்க வேண்டும் என வேண்டிக் கொள்வர். புலியினை எதிர்ப்பட நேர்ந்தால் தன் மூதாதையரின் உதவி கேட்டு வேண்டுதல் செய்து கொள்வதாகவும் அப்போது புலி எத்தகைய தீங்கும் இழைக்காது எனவும் ஒரு நாயாடி அடித்துக் கூறினான்:

ஆபத்துக்கோ வியாதிக்கோ ஆளாகும் நாயாடிகள் பறையர் சாதிச் சோதிடனிடம் சென்று சோதிடம் கேட்பர். ஒருத்தியைப் பேய் பிடிக்குமானானல் பறையனை அழைப்பர். அவனிடம் ஒரு நூலையும் கள்ளையும் வழங்குவர். பறைக்குட்டிக்கும் வேறு சில தெய்வங்களுக்குமான சில மந்திரங்களைச் சொல்லியபடி அவன் அந்த நூலைப் பேய் பிடித்துள்ள பெண்ணின் கழுத்தில் கட்டிவிட்டுக் கள்ளினைக் குடிப்பான். பேய் அவளை விட்டுப் போய்விடும். ஒருவன் பேய்க்கோ, கெட்ட திருஷ்டிக்கோ ஆட்பட்டிருப்பின் உப்பு, மிளகாய், புளி, எண்ணெய், கடுகு, தேங்காய், சில செப்புக்காசுகள் ஆகியனவற்றை ஒரு பாத்திரத்திலிட்டு அதனை மும்முறை தீங்குற்றவன் தலையினைச் சுற்றிச் சுழற்றி அதனை ஒரு நாயாடியிடம் கொடுத்து அவனைத் தீங்குற்றவனைச் சபிக்கும்படி வேண்டுவர். நாயாடி சபிப்பானாயில் அதற்கு எதிர்மறையான விளைவுகளே நிகழும் என இவர்கள் நம்புகின்றனர். ஆகையால் தனக்குப் பிச்சை கொடுத்தவனைச் சபிக்கும்படி நாயாடியிடம் கூறினால் அவ்வாறு பிச்சை கொடுத்தவனுக்குத் துன்பமும்கேடும் வரட்டும் என்று சபிப்பான். நாயாடிகள் பணத்தைச் செப்புக்காசு என்றும் சோற்றை இலைமாற்றம் என்றும் உண்ண ஏதும் கிடைக்கவில்லையானால் நக்கான் இல்லா என்றும் கூறுவர். பாம்பு கடித்தால் பாதுகாக்கும் பொருட்டுப் பித்தளைக் கால்மெட்டி ஒன்றினை இவர்கள் அணிகின்றனர். இவர்கள் வங்குகளில் எலிகளைப் பிடிக்கும்போது மணிக்கட்டைச் சுற்றிப் பாம்பு வடிவிலான ஒரு வளையத்தை எலி பங்குகளில் பதுங்கியிருக்கும் பாம்புகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அணிகின்றனர்.

சோரனூர்க்கு அருகே உள்ள காவலபார நாயரின் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் நாயாடிகள் குடுமி வைத்துக் கொண்டுள்ளனர். இதற்குக் காரணம் அப்பகுதிகளில் அவர்களை துன்புறுத்த மாப்பிள்ளா முகமதியர்கள் யாரும் இல்லாததேயாகும். காவலபார நாயர் அப்பகுதியில் ஒரு காலத்தில் முக்கியமான தலைவராக இருந்துள்ளார். தன் ஆட்சி எல்லையில் வாழும் நம்பூதிரி ஜமீன்கள் (பண்ணையார்கள்) அனைவரிடமும் மாப்பிள்ளாக்களுக்குக் குத்தகைக்கு நிலம்விட வேண்டாம் எனத் தடை விதித்திருந்தார். மற்றப் பகுதிகளில் வாழும் நாயாடிகளை மாப்பிள்ளாக்கள் குடுமி வைத்து கொள்ள அனுமதிப்பதில்லை. அவ்வாறு குடுமிவைத்துக் கொள்பவர்களை மாப்பிள்ளாக்கள் பறையர் என்றும் மந்திரவாதிகள் என்றும் கூறி அடித்துத் துன்புறுத்தி வந்தனர்.

நாயாடிகளுள் சிலர் கிறித்தவர்களாகவும் முகமதியர்களாகவும் மதம் மாறியுள்ளனர். முகமதியர்களாக மதம்மாறியவர்கள் முகமதியர் களிடமிருந்து இரத்தலை மேற்கொள்கின்றனர். இவர்களைத் தொப்பியிட்ட நாயாடிகள் என அழைப்பர்.

நாயாடிகளின் புரோகிதன் மூப்பன் எனப்படுகின்றான். பரம்பரைப் பதவி உரிமை உடைய இவன் சமூகம் தொடர்பான எல்லா வழக்குகளையும் விசாரித்துக் குற்றம் இழைத்தவர்களைச் சாதிவிலக்கம் செய்வான்*

நாயாடிகளின் சராசரி உயரம் 155செ.மீ
மூக்கின் விகிதத்தகவு அளவு எண் 86

நாயர்: Nāyar

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களைப் பற்றித் திரு எச். எ. ஸ்டுவர்ட் எழுதியிருப்பதாவது:- ''திராவிடர்களான நாயர்களை ஒரு சாதியார் என்பதனைவிட ஒரு வகுப்பார் எனக் கூறுவதே பொருந்தும். வேறு கூறுகளைக் கொண்ட பல்வேறு தொழில்களை மேற்கொண்ட மக்கள் பலரும் தங்களை இந்தப்பட்டப்பெயருக்கு உரியவர்களாகக் கூறிக்கொள்வதே இதற்குக் காரணமாகும். ஆதியில் உண்மையில் நாயர்களாக இருந்தவர்கள் போர்ப்படைப் பிரிவினைச் சேர்ந்தவர்களாகவும் நிலவுடைமையா ளர்களாகவும் இருந்து கொண்டு படையில் பணியாற்றியவர்கள் என்பதில் ஐயமேதும்இல்லை. இன்று பரம்பரைத்தொழிலாக வணிகம், கைநுட்பத் தொழில், எண்ணெய் வணிகம், பல்லக்குச் சுமத்தல் என்பவற்றோடு கூட அம்பட்டர்களாகவும் வண்ணாராகவும் உள்ளவர்கள் கூடத் தங்களை நாயர்கள் என அழைத்துக் கொள்கின்றனர். கன்னடம், தமிழ் ஆகியன வழங்கும் பகுதிகளிலிருந்து அடுத்தடுத்துப் பல சாதியினரும் பழங்குடிகளும் வந்து குடியேறி இப் பகுதியில் தங்கியவர்களாக இப் பகுதிக்குரிய பழக்க வழக்கங்களை மேற்கொண்டு இப் பகுதியில் வாழ்ந்தவர்களுள் மதிப்பு வாய்ந்த சாதியாருக்குரிய பட்டப்பெயரினைத் தரித்துக் கொண்டுள்ளனர் எனத் தெரிகின்றது. இவ்வாறு வந்து சேர்பவர்களை உள்ளடக்கிக் கொள்ளுதலான மாற்றம் இன்றும் நிகழ்ந்தபடியுள்ளது. நினைவுக்குத் தெரிந்த காலக் கட்டத்தில் கோயமுத்தூரிலிருந்து வந்து பாலக்காட்டிலும் வள்ளுவ நாட்டிலும்

* திரு எஸ். அப்பாதுரை அய்யர், திரு எல். கே. அனந்திகிருஷ்ண அய்யர் ஆகியோர் கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்டது இக் குறிப்பு

தங்கிய செட்டிகள் தற்போது தங்களை நாயர்களாக மாற்றிக் கொண்டுள்ளதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். கணக்கெடுப்பு அட்டவணைகளில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களின் பெயர்கள் நாயர் என்ற இணைப்பையும் பெண்களின் பெயர் செட்டிச்சி என்ற இணைப்பையும் பெற்றிருக்கக் காண்கின்றோம். வடக்கேயிருந்து இப் பகுதியில் வந்த தங்கியவர்களான கோல்லர் இதே போன்று காலப் போக்கில் நாயர்களின் பழக்க வழக்கங்களை மேற்கொண்டவர்களாகத் தங்களை நாயர்கள் எனவும் கூறிக் கொண்டனர். இப்பகுதியை ஆண்ட அரசர்களும் குறுநிலத் தலைவர்களும் தங்களுக்குச் சிறப்பாகத் தொண்டு புரிந்த தனிப்பட்டவர்களையும் வகுப்பார்களையும் நாயர் என்ற தகுதிக்கு உயர்த்தியுள்ளனர் என்பதனையும் இங்குக் குறிப்பிட வேண்டும். அவ்வாறு உயர்வு பெற்றவர்கள் தங்களை நாயர் எனக் கூறிக் கொண்டு தனி உட்பிரிவினராக மற்ற நாயர் சமூகத்தோடு மிகுதியான ஒட்டுறவு கொள்ளாதவர்களாகத் தங்களின் தோற்றம் பற்றிய உண்மை மறக்கப்படும்வரை சில தலைமுறைகள் வாழ்ந்து வருவர். இக்காரணங்களால் இன்று நாயர் என்ற சொல் சூத்திரன் என்பதனைப் போலப் பரந்துபட்டவர்களைக் குறிப்பதானதொரு பொது வழக்கு உடையதாக உள்ளது.''

பிராமணர்கள் கூறும் வழக்கு வரலாற்றுப்படி பரசுராமனால் கொண்டு சேர்க்கப்பட்ட தேவ, காந்தர்வ, இராக்கதப் பெண்களோடு நம்பூத்ரிகள் கொண்ட உறவு காரணமாகத் தோன்றியவர்கள். இச்சாதியர் தங்கள் வழக்கப்படி மற்ற உயர் சாதியினரோடு கொள்ளும் கலப்பு உறவின் காரணமாகத் தங்களிடையே மிகுதியான ஆரியக் குருதிக் கலப்புடையவர்களாக உள்ளனர் என்ற ஐயத்திற்கு இடமில்லாததான நிலையின் அடிப்படையினைத் தழுவி அமைந்ததே மேற்கூறிய வழக்கு வரலாறு. நாயர்கள் முதல் முதல் மலபாரின் மேல் படையெடுத்துக் குடியேறிய திராவிட இனத்தவர்களாகலாம். அவ்வாறு வெற்றி கொண்டவர்கள் ஆட்சிப் பொறுப்பாளர்களாகவும் நில உரிமைக்குரிய பண்ணையார்களாகவும் தங்களை நிலைநிறுத்திக் கொண்டவர்களாதல் வேண்டும். இன்று நாயர்களாக உள்ளவர்களுக்கும் மாநிலத்தின் பிற பகுதிகளில் திராவிடர்களாகக் காணப்படுபவர்களுக்கும் இடையே உடற்கூறுபாடுகளில் காணப்படுவதான குறிப்பிடத்தக்க வேறு பாட்டுக்குக் காரணம் என்ன என ஆய்ந்தால் அது ஆரியர்களின் குருதிக் கலப்பால் நாயர்களின் உடற்கூறுகளில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமான விளைவு என்பதனைத் தெளிவாக்கும்*.

* மலபார் மாவட்ட விவரக்குறிப்பு (Gazetteer of the Malabar district)

நாடுகாவல் பணியில் நாயர்கள் முன்பு பங்கு பெற்றிருந்தனைப் பற்றி மலபார் மாவட்டக் கையேட்டில் ஒரு குறிப்பில் திரு லோகன் குறிப்பிட்டிருப்பதாவது:- கி.பி 1611-இல் வெளியிடப்பட்ட ஜான்ஸ்டனின் 'உலகத்துப்புகழ் பெற்ற பேரரசுகளின் உறவுகள்' என்ற நூலில் இந்த நாடு காவல் படைஞர் பற்றிய ஆர்வம் தூண்டும் வகையில் அமைந்த குறிப்புக் காணப்படுகின்றது. ' இந்த நாட்டைச் சேர்ந்த படைவீரன் ஆர்வத்தோடு தன் படைக்கலத்தை ஏந்திப் போரிட முன்வருவது வியப்பிற்கு உரியதாகும். பெருமக்களான இவர்கள் நாயர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஏழு வயதுச் சிறுவர்களாக இருக்கும் போதே படைக்கலப் பயிற்சிக்காகக் களரியில் சேர்க்கப்படுகின்றனர். இவர்கள் முளிகளையும் மூட்டுக்களையும் உடல் நுட்பம் அறிந்தவர்கள் நல்லெண்ணெய் போட்டு நீவி விரும்பிய வண்ணம் அவை செயற்படத் துணை செய்கின்றனர். இதனால் இவர்கள் நெகிழ்ந்து இயலும் உடற்கூறு வாய்க்கப் பெற்றவர்களாக உடலில் எலும்பே அற்றவர்கள் போல அதனை முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் மேலும் கீழுமாக அவர்களுடைய எதிரிகளே வியக்கும் படியாக இயக்கும் ஆற்றல் பெற்றுள்ளனர். வேறெந்த நாட்டவரும். படைக்கலப்போர் நுட்பத்திலும் கைலாவகத்திலும் இவர்களை விஞ்ச இயலாதபடி படைக்கலம் ஏந்திப் போரிடுவதிலேயே இவர்கள் மகிழ்ந்தவர்களாக உள்ளனர்.' 1892-93-இல் வங்காளத்தின் ஆணையராக இருந்தவரும் மலபாருக்கு ஒரு முறைக்கு மேல் சென்று வந்தவரும் பின்னர் பம்பாய் மாநிலத்தின் ஆளுநராக இருந்தவருமான ஜோனாதன்டங்கன், மிக்கில் காமொயன்ஸ் (**Mickle's Camoens**) இ-னுடைய ஏழாங்காண்டத்திலிருந்து

'புலையரென,உழைக்கும் தாழ்குலத்தவர் பெயர் பெறுவர்
நாயரெனப் பேரெடுப்பர் பெருமைக்குரிய மேன்மக்கள்
இவர்கள் கற்றலையும் கலைகளையும் கைவிட்டவராய்
வலக்கை பளபளக்கும் வாளினைச் சுழற்றி வீசிட
இடக்கை தகர்த்தலுக்குரியரைத் தப்பவிடாது தாக்கும்படி போரிடுவர்.'

என்ற வரிகளை எடுத்துக் காட்டித்தரும் விளக்கமாவது:-' இந்த வரிகள், சிறப்பாகக் கடைசி இரண்டு வரிகள் நாயர்களைப் பற்றிய நல்ல விளக்கமாக அமைகின்றன. பிற நாடுகளில் பயணிகள் பிரம்பையும் கைத்தடியினையும் எடுத்துச் செல்வது போலச் சிறிதும் அஞ்சாதவர்களாக உறையில் இடப்படாத தங்கள் வாள்களைச் சுமந்தவர்களாக இந்த நாயர்கள் திரிவர். இவர்களுள் சிலர் தங்கள் வாளின் பிடியானது இடைக்கச்சையில் இருக்கப் பளபளக்கும் கத்திமுனை

தோள்களுக்குடையே மேலே நீட்டியபடி இருக்க நடந்து செல்வதை நான் கண்டுள்ளேன். (ஆசியாடிக் ரெவியூ, V 10, 18) நாயர்களைப் போர்க்களத்தில் நேருக்கு நேர் அடிக்கடி சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானவரான பிரிட்டீசாரின் ஒரே படைத்தலைவரான குறிப்பிடத்தக்க திறமைவாய்ந்த சர் ஹெக்டர் மன்றோ என்ன கூறுகிறார் என்பதனை இறுதியாக எடுத்துக் கூறுகிறேன்.

'மணற்படுகைகளுக்கும் புதர்களுக்கும் பின்னால் மறைந்திருக்கும் இவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதைவிட வைக்கோல் போரிடையே ஊசியினை தேடலாம் எனும்படியாகத் திறமையாக மறைந்திருந்து நம்படை அணிவகுத்துச் செல்லும் போது ஜுன் மாதத்தில் ஈக்கள் வந்து மொய்ப்பதைப் போலத் திடீரெனக் கூட்டமாகப் பாய்ந்து தாக்கும் பண்பினர் இவர்கள்' எனக் கூறியிருப்பதோடு 1761 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கான தலைச்சேரி தொழில் கூடம் பற்றிய அன்றாடக் குறிப்புக்களில் மேலும் ' தங்கள் துப்பாக்கிகளைச் சரியான முறையில் ஏந்தி நன்கு சுடும் திறமையையும் இவர்கள் பெற்றுள்ளனர் ' எனக் கூறியுள்ளார். சுருங்கச் சொன்னால் இவர்கள் வீரமிக்க, பாய்ந்து தாக்கும் சிறு போர் இடுவோர் எனலாம். இவர்கள் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்திருப்பதாலும் அக்குழுக்களின் நோக்கம் முரண்பட்டனவாக இருப்பதாலும் பகைவரின் கட்டுப்பாட்டோடு- சாதாரணக் கட்டுப்பாட்டோடு கூடியதானதாயினும் போதுமானது - கூடிய படையின் தாக்குதலுக்குத் தாக்குப் பிடிக்க இயலாதவர்களாக உள்ளனர். இவர்களின் தலைவன் கொலைக்கு உள்ளானவுடன் அவனைப் பின்பற்றி வந்தவர்கள் விடாமுயற்சியுடன் அவனைக் கொன்ற நாட்டினைப் பாழ்படுத்தித் தங்கள் வெஞ்சினம் தணியும் வரை மக்களையும் கொன்று குவிப்பர் என மலையாளிகளுக்குரிய விசித்திரமான பழக்கங்களுள் ஒன்று பற்றிச் சேக் ஜின்னுதீன் கூறியுள்ளார்*. இவர்களுடைய இந்தப் பழக்கம் தான் நெடுங்காலத்திற்கு முன்பே கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இரண்டு முகமதியர்களால் தங்கள் நூலுள் சுட்டிக் கூறப்பட்டுள்ளது. அவர்களுடைய அந்த நூலினை 1733-இல் லண்டனில் ரெனவ்டாட் (Renaudot) மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அதில் அவர், ' இந்த அரசர்கள் முடிசூட்டிக்

* தக பட் உல் முஜஹிதீன் அல்லது இறைவனை விரும்புவருக்கான நெறி என்ற நூலின் ஆசிரியர் அடிக்கடி மொழி பெயர்க்கப்படுவதின்படியோ கருத்தாக்கத்தின் படியோ இது முகமதிய சமயத்தைச் சாராதவர்களுக்கு எதிரான போரில் தங்கள் உயிரைத் தியாகம் செய்பவர்கள் எனக் கூறுவார். மொழிபெயர்ப்பு - ரோ- லாண்ட்சன், லண்டன், 1833

கொண்டவுடன் பின்வரும் சடங்கினை மேற்கொள்வர். அரசர் முன் சமைத்த சோறு பெருமளவில் குவித்து வைக்கப்பட்டிருக்கும். முந்நூறு நானூறு படைவீரர்கள் தாங்களாகவே முன்வந்து அரசர் சிறிது உண்டபின் தம் கைகளிலிருந்து தரும் சோற்றினை ஒவ்வொருவரும் பெற்றுச் செல்வர். இச் சோற்றை உண்பவர்கள் அரசர் இறக்கும் நாளில் தீப்பாய்ந்து அவரோடு உடன் உயிர்துறப்பர். அவர் போர்க்களத்தில் புண்பட்டு வீழ்வாராயின் இவர்கள் தங்கள் கடமைக்காக உயிரைத் தப்பாது ஈவர்.' எனக் குறித்துள்ளார். பெருஞ் சிறப்புக்குரிய சமயங்களில் தங்கள் உயிரை அதற்கேற்பத் தர முன் வருபவர்களைப் போர்த்துகீசியர் அமொயுகொர் என்கின்றனர். போர்த்துகீசிய ஆசிரியர்களுள் ஒருவரான பார்போச நாயர்களிடையேயான இந்த வழக்கத்தைச் சுட்டிச் செல்கின்றார். 'இவர்களுள் சிலர் நாயர் என அழைக்கப்படுகின்றனர். இந்த இரு பிரிவினரும் தங்கள் உயிரைத் துச்சமென மதித்து அரசரின் மானத்தைக் காக்க அதனை எப்பொழுதும் தர முன்வரக் கூடியவர்கள்.' இத்தகைய பெருமக்களைக் குறிப்பதற்கான சரியான மலையாளச் சொல் சாவர் என்பதாகும். தங்கள் சாவிற்குப் பலி கொடுப்பவர்கள் என்பது இதன் நேர்பொருளாகும். நாயர்களின் இந்த வழக்கத்தையே மாப்பிள்ளாக்களும் தங்களுக்குரியதாக மேற்கொண்டு விட்டனர். மாப்பிள்ளாக்களும் சிலபோது - திருநாவாயில்[1] பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் பெருவிழாவான மகாமகம் போன்றவற்றில்- நாயர்களோடு கூட வள்ளுவநாட்டு அரசரின் உயிரைக் காக்க இது போல உயிர் துறக்கின்றனர். கத்தியோடு கூடிய துப்பாக்கி தாங்கிய பிரிட்டானிய வீரர்கள் மீது வெறிகொண்டு மிக அண்மைக் காலத்தில் மாப்பிள்ளாக்கள் நடத்திய தாக்குதல் நாயர்களின் இந்தத் தொன்மையான வழக்கத்தின் பாற்பட்டதாகலாம். அமைதி காக்க வேண்டும் என அனைவரும் ஓயாது கூக்குரலிடும் இன்று நாயர்களின் வீர உணர்வு போதிய பயிற்சி இல்லாத காரணத்தால் மங்கி மறையத் தொடங்கிவிட்டது. நாயர்கள் வரவரக் குடும்ப நலத்தில் நாட்டம் கொண்டவர்களாக மாறி வருகின்றனர். சொல்லப் போனால் அவர்களுள் இன்று வேட்டையில் ஈடுபடுபவர்கள் கூட யாருமில்லை எனலாம். முதலாம் குலோத்துங்கனுடைய ஒரு கல்வெட்டின்படி (கி.பி. 1083-84) அவன் குடகுமலை நாட்டினை (மலபார்) வெற்றி கொண்டான் எனத் தெரிகிறது. இன்றைய நாயர்களின் மூதாதையர்களான அந்த நாட்டு

[1] பார்க்க : மலபார் மாவட்டக் கையேடு, 164, மற்றும் பாவ்செட் சென்னை அருங்காட்சிய மடல், III 3, 1901. (See: Manual of the Malabar District, 164, sq. and Fawcett, Madras Museum Bull., III 3, 1901)

வீரர்கள் தங்கள் உரிமையினைக் காக்க இறுதிவரை போராடி அனைவரும் மடிந்துள்ளனர்.*

பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியினைச் சேர்ந்தவரான டியுர்டெபார்போச நாயர்களைப் பற்றிப் பின்வருமாறு விளக்குகின்றார்:$ ''நற்குடி மக்களான நாயர்களுக்குப் போரில் ஈடுபடுவதைத் தவிர வேறு தொழில் ஏதும் இல்லை. இவர்கள் எப்பொழுதும் தங்கள் படைக்கலங்களான வாள், வில், அம்பு, கேடயம், ஈட்டி ஆகியவற்றைத் தங்களோடு சுமந்தபடி திரிவர். அரசர்களோடு உடனுறைபவர்களாக வாழும் இவர்களுள் சிலர் , அரசனுடைய உறவினர்களான பெருமக்களுடனும் ஊதியம் பெறும் ஆட்சித் தலைவர்களுடனும் தங்கி இருப்பர். நல்ல திறமை கைவரப் பெற்ற இவர்கள் நற்குடி மக்களாகவும் கருதப்படுகின்றனர். நற்குடியில் பிறந்த இந்த நாயர்களை அரசர்களோ இவர்கள் யாரோடு உடன் உறையப் போகின்றார்களோ அந்தப் பெருமகன்களோ தங்கள் கைப்பட இவர்களுக்குப் படைக்கலங்களைத் தந்து இவர்களைப் பெருவீரர் வரிசையில் சேர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு படைக்கலங்கள் பெறும் வரை இவர்கள் படைக்கலங்களை ஏந்துதலோ தங்களை நாயர் எனக் கூறிக் கொள்ளுதலோ கூடாது. பொதுவாக ஏழு வயதுடைய சிறுவர்களாக இருக்கும் போது படைக்கலப் பயிற்சின் பொருட்டு இவர்கள் களரிகளுக்கு அனுப்பப்பட்டு விடுகின்றனர். முதலில் நடனமாடக் கற்றுக் கொள்ளும் இவர்கள் பின்னர் கரணங்களைக் கற்கின்றனர். இவர்களின் மூட்டுக்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே நெகிழ்ந்து இயலும் போக்குடையனவாக இருக்கப் பயிற்சி தரப்படுவதால் இவர்கள் எப்படி வேண்டுமாயினும் உடலை வளைக்கும் திறன் பெற்றுள்ளனர். நகரங்களுக்குப்புறத்தே மக்களிடையே இருந்தும் தனித்தும் அமைந்த வேலியிடப்பட்ட பாடிகளில் வாழ்கின்றனர். அங்கிருந்து புறப்பட்டு வெளியே செல்லும் சமயங்களில் உழும் தொழிலாளர் தங்கள் வழியில் குறுக்கிடாது இருக்க வேண்டிக் கத்தியபடி செல்வர். அதனைக் கேட்டு அவர்கள் விலகி வழிவிட்டு ஒதுங்கிச் செல்லாவிடின் எத்தகைய குற்றத்திற்கும் உட்படாதவர்களாக இவர்கள் அவர்களைக் கொல்லவும் செய்யலாம். உழுதொழிலாளி ஒருவன் நாயர்

* இ.கியுட்ச் (தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் **III, 2, 1203 (E-Hultzsch South Indian Inscriptions, III, 2, 1203)**

$ கிழக்கு ஆப்பிரிக்கா, மலபார் கடற்கரை பற்றிய விளக்கங்கள்- மொழிபெயர்ப்பு ஹக்லியுட் கழகம் **(Description of the East Aftrica and Malabar, Hakluyt society, 1866)**

சாதிப் பெண்ணொருத்தியைத் தெரியாது தொடும்படி நேர்ந்து விட்டால் அவளுடைய உறவினர்கள் உடனே அவளைக் கொன்றுவிடுவர். அதே போன்று அவளைத் தொட்டவனையும் அவன் உறவினர்களையும் கொல்வர். உழுதொழிலை மேற்கொண்டுள்ள சாதியாரின் குருதி நாயர்களின் குருதியுடன் கலப்பு ஏற்பட்டுவிடாதபடி பாதுகாக்கவே இவ்வாறு செய்யப்படுவதாக இவர்கள் கூறுகின்றனர்.....இவர்கள் சாதிப் பெண்கள் உடல் தூய்மை பேணுவதோடு உடைகள் தரித்தவர்களாகவும் இருப்பர் . ஆண்களை மகிழ்விக்க அறிந்தவர்களாக இருப்பதை இவர்கள் அவர்களுடைய தனிப்பெரும் தகுதியாகக் கருதுகின்றனர். கன்னியாகவே காலங்கழித்து உயிர்துறப்பவள் சொர்க்கத்தை அடைய இயலாது என்ற ஒரு நம்பிக்கையும் இப்பெண்களிடையே உள்ளது.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஹாமில்டன் இவர்களைப் பற்றி எழுதும்போது குறிப்பிட்டுள்ளதாவது:- " பன்னிரண்டு ஆண்டுகள் மட்டுமே ஆட்சிபுரிவது சாமோரின்களிடையே உள்ள பழைய வழக்கம். அந்தப் பன்னிரண்டு ஆண்டுக்காலக் கெடு முடிவதற்குள் அவன் இறக்க நேரிடாது போனால் பொது இடத்தில் அமைக்கப்படும் உயர்ந்த மேடையில் தன் கழுத்தைத் தானே வெட்டிக்கொள்ளும் தொல்லைக்கு அவன் உட்பட்டவனாக வேண்டும். அதற்கு முன் அவன்தன் அரசவையினைச் சேர்ந்த எண்ணிக்கையில் பலராகவுள்ள பெருமக்களுக்கும் நற்குடியாளர்களுக்கும் ஒரு விருந்து தருவான். பின்னர் அவன் கூடியுள்ள தன் விருந்தினருக்கு வணக்கம் செலுத்திவிட்டு இதற்கென்றே அமைக்கப்பட்டுள்ள மேடையில் ஏறி அனைவர் முன்னிலையிலும் தன் கழுத்தைத் தானே நறுவிசாக அறுத்துக் கொள்வான். இவ்வாறு உயிர் துறந்த அவன் உடலைச் சிறப்பான மரியாதைகளுடன் எரியூட்டுவர். பின்னர் பட்டய உரிமையாளர்கள் புதிய சாமோரினைத் தேர்ந்தெடுப்பர். இவ்வழக்கம் சமயம் தொடர்பானதா அல்லது நாட்டின் அரசியல் நடைமுறை தொடர்பானதா என்பதனை நான் அறியேன். தற்பொழுது அந்த வழக்கத்தை ஒதுக்கிவிட்டு இப்போதைய சாமோரின் புதியதொரு வழக்கத்தை மேற்கொள்கின்றார். இந்த வழக்கின்படி பன்னிரண்டு ஆண்டுக் காலக்கெடுவின் முடிவில் நாடெங்கும் ஒரு விழாவிற்கு ஏற்பாடு செய்கின்றார். சாமோரினுக் குரியதாகப் பெருமளவில் ஒரு கொட்டகை அமைக்கப்படுகிறது. பத்துப் பன்னிரண்டு நாள்களுக்குத் தொடர்ந்து விருந்தும் கேளிக்கைகளும் பெரிய அளவில் அங்கு நிகழ்த்தப்படுகின்றன. அப்போது இரவும் பகலும் துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டபடி இருக்கும். விருந்து நிகழ்ச்சிகள் ஒரு முடிவுக்கு

வந்தபின் பட்டத்தை அடைய விரும்பும் விருந்தாளிகளுள் நால்வர் சாமோரினைக் காத்துநிற்கும் முப்பது நாற்பதாயிரம் வீரர்களிடையே புகுந்து போராடியபடி சென்று யார் சாமோரினை அவர் தங்கியிருக்கும் கொட்டகையில் கொல்வதில் வெற்றி பெறுகின்றார்களோ அவர்களே அடுத்த சாமோரினாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். 1695-இல் அன்னோவில் இத்தகைய விழா நிகழ்ச்சி நடந்துள்ளது. சாமோரினுக்குரிய கள்ளிக்கோட்டைக்குத் தெற்கே நாற்பத்தைந்து மைல் தொலைவில் உள்ள பொன்னாணித் துறைமுகத்திற்கு அருகே விழாவிற்கான கொட்டகை அமைக்கப்பட்டது. அப்பொழுது மூவர் மட்டுமே இந்தக் கடும் போட்டியில் ஈடுபட்டனர். மன்னரைக் காத்தவர்களாக நிற்கும் வீரர் பலரைக் கொன்று குவித்தபின் அவர்களும் கொல்லப்பட்டு உயிரிழந்தனர். இந்த ஆபத்தான முயற்சியில் ஈடுபட்ட மூவரில் ஒருவனின் உடன் பிறந்தவன் மகனான இளைஞன் தந்தையுடன் பிறந்தவனைப் பின்பற்றிச் சென்றவனாக அவன் வீழ்ந்தவுடன் அரசனின் காவலர்களைக் கடந்து கொட்டகையில் நுழைந்து மன்னரின் தலையினை நோக்கி வாளை வீசினான். அவன் தன்னுடைய இந்த முயற்சியில் வெற்றிபெற இயலாதபடி மன்னரின் தலைக்குமேல் அங்கு எரிந்து கொண்டிருந்த பித்தளை விளக்குத் தடுத்துவிட்டது. அவன் தன் அடுத்த வீச்சினை வீசும் முன் மன்னனின் காவலர்கள் அவனைக் கொன்றனர். அந்தச் சாமோரின் தான் இன்றும் தொடர்ந்து ஆட்சி புரிந்தவராக உள்ளார் என நான் நினைக்கின்றேன்.''

சானெரட்* நாயர்கள் பற்றிக் கூறியிருப்பதாவது: - ''நாயர்கள் போர் மறவர்கள். தங்கள் சாதியைச் சேர்ந்த பெண்கள் அனைவருடனும் இன்பம் துய்க்கும் உரிமையும் இவர்களுக்கு உண்டு. இவர்கள் எப்பொழுதும் தங்களோடு உடன்எடுத்துச் செல்லும் போர்வாள் முதலியன இவர்களை மற்றச் சாதியாரிலிருந்து வேறுபடுத்தி அறிய உதவுகின்றன. மேலும் திமிரான செருக்கோடு கூடிய நடத்தையினாலும் இவர்கள் தங்களை இனங்காட்டிக் கொள்வர். பறையர்கள் எதிரே வரக் கண்டால் அவர்கள் தொலைதூரத்தில் வரும் போதே தங்களுக்கு வழிவிட்டு விலகுமாறு கூக்குரலிடுவர். இந்தப் பறையர்களுள் தீவினை வயப்பட்ட அப்பாவி யாரேனும் ஒரு நாயரை மிக நெருங்கி வந்து அவனைத் தெரியாத்தனமாகத் தொட்டுவிடுவானாயின் அந்த நாயர் அவனைக் கொன்று போட உரிமை பெற்றவனாவான். நாயரின் இந்த

* 1744 மற்றும் 1781 இல் மேற்கொண்ட கிழக்கிந்திய பயணங்கள்.
(Voyage to the East Indies, 1774and 1781)

நடத்தை மிகச் சாதாரணமானதொன்றாகக் கருதப்படுவதோடு இது பற்றி யாரும் முறையீடு செய்து கொண்டதாகக் கூடத் தெரியவில்லை. ஆண்டின் ஒரு நாளினைப் பறையர்கள் தாங்கள் தொட்டுவிடும் நாயர்களை எல்லாம் தங்கள் அடிமையாக்கிக் கொள்ளலாம் என்பதற்காக ஒதுக்கியுள்ளனர் என்பது உண்மையே. எனினும் அந்த நாளன்று நாயர்கள் அனைவரும் அத்தகையதொரு இழிவு தங்களுக்கு நேர்ந்துவிடாதபடி தக்க முன்னேற்பாடுகளைச் செய்து கொள்கின்றனர்.'' இவர்கள் தொடர்பாகப் புச்சனன்* மேலும் பதிந்துள்ள விவரங்கள் வருமாறு:- ''நாயர்கள் அனைவருமே மலையாளத்தின் போர் மறவர்களாக இருப்பவர்கள்; அரசரின் ஆளுகைக்குட்பட்ட நம்பூத்ரிகளே இவர்களை இயக்கும் தலைவர்கள். படைக்கலங்களைப் பயன்படுத்துவதில் மிக்க மகிழ்ச்சி கொள்ளும் இவர்கள் அவற்றைப் போர்க்களத்தில் பயன்படுத்துவதைவிடக் கொலைச் செயலுக்கும் மற்றவர்கள் மீது எதிர்பாராதவகையில் தாக்குதல் நடத்தவுமே மிகுதியும் பயன் படுத்துகின்றனர். தங்கள் எசமானர்களிடம் மிகக் கீழ்ப்படிந்தவர்களாக நடந்து கொள்ளும் இவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களைசிறிதும் கண்ணோட்டமின்றிக் கொடுமைகளுக்கு உள்ளாக்கும் இறுமாப்புப் படைத்தவர்கள். உரிமையை மதிக்கும் இந்துக்கள் மிக அபூர்வமாகவே இது போலக் கருணையற்றவர்களாக நடந்து கொள்வர். தன்னைத் தொட்டுவிட நேரும் ஒரு தியனையோ, முசுவனையோ (முக்குவன்) உடனே வெட்டிக் கொல்ல வேண்டும் என்பது மரபு. நாயர் ஒருவன் செல்லும் பாதையில் வழிவிட்டு விலகாத ஓர் அடிமையின் கதியும் இதுவே தான்.

தலைவன் எனப் பொருள்படும் நாயக என்ற வடமொழிச் சொல்லிருந்து வந்தது நாயர் என்ற சொல் எனப் பொதுவாகச் சொல்லப்படுகிறது. நாயக், நாயுடு ஆகிய சொற்களை ஒத்தது இது. இது தொடர்பாகத் திரு எல். மூரல் ⊛ எழுதுவதாவது:- ஹாப்சன் - ஜாப்சன் என்ற பெயரில் லோரும் பர்னலும்பதிப்பித்துள்ள ஆங்கிலோ-இந்தியச் சொற்களுக்கான விளக்கக் களஞ்சியத்தைப் பார்ப்போமானால் நாய்க் அல்லது நாயகன் என்ற சொல்லும் நாயர் என்ற சொல்லும் ஒரே வடமொழி மூலத்திலிருந்து அமைந்தவை எனக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். மலபாரைச் சேர்ந்த நாயர்கள் விசயநகரத்தை ஆண்ட

* மைசூர், கன்னடம், மலபார் வழியான பயணம், 1807.
(Journey through Mysore, Canara and Malabar, 1807)

⊛ மலபார் சட்டமும் வழக்கும், 3-ஆம் பதிப்பு, 1905
(Malabar Law and Custom, 3rd ed. 1905.)

நாயக்கன்களோடு தோற்றத் தொடர்புடையவர்கள் என்று கொள்வதற்கான சான்றுகள் குறிப்பிடத்தக்க அளவு உள்ளன.* 1542 முதல் 1544 வரையான காலப் பகுதியில் சேவியர் எழுதிய கடிதங்களில் அரசுக்கு உரிய வரியினை வசூலிப்பதற்குரியவர்களான படகயர் என்பவர்களைப் பற்றி அடிக்கடி குறிப்பிடுகின்றார். சேவியர் கிறித்தவர்களாக மதம் மாற்றிய திருவாங்கூர் மீனவர்களை வரிவசூலிக்கும் படகயர் மிகவும் கொடுமைக்கு உள்ளாக்கினர் என அவர் குறித்துள்ளார்.[@] சேவியரின் இந்தக் கடிதங்களை முனைவர் கால்டுவெல் கருத்தில் கொண்டவராக இந்தப் படகயர் வடக்கேயிருந்து வந்தவர்களான வடுகரிலும் வேறானவர்கள் அல்லர் எனக் கூறியுள்ளதோடு அந்தக் காலப் பகுதியினரான இயேசு திருச்சபையினைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் இவர்களை நாயர்கள் எனக் கூறியிருப்பதும் தவறாகும் எனச் சுட்டிக் காட்டியுள்ளார்[♦] இவர்கள் உண்மையில் மதுரையிலிருந்து வந்தவர்களான நாய்க்கர்கள் ஆவர் என்பது அவர் கருத்து. எனினும் நான் இயேசு திருச்சபையார் அவர்களை நாயர்கள் எனக்குறிப்பிட்டது சரியானதென்றே கருதுகின்றேன். 1568 -இல் சமயகுரு ஓர் கண்டியொ இந்த படகயரை நரசிங்கவிலிருந்து (மதுரைக்கு வடக்கே பீஸ்நாகூருக்கு அருகே உள்ளது)[□] வந்தவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். பிஸ் நாகூர் என்பது விசயநகரம் என்பதில் ஐயமில்லை. நரசிங்க அரசு என்பது விசயநகர அரசுக்குப் போர்த்துகீசியர் வழங்கிய பெயராகும். திரு செவல் விசயநகரத்தைப் பற்றி எழுதியுள்ள நூலில் பக்கத்திற்குப் பக்கம் விசயநகரத்திற்கும் மேற்குக் கடற்கரைக்குமிடையேயுள்ள தொடர்பினைக் கூறியுள்ளார். பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விசயநகரை ஆண்ட மன்னர்கள் கன்னட நாட்டு மாடு மேய்க்கும்

* பார்க்க : ஆர் செவல், மறக்கப்பட்ட பேரரசு (விசயநகர், 1900.
(See: R. Sewll) A Forgotten Empire (Vijayanagar). 1900)

[@] சமயகுரு கால்ரிட்ஜ் எழுதிய புனிதர் பிரான்சிஸ் சேவியர் வாழ்க்கையும் கடிதங்களும். **(Father Coleridge's Life and Letters of St. Francis Xavier.)**

♦ திருநெல்வேலி வரலாறு **(History of Trinevelly)**

□கால்ரிட்ஜின் சேவியர் **(Coleridge's Xavier)**

⁂ பர்னல், தய விபாகத்தின் மொழிபெயர்ப்பின் முன்னுரை, மேலும்பார்க்க: தென்னிந்தியத் தொல்லெழுத்துக் கூறுகள் (2-ஆம் பதிப்பு, பக்109) அங்கு முனைவர் பர்னல் விசயநகர அரசர்கள் தாழ்ந்த சாதியினர் என உறுதிபடக் கூறியுள்ளார். **(Burnell. Translation of the Daya Vibhaga, Introduction. Vide also Elements of South Indian Palaeography (2nd ed,. P.109) Where Dr. Burn el says that it is certain that the Vijayajagar kings were men of low caste)**

தாழ்ந்த சாதிக்குரிய ஆரியரால்லாதார் என முனைவர் பர்னல் கூறியுள்ளார்.[1] எனவே இவர்கள் நாயர்களோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். இப்பகுதிக்குரிய இந்நாளைய பெரிய அரசர்களுள் ஒருவர் தன்னை அரசர் என்ற முறையில் சாமந்த எனக் கூறிக் கொண்டாலும் உண்மையில் அவர் மாட்டிடையரான எராடியரே*. கர்னல் மன்றோ (பின்னர் சர் தாமஸ்) ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விசயநகர அரசர்களின் கீழ் குறுநிலத் தலைவர்களாயிருந்தவர்களின் சந்ததியினரான பாளையக்காரர் பற்றிய தன்னுடைய 1802-ஆம் ஆண்டுக் குறிப்புகளின்[2] எல்லா இடங்களிலும் அவர்களை நாயக்கு அல்லது நாயர் என்றே இந்த இரு சொற்களுக்கும் இடையே எத்தகைய வேறுபாடும் பாராட்டாது குறித்துள்ளார். மலபாரைச் சேர்ந்த நாயர்களுக்கு விசயநகர அரசோடு இருந்த தொடர்பு பற்றி மேலும் ஆய்வுகள் மேற்கொண்டால் பல சுவையான தகவல்கள் கிடைக்கும் என்றே நம்புகின்றேன்.'' மதிப்புக்குரிய ஜான் லிண்ட்சே (1783) அவர்களுடைய குறிப்புக்களில் பதியப்பட்டுள்ளதாவது:[3] ''நமது படையினர் மலபார் கடற்கரையில் தொடர்ந்து வெற்றி பெற்று வருவதாக நமக்குத் தகவல் கிடைத்துள்ளது. நமது படையினர் இப்பொழுது உள் நாட்டில் நுழைந்துள்ளனர். சீரங்கப்பட்டணத்துக்கு அருகே உள்ள காடுகளிலும் மலைகளிலும் சென்று தங்கியுள்ள நாயர்களும் பாளையக்காரர்களும் தங்களுடைய முந்தைய உரிமையினை மீண்டும் பெறலாம் என்ற எண்ணம் காரணமாகக் கருநாடகத்தில் ஹைதரின் படையினர் நிகழ்த்திய அட்டூழியங்கள் ஒத்ததான கொடுஞ்செயல்களை நாட்டுப்புறத்தில் நிகழ்த்திப் பேரழிவினை உண்டாக்கியுள்ளனர்.''

திருவாங்கூரைச் சேர்ந்த நாயர்களைப் பற்றிய ஒரு குறிப்பில் திரு

---

* பார்க்க : சொற்பொருள் விளக்கம் மலபார் திருமணங்கள் தொடர்பான விசாரணைக்குழு அறிக்கை பக்கம். 2. மற்றும் டேயின் பெருமாள்களின் நாடு, பக்கம் 44 **(Vide : Glossary Report of the Malabar Marriage Commission P.2, and Day's land of the perumals, P.44)**

[2] கிழக்கிந்திய கம்பெனியின் நடவடிக்கைகளை ஆய்வதற்கான உறுப்பினர் குழுவின் ஐந்தாம் அறிக்கை , ''499, 530, மறுபதிப்பு, ஹிக்கின் பாதம்ஸ், சென்னை.
(Fifth Report of the committee of the affirs of the East India company, 11, 499, 530, Reprint by Higginbotham, Madras)

[3] லிண்ஸே குடும்பத்தவர் வாழ்க்கைவரலாறு **(Lives of the Lindsays. By Lord. Lindsay, 1849)**

என். சுப்பிரமணிய அய்யர் குறித்துள்ளதாவது :- ''சிலர் நாயர் என்ற சொல் பாம்பு எனப் பொருள்படும் நாகம் என்ற சொல்லிலிருந்து வந்ததாகக் கருதுகின்றனர். மலபாருக்கு உரியவர்களாகத் தங்களுக்கு முன் குடியேறியிருந்தவர்கள் பாம்புகளைச் சிறப்பாகப் போற்றி வழிபட்டு வந்த காரணத்தால் ஆரியர்களால் அவர்கள் அவ்வாறு அழைக்கப்படலாயினர் எனக் கூறுவர். திருவாங்கூர் நாயர்கள் பொதுவாக மலையாளத்துச் சூத்திரர்கள் என அழைக்கப்படுகின்றனர். நாயர்களைக் குறிப்பதற்கான மற்றொரு பெயர் மலையாளி என்பதாகும். மலையாளத்தில் தொன்றுதொட்டு வாழ்ந்து வரும் பிற சாதியினரும் இந்தப் பெயருக்கு உரிமை கொண்டாடலாம். நாயர்கள் பொதுவாகச் சூடிக்கொள்ளும் பட்டப் பெயர் பிள்ளை, (குழந்தை) என்பதாகும். இந்தப் பட்டப் பெயரைத் தென்னாட்டில் ஒரு காலத்தில் பிராமணர்களுடைய பெயரோடும் இணைத்துக் கூறும் வழக்கம் இருந்துள்ளது. பிராமணர்கள் தங்களுடைய பட்டப்பெயரை அய்யர் (தந்தை) என மாற்றிக் கொள்ள முற்பட்ட பின்-பிராமணர் அல்லாதார் பிராமணர்களைப் பெரும்பாலும் அய்யர் என்ற இந்தப்பட்டப் பெயராலேயே சுட்டுகின்றனர் - சூத்திரர்கள் தங்களைப் பிள்ளைகள் என அழைத்துக் கொள்ள முற்பட்டவராதல் வேண்டும். தமிழ்நாட்டைச் சேர்ந்த வேளாளர்களும் திருவாங்கூரைச் சேர்ந்த நாயர்களும் பன்னெடுங்காலமாகவே தங்களைப் பிள்ளைகள் என அழைத்துக் கொண்டு வந்தவர்களாக உள்ளனர். ஒரு குறிப்பிட்ட தொகையை அரசரிடம் செலுத்தி அவரிடமிருந்து நேரிடையாகப் பட்டம் பெறும் சடங்கு 'திருமுகம் பிடிக்குக' (அரசரின் முகம் காணல்) எனப்படும். இந்தப் பட்டம் பெறுபவர்கள் வழக்கமான பிள்ளை என்ற பட்டப் பெயருடன் கணக்கு என்ற பட்டத்தையும் தங்கள் பெயருக்குப் பின் இணைத்துக் கொள்வர். இந்தப் பட்டம்பெறுவதன் காரணமாகக் கிடைக்கும் தனி உரிமைகள் மிக முக்கியமானவையாக இருந்ததால் பிராமணரான தளவாய் சங்கு அண்ணாவியும் இன்றைய அரசிடமிருந்து நேரிடையாக அதனைப் பெற்றுள்ளார். வெம்பனூரில் உள்ள அவர் சந்ததியினர் இன்றும் அப்பட்டத்தைத் தரித்து வருகின்றனர். பிள்ளை, கணக்கு என்ற இரண்டும் ஒரே சேர எப்போதும் பயன்படுத்தப் படுவதில்லை. ஒருவருடைய பெயர் கிருஷ்ணப்பிள்ளை அல்லது கணக்கு இராமன் கிருஷ்ணன் என்றே வழங்கப்படலாம். இதில் இராமன் என்பது தாய்மாமனான காரணவனுடைய பெயராகும். இதனினும் உயர்ந்த செண்பகராமன் என்ற பட்டம் இடைக்காலத்து வீரத்திருத்தகை (**Knighthood**) பட்டத்திற்குச் சமமானதாகும். தன்னுடைய புகழ்பெற்ற முதல் அமைச்சர் இராமய்யன் தளவாயின் நினைவாக மகாராசா மார்த்தாண்ட வர்மரே முதன்முதல் இந்தச் சிறப்புப்

பட்டத்தை ஏற்படுத்தினார். இந்தப் பட்டத்திற்கு உரியவர் என மன்னரால் கருதப்படுவர். கோட்டையின் நான்கு முக்கியத் தெருக்களின் வழியே யானை மீது அமர்த்தப்பட்டு ஊர்வலமாக அழைத்து வரப்படுவார். முதலமைச்சர் அவரை வரவேற்றுத் தன்னோடு அருகே இருக்கச் செய்து வெற்றிலை பாக்கினை வழங்குவார். இன்று இத்தகைய சிறப்பினைப் பெறுபவர்கள் மிக அரியராகவே உள்ளனர். பழைய குடும்பங்களைச் சேர்ந்த பலர் தங்கள் மூதாதையருக்குரியதான இதனைத் தாங்களும் தரித்து வருகின்றனர். தாய்மாமனுடைய பெயரை நீக்கிவிட்டு இந்தப் பட்டத்தோடு கணக்கு என்ற பட்டத்தையும் இணைத்துக் கணக்கு செண்பகராமன் கிருஷ்ணன் எனச் சூடிக்கொள்ளும் பழக்கமும் உள்ளது. தம்பி (இளையவன்) என்பதும் திருவாங்கூரில் வழக்கிலுள்ள மற்றுமொரு பட்டமாகும் . திருவாங்கூர் அரசருடைய நாயர் பிள்ளைகளுக்குரிய தனிப்பட்ட பட்டமாக இது உள்ளது. முன்னாளில் தகுதி நோக்கி மற்றவர்களுக்கும் உரியதாக இது வழங்கப்பட்டு வந்தது. தம்பி என்ற பட்டம் பெற்றவர்களே பல்லக்கில் செல்லலாம். அரசர் முன் தலையில் ஏதும் அணியாமலும் இவர்கள் செல்லலாம். மகாராசாவின் வாழ்க்கைத் துணைவியார் இந்தப் பட்டம் பெற்றவர்கள் குடும்பங்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இக் குடும்பங்களைச் சேராத ஒருத்தியை மகாராசா மனைவியாக ஏற்றுக் கொள்ளும் போது அவள் இக்குலத்தவருள் ஒருவரால் தத்து எடுத்துக் கொள்ளப்படுவாள். மதுரையை ஆண்ட சிலரால் கர்த்தா (செய்பவன்) என்ற பட்டமும் தரித்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிகின்றது. (1901 கணக்கெடுப்பில் தங்களை மதுரையையும் தஞ்சாவூரையும் ஆண்ட நாயக்க மன்னர் பரம்பரையினர் எனக் கூறிக்கொள்ளும் பலிசர் சிலர் கர்த்தாக்கள் எனத்தங்களைப் பதிந்து கொண்டுள்ளனர்) மலபாரைச் சேர்ந்த தெக்கும்கூர், வடக்கும்கூர் இராசாக்களே செல்வாக்குடைய சில நாயர் குடும்பத்தினருக்குக் கர்த்தா என்ற பட்டத்தை வழங்கியதாகக் தெரிகின்றது. சமூக நடைமுறை தொடர்பானவற்றில் கர்த்தாக்கள் கூறும் முடிவே இறுதியானது. மிக முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டியிருந்தால் மட்டுமே கர்த்தாவிற்கு மேற்பட்ட அதிகாரத்தில் உள்ளவர்களைத் தலையிடும்படி வேண்டுவர். கர்த்தாக்கள் அனைவரும் நாயர் சாதியின் இல்லம் என்ற உட்பிரிவினைச் சேர்ந்தவர்களே. கறுப்பு என்ற பட்டத்தை நாயர்கள் ஒழிந்த பிற சாதியார் தரித்துக் கொண்டாலும் அது பல பணிகளை மேற்கொள்வதற்குரிய நாயர் சாதியின் ஒரு பிரிவினருக்கு உரிய பட்டமாகவே முன்பு இருந்து வந்துள்ளது. இவர்களுள் சிலர் படைக்கலம் பயிற்றுவிப்போர்; வேறு சிலர் அரண்மனையில் பணிப்பெண்களை மேற்பார்ப்போர். கள்ளிக்

கோட்டையைச் சேர்ந்த சாமோரின் பற்றிக் கி.பி. 1500-ல் பார்போசா எழுதியுள்ளதாவது:- 'அரசரிடம் பணிப்பெண்களாக ஊதியம் பெற்றுக்கொண்டு ஆயிரம் பேர் உள்ளனர். அரசரின் அரண்மனை களையும் இல்லங்களையும் கூட்டித் துப்புரவு செய்ய அவர்கள் எப்பொழுதும் அரசவையில் இருப்பர். இப்பணிக்கு ஐம்பது பேர் போதுமானது எனினும் அரசின் நலங்கருதி அவர் எண்ணிக்கையில் தேவைக்கு அதிகமான இவ்வளவு பேரைப் பணியில் அமர்த்தியுள்ளார்.'' திருவாங்கூரைச் சேர்ந்த மகாராசா திருமண உறவை மேற்கொள்ளும் போது பட்டும் துணியும் வழங்கிய பின் அரசரின் துணைவியான பணப்பிள்ளை அம்மாவின் முழுப்பட்டப் பெயரையும் கட்டியம் கூறுபவன் கறுப்பே ஆவான். வேலை எனப் பொருள்படும் பணி என்ற சொல்லிலிருந்து வந்ததே பணிக்கர் என்ற பட்டம். களரிகள், உடற்பயிற்சிக் கூடங்கள், படைப்பயிற்சிப் பள்ளிகள் ஆகியன நடத்தி வந்தவர்கள் பணிக்கர்களே; ஆயினும் இன்று அவர்கள் கல்வி கற்றுத்தரும் பணியை மேற்கொண்டவர்களாக உள்ளனர். சிலர் கோயிற்பணியினை மட்டுமே தங்கள் முழுநேரப் பணியாக ஏற்றுக் கொண்டுள்ளமையால் இவர்கள் நாயர்களாகக் கருதப்படாமல் மாரான் பிரிவினைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கையினைக் குறிக்கும் கைமல் என்ற பட்டம் அதிகாரம் உடையவன் என்று பொருள்படுவதாகும். முன்னாளில் சில கைமல்கள் படைத்தலைவர் களாக இருந்துள்ளனர். வட திருவாங்கூரைச் சேர்ந்த வைக்கத்தில்லம் கைமல் இந்த வகையினைச் சேர்ந்தவர். மற்றவர் அரசுக்குரிய கருவூலக் காப்பாளர்களாக இருந்துள்ளனர். கருவூலங்களை இவர்கள் முன்னிலையில் அல்லாமல் அரசர்கள் கூடப் பார்க்க உரிமை யுடையவர்கள் அல்லர் என்ற வழக்கமும் இருந்துள்ளது. ''கருவூலத்திலிருந்து மிக அவசியமான தேவையிருந்தால் மட்டுமே இவர்கள் உடன்பாடும் மற்றும் சிலரின் உடன்பாடும் பெற்று அரசர்கள் கூட எதனையும் எடுக்க முடியும்''. எனப் பார்போசா கூறுகின்றார். உண்ணித்தன், வலியத்தன் என்ற பட்டங்கள் மத்திய திருவாங்கூரைச் சேர்ந்த சில குடும்பத்தினருக்கு உரியன. அக் குடும்பத்தினர் செல்வ வளமும் ஆற்றல் வலிமையும் வாய்க்கப் பெற்றவர்கள். தாங்கள் வாழும் கரையில் தோன்றும் சச்சரவுகள் அனைத்தையும் தீர்த்து வைக்கும் பொறுப்பினையும் ஓரளவு இவர்கள் பெற்றிருந்தனர். மேனவன் அல்லது மேனன் என்பது உயர்ந்தவன் என்பதைக் குறிக்கும் பட்டப்பெயராகும். மேல், அவன் என்ற இரு சொற்கள், இணைந்ததால் பிறந்தது இது. இந்தப்பட்டம் பெறுபவன் அதனைத்தன் வாழ்நாள் அளவுக்கு எனவும் தன் சந்ததியினருக்கும் உரியதாகும் அளவுக்கு எனவும் அரசருக்குச்

செலுத்தும் அடியரைத் தொகைக்கு ஏற்பப் பெறுவதற்குரியவன். ஒருவனுக்கு மேனன் என்ற பட்டம் வழங்கியவுடன் அவனிடம் ஒரு பனை ஓலையையும் எழுத்தாணியையும் அளிப்பர். அவன் கணக்கன் என்ற பதவிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளான் என்பதற்கு இது அடையாளம் ஆகும். பிரிட்டனின் ஆளுகையில் உள்ள ஒவ்வொரு அம்சம் எனப்படும் வரியமைப்பிலான பிரிவுக்குரிய கிராமங்களுக்குரிய கணக்கர்கள் மேனன்கள் எனறே அழைக்கப்படுகின்றனர். மேற்பார்ப்பவன் என்ற பொருளிலான மேனோக்கி என்ற பட்டம் பிரிட்டனின் ஆளுகையில் உள்ள மலபார் பகுதிக்கு மட்டுமே உரியது. இது சாமோரின் உண்டாக்கிய ஒரு புதிய பட்டமாகும். (கோயில் கணக்கர்கள் இப்பட்டத்திற்குரியர் என்பது எனக்குத் தெரிய வந்துள்ளது)

'' நாயர் என்ற பொதுத்தலைப்பில் எண்ணிறந்த உட்பிரிவுகள் உள்ளன. இந்திய மொழிகளில் எழுதப்பட்டுள்ள நூல்களில் காணப்படும் அப்பிரிவுகளுள் மிக முக்கியமானவை கிரியம், இல்லம் ஸ்வரூபம், இடச்சேரி, பளிச்சன், அஷ்டகுரிச்சி, வட்டக்காடன், ஓடத்து, புலிக்கால், வியாபாரி, விளக்கத்தலவன், வெளுத்தெடன் என்பனவாம். இவற்றுள் அஷ்டக்குரிச்சி, புலிக்கால் என்ற இரண்டும் மாராணுக்குரிய பிரிவுகள். வியாபாரி செட்டிகளுக்குரியது. விளக்கத்தலவன் வெளுத்தெடன் முறையே அம்பட்டருக்கும் வண்ணாருக்கும் உரியன.

''நாயர்களின் முக்கியப் பிரிவுகளாக இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளவை வருமாறு:-

1. கிரியம்: வீடு எனப்பொருள்படும் கிரிஹ என்ற வடமொழிச் சொல்லின் திரிபாக இப்பெயர் கருதப்படுகிறது. நாயர்களுள் இவர்களே உயர்ந்த பிரிவினராகக் கருதப்படுகின்றனர். முன்னாளில் இவர்கள் பிராமணர்கள், சத்திரியர் ஆகியோரின் கீழ்ப் பணியாற்ற வேண்டிய கட்டாயத்திற்குட்பட்டவர்களாக இருந்ததில்லை.

2. இல்லக்கார்: இல்லம் என்ற சொல் நம்பூத்ரிகளின் வீட்டைக்குறிக்கும் சொல். இல்லத்தைச் சேர்ந்த நாயர் குடும்பம் ஒவ்வொன்றும் ஒரு நம்பூத்ரி இல்லத்திற்குப் பணிபுரிந்து வந்ததான வழக்கு இருந்ததாகக் கூறுவர். இடைக்காலத்தில் அரசுக்கு அடியரை என்ற குறிப்பிட்ட தொகையினைச் செலுத்தி நாயர் குடும்பத்தினர் எவரும் இல்லக் காரராக உயரலாம் என்ற விதி இருந்தது. இல்லக்கார் மீன், இறைச்சி, மது ஆகியனவற்றைப் பயன்படுத்தக்கூடாது என்று

விதியிருப்பினும் இன்று அதனை அனைவரும் கடைப்பிடிக்கின்றார்கள் என்று கூறமுடியாது. மலபாரின் சில பகுதிகளில் இல்லக்கார் பிராமணர்களுடைய பழக்க வழக்கங்களை அப்படியே முழுதும் மேற்கொள்ளும் பழக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

3. விஸ்வருபக்கார் : திருவாங்கூருக்குரிய சத்திரியர் குடும்பத் தவர்களைச் சார்ந்து வாழ்பவர்கள். இவர்களுள் மிக உயர்ந்தவர்களான பரூர் ஸ்வருபக்கார் பிரிவினரின் தீட்டு நீக்கும் சடங்கினை மாரான்கள் நிகழ்த்துகின்றனர். இப்பிரிவினர் ஒரு காலத்தில் பரூர் குறுநில மன்னராயிருந்த கருட்டெடத்து நம்பூத்ரிகளுடைய இல்லக்கார் பணியாளர்களாக இருந்துள்ளனர். அதன்பின் இவர்கள் அந்த நிலப்பகுதிக்கு உரிமையுடையவர்களான அரச குடும்பத்தாருடைய ஸ்வருபக்காராயினர்.

4. பதமங்கலம்: பதமங்கலம் மற்றும் தமிழ்ப்பதம் எனப்படும் இப்பிரிவினர் பரம்பரை நாயர்களல்லர். தமிழ்நாட்டிலிருந்து வந்து குடியேறிய இவர்கள் திருவாங்கூரில் ஒரு சில பகுதிகளிலேயே காணப்படுகின்றனர். அண்மைக் காலம் வரை உடைகள், அணிகள் ஆகியவற்றில் சாதாரண நாயர்களுக்கும் தமிழ்ப்பதம் பிரிவினருக்கும் இடையே கண்டறியக் கூடிய வகையில் வேறுபாடு இருந்து வந்துள்ளது. பதமங்கலக்கார் கோயில் பணியாளரர்களாகத் துப்புரவு, விளக்குச் சுமந்து செல்லுதல் முதலியனவற்றை மேற்கொண்டுள்ளனர். தமிழ்ப்பதக்கார் பல்வேறு பணிகளை மேற்கொண்டவர்களாக மற்றப் பிரிவினரோடு கலந்து விட்டனர்.

5. வாதி அல்லது வாட்டி: சாதி நிருணயத்தில் இப்பெயர் இடம் பெறவில்லை. மாரான்களிலிருந்தும் பிரித்து அறியப்படாததே இது அவ்வாறு இடம் பெறாமைக்கு உரிய காரணமாகலாம். இச் சொல் மகிழ்ச்சி தரவேண்டி வாழ்த்தி வழிபாடு இயற்றுபவர்கள் என்ற இவர்கள் பரம்பரைத் தொழிலைக் குறிப்பதான வாழ்தி என்பதன் சிதைந்த வடிவமாகும். நந்துணி எனப்படும் தனிப்பட்ட முழவினை இவர்கள் பயன்படுத்துகின்றனர். இவர்களுள் சிலர் தெய்வம்பாடிகள் எனத் தங்களை அழைத்துக் கொள்வதோடு மக்கள் வழித்தாய உரிமை பேணுகின்றனர்.

6. இடச்சேரி: தென் திருவாங்கூரில் இவர்கள் பண்டாரிகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். கால்நடை வளர்க்கும் இவர்கள் பால்

வெண்ணெய், தயிர் முதலியனவற்றை விற்பனை செய்கின்றனர். இப்பெயர் இவர்கள் தமிழ் நாட்டு இடையர்களோடு உறவுடையவர்களோ எனக் கருத இடம் தருகின்றது.

7. கருவேலம் : கப்பியர, திருவட்டார் என்ற வேறு பெயர்களாலும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். அரண்மனைப் பணியாளர்களான இவர்கள் கருவூலப் பொறுப்பினை ஏற்றுள்ளனர். குளத்து நாட்டைச் சேர்ந்த இவர்கள் குடும்பத்திலிருந்து ஒருவரைத் திருவாங்கூர் அரச குடும்பத்தினர் தத்து எடுத்துக் கொண்ட போது அங்கிருந்து திருவாங்கூருக்கு ஐம்பத்திரண்டு குடும்பத்தினர் அழைத்து வரப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

8. அரிகுறவன் : திருவனந்தபுரத்திற்கு அருகேயுள்ள கழயக் குட்டம் கோயிலில் குற்றுவதற்காகத் தங்களிடம் கொடுத்த நெல்லிலிருந்து கிடைக்கும் அரிசியினை அளவில் குறையும் படி செய்தவர்கள் எனப் பொருள்படுவது. அந்த வரிசை சேர்ந்த தலைவன் இவர்களை இப்பெயராலேயே அழைப்பான்.

9. பள்ளிச்சன்: பிராமணர்களுக்கும் மலபாரைச் சேர்ந்த வட்டாரத் தலைவர்களுக்கும் பல்லக்குச் சுமப்பவர்கள். அவர்களுடைய வாளையும் கேடயத்தையும் முன்னே எடுத்துச் செல்லும் பணியாளர்களாகவும் இவர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

10. வண்டிக்காரன்: கோயில்களுக்கு விறகு முதலியன கொண்டு சேர்ப்பதோடு கோயிலுக்குரிய பாத்திரங்களை விளக்கித் தருபவர்கள்.

11. கொட்டின: வடக்கெடம் பிராமணர்களுடைய இல்லத்தில் ஸ்வரூபம் தர்வாடாக இருந்தவரின் வாரிசான ஒரே மகள். இவளுடைய மகளின் தாலிக்கட்டுக் கல்யாணச் சடங்கு இவளுடைய எசமானனுடைய புதிதாகக் கட்டப்பட்ட மாட்டுக் கொட்டகையில் நடந்தேறியது. மணமகள் கொட்டிலச்சி என அழைக்கப்பட்டாள். கொட்டிலில் உள்ள மணமகள் என்பது இதன் பொருள். இதனால் இவள் சந்ததியினர் கொட்டின நாயர்கள் எனப்பட்டனர். இவர்கள் தங்களுக்குள்ளாகவே மணஉறவு கொள்கின்றனர். இவர்களுக்கெனத் தனியே பூசாரிகள் இல்லை. தங்கள் தீட்டினைப் போக்கிக் கொள்ளப் பிராமணர் களிடமிருந்து புனிதநீர் பெறுகின்றனர்.

12. மடவர்: புலியட்டு, வெளியட்டு, கால்லுர் நாயர் என்ற பெயர்களாலும் வழங்கப்படும் இவர்கள் முன்னாளில் சிறந்த வில் வீரர்களாகத் திகழ்ந்தவர்கள்.

13. ஒட்டது: இவர்கள் குச எனவும் அழைக்கப்படுவர். கோயில் களுக்கும் பிராமணர் இல்லங்களுக்கும் ஓடு அல்லது தடுக்கு வேய்வதே இவர்கள் தொழில்.

14. மண்டலயி: கல்குளம் வட்டத்தில் உள்ள ஒரு நிலப்பகுதி. மண்டலச்சிக் கோணம் என்ற இந்த வட்டாரம் அரசால் இவர்களுக்கு நிலக்கொடையாக வழங்கப்பட்டது. சாவுக்குக் கூலி பெற்று வந்து அழும் இவர்கள் திருவனந்தபுர அரண்மனையில் சாவு நேரும்போது அப்பணியினை மேற்கொள்வர்.

15. மணிக்கிராமம் : தொடக்கத்தில் கிறித்தவ சமயத்தைத் தழுவி யவர்கள் மீண்டும் இந்து சமயத்தவர்களால் மீட்கப்பட்டவர்கள். தொடக் கக்காலக் கிறித்தவ வந்தேறிகள் தங்கிய கொடுங்கோளூரிலிருந்து மீட்கப் பட்ட ஒரு பகுதியே மணிக்கிராமம்.

16. வட்டயக்கடன் : திருவாங்கூர் பகுதியில் இவர்களைச் செக்காலை நாயர்கள் என அழைப்பர். நாயர் பிரிவினருள் பலவகையி லும் மிகத் தாழ்ந்த உட்பிரிவினர். கோயில்களில் பலிபீடம் வரை யே அனுமதிக்கப்படும் இவர்கள் பிள்ளை என்ற பட்டத்தையும் சூடிக் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. புல்வ என்பதே இவர்களைத் தனித் து உணர்த்து வதான பட்டப்பெயர். இவர்களுள் ஒரு பிரிவினர் பரம்ப ரைத் தொழிலான எண்ணெய் ஆட்டுவதில் ஈடுபட்டுள்ளனர். இத் தொழில் செய்வோர் இப்பிரிவினைச் சேர்ந்த மற்றவர்களைவிடச் சமுதா யப்படி நிலையில் தாழ்ந்தவர்களாக மதிக்கப்படுகின்றனர்."

திரு எப். பாவ்செட் மலபாரில் தான் மனித உடல் சார்ந்த அளவு களை எடுத்த காலத்தில் நாயர்களுக்குரியனவாகப் பதிந்துள்ள குலங் களின் பெயர்களாகத் தந்துள்ள பட்டியல் வருமாறு:

கிரியாட்டில்	வங்கிலோத
சூத்திரர்	கிடவு
குருப்பு	பள்ளிச்சன்

நம்பியார்	முப்பதினாயிரன்
ஊராளி	வியாபாரி அல்லது ராவாரி
நல்லியோடன்	அட்டிக்குரிசி
வியூர்	மணவாளன்
அகட்டுச்சரண	அடுங்காடி
புறத்துச்சரண	அடியோடி
வட்டக்காடு	ஆமயெங்கொலம்

''குருப்பு, நம்பியார், வியூர், மணவாளன், வெங்கோலன், நெல்லியோடன், அடுங்காடி, கிடாவு, அடியோடி, ஆமையெங்கொலம் ஆகிய அனைத்தும் வடமலபாரைச் சேர்ந்த உயர்ந்த குலங்களாம். கிரியாட்டில் அல்லது கிரியமே தென் மலபார் குலங்களுள் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. இது வடமலபாருக்குரியனவாகக் கூறப்பட்டுள்ள குலங்களுள் முதலில் உள்ளனவற்றுக்குச் சமமானதாகும். அகட்டுச் சரணக் குலம் இரண்டு உட்குலங்களை உடையது. அவற்றுள் ஒன்று சாமோரினைத் தங்கள் தலைவராகக் கருதுகின்றது. மற்றது நீலம்பூரைச் சேர்ந்த திருமல்பாடு போன்ற சிறு தலைவர்களின் தலைமையை ஏற்பது. இவற்றுள் முன்னதே உயர்ந்தது. பின்னதைச் சேர்ந்த ஒருத்தி முன்னதைச் சேர்ந்த ஆண்களோடு உடலுறவு கொள்ளலாம். ஆனால் முன்னதைச் சேர்ந்த ஒருத்தி பின்னதைச் சேர்ந்த ஆண்களோடு உடல்உறவு கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. முன்னாளில் நாயர் சாதித் தலைவன் ஒவ்வொருவனுக்கும் அவனைச் சார்ந்து வாழ்வோர் இருந்து வந்தனர். புறத்துச் சரணம் பிரிவினர் வெளியில் பணியில் ஈடுபடுவோர் அல்லது போரிடுவோர். அகத்துச் சரணம் வீட்டுள் பணிபுரியும் பணியாளர்களும் எழுத்தர்களும் ஆவர். இவர்களுள் புறத்துச் சரணத்தவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அகத்துச் சரணத்தாரை விட உயர்ந்தவர்கள். ஊராளிகள் கொத்தனாராகப் பணிபுரிவோர். பள்ளிச்சன்கள் மஞ்சில் தூக்குவோர்*, சூத்திரர் குலத்தவர்கள் நம்பூத்ரிகளின் இல்லங்களில் பணிபுரியப் பெண்களை அனுப்பி வைப்பவர்கள். வட்டக்காடு (சென்னிக்கின்கள்: செக்கில் எண்ணெய் ஆட்டுவோர்) செக்கில் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியன ஆட்டும் நாயர் சாதியுள் பள்ளிச்சனைத் தவிர மற்ற அனைவருக்கும் கடைப்பட்டவன். வட மலபாரில் உயர்ந்த குலத்தவர்களான நாயர்கள் வட்டக்காடு பிரிவினை நாயர் பிரிவில் சேர்த்துக் கொள்வதில்லை என என்னிடம் நேரில் பலமுறை கூறியுள்ளனர். வட்டகாடு

* மஞ்சில் ஆண்கள் தோளில் சுமந்து செல்லும் வாகனம். இது ஒரு கம்பத்தில் தொட்டில் போலக்கட்டித்தொங்கவிடப்பட்டிருக்கும். மேலே தட்டையான அமைப்புடையன மேற்கட்டியுடையது. இவ்வகையில் இது பல்லக்கிலும் வேறானது.

பிரிவினர் அண்மையில் நாயர் என்ற பட்டப்பெயரைத் தங்கள் பெயரோடு இணைத்துக் கொண்டுள்ளனர் எனக் கூறுவர். வட்டக்காடு பிரிவினருள் காணப் படும் உட்பிரிவுகள் தெளிவற்றனவாக உள்ளன. கள்ளிக்கோட்டைக்கும் வடக்கே குறும்பநாட்டில் உந்தியாட்டுன (களையால் செக்கினைத்தள்ளி ஆட்டுபவர்கள்) முரிவெச்சாட்டுன (எருது கட்டிச் செக்கினை ஆட்டுபவர்கள்) என இரண்டு பிரிவினராக உள்ளனர். அதற்கும்வடக்கேயுள்ள தலைச்சேரியினைச் சேர்ந்த பகுதி களில் உட்பிரிவுகள் எவையும் இல்லை. எனினும் கிழக்குப் பக்கம் எரநாட்டில் இவர்கள் வெளுத்தது, கறுத்தது என இருபிரிவினர்களாக உள்ளனர். வெளுத்தது பிரிவினருக்குச் செக்காட்டும் தொழில் பரம்பரை உரிமையுடையதன்று. அது கறுத்தது பிரிவினருக்குப் பரம்பரையாக உரிய தொழில். வெளுத்தது பிரிவினர் எல்லா நாயர் பிரிவினரோடும் உடன் உண்ணலாம். கறுத்தது பிரிவினர் தங்கள் பிரிவினைத் தவிர மற்ற பிரிவி னரோடு உடன் உண்ண அனுமதிக்கப்படுவதில்லை. கறுத்தது பிரிவினர் அகமணக்கட்டுப்பாடுடைய குலத்தவராக இருக்க உயர்ந்த வெளுத்தது பிரி வினரிடையே அத்தகைய வரையறை ஏதும் இல்லை. இப்பிரிவினரின் பெண்கள் பள்ளிச்சன் பிரிவினரைத் தவிர மற்ற எல்லா நாயர் பிரிவின ரோடும் மணஉறவு கொள்ளலாம். மற்றப் பிரிவினர் தங்களுக்குள் எத்த கைய கட்டுப்பாடுமின்றி மணஉறவு அல்லது அதனோடு ஒத்த உறவுகளைக் கொள்ளத் தடையேதும் இல்லை. எனினும் பெண்கள் எப் பொழுதும் தங்கள் பிரிவினரைவிடத் தாழ்ந்த பிரிவினரோடு உறவுகொள் ளுதல் கூடாது என்ற பொதுவிதி பின்பற்றப்படுகிறது. ஒருத்தி தன்குலத் தவனோடு அல்லது உயர் குலத்தவனோடு அல்லது நம்பூத்ரி, எம்பிராந் திரி, பிராமணன் ஆகியவர்களோடு அல்லது பிராமணர்களுக்கும் நாயர்க ளுக்கும் இடைப்பட்ட வேறு சிறு சாதியரோடு என எல்லா மேற் சாதியி னரோடும் உறவு வைத்துக் கொள்ளலாம். தன் குலப்பிரிவுக்குத் தாழ்ந்த வர்களோடு அவள் உறவினை ஏற்படுத்திக் கொள்ள எந்தக் காரணத்தை முன்னிட்டும் அனுமதிக்கப்படுவதில்லை. இதே விதி பெண்கள் உணவு கொள்வதற்கும் பொருந்தும். ஆண்கள் கட்டுப்பாடற்றவர்களாக அனைத் துப் பிரிவினருடனும் உணவு உண்ணலாம். ஒருத்திக்குச் சமமான சாதி அந்தஸ்து உடையவர்களோடு ஒருத்தி கொண்ட உறவின் வழிப்பிறந்த குழ்நதைகள் மட்டுமே அவளுடைய தரவாடைச்* சேர்ந்தவர்களாகலாம். சாதியில் தாழ்ந்தவர்களோடு கொண்ட உறவின் வழிப்பிறந்தவர்கள் தரவாடைச் சேர்ந்தவர்களாக உரிமை கொண்டாட முடியாது. தாழ்ந்த குலத்தவர்களோடு ஒருத்தி கொண்ட உறவின் வழிப்பிறந்த குழந்தைகள்

* தர்வாதி அல்லது தரவாடு மருமக்கள் தாயம் மேற்கொள்ளும் குடும்பத்தில் ஒருத்தியின் சந்ததியில் வந்த அனைத்து உறுப்பினர்களையும் கொண்ட குடும்பம்

தரவாட்டினில் உடன் வாழலாம். எனினும் அவளுக்கே உயர்ந்த சாதியின ரின் உறவின் வழிப்பிறந்தவர்களோடு ஒன்றாக உரிமை கொண்டாட முடி யாது. அத்தகைய தாழ்ந்த சாதியாரோடு கொண்ட உறவின் வழிப்பிறந்த வர்கள் தரவாடினைச் சேர்ந்த சமையல் கட்டினுள் நுழைவதற்கோ பெண் கள் உண்ணும் போது அவர்களைத் தொடுவதற்கோ உரிமையில்லை. தங்களுடைய தந்தையின் பிணத்தைத் தொடவும் இவர்கள் உரிமையற்ற வர்கள். இத்தகைய சங்கடங்களுக்கு உள்ளாக வேண்டி நேரினும் இவர் கள் தங்கள் அன்னையருக்குரிய தரவாடோடு தான் இருக்கவேண்டுமே யன்றிப் பிரிந்து போயிருக்க உரிமையில்லை. ஆண்கள் தாழ்ந்த சாதிப் பெண்களோடு உறவு கொள்வதை அனுமதிப்பதும் பெண்களுக்கு அத்தகைய உரிமையை மறுப்பதுமான பழக்கம் அனுலோமம், பிரதிலோ மம் என அழைக்கப்படுகிறது. முனைவர் குண்டர்ட் அனு லோமம் (ரோமம்) என்ற சொற்கள் இணைந்து ரோமம் அல்லது தானியத்துடன் செல்வது என்ற பொருள் தருவது அனுலோமம் என்பார். எனவே பிரதி லோமம் ரோமம் அல்லது தானியத்திற்கு மாறாகப் புறத்தே செல்வதாகும். இந்த வழக்கப்படி பார்த்தால் உயர்ந்த சாதியான் ஒருவனோடு உறவு கொள்ளும் நாயர் பெண் ரோம வழியினை மேற்கொண்டவளாகச் சாதியி னைத் தூய்மைப்படுத்திச் சந்ததியினரின் சமூகப் படி நிலையினை மேம் படுத்துபவளாகின்றாள் தாழ்ந்த சாதியானோடு உடல் உறவு கொள்பவள் பிரதிலோமக் குற்றம் புரிந்தவளாகின்றாள். இவ்வாறு குற்றம் புரிகின்றவர் மிகத் தாழ்ந்த சாதியானோடு உறவு கொண்டவளாக இருப்பாளாகில் அவளுடைய குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் சாதி விலக்கிற்கு உள்ளாவதைத் தடுக்க அவளைச் சாதியிலிருந்தும் விலக்கி வைப்பர். நம் பூத்ரிபிராமணன் ஒருவன் தான் சம்பந்தம் வைத்துக் கொண்டுள்ள நாயர் சாதிப் பெண்ணுக்குப் பிறந்த தன் குழந்தையைத் தொடுவானானால் கூட அவன் தீட்டுக்குள்ளானவனவான் என்பதும் குளித்து அவன் தீட்டுப் போக்கிக் கொள்ள வேண்டும் என்பதும் இந்த வழக்கத்தோடு ஒத்தியல்வ தான வழக்கம் எனலாம். மருமக்கள் தாயம் குடும்பத்தைச் சேர்ந்த குழந் தைகள் தன் தாயின் குடும்பம், குலம், சாதி ஆகியனவற்றுக்கு உரியன வாகக் கருதப்படுகின்றன. அத்தகைய சம்பந்தம் வழி நம்பூத்ரி தகப்பனுக் குப் பிறப்பவர்கள் நாயர்களாவார்களே அன்றி நம்பூத்ரிகளாகார். வட மல பாரைச் சேர்ந்த நாயர்கள் தென்மலபாரைச் சேர்ந்த நாயர்களை விட அவர்கள் ஒரே குலப்பிரிவினராக இருந்தாலும் கூட உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கள்ளிக் கோட்டைக்கு ஏழு மைல்கள் வடக்கே ஓடும் கொரபுழா ஆறே வட மலபாரையும் தென் மலபாரையும் பிரிக்கும் எல்லையாக அமைந்துள்ளது. இந்த உயர்வு தாழ்வு காரணமாக வடக்கு மலபாரைச் சேர்ந்த ஒருத்தி தன் குலத்தைச் சேர்ந்தவனான தென்மலபார்

நாயரோடு கூட உறவு கொள்ள இயலாதவளாகின்றாள். வடமலபாரைச் சேர்ந்த நாயர் பெண் வடக்கே மலபார் எல்லையைக் கடந்து செல்வதோ கிழக்கே மலையினைத் தாண்டிச் செல்வதோ தெற்கே கொரப்புழா ஆற்றைக் கடந்து செல்வதோ கூடாது. அவ்வாறு செல்வது தீட்டுக்கு உள்ளாவதாகும். தென் மலபாரைச் சேர்ந்த பெண்களுக்கும் இத்தகைய கட்டுப்பாடுகள் உள்ளன. அவற்றை மீறுபவர்கள் சாதி விலக்கிற்கு உள்ளாவர். இந்த விதிக்கு ஒரு விதிவிலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி சென்ற சில ஆண்டுகளாக உலகத்தோடு ஒத்து இயங்குகின்றவர்களாக மலையாளிகள் மருத்துவம், சட்டம் ஆகிய கல்வி பெற மாநிலத் தலைநகரான சென்னைக்குச் செல்வதோடு இங்கிலாந்து வரை கூடச் செல்ல முற்பட்டுள்ளனர். மற்றப் பிரிவினர்களோடு ஒப்பிடும் போது தாழ்ந்தவர்களான அகத்துச் சரணம் குலத்தவர்களுக்கு இடம் பெயர்ந்து செல்லுதல் தொடர்பான மேலே கூறப்பட்ட கட்டுப்பாடுகள் கடுமையானவையாக இல்லை. போக்குவரத்தில் முன்னேற்றம் கண்டுள்ள இந்த நாளில் மிகுதியும் பயணம் மேற்கொள்ளும் விருப்பமுள்ள மலையாளிகள் அடிக்கடி தங்கள் பகுதியினை விட்டு வெளியே சென்று தங்கும் பழக்கத்திற்கு ஏற்றவகையில் அகத்துச் சரணப்பிரிவினர் பெண்களைத் தங்கள் மனைவியராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முன் வருகின்றனர். பழைய வழக்கங்கள் எங்கும் மாறியபடி உள்ளன. இன்று அரசுத் துறையில் பணியாற்றும் மலையாளிகள் மலபாரை விட்டு வெளியே சென்று தங்கவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர். மாநிலத் தலைநகரான சென்னையில் வந்து தங்கவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ள சிலர் இந்தக் கட்டுப்பாடுகளிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டுள்ளனர். இவர்கள் அகத்துச் சரணம் பிரிவினும் வேறான பிரிவுகளிலிருந்தான தங்கள் துணைவியாரையும் உடன் அழைத்துச் சென்றுள்ளனர். மலபாருக்குப் புறத்தே பயணம் செய்வதற்கான தடையையும் அகத்துச் சரணம் பிரிவினருக்கு அதிலிருந்தும் தரப்பட்டுள்ளதான விதிவிலக்கையும் பற்றி எனக்குப் பின்வருமாறு விளக்கிக் கூறப்பட்டது. மாதவிலக்காகும் சமயத்தில் நாயர் சாதிப் பெண்கள் மூன்று நாள்களுக்குத் தீட்டினை மேற்கொள்கின்றனர். அச் சமயம் அவள் தரவாடைச் சேர்ந்த மற்றவர்களோடு சேர்ந்து உண்ணாமலும் கலந்து பழகாமலும் தனித்திருப்பாள். அவளுடைய தீட்டு மாத்து (வேறு) ஆடையினை வண்ணாத்தியிடமிருந்து -மலபாரின் சில பகுதிகள் இவள் நாயர்களுக்கும் நம்பூத்ரிகளுக்கும் மட்டுமே துவைக்கும் பரம்பரைத் தொழிலைக் கொண்ட மண்ணான் சாதியினைச் சேர்ந்தவள்- பெற்று உடுத்தும் போதே நீங்குகின்றது. பொதுவாக வண்ணாத்திகள் தியர் சாதியினைச் சேர்ந்தவர்கள். தீட்டுக்குள்ளானவள் குளித்து முடித்தவுடன்

வண்ணாத்தி தான் கையோடு கொண்டு வந்திருக்கும் மாத்தினைக் குளித்தவளிடம் கொடுத்து அவள் அதுவரை உடுத்தியிருந்து தீட்டுப்பட்ட சேலையினைத் துவைக்க எடுத்துச் செல்வாள். ஒரு குடும்பத்தினருக்குச் சாவு, பிறப்பு, வீட்டுவிலக்கு ஆகியவற்றால் உண்டாகும் தீட்டினைப் போக்குவது மாத்தே. இந்த முறையில் மாத்தினைப் பெறும் வரை ஒருத்தி சாதி விலக்கம் பெற்றவளாவாள். சரியான சமயத்தில் சரியான முறைப்படி இதனை மேற்கொள்ளவில்லையானால் தொல்லைகளைத் தரும் சமூகக் கட்டுப்பாடுகள் நெருக்கடியை விளைவிக்கும். மலபாரில் செல்வாக்குள்ள குடும்பத்தைச் சேர்ந்த பெரும் புள்ளிகளில் தங்களைப் பகைத்துக் கொண்டவர்களைப் பழிவாங்க அவர்கள் மாத்தினைப் பெறமுடியாதபடி தடுப்பர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. குற்றவியல் சட்டங்களின் பிரிவுகள் அனைத்தாலும் ஒருவருக்குக் கிடைக்கும் தண்டனையைக் காட்டிலும் இது மிகுந்த கொடுமை இழைக்கக் கூடிய தண்டனை. மாத்தினைப் பெற்று உடுக்க வாய்ப்பாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவோ மலபார் எல்லைக்குள் வாழ வேண்டும் என்ற கட்டுப்பாடு தன் மேல் திணிக்கப்பட்டுள்ளதாக நாயர் சாதிப் பெண் கருதுகின்றாள். வண்ணான் சாதி மலபாருக்குரிய தனித்த சாதியாகையால் இவர்கள் இல்லாத இடங்களில் நாயர் சாதிப்பெண்கள் சென்று தங்கி வாழ்தல் இயலாது என எனக்குத் தகவல் தந்தவர்கள் கூறினர். இந்தச் சாதியாரிடமிருந்தே மாத்துப் பெற முடியும் என்பது தான் இதற்கான காரணம். எனினும் நான் நேரில் பார்த்து அறிந்தவரையில் குறும்பரநாடு போன்ற பழக்கவழக்கங்களைத் தளரவிடாது கடைப்பிடிக்கும் நாயர்கள் உயர்சாதியாராக கருதப்படும் பகுதிகளில் கூடத் தியன் சாதியைச் சேர்ந்தவனே வண்ணானாக உள்ளான். எனவே பெண்கள் வாழும் இடம் கடந்து செல்லக்கூடாது என்று விதிக்கப்பட்டுள்ள தடைக்கு மாத்துப் பிரச்சினை தவிர வேறு காரணங்கள் அடிப்படையில் இருத்தல் வேண்டும் என நான் நினைக்கிறேன் . உலகில் வேறு சில பகுதிகளில் காணப்படுவது போன்ற தண்ணீரைத் தாண்டி அப்பால் சென்று வாழக்கூடாது என்ற மூட நம்பிக்கை இதற்குக் காரணம் என்று கூறுவதற்கில்லை. தெற்கே ஆற்றைக் கடந்து செல்லக்கூடாது என்பதான தடை கோலடிரி ராசா முன்னாளில் விதித்த ஆணையின் அடிப்படையிலானது. அரேபியர்கள் கள்ளிக்கோட்டை வழியாக இந்த நாட்டில் வந்து புகுந்துள்ளனர். அவர்கள் பெண்களைக் கைப்பற்றித் தங்கள் மனைவியராக்கிக் கொள்ளக்கூடும் என்பதாலேயே அத்தகைய தடை விதிக்கப்பட்ட தென்பர். இந்த விளக்கம் கற்பனைப் படைப்பாகத் தோன்றுகிறது

வடக்குத் திசையில் ஆற்றைக் கடக்கக்கூடாது என்பதற்கான தடையும் இதே அடிப்படையில் தோன்றியதாகக் கூறுவர். கள்ளிக்கோட்டைக்குக் கிழக்குப் பகுதியில் வாழும் நாயர் பெண்கள் ஆற்றோடு தொடர்புடைய உப்பங்கழியினைக் கடந்து நகரத்துக்குள் நுழைய வாய்ப்பில்லை என்பதனை இது தொடர்பாக நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ''நீலகிரி மலையில் உள்ள பைகாரா ஆறு தோடர்களால் புனிதமானதாகக் கருதப்படுவதை நாம் இங்குக் கருத்தில் கொள்ளலாம். ஆற்றுக்குரிய தேவதையின் சினததுக்கு ஆளாகக்கூடும் என்ற அச்சம் காரணமாகக் கருவுற்றிருக்கும் தோடர் பெண்கள் அந்த ஆற்றினைக் கடக்க முற்படுவதில்லை. தோடர் அந்த ஆற்று நீரை எதற்கும் பயன் படுத்துவதில்லை. அதனைக் கடக்க வேண்டிய சமயத்திலன்றி மற்ற போது அவர்கள் அதனைத் தொடுவது கூட இல்லை. அவ்வாறு அதனைக் கடக்க நேர்ந்தால் மறுகரையினை அடைந்தவுடன் தலைதாழ்த்தி அதற்கு வணக்கம் செலுத்துவர். பைகாராவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் வழியே நடக்கும் போது அவர்கள் ஆற்றுக்கு மரியாதை காட்டும் வகையில் புட்குலிக்குள்ளிருந்து தங்கள் கரங்களை வெளியே விட்டுக் கொள்வர்.

மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் தரப்பட்டுள்ள பின்வரும் விவரங்கள் வட மலபாரில் உள்ள நாயர்களிடையேயான உட்பிரிவுகள் பற்றியான சிக்கல்களைப் புரியச் செய்யலாம். ''தொன்மையான தரவாடுகளின் அடிப்படையிலானவை எனக் கூறத் தகும் புறமணக்கட்டுப்பாடுடைய குலங்கள் எனப்படும் உட்பிரிவுகள் நாயர்களிடையே உள்ளன. இத்தகைய பல உட்பிரிவுகள் இணைந்தனவாக அமைந்தவை உட்சாதிகள். இவை பெரும்பாலும் அகமணக்கட்டுப்பாடுடையன. இந்த பிரிவுகளின் அமைப்பை முழுவதுமாக விளக்குவது என்பது முடியாது. அவை எப்படிப்பட்டவை என்பதற்குக் கோடிகாட்ட ஒரே ஒரு பிரிவை மட்டும் மாதிரிக்கு எடுத்துக் கொண்டு அதன் அமைப்பை விரிவாகக் காண முற்படலாம். இதற்குக் குறும்பர நாட்டின் ஒரு பகுதியான பைய நாட்டினை எடுத்துக் கொள்வது போதுமானது. கோட்டப் புறா, போரபுழா என்ற ஆறுகளுக்கிடையே அமைந்துள்ள நாட்டுப்பகுதி இது. இதனைக் குறும்பர நாட்டு அரசர் அம்பாடி கோவிலகம் தம்புராட்டிக்குக் கொடுத்ததாகக் கூறுகின்றனர். (ஸ்தானம் எனப்படும் சாமோரின் அரச குடும்பத்தைச் சேர்ந்த பெரிய இராணிக்கு உரிய பட்டப்பெயர் இது) இந்தப் பகுதியினை முதலில் ஆறு ஸ்தானிகர் (குறுநிலத் தலைவர்கள்)அரசரின் கீழ் ஆண்டு வந்தனர். கூட்டங்கள் எனப்படும் நாயர்களைக் கொண்ட நான்கு சபைகள்

இவர்கள் ஆட்சிப்பொறுப்பை மேற்பார்த்து வந்தன. ஒவ்வொரு கூட்டத்திற்கும் பரம்பரைத் தலைவன் உள்ளான். இந்த வட்டாரத்தில் ஏழு குழுக்கள் குலங்களைக் கொண்டனவாக உள்ளன. அவற்றுள் உயர்ந்தது வெங்களத்து, பத்திலத்து, வீய்யூர், நெல்லியோட், அடுங்குடி, அம்மயங்கலட், நெல்லோலி, நிலஞ்சேரி, ரெண்டில்லத்து, புல்லியானி, ஓரகாட்டெரி, வெண்மேரி என்ற பன்னிரண்டு குலங்களைக் கொண்ட பிரிவு ஆகும். இவைகளுள் பத்திலத்து, இரண்டில்லத்து (பத்துக் குடும்பங்களையும் இரண்டு குடும்பங்களையும் கொண்ட குலங்கள்) என்ற குலங்கள் இரண்டும் அடியோடி என்ற பட்டப்பெயரைத் தங்கள் பெயரோடு இணைத்துக் கொள்கின்றன. இறுதி மூன்று குலத்தவர்களும் நம்பியார் என்ற பட்டப்பெயருக்குரியர். மற்றவர்கள் நாயர் என்ற பட்டப் பெயருக்கு உரியர். மேலே கூறிய ஆறு ஸ்தானிகர்களுள் மூவர் அடியோடி என்ற பட்டப்பெயருக்கு உரியவர்களாக வெங்களத்துக் குலத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். ஸ்தானிகரின் கீழ் உள்ள கூட்டங்களில் இருவர் பத்திலத்துக் குலத்தவர்களாக உள்ளனர். ஸ்தானியின் வீட்டைச் சேர்ந்த இளைஞர்கள் கிடவு எனப்படுவர். வீய்யூர் மற்றும் நெல்லியோட் குலங்களைச் சேர்ந்த பெண்கள், வெங்களத்துக் குலத்தவர்கள் திருமண ஊர்வலத்தில் முன்னவர்கள் விளக்கையும் பின்னவர்கள் பூக்கள் உள்ள தட்டுக்களையும் ஏந்திச் செல்ல வேண்டும். வெங்களத்துக் குலத்தவர்களுக்கு இரண்டில்லத்து அடியோடிகள் சமையலுக்கு உரிய ஆட்களைத் தேடித் தரவேண்டும். பத்திலத்து அடியோடிகளும் ஓரகாட்டெரி நம்பியார்களும் பன்னிரண்டு நாட்கள் தீட்டினை மேற்கொள்கின்றனர். மற்றக் குலத்தவர்கள் பதினைந்து நாட்கள் தீட்டினை மேற்கொள்கின்றனர். ஏரவாத்தூர், அரை எரவாத்தூர், அட்டிகோடன் நாயர்கள், தொண்டெரி கிடாவுகள், புண்ணன் நம்பியார்கள், மேனோக்கிகள் ஆகிய ஆறு குலங்களைக் கொண்டது இரண்டாவது பிரிவு. இவர்கள் அனைவரும் பதினைந்து நாட்கள் தீட்டினை மேற்கொள்பவர்கள். மூன்றாவது பிரிவு தச்சோலி, கோதோலி, குருவட்டான் ஆகிய மூன்று குலங்களைக் கொண்டது. எஞ்சிய மூன்று ஸ்தானிகர்களும் தச்சோலி குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் நாயர் என்ற பட்டப்பெயரை உடையவர்கள். பதினைந்து நாள்கள் தீட்டினை மேற்கொள்பவர்கள். பெருவாலியன் நம்பியார்கள், செல்லாதவன் நாயர்கள், வெண்ணப்பாளன் நாயர்கள் ஆகிய மூன்று குலங்களைக் கொண்டது நான்காவது பிரிவு. இம் மூன்று குலத்தவர்களும் பதினைந்து நாட்கள் தீட்டுப் பேணுபவர்கள். பெருவாலியன் என்ற பெயர் பெரிய எண்ணெய்க்காரன் எனப் பொருள்படுவது. குறும்பர நாடு நாட்டு அரசர் முறையாகப் பட்டம்

கட்டிக் கொள்ளும் போது எண்ணெய் கொடுத்து உதவ வேண்டியது இவர்கள் கடமையாகும். மண்ணங்காழி, பரஞ்சேல, பள்ளிகர என்ற மூன்று குலங்களைக் கொண்டது ஐந்தாவது பிரிவு. இவர்களும் பதினைந்து நாள் தீட்டுக்காரர்களே. மண்ணாங்காழிக் கலத்தைச் சேர்ந்தவன் ஒருவன் குறும்பர நாட்டு அரசர் அமர ஆமனபலகையை இடக் கடமைப்பட்டவன் (ஆமனப் பலகை நம்பூத்ரிகளும் பிற உயர்ந்த சாதியாரும் அமர்வதற்குரிய மணைப் பலகையாகும்.) பரஞ்சேலக் குலத்தவன் அச்சமயம் அவருக்கு உடைகள் வழங்கக் கடமைப்பட்டவன். ஆறாவது பிரிவில் பதம், துளு,மனன், ஒட்டு என்ற பெயருடைய நான்கு கிரியம்கள் உள்ளன. இவை அனைத்தையும் இணைத்து ராவாரி என்ற ஒரே பெயரால் வழங்குவர். கொண்டோன், கண்ணன்கோடன், கொட்டை, கரும்பு, குண்டகொள்ளவன், பனகாடன் நாயர் ஆகிய ஆறு குலங்களைக் கொண்டது ஏழாம் பிரிவு. இவர்களும் பதினைந்து நாட்கள் தீட்டு மேற்கொள்பவர்களே. இந்தக் குலங்களைச் சேர்ந்த பெண்கள் வெங்களத்து, பத்திலத்து, ஒரகாட்டெரி குலங்களைச் சேர்ந்த பெண்களுக்குச் சில கடமைகளை ஆற்ற வேண்டியவர்களாக உள்ளனர். இந்த ஏழு பிரிவுகளைத் தவிர உட்பிரிவுகள் எவையும் இல்லாத சில பிரிவுகள் உள்ளன. பாப்பினை நாயர் என்பது அத்தகைய ஒரு பிரிவு ஆகும். மூன்றாவது பிரிவினைச் சேர்ந்த குலத்தவரான சிறுமியருக்குத் தாலிகட்டுக் கல்யாணம் நடக்கும் போது இந்தப் பிரிவைச் சேர்ந்த பெண்கள் பிராமணப் பெண்கள் (நம்பிசான்) பொறுப்பினை மேற்கொண்டவர்களாக இருப்பர். பாலட்டுவான் என்ற மற்றொரு பிரிவு உள்ளது. அந்தப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் மேற்கூறிய மூன்று குலங்களைச் சேர்ந்தவர்களுக்குச் சாவுச் சடங்குகளின்போது அட்டுகுரிச்சி நாயர் செய்ய வேண்டிய பணியினை மேற்கொள்வர்.''

மலபாரைச் சேர்ந்த நாயர்களிடையே சென்ற காலத்தில் வழக்கத்திலிருந்ததான பல கணவரை மணத்தலைப் பற்றிய விளக்கமாகச் சில பகுதிகளை இங்கு எடுத்துக்காட்டுகிறேன். எல்லீஸ் பதிப்பித்த குறளில் இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது வருமாறு:- ''இந்தியக் கண்டத்தில் ஒரிசாவிலும் பிற பகுதிகளிலும் சில இனத்தவரிடையே பல கணவர்களை மணக்கும் பழக்கம் உள்ளது. மலையாளத்தில் பிளாட் டோவின் இலட்சியக் குடியரசின் கனவின் நிறைவேற்றம் முழுமை பெற்றதாக அமைந்ததான பாங்கில் நாயர் பெண்களுக்கான மணச்சடங்கில் புனித நெருப்பின் முன் யாரேனும் ஒருவன் அவளுடைய கணவனுக்குரிய பிரதிநிதியாக இருந்து அவளுக்குத் தாலி கட்டுவதோடு கூட அவர்கள் கணவர்களுக்கோ குடும்பங்களுக்கோ உரிய

எண்ணிக் கையிலான வரையறை ஏதும் இல்லாததாக இருக்கக் காண்கின்றோம். ஆண்களோடான அவளுடைய உடல் உறவுகளை அவளுடைய மனப்போக்கே வரையறைப்படுத்தக் கூடியதாக அமைகின்றது. அவள் தன் சாதியாரோடும் தன் சாதிக்கு உயர்ந்தவர் களோடும் மட்டுமே உடல் உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அவளுக்கு உள்ள ஒரே தடை. தங்கள் மனதில் ஆசைப்பட்டவர்களோடு கூடிக் களிக்கலாம் என உரிமை வழங்கப்பட்டிருந்தும் (மற்ற நாடுகளில் இத்தகைய உரிமை ஆண் பெண்களின் ஒழுக்க நடத்தைக்குச் சிறந்த பாதுகாப்பாகப் பெரும்பாலும் அமையாது போய்விடுகின்றது) பெண்குலத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் நாயத்திகள் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவனோடு உறவுவைத்துக் கொள்ளுதலைப் பெரும்பாலும் தவிர்த்தே வருகின்றனர். ஒத்துப்போகிறதாலோ, அருவருப்பாலோ, ஏறுமாறாக நடப்பதாலோ குடும்பத்தின் மகிழ்ச்சியைக் குலைப்பதாக நிகழும் ஆயிரக்கணக்கான எரிச்சலூட்டும் நிகழ்ச்சிகளில் ஏதாவது ஒன்றாலோ ஒருத்தி தன் கணவனோடான உறவைத் துண்டித்துக் கொண்ட பிறகே வேறொரு ஆணையும் ஒருவன் வேறோரு பெண்ணையும் தேடிச் செல்கின்றனர். மற்ற இடங்களில் போலவே இங்கும் தொடக்கத்தில் கொண்ட உறவானது அறுத்துக் கொள்ள முடியாதபடி உறுதியுடையதாக இளமையில் தன்னல நாட்டமில்லாத சூழலில் உள்ளத்தில் ஏற்பட்ட காதல், வயது சென்ற காலத்திலும் தொடர்ந்து நீடிக்கவே செய்கின்றது.

பதினாறாம் நூற்றாண்டில் சீசர் பிரடெரிக் நாயர்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றார்:-* '' இந்த நாயர்கள் தங்களுக்குப் பொதுவான மனைவியரை உடையவர்களாக உள்ளனர். இவர்களுள் ஒருவன் இத்தகைய பொதுமனைவியரின் இல்லத்திற்குச் செல்லும் போது அவன் தன் வாளினையும் கேடயத்தையும் அந்த இல்லத்தின் வாசலில் விட்டுச் செல்வான். அவன் அங்கிருக்கும் வரை அந்த வீட்டினுள் நுழைய எவனுக்கும் நெஞ்சில் துணிவு பிறவாது. அரசரின் பிள்ளைகள் தந்தைக்குப் பின் அரசுக்கு உரியவராதலில்லை. அவர்கள் அரசருக்குப் பிறந்த பிள்ளைகள் அல்லாமல் வேறொருவனுக்குப் பிறந்தவராகவும் இருக்கலாம் என்பதே இதற்குக் காரணமாகலாம். இதனால் அவர்கள் அரசனுடைய சகோதரிகளுள் ஒருத்தியின் பிள்ளையைத் தங்கள் அரசராக ஏற்றுக் கொள்கின்றனர்.

* வெனீஸ் வணிகரான எம். சீசர் பிரெடரிக்கின் கிழக்கு இந்தியா மற்றும் இந்தியா சார்ந்த பகுதிகளிலான கடற்பயணமும் உள்நாட்டுப் பயணமும்(1563)- மொழிபெயர்ப்பு ஹக்கிலியும் - கடற்பயணங்கள், v, 394.

அவ்வாறில்லாவிடின் அரசகுடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தியின் பிள்ளை அரசனாவான். இந்த வகையில் அந்த நாட்டவர் அரச குடும்பத்தவரின் இரத்த உறவுடையவர்கள் தங்களை ஆள்கின்றனர் என்பதில் உறுதியுடையவர்களாகின்றனர்.''

''கிழக்கிந்தியா பற்றிய புதிய விவரங்கள் (1727)'' என்ற தன்னுடைய நூலில் ஹாமில்டன் எழுதியுள்ளதாவது:- ''கணவன்மார்கள் ஒருத்தியை மணந்துகொண்ட வரிசைப்படி முறைவைத்துக் கொண்டு அவளோடு உடல் உறவு கொள்கின்றனர். பத்து நாள்களுக்குச் சற்று முன்பின்னாக ஒருவன் தொடர்ந்து ஒருத்தியோடு இருப்பான். அந்தக் காலத்தில் அவளுக்கு வேண்டியவற்றைத் தந்து காப்பாற்ற வேண்டியது அவனுடைய பொறுப்பேயாகும். இவ்வகையில் ஒருத்தி மாறி மாறித் தன் தேவைகளுக்குரியனவற்றைத் தாராளமாகப் பெறும் வாய்ப்புக்கு உரியவளாகின்றாள். அவளோடு வாழ்ந்து கொண்டிருப்பவன் அவள் வீட்டினுள் நுழையும்போது வாசலில் தன் படைக்கலங்களை விட்டுச் செல்வான். அதன் பின் அந்த வீட்டினுள் நுழையவோ அந்தப் படைக்கலங்களை அப்புறப்படுத்தவோ உயிர் மேல் ஆசையுடையவர்கள் முற்படார். இப்படிப் பலருக்கு மனைவியாக இருப்பவள் கருவுற்றவுடன் அவனுடைய தந்தை யாரெனக் கூறுவாள். அக்குழந்தைக்குப் பால் கொடுத்து அதனைப் பேசவும் நடக்கவும் கூடியதாக அவள் வளர்த்துவிட்டபின் அதனுடைய தந்தை அதற்குக் கல்வி அளிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்வான். இத்தகைய குழந்தை அதனுடைய தந்தையின் உடைமைக்கும் உரிமையுடையவனாதல் முடியாது. அக்குழந்தையின் தந்தையின் உடன்பிறந்தவள் பிள்ளைகளுக்கே அந்த உடைமைகள் உரியனவாகும்.''

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதும்போது* குறிப்பிடுவதாவது:- ''நாயர்களிடையே பலருக்கு ஒருத்தி மனைவியாக இருக்கும் விசித்திரமான பழக்கம் பொதுவாகக் காணப்படுகிறது. ஒருத்தியைப் பொதுவில் மனைவியாகப் பெற்றுள்ளவர்களிடையே பொறாமையோ பூசலோ ஏற்படும் பழக்கத்தையும் அச் சமூகத்தில் காண முடியாது. ஒருத்திக்கு எத்தனை பேர் கணவர்களாக இருக்கலாம் என்பதற்காகச் சட்டப்படியான வரையறை வழக்குப்படியான வரையறையே இல்லையெனினும் ஆறு ஏழுபேர்களுக்கு மேல் அவ்வாறு கணவர்களாக இருப்பதனைக் காண்பது அரிது. ஒருத்தி ஒருவனுக்கு மேல் கணவர்களைப் பெற்றிருக்க வேண்டும் என்ற

* கிழக்கிந்தியாவில் பயணங்கள். (Travel to the East Indies.)

கட்டாயம் ஏதும் இல்லை. இந்த உரிமையினை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு பல கணவர்களை உடையவளாயிருப்பவள் இழிவுக்கு உள்ளாவதும் இல்லை. ஒருவனோடு அவள் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கும் போது மற்றொருவன் அங்கே வருவானாகில் வாசலில் உள்ள சில குறிப்பான அடையாளங்களைக் கொண்டு அதனைத் தெரிந்து கொண்டவனாக ஆர்ப்பாட்டம் ஏதும் செய்யாமல் அமைதியாகத் திரும்பிவிடுவான்''. அதே காலப்பகுதியில் சானரெட்[⊛] எழுதியுள்ளதாவது :- நம்பூத்ரிப் பிராமணர்கள் திருமணம் புரிந்து கொள்ளாதவர்களாக நாயர் சாதிப் பெண்கள் அனைவரோடும் உடல் உறவு கொள்ளும் பழக்கம் உடையவர்கள். உயர்ந்த சாதியாராகப் போர்த்துகீசியர் கருதிப் போற்றி வந்த பிராமணர்களுடைய இந்த உரிமையைப் பற்றி அவர்கள் எல்லாவகைப் பெண்களுடனும் குடித்துக் களித்துக் கூத்தாடி உறவு கொண்டபோது தெரிந்து கொண்டனர். இந்த உரிமை நாட்டு வழக்கப்படி ஏற்படுத்தப்பட்ட உரிமையாகும். எத்தகைய இழிவிற்கும் உட்படாதவளாக ஒருத்தி தன் சாதிக்குக் கீழ்படாத எத்தனைப் பேரோடு வேண்டுமானாலும் வாழ்க்கை நடத்தலாம்(திரு. தெ. வால்டெயர் கருத்து இது பற்றி) எப்படியிருப்பினும் அவள் தன் சாதியில் தாழ்ந்தவர்களோடு உறவு கொள்ளக்கூடாது என்பதற்குக் காரணம் அவளுக்குப் பிறக்கும் குழந்தைகள் அவளோடு கூட உடன் பிறந்தவனுடைய உடைமைகளுக்கு உரிமையுடையனவாக ஆகப் போவதால்தான். அத்தகைய ஒருத்தியின் சகோதரன் அரசனாக இருப்பின் அவளுக்குப் பிறக்கும் குழந்தை அரசனாகவும் ஆகலாம்.'' தன்னுடைய 'பயணங்களும் கடற்பயணங்களும்'பற்றி எழுதும் கெர் பின்வருமாறு கூறுகின்றார்.* ''நாட்டில் உள்ள சட்டப்படி இந்த நாயர்கள் மணம் செய்துகொள்ள உரிமையற்றவர்கள். இதனால் எவனுடைய தந்தை எவன், எவனுடைய மகன் எவன் என்ற முறையான உறவினை அறிந்து கொள்ளக் கூடியவர்களாக இல்லை. இவர்களுடைய குழந்தைகளை அனைவரும் நான்கைந்து நாயர்கள் தங்களுக்குள்

⊛ கிழக்கிந்தியக் கடற்பயணம் 1774 மற்றும் 1781 (Voyage to the East Indies, 1774 and 1786)

* ஆர்.கெர். பொது வரலாறும் கடற்பயணங்களும் பயணங்களும் பற்றிய கட்டுரைத்தொகுப்பு, 1811. இந்தியாவைப் போர்த்துகீசியர் கண்டுபிடித்ததும் வெற்றி கொண்டதுமான 1497க்கும்1525க்கும்இடையேயான வரலாறு. போர்த்துகீசிய மொழியிலிருந்து (R.Kerr. General History and Collection of Voyage and Travell - 1811 History of the discovery and conquest of India between the year 1497 and 1525 from the original protiquese of Herman Lopes de caste)

பெற்றவர்களாக உடல் உறவு கொள்ளும் ஒருத்திக்குப் பிறந்தவர்களே. கூட்டாக ஒருத்தியை மனைவியாகப் பெற்றுள்ள இவர்கள் தங்களுக்குள் முறை வைத்துக் கொண்டு அவளோடு உடல் உறவு கொள்வர். இவர்கள் ஆளுக்கு ஒரு நாள் முறைப்படி அவளோடு கழிப்பர். இவர்கள் நாள் நண்பகலில் தொடங்கி மறுநாள் நண்பகலின் போது முடிவுறும். அப்பொழுது ஒருவன் வெளியேற மற்றவன் வந்து சேர்வான். இப்படியாக மனைவி, குழந்தைகள் என்ற தொல்லை இன்றிக் காலங்கழிக்கும் இவர்கள் தங்கள் தகுதிக்கேற்ப அவர்களுடைய பொது மனைவிக்கு வசதிகள் செய்து தருவர். ஒருவன் தன் பொது மனைவியை எப்பொழுது வேண்டுமானாலும் விருப்பம் போல் கைவிட்டுவிடலாம். அவளும் தன் காதலர்களில் யாரை வேண்டுமாயினும் விருப்பம் போல் தன்னிடம் வரவேண்டாம் எனத் தடுக்கலாம். இவ்வாறு வாழ்க்கை நடத்தும் பெண்கள் அனைவரும் நாயர் சாதியைச் சேர்ந்த குடும்பப் பெண்களே. நாயர் சாதியினைச் சேர்ந்த ஆண்கள் மணம் புரிந்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை என்பதோடு வேறு சாதியைச் சேர்ந்தவர்களோடு உறவு கொள்ளவும் அனுமதிக்கப்படுவதில்லை. ஒருத்தியோடு பல ஆண்கள் உறவுடையவர்களாக உள்ளனர் என்பதனால் நாயர்கள் தங்கள் துணைவிக்குப் பிறக்கும் குழந்தைகள் எவ்வளவு தான் தங்களை உருவத்தில் ஒத்திருப்பினும் அவற்றைத் தங்களுடைய குழந்தைகளாகக் கருதுவதில்லை. நாயர்களுடைய உடைமைகள் அனைத்தும் அவர்களோடு உடன்பிறந்தவர்களுக்கும் உடன்பிறந்தவள் பிள்ளைகளுக்குமே உரியவாகின்றன. இவர்களிடையே உறவுகள் அனைத்தும் பெண்வழிக் குருதி உறவினையும் சந்ததியினையும் முதன்மையாக வைத்தே கருதப்படுகின்றன. நாயர்கள் திருமணம் செய்து கொள்ளுதல் கூடாது என்ற விசித்திரமான வழக்குக்குக் காரணம் இவர்கள் மனைவி, குழந்தை என்று குறிப்பிட்டவர்கள் மீது அன்பை வளர்த்துக்கொள்ள இடங்கொடுக்கக் கூடாது என்ற அடிப்படையில் ஏற்பட்டது. அத்தகைய பாசப் பிணைப்பிலிருந்து விடுபட்டவர்களே போர்ப்பணியில் தங்களை முழு மனதோடு ஈடுபடுத்திக் கொள்ள முடியும் என்ற எண்ணமே இந்தத் தடைக்கு அடிப்படை.'' பத்துப் பேருக்குப் பிறந்தவன் என்று ஒருவனை இழிவுபடப் பேசும் வழக்கம் இன்றும் நாயர்களிடையே உள்ளது.* 1788-இல் கள்ளிக்கோட்டைக்கு வருகை தந்த திப்புசுல்தான் நாயர்களுக்குப் பின்வரும் அரசு அறிவிப்பை வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. ''உங்களிடையே ஒருத்தி பத்துப்பேரோடு உறவு

* விக்ரம், மலபார் சட்டமும் வழக்கும் பதிப்பு, 1900
(Vikram, Malabar Law and Custom, Ed. 1900)

வைத்துக் கொள்கின்றாள். நீங்கள் உங்கள் தாயார் களையும் உடன்பிறந்தவர்களையும் இந்த இழிவான வழக்கத்தை மேற்கொள்ள அனுமதித்துள்ளீர்கள். இவ்வாறு முறையற்ற ஒழுக்கத்தின் வழிப்பிறந்த நீங்கள் காட்டு விலங்குகளை விட மானங்கெட்ட வாழ்க்கை வாழ்ந்தபடி உள்ளீர்கள். நான் இந்த அறிவிப்பின்படி உங்களுடைய இந்தப் பாவச் செயல்களிலிருந்தும் விடுபட்டு மற்ற மனிதர்களைப் போல நடந்துகொள்ளும்படி கட்டளையிடுகின்றேன்.[⊕]

இன்று இத்தகையதான பல கணவர்களை உடையவர்களாக வாழும் முறை வழக்கில் உள்ளதா இல்லையா என்பதற்கு நான் அண்மைக்கால எழுத்தாளர்கள் என்ன சொல்கின்றார்கள் என எடுத்துக்காட்ட முற்படுகின்றேன். மறைத்திரு எஸ். மட்டீர், திரு பாவ்செட்[□] ஆகியோர் எழுதுவதாவது:- ''திருவாங்கூர் நாயர்களிடையே உள்ள வழக்கமான பல கணவர்களை ஒருத்தி உடையவர்களாயிருத்தல் பற்றிப்பேசிக்கொண்டிருந்த போது ''ஆறு சகோதரர்கள் இரண்டு பெண்களைத் தங்கள் மனைவியராகக் கொண்டிருப்பது தெரியும் எனக் கூறினர். நால்வர் ஒருத்தியையும் இருவர் ஒருத்தியையும் மனைவியராகக் கொண்டுள்ளனர். இருவர் ஒருத்தியை மனைவியாகக் கொண்டுள்ள சகோதரர்களுள் ஒருவன் கிறித்தவனாக மதம் மாறிவிட்டான். அதன் பின் அவன் இந்தப் பழக்கத்தைக் கைவிட்டதால் மற்றவன் அவனை அதற்காகக் கடிந்து கொண்டான்'' என்பது தனக்குத் தெரியவந்துள்ளது எனக் கூறினார். வெளியே தெரியும்படியாக மலபாரில் நாயர்களிடையே இன்று இப்பழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. தற்பொழுது அது வழக்கில் இல்லை என்பது உண்மையானால் (இங்கும் அங்குமாக அது வழக்கில் உள்ளதென்றே நான் நினைக்கிறேன்) நெடுங்காலத்திற்கு முன்பு அது வழக்கில் இருக்கவில்லை என்பது உறுதி.'' இது பற்றித் திரு கோபால் பணிக்கர் கூறுவதாவது:* ''இந்தச் சமுதாய வழக்கினை நாயர்கள் சமூகத்தின் மீது திணிக்கப் பிராமணர்கள் நாட்டில் சமூகப்படி நிலையில் உயர்ந்தவர்களாக உள்ள தங்கள் அந்தஸ்தைப் பயன்படுத்திக் கொண்டனர். அந்த மேலாண்மைக்கு நாயர்கள் தங்களை அடிமைப்படுத்திக் கொண்டனர். இதனால் பிராமணர்கள் நாயர் சாதிப் பெண்களைத் தடையேதுமின்றி வைப்பாட்டிகளாக வைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இத்தகைய

⊕ டி.எ. கல்யாண கிருட்டிண அய்யர், மலபார் காலாண்டுரெவியூ II 1903.
(T.A. Kalyanakrishna Aiyar, Malabar Quart Review, II, 1903.)

□ முந்துநூல் (Op. Cit.).

* மலபாரும் அதன் மக்களும், 1900 (Malabar and its folk, 1900.)

ஒரு பிடிப்பை அவர்கள் நாட்டவர்கள் மேல் ஏற்படுத்திக் கொண்ட பின் அந்தப் பிடிப்பு காலப்போக்கில் மேலும் இறுகவே செய்தது. இன்றுங்கூட மாவட்டத்தின் கிராமப் புறங்களில் பிராமணர்களோடு இத்தகைய உறவினை ஏற்படுத்திக் கொள்வது தங்கள் குடும்பங்களுக்குச் சிறப்பினைக் கொடுப்பது எனக் கருதும் குடும்பத்தவர்கள் உள்ளனர். இந்த மனப்பான்மைக்கு எதிரானதொரு எதிர்ப்புணர்ச்சி தலைகாட்டத் தொடங்கிவிட்டது. மதிப்புமிக்க நாயர் தரவாடுகளில் பிராமணர்களோடு கொள்ளும் இந்த உறவினை இழிவானதாகக் கருதத் தலைப்பட்டு விட்டனர். இந்த எண்ணத்தின் பிரதிபலிப்பாக உருவானதே மலபார் திருமணச் சட்டம்.'' நடுவர் திரு நாராயண மாரார் கூறுவதாவது :- ''முன்பு நாயர்கள் பல கணவர்களை மணக்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர் என்பதில் வெட்கப்படத் தேவையில்லை. அதனைப் புதுமையானதாகக் கருதவும் வேண்டியதில்லை. அண்மைக்காலம் வரை இது மேற்கொள்ளப்பட்டிருந்ததாகக் கூட இருக்கலாம். ஹாமில்டனும் புச்சனனும் மலபாரைச் சேர்ந்த நாயர் சாதிப்பெண் ஒருத்தி பல கணவர்களை மணந்து கொண்டுள்ளாள் எனவும் அக்கணவர்கள் சகோதரர்கள் அல்லர் எனவும் கூறியுள்ளனர். இந்தப் பயணிகள் பதினெட்டாம் நூற்றாண்டிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மலபாருக்கு வந்தவர்களாவர். இவர்கள் தாங்கள் நேரில் காணாததைப் பதிந்திருப்பார்களோ எனச் சந்தேகம் கொள்ள இடமேதும் இல்லை. மலபாரின் மூலை முடுக்குகளில் இப்பொழுதும் கூட இந்தப் பழக்கம் கைகொள்ளப்படுவதில்லை என்பதனை நான் உறுதிபடக் கூற இயலாது.'' இறுதியாக இது பற்றித் திரு விக்ரம்* எழுதியுள்ளதையும் கூறியேயாக வேண்டும். ''பல கணவர்களை மணக்கும் பழக்கம் தற்போது மறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது. நாயர் சாதியினைச் சேர்ந்தவர்களின் திருமண உறவின் வழிப்பிறக்கும் குழந்தைகள் இன்னமும் தந்தையின் குழந்தைகளாகக் கருதப்படாமல் தாயாரின் குழந்தைகளாகவே கருதப்படுகின்றனர். மலபாரில் இருவர் மனம் ஒப்பிச் செய்து கொள்ளும் ஓர் உடன்படிக்கையே இந்த உறவு . தனிப்பட்ட முறையில் இருவரிடையே ஏற்படுத்திக் கொள்ளப்படுகின்ற உறவாயிருப்பினும் மணஉறவுகளாக இதனை ஏற்படுத்திக் கொள்கின்ற வேறெங்கும் இங்குப் போல இதனைப் போற்றிப் பேணுவதோ போற்றிப் பேணப்படாமை பெரும்பழியாகத் தூற்றப்படுவதோ இல்லையெனச் (திரு லோகன் அவர்களால்) சரியாகவே கூறப்பட்டுளளது.''

''தாலிக்கட்டுச் சடங்கு நிகழ்ச்சிகள் மலபாரில் இடத்திற்கு இடம்

* மலபார் சட்டமும் வழக்கமும் 1882. (Malabar Law and Custom, 1882.)

வேறுபடுகின்றன. எனினும் நாயர் சாதிப் பெண் ஒருத்தி பூப்படையும் முன் ஏதாவது ஒரு முறையில் இச் சடங்கு நிகழ்த்தப்பட வேண்டும் என்பது விதியாகும்." எனத் திரு பாவ்செட் தாலிக்கட்டுக் கலியாணம் பற்றிக் கூறுகின்றார். இந்தச் சடங்கின் விவரத்தை விளக்க நான் மலபார் மணமுறைகளின் ஆய்வுக் குழுவின் முன் திரு. கே. ஆர். கிருட்டிண மேனன் அளித்த சாட்சியத்தை இங்குத் தருகின்றேன்.[⊛]

"தாலிக்கட்டுக் கலியாணம் பிற மாவட்டங்களில் தேவதாசிகள் தங்கள் தொழிலைத் தொடங்கு முன் செய்து கொள்ளும் கலியாணத்திற்கு ஒப்பானது. அரச குடும்பங்களிடையேயும் சில இடைப்பிரபுக்களிடையேயும் ஒரு சத்திரியனையும் சாண பிரிவினரிடையே ஒரு நெடுங்காடியையும் ஒரு சிறுமியின் வீட்டிற்கு ஒரு நல்ல நாளில் அழைத்துச் சாதியைச் சேர்ந்தவர்கள், நண்பர்கள் ஆகியோர் முன்னிலையில் அவள் கழுத்தில் தாலியைக் கட்டச் செய்யும் பழக்கம் இருந்து வருகின்றது. அவ்வாறு தாலிகட்ட அழைக்கப்படுபவன் அப்பணிக்காக ஒரு சிறுதொகை அளிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்படுவான். மற்றப் பிரிவினரிடையே சிறுமியின் சாதகம் அவளுடைய இணங்கன் குடும்பத்தவர் (ஒருத்திக்கு உரியவன் அதற்கு உரிய பிரிவைச் சேர்ந்தவன்) சாதகத்தோடு வைத்துப் பொருத்தம் பார்க்கப்படும். எந்தச் சிறுவனுடைய சாதகம் தாலிகட்டப்பட வேண்டிய சிறுமியின் சாதகத்தோடு பொருந்துகின்றதோ அவன் அவளுக்குத் தாலிகட்ட ஏற்றவனாகத் தேர்ந்தெடுக்கப்படுவான். சோதிடர் தாலிகட்ட உரிய நல்ல நாளைக் குறிப்பார். அது பற்றிய தகவல் அச்சிறுவனுடைய தரவாடைச் சேர்ந்த காரணவனுக்குத் (தரவாடைச் சேர்ந்த வயதில் மூத்த ஆடவன்) தெரிவிக்கப்படும். இது தொடர்பாக நடக்கும் விருந்து அயினிஉணு எனப்படும். அப்போதிருந்து அச்சிறுவன் மணவாளன் என்றோ பிள்ளை (மாப்பிள்ளை) என்றோ அழைக்கப்படுவான். மணவாளனுக்கு விருந்து உபசாரம் செய்யும் வீட்டிலிருந்து முன்னே வாளும் கேடயமும் ஏந்தியபடி போர்க்குரல் எழுப்பியபடி செல்லும் வீரர்களைக் கொண்ட ஊர்வலம் புறப்படும். அதே சமயம் அச்சிறுமியின் வீட்டிலிருந்தும் அத்தகையதொரு ஊர்வலம் அவள் தரவாடைச் சேர்ந்த ஒருவர் தலைமையில் புறப்படும். இவர்கள் மணவாளன் வீட்டிலிருந்து ஊர்வலமாக வருபவர்களோடு உடன் வரும் மணவாளனை எதிர் கொண்டு சிறுமியின் வீட்டிற்கு அழைத்து வருவர். இதற்காக அமைக்கப்பட்ட பந்தலில் உயர்ந்ததொரு இருக்கையில் அவனை

⊛ மலபார் மணமுறைகளின் ஆய்வுக்குழு அறிக்கை. 1894 (Report of the Malabar Marriage Commission, 1894)

அமரச் செய்தபின் அச் சிறுமியின் உடன்பிறந்தவன் அவனுடைய பாதங்களைக் கழுவுவான். அவனுக்கு ஓர் இணை வேட்டிகள் வழங்கப்படும். அதன்பின் மணவாளனை மூங்கில் பாய், கம்பளி, வெள்ளைத் துணி ஆகியன விரிக்கப்பட்டுள்ள பந்தலின் நடுவிடத்திற்கு அழைத்துச் சென்று அமரச் செய்வர். சிறுமியின் உடன்பிறந்தவன் அவளை வீட்டினுள்ளிருந்து தூக்கி வந்து பந்தலை மும்முறை வலம் வந்தபின் அவளை மணவாளனுக்கு இடப்பக்கம் அமரச் செய்வான். அவர்களுக்கு அச்சிறுமியின் தந்தை கம்பளியில் கட்டப்பட்ட உடைகளை வழங்குவான். மந்தரவடி எனப்படும் அந்தப் புதிய உடைகளை அவர்கள் உடுப்பர். சிறுமியின் தரவாடைச் சேர்ந்த காரணவனின் மனைவி அச்சிறுமியின் சாதியினைச் சேர்ந்தவளாயின் அச்சிறுமியின் காலில் சிலம்பு முதலானவற்றை அணிவித்து அவளுக்கு அலங்காரம் செய்வாள். இளையோடு (பிராமணர்களுள் தாழ்ந்த பிரிவினர்) எனப்படும் புரோகிதன் தாலியினை மணவாளனிடம் தரக் குடும்பத்தைச் சேர்ந்த சோதிடர் முகூர்த்த நேரம் வந்துவிட்டது எனக் குரலெடுப்ப மணவாளன் வாளினை மடிமீது வைத்தவனாகத் தாலியினை அந்தச் சிறுமியின் கழுத்தில் அணிவிப்பான் . அப்போது அவள் தன் கையில் ஓர் அம்பினையும் முகம் பார்க்கும் கண்ணாடியினையும் ஏந்தியவளாக இருக்க வேண்டும். பணக்காரர் குடும்பங்களில் பிராமணத்தி ஒருத்தி மணமக்களை வாழ்த்திச் சில பாடல்களைப் பாடுவாள். சாதாரணக் குடும்பங்களில் அத்தகையவளை ஏற்பாடு செய்ய முடியாத நிலையில் பாட்டுப்பாடும் பழக்கமுடைய ஒரு நாயரே அக்கடமையினைச் செய்வான். அச் சிறுவனையும் சிறுமியையும் இணங்கர்கள் வீட்டினுள்ளே அலங்கரிக்கப்பட்ட ஓர் அறைக்குத் தூக்கிச் செல்வர். அந்த உள்ளிடத்தில் அவர்கள் மூன்று நாட்கள் தீட்டுக்கு உரியவர்கள் போலத் தங்கியிருக்க வேண்டும். நான்காம் நாள் அருகே உள்ள குளத்திலோ ஆற்றிலோ ஒருவர் கையினை ஒருவர் பற்றியவர்களாக அவர்கள் குளிப்பர். உடைகளை மாற்றிய பின் அவர்கள் ஊர்வலமாக வீட்டுக்குத் திரும்புவர். தப்பட்டைகளும் யானைகளும் இந்த ஊர்வலத்தில் இடம் பெறுவது வழக்கம். அவர்கள் மீது அப்போது மஞ்சள் நீர் தெளிப்பர். அவர்கள் வீட்டை அடையும் போது வீட்டின் கதவுகள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும். மணவாளன்அவற்றைத் தள்ளித் திறக்க வேண்டும். பின் வீட்டினுள் நுழையும் அவன் வீட்டின் வடக்குப் பக்கத்தில் சென்று இருக்கையில் அமர்வான். அச் சிறுமியின் அத்தையும் பெண் உளவினர்களும் மணமக்களுக்கு இனிப்புப் பலகாரங்களை வழங்குவர். அச்சிறுமி அதன்பின் அச் சிறுவனுக்கு உணவு பரிமாறுவாள். பின் இருவரும் ஒரே

இலையிலிருந்து உணவு கொள்வர். பின்னர் மணப்பந்தலை அடைவர். அங்கு ஒரு வேட்டி இரண்டாகக் கிழிக்கப்பட்டு அதன் துண்டுகள் மணவாளனுக்கும் அச்சிறுமிக்கும் கூடியுள்ள இனங்கள் நண்பர்கள் ஆகியோர் முன்னிலையில் வழங்கப்படும். இவ்வாறு வேட்டியைக் கிழித்தல் தென் மலபார் பகுதிக்கு மட்டும் உரிய பழக்கமாக உள்ளது. இது சடங்கின் போது இன்றியமையாது நடத்தப்பட வேண்டிய ஒன்று. இவ்வாறு வேட்டி கிழிக்கப்பட்டுத் தாலிகட்டுக் கலியாணம் மணமுறிவுக்கு உட்படுத்தப்பட்டாலும் மணவாளன் இறக்கும்போது அவனால் தாலி கட்டப்பட்ட சிறுமி சாவுத்தீட்டினை மேற்கொள்கின்றாள். ஒரே மணவாளன் ஒரே சடங்கில் எத்தனைச் சிறுமியருக்கு வேண்டுமானாலும் தாலி கட்டலாம். அல்லது பல்வேறு சமயங்களில் அதனைச் செய்யலாம். அவன் இளைஞனாகவோ கிழவனாகவோ இருக்கலாம். இந்தச் சடங்கினை ஒரு சிறு தொகையினைப் பெற்றுக் கொண்டு வயதான புனிதப் பிராமணனே பெரும்பாலும் நிகழ்த்துகின்றான். சடங்கின் நான்காம் நாளுக்குப் பின் தாலிகட்டிக்கொண்ட சிறுமி விரும்பினால் அத் தாலியினை அகற்றி விடலாம். மலபாரின் சில பகுதிகளில் மணவாளனாக இருந்து தாலிகட்டும் சடங்கைச் செய்பவன் அந்தச் சிறுமியினை மணந்து கொள்ள உரிமை கொண்டாடலாம் எனக் கூறப்படுகிறது. அத்தகைய சமயங்களில் அவளோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளத் தகுதியானவனும் அவனே என்பதனை முன்கூட்டியே முடிவு செய்திருப்பர்.'' எனத் திரு பாவ்செட் கூறுகின்றார்.

கள்ளிக்கோட்டையைச் சேர்ந்த ஊராளி நாயர் ஒருவர் மலபாரில் வழக்கிலுள்ள தாலிகட்டுக் கலியாணம் பற்றித் தந்த விவரங்கள் மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் பின்வருமாறு விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ''தாலி கட்டுக்காக நல்ல நேரம் தேர்ந்தெடுக்கக் குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் எல்லோரும் சோதிடம் பார்க்கும் போது கூடுவர். அப்பொழுதே மணவாளனும் தேர்ந்தெடுக்கப்படுவான். கலியாணச் சடங்குக்காக வீட்டின் மேற்குப் பக்கக்கட்டுக்கு முன் உள்ள பதின்காட்ட மச்சின் முன் பெரிய பந்தலொன்று அமைத்து அதனுள் சிறிய பந்தல் ஒன்று இடுவர். பந்தல் மேற்கட்டி மாலை, விளக்கு, பனையோலை முதலியவற்றால் அலங்கரிக்கப்படும். பந்தலின் தூண்கள் ஆசாரி ஒருவனால் ஞாயிறு, திங்கள், புதன் ஆகிய கிழமைகளுள் ஒன்றில் வெட்டப்பட்ட கமுக மரக் கம்பங்களாக இருக்கும். முதல் நாள் சடங்குகள் கோயிலுக்குச் செல்வதுடன் தொடங்கும். அங்குப் பூசை

செய்யும் பிராமணன் மந்திரங்களால் புனிதப் படுத்தப்பட்ட தண்ணீரை மாவிலை, அரசிலை, தர்ப்பை ஆகியவற்றோடு சிறுமியின் தலையில் தெளிப்பான். இச் சடங்கு கலசமாடுக எனப்படும். அதன்பின் வீட்டுக்குத் திரும்பும் சிறுமியை மச்சுக்கு அழைத்துச் சென்று ஐந்து முகக் குத்து விளக்கை ஏற்றுவர். கல்யாணம் முடியும்வரை தொடர்ந்து இதனை எரியும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். சிறுமி மணை எனப்படும் பலாப் பலகையில் அமர்வாள். பலவகை அணிகளால் அணி செய்யப்படும் சிறுமி ஒரு பவளமணி மாலையினைக் கழுத்தில் அணிய வேண்டும் என்பது கட்டாயமாகும். அவள் தன் வலக்கையில் வால்கண்ணாடி(பித்தளைக் கைப்பிடிக் கண்ணாடி)யையும் கையில் சரக்காலி (வேலைப்பாடுகளோடு கூடிய அம்பு)னையும் ஏந்தியபடி இருப்பாள். அவள் முன் ஐந்து முகக் குத்து விளக்கோடு கூட நிறச்சவெப்பு எனப்படும் வறுத்த அரிசி நிறைந்த தட்டும் அஷ்ட மங்கல்யம் எனப்படும் நல்ல அதிர்ஷ்டம் தரும் எட்டுப்பொருள்களும் வைக்கப்படும். நம்பீசன் சாதியினைச் சேர்ந்த பிராமணி அல்லது புஸ்பிணி எனப்படும் பெண் ஒருத்தி அச்சிறுமியின் எதிரே முக்காலியில் அமர்ந்தவளாகப் பொருத்தமான நீண்ட பாடல்களைப் பாடியபின் அவள் மீது அரிசியினைத் தூவுவாள். நடுப்பகல் நெருங்கும் போது விருந்து நடைபெறும். அன்று மாலை மச்சில் மீண்டும் பாடல்கள் பாடப்படும். மறுநாள் காலையில் மச்சில் நடந்த சடங்குகள் மீண்டும் மூன்றாம் முறையாக நிகழ்த்தப்படும். அதன்பின் அங்கு வைக்கப்பட்டுள்ள அனைத்தையும் அருகே உள்ள ஒரு குளக்கரைக்கோ வீட்டுக் கிணற்றின் கிழக்குப் பக்கமோ கொண்டு போய் வைப்பர். புஸ்பிணி அங்குப் பாடல்கள் இசைப்பாள். அதன்பின் அச் சிறுமிக்கு அலங்காரம்செய்வது போலப் பாவனை செய்தவளாகத் தென்னோலைகளைப் புஸ்பிணி அச்சிறுமியின் மணிக்கட்டுகளில் அணிவிப்பாள். அச் சிறுமி பின்னர் எழுந்து ஒரு தண்ணீர் நிறைந்த உரிக்காத தேங்காய் மேல் வைக்கப்பட்ட கிண்டியினைத் தாண்டிக் குதிப்பாள். மூன்றாம் முறை அதனைத் தாண்டிக் குதிக்கும்போது அவள் அதனைக் கவிழ்த்துவிடவேண்டும். அதன் பின் அவர்கள் பந்தலுக்குப் புறப்பட்டு வருவர். சாலியன் கொண்டு வரும் கோடி வஸ்திரங்களை அச்சிறுமி அணிந்து கொள்வாள். அன்று மாலை மச்சில் முன்தினம் நிகழ்த்திய சடங்குகளை மீண்டும் நிகழ்த்துவர். மூன்றாம் நாளே சடங்கின் முக்கிய நிகழ்ச்சி நடைபெறும் சிறப்பான நாளாகும். அதற்காக அச்சிறுமி பந்தலினுள் அமைக்கப்பட்டுள்ள பந்தலில் தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்டபடி அமர்ந்திருப்பாள். சில சமயங்களில் குடும்பத்தைச் சேர்ந்த காரணவன் அல்லது அச்சிறுமியின் உடன்பிறந்தவன் அவளை

வீட்டினுள்ளிருந்து தூக்கி வந்து மும்முறை அல்லது ஏழுமுறை பந்தலைப் பிரதட்சணமாக வந்தபின் அவளைப் பந்தலில் கொண்டுவந்து அமர்த்துவான். அச்சிறுமியின் முன் முன்பு கூறப்பட்ட பொருள்கள் வைக்கப்படும். புஸ்பிணியின் பாட்டோடு நிகழ்ச்சிகள் தொடங்கும். நல்ல நேரத்தில் மணவாளன் அலங்கார உடை அணிந்தவனாக வந்து சேர்வான். அவன் முன் வாளும் கேடயமும் ஏந்தியபடி கூக்குரலிட்டவனாகப் பாதுகாவலனைப் போல ஒருவன் வரும் பழக்கமும் உண்டு. அவனை அச்சிறுமியின் வீட்டு வாசலில் பெண்கள் குழு விளக்குகளையும் மலர்களும் விளக்கும் உள்ள அலங்காரத் தட்டுக்களையும் ஏந்தி வரவேற்பர். சிறுமியின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் அவன்பாதங்களை அலம்புவான். பந்தலில் மணவாளன் சிறுமியின் வலப்பக்கமாக அமர்வான். சில இடங்களில் அந்தச் சிறுமியின் தந்தை மந்திரக்கோடி எனப்படும் புதிய உடைகளை இச் சமயத்தில் வழங்கும் வழக்கமும் உள்ளது. அவ்வாறு பெறும் ஆடைகளை அச்சிறுமியும் மணவாளனும் உடனே அணிந்து கொள்வர். இரண்டணா நாணயத்தின் அளவிலான மேற்பக்கம் துளைளையுடைய தங்கத்தகட்டாலான தாலியினை அருகே ஏந்தியபடி காத்திருக்கும் பொற்கொல்லரிடமிருந்து சிறுமியின் தந்தை அதற்கான தொகையைச் செலுத்திய பின் அதனைப் பெற்று மணவாளனிடம் தருவான். காரணவனோ அச் சிறுமியின் தந்தையோ சோதிடனிடம் முகூர்த்த நேரம் நெருங்கி விட்டதா என மும்முறை கேட்பர். அவன் தன் உடன்பாட்டினை மூன்றாம் முறை கேட்கும் போது தெரிவிப்பான். கூடியுள்ளவர்களின் வாழ்த்து ஆரவாரத்திற்கிடையே மணவாளன் அச்சிறுமியின் கழுத்தில் தாலி அணிவிப்பான். பின் மணவாளனால் அவள் மச்சுக்குத் தூக்கிச் செல்லப்படுவாள். விருந்தோடு அன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறும். மற்ற விழாக்களின் போது இருப்பது போலவே இச்சடங்கின்போதும் தப்பட்டையும் பிற இசைக் கருவிகளும் முதலிலிருந்து இறுதிவரை முழங்கியபடி இருக்கும். கூடியிருக்கும்பெண்கள் குலவையிட்டு விசித்திர ஒலியினை எழுப்பியபடி இருப்பர். இது விரலால் உதடுகளில் அடித்தபடி எழுப்பப்படும். நான்காம் நாள் அச்சிறுமியும் மணவாளனும் ஆடம்பரமாக உடையணிந்தவர்களாகக் கோயிலுக்கு ஊர்வலமாகச் செல்வர். அச் சிறுவன் வாள் போன்ற ஒன்றினையும் கேடயத்தையும் ஏந்தியவனாக ஊர்வலத்தில் முன்னே செல்வான். நல்ல வசதிபடைத்த குடும்பத்தவராயின் அவனும் அச்சிறுமியும் யானையில் ஊர்வலமாகச் செல்வர். அங்குத் தெய்வத்துக்குப் படையலிடுவதோடு பிராமணர் களுக்குத் தானமும் வழங்கப்படும். அங்கிருந்து திரும்பி அவர்கள்

வீட்டில் நுழையும் போது பின்னால் வரும் மணவாளன் மீது அவனையொத்த சிறுவர்கள் வாழைப்பழங்களை விட்டெறிவர். அவன் தனது கேடயத்தால் அவற்றைத் தடுப்பான். சில சமயங்களில் வீட்டின்கதவுகளை இடித்துத் திறந்தவனாக அவன் உள்ளே நுழைய வேண்டியிருக்கும். இந்த இரு வழக்குகளும் மணமகனுக்கும் மணமகள் வீட்டாருக்கும் இடையேயான மணமகளைத் தூக்கிச் சென்று மணக்கும் பழங்காலத் திருமண முறையின்போது நிகழும் சண்டையின் குறியீடாக இன்றுவரை நிலைத்துள்ளவை என்பதில் ஐயமில்லை. பந்தலினுள்ளே அமைக்கப்பட்டுள்ள சிறு பந்தலில் மணவாளனும் அச் சிறுமியும் புதிதாக மணந்து கொண்ட மணமக்களின் முதல் உணவினை நினைவூட்டும் வகையில் ஒன்றாக உணவு கொள்வர். கோவிலகத்தை சேர்ந்த முக்கியமான குடும்பத்தினரும் பெரிய நாயர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் இது போன்ற சமயத்தில் 1000 பிராமணர்களுக்கும் தங்கள் உறவினர்களுக்கும் விருந்திடுவதற்குப் பத்தாயிரம் முதல் பதினைந்தாயிரம் ரூபாய் வரை செலவிடுவர்.

திருவாங்கூரில் நடைபெறும் தாலிகட்டுச் சடங்கு பற்றித் திரு என். சுப்ரமணிய அய்யர் பின்வருமாறு எழுதுகின்றார்: ''பதினொரு வயதைத் தாண்டிவிடும் நாயர் சிறுமி இச்சடங்கிற்கு மிக வயதாகி விட்டவளாகக் கருதப்படுவாள். மிக அரிதாகப் பெண்கள் பூப்படைந்த பின்னும் இச் சடங்கு நிகழ்த்தப்படுதல் உண்டு. பிற சாதிகளுள் வழக்கில் உள்ளதைப் போலவே ஏழு, ஒன்பது, பதினொன்று போன்ற ஒற்றைப் படையிலான வயது நடந்து கொண்டிருக்கும் போது இது போன்ற சுபச் சடங்குகளை நடத்துவதே நல்லதென நாயர்களும் நம்புகின்றனர். எத்தனைச் சிறுமிகள் வேண்டுமானாலும் ஒரே சமயத்தில் இச்சடங்கினை ஒரு சேரச் செய்து கொள்ளலாம். ஒரு வயதுக் குழந்தைகளும் கூட இக்குழுச் சடங்கில் இடம் பெறலாம். இந்தக் கூட்டு ஏற்பாடு செலவின் சிக்கனத்தைக் கருதிச் செய்யப்படுவதே. இவ்வாறு ஒன்றாகச் சடங்கில் ஈடுபடுவோர் சமூக -சமயக் கட்டுப்பாடுகளால் ஒருவருக்கொருவர் கடமைப்பட்டவர்களாகி விடுவதில்லை. தரவாடைச் சேர்ந்த சிறுமிகளுக்கு இச் சடங்கைச் செய்து வைக்கும் பொறுப்பு காரணவனுடையதாகும். அவ்வாறு அவன் இதனைச் செய்து வைக்க முற்படாதபோது சிறுமியின் பெரிய அண்ணன் இந்தப் பொறுப்பினை ஏற்றல் வேண்டும். சிறுமியின் தந்தையினுடைய கடமை சிறுமிக்கு இதற்கான வயது வந்துவிட்டது என்பதோடு முடிந்து விடுகின்றது. திருவாங்கூரில் இச்சடங்கை முன்னின்று நடத்தி வைப்பவர்கள் மச்சம்பிக்கள் எனப்படுவர். இவர்கள் சடங்கு

நடைபெறவுள்ள தரவாட்டின் தகுதியினையொப்பதான தகுதியினை உடைய கிராமத்துப் பெரிய மனிதர்களாவர். மச்சம்பிக்காரர் முதலில் கூடிச் சடங்கு நடத்தப்பட வேண்டியுள்ள சிறுமிகளின் எண்ணிக்கை அவர்களுக்கான மாப்பிள்ளைகள் போன்ற விவரங்களை முடிவு செய்து கொள்வர். ஊரைச் சேர்ந்த சோதிடன் தரவாடுகளைச் சேர்ந்த பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களின் சாதகத்தை ஆராய்ந்து யார் யாருடைய சாதகங்கள் எந்தெந்தப் பெண்களின் சாதகத்துக்குப் பொருத்தமாக உள்ளன என்பதனை அறிவிப்பான். கணியன் தன் முடிவினை எழுதும் பனையோலை முகூர்த்தச் சருகு எனப்படும். அவனிடமிருந்து அதனைப் பெறுபவன் விரைந்து ஒரு நல்ல நாளில் சடங்கினை நிகழ்த்தக் கடமைப்பட்டவனாவான். அடுத்த முக்கியமான நிகழ்ச்சி வீட்டு வாசலில் கன்னி மூலை எனப்படும் தென்மேற்கு மூலையில் மரக்கம்பம் நடுவதாகும். பந்தல் போடுவதற்கு ஊரினைச் சேர்ந்த பிதகக்காரர் குறிப்பிடத்தக்க உதவிகளைச் செய்வர். பந்தல் கதிர்களால் அலங்கரிக்கப்படுவதால் கதிர் மண்டபம் எனப்படும். முல்லைப் பந்தல் எனவும் அதனை அழைப்பர். சடங்குக்கு முந்தின நாள் கழற்றி எனப்படும் பிராமணியின் பாட்டுப்பாடும் நிகழ்ச்சி நடைபெறும். அயினி உண்ணு எனப்படும் விருந்தினைச் சிறுமியின் வீட்டார் இளைஞனின் வீட்டாருக்குத் தருவர். மணமகன் கால்களைக் கழுவியவனாகப் பந்தலில் வந்து அமர்வதோடு விழா நிகழ்ச்சிகள் தொடங்கும். இதற்கிடையே சிறுமி குளித்துக் குல தெய்வத்தை வழிபட்டுப் புத்தாடையும் அணிகளும் பூணுவாள். பிராமணத்தி ஒருத்தி சிறுமியின் இட மணிக்கட்டில் நூல் கயிற்றினை அணிவித்துச் சுபத்ராவளி எனப்படும் பாடலைப் பாடுவாள். இது அர்ச்சுனன் சுபத்திரையைக் கவர்ந்து வந்து மணந்து கொண்ட நிகழ்ச்சியை விவரிப்பதாகும். அதன்பின் சிறுமியின் தாயாரின் அழைப்பை ஏற்றுக்கொண்டவனான மணமகன் யானை மீதோ நடந்தோ ஊர்வலமாக வருவான். சிறுமியின் உடன்பிறந்தவன் பந்தலின் வாசலில் காத்திருந்து அவனை வரவேற்பான். சடங்கு நிகழ்ச்சிகளைத் தொடங்க அனுமதி வழங்கியமைக்காக ஊரைச் சேர்ந்த பெரியவர் ஒருவருக்குச் சிறுதொகை காணிக்கையாகச் செலுத்தப்படும். சிறுமி பந்தலில் கிழக்குப் பார்த்தபடி கண்களை மூடியவளாக அமர்ந்திருப்பாள். ஊர்வலமாக வந்த சிறுவன் அவளுக்கு வலப்பக்கமாக அமர்வான். அதன்பின் மின்னு எனப்படும் தாலியினை இளையாட்டுப் பிராமணனிடமிருந்து பெற்றுச் சிறுமியின் கழுத்தில் அணிவிப்பான். அம்மாசம்பாட்டு எனப்படும் பாடல் இசைக்கப்படும். பல சிறுமியருக்கு ஒன்றாக தாலிக்கட்டு நடப்பதாயிருப்பின் சிறுமியர் அனைவரும்

கைகளில் அம்பினையும் முகம் பார்க்கும் கண்ணாடியினையும் ஏந்தியவர்களாக வரிசையாக அமர்வர். அவர்களுக்கு வயது தகுதிப்படி ஒவ்வொருவருக்கும் தாலிக் கட்டு நிகழும். இணங்கர்கள் யாரும் தனியே ஏற்பாடு செய்யப் படவில்லையாயின் ஒருவனே எல்லாச் சிறுமியருக்கும் தாலி கட்டுவான். வறுமை காரணமாக இதனை விழாவாக நடத்த இயலாதவர்கள் பிராமணர்களின் கோயில் ஒன்றின் முன் வைத்தோ பண்டார மடத்திலோ ஊர்த்தலைவன் வீட்டிலோ சடங்கினை நடத்தி முடிப்பர். வட திருவாங்கூரில் தனக்குத் தாலி கட்டியவன் இறந்தான் எனக் கேள்விப்பட்டவுடன் ஒருத்தி தன் தாலியினை அறுத்து எறிவாள்.'' ''திருவாங்கூரைச் சேர்ந்த நாயர் சிறுமி, ஊராரும் தோழியரும் தன்னைப் பழித்துக் கூறாது இருக்கப் பதினொரு வயதாகும் முன் தாலிக்கட்டுச் செய்து கொள்ள வேண்டும். தேவைப்படுமானால் மணமகனாக இருக்கும்படியாக ஒரு வாளினை வைத்துச் சடங்கினை நடத்திக்கொள்ளலாம்'' என மறைத்திரு மட்டீரு குறித்துள்ளார்.* ஏழ்மைப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார் களிமண்ணால் ஓர் உருவம் சமைத்து அதனை மலர்களால் அலங்கரித்து அதன் முன் சிறுமியர்கள் தாலி அணிவிப்பர்.

1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தாலிகட்டுச் சடங்கு பற்றித்தரப்பட்டுளள் விவரங்கள் வருமாறு:- இச்சடங்கிற்கான செலவு மிகுதியாக இருப்பதால் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பல குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கும் அவர்களுடைய வயதைப் பற்றிக் கவலைப்படாது இச் சடங்கினை ஒன்றாக நிகழ்த்துவர். இச்சடங்கிற்கு உட்படும் சிறுமிகளின் குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் சாவுத் தீட்டினை மேற் கொள்பவர்களாக இருத்தல் வேண்டும் என்பது இச் சமயத்தில் மேற்கொள்ளப்படும் விதியாகும். பந்தற்கால் நாட்டுவதுடன் விழா நிகழ்ச்சிகள் தொடங்கும். பந்தலை மேற்கட்டிகளாலும் கொடிகளாலும் அலங்கரிப்பர். ஊரைச் சேர்ந்த ஆண்களை அழைத்து விருந்து வைப்பதோடு வெற்றிலை பாக்கும் வழங்குவர். குடும்பத்தில் இச்சடங்கு நிகழ்த்தும் போதெல்லாம் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மதிப்புக்குரிய மன்னர் பிரானிடம் கையுறைகளைத் தந்து சடங்கு நிகழ்த்த அனுமதி பெற்றுவருவார். நம்பூத்ரிகளின் நிலத்தினை (ஜமீன்களின்) குத்த கைக்குப் பயிரிடுவோரும் நம்பூத்ரியின் இல்லத்தோடு இணைக்கப்பட்ட பிற சாதியினரும் இதே போல நம்பூத்ரிகளை நேரில் கண்டு அன்பளிப்புகளைத் தந்து சடங்கு நடத்த அனுமதி பெறும் வழக்கமும் உள்ளது. கோரைப் பாயில் உட்காருதல், யானைகளை வைத்து ஊர்வலம் நடத்தல், முழவடித்தல், கதனை வெடி எழுப்புதல் முதலியனவற்றுக்கு

நாட்டை ஆள்பவருடைய அனுமதி பெற வேண்டும் என்பதும் இங்குக் கருதத்தக்கது. மணப் பந்தலுக்கு அஷ்டமங்கலப் பொருள்கள் எடுத்தபடி ஊர்வலமாகப் போதலும் பாட்டின் இருத்தல் பாடல்களைப் பாடுதலும் சடங்கு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தினை அறிவிப்பன. புராணக் கதைகள் தழுவிய பாட்டின் இருத்தலுக்குரிய பாடல்களைப் பிராமணி அல்லது புஸ்பிணி பாடுவாள். தாலிகட்டுச் செய்து கொள்வதற்குரிய சிறுமியரும் அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் வண்ண உடைகள் அணிந்தவர்களாகப் பந்தலுக்கு ஊர்வலமாக வருவர். புஸ்பிணிபாடல்களைப் பாடுவாள். இடையிடையே கதனை வெடியொலிகளும் தப்பட்டைகளும் முழக்கங்களும் கேட்டபடி இருக்கும். மூன்று, ஐந்து அல்லது ஏழுமுறை இவ்வாறு பாடல் நிகழ்த்திய பின் பித்தளைப் பாத்திரம் ஒன்றில் மல்லிகைச் செடி ஒன்றினை வெட்டி வைத்து இளையாடு அல்லது குடும்பப் புரோகிதர் அதனை யானைமீது ஏற்றி அருகில் உள்ள பகவதி கோயிலுக்குக் கொண்டு செல்வர். சடங்குக்கு முந்தின நாள் இரவு தப்பட்டை முழக்கத்திற்கு வாணவேடிக்கைகளுக்கும் கூடியுள்ள ஆண் பெண்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கும் இடையே அந்த மல்லிகைச் செடி பகவதி கோயிலில் நடப்படும். தாலி கட்டுவதற்குரிய முகூர்த்த நேரத்திற்குச் சில மணி நேரம் முன்பு சிறுமியரை அறைக்கு வெளியே அழைத்து வந்து தரையில் அல்லது கொடிகள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் நின்று சூரியனை வழிபடும்படி செய்வர். மணமகன் அல்லது ஒரு திருமல்பாடு அல்லது ஓர் இணங்கன் கையில் வாளினை ஏந்தியவனாகத் தப்பட்டை முழக்கத்துடனும் வெடி ஆரவாரத்தோடும் வீட்டிற்குள் அழைத்து வரப்படுவான். வீட்டுவாசலில் அஷ்ட மங்கலத்தை ஏந்திய பெண்கள் சிலர் அவனை வரவேற்று ஒரு நாற்காலி அல்லது முக்காலியில் பந்தலில் அமரச் செய்வர். குடும்பத்தைச் சேர்ந்த ஆண்மகன் ஒருவன் சிறுமியின் தாய்மாமன் அல்லது சகோதரன் அவனுடைய பாதங்களை அலம்புவான். சிறுமியருக்குப் பட்டாடையோ புதிய பருத்தி ஆடையோ அணிவித்துப் பந்தலுக்கு அழைத்து வருவர். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்க இயலாதபடி இடையே திரையிட்டு அமர்த்தப்படுவர். பிராமணர்களுக்கும் இளையாடுக்கும் தட்சணை வழங்கியபின் இளையாடு தாலியினை- அரசிலை போன்ற உருவ அமைப்புடைய தங்கத் தகடு-நூலில் கோத்து திருமல்பாடிடம் தர அவன் அதனைச் சிறுமியின் கழுத்தில் அணிவிப்பான். ஒருவனே இரண்டு, மூன்று அல்லது நான்கு பெண்களுக்கும் அதனை அணிவிப்பதுண்டு. அவன் கட்டும்ஒவ்வொரு தாலிக்கும் ஒரு ரூபாய் முதல் எட்டு ரூபாய் வரை அவனுக்குத் தரப்படும். சில சமயங்களில் சிறுமியின் தாயாரே

தாலியினைக் கட்டுவதும் உண்டு. சடங்குகளுக்குப் பின் தொடர்ந்து தாலி அணிந்து கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் இல்லாத காரணத்தால் அதன்பின் அது பற்றிக் கவலைப்பட்டவர்களாக யாரும் அதனைப் பாதுகாப்பதில்லை. இது மணத்தினை ஒத்த ஒரு சடங்கே அன்றி மணமன்று என்பதனை இப்புறக்கணிப்புத் தெளிவுபடுத்துகிறது. கரமேல் ஆசான் எனப்படும் ஊர்த்தலைவன் இச்சடங்கில் முக்கியமான பங்கு வகிக்கின்றான். பந்தலினுள் எல்லோரும் பார்க்கக் கூடிய ஓர் இடத்தில் கட்டியின்மீது கோரைப்பாய், கறுப்புக் கம்பளி, வெள்ளைத் துணி ஆகியனவற்றை ஒன்றன்மீது ஒன்றாக விரித்து அவன் அமர்த்தப்பட்டிருப்பான். தாலி கட்டும் முன்பு அதற்காக அவனுடைய ஒப்புதலைப் பெறுதல் வேண்டும். இந்த ஒப்புதலைப் பெற ஒவ்வொரு சிறுமியருக்கும் 4,8, 16, 32 அல்லது 64 புதன்கள் (ஒரு புதன் 10 காசுகள்) குடும்பத்தின் வசதிக்குத் தக்கபடி அவனுக்குச் செலுத்த வேண்டும். அத்துடன் அரிசி, காய்கறி, வெற்றிலை முதலியனவற்றையும் அவனுக்கு வழங்குவர். கூடியுள்ள ஆண்கள்'பெண்கள் ஆகியோர் மீது அவ்வப்போது பன்னீர் தெளித்த படி இருப்பர். வெற்றிலை பாக்கு, வாசனைச் சந்தனம், மல்லிகைப்பூ ஆகியனவற்றைப் பெற்றுக் கொண்டவர்களாகச் சடங்குக்கு வந்திருக்கும் கிராமத்தைச் சேர்ந்த பெண்களும் உறவினர்களின் மனைவிமார்களும் தங்கள் இல்லங்களுக்குத் திரும்புவர். ஊரிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தையும் சேர்ந்த ஆண்களுள் ஒரிருவருக்கு மட்டும் நல்ல விருந்து படைப்பர். இணங்கு முறை வழக்கில் உள்ள சில இடங்களில் ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலாருக்கும் விருந்திடுவர். மூன்றாம் நாள் ஊரைச் சேர்ந்தவர் களுக்கு மீண்டும் பால் பாயசத்தோடு பகல் உணவு படைப்பர். நான்காம் நாள் அச் சிறுமியர் அருகில் உள்ள கோயிலுக்குத் தப்பட்டை முழக்கத்திற்கும் ஆரவாரத்திற்கும் இடையே ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவர். வழக்கம் போல வெற்றிலைபாக்கு, சந்தனம், மலர்கள் ஆகியன வழங்கப்பட்ட பின் கூடியுள்ள விருந்தினர்கள் விடைபெறுவர். சடங்கின் முடிவில் குடும்பத்தைச் சேர்ந்த பெரியவருக்கு நண்பர்கள், உறவினர்கள், ஊரவர்கள் ஆகியோர் அன்பளிப்புகளைப் பெரும்பாலும் தொகையாகச் செலுத்துவர். முதல் பந்தற்கால் நடப்பட்ட போதிருந்து தாலி கட்டி முடியும் வரை ஊரைச் சேர்ந்த சோதிடர் சடங்கின் ஒவ்வொரு நிகழ்ச்சியின்போதும் முன்னின்று அதற்குரிய நல்ல முகூர்த்த வேளையினைத் தெரிவித்தபடியிருப்பார். தாலிகட்டுக் கலியாணம் நடைபெறும் நான்கு நாட்களும் கதகளி நாடகம், ஓட்டந்துள்ளல் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் வழக்கமாக நடைபெறக்

காணலாம். பெரிய அளவில் இச்சடங்கை நடத்த வசதியற்றவர்கள் சிறுமியரை அருகில் உள்ள கோவிலுக்கோ நம்பூத்ரியின் இல்லத்திற்கோ அழைத்துச் சென்று எத்தகைய ஆடம்பரமோ விருந்து வைபவமோ இன்றித் தாலிகட்டலை நடத்தி முடிப்பர். நம்பூத்ரிகளின் இல்லத்தில் கட்டுவதாயின் அச் சிறுமி பர் அந்த நம்பூத்ரியின் இல்லத்தோடு இணைக்கப்பட்ட உட்பிரிவினராய் இருத்தல் வேண்டும் என்பது விதி. வடபகுதியில் உள்ள வட்டங்களில மிக ஏழ்மையில் வாழ்பவர்கள் திருவோணம் நாளன்று திருக்கக்கறுப்பன் கோயிலில் வைத்துத் தாலிகட்டுவர்.

துமர்டெ பார்போச தாலிக்கட்டுச் சடங்கு பின்பற்றிப் பின்வரும் சுவையான தகவல்களைத் தருகின்றார்.* ''பெண்களுக்குப் பத்து அல்லது பன்னிரண்டு வயது அல்லது அதற்கு மேல் வயது ஆனவுடன் அவர்களுடைய தாய்மார் கலியாணச் சடங்கினைப் பின்வருமாறு நடத்துகின்றனர். ருங்கள் நண்பர்களையும் உறவினர்களையும் பெண்களை வாழ்த்த வரும்படி இவர்கள் கேட்டுக் கொள்வதோடு சிலரிடம் அவர்களை மணந்து கொள்ளும்படியும் மன்றாடி வேண்டிக் கொள்வர். அவ்வாறு வேண்டிக் கொள்ளப்பட்டவர்களும் அதற்கு உடன்படுவர். தங்கத்தால் அரைப்பவுனில் நடுவில் துளையுடையதாகப் பட்டுக் கயிற்றின் தகட்டு முனையினைவிட அளவில் சிறியதாக ஓர் அணியினைச் செய்து அதனை வெண்பட்டு நூலில் கோத்துத் தாலியாக அணிவிப்பர். நன்கு உடை தரித்தவர்களாகத் தாயும் மகளும் பாட்டும் இசைக் கருவிகளும் கூடப் பலர் பின்தொடர வருவர். இந்தச் சடங்கில் பங்குபெற உறவினர்களும் நண்பர்களும் ஆர்வத்தோடு வந்திருப்பர். இதனை ஒரு உண்மையான திருமணமாகவே மதித்து மணமக்களின் கழுத்தைச் சுற்றி ஒரு தங்கச் சங்கிலியை இடுவர். பின் மணமகன் மணமகள் கழுத்தில் மேலே கூறப்பட்ட அணியினை அணிவிப்பான். இனித் தன் விருப்பம் போல் நடந்து கொள்ளத் தனக்கு உரிமை உண்டு என்ற வகையில் அவள் அதனைத் தொடர்ந்து அணிந்தவளாக இருப்பாள். அவளுக்குத் தாலிகட்டும் மணமகன் அவளைத் தொடக்கூடச் செய்யாதவனாக (அவளுடைய உறவினனாக இருப்பதால் இதில் அவன் மிகக் கருத்தோடு இருப்பான்) சென்றுவிடுவான். அவன் உறவினனாக இல்லாதிருப்பின் அவன் விரும்பினால் அவளோடு கூட இருக்கலாம். அவ்வாறு இருந்து தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. அப்போதிருந்து அவளுடைய தாயார் யாரேனும் இளைஞர்களை நெருங்கித் தன் மகளோடு முதன்முறையாக உடலுறவு

* முந்துநூல் (Opp. Cit)

கொள்ளும்படி வேண்டியபடி இருப்பாள். ஒரு கன்னியோடு முதன்முதல் உடல்உறவு கொள்வதைத் தூய்மைக்கேடான செயலாகவும் இழிவாகவும் கருதும் வழக்கம் இவர்களிடையே இருப்பது தான் இதற்குக் காரணம்.''

காஸனெடாவின் பயணக்குறிப்புகளின் மொழிபெயர்ப்பில் கெர்(Kerr) தாலிக்கட்டுச் சடங்கு பற்றிக் குறிப்பிட்டுள்ளதாவது:- ''சாமோரின் மற்றும் மலபார் அரசர்களின் உடன்பிறந்தவர்களுக்கு வாழ்க்கை நடத்தப் போதுமான நல்ல உதவித்தொகை அளிக்கப் படுகின்றது. இவர்களுடைய வயது பத்தானவுடன் இவர்கள் குடும்ப உறவினர்கள் அரசுக்கு வெளியே வாழும் நாயர் சாதி இளைஞன் ஒருவனுக்குச் சொல்லி அனுப்பி அவனுக்கு அன்பளிப்புக்கள் தந்து அவனை அந்த இளங்கன்னியுடன் முதலுறவு கொள்ளத் தூண்டுவர். அதன்பின் அவன் அவள் கழுத்தில் ஓர் அணியினைக் கட்டி விடுவான். அதனை அவள் தான் தன் விருப்பம்போல் யாருடன் வேண்டுமாயினும் உறவு கொள்வதற்கான உரிமையினை வழங்கியுள்ள அடையாளச் சின்னமாகத் தன் வாழ்நாள் முழுதும் அணிந்தவளாக இருப்பாள்.''

மலபார் மணமுறைகளின் ஆய்வுக் குழுவின் ஓர் உறுப்பினரான திரு வின்டர் போத்தம் (தற்போது சர் ஹென்றி) தாலிக்கட்டுப் பற்றித் தனது கருத்தாகத் தெரிவித்திருப்பதாவது:- நம்பூத்ரிகள் நாயர்கள் சாதிப் பெண்களோடு முதன்முதல் உடலுறவு கொள்ள உரிமையுடையவர்களாக ஒரு காலத்தில் விளங்கினர் என்பதன் அடையாளச் சின்னமாகவே இன்றைய தாலிக் கட்டினைச் செய்யும் பிராமணன் விளங்குகின்றான். நாயர் சாதிக் கன்னியர் முதன் முதல் நம்பூத்ரிகளோடு உடல் உறவு கொள்வதற்கான வாய்ப்பு ஒரு தனி உரிமையாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இது தொடர்பாகக் 'கிழக்கு இந்தியா பற்றிய புது விவரங்கள்' என்ற தலைப்பில் ஹாமில்டன் கூறியுள்ளதனை எடுத்துக் காட்டுதல் பொருத்தமாக இருக்கும். அதில், ' சாமோரின் மணம் புரிந்து கொள்ளும் போது தன் மணமகளோடு ஒரு நம்பூத்ரியோ தலைமைப் புரோகிதனோ உடலுறவு கொள்ளும் வரை தாள் உடலுறவு கொள்வதில்லை. அவள் தரும் முதல் உறவின் வழி கிடைக்கும் இன்பப்பேறு அவள் வழிபடும் தெய்வத்திற்குப் படையலாக ஆக வேண்டும் என்பதே இதற்கான காரணமாகும். சில பெரிய மனிதர்களும் இதே போன்று பூசாரி வர்க்கத்துக்கு இத்தகு உரிமையினைத் தருகின்றனர். எனினும் பாமர மக்கள் இத்தகைய மரியாதையினை அவர்களுக்கு உரியதாக்காமல் பூசாரிகளுக்குரிய இடத்தில் தாங்களே அப்பணியினைச் செய்து முடிக்கின்றனர்.' எனக் கூறியுள்ளார்.

மலபார் மண ஆய்வுக்குழுவினர் முன் சாட்சியம் அளித்தவர்களுள் சிலர் தாலிக்கட்டினைக் கல்யாணம் என்றும் மற்றும் சிலர் கல்யாணம் அன்று என்றும் கூறியுள்ளனர். இதனைப் போலிக் கலியாணம், கேலிக்கலியாணம், ஒப்புக்கான கலியாணம், முறையான கலியாணம், கற்பனைக் கலியாணம், கேவலக் கலியாணம், புனிதக் கலியாணம், கலியாணத்தின் முன்னோடி, பொருளற்ற சடங்கு, வெற்றுச் சடங்கு, கேவலமான நாடகம், முரணான வழக்கம், பணத்தைப் பாழ்படுத்துவது, கடன்காரனாக ஒரு வழி என்றெல்லாம் பலரும் பலவாறு கூறியுள்ளனர். '' ஒரு சிறு சதவீதத்தினர் மட்டும் தாலிக்கட்டு உண்மையிலேயே கலியாணம் தான் என்றும் அது மணமகனுக்கு மணமகளோடு உடலுறவு கொள்ள உரிமை வழங்குகின்றது என்று கூறினாலும் பெரும்பாலானவர்கள் இதனைப் போலியான ஒரு சடங்கு என்றும் இதன் தோற்றம் பற்றித் தற்பொழுது சரியான விளக்கம் தர இயலவில்லை என்றும் கூறியுள்ளனர். மற்றொரு பகுதியினர் குழுவினரின் தலைவர் (சர்.டி.முத்துசாமி ஐயர்) ஏற்றுக் கொண்டதாக எது எப்படியாயினும் உடலுறவு மேற்கொள்வதற்கு முன்னோடியாக அமையும் இன்றியமையாத சாதிச் சடங்கு நிகழ்ச்சியாகும் இது என விளக்கியுள்ளனர்'' என அந்த ஆய்வுக்குழு அறிக்கை தெரிவிக்கின்றது.

அண்மையில் வெளியான ஒரு குறிப்பில் திரு கே. கண்ணன் நாயர் எழுதியுள்ளதாவது*: ''அரசுப்பணியில் இருக்கும் நாயர் அனைவரும் தங்களுடைய மகள் அல்லது உடன்பிறந்தோர் மகளின் கட்டுக்கலியாணத்துக்கு விடுப்பு வேண்டும் என விண்ணப்பிக்கும் போது விண்ணப்பத்தில் சிறுமியின் 'கலியாணத்திற்குச்' செல்ல என்று குறிப்பிடுகின்றனர். நாயர் குடும்பங்களைச் சேர்ந்த பெருமக்கள் அனுப்பும் அழைப்பிதழ்களிலும் இச் சடங்கு கலியாணம் என்றே குறிப்பிடப்படுகின்றது. இச் சடங்கு ஒருத்தியை ஒருவனுக்கு மணமுடிக்க நடத்தப்படும் நிச்சயதார்த்தச் சடங்கு அன்று. பிராமணர்களின் செல்வாக்குக் காரணமாகத் திருமணத்திற்கு முன் நிகழ்த்தப்பட வேண்டும் என அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட ஒரு புனிதக் கிரியையாக இருந்து வருகின்றது. பொதுவழக்கில் கூறப்படுவது போல ஒரு சிறுமியினை மணம் செய்து கொள்ளும் தகுதிக்குரிய அம்மாவாக இது உயர்த்துகின்றது. தாலிகட்டிய அம்மா ஆயிட்டே என்று தாலிகட்டுச் சடங்கு நடத்தி முடிக்கப்பட்ட ஒரு சிறுமியைப் பார்த்துச் சொல்லுதல் பொதுவழக்கு.''

*மலபார் காலாண்டு ரெவியூ VII 3, 1908, (Malabar Quart Review, VII, 3, 1908.
@ முந்துநூல் (Opp. Cit)

தாம் திரட்டிய சான்றுகளின் அடிப்படையில் திரு எல். மூர். தாலிக்கட்டுப் பற்றித் தொகுத்துரைப்பதாவது :[8] "பதினாறாம் நூற்றாண்டு தொடங்கிப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை மருமக்கள் தாய உரிமை முறையினைப் பேணி வந்த குடும்பத்தினரிடையே ஆண் பெண் உறவுகள் எண்ணிப் பார்க்கக்கூட இயலாத வகையில் நெகிழ்ச்சியுடையனவாக இருந்தன என்பதில் ஐயமேதும் இல்லை. பிராமணர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தாலிக்கட்டு கலியாணம் இந்த நிலைமையினைச் சீராக்க எவ்வகையிலும் உதவவில்லை. சொல்லப்போனால் போலியான இத்தகைய சடங்கிற்குச் சமய ஒப்புதலைத் தந்த காரணத்தால் அது நிலைமையினை மேலும் சீர்கேட்டிற்கு உள்ளாக்கியது எனலாம். இது வேறு இடங்களில் தாழ்ந்த சாதியார் சிலர் சிறுமியரைப் பரத்தையராகத் தொழிலில் ஈடுபடுத்துவதற்கான உடன்பாட்டினைப் பெற உதவும் வகையில் போலித்தனமாக மேற்கொள்ளும் சடங்கினைப் பெரிதும் ஒத்ததாக அமைந்து விடுவது வருந்துவதற்கு உரியது. ஆண்டுகள் செல்லச் செல்லப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கேரள மகாத்மியம், கேரளோற்பத்தி போன்று நம்பூத்ரிகளால் எழுதப்பட்ட புனைகதைகளின் வாயிலாக நாயர்கள் நம்பூத்ரிகளின் காம இச்சைக்குத் தெய்வ சம்பந்தமான நீதிப்படி உள்ளாக வேண்டியதான ஏற்பாடு நிலைநிறுத்தப்பட்டு விட்டது. நாயர்களுள் உயர் வகுப்பார் இவ்வாறான இழி வழக்கினுக்குக் எதிராகத் கிளர்ந்தெழுந்ததன் பயனாகச் சிறப்பாக வடக்கு மலபாரில் தோன்றிய தரவாடைச் சேர்ந்த காரணவனுடைய உடன்பாட்டுடன் வைத்துக் கொள்கின்ற சம்பந்தம் என்ற புது முறியலான , ஓரளவு முறைபடுத்தப்பட்டதான உறவு முறையாக இது உள்ளது. ஐரோப்பிய எழுத்தாளர்களுடைய குறிப்புகள் பலவற்றுள்ளும் இம்முறை பற்றி ஏதும் கூறப்படாததால் கி.பி. 1550 முதல் 1800 வரை இந்தப் புதுமுறி ஏற்பாட்டினை ஒத்ததான எதுவும் மலபாரில் வழக்கில் இருந்ததாகக் தெரியவில்லை என்பதனை உறுதிப்படத் துணியலாம் என நான் நினைக்கின்றேன்." 1896 -ஆம் ஆண்டில் சென்னை அரசு இயற்றிய சட்டம் நான்கின்படி சம்பந்தம் என்பது தாங்களோ தங்களுள் ஒருவரோ சேர்ந்துள்ளதான சாதியல் வழக்கில் உள்ள முறைப்படி கணவன் மனைவியாக பாவித்து உடலுறவு கொண்டவர்களாக நடந்து கொள்வதற்கான உடன்படிக்கையாகும் என விளக்கம் தருகின்றது.

மலபார் மண முறைகள் பற்றிய ஆய்வுக் குழுவின் முன் திரு சந்துமேனன் சம்பந்தம் பற்றித் தந்துள்ள சாட்சியம் பற்றிய விவரம் வருமாறு:- "புதுமுறி, வஸ்தரதானம், உழம்பொறுக்குக, விதாரம்கயருக

முதலியன இவை வழங்கும் வட்டாரங்களுக்கு அப்பால் மற்றவர்களால் புரிந்து கொள்ள இயலாதனவாயினும் சம்பந்தம் தொடங்குக என்ற தொடர் உணர்த்துவது என்ன என்பதனைப் புரிந்து கொள்ள முடியாத மலையாளி எவரும் இருக்க மாட்டார். மணம் செய்து கொள்ளுதல் என்ற பொருளினதான இத்தொடர் கேரளம் எங்கும் அனைவராலும் சரியாகவே புரிந்து கொள்ளப்படுகின்றது. மருமக்கள் தாயத்தைப் பின்பற்றும் நாயர்களுக்கிடையே சம்பந்தம் என்பதே திருமணத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். (சம்பந்தக்காரன் என்பது தற்போது கணவனைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் பொதுச் சொல்லாக உள்ளது). நடப்புக்களைக் கவனமாகவும் ஆழ்ந்தும் ஆராய்வோமாயின் கேரளம் முழுவதிலும் சம்பந்தம் சடங்கின் நடைமுறை பெரும்பாலும் ஒன்றுபோலவே இருக்கக் காணலாம். திருமணத்தைக் குறிக்க வட்டாரத்திற்கு வட்டாரம் வேறு வேறு பெயர்கள் இருப்பதைப் போல இந்தச் சடங்கும் வட்டாரத்திற்கு வட்டாரம் சில வேறுபாடுகளைக் கொண்டதாக உள்ளது. எனினும் இதன் பொதுப் பண்புகள் ஒன்று போன்றனவே. நிச்சயதார்த்ததிற்கு முன் மணமகள் மணமகன் ஆகியோருடைய சாதகங்களின் பொருத்தம் பார்த்தல், சடங்குக்கான நல்ல நாள் குறித்தல், முகூர்த்த நேரம், பிராமணர்களுக்குத் தானம் வழங்குதல், அறுசுவை விருந்து, மணமகனும் மணமகளும் பார்த்துக் கொள்ளுதல் ஆகியன கேரளத்தில் நல்ல முறையில் நடத்தப்படும் எல்லாச் சம்பந்தங்களிலும் ஒன்று போலவே நிகழ்கின்றன. மதிப்பிற்குரிய நாயர்களின் சம்பந்தங்கள் அனைத்திலும் மேலே என்னால் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் நிச்சயம் இடம்பெறும் என்று நான் கூறியதாக இதனை எடுத்துக் கொள்ளுதல் கூடாது. நாட்டு வழக்கப்படி சம்பந்தம் செய்து கொள்ள விரும்புபவர்கள் மேற்கூறிய அனைத்து நிகழ்ச்சிகளையும் நடத்த வேண்டும் என நான் கூறுவேன். வட்டாரத்திற்கு வட்டாரம் சம்பந்தச் சடங்குகள் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதனை இப்பொழுது சுருக்கமாகக் கூறுவதோடு தென் மலபாரில் சம்பந்தம் சடங்குகளுக்கு உரிய சில தனித்த வழக்கங்களையும் கூறுவேன். வடக்கு மலபாரில் நடக்கும் புதுமுறி அல்லது வஸ்திரதானம் பற்றி முதலில் விளக்கி மற்ற முறைகள் எவ்வாறு அதிலிருந்து வேறுபடுகின்றன என்பதனைப் பின்னர் விளக்குவேன். எல்லா வகையான சம்பந்தங்களுள்ளும் புதுமுறி முறையே புனிதமானதும் வட மலபார் மக்களால் மிகுதியும் விரும்பி மேற்கொள்ளப்படுவதும்ஆகும். புதுமுறி முறையிலான சம்பந்தங்கள் அனைத்திலும் முதலில் மணமக்களின் சாதகங்களில் பொருத்தத்தினை ஒரு சோதிடன் கணித்துக் கூறுவான். இது மணமகன் இல்லத்தில்

மணமகள், மணமகன் ஆகிய இருவருடைய உறவினர்களின் முன்னிலையிலும் நிகழும். சாதகங்களின் பொருத்தத்தைக் கணித்த பின் சோதிடன் அச்சாதகங்களிடையேயான பொருத்தம் பற்றிய தன் கருத்தை ஒரு பனையோலையில் எழுதி மணமகன் உறவினர்களிடம் தருவான். அச் சாதகங்கள் பொருந்துமானால் மணத்திற்கான நாளினையும் அப்பொழுதே முடிவு செய்து அந்த நாள் பற்றிய விவரத்தை இரண்டு பனையோலைகளில் எழுதி ஒன்றினை மணமகள் குடும்பத்தைச் சேர்ந்த காரணவனிடமும் மற்றதை மணமகன் உறவினர்களிடமும் தருவான். அதன்பின் சோதிடனுக்கும் மணமகன் வீட்டாருக்கும் மணமகள் இல்லத்தில் விருந்திடுவர். சோதிடனுக்கு வேட்டியோ தொகையோ அன்பளிப்பாக வழங்கப்படும். வடமலபாரில் எங்கும் நிகழ்த்தப்படும் தொடக்க நிகழ்ச்சியான புதுமுறி குறித்தல் என்பது தென் மலபாரில் வழக்கில் இல்லை. புதுமுறிக்காக்க் குறிக்கப்பட்ட நாளுக்கு மூன்று அல்லது நான்கு நாள்கள் முன்னதாக மணமகன் தன் குடும்பத்தைச் சேர்ந்த காரணவனிடமும் பெரியவர்களிடமும் மணப்பதற்கான முறையான அனுமதி பெறச்செல்வான். அது சமயம் மணமகன் அவர்களுக்கு வெற்றிலை பாக்கு வழங்கி மணத்திற்கான அவர்களுடைய அனுமதியினைப் பெறுவான். புதுமுறிக்காகக் குறிக்கப்பட்ட நாளன்று பொழுது விழுந்தபின் மணமகன் தன் நண்பர்கள் பலருடன் மணமகள் இல்லம் செல்வான். ஊர்வலமாகச் செல்லும் அவனை மணமகள் வீட்டார் தங்கள் வீட்டு வாயிலில் வரவேற்று மணமகன் குழுவினருக்கென அமைக்கப்பட்டுள்ள இருக்கைகள் உள்ள தெக்கிணி (வீட்டின் தென்பகுதி) க்கு அழைத்துச் செல்வர். மணமகன் அங்கு வந்து கூடியுள்ள பிராமணர்களுக்குத் தானம் வழங்குவான். அதன்பின் அனைவருக்கும் அறுசுவை விருந்திடுவர். இச் சமயம் சோதிடன் அங்கு வந்து முகூர்த்தத்திற்காகக் குறிக்கப்பட்டுள்ள நல்ல நேரம் பற்றி அறிவிப்பான். அதனை முறைப்படி அறிவிக்கும் அவன் அதற்கான தொகையைப் பெறுவான். அதன்பின் மணமகன் தோழர்களுள் ஒருவன் மணமகனை வீட்டின் முக்கியப் பகுதியில் உள்ள பதின்கட்டத்திற்கு அழைத்துச் செல்வான். மணமகனைச் சேர்ந்தவர்கள் தங்களுடன் புதிய துணிகள், வெற்றிலை பாக்கு ஆகியனவற்றைக் கொண்டு வந்திருப்பர். அந்தத் துணிகளை முக்கியமான குடும்ப நிகழ்ச்சிகள் நடைபெறும் வீட்டின் மேற்குப் பக்கத்தில் (பதின்ட்ட என்ற அறையில்) வைப்பர். அந்த அறையினை அலங்கரித்து அப்போதைக்குப் படுக்கை அறையாகப் பயன்படும் படி மாற்றியிருப்பர். அந்த அறையில் விளக்குகள் பல ஏற்றி வைக்கப்பட்டிருப்பதோடு மங்கல நிகழ்ச்சியினைக் குறிக்கும் வகையில் அஷ்டமங்கலப் பொருள்களும் வைக்கப்பட்டிருக்கும். அரிசி, நெல்,

தென்னங்குருத்து, அம்பு, முகம்பார்க்கும் கண்ணாடி, துவைத்த தூய துணி, எரியும்நெருப்பு, செப்பு ஆகியனவே அஷ்டமங்கலப் பொருள்கள். மணமகன் அந்த அறையில் நுழையும்போது அவை அங்கே வைக்கப்பட்டிருக்கும். மணமகன் மாப்பிள்ளைத் தோழனுடன் அந்த அறையின் கிழக்கு வாசல் வழியே அதனுள் நுழைவான். மணமகள் சிறந்த ஆடை அணிகளால் தன்னை அலங்கரித்துக் கொண்டவளாக மேற்குப் பக்க வாசல் வழியே தன் அத்தை அல்லது குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணியுடன் அந்த அறையினுள் நுழைவாள். மணமகள் அஷ்டமங்கலம் விளக்கு முதலியன தன் முன் இருக்கும்படியாகக் கிழக்குத் திசையினைப் பார்த்தபடி நிற்பாள். மணமகன் தோழன் அப்போது மணமகன் கையில் சில புதிய துணிகளைத் தருவான். அவன் அவற்றை மணமகள் கரங்களில் தருவான். இது முடிந்தவுடன் மணமகளோடு வந்த முதியவள் அரிசியினை விளக்கின் மீதும் மணமக்கள் தோள், தலை ஆகியவற்றின் மீது தூவுவாள். உடனே மணமகன் வேறொரு கடமையினைச் செய்ய அங்கிருந்து வெளியேறுவான். வீட்டின் தெற்குக் கூடத்தில் கூடியுள்ள தன் உறவினர்களான பெரியோர்களுக்கும் நண்பர்களுக்கும் பணியாரம், வெற்றிலை பாக்கு ஆகியனவற்றை வழங்குவான். கூடியுள்ள மற்றவர்களுக்கும் வெற்றிலை பாக்கு வழங்கப்படும். விருந்தினர்கள் விடைபெற்ற பின் மணமகன் மணமகளுடன் படுக்கை அறைக்குச் செல்வான். மறு நாள் காலையில் வெற்றிலைக் கட்டு அல்லது சள்காரம் எனப்படும் சடங்கு தொடங்கும். அதன்பின் மணமகனின் பெண் உறவினர்கள் மணமகளை அவள் கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். அங்கு இதனைச் சிறப்பிக்க விருந்து நடைபெறும். உழம் பொறுக்குக அல்லது விதாரம்கயரல் எனப்படும் தனிப்பட்ட முறையிலான மணமுறை வடமலபாருக்கு உரியது. மேலே கூறியனவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது புதுமுறிச் சடங்கு அதிகச் செலவு செய்ய வேண்டிய சடங்கு என்பது தெளிவாகும். இதனால் பலர் செலவு அதிகம் பிடிக்காத உழம்பொறுக்குக அல்லது விதாரம் கயரல் முறையினைக் பின்பற்றுகின்றனர். இதுவும் புதுமுறிச் சடங்கினைப் பெரிதும் ஒத்ததுதான் எனினும் இது சிறிய அளவில் நிகழ்த்தப்படுவது. இச்சடங்கில் சேலை வழங்கும் நிகழ்ச்சி இடம் பெறுதல் இல்லை. இம்முறையில் விருந்து மணமக்கள் உறவினர்களுக்கு மட்டுமே தரப்படும். இம்முறைப்படி மணம்செய்து கொண்டவன் தான் மனைவியின் இல்லம் சென்று வரலாமேயன்றி மனைவியினைப் புதுமுறி முறைப்படி மீண்டும் மணம் செய்து கொள்ளுமுன் தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்ல முடியாது. இந்த விதியினை வட

மலபாரில் கண்டிப்புடன் பின்பற்றுகின்றனர். உழம்பொறுக்குக முறையில் கணவன் மனைவியராக ஆனவர்கள் அம்மணமுறை உறவின் வழிப்பிறந்த பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களான பின் பதினைந்து இருபது ஆண்டுகளுக்குப் பின் புதுமுறிச் சடங்கு செய்து கொண்டு கணவன் மனைவியராகக் கணவன் வீடு சென்றதனை நான் கண்டுள்ளேன். தென் மலபார் சம்பந்தம் சடங்கிலும் பாலக்காட்டுப் பக்கத்துக் கிடக்கிக் கலியாணமும் புதுமுறி கல்யாண முறையினைப் பெரிதும் ஒத்தன. இவற்றில் சேலைகள் வழங்கும் நிகழ்ச்சி இடம் பெறாது . அதற்குப் பதிலாகப் பணமாக வழங்குவர். மற்றச் சடங்குகள் கிட்டத்தட்ட ஒன்று போன்றனவே. தென்மலபாரில் சம்பந்தச் சடங்கு முடிந்தவுடன் கணவன் மனைவியினைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் பழக்கம் இல்லையாதலால் அங்குச் சள்காரம் சடங்கும் நிகழ்த்தப்படுதல் இல்லை.

அகத்துச்சரணம் அல்லது அகத்தப்பரீட்சா எனப்படும் பிரிவினரிடையே நிகழும் சம்பந்தம் தொடர்பாகத் திரு. சி.பி. ராமன் மேனோன் கூறியுள்ள குறிப்புகள் தொடர்பாகத் திரு பாவ்செட் கூறுவது வருமாறு:- ''எனக்குத் தகவல் தந்தவர், ஒருவன் முப்பது வயதாகும் வரை சம்பந்தம் வைத்துக் கொள்ளக்கூடாது என்ற விதியுள்ளதாகக் கூறினார். அனைத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்துவரும் இன்றைய சூழலில் ஆண்கள் அதற்கும் குறைந்த வயதிலேயே அடிக்கடி சம்பந்தம் நிகழ்த்தக் காண்கிறோம். தென் மலபாரைவிடப் பழைய பழக்க வழக்கங்களை இறுக்கமாகக் கடைபிடிக்கும்வடமலபாரில் ஒருவன் தனக்கு இருபத்தேழு வயதாகும் முன் சம்பந்தம் செய்து கொள்வது அரிதாகவே நிகழ்கின்றது.'' திரு ராமன் மேனோன் எழுதுவதாவது:- ''காரணவனும் அவன் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் மணமகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். அத்தகவல் மூன்றாவது மனிதர் ஒருவர் வழியாக மணமகனுக்குத் தெரிவிக்கப்படுகிறது. இது பற்றி அவர்கள் மணமகனோடு நேரில் பேசத் துணிவதில்லை. மணமகன் தன் உடன்பாட்டினைத் தெரிவிக்கின்றான். மணமகள் வீட்டாரிடம் இதனைக் கூறி ஆலோசித்த பின் சோதிடருக்குச் சொல்லி அனுப்புவர். அவன் மணமக்களின் சாதகங்களின் பொருத்தம் பார்ப்பான். பெரும்பாலும் அவை பொருத்தமுடையவையாகவே இருக்கும். சோதிடன் சம்பந்தம் சடங்கினுக்கான நாளினைக் குறிப்பான். அச் சடங்கிற்குச் சில நாள்கள் முன்பு மணமகன் வீட்டைச் சேர்ந்த பெண்கள் இரண்டு மூன்று பேர் மணமகள் இல்லம் சென்று தாங்கள் அங்கு வரப்போவது பற்றி முன்கூட்டியே சொல்லி வருவர். அங்கு அவர்களுக்கு இனிப்புப்

பலகாரங்களோடு விருந்திடுவர். அவர்கள் விடைபெறும்போது மணமகள் குடும்பத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவியிடம் மணமகன் பெயரைச் சொல்லி அவன் மணமகள் பெயரைச் சொல்லி அவளோடு சம்பந்தம் வைத்துக்கொள்ள விரும்புவதாகவும் அந்தச் சடங்கிற்கு ஏற்றநாள் எதுவென்றும் கூறுவர். இவர்களுடைய இந்த விருப்பத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வதாக மணமகள் வீட்டுக் குடும்பத்தலைவி கூறுவாள். இவர்கள் தங்கள் இல்லம் திரும்புவர். மணமகள் வீட்டாரும் மணமகன் வீட்டாரும் விருந்துக்கான ஏற்பாடுகளைச் செய்வர். மணமகள் வீட்டிற்கு உறவினர்கள் அனைவரும் அழைக்கப்படுவர். மாலையில் ஏழு அல்லது எட்டு மணியளவில் உணவு உண்டபின் அவர்கள் மணமகனை மணமகள் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். வேலைக்காரர்கள் அவர்களோடு நூறு முதல் இருநூறு வெற்றிலை, பாக்கு, புகையிலை ஆகியனவற்றை மணமகள் வீட்டு விருந்தினருக்குத் தர உடன் எடுத்து வருவர். மணமகள் வீட்டிற்கு வந்து சற்று நேரம் அமர்ந்திருந்த பின் உணவு உண்ட பிறகு வெற்றிலை பாக்கு முதலியன தாலங்களில் வைக்கப்பட்டுள்ள அறைக்குச் செல்வர். இனிப்புப் பலகாரங்களைத் தின்று வெற்றிலை பாக்குப் போட்ட பின் அனைவரும் மணநிகழ்ச்சி நடக்கும் அறைக்குச்செல்வர். அங்கு மணமகளோடு கூட மணமகள் இல்லத்தைச் சேர்ந்த பெண்கள் வந்து கூடியிருப்பர். அங்கு மணமகள் வெட்கப்பட்டவளாக மற்றப் பெண்களின் பின்னால் மறைந்தவளாக இருப்பாள். அங்கு மணமகனைச் சேர்ந்தவர்கள் மீண்டும்வெற்றிலை பாக்குப் போட்டபடி மணமகள் வீட்டுப் பெண்களோடு உரையாடுவர். சற்று நேரத்திற்குப் பின் மணமக்களை வாழ்த்தியபடி அங்கிருந்து வெளியேறுவர். அதன்பின் பெண்களும் ஒவ்வொருவராக மணமக்களை மட்டும்தனியே விட்டவர்களாக வெளியேறுவர். அவர்களுள் ஒருத்தி வெளியே இருந்து அந்த அறைக்கதவைச் சாத்திச் செல்வாள். இச் சடங்கின் போது பட்டர் பிராமணர்கள் வந்திருந்து இரண்டு முதல் நான்கு அணாவரை மணமகனிடமிருந்து சிலபோது மணமகளிடமிருந்தும் தானம் பெறுதல் வழக்கம். ஒரு சிலர் மட்டும் மணமக்கள் உள்ள அறையில் சென்று இதனைப் பெறுவர். மற்றவர்களுக்கு அது வெளியே வழங்கப்படும். தொலைவிலிருந்து மணமகன் வீட்டார் வந்திருப்பார்களாயின் மணமகனோடு வந்தவர்களுக்கும் அங்கேயே தூங்க வசதி செய்து தருவர். (நாயர் இல்லங்களில் ஆண்கள், பெண்கள் படுத்து உறங்குவதற்கான அறைகள் இல்லத்தின் எதிரெதிர் கோடிகளில் இருக்கும்) மறுநாள் காலைப்பொழுது புலரும் போது மணமகன் தலையணையின் அடியில் 8,16,32,64

ரூபாய்களைத் தன் வசதிக்கு ஏற்றபடி வைத்தவனாகத் தன்னோடு வந்தவர்களுடன் அங்கிருந்து புறப்பட்டுச் செல்வான். இத்தொகை சடங்கு நிகழ்ச்சிக்காகப் பெண்வீட்டார் செலவிட்டதனை ஈடுபடுத்துவதற்காகத் தரப்படுவதாகும். இத்துடன் சம்பந்தம் சடங்கு முழுமை பெறுகின்றது. மணமகள் தனது தரவாடுடனேயே இருந்து வருவாள். மணமகன் அவளிடம் மாலையில் வந்தவனாகக் காலையில் புறப்பட்டுச் செல்வான். மணமகன் குடும்பத் தலைவி உடுத்த பாவுமுண்டு, தொர்த்து முண்டு எனப்படும் வேட்டியையும் துண்டினையும் ஆறு மாதத்திற்கு மணமகள் உபயோகத்திற்கான எண்ணெயினையும் மணமகளுக்கு அனுப்பி வைப்பான். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அவன் இவ்வாறு அனுப்பியபடி இருப்பான். ஓணம், விசு, திருவாதிரைத் திருவிழாச் சமயங்களில் வேட்டி, துண்டு, எண்ணெய் ஆகியவற்றோடு சிறிது தொகை, வெற்றிலை பாக்கு, புகையிலை ஆகியனவற்றையும் உடன் அனுப்புவான். அனுப்பப்படும் தொகை 4,8,16,32,64 ரூபாய்களாக இருக்க வேண்டும். அதிகப்படியான தொகை மிக அரிதாகவே அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு நெடு நாட்களாகும் முன் ஆண்மகன் வீட்டைச் சேர்ந்த பெண்கள் அவளைத் தாங்கள் இன்னமும் பார்க்கவில்லையெனவும் பார்க்க விரும்புவதாகவும் கூறுவர். மீண்டும் சோதிடனை அழைத்து நாள் குறிப்பர். அவன் குறித்துத் தரும் நாளில் இரண்டு மூன்று பெண்கள் அம்மாயியின் இல்லம் (பெண்ணின் இல்லம்) செல்வர். அங்கு விருந்து உண்டபின் பெண்ணைத் தங்களோடு அழைத்து வருவர். அவள் வலக்காலை முதலில் வைத்துத் தன் கணவன் தரவாடு இல்லத்து வாசற்படியினைக் கடப்பாள். இரண்டு, மூன்று பெண்கள் தட்டில் விளக்கினை வைத்து ஆரத்தி எடுத்து வரவேற்று இல்லத்தின் நாறு கட்டிற்கு அழைத்துச் செல்வர். அங்குப் பாயில் அவளை அமர்த்தி அவள் முன் எரியும் விளக்கு, ஒரு நாழி அரிசி, வாழைப்பழங்கள் ஆகியவற்றை வைப்பர். சிறுமி ஒருத்தி வாழைப்பழத்தில் கொஞ்சத்தை எடுத்து அம்மாயியின் வாயில் இடுவாள். இச்சிறிய சடங்கு மதுரம் தருதல் எனப்படும். தன் கணவன் வீட்டில் சில நாள்கள் தங்கி இருக்கும் அவளுக்கு வளையல்கள், மோதிரங்கள், துணிமணிகள் ஆகியனவற்றை அவள் கணவன் வீட்டுப் பெண்மணிகள் அன்பளிப்பாகத் தந்து அவளை அவள் பிறந்தகத்திற்கு அனுப்பி வைப்பர். அதன்பின் அவள் விருப்பம் போல் நாள் நட்சத்திரம் பாராது தன் கணவன் வீட்டிற்கு வந்து போகலாம். பல பெண்களை உடைய தரவாடில் அம்மாயி எனப்படும் புதிதாக வந்து சேர்பவள் தரவாடினைச் சேர்ந்த பெண்களால் நல்லெண்ணத்தோடு வரவேற்கப்படுதல் அரிது. தென் மலபாரில் அவள் அரிதாகவே த

கணவன் வீட்டாரோடு வந்து வாழ்வாள். அவள் காரணவனுடைய மனைவியாக இருப்பாளாகில் அவளுக்கு அனைத்தும் நல்லபடியாக நடக்க வாய்ப்பு உண்டு. 'அம்மாயி அம்மாவினை அம்மிக் கல்லின் மேல் வைத்து குழவிக்கல்லால் அரையுங்கள்' என்ற பழமொழியும் இதனாலேயே வழக்கில் உள்ளது.'' திரு. பாவ் செட் கலந்து கொண்ட ஒரு சம்பந்தம் சடங்கில் கேக், பழரச மது ஆகியன விருந்தினருக்கு வழங்கப்பட்டதோடு மணமகளுக்கு மோதிரமும் தரப்பட்டதாக அவர் குறித்துள்ளார்.

சம்பந்தச் சடங்கு பற்றித் திரு என். சுப்ரமணிய அய்யர் திருவாங்கூரிலிருந்து எழுதியுள்ளதாவது: ''திருவாங்கூரின் பல பகுதிகளிலும் இது குணதோஷம் (நல்ல வழியிலோ கெட்ட வழியிலோ சேருதல்). வஸ்திரதானம் அல்லது புடவை கொடுக்க, உழம்பொறுக்கல் (தனது முறைக்குக் காத்திருத்தல்) என்பன போலப் பல்வேறு பெயர்களால் வழங்கப்படுகிறது. சில குடும்பங்களில் இது ஊரறிய நடக்கும் சடங்காக இல்லாமல் தனிப்பட்ட முறையிலே இரகசியமான உடன்பாடு போல மேற்கொள்ளப்படுகிறது. குறப்பிட்ட நாளன்று இரவில் மணமகனும் அவன் தோழர்களும் மணமகள் இல்லத்தில் கூடுவர். கூடியுள்ள உறவினர்கள் முன்னிலையில் மணமகன் மணமகளுக்கு வெளுக்கப்படாத சில காடாத் துணிகளைத் தருவான். நான்குத் துண்டுத் துணிகள் தரப்படவேண்டும் என்பது வழக்கமாக உள்ளது. இச் சமயத்தில் மணமகள் உறவினர்களுக்கும் அவள் வீட்டு வேலைக்காரர்களுக்கும் கூடத்துணி வழங்குவர். இத் துணிகளைப் பெற்றுக் கொள்ளச் சிறுமி தன் தாயாரிடமும் தாய்மாமனிடம் அனுமதி வேண்டுவாள். இரவு உணவுக்குப் பின் வெற்றிலை பாக்குப் பெற்றவர்களாகக் கூடியுள்ளவர்கள் விடைபெற்றுச் செல்வர். மணமக்கள் உறவுகொள்ள வேறு ஒரு நாள் குறிக்கப்படும். அன்று மணமகன் சில தோழர்களுடன் வெற்றிலை பாக்கினை உடன் எடுத்தவனாக மணமகள் இல்லத்திற்குச் செல்வான். விருந்துக்குப் பின் அவன் தோழர்கள் விடைபெறுவர்.'' 1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பில் சம்பந்தம் சடங்கு படுக்கை அறைச் சடங்கு என்ற பொருளில் கிடக்கிறது எனக் குறிக்கப்படுகிறது. சிறுமியர் பூப்படைதலைப் பற்றி அதே அறிக்கையில் பின்வரும் விவரம் தரப்பட்டுள்ளது: ''திறந்துகுளிச் சடங்கு ஒரு சிறுமி பருவமடைந்து விட்டாள் என்பதனை யாவரும் அறியத் தெரியப்படுத்தும் சடங்காகும். ஒருத்தி பூப்படைந்தவுடன் விளக்கு எரியும் ஓர் அறையில் தனியே அமர்த்தப்படுவாள். தென்னம்பாளையோடு கூடிய ஒரு பித்தளைப் பாத்திரம் அங்கே

வைக்கப்படும். அவள் தன்னோடு கைப்பிடியுடன் கூடிய வால் கண்ணாடி எனப்படும் ஒரு முகம்பார்க்கும் கண்ணாடியினை வைத்திருக்க வேண்டும். இந்தச் சடங்கு நடப்பதைப் பெண்கள் ஒரு சேர எழுப்பும் குலவை ஆரவாரத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். பக்கத்து வீட்டுப் பெண்களும் நண்பர் உறவினர் வீட்டுப் பெண்களும் அவளைப் பார்க்க வருவர். நெருங்கிய உறவினர்கள் அவளுக்குத் துணி வழங்குவர். மூன்றாம் நாள் ஊரார், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்குப் பாயசத்தோடு பகல் உணவு அளிக்கப்படும். நான்காம் நாள் அதிகாலையில் மாரான்கள் அல்லது வேலன்கள் வருவர். அச் சிறுமிக்கு எண்ணெய் பூசித் தலையிலும் இடையிலும்தென்னம்பாளைகளை அணிவிப்பர். அவளையொத்த கன்னியரோடு அந்த அறையிலிருந்து அவளை வெளியே அழைத்து வரும்போது வேலன்கள் சில பாடல்களைப் பாடுவர். பின் அவர்கள் குளத்தை நோக்கிச் செல்வர். அங்கு அச்சிறுமி வேலன் தரும் துவைத்த துணியினை உடுத்தியவளாகக் குளிப்பாள். அவள் குளித்து முடித்த பின் வேலன் மீண்டும் பாடல்கள் பாடுவான். அன்று பிற்பகல் அச் சிறுமியினை அலங்கரிக்கப்பட்ட பந்தலுக்குப் பெண்கள் அழைத்து வருவர். வேலன் அப்பொழுது தூரத்தில் நின்றவனாக மீண்டும் பாடுவான். வழக்கமான வெற்றிலை பாக்கு, சந்தனம், மல்லிகைப் பூ ஆகியன வழங்குவதோடு சடங்கு ஒரு முடிவுக்கு வரும். வேலன் பாட்டுப் பாடும்போது அந்த ஆரவாரத்திற்கிடையே உறவினர்களும் நண்பர்களுமான ஊரைச் சேர்ந்தவர்களின் மனைவிமார்கள் ஒவ்வொருவரும் ஒரு சிறு துண்டினை வேலனுக்கு அன்பளிப்பாகத் தருவர். அவர்களுக்கு ஒரு சிறு தொகை, அரிசி, வெற்றிலை முதலியனவும் வழங்கப்படும். அதன்பின் விருந்தினர்களுக்கு விருந்தளிப்பர். சிலவிடங்களில் நான்காம் நாள் அந்தச் சிறுமியினைத் தனித்த ஒரு வீட்டிற்கு அழைத்துச்சென்று அவளைக் குளிக்கச் செய்து பின்னர் கொட்டுமுழக்குடன் ஊர்வலமாக அவள் வீட்டிற்கு அழைத்து வருவர். வட வட்டங்களில் வேலன் இரவில் பாடுவான். நான்காம் நாள் நடத்தப்படும் சடங்கு கட்டாயமானதாகும். தென் வட்டங்களில் அதனை வசதியான ஒரு நாளுக்குத் தள்ளி வைப்பர். பாட்டோடு கூடிய இந்தச் சடங்கு நடத்தி முடியும் முன் அச்சிறுமி வீட்டை வீட்டு வெளியே செல்லவோ கோயில்களில் நுழையவோ அனுமதிக்கப்படுவதில்லை."

1896 மலபார் மணச் சட்டத்தில் "அதில் கூறப்பட்டுள்ள முறையில் ஒரு சம்பந்தம் பதியப்படுமானால் அதற்குத் திருமணத்திற்கான ஒரு தகுதி வழங்கப்படும். மனைவியும் குழந்தைகளும் கணவனிடமிருந்தும் தந்தையிடமிருந்தும் வாழ்க்கை

நடத்தத் தேவையானவற்றைப் பெறும் உரிமையோடு அவன் சுயமாகச் சம்பாதித்த உடைமைகளிலும் அவன் அந்தச் சம்பந்தத்தை முறித்துக்கொள்ளாமல் இறப்பானாகில் சரிபாதி பெற உரிமை உடையவர்களாவர். இச் சம்பந்தம் செல்லுபடியாக இருக்கும் சமயத்தில் அதில் தொடர்புடையவர்கள் வேறொரு சம்பந்தம் வைத்துக்கொள்ளும் உரிமை உடையவரல்லர். சம்பந்தம் வைத்துக் கொண்டுள்ளவர்களுள் ஒருவர் இறக்கும் போது அல்லது உடைமை உரிமை வழக்குமன்றத்தில் முறையிட்டுச் சம்பந்த உறவை முறித்துக்கொள்ளும்போது தான் இவர்கள் வேறு சம்பந்தம் வைத்துக் கொளளத் தகுதியுடையவர்களாவர். இந்தச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட சம்பந்தங்கள் மிகச் சிலவே. ஆண்கள் விருப்பம்போல் தங்கள் சம்பந்தங்களைக் கைவிடும் உரிமையினைத் துறக்க விரும்பாமையே சம்பந்தங்களின் பதிவு குறைவாக இருப்பதற்கான காரணம் ஆகும். சட்டப்படி தங்கள் சம்பந்தத்தைப் பதிந்து கொள்ளும்போது அதனைக் கைவிட்டு வேறு சம்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளும் போது முதல் சம்பந்தத்தின் தொடர்பாக உள்ள மனைவிக்கும் குழந்தைகளுக்கு வாழ்க்கை நடத்தத் தேவையான வைகளைத் தரும் கட்டுக்களுக்குத் தங்களை உள்ளாக்கிக்கொள்ள இவர்கள் விரும்பாமையே காரணமாகும். மலபார் மணமுறை ஆய்வுக்குழு காட்டியுள்ள சான்றுகளின்படி, 'திருமணச் சட்டம் ஒன்று இயற்றப்படுமானால் வடமலபாரிலும் தென் மலபாரின் பெரும்பாலான பகுதிகளிலும் அங்குள்ள வழக்கினை அது சட்டப்படி கட்டுப்படுத்துவதாகும்' அநத வழக்கத்திற்குச் சட்டப்படியான அந்தஸ்தை ஏற்படுத்திக் கொள்ள மக்கள் மன விருப்பம் அற்றவர்களாக இருப்பது ஏன் என்பது தான் புரியவில்லை.''*

1897 முதல் 1904 வரை சம்பந்தங்களைப் பதிவு செய்யப்பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரம் வருமாறு:-

	நாயர்கள்	தியன்	மற்றவர்கள்	மொத்தம்
1897	28	6	2	36
1898	8	2	4	14
1899	8	2	4	14
1900	8	-	9	17
1901	3	-	1	4

* மலபார் மாவட்ட விவரக்குறிப்பு (Gazetteer of Malabar)

1902	-	-	-	-
1903	2	-	-	2
மொத்தம்	57	10	20	87

பெரிய குடும்பத்தைச் சேர்ந்த திருவாங்கூர் நாயர் திருமணம் ஒன்றில் மணவீட்டார் வருகை தந்த இந்துக்களுக்கு மலர்கள், பன்னீர் முதலியன தந்தனர். ஐரோப்பிய யூரேசிய, கிறித்தவ விருந்தினர் களுக்குக் கேக்கும் வைனும் தனியே அமைக்கப்பட்ட ஒரு கூடாரத்தில் வைத்துத் தந்தனர். அரசுத் தலைமைச் செயலர் மணமக்களுக்கு அங்கு வாழ்த்துக் கூறி மது பருகினார்.

நாயர் பெண்கள் கருவுறும் போது நடத்தப்படும் சடங்குகள் தொடர்பான பின்வரும் விவரங்கள் திரு. பாலகிருட்டிண நாயரால் திரு. பாவ்செட்டுக்குத் தரப்பட்டனவாகும்:- ''கருவுற்ற ஒருத்தி சில சடங்குகளை மேற்கொள்ளுதல் வேண்டும். கருவுற்ற ஏழாம் மாதமும் அதன்பின்னர் தொடர்ந்தும் அவள் (வசதிபடைத்த குடும்பத் தினரிடையே) காலையில் குளித்துக் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்தபின் நம்பூத்ரியோ கோயில் பூசாரியோ மந்திரித்துத் தரும் வெண்ணெயினைச் கொஞ்சம் உண்ண வேண்டும். குழந்தை பிறக்கும்வரை இதனைச் செய்து வருவர். புளிகுடி எனப்படுவது மற்றுமொரு முக்கியமான சடங்கு ஆகும். இன்றியமையாததான இச் சடங்கினை ஏழைகள், பணக்காரர் ஆகிய அனைவரும் நடத்தியே ஆக வேண்டும். ஒன்பதாவது மாதத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் இது நிகழ்த்தப்படும். இதற்கான நாளினையும் நேரத்தையும் சோதிடன் குறித்துத் தருவான். தரவாடைச் சேர்ந்த இல்லத்தின் நடுமுற்றத்தில் சடங்கு நாளன்று அதிகாலையில் அம்பசகம் மரக்கிளை ஒன்றை நடுவதுடன் சடங்கு தொடங்கும். முகூர்த்த நேரம் நெருங்கியவுடன் கருவுற்றவள் குளித்து நல்ல உடை அணிந்தபின் வீட்டின் வடக்கிணி பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டுக் கிழக்குப் பார்த்து அமரும்படி கேட்டுக்கொள்ளப்படுவாள். இச் சமயத்தில் வருகை தந்திருக்க வேண்டிய அம்மாயி வீட்டு முற்றத்திற்குச் சென்று நடப்பட்ட மரக்கிளையில் சில இலைகளைப் பிடுங்கி அவற்றைக் கசக்கி ஒரு கிண்ணத்தில் சாறு பிழிவாள். இதனை அவள் கருவுற்றிருப்பவளின் சகோதரனிடம் தருவாள். அதனைப் பெற்றுக் கொள்ளும் அவன் தன் வலக்கை மோதிர விரலில் ஒரு தங்க மோதிரம் அணிந்திருக்க வேண்டுவது இன்றியமையாததாகும். கருவுற்றிருப்பவள் வாய்ப் பக்கத்தைப் பார்த்து இருக்கும் பிசான் கத்தி எனப்படும் நாட்டுக்

கத்தியினை இடக் கையால் பிடித்துக் கொண்டு புளிச் சாற்றினை வலக்கையால் கத்தி வழியாக வழிந்து செல்லுமாறு மூன்று முறை ஊற்றுவான். அது கத்தி வழியாகப் பெண்ணின் வாயினுள் சொட்ட அவள் அதனைக் குடிப்பாள். உடன்பிறந்தவன் இல்லாதவர்களுக்கு நெருங்கிய உறவினரான வேறு யாரேனும் இதனை நிகழ்த்துவர். புளிச் சாற்றினைக் குடித்தபின் கருவுற்றிருப்பவளை அவள் முன் பொட்டலங்களாகக் கட்டி வைக்கப்பட்டிருக்கும் தானியப் பொட்டலங்களுள் ஒன்றினை எடுக்கும்படி கூறுவர். அவள் எடுக்கும் பொட்டலத்தில் இருக்கும் தானியத்தைக் கொண்டு அவளுக்குப் பிறக்கப்போவது ஆணா பெண்ணா என முடிவு செய்வர். கூடியுள்ள உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் விருந்து படைப்பதுடன் இச்சடங்கு முடிவுறும்.'' கருவுற்றிருப்பவளுக்கு நிகழ்த்தப்படும் சடங்குகள் தொடர்பாகத் திரு. என் சுப்பிரமணிய அய்யர் எழுதுவதாவது:- ''புளிகுடி சடங்கு ஏழாம் அல்லது ஒன்பதாம் மாதத்தில் நடத்தப்படும். கருவுற்றிருப்பவளுடைய கணவனே இதற்கான அரிசி, தேங்காய், வாழைப்பழம், ஏழு பாத்திரங்களில் இனிப்புப் பலகாரங்கள் ஆகியனவற்றை வழங்க வேண்டும். உடன் பிறந்தவன் இல்லாத கருவுற்றவளுக்கு மாரான் புளிச்சாற்றினை வாயில் ஊற்றுவான்.'' 1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: ''கருவுற்றவளுக்குக் கொஞ்சம் புளியினையும் பிற புளிப்புப் பொருட்களையும் தருவதே புளிகுடிச் சடங்கு. சிறு புளி உருண்டைகள் ஒரு கத்தியின் முனையின் வைக்கப்பட்டு ஒரு தங்க மோதிரத்தால் கருவுற்றவள் வாயில் விழுமாறு தள்ளிவிடப்படும். பிராமணர்களின் பும்சவனச் சடங்கினை ஒத்த இதனைக் கருவுற்றவளின் உடன்பிறந்தவனோ அவள் தந்தையின் உடன்பிறந்தவளோ நடத்தி வைப்பர். அத்தகைய உறவினர் இல்லாதபோது அவள் கணவனே இதனை நிகழ்த்துவான். பிராமணர்களைப் போல் ஒருத்தி ஒவ்வொரு முறை கருவுறும்போதும் இது நடத்தப்படுதல் இல்லை. முதன்முறை கருவுறும் போது மட்டுமே நடத்தப்படுகின்றது.'' எட்டாம் மாதத்தில் கருப்ப வெளி உழியல் என்ற கண்ணோறு பட்டத்தைப் போக்குவதற்கான சடங்கைக் கணியன் நடத்தி வைப்பான்.

மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் கருவுற்றவள் தொடர்பாக நடத்தப்படும் சடங்குகள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன:- ''கருவுறும் ஒருத்திக்கு முதன் முதல் நடத்தப்படும் சடங்கு புளிகுடி எனப்படும் பிராமணர்களின் பும்சவனச் சடங்கினை ஒத்த சடங்காகும். இதற்கு முன்னும் சில சாதாரணச் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன.

அவை பிராமணர்கள் சில சமயங்களில் நடத்தும் கர்ப்பரட்சண சடங்கினை ஒத்த சடங்காகும். இதனை நடத்துவது கட்டாயமாக விதிக்கப்படவில்லை. சில சமயங்களில் கருவுற்றவளுக்கு ஒரு நம்பூத்ரியினால் உரிய முறையில் மந்திரிக்கப்பட்ட சிறிது வெண்ணெயினை நாள்தோறும் உண்ணக் கொடுத்து வருவர். பாணான்கள் போன்ற தாழ்ந்த சாதியினனான பேயோட்டுபவர்களை அழைத்துச் சில சமயங்களில் பலிக்களம் என்ற சடங்கினை நிகழ்த்துவர். அப்போது அவர்கள் தரையில் வரையும் மந்திரச் சக்கரங்களினுள் கருவுற்றவள் எரியும் திரிகளை இடுவாள். கருவிலிருக்கும் குழந்தையினைத் தீய ஆவிகள் பிடிக்காதிருக்க இசைவற்ற பாடல்களைப் பாடுவர். துடி அல்லது கைத்தாளம் அவர்கள் பாடும் பாடலுக்கு ஏற்ப இசைக்கப்படும். பாடும்போது கருவுற்றவள் மிகவும் பாதிக்கப்படால் அச் சடங்கின் முடிவில் ஒரு சேவலினைப் பலியிடுவர். புளிகுடியினை ஐந்து, ஏழு அல்லது ஒன்பதாம் மாதமாகும்போது நடத்துவதே பெரும்பாலும் வழக்கம். மற்ற எல்லாச் சடங்குகளையும் போல இதற்கும் கிராமத்தைச் சேர்ந்த சோதிடன் நல்ல முகூர்த்த நேரத்தைக் கணித்துத் தருவான். இதற்காகக் கருவுற்றிருப்பவள் உடன்பிறந்தவன் ஒரு புளியங்கொம்பினைக் கொண்டு வரவேண்டும். அவளுடைய இணங்கத்தி* அவனுடன் ஓர் ஐந்து முக தூக்கு விளக்கினை ஏந்திவர அவன் ஒரு வெண்கலக் கிண்ணியுடன் புளிமரத்தினை அடைந்து அதனை மும்முறை வலம் வந்தபின் புளியங்கொம்பினைக் கொண்டு வர வேண்டும். சடங்கு நிகழ்த்தப்பட உள்ள அறையில் (வழக்கமாக வடக்கிணி அறையில் இது நிகழும்) ஒரு பாய், ஐந்து முகங்களையுடைய நிலை விளக்கு, ஒரு பராவில் நிறைய நெல், கணபதி பூசைக்குத் தேவையான பொருள்களான பழங்கள், பழுப்புச்சர்க்கரை, துளசி இலைகள், சந்தனம், அஷ்டமங்கலம் ஆகியன வைக்கப்பட்டிருக்கும். கருவுற்றவளின் உடன் பிறந்தவன் கணபதி பூசை செய்தபின் புளியம் இலைகளை இணங்கத்தியிடம் தருவான். அவள் அதன் சாற்றினைப் பிழிந்து வேறு நான்கு செடிகளின் இலைச் சாற்றோடு கலப்பாள். ஐம்புளி எனப்படும் இவை புளி, கொரக்கபுளி, காட்டுமா,

* இணங்கன் அல்லது எணங்கன் என்பவன் அதே சாதி. உட்பிரிவு அல்லது மணம் செய்து கொள்ள உரிய பிரிவினைச் சேர்ந்தவன். இதனை ஆங்கிலத்தில் குருதியுறவுடையவன்(Kinsman) என மொழிபெயர்க்கின்றனர். இச் சொல் அது தரும் பொருளைக் காட்டிலும் பரந்துபட்டதும் குறிப்பிட்ட வரையறையினையுடையதுமாக உள்ளது. என் இணங்கன் நான் மணந்து கொள்ள உரிமையுடையவர்களையெல்லாம் மணக்க உரிமையுடையவன். இணங்கன் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் இணங்கத்திகள் எனப்படுவர்.

ஆத்தி, நர்பரத்தி (Tamarimdus indica, Garcinia Cambogia, Spondias mangifera, Bauhintia racemosa, Hisbiscus hirtus) ஆகிய ஐந்து இலைச் சாறாகும். இச் சாற்றினைச் கொஞ்சம் அரிசியிட்டுக் கொதிக்க வைத்துக் கருவுற்றவளின் உடன்பிறந்தவன் அதனைக் கரண்டி போல மடிக்கப்பட்ட ஒரு பலா இலையில் எடுத்து ஒரு கத்தி வழியே சென்று தன் உடன்பிறந்தவள் வாயில் விழுமாறு மும்முறை விடுவான். இதே போல அவளுடைய கணவன் குடும்பத்தைச் சேர்ந்த சிலரும் அதனை அவள் வாயில் விடுவர். அடுத்து அவளுடைய தரவாடைச் சேர்ந்த அம்மாயி அதனை அவள் வாயில் விடுவாள். கொண்டுவரப்பட்ட புளியங்கிளை நடுமுற்றத்தில் நடப்படும். விருந்துக்குப் பின் இச் சடங்கு ஒரு முடிவுக்கு வரும். மேற்கண்ட விவரங்கள் கள்ளிக்கோட்டை வட்டத்தினைச் சேர்ந்த ஓா ஊராளி நாயரிடமிருந்து பெறப்பட்டனவாகும். பிற பகுதிகளிலும் பிற சாதிகளிலுள்ளும் இச்சடங்கு நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்க மாற்றங்களுடன் நிகழும். சிலபோது கத்தி வழியாகச் சாற்றினை வழியவிடாது நேரிடையாகவே வாயில் ஊற்றப்படுகின்றது. சில சாதியினர் பலா இலைக்குப் பதிலாகத் தங்கம் அல்லது வெள்ளியாலான சிறு கரண்டியினைப் பயன்படுத்துகின்றனர். தென் மலபாரில் புளிய மரக்கிளையினை வெட்ட ஊர்வலமாகச் செல்லும் வழக்கம் இல்லை. தென் மலபாரைச் சேர்ந்த அகத்துச் சரண நாயர்களிடையே இச் சடங்கு வீட்டின் நடுமுற்றப்பகுதியில் நடக்கும். தியன் ஒருவனே புளியங்கொம்பினை அங்கு வெட்டிக் கொண்டு வந்து சேர்ப்பான். கருவுற்றவள் வெண்கலக் கண்ணாடியினைத் தன் கைகளில் ஏந்தியவளாக இருப்பாள். இணங்கத்தி அவள் தலையில் கொஞ்சம் எண்ணெய் வைப்பாள். அது அவளுடைய இரண்டு மூன்று தலைமுடி வழியாகக் கொப்பூழ் வரை வடிந்து செல்லுமாறு விடப்படும். அதனை அங்கு ஒரு தட்டில் பிடிப்பர். பின் கருவுற்றவளும் அவள் உடன்பிறந்தவளும் ஒருவர் கையினை ஒருவர் பற்றியவர்களாக அம்பினாலும் பிச்சுவாக்கத்தியினாலும் நடுமுற்றத்தில் ஒரு குழிபறித்துப் புளியம்கொம்பினை நட்டு நீரூற்றுவர். அதன்பின் கருவுற்றவள் வாயில் புளிச்சாறு ஊற்றப்படும். பிள்ளை பெறும் வரை அவள் அந்தப் புளியங்கிளைக்கு நீருற்றியவளாக அரிசி, மலர்கள், ஆகியன படைத்து நாளும் மும்முறை விளக்கேற்றி அதனை வழிபடுவாள். மகப்பேற்று வலி கண்டவுடன் அது அவளால் பிடுங்கி எறியப்படும்.

"மகப்பேற்றின் போது அம்பட்டன் சாதியினைச் சேர்ந்த பெண்கள் மருத்துவச்சிகளாகத் தொழிற்படுவர். சில பகுதிகளில் வேலன் சாதியினைச் சேர்ந்த பெண்கள் இதனைச் செய்கின்றனர். பதினைந்து நாட்கள் பிறப்புத்தீட்டினை மேற்கொள்கின்றனர். அப்போது

மகப்பெற்றவள் நாளும் வண்ணான் அல்லது தியயன் சாதிப் பெண்கள் தரும் துவைத்த ஆடையினை அணிவாள். பதினைந்தாம் நாள் புனிதப்படுத்தும் சடங்கு நிகழும். சாவுத் தீட்டினைப் போக்கும் சடங்கினைப் போலவே அட்டிகுரிசி குலத்தினைச் சேர்ந்த ஒருவன் பிள்ளையைப் பெற்றவள் மேல் எண்ணெய், பஞ்சகவ்வியம், எள் ஆகியன கலந்த கலவையினைத் தெளிப்பான். அதன்பின் அவள் நீரில் மூழ்கிக் குளித்தவளாக ஆற்றங்கரை அல்லது குளக்கரையில் வந்து அமர்வாள். அவள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தி செப்புப் பாத்திரம் ஒன்றினால் ஆற்றில் அல்லது குளத்திலிருந்து தண்ணீர் எடுத்து இருபத்தொரு தரம் கொட்டுவாள். இதன்பின் மீண்டும் நீரில் மூழ்கிக் குளிக்கும் அவள் புனிதப்படுத்தப்பட்டவளாவாள். தாய் தன்னைப் புனிதப்படுத்திக் கொள்ளச் செல்லும் முன் அவள் பெற்றெடுத்த குழந்தைக்கும் புனிதப்படுத்தும் சடங்கு நிகழ்த்தப் படவேண்டும். குழந்தையினைத் தரையில் கிடத்தி அதன் தந்தையோ தந்தையின் உடன்பிறந்தவர்களோ அதன் மீது சில துளி தண்ணீரைத் தெளித்து அதனைத் தன் கையில் எடுத்துக்கொள்வர். குழந்தையின் மீது இச் சடங்கில் யார் தண்ணீரைத் தெளிக்கின்றார்களோ அவர்களுடைய குணத்தையே அந்தக் குழந்தையும் கொண்டதாக வளரும் என்ற மூடநம்பிக்கையும் உள்ளது. மகப்பேற்று நாளிலிருந்து பதினைந்து நாள்கள் தரவாடினைச் சேர்ந்த அனைவரும் தீட்டினை மேற்கொள்வர். அப்போது அவர்கள் கோயில்கள் மற்றும் புனிதமான இடங்கள் ஆகியனவற்றுள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை.'' எனத் திரு பாலகிருட்டிணநாயர் எழுதியுள்ளார். ஒரு குழந்தை பிறந்ததும் அது ஆணாயிருப்பின் தென்னை மட்டையினை ஓங்கித்தரையில் அடிப்பதும் அது பெண்ணாயிருப்பின் கொஞ்சம் மஞ்சள் துண்டினை உரலில் இட்டு இடிப்பதும் வழக்கம் என்றும் இவ்வாறு ஒலி உண்டாக்கும் செயலைச் செய்வது அக்குழந்தையின் அச்சத்தைப் போக்குவதற்கேயாம் என்றும் திரு சுப்பிரமணிய அய்யர் குறித்துள்ளார்.

மகப்பேற்றினை அடுத்து நிகழும் சடங்குகள் தொடர்பாகத் திரு பாலகிருட்டிண நாயர் தொடர்ந்து கூறியுள்ளவை வருமாறு:- ''குழந்தைகள் பிறந்த இருபத்தேழாம் நாள் அல்லது அதனுடைய ஜென்ம நட்சத்திரம் முதன்முதல் வரும்நாள் முக்கியமானதொரு நாளாகக் கருதப்படுகிறது. அன்று காரணவன் குழந்தைக்குச் சர்க்கரை, பழம் ஆகியன கலந்த பாலில் இரண்டு கரண்டியினைக் குழந்தையின் வாயில் விடுவான். அதன்பின் அதற்குப் பெயரிடும் அவன் அந்தப் பெயரினை அதன் காதில் மும்முறை கூறுவான். அடுத்து நண்பர்கள், விருந்தினர்கள் ஆகியோருக்கு விருந்திடுவர். இதற்கான செலவுகளைக் குழந்தையின்

தந்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாயர்கள் வாழ்வில் எல்லா நிகழ்ச்சிகளும் சடங்குகளுடனேயே தொடங்கும் குழந்தைக்கு முதன் முதல் சோறூண் செய்வதும் இதற்கு விதிவிலக்கன்று. குழந்தை பிறந்த பின் சில மாதங்கள் வரை அதற்குச் சோறு உண்ணத் தரப்படுவதில்லை. வாழைப்பழத்தின் உலர்ந்த தூளினை வெல்லத்தோடு இட்டுக் கொதிக்க வைத்தே அதற்குக் குடிக்கத் தருவர். இதற்காகக் குன்னன் என்ற வகை வாழைப்பழம் பயன்படுத்தப்படுகிறது. ஆறாவது மாதத்தின் போதே குழந்தைக்குச் சோறுட்டுவர். சோதிடன் குறிக்கும் நாளில் முகூர்த்த வேளையில் குழந்தையைக் குளிப்பாட்டி அணிகள் பூட்டி (இவற்றை வாங்கி வழங்கும் பொறுப்புக் குழந்தையின் தந்தையுடையது.) ஒரு பலகையில் கிடத்துவர். அதன்முன் ஒரு வாழையிலையினையிட்டு அதனருகே விளக்கு ஏற்றி வைப்பர். அந்த இலையில் சிறிது சோறு- பெரும்பாலும் இது கோயிலில் தெய்வத்திற்குப் படைக்கப்பட்டதாக இருக்கும்-சிறிது புளி, உப்பு, மிளகாய், சர்க்கரை ஆகியனவற்றை வைப்பர். (சில இடங்களில் அன்றைய விருந்துக்காகச் சமைக்கப்பட்ட அனைத்திலும் சிறிது சிறிது இலையில் படைப்பர்) அதன்பின் காரணவன் அல்லது குழந்தையின் தந்தை குழந்தையருகே சென்று அதனைப் பார்த்தபடி அமர்வார். முதலில் குழந்தையின் வாயில் புளி , மிளகாய், உப்பு ஆகியனவற்றையிட்டுப் பின் கொஞ்சம் சோற்றையும் இறுதியில் சர்க்கரையையும் இடுவார். அப்போதிருந்து குழந்தைக்குச் சோறூட்டத் தொடங்குவர். இச்சமயம் உறவினர்கள் (அதிலும் சிறப்பாகக் குழந்தையின் தாய்மாமன் மனைவியான அம்மாயி போன்றவர்கள்) குழந்தைக்குத் தங்க வளையல்கள், மோதிரங்கள் முதலிய அணிகளை அணிவிக்கக் கடமைப்பட்டவர்கள். சோறூட்டும் சடங்கினைச் சிலர் கோயில்களில் வைத்து நடத்துவர். குருவாயூர்க் கோயிலில் பலரும் இச்சடங்கினை நிகழ்த்தக் காணலாம்.'' குழந்தைக்குச் சோறூட்டும் சடங்கினை, வீட்டருகே உள்ள ஒரு கோயிலுக்குக் குழந்தையை எடுத்துச் சென்று கோயிலில் தெய்வத்திற்குப் படைக்கும் நைவேத்யத்தில் சிறிது பெற்றுக் குழந்தைக்கு ஊட்டுவதோடு சிலர் அச்சமயத்திலேயே பெயர் வைக்கும் சடங்கினையும் நடத்துகின்றனர் எனத் திரு என். சுப்பிரமணிய அய்யர் குறிப்பிடுகின்றார்.

குழந்தைப் பருவத்தில் நிகழ்த்தப்படும் சடங்குகள் தொடர்பாக மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:- ''குழந்தை பிறந்த ஐந்தாம் நாள் நாயர்கள் பிரிவினைச் சேர்ந்த அட்டிகுரிசி அல்லது மாராயனை அழைத்தும் தாழ்ந்த பிரிவினர் அம்பட்டர் சாதியினைச் சேர்ந்த பெண்களை அழைத்தும் மகப்பெற்றவள்

மீதும் அந்தக் குடும்பத்தினைச் சேர்ந்த மற்றவர்கள் மீதும் தர்ப்பையினைக் கொண்டு பாலும் நல்லெண்ணெயும் கலந்த கலவையினைத் தெளித்து அவர்களைத் தூய்மைப் படுத்துவர். இதற்காக ஓர் இடங்கழி, நெல், ஒரு நாழி அரிசி கொண்ட நிறைச்சவைப்பு, ஐந்து முகக் குத்துவிளக்கு, சிறிது தொகை ஆகியன அவளுக்குத் தரப்படும். பதினைந்தாம் நாள் மீண்டும் இதே போன்ற சடங்கு நிகழ்த்திக் குழந்தையைப் பெற்றவளை வீட்டினுள் அழைப்பர். சிலவிடங்களில் பாலையும் கோமயத்தையும் குழந்தையைப் பெற்றவள் மீது தெளிப்பர். அவள் குளித்த பின் மாராயன் அல்லது அட்டிகுரிசி அவளைச் சுற்றி எலுமிச்சை, மஞ்சள் ஆகியன கலந்த சிவப்பு நீரினைக்கொண்ட பாத்திரத்தையும் கரித்தூள் கரைத்த நீரினைக்கொண்ட பாத்திரத்தையும் ஆரத்தியாகச் சுற்றுவான். இச் சமயங்களில் நாயர்களுக்கு மண்ணான் மாத்து எனப்படும் வேறு ஆடை தரும் சடங்கை நடத்துவான். மற்றச் சாதியாருக்கு அவர்கள் சாதிக்குரிய வண்ணான் அதனைத் தருவான். அவன் மண்ணானாக இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. குழந்தை பிறந்த அன்று துவைத்ததொரு துணியினைத் தன்னிடமிருந்து கொண்டு வந்து தருவதோடு வீட்டுவாசலில் ஒரு முண்டினை விரித்துப்போடுவாள். அதன்மீது மேற்கூறிய பொருள்களும் ஒரு விளக்கும் வைக்கப்படும். அட்டிகுரிசி நாயர் சாதிப் பெண் துவைத்த துணிகளைக் கொண்டு தர வண்ணாத்தி உடுத்த அழுக்குச் சேலைகளை எடுத்துச் செல்வாள். அதன்பின் ஒரு நாள் விட்டு ஒரு நாள் மாற்றிக் கொள்ளச் சேலை கொண்டு வருவாள் எனினும் ஏழாம்நாளின் போதும் பதினைந்தாம் நாளின் போதும் சடங்கு நடத்தும்போதும் மட்டுமே அட்டிகுரிசிப் பெண்ணின் உதவியினை நாடுவர். அந்த நாட்களின் போதும் மண்ணாத்தியோடு மண்ணானும் உடன்வந்து உதவுவான். துவைத்த துணிகளை அட்டிகுரிசிப் பெண் வீட்டின் உள்ளே எடுத்துச் செல்லும் முன் மண்ணான் விளக்கு, நிறைச்ச செப்பு, அத்துணிகள் ஆகியனவற்றை மும்முறை வலம் வந்து நிறைச்ச வைப்பில் இருக்கும் தானியத்தில் கொஞ்சத்தை அங்குத் தூவுவான். மாத்துச் சடங்கு ஆழ்ந்த சமுதாய முக்கியத்துவம் வாய்ந்தது. தான்தோன்றியாகவுள்ள உள்ளூர்த் தலைவன் தன்னைச் சுற்றி வாழ்பவர்களைத் தன் வழிக்குக் கொண்டுவருவதற்கான கருவியாக இதனைப் பயன்படுத்துவான். வண்ணானைத் தீட்டுப்பட்ட குடும்பத்தினருக்கு மாத்துத் தர வேண்டாம் எனக் கட்டுப்படுத்தும் அவன் மாத்துப்பெற முடியாதவர்களைச் சாதிவிலக்கத்திற்கு உள்ளாக்குவான். மலையாளிப் பெண்கள் கேரளத்தைவிட்டு வெளியேற இயலாதபடி தடுத்து வைப்பதும் இந்த மாத்துத்தான். இதனைக் குறிப்பிட்ட சாதியாரிடமிருந்து மட்டுமே

பெற்று உடுத்த வேண்டும் என்ற விதியால் அச்சாதியார் இல்லாத ஊர்களுக்குக் கேரளத்தைச் சேர்ந்த பெண்கள் செல்வது இயல்பாகி விட்டது.

''இருபத்தெட்டாம் நாள் (குழந்தை பிறந்த நாளினையும் உள்ளிட்டு) பால்குடிச்சடங்கு நிகழ்த்தப்படும். அதில் குழந்தையினது தந்தையின் வீட்டிலிருந்து சிலர் வந்து பங்கு கொள்ள வேண்டும். மனைவி கணவன் வீட்டில் சென்று தங்கிவாழும் பழக்கம் உடைய பிரிவினருள் இச் சடங்கு கணவன் வீட்டில் நடத்தப்படும். பிள்ளையைப் பெற்றவள் இதற்காகத் தன்குழந்தையோடு முதன்முதல் புகுந்த வீட்டிற்கு வருவாள். வழக்கமாக வைக்கப்படும் விளக்கு, நிறைச்சவைப்பு, கிண்டியில் தண்ணீர் ஆகியன தேன், பால், குன்னம் வாழைப்பழத் துண்டுகள், கரண்டி போல மடிக்கப்பட்ட மூன்று பலா இலைகள் ஆகியன கொண்ட தட்டு (வசதியுள்ளவர்கள் இவற்றை வெள்ளித் தட்டில் வைப்பர்) ஆகியன வைக்கப்படும். குழந்தையின் தாய் குழந்தையைக் குளிப்பாட்டிக் கொண்டு வந்து காரணவன் மடியில் வைப்பாள். தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம் ஆகிய பஞ்சலோகங்களால் செய்யப்பட்ட மணிகளை வைத்தவனாகப் பொற்கொல்லன் அங்கே காத்திருப்பான். குழந்தையின் தந்தை அவற்றைப் பெற்றுக் குழந்தையின் இடையில் கட்டுவான். காரணவன் அல்லது குழந்தையின் தாய் தட்டில் உள்ள கலவையில் சிறிதளவு ஒவ்வொரு பலா இலையினாலும் கொஞ்சம் எடுத்துக் குழந்தையின் வாயில் விடுவர். குழந்தையின் அத்தை மற்றும் பிற பெண் உறவினர்களும் இதே போல ஆளுக்குக் கொஞ்சம் குழந்தைக்கு ஊட்டுவர். அதன் பின் காரணவன் குழந்தையின் காதில் மும்முறை அதற்கான பெயரைக் கூறுவான்.

''இந்தப் பெயரை அன்ன பிராசனம் நாள்வரை பலரும்அறியக் கூற மாட்டார்கள். சோதிடர் குறித்துத் தரும் நல்ல வேளையில் ஆறாம் மாதத்தில் அன்னப் பிராசனம் சடங்கு நிகழ்த்துவர். அப்பொழுது ஐந்து முக விளக்கேற்றி வைத்து ஒரு வாழையிலையில் சோறு, களன்,ஓலன், அவியல், எரிச்சகறி ஆகிய நான்கு வகைக்கறிகள், சில பப்படங்கள், வாழைப்பழம், உப்பேறி எனப்படும் இனிப்பு ஆகியன படைப்பர். குழந்தையைக் குளிப்பாட்டி முதன் முதல் அதற்குச் சட்டை அணிவித்துக் காரணவன் மடியில் அதன் தாய் கிடத்துவாள். குழந்தையின் தந்தை முகூர்த்த மோதிரம் எனப்படும் தங்க மோதிரத்தைக் குழந்தையின் கழுத்தில் அணிவிப்பான். கூடியுள்ள உறவினர்கள் தங்கள் தகுதிக்கேற்ற

அன்பளிப்புக்களைக் குழந்தைக்கு வழங்குவர். பதக்கங்கள் ஒன்றிரண்டு கோக்கப்பட்ட கழுத்தணி, அரைஞாண்,ஓர் இணை வளையல், கால் கொலுசு ஆகிய அணிகள் அப்போது குழந்தைக்கு வழக்கமாக அணிவிக்கப்படும் அணிகளாம். காரணவன் கணேசரை வழிபட்டபின் இலையில் படைக்கப்பட்ட கறியில் கொஞ்சத்தைக் குழந்தையின் வாயிலிட்டு அதன் வலக்காதில் அதற்கான பெயரை மும்முறை கூறுவான். பின் அவன் குழந்தையினை வீட்டருகே உள்ள ஒரு தென்னை மரத்தடிக்கு எடுத்துச் சென்று அதனை மும்முறை வலம் வருவான். அவ்வாறு சுற்றி வரும்போது கிண்டியில் உள்ள தண்ணீரைத் தென்னை மரத்தடியில் ஊற்றுவான். பின்னர் அங்கிருந்து அவர்கள் வீட்டுக்குத் திரும்பும் போது குடும்பத்தைச் சேர்ந்த மூதாட்டி குழந்தையின் பெயரைப் பின்வருமாறு உரக்க அறிவிப்பாள். குழந்தையின் பெயர் கிருஷ்ணனாயின் அவள், ''கிருஷ்ணா! உனக்கு ஆகாயம் தெரிகின்றதா?'' எனக் கேட்பாள். சில சமயங்களில குழந்தையின் தந்தை அதன் பெயரை இருமுறை உரக்கக் கூறுவான்.

'வித்தியாரம்பம் எனப்படும் கல்விப் பயிற்சிச் சடங்கு ஐந்து அல்லது ஏழாம் ஆண்டில் தொடங்கும். சில இடங்களில் குழந்தையை முதலில் கோயிலுக்கு அழைத்துச் சென்று சாந்திக்காரனைக் கொண்டு மந்திரிக்கப்பட்ட புனித நீரினைக் குழந்தையின் தலையில் தெளிக்கச் செய்வர். பின் வீட்டில் எழுத்தச்சன் கணேச பூசையோடு சடங்கைத் தொடங்குவான். ஒரு நம்பூத்ரி அல்லது நாயர் இதனைச் செய்வதும் உண்டு. அதன் பின் எழுத்தச்சன் ஒரு தங்கப் பணத்தால் குழந்தையின் நாவில் 'ஹரி ஸ்ரீ கணபதியாய நமஹ' என்பதனை எழுதுவான். சிலபோது மலையாள மொழிக்குரிய ஐம்பத்தொரு எழுத்துக்களை எழுதுவதும் உண்டு. பின் குழந்தையின் வலக்கையில் நடுவிரலைப் பிடித்து அதனால் வறுத்த அரிசியினிடையே அந்த எழுத்துக்களை எழுதுவிப்பர். அவர் குழந்தைக்கு அகர நிரல் எழுதப்பட்ட ஓலையினைக் வழங்குவார். ஒரு சிறு தொகை அவனுக்குத் தட்சணையாக வழங்கப்படும். பின் குழந்தை மும்முறை எழுத்தச்சன் கால்களைத் தன் வலக்கையால் தொட்டுத் தன் தலையில் அக் கையினை ஒற்றியவனாகத் தன் குருவுக்குப் பழைய் இந்து வழக்கப்படியான பணிவினைத் தெரிவிப்பான்.

''காதுகுத்து, பால்குடியின் போதோ சௌளத்தின்போதோ ஐந்து அல்லது ஏழு வயதாகும் போதோ நிகழ்த்தப்படும். காதினைக் குத்திப் பழக்கப்பட்ட ஒருவன் பொற்கொல்லன் கொண்டு வந்து தந்துள்ள தங்கம்

அல்லது வெள்ளிக்கம்பியால் முதலில் வலக்காதினையும் பின் இடக் காதினையும் குத்தி இச் சடங்கினை நிகழ்த்துவான். காது காரை முள்ளால் குத்தப்படுவதும் உண்டு. குத்தப்பட்ட கம்பிகள் அல்லது முள் காதுகளிலேயே விடப்படும். பெண்களுக்கு அடுத்தடுத்து ஒன்பது வகை முட்களை அத்துளையில் செருகிக் காதுத் துளையினைப் பெரிதுபடுத்துவர். இறுதியாக மூங்கில் குச்சியினைச் செருகி மலையாளிகளுக்குரிய குமிழ் அமைப்புடைய தனித்தன்மையுடைய தோடு புகும் படியாகக் காதுத் துளையினைப் பெரிதாக்குவர்.''

மலபாரைச் சேர்ந்த நாயர்களின் சாவுச்சடங்குத் தொடர்பான பின்வரும் விரிவான விவரங்கள் திரு பாவ்செட் அவர்களால் தரப்பட்டுள்ளன:- ''சாகக் கிடப்பவன் வாயில், சென்றவர் யாரும் மீண்டும் திரும்பி வராத பயணத்தை மேற்கொள்ளும் உயிர், உடலை விட்டுப் பிரியும் சமயத்தில் குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களும் கூடியுள்ள நண்பர்களும் ஒவ்வொருவராக ஓர் இலைத் தொன்னையிலிருந்தோ துளசியிலையில் எடுத்தோ சிறிது தண்ணீர் விடுவர். அவ்வாறு விடும் தண்ணீர் ஒரு தங்கத்தகட்டின் வழியாகவோ தங்க மோதிரம் வழியாகவோ அவன் வாயில் விழ வேண்டும். சாகும் முன் ஒருவன் பொன்னைப் பற்றியவனாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இவ்வாறு செய்கின்றனர். தரவாடைச் சேர்ந்தவர்கள் பணம் படைத்தவர்களாயின் ராசிப்பணம் எனப்படும் சிறிய தங்கக் காசினை அவன்வாயிலிட்டு வாயினை மூடச் செய்வர். உயிர் பிரிந்ததும் பிணத்தைக் கட்டிலிலிருந்து அல்லது படுக்கையிலிருந்து வடக்கிணிக்குத் தூக்கிச் செல்வர். அங்குத் தரையில் நீண்ட வாழையிலையினை விரித்துப் போட்டு அதன் மீது பிணத்தைக் கிடத்துவர். பிணம் அந்த அறையில் கிடக்கும் வரை அங்கு ஒரு விளக்கு எரியும். தரவாடைச் சேர்ந்த ஒருவன் பிணத்தின் தலையினையும் இன்னொருவர் பாதங்களையும் மடியில் கிடத்தியபடி தாங்குவர். அண்டை அயலார் இறுதி முறையாக இறந்தவரைப் பார்க்க வருவர். இறந்தவரின் உடல் எவ்வளவு விரைவில் எரிக்கவோ புதைக்கவோ செய்யப்படுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது அவருடைய பிரிந்து சென்ற ஆன்மாவுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என மலையாளிகள் நம்புவதால் ஈமச் சடங்கிற்கான ஏற்பாடுகளை விரைந்து மேற்கொள்வர். தரவாடைச் சேர்ந்த மூத்த ஆண் பெண் பாலரின் பிணம் எரிக்கப்படும். இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் உடலையும் காலரா, பெரியம்மை போன்ற தொற்றுநோயில் இறந்தவர்களின் உடலையும் புதைப்பர். ஈமச்

சடங்கிற்கான ஏற்பாடுகள் நிகழ்ந்து கொண்டிருக்கையில் பிணத்தை நடுமுற்றத்திற்குத் (பெரும்பாலான பெரிய இல்லங்களில் இந்த நடுக்கட்டு இருக்கும்) தூக்கிச் செல்வர். நடுமுற்ற அமைப்பு இல்லையாயின் அதனை வீட்டு வாசலுக்குள் கொண்டு சென்று மீண்டும் வாழையிலையில் கிடத்துவர். அதனைக் குளிப்பாட்டி எண்ணெய் பூசி சந்தனம், விபூதி ஆகியன தீட்டித் துணியினை நன்கு சுற்றிப் போர்த்துவர். அடுத்துத் தரவாடைச் சேர்ந்த பெரியவர்களும் இறந்தவரின் மருமகன்களும் மருமகள்களும் கோடிபோடும் புடவெக்குக எனப்படும் சடங்கு நிகழும். பிணத்தைப் புதைக்கும் அல்லது எரிக்கும் இடத்துக்கு எடுத்துச் செல்லக் கட்டுவதற்காக இந்தத் துணிகள் பயன்படுத்தப்படும். மலபாரில் சில பகுதிகளில் பச்சை மூங்கில்களை இத்துணிகளால் இணைத்துக் கட்டப்பட்ட பாடையில் பிணத்தைத் தூக்கிச் செல்வர். பிற இடங்களில் அதனைத் துணியால் நன்கு போர்த்திக் கட்டிக் கைகளால் தூக்கிச் செல்வர். பிணத்தை உறவினர்களே தூக்கிச் செல்வர். பிணத்தை எடுக்குமுன் பாரவிறக்குக எனப்படும் சடங்கு நிகழும். (பார என்பது காலன் அளவினதான அளக்கும் வள்ளம்). அட்டிக்குரிசிக் குலத்தைச் சேர்ந்த சாவுச் சடங்கினை அடுத்துவரும் பதினைந்து நாள்களிலும் நடத்தி வைப்பவன் மேற்பார்வையில் தரவாடினைச் சேர்ந்த வயது வந்த ஆண்கள் அனைவரும் இச்சடங்கில் பங்கு பெறுவர். அவன் இச்சடங்கின் போது இறந்து போனவரின் ஆன்மாவிற்குத் தேவையான அரிசி மற்றும் பிற படையல்களை இதுபோது பெறுவான். மூன்று பாராவில் நெல்லையும் ஓர் இடங்கழியில் பச்சையரிசியினையும் இச் சடங்கின் போது நிரப்புவர். இந்தப் படையல்களான நெல்லும் அரிசியும் பிணத்திற்கு மிக அருகே மலபாருக்கு உரிய நில விளக்கோடு வைக்கப்படும். தரவாடு வசதியுள்ளதாயின் பிணத்தைத் தூக்குமுன் அதன் மீது ஒரு பட்டுத்துணி போர்த்தப்படும். பிணத்தை எரிப்பதற்கான இடத்தில் வேண்டிய அளவு விறகு கொண்டு சேர்க்கப்பட்டிருக்கும். பிணத்தைக் கொள்ளும் அளவுடையதான ஒரு குழி தோண்டப்படும். இதன் குறுக்கே வாழைக்கம்பத் துண்டுகள் மூன்றினைத் தலைமாடு, கால்மாடு, நடுப்பகுதி ஆகியனவற்றில் இடுவர். இவற்றை அடித்தளமாகக் கொண்டு ஈமவிறகு அடுக்கப்படும். ஈம விறகு முழுதும் அல்லது ஒரு பகுதியேனும் மாமரமாக இருக்க வேண்டும் என்பது விதி. பிணத்தை

* தரவாடைச் சேர்ந்த மூத்த ஆண்மகன் காரணவன் எனப்படுவான். வயதில் அவனுக்கு இளைய உடன்பிறந்தோர் அவன் தந்தையின் சகோதரர் பிள்ளைகள் மற்றுமுள்ள ஆண்கள் ஆகிய அனைவரும் தரவாடைச் சேர்ந்த அனந்தவரன்கள் எனப்படுவர்.

ஈம விறகின் மீது கிடத்த அப்புறப்படுத்துகையில் இறந்தவனுக்கு வயதில் அடுத்து இளையவனான அனந்தவான்* பிணத்தின் மீது போர்த்துள்ள புதுத்துணியிலிருந்து தன் இடுப்பைச் சுற்றிக் கட்டக்கூடிய அளவு துணியினைக் கிழித்து அதனைத் தன் இடையினைச் சுற்றிக் கட்டியவனாக அதில் ஓர் இரும்பை - வழக்கமாக நீண்ட சாவியினை - செருகிக் கொள்வான் அல்லது கையில் பிடித்துக் கொள்வான். இவ்வாறு சுற்றிக் கொள்பவனே இறந்தவனுக்குப் பிண்டம் கொடுப்பவர்களுள் முதன்மையானவனாவான். ஈம விறகில் தலை தெற்குப் பக்கமாக இருக்கும்படி பிணம் கிடத்தப்படும். அதன் மீது மேலும் விறகை அடுக்கிய பின் இயலுமேல் சிறிது கர்ப்பூரம், சந்தனக்கட்டை, நெய் ஆகியன இடப்படும். இங்கு ஒரு விளக்கம் தரப்பட வேண்டும். இறந்தவரை விட வயதில் மூத்தவரான தரவாடைச் சேர்ந்த ஆண் பெண் எவரும் இந்த எரியூட்டும் அல்லது புதைக்கும் சாவுச் சடங்கில் அப்பொழுதோ அதன் பின்போ பங்கு பெறுதல் கூடாது என்பது விதி. ஈம விறகில் நெருப்பிடும் போது இறந்துபோனவருக்கு வயதில் இளையவர்களான இளைஞர்கள் அனைவரும் அங்கே இருக்க வேண்டும். இறந்தவரின் தம்பி அல்லது அத்தகையவன் இல்லாவிட்டால் உடன் பிறந்தவள் மூத்த மகன் சிதைக்குத் தலைப்பக்கமாகத் தீயிடுவான். இறந்தவர் பெண்ணாயின் அவளுடைய மகனோ அவ்வாறு ஒருவன் இல்லையாயின் அவளை விட வயதில் குறைந்த ஒருவனோ சிதைக்குத் தீயிட் உரிமை உடையவனாவான். சிதை முழுவதுமாக உடனே எரிய வேண்டுவது மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பிணத்தின் எல்லாப் பகுதிகளும் எரியும்படியாக அது முழுவதுமாக எரியும்படியாகக் கருத்துடன் கண்காணிப்பர். பிணம் எரியும்போது தரவாடைச் சேர்ந்த அதனைத் தூக்கி வந்த உறுப்பினர்கள் ஒரு குளத்தில் சென்று குளிப்பர். (ஒவ்வொரு நாயர் வீட்டு எல்லையிலும் ஒரு குளம் இருக்கும்) அவர்களுள் கிழிக்கப்பட்ட துண்டுத் துணியினை இடுப்பில் கட்டியிருப்பவன் ஒரு மண்பானையில் தண்ணீரைத் தூக்கி வர அனைவரும் பிணம் எரியும் இடத்திற்கு வருவர். சாவுச் செய்தி கேட்டவுடன் அண்டை அயலார் கூடிச் சாவு நிகழ்ந்த குடும்பத்திற்குப் புதைகுழி தோண்டல், சிதை அமைத்தல் போன்ற செயல்களில் உதவியவர்களாக இருப்பர். தரவாடைச் சேர்ந்தவர்கள் குளிக்கச் செல்லும்போது இவர்களே எரியும் பிணத்தருகே கண்காணித்தவர்களாக இருப்பர். உறவினர்கள் திரும்பிவரும்போது பிணம் முழுதும் எரிந்து போயிருக்கும். மூத்த அனந்தவரன் பானையில் உள்ள தண்ணீரோடு சிதையினை மும்முறை சுற்றி வருவான். அப்போது பானையில் உள்ள தண்ணீர் முழுதும்படியாகப் பானையில் துளையிடப்படும். மூன்றாம் சுற்று

முடிந்தவுடன் அவன் அப்பானையினைப் பிணத்தின் தலைமாட்டில் தரையில் மோதி உடைப்பான். பச்சையரிசியினைக் கொண்டு இறந்தவரின் உருவாகச் சிறிய உருவம் ஒன்று சமைத்து அதற்குச் சிறிது அரிசியினையும் எள்ளினையும் படைப்பர். இதன் பின் உறவினர்கள் வீட்டுக்குச் செல்ல அண்டை அயலார் குளித்துத் [illegible] திரும்புவர். பிணத்தினை இரவில் எரிப்பார்களாயின் [illegible] ஆன்மாவிற்கான படையல் மறுநாள் முற்பகல் பத்து மணியிலிருந்து பதினொரு மணிக்குள்ளாக இடப்படவேண்டும். தொடர்ந்து ஏழு நாட்கள் இது போலப் படையல் இடுவர். எப்படியும் இந்தச் சடங்கு முற்பகல் பத்து முதல் பதினொரு மணிக்குள்ளாக நிகழ்த்தப்படுவதற்குரியதே. இது பின்வருமாறு மேற்கொள்ளப்படும். இறந்தவரைவிட வயதில் இளையவர்களான தரவாடைச் சேர்ந்த ஆண்கள் அனைவரும் குளத்தில் சென்று முழுகி வீட்டுக்குத் திரும்புவர். பிணத்திலிருந்து துணியைக் கிழித்தவனான அவர்களுள் மூத்தவன் தன்னிடம் கிழிக்கப்பட்ட அந்தத் துணியினையும் இரும்பையும் வைத்தவனாக இருப்பான். அனைவரும் வீட்டின் நடுமுற்றத்தில் கூடுவர். அங்கே இணங்கன் ஒருவன் பாதிவெந்த சோறு, சிறிது எள், செரூலா இலைகள் (Acrua lanata) சில, சிறிது தயிர், கொஞ்சம் நெல், சிறிது பச்சையரிசி ஆகியனவற்றைத் தயார்ப்படுத்தி வைத்திருப்பான். இவை வடமேற்கு மூலையில் மலபாருக்குரிய நிலைவிளக்கோடு கூட வைக்கப்படும். சுமார் ஓர் அடி நீளமும் ஒரு விரற்கிடை அளவு அகலமும் உள்ள பனையோலை ஒன்றினை எடுத்து அதன் ஒரு முனையில் முடிச்சிடுவர். முடிச்சிடப்பட்ட முனையினைத் தரையோடு சேர்த்து மற்றொரு முனை குத்திட்டு நிற்கும் படியாக வைப்பர். இதுவே இறந்தவரைக் குறிக்கும் குறியீட்டு அடையாளமாகும். அரிசி முதலிய பொருள்கள் இதன் முன் படைக்கப்படும். பனையோலை பற்றிய இந்த நம்பிக்கை பற்றிப் பின்வருமாறு விளக்கம் தருவர். பிராணன், அபானன், சமானன், உதானன், வயானன், நாகன், கூர்மன், கரிகலன், தேவதத்தன், தனஞ்சயன் ஆகிய பத்துத்தாதுக்கள் மனிதன் உடலில் இடம்பெற்றுள்ளன. இவை தசவாயுக்கள் எனப்படும். பிணத்தை முதன்முதல் எரிக்கும்போது இறுதியில் கூறப்பட்ட வாயுவைத் தவிர எஞ்சிய அனைத்தும் நெருப்பில் எரிந்து போகின்றன. இறுதியில் சுட்டப்பட்ட தனஞ்சயன் மேலே எழுந்து ஒரு பனையோலையில் அமர்ந்து கொள்ளும். இது அவ்வாறு இருப்பதைப் பிராமணர்களான முனிவர்கள் சிலர் கண்டு மந்திரங்களால் அதனைத் தரையில் ஒரு பனையோலையில் வந்திருக்கும்படி செய்தனர். எனவே தனஞ்சயன் வீற்றிருக்கும் இலைக்கு ஏழு நாள்கள் படையலிடுவதால் இறந்தவரின்

ஆன்மா உயிரோடுள்ள தரவாடைச் சேர்ந்தவர்கள் மீது ஏதேனும் கோபங்கொண்டிருக்குமானால் அதனை நீக்க அது உதவும். பனை ஓலையினை வைப்பதற்குரிய தரையினைச் சுத்தம் செய்து அதில் நடுவே அதனை வைப்பர். அதன்முன் படைக்கப்படும் பொருள்கள் நேரே இறந்தவரின் ஆன்மாவினைச் சென்று சேர்கின்றன என நம்புகின்றனர். தரவாடு நிம்மதியாக வாழ இது வழி செய்கின்றது. குளித்துவிட்டுத் திரும்புகின்றவர்கள் திரும்ப வீட்டுக்கு வரும்போது வழியில் தங்களோடு கொஞ்சம் தருப்பைப் புல்லினைப் பிடுங்கி வருவர். அவர்கள் பனையோலையின் முன் வலக்காலை ஊன்றி மண்டியிடுவர். அவர்கள் கொண்டு வந்த தருப்பையைப் பனை ஓலை அருகே தரையில் பரப்பிக் கூடியுள்ளவர்கள் அந்தத் தர்ப்பையால் மோதிரம் செய்து வலக்கை மோதிர விரலில் அணிவர். அனந்தரவன்களுள் மூத்தவன் வழிகாட்ட முதலில் தண்ணீர், சந்தனக்கலவை செரூலா இலைகள் ஆகியனவற்றை அடுத்தடுத்துப் படைப்பர். சிறுவர்கள் இந்தச் சடங்கை மேற்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. மூத்தவன் பிண்டம் தரும்போது இவர்கள் அவனைத் தொட்டுக்கொண்டிருந்தால் போதுமானது. பாதி வெந்த சோற்றினை உருண்டைகளாக்கி அவர்கள் ஆளுக்கு ஓர் உருண்டையாக வலக்கையில் எடுத்து அதனைப் பனையோலை அருகே உள்ள தருப்பை மீது வைப்பர். தயிரில் கொஞ்சம் எள்ளினை இட்டு அதனை அந்தப் பிண்டங்களைச் சுற்றி மூன்று வட்டங்கள் உண்டாகுமாறு ஊற்றுவர். செரூலா இலைகளால் அமைக்கப்பட்ட தொன்னைகளிலிருந்து தான் அது ஊற்றப்பட வேண்டுமேயன்றி வேறு பாத்திரங்களிலிருந்து அதனை ஊற்றுதல் கூடாது. இவை அனைத்தையும் ஒரு வாழையிலையால் மூடி எரியும் விளக்கு ஒன்றினை அதன்முன் சுற்றுவர். சற்றுநேரம் அதனை அப்படியே விட்டு வைத்திருந்தபின் வலக்கை விரல்களின் பின்பக்கத்தால் அந்த இலையினைத் தட்டுவர். பிறகு அந்த இலையினை எடுத்து நடுவில் இரண்டாக வகுத்து அவற்றைப் பிண்டங்களின் இருபுறமும் இடுவர். அத்துடன் அச்சடங்கு அன்றைய அளவில் முடிந்ததாகக் கருதப்படும். சடங்கில் ஈடுபட்டவர்கள் எழுந்து தங்களுடைய ஈர வேட்டியினைக் களைவர். அனந்தரவன்களுள் மூத்தவன் நடுமுற்றத்தில் மற்றவர்களிலிருந்தும் தனித்துப் பிணத்தை எரிக்க எடுத்துச்செல்லுமுன் பிரிந்திருப்பான். அவனுடைய மருமகனோ மருமகளோ அத்தகைய உறவுமுறை உடைய ஒருவரோ அவனுக்கும் மற்ற அனந்தரவன்களுக்கும் இடையே நிற்பர். அப்போது அவன் பிணத்தைப் போர்த்துள்ள துணியிலிருந்து கிழிந்த துண்டை இடுப்பில் சுற்றியவனாக ஓர் இரும்பை இடைவேட்டியில் மேற்கூறிய

சடங்கின்போது செருகிக்கொண்டவனாக இருப்பான். சடங்கு முடிந்ததும் தன் இடுப்பிலுள்ள அத் துண்டுத் துணியினைப் பனையோலைக்கு அருகே உள்ள ஒரு தூணில் எடுத்துக்கட்டியபின் இடுப்பில் சொருகியுள்ள இரும்பைப் பாதுகாப்பான ஓரிடத்தில் வைப்பான். தரையில் வைக்கப்பட்டுள்ள பனையோலை ஒரு கூடையால் மூடப்படும். ஏழுநாளும் சடங்கின்போது அதன் மீது கவிழ்க்கப்பட்டுள்ள கூடையினை அப்புறப்படுத்துவர். அங்குப் படைக்கப்பட்ட சோற்றுப் பிண்டங்களை இறந்து போனவருக்கு வயதில் இளையவரான தரவாடைச் சேர்ந்த பெண்களும் சிறுமிகளும் அப்புறப்படுத்துவர். அவற்றைச் சோறு சமைத்த வெண்கலப் பாத்திரத்தில் இடுவர். அவர்களுள் மூத்தவள் அதனைத் தலையில் வைத்தவளாகக் ஒரு குளக்கரைக்கு எடுத்துச் சென்று அதன் கரையில் அதனைக் கொட்டுவாள். காகங்கள் வந்து அவற்றை உண்ணும். அவ்வாறு அவை வந்து உண்டால் அந்தப்படையலால் இறந்தவரின் ஆன்மா திருப்தியுற்றதாகக் கொள்வர். காகங்கள் வந்து அவற்றை உண்ணாது போய்விட நேருமானால் அவற்றைக் குளத்தினுள் கொட்டுவர். நாய்கள் அவற்றை உண்ண அனுமதிக்கப்படுவதில்லை. அதன்பின் அதனைக் கொண்டு சென்ற பெண்கள் குளிப்பர். மேலே கூறப்பட்ட சடங்கினை ஏழுமுறை நிகழ்த்தியபின் அதாவது ஏழாம் நாளுக்குப்பின் தரையில் வைக்கப்பட்ட பனையோலையினை எடுத்துப் பிணம் எரிக்கப்பட்ட இடத்திலுள்ள சாம்பலின் மீது போடுவர். இந்த ஏழு நாள்களும் அக் குடும்பத்தைச் சேர்ந்த காரணவன் துக்கம் கேட்க வரும் உறவினர்கள் நண்பர்களைக் காணத் திங்கள், புதன், சனி ஆகிய கிழமைகளில் வீட்டில் காத்திருப்பான். வருபவர்கள் உட்கார்ந்து அரட்டையடித்து வெற்றிலை பாக்குப் போட்டவர்களாகத் தங்கள் இல்லம் சென்று வீட்டில் நுழையுமுன் குளிப்பர். மலபாரின் சில பகுதிகள் இவ்வாறு துக்கம் கேட்க வருபவர்கள் சாவு நிகழ்ந்த வீட்டின் காரணவனுக்குச் சாவுச் செலவுகளைச் சரிக்கட்ட உதவும் பொருட்டுச் சிறுதொகையினை அன்பளிப்பாகத் தந்து செல்லும் பழக்கமும் உள்ளது. இடையே நடந்தவைகளை மீண்டும் கண்ணோட்டம் விடுவோமாயின் சாவு நிகழ்ந்த மூன்றாம் நாள் திருமணத்தின்வழித் தரவாடிற்கு உறவினர்களாக ஆன அனைவரும் ஒன்று சேர்ந்து தரவாடைச் சேர்ந்தவர்களுக்கும் அண்டை அயலார் இல்லங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் அழைக்கப்படும் ஓர் ஆண் அல்லது பெண்ணுக்கும் தங்கள் செலவில் நல்ல விருந்து இடுவர். இதற்காக அழைக்கப்படுவர் வந்தாகவேண்டும். இந்த விருந்து பட்டினி கரிசி எனப்படும். ஏழாம் நாள் தரவாடைச்சேர்ந்தவர்கள் இதற்கு ஈடாக மறுவிருந்து ஒன்றினை உறவினர்களுக்கும் அண்டை

அயலாருக்கும் தருவர். சாவு நிகழ்ந்த ஏழாம் நாளிலிருந்து பதினான்காம் நாள்வரை எந்தச் சடங்கும் மேற்கொள்ளப்படுவதில்லை. எனினும் தரவாடைச் சேர்ந்தவர்கள் தீட்டுக்கு உள்ளானவர்களாகவே இருப்பர். பதினான்காம் நாள் சஞ்சயனம் எனப்படும் இறந்தவரின் எஞ்சிய எலும்பு சாம்பல் ஆகியவற்றைச் சேகரித்து ஆற்றில் விடும் சடங்கு நிகழும். தரவாடைச் சேர்ந்த ஆண்கள் பிணத்தை எரித்த இடத்திற்குச் சென்று அங்குக் கிடைக்கும் எலும்புகளைப் பொறுக்கி வெயிலில் வைத்துச் சுடப் பட்ட மண்பானை ஒன்றில் இட்டு (சூளையில் வைத்துச் சுடப்பட்ட பானையைப் பயன்படுத்தப்படுதல் இல்லை) அதன் வாயினை ஒரு புதுத்துணிகொண்டு மூடிக்கட்டித் தரவாடைச் சேர்ந்த மூத்தவன் அதனைத் தூக்கி வர அவனோடு அனைவருமாகச் சென்று ஓடும் ஆற்றில் அதனை விட்டு ஆற்றில் குளித்து வீடு திரும்புவர். மலபாரில் சில பகுதிகளில் ஏழாம் நாளன்றே எலும்பினைச் சேகரிக்கின்றனராயினும் அதனை முறையானதாகக் கருதுவதில்லை. எலும்புகளை அருகே உள்ள ஆற்றுக்குக் கொண்டு செல்வதை விடப் புனித இடங்களான காசி, கயா, இராமேசுவரம் ஆகிய தொலை தூர இடங்களிலோ அது இயலாததாயின் வயநாட்டைச் சேர்ந்த திருநெல்லி போன்ற இடங்களிலோ கொண்டு விடுவது புண்ணியம் சேர்க்கும் நல்ல செயலாகக் கருதப்படுகிறது. கயாவிற்கு ஒருவனுடைய எலும்புகளைக் கொண்டு சென்று ஆற்றில் விட்டால் தரவாடைச் சேர்ந்த அவருடைய சந்ததியினர் தொடர்ந்து ஆண்டுதோறும் அவருக்காகச் சிரார்த்தம் நடத்த வேண்டியதில்லை. இதனை அஷ்டகயா சிரார்த்தம் என்பர். இது இறந்தவருக்காக உலகில் இயற்ற வேண்டிய கருமங்கள் அனைத்திற்கும் ஓர் இறுதியாக அமைகின்றது. இறந்தவரின் சாம்பலினைத் திரட்டி இது போலப் பத்திரமாக ஆறுகளில் கொண்டு சேர்ப்பதால் அவருடைய ஆன்மா அமைதி அடைவதோடு அவ்வாறு அமைதியடையும் ஆன்மா தரவாட்டைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குக் கர்ப்பச்சிதைவு, பேய்பிடித்தல் போன்ற தீங்குகளை நிகழ்த்தாது எனக் கருதுகின்றனர். சாவு நிகழ்ந்த பதினைந்தாம் நாள் தீட்டு நீக்கும் சடங்கை நிகழ்த்துவர். இதனை நடத்தும் வரை சாவு நிகழ்ந்த தரவாடைச் சேர்ந்தவர்களைத் தொட நேர்பவர்கள் தங்கள் வீட்டில் நுழையும் முன்னும் உணவு கொள்ளும் முன்னும் குளித்தாக வேண்டும். அஷ்டகுரிச்சி (அட்டிகுரிச்சி) குலத்தைச் சேர்ந்த ஒருவன் தீட்டுப்போக்கும் சடங்கை நடத்தி வைப்பான். தீட்டுக்குள்ளானவர்கள் மீது எள்ளிடப்பட்ட பாலும் எண்ணெயும் கலந்த கலவையினை அவன் தெளிப்பான். இது போன்று தரவாடுகளில் நிகழும் சாவு, பிறப்பு ஆகியவற்றின் தீட்டினைப் போக்கும் அவன் ஒரு தொகையினைக் கட்டணமாகப் பெறுவான். வசதியான

தரவாட்டைச் சேர்ந்த மூத்த உறுப்பினர்களின் சாவின் பதினாறாம்நாள் நண்பர்களுக்கும் அண்டை அயலாருக்கும் பிண்ட அடியந்தரம் என்ற விருந்தினைத் தருவர். இதன்பின் நாற்பத்தொரு நாள்கள் அல்லது ஓராண்டுவரை உடலின் எப்பகுதியையும் மழித்துக் கொள்ளாது தீட்சை மேற்கொள்வர். நாற்பத்தொரு நாள்களுக்கும் ஓராண்டுக்கும் இடையே இதனை நடத்திக் கொள்ளுதல் கூடாது. வடமலபாரில் நாற்பத்தொரு நாள் தீட்சையே மேற்கொள்கின்றனர். ஓராண்டுக்காலம் தீட்சை மேற்கொண்ட பலரை நான் நேரில் கண்டுள்ளேன். இவ்வாறு முடியை வளர விடுபவர் இறந்தவரின் மகனாகவோ அவருடைய உடன்பிறந்தவரின் மகனாகவோ இருப்பார். தரவாடைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே இது போலத் தீட்சை மேற்கொள்வார். இவ்வாறு தீட்சை மேற்கொள்பவர்கள் ஓராண்டுக்காலம் வரை காலையில் குளித்து பாதி வெந்த சோற்றையும் எள்ளினையும் கலந்து பிண்டமாக்கி இறந்தவரின் ஆன்மாவிற்காகப் பலிகொடுத்து வருவார். பெண்களோடு உறவு, மது, வெற்றிலை பாக்கு, புகையிலை ஆகியன அவருக்கு விலக்கப்பட்டனவாம். தீட்சை மேற்கொள்பவர்கள் மேற்கூறியவாறு இறந்தவரின் சாம்பலை ஆற்றில் விடாது தீட்சை முடியும் வரை பானையில் பாதுகாப்பர். அவ்வாறு பாதுகாக்கும் போது ஒவ்வொரு மாதமும் பலிச் சடங்கினை நிகழ்த்துவர். தீட்சை முடியும்வரையான இந்த மாதப் பலிகள் இறந்தவர் உயிர்விட்ட நட்சத்திரங்கள் திரும்பி வரும் போது நட்சத்திர மாதத்தின் அடிப்படையில் தரப்படும். ஆண்டுக்காலக் கணக்கீடும் 365நாள்கள் எனக் கொள்ளாமல் பன்னிரண்டாவது முறை அந்த நட்சத்திர நாள் வரும்போது ஆண்டு முடிந்ததாகக் கொள்வர்.* பலிச்சடங்கினை இளையாடு சாதியினைச் சேர்ந்தவன் நடத்தி வைப்பான். நாயர்களின் புரோகிதர்களான இளையாடுகள் பூணூல் அணிந்தவர்களாயினும் பிராமணர்கள் அல்லர். வேதங்களைப் படிக்க இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லையாயினும் இவர்களையே நாயர்கள் தங்கள் புரோகிதர்களாகக் கொள்கின்றனர். பலிச் சோற்றினை இளையாடுவே தயாரித்துத் தருப்பையினை இறந்தவரின் குறியீடாக வைத்துச் சோறு, தயிர், எள் ஆகியனவற்றைப் படைப்பான். இதற்காக அவன் ஒரு ரூபாய் தட்சணையாகப் பெறுவான். தீட்சை மேற்கொள்பவனே இச் சடங்கை நடத்த அறிந்தவனாயினும் இத் தொகையினை இளையாடுவிற்கு வழங்கியேயாக வேண்டும். தீட்சையின் இறுதி நாள் விழாக்கோலம் பூணும். அன்று பலி தந்த பின் தீட்சை மேற்கொண்டவர் முகம் மழித்துக் கொள்வார். இதன்பின்

* உயர்சாதி இந்துக்கள் சிரார்த்தச் சடங்கினைச் சாவு நடந்த மத்திய நாளின் அடிப்படையில் கணக்கிடாமல் திதியின் அடிப்படையில் கணக்கிட்டு நடத்துவர்.

இறந்தவருக்கு ஆண்டுச் சிரார்த்தத்தின் போது சோற்றுப் பிண்டங்களைப் படைத்து அவற்றைக் காக்கைகளுக்கு இடுதல் போதுமானது. கைகளைத் தட்டினால் காகங்கள் சோறு படைக்கப்பட்டிருப்பதைக் கண்டு வந்து கூடிவிடும். அவை உடனே வந்து சோற்றினை உண்ணவில்லையாயின் அது இறந்தவர்கள் ஆவி திருப்தியுறவில்லை என்பதன் அடையாளமாகும். தரவாடைச் சேர்ந்தவர்கள் அதற்கான காரணத்தைக் கண்டறிய வேண்டும். தற்கொலை செய்து கொண்டவர்கள், கொடிய விபத்தில் உயிரிழந்தோர் ஆகியோர் தரவாடுக்குத் தொல்லை தரும் ஆவிகளாக ஆவர். தரவாடைச் சேர்ந்த எவரேனும் ஒருவர் மீது ஏறிக்கொள்ளும் அவர்கள் ஆவிகளைச் சாந்தி செய்து அமைதியுறச் செய்யாவிடின் அவை தரவாடினையே நாசமாக்கிவிடும். இதற்காகப் பிராமணப் புரோகிதர்களை அழைத்துத் திலஹோமம் நிகழ்த்துவர். புனித நெருப்பில் நெய், எள், முதலியவற்றைப் பலியிடுவதே இந்த ஹோமம்.''

''கிரியட்டில் பிரிவைச் சேர்ந்தவர்கள் சாவுச் சடங்குகள் தனித்த இயல்புடையவை. பிணத்தைச் சுடுகாட்டிற்குத் தூக்கிச் செல்பவர்கள் பெண்கள் போல வேடம் தரிப்பர். ஈர உடையில் இருக்கும் இவர்கள் ஆளுக்கொரு கத்தி வைத்திருப்பர். தரவாடினைச் சேர்ந்த இரு இளைஞர்கள் மாமரத்தின் குச்சிகளை எரியும் சிதையின் தெற்குப் பக்கத்தில் காட்டி அவை பற்றிக் கொண்டவுடன் அவற்றைத் திரும்பிப் பாராதவர்களாக முதுகுப் பக்கமாகத் தெற்கு நோக்கி வீசுவர். சிதையின் வடக்குப் பக்கத்தில் அருகே இரண்டு குச்சிகளைத் தரையில் நட்டு ஒன்றாகச் சேர்த்துக் கட்டி அதன் மேலாகச் சிதையின் மீது மும்முறை நீர் தெளிப்பர். தரவாடைச் சேர்ந்த அனைவரும் சிதையின் முன் விழுந்து வணங்குவர். தண்ணீருள்ள பானையினைச் சிதையினைச் சுற்றி எடுத்துச் செல்லும் இணங்கன் பின்செல்லும் அவர்கள், பின்னர் திரும்பிப்பாராதவர்களாக வீடு நோக்கிச் செல்வர். வீட்டின் வடக்குப் பக்கத்தில் கிழக்கு மேற்காக இருவர் தாங்கியபடி இருக்கும் வளைவின் வழியிலே நுழைந்து செல்வர். அந்த இருவரும் சுடுகாட்டில் குழிவெட்டப் பயன்படுத்திய மண்வெட்டினையும் சிதைக்கு விறகு வெட்டப்பயன்படுத்திய கோடரியையும் ஒன்றை ஒன்று முனையினைத் தொடும்படியாக உயரத் தூக்கி வளைவாகப் பிடித்தபடி நின்றிருப்பர். இதன்பின் கோடரிச் சடங்கு நடக்கும். மண்வெட்டி, கோடரி, பெரிய கத்தி ஆகியனவற்றைப் பிணத்தைக் கிடத்தியிருந்த வாழை இலை மேல்வைத்து வணங்கிய பின்அந்த இலையினைச் சிதை நெருப்பில் இடுவர்.'' எனத்திரு பாவ்செட் கூறுகின்றார்.

''1901 கொச்சி மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சாவுச்

சடங்குகள் தொடர்பாகக் கூறப்பட்டிருப்பது வருமாறு: ''சாகக் கிடக்கும் ஒருவனின் இறுதி வினாடிகள் மிக்க துன்பம் தருவன. இறக்க இருப்பவருக்கு வயதில் இளையவரான ஆண் பெண்கள் அனைவரும் சாகக் கிடப்பவரின் வாயில் கங்கா தீர்த்தம் அல்லது வேறு புண்ணியதீர்த்தம் அல்லது கஞ்சியினை அவருக்குத் தங்கள் இறுதிக்கடனின் அடையாளமாக விடுவர். அவருடைய மூச்சு நிற்கும் முன்அவரைத் தூக்கிவெறுந்தரையில் கிடத்துவர். படுக்கையில் உயிர் போகும்படியாக விடுவதோ மேற்கூரையுள்ள அறையினுள் உயிர்பிரிவதோ உயிர் பிரிந்து செல்லத் தடையானவையாகக் கருதப்படுகிறது. இறந்து கொண்டிருப்பவரின் காதில் அவர் இறை நினைவோடு உயிர் விட்டவராக மேலுலகம் செல்ல உதவும் வகையில் புனித நூல்களை ஓதுவர். அவரின் நெற்றி, மார்பு, மூட்டுக்கள் ஆகியவற்றின் மீது விபூதி பூசுவர். அவரைக் கொண்டு செல்லும் எமதூதர்கள் அவர் உடம்பின் அந்தப் பகுதிகளை இறுக்கமாகப் பிணைக்காது இருக்கவேண்டி இவ்வாறு விபூதி பூசப் படுகின்றது. உயிர் பிரிந்ததும் வீட்டின் வெட்ட வெளியான இடத்தில் பிணத்தைக் கிடத்தித் துவைத்த துணி கொண்டு கால் முதல் தலைவரை போர்த்துவர். தலை எமனுடைய திசையான தெற்கு நோக்கி இருக்கும்படி பிணம் கிடத்தப்படும். பிணத்தின் தலைமாட்டிலும் சுற்றிலும் விளக்கேற்றி வைப்பர். ஒரு மாமரம் அல்லது வேறு விறகினைக் கொண்டு வீட்டு எல்லையினுள் அக்கினி மூலையான தென்கிழக்கு மூலையில் சிதையினை அடுக்குவர். வீட்டு எல்லையுள் அப்பகுதி பிணம் எரிப்பதற்காக என ஒதுக்கப்பட்டதாகும். இறந்தவருக்கு வயதில் இளையவரான ஆண்கள் குளித்து உடம்பையும் தலையையும் துவட்டிக் கொள்ளாதவர்களாகப் பிணத்தை எடுத்து ஒரு வாழையிலையில் கிடத்தி எண்ணெய் பூசிக் குளிப்பாட்டுவர். நெற்றியிலும் மூட்டுக்களிலும் விபூதி, சந்தனம் ஆகியன பூசப்படும். பிணத்தின் மேல் உள்ள பழைய துணியினை அகற்றியபின் ஒரு புதுத்துணி அல்லது பட்டுத்துண்டு கொண்டு பிணத்தைப் போர்த்துவர். சிறிது தங்கம் அல்லது வெள்ளி அல்லது சிறு காசுகளைப் பிணத்தின் வாயில் ஈடுவர். தேங்காய் உடைத்து வைத்து அரிசி மா, வெற்றிலை பாக்கு முதலியன படைத்தபின் பிணத்தைச் சிதைக்குத் தூக்கிச் செல்வர். இறந்தவரை விட வயதில் இளையவர்கள் சிதையினை மூன்று ஐந்து அல்லது ஏழுமுறை சுற்றி வந்து நெல்லையும் அரிசியையும் பிணத்தின் மீது இடுவர். சந்தனக் கட்டையின் சிறு துண்டுகளைச் சிதையின் மீது வைத்து அதன் கால்மாட்டில் தரையில் விழுந்து வணங்கியபின் சிதைக்குத் தீ மூட்டுவர். இறந்தவர் குடும்பத்தைச் சேர்ந்த பெரியவராயின் உத்தரகிரியையும் சஞ்சயனமும் நடத்தப்படுவதோடு முற்றத்தில் அல்லது வீட்டின் முன் பலி குத்தி நட்டு அதன்முன் நாளும்

பலியிடுவர். இத்தகைய பலிச் சடங்குகளை அஷ்டகுரிச்சி நாயரே நடத்தி வைப்பான். பதினைந்தாம் நாள் காலையில் சாவு நிகழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வேலன் தரும் துவைத்த ஆடையினை அணிந்தவர்களாக நாயர் நடத்தி வைக்கவுள்ள தீட்டுப் போக்கும் சடங்கிற்காகக் கூடுவர். அவர்கள் குளிக்கும் முன்னும் குளித்த பின்னும நெல்லினையும் அரிசியினையும் அவர்கள் மீது தூவிப், புனித நீரினையும் தெளிப்பான்; குடும்பப் புரோகிதனாக இருந்து நடத்தி வைப்பான். பதினைந்தாம் நாள் மாலையிலும் பதினாறாம் நாள் காலையிலும் புரோகிதர்களுக்கும் ஊராருக்கும் நல்ல விருந்து இடுவதோடு இளையாடுகளுக்கு வேட்டி, தொகை ஆகியனவற்றைத் தானமாக வழங்குவர். சித்தூர் வட்டத்தில் இளையாடுக்குப் பதிலாகத் தமிழ்ப்பிராமணன் புரோகிதனாக இருந்து சடங்கை நடத்தும் வழக்கம் உள்ளது. தீட்சையினை நாற்பத்தொரு நாட்களுக்கோ ஓராண்டிற்கோ இறந்தவரின் ஆன்மா அமைதியடையும் பொருட்டு நடத்துவர். தீட்சை சடங்கு தாயார், தாய்மாமன் அண்ணன் ஆகியோர் இறப்புகளுக்கே மேற்கொள்ளப்படுவது பெரும்பாலான வழக்கமாக இருந்து வருகின்றது.''

நாயர்களின் குடியிருப்புகள் பற்றித்திரு பாவ்செட் பின்வருமாறு எழுதுகின்றார். ''வீடு கிழக்கு அல்லது மேற்குப் பார்த்ததாக இருக்குமேயன்றித் தெற்கு அல்லது வடக்குப் பார்த்ததாக இருக்காது. பெரும்பாலும் அது கிழக்குப் பார்த்தே அமைந்திருக்கும். வீட்டுத் தோட்டத்தினைச் சுற்றி மண்திட்டு, ஒரு முட்செடி வேலி அல்லது ஏதாவது ஒரு செயற்கை வேலி இருக்கும். உள்ளே நுழைய ஒரே ஒரு வழிமட்டுமே வேலியில் இருக்கும். அதன் அருகே வாயில் காவல் இல்லம் அமைந்திருக்கும். சாதாரண வசதியுள்ளவர்களின் வீடுகளின் வாயில் மேற்கூரை இடப்பட்ட நடையின் கதவாக அமைந்திருக்கும். ஒருவன் இதன் வழியே சென்றவனாக நேரே வீட்டினுள் நுழைந்துவிட முடியாது. வழியில் ஏற இறங்குவதற்கான படிக்கட்டுக் குறுக்கே இருக்கும். மலபாரில் உள்ள பெரும்பாலான இல்லங்களில் அமைப்பு இத்தகையதே. இது நாயர் இல்லங்களுக்கு மட்டுமான கட்டமைப்பு அமைப்பாகும். பணக்காரர்களுடைய நாலாபுற எனப்படும் நான்கு பக்க அமைப்புடைய இல்லத்தின் அமைப்பு வருமாறு.

6.7 எண் உடைய அறைகள் தானியச் சேமிப்பு அறைகளாகும். அ-என்பது குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் தங்கியுள்ள மேன்மாடத்திற்குச் செல்லும் படிக்கட்டாகும் ஆ- என்பது ஆண்கள் தங்கியுள்ள மேன்மாடத்திற்குச் செல்வதற்கான மற்றொரு படிக்கட்டு. ஆண்களுக்கும் பெண்களுக்குமான அப்பகுதிகளுக்கிடையே தொடர்பு ஏதும் இல்லை. 8- குடும்பத் தெய்வத்திற்கான அறை. குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த காரணவன்களும் மூதாட்டிகளும் தங்கம் அல்லது வெள்ளியினால் உருவங்களாக வழிபடப்பட்டுவர். பெரும்பாலும் பித்தளையால் இவர்களின் உருவங்களைச் சமைத்து வைப்பதே வழக்கம். இந்த உருவங்களுக்கும் கற்களில் வைத்து வழிபடப்படும் தெய்வங்களுக்கும் ஒவ்வொரு முழுமதி நாளிலும் படையல் இடுவர். ஒரு கோழியினை அந்த அறைக்கு வெளியே கழுத்தை வெட்டிக்கொன்று பின்னர் அறையினுள் எடுத்துச் சென்று படைப்பர். இ-என்பது வாயிலாகும்.



நாயர்கள் இல்ல அமைப்பு படம். 1

*** இக்குறியிட்ட இடங்கள் ஜன்னல்கள் உள்ள இடங்களாகும். ஈ - பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான அறைகள். ஆண்கள் உறங்குவதற்கான பகுதிகளில் பெண்களுக்கான பகுதியினைப் பார்த்தாற் போன்ற ஜன்னல்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அந்தப் பகுதிக்கு யார் வந்து



நாயர்கள் இல்ல அமைப்பு படம். 2

செல்கின்றார்கள் என்பதனை ஆண்கள் கண்காணிக்க இயலாதபடி பெண்களுக்கான அப்பகுதி அமைந்திருப்பதைக் காணலாம். சாவுச் சடங்குகள் பற்றிக் கூறும்போது வீடுகள் முற்றம் உடையனவாக இருக்கும் எனக் கூறியிருந்தோம். வீடு நாலு கட்டு உடையதாக இருந்தால்தான் இந்த முற்ற அமைப்புச் சாத்தியமாகும். நாலு கட்டு வீடுகளிலேயே எல்லாக் குடும்பச் சடங்குகளையும் மரபு முறைப்படி மேற்கொள்ள இயலும். மலபாரில் இத்தகைய அமைப்பினை நாயர் இல்லங்கள் எல்லாவற்றிலும் காணமுடியாது. சாதாரண அமைப்பிலான இல்லங்கள் அடுத்துள்ள வரைபட அமைப்பினை ஒத்தனவாக இருக்கும். பெரும்பாலும் அவற்றில் மேன்மாடமும் இருக்கும். மேற்குப் பக்கமாகக் கதவுகள் இல்லாது ஜன்னல்கள் மட்டும் கொண்டனவாக இவை அமைந்திருக்கும். ஆண்கள் ஒரு கோடியிலும் பெண்கள் மறுகோடியிலுமாக இதில் உறங்குவர். வீட்டைச் சுற்றி நிழல்தரும் மரங்களும் தென்னை வகைகளும் உயர்ந்தோங்கி வளர்ந்திருக்கும். ஒவ்வொரு இல்லமும் தனித்தே- வீதியமைப்பு உடையனவாக அடுத்தடுத்து அமையாமல் - அமைந்திருக்கும்.''

நாயர்கள் தங்கிவாழும் இல்லங்கள் பற்றித் திரு. என். சுப்பிரமணிய அய்யர் எழுதுவது வருமாறு:- ''நாயரின் இல்லம் சுற்றுச் சுவர் சூழப்பட்டதாகத் தனித்து அமைந்திருக்கும் . இவர்கள் இல்லங்களின் அமைப்பு, தாக்குதல் நடத்தவும் தற்காப்புத் தேடிக் கொள்ளவுமான இருவகைத் தேவைகளுக்கும் ஏற்றபடி திட்டமிட்டுக் கட்டப்பட்டது என்று கட்டுரையாளர்கள் பலர் கூறியுள்ளனர். ஒவ்வொருவனுடைய இல்லமும் அவனது கோட்டையாகும் என்ற பழமொழி இவர்கள் வீட்டினைப் பொறுத்தவரை உண்மையாகின்றது என மேஜர் வெல்ஸ் குறிப்பிட்டுள்ளார். தோட்டம் போட வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளினை உடையவர்களான நாயர்கள் வீட்டினைச் சுற்றித் தமக்குத் தேவையான சில பொருள்களை அதிகச் செலவின்றிப் பெறத் தோட்டம் அமைக்கின்றனர். வீட்டைச் சுற்றியிருக்கும் தோட்டத்திற்குச் செடிவேலி அல்லது உறுதியான செயற்கை வேலியினைப் போட்டிருப்பர். வீட்டின் வாசலில் பதிபுறம் என்ற இடைக்காலக் காவல் வீட்டினை ஒத்த வீடு இருக்கும். ஏழைகளின் வீட்டில் பதிப்புறத்திற்குப் பதிலாக மேலே கூரையிடப்பட்ட கதவு காணப்படும். அதில் கால்நடைகள் உள்ளே நுழையாமல் தடுக்கப்படிக்கட்டு கட்டியிருப்பர். வீட்டு வாசலைப் பசுஞ்சாணம் தெளித்து வெள்ளைக் கற்பொடியால் கோலமிட்டிருப்பர் சமையலறையாகப் பயன்படும் வடகட்டு, மாட்டுத்தொழுவம், குடும்பத்

தெய்வங்கள் வைக்கப்பட்டிருக்கும். தென்கட்டு ஆகிய மூன்று பகுதிகள் வெளிநோக்கிய வாயில்களை உடையன. மருத எனப்படும் பெரியம்மையால் இறந்தவர்கள் தென்கட்டில் தெய்வமாக வைக்கப்பட்டிருப்பர். இந்த அறையில் ஒரு வாள், ஓர் இருக்கை, பிற சின்னங்கள் ஆகியன இடம் பெற்றிருக்கும். இந்தத் தென்கட்டினைக் குருசாலை எனவும் களரி எனவும் தெய்வப்புற எனவும் கூட வழங்குவர். இந்தத் தென்கட்டில் நாள்தோறும் மாலையில் விளக்கு ஏற்றப்படுவதோடு அதனுள் குடிகொண்டிருக்கும் தெய்வங்களுக்கு அவ்வப்போது படையலும் இடுவர். வீட்டெல்லையின் தென்மேற்கு மூலையில் சர்ப்பக் காவும் (பாம்புப்புதர்) அதனருகே குளிப்பதற்கான குளமும் இடம் பெற்றிருக்கும். பலா, கழுகு, தென்னை, வாழை, புளி, மா போன்ற பல பயனுடைய மரங்கள் வீட்டெல்லையினைச் சூழ வளர்ந்தனவாக நிற்கும். வீடு, தோட்டம் ஆகியன அனைத்தும் அடங்கிய பகுதி வீடு எனப்படும். பலவகை அமைப்புக்களை உடையனவாக வீடுகள் கட்டப்படுகின்றன. பட்டையபுறம், நாலுகட்டு, எட்டுக்கட்டு, குட்டிக்கட்டு என்பன அந்த அமைப்புகளுக்குரிய பெயர்களுள் சிலவாம்.

நாயர்கள் உடை பற்றித் திரு என். சுப்பிரமணிய அய்யர் எழுதியுள்ளதாவது: "ஆண்கள் முண்டு எனப்படும் தளர்வுடையதான இடை ஆடையினையும் ஒரு துண்டினையும் தரிக்கின்றனர். சிறப்பான நாள்களின்போது நெறியது எனப்படும் கனமில்லாத மெல்லிய நூலிழையாலான துண்டினை இடையில் முண்டின்மேல் கட்டிக் கொள்வர். தலைக் குல்லாயும் மேல் கோட்டும் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டவை. நாட்டு வழக்கத்திற்கு ஒவ்வாதது என மரபு நெறியில் பற்றுடையவர்கள் அவற்றை மேற்கொள்வதில்லை. 'பெண்கள் மெல்லிய நூலிழையானலான வெள்ளைச் சேலை ஒன்றினையே இடையில் தரிக்கின்றனர். வீட்டை விட்டு வெளியே செல்லும் போது மார்பினையும் தோளினையும் மூடும்படியாக அத்தகைய மற்றொரு ஆடையினைத் தோளின் மீது இடுகின்றனர். இடையின் மேலே எதனையும் உடுக்கும் வழக்கம் நாயர் பெண்களிடையே இல்லை. மேலாடை புனைவது தாழ்ந்த சாதியினர் என்பதனைக் காட்டிக் கொடுப்பதோடு மேலை நாட்டவர் வழக்கத்தோடு முரண்பட்டதான வகையில் அது மரியாதைக்கு உரியதல்லாததாகவும் கருதப்படுகின்றது' எனத் திரு லோகன் தெரிவிக்கின்றார். 1740-இல் அன்ஜென்கொவிற்கு வருகை புரிந்த எட்வர்டு ஐவிஸ், 'ஆற்றின் இரு மருங்கும் உள்ள கரைகளில் தென்னை மரங்கள் வைக்கப்பட்டுள்ளன. அங்கு

ஆண்களும் பெண்களும் தங்கள் மார்பையும் வயிற்றையும் மூடாமல் கிட்டத்தட்டப் பிறந்த மேனியராகத் திரிந்த படியுள்ளனர். வயலில் நெல் பயிரிடும் ஏழைப் பயிர்த்தொழிலாளி முதல் அரியணையில் வீற்றிருக்கும் அரசனின் மனைவி மக்கள் வரையான எல்லோருமே இப்பழக்கத்தை மேற்கொண்டவர்களாக உள்ளனர்' எனக் கூறியுள்ளார்.'' (பழைய வழக்கின் படி திருவாங்கூரைச் சேர்ந்த நாயர் சாதிப் பெண்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் முன்செல்லும்போது தங்கள் மேலாடையினைக் களைவர். 1856-இல் அரசராயிருந்த மாட்சிமை தாங்கிய வஞ்சி பலராம வர்ம குலசேகரப் பெருமாள் பாக்யோதய ராமவர்மா பிறப்பித்த ஆணையின் மூலம் இந்த வழக்கம் ஒழிக்கப்பட்டது. 1901 இந்தியக் கணக்கெடுப்பு அறிக்கை பற்றிய விமர்சனத்தில் திரு. ஜெ.டி.ரீஸ், ''கணக்கெடுப்பு ஆணையர் நாயர்களிடையே தங்கி வாழும் வாய்ப்பினைப் பெற்றிருப்பாரேல் அவர் அவர்களிடையே பெண்கள் எண்ணிக்கையில் அதிகமாக உள்ளனர் எனக் குற்றம் சுமத்தியிருக்க மாட்டார். இந்தியாவிலேயே அழகில் மிக்கவரான இந்தப் பெண்களை எண்ணிக்கையில் மிக்கவர்களாகக் கருதலாமேயன்றித் தேவைக்கு அதிகமானவர்களாகக் கொள்ளுதல் பொருந்தாது'' எனக் கூறியுள்ளார்.''*





நாயரின் அணிவகைகள்

நாயர்கள் உடல் தூய்மை பேணுவதில் கருத்துடையவர்கள். ''உயர்குலத்தைச் சேர்ந்த மலையாளிகள் மிகச் சிறிய அளவினதான ஆடையினையே புனைகின்றனர். எனினும் உடல் தூய்மை பேணுவதில் மிகுந்த கருத்துடையவர்களாக உள்ளனர். இவர்களுள்ளே அடிமைகளிடையே தவிர மற்றவர்களிடையே தோல் தொடர்பான

* பத்தொன்பதாம் நூற்றாண்டு, 1904. (Nineteenth Century,. 1904.)

இந்தியர்கள். (L' Inde (sanles Anglair)

வியாதிகள் எவையும் இல்லை. தங்கள் தலைமுடியிலும் தோலிலும் உள்ள அழுக்கினை அகற்றப் பலவகைச் சோப்புத்தன்மையுடைய தாவரப் பொருள்களை இவர்கள் பயன்படுத்துகின்றனர்." எனப் புச்சனன் குறித்துள்ளார். வண்ணாணின் உதவியினை எப்பொழுதும் நாடியபடி உள்ள இவர்கள் ஒரு போதும் அழுக்கான உடைகளை அணிவதில்லை. கோயிலுக்குச் செல்லும்போது நாயர் பெண்கள் தட்டு முறையில் சேலையில் வலப்பக்க முனையினைத் தொடைகளுக்குக்கிடையே கொண்டு சென்று அதனைப் பின்னால் செருகிக் கொள்வர் இந்தச் சேலை பத்து முழ நீளம், மூன்று முழ அகலம் கொண்டது. நாகபடம் எனப்படும் கழுத்தணியே நாயர் சாதிப்பெண்களின் பழமையான அணியாகும். அதில் உள்ள பதக்கம் ஒரு நாகத்தின் படத்தினை ஒத்த அமைப்புடையது. தலையில் மலர்களைத் தவிர வேறு அணிகள் எதனையும் நாயர் சாதிப் பெண்கள் அணிவதில்லை. நாகபடமும் கழுத்தில், நலுபண்டி, புத்தாலி, செலக்க மோதிரம், அமதாலி, அரும்புமணி, குமிழதாலி முதலிய பிற அணிகளும் வழக்கிலிருந்து வருகின்றன. தாலிக்கட்டுச் சடங்கின் போது சிறுமியரின் கழுத்தில் முதல் முதலான குட்டுமின்னு என்ற அணியினை அணிவிப்பர். இதனை இங்ஙகனலி எனவும் அழைப்பர். தாலிக்கட்டுக்கு முன் சிறுமியர் காசு எனப்படும் பவுனைக் கழுத்தில் அணிந்தவர்களாயிருப்பர். இக்காலத்திய நாயர் பெண்களின் விருப்பமான அணி அட்டியலாகும். அதில் ஒரு பதக்கம் இணைக்கப்பட்டிருக்கும். காதுகளில் தக்க எனப்படும் தோடு மட்டுமே அணிகின்றனர். காதுகுத்துச் சடங்குக்குப் பின் காதுகளின் மடல்களினைத் தொங்கும்படியாகச் செய்து அவற்றில் பெரிய ஈய வளையத்தைப் பொருத்துவர். பெண்கள் அணியும் மூக்கணி, மூக்குத்தி எனப்படும். இதனை வல மூக்கில் அணிவர். இதிலிருந்து ஒரு தங்கக் கம்பி தொங்கும். தென்னிந்தியாவினைச் சேர்ந்த உயர்சாதிப் பெண்கள் அனைவரும் மணிக்கட்டுகளில் வளையல்கள் அணிவதை நெடுங்காலமாகவே மேற்கொண்டுள்ளனர். இடையினைச் சுற்றி நாயர் சாதிப் பெண்கள் தங்கம் அல்லது வெள்ளியாலான சங்கிலியினை அணிகின்றனர். பணக்காரர்கள் கச்சப்புறம் என்னும் பொன்னாலான ஒட்டியாணத்தை அணிவர். முன்பெல்லாம் இவர்களிடையே காலில் சிலம்புகள் அணியும் வழக்கம் இல்லை. இன்று தமிழர்களைப் பார்த்துக் காலில் கொலுசும் பாதசரமும் அணிகின்றனர். நெடுங்காலமாக வழக்கில் இருந்து வந்த தோடு அணியும் பழக்கத்தை விட்டு இதே போன்று தமிழ்நாட்டுக் கம்மல்களை அணியத் தொடங்கியுள்ளனர். இது தோட்டினைவிட அளவில் மிகச் சிறியது. பதினெட்டாம் நூற்றாண்டில் கொச்சியில் கிறித்தவ சமய சங்கச் செயலாரக இருந்த காண்டர்

விஸ்ச்செர் நாயர் பெண்கள் ஆடைகளுக்காகச் செலவிடும் பெருந்தொகையினை எண்ணி வியந்தவராக,' வெள்ளி மற்றும் விலை மதிப்புடைய பட்டு இழைகளாலான விலையுயர்ந்த ஆடைகளை வசதி படைத்தவர்கள் அனைவரும் இருபது முதல் முப்பது பெட்டிகள் நிறைய வைத்துக் கொண்டுள்ளனர். ஒரே ஆடையினைத் தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாள்கள் அணிவதனை இவர்கள் இழிவானதாகக் கருதுகின்றனர் எனக் கூறுகின்றார்.''

வெனிஸ் நகரத்திலிருந்து வாஸ்கோடகாமா மற்றும் அல்புசியர்க்கின் காலங்களில மலபாருக்கு வந்து சேர்ந்த தங்கக் காசினை அந்த நகரத்தில் அது புழக்கம் இழந்துவிட்ட பின்னரும் கூட மலபார் மக்களால் மிக விருப்பத்தோடு ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. செகுவின் எனப்படும் அந்தத் தங்கக் காசின் மீது மிகுந்த ஈடுபாடுடையவர்களாக மலையாளிகள் உள்ளதால் அதனை ஒத்ததான போலி நாணயங்கள் அணிகளாகப் பயன்படுத்துவதற்கென்றே தயாரிக்கப்படுகின்றன. இந்தக் காசின் செல்வாக்குத் தொடர்ந்து நீடிப்பதால் செம்பு, பித்தளை ஆகிய உலோகங்களில் கூட இதனைப்போன்ற காசுகள் தயாரிக்கப்படுகின்றன. பழைய காசுகளில் 'ஆஸ்டிரியாவில் தயாரிக்கப்பட்டது' என்ற வாசகம் பொறிக்கப் பட்டிருக்கும். நாயர்கள் பொன்னாலான குவின்களைத் தவிர வேறு உலோகங்களால் ஆனவைகளை அணிவதில்லை. பித்தளையாலான அதனையொத்த காசுகளைத் தாழ்ந்த சாதியினைச் சேர்ந்த பாமரானான மலையாளி ஒருவனை அந்தக் காசில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்கள் யாருடையவை எனக் கேட்டால் அவை 'இராமனும் சீதையும்- அவர்களுக்கிடையே ஒரு தென்னைமரம்உள்ளது எனப் பதிலிறுப்பான்'' எனத் திரு பாவ்வெட் குறித்துள்ளார்.

நாயர்கள் அணியும் தாயத்துகள் பற்றித் திரு பாவ்செட் பின்வருமாறு எழுதுகிறார். ''கிரியாட்டில் பிரிவு நாயர் ஒருவன் தங்கம் செம்பு ஆகிய இரண்டு உலோகங்களும் கலந்து செய்யப்பட்ட தம்பாக் எனப்படும் ஒன்றைத் தனது வலக்கையின் மோதிர விரலில் அதிர்ஷ்டத்திற்காக அணிந்திருந்தான். தம்பாக் மோதிரங்கள் அதிர்ஷ்ட்த்திற்காக அணியப்படுபவை. தம்பாக் மோதிரம் அணியப்பட்டுள்ள கைகளால் முகம் கழுவுதல் நன்மை பயக்கும். மற்றொருவன் திரிலோகம் எனப்படும் வகையினதான மோதிரங்களை மோதிர விரலில் அணிந்திருந்தான். இந்த மோதிரங்கள் கிரகணம் பிடித்த சமயத்தில் செய்யப்பட்டவை. மற்றொருவன் வடமலபாரிலுள்ள

கொட்டியூரில் நடைபெறவுள்ள புகழ்பெற்ற திருவிழாவின் காணிக்கையாகச் செலுத்தப்படுவதற்குரிய ஒரு வெள்ளி மோதிரத்தை அணிந்திருந்தான். சூத்திரசாதியினைச் சேர்ந்த நாயர் ஒருவரின் வல மூக்கு மூக்கணி அணிவிப்பதற்காக வெட்டப்பட்டது போல நெடுக்காகக் கீற்றாகப் பிளவுபட்டிருந்தது. அவனுடைய அன்னை முதன் முதலாகக் கருவுற்றபோது கருச்சிதைவுக்கு உள்ளானாள். எனவே இரண்டாவது குழந்தையான இவனுடைய மூக்கு, குல வழக்கப்படி கீறப்பட்டது. இன்னொருவன் வெள்ளியாலான வளையல் அணிந்திருந்தான். தன்னுடைய கையில் காயம்பட்டு அது நெடுநாட்களாக ஆறாத காரணத்தால் அவன் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பதியில் உள்ள தெய்வத்திற்குத் தன் கையில் உள்ள காயம் ஆறினால் அந்த வளையலைக் காணிக்கையாகச் செலுத்துவதாக வேண்டிக் கொண்டிருந்தான். அவன் அந்த வளையலை ஒருவன் மூலமாக அனுப்பி வைக்க எண்ணியுள்ளான். நீரில் மூழ்கி உயிர் துறந்த பிராமணன் ஒருவனுடைய ஆவி பேயாகத் தன்னைப் பிடிக்காமல் இருப்பதற்காக, அகத்துச் சரணம் நாயர் ஒருவன் தாயத்து ஒன்றினை அணிந்திருந்தான். மற்றொருவன் யானையின் வால் மயிர் ஒன்று சுற்றப்பட்ட வெள்ளி மோதிரத்தை அணிந்திருந்தான்.''

வடதிருவாங்கூர் நாயர்களிடையே பச்சை குத்திக் கொள்ளும் வழக்கம் பெரிதும் பேணப்படுவதில்லை. கொல்லத்திற்குத் தெற்கேயுள்ள பகுதிகளில் வாழும் நாயர்களே இப்பழக்கத்தை மேற்கொண்டுள்ளதாகத் திரு சுப்பிரமணிய அய்யர் கூறுகின்றார். கி.பி. 1680-இல் திருவாங்கூரின் மீது முகலாய சிர்தார் ஒருவர் படையெடுப்பின் விளைவாக இப்பழக்கம் பரவியதாகச் சில விவரங்கள் தெரிவிக்கின்றன. இன்று பச்சை குத்தும் பழக்கம் மிகச் சிலரால் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது. ஒட்டர் அல்லது குறவர் சாதியினைச் சேர்ந்த பெண்கள் சிறுமியருக்குப் பன்னிரண்டு வயதாகுமுன் பச்சை குத்தி விடுகின்றனர்.

நாயர்கள் சமய வழிபாடு பற்றித் திரு சுப்பிரமணிய அய்யர் எழுதுவது வருமாறு:-''நெற்றியில் சிவனுக்குரிய விபூதி தரித்திருந்தாலும் நாயர்களுக்கு உரிய தெய்வம் விட்டுணு எனப் புச்சனன் குறித்துள்ளார். இதன் வழி அவர்கள் சிவனையும் விட்டுணுவையும் ஒன்றாகவே பாவிப்பதைப் புலப்படுத்துகின்றனர். இவர்கள் சங்கராச்சாரியார் நெறியினைத் தழுவிய ஸ்மார்த்தர்களாவர். இந்து சமயத்திற்குரிய பெருந்தெய்வங்களை வழிபடுவதோடு கூட மாடன், உடயம, யக்ஷி.

சாத்தான், சண்டக்காரன், முர்டி, மருடன், அருகலன் ஆகிய சிறு தெய்வங்களையும் வழிபடுகின்றனர். இத் தெய்வங்கள் பலவற்றுக்கும் கல்லாலான உருவங்கள் உள்ளன. அவ்வாறு இல்லாதவை வாள் அல்லது பிரம்புகளில் ஏற்றி வைத்து வழிபடப்படுகின்றன. அவற்றை வைப்பதற்கெனத் தனிக் கோயில்கள் இருக்கும். இத்துடன் விபத்தில் உயிரிழந்தவர்களையும் தாலிக்கட்டுக் கலியாணம் செய்யப்படாது உயிர் துறந்த சிறுமியரையும் முறையே கழிச்சாவு, கன்னிச்சாவு என்ற பெயர்களால் வழிபடுகின்றனர். மந்திரவாதிகளிடம் இவர்களுக்கு அச்சம் உண்டு. ஆண்களும் பெண்களும் கேட்டினைத் தடுக்கும் தாயத்துக்களை இடையில் அணிவர். மலபாருக்குரியதான குறும்பு செய்யும் குட்டிச்சாத்தானை இவர்கள் மிகுந்த துன்பந்தருபவனாகக் கருதுவர். ஆவணி மாதத்தில் திருவோணத்தின் போது ஆவிகள் பலவற்றை இவர்கள் வழிபடுவர். மகர மாதத்தில் (தை) இருபத்தெட்டாம் நாளிலும் குறிப்பிட்ட செவ்வாய், வெள்ளிக் கிழமைகளிலும் இது போல ஆவிகளை வழிபடுவர். கொலம் துள்ளல், வேலன், பிரவர்த்தி, அயிரமணியம் துள்ளல், சாவுட்டு, திலஹோமம் ஆகியனவும் இவை போன்ற வேறுபல சடங்குகளும் ஆவிகளைத் திருப்திப்படுத்த மேற்கொள்ளப்படுகின்றன. இது போன்ற சடங்குகளின் போது கணியன்கள், வேலன்கள் ஆகியோர் உதவியை நாடிப் பெறுவர். பாம்புகளையும் இவர்கள் போற்றி வழிபடுகின்றனர். மத்திய வட திருவாங்கூர் பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள தோட்டங்களில் வடமேற்கு மூலையில் பாம்பின் உருவமைந்த கற்களை நட்டிருப்பதோடு அவற்றுக்குப் பெரிய அளவில் வழிபாடும் நிகழ்த்துவர். சூரியன் இவர்கள் அனைவராலும் வழிபடப்படுகிறான். காயத்ரியினையோ சந்தியாவந்தனத்தையோ பிராமணர்களைப் போல மேற்கொள்ளும் உரிமை நாயர்களுக்கு இல்லையாயினும் குளித்தபின் இவர்கள் சூரியனைப் பார்த்து வாழ்த்தியபடி நீரினை இறைப்பர். இளையாடுவிடமிருந்து பஞ்சாட்சரத்தைக் கற்றுக் கொள்ளும் இவர்கள் அதனை நாளும் ஓதுவர். மலையாளத்தில் தலைசிறந்த கவிஞரான துஞ்சாட்டு, எழுத்தச்சன் ஆகியோர் மலையாளத்தில் பாடியுள்ள இராமாயணம், பாகவதம், மகாபாரதம் ஆகியனவற்றைப் படித்து வயதான நாயர்கள் பொழுது போக்குவர். திருவாங்கூரைச் சேர்ந்த பல இடங்களை இராமாயண, மகாபாரத நிகழ்ச்சிகளோடு தொடர்புடையனவாகக் கூறுவர். இராவணன் தலைநகரை நோக்கி இராமன் சென்ற செலவோடு தொடர்புடையன என்று பல கோயில்கள், குளங்கள், மலைகள் ஆகியனவற்றைக் காட்டுவர். குருஷேத்திரப் போருக்கு முன், காட்டில் சுற்றித்திரிந்த பாண்டவர்கள் காட்டில் நிகழ்த்தியனவான அற்புதங்கள்

எனப் பலவவற்றைக் கூறுவர். பல பெரிய மலைகளைக் கொண்டு பீமன் கட்டிய கோயில்களையும் அவன் நிகழ்த்திய மலைப்புத் தரும் சாதனைகளையும் காட்டுவர். சில கோயில்கள் நாயர்கள் சிலருக்கே உரியனவாக உள்ளன. அக் கோயில்களைச் சேர்ந்த கரைக்காரர்கள் சிறப்பான சமயங்களில் அக் கோயில்களில் கூடுவர். அங்கு அப்பொழுது கூட்டம் எனப்படும் சமுதாய, சமய நெறிகள் இணைந்த சடங்கு நிகழும். இது இச் சாதித் தொடர்பான விவகாரங்களைக் கவனிக்க ஒவ்வொரு மாதத்தின் தொடக்கத்திலும் கூடும் ஊரவைக் கூட்டமாகும். இன்று இவ்வாறு கூடுபவர்கள் ஒவ்வொரு ஊரினரும் முறைவைத்துக் கொண்டு தரும் அறுசுவை விருந்தினை உண்டு கோயிலுக்குச் சிறுதொகையினைச் செலுத்திக் கலைந்து செல்வர். சோதிடத்தை நம்பும் இவர்கள் சில சோதிடர்களை இறப்பு, நடப்பு, எதிர்வு ஆகிய முக்காலங்களையும் உணர்ந்த திரிகால ஞானிகள் எனக் கூறுவர். சிவனின் மகன் சுப்பிரமணியன் கண்ட கலை சோதிடம். அக்கலையின் துணையால் அவன் தன் தந்தைக்கே சில தீங்குகள் வரப்போவதாகக் கூறச் சிவன் கொடுத்த சாபத்தால் அவ்வப்போது சில சமயங்களில் பலிக்காது போகின்றது. மாந்திரீகமும் பில்லிசூன்யமும் தீங்கிழைக்கும் ஆற்றல் வாய்ந்தவை என நம்புகின்றனர். ஒருவனைப் பைத்தியமாக்கவும் கைகால்கள் வராது போகச் செய்யவும் செல்வம் அனைத்தையும் மற்றவர்களுக்காகச் செலவு செய்யச் செய்யவும் ஊனமாக்கவும் செவிடாக்கவும் தேவையானால் வாழ்வுக்கே முற்றுப்புள்ளி வைக்கவும் இத்தகைய பில்லிசூன்ய மாந்திரீக வித்தை கற்றவர்கள் ஆற்றல் கைவரப்பட்டவர்கள். இத்தகைய மாந்திரீகத்திற்கும் சோதிடத்திற்கும் அடுத்தபடியாகக் கைரேகை, நல்வாக்கு, பில்லி சாத்திரம் ஆகியன இவர்கள் நம்பிக்கைக்கு உரியனவாக உள்ளன. யானை, நீர் நிறைந்த குடம், இனிப்புப் பலகாரங்கள், பழம், மீன், இறைச்சி, தெய்வ உருவங்கள், அரசர்கள், கன்றோடு கூடிய பசு, சுமங்கலி, கட்டியிருக்கும் காளைகள், பொன்னாலான விளக்குகள், நெய், பால் முதலியன எதிர்ப்படுதல் நல்ல சகுனங்களாகக் கருதப்படுகின்றன. கழுதை, விளக்குமாறு, எருமை, கட்டியிராக் காளைகள், நாவிதன், விதவை, நோயாளி, பூனை, வண்ணான் முதலியன எதிர்ப்படுதல் கெட்ட சகுனமாகும். ஒருவன் பாதையில் பூனை குறுக்கே போவது கெட்ட சகுனங்களுள் கெட்ட சகுனமாகக் கருதப்படுகிறது. ஒற்றைப் படையிலான நாயர்கள், இரட்டைப் படையிலான பிராமணர்கள் நல்ல சகுனமாகவும் கருதப்படுகின்றனர். ஆவணி மாதத்தில் விநாயக சதுர்த்தியன்று சந்திரனைப் பார்ப்பவர்கள் வீண் பழிக்கு ஆளாக வேண்டி வரும் என்ற காரணத்தால் யாரும் அன்று சந்திரனைப் பார்ப்பதில்லை.

''நாயர்களின் சிறப்பான சமயவிழா ஆகஸ்ட் மாத இறுதியிலோ செப்டம்பர் மாதத் தொடக்கத்திலோ கொண்டாடப்படும் ஓணம் ஆகும். மகிழ்ச்சியில் மூழ்கித் திளைப்பதற்குரிய சமயம் அது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இது பற்றி எழுதும் தந்தை பவுலினஸ் கூறியுள்ளதாவது:- செப்டம்பர் மாதம் பத்தாம் தேதியில் மலபாரில் மழைக்காலம் முடிவுறுகின்றது. இயற்கை மீண்டும் அப்போது புத்துயிர் பெறுவது போல மரங்கள் அனைத்தும் தளிர்த்துப் பூக்கும். ஐரோப்பியர்கள் இளவேனில் எனப் போற்றும் பருவ காலத்திற்கு இணையானது இது எனலாம். எனவே ஓணம் தெய்வங்களிடமிருந்து வளமிக்கதான மகிழ்ச்சிக்குரிய ஆண்டினை அருள வேண்டும் என்பதற்காகத் தொடங்கப்பட்ட விழா எனலாம். இது எட்டு நாள்கள் நீடிக்கும். அச் சமயம் இந்தியர்கள் தங்கள் வீடுகளை மலர்களால் அலங்கரித்துப் புனித விலங்கான பசுவின் சாணத்தால் மெழுகி இந்தியாவில் செல்வத்திற்குரியவளாகக் கருதப்படும் இலட்சுமிக்கு இந்நாளை உரியதாக்குவர். இச்சமயத்தில் புத்தாடை புனையும் இவர்கள் பழைய மண்பாண்டங்களுக்குப் பதிலாகப் புதியனவற்றைப் பெறுவர். சிலர் கருத்துப்படி ஓணம் மலபாருக்குரிய புத்தாண்டின் முதல் நாளாகும். இது சேரமான் பெருமாள் மக்காவிற்குப் புறப்பட்ட நாளினை முதலாக வைத்துத் தொடங்குவது. எனினும் பெரும்பாலான இந்துக்கள் இதனை மகாபலி மீண்டும் தன்னுடைய நாட்டுக்கு எழுந்தருளும் நாளாகவே கொள்கின்றனர். மகாவிட்டுணு அவனை அழித்தொழிக்கும்முன் இந்த நாட்டில் அவன் சிறப்புற ஆண்டு வந்தான். சிலர் இந்த நாளில் மகாவிட்டுணு மண்ணுலகிற்கு எழுந்தருளுவதாகக் கருதுவர். இங்கு எல்லாம் முறைப்படி நிகழ்கின்றதா என்பதனைக் கண்காணிப்பது அவர் வருகையின் சிறப்புக்கான காரணம் என்பர். வடமலபாரில் நில உரிமைப் பத்திரங்களும் சாதகங்களும் ஓணத்திற்கு முந்தின நாளினை ஆண்டி இறுதி நாளாகக் கருதி எழுதப்படுவதாகத் திரு நோகன் கூறுகின்றார். பெருமாள் அரேபியாவிற்குப் புறப்பட்ட யுகாதியின் தொடக்கமாக இதனைக் கருதுபவர்கள் கருத்தோடு இது ஏற்புடையதாக உள்ளதாகவும் அவர் கருதுகின்றார். இதன்படி பெருமாள் திருவோண நாளன்று தன் பயணத்தை மேற்கொண்டவர் என ஆகும். இதன்படி இந்நாள் பெருமாளான அவருக்கு மரியாதை காட்டுவதற்கான நாளாகின்றது. ஓணம் என்பது இந்த விழாவின் இரண்டாம் நாளன்று வரும் திருவோணம் நட்சத்திரத்தின் சுருங்கிய வடிவமாகும். இந்தத் திருவிழா நாள்களின் போது ஐந்து வயது முதல் பதினைந்து வயது வரையுள்ள சிறுவர்கள் அதிகாலையில் எழுந்து மலர்கள் எடுக்கச் செல்வர். அவர்கள் சேகரிக்கும் மலர்களுள் கதளி குறிப்பிடத்தக்கது.

மலர்களைச் சேகரித்துத் திரும்பும் அவர்கள் வீட்டின் முன் உள்ள துளசி மாடத்தருகே அமர்ந்து மலர் அரும்புகளைக் கொண்டு தரையில் விரிப்பினை ஒத்த அமைப்பினை உண்டாக்கி அதன் நடுவே களிமண்ணாலான கணபதியின் உருவத்தை வைப்பர். கல்கத்தா ரெவியூவில்* ஒருவர் இது பற்றி எழுதியுள்ளதாவது:- ''பொழுது புலரும் போது அரும்புகள் எடுக்கப் புறப்படும் சிறுவர்கள் அழகிய மலரரும்புகளைத் திரட்டியவர்களாக முற்பகல் ஒன்பது அல்லது பத்துமணிக்குத் திரும்புவர். அதன்பின் ஒப்பனைப் பணி தொடங்கும். இவர்கள் இயற்றும் ஒப்பனைகளுள் தரையில் மலர் அரும்புகளைக் கொண்டு அமைக்கும் விரிப்பே குறிப்பிடத்தக்கது. சிறிய அரும்புகள் அப்படியே முழுமையாகப் பயன்படுத்தப்படும். பெரிய மலர்களையும் பல தரப்பட்ட பச்சை இலைகளையும் கிள்ளி அரும்புகளிடையே அலங்காரமாக அமைத்து வைப்பர். தூய்மைப்படுத்தப்பட்ட வீட்டு வாசலின் முன்னரே இத்தகைய விரிப்பு அமைப்பு அலங்காரத்தைச் செய்வர். வண்ணங்கள் தம்முள் இணைந்து நயம்பட அமைந்த கலைப்படைப்பாகவே இவை அமைவது வழக்கம். விரிப்பு அமைப்பு முடிந்தவுடன் அதன்மேல் கொடிகளோடு கூடிய சிறு பந்தலினை இடுவர். இக்காட்சியின் சிறப்பினை நாள் முழுதும் அண்டை அயலார் வந்து கண்ணுற்றுப் பாராட்டிப் புகழ்ந்து செல்வர்.''

''ஓணம் திருவிழாவின் போது இவர்கள் பலவகைக் கள விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். அவற்றுள் கால் பந்தாட்டத்தைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். பவுலினஸ் அவர்கள் 'ஆண்கள், அவர்களுள்ளும் வயதில் இளையோர் இரு கட்சிகளாகப் பிரிந்து ஒரு கட்சியினர் மற்றொருகட்சியினர் மீது அம்பெய்து விளையாடுவர்' எனவும் 'இந்த அம்புகள் மழுங்கிய முனையினை உடையன எனினும் உறுதியானவை எனவும் இவற்றின் வேகங்காரணமாக இருபக்கத்திலும் பலர் காயமடைகின்றனர்' எனவும் கூறியுள்ளார். இந்த விளையாட்டுகள் கிரேக்கர், ரோமானியர் ஆகியோருடைய செரலிய மற்றும் ஜவெலினிய விளையாட்டுகளை ஒத்தவை.''

அம்புகளும் வில்களும் தொடர்பாகத் திரு பாவ்செட் கூறியுள்ளன வருமாறு:- ''எய்த்து என்னும் நாயர்கள் விளையாடும் சுவையான விளையாட்டினை நான் ஒரு முறை நேரில் குறும்பர நாட்டின் தென்பகுதியில் ஓணம் திருவிழாவினை அடுத்த பத்து நாள்களின் போது

* சனவரி, 1899

கண்டேன். அரைவட்ட வடிவமான இரண்டடி உயரமுடைய அம்பெய்யும் போட்டிக்கான இலக்குத் தடை இருமருங்கும் தரையினை நோக்கி சரிந்து செல்லும் அமைவு உடையதாக இருக்கக் கண்டேன். அம்பெய்யும் வீரர்கள் வலப்புறம் ஒரு குழுவினரும் இடப்புறம் ஒரு குழுவினருமாகப் பிரிந்து இலக்குத் தடையின் உட்குழிவுடைய பக்கத்தில் 25-இலிருந்து 30-கெச தூரத்தில் நின்றனர். ஒரு குழுவில் உள்ளோர் எண்ணிக்கை பற்றிய வரையறை ஏதுமில்லை. ஒவ்வொருவரும் மூங்கிலாலான சுமார் 18 அங்குல நீளமுடைய வில்லையும் அம்புகளையும் அல்லது அம்பினை ஒத்த பரும்போக்கான குச்சிகளையும் வைத்திருந்தனர். இவை தென்னையோலையின் ஈர்க்குச்சிகளைக் கொண்டு சிறிய அளவிலான இறக்கைப் பகுதிக்காக ஓலையினை விட்டு விட்டுச் சீவி அமைக்கப்பட்டவை. இலக்குத் தடையின் நடுவே தரையில் மூன்று அங்குலக் குறுக்கு விட்டமுள்ள வாழைத்துண்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதனிடையே அதனைத் தூக்கி அப்புறப்படுத்த உதவும்படியாக ஒரு குச்சி சொருகப்பட்டிருந்தது. செப்பு எனப்படும் இதனைப் பற்றி எடுத்துச் செல்வதே அம்பெய்வோர் குறிக்கோளாகும். அனைவரும் விருப்பம் போல் ஒரு சேர இலக்குத் தடையின் கீழ் உள்ள வாழைத் தண்டினைக் குறிவைத்து அம்பெய்தனர். யாருடைய அம்பு இலக்காக உள்ள வாழைத் தண்டில் சென்று தைக்கின்றதோ அவன் தரையில் குறி தவறியனவாகக் கிடக்கும் அம்புகளைத் தங்களுடையனவாக ஆக்கிக்கொள்ள முயற்சி மேற்கொள்ளுவான். இலக்கில் அம்பினை எய்தவன் இன்னொருவன் அதில் அம்பெய்யும் முன் ஓடிச்சென்று எல்லா அம்புகளையும் எடுத்துக் கொள்ளலாம். நான் பார்த்துக் கொண்டிருந்த போது ஒரே சமயத்தில் நான்கு அம்புகள் கூட இலக்கில் தைத்தன. அவற்றுள் முதல் அம்பைச் செலுத்தியவன் செப்பினைத் தொட விரைந்து ஓடினான். அவன் அதனைத் தொடுமுன் மேலும் நான்கு அம்புகள் இலக்கில் தைத்தன. யாருடைய அம்பு இறுதியாகச் சென்று தைத்ததோ அவனே தன்னுடைய கட்சிக்காக எல்லா அம்புகளையும் திரட்டிக்கொள்ளும் உரிமை உடையவன். இந்த விளையாட்டின்போது ஒரே சிரிப்பும் ஆரவாரமும் கேலியும் எங்கும் நிறைந்திருக்கும். பெருவாரியான அம்புகளைத் திரட்டி வருபவர்கள் தங்கள் மகிழ்ச்சியினை வெளிப்படுத்தக் குட்டிக்கரணம் இட்டவர்களாகக் குதித்துக் கும்மாளமிட்டபடி திரும்பினர்.'' குறும்பர நாட்டில் வில்களையும் அம்புகளையும் வைத்து விளையாடும் விளையாட்டுப் பற்றித் திரு. இ. எப். தாமஸ் கூறுவதாவது:-'' விளையாட்டில் பங்கு கொள்வோர் இரு குழுக்களாகப் பிரிந்து ஒரு குழுவினரை அடுத்து மற்றொரு குழுவினர் என மாறி மாறி அம்பெய்வர்.

இலக்கின் இருபுறமும் இரு குழுவினரையும் சேர்ந்த பிரதிநிதிகள் நிற்பர். ஒரு குழுவினைச் சேர்ந்த யாருடைய அம்பேனும் இலக்கில் தைத்தால் அக் குழுவின் பிரதிநிதி 'ஒடிவா' எனக் குரல் கொடுக்க அம்பெய்தவன் இலக்கினை நோக்கி ஓடுவான். மற்றொரு குழுவினர் இலக்கில் அம்பெய்யும் முன் இலக்கினை அடைவது அவன் நோக்கமாக இருக்கும். அவ்வாறு அதற்குள்ளாக அவன் அங்குச் சென்று சேர்ந்தால் அவன் எதிரியின் குழுவினரால் எய்யப்பட்டுக் கிடக்கும் எல்லா அம்புகளையும் திரட்டி எடுத்துக் கொள்ளலாம். இதற்கு மாறாக அவன் அங்குச் சென்று சேரும் முன் மாற்று அணியினர் அம்பு இலக்கில் தைக்குமானால் அவன் இலக்கருகே கிடக்கும் அம்புகளுக்கான உரிமையினை இழப்பான். மாற்று அணியினைச் சேர்ந்தவன் அம்புகளை எதிரணியினர் இலக்கில் மீண்டும் அம்பெய்யும் முன் கவர ஓடி வருவான். அவ்வாறு ஓடி வருபவன் இலக்கில் தைத்துள்ள இரண்டு அம்புகளை மட்டுமே எடுத்துக்கொள்ள உரிமையுடையவன். இரண்டாவது அம்பினைச் செலுத்தியவன் ஓடும் போது மூன்றாவதாக ஓர் அம்பு இலக்கில் தைக்குமானால் முதல் அம்பினைச் செலுத்திய கட்சியினர் இலக்கை அடைய ஓடுவர். முதல் அம்பையும் மூன்றாம் அம்பையும் செலுத்தியவர் இலக்கு அருகே கிடக்கும் எல்லா அம்புகளையும் திரட்டிக்கொள்ள உரிமை உடையவர்கள் என்பதும் இரண்டாம் அம்பு அல்லது நான்காம் அம்பினைச் செலுத்தியவர்கள் இலக்கில் தைத்துள்ள அம்பினை மட்டும் எடுத்துக்கொள்ளும் உரிமையுடையவர்கள் என்பதும் விளையாட்டின் விதியாகும். இந்த விளையாட்டில் பங்கு கொள்வோர் பெரும் பரபரப்புக்கு உள்ளாவர். இதனைக் கண்டு களிக்கப் பார்வையாளர்கள் பெரும் எண்ணிக்கையில் கூடுவர். இரு வாரங்களுக்கு ஒரு முறை நாயர்கள், தியர், மாப்பிள்ளாக்கள் முதலியோர் இவ் விளையாட்டில் ஈடுபடுவர். மிகத்தொன்மையான விளையாட்டான இது மெல்ல மறைந்து வருகின்றது என எனக்குத் தெரிவித்துள்ளனர். நான் இதனை நடுவானூரில் நேரில் கண்டேன்."

தென்கிழக்கு மலபாரில் பாலக்காட்டின் சுற்று வட்டாரத்தில் நிகழும் ஓணம் திருவிழாத் தொடர்பான விளையாட்டுக்கள் முரட்டு இயல்பு உடையன எனக் கூறும் திரு பாவ்செட் தெரிவிப்பதாவது:- "ஜமீன்களின் கீழே குத்தகைதாரர்களாக உள்ளவர்கள் தங்கள் ஜமீனின் தலைமையில் வந்து கூடியவர்களாக வரையறையேதும் அதிகமில்லாத குத்துச்சண்டையில் ஈடுபடுவர். உலோக உள்ளுறை கொண்ட கையுறையோடு குத்துச் சண்டையிட்ட ரோமானியர்களின் குத்துச் சண்டையினை ஒத்ததாக இது விளங்கும். இவர்கள் நிற்கும் அமைப்பு

ரோமானிய வீரர்கள் நின்று போரிடும் அமைப்பினை ஒத்தது. கி.மு. 30 முதல் தங்கள் பேரரசு வீழும் வரை ரோமானியர் மலபாரோடு தொடர்பு கொண்டவர்களாக இருந்துள்ளனர்.*ரோம் நகரின் முற்றுகையினை விலக்குவதற்காக அலரிக் கேட்ட மீட்புப் பொருள்களுள் குறிப்பிடப்பட்ட 3000 பவுண்ட் மிளகு மலபாரிலிருந்து கொண்டு வரப்பட்டதெனத் துணிவதில் தவறேதும் நிகழ வாய்ப்பு இல்லை.'' ஓணம் திருவிழாவின் போது ஊஞ்சலாடுவதும் இன்னிசைப் பாடல்களு (பதங்கள்) க்கேற்ப நாட்டியம் ஆடுவதும் பெண்களுக்குரிய பொழுதுபோக்குக்களாகும். திருவோணத்தை அடுத்த பதினாறாம் நாளான பதினாறாம் மகத்தின் போதும் பெண்கள் இத்தகைய பொழுதுபோக்குக்களில் ஈடுபடுவர். ஆண்களும் பெண்களோடு இத்தகைய ஆட்டங்களில் பங்கு பெறுவதுண்டு. ''ஓணம் திருவிழாவின் போது அன்பளிப்பாகத் தரப்படும் உடைகள் மஞ்சள் நிறத்தனவாயிருக்க வேண்டும் அல்லது அவற்றின் ஒரு பகுதியாவது மஞ்சள் நிறம் பெற்றிருக்க வேண்டும். துணியின் ஒரு மூலையில் குறைந்தது ஒரு கோடாவது மஞ்சள் நிறத்தில் இருக்க வேண்டும் என்ற வழக்கம் இருப்பதானது தொடக்கத்தில் ஓணம் திருவிழா இன்றிருப்பதைவிட மிகுதியாகச் சூரிய வழிபாட்டுடன் தொடர்புடையதாக இருந்திருக்குமோ என எண்ண இடந்தருகின்றது. இது அறுவடை தொடர்பான முதற்பருவ நெல் அறுவடை ஆகும் சமயத்தில் நடைபெறும் திருவிழாவாகும் எனத் திரு பாவ்செட் கூறுகின்றார்.

''மலபாரின் மற்றொரு முக்கியமான திருவிழாவான திருவாதிரை பற்றித் திரு டி.கே. கோபால் பணிக்கர் எழுதியுள்ளது• வருமாறு: ''மலபாருக்குரிய மூன்று முக்கிய திருவிழாக்களுள் திருவாதிரையும் ஒன்று. மலையாள மாதமான தனுர் (மார்கழி) மாதத்தில் திருவாதிரை நட்சத்திர நாளன்று இத்திருவிழா வரும். ஒரே ஒரு நாள் அளவினதான இது பெண்பாலருக்கே உரிய திருவிழாவாகும். நமது புராணங்களில் காதலுக்குரிய தேவனாகக் கூறப்பட்டுள்ள காம தேவனை மும்மூர்த்திகளுள் ஒருவரான சிவன் தன் நெற்றிக்கண்ணால் எரித்துச் சாம்பலாக்கியதன் நினைவாக இவ்விழாவினைக் கொண்டாடுகின்றனர். சிவனால் எரிக்கப்பட்ட அவன் இப்பொழுது உருவிலாளனாக இருந்து

* பார்க்க : தர்ஸ்டன் ரோமானிய நாணயங்களின் அட்டவணை முதலியன - நாணயங்கள் தொகு. சென்னை அரசு அருங்காட்சியம், 2ஆம் பதிப்பு, 1894. (See: Thurston, Catalogue of Roman etc. Coins, Madras Govt. Museum, 2nd ed., 1894)

• மலபாரும் அங்கு வாழ்வோரும், 1900. (Malabar and its folk, 1900)

வருவதோடு மனிதர்களுடைய கீழான இச்சைகளைத் தூண்டியவனாக உள்ளான். இந்தத் துயர நிகழ்ச்சியின் நினைவினை நமது பெண்கள் ஆண்டுதோறும் இந்நாளினை விழாக் கொண்டாடி நினைவில் கொண்டு வருகின்றனர். விழாவிற்கு ஒரு வாரம் முன்பே இதற்கான ஏற்பாடுகள் தொடங்கும். அன்று நாயர் குடும்பங்களைச் சேர்ந்த குலமகளிரான இளம் பெண்கள் அதிகாலையில் நான்கு மணிக்கு எழுந்து குளத்தில் சென்று கூட்டமாக நீராடத் தொடங்குவர். அப்பொழுது அவர்கள் அனைவரும் ஒரு சேரப் பின்வரும் முறையில் பாடுவர். ஒருத்தி காமன் தொடர்பான பாட்டினை இசையோடு பாடத் தொடங்குவாள். அவ்வாறு பாடுபவள் கைகளால் தண்ணீரைத் தட்டி ஒருவகை ஒலி எழுப்புவாள். தனது இடக்கையினைக் குவித்து நீருக்கு அடியில் வைத்துக் கொள்ளும் அவள் மற்றொரு கையினைப் பக்க வாட்டில் வெட்டுக் கத்தி போல் மோதி நாலாபுறமும் பலத்த ஓசையுடன் நீர் தெளிக்கும் படியாகச் செய்வாள். தொடர்ந்து இவ்வாறு பாட்டின் ஒரு பத்தி பாடி முடியும் வரை பாடும் அவள் பின் மற்றவர்கள் தொடர்ந்து அது போலப் பாட இடம் கொடுத்தவளாக ஓய்வு கொள்வாள். அவர்கள் அந்தப் பத்தியினைப் பாடி முடித்ததும் மீண்டும் நீரினைக் கையால் மோதியபடி இரண்டாம் சரணத்தைப் பாடுவாள். பாட்டு முடியும் வரை இது போல மாறி மாறிப் பாடியபின் அனைவரும் சற்று நேரம் அமைதியாக இருந்தபின் அடுத்த பாடலைப் பாடத் தொடங்குவர். அதிகாலையில் கிழக்கு வெளுக்கும் வரை இது போலப் பாடும் அவர்கள் பின் கரையேறி உடலைத் துவட்டியவர்களாக வீட்டுக்கு வந்து சிறந்த உடைகளை உடுப்பர். அவர்கள் தங்கள் கண்ணிமைகளில் புனக்கரியினை எண்ணெய் கலந்து மையாகத் தீட்டிக் கொள்வர். அஞ்சனக்கல் பொடியும் இந்த மைக்கலவையோடு மேற்பூச்சாக இட்டுப் பூசப்படும். நெற்றியின் நடுவே வெள்ளை, கருப்பு, சிவப்பு நிறங்களில் அவர்கள் கோடுகளைத் தீட்டிக் கொள்வர். அதன்பின் இந்த நாளின் அடுத்த நிகழ்ச்சியான ஊஞ்சலில் ஆடி மகிழச் செல்வர். ஊஞ்சல், கயிறு அல்லது மூங்கிலால் அமைக்கப்பட்டிருக்கும் விழாவன்று காலையில் குளித்து முடித்தவுடன் மிதமாகச் சிற்றுண்டி உண்ணும் இவர்கள் பகலில் இந்த விழாவிற்கு எல்லோரும் சிறப்பாகத் தயாரிக்கும் திருவாதிரைக் களியினை ஒரு பிடி பிடிப்பர். நன்கு பழுத்த வாழைப்பழம், கூவைக் கிழங்கின் மாவு, சர்க்கரை, தேங்காய் ஆகியனவற்றைக் கலந்து செய்யப்படுவது. திருவாதிரைக் களி, அதன்பின் பகல் முழுதும் ஆட்டம் பாட்டத்தில் பொழுது போக்குவர். அன்று ஓணம், விசு நாட்களில் போலவே கணவன்மார் பொழுது விழுமுன் வீட்டிற்கு வந்து சேர வேண்டும் எனப் பெண்கள் எதிர்பார்ப்பர். இவ்வாறு அவன் வரத் தவறுவானாயின் அது

தன்னிடமிருந்து பிரிந்து போக அல்லது தன்னை மணமுறிவு செய்ய அவன் மேற்கொள்ளும் முதல் நடவடிக்கையாகும் என்பதனை அவனுடைய மனைவி புரிந்து கொள்வாள். குளிர் காலமான டிசம்பர் மாதத்தில் வரும் இந்த விழாவின் போது கிழக்கே இருந்து வீசும் வாடைக்காற்றால் தங்களுக்கு ஏற்படும் உடல் துன்பத்தைப் பொருட்படுத்தாதவர்களாகப் பெண்கள் அதிகாலையில் நீர் விளையாட்டில் ஈடுபடுகின்றனர். நடுக்கும்படியான குளிரில் இதில் ஈடுபடுவதை அவர்கள் இன்பமாகவும் கருதுவர். மேலே கூறப்பட்ட ஊஞ்சலாடுதலுக்கும் நீர் விளையாடலுக்கும் உரியதான உட்கருத்துக்கள் உள்ளன. ஊஞ்சல் ஆட்டம் காமக்கடவுளான தங்கள் நாயகனான மன்மதன் இறப்பினை எண்ணி வருந்திப் புலம்பும் இவர்கள் ஊஞ்சலில் தூக்கிட்டவர்களாக தங்கள் உயிரைப் போக்கிக் கொள்வதை உருவகமாகக் குறிக்கும். நீரைக் கையால் அடித்து நீராடுதல் காமதேவன் இறப்புக்காக மார்பில் அடித்துக் கொண்டு புலம்புவதன் அடையாளம் ஆகும்.''

இவர்களின் மற்றொரு முக்கிய திருவிழாவான விசுவினைத் திரு கோபால் பணிக்கர் பின்வருமாறு விளக்குகின்றார்:- ''ஓணத்தையும் திருவாதிரையினையும் போலவே விசுவும் நமக்கு முக்கியமான திருவிழாவாகும். இது ஒரு நாள் அளவில் நிகழும் விழாவாகும். மேடமாதத்தின் முதல் நாள் ஏப்ரல் மாதத்தில் மாறாது ஒரே தேதியில் வருவது. இது வானியல் கணக்குப்படியான புத்தாண்டு நாளாகும். பண்டை நாளில் மலபாரில் ஆட்சியில் உள்ளவர்களுக்கும் அரசர்களுக்கும் அவர்களால் ஆளப்படும் மக்கள் புத்தாண்டுக்கான காணிக்கையினைச் செலுத்தும் நாளாக இது இருந்து வந்துள்ளது. இவ்வாறு வழக்கமான காணிக்கையை எவ்வளவு தொல்லைகள் இருப்பினும் அவற்றைத் தாங்கிக்கொண்டு கொண்டு போய்ச்செலுத்தத் தவறுபவர்கள் அதிகாரவர்க்கத்தின் கோபத்திற்கு உள்ளாவதோடு பல கொடுமைகளுக்கும் உட்படுவர். இந்தத் தொல்லையினால் மக்கள் படும் அவதியினைக் கண்ட பிரிட்டிஷ் அரசு 1790-ஆம் ஆண்டு அளவிலேயே இந்திய நாட்டை ஆளும் மன்னர்களிடமிருந்து மக்களுக்குச் சுமையாக உள்ள இந்தப் புத்தாண்டுக் காணிக்கை வாங்கும் வழக்கத்தைக் கைவிட வேண்டும் என வாக்குறுதி பெற்றுள்ளது. இதன் காரணமாக இந்த விழாவிற்கு உரியதாக இருந்த புனிதத் தன்மையும் பெருமையும் ஓரளவு குறைந்து விட்டது எனலாம். எனினும் அதனை நினைவூட்டும்படி சில வழக்குகள் இருந்தே வருகின்றன. குத்தகைக்காரர் இன்று பெரிய குடும்பத்தைச் சேர்ந்த

நிலவுடைமையாளருக்கு விசு நாளுக்கு முதல் நாள் பொருள்களைக் காணிக்கை செலுத்தியே வருகின்றனர். புத்தாண்டுக்குரிய புனிதமான முதல்நாள் என்ற காரணத்தால் இது தொடர்பான சிலமூட நம்பிக்கைகளும் இந்தியர்களிடையே உள்ளன. இந்த நாளன்று காலையில் முதன்முதல் ஒருவன் கண்முன் நிகழும் நிகழ்ச்சிகளின் அடிப்படையிலேயே அந்த ஆண்டுக்கான அவன் வாழ்வும் தாழ்வும் அமையும் என நம்புகின்றனர். நாயர்கள் வழக்குப்படியும் இந்துக்களின் புராணங்களின் கூற்றுப்படியும் சில பொருள்கள் இயல்பிலேயே தீங்கினைத் தரும் பண்பினைப் பெற்றுள்ளன எனக் கருதப்படுகின்றது. சாம்பல், விறகு, எண்ணெய் போன்ற பல பொருள்கள் இந்தப் பட்டியலில் அடங்குவன. இவற்றைப் புத்தாண்டு நாளில் விழித்தவுடன் முதன்முதல் ஒருவன் பார்க்க நேர்ந்தால் அந்த ஆண்டு முழுதும் அவன் பல தொல்லைகளுக்கு ஆட்பட வேண்டி வரும். இதன் காரணமாக வரும் தீங்கான விளைவுகளை அடுத்த புத்தாண்டு நாளில் விழித்தவுடன் அரசர்கள், காளைகள், பசுக்கள்,பொன் போன்ற புனிதப் பொருள்களில் ஒன்றைப் பார்த்தே விலக்கிக் கொள்ள முடியும் என நம்புகின்றனர். இத்தகைய பொருள்களைப் பார்த்தால் வரும் நலம், தீங்குகள் ஒருவன் ஒரு முக்கியமான காரியத்தை முன்னிட்டுப் புறப்படும் போதும் முதன் முதல் அவற்றைப் பார்க்கும் போதும் அவற்றுக்கு உரிய பயனைத் தரத்தக்கன. இதனைக் கருத்தில் கொண்டவர்களாகச் சமய நம்பிக்கையுடைய ஒவ்வொரு குடும்பத்தினரும் புத்தாண்டு நாளன்று காலையில் பார்ப்பதற்குரியனவான 'காணி' எனப்படும் மங்கலமான பொருள்களை முந்திய நாள் இரவே தயார்படுத்தி வைத்துக் கொள்வர். வெண்கலத்தாலான ஒரு சிறு பாத்திரத்தில் அதனுள் மங்கலப் பொருள்களை அணி, துவைத்த துணி, நல்ல வண்ணத்தனவான கொன்றை (Cassia Fistula) மலர்கள், ஒரு படி அரிசி, வெண்கலத்தாலான முகம் பார்க்கும் கண்ணாடி, மற்றும் சில பொருள்களை அழகுபட வெண்கலத்தட்டில் அடுக்கி வீட்டினுள் நடுநாயகமான அறையில் வைப்பர். இந்தத் தட்டின் இருபுறமும் பித்தளை அல்லது வெண்கலத்தாலான விளக்குகளைப் பளிச்சென விளக்கி நல்ல சுத்தமான தேங்காய் எண்ணெயால் நிறைத்து எரியும் படியாக ஏற்றி வைப்பர். அதன் முன் ஒரு பலகை அல்லது இருக்கை இடப்பட்டிருக்கும். புத்தாண்டு நாளன்று அதிகாலையில் முதலில் எழுந்திருப்பவர் வீட்டில் உள்ள ஆண்,பெண் அனைவரும் எழுந்திருக்கும்படி கூறிக் கண்களை அவர்கள் வேறு எதனையும்பார்க்க இயலாதபடி கட்டி அழைத்துப் போய் 'காணி'யின் முன் உள்ள

இருக்கையில் அமர்த்துவர். இவ்வாறு ஒவ்வொருவராக அழைத்துப் போய் 'காணி'யின் முன் அமர்த்திக் கண்களைத் திறக்கும்படியும் காணியினைக் கவனத்துடன் பார்க்கும்படியும் அறிவுறுத்துவர். அதன்பின் ஒவ்வொருவரும் வீட்டில் உள்ள மரியாதைக்குரிய ஒருவரையோ அயலார் ஒருவரையோ காண்பர். இதன்பின் வீட்டில் உள்ள சிறுவர்கள் தாங்கள் வாங்கிப் பாதுகாத்து வைத்திருக்கும் பட்டாசினைக் கொளுத்தி மகிழ்வர். அதன்பின் காணியினை அந்த வடடாரத்தைச் சுற்றியுள்ள வீடுகளுக்கு ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த அத்தகைய பொருள்களைச் சேகரித்து அலங்கரிக்க முடியாதவர்களுக்கு உதவுவதற்காக எடுத்துச் செல்வர். பட்டாசு வெடிச் சத்தம் அடங்கியதும் கிழக்கு வெளுக்கத் தொடங்கும். அதன் பின் காலை உணவிற்கான ஏற்பாடுகளைத் தொடங்குவர். சில பகுதிகளில் இது அரிசிக் கஞ்சியும் அதற்கு ஏற்ற சுவையான கூட்டுக் கறிகளாகவும் மற்றப் பகுதிகளில் சோறும் அதற்கான துணை உணவுப் பொருள்களாகவும் இருக்கும். எந்த வகையான காலை உணவாயிருப்பினும் அது பெரிய அளவிலான விருந்தாக இருக்கும். அது முடியும்போது பொழுது புலர்ந்திருக்கும். காலை உணவானவுடன் குடும்பத் தலைவர்கள் குடும்பத்தில் உள்ள இளையோருக்கும் வீட்டுப் பணியாளர்களுக்கும் மனைவி மக்களுக்கும் கைச்செலவுக்கெனப் பணம் வழங்குவார். அதிகப்படியான எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களில் குடும்பத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் தலைமை ஏற்று உள்ளவர்கள் அது போன்ற தொகைகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மனைவி மக்கள் பணியாட்கள் போன்றோருக்கு வழங்குவர். இந்த விழாத் தொடர்பான மற்றுமொரு செய்தியினை இங்கே கூறியாக வேண்டும். விசு நாளுக்கு முந்தினநாள் மாலையில் சுமார் நான்கு அல்லது ஐந்து மணியளவில் வசதியுள்ள குடும்பத்தினர் நெல் அல்லது அரிசியினையும் மற்றுமுள்ள துணைப்பொருள்களையும் குடும்பத்தைச் சேர்ந்த வேலைக்காரர்களுக்கு அவர்கள் தங்கள் பண்ணையோடு இணைந்து இருந்து வாழ்பவர்களாயினும் தனித்து வாழ்பவர்களாயினும் அதனைப் பற்றிக் கவலைப்படாது கொடுத்து உதவுவர். இதற்கு ஈடாக அவர்கள் தங்கள் உழைப்பால் விளைவித்த காய்கறிகள், தேங்காய் எண்ணெய்,வெல்லம், வாழைப்பழம், பூசணி, வெள்ளரி, கத்தரி முதலியனவற்றை அன்பளிப்பாகத் தங்கள் சக்திக்குத் தக்கபடி பண்ணையாருக்குத் தருவர். பகல் உணவோடு பின் நாட்டியமும் பலவகை விளையாட்டுக்களும் நிகழ்த்துவர். இந்நிகழ்ச்சிகள் விழாத் தொடர்பான மகிழ்ச்சியினை மேலும் மிகுவிக்கும். மற்ற முக்கியமான விழா நிகழ்ச்சிகளின் போது நடத்தப்படுவது போலச் சீட்டாட்டம் முதலிய விளையாட்டுக்களிலும் ஈடுபடுவர்.

நாயர்களின் சமயம் தொடர்பாகத் திரு பாவ்செட் பின்வருமாறு எழுதுகின்றார். அரசுப்பணித் தொடர்பான கட்டாயத்தின் காரணத்தா லல்லாமல் வேறு எக்காரணம் கொண்டும் நாயர் ஒருவன் குளித்து உடைகளை மாற்றாமல் உணவு கொள்ளமாட்டான். குளித்தபின் வழிபாடு செய்யக் கோயிலுக்கு நாளும் ஒரு முறையேனும் செல்ல வேண்டும் என்ற விதியினையும் இவர்கள் மீறுவதில்லை. பொதுவாக நாளும் இருமுறை அவ்வாறு கோயிலுக்குச் செல்வதே இவர்கள் வழக்கம். செறுமான், புலையன் அல்லது வேறு தாழ்ந்த சாதியினைச் சேர்ந்த தியன் போன்றவர்களுள் எவரையேனும் கோயிலிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் வழியில் எதிர்பட்டு நெருங்க நேரினும் தூய தன் உடலும் மனமும் தன் நெற்றியிலிட்ட சந்தனக் கீற்றுகளும் தீட்டுக்குள்ளாயினவாகக் கருதி மீண்டும் திரும்பிப் போய் குளித்து வந்தே வீட்டினுள் புகுந்து உண்ணத் தொடங்குவான். புச்சனன் குறிப்புகளிலிருந்து அவனுடைய காலத்தில் - சுமார் நூறாண்டுகளுக்கு முன்பு- நாயரை நெருங்கும் தாழ்ந்த சாதியினன் ஒருவனை மறுபேச்சுக்கு இடமின்றி உடனே வெட்டி வீழ்த்திவிடுதல் வழக்கம் என்று தெரிகின்றது. இன்று இந்திய மக்கள் ஆயுதங்களைத் தாங்கிச் செல்ல இயலாதபடி ஆயுதத் தடைச் சட்டம் ஏற்பட்டிருப்பதாலும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் ஆகிய அனைவரையும் சமமாகக் கருதும் சட்டமுறை வழக்கில் இருப்பதாலும் இன்று ஒரு நாயர் தான் மிதப்போடு நடந்து செல்லும் வழியில் அத்தகையோர் குறுக்கிடும் போது உரத்துக் கத்தித் தனக்கு வழிவிடும்படி கேட்பதைத் தவிர வேறு வழியற்றவனாக உள்ளான். அவனுடைய மமதை குறையவில்லை எனினும் அவன் அதனைப் முன்பு போல வெளிப்படுத்திக் கொள்ள இயலாதவனாக உள்ளான்.

''கள்ளிக்கோட்டைக்குப் பதினைந்து மைல் வடக்கே கடற்கரையில் உள்ள கோயிலண்டையின் அருகே உள்ள பிச்சாரிக் காவில் உள்ள பிச்சாக் கோயிலில் நடைபெறும் சடங்குகளை நான் விளக்குகின்றேன். இங்குப் பகவதி பேருருவினளாக ஓர் அசுரனைக் குத்திக் கொன்றது தொடர்பாக ஆண்டுதோறும் திருவிழா நடத்துகின்றனர். இந்தத் திருவிழா ஏழு நாள்கள் நடைபெறும். நான் 1895-இல் அங்குச் சென்ற போது மார்ச் 31-ஆம்தேதி அந்த விழாவின் இறுதி நாளாக அது இருந்தது. கோயிலின் வழக்கமான பூசாரியான மூசாடு கோயிலைப் பெருக்கித் தூய்மை செய்த பின் அங்கிருந்து சென்று விடுவான். பொழுது புலருமுன் ஐந்து நம்பூத்ரிகள் அங்கு வந்து சேர்வர். அவர்கள் தங்களுடன் சுத்தி கலசத்தை எடுத்துச் செல்வர். கலசத்தில் பஞ்சகவ்வியம், தண்ணீர், சில ஆலம் இலைகள், தருப்பை ஆகியன

இருக்கும். அவற்றைக் கோயிலுக்குக் கொண்டு வருமுன் மந்திரங்கள் சொல்லி அவற்றைப் புனிதப்படுத்தியிருப்பர். அந்தக் கலசத்தில் உள்ளதனைக் கோயில் முழுக்கத் தெளிப்பதோடு கிணற்றிலும் சிறிது விடுவர். அதன்பின் நம்பூத்ரிகள் வழக்கமான காலை வழிபாட்டினை மேற்கொள்வர். பின்னர் அவர்கள் கோயிலைவிட்டு வெளியேற மூசாடு திரும்பக் கோயிலினுள் வந்து பூசாரியாகப் பொறுப்பு ஏற்பான். இந்தக் கோயில் நான்கு தரவாடுகளுக்கு உரியது. கோயிலினைப் புனிதப்படுத்தும் பணி முடிந்த அளவில் ஊராளர் எனப்படும் அந்தக் கோயிலுக்கு உரிமை பூண்ட தரவாடுகளின் காரணவன்கள் கோயில் பணியாளனிடம் (பிச்சாரொடி) அவர்களுள் ஒருவர் பொறுப்பில் சென்ற திருவிழாவின்போதிருந்து இருந்து வரும்வெள்ளிக்கொடியினைக் கொடுப்பர். பிச்சாரொடி அதனைப் பெற்றுத் திருவிழா தொடங்கி விட்டது என்பதற்கு அடையாளமாகக் கோயிலின் கிழக்கு வாசலின் முன் ஏற்றுவான். இவ்வாறு கொடியேற்றும்போது அதனை அறிவிக்கும் வகையில் தென்னிந்தியாவெங்கும் வழக்கில் உள்ள சிறிய கதனை வெடிகள் வெடிக்கப்படும். இந்த வெள்ளிக்கொடியேற்றத்தின் பின் கோயிலின் நாலாப்பக்கமும் சிறிய அளவிலான வண்ணக் கொடிகளை ஏற்றுவர். அடுத்த சில நாள்கள் காலை, நண்பகல்,இரவு ஆகிய முப்போதும் பகவதியின் உருவத்தை யானை மீது வைத்து இசையும் வெடியொலியும் முழங்க ஊர்வலமாக எடுத்துச் செல்வதைத்தவிர வேறெதுவும் நிகழ்வதில்லை. வருகை தந்துள்ள அனைவருக்கும் கோயிலார் உணவளிக்க வேண்டுவது கடமையாகும் எனக் கருதப்படுகிறது. கூட்டம் பெரிதாகவே இருக்கும் . ஐந்தாம் நாள் வண்ணான் சாதியினைச் சேர்ந்த ஒருவன் கோயிலிலிருந்து பகவதி ஊர்வலமாகப் புறப்பட்டுக் கோயிலினைச் சுற்றிவரும் எனச் சுற்று வட்டாரத்தில் தண்டோராப்போடுவான். கோயிலோடு தொடர்புடைய அனைத்துப் பணியாளர்களையும் போலவே இவனும் இப்பணிக்குப் பரம்பரை உரிமை பூண்டவன். கோயில் எல்லையில் கோயில் நிலத்தில் குடியிருந்து வரும் இவன் அதனை ஈடு செய்யும் வகையில் கோயில் திருவிழாவின் போது சில கடமைகளை மேற்கொள்ள வேண்டிய வனாகின்றான். இந்தப் பொறுப்புக் காரணமாக சமூகத்தில் இவன் சில உரிமைகள் பெற்றவனாகவும் உள்ளான். விழாவின் ஐந்தாம் நாள் பிற்பகல் வண்ணானும் மனூதனும் ஒருவர் பின் ஒருவராக இரண்டு குடைகளைக் கோயிலுக்குக் கொண்டுவருவர். வண்ணான் துணிக் குடையினையும் மனூதன் தன் பனையோலைக் குடையினையும் எடுத்துவருவர். துணிக் குடையினை வண்ணான்தன் பொறுப்பில் வைத்திருப்பானா என்பது எனக்கு உறுதியாகத் தெரியாது. எனினும் அது

அவ்வாறே இருக்கலாம் எனக் கருதுகின்றேன். அதனைக் கோயிலுக்கு எடுத்து வரும் போது அதில் எத்தகைய பழுதும் இல்லாதபடி பார்த்துக் கொள்வது வண்ணான் பொறுப்பாகும். குடைகளை ஏந்தியபடி பணிவு தோன்ற நடந்து வரும் இந்த இருவரின் பின்னும் பெருங்கூட்டம் வந்தபடி இருக்கும். காலை, நண்பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் யானை மீது பகவதியினை வைத்து ஊர்வலமாகக் கொண்டு செல்வர். ஆறாம் நாள் அதிகாலை முக்குவன் (மீனவன்) சாதியைச் சேர்ந்த அரையன் எனப்படும் தலைவன் கொல்லனோடும் பொற்கொல்லனோடும் கூட்டம் பின்தொடர எத்தகைய ஆரவார இசையும் இன்றிக் கோயிலுக்கு வருவான். அரையனுக்கு அவன் அழைத்து வந்தவர்களுக்கும் அரை மூட்டை அரிசி தரப்படும். கோயிலைச் சேர்ந்த வெள்ளிக் குடையொன்றினை மீண்டும் மாலையில் அவன் கோயிலுக்கு வரும்போது எடுத்து வர அவனிடம் கொடுக் கப்படும். கருங்கொல்லனிடம் கோயிலைச் சேர்ந்த வாளினைத் தருவர். பொற்கொல்லன் அரையனிடமிருந்து வெள்ளிக் குடையினைப் பெற்று அதற்குத் தேவையான பழுதுபார்க்கும் பணிகளைச் செய்து முடிப்பான். அதே போன்று கருங்கொல்லன் வாளுக்குச்செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்வான். அன்று பிற்பகல் தியன் சாதிக்குரிய தலைவனான தண்டான் தன் சாதியைச் சேர்ந்த இருவர் ஒரு மூங்கிலில் மூன்று குலை இளநீரைச் கட்டித் தோளில் வைத்துச் சுமந்தவர்களாக வரக் கோயிலுக்கு வந்து சேர்வான். தென்னை மரத்தில் ஏறிக் கள்ளிறக்குவது தேங்காய் பறிப்பது முதலியன தியன் சாதிக்குரிய தொழிலாக இருப்பதால் அவர்கள் இளநீரைப் படையலுக்காகக் கொண்டுவருவது பொருத்தமானதே. தண்டான் வரும்போது கொட்டு முழக்குப் பின் தொடர்வதோடு பெருங்கூட்டமும் அவனைத் தொடர்ந்து வரும். அவன் முன்னே சிலர் கையில் கேடயமும் மூங்கிலும் ஏந்தியவர்களாகப் போலியாகக் கத்திச் சண்டையிட்டபடியும் வில்லிலிருந்து அம்பினை எய்வது போல நடித்தபடியும் செல்வர். அப்பொழுது பெரும் கூச்சலும் ஆரவாரமும் நிகழும். அடுத்துக் கருங்கொல்லனும் பொற்கொல்லனும் வாளோடு வருவர். அவர்களின் பின்னால் அரையன் வெள்ளிக்குடையினை ஏந்தியவனாக ஆரவாரமிக்க இசை பின்தொடர முன்னும் பின்னுமாக நீளவாக்கில் இருவர் சிவப்புத் துணியிலான மேற்கட்டியினைப் பிடித்துவர அதன் கீழ் வருவான். இரவு முழுதும் நடைபெறும் பகவதியின் ஊர்வலம் பொழுது புலரும்போது முடிவுறும். இந்த ஆறுநாள் திருவிழா நிகழ்ச்சியும் விளக்கு எனப்படும். கொட்டு முழக்குப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற வேண்டும். விழாவின்போது ஒவ்வொரு நாளும் இசைக் கருவிகள் இசைப்போர்

எண்ணிக்கை கூடியபடி இருக்கும். நான் இறுதி நாளன்று ஐம்பது பேர்கள் இருப்பதாகக் கணக்கிட்டேன். அனைவரும் நாயர்கள். இந்தக் கொட்டு, மரவளையத்தின் ஒரு பக்கத்தில் இழுத்துப் போர்த்தப்பட்ட தோலாலானது. ஒன்றரை அடிக் குறுக்களவு உள்ள இது இரண்டு அல்லது மூன்றங்குல அகலம் கொண்டது. சாதாரண மத்தளம் நடுவிடத்தைக் காட்டிலும் இருபக்கமும் குறுகியதாக இருக்கும். நடுவில் குறுகிய அமைப்புடைய சிலவும் அவற்றிடையே காணப்பட்டதாக நினைக்கின்றேன். சில இரு முனைகளும் வெட்டப்பட்ட மணிகாட்டும் கண்ணாடிக் குவளைகளை ஒத்திருந்தன. (துடி அமைப்புடையன) அவற்றின் பருத்த முனையினைக் கையில் பற்றியபடி வளைந்த கோல்களால் அடித்தனர். இவர்கள் மிகுந்த கருத்துடன் அபஸ்வரம் இடையில் வராத படி தொடர்ந்து பார்த்தவர்கள் வியக்கும்படி தாளம் தவறாமல் அதனை அடித்தனர். மிகுந்த வேகங்கொண்ட எடுத்திசைப்பதான வேகக்கட்டும் மெல்லிய படுத்திசையும் தம்முள் பொருந்த இசைவது- அதனை நடத்த இசைக் குழுத்தலைவன் ஒருவனும் இல்லையென்பதனைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது- வியப்புக்கு உரியதாகவே இருந்தது. ஏழாம் நாளான இறுதி நாளன்று காலையில் ஊர்வலம் முடிந்ததும் பாணன் (குடைசெய்பவர்களும் பேயாட்டம் ஆடுபவர்களுமாவர்) சாதியினைச் சேர்ந்த ஒருவன் கோயிலுக்கு வருவான். அவன் தானே தயாரித்த சிறிய பனையோலைக் குடை ஒன்றினை உடன் எடுத்து வருவான். அதன் விளிம்பினைச் சுற்றித் தென்னங் குருத்தால் அலங்காரம் செய்யப்பட்டிருக்கும். அவன் வரும் போது முந்திய நாள்கள் மற்றவர்கள் வரும்போது ஏற்பட்டது போன்ற ஆரவாரமும் பரபரப்பும் நிகழும். நீண்ட பிடியினை உடைய அந்தக் குடையினை ஏந்தியவனாக அவன் கோயிலின் முன் நாட்டியம் ஆடுவான். கோயில் நாற்புறமும் மதில் சூழ்ந்த சதுர வடிவமைப்பினுள் அமைந்திருக்கும். நாயர் சாதியினும் சாதியில் தாழ்ந்த யாரும் கோயிலினுள் அனுமதிக்கப்படுவதில்லை. கோயில் மதிலின் வடக்கு,தெற்கு, கிழக்கு,மேற்கு ஆகிய நாற்புறமும் வாயில்கள் அமைந்திருக்கும். இவற்றைக் கடந்து தாழ்ந்த சாதியினர் செல்வது இயலாது. தன்னுடைய இந்தப் பணிக்காகப் பாணன் 10 பவுண்ட் அரிசியினைப் பெறுவான். பிற்பகல் வேட்டுவர்கள் சிறு குழுவொன்று கையில் வாளேந்தியபடி பத்துத் தென்னோலைக் கூடைகளில் உப்பினைக் கொண்டு வருவர். இந்தக் கூடைகளை ஒரு கழியில் தொங்கும்படி கட்டித் தூக்கி வருவர். விழாவின் போது உப்பு எதற்காகக் கொண்டு வரப்படுகின்றது என்பது புதிராகவே உள்ளது.*

நாயர் ஒருவனின் வீட்டைக் கொள்ளையிட்டவர்கள் அவன் வீட்டிலிருந்த சிலையினை தள்ளி விட்டுவிட்டு அந்த இடத்தில் உப்பினை இட்டுச் சென்றிருந்ததாக ஒருவழக்கில் கூறப்பட்டது என நினைவிற்கு வருகின்றது. இவ்வாறு உப்பை இடுவது மிகுந்த இழிவுக்கு உள்ளாக்குவதாகக் கருதப்படுகிறது. வேட்டுவன்கள் மிகுந்த பரபரப்படைந்தவர்களாக நாட்டியம் ஆடியபடி தங்கள் தலையினையே வாளால் வெட்டிக் கொள்வது போலப் பாவனை செய்வர். இவர்களுள் சிலர் தாழ்ந்த சில ஆவிகளின் பிரதிநிதிகளாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் மேல் ஏறியிருக்கும் ஆவிகள் அவர்களை ஆட்டுவிப்பதால் இவர்கள் வெறிகொண்டவர்களாக ஆடுகின்றனர். இவர்களுக்குப் பின் முதலில் வந்தது போல அரையனும் அவனைத் தொடர்ந்து வாளோடு கொல்லனும் வருவான். இறுதி நாளன்றைய மாலை ஊர்வலம் மிகச் சிறப்புடையதாக இருக்கும். நான் சென்றிருந்த சமயம் அலங்கரிக் கப்பட்ட பதினெட்டு யானைகள் வரிசையாக ஊர்வலத்தில் சென்றன. அவற்றுள் மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட ஒன்றின் மீது பூசாரியான மூசாடு தேவியைக் குறிப்பதான சிவப்பு மாலைகள் அணிவிக்கப்பட்ட வாளினை ஏந்தியவனாக அமர்ந்திருந்தான். பூசாரி அமர்ந்திருந்த யானையின் நெற்றியின் இருமருங்கும் இரண்டு தங்கக் கலசங்களும் நெற்றியின் முன் நீண்ட முகபடாமும் அணி செய்தன. மலபாரில் திருவிழாக்களில் பங்கு பெறும் யானைகளை இது போல நெற்றிப் பக்கங்களில் தங்கக் கலசங்கள் பூட்டி அலங்கரித்தல் வழக்கம். மாப்பிள்ளாப் பிரிவுக் கவிஞர்கள் பெண்களின் மார்பகங்களுக்கு இந்தக் கலசங்களை அடிக்கடி உவமையாகக் கூறி மகிழ்வர். அந்த யானை வேறு பல அணிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதோடு அதன் முதுகில் பூவேலைப்பாடுகள் கொண்ட சிவப்புத் துணி போர்த்தப்பட்டிருக்கும். அந்த யானையின் முன் நாயர் தனது வலக்கையில் நாந்தகம் எனப்படும் சந்தனம் பூசப்பட்ட வாளினை ஏந்தியவனாகச் சென்று கொண்டி ருந்தான். அதன் முனையினில் ஆங்காங்கே இடைவெளி விட்டுச்சிறிய மணிகள் பூட்டப்பட்டிருந்தன. அந்த வாளினை ஆட்டும்போது அதில் உள்ள மணிகள் குலுங்கிக் கணகணக்கும். ஊர்வலம் புறப்படுவதற்குச் சற்று முன்பு தியன்கள் சாதியினைச் சேர்ந்த நால்வர் பூக்கலசங்களை ஏந்தியபடியும் ஐவர் ஜன்னகலசங்களை ஏந்தியபடி கோயிலின் மேற்கு, வடக்கு, கிழக்குப் பக்க மதில்களின் ஓரமாக நாய்கள் குலைப்பது போலக் கூக்குரலிட்டு ஆரவாரம் செய்தவர்களாகச் செல்வர். அந்தக் கலசங்களில் கோயில் சடங்குகளில் பயன்படுத்திக் கொள்வதற்காகத்

* வேட்டுவன்கள் ஒரு காலத்தில் உப்புத் தயாரிப்பவர்களாக இருந்துள்ளனர்.

தரப்பட்ட சாராயம் இருக்கும். ஒரு சில குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இந்தப் பணியினை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இதற்காக இவர்கள் கோயிலிலிருந்து ஆளுக்கு ஐந்து இடங்கழி அரிசியினையும் பின்னர் கோயிலில் பலியிடப்பட்ட ஆட்டின் இறைச்சியிலிருந்து சிறு துண்டினையும் பெறுவர். இந்த ஒன்பது பேரும் திருவிழாச் சமயத்தில் ஒரு வேளை மட்டும் உணவு உண்டவர்களாகப் பணிக்குச் செல்லாமல் கோயிலில் இருக்கும் நேரம் போக எஞ்சிய நேரத்தை வீட்டில் அமைதியாகக் கழித்தபடி இருப்பர். தங்கள் சாதியைவிடத் தாழ்ந்த சாதியாரை நெருங்குவதையோ பெண்களோடு உடல்உறவு கொள்வதையோ, வீட்டுக்கு விலக்கான பெண்களைப் பார்ப்பதையோ இவர்கள் இந்த நாள்களில் செய்யமாட்டார்கள். இவ்வாறு இவர்கள் ஒடும்போது தியயன்கள் சிலரும் இவர்கள் பின் கூச்சலிட்டு ஆரவாரம் செய்தவர்களாக ஒடுவர். அவர்களும் கலசம் தாங்கியவர்களாக இருப்பர். ஓடியும் கூக்குரலிட்டும் களைப்பு மேலிடும்போது இவர்கள் அந்தக் கலசத்தில் உள்ள சாராயத்தைக் குடிப்பர். இவர்கள் எப்பொழுதும் தெய்வத்திற்கு நேர்ந்தவர்களாக விரதம் இருப்பர். இது போல இவர்கள் மேற்கொள்ளும் விரதம் நோய் நொடி முதலியவற்றிலிருந்து இக் கோயிலில் உள்ள தேவி இவர்களைக் காத்தமைக்காக மேற்கொள்ளப்படும் விரதமாகும். கோயிலுக்கு மேற்குப் பக்கத்தில் நெருப்புக் குண்டம் என அழைக்கப்படும் ஒரு குழி உள்ளது. எனினும் அதில் நெருப்பேது மில்லை. அந்த வட்டாரத்தைச் சேர்ந்த தியயன் சாதிப் பெண்கள் கோயிலின் வடக்குப் பிரகாரத்தின் மேற்குப் பக்கம் சென்று அந்தக் குண்டத்தை மும்முறை வலம் வருவர். அப்பொழுது அவர்கள் தலையில் ஓர் ஈயத் தட்டில் கொஞ்சம் அரிசி, சிறு வாழையிலைத் துண்டு, தேங்காய், எரியும் திரி ஆகியனவற்றைச் சுமந்தபடி செல்வர். ஒவ்வொருத்தியும் மூன்றாவது சுற்றினைச் சுற்றி முடித்தவுடன் மேற்குப் பக்கத்தில் கிழக்குப் பார்த்தவளாக ஒரு மணித்துளி நேரம் நின்று, பின் தன் தட்டில் உள்ளனவற்றை அந்தக் குண்டத்தினுள் வீசுவாள். அதன்பின் கோயிலின் மேற்கு வாயிலருகே சென்று தன் தட்டினை ஒரு புறம் வைத்தவளாகப் பக்தி சிரத்தையோடு தேவியினைக் கும்பிட்டபின் அப்பால் செல்வாள். அடுத்துக்கோயிலிலிருந்து ஊர்வலம் புறப்படும். அப்பொழுது வடக்கு வாயில் வழியாக விவரிக்க இயலாத ஒரு பூத உருவம் வெளிப்படும். மலையாளிகளுடைய பூதங்களுள் குட்டிச் சாத்தானும் குளிகனுமே காளிதேவி அசுரனைக் கொல்ல உதவியவர்களாகப் போற்றுதலோடு கருதப்படுபவர்கள். (இவர்கள் காளி, பிராமணர்கள் காளியோடு ஒரு சிறிதே ஒப்புடையவள்) திருவிழாச் சமயத்தில் இந்தப் பூதங்கள்

தேவியின் முன் ஆடியபடி செல்லும். குளிகன் வேடத்தை வண்ணானும் குட்டிச்சாத்தான் வேடத்தை மனுதனும் இட்டு ஆடுவர். இவர்களுள் முன்பு கூறிய தியன்களைப் போலக் கட்டுப்பாடுகளை மேற்கொண்டவர்களாக இருப்பர். குளிகன் வேடம் தரிப்பவன் அதற்காகப் பட்ட சிரமங்களை நான் நேரில் பார்த்தேன். வேடமிட்டு வெளியே வருவதற்கு ஐந்தாறு மணி நேரத்திற்கு முன்பே அவனுக்கான ஒப்பனையைத்தொடங்குவர். அதற்காக அவன் வந்தபோது இவன்யாரென நான் கேட்டேன். இவன் தான் பூதம் என்று கூறினார்கள். பார்ப்பதற்கு அவன் அப்பாவி போலத்தோற்றம் தந்தான். கோயிலின் வடகிழக்கு மூலையின் அருகே மதிலை ஒட்டி நாட்டியம் ஆட வேண்டிய இடம் அருகே அவன் தரையில் மல்லாந்து படுத்தவனாகக் கிடக்க ஒப்பனை செய்பவன் அவன் முகத்தை அச்சுறுத்தும் படியாக விகாரம் ஆக்குவதில் முனைந்தவனாக இருந்தான். அதன் பிறகு அவனுக்குத் தலையலங்காரம் மேற்கொள்ளப்பட்டது. தோளிலிருந்து மணிக்கட்டு வரை கை முழுவதையும் மறைக்கும் படியாகப் பெரிய வளையல்கள் அணிவிக்கப்பட்டன. தலையினையும் கழுத்தையும் துணியால் போர்த்துச் சுற்றிக் கட்டி அலங்கரித்தனர். அவன் இடுப்பில் மரக்கட்டைகளாலான பட்டை அமைப்பைப் பொருத்தி அலங்காரப் பாவாடையினைத் தொங்க விட்டனர். அவன் முதுகில் மிக நீண்டதான வேல்ஸ் இளவரசின் இறக்கைகள் எனக் கூறப்படும் இறக்கைகளை ஒத்த தலைக்கு மேல் ஐந்தடி நீளமுள்ளவையாக நீட்டியபடி இருக்கும் அமைப்புகளைப் பொருத்துவர். அவன் தோற்றம் மனிதன் எனக் கொள்ள இயலாதபடி மாற்றப்படும். குட்டிச் சாத்தான் வேடமிடுபவனுக்கும் கிட்டத்தட்ட இதே போன்று ஒப்பனை செய்வர். கோயிலின் வடக்கு வாயில் வழியாக ஊர்வலம் கோயிலைவிட்டு வெளியே புறப்பட்டு வரத் தொடங்கியவுடன் அங்கு யானைகள் ஊர்வலத்தோடு சேர்ந்து கொள்ளும். குளிகன் வடக்கு வாயிலின் அருகே ஊர்வலத்தை எதிர்நோக்கியவனாக நிற்பான். (அந்த வாயிலினுள் அவன் நுழைய முடியாது) அங்குக் குளிகனின் நாட்டிய நிகழ்ச்சிக்காக ஊர்வலம் மூன்று மணித்துளி நேரம் தாமதிக்கும். அஞ்சத்தக்க குளிகனின் உருவத்தைத் தாங்க வேண்டி வந்த இக்கட்டான நிலையில் உள்ள இந்த வயதான ஆள் தான் மேற்கொண்டு தாங்க இயலாத இந்த மாற்றுருவத்தைக் களைந்து விட உதவும் வகையில் தான் ஆடவேண்டிய நாட்டியம் எப்பொழுது முடியும் என ஆவலோடு எதிர்பார்த்தவனாகக் காத்திருப்பான். இந்த வேடத்திற்கான சுமையாக அமைந்துள்ள அலங்காரப் பொருள்களைச் சுமந்து களைத்துப் போனவனாக இருக்கும் அவன் அவற்றைக் களைய மிகுந்த ஆவலுடையவனாக இருப்பான். நடப்பதற்கே இயலாதவனாகத்

திண்டாடும் அவன் அத்தனைச் சுமைகளோடும் ஆடுவதென்பது எளிதான காரியமன்று. பின்னர் ஊர்வலம் கிழக்குப் பக்கமாகச் செல்லும்போது கிழக்கு வாசலின் முன் குட்டிச் சாத்தான் தான் ஆடவேண்டிய ஆட்டத்தை ஆடுவான். பின்னர்த்தெற்குப் பிரகாரத்தை ஒட்டி மேற்கு நோக்கி மதில் வாயிலை விட்டுப் பிரிந்து சென்று ஒரு மேடை அமைப்பினை உடைய ஆலமரத்தை அடையும். இந்த ஊர்வலத்திற்கு ஐம்பது கெசங்கள் முன்னே முன்பு குறிப்பிட்ட ஒன்பது தியரும் சென்றபடி இருப்பர். இவர்கள் தலையில் கலசங்களைச் சுமந்தபடி செல்ல, இவர்கள் சாதியினைச் சேர்ந்த பெண்கள் தங்கள் தலைகளில் தீக்குண்டத்தைச் சேர்ந்து வழிபட்ட சமயத்தில் தலையில் வைத்திருந்ததான ஈயத்தட்டுக்களை விடப் பெரிய ஈய தட்டுக்களைத் தலையில் சுமந்தவர்களாகச் சென்றபடி இருப்பர். அவற்றில் அரிசி முதலியனவும் எரியும் திரியும் இருக்கும். இவர்கள் தலையில் உள்ள தட்டுகளும் அவற்றில் உள்ள பொருள்களும் முன்பு போலவே தலபொலி என அழைக்கப்படும். ஆல மரத்தடியில் விழாத் தொடர்பாக எத்தகைய குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி நடைபெறுகின்றது என்பதனை என்னால் கண்டு கொள்ள முடியவில்லை. அங்கிருந்து ஊர்வலம் உடனே கோயிலை நோக்கித் திரும்பி விடத் தியர் ஒன்பதின்மரும் தியர் சாதிப்பெண்களும் கலசங்களோடும் தலப் பொலியோடும் ஊர்வலத்தைத் தொடர்ந்து வருவர். ஊர்வலம் வரும் வழியில் வேண்டுல் செய்து கொண்டவர்கள் பல கோழிகளைப் பலி இடுவர். ஊர்வலத்துடன் சிவப்பும் வெள்ளையுமான பகொடப் பூக்களால் ஆன மாலையணிந்த பூத ஆட்டக்காரர் பலர் குதித்து ஆடிக் கூக்குரலிட்டபடி வாளினைச் சுமந்து வரும் யானையின் முன்னே வருவர். வேண்டுதல் செய்து கொண்டவர்கள் தங்கள் கோழியினை இந்தப் பூத ஆட்டக்காரர்களுள் ஒருவனிடம் தருவர். தன் ஆட்ட பாட்டத்தை நிறுத்தாதவனான அவன் அந்தக் கோழியின் தலையினைப் பிடித்து இழுத்து அறுத்து அதனை மேலே உயர வீசுவான். இவ்வாறு கோழியின் தலையினைத் திருகி எறிவதற்கான வேண்டுதல்கள் நீண்டநாள் நோய் தீரவேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்டனவாகும். ஊர்வலம் கோயில் வாசலின் முன் மேற்கே இருந்து கிழக்கு நோக்கி அரைமைல் தொலைவில் உள்ள முன்னதனைப் போலவே மேடை அமைப்போடு கூடிய ஆலமரத்தினை நோக்கிச் செல்லும். கோயிலைக் கடந்து செல்லும் போது தியர் சாதிப் பெண்கள் தங்கள் தலையில் உள்ள தட்டுகளில் உள்ளனவற்றை முன்பு போலவே நெருப்புக் குண்டத்தில் கொட்டுவர். அந்த ஒன்பது தியன்களும் தங்கள் கலசங்களில் உள்ள சாராயத்தைக் கோயில் பணியாளர்களிடம் தருவர். நெருப்புக் குண்டத்தில் குவித்து

வைக்கப்பட்டிருக்கும் அரிசியினைப் பங்கிட்டுத்தரும் வழக்கம் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் குண்டத்தில் உள்ள அரிசியில் மூன்றில் ஒருபங்கு ஜன்னகலசத்தை எடுத்துச் சென்றவர்களுக்குத் தரப்படும். நாம் ஊர்வலம் என்னவாயிற்று எனப் பார்க்க மீண்டும் அதன் பின் செல்வோம். அது இப்பொழுது கோயிலின் கிழக்குப் பக்கத்தில் உள்ள மேடையினை அடைந்திருக்கக் காணலாம். அந்த மேடைமீது மூங்கிலாலான படியினை ஒத்த கலத்தில் நெல்லும் அதே போன்ற மற்றொரு கலத்தில் அரிசியும் முன்பே அங்கு வைக்கப்பட்டு வாழையிலையால் மூடப்பட்டிருக்கும். பூதாட்டக் காரர்களுள் முதன்மையானவன் ஒரு கை நிறைய அரிசியினையும் நெல்லினையும் அதிலிருந்து வாரி நாலாப்பக்கமும் இறைப்பான். ஊர்வலம் கோயில் உரிமையாளர்களுடைய தோட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் செல்லும். ஒவ்வொரு தோட்டத்தின் முன்னும் வாழையிலையால் மூடப்பட்ட ஒரு படி நெல்லும் ஒரு படி அரிசியும் வைக்கப்பட்டிருக்கும். அவற்றின் அருகே சிறு விளக்கு ஒன்று ஏற்றி வைக்கப்பட்டிருக்கும். பூதாட்டக்காரன் ஒருகை நெல்லையும் அரிசியையும் எடுத்து அவர்கள் வீட்டை நோக்கி வீசுவான். பிராமணர்கள் சிலர் அப்பொழுது மந்திரங்களைக் கூறுவர். அதனைக் கேட்டு யானையும் அதன் முதுகில் வீற்றிருக்கும் பூசாரியும் அவன் கையிலிருக்கும் வாளும் வேகமாக நடுங்க வேண்டும் என எதிர்பார்ப்பர். இது வரை மெல்ல ஊர்ந்து சென்ற ஊர்வலம் திடீரென வேகமாகக் கோயிலை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் செல்லும். கோயிலை அடைந்தவுடன் பூசாரி யானை மேலிருந்து விரைந்து இறங்குவான். மூசாடு பூசாரிகள் அவனைக் கோயிலினுள் அழைத்துச் செல்வர். இவ்வளவு நேரமும் வாளினைச் சுமந்தவனாக இருந்த அவன் அது வழிபாட்டுக்காக வழக்கமாக வைக்கப்படும் அறை வாசல்படியின் நிலையின் மீது வைத்தபின் கீழே விழுந்து அதன் முன் வணங்குவான். அதன் பின் அந்த வாள் சுமார் ஒரு நாழிகை நேரம் அசைந்தாடியபடி இருக்கும். தேவியினைக் குளிப்பாட்டிய புனிதத் தீர்த்தத்தில் கொஞ்சத்தைத் தலைமைப் பூசாரி அதன் மீது தெளித்த பிறகே அதனுடைய ஆட்டம் நிற்கும். இந்நிகழ்ச்சி முடிந்த பின் பூத ஆட்டக்காரர்களுள் முதன்மையானவன் உள்ளுக்குள் குழம்பிய மனநிலையுடையவனாகவும் புறத்தே உடல் நடுங்கியவனாகவும் வருவது உரைக்கும் தெய்வ வாக்காகத் தன்னைச் சிறப்பிக்க எடுக்கப்பட்ட விழாவால் தேவி மனம் திருப்தியுற்றாளா இல்லையா எனத்தெரிவிப்பான். இந்தத் தெய்வ வாக்கினைக் கூறிக் கொண்டிருக்கும் போதே அவன் மயங்கி விழுவான். உடனே பூசாரிகளையும் கோயில்

பணியாளர்களையும் தவிர மற்றவர்கள் அனைவரும் விரைந்து அங்கிருந்து வெளியேறுவர். கோயிலைச் சுற்றிலும் தற்காலிகமாகத் தங்குவதற்காக அமைக்கப்பட்ட கொட்டகைகள் விரைந்து பிரிக்கப்பட்டு விடும். கோயிலினுள் மறைபொருளான சடங்கினைத் தொடங்கும் முன் யாரும் அந்தப் பகுதியில் இல்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள எல்லா இடங்களிலும் தேடிப் பார்ப்பர். அங்கிருந்து அனைவரையும் விரட்டிய பின்பு அங்குத் தங்கியிருப்பவர்களான கோயில் உரிமையாளர்கள் நால்வரும் ஆளுக்கொரு ஆட்டினைக் கழுத்தில் கட்டப்பட்டுள்ள கயிற்றோடு கோயிலின் தலைமைப் பூசாரியிடம் ஒப்படைத்தவர்களாக அங்கிருந்து விரைந்து அகல்வர். கோயிலில் இப்பொழுது மூன்று மூசாடுகளும் உடுக்கு அடிப்பவன் ஒருவனும் (மரயர்) இரண்டு பணியாளர்களும் மட்டுமே இருப்பர். இவ்வாறு இரகசியமாகச் செயல்படுவதற்குக் காரணம் அங்குப் பலியேதும் தரப்பட்டது என்பதனை மறுப்பதற்காகவேயாம். பலியேதும் அங்குத் தரப்படுவது இல்லையென என்னிடம் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறினர். இது மறைபொருளான இரகசியம். பலிக்கு முன்னேற்பாடாக மூசாடு பூசாரிகள் ஒரு மணிநேரம் அந்த ஆடுகளின் முன் மந்திரங்களைச் செபிப்பர். அதன்பின் தலைமைக் குரு சிவப்பு நிறப் பட்டாடை ஒன்றை மேலே அணிந்தவனாக சிறிய வெட்டரிவாள் உருவினையுடைய வெட்டுவாளினைக் கையில் ஏந்துவான். அப்பொழுது அந்த ஆடுகளைக் கோயிலினுள் உள்ள ஓர் அறைக்கு இழுத்துச் செல்வார்கள். அது தனி அறையாக அமையாது தென்வடலாகச் செல்லும் இரண்டு சுவர்களுக்கு இடைப்பட்ட நடைபோல அமைந்த இடம் ஆகும். ஆடுகள் அவ்விடத்தில் தெற்குப் பார்த்தபடி நிறுத்தப்படும். தலைமைப் பூசாரி மேற்குப் பார்த்தவனாக ஆடுகளுக்குக் கீழண்டையில் நின்று வெட்டுவாளால் அவற்றின் தலையினை வெட்டுவான். அவன் தொடர்ந்து மந்திரங்களைச் செபித்தவனாகவே இருப்பான். மந்திரங்களின் ஆற்றலால் வெட்டுண்ணும் ஆடுகள் அஞ்சிப் பின்வாங்காதனவாக நிற்கும். பின் அதே இடத்தில் பல கோழிகள் பலியிடப்படும். வெட்டுண்ட அந்த ஆடுகள், கோழிகள் ஆகியவற்றின் உடலின் மீது கறுத்தகுரிசி எனப்படும் களிப்பொடி கலந்த தண்ணீர், மஞ்சள்பொடி, சுண்ணாம்பு நீர் ஆகியனவற்றைத் தொடர்ந்து மந்திரங்களைச் செபித்தபடி தெளிப்பர். மூன்று மூசாடுகள் மட்டுமே இந்தப் பலியினை நேரில் பார்ப்பவர்கள். இச் சடங்கின் ஒரு பகுதி மிகுந்த இரகசியமாகக் காக்கப்படும். அடுத்து நிகழும் நிகழ்ச்சிகளும் மிகுந்த இரகசியமாக நிகழ்த்தப்படுவனவே. வெட்டுண்ட ஆடுகளுள் ஒன்றின் உடல் வடக்கு வாசல் வழியாக கோயிலுக்கு வடபுறம் கொண்டு

சேர்க்கப்படும். அங்கிருந்து கண்கள் கட்டப்பட்டவனான கோயில் பணியாளருள் ஒருவன் மும்முறை அதனைக் கோயிலைச் சுற்றி இழுத்துச் செல்வான். மூசாடுகள் மந்திரங்களைச் செபித்தவர்களாக அதனைத் தொடர்ந்து பின் செல்வர். உடுக்கு அடிப்பவன் விரல்களால் உடுக்கடித்தபடி முன்னே செல்வான். உடுக்கடிப்பவனும் பின்னால் திரும்பிப் பார்த்தல் கூடாது. தனக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பதும் அவனுக்குத் தெரியாது. மூன்றாம் சுற்றுச் சுற்றி வந்தவுடன் உடுக்கடிப்பவனும் கோயில் பணியாளனும் அப்பால் அகல்வர். மூன்று மூசாடுகளும் அந்த ஆட்டின் இறைச்சியில் கொஞ்சத்தை ஒரிரு கோழிகளின் இறைச்சியுடனும் சிறிது அரிசியுடனும் சேர்த்துச் சமைப்பர். சமைக்கப்பட்ட இந்த அரிசி பின் கோயிலின் வடபகுதியில் உள்ள காவுக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு மூசாடுகள் மீண்டும் மந்திரங்கள் செபிப்பர். ஒவ்வொரு மந்திரம் கூறி முடித்தவுடன் ஒரு கை மஞ்சள் பொடியினை அந்தச் சோற்றின் மீது இடுவர். அப்போது அதற்குள்ளாக அங்கே திரும்ப வந்துள்ள உடுக்கு அடிப்பவன் விரலால் மெல்ல உடுக்கினை ஒரே சீராக அடித்தபடி இருப்பான். அவன் வடக்குப் பார்த்தவனாக இருக்கப் பூசாரிகள் தெற்குப் பார்த்தவர்களாக இருப்பர். இப்பொழுது பூசாரிகள் சமைத்த சோற்றித் தூக்கியவர்களாகக் கோயிலைச் சுற்றி ஓடும் போதே அந்தச் சோற்றினை வாரி இறைத்தபடியும் மந்திரங்களைக் கூறியபடியும் செல்வர். பின் கோயிலினுள் நுழைந்து விடியும் வரை அங்கேயே தங்கியிருப்பர். பொழுது புலர்ந்ததும் மூசாடுகள் வெளியேற நம்பூத்ரிகள் மீண்டும் சூரியன் உதிக்கும் முன்கோயிலினுள் வந்து அன்றைக்கு மட்டும் மும்முறை வழிபாடு செய்வர். மறுநாள் காலை மூசாடு பூசாரிகள் திரும்ப வந்து பொறுப்பு ஏற்பர். சமயச் சடங்குகளின் பலவகை நிகழ்ச்சிகளால் மக்கள் உள்ளுக்குள் மன ஆவேசம் கொண்டவர்களாக இருக்க இறுதிநாள் இரவு வாண வேடிக்கைகள் நிகழ்த்துவர். இந்த விழாவினை வெறுமனே விளக்குதல் என்பதனை மேற்கொள்வதால் பயனில்லை. இந்த விழாத் தொடர்புடையதான வேலிக்கு அப்பாலிருந்து கூட்டமாக அவ்வழியே செல்லும் ஊர்வலத்தைப் பார்த்து ரசிக்கும் அழகிய நாயர் பெண்களினைப் பற்றிய விவரங்களைப் படிப்பவர்கள் கற்பனைக்கே விட்டுவிட வேண்டும். நம்பூத்ரிகள் இந்த விழாவில் பங்கேதும் கொள்ளாதவர்களாக ஒதுங்கியே இருப்பர் என்பதனைத் தெரிவித்தாக வேண்டும். விழாவிற்கு முன்னும் பின்னும் கோயிலைப் புனிதப்படுத்துவதனைத் தவிர இவர்கள் வேறு எதிலும் பங்கு பெறுவதில்லை. கோயிலின் பொறுப்புக்களுக்கு உரிமையுடையவர்களாக இருப்பவர்களின் முக்கியத்துவம் அதிக சிறப்புக்குரியதல்லாததாக

இருப்பினும் அது எவ்வாறு மக்களால் எடுத்துக்கொள்ளப்படுகின்றது என்பதை ஒரு முக்குவனுக்கும் அவன் உடன்பிறந்தவன் மகனுக்கும் இடையே நிகழ்ந்த சுவையான சிறு வழக்கிலிருந்து தெரிந்து கொள்ளலாம். கோயிலிலிருந்து வெள்ளிக்குடையினைப் பெற்றுப் பழுதுபார்ப்பதற்காகப் பொற்கொல்லன் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் உரிமை யாருடையது என்பதே இவர்களிடையே தோன்றிய வழக்கு. திருவிழாவின் போது அவர்களுள் ஒருவன் சாமோரினிடம் ஓடிச் சென்று (ஐம்பது மைல் தீர நடை) சிறு தொகையினைச் செலுத்தித் தன்னைக் குடையினை எடுத்துச் செல்லும் உரிமையுடைய குடும்பத்தில் மூத்தவன் என நிலைநிறுத்திக் கொண்டான்.

''நவம்பர் மாதத்தில் பாலக்காட்டுக்கு அருகே உள்ள கிழக்கத்தியாரான பட்டர் பிராமணர்கள் மட்டுமே தங்கிவாழும் கல்பாத்தியில் முக்கியமானதொரு உள்ளூர்த் திருவிழா நடைபெறுகின்றது. இதனை மலையாளிகளுக்குரிய திருவிழா எனக் கூறமுடியாது. நாயர்களின் சமயத் தொடர்பான விழாவாக இது இல்லை என்பதால் இதனைப் பற்றிச் சுட்டிச் சென்றால் மட்டும் போதுமானது. ஒரிசாவிலுள்ள பூரி சகன்னாதர் கோயில் முதல் கன்னியாகுமரி வரையுள்ள எல்லாக் கோயில்களிலும் காணப்படும் கோயில் தெய்வங்களைத் தேரில் வைத்து இழுத்துச் செல்லும் பழக்கம் மலபாரின் கிழக்கு எல்லையில் உள்ள கல்பாத்தியில் தவிர வேறு எங்கு இல்லை.

கள்ளிக்கோட்டைக்குத் தெற்கே 30 மைல் இருக்கும் சௌவகாட்டில் உப்பங்கழியின் கரையில் குருவாயூர் என்ற இடத்தில் சாமோரினுக்கு உரிமையுடையதான மிகுந்த வருவாயினை ஈட்டித் தரும் முக்கியமான கோயில் ஒன்று உள்ளது. அங்குத் திருவிழா நடைபெறும் சமயம் நான் ஒரு முறை சென்றிருந்தேன். வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்ள வெள்ளியினால் பெரும்படியாகச் செய்யப்பட்ட குழந்தை, கை, கால், புண், கண்கள், வெள்ளியாலான அதனை வழங்கும் மனிதனின் பிரதிநிதியாக உள்ள கயிறு போன்ற பல பொருள்களையும் மக்கள் வாங்கிக் கொண்டிருக்கக் கண்டேன். தன்னையே கொடுப்பதாக வேண்டுதல் செய்து கொண்டவன் தன் குறியீடாகத் தன் உயரத்தின் அளவு நீளமுள்ள வெள்ளிக் கயிற்றினைத் தெய்வத்திற்கு அளிப்பான். கோயிலின் வாசலுக்கு வெளியே வேண்டுதல் செய்து கொண்டவர்கள்- தாங்கள் செலுத்த வேண்டிய பொருள்களைக் கையோடு கொண்டு வராதவர்கள்- செய்து தரும்படி கேட்டவுடன் செய்து தர வெள்ளி, பொன், ஆகியவற்றில் பணிபுரியும் கொல்லர் காத்திருப்பர். அங்கு

வருபவர்களின் வேண்டுதல்கள் பற்றியும் ஒரு வார்த்தை கூறலாம் என நினைக்கின்றேன். குழந்தைப் பேறு வேண்டி கைகால்கள் விளங்க வேண்டி, நீண்ட நாள்களாக ஆறாத புண் ஆற வேண்டி, ஏதேனும் விருப்பம் நிறைவேற வேண்டி என வேண்டுதல் செய்து கொள்பவர்கள் தங்கள் விருப்பம் நிறைவேறினால் வெள்ளியாலான குழந்தையின் உருவம் வெள்ளிக்கால் போன்றவற்றைக் காணிக்கையாகச் செலுத்துவதாக வேண்டிக்கொள்வர்.

வட மலபாரில் உள்ள கொட்டியூரில் மலையாளிகளின் தனிப் பண்புகள் வாய்க்கப்பெற்ற விழா நடைபெறுகின்றது. 3000 முதல் 5000 அடி வரை உயரமுள்ள வட நாட்டு மலைகளின் அடிவாரத்தில் ஒரு மலை ஓடையின் கரையில் இந்த ஊர் அமைந்துள்ளது. பருவமழை மிகுதியும் பெய்யும் சூலை மாதத்தில் இந்தத் திருவிழா நடக்கிறது. உயர்ந்த சாதியார் தாழ்ந்த சாதியார் ஆகிய அனைவருக்கும் இந்த விழா உரியதெனினும் அவர்கள் கொட்டியூரில் கலந்து பழகுவதில்லை. முதலில் நாயர்கள் கோயிலுக்குச் செல்வர். சில நாள்கள் சென்ற பின் திய்யன்கள் செல்வர். அதன்பின் அவர்களிலும் தாழ்ந்த சாதியார் கோயிலுக்கு வழிபாட்டுக்குச் செல்வர். இந்த விழாவின் குறிப்பிடத்தக்க சுவையான கூறு இந்த விழாவிற்குச் சிலநாள் பயணம் மேற்கொள்பவர்கள் வழியில் எதிர்ப்படுபவர்களைப் பரபரப் படைந்தவர்களாக விருப்பம் போல் வைது பழிப்பதோடு கூடச் சிலபோது மற்றவர்களை நேரிடையாகத் தாக்கவும் பொருள்களைச் சேதப்படுத்தவும் முற்படுகின்றனர். விழா முடிந்து திரும்பும் போது இவர்கள் ஆட்டுக்குட்டிகள் போலச் சாதுவானவர்களாகத் திரும்புகின்றனர். கொட்டியூரில் உள்ளது ஈசுவரன் கோயிலாயினும் மக்கள் அத்தெய்வததைப் பெருமாள் என்றே கூறுகின்றனர். தாழ்வான ஓலை வேயப்பட்ட கட்டிடத்தின் நடுவே சதுர அமைப்புடையதாக உள்ள கோயிலினை நெருங்கிக் காண எனக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அங்கிருந்து வெளிவந்த சில நம்பூத்ரிகள் என்னோடு உரையாடலில் ஈடுபட்டனர். திருவிழா கோயிலில் நடைபெறுவதில்லை. கோயிலுக்கு அப்பால் கால் மைல் தொலைவில் உள்ள காட்டிலேயே விழா நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அந்த இடம் மிகவும் புனிதமானதாகவும் பயபக்தியுடன் நடந்து கொள்ள வேண்டியதற்கு உரியதாகவும் கருதப்படுகிறது. நானும் என்னோடு வந்தவர்களும் அங்குச் செல்ல எவரும் தடையேதும் கூறவில்லையெனினும் எங்களை அங்குச் செல்ல வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். எங்களோடு கூட ஒரு நாயரும் ஒரு குறிச்சானும் இருந்தனர். அந்தப்புனித இடத்தை

அடைய சுமார் 30 கெச அகலமுள்ள காட்டாற்றில் ஓடும் முழங்கால் அளவுள்ள தண்ணீரில் இறங்கிச் செல்லும் போது அவர்களுடைய முகத்தில் தனித்ததொரு மகிழ்ச்சி நிலவியது. எங்களோடு எதிர்க்கரையில் உள்ள இடத்திற்கு வர அவர்கள் உடன்படவில்லை. முகமதியர்களைத் தவிர வேறு எவரும் அந்த இடத்திற்கு விழா நடைபெறாத சமயத்தில் செல்லத் துணிவதில்லை. மற்ற சமயத்தில் அங்குச் செல்பவர்கள் உடனே தீங்குக்கு உள்ளாகின்றனர். நாங்கள் எவ்வளவு வற்புறுத்தியும் எங்களோடு வந்த நாயரும் குறிச்சானும் உடன்வர மறுத்துவிட்டனர். 'யுரெடைசு தேடிச் சென்ற 'ஆர்பெயஸீ நகரத்தின் வாயிலில் நுழைய முற்பட்ட 'டாண்டே' ஆகியவர்கள் கூட இத்தகைய அஞ்சத்தக்க பயணத்தை மேற்கொண்டிருக்க மாட்டார்கள். அந்த ஆற்றிலிருந்து நூறு கெசம் அப்பால் சென்றவுடன் நாங்கள் அந்தப்புனித இடத்தை ஓர் ஓடையிடையே கண்டோம். அந்த ஓடையின் நடுவே கற்களைக் குவித்து அமைக்கப்பட்ட 12 அடி நீளக் குறுக்களவுடைய ஒரு மேடை காணப்பட்டது. அதன் நடுவே பரும்போக்காகச் செதுக்கப்பட்ட ஒரு லிங்கம் இருக்கக் கண்டோம். லிங்கம் உள்ள இடத்திலிருந்து கிழக்காக நீளவாக்கில் சமைப்பதற்குரிய செங்கற்களால் மேடையிடப்பட்ட கீற்றுக் கொட்டகை காணப்பட்டது. லிங்கத்தைச் சுற்றிலும் விழாக் காலத்தில் மக்கள் தங்குவதற்கான கொட்டகை அமைப்பு காணப்பட்டது. விழாச் சமயத்தில் இக்கோயிலுக்குச் செல்பவர்கள் கோயிலில் படைக்கத் தங்களுடன் ஏதேனும் ஒன்றை எடுத்துச் செல்வர். தியயன்கள் இளநீரைக் கொண்டு செல்வர். விழாவிற்குச் சென்று திரும்பும் ஒவ்வொருவரும் தங்களுடன் தென்னங்குருத்து ஓலையினால் செய்யப்பட்ட சீழ்க்கையினைக் கொண்டு வருகின்றனர்.

கொட்டியூர், திருவிழாப்பற்றி மலபார் மாவட்ட விவரக் குறிப்பில் பின்வரும் விவரங்கள் தரப்பட்டுள்ளன:-"நம்பூத்ரி பூசாரிகள் கொட்டியூரில் காட்டுவழியில் உள்ள கோயிலில் வாழ்ந்து வருகின்றனர். எனினும் உண்மையான கோயில் வளர்பட்டணம் ஆற்றில் வந்து விழும் ஓடைகளில் ஒன்றுக்கு அப்பால் காட்டிலேயே உள்ளது. ஆண்டில் பதினொரு மாதங்கள் அந்த இடம் மக்கள் நடமாட்டம் அற்றதாக இருக்கும். இடப மாதத்தில் (வைகாசி) வரும் ஆண்டு விழாவின் போது இருபத்தெட்டு நாட்கள் மலபாரின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் சுமார் 50,000 நாயர்களும் தியயர்களும் இங்கு வந்து திரள்கின்றனர். ஆண்டின் எஞ்சிய மாதங்களில் இக்கோயில் சிவனும் பார்வதியும் தனித்துத் தங்கள் நிலையில் ஈடுபட விடப்படுகின்றனர். அச் சமயத்தில் அங்குச் செல்லும் துணிவு பெற்ற சமயப்பற்றற்றவர்களான இந்துக்கள் உடனே எரிக்கப்

பட்டுச் சாம்பலாவர். இங்கு நடக்கும் சடங்குகளுள் நெய்யாட்டம், இள நீராட்டம் என்பன இரண்டும் குறிப்பிடத்தக்கவை. நெய்யாட்டத்தை நாயர்களும் இளநீர் ஆட்டத்தைத் தியர்களும் நடத்துகின்றனர். மே மாதத்தில் அனைவரும் கொட்டியூர் நோக்கிச் சென்றபடி இருப்பர். அந்த மாதத்தின் இடையில் நெய்யூற்றுபவர்களான நாயர் சாதிப் பக்தர்கள் இதற் காகவே நான்கு வாரங்கள் விரதமிருந்து தூய்மை பேணியவர்களாகச் சுற் று வட்டாரத்தில் உள்ள கொட்டியூரைச் சேர்ந்த கிளைக் கோயில்களில் சிறு சிறுக் குழுக்களாகக் கூடுவர். பின்னர் வெள்ளாடை புனைந்து ஒவ் வொருவரும் தங்கள் தலையில் பானையில் நெய்யினைச் சுமந்தவர்களா கக் கூட்டமாகக் குருசுவாமி வழி நடத்திச் செல்லச் செல்வர். மனத் தானம் என்ற இடத்தில் மலபாரின் பல பகுதிகளிலிருந்தும் இவ்வாறு வரும் குழுவினர் ஒன்றாகத் திரண்டு ஒரே ஊர்வலமாகக் கொட்டியூரை நோக்கிச் செல்வர். எவ்வளவு தூரம் வழி நடக்க வேண்டியிருந்தாலும் பக்தர்கள் ஒருபொழுது மட்டுமே உணவு கொள்வர். அப்பொழுது அவர் கள் எவ்வளவுக்கு எவ்வளவு கீழ்த்தரமாகப் பேசுகின்றார்களோ அவ்வள வுக்கு அவ்வளவு சமய நெறியில் நாட்டங்கொண்டவர்களாகக் கருதப்படு வர். ஒவ்வொரு ஆண்டும் ஐயாயிரம் பானைகளில் நெய்யினைக் கொண்டு வந்து லிங்கத்தின் மீது ஊற்றி அதனைக் குளிப்பாட்டுகின்ற னர். நெய்யாட்டம் சடங்கின் பின் நாயர்கள் அங்கிருந்து சென்று விட அடுத்துத் தியன்கள் வந்து கூடுவர். இவர்களும் நாயர்களைப் போலவே ஏற்பாடுகளைச் செய்தவர்களாகக் கோயிலை நோக்கி வருவர். வழியில் இவர்கள் நாயர்களை விடவும் கேவலமான இழி சொற்களைப் பேசியவர்களாக வருவர். கதிரூருக்கு அருகிலுள்ள எருவட்டியே இவர் கள் வந்து கூடும் இடமாகும். இவர்கள் சுமந்து வரும் இளநீர்களை நாட் டுப்புற மக்கள் தெய்வத்திற்காக என்பதால் இவர்களிடமிருந்து பொருள் ஏதும் பெற்றுக் கொள்ளாமலேயே கொடுத்து உதவுகின்றனர். இளநீராட் டம் சடங்கு நள்ளிரவில் தொடங்கும். பக்தர்கள் அன்று நாள் முழுதும் தொடர்ந்து கோயிலின் முன் இளநீர்களைக் குவித்தபடி இருப்பர். அவ் வாறு இளநீரைக் கொண்டு வந்து குவித்தபின் அக் குவியலை மும்முறை வலம் வந்து லிங்கத்தின் முன் தரையில் விழுந்து வணங்குவர். நாயர் சாதியின் குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்தவன் இளநீரை விட்டு லிங்கத் தைக் குளிப்பாட்டு முன் அதனைச் சீவுவான். நெய்யையும் மந்திரங்க ளையும் பயன்படுத்தித் தொடர்ந்து தலைமைப் பூசாரியான நம்பூத்ரி இரண்டு நாள்கள் நடத்தும் மறைபொருளான சடங்கோடு திரு விழா ஒரு முடிவுக்கு வரும். அதன்பின் கொட்டியூர், மக்கள் நடமாட்டம் அற்றதாக ஆகும்.''

திரு பாவ்செட் தொடர்ந்து எழுதுவதாவது: "நாயர்களை உள்ளிட்ட மலையாளிகள் செல்லும் மற்றொரு கோயில் மதுரை மாவட்டத்தில் வட மேற்கு மூலையில் உள்ள பழனியில் உள்ள சுப்பிரமணியர் கோயிலாகும். இந்தக் கோயிலில் வேண்டுதலைச் செலுத்துவதோடு ஆண்கள் தங்கள் தலைமுடியைத் தந்தை இறந்தபின் ஓராண்டுக்காலம் வளரவிட்டு இங்குச் சென்று மொட்டை போடுவர்.

பழனிக்குச் செல்லும் சாதாரண பக்தன் ஒருவனைக் காட்டுகின்றது. அவன் தூக்கிச் செல்வதாகக் காணப்படுவது காவடி என அழைக்கப்படும்.

காவடி எடுத்துச் செல்பவர்கள் இரண்டு வகைக் காவடியினை எடுத்துச் செல்வர். ஒன்று பால் உள்ள பால்காவடியாகும். மற்றொன்று சட்டியில் மீனைக் கொண்டுள்ள மீன்காவடியாகும். வேண்டுதல் செய்து கொள்பவர்கள் இந்த இரண்டு வகையில் பொருத்தமான ஏதேனும் ஒரு வகையினைத் தூக்கி வருவதாக வேண்டிக் கொள்வர். பக்தன் பழனிக் குப் புறப்படுவதற்கான நாள் நெருங்கியவுடன் சிவப்பு நிறத்திலான ஆடைகளை உடுத்தியவனாகத் தோளில் காவடியைச் சுமந்தபடி புறப்படு வான். ஒருவன் அவன் முன் மணியை அடித்தவனாகச் செல்வான். சிலர் தப்பட்டை அடிப்பவனையும் உடன் அழைத்துக் கொள்வர். நெற்றி யில் விபூதி பூசி உள்ள அவன் ஒரு பிச்சைக் காரனாகத் தன்னைக் கருதிக் கொள்வான். வசதி படைத்தவர்கள் ஒரு பிச்சைக்காரனாக இருக்க வேண்டிய நாட்கள் மிகக் குறைந்தனவாக இருக்கும்படியாக ஏற்பாடு செய்து கொள்வர். ஒவ்வொரு பக்தனும் தன்னைப் பிச்சைக்கார னாகப் பாவித்தவனாகப் பணிவுடையவனாகவே பழனியினை நெருங்க வேண்டும். அங்குத் தன் வேண்டுதலையும் காவடியினையும் தலைமுடி யினையும் சிறிய தொகையோடு செலுத்தியபின் அவன் திரும்புவான். அங்குக் காணப்படுபவர்கள் நாயர்களாக இல்லாவிடினும் நாயர்கள் சமய நெறித் தொடர்பான கோட்பாட்டினைத் தெளிவாக வற்புறுத்துபவர்கள். இந்தச் சாதியாருக்கும் நாயர்களுக்கும் இடையே சமயவழிபாடு தொடர்பா னவற்றுள் அதிக வேறுபாடுகள் இல்லை. 1895-இல் குருவாயூரில் பழ

னிக்குச் செல்லவுள்ள பக்தர்களை நான் கண்டேன். ஓர் அரச மரத்தடியில் அமைக்கப்பட்ட மேடையில் வேண்டுதல் மேற்கொண்டிருந்து பலர் பழனிக்குச் செல்வதற்காகக் காத்திருந்தனர். பதினான்கு வயதுடைய ஒரு சிறுவன் குழந்தையாக இருந்தபோது காக்காய்வலிப்பால் தொல்லைப்பட அவனுக்காக அவன் நோய் குணமானால் பழனிக்குப் பயணம் மேற்கொள்வதாக அவன் தந்தை வேண்டிக் கொண்டான். அச்சிறுவன் தன் கழுத்திலும் வலக்கையிலும் பாசிமணி மாலையினை அணிந்திருந்தான். இவ்வாறு அணிந்திருப்பதும் வேண்டுதலோடு தொடர்புடைய ஒன்றே. தலைகுனிந்தவனான அவன் தன் காவடியின் கீழ் தண்டின் மீது சாய்ந்தவனாக ஆடாது அசையாது அமர்ந்திருந்தான். அதனை அவன் தூக்கிச் செல்லும்போது அது அவன் தோள்மீது வீற்றிருக்கும். எப்பொழுது புறப்படவேண்டும் என்ற ஆணை ஒரு கனவின் வாயிலாக அவனுக்குக் கிடைக்கும் முன் அவன் பழனிக்குச் செல்வது பற்றிச் சிந்திக்க மாட்டான். சென்ற ஏழாண்டுகளாகச் சோறுண்ணாது வள்ளிக்கிழங்கு, பால், ஆகியனவற்றை உண்டு உயிர்வாழ்ந்தவனாக அவன் இந்தக் குறிப்பு ஆணைக்காகக் காத்துள்ளான். இப்பொழுது அவன் நெடுநாட்களாக எதிர் பார்த்த கனவு வழியாக குறிப்பு ஆணை கிடைத்ததால் பழனிக்குப் புறப்படப் போகின்றான். மற்றொரு பயணியான பக்தன் தன் நெற்றியின் அடிப்பாகத்தில் கிட்டத்தட்டக் கண்களை மூடும்படியாக வெள்ளியாலான ஒரு பட்டையினையும் பற்களை விட்டு வெளியே நீண்டபடி இருக்கும் நாவினை அதே நிலையில் அப்படியே தொடர்ந்து வைத்திருக்க வெள்ளியாலான பற்றுக் கரண்டியினை (சிறுவேல்) அதன் வழியே செலுத்தியவனாகவும் உள்ளான். நாவில் அதற்கு முன் தினம் பொருத்தப்பட்ட பற்றுக் கரண்டி நாற்பது நாள்கள் வரை அதிலேயே இருக்கும். அவன் இரண்டாண்டுகளாக விரதம் இருந்து வருகின்றான். தன் தெய்வத்தின் அருள்மீது தூரப்பட்டவனாக அவன் இடையிடையே பரப்பரப்புற்றவனாக ஆவேசத்துடன் உடுக்கையினை அடிப்பான். பக்தர்கள் பயணிகளுள் பலர் தங்கள் வாயினைச் சுற்றிச் சிறு துண்டினைக் கட்டிக் கொண்டிருந்தனர். இவர்கள் மௌனம் காப்பதாக விரதம் மேற்கொண்டவர்கள். ஒருவன் வெள்ளியாலான அகன்ற பட்டையினை வாயில் மேலிட்டு இரண்டு கன்னங்களையும் துளைத்தபடி செல்லும் பற்றுக் கரண்டியினை அதனோடு இணைத்து அதன் வாயின்மேல் நிலை நிறுத்தியிருந்தான். அவன் அமைதியாக மூன்றடி உயரமுள்ள ஒரு கொட்டகையில் அமர்ந்திருந்தான். மக்கள் அவனுக்குப் பால் முதலியனவற்றை வாயில் ஊற்றி வந்தனர். தனக்குக் கிடைப்பதை மட்டும் அவன் குடித்து வந்தானேயன்றித் தானாக எதனையும் பெற முயன்றானில்லை. பழனிக்கு யாத்திரை புறப்படுவதற்கான ஆடை அணியும் போது நாயர்கள் வாய்ப்

பூட்டும் தரித்துக் கொள்ளுதல் பொதுவான வழக்கமாக இருந்து வருகின்றது. நானே இவர்களுள் பலர் யாத்திரைக்கான ஆடையுடுத்தவர் களாக வாய்ப்பூட்டோடு பழனிக்குப் போவதைப் பார்த்துள்ளேன். ஒரு பூசாரியின் மேற்பார்வையில் பக்தர்கள் கூட்டமாகப் புனிதப் பயணம் மேற் கொள்வதே பொது வழக்கு. வழிகாட்டியான பூசாரி பழனிக்குப் பலமு றை புனிதப்பயணம் சென்று அனுபவப்பட்டவராக இருப்பார். இவர்கள் அதற்கான அடையாளமாக ஒரு பட்டிகையினை அணிந்திருப்பர். தங்க ளைப் பூசாரிகள் என அழைத்துக் கொள்ளும் இவர்கள் புனிதப் பயணத் திற்கு முன்னேற்பாடாகச் செய்ய வேண்டிய சடங்குகள் பற்றியும் வழியில் எதிர்ப்பட வேண்டிவரும் தொல்லைகள் பற்றியும் அறிந்திருப்பர். நான் அங்கு நின்றிருந்தபோது இந்த வழிகாட்டிப் பூசாரிகளுள் ஒருவன் அங்கு நின்றிருக்கக் கண்டேன். அவன் மேற்குத் திசையில் இருக்கும் கோயி லைக் கைநீட்டிக் காட்டியவனாகத் தன்னைச் சுற்றி உள்ளவர்களை வாழ்த் துவது போல அவர்களை நோக்கித் தன் கரங்களை விரித்து அசைப்ப தைக் கண்டேன். சமயநெறியில் ஆழ்ந்த நாட்டங் கொண்டவனாக இருந்த அவன் (அப்படித்தானே இருந்தாக வேண்டும்) தன்னோடு வருபவர்கள் ஆன்ம நலத்தைத் தவிர வேறு எதனையும் சிந்திக்காதவனா கக் காட்சி தந்தான்.

''கொச்சி மாநிலத்தின் வடகோடியில் உள்ள கொடுங்கோளூரில் நடைபெறும் விழாப்பற்றியும் இங்குச் சுருக்கமாகக் குறிப்பிடவேண்டும். நாயர்கள் அடிக்கடி சென்று வரும் இக் கோயிலில் நடைபெறும் விழாவில் மலபாருக்குரிய விசித்திரமான சில பழக்கங்கள் இடம் பெறக் காணலாம். இங்கு நடைபெறும் விழாப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க இயலாத வனான ஏமாற்றத்திற்கு உள்ளான நான் லோகனின் மலபார் மாவட்டக் கையேட்டிலிருந்து அது தொடர்பாகச் சில பகுதிகளைத் தருகின்றேன். ''இந்த விழாவிற்காக மக்கள் பெருமளவில் தங்கள் இல்லங்களிலிருந்து வந்து கூடுகின்றனர். இவ்வாறு கூட்டமாகக் கோயிலுக்கு வருபவர்கள் இடும், ''நடடா நட நடடா நட' என்ற கூக்குரல் பாதையின் மருங் கெங்கும் எதிரொலிக்கக் கேட்கலாம். இவர்கள் அந்தக் கோயிலுக்குச் சென்று சேர்ந்த பின் என்ன நடக்கின்றது என்பதனைப் பற்றி எதுவும் கூறாது விடுவதே நல்லது. கோயிலை நோக்கி ''நடடா நடடா' எனக் கத்தியபடி செல்லும் இவர்கள் கோயிலில் உள்ள தேவியான பகவதி யினை நடுநடுவே வாயில் வந்தபடி வார்த்தைகளைக் கூறித் திட்டித் தீர்ப்பர். இவ்வாறு திட்டிக் கூறப்படும் சொற்கள் அவளுக்கு உகப் பானவை என்பர். கோயிலுக்கு வந்து சேர்ந்தவுடன் இவர்கள் நினைத்துப் பார்க்க இயலாத வழிகளில் எல்லாம் அதன் புனிதத்தைக் கெடுக்க முற்ப

டுவர். கல், குப்பை முதலியவற்றைத் தெய்வத்தைப் பலவாறு வைதபடி அவள் மீது வீசுவர். கூளிமுட்டத்து அரையன் எனப்படும் மீனவர் சாதியின் தலைவனே கோயிலை இவ்வாறு அசுத்தப்படுத்தும் பணியினைத் தொடங்கி வைக்கும் உரிமைக்கு உரியவன். இக் கோயில் தொடர்பான வேறு தனித்த சிறப்புக்களைக் கூறுவது தேவையில்லாதது. சேவல்களை இங்கு வெட்டிப் பலியிடுகின்றனர். தங்கள் வேண்டுதல்களைச் செலுத்தும் பக்தர்கள் பூவினை மட்டுமே பிரசாதமாகப் பெறுவர். தீர்த்தம் ஏதும் வழங்கப்படுவதில்லை. தீர்த்தத்திற்குப் பதிலாக அவன் கோயிலை விட்டு வெளியேறி அங்குப் பணியாளனாக உள்ள நாயர் ஒருவன் வழங்கும் சாராயத்தையோ கள்ளையோ குடிப்பான். இந்தக் கோயிலினுள் தியர் உட்பட எல்லாத் தாழ்ந்த சாதியினரும் செல்ல உரிமை பெற்றுள்ளனர். முதலில் ஒரு மரத்தடி மேடையாகவே இக் கோயில் இருந்தது. அண்மைக்காலத்திலேயே இக்கோயிலில் உருவம் ஒன்றினை அமைத்துள்ளனர் எனக் கூறப்படுகிறது." இக் கோயில் பற்றிய சரியான தகவல்கள் திரு லோகனுக்கு கிடைக்காதது வருந்தத்தக்கதே. முக்குவன்களின் சாதித் தலைவன் கொஞ்சம் வண்டலைக் கோயிலில் உள்ள உருவத்தின் மீது அப்பி விழாவினைத் தெய்வீகமான முறையில் தொடங்கி வைப்பான் என எனக்குத் தெரிய வந்துள்ளது. இங்கும் இழிந்த கேவலமான பொருத்த மில்லாத பிழைபட்டன அனைத்தும் தெய்வத்தோடு விசித்திரமான வகையில் தொடர்புடையனவாக ஆழ்ந்த தெய்வீக உணர்வின் உண்மைப் பொருளை வெளிப்படுத்துகின்ற பான்மையைக் காண்கிறோம்."

கொடுங்கோளூரில் நடக்கும் சேவல் திருவிழாப் பற்றித் திரு டி.கே. கோபால் பணிக்கர் 'மலபாரும் அங்கு வாழ்வோரும்' என்ற சிறு நூலில் தந்துள்ள விவரங்கள் வருமாறு:- "இயற்கையான கிராமச் சூழலின் இடையே காளிக்கு உரிய கோயில் இருக்கக் காணலாம். இவள் தொற்றுநோய்களான காலரா, பெரியம்மை ஆகியவைகளுக்கான தெய்வம். எவ்வளவு குருதிப் பலியிட்டாலும் கன்னியான இவள் திருப்தியுற மாட்டாள். இந்தக் கோயில் பழங்காலத்திய அமைப்புடையது. இதில் கட்டிடக் கலைச் சிறப்புகள் எவையும் இல்லை. இக் கோயிலுக்கான பூசாரி வகுப்பார் பிராமணர்கள் அல்லர். இவர்கள் அடிகள் என்ற தனித்த பிரிவினைச் சேர்ந்தவர்கள். இவர்களுள் மலபாரில் மூன்றே மூன்று குடும்பங்கள் மட்டுமே உள்ளன. இக் கோயிலில் பிராமணர்களை வேண்டும் என்றே தான் பூசைச் சடங்கு செய்ய அனுமதிப்பதில்லை. அவ்வாறு அவர்கள் அதனை மேற்கொள்ளின் அவர்களுடைய தீவிரமான புனிதப் பற்றின் காரணமாகத் தேவி அஞ்சத்தக்கபடியாக ஆற்றல் வாய்ந்தவளாக

ஆகிவிடுவாள். இத் தேவிக்கு நாள்தோறும் பூசை நிகழ்த்தப்படுகின்றது. மலபாரில் சமயத் தொடர்பான நிகழ்ச்சிகளில் இக் காளி தேவிக்கு ஆண்டு தோறும் நடத்தப்படும் பரணித்திருவிழா முக்கியமான ஒன்றாகும். இவ் விழா மலையாள மாதமான மீனம் (பங்குனி) மாதத்தில் நடைபெறும். அப்போது இக்கோயிலுக்குப் புனிதப் பயணம் மேற்கொள்பவர்கள் தங்களையும் தங்கள் நண்பர்களையும் சுற்றத்தினரையும் காலரா, பெரியம்மை போன்ற கொடிய தொற்று நோய்களிலிருந்து காத்துக் கொள்ளலாம். இதனால் மலபாரின் பல பகுதிகளிலிருந்து மக்கள் ஆயிரக்கணக்கில் அங்கு வந்து கூடுகின்றனர். மலபாரின் வட பகுதிகளில் இத் தெய்வத்தின்பால் ஆழ்ந்த பற்றுக் கொண்ட மக்கள் எண்ணிக்கையில் மிக்கவராக இருக்கக் காணலாம். இந்த வழிபாட்டின் போது சிறப்பாகப் பலி தருவதற்குரியன சேவல்களே. ஒவ்வொரு குடும்பமும் இதற்கான புனிதப் பயணத்தை மேற்கொள்வதில் கருத்துடையதாக இருக்கும். இதற்காக மக்கள் ஒரு குறிப்பிட்ட நல்ல நாளில் நல்ல வேளையில் சிறு குழுவாகப் புறப்படுவதற்கான திட்டங்களை வகுத்து அதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்வர். அரிசி, உப்பு, மிளகாய், கறிப்பொடி, வெற்றிலைபாக்கு, மஞ்சள் பொடி, மிளகுத்தூள், ஆகியவற்றோடு பல சேவல்களையும் பயணத் திற்காக வாங்கிச்சேர்ப்பர். ஒவ்வொரு பொருளையும் தனித்தனிப்பையில் போட்டுப் பின் அனைத்தையும் ஒரு பெரிய பையில் இடுவர். குறிப்பிட்ட நேரம் வந்தவுடன் இந்தப் பெரிய பையினைத் தோளில் தூக்கிப் போட்டவர்களாகப் பயணச் செலவிற்கான தொகையினை அரைக்கச்சையில் மறைத்து வைத்துக் கொண்டு ஒரு கையில் நாட்டுப்புறத்திற்குரியதான குடையும் மற்றொரு கையில் ஒரு கைத்தடியும் தாங்கியவர்களாகப் புறப் பட்டு அத்தகைய பயணம் மேற்கொள்ளும் மற்றப் பயணிகளுடன் வழக்க மாகக் கூடுமிடத்தில் சென்று சேர்ந்து கொள்வர். அங்கு அக்குழுவிற்குரிய முன்னின்று நடத்திச் செல்லும் தலைவன் ஒருவனைத் ஒரு முகமாகத் தேர்ந்தெடுப்பர். அதன் பின் அனைவரும் கூட்டமாக வழக்கமாகப் பாடும் ஆபாசமான இசைப் பாடல்களை முதலில் குழுத் தலைவன் ஆரம்பித்து வைக்க அனைவரும் அவனைப் பின்பற்றியவர்களாக உரக்க முழக்கமிட்டுப் பாடியபடி செய்வர். இவ்வாறு பாடுவதை வீட்டுக்குத் திரும்பத் தொடங்கும் வரை இடையில் நிறுத்தாது தொடர்ந்து பாடியபடி இருப்பர். சமய ஆர்வம் மேலோங்கிய இவர்களுக்கு எதிரே வரும் யாரும் இழிவழக்கினதான இவர்களுடைய கொச்சையான வசதிக்கு உட்படாது தப்ப முடியாது. பெண்களும் இதற்கு விதிவிலக்காவதில்லை. மாறாகப் பெண்களை எதிர்ப்படும் போது இவர்கள் கொச்சை வசவு மேலும் சரளமாக வெளிப்படக் காணலாம். இவர்கள் கையில் கொண்டு செல்லும் தடியின் முனையில் சேவல்களின் இறகுகள் சில சேர்த்துக் கட்டப்

பட்டிருக்கும். இந்தத்தடிகளை மந்திரக் கோல்கள் போல ஆட்டியவர்களாகப் பார்க்க அருவருப்பான ஆட்டத்திலும் ஈடுபடுவர். சில பயணிகள் கோயிலை அடையும் வரை வழிநெடுக நடந்தே செல்வர். சிலர் படகிலோ வண்டிகளிலோ செல்வர். எவ்வாறு செல்லினும் எதிர்ப்படுபவர்களை வைவா இத்திருவிழாச் சமயத்தில் நூற்றுக்கணக்கான காலன்கள் சாராயம் குடித்துத் தீர்க்கப்படுகிறது. அழுக்காடைகளோடு கோயிலை அடையும் இவர்கள் கூட்டம், நெருக்கி அடித்துக் கொண்டு தேவிவழி பாட்டினைத் தொடங்கும். கோயில் பலிபீடத்தில் சேவல்களைப் பலியிடுவதோடு மஞ்சள் பொடி, மிளகு ஆகியனவற்றைப் பிற சாதாரணப் பொருள்களோடும் படைப்பர்: கோயிலில் குறிப்பிட்ட ஓர் இடம் மஞ்சள் பிரசாதம் வழங்குவதற்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும். இதனை இளங்கன்னியர் வழங்குவர். இவ்வாறு வழங்கும் இவர்களும் பக்தர்களின் ஆபாச வசவுகளிலிருந்து தப்புவதில்லை. இப்பொழுது சிறு சடங்குகளைப் பற்றியான விவரங்களை விட்டு முக்கியமான சடங்கான சேவல்களைப் பலியிடுவதைப் பார்ப்போம். ஒருவன் எத்தனைக்கு எத்தனை மிகுதியான சேவல்களைப் பலியிடுகின்றானோ அத்தனைக்கு அத்தனை அவனுடைய புனிதப்பயணம் பயன்தருவதாக இருக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பக்தர்கள் ஒருவரை ஒருவர் விஞ்சவேண்டும் என மிகுதியான எண்ணிக்கையில் சேவல்களை உடன் கொண்டு வந்திருப்பர். சேவல் பலி தொடங்கியவுடன் அதனைப் பலியிடுவதற்கான புனிதப் பலியிடத்திற்கு ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டு செல்வர். ஒருவன் சேவலின் உடலைப் பிடித்துக்கொள்ள மற்றொருவன் அதன் கழுத்தோடு தலையைப் பற்றி இழுத்துக் கண்மூடித் திறப்பதற்குள் அதன் கழுத்தை வெட்டிவிடுவான். அதன் உடலிலிருந்து குருதிபீறிட்டுப் பாயும். அதனை அதற்கென்றே வைக்கப்பட்டுள்ள கருங்கல்லின் மேல் விடுவர். அடுத்து இதே போன்று மற்றொரு சேவல் பலியிடப்படும். இப்படியாகக் கோயில் முற்றம் முழுதும் பலிச் சேவல்களின் குருதி ஆறாக ஓடும்படியாகச் சேவல்கள் பலியிடப்படும். நடப்பவர் வழுக்கி விழாமல் கருத்துடனேயே அங்கு நடக்கவேண்டி இருக்கும். பலியாகும் சேவல்களின் பரிதாபக் குரல் அக் காட்சியினை மேலும் அச்சத்திற்குரியதாக்கும். சாராய நாற்றத்துடன் குருதியிலிருந்து எழும் துர்நாற்றமும் கலந்து குமட்டலை உண்டாக்கும். இங்குப் பெருமளவில் நடைபெறும் சேவல் பலியினைக் காட்டிலும் உடன்பாட்டிற்குரியதான மற்றொரு வேண்டுதலை நிறைவேற்றும் சடங்கு பற்றியும் இங்குக் கூற வேண்டும். தொற்றுநோயால் பீடிக்கப்பட்ட ஒருவனுடைய உறவினர் அவன் பிழைத்து எழுந்தால் இத் தேவிக்குத் துலாபாரம் தருவதாக வேண்டிக் கொள்வர். இவ்வாறு துலாபாரம் தருபவன் தராசின் ஒரு தட்

டில் அமர மற்றொரு தட்டில் அவன் எடைக்குச் சமமான தங்கம் அல்லது மிளகு (பெரும்பாலும் இதனையே தருவர்) அல்லது வேறு ஏதேனும் பொருளை வைப்பர். அவ்வாறு நிறுக்கப்பட்ட பொருள் தேவிக்கு உரிய தாக்கப்படும். இதனைத் தேவிக்கு நேர் எதிரே கோயில் வாசலிலேயே நிறுத்து அளிக்க வேண்டும். இதே போலப் பயணிகள் தங்கள் வேண்டு தலைச் செலுத்தி முடித்தபின் வீடு நோக்கித் திரும்புவர். இத்திருவிழா பரணி எனப் பெயர் பெற்ற பரணி நாளுக்கு முந்தின நாளன்றே பக்தர்கள் அனைவரும் கோயிலைவிட்டு வெளியேறியாக வேண்டும். பரணி நாள் தொடங்கி ஏழு நாள்களுக்குக் கோயிலின் கதவுகள் மூடப்படும். அப் பொழுது குருதி வேட்கைக் கொண்ட இத் தேவியின் கட்டுப்பாட்டில் உள்ள பேய்கள் அங்கு வந்து நடமாடும். இந்தப் பேய்களுக்குப் பலியாக வேண்டும் என்ற அச்சத்தால் மக்கள் எவரும் அப்போது அங்குச் செல் லத் துணியார். சுருங்கச் சொன்னால் பரணி நாள் தொடங்கி ஏழு நாள்கள் அப்பகுதியில் பேரச்சம் ஆட்சி புரிந்தபடி இருக்கும். அதன் பின் கோயிலி னைத் தூய்மை செய்து மக்கள் வழிபாட்டுக்காகத் திறந்து வைப்பர். வீட் டுக்குத் திரும்பும் பயணிகள் கோயிலுக்குப் பயணம் மேற்கொண்டபோது ஈடுபட்டது போன்ற இழிவான நடத்தையிலும் பேச்சிலும் பாட்டி லும் ஈடுபடாதவர்களாக அமைதியும் பணிவும் கொண்ட பண்பாளர்களாக நடந்து கொள்வர். வீடு திரும்பிய பின் சந்தனம் முதலிய பூசைப் பொருள்களைப் பயணம் மேற்கொள்ளாதவர்களாக வீட்டிலேயே தங்கியி ருந்த நண்பர்களும் உறவினர்களுக்கும் வழங்குவதோடு ஆண்டுத்திருவி ழா நிறைவுறும்.

திரு பாவ்செட் மேலும் எழுதுவதாவது :- ''கர்கடக மாதத் (ஆடி) தினை மலையாளிகள் குளிர்ச்சியான மாதம் என்பர். நாயர் சாதி இளைஞர் கள் வழக்கப்படி உடற்பயிற்சியினை மேற்கொள்ளும் மாதம் இதுவாகும். வடமலபாரிலுள்ள பயோலியில் 1895-இல் நான் தங்கியிருந்த அந்த ஊரில் வீரவிளையாட்டுக்களைக் கற்றுத் தரும் ஆசிரியனாக இருந்தவன் கொத்தனார் சாதியினைச் சேர்ந்த ஒரு பரவனாவான். அவன் தன் பெய ரோடு குருப்பு என்ற இணைப்பையும் சேர்த்துக் கொண்டிருந்ததால் அவன் சாதியினைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ளச் சிறிது காலம் பிடித்தது. அவன் மேற்கொண்டுள்ள அதே தொழிலைச் செய்யும் மற்ற ஆசிரியர்களும் பரவர் சாதியினைச் சேர்ந்தவர்களே. இக்கலையில் முறையாக நன்கு பயிற்சி பெற்றவர்கள் குருப்பு என்ற சிறப்புக்குரிய அடையினைப் பெயரோடு இணைத்துக் கொள்வர். அந்த அமிசத்தில் (வட்டாரத்திற்கான மலையாள வழக்கு) வேறு யாரும் இத்தொழிலை மேற்கொள்ள இயலாதபடியான ஓர் ஏற்பாடு உள்ளது. இந்தத் தொழில்

செய்யும் இவன் வீட்டுப் பெண்கள் சில தனி உரிமைகளைப் பெற்றவர்க ளாக உள்ளனர். அந்த அமிசத்தைச் சேர்ந்த நாயர் சாதிப் பெண்களுக்கு இவர்கள் மட்டுமே மருத்துவச்சிகளாகப் பேறுபார்க்க அனுமதிக்கப்படு கின்றனர். ஒரு மாத காலப் பயிற்சிக்கான கட்டணமாக இவன் பத்து ரூபாய்கள் பெறுகின்றான். இவனும் இவன் மாணவர்களும் ஒன்றாகச் சேர்ந்து தங்கள் திறமையினை வெளிப்படுத்திக் காட்டினர். உடலைத் திருகி முறிக்கும் பயிற்சிகளோடு குட்டிக்கரணம் முதலிய பயிற்சிகளை யும் மணல் பரப்பிய தாழ்ந்த கூரைக் கொட்டகையில் செய்து காட்டினர். வட்ட, செறுவடி எனப்படும் சிறுதடி, சரீரவடி எனப்படும் ஆள் உயரத்தடி ஆகியவற்றைப் பயன்படுத்தியும் விளையாட்டுகளை நிகழ்த்தி னர். வட்டவினை வலக்கையில் குத்துவாள் போல ஏந்தி எதிரியைக் குத் தவோ அடிக்கவோ பயன்படுத்துவதோடு அதனை லாவகமாக வீசி எதிரி யினைக் குப்புறவும் வீழ்த்துவர். வட்ட இரண்டடி நீளம் கொண்டது. செறுவடி மூன்றடி நீளம் கொண்டது. செறுவடி முனைப் பகுதிகள் சதுர அமைப்புடைய சிறு தடியாகும். வலக்கையால் சிறு அங்குலத்திற்கு மேலாக அதனை இறுகப்பற்றி அடிக்கவும் அடிவிழாமல் தடுக்கவும் பயன்படுத்துவர். சரீரவடியினை முனையில் ஒரு கையாலோ இரு கைகளாலுமோ பற்றித் தாக்குவர். இரு கைகளால் பிடிக்கும் பொழுது கைகளுக்கிடையோன இடைவெளியினை மாற்றியபடி இருப்பர். அதே போல முனையினையும் தேவைக்கேற்ப மாற்றிமாற்றிப் பிடிப்பர். சில சமயம் அதன் நடுப்பகுதியினைப் பற்றியிருப்பர். இந்த எளிய பொருள்களைக் கொண்டு இவர்கள் நிகழ்த்தும் செயல்கள் வியக்கத்தக்கன. வட்டவும் செறுவடிவும் வாள்களை ஒத்தன என நான் கூறுவேன். அல்லது அவை நாயர்கள் போர் வீரர்களாக இருந்தபோது வாட்பயிற்சிக்கான ஒரு தொடக்கப் பயிற்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்தனவாகலாம். சரீர வடிவினைக் கொண்டு போரிடும் எதிரிகள் முப்பதடி இடைவெளிவிட்டு நிற்பர். ஒரே சமயத்தில் இருவரும் தங்கள் ஒரு காலினை உயரத் தூக்கி உதைப்பர். பின் சில முறை வெட்ட வெளியினைச் சாடியவர்களாகத் தங்கள் தடியினை நீளவாக்கில் இரு கைகளையும் நீட்டியபடி பிடிப்பர். பின் மெல்ல அதனைக் கீழ் நோக்கிச் சிலமுறை வீசிய பின் தரையில் வைத்துக் குனிந்து நெற்றியினை அதன் மீது வைத்துக் கொள்வர். பின் மீண்டும் திடீரெனத் தாவிக் குதித்தவர்களாகச் சில வெற்று வீச்சுக்களுக்குப் பின் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்வர். திருமணங்கள், திருவிழாக்கள் ஆகியவற்றின்போது நிகழ்த்தப்படும் வாள்வீச்சு விளையாட்டினைப் பரம்பரையாக அதனைச் செய்து வருபவர்கள் மேற்கொள்கின்றனர். இவர்கள் தங்களை எதிரிகளாகப் பாவித்தபடி உடம்பை வளைத்து முறுக்கி எதிரியைத்

திணற அடிக்க முற்படுவதோடு வாளால் போரிடும் முன் அதற்கான தொடக்க ஆர்ப்பாட்டங்களிலேயே மிகுதியான நேரத்தைச் செலவிடுவர். சண்டையின் தொடக்கத்தில் காலை உயரத் தூக்கி உதைத்தல் வழக்கமாக நடைபெறும் ஒன்று. அதனைத் தொடர்ந்து குந்தியவர்களாக அமர்தல், உயர எம்புதல், திரும்புதல், திருகுதல், கால் பெருவிரலை ஊன்றி நிற்றல் ஆகிய இவற்றைச் செய்யும் போதே இடைவிடாது வாளினை உயரவும் தாழவும் முன்னும் பின்னும் கைகால்களின் கீழும் வேறு பல செலுத்த இயலாத வழிகளிலெல்லாம் வீசிச் சுழற்றியபடி இருப்பர். நாயர்களின் கேடயங்கள் மரத்தால் செய்யப்பட்டுத் தோலால் போர்த்தப்பட்டுப் பளிச்சென்ற சிவப்பு வண்ணம் ஏற்றப்பட்டனவாக இருக்கும். கேடயங்களின் முனை முகப்புக்களிலுள்ள துளையில் சில கொட்டைகள் அல்லது உலோகக் குண்டுகளை இட்டு வைத்திருப்பர். கேடயம் அப்படியும் இப்படியுமாக ஆடும்போதோ கையால் அதனை ஆட்டும் போதோ அதனுள் போடப்பட்ட குண்டுகள் குலுங்கிச் சலங்கைபோல ஒலி செய்யும். இவர்களுடைய வாள்கள் போர்க்களத்தில் பயன்படுத்தபடுவனவே. வாள் பயிற்சியினையே தொழிலாகக் கொண்டவர்களுக்கும் வேறுபயன்பாடுகளுக்கும் எனத் தனி அமைப்புடைய வாள்கள் உள்ளன. இவற்றின் கைப்பிடி வெட்டுவாயின் ஒரு பகுதி ஆகியன அலங்கார வேலைப்பாடுடையனவாக இருக்கும்."

திரு. சுப்பிரமணிய அய்யர் எழுதுவதாவது:- நாயர்களிடையே தனித்ததான பண்ணையுரிமை அமைப்பு முறை உள்ளது என்பதனை அவர்கள் வாழும் நிலப்பகுதி பற்றிய பாகுபாட்டு அமைப்புத் தெளிவாக உணர்த்துகின்றன. தேசவாழி ஒருவனின் மேலாண்மைக்குக் கட்டுப்பட்ட தேசம் என்பதே நிலப்பாகுபாட்டின் சிறிய அளவாகும். ஒன்றை ஒன்று அடுத்து அமைந்துள்ள பல தேசங்கள் இணைந்தது நாடு. இது நாடு வாழியாதன் என்ற தலைவனது மேற்பார்வையில் இருக்கும். நாடு வாழிகளுக்கு மேலே நாட்டுக்கு ஆட்சியுரிமை பெற்ற அரசர் இருப்பார். காலப்போக்கில் ஒவ்வொரு நாடும் சில தரைகளாகப் பிரிவுபட்டன. இவற்றின் நடவடிக்கைகளை மேற்பார்ப்பவர்கள் காரணவன்கள் அல்லது பெரியவன் எனப்படுவான். இந்தக் காரணவன்களின் கூட்டம் அறுநூறு என்னும் அளவினதாக இடைக்காலத்தில் நாயர்களின் சமூகப்பொறுப்புடைய படையமைப்பாக இருந்தது. காரணவன்கள் கூட்டமான இந்த அறுநூற்றைப் பற்றிய குறிப்புகள் கி.பி. 925-ஆம் ஆண்டுக்குரிய சிரியன் கிறித்தவர்கள் பட்டயங்களில் இரண்டிடத்தில் இடம் பெற்றுள்ளன. மலையாளம் சகாப்தம் 371-ஆம் ஆண்டிற்குரியதான தென்திருவாங்கூர் கல்வெட்டு

ஒன்றில் வேணாட்டைச் சேர்ந்த அறுநூறு என்ற குறிப்பு உள்ளது. அப்பகுதிகளில் உள்ள கோயில்கள், அறச்சாலைகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை மேற்பார்ப்பதும் இவர்கள் கடமைகளுள் ஒன்றாக இருந்ததாகத் தெரிகின்றது. பண்டைய நாட்களில் வேணாடு பதினெட்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தமையால் அந்த நாட்டில் மொத்தமாகப் பதினெட்டு அறுநூற்றுவர் இருந்திருக்கக் கூடும். சமூகம் தொடர்பான நடைமுறைகளில் நாடுவாழிகள் குறிப்பிடத்தக்க அதிகாரம் பெற்றிருந்ததோடு கூடத் தங்கள் குடிகளால் பயிரிடப் போதுமான அளவு நிலத்தையும் பெற்றிருந்தார்கள் எனத் தெரிகின்றது. இந்த அமைப்பு முழுவதும் பண்ணைக்குடி உரிமை முறை அடித்தளத்தின் மேல் இயங்கியது. பெரும் எண்ணிக்கையிலானவர்கள் போர்க்காலங்களில் படைவீரர்களாகப் பணிபுரிந்தும் அமைதி நிலவும் காலங்களில் தங்கள் நிலங்களைப் பயிரிட்டும் வந்தனர். இன்று திருவாங்கூரில் இவர்களுள் நாயர் படைப்பிரிவில் படைவீரர்களாக உள்ளவர்களைத் தவிர வேறு யாரும் போர்த்தொழிலை மேற்கொண்டவர்களாக இல்லை.''

நாயர்களின் சமூக அமைப்புப் பற்றித் திரு லோகன் பின்வருமாறு எழுதுகின்றார்:- ''பிரிட்டிசார் மலபாரைத் தங்களாட்சியின் கீழ்க்கொண்டு வரும்வரை நாயர்களே இப் பகுதியின் படைவீரர்களாக இருந்து வந்துள்ளனர். இவர்கள் சாதிக்குரிய பெயரே மக்களின் தலைவர்கள் என்பதனைக் குறிப்பாக உணர்த்துவதாக உள்ளது. முதலில் இவர்கள் அறுநூற்றுவர்களாகப் பிரிவுபட்டு ஒவ்வொரு அறுநூற்றுவரும் ஒரு நாட்டின் மக்களைப் பாதுகாத்தலை மேற்கொள்ளும் பொறுப்பினை ஏற்றிருந்ததாகத் தெரிகின்றது. நாடுகள் மேலும் பல தரைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. தரை என்ற திராவிடச் சொல் அடித்தளம் எனப் பொருள்படுவது. இது முதலில் ஒரு வீட்டின் அடித்தளத்தைக் குறித்துப் பின் பொதுப் பெயராகப் பல வீடுகளைக் கொண்ட தெருவினைத் தமிழில் தெரு என்றும் தெலுங்கில் தெருவு என்றும் கன்னடம், துளு மொழிகளில் தெரவு எனவும் வழங்கலாயிற்று. தரை நாயர்களின் சமூக அமைப்பின் அடிப்படைச் சிறிய அளவாகும். இதனை மேற்பார்க்கும் பொறுப்புக்குரியவர் காரணவர் எனப்படும் மூத்தோர் ஆவர். அறுநூறு எனப்படுவது இந்தக் காரணவர்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கையாகலாம். சில இடங்களில் இவர்கள் முக்கியஸ்தர்கள் அல்லது மத்தியஸ்தர் அல்லது பரமானிகள் (தலைக்காரர்) என்பன போல வழங்கப்படுகின்றனர். ஒவ்வொரு தரைக்கும் இத்தகைய காரணவன்கள் குடும்பங்கள் நான்கு இருப்பதாகத் தெரிகின்றது எனக் கொள்ளலாம். நாட்டின் அரசியல் நடைமுறையில் தரை அமைப்புகள் எனப்படும் சாதிக்

காவலர் முக்கியமான பங்கு வகித்ததாகத் தெரிகின்றது. அரசனின் கொடுங்கோன்மைக்கும் அடக்கு முறைக்கும் இது மிகப் பெரும் பாதுகாப்பு அரணாக இருந்தது. இதனை உறுதிப்படுத்தும் சான்றாகக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குக் கள்ளிக்கோட்டையில் துபாஷியாகவும் முகவராகவும் இருந்தவரின் நாட்குறிப்பில் 1746-ஆம் ஆண்டு மே மாதம் 28-ஆம்நாளில் பதியப்பட்டுள்ள குறிப்பை இங்குத் தரலாம் என நினைக்கின்றேன். அவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:- ''கள்ளிக் கோட்டை மக்களின் தலைவர்களான இந்த நாயர்கள் 'பார்லிமெண்டுக்கு' ஒப்பானவர்கள். இவர்கள் அரசரின் ஆணைகள் அனைத்திற்கும் கீழ்ப்படிந்து நடப்பதில்லை. அரசருடைய அமைச்சர்கள் தேவையில்லாத நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களானால் இவர்கள் அவர்களுக்கு நற்புத்தி புகட்டுவர்.'' இங்குப் 'பார்லிமெண்ட்' எனக் குறிக்கப்பட்டது நாட்டைச் சேர்ந்த கூட்டத்தையாதல் வேண்டும். சமூகம் இணைந்து செயற்பட வேண்டிய பல காரியங்களுக்குக் கூட்டம் பேருதவியாக அமைகின்றது. நாயர்கள் தங்கள் கூட்டத்துடன் வேட்டை, போர், பஞ்சாயத்து இன்னும் இது போன்ற பல சமூக நிகழ்ச்சிகளுக்கு எனத்திரள்வர். இந்தக் கூட்ட அமைப்பு 1832-33-இல் பிரிட்டிசாரின் அலுவலர்களுக்குப் பெருந்தொல்லை தந்துள்ளது. மலபாரைப் பொறுத்தவரை பிரிட்டீசார் வரும் வரை இந்த அமைப்பு சிறந்த செயல்பாடுடையதாக அரசரின் அதிகாரத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததாகத் தெரிகின்றது. இந்த வட்டாரத்தைப் பற்றி நன்கு அறிந்த அஞ்சரக் கண்டியினைச் சேர்ந்த திரு முர்டொச் பிரெளன் இந்த நூற்றாண்டின் (பத்தொன்பதாம்) தொடக்கத்தில் இந்தப் பகுதியினை மைசூரைச் சேர்ந்த ஹைதர் அலி வெற்றி கொண்ட பின் அவருடைய அரசின் வருவாய் முகவர்களா யிருந்து ஆட்சி புரிந்த அரசர்களின் கொடுங்கோன்மை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'புதிதாக ஏற்பட்ட இந்த மாற்றங்களின் காரணமாக அரசர்கள் பண்டைய பண்ணைக் குடியுரிமை ஆட்சி முறைமையின் கீழ் இருந்ததான அளவுக்குட்பட்ட அதிகாரத்தைக் காட்டிலும் மிகுதியான அதிகாரத்தைப் பெற்றவர்களாகக் கொடுங்கோன்மை செலுத்தி வருகின்றனர். பண்டைய முறையில் தங்கள் கீழ் பண்ணையுரிமையாளர்களை வற்புறுத்தி வரி வசூலிப்பதோ அப்பகுதிகளின் மேல் நேரிடையாக அதிகாரம் செலுத்துவதோ இவர்களால் இயலாததாக இருந்து வந்தது.' எனக் கூறி, மேலும், ' அரசர் முன்பு இருந்தது போலப் பண்ணைக் குடியுரிமையாளர்களின் கூட்டமைப்பின் தலைவராக வரையறைக்குட்பட்ட அதிகாரத்தைப் பெற்றவராகத் தற்போது இல்லை. இன்று அவர் எல்லா அதிகாரங்களையும் பெற்ற கொடுங்கோலாரான இளவரசர் ஒருவரின்

பிரதிநிதியாகத் தேவைப்படும் பொழுது அவருடைய படையினரை ஏவி பண்ணைக் குடியுரிமையாளர்களை அடக்கித் தன் வழிக்குக் கொண்டுவரும் அதிகாரம் பெற்றவராக அவர்களுடைய ஒருமித்த குரலைக் கேட்டு அவர்கள் நிர்பந்தத்திற்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகாதவராக உள்ளார்' என எழுதியுள்ளார். * '' எனவே தொடக்கக் காலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை நாயர்களுடைய தரை, நாடு அமைப்புக்கள் இப்பகுதியினை வல்லாட்சியின் கொடுமையிலிருந்தும் காத்து வந்துள்ளன என்பது புலனாகின்றது. மற்றப் பகுதிகளைவிட மலையாளிகளுக்கு உரியதான கள்ளிக்கோட்டைப் பகுதி கிழக்கிற்கும் மேற்கிற்கும் வணிகத் துறையில் இணைப்பாக விளங்கும் சந்தையாக முன்னேறி வளம் பெற்றதற்கும் இதுவே காரணம் எனலாம். மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதோடு சமூகத்தில் நாயர்களுக்குரியதான வேறொரு முக்கியமான பொதுப்பணியும் உள்ளது. பாதுகாவலர்களாக இருப்பதோடு இவர்கள் மேற்பார்வையாளர்களாகவும் பணியாற்றியுள்ளனர். இவ்வாறு இவர்கள் ஆற்றும் பணி 'காணம்' என வழங்கப்படும். இது காணுக என்ற திராவிட வினைச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். பரசுராமன் நாயர்களைப் பல தரைகளாகப் பிரித்து (கேரளோற்பத்தி கூறும் வழக்கு வரலாறு இது) அவர்களுள் சிலரைக் காண்பதற்கும் (காண்-கண்ணால் செய்யப்படுவது) சிலரைச் செய்கைக்கும் (கை-ஆற்றலின் அடையாளமாக கை) சிலரை ஆணை இடுவதற்கும் (கல்பன-ஆணையிடல்) ஆக ஏற்பாடு செய்தார். இவ்வாறு பிரித்து வைத்ததானது அதிகாரங்கள் ஒருவரிடமே குவிந்து விடாமல் தவறான வழியில் பயன்படாமல் காப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு ஆகும். நாயர்கள் முதலில் நாடுகளை மேற்பார்வை இடுபவர்களாகவும் அரசுக்குரியதான நிலங்களிலிருந்து பெறுவதற்கான விளைவின் வருவாயினைத் திரட்டுபவர்களாகவும் இருந்ததாகத் தெரிகிறது. இந்தப் பணிக்காகவும் நாடு காவல் பொறுப்புக்காகவும் இவர்கள் நிலத்தின் விளைவிலிருந்து பெற்றதில் ஒரு பகுதியினைத் தங்களுக்குரியதாக அனுபவித்து வந்தனர். மாநிலத்தின் மற்றப் பகுதிகளைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் மற்ற மாவட்டங்களில் இது போன்ற (பாதுகாத்தலும் மேற்பார்த்தலும்) பணி தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த காவல்காரர்களுக்கும் (இது கள்ளரைக் குறித்தாதல் வேண்டும்) தெலுங்குப் பகுதியினைச் சேர்ந்த காபுகளுக்கும் உரியனவாக இருந்தனவா என்பதனை ஆராய்ந்து உறுதி செய்தல் வேண்டும். காவல், காபு என்ற இரண்டு சொற்களும் காணம்

* மைசூர், கன்னடம், மலபார் வழியான பயணம் பற்றிய புச்சனனின் குறிப்புகள். **(Buchanan, Mysore, canara and Malabar)**

என்ற மலையாளச் சொல்லுக்கான வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியிருக்கக் கூடும் என்பதனாலேயே இக்கருத்தைக் கூற வேண்டியதாயிற்று, தமிழில் இன்று நிலவுடைமை உரிமையினைக் குறிக்கும் சொல்லான காணியாட்சி என்பது அத்தகையதொரு வேர்ச் சொல்லிலிருந்து பிறந்திருக்கலாம் எனத் திரு எப். டபிள்யூ. எல்லீஸ் மிராசு உரிமை என்ற தனது கட்டுரையில் கூறியுள்ளார்.''

நம்பியார்களின் தொழில் பற்றித் திரு. என் சுப்பிரமணிய அய்யர் விளக்குவதாவது:- ''நாயர்களுள் எல்லா வகையான தொழில்களையும் மேற்கொள்பவர்கள் உள்ளனர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் திருவாங்கூர் மகாராசாவின் படையில் நாயர்களையும், சொவர்களையும் சேர்ந்த இலட்சம் போர்வீரர்கள் அம்பு, ஈட்டி, வாள், கோடரி ஆகிய போர்க்கருவிகளைத் தரித்தவர்களாக இருந்துள்ளனர். நாயர்களுள் பெரும்பாலோர் மேற்கொண்டிருப்பது உழுதொழிலே. பழைய மரபுப்படி ஏனோதானோவென்று பயிரிடும் முறையே நாயர்கள் பயிர்வைக்கும் முறையாகும். வேறு எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் இவன் இது போலப் பயிரிடக் கொஞ்சம் ஓய்வும் கிடைக்கப் பெறுவான். மலபாரிலுள்ள முக்கியமான கோயில் உற்சவங்களில் வேளைக்கிளி எனப்படும் போலிப் போர் நிகழ்ச்சி இடம்பெறும். அதில் பங்கு பெறும் நாயர்கள் போர் வீரருக்குரியதாக இருந்த பழங்கால உடையினையே அணிகின்றனர். இன்றும் மகாராசாவின் தனிப் படைப்பிரிவைச் சேர்ந்த நாயர்கள் விடுமுறை நாள்களில் உழுதொழிலில் ஈடு பட்டவர்களாகத் தங்களுடைய மாத ஊதியத்தோடு கூட மேலும் கொஞ்சம் பொருள் சேர்க்கின்றனர். கேரளவகசக்ரம் கூறியுள்ளபடி சமூகத்திற்கு இன்றியமையாத வேறு பல பணிகளும் நாயர்களுக்கு உரியனவாக ஒதுக்கப்பட்டுள்ளன. இவர்களிடையே தொடக்கக் காலத்தில் இருந்ததான உட்பிரிவுகளுக்கு இதுவே காரணமாகலாம். பிராமணர், சத்திரியர் ஆகியோர் இல்லங்களிலும் கோயில்களிலும் இவர்கள் வீட்டு வேலைக்காரர்களாக உள்ளனர். சிலர் பால்பொருள்களின் வணிகம், செப்புத் தகட்டுக் கூரை அமைத்தல், பல்லக்குச் சுமத்தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டுள்ளனர். புதிய நாகரிகத்தின் செல்வாக்கால் பழமையான இந்தப் பரம்பரைத் தொழில்கள் நசிந்து வருகின்றன. கல்வியில் நாயர்கள் முன்னணியினராக உள்ளனர். நாயர் சாதியினைச் சேர்ந்த சிறுமிகள், சிறுவர்களைப் போலவே எழுதப் படிக்கக் கணக்கிடக் கற்றுக்கொள்ள ஊர்ப்புறங்களில் உள்ள பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர். இந்தியா முழுவதிலும் உள்ள பெண்களுள் மலபாரைச் சேர்ந்தவர்களே படிப்பறிவில் முன்னணியினராக இருப்பதற்கு இதுவே காரணம்.

இராமானுஜம் எழுத்தச்சன் மலையாள மொழியினைச் சீர்திருத்தி வளமுடையதாக்கிய பிறகு மலபாரின் பல பகுதிகளில் ஆசான்கள் எனப்படும் கிராமப்புற ஆசிரியர்கள் பலர் தோன்றியுள்ளனர். அடிப்படை மலையாளக் கல்வியறிவு பெற்றபின் அதற்கு மேல் கல்வியறிவு பெற விரும்புபவர்கள் வடமொழி பயில அம்பலவாசி அல்லது சாஸ்திரிகளிடம் சென்று கற்பர். இன்றும் கூட வடமொழி பயில வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோள் உடையவர்களாக நாயர் இளைஞர்கள் சிலர் உள்ளனர். தங்கள் வட்டாரத்தைச் சேர்ந்த வடமொழிக் கல்லூரிகளில் அவர்கள் சென்று சேர்ந்து பயில்கின்றனர். ஆங்கிலக் கல்வி பயில்வதிலும் நாயர்கள் முற்பட்ட சமூகத்தவர்களாகவே உள்ளனர். திருவாங்கூர் அரசு ஆங்கிலக் கல்விப் பயிற்சிக்காகச் செய்து தந்திருக்கும் வசதிகளை இவர்கள் முழுவதுமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். அண்மையில் நாயர் சாதியினைச் சேர்ந்த சிறுமியர் பலர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் மெட்ரிகுலேசன் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர் என்பதனை இங்கே சிறப்பாக எடுத்துக் கூறியாக வேண்டும்."

"மலபாரில் உள்ள சமூகத்தவர்களுள் (பட்டர் பிராமணர்களைத்தவிர- இவர்களை மலையாளிகள் என்பது முற்றும் பொருந்தாது) நாயர்கள் நன்கு கல்வி கற்று முன்னேறியவர்களாக இருப்பதோடு அறிவுத்திறனில் கிழக்குக் கடற்கரைப் பிராமணர்களுக்குச் சமமானவர்களாகவும் உள்ளனர். இவர்களுள் பலர் அரசில் மிக உயர்ந்த பதவிகளை வகித்து வருவதோடு தனிப்பட்ட தொழில்துறை வல்லுநர்களாகவும் சமூகத்தில் உயர்ந்துள்ளனர்" என மலபார் மாவட்ட விவரக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

நாயி: Nāyi (dog)

குருபர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்.

நாயினார் : Nayinar

நாயினார், நாயனார், நயினார் என்பன வேளாளர்களின் ஒரு பிரிவாகப் பதியப்பட்டுள்ளன. இவர்கள் சமண சமயத்திலிருந்து இந்து சமயத்திற்கு மதம் மாறியவர்களின் வழித் தோன்றல்களாகக் கருதப்படுகிறார்கள். இது சமணர், கைகோளர், பள்ளிகள், உதையன்கள் ஆகியோருக்கான பட்டப் பெயருமாகும். நாயனிகுலம் என்பது போயர் சாதிக்கு உரிய மற்றுமொரு பெயராகும். நாயினார் என்பது தலைவன் எனப் பொருள் படும் நாயக என்ற சொல்லின் வேறன்று. சைவ சமயக் குரவர்களைச் சமய ஆச்சாரியர் என்ற பொருளில் நாயனார் எனவும் அழைப்பர். எடுத்துக்காட்டு: சுந்தர மூர்த்தி நாயனார்.

நாயிண்ட் : Nāyinda

1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பரம்பரையான அம்பட்டர் தொழிலோடு பயிரிடுதலையும் மேற்கொண்டுள்ள சாதியாருக்கான பெயராகப் பதியப்பட்டுள்ளது. ''இவர்கள் கிராமச் சமூக அமைப்பில் ஓர் உறுப்பாக உள்ளவர்கள். அசகரைப் (வண்ணார்) போலவே இவர்களுக்கும் இவர்கள் பணிக்காகத் தானியம் முதலியன தரப்படுகின்றன. இசைக் கலைஞர்களான இவர்கள் வாயால் ஊதி இசைக்கும் இசைக் கருவிகளுக்குத் தனி உரிமை பூண்டவர்கள். கேலசிகர் அல்லது உறசாம எனவும் இவர்கள் அழைக்கப்படுவர். இவர்களுள் சைவர், வைணவர் ஆகிய இரு பிரிவினர் உள்ளனர். ஒரு பிரிவினர் லிங்கம் கட்டியவர்களாக லிங்காயத நெறியினைப் பின்பற்றி வருகின்றனர். லிங்கம் கட்டிகள் சிலைவண்டர் எனப்படுவர். விருந்துகளின் போதும் மணங்களின் போதும் இசைவாணர்களான இந்தப் பிரிவினர் பணியினை அனைவரும் நாடுவர் என்று கணக்கெடுப்பு அறிக்கை இவர்களைப் பற்றித் தெரிவிக்கிறது.

நெடுங்காடி : Nedungādi

மலபாரில் உள்ள வள்ளுவநாடு வட்டத்தில் உள்ள ஒரு பகுதிக்குப் பெயராகும் இது. இது நாயர்கள், சாமந்தர்கள் சாதியின் உட்பிரிவாகவும் பதியப்பட்டுள்ளது.

நெக்கார : Nekkāra

தென் கன்னடத்தைச் சேர்ந்த சிறு பிரிவினரான வண்ணார் சாதியார். இச் சாதியினைச் சேர்ந்த பெண்களே துவைக்கும் தொழில் செய்கின்றனர். ஆண்கள் பூத ஆட்டக்காரர்களாகத் தொழில் பார்க்கின்றனர்.

நெல்லிக்கா : Nellika (Rhyllamthus Emblica)

தியரின் இல்லப் பெயர்

நெல்லு : Nellu

குருணிகளின் ஒரு கோத்திரம்

நெமில்லி : Nemilli (peacock)

போயர், பலிசர் சாதிக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்

நேரளி : Nerali (Eugenia Jambolana)

காங்கதிகார ஹொலையர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்

நெரதி : Nerati

நேரதி அல்லது நெரவதி காபுகளின் ஓர் உட்பிரிவு.

நேசெ : Nēsa

நெசவாளர் வகுப்பார் பலருக்கும் உரியதான தொழில் தொடர்பான பெயர். எனினும் இது குர்ணிகளுக்கே சிறப்பாக உள்ளது. "பதினொன்றாம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய இராச இராச சோழனின் கல்வெட்டில் பறையர் சாதி இப்பெயரால் குறிக்கப்பட்டுள்ளது" என 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நேட்பணிவாண்டுலு : Nētpanivāndlu

மாலர் நெசவாளர்களுக்குரிய ஒரு பெயராக மறைத்திரு ஜெ. கெயின் அவர்களால் பதியப்பட்டுள்ளது.*

நெத்திக் கொட்டாளர் : Nettikotala

நெத்திக்கொட்டலசி அல்லது நெத்திக் கொட்டாளர் தமிழ்நாட்டுக் கல்லடி சித்தர்களுக்குச் சமமானவர்கள் எனத் திரு. சி. உறயவதன ராவ் கூறியுள்ளார். தங்கள் நெற்றியில் அடித்துக் கொள்பவர்கள் என்பது இப் பெயரின் பொருளாகும். இவர்கள் கவர கோமட்டிகளோடு இணைக்கப்பட்ட இரவலர்கள். அக் கோமட்டிகளை ராஜ விட்டுணு வர்த்தனன் துரத்தி வந்த போது அவன் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்த உதவியதாக இவர்கள் கூறுவர். (பார்க்க : கோமட்டி) இவர்களுக்குத் தர வேண்டியதைத் தராவிட்டால் இவர்கள் நெற்றியிலும் உடம்பின் பிறபகுதிகளிலும் காயம் ஏற்படுத்திக் கொண்டு குருதி வழியும்படி செய்வர்.

நெய்யுகே : Neyige

1891 கணக்கெப்பு அறிக்கையில் மைசூர் மாநிலத்தில் பருத்தி, பட்டு ஆகியனவற்றைத் தறியில் நெய்பவர்களுக்கான தொழில் தொடர்பான பொதுப் பெயராகப் பதியப்பட்டுள்ளது. நெய்யுகே பிரிவில் பிலிமக்க, தேவாங்கர், காட்ரி, டர்வேகரர், சாலெ, சௌராஷ்டிர (பட்டுநூல் காரர்) சேணிகர், தொகடர் ஆகியோர் அடங்குவர்.

நெய்திக்கர் : Neytikkar

தென்னை நாரால் பாய் நெய்யும் மலபாரைச் சேர்ந்த நெசவாளர்.

---

* இந்தியத் தொல்லியல், 1879, (**Ind. Ant. VIII,** 1879)

நேய்யள : Nēyyala

விசாகப்பட்டினம், கஞ்சம் மாவட்டங்களில் சிறப்பாகக் காணப்படும் தெலுங்கு மீனவர் சாதியார் நேய்யளர். இவர்களைப் பற்றிய பின்வரும் குறிப்புகளுக்கு நான் திரு. சி. ஹயவதனராவிற்குக் கடப்பாடுடையேன். இச்சாதிப்பெயர் பொரியாக வறுக்கப்பட்ட அரிசி அல்லது சோளத்தைக் குறிப்பதான நேய்யன என்பதிலிருந்து வந்ததாகும் . இதனை இச்சாதியினைச் சேர்ந்த பெண்கள் தயாரிப்பர். அறுவடை சமயத்தில் இவ்வாறு சிறப்பாகப் பொரிக்கப்படும் இதனை வெல்லப்பாகோடு சேர்த்து உருண்டைகளாக்குவர். அவற்றை அறுவடைப் பணியில் ஈடுபட்டிருப் பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் விற்பதற்காக ஆண்கள் எடுத்துச் செல்வர். இதற்கு விலையாக அறுவடையில் ஈடுபட்டிருப்போரிடம் அவர்கள் கூலியாகப் பெறும் தானியத்தில் ஒரு பகுதியினைப் பெறுவர். கொண்டி வலை அல்லது கொய்யள வலையில் மீன்பிடிக்கும் பணியிலும் இவர்கள் ஈடுபடுவர். இவ்வலைகள் வரிசையாக அமைக்கப்பட்ட மூங்கிலில் பிணைத்துக் கட்டப்பட்டவையாம். ஆழமில்லாத நீரில் இவற்றை இருவர் சேர்ந்து இழுத்துச் செல்வர்.

நாகப்பாம்பினை இச்சாதியார் போற்றி வழிபடுகின்றனர். திருமணத்தின் போது பிராமணர்களை அமர்த்திக்கொள்ளும் இவர்கள் அப்போது பூணூலும் அணிந்து கொள்வர். கைம்பெண்கள், முதல் கணவன் வழி பிள்ளைகளைப் பெறாதவர்களாக இருப்பின் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். மணமுறிவு அனுமதிக்கப் படுவதில்லை. இறந்தவர்களை எரிப்பதோடு சின்னரோசு, பெத்தரோசு சாவுச் சடங்குகளையும் நிகழ்த்துகின்றனர்..

இச்சாதியார் போதையூட்டும் மதுவகைகளைப் பருகுவதில்லை. பிராமணர்கள் வீடுகளில் மட்டும் உண்ணும் இவர்களுக்கான பட்டப்பெயர் அய்யா என்பதாகும்.

நெய்யி : Neyye (Clarified butter)

கோமட்டிகளின் தொழில் தொடர்பான உட்பிரிவு.

நீல : Nīla (blue)

மேதரின் புறமணக்கட்டுப்பாடுடைய குலம்.

நீலக்காரன் : Nīlakaran (indigo people)

சாயம் போடும் சாதியாருக்கான ஒரு பெயர். 1901 மைசூர் மாநிலக்

கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்கள் மண்பாண்டம் வனையும் பாரர் சாதியினுள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நீவி : Nīli (Indigo)

பத்ம சாலே, தொகடர் சாதிகளின் புறமணக் கட்டுப்பாடுடைய குலம்.

நிர்கந்தி : Nirgandi

மைசூர், குடகு மாவட்ட விவரக் குறிப்பில் வாய்க்கால் தண்ணீரை வயலுக்கு முறைப்படுத்தி விடுபவர்களுக்கான பெயராகப் பதியப்பட்டுள்ளது. இவர்கள் பெரும்பாலும் ஹாலையர் சாதியார்.

நீறுபூசி : Nīrpusi (wearers of sacred ashes)

கணக்கெடுப்பின் போது பாண்டிய வேளாளர்களின் ஓர் உட்பிரிவினருக்கான பெயராகப் பதியப்பட்டுள்ளது. தென்ஆர்க்காடு மாவட்ட விவரக் குறிப்பில் நீறுபூசி வேளாளர் என்ற பெயர், அம்மாவட்டத்தில் சமண சமயத்திலிருந்தவர்களான இவர்கள் தங்கள் பூணூலை எடுத்துவிட்டு நெற்றியில் விபூதி பூசிச் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதனைக் குறிப்பதற்கான பெயராக வழங்கிவருவதாகக் கூறப்பட்டுள்ளது.

நித்யதாசர் : Nityadasu

நித்யதாசர், நித்யாளு என்ற இப்பெயர்கள் என்றும் அடிமையாக இருந்து வருபவர்கள் என்ற பொருளில் மால தாசரிகள் சிலர் தங்களைச் சிறப்பித்துக் கூறிக் கொள்ளும் பெயர்.

நொத : Nodha

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் ஒரியப் பகுதியின் மலைப்பகுதிகளில் பயிரிடுவோராகவும் மண்ணில் தொழில் புரிவோராகவும் உள்ள எண்ணிக்கையில் குறைந்த சாதியாருக்கு உரிய பெயரெனப் பதியப்பட்டுள்ளது.

நோக்கன் : Nōkkan

நோக்கன்கள் எனப்படும் இவர்கள் பெரும்பாலும் சாதிப்பிள்ளைகள் என்ற பெயரால் வழங்கப்படுகின்றனர். இவர்கள் பள்ளி சாதியாரிடமிருந்து இரந்து வாழும் இரவலர்கள். நோக்கன் என்ற சொல் 'பார்ப்பவன்' எனப் பொருள்படும். இவர்கள் அவ்வப்போது பள்ளிகள் வாழும் பகுதிக்குச்

சென்று அவர்களிடமிருந்து சிறு தொகையினைப் பெறுவர். பள்ளிகள் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் இவர்கள் ஊர்வலத்தின் போது அனுமான், புலிகள் , அக்னி முதலிய உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ள கொடிகளைத் தாங்கிச் செல்வர். இக்கொடிகள் காளஹஸ்தியில் செய்யப் படுபவை.

நோக்கன்களின் முன்னோர்கள் பள்ளியர் சாதிக்கு முன்பு உதவியமைக்காகவே இவர்கள் பள்ளியரிடமிருந்து தொகை பெறுகின்றனர். இது தொடர்பான வழங்கும் கதை வருமாறு:- பள்ளியர் சாதி அரசன் காஞ்சிபுரத்திலிருந்து ஆண்டு வருகையில் தெய்வ உருவம் வைக்கப்பட்ட தேர் ஒன்று மேற்செல்ல இயலாததாக நின்றுவிட்டது. இதற்காக ஒரு மனித உயிரினைப் பலிகொடுக்க வேண்டி வந்த போது அதற்குத் தங்களை உட்படுத்திக் கொள்ள யாரும் முன்வரவில்லை. நோக்கன் ஒருவன் கருவுற்றவளாக இருந்த தன் ஒரே மகளை இவ்வாறு பலிக்கொடுக்க முன் வந்தான். இதனால் மகிழ்ந்த அரசன் பள்ளியர் அப்போதிருந்து நோக்கன்களைத் தங்கள் சாதிப் பிள்ளைகளாகப் பாவிக்க வேண்டுமென ஆணையிட்டான். சில நோக்கன்கள் இதற்கான செப்புப் பட்டயங்கள் தங்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறுவர். அவற்றுள் ஒன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பொன்னேரி வட்டத்தைச் சேர்ந்த மூலவாயல் ஊரைச் சேர்ந்த நோக்கன் இராமசாமியிடம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஊர்ஊராகச் செல்லும் போது நோக்கன்கள் பள்ளிகள் தோற்றம் பற்றிய கதைகளைத் திரும்பத் திரும்பக் கூறுவர். அதன் ஒரு வடிவம் பின்வருமாறு அமையும். வாதாபி, ஏனாதபி என்ற இரண்டு அசுரர்கள் இரத்னகிரிப் பட்டணத்திலிருந்து ஆண்டு வந்தனர். அவர்கள் கடுந்தவம் புரிந்து சிவனிடமிருந்து தங்கள் நாட்டு எல்லையில் குழந்தைகள் எவையும் இறக்கக்கூடாதெனவும் கருவிலிருந்து பிறந்த யாராலும் தங்களுக்குச் சாவு நேரக் கூடாதெனவும் வரம் பெற்றனர். இந்த அசுரர்களின் கொடுமையினைத் தாங்க முடியாதவர்களான தேவர்கள் தங்கள் குறையினைப் பிரமனிடம் முறையிட்டனர். யமுனை நதிக்கரையில் தவம் செய்து கொண்டிருந்த ஜம்புவ முனிவரிடம் பிரமன் அவர்களை அனுப்பி வைத்தான். இந்த முனிவர் ஆசெந்தி என்ற பெயருடைய பார்வதியின் கன்னங்களிலிருந்து பிறந்த ஒருத்தியினை மணந்து கொண்டிருந்தார். தேவர்களின் வேண்டுகோளினைக் கேட்ட அந்த முனிவர் புனித நெருப்பினை மூட்ட அதிலிருந்து சூத்ர வன்னியன் என்பவனும் நாற்பது வீரர்களும் வெளிப்பட்டனர். நீலகண்டன்;

கவகபாலன், வச்ரபாகு என்போர் அவ்வீரர்களுள் சிலராவர். பள்ளிகள் அந்த வீரர்களின் மரபில் வந்தவர்களாவர். (பார்க்க : பள்ளி)

நோக்கன்கள் பூணூல் அணிவதோடு தங்களுடன் பெரிய முரசு ஒன்றையும் பாம்பாட்டிகள் வைத்திருப்பதை ஒத்த சுரைப்புருடை ஒன்றையும் எடுத்துச் செல்வர்.

நொலிய : Noliya

தெலுங்குச் சாதியாரான ஜலாரிக்களின் ஒரியப் பிரிவினருக்கான மற்றுமொரு பெயர்.

நொனப : Nonaba

வக்கலிகருடைய வட்டாரப் பிரிவு அடிப்படையில் அமைந்த உட்பிரிவு. நொனம்பவாடி என்ற தஞ்சாவூரைச் சேர்ந்த முந்தைய ஓர் உட்பிரிவாக இருந்த பகுதியின் பெயரிலிருந்து வந்தது இச்சாதிப்பெயர்.

நோட்டக்காரன் : Nōttakaran

ஊர் அதிகாரிகளுள் ஒன்றாக இருந்த நோட்டக்காரன் அல்லது ஆராய்பவன் என்ற இந்தப் பதவி இன்று ஒழிக்கப்பட்டுவிட்டது. இதனை பொற்கொல்லரே வகித்து வந்தனர். நிலவரி வசூலிக்கும் போது ரூபாய்களைக் கள்ள நாணயமா எனச் சோதித்துப் பார்ப்பது இவர்கள் பணியாகும்.

நச்சு : Nachchu (broken rice)

குர்ணிகளின் ஒரு கோத்திரம். குறுணை என்பது பொருள்.

நூக்ல : Nūkala (coarse, grain pounder)

பத்ம சாலேக்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். சிறு தானியங்களின் மாவு எனப் பொருள்படுவது.

நுளையன் : Nulayan

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் தொண்ணூற்றாறு பேர் மலையாளத்தைச் சேர்ந்த மீனவரும் படகு வலிப்பவரும் எனப் பதிந்து கொண்டுள்ளனர். நுளையன்கள் திருவாங்கூரில் காணப்படுகின்றனர். மலபார் கணக்கெடுப்பிலும் பதியப்பட்டுள்ளது. மலபார் மாவட்ட ஆட்சியாளரின் ஆளுகைக் குட்பட்ட இரு பிரிட்டீசுக் குடியிருப்புக்களான திருவாங்கூரிலுள்ள

அஞ்செங்கோவிலும் தங்கச் சேரியிலும் இவர்கள் உள்ளனர்.

நூணே : Nūnė (Oil)

கோமட்டிகளின் தொழில் தொடர்பான உட்பிரிவு.

நுணிய : Nunia (nuno-salt)

ஒடியரின் உட்பிரிவு. நுணொ உப்பு எனப் பொருள்படும்.

நூறன் குருப்பு : Nūrankurup

மலபாரில் குடியமர்ந்துள்ள பரவன்களுக்கான தொழில் தொடர்பான பெயர். சுண்ணாம்புக் காளவாய் போடுவதே இவர்கள் மேற்கொண்டுள்ள தொழில். (நூறு- சுண்ணாம்பு).

நூர்பாஸ் : Nurbash

1901 கணக்கெடுப்பில் நூதே குலத்துக்கான மற்றுமொரு பெயராகப் பதியப்பட்டுள்ளது. நூற்பாப் (நெய்வது) என்பதன் சிதைந்த வடிவமாகும்.)

நூவ்வல : Nuvvala (gingely)

கம்மர், மேதரர் சாதிகளுக்குரிய புறமணக்கட்டுப்பாடு உடைய குலம். எள்ளிலிருந்து எண்ணெய் ஆட்டுகின்றனர். ''இந்த எள் இந்துக்களின் சமயச் சடங்குகளில் முக்கியமான பங்கு பெறுகின்ற காரணத்தால் இதனை ஹோம தானியம் என்றும் பித்ரு தருப்பணம் (மூதாதையருக்குப் பலியாக வழங்கப்படுவது) என்றும் அழைக்கின் றனர்.''(U.C. Dutt) சில பிராமணர்களின் சாவுச் சடங்கின்போது எள்ளையும் தண்ணீரையும் திலோதகம் என்ற பெயரில் சோற்று ருண்டையோடு நாளும் இறந்து போனவருடைய ஆவியினைக் குறிக்கும் இரண்டு கற்களின் முன் பலியாகத் தருவர்.

நியாயம் : Nyāyam (justice)

பத்ம சாலேக்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம். நீதி எனப் பொருள்படுவது.

ஒச்சன் : Occhan

பிடாரி முதலிய கிராம தேவதைகளின் கோயில்களில் பணிபுரியும் பூசாரிகள் வகுப்பார். இவர்களுள் பெரும்பாலோர் சைவர்களாயினும் சிலர் வடகலை மற்றும் தென்கலை வைணவ சமயப் பிரிவுகளைச்

சேர்ந்தவர்களாக உள்ளனர். இப் பூசாரிகளுள் சிலர் கோயிலில் இருக்கும் போது பூணூல் அணிந்து கொள்கின்றனர். உடுக்கையும் சிலம்புமே இவர்களைக் கண்டுகொள்ள உதவும் அடையாளங்கள். உடுக்கை காலம் காட்டும் கண்ணாடி சாடி உருவினது. சிலம்பினுள் சிறு பித்தளைக் குண்டுகளை இட்டு ஆட்டினால் ஒலியெழுப்பும்படி அமைத்திருப்பர். செங்கல்பட்டு மாவட்டத்தில் ஓச்சன்கள் சிலர் தேவதாசிகளுக்கு நாட்டியம் கற்றுத் தரும் பணியினை மேற்கொண்டுள்ளதால் சில சமயங்களில் நட்டுவனார் என அழைக்கப்படுகின்றனர்.

ஓசை என்ற தமிழ்ச் சொல்லிலிருந்தே ஓச்சன் என்ற இப்பெயர் வந்துள்ளது. உடுக்கை அடித்து ஒலியெழுப்பிக் கிராமத் தேவதைகளின் பெருமையினைப் பாடுவதால் இவர்கள் இப்பெயர் பெற்றுள்ளனர். சில பழைய கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ள உவச்சன் என்ற சொல்லின் சுருங்கிய வடிவமே ஓச்சனாகும் என்றும் கூறுவர்.* அக்கல்வெட்டுக் களுள் தொன்மையானது சகா 1180(கி.பி. 1258)க்கு உரியதாக உவச்சர்களுக்கு விதிக்கப்படும் வரியினைக் குறிக்கின்றது. இதே வரியினைக் குறிக்கும் மற்றொரு கல்வெட்டு சகா 1328 (கி.பி. 1406) க்கு உரியது. இந்த இரண்டு கல்வெட்டுக்களிலும் இடம்பெற்றுள்ள உவச்சன் என்ற சொல்லை முகமதிய வகுப்பாரான சோனகர் என்றே பொருள் விளக்கம் செய்துள்ளனர். வின்சுலோ தன்னுடைய தமிழ் ஆங்கில அகராதியில் இச்சொல்லுக்கு முகமதியப் பிரிவினர் - சோனகர் எனப் பொருள் தந்திருப்பதோடு கோயில்களில் உடுக்கை அடிக்கும் வகுப்பார் என்ற பொருளையும் ஓச்சன் என்ற சொல்லுக்குத் தந்துள்ளார்.

வட மாவட்டங்களில் ஓச்சன்கள் மாரயன், பாண்டி, கந்தப்பன், பெரிய அல்லது பல்லவராயன், புலவன் என ஐந்து பிரிவினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். மாரயன் என்பது திருவாங்கூரில் கோயில் பூசாரிகளுக்கு வழங்கும் பெயராகவும் உள்ளது. இவர்களைச் சிறப்பிக்கத் திருவாங்கூர் அரசர்கள் ஓச்சன் என்ற பட்டப் பெயரை இவர்களுக்கு வழங்கியுள்ளார்.೨ அர்ச்சகன் அல்லது உமை அர்ச்சகன், தேவர், பரசைவன், முதலியார், வல்லபராயன், பூசாரி, புலவர், கம்பர் போன்ற பல பட்டப் பெயர்கள் ஓச்சருக்கு உரியனவாக உள்ளன. இவற்றுள் இறுதியில் உள்ள இரண்டும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெயரை ஒட்டி

* ஈ.யுல்ட்ச் - தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் , I. 82.108,1890).
(E. Hultzch, South Indian Inscriptions I. 82. 108, 1890)

೨ திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை 1901. **(Travancore Census Report, 1901).**

அமைந்தவை. அவர் ஓச்சர் குலத்தவர் என்ற ஒரு வழக்கு உள்ளது. கம்பனைப் பற்றி ஒரு கதை வழங்குகின்றது. கம்பன் அரசவைக்குப் போய்க் கொண்டிருந்தபோது எண்ணெய்ச்செக்கு ஆட்டும் செக்கான் ஒருவன் செக்கில் பூட்டி ஓட்டும் எருதுகளிடம்," நீங்கள் ஒருத்தரை ஒருத்தர் உதைத்துக் கொள்வது ஓச்சனான கம்பன் தன் பாட்டைப் பாடியபடி செல்வதால்தானோ" எனக் கூறியதைக் கேட்டு அந்த எண்ணெய்ச் செக்கானிடம் சென்று அவனையும் அழைத்துக் கொண்டு அரசனிடம் சென்று அவன் தன்னை இழிவுப்படுத்தினான் எனக் குற்றம் சுமத்தினான்.அரசரின் கட்டளைப்படி அந்தச் செக்கான் கம்பன் பாடலைக் கேட்டு எப்படித் தன் எருதுகள் மிரண்டன எனச் செய்யுளாகவே நடந்தவைகளைக் கூறினான். அவன் பாட்டில் மகிழ்ந்த கம்பன் அரசனிடம் அவனுக்குப் பரிசுகள் வழங்கி அனுப்புமாறு வேண்டினான்.

தென் மாவட்டங்களில் குறிப்பாக மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் ஓச்சன்கள் அத்தை மகளை மணந்துகொள்ள உரிமை கொண்டாடுவது வழக்கமாக உள்ளது. வடமாவட்டங்களில் ஒருவன் தன் தாய் மாமன் மகளையோ தன் அக்காள் மகளையோ கூட மணக்கலாம் என்ற வழக்கு உள்ளது. பிராமணக் குருக்கள் இவர்களின் மணச் சடங்குகளை நடத்தி வைக்கின்றனர். பூப்பு நீராட்டு, திருமணம், சாவு ஆகியன தொடர்பான சடங்குகளில் ஓச்சர்கள் பள்ளிகளான வன்னியர் போலவே சடங்குகளை நிகழ்த்துகின்றனர். இறந்தவர்களை எரிக்கின்றனர். பிராமணர்களே சாவுச் சடங்குகளை நிகழ்த்தி வைக்கின்றனர். குடியமைப்புக் கொண்டதான இச்சாதியார் வாழும் பகுதிகளில் பெரியதனக்காரன் என்ற சாதித் தலைவன் உள்ளான்.

ஓடவாண்டுலு : Ōda Vāndalu (boatmen)

கஞ்சம், விசாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த மீளர், மீனவர் சாதியாருக்குரிய மற்றுமொரு பெயர். வளமான மீளர் சிலர் தங்கள் சாதிப் பெயர் ஓடவலிசர் எனக் கூறிக் கொள்வர். (பார்க்க: வாட)

ஓடன் : Ōdan

ஓடு தயாரிக்கும் நாயர்களுக்கு அமைந்த தொழில் தொடர்பான பெயர்.

ஓதாரி : Ōdari

ஓதாரியர் அல்லது வொதாரியர் தென் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்த துளு பேசும் மண்பாண்டம் செய்வோர். அத்தொழிலைக்

கைவிட்ட இச்சாதியார் தங்களை மூளியர் எனக் கூறிக் கொள்வர். மண் பாண்டங்கள் செய்வோர் சிலரும், பூதஸ்தானங்களில் பூசாரிகளாக உள்ள சிலரும் கூடத் தங்களை மூளியர் எனக் கூறிக் கொள்கின்றனர். இச் சாதிக்குத் தலைவனாகவும் பூசாரியாகவும் உள்ளவன் தன்னை மூளியன் என அழைத்துக் கொள்வான். இவர்களுக்கான முறையான பட்டப்பெயர் குரிக்காரன். கன்னடம் பேசும் தென் கன்னட மாவட்டக் குயவர்கள் தடி யால் சுற்றப்படும் சாதாரண சக்கரத்தைப் பயன்படுத்தியே பானை வனை கின்றனர். அது மேலே குழிவுள்ளதான சுடப்படாத களிமண்ணால் செய் யப்பட்ட வட்டையினாலானது. ஓதாரியின் சக்கரம் கூழாங்கல் குமிழைக் கூழாங்கல் துளையுள் அமைத்துப் பொருத்திக் கையால் சுற்றுப்படியாக அமைக்கப்பட்டது.

பிற துளு சாதியாரைப் போலவே ஓதாரியர் பூதங்களை வழிபட்டா லும் வெங்கடரமணரையும் இவர்கள் போற்றுகின்றனர்.

இவர்கள் மணச் சடங்குகள் பண்டர் சடங்குகளை ஒத்தவை. திரு மண நிச்சயதார்த்தத்தின் போது மணமக்களின் தந்தையர் வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்வர். மணமகன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அப் போது மணமகளுக்கு ஒரு மோதிரத்தை வழங்குவர். மணச் சடங்குகள் ஒரே நாளில் முடிவுறும். மணப்பந்தலில் ஒரு விசிப்பலகையை (பெஞ்சு) இட்டு அதனை மடிவாலி கொண்டுவரும் துணியினால் போர்த்துவர். மணமகனை மணமகள் உடன்பிறந்தவன் அங்கு அழைத்து வந்து அத னை மும்முறை சுற்றச் செய்து அதில் உட்கார வைப்பான். அவனுக்கு முன் விளக்கு, அரிசி, பழங்கள் ஆகியன ஏந்திய பெண்கள் செல்வது வழக்கம். அந்த விளக்கைத் தொங்கவிட்டு மற்றவற்றைத் தரையில் வைப்பர். அந்தப் பெண்கள் ஒவ்வொருவராக முதலில் ஓர் அரிசி மணியி னை விளக்கின் மேல் போட்டுப் பின் கொஞ்சம் அரிசியினை மணம கன் மேல் தூவுவர். அதன்பின் நாவிதன் வந்து மணமகன் மீது அரிசியி னைத் தூவிய பின் அவனுக்குத் தண்ணீருக்குப் பதிலாகப் பாலினைப பயன்படுத்தி முகம் மழிப்பான். நாசுவத்தி ஒருத்தி மணமகளுக்கும் மழித் தலைச் செய்வாள். மணமக்களை அலங்கரித்துப் பந்தலுக்கு அழைத்து வருவர். அங்குக் கூடியுள்ளவர்கள் அவர்கள் மீது அரிசியினைத் தூவிப் பணத்தினை அன்பளிப்பாக வழங்குவர். சாதித் தலைவன் அதன்பின் அவர்கள் கரங்களைப் பிணைத்து வைப்பான். மணமகளின் தாய்மாமன் அக்கரங்களின் மீது தானே நீர் வார்ப்பான்.

கருவுற்றவளுக்கு நடத்தப்படும் சடங்கில் அவள் தாய்மாமன் அவளுக்கு ஒன்றிரண்டு கோழிகளை வழங்குவது குறிப்பிடத்தக்கது. அந்தக் கோழிகளை அவள் பேணி வளர்ப்பாள். அவை நிறைய முட்டைகளிடுமாயின் அது கருவுற்றவள் நிறைய பிள்ளைகள் பெறுவாள் என்பதற்கான அடையாளமாகக் கொள்ளப்படும்.

இறந்தவர்கள் எரிக்கவோ புதைக்கவோ படுவர். இறந்தவர்கள் எரிக்கப்பட்டால் இறுதி சாவுச் சடங்கான பூசை பதினொன்று அல்லது பதின்மூன்றாம் நாளன்று நிகழ்த்தப்படும். பிணத்தைப் புதைத்தவர்கள் இச்சடங்கினை ஒரு மாதம் சென்ற பிறகே நிகழ்த்துவர்.

ஒட்டர் : Oddē

ஒட்டர் அல்லது வொட்டர் எனப்படும் இவர்கள் பொதுவாக வொட்டெர் என்றே அழைக்கப்படுகின்றனர். இவர்களைப் பற்றித் திரு எச்.எ. ஸ்டுவர்ட் வட ஆர்க்காடு மாவட்டக் கையேட்டில் தொகுத்துக் கூறியுள்ளவை வருமாறு :- " கற்குழிகளில் கல்லெடுத்தல், கிணறு வெட்டுதல், குளங்களின் கரைகள் கட்டுதல், இன்னும் பிற மண்கரைகட்டும் வேலைகளைப் பிற சாதியாரைவிட விரைந்து முடிக்கும் இப்பணிகளைத் தங்களுக்கே உரியனவாக ஆக்கிக் கொண்டுள்ள கட்டுமானப் பணியாளர்கள் இவர்கள். தெலுங்கு பேசும் இவர்கள் ஓரிசாவிலிருந்து வந்தவர்களாகையால் இப்பெயர் பெற்றுள்ளனர். நல்ல மனநிலையில் உள்ளபோது இவர்கள் ஒழுங்கானவர்களாகத் தோன்றுவர். கொஞ்சம் கூலி பெற்றவுடன் வேலையை விட்டுவிட்டுப் பெற்ற கூலித்தொகை தீரும்வரைக் குடித்துக் கும்மாளமிட்டுக் கூத்தடிப்பர். தங்கள் பணிக்கான கூலியின் அளவைக் கூடக் கணக்கிட அறியாத அறிவிலிகளான இவர்கள் தங்களை வேலைக்கு அமர்த்தியுள்ளவர்களை நம்பியவர்களாக அவர்கள் கொடுப்பதைப் பெறுவர். நல்ல மனம் படைத்த இவர்கள் ஒழுக்கத்தைப் பற்றி அதிகம் கவலைப்படாததோடு உணவு முறையிலும் எத்தகைய கட்டுப்பாட்டினையும் மேற்கொள்வதில்லை. சூத்திர சாதியார் பலரும் இவர்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதினாலும் இவர்கள் தங்கள் சாதியினை விட உயர்ந்தவர்கள் இல்லங்களில் மட்டுமே உணவு கொள்ளும் பழக்கத்தை மேற்கொண்டவர்களாகத் தங்களைத் தாங்களே மதித்தவர்களாக நடந்து வருகின்றனர். பல மனைவியரை மணத்தலையும் மணமுறிவினையும் இவர்கள் எத்தகைய கட்டுப்பாடுமின்றி அனுமதிக்கின்றனர். பெண்கள் பதினெட்டுக் கணவர்களுக்கு மேல் மணத்தல் கூடாது என்ற தடை உள்ளது. ஆண்களுக்கு இத்தகைய தடை ஏதுமில்லை."

ஏழு கணவர்களை அடுத்தடுத்துப் பெற்றிருந்தவளான ஒருத்தி மிகுதியும் மதிக்கப்படுகின்றாள். மணமக்களுக்கு அவளுடைய வாழ்த்து பல நன்மைகளைத் தரும் என நம்புகின்றனர். கைம்பெண் ஒருத்தி ஏழுமுறை மணவறையில் அமரலாம் என்ற பொது மொழி வழக்கு ஒன்று உள்ளது.

1871 கணக்கெடுப்பு அறிக்கையில் ஒட்டர் பற்றிக் கூறப்பட்டுள்ள வை வருமாறு :- குளம் தோண்டுபவர்களும், கிணறு வெட்டுபவர்களும் சாலை அமைப்பவர்களுமான இவர்கள் தனித்த குடியிருப்புக்களில் வாழ் கின்றனர். கூம்பு வடிவில் அல்லது தேன்கூடு போன்ற அமைப்பு டைய இவர்களுடைய குடிசைகள் தாழ்வான நுழைவாயில்களைக் கொண்டனவாக இருக்கும். குழுக்களாக உள்ள இவர்கள் ஒப்பந்தம் பேசிப் பணிகளை ஏற்று நடத்துவர். முதியவர்களையும் குழந்தைகளை யும் தவிரக் குழுவைச் சேர்ந்த அனைவரும் ஒப்பந்தம் பேசிய பணியில் ஈடுபடுவர். ஆண்கள் மண்ணினைக் குத்தியும் வெட்டியும் தர, பெண்கள் கூடைகளில் மண்ணைச் சுமந்து சென்று கொட்டுவர். அப்பொழுது பெண்கள் தங்கள் கைக்குழந்தைகளை மரங்களில் சேலையால் தொட்டில் கட்டி விட்டு வைத்திருப்பர். பொதுப் பணித்துறையும் இருப்புப்பாதை அமைக்கும் மற்றும் பழுதுபார்க்கும் துறையுமே பொதுவாக இவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றன. அழகிய இன இயல்புகள் வாய்க்கப் பெற்ற இவர்களுள் நான் சந்தித்த அனைவரும் நெற்றி, கைகள், மார்பு ஆகியவற்றின் மீது பெரிய முப்படை நாமம் தீட்டி யர்வகளான வைணவர்களே. பெண்கள் நிமிர்ந்த உயர்ந்த வளர்ந்த தோற்றமுடையவர்கள். பன்றி இறைச்சி, வயல் எலி ஆகியவற்றை விரும்பி உண்ணும் இவர்கள் எல்லா வகை விலங்குகளின் இறைச்சி களையும் உண்பதோடு மதுவும் பருகுவர்."

ஒட்டர்களைப் பற்றி நெல்லூர், கோயமுத்தூர், மதுரை மாவட்டக் கையேடுகளில் தரப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு :

நெல்லூர் : " குளம் தோண்டும் பணியாளர்களான இவர்கள் சிலபோது சிறு வியாபாரங்களிலும் ஈடுபடுகின்றனர். வேலை கிடைக்கும் இடங்களை நாடி அலைந்தபடி திரிவர். வொட்டெ அல்லது ஓட்டெ என்னும் சொல்லு ஒத்ர என்ற வடமொழிச் சொல்லின் சிதைந்த வடிவம் என்பர். அது ஒரிசாவுக்கு இப்பொழுது வழங்கும் பெயராகும். இவர்கள் உரிய பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களாகவே கருதப்படுகின் றனர். தெலுங்கோடு கூடத் தங்களுக்கே உரித்தான ஒரு கிளை மொழியி

னையும் இவர்கள் பேசுகின்றனர். அது உரிய (Uriya) மொழியாக இருக்கு மாயின் இவர்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்ற சிக்கலைத் தீர்த்ததாக ஆகும். கடினமான உழைப்பில் ஈடுபடும் காரணத்தால் ஆண்கள் வலுவான உடற்கட்டு வாய்க்கப் பெற்றவர்களாக உள்ளனர். நான் இவர்களிடையே நன்கு வளர்ச்சிபெற்ற உடல்வாகினை உடைய சில ரைப் பார்த்துள்ளேன்."

கோயமுத்தூர் : இம் மாவட்டத்தின் அடிநிலம் கடினமான பாறை அமைப்பு உடையதாக இருப்பதாலும் பெரிய அளவில் கிணறுகள் நிறையத் தோண்ட வேண்டியிருப்பதாலும் இங்குக் கடப்பாறை, கொந்த ளம், கருமருந்து ஆகியனவற்றைப் பயன்படுத்திக் கடின உழைப்பில் ஈடு படும் உழைப்பாளிகளின் தேவை மிகுதியாக உள்ளது. இப் பணியில் ஈடு பட்டுள்ள இங்குள்ள ஒட்டர்கள் கறுத்த நிறமும் உறுதியான உடற்கட்டும் வாய்க்கப் பெற்றிருப்பதோடு நல்ல கூலி பெற்று இறைச்சியையும் மது வையும் உணவோடு பயன்படுத்தி வருகின்றனர்.

மதுரை : குளங்குட்டைகள் தோண்டியவர்களாகவும் மண்கரை கட்டியவர்களாகவும் அலைந்து திரியும் சாதியார். தெலுங்கு பேசும் இவர்கள் நாயக்கர்கள் காலத்தில் தென்மாவட்டங்களுக்கு வந்தவர்களா வர். இவர்கள் திருமலை நாயக்கன் காலத்தில் பெரிய தெப்பக்குளங்களை வெட்டவும் உயர்ந்த கோபுரங்களை அமைக்கவும் வந்தவர்களாதல் கூடும். நன்கு வளர்ந்த உடல்வாகு வாய்க்கப்பெற்ற இவர்கள் கடினமாக உழைப்பவர்களாயினும் குடிப்பழக்கம், மிதமிஞ்சிய உணவு கொள்ளுதல், தீயநடத்தை ஆகியவற்றுக்கு அடிமைகளாக உள்ளவர்கள். இவர்கள் தரும் வாக்குறுதிகளை அப்படியே நம்பி ஏற்றுக்கொள்ளமுடியாது. ஒரு வாரத்தில் ஆறேழு பேரிடம் பணிக்கான முன்பணம் பெற்றுக்கொண்டு முடியுமானால் யாருடைய பணியினையும் மேற்கொள்ளாது 'டிமிக்கி' கொ டுக்கும் திறமை பெற்றவர்கள். "

மைசூர் மாநிலத்தில் பெரிய நகரங்களின் புறத்தே ஒட்டர்கள் தற் பொழுது நிலையாகத் தங்கி வாழ்கின்றனர். ஆண், பெண் இருபாலாரும் நகரத்தில் துப்புரவுத் துறையில் கூட்டுதல் முதலிய பணிவாய்ப்பும் பெறு கின்றனர். ஒட்டர்கள் சிலர் தற்பொழுது (1908) மைசூர் மாங்கனீயச் சுரங் கத்தில் பணியாற்றி வருகின்றனர். இந்த இனத்தவர் குறச்சர், குறமர் முதலிய கொள்ளையிடும் வகுப்பாரோடு கூட்டுச் சேர்ந்து கொள்ளை, வழிப்பறி ஆகியவற்றில் ஈடுபடுவதாகத் தெரிகின்றது. இவர்கள் எவ்வளவு அடியுதை பட்டாலும் அதனைப் பொறுமையோடு ஏற்றுக்

கொள்வார்களேயன்றித் தங்கள் குற்றத்தை ஒருபோதும் உடன்படமாட்டார்கள் என்ற வழக்கு மொழி உள்ளது. ஒட்டர் சிலர் பயிர்த்தொழிலாளராகவும் ஒப்பந்தப் பணி ஏற்பாளர்களாகவும் ஒரே இடத்தில் தங்கி வளமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். வட ஆர்க்காடு மாவட்டத்தில் குப்பத்திற்கு அருகே நாணயமாகத் தொழில் நடத்தும் சில ஒட்டர்கள் வாழ்ந்து வருகின்றனர். பணக்காரர்களான வணிகர்கள் இவர்களை நம்பிப் பெருந் தொகையினைக் கடனாக அளிக்கின்றனர். ஓர் இலட்சம் ரூபாய் சொத்து மதிப்புடைய ஒட்டன் ஒருவன் வெற்றிலை வாங்க அரையணாத் தரும் படி என் உதவியாளனை நச்சரித்தபடி இருந்தான். பிஷப் வைட் ஹெட் நிசாமின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் மேற்கொண்ட பயணம் பற்றிய நாட்குறிப்பில்* " கம்மமெட்டில் கிறித்தவர்களாக மதம்மாறிய ஒட்டர் சில காலம் சொந்த நிலமும் கால்நடைகளும் உடையவர்களாக வளமான வாழ்க்கையுடையவர்களாக இருந்துள்ளனர். தேவாலய வழிபாட்டிற்குப் பின் என் முன் அழைத்து வரப்பட்ட இவர்களின் சாதித் தலைவர்களுள் ஒருவன் தனக்கு எண்பது ஏக்கர் நிலம் இருப்பதாக என்னிடம் தெரிவித்தான்."

கர்நூல் மாவட்டத்தில் உள்ள நல்லா மலைகளில் மரம் அறுத்தல் தொடர்பான பணிகள் சிலவற்றை ஒட்டர் மேற்கொள்கின்றர். மரங்களை வெட்டி வீழ்த்துவதோடு அவற்றைக் காடுகளிலிருந்து வெளியே கட்டி இழுத்துவர எருதுகளையும் இவர்கள் வைத்துள்ளனர். " உப்பரர் மற்றும் ஒட்டவாண்டுலு" என்ற தலைப்பில் [9] மறைத்திரு ஜெ. கெயின் தந்துள்ள விவரங்கள் வருமாறு:- " குளந்தோண்டுபவர்களுக்கு அதற்கான தொகை வழங்கப்பட்டது. இவர்கள் அத்தொகையினைப் பங்கிட்டுக் கொள்ளும் போது கூலிவேலை பார்த்தவளான ஒருத்தி தனக்குக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்கவில்லை எனக் கூறியதால் அவர்களிடையே பெரும் வழக்கு உண்டாயிற்று. இது பற்றி விசாரித்ததில் மகப்பேறு வாய்க்கப் பெற்றிருந்த அவள் தன் பங்கோடு கூடத் தனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கும் ஒரு பங்கினை எதிர்பார்த்து அது கிடைக்கப் பெறாததால் ஏமாற்றம் அடைந்திருப்பதாகத் தெரிய வந்தது. "

இவர்களைப் பற்றி வழங்கும் ஒரு கதை வருமாறு :- நெடுங்காலத் திற்கு முன் தேவர்களும் மனிதர்களும் தண்ணீர் பெறவேண்டி ஒரு குளம் தோண்டும்படியாக இவர்களைப் பணித்தனர். இதனைச் செய்து முடித்த

* சென்னை மாவட்ட கிறித்தவ சங்க இதழ், ஏப்ரல் , 1908. (Madras Dioc. Magazine. April, 1908)

9 இந்தியத் தொல்லியல். (Ind. Ant., VIII, 1879).

இவர்கள் அதற்கான கூலியினைக் கேட்டனர். ஒவ்வொருவருக்கும் கூலிக் குப் பதிலான சிவனுக்குரிய விபூதி ஒரு துளி அளிக்கப்பட்டது. இவர்கள் வீட்டை அடைந்தவுடன் அந்த விபூதி தங்கமாக மாறியிருந்தது. எனினும் அதனைப் பெற்றதில் திருப்தியுறாத இவர்கள் மேலும் அதிகம் கூலி கேட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் கோபமுற்ற தெய்வம், "நீங்கள் காட்டில் குழி தோண்டிப் பெற்றவைகளை மேட்டில் ஏறியவுடன் இழப்பீர்கள் " என்று சபித்தது. இவர்கள் மேல் கருணை காட்டிய பார்வதி இவர்களுக்குப் பெருந்தொகையினை வழங்கும்படி வேண்டினாள். அதன் படியே சிவன் ஓர் அளவு கோலினைக் குடைந்து துளையுண்டாக்கி அதில் வராகன்களை நிறைத்து மேஸ்திரியிடம் கொடுத்தார். மேலும் ஒரு பூசணிக்காயில் நிறையப் பணத்தை நிரப்பி அதனை இவர்கள் குழி தோண்ட வேண்டிய இடத்தில் புதைத்து வைத்தார். மேஸ்திரி தங்கக் காசுகள் நிறைக்கப்பட்ட தன் அளவு கோலினைக் கள் குடிப்பதற்காக அடகு வைத்து விட்டான். ஒட்டர்கள் பூசணிக்காய் புதைக்கப்பட்ட இடம் நல்ல மேடாக இருந்தமையால் தாங்கள் தோண்டிய குழியின் ஆழத்தின் அளவினைக் காட்ட அந்த இடத்தை மட்டும் திட்டாக விட்டுவிட்டனர். பக்கத்தில் மேய்ந்து கொண்டிருந்த எருமை ஒன்று அத்திட்டினைக் குத்திப் பூசணிக்காயினை வெளிப்படுத்தியது. அதனுள் இருப்பது பற்றி எத்தகைய ஐயமும் படாதவர்களாக அதனை அவர்கள் கோமட்டி ஒருவனுக்கு விற்றுவிட்டனர்.

இவர்களைப் பற்றி வழங்கும் மற்றொரு கதை வருமாறு :- இந்த மண்ணுலகில் மனித உருவில் வாழ்ந்து வந்த தெய்வத்தால் ஒட்டர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர் . ஒருசமயம் ஒரு சுடங்கினை மேற்கொள்ள வேண்டியிருந்த தெய்வம் இவர்களிடம் மூன்று நாட்களுக்கான் கூலியினைத் தந்து தன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் எனக் கூறியிருந்தது. இதன்படி அவர்கள் நடக்கத் தவறியதால் எப்பொழுதும் வறுமையில் உழலும்படி தெய்வம் இவர்களைச் சபித்தது.

ஒட்டர்களிடையே வழக்கில் உள்ள மற்றுமொரு கதை வருமாறு :- சிவனும் பார்வதியும் கடும்வெப்பமும் புழுக்கமும் மிகசிருந்த ஒரு நாளில் மண்ணுலகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது வெப்பத்தால் வருந்திய அவர்கள் நீர்வேட்கை உற்றனர். சிவன் தன் உடம்பிலிருந்து வழிந்த வியர்வைத் துளி ஒன்றினைக் கையில் கடப்பாரையோடு கூடிய மனிதனாகவும் பார்வதியின் உடலிலிருந்து வழிந்த வியர்வைத் துளியொன்றினைக் கூடையோடு கூடிய பெண்ணாகவும் மாற்றினார். அந்த ஆணும் பெணணும் விரைந்து ஒரு கிணற்றினைத் தோண்ட அதிலிருந்து

கிடைத்த குளிர்ந்த நீரால் தேவனும் தேவியும் தங்கள் தாகத்தைப் போக்கிக் கொண்டு அதற்கு நன்றி காட்டும் வகையில் அவர்களுக்குச் சில வரங்களை நல்கினர். அவற்றினுடைய இயல்பு என்ன என்பது தெரியவில்லை. எனினும் அந்த ஆணும் பெண்ணும் அதனால் திருப்தியுறாதவர்களாக முணுமுணுத்தனர். இதனால் ஆத்திரங்கொண்ட சிவன் அவர்களும் அவர்கள் சந்ததியினரும் விபர்வை வழிய உழைத்துப் பிழைக்க வேண்டும் எனச் சாபமிட்டார்.

ஒட்டர்களைப் பற்றி பின்வரும் வழக்குமொழிகள் அவர்களைப் பற்றிய பண்புகளைக் கூறுவனவாக வழங்கி வருகின்றன.

1. ஒட்டர்கள் தங்கள் குடிசையினைத் தலைமேல் தாங்கிக் கொண்டவர்களாக (தாழ்ந்த குடிசைகளில்) பொறுக்கி வந்து விறகு எரியும் வெளிச்சத்தில் இளக்கமான கஞ்சி காய்ச்சிக் குடித்தவர்களாகக் கொடுத்தவர்களை வாழ்த்தியும் கொடுக்காதவர்களைச் சபித்தும் வாழ்ந்து வருவர்.
2. நாகப் பாம்புக்குப் பல்லில் நஞ்சு; ஒட்டர்களுக்கு நாக்கில் நஞ்சு.
3. செல்வம் மலைபோலக் குவிந்தாலும் பனிபோலக் கரைந்து விடும்.

அண்மைக் காலக் கணக்கெடுப்புகளில் கல்லு அல்லது ராடி, மண்ணு, மண்டி அல்லது பைலு ஆகிய உட்பிரிவுகள் ஒட்டர்களிடையே இருப்பதாகப் பதியப்பட்டுள்ளன. இப்பிரிவினர் தங்களுக்குள்ளாக மண உறவுகள் கொள்வதில்லை. நாடபுறம், ஊரு (கிராமம் புறத்தான், பைதரு(அலைந்து திரிபவன்), கொங்க (பட்டாரப் பெயர்) என்ற அக மணக் கட்டுப்பாடு உடைய பிரிவுகளும் பதியப்பட்டுள்ளன. பேரி என்பது சாதியின் உட்பிரிவாகவும் ஒட்டாசு சாதிக்குரிய மற்றொரு பெயராகவும் பதியப்பட்டுள்ளன. கஞ்சம் மாவட்டத்தில் பொலாசி என்பது ஒட்டர்களின் ஓர் உட்பிரிவு. நாயகன், போயன் என்பன இச்சாதியாருக்குரிய பட்டப் பெயர்கள். போயர் என்ற இந்தப் பெயருக்கும் தென் ஆப்பிரிக்காவினைச் சேர்ந்த போயர்களின் பெயருக்கும் இடையேயான ஒற்றுமை ஒரு விபரீதத்தை விளைவித்துள்ளது. ஒட்டர்களைக் காண நான் சென்றிருந்த சமயம் தென் ஆப்பிரிக்காவில் போயர் போர் முடிவுற்றிருந்தது. அந்தப் போரில் போயர்கள் அடியோடு கொன்று ஒழிக்கப்பட்டு விட்டமையால் அவர்களுக்குப் பதிலாக இவர்களைப் பிடித்துக் கப்பலேற்றி அனுப்ப நான் இவர்களைத் தேடி வந்திருப்பதாக இவர்கள்

தவறாக எண்ணினர். என்னுடைய கண்ணேறு பட்டு விடும் என்ற காரணத்தால் இவர்கள் புதிதாகப் போட்டிருந்த செங்கல் காளவாயினை நான் கோயமுத்தூரிலிருந்து புறப்படும் வரை பற்ற வைக்க மறுத்துவிட்டனர்.

1891 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் ஒட்டர்கள் பற்றிக் கூறியுள்ளதாவது :- '' இந்தச் சாதியில் கல்லு வட்டர் , மண்ணு வட்டர் என்ற இரண்டு முக்கியப் பிரிவுகள் உள்ளன. இவர்களிடையே புழக்கமோ மண உறவுகளோ நிகழ்வதில்லை. முன்னவர் கல்லுடைப்ப வரும் கட்டிட வேலை செய்பவர்களுமாவர். நல்ல உடல்வாகு பெற்றவர் களான இவர்கள் சில முரட்டு உத்திகளைக் கையாண்டு பெரும்பாறைக ளையும் உருட்டிப் புரட்டி நகர்த்துவர். கடின உழைப்புக்குப் பெயர்போன வர்கள் இவர்கள். கல்லு வட்டர் மண்ணு வட்டரைவிடத் தங்களை உயர்ந்தவர்களாகக் கருதுகின்றனர். மண்ணுவட்டர் மண்தோண்டுபவர் கள். கல்லு வட்டர்களைப் போலன்றி மண்ணு வட்டர் எனப்படும் பைலு வட்டர் அலைந்து திரிந்தவர்களாக மண்வேலை கிடைக்கும் இடங்களில் தங்குவர். குளங்களை ஆழப்படுத்துதல், குளங்களுக்குக் கரை கட்டுதல், புதிய கரைகள் அமைத்தல் போன்ற பணிகளை இவர் கள் மேற்கொள்வர். அகழ்வுப் பணிகளில் திறமை வாய்ந்தவர்களான இவர் கள் வேறு எந்தச் சாதியாரைவிடவும் விரைந்து பெரிய பணிகளை முடித் துத் தருபவர்கள் எனப் பெயர் பெற்றுள்ளனர்''மண்ணு ஒட்டர்கள் எலி, முள்ளம்பன்றி, எறும்புத்தின்னி ஆகியவற்றின் இறைச்சியினை உண்பர்.

இவர்களிடையே புறமணக்கட்டுப்பாடுடைய குலங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

பொந்ததொல்லு (பாறை)	சம்பங்கி (சம்பங்கிமலர்)
பொச்சொல்லு (மயிர்)	தாடிசெட்டு (பனைமரம்)
செருக்கு (கரும்பு)	பண்டாரி (விராலி)
எனுமல (எருமை)	தேவால (கடவுளது)
கோடலி (கோடரி)	தொங்க (திருடன்)
கம்ப (கூடை)	மல்லெ (மல்லிகை)
இடகொட்டு (முறிவு)	பந்திப்பட்டு (பன்றி பிடிப்பவன்)
ஜம்பு (நாவல்)	பந்திகொட்டு (பன்றியைக் கொல்பவன்)
கோமாளி (கோமாளி)	உப்புத்தொழுவரு (உப்புச்சுமப்போர்)
சந்தை (சந்தை)	பீடகால (பூசாரியின் இருக்கை)
சிவராத்திரி (ஒரு விழா)	தப்பட்டை (முரசு)
மஞ்சால (கட்டில்)	

1901 மைசூர் மாநிலக் கணக்கெடுப்பின் போது சிலர் அரசின்க (மஞ்சள்), உறீவின்ன (பூக்கள்), ஹொன்ன (பொன்), அட்சாண்டல (அரிசி) ஆகியனவற்றைத் தங்கள் கோத்திரங்களாகப் பதிந்துள்ளனர்.

''குளங்கள் தோண்டும் வொட்டவாண்டலு பிரிவினரின் பெண் கள் இடக்கையில் மட்டும் கண்ணாடி வளையல்களை அணிகின்றனர். இதற்கு அவர்கள் கூறும் காரணம் வருமாறு:- முன்னொரு காலத்தில் இந்த வளையல்கள் விற்பவன் இவர்களை இந்த வளையல்களை வாங் கும் படி வற்புறுத்தி இடக்கையில் மட்டும் வளையல்களைப் பூட்டி விட்டு வலக்கையில் போடுவதற்குரிய புதிய வளையல்களைக் கொண்டு வருவதாகப் போனவன் திரும்பவே இல்லை. இன்று வரை திரும்பவில் லை'' என மறைத்திரு ஜெ. கெயின் எழுதியுள்ளார்*. வயதான முதியவள் ஒருத்தி வேலையில் ஈடுபட்டிருக்கும் வலக்கையினைப் பயன்படுத்த வேண்டியிருப்பதால் அவை அடிக்கடி உடைந்து போக நேர்வதால் தங் கள் வலக்கைகளில் வளையல் அணிவதில்லை என விளக்கினாள். சில இடங்களில் நெற்றியில் செங்குத்துக் கோடாகவும், புள்ளி முதலியனவாக வும் பச்சை குத்திக் கொள்ளும் வழக்கம் ஒட்டவர்கள் அனைவராலும் மேற்கொள்ளப்படுகிறது. இறந்த பிறகு பூலோகத்தில் தாங்கள் வாழ்ந்த னர் என்பதற்குச் சான்றாக இந்தப் பச்சை குத்தியுள்ள அடையாளங்கள் உதவும் என இவர்கள் கூறுகின்றனர். கஞ்சம், விசாகப்பட்டினம், கோதா வரி மாவட்டங்களில் பச்சைப் பொட்டுலு எனத்தங்களைக் கூறிக்கொள் ளும் ஊர்சுற்றிகளான ஒட்டர்களே பச்சை குத்துபவர்கள். பச்சை குத்தும் போது இவர்கள் தெலுங்குப் பாடல்களைப் பாடுவர். இது பச்சை குத்திக் கொள்பவர்கள் கருத்தை வேறுபக்கம் மாற்றி அவர்களுக்கு வலி தோன்றா மல் இருக்கச் செய்வதற்காகப் பாடப்படுவதாகும்.

எசமானடு, சமயகாடு, பொத்த, போயடு எனப் பெயர் பெறும் சாதித் தலைவன் பதவி பரம்பரை உரிமையுடையது. இவர்கள் சாதிச் சபையில் தீர்த்து வைக்க முடியாத வழக்குகளைப் பலிச தேசாயி செட்டியி டம் எடுத்துச் செல்வர். அவன் வழங்கும் தீர்ப்பே இறுதியானது. சில வழக்குகளில் சின்னபோயாடு, சங்கூசி, பந்தாரி போன்ற உதவி அலுவலர் கள் சாதித்தலைவனுக்கு வழக்கினைத் தீர்த்து வைக்க உதவுவர். பலர் கூடியுள்ள இடத்திற்குச் செருப்பு அணிந்தவனாக வரும் ஒட்டனுக்கு இவர்கள் அபராதம் விதிப்பர். அவ்வாறு வருபவனை இவர்கள் குதிரை ஏறி வருகின்றான் எனக் கூறுவர். தோலினைத் தொடுவதை தீட்டாகக்

* இந்தியத் தொல்லியல், v 1876. (Ind. Ant. v. 1876)

கருதும் இவர்கள் செருப்பால் அடிக்கப்படுவதை மிக இழிந்ததாகக் கொள்வர். அவ்வாறு அடிபட்டவனும் அடித்தவனும் தீட்டுப்போக்கும் சடங்கை நிகழ்த்திக் கொள்ள வேண்டுவதோடு தண்டத் தொகையும் செலுத்த வேண்டும். கோயமுத்தூர் மாவட்டத்தில் திம்பம் பகுதியில் நான் தங்கியிருந்த போது நான் ஒரு அகப்பையை ஏந்தியவனாக என் நண்பர் முனைவர் ரிவர்ஸிடம் சென்று ஓர் ஒட்டப்பெண் இரவு உணவுக்காகச் சமைத்துக் கொண்டிருந்த அதிலுள்ள பொருள்களைக் காட்டி அந்தச் சட்டியிலிருந்து அவ்வளவு வாசனை வரக் காரணமானது என்ன பொருள் எனக் கேட்டேன். நாங்கள் மாலையில் உலாவச் சென்று திரும்பிய போது அன்று வேலை முடித்து திரும்பிய ஒட்டரிடையே சலசலப்பு நிலவுவதையும் சமைத்துக் கொண்டிருந்த அந்த ஒட்டப் பெண் தனியே ஒரு பாறையில் அமர்ந்து விசும்பிக்கொண்டிருப்பதையும் கண்டோம். அவர்கள் அவளைச் சாதி விலக்கம் செய்துவிட்டிருந்தனர். நான் அந்த அகப்பையைத் தொட்டது அதற்குக் காரணமன்று. அதன்பின் அவள் சட்டியினைத் தொட்டதே அதற்குக் காரணம், அவர்களோடு சமாதானம் பேசி அவள் குற்றத்திற்கான தண்டத் தொகையினை நான் செலுத்திய பின்பு அவர்கள் அவளை மீண்டும் சாதியில் சேர்த்துக் கொண்டனர்.

ஒரு சிறுமி பூப்படைந்தவுடன் அவளைத் தனித்த குடிசையில் இருக்கச் செய்வர். ஓர் இரும்புத்துண்டு, வேப்பிலை, எட்டி மரக் குச்சிகள், எருக்கஞ்செடி ஆகியன தீய ஆவிகள் அங்கு வராது காக்க அந்தக் குடிசையில் வைக்கப்படும். பேய் பிசாசுகளின் அச்சம் காரணமாக இறைச்சி உண்ண அவளை அனுமதிப்பதில்லை. முட்டை அனுமதிக்கப்படுகிறது. ஏழாம் நாள் ஒரு கோழியினைக் கொன்று அவள் முன் சுற்றி அதனைத் தூர எறிவர். சில சமயங்களில் முதல் நாள் அவள் குளிக்கும் போது ஒரு சல்லடையை அவள் தலைமீது பிடித்து அதன் வழியாகத் தண்ணீர் ஊற்றுவர். சில இடங்களில் பதினொன்றாம்நாள் சிறுமியின் இடுப்பையும் முதுகையும் உறுதியுடையனவாக ஆக்கக் கோழிச்சூப்பும் சாராயமும் தருவர். இதற்காக அறுக்கப்படும் கோழி கறுப்பு நிறம் உடையதாக இருப்பதோடு முதல் முறையாக முட்டையிட்டதாகவும் இருக்க வேண்டும். அதன் இறைச்சியினை ஓர் உரலில் இட்டுக் கூழாக ஆகும் படி ஆட்டிக் கொதிக்க வைத்து உரிய கறிப்பொடிகளை இட்டு இறுதியில் சாராயத்தையும் ஊற்றிக் கலக்குவர்.

குழந்தை மணம், வயது வந்தபின் மணம் ஆகிய இரு வகை மணங்களையும் இவர்கள் நிகழ்த்துகின்றனர். எளிமையாக நடைபெறும் திருமணத்தின் சடங்குகள் மணமக்களைக் களைப்படையச்

செய்வதில்லையென திரு எம். எஸ். முல்லெலி குறித்துள்ளார்*. மணமக்கள் தரையில் வைக்கப்பட்டுள்ள ஒரு கம்பத்தை மும்முறை சுற்றி வருவதோடு மணச்சடங்கு முடிவுறுகின்றது. விரிவான சடங்குகள் நடத்தப்படும் போது நிச்சயதார்த்தம் நிகழும் நாளன்று மணமகளுக்கான விலை முதலியவற்றை முடிவு செய்த பின் கள்ளுக்கடைக்குச் செல்வர். திருமணச் சடங்குகள் எளிமையானவை ஆயினும் சில இடங்களில் ஒட்டர்கள், பலிசர்களுடைய மணச் சடங்குகளைப் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். மூன்றாம் நாள் புது மணமக்கள் ஊர்வலமாக ஒரு குளத்திற்குச் செல்வர். அங்கு மணமகன் சேற்று மண்ணை வாரித் தர மணமகள் மூன்று முறை அதனைக் கூடையில் சுமந்து சென்று தூரமான இடத்தில் இட்டு வருவாள். இவர்கள் திருமணச் சடங்குகள் தொடர்பாகக் கூறப்படும் கதை வருமாறு:- ஓர் அரசன் ஓர் ஒட்டனிடம் ஒரு குளம் தோண்டும்படி கூறினான். அதற்கு நதிமமதி கொத்தசெறுவு எனப் பெயரிடப் போவதாகவும் அதற்குரிய கூலியாக வராகன்கள் தரப்படும் எனவும் அந்த அரசன் உறுதி அளித்திருந்தான். வேலை முடித்தவுடன் அந்த ஒட்டன் அரசனிடம் கூலியினைப் பெறச் சென்றான். அந்த அரசனிடம் வராகன்களை அளப்பதற்குத் தேவையான படி இல்லை. அதனை வாங்கி வர ஒரு ஆள் அனுப்பப்பட்டான். அவன் வழியில் தோளில் சிறு மூங்கில் குச்சியொன்றை வைத்தவனாக வந்த ஓர் ஆட்டிடையனைக் கண்டான். இந்த மூங்கிலை எளிதாகப் படியாகச் செய்யலாம். அந்த மூங்கிலை எடுத்துக் கொண்டு அவன் அரசனிடம் வர அரசன் அதில் வராகன்களை அளக்க அது ஒட்டர்கள் எதிர்பார்த்த அளவினை விடக் குறைந்தது. இதனால் ஒட்டர்கள் எதிர்பார்த்தபடி தங்கள் கடனை அடைக்க முடியவில்லை. எனவே அவர்கள், "இந்த ஏரி உடையட்டும்; நிலம் தரிசாகக் கிடக்கட்டும்" எனக் கூறி அந்தப் பணத்தை அந்த ஏரியில் போட்டு விட்டனர். அவர்களை எதிர்பட்ட ஒரு பலிசன் அவர்கள் மேல் இரக்கங்கொண்டவனாக அவர்கள் அடைக்க வேண்டிய கடன்தொகையில் பாதியினைக் கொடுத்து உதவினான். சிறிது காலம் சென்றபின் அவர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பினர். தாலி, பால்கம்பம், இசைக்குழு முதலியவற்றைக் கொண்டு வர ஆட்கள் அனுப்பப்பட்டனர். சென்றவர் திரும்ப வரவில்லை. பலிசன் பால்கம்பத்திற்குப் பதிலாக உலக்கையையும் தாலிக்குப் பதிலாகப் பாசி மணிமாலையினையும் முவாலி எனப்படும் மணமகள் விலைக்கான தங்க நாணயங்களுக்குப் பதிலாக வெற்றிலை பாக்கையும் பயன்படுத்தும் படி கூறினான்.

* சென்னை மாநிலக் குற்ற நடததை வருபவர் பற்றிய குறிப்புகள். (Notes on Criminal Classes of the Madras presidency)

ஒட்டர்கள் சில இடங்களில் வைணவர்களாக உள்ளனர். பிற இடங்களில் சைவ நெறியினை மேற்கொண்டுள்ளனர். எல்லம்மா, அங்கம்மா முதலிய சிறு தேவதைகளையும் இவர்கள் வழிபடுகின்றனர். அத் தேவதைகளுக்கு வெள்ளாடு, மறியாடு ஆகியவற்றைப் பலியிடுகின்றனர். மற்றவர்களைப் போல ஆட்டினைக் கத்தியாலோ, வாளாலோ வெட்டிப் பலிதராது கடப்பாரையால் குத்திப் பலியிடுகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இது பற்றிப் புச்சனன் எழுதியுள்ளது வருமாறு:.* ஒட்டர்கள் விட்டுணுவை வழிபடுகின்றனர். அத்தோடு மாரியம்மா, கங்கம்மா, துர்க்கம்மா, புட்டாலம்மா, முத்தாலம்மா ஆகிய தேவதைகளையும் வழிபடுகின்றனர். எனினும் இச்சாதியாருக்கு உரிய முறையான தேவதை தீங்கு இயற்றுபவளான எல்லம்மா ஆவாள். அவளுடைய உருவத்தை இவர்கள் தங்கள் பொருள்களுடன் சுமந்தவர்களாகத் திரிவர். இவளைச் சிறப்பிக்க ஆண்டுதோறும் மூன்று நாள்கள் விருந்துத் திருவிழாக் கொண்டாடுகின்றனர். அப்பொழுது ஒரு கொட்டகை அமைத்து எல்லம்மாவின் உருவத்தை அதில் எழுந்தருளச் செய்வர். சாதியினைச் சேர்ந்த ஒருவனே அப்போது பூசாரியாகச் செயல்படுவான். இந்த மூன்று நாட்களும் பிராந்தி, தென்னங்கள், பொங்கல், மலர்கள் ஆகியனவற்றை அந்தத் தெய்வத்திற்குப் படைப்பதோடு கொட்டகையின் முன் உயிர்களையும் பலியிடுகின்றனர். ஒட்டர்கள் தங்கள் தெய்வத்திற்குப் பலியிடும் விலங்குகளின் இறைச்சியினை உண்பதில்லை. மற்றவர்களின் தேவதைகளுக்குப் பலியிடப்படும் இறைச்சியினை உண்பர்."

இறந்தவர்களைப் புதைப்பதே பொதுவான வழக்கம். சில ஒட்டர்கள் பிணத்தைப் புதுத் துணியில் சுற்றித் துப்பட்டியில் வைத்து நால்வர் அதனைப் புதைக்கும் இடத்திற்குத் தூக்கிச் செல்லும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். புதைக்க எடுத்துச் செல்லும் வழியில் பிணத்தைத் தரையில் இறக்கி வைத்து அதன் கண்களின் மீது அரிசியினைத் தூவுவர். அதன்பின் அதனைக் குளிப்பாட்டி ஆணாயின் நாமத்தையோ விபூதியையோ நெற்றியில் தீட்டுவர். பெண்ணாயின் குங்குமம் இடுவர். புதைகுழியினை மூடுமுன் கூடியுள்ளவர்கள் பிணத்தின் மீது மண் இடுவர். கருமாந்திர நாளான இறுதிச் சாவுச் சடங்குகள் நிகழ்த்தும் நாளன்று உறவினர்கள் ஒரு குளத்திற்கோ ஊருக்கு வெளியே உள்ள கிணற்றடிக்கோ சென்று மண்ணால் ஓர் உருவம்

* மைசூர், கன்னடம்,மலபார் வழியன் பயணம்,
(Journey through Mysore, Canara and Malabar)

சமைத்து அதற்குச் சோறு முதலியனவற்றைப் படைப்பர். கொஞ்சம் சோறு முதலியவற்றை எருக்கம் இலையில் வைத்துக் காக்கைகளுக்கு இடுவர். திருமணமான ஒருத்தி இறப்பாளானால் அவளுடைய கணவன் அரைஞாண் கயிற்றை அறுத்து எறிவான். கணவனை இழந்தவளை நீர்ப்பரப்பின் ஓரத்தில் ஒரு முறத்தின்மேல் அமர்த்தி அவள் உடன் பிறந்தவன் அவள் வளையல்களை உடைப்பதோடு நெற்றியில் உள்ள பொட்டினையும் அழிப்பான். அவள் தலையில் முறத்தின் வழியே வழிந்து செல்லுமாறு **மும்முறை** தண்ணீர் ஊற்றுவர். குளித்தபின் வீட்டிற்குச் சென்று **தனித்**தொரு அறையில் ஒரு விளக்கோடு அமர்ந்திருக்கும் அவள் மறுநாள் காலைவரை யாருடைய முகத்திலும் விழிக்கமாட்டாள். பின்னர் அவளை ஓரிரு கோயில்களுக்கு அழைத்துச் செல்வதோடு மூன்றுமுறை பசுவின் வாலையும் பிடித்து இழுக்குமாறு செய்வர். தமிழ்நாட்டில் உள்ள கோயமுத்தூரைச் சேர்ந்த ஒட்டர்கள் பலிசர்களையும் வேளாளர்களையும் பார்த்துத் தங்கள் திருமணம் , சாவு, தொடர்பான சடங்குகளை விரிவானதாக ஆக்கிக் கொண்டுள்ளனர் எனினும் அதற்காக இவர்கள் பிராமணப் புரோகிதர்களை அமர்த்துவதில்லை.

ஒழுக்கம் தவறிய குற்றத்திற்கு உள்ளாகும் ஒருத்தி ஒரு கூடை நிறைய மண்ணைச் சுமந்தவளாக வீடு வீடாகச் சென்ற பின்னரே மீண்டும் சாதியில் சேர்த்துக் கொள்ளப்படுவாள்.

பாம்புக் கடிக்கு முறிவாக ஒட்டர்கள் பயன்படுத்தும் புகழ்பெற்ற மருத்துவமுறை பற்றித் திரு கஸ்டவ் ஹாலர் (**Gustav Haller**) எனக்கு எழுதித் தெரிவித்திருப்பதாவது:- '' ஒட்டர் பணிக்குழு ஒன்றினைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் எலிகளைப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மூங்கில் புதர் ஒன்றில் கையினை நுழைக்க ஒரு நாகம் அவனைத் தீண்டியதோடு அவன் கையினை வெளியே இழுத்த போது அவன் விரலோடு தொங்கியபடி இருந்தது. நான் கொல்லப்பட்ட அந்தப் பாம்பைப் பார்த்தேன். அது நாகந்தான் என்பதில் சந்தேகமில்லை. அந்தச் சிறுவன் சாகும் நிலையில் இருந்தான். ஒட்டரின் குழுவினைச் சேர்ந்த ஒருவன் தான் அவனைக் காப்பாற்றப் போவதாகக் கூறினான். அவன் பாம்புக் கடிவாயில் பழுப்பு நிறக்கல் ஒன்றினை வைத்தான். கட்டு ஏதும் போடாமலேயே அது கடிவாயில் ஒட்டிக் கொண்டது. ஒரு வேரினை அவன் தண்ணீரில் நனைத்து அந்தச் சிறுவனுடைய தோளிலிருந்து கீழ்நோக்கித் தேய்த்தான். உணர்ச்சியற்றுப் போன கையில் மெல்ல உணர்ச்சி தோன்றியதோடு இறுதியில் அச்சிறுவன் விரல்களை

அசைக்கத் தொடங்கினான். அந்தக் கல் அதன்பின் தானே விழுந்துவிட்டது. ஈரமான வேரினை முதலில் அச் சிறுவனின் நாவிலும் கண்ணோரத்திலும் தேய்த்தபின்னே கைகளில் தேய்க்கத் தொடங்கினான் அந்த ஆள் ஒருமுறை பயன்படுத்திய கல்லினை மீண்டும் பயன்படுத்தலாம் எனக் கூறினான். அப்படி அதனைப் பயன்படுத்தும் முன் நன்றாகக் கழுவி அதில் உள்ள நஞ்சினை அகற்றவேண்டும். இந்தக் கல்லினைத் தயாரிக்க ஒரு கொடியின் ஐந்து இலைகளை உலர்த்திப் பொடி செய்வர். இந்தக் கல்லினை ஒன்பது நாட்கள் அமாவாசையின்போது வேப்பமரம் ஒன்றின் பட்டைக்கும் வளர்பட்டைக்கும் இடையே மரத்தின் சாறு மேல் ஏறும் பருவத்தில் வைத்திருக்க வேண்டும். '' இந்தக் கல் தயாரிக்கப்படும் இலையினைத் தரும் கொடி சிண்டில் என்ற (*Tinospora cordifolia*) காட்டுக் கொடியாகும். அவன் பயன்படுத்திய வேரும் அந்தக் கொடியின் வேராக வேண்டும். வேப்ப மரத்தின் மேல் பற்றிப் படர்ந்திருக்கும் சிண்டில் கொடி மற்ற மரங்களின் மேல் படர்ந்துள்ள கொடியினை விட மிகுந்த பயன்தரத் தக்கதாகும் என்ற பரவலான நம்பிக்கை உள்ளது.

இச் சாதியாருக்குரியதாகக் காஞ்சிவரத்தில் வைக்கப்பட்டிருக்கும் அடையாளச் சின்னம் மண்வெட்டி ஆகும். *

'' ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்களில் ஒட்டர்களைச் சிலர் தொங்க ஒட்டர் (திருட்டு ஒட்டர்) என அழைக்கப்படுகின்றனர். திருட்டை இவர்கள் தொழிலாக மேற்கொண்டமையால் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர். திருட்டை மேற்கொண்டுள்ள இச் சாதியார் அதில் மிகத் திறமையுடையவர்களாகவும் அதில் ஊறிப் போனவர்களாகவும் உள்ளனர். இந்தத் திருட்டு ஒட்டர் கல்லுடைக்கும் ஒட்டர் பிரிவினரிடையே காணப்படுகின்றனர். கல்லுரல்களைக் கொத்தும் பணியில் ஈடுபடுவதாகக் கூறிக்கொண்டு திரியும் இவர்கள் அந்தச் சாக்கில் கொள்ளையிட வேண்டிய வீடுகளைப் பற்றிய விவரங்களைச் சேகரிப்பர். அதே சமயம் பயணங்கள் மேற்கொள்ளும் பயணிகள் பற்றிய விவரங்களையும் திரட்டுவர். வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபடும் இவர்கள் தடித்த நீண்ட கழிகளை வைத்திருப்பர். சுவரில் உள்ள இடிபாட்டினைக் கருத்தூன்றி ஆராய்ந்தால் வீடு புகுந்து கொள்ளையிட்டவர்கள் ஒட்டர்களா இல்லையா எனத் தெரிந்து கொள்ளலாம். இவர்கள் கல்வேலை செய்யும்போது

* ஜெ.எஸ்.எப். மெக்கன்சி,இந்தியத் தொல்லியல், IV 1875.
(J.S.F. Mackenzie, Int. Ant., IV 1875)

பயன்படுத்தும் கடப்பாரையினையே வீட்டுச் சுவரை இடிக்கவும் பயன்படுத்துவர். கடப்பாரை உண்டாக்கிய அடையாளங்களைச் சுவரில் ஆங்காங்கே காணலாம். இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஒருவன் மீது குற்றம் சுமத்தப்பட்டால் அவன் குடும்பத்தை சேர்ந்த பெண்கள் அழுது ஆர்ப்பாட்டம் செய்வதோடு தங்கள் உடம்பிலும் குழந்தைகளின் உடம்பிலும் காயங்களை உண்டாக்கிக் கொண்டு காவலர்கள் கொடுமைப்படுத்தினார்கள் எனப் பழி போடுவர். கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த பெண், பகலில் வேலைப்பார்க்கும் களங்களிலிருந்து தானியங்களைத் திறமையாகத் திருடுவதோடு அண்டை அயலார் கோழிகளையும் கவர்ந்து செல்வாள். திருடியதை இவர்கள் எப்பொழுதும் தங்களிடம் வைத்துக் கொள்வதில்லை. அதனைப் பெறுபவர்கள் இவர்களின் கூட்டாளிகளாக இருப்பர். பெரும்பாலும் இவர்கள் தங்கியுள்ள வட்டாரத்தில் சாராயக்கடைகளைச் சேர்ந்தவர்களே திருடப்பட்டவற்றைப் பெற்றுக்குதாள்வதுண்டு. விலை மதிப்புள்ள தங்க நகைகள் சில திராம் சாராயத்திற்காகக் கைமாற்றிய வழக்குகள் உள்ளன. கங்கராஜா என்பவன் ஒட்டர் சமூகத்தின் சாதித் தலைவனாக உள்ளான். திருட்டுக் கூட்டத்தாரிடமிருந்து இவன் திருட்டுச் சொத்தில் இரண்டு பங்கு பெறுவதற்குரியவன். அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய பொருள்களை உடனே உருமாற்றம் செய்வர். ஒட்டர்களுள் பலர் தங்கள் வெள்ளி நகைகளைத் தாங்களே உருக்கி அவற்றின் மதிப்பில் பத்தில் ஒரு பங்கிற்கு விற்பர்'' எனத் திரு எப். எஸ். முல்லலி எழுதியுள்ளார். ஏ '' வேலை தேடி அலைந்து திரிபவர்களின் எண்ணிக்கை 100,000 க்குப் பக்கமாக இருக்கும் என்பது பலருக்குத் தெரியாது. இவர்கள் இருப்புப்பாதை, துறைமுகம், கால்வாய், அணைக்கட்டு ஆகிய பணிகள் நடைபெறும் இடங்களுக்கு இடம்விட்டு இடம் பெயர்ந்து சென்றவர்களாக இருப்பர். பொதுவாக இத்தகைய பணிகள் நடந்து முடிவடைவது பற்றிப் பொதுமக்கள் அறிவதில்லை. அவை பயன்பாட்டிற்கு வந்தவுடன் அவற்றைக் கட்டி முடிப்பதில் தங்கள் வாழ்க்கையைப் பணயம் வைத்தவர்கள் எங்கே சென்று என்னவானார்கள் என்று யாரும் கவலைப்படுவதில்லை. பொதுப் பணியாளர்களான இத்தகைய நாடோடிகளது உழைப்பின் பயனையே இன்றைய நாகரிக உலகம் தன் வசதியான வாழ்க்கை முறைக்காகப் பெரிதும் நம்பியுள்ளது. எனவே நம்மிடம் அவர்கள் அனுதாபத்தை எதிர்ப்பார்ப்பது உலகியலோடு பொருந்தியது தான். '' இங்கிலாந்தில் தொழில் செய்தவர்களாக அலைந்து திரியும் நாடோடிகளைப் பற்றிக் கூறப்பட்டதான மேலே கண்ட கருத்துக்கள், 1901 சென்னை மாநிலக்

* முந்து நூல். **(Op. Cit.)**

கணக்கெடுப்பின்படி 498, 388 பேராக உள்ள ஒட்டர்களுக்கும் முற்றும் பொருந்தும்.

1901 கணக்கெடுப்பில் ஒட்டராசுலு என்பது ஒட்டர்களுக்குரிய மற்றுமொரு பெயராகத் தரப்பட்டுள்ளது. யெருக்கலர் சாதியின் ஒரு பிரிவினர் ஒட்டர் என அழைக்கப்படுகின்றனர். ஒட்டர்சகலி (தசாகலர்) என்பது விசாகப்பட்டினம் கையேட்டில் துணி துவைப்பவர்களும், தீப்பந்தம் பிடிப்பவர்களும் பல்லக்குச் சுமப்பவர்களுமான பிரிவினருக்கு உரிய பெயராகக் குறிக்கப்பட்டுள்ளது.

ஓட்டிலு : Ōddilu

ஒட்டிலு சாதியாரை மறைத்திரு ஜெ. கெயின்* கோதாவரி ஆற்றில் தோணி விடுவோர் எனவும் வாழ்க்கையில் தங்களை உயர்த்திக் கொண்டவர்களான இவர்கள் தங்களைச் சிருஷ்டி கரணமலு என அழைத்துக் கொள்வதாகவும் கூறுகின்றார். மேலும் அவர், இவர்கள் கோயிகள் எனவும் மற்றவர்களை விடவும் நாணயமானவர்களாகக் கருதப்படுவதாகவும் அதனால் பழங்குடியினரின் தெய்வமான வேல்பு இவர்கள் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது எனவும் கூறுகின்றார்.

ஓதுவார் : Ōdhuvar (readier or reciter)

கோயில்களில் திருமுறையினை ஓதும் பண்டாரங்களுக்கு உரிய பெயர்.

ஒடிசி : Odisi

பொருந்தாரிகளின் ஓர் உட்பிரிவு.

ஒடிய : Odiya

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் ஒடியர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது :- '' இவர்கள் கஞ்சம் மாவட்டத்தில் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும் அளவிலான உரிய சாதியார், ஒடிய, உரிய என்ற இரண்டும் ஒரே சொல்லின் இருவேறு வடிவங்கள். தெலுங்க என்பது தெலுங்கு நாட்டைச் சேர்ந்தவன் எனப் பொருள்படுவதைப் போல இச் சொல் ஒடிய அல்லது உரிய நாட்டைச் சேர்ந்தவன் எனப் பொருள்படுவது. எனவே வேறு வேறு சாதியினைச் சேர்ந்தவர்கள் இந்த இருவேறு பெயர்களின் கீழும் பதிந்து

* இந்தியத் தொல்லியல், VIII, 879 (Ind Ant. 1879)

கொண்டிருக்கக் காணலாம். ஒடியர் சாதியின் உட்பிரிவுகளாகக் கணக்கெடுப்பு அட்டவணையில் 146 பிரிவுகள் உள்ளன எனினும் இவற்றுள் பல சாதிகளின் பெயர்களே அன்றி உட்பிரிவுகள் அல்ல. பெநாய்டொ என்ற உட்பிரிவின் கீழ் 62, 391 பேர் பதிந்துள்ளனர். இப்பிரிவே எண்ணிக்கையில் மிகுந்தது. இதற்கு அடுத்தபடியாக நுணிய உட்பிரிவில் 9356 பேர் பதிந்து கொண்டுள்ளனர்.''

1901 கணக்கெடுப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது :- ''ஒடிய, ஒரிய, உரிய என்பன அட்டவணை 13-இல் (சாதிகளும் பழங்குடிகளும்) உள்ள சொற்களுள் தெளிவற்றனவாக உள்ளன. ஒடியர் தனி இனத்தவர். 'ஒடிய' என்பது பெரும்பாலும் ஒரிய மொழி பேசுபவனையே குறிக்கும். எனினும் எத்தகைய தொடர்பும் இல்லாதவகையில் ஒடிய என்ற இச்சொல் எல்லாக் கணக்கெடுப்பு அட்டவணைகளிலும் சாதிப் பெயராக மீண்டும் மீண்டும் இடம்பெற்றுள்ளது. மலைப் பகுதிகளில் வாழும் ஒடியர் சமவெளியில் வாழும் ஒடியரினும் வேறானவர்கள். கஞ்சத்தைச் சேர்ந்த ஒடியர் விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த ஒடியரினும் வேறானவர்கள். ஒரு முட்டா (குடியிருப்பு) வின் பழக்க வழக்கங்கள் அதனை அடுத்துள்ள மற்றொரு முட்டாவின் பழக்க வழக்கங்களிலும் வேறுபட்டவை.'' திரு நரசிஸ் தாஸ் எனக்கு எழுதித் தெரிவித்துள்ளதாவது:- '' ஒரிய என்பது ஒடிசா எனப்படும் ஒரியாவைச் சேர்ந்தவன் எனப் பொருள்படும். ஒடிய என்ற தனிச் சாதியும் பல உட்பிரிவுகளைக் கொண்டதாக உள்ளது. இச் சாதியினர் பயிர்த் தொழிலை மேற் கொண்டவர்கள். குழந்தை மணம் அல்லது வயது வந்த பின் மணம் ஆகிய இரு வழக்கும் இவர்களிடையே உள்ளன. சடங்குகளை நிகழ்த்த இவர்கள் பிராமணர்களை அமர்த்துகின்றனர், கைம்பெண்களும் மணமுறிவு செய்து கொண்டவர்களும் மறுமணம் செய்து கொள்ளலாம். மீன், இறைச்சி இரண்டினையும் உண்ணும் இவர்கள் கோழி இறைச்சி, மாட்டிறைச்சி ஆகியனவற்றை உண்பதும் சாராயவகைகளைக் குடிப்பதும் இல்லை. இறந்தவர்களை எரிக்கின்றனர். நாகபொன்சோ குலத்தைச் சேர்ந்தவர்கள் தங்களை நாகமுனி என்ற பாம்பு முனிவரின் மரபில் வந்தவர்கள் எனக் கூறிக் கொள்கின்றனர். ''

ஒடியர்களிடையே பெனாய்டொ , நுணியா, பாக்கொரிய என்ற மூன்று உட்பிரிவுகள் உள்ளதாக அறிகிறேன். இவற்றுள் முதலாவது மற்ற இரு பிரிவுகளையும் விடச் சமூகப் படிநிலையில் உயர்ந்தது. இவர்களிடமிருந்து ஒரியப் பிராமணர்களும் கொரொணொக்களும்

தண்ணீர் பெற்றுக் குடிப்பர். பொனய்டொ, நுணியா உட்பிரிவினர் கஞ்சம் மாவட்டம் முழுதும் காணப்படுகின்றனர். பரக்கொரிய பிரிவினர் அஸ்கா, புருஷோத்தபூர் ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் மட்டும் காணப்படுகின்றனர். இச் சாதியினுள் புறமணக்கட்டுப்பாடு உடைய பல குலப்பிரிவுகள் உள்ளன. நாகசிர (நாகம்),கொண்ட (நீர்யானை), கொசிபு (ஆமை), பரக (பன்றி) என்பன குறிப்பிடத்தக்கவை. சுபச் சடங்குகளின் தொடக்கத்தில் கோத்திரத்திற்கு உரிய தெய்வங்களை வழிபடுதல் இவர்கள் பழக்கம். ஒடியர் சகன்னாதரையும் தாகுராணி கிராம தேவதைகளையும் வழிபடுகின்றனர். பிஸ்ஸொயி, பொபானொ, ஜென்ன,பரிகொ,சாகு, சுவாயி,கௌடொ, புல்லெயி,சண்டொ, டொலெயி,தொரெயி என்பன இச்சாதிக்குரிய பட்டப்பெயர்களுள் சிலவாம்.

மணமாகாத சிறுமி ஒருத்தி நோயுறின் அவளைத் தர்ம தேவதைக்கு மணம் செய்விப்பதாக வேண்டுதல் செய்துகொள்வர். தர்மதேவதையின் உருவாக ஒரு பித்தளைப் பாத்திரத்தை வைத்திருப்பர்.

கலப்புச் சாதியினைச் சேர்ந்தவர்களும் சிலபோது தங்களை ஒடியர் எனக் கூறிக் கொள்கின்றனர். தெலுங்கு ஆடபாப பிரிவைச் சேர்ந்தவர்களை ஒத்தவர்களான பகாயி பொவொக்கள் தங்களை ஒடியர் அல்லது பெனிய ஒடியர் எனக் கூறிக் கொள்வதை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

ஒடிய தோட்டி : Odia Toti

தமிழ்நாட்டு நகரங்களில் தோட்டிகளாக உள்ள ஒரிய உறட்டிகளுக்குரிய தமிழ்ப் பெயர்.

ஓஜலி : Ōjili

ஓஜலி,வோஜலி, ஓஜொலு என்பன பற்றி 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:- ''விசாகப்பட்டினம் முகவர் பகுதியில் காணப்படும் தெலுங்குக் கொல்லர்கள் இவர்கள். மாட்டிறைச்சியை உண்ணும் இவர்கள் பைதிகள், மாலர் ஆகிய சாதியாரினும் சமூகப்படிநிலையில் உயர்ந்தவர்களாக உள்ளனர். இவர்கள் மேட்டுக் கம்சாளி எனவும் அழைக்கப்படுவர்.'' சோழச் சக்கரவத்தியின் ஆட்சிக் காலத்தில் கம்சாளரான கைவினைஞர்கள் தங்களைப் பிராமணர்களுக்குச் சமமானவர்கள் எனக் கூறிக்கொள்ள இதனால் கோபங்கொண்ட மன்னன் இவர்களை

அழிக்கும்படி ஆணையிட்டான். சிலர் ஓஜு சாதியாரிடம் தஞ்சம் புகுந்து சாவிலிருந்து தப்பினர். அதற்கு நன்றி பாராட்டும் வகையில் கம்சாளர் தங்கள் குடும்பப் பெயருடன் கட்டோஜு ,லக்கோஜு என ஓஜு என்பதனை இணைத்துக் கொள்கின்றனர் என விசாகப்பட்டினம் கையேட்டில் கூறப்பட்டுள்ளது.

ஒக்கிலியன் : Okkiliyan

கன்னடத்தைச் சேர்ந்த பயிர்த்தொழிலாளரான வக்கலிகர் என்பதற்கான தமிழ்ப் பெயர் ஒக்கலியர். இப்பெயர் பயிரிடுதல் அல்லது உழவுத்தொழில் புரிதல் எனப் பொருள்படும் ஒக்கலு என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் வக்கலிகர் ஆகிய ஒக்கலிகர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:-'' கன்னட மொழி பேசும் பயிரிடுவோரான மைசூரைச் சேர்ந்த இவர்கள் மதுரை, கோயமுத்தூர் மாவட்டங்களிலேயே காணப்படுகின்றனர். இச்சாதி பல உட்பிரிவுகளாகப் பிரிவுபட்டுள்ளது. நொணப, கங்கதிகார என்பன அவற்றுள் இரண்டாகும். இப்பிரிவுகள், மைசூர் சின்னங்களின் அடிப்படையிலான குலப்பிரிவுகளாகப் பிரிவுப்பட்டுள்ளன. சின்னத(பொன்), பெள்ளி(வெள்ளி), கச்சாயம் (பணியாரம்), எம்மெ (எருமை), அலகி(சட்டி) ஜோள (சோளம்) என்பன அவற்றுள் சிலவாம்.'' வக்கலியர் தங்களை ஆணைகுண்டியினைச் சேர்ந்த பல்லாள ராசாவின் மரபில் வந்தவர்கள் எனக் கூறிக் கொள்வர். பொருத்தமான தொழிலை நாடித் தங்கள் நாட்டை விட்டுப் புறப்பட்டுக் கொங்கு நாட்டில் (கோயமுத்தூர்) வந்து தங்கியதாகக் கூறுவர். நான் தமிழ்நாட்டில் தங்கியுள்ள கோயமுத்தூர் மாவட்டத்தினரான ஒக்கலியரைப் பற்றிக் கேட்டறிந்ததில் இவர்கள் பயிர்த்தொழிலாளர், ரொட்டி சுடுவோர், பால் விற்போர், கட்டிட வேலை பார்ப்போர், வணிகர், வண்டியோட்டுவோர், தையல் வேலைக்காரர், சுருட்டுத் தயாரிப்போர், கூலிகள் எனப் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருப்பது தெரியவந்தது. இவர்கள் பின்வரும் எட்டு அகமணக் கட்டுப்பாடுடைய குலப்பிரிவுகளைத் தங்களுடையதாகப் பதிந்துள்ளனர்.

1. கங்கதிகார (கங்கைக் கரையில் வாழ்ந்தோர்)
2. குடி (கோயில்)
3. கீரே (கீரை பயிரிடுவோர்)
4. குஞ்சு (குஞ்சம்)
5. காமாட்டி (முட்டாள் ,பயிரிடுதலைக் கைவிட்டு செங்கல் கட்டிட வேலையை மேற்கொண்டவர்கள்)
6. கௌரி (சிவனுடைய மனைவி)

7. பாய்
8. சாணு

பிற கன்னடச் சாதியாரிடையே இருப்பதைப் போலவே ஒக்கலியரிடையேயும் புறமணக்கட்டுப்பாடுடைய குலப்பிரிவுகள் அல்லது கூட்டங்கள் உள்ளன. (பெள்ளி - வெள்ளி) கஸ்தூரி, பட்டக்காரன், அருவ, ஹட்டியன்ன முதலியன அத்தகைய குலப் பிரிவுகளுக்கான பெயர்கள். இவர்களுள் சைவர்களும், வைணவர்களும் உள்ளனர். அருவ குலத்தினர் அனைவரும் சைவர்கள். ஹட்டி குலத்தினர் வைணவர்கள். சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் இடையே மண உறவுகள் நிகழ்கின்றன. இத்தகைய உறவின் போது சைவர் லிங்காயதர்களாகக் கூட இருக்கலாம். ஒக்கலியர் கிராமத் தேவதைகளை வழிபடுகின்றனர். மாகாளியம்மன்,கோனியம்மன் ஆகிய தெய்வங்களுக்கு ஆடு,கோழி ஆகியனவற்றைப் பலியிடுவர், கோயமுத்தூரைச் சேர்ந்த கீரைக்கார ஒக்கலியர் கீரைகளையும் காய்கறிகளையும் பயிரிடுவதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்கள் கெம்பம்பட்டி ஒக்கலியர் என அழைக்கப்படுவர். மைசூரில் உள்ள கெம்பம் பட்டிப் பகுதியிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் என்பது இதன்பொருள்.

கோயமுத்தூரில் இவர்களுடைய பரம்பரைச் சாதித் தலைவன் பட்டக்காரன் என அழைக்கப்படுகின்றான். இவனுக்குக் கீழே சின்னப் பட்டக்காரன் என்பவன் உள்ளான். சாதிச் சபைக் கூட்டங்களைப் பட்டக்காரன் தலைமை தாங்கி நடத்துவதோடு வழக்குகளைத் தீர்த்து வைத்தல், தண்டத் தொகை விதித்தல் முதலியவற்றையும் மேற்கொள்வான். ஒருவன் தகாத வார்த்தைகளைப் பேசியதாகக் குற்றம் சாட்டப்பட்டால் சின்னப் பட்டக்காரன் அவன் கன்னத்தில் அறைவான். சண்டையின் போது ஒருவன் மற்றவனைச் செருப்பால் அடித்தால் அவன் தன்னையும் தன் வீட்டையும் புனிதப்படுத்திக் கொள்வதோடு சாதியினைச் சேர்ந்த சிலருக்கும் விருந்து வைக்க வேண்டும். செருப்பால் அடிப்பட்டவனும் புனிதப்படுத்தும் சடங்கிற்கு உள்ளாக வேண்டுமெனினும் அவன் விருந்து வைக்க வேண்டியதில்லை. மாற்றான் மனைவியோடு தவறான உறவு கொள்பவர்கள் கூடையில் மணலைச் சுமந்தவர்களாகச் சாதியினைச் சேர்ந்தவர்கள் வாழும் தெருக்கள் வழியே செல்ல வேண்டும். அப்போது சின்னப் பட்டக்காரன் புளியம் மிலாரினால் அவன் முதுகில் அடித்தபடி உடன் வருவான். சில இடங்களில் ஊருக்கு எனத் தனியே ஊர்க்கவுண்டன் இருப்பதாக

எனக்குத் தெரிவித்தனர். இவன் நாட்டுக் கவுண்டன் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவன். ஊர்கள் பலவற்றைக் கொண்ட நாடுகள் பல ஒரு பட்டக்காரன் அதிகாரத்தின் கீழ் இருக்கும். பட்டக்காரனின் உதவியாள் பண்டாரி. இப்பதவிகள் அனைத்தும் பரம்பரை உரிமையுடையவை.

கங்கதிகாரக் குலப்பிரிவைச் சேர்ந்த ஒரு சிறுமி பூப்படையும் போது அவளுடைய தாய்மாமனோ தாய்மாமன் மகனோ தென்னோலை, நாணல், புங்கம் கிளைகள் ஆகியவற்றைக் கொண்டு அவள் தங்கியிருக்கக் குடிசை அமைப்பான். நாளும் அவளுடைய உறவினர்கள் அவளுக்குத் துணி, பழங்கள், மலர்கள் ஆகியனவற்றைக் கொண்டுவந்து வழங்குவர். ஒரு நாள் விட்டு ஒரு நாள் அவளைக் குளிக்கச் செய்து வண்ணாத்தி கொண்டு வந்து தரும் துவைத்த ஆடைகளை உடுக்கச் செய்வர். மூன்றாம், ஐந்தாம், ஒன்பதாம் நாள்களில் அவள் தங்கியுள்ள குடிசையினைப் பிரித்துப் புதிதாக அமைப்பர் . திருமணச் சடங்கின்போது மணமகன் முனையில் எலுமிச்சம்பழம் குத்தப்பட்டுள்ள ஒரு குத்துவாளை வைத்தவனாக இருப்பான். அதன் ஒரு பகுதி அவன் உடையில் மறைக்கப்பட்டிருக்கும். மணமகள் இல்லத்திற்கு குத்துவாளை ஏந்தியவனாகச் செல்லும் அவன் ஒரு மூங்கில், புது உடைகள், தாலி, நகைகள், கங்கணம், பழம், தேங்காய், அரிசி, புதுப்பாய், கற்பூரம் ஆகியனவற்றை உடன்கொண்டு செல்வான். கையில் கட்டப்பட்ட கங்கணத்தை அவிழ்க்கும் வரை அவன் அந்தக் குத்துவாளை வைத்திருக்கவேண்டும். நாவிதன் மணமகன் நகங்களை வெட்டுவான். பட்டக்காரனோ பிராமணனோ தாலியை அனைவரும் வாழ்த்தும்படி கூடியுள்ளவர்களிடையே எடுத்துச் செல்வர். அதன்பின் அதனை மணமகனிடம் தர அவன் அதனை மணமகள் கழுத்தில் கட்டுவான். மணமக்களின் உடையின் முனைகளை இடையே வெற்றிலை பாக்கையும் வைத்து இணைத்து முடிச்சிடுவர். அவர்களுடைய வலக்கைச் சிறுவிரல்கள் கோக்கப்படும். பின்னர் வசிட்டரின் மனைவியும் கற்புக்கு எடுத்துக் காட்டாக விளங்குபவளுமான அருந்ததி விண்மீனைப் பார்ப்பர். மணப்பந்தல் நான்கு கம்பங்களால் ஆனது. பால்கம்பமாகக் கள்ளியினை அமைத்து அதனோடு மாவிலை, கங்கணம் ஆகியனவற்றைச் சேர்த்துக் கட்டி வைப்பர். ஒக்கலியர் திருமணங்கள் சிலவற்றில் சாதிப் பூசாரியான கணிகாரன் தாலிகட்டும் சடங்கை நடத்தி வைப்பான். மணமக்களின் விரலைக் கணிகாரனோ தாய்மாமனோ இணைத்து வைக்கும் சடங்கு மிக முக்கியமானதாக்க் கருதப்படுகிறது. மணநிகழ்ச்சியின்போது வரதட்சணைத் தொகை வழங்கப்படுதல் இல்லை. முதல் குழந்தை பிறக்கும் போதே அதனை வழங்குவர். முதல்

மகப்பேறு பெண்ணின் பிறந்த வீட்டில் நடக்கும். அதன்பின் அவளைக் குழந்தையோடு கூட வரதட்சணையையும் தந்து கணவன் வீட்டிற்கு அனுப்பி வைப்பர். குழந்தை பிறக்குமுன் இதனைத் தருவதில்லை. அவ்வாறு தந்தால் மக்கட்பேறு வாய்க்காவிடிலோ மனைவி இறக்க நேர்ந்தாலோ அத்தொகை அவள் கணவனுக்குரியதாக ஆகி அவனுடைய புதிய குடும்பத்தைச் சென்று சேரும் என்பதே இதற்குக் காரணமாகும்.

சில ஒக்கலியரிடையே சிறுவன் ஒருவனை மணக்கும் வயது வந்த பெண்ணோடு அந்தச் சிறுவனுக்குப் பருவ வயது வரும்வரை அவனுடைய தந்தை உடல் உறவு மேற்கொண்டுவரும் வழக்கம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

இறந்தவனை இவர்கள் உட்கார வைத்த நிலையில் புதைப்பர் என எனக்குக் கோயமுத்தூரில் தெரிவித்தனர். அவன் இளைஞனாகவோ மணமாகாதவனாகவோ இருப்பின் சாய்வான நிலையில் வைத்துப் புதைக்கப்படுவான். பிண ஊர்வலம் சுடுகாட்டிற்குச் செல்லும் வழியில் அதன்முன் இறந்தவனுடைய உறவினர்களும் நண்பர்களும் காசு, பழம், பணியாரம், அரிசி முதலியனவற்றை ஏழைகள் பொறுக்கிக் கொள்ளும்படி தெருவில் வீசிச் செல்வர். செல்வ மிக்க பெரிய குடும்பங்களில் நிகழ்ந்த சாவாயின் பொன்னாலும் வெள்ளியாலும் ஆன மலர்களைக் கூடத் தூவிச் செல்வர். சில உயர் சாதியார் செய்வதைப் போல உருவங்களை இவர்கள் வீசிச் செல்வதில்லை. புதைகுழியின் தெற்குப் பக்கத்தில் பிணத்தின் முதுகு படியும்படியாகக் குடைவு ஏற்படுத்தப்படும். கொஞ்சம் உப்பினை வயிற்றின்மீது வைத்துப் புதைகுழியினை மூடுவர். எருக்கம் இலை (*Calotrophis gigantica*) அல்லது ஆவார (*Cassia auriculata*) இலை புதை குழியின் மூன்று மூலைகளிலும் இடப்பட்டபின் தலைமாட்டில் ஒரு கல்லை நடுவர். ஒரு சட்டியில் தண்ணீரோடும் கொள்ளியோடும் புதைகுழியினைச் சுற்றிவரும் இறந்தவன் மகன் சட்டியினை அக்கல்லின் மீது போட்டு உடைத்தவனாக அங்கிருந்து செல்வான். இறந்தவனின் மனைவி தன் வளையல்களை உடைத்துப் புதைகுழி மீது எறிவாள். இறந்தவனின் மகனும் மற்றவர்களும் குளித்தபின் வீட்டுக்குத் திரும்பி அங்கு ஏற்றி வைத்துள்ள விளக்கினை வழிபடுவர். மூன்றாம் நாள் அரசு, பலா மரங்களின் உலர்ந்த குச்சி, பால், புதிய துணி, வாழைப்பழங்கள், இளநீர், சுருட்டு, பச்சரிசி, வெற்றிலை முதலியவற்றை வழிபாட்டுக்காகப் புதைகுழிக்கு எடுத்துச் செல்வர். அந்தக் குச்சிகளை எரித்துச் சாம்பலாக்கி

நீர்விட்டுப் பிசைந்து ஒரு மனித உருவம் செய்வர். அதற்குப் புதிய துணியினைப் போர்த்தி மலர்களை இட்டு வழிபடுவர் வாழைப்பழம் ,இளநீர் ஆகியவற்றுக்குப் பூசை செய்து அவற்றை ஒரு வாழையிலை மீது வைத்தபின் நண்பர்களும் உறவினர்களும் அந்த உருவத்தின் மீது பாலை ஊற்றுவர். இறந்துபோனவன் மனைவி தாலிக் கயிற்றினை அறுத்து அந்த உருவத்தின் மீது இடுவாள். இறந்தவன் மகனுக்கும் பிணத்தைத் தூக்கி வந்த நால்வருக்கும் முகம் மழிப்பர். பிணத்தைத் தூக்கி வந்த நால்வரும் ஆளுக்கு ஒரு உலக்கையினைத் தாங்கியவர்களாக நிற்பர். அம்பட்டன் தருப்பையினை நல்லெண்ணையில் தொட்டு அவர்களுடைய தோளினைத் தொடுவான். பச்சரிசி முதலிய உண்ணும் பொருட்களை இறந்தவன் மகன் பிணம் தூக்கி வந்தவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைப்பான். அன்றிரவு இறந்தவனுடைய சட்டை, வேட்டி,தலைப்பாகை முதலிய பொருள்களை வைத்து வழிபடுவர். பதினொன்றாம் நாள் பிராமணன் ஒருவன் புனித் நீரினைத் தெளித்துத் தீட்டினைப் போக்கிய பின் சாதியினைச் சேர்ந்தவர்களுக்கு விருந்திடுவர். இவர்கள் சிரார்த்தம் நடத்துகின்றனர். சில ஒக்கலியர்கள் லிங்காயத படகரைப் போலத் தேர் முதலியன கட்டிப் பிணத்தைப் புதைகுழிக்கு எடுத்துச் செல்கின்றனர். தேர் மூங்கிலால் கட்டப்பட்டு மேற்கட்டி அமைப்பு உடையதாக இருக்கும் அதன்மேல் ஐந்து பித்தளைக் கலசங்களைக் கவிழ்த்து வைப்பர். அதனைக் கொடிகள், வண்ணத் துணிகள், வாழைக் கன்றுகள் முதலியனவற்றைச் சேர்த்துக் கட்டி அலங்கரிப்பர்.

தங்கள் விரல்களைப் பலியாகத் தரும் மொரசு வக்கலியர் பற்றித் தனிக் கட்டுரை உள்ளது . (பார்க்க : மொரசு)

ஓலை : Ōlai

பள்ளியரின் ஓர் உட்பிரிவு. இப்பிரிவினர் ஓலை எனப்படும் காத்தி அணிவதில்லை.

ஓலாரோ: Olāro

கடபர்களின் ஓர் உட்பிரிவு

ஒலேகாரன் : Olēkara

பார்க்க : விலையக்கார (Vilayakara)

ஒளிகள : Olikala

தேவாங்கரின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம்.

ஒமனைடொ: Omanaito

ஒமன்னைடொ அல்லது ஒமைடொக்கள் ஒரியப் பயிர்த்தொழிலாள ராவர். இச் சாதியார் பற்றிய பின்வரும் விவரங்களுக்கு நான் திரு சி. உறயவதன ராவிற்குக் கடப்பாடுடையேன். இச் சாதியாரின் மூதாதையான ஒருவன் அயோத்தியில் ஸ்ரீ ராமன் அமைச்சனாக இருந்த அமர்த்தியனாவான். இராமன் விண்ணுலகம் சென்று சேர்ந்த பிறகு இவர்களை ஆதரிக்க யாரும் முன்வராததால் இவர்கள் பயிர்த்தொழிலை மேற்கொள்ள நேர்ந்தது என ஒரு வழக்கு வரலாறு வழங்குகின்றது. பொடோ(பெரிய), சன்னொ(சிறிய) என்ற இரு அகமணக் கட்டுப்பாடு உடைய பிரிவுகளாக இச் சாதி பிரிவுப்பட்டுள்ளது. இப்பிரிவுகளுள், பின்னவர், முன்னவர் பொட்டதர், பௌடோ மற்றும் வேறு சாதிப் பெண்களுடன் கொண்ட முறையற்ற உறவு காரணமாகப் பிறந்தவர்கள் எனக் கருதப்படுகிறது. பொடொ பிரிவினர் ஸ்வ(கிளி); பாக் (புலி) ; சொக்சிமொ (ஆமை), நாகம், சிலை, தூதொ(பால்), கும்த(பூசணி) குக்ர(நாய்) எனப் பெயர்பெறும் பல குலப்பிரிவுகளாகப் பிரிவுப் பட்டுள்ளனர்.

இவர்கள் சாதித் தலைவன் பகத நாயக் எனப்படும்பரம்பரைப் பதவி உரிமை உடையவனாவான். சமூகம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இவன் சாதிக் கூட்டங்களைக் கூட்டுவான். சாதியினைச் சேர்ந்தவர்களைச் சாதிவிலக்கம் செய்வதற்கு இவனுடைய உடன்பாட்டினைப் பெற்றாக வேண்டும். கோண்ட்களைப் போலவே இச்சாதியாரும் புண்ணால் வருந்துபவர்களைச் சேர்த்துக் கொள்ளாது சாதி விலக்கம் செய்கின்றனர். மீண்டும் சாதியில் சேரச் சாதி விலக்கம் பெற்றவன் சாதியாருக்கு ஒரு விருந்து தர வேண்டும். பகத நாயக் அதில் முதலாமவனாக இருந்து உண்பான்.

சிறுமியரைப் பூப்படையும் முன்பும் பின்பும் மணம் செய்விக்கும் இருவகை வழக்கமும் இவர்களிடையே உள்ளன. ஒருவன் தன் அத்தை மகளை மணக்க உரிமை கொண்டாடலாம். ஓர் இளைஞனின் பெற்றோர் அவனுக்கு மணம் செய்விக்க வேண்டிய பருவம் வந்துவிட்டது என முடிவு செய்தவுடன் கொஞ்சம் இனிப்பையும் வெல்லத்தையும் எடுத்துக் கொண்டு அந்த இளைஞனின் அத்தை வீட்டுக்குச் சென்று பெண் தரும்படி கேட்பர். மணம் பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்காகப் பின்

மீண்டும் இது போல இரண்டாம் முறையாக அங்குச் செல்வர். தேசாரி மணத்திற்கான நல்ல நாளை முடிவு செய்வான். ஓர் ஆளிடம் சிறிது அரிசி, மூன்று ரூபாய், ஒரு மறி ஆடு,ஒரு சேலை ஆகியவற்றைக் கொடுத்து மணமகள் பெற்றோரிடம் சேர்க்கும்படி அனுப்புவர். அவர்கள் மணமகனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ஒரு குறிப்பிட்ட நாளில் வரும்படி அவனிடம் சொல்லியனுப்புவர். அன்று மணமகன் மணமகள் இல்லத்திற்கு ஊர்வலமாகப் பெரும்பாலும் குதிரையில் செல்வான். மணமகள் வீட்டின் முன் சால் (**Shorea robusta**) மரக்கம்பங்கள் எட்டினை நிறுத்திப் பந்தல் அமைத்திருப்பர். பந்தலின் நடுவில் ஓர் இலுப்பைக் கம்பத்தை நட்டு அதில் எட்டு மஞ்சள் துண்டு ஏழு மாவிலை ஆகியவற்றைச் சேர்த்துக் கட்டியிருப்பர். முகூர்த்த வேளை நெருங்கியவுடன் மணமகனை ஊர்வலமாகப் பந்தலுக்கு அழைத்துச் செல்வர். அப்பொழுது முன்பு பெண் கேட்டு வந்த ஆள்,'' மாப்பிள்ளை வந்தாயிற்று; சீக்கிரம் மணமகளை அழைத்து வா'' என மணமகன் அத்தையிடம் கூறுவான். மணமகள் மணமகன் பக்கத்தில் வந்து நிற்கத் தேசாரி அவர்கள் சிறுவிரல்களை இணைத்து வைப்பான். பெண்கள் மஞ்சள் கலந்த அரிசியினை அவர்கள் மீது தூவுவர். அன்று காலை ஊரைச் சேர்ந்த ஓடையிலிருந்து கொண்டு வரப்பட்டு மஞ்சளிட்டுக் கலக்கப்பட்ட ஐந்து பானைகளில உள்ள தண்ணீரை மணமக்கள் மீது ஊற்றுவர். பின் அவர்களுடைய மாமனார்கள் வாங்கும் புதிய உடைகளை அணிவர். மணமகள் வீட்டார் ஒரு விருந்து தருவர். அதற்கு மறுநாள் மணமகள் மணமகன் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவாள். வீட்டு வாசலில் மணமகன் தாயார் மஞ்சள் கலந்த அரிசியினை அவர்கள் மீது தூவி அவர்கள் பாதங்களை மஞ்சள் நீரால் கழுவி அவர்களை வரவேற்பாள். அனைவருக்கும் அப்போது சாராயம் வழங்குவதோடு உணவும் படைப்பர். தேசாரி ஏழு அரிசி மணிகளையும் ஏழு பாக்கினையும் எடுத்து மணமக்கள் உடையின் முனையில் வைத்து முடிவான். மறுநாள் ஒரு விருந்து நடைபெறும். அதற்கும் மறுநாள் மணமகனைச் சேர்ந்தவர்களும் மணமகளைச் சேர்ந்தவர்களும் ஒருவர் மீது ஒருவர் மஞ்சள் நீரினை இறைத்துக் கொள்வர். பின்னர் அனைவரும் ஓடைக்குச் சென்று குளிப்பர். செம்மறி இறைச்சியோடு அன்று விருந்து நிகழும்.

விசாகப்பட்டினம் மாவட்ட விவரக் குறிப்பில் ஓமனைட்டொக்கள் திருமணத்தில் சேற்றை வாரி வீசிக் கொண்டவர்களாகச் சண்டையிடுவர் எனக் கூறப்பட்டுள்ளது.

கைம்பெண்கள் மறுமணத்தை இவர்கள் அனுமதிக்கின்றனர். இறந்துபோன அண்ணன் மனைவியினைத் தம்பி மணந்துகொள்ளலாம். மணமுறிவு அனுமதிக்கப்படுவதோடு மணமுறிவு செய்து கொண்டவர்கள் மறுமணம் செய்து கொள்ளவும் அனுமதிக்கப் படுகின்றனர்.

ஒம்னைட்டொக்கள் தாகுராணி மற்றும் சாமரிய தேவதா ஆகிய தேவதைகளை வழிபடுகின்றனர். இத் தேவதைகளின் பூசாரியாக இவர்கள் சாதியினைச் சேர்ந்தவனே பணிபுரிகின்றான். சித்திரை(சைத்ரா) மாதத்தில் இத் தேவதைகளின் ஆண்டு விழாவினைக் கொண்டாடுவர்.

இறந்தவர்களை எரிக்கும் இவர்கள் பத்துநாள்கள் சாவுத் தீட்டினை மேற்கொள்கின்றனர். அப்போது சாதிக்குரிய வழக்கமான தொழிலை இவர்கள் மேற்கொள்வதில்லை. துக்கம் நேர்ந்துள்ள குடும்பத்தவர்களுக்கு வேறுகுலத்தைச் சேர்ந்தவர்கள் அச் சமயத்தில் உணவளித்து வருவர். பதினொன்றாம் நாள் ஒரு விருந்து நிகழும். அதில் சாராயம் வழங்கும் வழக்கமில்லை.

இச்சாதிக்குரிய பட்டப்பெயர் நாயகொ எனினும் வளமான வாழ்க்கை வாழும் சிலர் பாத்ரொ என்ற பட்டப்பெயரைத் தரிக்கின்றனர்.

ஒண்டிப்புலி : Ondippuli

1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பயிர்த்தொழிலிலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ள தெலுங்கு பேசும் சாதியார் எனப் பதியப்பட்டுள்ளது. இப்பெயர் பள்ளிச் சாதியரோடு இணைந்தவர்களான இரவலர்களுக்குரிய பெயராகவும் வழங்குகின்றது.

ஒன்னாம் பரிக்ச : Onnām pariksha (first party)

இளையாடுகளின் ஒரு பிரிவு.

ஒன்னெ : Onne (*pterocarpus Marsupium*)

தொரையர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம். வேங்கை மரத்திற்கான பெயர் இது. வேங்கையின் அடிமரத்திலிருந்து கசியும் பாலை நெற்றியில் பொட்டாக இட்டுக்கொள்ள இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

ஒன்டெட்டு: Onteddu

ஒண்டி எருது எனப்பொருள்படும் இது காணிகர் அல்லது காந்தாலரின் ஓர் உட்பிரிவு. தங்கள் செக்கில் ஓர் எருதினைப் பயன்படுத்துவோர் எனப் பொருள் தருவது.

ஒபாடொ : Opoto

ஒபொடொ அல்லது அபொடொ பல்லக்குச் சுமக்கும் கௌடோ பிரிவினருக்குரிய பெயர்

ஒப்பம்தர : Oppamtara

கொச்சி அரசர் சில நாயர்களுக்கு வழங்கியுள்ள பட்டப் பெயர்.

ஒப்பணக்காரன் : Oppanakkarān (trader)

இவர்கள் தெலுங்கு வணிகரும் பயிரிடுவோரும் ஆவர். பலிசர் சாதியின் ஓர் உட்பிரிவாகவும் பதியப்பட்டுள்ளது.

ஒப்பொமரங்கொ : Oppomarango (*Achyranthus aspera*)

பொந்தாரியரின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். இவர்கள் இச் செடி (நாயுருவி) யின் வேரைப் பல்துலக்கப் பயன்படுத்துவதில்லை.

ஒரே: Orē

நாயர்களின் சிறப்புப் பட்டப்பெயர்.

ஒரிகபதுடு : Origabhathudu (saluting devotee)

இரவலர் வகுப்பார். இவர்கள் பெரிகெய் சாதியாரிடம் மட்டுமே இரப்பர்.

ஒரிய : Oriya

ஒரிய அல்லது உரிய என்பது ஒரிய மொழி பேசுவோர்க்கான பொதுவான பெயர். கணக்கெடுப்பின் போது இது சோண்டி,தோபி முதலிய சாதிகளுக்குரிய உட்பிரிவாகவும் பதியப்பட்டுள்ளது.

ஒருகண்டி : Oruganti

காபு ,முத்ராசர் சாதிகளின் உட்பிரிவு.

ஒரு நூல் : Orunūl

மாரான்கள் சாதியின் உட்பிரிவு. இப்பிரிவினைச் சேர்ந்த கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வதில்லை.

ஒஸ்த்தம : Oshtama

சாதானிகளைக் குறிக்கும் வைஷ்ணவன் என்ற சொல்லின் திரிந்த

வடிவம். பாமர மக்கள் இவர்களை ஒய்தமார் அல்லது ஒஸ்தமாசு என அழைப்பர்.

ஒஸ்ட : Osta

1901 திருவாங்கூர் மாவட்டக் கணக்கெடுப்பு அறிக்கையில் முகமதியர்களுக்குரிய அம்பட்டர்களுக்கான பெயராகப் பதியப்பட்டுள்ளது.

ஓடட்டு : Ōttattu (tile makers)

நாயர்களுக்கான தொழில் தொடர்பான பெயர். இவர்கள் கோயிலகள் மற்றும் பிராமணர்கள் இல்லங்களுக்கு ஓடு வேய்வர்.

ஒத்தைச் செக்கான் : Ottaisekkan

செக்கினை ஓர் எருதுகட்டி ஓட்டுபவர்கள் எனப் பொருள்படுவது. வாணியரின் ஓர் உட்பிரிவு.

ஓட்டைக் குண்டா : Ōttaikunda (empty Pot)

கம்மர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலம்.

பச்சா : Paccha (green)

கம்மர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம். இதற்குச் சமமான பச்சை என்பது தமிழ்ப் பறையன்களின் ஓர் உட்பிரிவாக உள்ளது. பச்சைமலையில் தங்கியுள்ள மலையாளிகளுக்கும் இது பெயராகும். பச்சைப்புவாக்கு(பச்சை புகையிலை) தேவரங்கர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலத்துக்கான பெயராகும். பச்சைக் குத்தி என்பது பச்சை குத்தும் தொழிலை மேற்கொண்டவர்களாக அலைந்து திரியும் குறவருக்கான பெயர். இது பச்சையினைக் கொண்டு குத்துதல் எனப் பொருள்படும். பச்சைப் பொட்டுலு என்பது கஞ்சம், விசாகப்பட்டினம்,கோதாவரி மாவட்டங்களில் பச்சை குத்துபவர்களாக அலைந்து திரியும் ஒட்டர்களுக்கான பெயர்.

பச்சிலிய : Pachilia

ஒரிய கௌடொகளுக்கான பெயர்.

பட : Pada (fighting)

நாயர்களின் ஓர் உட்பிரிவு.

பதஹரு மாதளர் : Padahāru Mādala (sixteen madalas)

உப்பாரர் பிரிவில் மணமகளுக்குரிய விலையினைக் கூறும் உட்பிரிவினருக்கான பெயர். ஒரு மாதள, இரண்டு ரூபாய்க்குச் சமம். சிலர் இந்தப் பெயர் மொடகளையைக் குறிக்குமென்பர். குறிக்கப்பட்ட மண்மேட்டைச் சுட்டும் என்பாரும் உளர் இந்த மண்மேடுகளிலிருந்து முன்பு உப்பெடுத்தனர்.

படையாச்சி : Padiyāchi

பள்ளி, வன்னியன், சவலக்காரன்களுக்கான மற்றுமொரு பெயர் அல்லது பட்டப் பெயர்.

படால்: Padāl

பகடர்களின் சாதித் தலைவனுக்கான பட்டப்பெயர்.

பாதம்: Pādam

1901 திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. பாதமங்கலம் அல்லது பதமங்கலக்கார் என்பது நாயர்களின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. இவர்கள் கோவில் ஊர்வலங்களை முன்னின்று நடத்திச் செல்பவர்கள். திரு சுப்ரமணிய அய்யர் எழுதுவதாவது - பாதமங்கலம் மற்றும் தமிழ்ப்பதம் ஆகியன நாயர்களின் பிரிவுகளாகப் பதியப்பட்டுள்ளன. எனினும் இவர்கள் தமிழ் நாட்டில் இருந்து திருவாங்கூரில் வந்து குடியேறியவர்கள் எனக் கூறப்படுகிறது.'' பதம் மூசு கம்மர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய குலமாகவும் உள்ளது.

படர்தி : Padarti

தென் கன்னட மாவட்டத்தில் பூசாரிகளுக்கு உரிய ஒரு பட்டப்பெயர். ஸ்தானிகர்களும் இப் பெயரால் அழைக்கப்படுவர்.

படவல : Padavala (boat)

தேவாங்கரின் புறமணக்கட்டுப்பாடுடைய குலம்.

பதிகராசு : Padiga Rāju

சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் பட்ராசு போன்றே பதியப்பட்டுள்ள பெயர். பதிகராசுலு என்போர் பத்ம சாலேக்களோடு இணைக்கப்பட்டவர்களாக உள்ள பிச்சைக்காரர் ஆவர். இவர்கள் பட்ராசுக்களிலும் வேறானவர். இப்பெயர் பதிக என்ற

பாத்திரத்தின் பெயரிலிருந்து வந்ததாகலாம். அதனைப் பிச்சை எடுக்கச் செல்லும் இவர்கள் உடன் தூக்கிச் செல்வர்.

பத்ம : Padma (Lotus)

வெலமர்களின் ஓர் உட்பிரிவு.

பத்ம சாலே : Padma Sālē

சென்னை மாநிலம் முழுதும் பரவியுள்ள தெலுங்கு பேசும் நெசவாளர்கள் பத்ம சாலேக்கள். இவர்களுள் பெரும்பாலோர் தங்கள் பரம்பரைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எனினும் மிகச் சிலரே சொந்தமாகத் தறி வைத்துக் கொண்டுள்ளனர். மற்றவர்கள் வசதி படைத்த தறி உடைமையாளர்களிடம் வேலை பார்த்து வருகின்றனர். பொதுவாக ஏழைகளாக உள்ள இவர்கள் குடிக்கு அடிமைகளாக உள்ள தோடு இவர்களுக்கு வட்டிக்குப் பணம் கடன் தரும் வட்டிக் கடைக்காரர்களின் பிடியிலிருந்து மீள இயலாதவர்களாகவும் உள்ளனர். கைகோளர்களைப் போலப் பத்ம சாலேக்களும் முரட்டுப் பருத்தித் துணி நெசவில் ஈடுபட்டுள்ளவர்களே. பட்டு நூல்காரர், காத்ரேக்கள் ஆகியவர்களோடு மெல்லிய வகைத் துணிகளை நெய்வதில் இவர்களால் போட்டியிட முடியாது.

பத்ம சாலேக்களிடையே மார்க்கண்டேய என்ற ஒரு கோத்திரம் மட்டுமே உள்ளது. மற்ற தெலுங்குச் சாதியாரிடையே உள்ளதைப் போலவே இவர்களிடையேயும் புறமணக்கட்டுப்பாடுடைய இல்லப் பெயர்கள் - குலங்கள் - பலவாக உள்ளன. அவற்றுள் சில வருமாறு :

பண்டாரி (பண்டகர்)	பத்தி (பருத்தி)
பொம்ம (பொம்மை)	புட்ட (கரையான் புற்று)
கஞ்சி	தேளு (தேள்)
சிந்தகின்சல (புளியங்கொட்டை)	தங்கெதல (ஆவாரை)
கோரன் (மருதோன்றி)	தும்ம (கருவேல்)
ஜிங்க (மான்)	அவிரி (அவிரிச் செடி)
கால்வாய்	சின்னம் (தங்கம்)
காசுலு (செப்புக்காசு)	குர்ரம் (குதிரை)
கொங்கர (நாரை)	கெத்தம் (தாடி)
கடவல (பானைகள்)	கோட்ட (கோட்டை)
மஞ்சி (நல்லது)	மேட (மேடை)
நீலி (நீலச்சாயம்)	மெத்தல (மெத்தை வீடு)
நூகாலு (மாவு)	மாமிட்ல (மாங்காய்)

நியாயம் (நீதி)	நராள (நரம்பு)
ஊட்ல (உறி)	பூல (பூக்கள்)
போத்து (ஆண்)	சாது (அப்பாவி)

பத்ம சாலேக்கள் வைணவத்தைப் பின்பற்றியவர்களாயினும் சிலர் சைவர்களாகவும் உள்ளனர். சாது குலப்பிரிவைச் சேர்ந்த குடும்பங்கள் அனைத்தும் லிங்கம் கட்டும் சைவர்கள். தங்கள் குடும்பத் தெய்வமான வெங்கடேசுவரரோடு இவர்கள் புலி [illegible]டல ரங்கசுவாமி,மரெம்மா, துர்க்கம்மா, நரசப்பா, சுங்காலம்மா, ஊருகுந்தி, வீரண், கங்கம்மா, கிண்கிணியம்மா, முத்யாலம்மா, காலேலம்மா, அங்கம்மா, பத்மாவதியம்மா ஆகிய தெய்வங்களையும் வழிபடுகின்றனர். இவர்கள் சாதிக்குரிய தெய்வம் பாவன ரிஷி. சில இடங்களில் அவருக்கான கோயில்கள் உள்ளன. ஆண்டுதோறும் அவருக்குத் திருவிழாவும் நடத்துகின்றனர். அச்சமயம் தேவன், தேவி ஆகிய இருவரையும் அலங்கரிக்கப்பட்ட பானைகளில் உள்ளவர்களாகக் கருதி அப்பானைகளைப் புலிவாகனத்தில் ஏற்றி வைப்பர். விழாவின் இறுதி நாளன்று நிறையக் காய்கறிகளையும் பொங்கலையும் படைப்பர். அவை தறி உரிமையாளர்கள், பூசாரிகள், சாதித்தலைவன், விரதமிருப்போர் முதலியவர்களுக்கு வழங்கப்படும்.

பத்ம சாலேக்கள் வலங்கைப் பிரிவினர். தேவாங்கர் இடங்கைப் பிரிவினர். தேவாங்கர், பத்ம சாலேக்கள் தேவி கௌடேசுவரியின் தலையைத் தங்களுக்கு விட்டுவிட்டு உடலை எடுத்துச் சென்றவர்கள் எனக் கூறுவர்.

சாதன குருளு, பதிகராசுலு எனப்படும் கோணப்பிள்ளை, இணங்க முக்கு பட்ராசுலு எனப்படும் மூன்று வகைப் பிச்சைக்காரர்கள் பத்ம சாலேக்களோடு இணைக்கப்பட்டவர்களாக உள்ளனர். சாதன குருளு எனப்படும் இரவலர்களைப் பற்றி புச்சனன்* எழுதியுள்ளது வருமாறு :- " சாமிசாலேக்களின் வைணவப் பிரிவினர் பத்ம சாலே என அழைக்கப்படுவர். சாலே பிரிவினருள் அனைவரும் முதலில் லிங்கம் அணிந்தவர்களாகவே இருந்து வந்துள்ளனர். ஒரு வீட்டில் பேய் குடிபுக இந்தப் பிரிவினரை அழைத்து அதனை ஓட்டும்படி கூற அது இவர்கள் தெய்வ வழிபாட்டுக்குக் கட்டுப்பட்டு வெளியேறவில்லை. இறுதியில்

* மைசூர், கன்னடம், மலபார் வழியான பயணம், 1807. (Journey through Mysore, Canara, and Malabar, 1807)

பத்துப் பேர் தங்கள் லிங்கத்தை அவிழ்த்து எறிந்தவர்களாக விட்டுணுவை நோக்கிப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினர். அவர்களால் பகையாக வந்த அந்தப் பேயினைப் பிரார்த்தனையின் மூலம் ஓட்ட முடிநதது. அப்போதிலிருந்து வைணவ நெறிக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இவர்கள் இந்தத் தெய்வத்தை வழிபட்டு வருகின்றனர். இந்தப் பத்து பேரின் பரம்பரையில் வந்தவர்கள் சாதனஅசொலு (சாதன இருளு - சாதனை புரிந்த சூரர்கள்) எனத் தீரர்களாகப் போற்றப்பட்டவர்களாக முறையாகத் தொழில் ஏதும் மேற்கொள்ளாது தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டுச் சாதியாரின் தர்மத்தாலும் தயையாலும் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.சாதியைச் சேர்ந்தவர்களோடு இவர்கள் மணஉறவு கொள்வதில்லை.

பதிகராசுலு பிரிவினர் அதிகாடு, பதிகாடு, பலுகாடு என்ற பாவன ரிஷியின் வியர்வையிலிருந்து தோன்றிய மூவரின் வழிவந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். பத்ம சாலேக்கள், பதிகராசுக்களின் தோற்றம் பற்றிப் பின்வரும் கதை வழங்கி வருகின்றது :- உலகம் தோற்றுவிக்கப்பட்ட சமயத்தில் மனிதர்கள் ஆடையின்றியே திரிந்து வந்தனர். பதினாறு வயதுடையவனான மார்க்கண்டேயன் என்பவன் ஆடைகள் நெய்யப் பணிக்கப்பட்டான். அப் ப'ணியினைச் செய்ய உதவி வேண்டி அவன் தவம் மேற்கொண்டான். வேள்வித் தீயிலிருந்து விட்டுணுவின் நாபி கமலத்திலிருந்து எடுக்கப்பட்ட நூல் கட்டுடன் பாவன ரிஷி தோன்றினார். அதிலிருந்து துணியினை நெய்த அவர் அதனைத் தேவர்களுக்கு வழங்கியதோடு பைரவருக்கும் கொடுத்தார். பைரவர் அத்துணி தறிப்பாவின் கடைசியில் சுருட்டிக் கட்டப்பட்டிருந்த பகுதியாகையால் அதனைப் பெற மறுத்துவிட்டார். அது அணிவதற்குத் தகுதியில்லாதது எனக் கண்ட பைரவர் அத்துணி ஆறுமாதத்தில் இற்றுப் போக வேண்டுமெனச் சாபமிட்டார். அதனால் சிவன் பாவனரிடம் தனக்கு ஒரு புலித் தோலினை அணிந்து கொள்ளக் கொண்டுவரும்படி கூறினார். நாரதர் பாவனரின் உதவிக்கு வந்தவராக அவரிடம் உதயகிரியில் சூரியனுடைய மகளான பத்ராவதி, பாவனரைக் கணவனாக அடையத் தவம்செய்து கொண்டிருப்பதாகவும் அங்குச் செல்லும் படியாகவும் கூறினார். அவர் அங்குச் செல்ல அவள் பாவனர் தன்னை மணந்து கொண்டால் புலித்தோலினைப் பெற்றுத் தருவதாகக் கூறினாள். அதற்கு அவர் ஒப்புக் கொள்ளவே புலித்தோல் கிடைக்கப்பெற்றார். புலியைத் தன் வாகனமாகக் கொண்டு அதில் ஏறிப் பாவனர் சிவனிடம் சென்று கொண்டிருந்த போது வழியில் ஓர் இராட்சசனை எதிர்ப்பட, அவனைக் கொல்ல அவனோடு போராடிய போது வெளிப்பட்ட வியர்வையிலிருந்து அதிகடு, பதிகடு, பலுகடு ஆகிய மூவரும்

தோன்றினர். அவர் இறுதியில் சிவனிடம் சென்று சேர்ந்த போது சிவனின் விபூதியினைப் புலிமேல் வீசியவுடன் அது தன் தோலினைக் கழற்றிவிட அதனைச் சிவன் அணிந்து கொண்டான். இதன் காரணமாகப் பத்ம சாலேக்கள் புலியினைப் போற்றிவருவதோடு அது தங்களுக்குத் தீங்கிழைக்காது எனவும் நம்பி வருகின்றனர்.

பரமகால் ஆவணங்களில்* பத்மசாலேக்களின் தோற்றம் பற்றிய வழக்கு வரலாறு பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:- முன்னாளில் நெசவர்களான ஒரு பிரிவினர் ஆண்டு தோறும் ஒரு வேட்டியினை மார்க்கண்டேயலு என்ற முனிவருக்கு அளித்து வந்தனர். ஓர் ஆண்டில் அவர்கள் அவ்வாறு வழக்கமாகக் கொடுக்கும் சமயத்தில் அதனைக் கொடுக்கத் தவறினர். இதனால் சினங்கொண்ட அந்த முனிவர் ஒரு யாகம் நிகழ்த்தித் தன் மந்திரங்களின் ஆற்றலால் அந்த யாகக் குண்டநெருப்பிலிருந்து பத்ம சாலிவரலு என்பவனை வரவழைத்து அவனைத் தனக்கு ஒரு வேட்டி நெய்யுமாறு பணித்தார். அவன் அவ்வாறே நெய்து அவருக்கு அளித்தான். அப்போது அவன், 'சுவாமியே! உங்கள் அடிமையான நான் யாரை வழிபட்டு எப்படி மோட்சம் அடைவது' எனக் கேட்டான்' அதற்கு அவர் 'நீ என்னையே வழிபட்டு வருவாய். உனக்கு மோட்சம் கிடைக்கும்' எனக் கூறினார்.''

இவர்கள் சாதித் தலைவன் செட்டி அல்லது காடு எனப்படும் பரம்பரை உரிமையுடையவன். உம்மிடி செட்டி அல்லது கணுமுக்கி எனப்படும் உதவியாளன் அவனுக்கு உள்ளான். சாதியாருக்குச் செய்தி தெரிவிக்கும் பணியாளனான இவனுக்குக் கோயில் திருவிழா முதலானவற்றுக்குச் செலுத்த வேண்டிய வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பூப்படைந்த சிறுமி ஒருத்தி சடங்கு நிகழ்த்தி முடியும் வரை இறைச்சியும் கீரையும் உண்ண அனுமதிக்கப்படுவதில்லை. திருமண நிச்சயதார்த்தம், பொருத்தம் பார்த்தல், நாள் குறித்தல் போன்ற வற்றினுக்கு ஒரு பிராமணப் புரோகிதன் உதவுகின்றான். திருமணம் தொடர்பான ஏற்பாடுகளின் போது வெளிப்படையாகப் பேசுவது பத்மசாலேக்களால் நாகரிகமானதாகக் கருதப்படுவதில்லை. பெண் கேட்க வந்தவர்கள், ''விருந்து உண்ண வந்திருக்கிறோம்'' என கூறுவார்கள். பெண்ணின் பெற்றோர் அந்த உறவுக்கான தங்கள்

* பிரிவு III தங்கி உறையும் மக்கள், சென்னை அரசு அச்சகம், 1907. (Section III Inhabitants, Madras Government Press, 1907)

உடன்பாட்டினை, ''நாங்கள் விருந்து போடத் தயார் தான். நீங்கள் எங்கள் நெருங்கிய உறவினர்களாயிற்றே'' என்பது போலத் தெரிவிப்பர். இவர்கள் திருமணச் சடங்குகள் கன்னடியர், தெலுங்கர் திருமண முறைகளின் கூட்டுக் கலவையாக அமைந்தது. ஒப்படைக்கப்பட்ட மாவட்டங்களில் மணமகள் அனுமானை வழிபட்டபின் ஒரு காளை மீதேறி மணமகன் இல்லத்திற்குச் செல்லும் வழக்கம் உள்ளது. அவள் வீட்டில் நுழையும் பொழுது ஒரு தேங்காயினைச் சுற்றி ஈடுகாயாக இடுவர். பின் அவள் நான்கு கம்பங்கள் நட்டு ஒன்பது சுற்று நூல் சுற்றப்பட்டுள்ள மறைவிடத்தில் குளிப்பாள். மணமக்கள் கரங்களில் பருத்தி, கம்பள நூல்களாலான கங்கணம் அணிவிக்கப்படும். மணமகளுக்குக் கழுத்தில் தாலி அணிவிக்கும் போது அவள் தரையில் குவிக்கப்பட்டுள்ள அல்லது கூடையில் உள்ள சோளத்தின் மீது நிற்பாள். மணமகன் அரவைக்கல் ஒன்றின் மீது நிற்பான். அப்பொழுது மணமக்களிடையே ஒரு திரை தொங்கும். மணமகளின் மூக்குத் தியினைத் தட்டில் உள்ள பாலில் இட்டு அதனை ஐந்து முறை எடுக்கும்படி செய்வர். அன்று மாலை மணமக்கள் தெருக்களின் வழியே ஊர்வலமாகக் கோயிலுக்குச் செல்வர். வீட்டின் வந்து நுழையு முன் மணமகன் மணமகளைத் தூக்கியவனாக வாசலில் சிறிது நேரம் ஆடுவான். இச்சடங்கு தேக ஆட்டம் எனப்படும். தெலுங்குச் சாதியார் பலர் இதனை நிகழ்த்துகின்றனர்.

பத்ம சாலேக்கள் சிலர் இறந்தவர்களை வழக்கமான முறையில் புதைக்கின்றனர். மற்றவர்கள் லிங்காயதர்களைப் போல உட்கார்ந்த நிலையில் வைத்துப் புதைக்கின்றனர். வீட்டிலிருந்து பிணத்தைத் தூக்கும் முன் ஒரு கோழியினைப் பலியிடுதல் சில இடங்களில வழக்கமாக உள்ளது. சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் சாவு நிகழுமாயின் பாடையில் ஒரு கோழியினைக் கட்டி அதனைப் பிணத்தோடு எரிக்கும் வழக்கம் உள்ளது. அவ்வாறு செய்யவில்லையானால் அடுத்து உடனே ஒரு சாவு நிகழும் என்ற நம்பிக்கையே இதற்குக் காரணம். 'சனிப்பிணம் தனிப் போகாது' என்ற இந்த நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்த தமிழ்ப் பழமொழியும் உள்ளது. பிணத்தை எடுத்துச் செல்லும் வழியில் அதனைக் கீழே வைத்து வாயில் நீர் ஊற்றுவர். இறந்தவரின் மகன் ஒரு சட்டியில் தண்ணீரோடு புதைகுழியினைச் சுற்றி வரும் போது உம்மிடி செட்டி அச் சட்டியில் துளையிடத் தண்ணீர் கீழே வழியும். ஐந்தாம் நாள் ஒரு மறியினை அடித்து விருந்துண்பர். அன்று மாலை சாதானி வந்து பூசை செய்தபின் இறந்து போனவரின் உறவினருக்குப் பூசைக்கு வைத்த

புனிதச் சாராயத்தைத் தீர்த்தமாக வழங்குவான். கருமாந்திரச் சடங்கின் போது சாதானி மீண்டும் சாராயத்தோடு வர அனைவரும் குடித்துக் களிப்பர். (பார்க்க: சாலே).

பகடாளர்: Pagadāla (treader in coral)

பலிசர், கவரை சாதிகளுக்கான புறமணக்கட்டுப்பாடு உடைய குலம். விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த பகடாள பலிசர் முத்தும் பவளமும் விற்பவர். பகடமூக்கர கம்மர்களின் உட்பிரிவு ஒன்றின் பெயராகப் பதியப்பட்டுள்ளது.

பகடி வேடம் : Pagati vēsham

பிச்சை எடுக்கும் போது வேடம் தரித்துக் கொள்ளும் தெலுங்கு பேசும் பிச்சைக் காரர்கள் இவர்கள் என 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கின்றது. திருப்பதியில் கங்கம்மா தேவியின் ஆண்டு விழாவின் போது ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் மக்கள் வேறு வேறு வேடங்கள் தரித்தவர்களாக வருவர். பைராக், பாம்பு முதலியன இந்த வேடங்களில் அடங்கும்*.

பகுத்தன் : Paguththan

செம்படவன்களின் பட்டப்பெயர்

பைத : Paida (gold or money)

மாலர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய ஒரு குலம். இதற்குச் சமமான பைதம் தேவாங்கரின் குலம் ஒன்றின் பெயராக உள்ளது.

பைதி : Paidi

" பைதிகள் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் காணப்படும் பயிர்த்தொழிலில் ஈடுபடும் கூலிகளும் நெசவாளர்களுமாவர். சிலர் வீட்டு வேலைக்காரர்களாகவும் ஊர்க்காவலர்களாகவும் உள்ளனர். இவர்கள் மலையினத்தவர்களான பானொக்களுடனும் தொம்பொக் களுடனும் சமவெளியில் வாழும் மாலர்களுடனும் நெருங்கிய உறவுடையவர்கள். இவர்கள் கொச்சையான ஒரிய மொழியினைப் பேசுகின்றனர். " என்று 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் இவர்களைப் பற்றித் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. விசாகப்பட்டினத்தைச் சேர்ந்த பைதிகளைப் பற்றிய பின்வரும்

* பார்க்க : வட ஆர்க்காடு மாவட்டக் கையேடு, 1, 187.
(See: Manual of the North Arcot district, 1, 187.)

குறிப்புக்களுக்கும் நான் திரு சி. ஹயவதன ராவ் அவர்களுக்குக் கடப்பாடுடையேன். இந்தச் சாதிபற்றிப் பெரிதும் குழப்பம் நிலவுகின்றது. தோம்,பாணொ சாதிகளிலிருந்தும் இது வேறானதன்று என்ற பொதுவான கருத்தும் உள்ளது. ஒருவனையே தெலுங்கர்கள் பைதி எனவும்,சவரர்கள் தோம்ப் எனவும், கோண்ட்கள் பாணொ எனவும் அழைப்பதாக எனக்குத் தெரிவித்துள்ளனர். செயப்பூர் முகவர் பகுதியின் உட்பகுதியில் தோம்புகளும் பைதிகளும் உறவுடையவர் என்பதனை மறுக்கின்றனர். சில இடங்களில் பைதிகள் இராமாயணத்தை இயற்றியவரான வான்மீகி முனிவரின் வழியில் வந்த வான்மீகி குலத்தவர் எனத் தங்களைக் கூறிக் கொள்கின்றனர். போயர்களும் தங்களைப் பற்றி இது போலக் கூறிக் கொள்வர். விசாகப்பட்டினம் கையேட்டில் பைதிமாலறு அல்லது பைதிமாலர் (மலை மாலர்) பயிரிடுவோராகவும், பணியாளர்களாகவும், ஊர்க்காவலர்களாகவும் நூல் நூற்பவர்களாகவும் கூறப்பட்டுள்ளனர். கோமட்டிகள் பார்த்த உணவு இவர்கள் உண்பதில்லை எனக் கூறப்படுகின்றது. பைதிகள் தங்களுக்கும் மாலர்களுக்கும் எத்தகைய உறவுமில்லையென உறுதியாக மறுப்பர்.

பைதிச் சிறுமி ஒருத்தி பூப்படையும்போது அவள் பலநாட்கள் தீட்டுப்பட்டவளாகக் கருதப்படுகிறாள். இறுதி நாளன்று ஒரு மாதிகனை அழைத்து அவள் கால் கைவிரல் நகங்களை வெட்டச் செய்தபின் அவள் குளிப்பாள். பூப்படைந்த பின்போ முன்போ சிறுமியர் மணம் மேற்கொள்ளப்படுகிறது. மேநரிகம் வழக்கு - தாய்மாமன் மகளை உரிமை கொண்டாடுதல் - இவர்களிடையே உள்ளது. தாய்மாமன் மகளை மணப்பவன் ஐந்து ரூபாயும் மற்றவர்களை மணப்பவன் பத்து ரூபாயும் மணமகளுக்குப் பரிசமாகத் தரவேண்டும். மணச் சடங்கு நான்கு நாள்கள் அளவு நீடிக்கும். அது தாழ்ந்த தெலுங்குச் சாதியாரின் சடங்குகளை ஒத்தது. கைம்பெண்கள் மறுமணமும் மணமுறிவும் அனுமதிக்கப்படுகிறது.

வைணவர்களான பைதிகள் கார்த்திகை மாதத்தில் இராமன் புகழ் கூறும் பாடல்களைப் பாடுவர். அந்த மாதத்தில் ஒவ்வொரு குடும்பமும் சாதியினைச் சேர்ந்த ஒரு சிலருக்கேனும் உணவளிப்பர். சங்கரமானச் சடங்கைக் கொண்டாடும் இவர்கள் அப்போது புத்தாடைகளைப் புனைவர். இறந்தவர்களை எரிக்கவோ புதைக்கவோ செய்யும் இவர்கள் பெத்த, சின்னரோசு சாவுச் சடங்குகளை மேற்கொள்கின்றனர்.

பைதிகள் சிலர் பயிரிடுவோராயினும் பெரும்பாலானவர்கள் வளமான வணிகர்களாக மலைபடு பொருள்களை வாங்கிச் சமவெளியில் கொண்டுவந்து விற்கின்றனர். இவர்கள் குழந்தைகள் மலைகளில் உள்ள பள்ளிகளில் ஆங்கிலம் கற்கின்றனர். அண்ணா, அய்யா என்பன இவர்களுக்குரிய பட்டப் பெயர்கள்.

சிறிது காலம் முன்பு தங்களைப் பிள்ளைகாவு (பூனையைத் தின்பவர்கள்) எனக் கூறிக் கொள்பவர்கள் விசாகப்பட்டினம் சிறையில் இருந்தனர். இவர்கள் பூனை இறைச்சியினைத் தின்னும் மால பைதிகள் என எனக்குத் தெரிவித்தனர்.

பின்வரும் குறிப்பு கஞ்சம் மாவட்டத்தின் தென் பகுதியில் வாழும் பைதிகள் பற்றியன: இவர்களுள் சிலர் சவரர்களிடையே காவற்காரர்களாகப் பணி ஏற்றுள்ளதோடு தங்கள் மொழியோடு சவரர் மொழியினையும் பேசுகின்றனர். மணச் சடங்குகளைத் தெலுங்கு முறையில் நடத்தினாலும் ஒரியர்கள் கூறுகள் சிலவும் அவற்றிடையே இடம் பெற்றுள்ளன. முதல் நாளன்று பன்னிரண்டு கம்பங்கள் நட்டுப் பந்தலிடுவர். அன்று ஆண்களுக்குப் பகலிலும் பெண்களுக்கு இரவிலும் விருந்திடுவர். ஒரிய தண்டாசியரைப் போல இவர்களும் தங்கள் சாதியினைவிட உயர்ந்த சாதியினைச் சேர்ந்தவர்களின் ஏழு வீடுகளிலிருந்து தண்ணீர் பெற்று வருவர். மறுநாள் புஸ்தி எனப்படும் தாலியினை அணிவிக்க உரிய முகூர்த்த நேரத்தை இரவில் வருமாறு நேரம் குறிப்பர். குறிப்பிட்ட வேளையில் மணமகன் மணமகள் இல்லத்திற்கு விரைந்து சென்று சேர்வான். மணமக்கள் ஒருவர் மீது ஒருவர் அரிசியினைத் தூவிக் கொண்டபின் மணமகன் மணமகள் கையினைப் பற்றி அவளை மணப்பந்தலுக்கு அழைத்துச் செல்வான். அங்கு மேடையில் மணமகள் மணமகனுக்கு முன்னதாக இருக்கையில் அமர்வாள். இதனைத் தடுத்து மணமகனை முதலில் அமர்த்தப் போலியானதொரு சண்டை நிகழும். அதன்பின் அவன் மணமகள் தலையில் முக்குடு (முகடு - கிரீடம்) ஒன்றினையும் கரத்தில் கங்கணத்தையும் கழுத்தில் தாலியினையும் அணிவிப்பான். இதன் பின் முன்பு குறிப்பிட்ட தண்ணீரில் மணமக்கள் குளிப்பர். மீண்டும் மணமேடைக்கு அவர்கள் வர அவர்கள் முன் அத்த எனப்படும் அளவினை நிறைக்கும்படியாக அரிசி வைக்கப்படும். மணமகள் அதில் கொஞ்சத்தைத் திருடிக் கொண்டாள் எனக் கூறி வேடிக்கை செய்வர். மணமகன் அதனை அளக்கும் போது குறைய வேண்டும் என்றே அவள் அவ்வாறு செய்ததாகக் கூறுவர். மூன்றாம் நாள் மூதாதையருக்குச்

செய்யப்படும் வழிபாட்டுடனும் மணமக்களுக்கு அன்பளிப்புகள் வழங்குவதுடனும் மணச் சடங்குகள் நிறைவுறும்.

இவர்கள் சாவுச் சடங்குகள் ஒரியர் சடங்குகளின் வழிப்பட்டன. சாவுக்கு மறுநாள் சிதையினை அணைத்துச் சாம்பலைத் திரட்டி ஒரு மரத்தின் மீதோ ஒரு கரையான் புற்றின் மீதோ வீசுவர். அதனை அங்கு எடுத்துச் செல்லும் போது எடுத்துச் செல்பவனைப் புரோகிதர் இறந்தவர் என்னவானார் எனக் கேட்பார். அதற்கு அவன், அவர் காசிக்கோ சகன்னாதத்திற்கோ சென்று விட்டதாகப் பதில் கூற வேண்டும். பிணத்தை எரித்த இடத்தில் ஒரு துணியை விரித்து அதில் உணவினைப் படைப்பர். நான்காம் நாள் ஒரு பன்றியினைக் கொன்று சமைப்பர். அதற்கு முன் அந்தப் பன்றியின் கால் ஒன்றினை இறந்தவர் உயிர்விட்ட இடத்தில் தொங்கவிடுவர். எண்ணெய், மஞ்சள் ஆகியனவற்றைத் தொட்டுச் சாவுத் தீட்டினைப் போக்கிக் கொள்வர். விருந்தோடு சாவுச் சடங்குகள் முடிவுறும். நவம்பர் மாதத்தில் ஆண்டுக்கு ஒரு முறை மூதாதையர்களுக்குப் படையலிடுவர். குடும்பத்தில் அப்போது சாவு நேர்ந்தால் இப்படையலை இடமாட்டார்கள்.

கஞ்சம் மாவட்டத்தைச் சேர்ந்த பைதிகள் கிராமத் தேவதைகளான தாகுராணிகளை வழிபடுகின்றனர். அத்தேவதை களுக்குக் கோயில்களில் ஆடுகளையும் மறிகளையும் பலியிடுவர். தீட்டு உண்டாக்கும் சாதியாரான இவர்கள் கோயில் வாசலின் முன் சற்றுத் தூரமாகவே நின்று வழிபட்டபின் அங்கிருந்து போகும் போது ஓரிரு துளி மண்ணை உடன் எடுத்துச் செல்வர். வீட்டுக்குச் சென்றவுடன் ஓரிடத்தைத் தூய்மை செய்து அங்கு ஒரு துணியினைப் பரப்பி அதன் மீது வைத்துத் தாகு ராணிக்காகப் தயாரிக்கப்பட்ட படையல்களை அதன்முன் படைப்பர். பைதி ஒருவன் கடுமையாக நோயுற்றிருப் பானாயின் ஆண் அல்லது பெண் பேயோட்டியின் (பெஜ்ஜோ அல்லது பெஜ்ஜனொ) உதவியினை நாடுவர். தரையில் அரிசி மாவைக் கொண்டு ஒரு சதுரம் வரைந்து அதனைப் பதினாறு கட்டங்களாகப் பிரிப்பர். அதில் ஒவ்வொரு கட்டத்திலும் பலாசு (**Butea frondosa**) இலையாலான ஒரு தொன்னை, காலணா, சிறிது உணவு ஆகியன வைக்கப்படும். அதன்முன் ஏழு சிறிய விற்களையும் அம்புகளையும் இரண்டு வரிசையில் அமைப்பார்கள். அந்தச் சதுரத்தின் ஒரு பக்கம் ஒரு பெரிய கிண்ணத்தில் சோற்றினை நிரப்பி வைப்பர். ஒரு கோழியினைப் பலியிட்டு அதன் குருதியினை மும்முறை அந்தக்

கிண்ணத்தில் உள்ள சோற்றைச் சுற்றித் தெளிப்பர். அதன்பின் பேயோட்டுபவன் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை அந்தக் கிண்ணத்தில் உள்ள சோற்றருகே வைத்தபடி ஒரு தெய்வம் அல்லது தேவதையின் பெயரைச் சொல்லியபடி ஒவ்வொரு சோறாகத் தண்ணீரில் இட்டபடி இருப்பான். அந்தத் தண்ணீரில் போடப்பட்ட சோறு அமிழுமானால் அப்பொழுது பெயர் சொல்லப்பட்ட தெய்வத்தின் கோபமே நோய்க்குக் காரணம் எனத் துணிவர். சோறு மிதக்குமானால் பல தெய்வங்களின் பெயர்களை அடுத்தடுத்துச் சோறு ஒன்று மூழ்கும் வரை கூறுவான்.

''பைதிகளே விசாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள பர்வதிப்பூர் பகுதியில் பெரும்பாலான குற்றங்களை இழைக்கின்றனர். சாலைகளில் வழிப்பறியில் ஈடுபடுவர்களும் இவர்களே. கொண்ட தொரயரைப் போல இவர்களும் அந்த வட்டார மக்களைத் திருட்டிலிருந்து காப்பாற்றிக் கொள்ளத் தங்கள் சாதிக்காரர்களை அமர்த்தும்படி தூண்டி வருகின்றனர். ராயகட மற்றும் குணுப்பூர் வட்டங்களில் உள்ள இவர்களை விட மோசமான நடத்தையுள்ள தொம்பர்களோடு இவர்கள் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளனர்'' என விசாகப்பட்டினம் மாவட்ட விவரக் குறிப்பில் பதியப்பட்டுள்ளது.

பைய்க்: Paik

யேலும் பர்னலும் ஆங்கிலத்தில் நுழைந்துள்ள இந்தியச் சொற்களை விளக்கும் 'ஹாப்சன்- ஜாப்சன்' என்ற தலைப்பிலான தங்கள் நூலில் பைய்கெ அல்லது பைக் என்ற தலைப்பில் கூறியுள்ளது வருமாறு:- ''வில்சன்'' இந்தச் சொல்லின் ஆங்கிலோ இந்தியர் பேச்சில் வழங்கும் ஒரே ஒரு மூலத்தை மட்டும் தருகின்றார். அவர், 'பைய்க் அல்லது பாயிக் என்பது இந்தியில் சிதைந்து பயகெ முதலியன போல (வடமொழி படாதிக என்பதிலிருந்து) வழங்கும். பாய்க் அல்லது பாயக் மராத்தியில் காலாள், ஆயுதம் ஏந்திய காவலாள், தாழ்ந்த பதவியில் உள்ள காவலர், வருவாய்த் துறை அலுவலர், தகவலாள், செய்தி கொண்டு செல்பவன், ஊர்க் காவலாள் என்பன போன்ற பொருள்களில் வழங்கும். கட்டாக்கில், பாய்க் உள்ளூர்ப் போர்ப்படையாள்; இவர்கள் சமீன்தார்களின் அல்லது ராஜாக்களின் நிலங்களைப் போர்ப்படைப்பணி முறையில் உழுபவர்' என எழுதியுள்ளார். இங்கு இரண்டு சொற்கள் ஒன்றாகக் கலந்துள்ளன என்பது தெளிவாகின்றது: (அ) பார்சி மொழிச் சொல்லான பாய்க் காலாள் அல்லது செய்தி கொண்டு செல்பவன் (ஆ) இந்துஸ்தானி பாயீக் மற்றும் பாய்க் (இது மராட்டியிலும் வழக்கில் உள்ளது) இது வடமொழியின் காலாள் என்ற பொருளிலான படாதிக மற்றும் பதிக என்ற சொற்களிலிருந்து வந்தது.''

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது :- ''பைய்கொ தொழிலடிப்படையிலான சாதிப் பெயர். இது காலாட் படைவீரன் எனப் பொருள்படுவதோடு விசாகப் பட்டினம் மற்றும் கஞ்சம் மாவட்டங்களைச் சேர்ந்த ஒரியக் குறுநிலத் தலைவர்களின் கீழ்ப் பணிபுரிபவர்கள் எனவும் பொருள்படும். இப்பொழுது இவர்கள் பயிரிடுவோராக உள்ளனர். சிலர் காவலர்களாகவும் மற்றும் சிலர் அரசுப் பொதுத்துறையில் பணியாளர்களாகவும் உள்ளனர்''. 1854ஆம் ஆண்டிற்கு உரிய மனிதரைப் பலி கொடுத்தல் மற்றும் குழந்தைகளை உயிர்க்கொலை புரிதல் தொடர்பான ஆவணங்களில் பைய்க் துப்பாக்கி சுமப்போர் எனவும் இவர்கள் கோண்ட்களையும் கோந்த்களையும் கேவலமான முறையில் அடிமைகளாக நடத்தி வருகின்றனர் எனவும் கூறப்பட்டுள்ளது. 1869 - ஆண்டிற்கான விசாகப்பட்டினம் கையேட்டில் ''பல்வேறு சாதியாரும் பைய்க் அல்லது பயிரிடுவோர் எனக் குறிக்கப்பட்டுள்ளனர். முன்பு எண்ணிக்கையில் மிகுதியாக இருந்த இவர்கள் தற்போது மிகக் குறைந்த எண்ணிக்கையினராக உள்ளனர். பழங்காலத்தில் படைவீரர்களுக்குச் சிறிது பணமும் சிறிது நிலமுமாக இருவகையாக ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுது ஒரு சில பைய்க்குகளே போர் வீரர்களாக உள்ளனர். படையிலிருந்து தள்ளப்பட்டவர்கள் கடற்கரைப் பகுதியோடு வணிகத்தில் ஈடுபட்டுள்ளதுடன் தங்களுக்கு வழங்கப்பட்ட துண்டு நிலங்களில் பயிரிடுகின்றனர். பஸ்தார் எல்லைப்புறத்தில் உள்ள கோடபாத் கோட்டையில் ஏப்பொழுதும் பலநூறு பைய்க் போர்-வீரர்கள் நிலை கொண்டிருப்பர். நாம் காவல் துறையினரை அங்குப் பணியில் அமர்த்தியபின் இவர்கள் படைப் பொறுப்பிலிருந்தும் விடுவிக்கப் பட்டுவிட்டனர். நல்ல வீரர் இனத்தவர்களான இவர்கள் துப்பாக்கியால் குறி தவறாது சுடுவதிலும் வல்லவர்கள்.'' பைய்கொ என்பது கணக்கெடுப்பின் போது ரொணா என்பதற்காக மற்றொரு பெயராகவும் அச் சாதியின் உட்பிரிவாகவும் பதியப்பட்டுள்ளது. பைய்கராயி என்பது பதோயிகளின் பட்டப் பெயராகும்.

பைய்கி: Paiki

தோடரின் ஒரு பிரிவு

பயில்வான்: Pailman

பயில்வான் அல்லது பயில்மான் பற்றி 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- ''பயில்வான் மற்போர் வீரர்

எனப்பொருள்படும் தொழில் தொடர்பான பெயராகும். இந்துக்களாயினும் முசல்மான்களாயினும் மற்போர் புரிவோர் இப்பெயராலேயே வழங்கப்படுகின்றனர். கோல்லர் மற்றும் ஜெட்டிகள் சாதிகளைச் சேர்ந்தவர்களே இந்துக்களுள் மற்போர் வீரர்களாக உள்ளனர். தெலுங்கு நாட்டில் பைல்மான்கள் மற்போர் புரிவதோடு போலி மருத்துவர்களாகவும் வித்தை காட்டுபவர்களாகவும் செயல்படுகின்றனர். ஊர் ஊராகத் திரியும் மராட்டிய பயில்வான்கள் என்முன் கம்புகளால் பலவகைப் பயிற்சிகள், சண்டைகள் முதலியனவற்றைச் செய்து காட்டியதோடு அவர்களுள் அனுபவப்பட்டவன் மூங்கில் கம்பத்தில் வயிற்றோடு பொருத்தப்பட்ட வளையத்துடன் கீழே விழாது பல வித்தைகளைச் செய்தும் காட்டினான். வித்தைகளின் முடிவில் மரங்களோடும் முளைகளோடும் இணைத்துக் கட்டி நிறுத்தப்பட்ட உயரமான மூங்கிலின் மேல் உடலை வளைத்து ஆடும் பலவகை ஆட்டங்கள் நிகழ்த்தப்பட்டன. அதன்மேல் அவன் ஆடியபடி விழாது தன்னைக் காத்துக் கொண்டதோடு முரசினை முழக்கியும் தலைமேல் அடுக்காக மண்சட்டிகளை ஒரு பித்தளைப் பாத்திரத்தின் மேல் வைத்தும் நிறுத்திக் காட்டினான். இந்த வித்தைகளின் போது முழவும் கிளாரினெட்டும் இசைக்கப்பட்டன. வித்தைக்காரர்களுள் ஒரு சிலர் தங்கள் ஆட்டம் நடவாதபோது வாத்தியக் குழுவிலும் கலந்து கொண்டனர்.

பைய்ந்த : Painda

பைதிகளுக்கான மற்றுமொரு பெயர்.

பாக்நாடி : Pākanāti (eastern territory)

பலிசர், கோல்லர், கம்சாலர், காபு, மாலர், தசாகலர் போன்ற தெலுங்குச் சாதிகளின் உட்பிரிவு. கிழக்குப் பக்கத்தார் - கீழை நாட்டவர்- எனப் பொருள்படுவது.

பகி : Paki

கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த துப்புரவுத் தொழில் செய்யும் சாதியார் என மறைத்திரு ஜெ. கெயின் பதிந்துள்ளார்.* இச் சாதியினைச் சேர்ந்தவர்கள் பக்கத்து மாவட்டமான விசாகப்பட்டினத்திலிருந்து வந்தவர்களாவர். சாதித் தொடர்பான விதிகளில் இவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்பவர்கள்.

* இந்தியத் தொல்லியல், VII, 1879. (Ind. Ant., VIII, `1879)

பகி நாடு : Pakinādu

கம்சாலர் முதலான தெலுங்குச் சாதியரின் வட்டார அடிப்படையிலான பிரிவின் பெயர். முன்னர்க் கூறப்பட்ட பாகநாடி என்பதனோடு தொடர்புடையது.

பகிரிதி : Pakirithi

பகிரிதி அல்லது பரிகிரி என்பது வைணவன் எனப் பொருள்படும். சடங்கு நிகழ்ச்சிகளின் போது வைணவர்களின் சின்னமான நாமம் தரிக்கும் பெஸ்தர் சாதியின் உட்பிரிவினருக்கான் பெயர்.

பால் : Pāl (milk)

பால் இடையன் மற்றும் குறும்பன் சாதிக்கான உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. மாலர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம் ஒன்றுக்கும் பெயர் (பார்க்க: ஹாலு).

பலகை : Palakala (planks)

கம்மர்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய குலம்

பாலமலை : Pālamala

பாலமலை திருவாங்கூரைச் சேர்ந்த காணிக்காரரின் ஓர் உட்பிரிவாகப் பதியப்பட்டுள்ளது. பாலமலைத்தில்லோம் என்பது பால்வடியும் மரங்களையுடைய மலை எனப்பொருள்படும். இதுவும் காணிக்காரர்களின் புறமணக்கட்டுப்பாடுடைய குலப்பெயராகும்.

பாலாவிலி : Pālāvili

கோல்லர் சாதியின் ஒரு கோத்திரம். பாலாவிலி எனப்படும் வழிபாட்டுக்குரியதான சிறிய பந்தலினை வீட்டுக்குள் அமைத்துக் கொள்ள இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

பாளையக்காரன் : Pālayakkāran

பார்க்க: முத்ராசன் : **(See: Mutracha)**

பலிகிரி: Paligiri

முத்ராசக்களின் ஓர் உட்பிரிவு

பளிச்சக் (கேடயம்) (கொல்லன்) : Palissa (shield) Kollan

மலபாரைச் சேர்ந்த தோலால் கேடயங்கள் செய்யும் கொல்லன் வகுப்பார். இவர்களைப் பற்றி மலபார் விவரக் குறிப்பில் பதியப் பட்டுள்ளதாவது:- ''தாலிக் கட்டுச் சடங்கின் இறுதி நாளன்று தாலி கட்டிக் கொள்ளும் சிறுமியும் மணவாளனும் குளத்திற்குச் செல்வர். அச் சிறுமி குளத்தில் இறங்கி நின்று தண்ணீரில் மும்முறை மூழ்கி எழுவாள். அவள் அவ்வாறு மூன்றாம் முறை மூழ்கி எழும் போது ஒரு பாண்டிபலி (தென்னங்குருத்து, ஓலை, வாழைத்தண்டு, வாழையிலை ஆகியவற்றால் இணைத்துக் கட்டி ஐந்து திரிகள் கொளுத்தி வைக்கப்பட்ட முக்கோண வடிவிலான தட்டம்) யினைத் தண்ணீரில் நிற்கும் அவளிடம் வீசுவர். இது மிதக்கும் போது இணங்கன் ஒருவன் காளிக்கக்கம் என்ற பாட்டைப் பாடியபடி அதனை இரண்டாக வெட்டுவான். இறுதியில் அச்சிறுமி குளக்கரையில் வைக்கப்பட்டுள்ள தேங்காயினை இரண்டாக உடைப்பாள். அவள் இரண்டடி அடித்த பின் மூன்றாவது அடியில் தேங்காயினை உடைக்க வேண்டும். அவ்வாறு உடைக்க இயலாது போகுமானால் அதனைக் கெட்ட சகுனமாகக் கருதுவர். பளிச்சக் கொல்லர்களிடையேயும் வேறு சில சாதியாரி டையேயும் நாலாம் கலியாணம் எனப்படும் தாலிகட்டுக் கலியாணத்தின் நான்காம் நாள் அதிர்ஷ்டத்தைக் காணக் குலுக்கல் நடைபெறும். இணங்கன் ஒருவன் கட்டப்பட்டுள்ள பொட்டலங்களில் ஒவ்வொன்றை மணவாளன், சிறுமி, தனக்கு எனப் பிரித்துத் தருவான். மணவாளன் தங்கத்தையும் சிறுமி வெள்ளியினையும் பெறுதல் அதிர்ஷ்டமாகக் கருதப்படுகிறது. தென் மலபாரில் தாலிகட்டுச் சடங்குகள் அனைத்திலும் இறுதியில் மணமுறிவினைக் குறிக்கும் சடங்கு ஒன்றும் பெருவழக்காக நடத்தப்படுகிறது. பளிச்சக் கொல்லன்களிடையே இச் சடங்கின்போது மணவாளன் தன் வேட்டியிலிருந்து ஒரு நூலினை எடுத்து 'இதோ! உன் உடன்பிறந்தவனின் அச்சாரம்' எனக் கூறி அதனைச் சிறுமியின் உடன்பிறந்தவனிடம் தர அவன் அதனை இரண்டாக அறுத்து மணவாளனை நோக்கி ஊதிவிடுவான். சில விடங்களில் மணவாளன் சிறுமிக்கு முதல் நாள் ஒரு துணியினை அளிப்பான். இறுதி நாளன்று அதனை இரண்டு துண்டாகக் கிழித்து ஒரு பகுதியினை அவளிடம் தருவான். அல்லது மணவாளனும் சிறுமியின் இணங்கன் ஒருவனும் அதன் இரு முனைகளைப் பிடித்துக் கொண்டவர்களாக மணவாளன் அதனை இரண்டாகக் கிழித்து இரண்டு துண்டுகளையுமே சிறுமியிடம் தருவான்.''

பளியர் : Paliyar

இவர்கள் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மலைப்பளியர் பற்றி மறைத்திரு ஜெ. இ. டிராசி எழுதுவதாவது:- '' பெரியாலு மலைகளின் அடிவாரத்தில் இருக்கும் பளியருடைய ஊருக்கு நான் சென்றிருந்தேன். நான் பார்த்த மக்களுள் இவர்களே மிகவும் தாழ்ந்த இழிநிலையினராகக் கடைத்தேற இயலாதவராக, வருங்காலம் பற்றிய நம்பிக்கையற்றவராகக் காணப்படுபவர்கள். அழகியதொரு சூழலில் அமைந்த சிறியதொரு குடியிருப்பில் சுமார் நாற்பது பேர் இருந்தனர். இவர்கள் குடிசைக்குச் சில அடி தூரத்திற்குள்ளாகவே நல்ல நீரோடை ஒன்று ஓடியபடி இருந்தது. எனினும் இவர்கள் தங்கள் உடல் தூய்மை பேணுவதில் கருத்தற்றவர்களாக விலங்குகளையொப்ப அழுக்குடையவர்களாகவே இருந்தனர். நல்ல வளமான பயிர் விளைவிக்கக்கூடிய நிலம் இவர் களுடைய குடியிருப்பைச் சுற்றிப் பரந்து கிடந்தது. சற்றே முய்ற்சி மேற்கொண்டு நிலத்தைப் பண்படுத்தி நீர் பாய்ச்சினால் தொடர்ந்து நல்ல பயிர் அறுவடை செய்யலாம். எனினும் இவர்கள் கொட்டைகளையும் வேர்களையும் மலைச்சரிவுகளின் மேலே திரட்டும் பிசினையுமே நம்பி வாழ்ந்து வந்தனர். இவர்கள் குடியிருப்புக்களுள் இரண்டு மட்டுமே சமவெளியிலிருந்து ஏழு மைல் தொலை தூரம் உள்ளதாயிருந்தன. முழுதும் புல்லாலான இவர்களுடைய குடிசைகள் ஒரே அறையினையுடையனவாக முன்னும் பின்னும் திறப்பு உடையனவாக இருந்தன. இவர்கள் தலைவன் வயதானவனாகத் தலைமயிர் வெளுத்துப் போய்க் காணப்பட்டான். இரவில் தூங்கும் போது இவனுக்கு மட்டுமே இருபுறமும் நெருப்புப் போட்டுக் கொண்டு அதற்கிடையே படுத்துறங்கும் உரிமை உண்டு. மற்றவர்கள் தங்களுக்கு ஒரு பக்கம் மட்டுமே நெருப்புப் போட்டுக் கொள்ளலாம். இந்த உரிமையினைப் பெற்றுள்ள இவன் குடியிருப்பில் நெருப்பு அணைந்து போகாதவாறு பார்த்துக் கொள்ளும் பொறுப்புக்கும் ஆளாக வேண்டியவனாக உள்ளான். இவர்களிடையே இவன் ஒருவனுக்கே இரண்டு மனைவியரை உடையவனாக இருக்கும் உரிமையும் உள்ளது. இவன் தன் மனைவியருக்கு அந்த நெருப்புக்களை அணையாது காக்கும் பொறுப்பினைக் கொடுத்திருக்கின்றான் என நினைக்கின்றேன். இவன் நிம்மதியாகத் தூங்க இவன் மனைவியர் ஒருவர் மாற்றி ஒருவர் நெருப்பை எரித்தபடி காப்பர். மற்றக் குடும்பங்களில் இரவில் கணவனும் மனைவியும் முறை வைத்துக் கொண்டு தூங்காது நெருப்பினைக் காத்துவர வேண்டும். அழுக்கால் நிரம்பியவர்களாக இருப்பதைப் போலவே இவர்கள் அறியாமையிலும் நிரம்பியவர்களாக

உள்ளனர். வழிபாட்டுக்கு உரியனவாகத் தனித்த இடங்கள் எவையும் இவர்களுக்கு இல்லை. இவர்கள் தங்களைச் சுற்றியுள்ள காடுகளில் வாழும் பேய்களுக்கும் வனத்துறை அலுவலர்களுக்கும் மட்டுமே அஞ்சுவதாகக் கூறினர். கிட்டத்தட்டப் பிறந்த மேனியராகவே திரியும் இவர்கள் உடலில் உள்ள கந்தல்களைப் புல்லாலான கயிறுகளைக் கொண்டு உடலோடு பிணைத்திருந்தனர். 1877-இல் வந்த பஞ்சத்தில் அடிபட்டவர்களைப் போல் காட்சிதரும் இவர்கள் அந்தப் பஞ்சநிலையிலிருந்தும் மீள இயலாதவர்களாக, அதுவே தங்கள் தலைவிதியாக அமைந்துவிட்டதென ஏற்றுக் கொண்டவர்களைப் போலக் காட்சி தந்தனர். நினைவுக்கு எட்டாத காலந்தொட்டு இவர்கள் காடுகளையே தங்கள் உறைவிடமாகக் கொண்டுள்ளனர். எனினும் இவர்களைச் சூழ உள்ள காடுகள் இவர்களுக்கு அங்குச் சுற்றித்திரியும் ஓநாய்களுக்கும் சிரிப்பது போலக் குரலெழுப்பும் கழுதைப் புலிகளுக்கும் கற்றுத் தந்ததைவிட அதிகமாக இவர்களுக்கு ஏதும் கற்றுத் தரவில்லை. இவர்கள் வீட்டு விலங்குகளாக எவற்றையும் வளர்ப்பதாகத் தெரியவில்லை. ஒரு தெரு நாய் கூட இங்குக் காணப்படவில்லை என்பது தான் வியப்பாக உள்ளது. பயிர்த்தொழிலைப் பற்றி அறியாதது போலவே வேட்டையினைப் பற்றியும் இவர்கள் ஏதும் அறியாதவர்களாக உள்ளனர். அழகான சுற்றுச் சூழலில் இவர்கள் தங்கள் குடியிருப்பை அமைத்துக் கொண்டிருந்தாலும் ராபர்ட் பிரௌனிங் தன் கவிதையில் கூறியுள்ள அழகு பற்றிய உணர்வுகளுக்கும் இவர்களுக்கும் எந்த உறவும் இருப்பதாகத் தெரியவில்லை.''

''மதுரையைச் சேர்ந்த புளியர் (பளியர்)களை அவர்கள் தங்கள் குடியிருப்பிலிருந்து பயணிகளிடம் கொஞ்சம் புகையிலையினையும் கந்தல்களையும் இரந்து பெற வெளிப்பட்டு வரும் போதே காணமுடியும். இவற்றிடம் இவர்கள் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக உள்ளனர். குழந்தையைப் பெற்றவுடன் பெண்கள் தங்கள் குழந்தைகளை வெதுவெதுப்பான சாம்பலில் படுக்க வைப்பர் எனக் கூறப்படுகிறது. இது வெப்பம் தரும் உடைகளுக்கும் படுக்கைக்கும் பதிலான ஏற்பாடாகும்'' என 1817-இல் இவர்களைப் பற்றித் திரு. டி. டான்புல் குறித்துள்ளார்.

ஜெனரல் பர்டன் பளியர்களான புளியர் பற்றிக் கூறியுள்ளது வருமாறு:-* வேட்டை விலங்குகளைத் தேடிக் காண்பதில் திறமை வாய்ந்த இவர்கள் வில்லும் அம்பும் வைத்துள்ளனர். சிலரிடம்

* An Indian Olio

துப்பாக்கியும் உள்ளது. வேட்டைக்காகப் போகும் ஒருவனை நான் எதிர்ப்பட்டேன். அவன் தன் தலையில் ஒரு சட்டி நிறையத் தண்ணீரையும் பித்தளைக் கட்டமைப்புடைய துப்பாக்கியினையும் சுமந்தவனாக இருந்தான். அச்சமயம் நல்ல கோடையாக இருந்தமையால் இவன் அத் தண்ணீரைப் பாறையில் உள்ள ஒரு குழியில் கொட்டிவிட்டு அருகே உள்ள புதர் ஒன்றின் மறைவில் இந்தியர்களுக்கே உரிய பொறுமையுடன் அந்தத் தண்ணீரைக் குடிக்க வரும் மான் அல்லது காட்டுப் பன்றி அல்லது மயிலுக்காகக் காத்திருந்தான்.''

''பளியன்கள் குன்னுவன்களின் பரம்பரை அடிமைகளாகவே தொடர்ந்து இருந்து வருகின்றனர். நில அளவீட்டுக் குறிப்புகளின் படி பழனிமலைகளுக்குரிய *பழங்குடிகளான நிலமக்கள் இவர்களே எனத் தெரிகின்றது. உறவினர்கள் அனைவரையும் விருந்துக்கு அழைத்து அவர்கள் முன்னிலையில் மணமகனும் மணமகளும் தாங்கள் வாழ்க்கைத் துணைகளாக இணையப் போவதை அறிவிப்பதே இவர்கள் மணம் தொடர்பான சடங்காக உள்ளது. இவர்கள் குடியிருப்பு ஒன்றில் பெரியம்மை காணப்பட்டால் இவர்கள் உடனே அந்தக் குடியிருப்பைச் சுற்றி வளைத்துத் தடையெழுப்பித் தொற்றுநோய் உள்ள ஊரைச் சேர்ந்தவர்கள் வெளியேறி மற்றப் பகுதிகளுக்குச் செல்ல இயலாதபடி செய்கின்றனர். அந்தக் குடியிருப்பைச் சேர்ந்தவர்களும் உடனே தங்கள் குடிசைகளை விட்டு வெளியேறிக் குறிப்பிட்ட காலம் வெட்ட வெளியில் தங்கி வாழ்வதை மேற்கொள்கின்றனர். நோயால் தாக்கப்பட்டவர்கள் தங்கள் தலைவிதியினைத் தாங்களே முடிவு செய்து கொள்ளும் படியாகத் தனித்து விடப்படுகின்றனர். இந்தத் தீங்கு, தெய்வங்களின் கோபத்தால் வருகின்றது என இவர்கள் நம்புகின்றனர். இவர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர்.'' என மதுரை மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட விவரக் குறிப்பில் பளியர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளவை வருமாறு:- ''பழனிமலையின் மேற்பள்ளத்தாக்கிலும் வருஷ நாட்டுப் பள்ளத்தாக்கிலும் காடுகளிடையே வாழும் மிகப் பிற்பட்ட வகுப்பார் பளியர்கள். தனிப்பட்ட உச்சரிப்புடன் இவர்கள் பேசும் தமிழை மற்றவர்கள் புரிந்து கொள்வது கடினமாகும்.

புலையன்களைப் போல நாகரிகத்தில் இவர்கள் முன்னேற்றம் பெறாதவர்களாயினும் மாட்டிறைச்சியை உண்ணும் பழக்கம் இல்லாத காரணத்தால் இவர்கள் தீட்டு உண்டாக்கும் சாதியாராகக்

* ஆங்கிலேயர் கொடைக்கானலை பழனிமலை என்றே குறித்து வந்துள்ளனர்.

கருதப்படுவதில்லை. சிலபோது புல்லால் குடிசைகளை அமைத்துக் கொள்ளும் இவர்கள் மரங்களின் மேலிடப்பட்ட மேடைகளிலும் குகைகளிலும் பாறைகளின் அடியிலும் பெரும்பாலும் தங்கி வாழ்ந்து கொண்டிருக்கக் காணலாம். மிகக் குறைவான அழுக்கான கந்தல்களையே இவர்கள் உடுக்கின்றனர். சிலபோது இலைகளையும் புல்லையுங்கூட ஆடையாகத் தரிக்கின்றனர். காட்டு வள்ளிக்கிழங்கு, இலைகள், தேன் ஆகியனவற்றையே இவர்கள் உண்டு வாழ்கின்றனர். தரையில் ஒரு குழியில் கிழங்கினையிட்டு அதன் மீது குச்சிகளைக் கவித்து நெருப்பிட்டு வேகவைத்து உண்கின்றனர். இரவில் காட்டுவிலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள நெருப்பினைத் தொடர்ந்து எரிய விட்டபடியிருப்பர். ஒரு வட்டாரத்தில் பளியர் உள்ளனர் என்பதனை இவ்வாறு எரியும் நெருப்பைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். மற்றவர்களோடு கலந்து பழக விரும்பாது ஒதுங்கி வாழ விரும்புபவர்கள் இவர்கள் என்பதே இவர்கள் குடியிருப்பை எளிதில் அறிந்து கொள்வது இயலாததாவதற்குக் காரணமாகின்றது. கருங்கல்லையும் எஃகுத் துண்டையும் கொண்டு இலவம் பஞ்சின் சுளைகளை அவற்றிடையே வைத்து நெருப்பு உண்டாக்குவர். சடங்குகள் எவையும் இன்றி, ஆணின் பொறுப்பு உணவைத் தேடிவருதல், பெண்ணின் பொறுப்பு அதனைச் சமைத்தல் என்ற உடன்பாட்டின் அடிப்படையில் இவர்கள் கணவன் மனைவியராகக் கூடி வாழ்கின்றனர். இவர்களுள் ஒருவன் இறந்து போனால் மற்றவர்கள் அந்த உடலை அங்கேயே கிடத்தியவர்களாகச் சில மாதங்கள் வேறிடங்களில் சென்று தங்கி வாழ்வர்.''

பழனிமலையைச் சேர்ந்த பளியர்களைப் பற்றிய விரிவான விவரங்களை மறைத்திரு எப்.டாஹ்மென் அண்மையில் வெளியிட்டுள்ளார்.* பின்வரும் குறிப்புகளுக்கு நான் அவருக்கு கடப்பாடுடையவனாவேன்:- 'பளியன்கள் நாடோடிகளாகத் திரியும் பழங்குடிகள். இவர்கள் சிறு குழுக்களாகக் காடுகள் அடர்ந்துள்ள பழனிமலையின் மேற்பகுதியில் அமைந்த பீடபூமியினை அடுத்துள்ள பள்ளத்தாக்குகளில் திரிந்தவர்களாக இருப்பர். அப்பகுதிகளில் இவர்கள் வேட்டையில் கிடைப்பனவற்றோடு காட்டு வள்ளி முதலிய கிழங்குகள் இலைகள், காட்டுப் பழங்கள் (காட்டு ஈச்சம் முதலியன) முதலியனவற்றை உண்டு வாழ்கின்றனர். சிலபோது இவர்கள் குன்னுவன்கள் எனப்படும் மண்ணாடி கிராமத்தவர்களின் கீழும்

* (Anthropos, III, 1908)

பணிபுரிகின்றனர். மரப்பொந்து ஒன்றில் தேன் கூட்டினைக் காண நேர்ந்தால் அது இவர்களுக்குச் சிறந்த சுவை விருந்தாகும். புகையூட்டித் தேனீக்களை ஓட்டிய உடனே அவர்கள் வெறி கொண்டவர்களாகத் தேன் கூட்டினைப் பறித்து அவ்விடத்திலேயே மெழுகு முதலியவற்றோடு கூட விழுங்கத் தொடங்குவர். நோய் நொடிகளுக்கு இவர்கள் தங்களுடைய மருந்துகளையே பயன்படுத்துகின்றனர். சில புளியர்கள் மருந்தாகப் பயன்படும் வேர்கள், மூலிகைகள் ஆகியனவற்றைப் பற்றி மற்றவர்கள் அவர்களிடமிருந்து உதவிபெறும் அளவுக்குத் தெரிந்து வைத்துள்ளனர். பெரியஉறிகட்டி வேர் எனப்படும் வேரிலிருந்து பேதி மருந்தாகப் பயன்படும் ஒரு வெள்ளைப் பொடியினை இவர்கள் தயாரிக்கின்றனர். பாம்புக்கடிக்காக நற்றுவல்லி வேர் என்ற செடியின் இலைகளை இவர்கள் எப்பொழுதும் உடன் எடுத்துச் செல்வதோடு அது பாம்புக் கடிக்குச் சிறந்த முறிவு எனவும் கூறுகின்றனர். ஒருவனைப் பாம்பு கடித்தவுடனே அவன் இந்த இலைகளை மென்று தின்பதோடு பாம்புக் கடிவாயிலும் கசக்கி வைப்பான். இவர்கள் பொறுமையாகக் காத்திருந்தும் தந்திரத்தைக் கடைப்பிடித்தும் வேட்டையில் வெற்றி பெறுகின்றனர். மான், பன்றி ஆகியனவற்றைக் குழிகள் தோண்டி அவற்றை இலை தழைகளால் மூடி வைத்து அவற்றுள் வீழச் செய்து அகப்படுத்துவது இவர்கள் பெரிய விலங்குகளை வேட்டையாடும் முறைகளில் ஒன்றாகும். அந்தக் குழிகளில் விலங்குகள் விழுந்தபின் தடியால் அடித்தோ அரிவாளால் வெட்டியோ அவற்றைக் கொல்வர். பெரிய கற்களை மேடை போல அவற்றின் ஒரு முனை பாறைகளில் படிந்திருக்குமாறும் மற்றொரு முனை கவையாக உள்ள குச்சிகளில் தாங்கப்பட்டிருக்கும் படியும் அமைப்பர். அவற்றைத் தாங்கும் குச்சிகளில் உறுதியான கயிற்றினை அது சிறிது அசைந்தாலும் குச்சிகள் சாய்ந்து மேடை அமைப்புடைய கற்கள் சரிந்து விழும்படியாக வைத்திருப்பர். அந்தக் கயிற்றில் கட்டிப் போட்டிருக்கும் உணவைத் தின்ன வரும் விலங்குகள் கயிற்றை அசைக்காமல் உணவினைத் தொடமுடியாது. அவ்வாறு தொட்டவுடன் குச்சிகள் சரிய மேலே உள்ள கற்கள் சரிந்து அந்த விலங்குகளை அகப்படுத்தும். சிறிய விலங்குகளான முயல், காட் டுக்கோழி முதலியனவற்றை அகப்படுத்த இதே அமைப்பிலான சிறிய பொறிகளை அமைப்பர். புகைபோட்டு மரப்பொந்துகளிலிருந்து பறக்கும் அணில்களை வெளியேறச் செய்வர். முள்ளம்பன்றிகளை வங்கிகளிலிருந்து வெளியேற்றிப் பிடிக்கவோ தடிகளால் அடித்துக் கொல்லவோ செய்வர். பளியன்கள் கொல்லும் விலங்குகளிலிருந்து முதலில் வழியும் குருதித் துளிகளை அவர்கள் தங்கள் தெய்வத்திற்கு உரியதாக்குவர். நல்ல வேட்டை விலங்கு

கிடைப்பதைப் பசியால் வாடும் பளியன்கள் பெரிய அதிர்ஷ்டமாகக் கருதுவர். இவ்வாறு வேட்டையில் கிடைக்கும் இறைச்சியினைக் குடியிருப்பில் உள்ள அனைவரும் தங்களுள் பங்கிட்டுக் கொள்வர். விலங்கின் தோல் மதிப்பு வாய்ந்ததாக இருப்பின் அதனைத் தேவையான பண்டங்களைப் பெற பண்டமாற்றுச் செய்யவோ தங்கள் தலைவனுக்குப் பரிசாக அளிக்கவோ பாதுகாத்து வைப்பர். தமிழில் கருகங்கொடி என அழைக்கப்படும் கொடியின் இலைகளைக் கசக்கி நீரில் வீசுவர். சிறிது நேரத்தில் மீன்கள் தண்ணீரில் மேலே வந்து மிதக்கும். நயமற்றனவாக அமைக்கப்பட்ட தூண்டில்களையும் மீன்களைப் பிடிக்கப் பயன்படுத்துகின்றனர். வேட்டைக்கோ கூலிவேலைக்கோ போகாத ஓய்வு நேரங்களில் சிறிய பறவைக் கூடுகளை இவர்கள் செய்கின்றனர். ஓய்வுநேரத்தில் நயமில்லாத பாய்களையோ கூடைகளையோ கூடப் பின்னுவர். இவ்வாறு இவர்கள் படைக்கும் சின்னஞ் சிறு பொருட்கள் இந்திய வடிவமைப்பிலானவை. அவற்றுக்குச் சிவப்பு, பச்சை வண்ணத்தில் தாவரச் சாயங்களைப் பூசுவர். இவற்றையும் வேட்டையாடிய விலங்குகளின் தோலினையும் தம்மெர் மரத்திலிருந்து சேகரித்த பிசினையும் சமவெளியில் உள்ளவர்களுக்கோ மண்ணாடிகளுக்கோ விற்றுத் தேவையான இன்றியமையாத பொருள்களைப் பெறுவர்.''

பளியன்களின் சமயமும் நம்பிக்கைகளும் தொடர்பாகத் மறைத்திரு எப். டஹ்மென் பின்வருமாறு எழுதுகின்றார். ''இவர்களுடைய முக்கியமான சமயச் சடங்கு மார்ச் மாதத்தில் தொடங்குகின்றது. மயாண்டி என்ற தெய்வத்தை ஏதேனும் தனித்த வடிவ அமைப்பு உடையதாகக் கிடைக்கும் கல்லினை வைத்து வழிபடுவர். அது பெரும்பாலும் பாம்பு வடிவம் உடையதாக இருக்கும். அக் கல்லினைத் தெய்வமாகக் கருதி வழிபடுகிறார்கள் என நான் கூறியதற்குக் காரணம் பளியர் கல்லினையே தெய்வமாகப் போற்றுவதில்லை என்பதாலாகும். அத்தெய்வம் எங்கோ தங்களுக்குத் தெரியாத இடத்தில் வாழ்வதாக இவர்கள் கருதுகின்றனர். அத் தெய்வத்தின் பிரதிநிதியாக இருக்கும் கல்லினை ஒரு மரத்தின் அடியிலோ கூரைக் கொட்டகையிலோ வைத்து வழிபடுவர். அத் தெய்வம் உள்ள இடத்தில் குறிப்பிட்ட நாளில் பளியன்கள் அனைவரும் பொழுது புலருமுன் கூடுவர். அந்தக் கல்லின் முன் நெருப்பு மூட்டப்படும். நல்லதொரு சேவலினைக் கொம்பு, முழவு முதலியவற்றின் இசைக்கிடையில் கழுத்தை வெட்டிப் பலியிட்டு அதனுடைய குருதியினை நெருப்பில் சில துளிகள் விடுவர். சேவலின்

தலை ஒரே வீச்சில் வெட்டப்பட வேண்டும். அவ்வாறு வெட்டப்பட்டால் தெய்வம் இது வரை நிகழ்ந்தவற்றில் திருப்தியுறும் எனவும் வருங்காலத் தில் பாதுகாப்பினைத் தரும் எனவும் நம்புவர். அவ்வாறு ஒரு வீச்சு வீசிய பின் சேவலின் தலை உடலோடு ஒட்டித் தொங்குமானால் அது வரவுள்ள ஆண்டில் நிகழவுள்ள ஆபத்துக்களுக்கு அறிகுறியாகக் கருதப்படும். இந்தப் புனிதப் பலிக்கு ஓர் அரிவாளையே பயன்படுத்துகின்றனர். அதனை இந்த ஒரு பலிக்கு அன்றி வேறு பணிக்குப் பயன்படுத்த மாட்டார்கள். மற்றச் சாதியார் பில்லிசூனியம், மாந்திரீகம் ஆகியனவற்றைச் செய்யும் சக்தி பளியன்களுக்கு உள்ளது எனக் கருதுகின்றனர். பளியன்களும் அத்தகைய நம்பிக்கை உடையவர்களாக உள்ளனர். கொடிய காட்டு விலங்குகளிடமிருந்து குறிப்பாகச் சிறுத்தையிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளப் பளியன்கள் கையாளுகின்ற பின்வரும் வழியினை இதற்குச் சான்றாகக் கூறலாம். காட்டு விலங்கான சிறுத்தையின் பிடியிலிருந்து தப்பிப் பாதுகாப்பாகத் தங்கியிருக்க விரும்பும் இடத்தின் நான்கு மூலைகளிலும் நான்கு நரிகளின் வால்களைப் புதைத்து வைப்பர். இதனை அவர்கள் போதுமான பாதுகாப்பாகக் கருதுகின்றனர். இவ்வாறு எல்லை வகுக்கப்பட்ட இடத்தில் சிறுத்தைகள் நுழைந்தாலும் அவற்றின் வாய் கட்டப்படு விட்டதால் அவை பளியன்களுக்கு எத்தகைய தீங்கும் இழைக்கா என இவர்கள் நம்புகின்றனர். '' மறைத்திரு எப். டஹ்மென் பளியன்கள் சில சமயங்களில் பழனிமலையில் உள்ள இந்துக்களின் கோயிலான சுப்பிரமணியர் கோயிலுக்குச் செல்வதாகக் குறித்துள்ளார்.

செங்கோட்டைக்கு அருகே திருவாங்கூர் எல்லையில் வாழும் பளியன்கள் பற்றித் திரு ஜி.எப். டிபென்ஹ கூறுவதாவது:* ''நினைவுக்கு எட்டாத காலத்தில் இலைவன் ஒருவன் பஞ்சம் வந்தபோது மலைப்பகுதிகளில் வந்து தங்கினான். அங்கு அவன் பளியர் சாதிப் பெண் ஒருத்தியை மனைவியாக்கிக் கொள்ள அந்த இருவரின் சந்ததியினராகத் தோன்றியவர்களே பளியன்கள் என இவர்கள் கூறுகின்றனர். பளியர் இலைவரைவிடச் சிறிதே சாதியில் தாழ்ந்தவர்கள். இலைவர், இலைவாணியர் (வெற்றிலை பயிரிடுவோர்) ஆகியோருடைய இல்லங்களில் பளியர் நுழைய அனுமதிக்கப் படுகின்றனர் சிலசமயங்களில் மறவர்கள் இல்லங்களிலும் நுழைய அனுமதிக்கின் -றனர். சூழலுக்கு ஏற்பச் சமூகக் கட்டுப்பாடுகள் நெகிழ்ந்ததாக இருக்கும் மலைப் பகுதிகளில் மேலே சுட்டப்பட்ட உயர்சாதியார் பளியர்

* இந்தியத் தொல்லியல், XXX, 1902. (2nd. Ant., XXX, 1902)

தரும் தண்ணீரைப் பெற்றுக் குடிப்பதோடு பளியர் சுட்டுத் தரும் கிழங்குகளைக் கூட உண்பர். பளியர் முல்லை நிலஞ்சார்ந்த தெய்வங்களை மிக மதித்துப் போற்றி வழிபடுகின்றனர் . கறுப்பு சாமியே இவர்கள் குல தெய்வம். காட்டில் தேனெடுக்கும் போது நிறையத் தேன் கிடைக்குமானால் சில கோயில்களில் அதனைப் படைப்பர். தங்களைச் சைவர்கள் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் குற்றாலத்தில் நடக்கும் ஆடி அமாவாசை விழாச்சடங்குகளில் கலந்து கொள்வர். பளியர் எதனையும்- சர்க்கரை வள்ளிக் கிழங்கு உட்பட - பயிரிடுவதில்லை. ஒரிரு தெரு நாய்களைத் தவிர வேறு விலங்குகள் எவற்றையும் இவர்கள் வளர்ப்பதில்லை. கோடரி, கத்தி, சட்டி ஆகியனவே இவர்கள் தங்களுடன் எடுத்துச் செல்லும் பொருள்கள். தேனெடுப்பதில் திறமை சாலிகளான இவர்கள் உயர்ந்தோங்கிய மரங்களிலும் செங்குத்தான பாறைகளிலும் உடலுக்கு ஏற்படும் ஆபத்தைப் பற்றிக் கவலைப்படாது உயர ஏறித்தேனெடுப்பர் காட்டுப்பனையிலிருந்து கீழே விழுந்து கிடக்கும் பசைத் தன்மை வாய்ந்த மாவுப் பொருள் இவர்களுக்கு நல்லுணவாக அமைகின்றது. உடும்பு, ஆமை, தேன்கூடு ஆகியன இவர்கள் சுவையானவை என மதித்துப் போற்றும் உணவு வகைகளாம்.''

வட திருவாங்கூரில் நான் நேரில் கண்டு ஆய்ந்த பளியன்கள் மலையடிவாரங்களில் காடுகளில் வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய தனித்த குடியிருப்புகள் ஒன்றுக்கொன்று பல மைல்கள் தொலைவில் அமைந்திருந்தன. தமிழை இழுத்தபடி தனித்ததொரு வகையில் பேசும் இவர்கள் பேச்சு இருளரை நினைவூட்டுவதாக அமைந்தது. கல்வியற்ற இவர்களுள் ஒரு சிலரே பத்துவரை எண்ணத் தெரிந்தவர்கள். ஒருத்தி தன்னுடைய பெயரையே மறந்தவளாக இருந்தாள். திருமணத்தின் போது மணமகளின் தந்தை அவள் கையினைப் பற்றி மணமகன் கையில் தந்து, ''நான் இவளை உனக்குத் தருகின்றேன். கிழங்கு, இலை முதலியனவற்றை இவளுக்குத் தந்து காப்பாற்று'' எனக் கூறுவான். மணமகள் அல்லது மணமகனுடைய தகுதியினை அவளோ அவனோ திரட்டும் கிழங்கின் அளவினைக் கொண்டு மதிப்பிடுவர். கணவனை இழந்த ஒருத்தி மறுமணம் செய்து கொள்ளவில்லையாயின் குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் அவளுக்குத் தேவையான கிழங்கு முதலிய காட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொடுத்து உதவுவர். திருமண உறவுகள் குடியிருப்புக்கு உள்ளாகவே மேற்கொள்ளப்படுவதே வழக்கம். இளைஞர்களுக்கு ஏற்ற வயதுடைய மணமகள் குடியிருப்பில் இல்லாது போவதால் சில சமயங்களில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஒரு

குடியிருப்பில் உடன்பிறந்தோர் இருவர் தக்க மணமகள்கள் கிடைக்காத காரணத்தால் இருவரும் ஒருத்திக்கே கணவர்களாக இருந்து வருகின்றனர். எதிர்பாராது மேற்கொள்ளப்பட்டதான இந்தப் பழக்கம் இனி இந்தப் பழங்குடியினரிடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கமாக அமைந்துவிட வாய்ப்பு உள்ளதா என்பதனைத் தொடர்ந்து கண்காணித்து வருதல் ஆய்வாளர்களுக்கு ஆர்வமூட்டுவதாக அமையலாம். குடியிருப்புக்கு உள்ளாகவே மணஉறவு கொள்ளவேண்டும் என்ற விதிக்கு விலக்காகப் பளியர் குழுவினர் கண்டமநாய்க்கனூரில் உள்ள காடுகளிலிருந்து அய்யனார் கோவில் காடுகளுக்கு வந்து சேர்ந்து அப்பகுதியினைச் சேர்ந்த இனத்தவர்களோடு மணஉறவு கொண்டு அவர்களோடு இணைந்தவர்களாகிவிட்டனர் . பளியன்கள் மற்றச் சாதியாரைத் தங்கள் சாதியில் சேர்த்துக் கொள்கின்றனர். ஒரு பளியப் பெண்ணோடு உடல் உறவு கொண்டவனாக மறவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் வழி அவன் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டாள். இத்தகைய நாகரிக உலகோடான உறவுகளால் காடுவாழ் பழங்குடிகளின் இனத்தூய்மை கலப்புடையதாக மாற அவர்களுடைய மூக்கின் நீள அகல விகித அளவு குறைந்ததாகி அது அகன்ற மூக்கமைப்பிலிருந்து குறுகிய நீண்ட மூக்கு அமைப்பு உடையதாகி விடுகின்றது.

திருநெல்வேலிப் பளியன்கள் சுப்பிரமணியரின் மனைவியாகிய வள்ளி பளிய சாதியினைச் சேர்ந்தவள் எனக் கூறுகின்றனர். இவர்கள் தீட்டுப்படுத்தாத சாதியாராகையால் அழகர் கோயிலில் உள்ள வைணவக் கோயிலில் இரவுக் காவலர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர். இதற்கு ஊதியமாகச் சோறுமட்டுமே போடப்படுகிறது. வனத்துறையினருக்காக இவர்கள் கர்ப்பூரவல்லி, கடுக்காய், தேன், மெழுகு முதலியனவற்றைச் சேகரித்துத் தருகின்றனர். இவற்றை ஒரு ஒப்பந்தக்காரர் பெற்றுக் கொண்டு இவர்களுக்குத் தேவையான அரிசி, புகையிலை, வெற்றிலை பாக்கு,மிளகாய், புளி உப்பு ஆகியனவற்றை வழங்குவார். இவர்கள் அத்தகைய ஒப்பந்தக்காரரின் கட்டளைக்கு மறுப்பேதும் கூறாது உடனே கீழ்ப்படிவர். அத்தகைய ஒப்பந்தக்காரர் ஒருவரின் உதவியாலேயே நான் இவர்களைப் பேட்டி காணவும் உடல் அளவுகளை எடுத்துக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது. அதற்காக நான் இவர்களுக்கு ஒரு விருந்து தந்தேன். நானிட்ட சோறினையும் காய்கறிகளையும் மூக்குமுட்டத் தின்ற இவர்கள் அந்த விருந்தில் இறைச்சியில்லை என்பதாலும்,நான் இவர்களுக்குப் புதிய கோவணம் வழங்கவில்லை என்பதாலும் திருப்தியற்றவர்களாகவே இருந்தனர். அவர்களிடம் நான் அழுக்குக் கோவணத்தையும் சிவப்புத் துணித் தலைப்பாகையினையும் ஒதுக்கிவிட்டு அவர்கள் மூதாதையரைப்

போல ஏன் இலைதழைகளை அணியக் கூடாது எனக் கேட்டபோது அதற்கு அவர்கள் சிரித்து மழுப்பிவிட்டனர். அடுத்து ஒளிப்படத்திற்காக நிற்கும் அவர்கள் உயர்ந்த சாதியாரைப் போலச் சந்தனம் பூசிக் கொண்டவர்களாகக் காட்சித்தர ஒருவரோடு ஒருவர் சந்தனக் குழம்பிற்காக அடித்து மோதிக் கொண்டனர். ஒரு கிறித்தவச்சபையார் ஒருமுறை பளியருக்குத் தந்த விருந்தில் வெற்றிலையையும் புகையிலையையும் சாப்பாட்டுக்கு அருகே வைத்தமையால் அச்செயல் அந்த விருந்தின் சிறப்பினைச் சீர் குலைத்துவிட்டது. இவ்வாறு சாப்பாட்டருகே வெற்றிலைப் பாக்கினைப் புதைகுழியில் இறந்தவர்களுக்கு வைப்பதே இவர்களிடையே வழக்கம். ஆகையால் இதனை இவர்கள் தீங்கு நிகழ்வதற்கான அறிகுறியாகக் கருதினர். மாட்டிறைச்சியினைத் தின்னும் வழக்கம் உண்டா என்ற என் கேள்வி அவர்களுக்கு எரிச்சலையூட்டியது. வயதான மூதாட்டி ஒருத்தி கூட இக்கேள்வியால் கலவரமுற்றவளாக '' நீங்கள் கேட்ட மற்ற கேள்விகள் நியாயமானவை. இந்தக் கேள்வியினை கேட்டிருக்கக் கூடாது'' எனக் கூறினாள். பளியன் பசு அல்லது எருமையின் பிணத்தை ஓடையின் அருகே காண்பானாயின் அந்த இடத்தை நெடுங்காலம் நெருங்காதவனாக ஒதுங்கி விடுவான். தோலினைத் தொட இவர்கள் உடன்படுவதில்லை. எனது ஒளிப்படக் கருவியில் தோலாலான வார் இணைக்கப்பட்டிருந்தது என்ற காரணத்தால் இவர்களுள் ஒருவன் அதனைத் தூக்கி வர மறுத்துவிட்டான்.

படிக்கல்லுக்கும் எஃகுத்துண்டுக்கும் இடையே இலவம் பஞ்சின் சுளையினை வைத்துக் கொட்டி இவர்கள் நெருப்பு உண்டாக்குகின்றனர். வலையினையோ பொறிகளையோ கருவிகளையோ பயன்படுத்தி விலங்குகள், பறவைகள், மீன்கள் ஆகியவற்றைப் பிடிக்க இவர்களுக்கு வழியோ வாய்ப்போ இல்லை. காட்டில் இறந்து கிடக்கும் மானையோ ஆட்டையோ எதிர்ப்படுவார்களாயின் அதனை நெருப்பில் வாட்டி உண்பர். வயல் எலிகளின் வங்கில் புகையிட்டு வெளிப்படுத்தியோ தங்கள் குச்சிகளால் வங்கினைத் தோண்டிப் பிடித்தோ அவற்றை உண்பர். குழந்தைகள் தின்ன நண்டுகளைப் பிடித்துத் தருவர். ஒரு குச்சியின் முனையின் துண்டுதுணி ஒன்றினைக் கட்டி அதனை வங்கில் நுழைக்க நண்டு தன் நகங்கள்ால் துணியினைப் பற்றிக் கொள்ளும். பிறகு குச்சியோடு வரும்படியாக அதனை வெளிப்படுத்துவர். காட்டுவிலங்குகளிடம் அச்சம் அற்றவர்களாக இவர்கள் உரக்கக் கத்தியும் கைகளைக் கொட்டியும் கற்களைப் பள்ளத்தாக்கில் உருட்டியும் அவற்றை விரட்டுவர். ஒரு குகையில் தன் மனைவியோடும் குழந்தைகளோடும்

தூங்கிக் கொண்டிருந்த ஒருவனைப் புலி பிட்டத்திலும் தொடையிலும் கடித்துக் குதறியிருப்பதை நான் கண்டேன் . கோடைக் காலத்தில் இயற்கையாக அமைந்துள்ள குகைகளிலும் பாறைகளிடையேயான இடைவெளியிலும் வாழ்க்கை நடத்தும் இவர்கள் மழைக்காலத்தில் தரையில் கழிகளை நட்டுப் புல்லால் கூரைக் கொட்டகை அமைத்துத் தங்கி வாழ்வர். அதனடியில் வெப்பம் தருவதற்காகவும் காட்டு விலங்குகள் நெருங்காதிருப்பதற்காகவும் நெருப்பு மூட்டி எரித்தபடியிருப்பர். குடங்காக உள்ள அடிமரங்களை ஒருபக்கம் அரிவாளால் குடைந்து வெட்டித் தங்குவதற்கான தற்காலிகமான இடவசதி செய்து கொள்வதில் இவர்கள் கை தேர்ந்தவர்கள். பெருமழை பெய்யும்போது இத்தகைய மரப்பொந்துகளில் இவர்கள் நனையாதபடி பாதுகாவலுடன் நிற்க ஒழுகும் குடையின் அடியிலோ மாமரத்தின் அடியிலோ நாம் நனைந்து சீரழிந்தவர்களாக நிற்போம்.

தமிழர்களிடையே காணப்படுவதைப் போலவே திருநெல்வேலி பளியன்களிடையேயும் சவரி என்ற பெயர் பெருவழக்காக உள்ளது. இதனைச் சேவியர் என்ற பெயரின் சிதைந்த வடிவம் என்பர். சவரி அல்லது சபரி என்பது சிவனுக்கும் பார்வதிக்கும் உரிய பெயராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. திருவாங்கூர் எல்லையில் சவரிமலையன் என்ற கோயில் உள்ளது. ரோமன் கத்தோலிக்கர்கள் புனிதர் சேவியருக்குத் திருவிழா எடுக்கும் சமயத்தில்தான் அக்கோயிலிலும் திருவிழாக் கொண்டாடப்படுகின்றது. பளியர் பெண்கள் ஐரோப்பியர் முன்னிலையில் மருண்டு ஒதுங்கியவர்களாக நிற்பர். குதிரைகளைக் கண்டால் இவர்கள் அஞ்சும் இயல்பினர். ஒரு குதிரையினைக் கண்டால் மலையளவு உயரமுள்ள யானையினைப் போன்று அது காட்டினையே புகுந்து அதம் பண்ணிவிடக் கூடியதாக உள்ளது என இவர்கள் அதனை வருணிப்பர். குழந்தைகளைத் துணித்தூளியில் இடுக்கிச் செல்லும் பழக்கம் இவர்களிடையே இல்லை. மகப்பேற்றின்போது பாறை ஒன்றின்மீது கால்களை ஊன்றி அமர்வது இவர்கள் வழக்கம். பளியர்கள் பலர்காட்டில் நிலவும் காய்ச்சலுக்கு ஆட்பட்டவர்களாக உள்ளனர். இதற்குப் பாதுகாப்பாக இவர்கள் மஞ்சள் ஒன்றினைக் கழுத்தில் கட்டியிருப்பர். இறந்தவர்களைப் புதைக்கும் இவர்கள் புதைகுழியின் மீது ஒரு கல்லினை வைக்கின்றனர். அவ்விடத்திற்கு மீண்டும் செல்வதில்லை. மற்ற ஆதிகாலப் பழங்குடிகளைப் போலவே பளியர்களும் குள்ளமானவர்களாகவும் நீண்ட தலையினையுடைவர்களாகவும் உள்ளனர். பழங்குடியினத்தவர்களுக்குரிய தொன்மையான மூக்கின் அமைப்பு இன்றும் சில்ரிடம் தெளிவாகப்

புலனாகக் காணலாம்.

இவர்களின் சராசரி உயரம் :150.9 செ.மீ.

மூக்கின் நீள அகல விகிதத் தகவு எண் : 83 (மேலளவு 100)

பள்ளர் : Pallar

1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில், '' பள்ளர் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி,மதுரை,திருநெல்வேலி மாவட்டங்களில் சிறப்பாகக் காணப்படும் பயிர்த்தொழில் செய்யும் கூலியாட்கள்; சேலம் கோயமுத்தூர் மாவட்டங்களிலும் இவர்கள் ஓரளவு மிகுதியாகக் காணப்படுகின்றனர். எஞ்சிய தமிழ் மாவட்டங்களில் இவர்கள் மிகச் சிறிய எண்ணிக்கையினராகவே உள்ளனர்.'' எனக் கூறப்பட்டுள்ளது.

குழி எனப் பொருள்படும் பள்ளம் என்ற சொல்லில் இருந்து இப்பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. தொடக்கத்தில் சாதிகள் தோற்றுவிக்கப்பட்ட சமயத்தில் இவர்கள் பள்ளமான இடத்தில் நின்றிருந்தவர்கள் என்பர். இந்தப் பெயர் நஞ்சையில் பயிரிடுகையோடு தொடர்புடையது என்றும் கூறுவர். அதில் இவர்கள் திறன் மிக்கவர்கள். 1868 - ஆம் ஆண்டிற்குரிய மதுரை மாவட்டக் கையேட்டில் பள்ளர் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:- '' எண்ணிக்கையில் மிகுந்தவர்களாயினும் மிகத் தாழ்ந்த நிலையில் மற்றவர்கள் இகழ்ச்சிக்கு உள்ளாகும் சாதியரான இவர்கள் பறையரை விடவும் மட்டுமே உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். வளம் படைத்த தமிழ்நாட்டவர் நிலங்களை உழுதலே இவர்கள் முக்கியத் தொழில். பெயரளவில் உரிமையு -டையவர்களாக இருப்பினும் உண்மையில் இவர்கள் அடிமை என்ற சொல்லுக்குத் தக்க சான்றாகத் திகழும் வகையில் பசியின் கொடுமையினைப் போக்கிக் கொள்ள ஒரு பிடி தானியத்திற்காகவும் உடலை ஒரு பகுதியே மறைக்கும் கந்தலுக்காகவும் வியர்வை வழிய உழைக்க வேண்டியவர்களாக உள்ளனர். ஒவ்வொரு கிராமத்திலும் வேளாளர் மற்றும் பிற உயர்ந்த சாதியார் நலத்திற்காக இவர்கள் பறையர்களோடு கூடப் பொறுமையாக வருந்தி உழைத்தபடி இருக்கக் காணலாம். சமூகத்தின் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் இவர்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்வதில்லை. கிராம நத்தத்திற்குள் இவர்கள் குடியிருக்க அனுமதிக்கப்படுவதில்லை. பள்ளச்சேரி என்ற தனித்த பகுதியில் ஓரளவு ஒதுக்குப்புறமாகப் பறையர் சேரியினை அடுத்து இவர்கள் குடியிருக்கும் குடிசைகள் அமைந்திருக்கும். சூத்திரன் ஒருவன் பிராமணப் பெண்ணோடு கொண்ட உடல் உறவின் வழித்

தோன்றியவர்கள் பள்ளர் எனச் சிலர் கூறுகின்றனர். தேவேந்திரன் வேளாளருக்கு உழைப்பதற்காக இவர்களைப் படைத்ததாக மற்றவர்கள் கூறுவர். அது எப்படியிருப்பினும் தொடக்கக் காலத்தில் இவர்கள் வேளாளர்களின் அடிமைகளாக இருந்ததோடு அவர்கள் தங்களுடன் இவர்களைப் பாண்டி மண்டலத்திற்குக் கொண்டு வந்துள்ளனர் என்பது உறுதி. பள்ளர் சிலர் கள்ளரைப் போலவே தங்களையும் இந்திரன் சந்ததியினர் எனக் கூறிக் கொள்கின்றனர். இதன் அடையாளமாக இவர்கள் சாதியினைச் சேர்ந்த மணப்பெண்கள் மலர் மாலை அணியும் பழக்கம் உள்ளது. மாட்டிறைச்சியினை உண்ணாத காரணத்தால் இவர்கள் தங்களைப் பறையர், சக்கிலியர் சாதியினரை விட உயர்ந்தவர்களாகக் கருதுகின்றனர்.

1883 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டக் கையேட்டில் இவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:-''பள்ளரும் பறையரும் தங்களுக்குள் ஒருவரை விட ஒருவர் உயர்ந்தவர் எனக் கூறிக்கொண்டு சண்டையிடும் சாதியார். சாதி உரிமைகள் தொடர்பாக இவர்களிடையே என்றும் முடிவுறாததான தீர்க்க இயலாத பகை இருந்து வருகின்றது. மருத நிலம் சார்ந்த கூலிகளான இவர்கள் நெல்வயல்களில் பணிபுரிய மட்டுமே அமர்த்தப்படுகின்றனர். நெல் வயல்களில் நாற்று நடவும், களை பிடுங்கவும் திறமையுடையவர்களாக இவர்கள் சாதிப் பெண்கள் கருதப்படுவதோடு அப்பணிகளுக்கு இவர்களை மட்டுமே அமர்த்துகின்றனர். பள்ளர் சாதிப் பெண்கள் இடைக்கு மேல் உட்லை மறைப்பதில்லை. இவர்கள் அடிமைகளாக இருந்த சாதியினர் என்பதனை உறுதிப்படுத்தும் அடையாளமாக இது இருப்பினும் இன்று இவர்கள் அடிமைகளாக உள்ளனர் என்பதற்கான அடிப்படைச் சான்றுகள் எவையும் இல்லை.'' ''பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், கடைக்கோடித் தென்பகுதியினைச் சேர்ந்த, கிறித்தவச் சமயத்திற்கு மதம் மாறிய பெண்கள் தாழ்ந்த சாதியாரின் பழைய வழக்கிற்கு மாறாக இடைக்கு மேல் உடலை மறைக்கத் தொடங்கினர். பல அச்சுறுத்தல்களும், மோதல்களும் கலவரங்களும் நிகழ இது காரணமாயிற்று. முப்பது ஆண்டுகளுக்குப் பின் 1859-இல் அதே போன்ற கல்வரங்கள் மீண்டும் தலைதூக்கின. சென்னை மாநிலத்தின் ஆளுனரான சர் சார்லஸ் த்ரிவெலியன் அதில் தலையிட்டுக் கீழ்ச் சாதிப்பெண்கள் மார்பகங்களையும் தோள்களையும் மறைக்கும் படியாக உடையணியும் உரிமையினை வழங்கினார் எனத் திரு ஜி. டி. மக்கென்சி குறித்துள்ளார்.*

* திருவாங்கூரில் கிறித்தவ சமயம், 1901, (Christianity in Travancore, 1901)

வலங்கை இடங்கைப் பிரிவினருக்கிடையேயான மோதல்கள் தொடர்பாகத் திருச்சிராப்பள்ளி மாவட்ட விவரக் குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:- ''இந்தப் பூசலின் தோற்றத்திற்குக் காரணம் எதுவாயினும் இது தொடர்பான காழ்ப்பு இன்னமும் வேகமுடையதாக -சிறப்பாகப் பள்ளருக்கும் பறையருக்கும் இடையே- இருந்து வருகின்றது. சென்ற காலத்தில் நிகழ்ந்த வன்செயல்கள்[☉] தற்பொழுது நிகழ்வதில்லையாயினும் கோயில் திருவிழாக்கள் நடைபெறும்போது முன்னுரிமை தொடர்பான - பிரசாதம், விபூதி ஆகியன பெறுவதில் - சச்சரவுகள் நிகழவே செய்கின்றன. ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் மற்றப் பிரிவினைச் சேர்ந்த சாதியார் வாழும் தெருவழியாக ஊர்வலமாகச் செல்லும் போதும் இத்தகைய சச்சரவுகள் நிகழ்கின்றன. முன்பு இவ்விரு பிரிவினரும் ஒரே தெருவில் வாழ்ந்ததில்லை. ஒரு பிரிவினர் மற்றப் பிரிவினருக்கு அவர்கள் சாதியில் எவ்வளவு உயர்ந்தவர்களாயினும் - வணக்கம் செய்யும் பழக்கமும் இல்லை. சாவுச் சடங்குகளுக்கு அமர்த்தப்படும் குற்றேவலர்கள் (பறையர் முதலியோர்) சாவுக்குரியவர் எதிர்ப்பிரிவினைச் சேர்ந்தவர்களாயின் அவர்களைக் கும்பிடமாட்டார்கள்''.

''பள்ளன்கள் எப்பொழுதும் பிராமணர்களுக்கும் கவுண்டர்களுக்கும் உரிய நஞ்சை நிலங்களில் (பள்ளத்தில்) உழைக்கும் பண்ணையடிமைகளாகவே இருந்து வந்துள்ளனர். குள்ள உருவமும், கனத்த உடலும், நல்ல கட்டமைந்த உடல்வாகும் கொண்ட இவர்கள் இறைச்சி உண்பவர்களாக இருப்பதோடு உடல் தூய்மை பேணுவதிலும் கருத்தற்றவர்களாக உள்ளனர். நஞ்சை நிலங்களில் சுறுசுறுப்பாக உழைக்கும் இவர்கள் தற்போது பண்ணையடிமைகளாக இல்லை'' எனக் கோயமுத்தூர் மாவட்டக் கையேட்டில் கூறப்பட்டுள்ளது. கோயமுத்தூரில் நான் நேரில் கண்ட பள்ளர்கள் பயிர்த்தொழிலாளர், தோட்டம் போடுவோர், கூலிகள், கொல்லர், இரயில் நிலையத்தில் சுமை தூக்குவோர், தண்டல் (வரி வாங்குவோர்), மசால்ஜி (அலுவலகக் குற்றேவலர்) போன்ற பல பணிகளிலும் ஈடுபட்டிருக்கக் கண்டேன். பள்ளர் சிலர் மணியக்காரர்களாகவும் உள்ளனர்.

சில இடங்களில் பள்ளர் குடும்பங்கள் நிலப் பண்ணையார்களோடு இணைந்தனவாக அவர்களுக்கு உழைத்தபடி உள்ளன. இவர்கள் தங்கள் பண்ணையாரைவிட்டு வேறொரு பண்ணையாரின் கீழ் மாறிச் சென்று

☉ பார்க்க : நெல்சன், மதுரை நாட்டுப்பகுதி, 4-7 மற்றும்கோயமுத்தூர் மாவட்டக் கையேடு, 477, (See: Nelson the Madura Country II, 4-7 and Coimbatore Dist Manual, 477.)

அமர்வதில்லை. பண்ணையார் பள்ளன்கள் திருப்பிச் செலுத்த இயலாதபடி முன்பணம் தந்துவிடுவதால் பண்ணை அடிமைத் தொடர்பு அறுத்துக் கொள்ள இயலாதபடி நீடிக்கின்றது.

பாண்டி நாட்டைச் சேர்ந்த சாதிப்பிள்ளைகளே பள்ளர் எனவும் மதுரைப் பகுதியினைச் சேர்ந்த கம்மாளரே பள்ளர் எனவும் கூறப்படுகிறது. நெடுங்காலத்திற்கு முன் பள்ளர்களின் சாதித் தலைவன் பாண்டிய நாட்டில் கலப்பை முதலிய உழவுக் கருவிகள் தயாரிக்கும் பாண்டி நாட்டுக் கொல்லனிடம் பிச்சை கேட்டவனாக வந்து, ''சாமி, நாங்கள் கதியற்ற ஏழைகளாக உள்ளோம். நீங்கள் எங்கள் மீது கருணை காட்டினால் நாங்கள் உங்கள் அடிமைகளாக இருப்போம். எங்களுக்குக் கலப்பை முதலிய கருவிகளை கொடுத்து உதவினால் நாங்கள் என்றும் உங்களுக்குப் பணிந்தவர்களாக நடந்து வருவோம்'' எனக் கூறியதாகவும் கொல்லன் அவர்களிடம் இரக்கங்கொண்டவனாக உழவுக் கருவிகள் தந்து உதவினான் எனவும் அறுவடை முடித்தவுடன் இவர்கள் முதல் தர விளைவினைக் கொண்டு வந்து கொல்லனிடம் தந்தனர் எனவும் கதை வழங்குகின்றது. அப்போதிருந்து பள்ளன்கள் பாண்டியக் கம்மாளர் 'பிள்ளை' களாயினர் எனவும் இன்றும் நல்ல விளைவு கர்ணும்போது கொல்லர்களுக்கு நெல்லினைத் தந்து நன்றி காட்டி வருகின்றனர் எனவும் ஒரு கதை வழங்குகின்றது.

கணக்கெடுப்பின் போது பள்ளர்கள் தங்களிடையே பல உட்பிரிவுகள் உள்ளதாகப் பதிந்துள்ளனர். 'நெல்லின் வகைகளை எண்ணலாம். பள்ளின் வகைகளை எண்ணமுடியாது, என்ற பழமொழியும் உள்ளது. இவர்களுடைய உட்பிரிவுகளுக்கு மாதிரியாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

அப்பா - அப்பா	கடையன் - மிகத் தாழ்ந்தவன்
அம்மா - அன்னை	மங்கநாடு - வட்டாரம் தொடர்பானது
அஞ்ஞா - அப்பா	சோழியன் - வட்டாரம் தொடர்பானது
அத்தா - அம்மா	தொண்டமான் - வட்டாரம் தொடர்பானது

தேவேந்திரன் - தேவர்களின் அரசனான தேவேந்திரன் வியர்வை, நீரில் வளர்ந்துள்ள ஒரு செடியின் மீது விழுந்து அது ஒரு குழந்தையாக உருப்பெற்றதெனவும் அதுவே பள்ளர்களின் மூதாதை எனவும் கூறுவர்.

கொங்கர் - கோயமுத்தூரைச் சேர்ந்த கொங்கப் பள்ளர் பெரிய

தாலியினை அணிபவர்கள். இது சக்தி தேவியின் சின்னமாகக் கருதப்படுகிறது. மற்றப் பிரிவினர் சிறிய தாலியினையே அணிகின்றனர்.

மேற்கூறிய உட்பிரிவுகள் அகமணக்கட்டுப்பாடு உடைய பிரிவுகள். சிவகங்கைச் சமீனையும் அதனை அடுத்துள்ள மதுரை மாவட்டத்தையும் சேர்ந்த அய்யா, அம்மா பிரிவுப் பள்ளர்கள் மறவர்களையும் கள்ளர்களையும் போலப் புறமணக்கட்டுப்பாடுடைய குலங்களைப் பெற்றுள்ளனர். சில பிரிவினரின் குலங்கள் பெண்கள் வழிச் சந்ததியினரின் குலப் பெயர் பெறுவன. குழந்தைகள் தாயார் மற்றும் தாய்மாமன் குலத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவரேயன்றித் தந்தையின் குலத்தை சேர்ந்தவராகார்.

மதுரைப் பகுதியில் பள்ளர்களின் சாதித்தலைவன் குடும்பன் எனப்படுகின்றான். அவனுக்குக் காலாடி என்ற உதவியாளன் உள்ளான். பெரிய குடியிருப்புக்களின் வாரியன் என்ற சாதியாருக்குச் சேதி சொல்பவனும் உள்ளான். சாதியினைச் சேர்ந்தவர்களைச் சபைக் கூட்டங்கள், திருவிழாக்கள், திருமணங்கள், சாவுச் சடங்குகள் ஆகியனவற்றுக்கு வரும்படி அழைப்பது இவன் பொறுப்பாகும். குடும்பன், காலாடி ஆகிய பதவிகள் பரம்பரை உரிமையுடையன. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வழக்கிற்கு உட்பட்டவர்களாகச் சாதிவிலக்கம் பெற்றிருந்தால் சாதியைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்கு நெருப்புத் தர மறுப்பதோடு பிற உதவிகளையும் செய்யார். சாதிக்குரிய அம்பட்டனும் வண்ணானும் கூட அவர்களுக்குத் தொழில் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். சாதி விலக்கத்திற்கு உட்பட்டவர்கள் என்பதனை அடையாளம் காட்டும் வகையில் வேப்பிலைக் கொத்து ஒன்று அவர்கள் வீட்டு வாசலில் செருகப்பட்டிருக்கும். மீண்டும் சாதியில் சேர வரும்போது வாரியன் அவர்கள் மீது பசுவின் கோமயத்தைத் தெளிப்பான்.நடத்தை தவறியவள் என்ற குற்றத்திற்கு ஒருத்தி உள்ளாகும்போது அவளோடு அத்தகைய வகையில் உறவு கொண்டவனைக் கொண்டு வந்து ஊர்ச்சபையார் நடுவே பரம்புப் பலகையோடு பிணைத்துக் கட்டி நிறுத்துவர். நடத்தை தவறியவள் ஒரு கூடை மண் அல்லது குப்பையினைச் சேலையினை முழங்காலுக்கு மேல் தூக்கிக் கட்டியவளாகச் சுமந்து செல்லவேண்டும். சில சமயங்களில் இத்தகைய பெண்களை இந்தத் தண்டனையோடு கூடப் புளியம் மிலாரினால் அடிக்கவும் செய்வர். அவள் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு இனி அது போன்ற தவறான நடத்தையில் ஈடுபடப்

போவதில்லை என உறுதி கூறினால் வாரியன் அவளுடைய கள்ளக் காதலனுடைய அரை ஞாண் கயிற்றை அறுத்து அவளுடைய கழுத்தில் தாலி போல அணிவிப்பான். அதற்கும் மறுநாள் அதிகாலையில் அவர்கள் இருவரையும் குளத்திற்கோ கிணற்றடிக்கோ அழைத்துச் சென்று அங்கே ஏழு சிறு குழிகளைத் தோண்டி, அவற்றை நீரால் நிரப்பச் செய்து, அதில் கொஞ்சத்தை வாரியன் எடுத்து அவர்கள் தலையில் தெளிப்பான். அவ்வர்கள் தங்கள் செலவில் அதன்பின் வாரியனுக்கு உணவளிக்க வேண்டும். குற்றம் இழைத்தவர்கள் வசதி படைத்தவர்களாயின் சாதியை சேர்ந்த அனைவருக்கும் விருந்து தரும்படி வற்புறுத்தப்படுவர்.

கோயமுத்தூரில் பள்ளர் சாதித் தலைவன் பட்டக்காரன் என அழைக்கப்படுவதோடு அவன் பல உதவியாளர்களையும் பெற்றுள்ளான். சாதியாருக்குத் தகவல் தெரிவிப்பவன் ஓடும்பிள்ளை எனப்படுவான். திருட்டுக் குற்றத்திற்கு உள்ளாகின்றவன் சபையினரைச் சுற்றி மற்றொருவனைச் சுமந்து செல்ல வேண்டும். அப்போது மற்றும் இருவர் அவன் தலைமுடியைப் பிடித்தவர்களாகப் பின்னால் தொங்குவர். அவன் கன்னத்தில் அறைவதோடு ஓடும்பிள்ளையை அவன் முகத்தில் காறித் துப்பும்படியும் கூறுவர். மணமான ஒருத்தியோடு தவறான நடத்தையும் உறவும் கொள்பவர்களுக்குக் கிட்டத்தட்ட இதனையொத்த தண்டனையே வழங்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பள்ளரின் சமூக அமைப்புப் பற்றித் திரு எப். ஆர். ஹெமிங்வே பின்வருமாறு எழுதியுள்ளார் : '' ஒவ்வொரு ஊரிலும் இவர்களுக்கு இரண்டு மூன்று சாதித் தலைவர்கள் இருப்பர். சாதித் தலைவர்கள் நாட்டு மூப்பனுக்குக் கட்டுப்பட்டவர்கள். ஒவ்வொரு ஊரிலும் ஓடும்பிள்ளை என்ற பணியாளனும் உள்ளான். அவைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் சாதியினைச் சேர்ந்த பொதுமக்கள் அனுபவம் இல்லாதவர்கள் என்ற பொருளில் இளங்கட்சி எனப்படுவர். ஊர்ச் சபையில் மூப்பன்களும் நாட்டு மூப்பனும் இடம்பெறுவர். நாட்டு மூப்பனுக்கும் மூப்பன்களுக்கும் தகுதியில் இடைப்பட்டவனாகப் புள்ளி மூப்பன் என்பவன் கரூர் வட்டத்தில் உள்ளான். இப் பதவிகள் அனைத்தும் பரம்பரை உரிமையுடையவை. இந்த மாவட்ட்தில் பண்ணை உரிமையாளர் களுக்குக் கூலியாட்களை அமர்த்தித் தருவதற்கெனத் தனிப்பட்டதொரு அமைப்பு இவ்வட்டத்தில் உள்ளது. ஒவ்வொரு மூப்பனுக்குக் கீழும் குறிப்பிட்ட அளவுடைய நன்செய் நிலங்கள் (கரைகள்) ஒதுக்கப்பட்டுள்ளன. கரையில் உள்ள நிலங்களில் பணிபுரிய ஆட்களை

அமர்த்தித் தரும் பொறுப்பு அந்த மூப்பனுடையது. அந்த கரையில் உள்ள பண்ணை உரிமையாளர்கள் அதற்கு ஈடாக அறுவடையாகும் நெல்லில் 20 கலத்திற்கு ஒன்றே கால் கலம் அவனுக்குக் கூலியாகத் தர வேண்டும். மூப்பன்கள் வயலில் இறங்கி வேலை செய்வதில்லை. சாதியினைச் சேர்ந்தவர்களுக்குக் கசையடி தந்தோ சாதி விலக்கத்திற்கு உட்படுத்தியோ அவர்களிடையே கட்டுப்பாட்டினைப் பேணிப் பாதுகாப்பது இவன் பொறுப்பு. கரூர் வட்டத்தில் பள்ளர்களை மண்வெட்டிக்காரன்கள் என அழைப்பர் ''.

பள்ளன்களுக்கு எனத் தனியே வண்ணாரும் நாவிதரும் உள்ளனர். இவர்கள் பெரும்பாலும் சோழியர், பள்ளர் பிரிவிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதனால் இப்பிரிவினர் தாழ்ந்தவராக மதிக்கப்படுகின்றனர். வேறு பிரிவினைச் சேர்ந்த பள்ளனைச் சோழியன் என அழைத்தால் தன்னை இழிவுபடுத்த அவ்வாறு கூறியதாக அவன் கருதுவான்.

கோயமுத்தூர் பகுதியில் பள்ளர் சிறுமி ஒருத்தி பூப்படைந்தால் அவளைக் குளிக்கச் செய்து வண்ணான் கொண்டு வந்த ஆடைகளை உடுக்கச் செய்தபின் அவன் உறவினர்கள் பூவும் பழமும் வழங்குவர். அவளைத் தென்னோலை ,புங்கம்கிளைகள் ,பேய்க்கரும்பு ஆகியன கொண்டு கட்டப்பட்ட தனிக் குடிசையில் அமர்த்துவர் . வெல்லம், பால்,பழம் ஆகியன அவளுக்கு உணவாகத் தரப்படும். ஏழாம் நாள் அவளை மீண்டும் குளிக்கச் செய்து வேறு ஆடைகளை வழங்கி உடுக்கச் செய்வர். அவள் தங்கியிருந்த குடிசை எரிக்கப்படும். அடுத்த மூன்று நாட்களும் அவள் தன் வீட்டின் திண்ணையில் ஒரு மூலையில் அமர்ந்திருப்பாள். பதினொன்றாம் நாள் மீண்டும் அவளைக் குளிக்கச் செய்து உறவினர்கள் தரும் புதிய உடைகளை உடுக்கச் செய்து வீட்டினுள் அனுமதிப்பர்.

''பள்ளர் திருமணத்தில் மணச் சடங்கிற்கு முன்பு மணமகன் திடீரென வீட்டைவிட்டுப் புறப்பட்டவனாக நெடுந்தொலைவிற்குப் பயணம் மேற்கொள்வான். திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தாலும் மணம் செய்து கொள்வதில் தனக்கு விருப்பம் இல்லை என்பது போல அவனுடைய அச்செயல் இருக்கும். அவனுடைய வருங்கால மாமனார் அந்த இளைஞனை நடுவழியில்

* இந்தியா அல்லது பாரத வர்ஷத்தைச் சேர்ந்த நில மக்கள். **(Original Inhabitants of Bharatavarsa or India.)**

தடுத்து நிறுத்தித் தன் மகளை மணம் செய்து கொடுப்பதாகக் கூறி அவனைத் திரும்பிவரும்படி வற்புறுத்துவார். அதற்கு அவன் உடன்பட்டவனாகத் திரும்புவான்.'' என முனைவர் ஜி. ஒப்பெர்ட் கூறியுள்ளார். நான் நேரில் கண்டு ஆய்ந்த பகுதிகளில் பள்ளர்களி டையே இத்தகைய வழக்கம் உள்ளதாகத் தெரியவில்லை.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளரிடையே காணப்படும் ஒரு முறையிலான திருமணத்தில் மணமகளின் உடன்பிறந்தவள் ஒரு நல்ல நாளில் மணமகள் வீட்டிற்குத் தாலிக்கயிறு, புதுச்சேலை, வெற்றிலை, பழம், பூ ஆகியனவற்றை எடுத்துச் செல்வாள். அவள் மணமகள் கழுத்தில் தாலி அணிவித்து அவளை அங்குப் பால்கம்பம் நடப்பட்டிருக்குமேல் அதனைச் சுற்றி வரும்படி செய்வாள். அதன்பின் மணமகள் மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவாள். அங்கு மணமக்களை மேடையில் அமர்த்தி மஞ்சள் நீராலோ எரியும் திரியிடப்பட்ட மஞ்சள் சோற்றாலோ ஆரத்தி எடுப்பர். அதன்பின் தங்கள் விரல்களை இணைத்தவர்களாக அவர்கள் மணமேடையினை மும்முறை வலம் வருவர். மேலும் விரிவான முறையில் நடைபெறும் மணச் சடங்கில் மணமகன் பெற்றோரும் தாய் மாமனும் நிச்சயதார்த்தத்தின் போது மணமகள் இல்லத்திற்கு அரிசி, பழம், வாழைப்பழம், தேங்காய், சந்தனக்கலவை, மஞ்சள் ஆகியனவற்றை எடுத்துச் செல்வர். இந்தப் பொருட்கள் பெண்ணிற்கான பரிசத் தொகையுடன் அவள் ஊரைச்சேர்ந்த குடும்பன் அல்லது காலாடியிடம் தரப்படும். மணநாளன்று அதிகாலையில் மணமக்களின் தாய்மாமன்கள் பந்தலிட்டுப் பூவரசு (***Thespesta populnea***) அல்லது பாலை (***Mimsops hexandra***) மரக்கிளையினைக் கொண்டு பால்கம்பம் நடுவர். மணமக்கள் கொண்டுவரும் மண்ணைக் கொண்டு மணமேடை அமைக்கப்படும். இச்சடங்குகள் முடிந்தவுடன் தாய்மாமன்கள் அவர்களுக்கு எண்ணெயிடுவர். குளித்துவரும் மணமகன் கையில் அவன் மைத்துனனும் மணமகள் கையில் அவள் மைத்துனியும் கங்கணம் அணிவிப்பர். மணமேடையின் நான்கு மூலைகளிலும் வெற்றிலை பாக்கு வைக்கப்படும். மணமக்கள் மேடையினை மும்முறை வலம் வரும் போது அந்த வெற்றிலை பாக்கினை வணங்கியவர்களாகச் செல்வர். அதன்பின் மேடையில் உரிய இடத்தில் அவர்கள் அமர்ந்த பின் இரண்டு ஆண்கள் அவர்கள் தலைக்குமேல் மேற்கட்டியினைப் பிடிப்பர். அவர்கள் தங்கள் கரங்களை நீட்டக் குடும்பனும் காலாடியும் அதில் கொஞ்சம் நீரினை ஒரு பாத்திரத்திலிருந்து ஊற்றுவர். அதில் கொஞ்சம் அவர்கள் தலையிலும் தெளிக்கப்படும். அதன்பின் அந்த பாத்திரத்தை

அவர்கள் முன் ஆரத்தியாகச் சுற்றுவர். பின் தாய்மாமன்மார், சாதித் தலைவன் முதலியவர்கள் அவர்களுக்கு மாலை அணிவிப்பர். மணமகளை வீட்டினுள் அழைத்துச் சென்று அவள் தாய்மாமன் வீட்டு வாசலில் அமர்ந்தவனாக அவளுக்குத் தரும் புதுச் சேலையினை முழம் போட்டு அளந்து தருவான். அவள் அதனை உடுத்துக் கொண்டபின் அவள் மாமன் அவளைக் கைகளால் தூக்கி வந்து மணமகன் அருகே அமர்த்துவான். தாய்மாமன்மார் விரித்துப் பிடிக்கும் துணி ஒன்றின் மறைவில் மணமக்கள் விரல்கள் இணைத்து வைக்கப்படும். பின் மணமகன் தாலியினை மணமகள் கழுத்தில் கட்டுவான். அதனை அவன் உடன்பிறந்தவள் இறுக்கி முடிச்சிடுவாள். தாலி கட்டுவதற்குச் சற்று முன்பு சாதித் தலைவன், ''நான் பரிசப்பணம் முதலிய அன்பளிப்புக் களைப் பார்க்கலாமா?'' என உரக்கக் கேட்பான். அவ்வாறு செய்ய அனுமதி கிடைத்தவுடன், ''ஏழு மூட்டை கொட்டைகள், ஏழு மூட்டை அரிசி முதலியன கொண்டு வரப்பட்டுள்ளன'' எனக்கூறுவான்.

கோயமுத்தூரைச் சேர்ந்த கொங்குப் பள்ளர்கள் திருமணத்தில் மணமகன் கைக்கங்கணத்தை அவன் வீட்டிலேயே ஒரு விளக்கை வழிபட்டபின் அணிவிப்பர். அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் ஒரு சேலை, பூ மாலைகள், தாலி ஆகியனவற்றை எடுத்துக்கொண்டு மணமகள் இல்லம் செல்வர். பந்தலில் திருகு கள்ளி (*Eupohorfia Tirucalli*) பால்கம்பமாக நடப்பட்டிருக்கும். மணப்பந்தலில் மணைப்பலகையில் மணமக்கள் அருகருகே அமர்வர். மணமகன் மணமகள் மணிக்கட்டில் கங்கணம் அணிவிப்பான். சாதிக்குரிய நாவிதன் ஒரு காளங்கியில் அவர்கள் வாயிலிருந்து துப்பும் தாம்பூலத்தை ஏற்றுக் கொள்வான். அவர்கள் முன் பசுஞ்சாணத்தால் பிடிக்கப்பட்ட பிள்ளையார் வைக்கப்பட்டிருக்கும். இரண்டு வாழைப்பழம், ஏழு தேங்காய், ஒருபடி நெல், வெற்றிலை, குத்தப்பட்ட சோளத்தட்டை, ஏழு இணை வெற்றிலை பாக்கு ஆகியனவும் அவர்கள் முன் வைக்கப்பட்டிருக்கும். கற்பூர ஆரத்திக் காட்டி இரண்டு தேங்காய்களை உடைத்துப் பிள்ளையார் முன் வைப்பர். தாலியினைக் கூடியுள்ளவர்கள் வாழ்த்த ஒரு தேங்காய் மூடியில் அதனை வைத்துச் சுற்றி அனுப்பி வைப்பர். மண்ணாடி தாலியினை மணமகன் கையில் தர அவன் அதனை மணமகள் கழுத்தில் அணிவிப்பான். மீண்டும் மற்றொரு தேங்காய் உடைக்கப்படும். பச்சரிசி, மஞ்சள் நீர், பால் ஆகிய உள்ள மூன்று பாத்திரங்கள் மணமக்கள் முன்கொண்டு வந்து வைக்கப்படும். அதன்பின் மணமக்கள் கரங்கள் ஒரு துணி மறைவில் இணைக்கப்படும். அதன்பின் நான்காவது தேங்காயும் உடைக்கப்படும். மண்ணாடி பச்சரிசி, மஞ்சள் நீர், பால்

வெற்றிலை ஆகியவற்றில் சிறிது சிறிது எடுத்து மணமக்கள் முன் சுற்றிப் பின் அவர்க்ள தலையைச் சுற்றி எறிவான். இதே போல ஐந்து பேர் சீர்செய்து முடித்தபின் ஐந்தாவது தேங்காய் உடைக்கப்படும். பின் மணமக்கள் மணையைச் சுற்றி வந்தவர்களாக மீண்டும் அதில் அமர்வர். இணைக்கப்பட்ட அவர்கள் கைகள் விடுவிக்கப்படும். கங்கணங்களை அவிழ்த்துப் பாலுள்ள பாத்திரத்தில் இடுவர். பின் ஆறாவது தேங்காய் உடைக்கப்படும். சமைத்த சோற்றினைப் பழமும் நெய்யும் விட்டுப் பிசைந்து கற்பில் சிறந்தவளான அருச்சுனன் மனைவியான அல்லி அரசாணிக்குப் படைப்பர். பின் அதனை மும்முறை மணமக்களுக்குத் தருவர். எனினும் அவர்கள் அதனை உண்பதில்லை. சாதி அம்பட்டன் கொண்டு வரும் தண்ணீரில் அவர்கள் வாய் கொப்புளிப்பர். அவர்கள் மாலை மாற்றிக் கொண்டபின் ஏழாவது தேங்காய் உடைக்கப்படும். பின் அவர்களை வீட்டினுள் அழைத்துச் சென்று புதுப்பாயில் அமர்த்துவர். மணமகனை மீண்டும் மணப்பந்தலுக்கு அழைத்து வந்து முக்காலியின் மேல் அவனுக்குச் சோறும் மற்ற உணவு வகைகளும் படைப்பர். அவை ஓடும் பிள்ளைக்குரியனவாகையால் அவனுக்கு வழங்கப்பட்டுவிடும். பின்னர் விருந்தினருக்கு உணவளிப்பர். மாலையில் மணமக்கள் இருவருக்கும் சேர்த்து ஒரே துணியினை உடுத்து அவர்களைக் குளிக்கச் செய்வர். அவர்கள் ஒருவர் மீது ஒருவர் நீரினை ஊற்றிக் கொள்வர். பிள்ளையார்,விளக்கு, நெல், சோளத் தட்டை, இரண்டு தட்டுக்களில் உள்ள வெற்றிலை முதலியன விருந்தினர் முன் வைக்கப்படும். மண்ணாடி மணமகன் தந்தையிடமிருந்து நான்கணா பெறுவான். அவன் மணமகன், மணமகன் தந்தை, மணமகன் பாட்டன் ஆகியோர் பெயரைச் சொல்லி அந்தக் காசினை மணமகள் குடும்பத்தவர்களுக்குரிய தட்டிலிடுவான். பின் அவன் மணமகள் தந்தையிடமிருந்து நான்கணாவினைப் பெற்று மணமகள்,மணமகள் தந்தை, மணமகள் பாட்டன் ஆகியோர் பெயரைச் சொல்லி மணமகன் குடும்பத்தவர்களுக்குரிய தட்டில் இடுவான். பின் உறவினர்கள் மணமக்களுக்குத் தங்கள் அன்பளிப்பாகத் தொகை வழங்குவர். ஒரு கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளும்போது அவளுடைய புதிய கணவன் அவளுக்கு ஒரு வெள்ளைச் சேலை தருவான். பின் சாதியினைச் சேர்ந்த சிலர் முன்னிலையில் அவள் கழுத்தில் மஞ்சள் நூல் கயிற்றினைக் கட்டுவான்.

கோயமுத்தூரைச் சேர்ந்த கடைய பள்ளர் திருமணத்தில் மணமகள் மணிக்கட்டில் மண்ணாடியே கங்கணத்தை அணிவிக்கின்றான். அவன் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று அதன்

வாசலிலிருந்து மூன்று முறங்களில் நிறைய மணலை அள்ளி வருவான். அது மணப்பந்தலில் குவிக்கப்படும். மண்ணாடியின் வீட்டிலிருந்து வண்ணம் பூசப்பட்ட மூன்று மண்பானைகள், ஏழு மண்தட்டுகள் ஆகியவற்றை மணமகன் ஊர்வலமாக எடுத்து வந்து மணப்பந்தலில் வைப்பான். பெரிய பானைகள் ஒவ்வொன்றோடும் ஒரு மஞ்சள் துண்டும் ஒரு வெற்றிலையும் சேர்த்துக் கட்டப்படும். நவதானியங்களை அவற்றுள் இடுவர். மணமகன் தேங்காய் ஒன்றோடு சுற்றிக் கட்டப்பட்ட தாலி,ஏழு கட்டு வெற்றிலை, ஏழு வாழைப்பழம், ஏழு துண்டு மஞ்சள், ஒரு மாலை,மணமகளுக்கு ஒரு புதுச் சேலை முதலியனவற்றைத் தன்னோடு கொண்டு வருவான். இணைக்கப்பட்ட மணமக்களின் விரல்களை உப்பும் மோதிரமும் வைக்கப்பட்டுள்ள ஒரு தட்டின் மேல் வைப்பர். அவர்கள் பந்தலில் உள்ள மணையினையும் விளக்கினையும் மும்முறை சுற்றி வந்தபின் வீட்டினுள் செல்வர். அங்கு மணமகனுக்கு ஓர் இலையில் சோறு படைப்பர். அவன் உண்டபின் இலையில் எஞ்சி இருப்பதோடு மணமகளுக்கும் சோறு படைப்பர். மூன்றாம் நாள் அவர்கள் கையில் உள்ள கங்கணம் அவிழ்க்கப்படும். மணமகள் அன்று பசுஞ்சாணத்தால் ஆன பிள்ளையார் ஒன்றினைக் கொண்டுபோய் ஆற்றில் விட்டுவிட்டு ஒரு பானையில் தண்ணீர் எடுத்து வருவாள்.

சில இடங்களில் மணமகனை மணமகள் வீட்டிலிருந்து செல்லும்போது ஏதாவது ஒரு பொருளைத் திருடும்படிச் செய்வர். மணமகள் வீட்டார் மணமகன் வீட்டிற்குச் செல்லும் போது அதனைப் போலவே பழிக்குப் பழியாகத் தாங்களும் ஏதேனும் ஒன்றினைத் திருடி வருவர்.

கோயமுத்தூரைச் சேர்ந்த கொங்கப் பள்ளர் இல்லத்தில் சாவு நேர்ந்தால் பிணத்தின் கால் பெருவிரல்களையும் கைப் பெரு விரல்களையும் சேர்த்துக் கட்டுவர். ஏற்றிய விளக்கு, பச்சரிசியுள்ள உலோகப் பாத்திரம், உடைத்து வைக்கப்பட்ட தேங்காய் ஆகியனவற்றை அதன் அருகே வைப்பர். மூன்று விறகுக் கட்டைகளை முக்கோண வடிவில் அடுக்கி அவற்றில் நெருப்பு மூட்டி அதன் மீது ஒரு சிறு சட்டியினை வைத்து அதில் கொஞ்சம் அரிசியினை மஞ்சள் நீரில் வேகவைப்பர். பிணத்தைக் குளிப்பாட்டி நான்கு வாழைக்கன்றுகளும் நான்கு பச்சிலைகளோடு கூடிய கொம்புகளும் வைத்து அமைக்கப்பட்ட பந்தலில் கிடத்துவர். நெருங்கிய உறவினர் ஒருவர் அதன்மீது புதிய துணி ஒன்றினைப் போர்த்துவார். இறந்தவனுடைய மனைவி உயிரோடு இருப்பாளாயின் அவளுடைய உடன்பிறந்தவன் அவளுக்கு ஒரு சேலை

தருவான். பிணத்தைப் பாடையில் கிடத்தியபின் கணவனை இழந்தவள் அதன் கால்களை அலம்பி அந்த நீரில் சிறிது பருகுவாள். அதன்பின் அவள் தாலிக் கயிற்றைப் பிணத்தின் மீது அறுத்து எறிவாள். அவள் முகத்தை ஒரு துணியால் மூடி அவளை வீட்டினுள் அழைத்துச் செல்வர். அதன்பின் பிணம் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு அவன் மகன் முகம் மழித்துக் கொள்வான். உறவினர்கள் பிணத்தின் வாயில் அரிசியும் நீரும் இடுவர். பின் அதனைப் புதைகுழியில் கிடத்தி மூடி மேலே ஒரு கல்லையும் முட்கொத்துக்களையும் இடுவர். இறந்தவனுடைய மகன் இடத் தோளில் ஒரு பானையில் தண்ணீரைச் சுமந்தவனாக மும்முறை புதைகுழியினைச் சுற்றி வருவான். ஒவ்வொரு முறை அவன் புதை குழியின் தலைப்பக்கத்தைக் கடக்கும்போதும் பெரியவர் ஒருவர் கத்தியால் அப்பானையில் ஒரு துளையிடுவார். பின் அந்தச் சட்டியினை அவன் தலை மாட்டில் வீசி எறிந்து உடைப்பான். அவ்விடத்தில் அவன் ஒரு கொள்ளிக் கட்டையினை வைத்தவனாக திரும்பி பாராது சென்று குளித்துவிட்டு வீட்டிற்குச் செல்வான். வீட்டுவாசலில் வைக்கப்பட்டிருக்கும் பசுஞ்சாணத்தை வலக் காலால் மிதித்தபின் அங்குள்ள விளக்கினை வழிபடுவான். மூன்றாம் நாள் மூன்று கைப்பிடிச் சோறு, மூன்று துண்டாக வெட்டப்பட்ட ஒரு கத்தரிக்காய், அகத்திக்கீரை ஆகிய மூன்றையும் ஒரு சட்டியிலிட்டு இளநீர், சுருட்டு,வெற்றிலை முதலியவற்றோடு சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்வர். இறந்தவன் மகன் மூன்று இலைகளைப் புதைகுழியின் மேலிட்ட பின் கொண்டு வந்தனவற்றை அவற்றில் படைப்பான். கைதட்டிக் காகங்களை அழைப்பர். அவை உடனே வந்து உண்ணுமாயின் அதனை நல்ல சகுனமாகக் கருதுவர். நான்காம் நாள் இறந்தவருடைய மகன் குளித்த பின் ஒரு பாயில் அமர்வான். அதன்பின் அவன் வறுத்த உப்பிட்ட மீனினை மும்முறை கடித்து ஒரு பானையில் உள்ள தண்ணீரில் துப்புவான். இது துக்கம் காக்கும் நாள்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டன என்பதனை அறிவிப்பதாகும். பின் அவனுக்கு அவனுடைய மாமனும் பிற உறவினர்களும் புதிய வேட்டிகளை அன்பளிப்பாக வழங்குவர். ஒன்பதாம் நாள் அல்லது பதினொன்றாம் நாள் சோறு, வெற்றிலை முதலியவற்றை ஒரு கருவேல (*Acacia arabica*) மரத்தின் அருகிலோ வேறு முள் மரம் ஒன்றின் அருகிலோ வைப்பர். அந்த மரம் இறந்தவரின் உருவமாகப் பாவிக்கப்படும். இந்து சமயத்திற்குரிய ஏழு ரிஷிகளைக் குறிக்கும் ஏழு கற்கள் அமைக்கப்படும். ஒரு தேங்காய் உடைத்து வைத்துப் பூசை புரிவர். அந்தச் சோற்றினை இலையில் படைத்து இறந்தவரின் மகனும் நெருங்கிய உறவினர்களும் உண்பர். பள்ளன்கள் பெயரளவில் சைவர்கள். நடைமுறையில் அவர்கள்

கிராம தேவதைகளையே வழிபட்டு வருகின்றனர். மதுவும் மாமிசமும் உண்ட பின் வழிபட வேண்டிய தெய்வங்களின் மேல் மிகச் சிறப்பாகப் பக்தி செலுத்துவர்.

மதுரை மாவட்டத்திலுள்ள ஆத்தூரிலுள்ள தேவிக்கு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் விழாத் தொடர்பாக மதுரை மாவட்ட விவரக் குறிப்பில் பதிந்துள்ள விவரங்கள் வருமாறு :- '' விழாத் தொடர்பான விருந்து தொடங்குவதற்குச் சிறிது முன்பு அந்த ஊரைச் சேர்ந்த பள்ளர் சுற்றுவட்டாரத்தில் உள்ள ஊர்களுக்குச் சென்று தேவிக்கு நேர்ந்து கொண்டு விடப்பட்டிருக்கின்ற விருப்பம்போல எங்கு வேண்டுமாயினும் மேயும் விரும்பினால் வயலில் கூடப் புகுந்து தின்னும் உரிமைபெற்றவையும் தேவிக்கு நேர்ந்து கொண்டு விடப்பட்டனவுமான எருமைகளை எல்லாம் திரட்டி ஓட்டி வருவர். அவை ஆத்தூர் வந்து சேர்ந்தவுடன் அவற்றுள் ஒன்றினை தேர்ந்தெடுத்து மாலை அணிவித்துக் கோயிலினுள் கட்டிப் போடுவர். விழா நாளன்று இதனை வெளியே ஓட்டி வந்து ஊரைச் சுற்றி ஊர்வலமாக ஓட்டிச் சென்றபின் கோயிலின் முன் கொண்டு வந்து நிறுத்துவர். அது சக்கிலியன் ஒருவனால் கத்தியால் மூன்று வெட்டுகள் வெட்டப்படும். அவன் இந்தச் சடங்கிற்காக அன்று உண்ணாதவனாக விரதமிருந்து தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டிருப்பான். அந்த எருமையினைக் கொல்லும் பரம்பரை உரிமை நிலக்கோட்டைப் பாளையக்காரருடையது. அவர் சில பள்ளர்களைத் தனக்குப் பதிலாக அதனை நிறைவேற்ற அனுப்பி வைப்பார். அவர்கள் அதன் மீது பாய்ந்து அதனைக் கிழித்துக் கொல்வர்.

புதுக்கோட்டை மாநிலத்தின் ஒரு பகுதியான தென்மேற்கு வட்டாரத்தில் வாழும் வலையர்களும் காலாடியா என அழைக்கப்படும் பள்ளரும் கால்நடைகளைத் திருடுவதனையே தொழிலாகக் கொண்டுள்ளனர். சில சமயம் மாற்றத்திற்காக வேண்டி வீடு புகுந்து கொள்ளையும் இடுவர் எனத் திரு ஹெமிங்வே குறித்துள்ளார். *

''பள்ளருக்கான பட்டப்பெயர் மூப்பன்,குடும்பன் என்பனவாகும். சிலர் தங்களை மண்ணாடி எனக் கூறிக்கொள்வர். குடும்பன் என்பது குறும்பன் என்பதன் திரிந்தவடிவமாகும். மண்ணாடி என்பது மன்றாடி என்பதன் திரிந்த வடிவமாகவும் இருக்கக் கூடும் எனக் கருதுகின்றனர். மன்றாடி பல்லவ (குறும்ப) நாட்டு மக்களுக்குரிய பட்டம். இந்த

* முந்து நூல் (Op.Cit.)

அடிப்படையில் பார்க்கும்போது பள்ளர் தொன்மையான பல்லவர் அல்லது குறும்பரின் பிரதிநிதிகளாதல் கூடும் " என 1891 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பல்லவராயன் : Pallavarāyan

பல்லவர் தலைவன் எனப்பொருள்படும் பட்டப்பெயர். இது திருவாங்கூரைச் சேர்ந்த கிருஷ்ணவகைக்காரருக்கும் ஓச்சருக்கும் உரியப் பட்டப்பெயர்.

பள்ளை : Palle

தெலுங்கு நாட்டில் இருவகைப் பள்ளைக்கள் உள்ளனர். ஒரு பிரிவினர் கடலில் மீன் பிடிப்பதிலும் மற்றொரு பிரிவினர் பயிர்த்தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். மீன் பள்ளை என முன்பு கட்டுரை ஆசிரியர்களால் குறிக்கப்பட்டவர்கள் பள்ளைகரியாளு எனவும் அழைக்கப்படுவர். இவர்கள் பயிர்த்தொழிலாளரான பள்ளைக்களோடு கலந்து பழகுவதோ மணஉறவு கொள்வதோ இல்லை. இவர்கள் மற்றச் சாதியார் இவர்களை மதிப்பதைவிட உயர்வாகவே தங்களை மதித்துக் கொள்வதோடு தங்களை அக்கினி சத்திரியர் எனவும் கூறிக்கொள்கின்றனர். சில இடங்களில் இவர்கள் ரெட்டி என்ற பட்டப்பெயரைத் தரிக்கின்றனர். இவர்கள் அனைவரும் ரவிகுலம் என்ற ஒரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் சாதித் தலைவன் பெத்தகாபு எனப்படுவான். அவனுக்கு ஓமதி என்ற உதவியாளன் உளன்.

பூப்பு நீராட்டு , திருமணம், சாவு ஆகியவை தொடர்பான சடங்குகளில இவர்கள் தெலுங்கர் முறைகளையே பின்பற்றுகின்றனர். இவர்கள் திருமணச் சடங்கில் ஒன்று மீன்பிடிக்கும் பிரிவினருக்கு மட்டுமே சிறப்பாக உரியது. திருமணத்திற்குப் பிறகு ஐந்தாம் நாள் ஒரு கோல்ல பேராண்டுலுவை (சுமங்கலி) ஊர்வலமாகத் தெருவில் நடை பாவாடை விரித்து அழைத்து வருவர். அவள் புது மணமக்கள் தலையில் நெய்யினைப் பூசியபின் ஒரு சேலையினை அன்பளிப்பாகப் பெற்றவளாகச் செல்வாள்.

மீன்பிடிக்கும் பிரிவினர் அவ்வப்போது குச்சிகளை இணைத்துக் கட்டித் தெப்பமாகத் தண்ணீரில் மிதக்கவிட்டு அதன் மீது வழிபாட்டுக்குரிய பல பொருள்களையும் படைத்து அக்கா தேவதலு என்னும் தேவதையினை வழிபடுகின்றனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005
அண்மைவெளியீடுகள் (2002)

பாரதி பற்றிய எதிர்கால ஆய்வு	20.00
பாரதியின் கவித்துவம்	20.00
இரும்புத்தொழில் கலைச் சொல்லகராதி	55.00
சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைச்சொல் விளக்க அகராதி	95.00
தொழில் கலைச்சொல் அகராதி	80.00
மருத்துவக் கலைச்சொற்கள்	80.00
அருங்கலைச்சொல் அகரமுதலி	600.00
பெருஞ்சொல்லகராதி தொகுதி - 4	250.00
அம்மன் வழிபாட்டுச் சடங்குகளில் நாடகக் கூறுகள்	110.00
அறிவியல் களஞ்சியம் தொகுதி - 12	500.00
தம்மபதம்	190.00
உடற்கூறு - பகுதி - 2	200.00
இயந்திரவியல் இயந்திரப் பொறியியல் கலைச்சொற்கள்	75.00
மின்னியல் மற்றும் மின்னணுவியல் கலைச்சொற்கள்	65.00
திருமந்திரத்திற் காணும் சைவ சமயக் கலைச்சொல் விளக்கம்	80.00
சைவ சித்தாந்த சாத்திர வரலாறு	200.00
சட்டஇயல் (மறுபதிப்பு)	100.00
வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி - 3 (மறுபதிப்பு)	700.00
வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி - 4 (மறுபதிப்பு)	700.00
தமிழில் பாலர்சபை நாடகங்கள் (மறுபதிப்பு)	220.00
கவிராச மார்க்கம் (தமிழாக்கம்) (மறுபதிப்பு)	100.00
தமிழ்நாட்டு மூலிகைகள் அறிவியல் ஆய்வு (மறுபதிப்பு)	100.00
பக்தி இலக்கியத்தில் சமுதாயப் பார்வை (மறுபதிப்பு)	200.00
பழந்தமிழகத்தில் இரும்புத் தொழில் (மறுபதிப்பு)	120.00
உயிரியல் கலைச்சொல் விளக்க அகராதி (மறுபதிப்பு)	90.00
அறிவியல் களஞ்சியம் தொகுதி - 13	500.00
பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும், பாவேந்தரும் மொழிபெயர்ப்பும்	30.00
வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி - 5 (மறுபதிப்பு)	700.00
வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி - 6 (மறுபதிப்பு)	700.00
சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் - தொகுதி - 2 (மறுபதிப்பு)	400.00

தொடர்பு முகவரி : இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)
தஞ்சாவூர் - 613. 001. தொ. போ. 04362 - 274581